# மோதலின் போது ஏற்படும் பாலியல் வன்முறைகளின ஆவணப்படுத்தல் மற்றும் விசாரணை தொடர்பான சர்வதேச நெறிமுறை



பாலியல் வன்முறையை ஒரு குற்றமாக அல்லது சர்வதேச சட்டத்தின் ஒரு மீறலாக ஆவணப்படுத்துவது பற்றிய சிறந்த வழிமுறை

இரண்டாவது பதிப்பு: மார்ச் 2017

# மோதலின் போது ஏற்படும் பாலியல் வன்முறைகளை ஆவணப்படுத்தல் மற்றும் விசாரணை தொடர்பான சர்வதேச நெறிமுறை

## பாலியல் வன்முறையை ஒரு குற்றமாக அல்லது சர்வதேச சட்டத்தின் ஒரு மீறலாக ஆவணப்படுத்துவது பற்றிய சிறந்த வழிமுறை

இரண்டாவது பதிப்பு: மார்ச் 2017

சாரா பெரோ றிபேரியோ மற்றும் தானே வான் தெர் ஸ்டேட்டன் பொன்தொஸ் ஐக்கிய இராச்சிய வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகம் சார்பாக

# பொருளடக்கம்


முகவுரை ........................................................ 6

முன்னுரை ........................................................ 7

நன்றி நவிலல் ........................................................ 8

சொற்சுருக்கம் ........................................................ 9

பகுதி I: சர்வதேச நெறிமுறையைப் பயன்படுத்துதல் ........................................................ 10

அத்தியாயம் 1: சர்வதேச நெறிமுறையைப் பயன்படுத்துதல் ........................................................ 11

A. சர்வதேச நெறிமுறை என்றால் என்ன? ........................................................ 11

B. சர்வதேச நெறிமுறையை யார் பயன்படுத்தலாம்? ........................................................ 12

C. சர்வதேச நெறிமுறையை எவவாறு பயன்படுத்துவது? ........................................................ 15

பகுதி II: பாலியல் வன்முறை என்றால் என்ன? ........................................................ 16

அத்தியாயம் 2: பாலியல் வன்முறையைப் புரிந்துகொள்ளல் ........................................................ 17

A. பாலியல் வன்முறையை அதன் நிகழ் சூழலிலிருந்து பார்த்தல் ........................................................ 17

B. பாலியல் வன்முறைகளின் வடிவங்கள் ........................................................ 18

C. மோதல் மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை ........................................................ 19

D. பாலியல் வன்முறையின் தாக்கம் ........................................................ 25

பகுதி III: சர்வதேச சட்டத்தின் கீழ் பாலியல் வன்முறை ........................................................ 28

அத்தியாயம் 3: பொறுப்புக்கூறலுக்கான வழிகளும் நிவாரணங்களும் ........................................................ 29

A. அறிமுகம் ........................................................ 29

B. சர்வதேசச் சட்டத்தின் மீறலாக மற்றும் அதன் கீழான குற்றமாக பாலியல் வன்முறை ........................................................ 29

C. பாதிக்கப்படுவோருக்கு பொறுப்புக்கூறலுக்கான வழிகள் மற்றும் நிவாரணங்கள் ........................................................ 30

அத்தியாயம் 4: தனிமனித குற்றவியல் பொறுப்பு ........................................................ 41

A. அறிமுகம் ........................................................ 41

B. சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களின் அம்சங்கள் ........................................................ 43

C. உண்மை நிகழ்ச்சியோடு தொடர்புடைய விடயங்கள் ........................................................ 56

D. செயன்முறை மற்றும் சான்றுகள் தொடர்பான நெறிமுறைகள் ........................................................ 59

அத்தியாயம் 5: அரசாங்கத்தின் பொறுப்பு ........................................................ 65

A. அறிமுகம் ........................................................ 65

B. அரசாங்கப் பொறுப்புகளுக்கு இட்டுச்செல்கின்ற செயல்கள் மற்றும் செய்யாமல் விட்டவைகள் ........................................................ 66

C. மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான வகைகள் ........................................................ 70

**அத்தியாயம் 6: நிவாரணங்கள்.....75**

A. அ.அறிமுகம்.....75

B. இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள்.....76

C. நிவாரணங்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் வடிவங்கள்.....77

D. தீங்கினை ஆவணப்படுத்தல்.....82

## பகுதி IV: நடைமுறையில் ஆவணப்படுத்தல் தயார்படுத்தல்.....84

**அத்தியாயம் 7: தீங்கிழைக்க வேண்டாம்.....85**

A. பிரதான எண்ணக்கருக்கள்.....85

B. அறிவிக்கப்பட்ட சம்மதம்.....89

C. பாதிப்பினை (தீங்கினை) தணித்தல்.....91

**அத்தியாயம் 8: பாதுகாப்பு மற்றும் பத்திரம்.....105**

A. அறிமுகம்.....105

B. முழுமையான பாதுகாப்பு உபாயம்.....106

C. செயற்பாட்டாளர்கள் இடர்களை முகாமைத்துவம் செய்தல்.....108

D. தகவல் தொடர்பான இடர்களை முகாமைத்துவம் செய்தல்.....111

E. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் தொடர்பான இடர்களை முகாமைத்துவம் செய்தல்......115

**அத்தியாயம் 9: திட்டமிடல்.....119**

A. அறிமுகம்.....119

B. மோதல் மற்றும் கொடுமை தொட்பான பாலியல் வன்முறைகளை (CARSV) ஆவணப்படுத்தல் திட்டம்.....121

**அத்தியாயம் 10: பாலியல் வன்முறைகள் தொடர்பான சான்றுகளின் வகைகள்.....141**

A. அறிமுகம்.....141

B. சாட்சிப்பத்திரம் மூலமான சான்றுகள்.....146

C. ஆவண ரீதியான சான்றுகள்.....148

D. டிஜிடல் சான்றுகள்.....150

E. பௌதீகச் சான்று.....154

## பகுதி V: நடைமுறையிலுள்ள ஆவணப்படுத்தல் - தகவல்களைத் திரட்டுதல்.....160

**அத்தியாயம் 11: நேர்காணுதல்.....161**

**அத்தியாயம் 12 : மேலதிக தகவல்களைச் சேகரித்தல்.....187**

A. ஆவணங்களைச் செயல்முறைப்படுத்துதல்.....187

B. மீறல்கள் நடந்த இடங்களை செயன்முறைப்படுத்தல்.....189

C. வன்முறை நடந்த இடத்தினையும் பௌதீகச் சான்றுகளையும் உடற்காயங்களையும் புகைப்படம் எடுத்தல், வீடியோ பதிவு செய்தல், மற்றும் வரைபடமாக வரைதல்.....193

D. பாதுகாத்து வைத்திருக்கும் வரிசை.....199

அத்தியாயம் 13: தகவல்களைக் களஞ்சியப்படுத்துதலும் கையாளுதலும் ....203
A. அறிமுகம் ....203
B. பிரதான கோட்பாடுகள் ....203
C. கைகளினால் களஞ்சியப்படுத்தும் முறைமை ....205
D. டிஜிடல் களஞ்சியப்படுத்தல் முறைமை ....207

பகுதி VI: சான்றுகளையும் தகவல்களையும் பகுப்பாய்வு செய்தல் ....210

அத்தியாயம் 14: சான்றுகளையும் தகவல்களையும் பகுப்பாய்வு செய்தல் ....213
A. அறிமுகம் ....213
B. தகவல்களை மதிப்பிடுதல் ....215
C. கூறுகளை நிலைநாட்டுதல் ....221
D. சான்றினை வலுப்படுத்துதல் ....224
E. பாங்குகளை அடையாளங்காணுதல் ....224

அத்தியாயம் 15: மன அதிர்ச்சி வடு ....231
A. மன அதிர்ச்சி வடுவினைப் புரிந்து கொள்ளுதல் ....231
B. பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய மனஅதிர்ச்சி வடு ....233
C. 'யுத்தப் பாலியல் வல்லுறவு' மனஅதிர்ச்சி வடு ....236
D. மனஅதிர்ச்சி வடுவினால் பாதிக்கப்பட்டவர்களுடன் இடையீடு மேற்கொள்ளுதல் ....239

அத்தியாயம் 16: சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை ....245
A. அறிமுகம் ....245
B. சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை ....245
C. சட்டம் மற்றும் செயல்விதிகள் சார்ந்த சட்டகம் ....249
D. நெறிமுறைசார் பரிசீலனைகள் ....251
E. ஆவணப்படுத்தல் செயன்முறையில் சிறுவர்களை ஈடுபடுத்தல் பற்றிய மைய வழிகாட்டி ....257

அத்தியாயம் 17: ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறை ....265
A. அறிமுகம் ....265
B. ஐதீகங்களும் மாறாவகைகளும் ....265
C. அளவீடுகளும் வடிவங்களும் ....267
D. அனுபவமும் தாக்கங்களும் ....271
E. சட்டச் சட்டகங்கள் ....273
F. ஆவணப்படுத்தற் செயன்முறையின் போதான குறித்த சில பரிசீலனைகள் ....277

பகுதி VIII: முடிவு ....282

அத்தியாயம் 18: முடிவு ....282
A. தகவல்களைப் பயன்படுத்தல் ....282
B. சர்வதேச ஒழுங்கு மரபின் எதிர்காலப் பயன்பாடு ....283

பின்னிணைப்பு பட்டியல் ........ i

பின்னிணைப்பு 1: பாலியல் குற்றங்களின் ஆவணப்படுத்தலுக்கான சான்றுச் செயல்நூல் ........ i

பின்னிணைப்பு 1அ: குற்றங்களின் அம்சங்களின் நிரல் ........ ii

பின்னிணைப்பு 1ஆ: மாதிரிச் சான்றுச் செயல்நூல் ........ vii

பின்னிணைப்பு 2: அச்சுறுத்தல் மற்றும் இடர் மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் ........ xiii

பின்னிணைப்பு 3: பௌதீக ரீதியான சான்றுகளை சேகரிக்கமைக்கான காரணங்கள் ........ xvii

பின்னிணைப்பு 4: மாதிரி பாலியல் தாக்குதல் மருத்துவச் சான்றிதழ் ........ xix

பின்னிணைப்பு 5: நிறுவன ரீதியான பாதுகாப்புத் தொடர்பான நடைமுறைகள் சோததைனப் பட்டியல் ........ xxiii

பின்னிணைப்பு 6: கைப்பை ........ xxvii


பின்னிணைப்பு 7: பேட்டிகாணல் சோதனைப் பட்டியல் ........ xxix

பின்னிணைப்பு 8: பாதிக்கப்பட்டவர்கள் /அல்லது சாட்சிகளிடமிருந்து சேகரிக்கப்படும் தனிப்பட்ட தரவுகள் தொடர்பான முன் வடிவமைப்புகள் ........ xxxiii

பின்னிணைப்பு 9: காவல் தொடர்பான காப்புச் சங்கிலி ........ xxxv

புத்தகப்பட்டியல் ........ xxxvii

# முகவுரை



*ஒரு யுத்த குற்றமாக இழைக்கப்பட்டிருப்பினும் சரி, மனிதகுலத்திற்கெதிரான ஒரு குற்றமாக, இனப்படுகொலையாக அல்லது சர்வதேச சட்டத்தின் வேறு ஏதேனும் மீறலாக இழைக்கப்பட்டிருப்பினும் சரி, பாலியல் வன்முறை எப்போதும் பெண்கள், ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிராக மோதல்களின்போது புரியப்படும் குற்றச் செயல்களினதும் உலகெங்கும் நடத்தப்படும் வேறு பெரும் கொடுமைகளினதும் துன்பகரமானதும் மிருகத்தனமானதுமான வடிவத்தின் ஓர் அங்கமாக அமைகிறது.*

*இக்குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களுக்ககெதிராக வழக்குத் தொடுப்பதற்கு எல்லா அரசுகளுக்கும் ஒரு பொறுப்பு உண்டு. இருப்பினும் ஒரு சில குற்றவாளிகளே நீதியின் முன் நிறுத்தப்படுகின்றனர்.*

*இந்த சர்வதேச நெறிமுறைகள் வழக்குத் தொடுத்தலுக்கெதிரான தடைகளை வெற்றிகொள்வதற்கு உதவுமுகமாக பாலியல் வன்முறைகளை சர்வதேச சட்டத்தின் ஒரு மீறலாக ஆவணப்படுத்தும் அடிப்படைக் கொள்கைகளை தெளிவாகவும் விரிவாகவும் விளக்கி 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. இச் சர்வதேச நெறிமுறை இதுவரை 9 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் தென்அமெரிக்கா ஆகிய பிராந்தியங்களில் குறைந்தது ஒரு டசின் நாடுகளில் வழக்குத் தொடுத்தலை வலுப்படுத்துவதற்கு உதவுமுகமாக இக்குற்றங்கள் தொடர்பான சான்றுகளைத் திரட்டி விசாரணை செய்வதற்காக சட்டத்தரணிகள், பொலீஸ், மருத்துவத் துறையினர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியோரினால் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*காலப்போக்கில் அது மேம்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையோடு, மோதலின்போதான பாலியல் வன்முறைகளுக்கு முடிவு கட்டுவதற்காக உலக உச்சி மாநாட்டில் நாம் இச் சர்வதேச நெறிமுறையை தொடக்கி வைத்தோம். அதன் பயன்பாடு தொடர்பான தமது அனுபவங்களின் அடிப்படையில் இம்முதலாவது மீளாய்விற்கு பங்களிப்பு வழங்கிய வல்லுனர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆகிய அனைவருக்கும், அத்துடன் பாலியல் வன்முறைகளில் பாதிப்புற்று உயிர்வாழ்வோருக்காக எப்போதும் இடர்களை எதிர்கொண்டு பணிபுரிகின்றவர்களுக்கும் நாம் நன்றி கூற விரும்புகிறோம்.*

*எல்லாவற்றிற்கும் மேலாக, தப்பி உயிர்வாழ்வோரை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். அரசியல் விருப்பம் மற்றும் அரசாங்க ஆதரவு ஆகியவற்றுடன் சேர்ந்து இச் சர்வதேச நெறிமுறையானது, அவர்கள் நீதியையும் தமக்குரிய அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு உதவும் என்றும் நாம் நம்புகிறோம்.*

**கௌரவ றிச்மண்ட் ஹேக் பிரபு**

இணை ஸ்தாபகர், மோதலின் போதான பாலியல் வன்முறைகளைத் தடுத்தல்

**அஞ்சலினா ஜோலி DCMG**

இணை ஸ்தாபகர், மோதலின்போதான பாலியல் வன்முறைகளைத் தடுத்தல் முன்னெடுப்பு
வன்முறைகளைத் தடுப்பு முன்னெடுப்பு மற்றும்
அகதிகளுக்கான ஐநா ஆணையாளர்

# முன்னுரை

*மோதலின்போது ஏற்படும் பாலியல் வன்முறைகளை தடுத்தல் தொடர்பான பிரதம மந்திரியின் விசேட பிரதிநிதி என்ற வகையில், மோதலின்போது ஏற்படும் பாலியல் வன்முறைகள் தனிமனிதர்கள் மீதும் அவர்தம் குடும்பத்தி னர் மீதும் பரந்த சமூகத்தின் மீதும் ஏற்படுத்தும் பயங்கர மானதும் நீண்டகாலம் நீடித்திருப்பதுமான தாக்கத்தை நான் நேரடியாகக் கண்டிருக்கிறேன். அத்துடன், நீதியைக் கடைப்பிடிப்பதும் இக்குற்றமிழைத்தவர்களைப் பொறுப்புக் கூற வைப்பதும் எவ்வளவு முக்கியமானது என்பதை தப்பிருப்போர் கூறக் கேட்டிருக்கிறேன்.*



*தண்டனை விலக்களிப்பிற்கு எதிராக போராடுவதில் மோதலின்போது ஏற்படும் பாலியல் வன்முறைகளை ஆவணப்படுத்தல் மற்றும் விசாரணை செய்தல் தொடர்பான சர்வதேச நெறிமுறை ஆற்றியுள்ள அளப்பரிய பங்களிப்பு பற்றி நான் உண்மையிலேயே பெருமையடைகிறேன். அதன் தாக்கம் சிரியா, பொஸ்னியா மற்றும் ஹேர்ஸகொவினியா மற்றும் கொங்கோ ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகளில் சான்று சேகரித்தல் மற்றும் வழக்குத் தொடுத்தல் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியில் ஏற்கனவே கண்டுகொள்ளப்பட்டுள்ளது.*

*இச் சர்வதேச நெறிமுறைகள், அதன் பயன்பாடு தொடர்பாக எமக்குக் கிடைக்கபெற்ற பின்னூட்டல்களின் அடிப்படையில், வகுக்கப்பட்ட மிகச்சிறந்த நடைமுறையாக மேம்படுத்தப்படுவதற்கான ஓர் உயிரோட்டமுள்ள ஆவணமாக எப்போதும் இருக்க உத்தேசிக்கப்பட்டது. இந்தக் கடப்பாட்டை பூர்த்தி செய்ய நாம் தயாராகிவிட்டோம் என்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.*

*இத்திருத்தப்பட்ட பிரதியானது, விசேட சூழ்நிலைகள், சவால்கள் மற்றும் நேர்முகம் காண்பதற்கும் பிள்ளைகள் மற்றும் ஆண் பாதிப்புற்றோர் ஆகியோருக்கெதிரான மோதல் மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறைகளை ஆவணப்படுத்துவதற்கும் விசாரிப்பதற்கும் தேவையான நுட்பங்கள் மனக்காயம் தொடர்பான மேலும் சான்றுகள் மற்றும் சான்றுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் வன்முறைகளின் நிகழ்வு முறைகைளை நிறுவுதல் ஆகியன உள்ளிட்ட பல மேலதிக சேர்க்கைகளைத் தாங்கி வருகிறது.*

*சர்வதேச நெறிமுறைகளின் இவ்விரண்டாவது பதிப்பு உலகெங்குமுள்ள பல செயற்பாட்டாளர்களின் எண்ணித் தெளிந்த உள்ளீடுகள் மற்றும் அறிவுரை ஆகியன இன்றி சாத்தியமாகியிராது. தமது அறிவையும் நுட்பத்திறனையும் தாராளமாகப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன்.*

*அதன் விளைவாக, இச் சர்வதேச நெறிமுறை மோதலின்போது ஏற்படும் பாலியல் வன்முறைக் கொடுமையை எதிர்கொள்வதற்கும் தப்பியிருப்போருக்கு நீதி பெற்றுத் தருவதற்குமான எமது கூட்டு முயற்சியில் இப்போது முன்னரைவிட முக்கியத்துவமான ஓர் உலகளாவிய கருவியாக விளங்குகிறது.*

**புனித ஜோன்ஸ் DBE கௌரவ எனிலே சீமாட்டி**

வெளிநாட்டு மற்றும் பொநலவாய அலவலக இராஜாங்க அமைச்சர் மற்றும் மோதலின் போதான பாலியல் வன்முறைகளை தடுத்தல் தொடர்பான பிரதம மந்திரியின் விசேட ஆணையாளர்

# நன்றி நவிலல்

சர்வதேச நெறிமுறைகளின் இரண்டவது பதிப்பின் பிரதான நூலாசிரியர்கள் சுயாதீன ஆலோசர்களும் ஐக்கிய இராச்சிய வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்திற்கான PSVIசிரேஷ்ட ஆலோசகர்களுமான சாரா பெரோ றிபேரிரோ மற்றும் தானே வான் தெர் ஸ்ட்றாட்டென் பொன்தொஸ் ஆகியோராவர். வேல்ட் விஷன் நிறுனத்தின் சிரேஷ்ட சிறுவர் உரிமைகள் கொள்கை ஆலோசகர் எறிக்கா ஹோல் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறைகள் தொடர்பான அத்தியாயத்தை எழுதினார்.

மேலும், ஐக்கிய இராச்சிய வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகம் இத்திருத்திய பதிப்பிற்கு தமது பெறுமதிமிக்க நேரத்தையும் அனுபவத்தையும் நுட்பத் திறனையும் பங்களிப்புச் செய்த பல தனி மனிதர்களுக்கும் அமைப்புகளுக்கும் நிறுவனங்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

வெறோனிக் ஓபட், சேவ் த சைல்ட்; சர்வதேச நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான ஆணையாளர் (CIJA) ஸ்டெபெனி பார்பர்; மனித உரிமைகளுக்கான ஐநா உயர் ஸ்தானிகர் அலவலகத்தின் (OHCHR) வெறோனிக்காபேகா; மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் மைக்கல் பொஷென்னெக்; சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டம் தொடர்பான சுயாதீன ஆலோசகர் கலாநிதி தியோ பௌட்ரூஸ்; OHCHR இன் ரூபன் ப்ரூவர்; செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவைச் சேர்ந்த சாரா கொட்டன்; லிசெஸ்டர் பல்கலைக்கழகப் பேராசிரியர் கிரகாம் டேவிஸ்; MADRE நிறுவனத்தின் லீசா டேவிஸ்; INTERVICT (டில்பெக் பல்கலைகழக) மற்றும் முக்கோமெஸ் மன்றத் தலைவருமான கலாநிதி ஏன் - மாரி டீ ப்ரூவர்; சர்வதேச புலனாய்வு ஆலோசகர் மைக் டிக்ஷன்; அகதிகள் சட்ட கருத்திட்டத்தின் கலாநிதி கிறிஸ் டொனால்ட்; ஐஇPSVI வல்லுனர் குழுவின் கலாநிதி இங்கிறிட் எலியெட் MBE; மனித உரிமைகளுக்கான வைத்தியர் டாக்டர் ஹோப் பெடோசியன்; விமென்ஸ் லிங் வேல்ட்வைட் நிறுவனத்தின் டெறேசா பெர்னாண்டெஸ் பரதேஸ்; சர்வதேச மன்னிப்புச் சபையின் ஏன் பிட்ஸ்ஜெரால்ட்; லோபறோ பல்கலைக்கழகத்தின் கலாநிதி ஹெதர் ப்ளோ; சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் (ICC) எறின் கல்கஹர்; கிறௌண்ட் ட்ருத் கன்சல்ட்டிங் நிறுவனத்தின் ஜோன் குட்வில்; பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பிற்கான LSE நிலையத்தின் லீசா கோம்லி; சர்வதேச சிறுவர் போராளிகள் நிறுவனத்தின் இசபெல் குயிட்டார்ட்; ட்றையல் இண்டரநேஷனல் நிறுவனத்தின் எட்றிஜானா ஹனுசிக் பெஸிரோவிக்; பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலன வன்முறை தொடர்பான ஆலோசகர் நியாம் ஹேயெஸ்; விமென்ஸ் லிங் வேல்ட்வைட் நிறுவனத்தின் மார்த்தா ஹேர்னாண்டெஸ் பீத்ராஹித்தா; ஐநா பெண்கள் நிறுவனத்தின் சியோபான் ஹொப்ஸ்; சீராலியோனுக்கான ரெசிடுயல் விசேட நீதி மனறம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டம் மற்றும் நடைமுறை க்கான ஆலோசகர் பிரெந்தா ஜே ஹெல்லிஸ்; சர்வதேச சட்ட ஆராய்ச்சி மற்றும் கொள்கைக்கான நிலைய கேஸ் மெட்றிக்ஸ் வலையமைப்பின்(CILRAP-CMN) கலாநிதி எமிலி ஹண்டர்; கிறௌண்ட் ட்ருத் நிறுவனத்தின் டெரி ஐடெண்டன்; மோதல் தொடர்புபட்ட பாலியல் வன்முறைகளுக்கு வழக்குத் தொடத்தல் வலையமைப்பு(PSV) சர்வதேச வழக்குத் தொடுனர் சங்கம்; வழக்குத் தொடுனர் அலுவலகம் (OTP); சர்வதேச குற்றவியல் நீதி மன்றம்; CILRAP–CMN இன் என்டறிஜா ஜெரோனிக்; PHR ஹார்மொனி கொபான்கே; சாருலதா ஹொக், செத்தம் ஹவுஸ்; சர்வதேச குற்றவியல் புலனாய்விற்கான நிறுவகம்(IICI) நிலைமாற்று நீதி கிளினிக்கின் மெக்சின் மாக்கஸ்; தோமஸ் மெக்காலே,PHR; விமென்ஸ் லிங் வேல்ட் வைட் நிறுவனத்தின் காமன் மிகுவல் ஜுவான்; கலாநிதி ரானிட் மிசோரி PHR வடமேற்குப் பல்கலைக்கழகத்தின் ஜெய்மி மோஸ்; கரேன் நய்மர்PHR; IICI இன் கேப்றியல் ஊஸ்துய்சென்; அத சொலுயுஷன் கெனசல்ட்டிங்; கரோலின் அவுபோ வாபாங்OHCHR; ஜோன் ரால்ஸ்ட்டன், IICI; சுயாதீன சர்வதேச குற்றவியல் நீதிபதியும் SGBV மற்றும் பால்நிலை வல்லுனருமான இந்திரா ரொசெந்தல்; சுசன்னா சேக்கின், PHR; நொட்டிங்காம் பல்கலைக்கழக பேராசிரியர் சந்தேஷ் சிவகுமாரன்; கொவென்றி பல்கலைக்கழகத்தின் கலாநிதி எம்மா ஸ்லீத்; மாரா ஸ்டெக்காசினி,OHCHR; கொல்லின் சல்லிவன், Benetech; தப்பியிருப்போர் பேசும் வலையமைப்பு(SSO); ட்றையல் இண்டர்நேஷனல் நிறுனத்தின் எல்சா டாக்; பேரகலி பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மனித உரிமைகள் நிலையத்தின் கிம் துய் சீலிங்கர்; இலியா அட்மெலிட்செ,CILRAP–CMN; ICC இன் OTP விற்கான விசேட ஆலோசகரும் ஒக்ஸ்பட் பல்கலைக்கழக கெல்லொக் கல்லூரியின் வருகை தரும் விரிவுரையாளருமான பெட்றீசியா வைசர் செல்லர் வோர் சைல்ட்நிறுவனத்தின் அனீதா வில்லியம்ஸ்; றெட்ரெஸ்நிறுனத்தின்பெயனி யே.

ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகம் 2014 ஆம் ஆண்டு முதலாவது பதிப்பு வெளியிடப்பட்டதிலிருந்து ஈராக், சிரியா, பொஸ்னியா, கம்போடியா மற்றும் கொங்கோ ஜனநாயகக் குடியரசு (DRC) ஆகிய நாடுகளில் இச்சர்வதேச நெறிமுறையை பயன்படுத்தி வருபவர்களும் இப்பதிப்பை வெளியிட உதவும் வகையில் விலைமதிக்க முடியாத பின்னூட்டல்களை வழங்கியவர்களுமாகிய செயற்பாட்டாளர்களின் அளப்பரிய பங்களிப்பை நன்றியுணர்வோடு மதித்துப் போற்றுகிறது.

இவ்நெறிமுறைகளுக்கான பதிப்பாசிரியர் அதிகாரம் ஐக்கிய இராச்சிய வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்திடம் உள்ளது. எனவே, பங்களிப்பு செய்யும் ஒரு வல்லுனராக இருப்பது இவ்நெறிமுறைகளின் அனைத்து அம்சங்களையயும் முழுமையாக அங்கீகரிப்பதாக எடுத்துக்காட்டாது.

# சொற்சுருக்கம்

| | |
|---|---|
| ACHRP | மனித மற்றும் மக்கள் உரிமைகள் தொடர்பான ஆபிரிக்க ஆணைக்குழு |
| ACtHR | ஆபிரிக்க மனித உரிமைகள் நீதிமன்றம் |
| AU | ஆபிரிக்க ஒன்றியம் |
| CAH | மனிதகுலத்திற்கெதிரான குற்றங்கள் |
| CARSV | மோதல் மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை |
| CAT | சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழு |
| CCtJ ECOWAS | மேற்காபிரிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகத்தின் சமூக நீதிமன்றம் |
| CEDAW | பெண்களுக்கதெிரான பாரபட்சத்தை ஒழிப்பது பற்றிய குழு |
| CIPEV | தேர்தலுக்குப் பிந்திய வன்முறைகள் தொடர்பான விசாரணை ஆணைக்குழு |
| CMN | கேஸ் மெட்றிக்ஸ் வலையமைப்பு |
| COI | விசாரணை ஆணைக்குழு |
| CRC | சிறுவர் உரிமைகள் தொடர்பான ஆணைக்குழு |
| EAC | செனிகல் நீதிமன்றங்களில் உள்ள அதிவிசேட அபிரிக்க மையங்கள் |
| EACtJ | கிழக்காபிரிக்க நீதிமன்றம் |
| ECCC | கம்போடிய நீதின்றங்களில் உள்ள அதி விசேட மையங்கள் |
| ECtHR | ஐரோப்பிய மனித உரிமைகள் நீதி மன்றம் |
| FCO | ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகம் |
| GBV | பால்நிலை அடிப்படையிலான வன்முறை |
| GBVIMS | பால்நிலை வன்முறை தகவல்கள் முகாமைத்துவ முறைமைகள் |
| GIS | புவியியல் தகவல் முறைமை |
| IAC | சர்வதேச ஆயுத மோதல் |
| IACHR | அமெரிக்க நாடுகளுக்கிடையிலான மனித உரிமைகள் ஆணைக்குழு |
| IACtHR | அமெரிக்க நாடுகளுக்கிடையிலான மனித உரிமைகள் நீதிமன்றம் |
| ICC | சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் |
| ICJ | சர்வதேச நீதிமன்றம் |
| ICL | சர்வதேச குற்றவியல் சட்டம் |
| ICRC | சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் |
| ICTR | ருவாண்டாவுக்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் |
| ICTY | முன்னாள் யுகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் |
| IDP | உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்கள் |
| IHL | சர்வதேச மனிதாபிமானச் சட்டம் |
| IHRL | சர்வதேச மனித உரிமைகள் சட்டம் |
| IICI | சர்வதேச குற்றவியல் விசாரணைகளுக்கான நிறுவகம் |
| IRC | சர்வதேச மீட்புக்குழு |
| KSC | கொஸோவே சிறப்பு நீதிமன்றம் |
| MARA | மோதல் தொடர்புபட்ட பாலியல் வன்முறைகள் தொடர்பான கண்காணிப்பு, பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல் |
| MICT | சர்வதேச குற்றவியல் நியாயச் சபைகளுக்கான பொறிமுறைகள் |
| MRM | கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் பொறிமுறை |
| NGO | அரசசார்பற்ற நிறுவனம் |
| NHRI | தேசிய மனித உரிமைகள் நிறுவனம் |
| NIAC | சர்வதேசமல்லாத ஆயுத மோதல் |
| OHCHR | மனித உரிமைகளுக்கான ஐநா உயர்ஸ்த்தானிகர் அலுவலகம் |
| OISL | இலங்கையில் மனித உரிமைகளுக்கான ஐநா உயர்ஸ்த்தாணிகர் அலுவலகம் |
| PTSD | அதிர்ச்சிக்கு பின்னான மனஅழுத்த நோய் |
| RPE | நடைமுறை மற்றும் சான்று விதிகள் |
| SCSL | சியாராலியோனுக்கான சிறப்பு நீதிமன்றம் |
| SEA | பாலியல் ரீதியாக சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகமும் |
| SGBV | பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை |
| SOP | நியம செயற்படு நடைமுறை |
| SPSC | பாரதூரமான குற்றங்களுக்கான சிறப்பு குழு |
| STD/I | பாலியல் ரீதியாக பரவும் நோய்கள்/தொற்று |
| UJ | சர்வதேச நியாயாதிக்கம் |
| UN | ஐக்கிய நாடுகள் |
| UNHRC | ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை |
| UNICEF | ஐநா சர்வதேச சிறுவர் நிதியம் |
| UNODC | போதைவஸ்த்து மற்றும் குற்றம் ஐநா அலுவலகம் |
| UNSCR | ஐநா பாதுகாப்புச் சபை தீர்மானம் |
| UPR | சர்வதேச காலவாரியான மீளாய்வு |

# பகுதி I: சர்வதேச நெறிமுறையைப் பயன்படுத்துதல்

## அத்தியாயம் 1 பொருளடக்கம்

**சர்வதேச நெறிமுறையினைப் பயன்படுத்துதல் ........................................................ 11**

அ. சர்வதேச நெறிமுறை என்பது என்ன?....................................................11

*பெட்டி 1*

ஆவணப்படுத்தல் எதிர் புலனாய்வு ....................................................11

ஆ. சர்வதேச நெறிமுறையை யார் பயன்படுத்தலாம்?....................................................12

*பெட்டி 2*

சர்வதேச நெறிமுறையை யார் பயன்படுத்தலாம்?....................................................13

இ. சர்வதேச நெறிமுறையை எவ்வாறு பயன்படுத்துவது? ....................................................15

# அத்தியாயம் 1: சர்வதேச நெறிமுறையைப் பயன்படுத்துதல்

## A. சர்வதேச நெறிமுறை என்றால் என்ன?

மோதலின் போது இடம்பெறும் பாலியல் வன்முறைகள் தொடர்பான ஆவணப்படுத்தல் மற்றும் விசாரணை பற்றிய சர்வதேச நெறிமுறையானது, பாலியல் வன்முறைகளை ஒரு யுத்தக் குற்றமாக, மனித குலத்திற்கெதிரான குற்றமாக, இனப்படுகொலை செயலாக அல்லது சர்வதேச குற்றவியல், மனித உரிமைகள் அல்லது மனிதாபிமனச் சட்டத்தின் வேறு பாரதூரமான மீறலாக எவ்வாறு ஆவணப்பபடுத்துவது அல்லது விசாரணை செய்வது என்பது தொடர்பான சிறந்த நடைமுறையை எடுத்துரைக்கும் ஒரு தொகுதி வழிகாட்டிகளை கொண்டுள்ளது. இந்த நெறிமுறையின் நோக்கத்திற்காக சர்வதேச சட்டத்தின் கீழான அத்தகைய குற்றங்களும் மீறல்களும் மோதல் மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வனமுறைகள் அல்லது CARSV என்று குறிப்பிடப்படும்.

இந்த நெறிநெறிமுறையானது CARSV விற்கான பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கென உருவாக்கப்பட்ட ஒரு நடைமுறைச் சாத்தியமான ஆவணமாகும். அது கீழ்காணும் சூழ்நிலையில் பாலியல் வன்முறைகளை ஆவணப்பபடுத்தல் மற்றும் புலன்விசாரணை செய்தலின் அடிப்படைக் கோட்பாடுகளை நெறித்துரைப்பதன் மூலம் இதனைச் சாதிக்கின்றது: CARSV இன் தாக்கங்களையும் பின்பற்றக்கூடிய பொறுப்புக்கூறலின் பல்வேறு வடிவங்களையும் புரிந்துகொள்வது தொடக்கம் சாட்சிகளை பேட்டி காண்பதற்கும் இப்பொறுப்புக்கூறல் முயற்சிகளுக்கு முக்கியமானதாக அமையக்கூடிய தகவல்களை பகுப்பாய்வு செய்வதற்குமான நுட்பங்களை நெறித்துரைத்தல் வரையாகும்.

இந்த நெறிநெறிமுறையானது ஒரு சட்ட ஆவணமல்ல. எனவே அது அரசுகள் மீது எவ்வித கடப்பாடுகளையும் விதிப்பதில்லை. மாறாக, அது பயன்மிக்க வகையிலும் பாதுகாப்பாகவும் CARSV ஐ ஆவணப்படுத்த தேசிய மற்றும் சர்தேச நீதியினாலும் மனித உரிமை செயற்பாட்டாளர்களினாலும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஆதரவான ஒரு கருவியாக பயன்படமுடியும்.

**பெட்டி 1**

**ஆவணப்படுத்தல் எதிர் புலன்விசாரணை**

“ஆவணப்படுத்தல்” மற்றும் “புலன் விசாரணை” என்ற சொற்கள் தொடர்பாக நடைமுறைச் சமூகத்தில் பெருமளவு விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. சில அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டாளர்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டும்போது தம்மை “விசாரணையாளர்கள்” என்று தம்மை குறிப்பிடும் அதேவேளை, ஏனையவர்கள் புலன்விசாரணைகளை அரச அல்லது நீதித் துறை அதிகாரிகளுக்கே உரிய பணியாக பார்ப்பதால் “ஆவணப்படுத்துனர்கள்” என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள்.

எனினும், இந்த முதலாவணம் முழுவதும் சர்வதேசச் சட்டத்தின் மீறலொன்று இடம்பெற்றுள்ளது என்பதையும் அந்த மீறலுக்கு யார் பொறுப்பு, சம்பந்தப்பட்ட செயற்பாட்டாளர்களின் வகிபாகம் அல்லது ஆணை என்ன என்பதை நிறுவுகின்ற, CARSV தொடர்பான தகவல்களை திட்டமிட்ட அடிப்படையில் சேகரிக்கும் நடைமுறையை குறிப்பிடுவதற்கு “ஆவணப்படுத்தல்” என்ற பதமே பயன்படுத்தப்படுகின்றது.

பொருத்தமான இடங்களில், உத்தியோக பூர்வமான விசாரணை என்ற சொற் பதமானது இந்த நெறிமுறையானது அதிகாரவரம்பிற்கு உட்பட்ட அரசு தலைமையிலான ஆணை வழங்கப்பட்ட நீதி மற்றும் சட்ட வல்லுநர்களால் நடாத்தப்பட்ட உத்தியோகபூர்வ விசாரணை எனக்கருதும் அது தொடர்பான நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுகின்றது.

மேலும், இவ் ஆவணப்படுத்தலின் குறிக்கோள்கள் எவ்வாறிருப்பினும், இந்நடைமுறை குறைந்தபட்சம் இந்த நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களுக்கு அமைவாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதோடு, உயிர்தப்பியவர்களுக்கு அதிகாரமளிக்கும் அத்துடன் பொறுப்புக்கூறும் செயற்பாட்டை எல்லா விதத்திலும் வலுவூட்டும் வகையில் CARSV தொடர்பான நம்பகமானதும் பொருத்தமானதுமான தகவல்களை சேகரிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

## B. சர்வதேச நெறிமுறையை யார் பயன்படுத்தலாம்?

### 'செயற்பாட்டாளர்கள்'

மோதல் மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறைகளால் (CARSV) பாதிப்புற்றவர்களுக்கான பொறுப்புக்கூறல் நடைமுறைகளை பாதுகாக்கும் அல்லது ஆதரிக்கும் நோக்கத்திற்காக CARSV ஐ ஆவணப்படுத்த முயலும் எவரும் இந்த நெறிமுறைகளை பயன்படுத்தலாம்.

எடுத்துக்காட்டாக, அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs), சிவில் சமூக குழுக்கள், தேசிய அதிகார பீடங்கள், மனித உரிமை கண்காணிப்பாளர்கள் மற்றும் சர்வதேச புலனாய்வாளர்கள் ஆகியோர் இதில் அடங்குவர். "செயற்பாட்டாளர்கள்" எனும் பதம் இப்பல்வேறு ஈடுபாட்டாளர்களைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

சில செயற்பாட்டாளர்கள் இந்த நெறிமுறைகளின் அனைத்துப் பிரிவுகளையும் தமது பணிகளுக்கு நேரடியாகப் பொருந்துவனவாகக் காண்பார்கள். ஏனையவர்கள் தமது விசேட ஆணையை அல்லது பணியைப் பொறுத்து நேர்முகம் காணுதல் தொடர்பான அத்தியாயம் அல்லது உளக்காயத்தின் தாக்கத்தைப் புரிந்துகொள்தல் பற்றிய அத்தியாயம் முதலிய குறிப்பிட்ட சில பகுதிகளை அல்லது கருவிகளை மட்டும் நாடுவர்.

எவ்வாறாயினும், CARSV இனால் பாதிப்புற்றோர் மற்றும் ஏனைய சாட்சிகள் ஆகியோருக்காகப் பணியாற்றும் செயற்பாட்டாளர்கள் அனைவரும் - அவர்கள் புலனாய்வு செய்கிறார்களோ இல்லையோ - பாதிப்புற்றோருக்கு கிடைக்கக்கூடியதாகவிருக்கும் பல்வேறு பொறுப்புக்கூறல் தெரிவுகள் பற்றிய தமது புரிந்துணர்வையும் ஆவணப்படுத்தல் நடைமுறையில் தாம் ஆற்றக்கூடிய பங்கையும் மேம்படுததுவதற்கு இந்த நெறிமுறைகளைப் பயன்படுத்த முடியும்.

பெட்டி 2

## சர்வதேச நெறிமுறையை யார் பயன்படுத்தலாம்?

### உதாரணங்கள்

**அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள்**

- தேசிய மற்றும் சர்வதேச குற்றவியல் வழக்குத் தொடுத்தலுக்காக அல்லது எதிர்கால குற்றவியல் வழக்குத் தொடுத்தலுக்காக சான்றுகளைப் பாதுகாப்பதற்காக பாலியல் வன்முறைகளை சர்வதேச சட்டத்தின் கீழான ஒரு குற்றமாக ஆவணப்படுத்துபவர்கள்
- உள்நாட்டு, சர்வதேச மற்றும் கலப்பு நீதிமன்றங்களில் பாதிக்கப்பபட்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாதிப்புற்றோரது பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்பினர்
- சிவில் இழப்பீட்டுக் கோரிக்கைகளுக்காக பாலியல் வன்முறை பற்றிய சான்றுகளைத் திரட்டுபவர்கள்
- மனித உரிமை வழக்குத் தொடுத்தல் மற்றும் சார்புரை செய்தலுகாக பாலியல் வன்முறை பற்றிய சான்றுகளைத் திரட்டுபவர்கள்
- விசாரணை ஆணைக்குழுக்கள், உண்மை விளம்பல் மற்றும் வேறு உண்மை கண்டறிதல் பொறிமுறைகளுக்காக பாலியல் வன்மறைகளை ஆவணப்படுத்துபவர்கள்
- நிர்வாக ரீதியான ஈடுசெய்தல் கோரிக்கைகளுக்காக பாதிப்பையும் தீங்கையும் ஆவணப்பத்துபவர்கள்
- சார்புரை செய்வதற்காக பாலியல் வன்முறை பற்றிய தகவல் திரட்டுபவர்கள்
- பாலியல் வன்முறை நிலவுதல், அதன் பாணிகள் மற்றும் தாக்கம் ஆகியன பற்றிய புரிந்துணைர்வை மேம்படுத்துவதற்காக பாலியல் வன்முறை பற்றி ஆராய்ச்சி செய்பவர்கள்
- மேல் காணும் நோக்கங்களுள் ஏதேனும் ஒன்றிற்காக பாதிப்புற்றோர் அல்லது சாட்சிகளிடமிருந்து நேரடியாக தகவல்களை பதிவு செய்பவர்கள்.

**சர்வதேச அதிகார பீடங்கள்**

- குற்றவியல் வழக்குத் தொடுத்தலுக்காக பாலியல் வன்முறைகளை சர்வதேச சட்டத்தின் கீழான குற்றமாக புலனாய்வு செய்யும் வழக்குத் தொடுக்கும் மற்றும் தீர்மானிக்கும்
- விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் உண்மை கண்டறியும் அமைப்புகள் ஆகியவற்றிற்காக பாலியல் வன்முறைகளை சர்வதேச சட்டத்தின் கீழான குற்றமாக அல்லது அதன் மீறலாக ஆவணப்படுத்தும்

**தேசிய அதிகார பீடங்கள்**

- CARSV வழக்குகளை புலனாய்வு செய்யும் பொலிஸ் புலனாய்வாளர்கள் மற்றும் வழக்குத்தொடுனர்கள்.
- விசாரணை நீதவான்கள்
- பாலியல் குற்றங்களை சர்வதேசக் குற்றங்களாக வழக்குத் தொடுக்குமுகமாக தமது சட்ட மூலோபாயங்களையும் வாதங்களையும் தயார்படுத்தும் வழக்குத்தொடுனர்கள் மற்றும் சட்டத்தரணிகள்
- CARSV வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகள்
- தேசிய உண்மை கண்டறிதல் ஆணைக் குழுக்களுக்காக பாலியல் வன்முறைகளை சர்வதேச சட்டத்தின் கீழான குற்றமாக அல்லது அதன் மீறலாக ஆவணப்படுத்தும்.

**ஏனையவர்கள்**

- பாலியல் வன்முறைச் செயல்களின் முழுமையான சூழல் மற்றும் தாக்கங்கள் பற்றியும் தமது பணிகள் பொறுப்பக்கூறல் நடைமுறைக்கு எவ்வாறு பொருந்தும் என்பது பற்றியும் சிறந்த புரிந்துணர்வை நாடுகின்ற, பாதிப்புற்றவர்களுக்குச் சிகிச்சையளிக்கும் வைத்தியர்கள்.
- பாதிப்புற்றோரருக்கான பல்வேறு வகைப் பொறுப்புக்கூறல் வழிகள் பற்றிய தகவல்களை நாடுகின்ற, அவசரகால நிவாரணம்/ பாதுகாப்பு மற்றும் பால்நிலை தொடர்புபட்ட வன்முறை ஆகியவற்றில் சிறப்புத் தேர்ச்சியாளர்கள்.

*பயன்படுத்துபவர்கள் தமது நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டோருக்கு நீதி பெற்றுத் தருவதற்கு நடைமுறையில் இருக்கும் உத்தியோகபூர்வ முயற்சிகளுக்கு பங்களிப்புச் செய்வதையும் அவற்றை பலவீனமாக்கல் இருப்பதையும் உறுதிப்படுத்த முடிந்தவரை முயற்சி செய்யவேண்டும்.*

## நெறிமுறைகளைப் பயன்படுத்துவதில் நிலவும் கட்டுப்பாடுகள்

**பல்துறை ஒருங்கிணைப்பு:** பாலியல் வன்முறைகளுக்கு பதில் அளிப்பது என்பது நன்கு ஒருங்கிணைங்கப்பட்ட சுகாதார சேவை, பாதுகாப்பு, உளச்சமூக ஆதரவு மற்றும் நீதிக்கான வாய்ப்பு ஆகியவற்றைக் கொண்ட ஓர் உறுதியான பல்துறைசார் அணுகுமுறையை கொண்டிருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் பாலியல் வன்முறைக் குற்றங்கள் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாட்டை அதிகரிப்பதற்கு இச்சேவைகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுவது முக்கியமாகும்.

**பயிற்சியும் திறனும்:** அவர்களின் குறிக்கோள்கள் என்னவாக இருப்பினும், இந்நெறிமுறைகளைப் பயன்படுத்தும் அனைத்துத் தனிமனிதர்களும் நிறுவனங்களும் முதலில் தாம் அதனைச் செய்வதற்குப் போதுமான பயிற்சி மற்றும் உபகரண வசதியினைக் கொண்டிருப்பதை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த நெறிமுறையானது ஒரு தனியான கருவியாக கருதப்படக்கூடாது. குறைந்தளவு விசாரணை திறன்களை கொண்டுள்ள செயற்பாட்டாளர்களுக்கு இந்நெறிமுறையானது, நீண்டகால பயிற்சி, கண்காணிப்பு அல்லது CARSV இனை ஆவணப்படுத்தல் தொடர்பான வேறு ஆதரவு ஆகியவற்றுடனான ஓர் உசாத்துணையாக மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டும். CARSV தொடர்பாக விசாரணை செய்வதற்கு அல்லது அதைப் பற்றி ஆவணப்படுத்துவதற்கான அனுபவம் மற்றும் திறன் போதாமல் இருத்தல் குறிப்பாக பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சியாளர்களுக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

**திறமை:** CARSV இனை ஆவணப்படுத்துவதோடு தொடர்புபட்ட முழுமையான செயற்பாடுகளும் நெறிமுறைகளைப் பயன்படுத்துபவர்கள் கணிசமான அளவு அறிவையும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய சாட்சியாளர்கள் அல்லது சான்றுகளோடு செயலில் ஈடுபடுவதற்கு முன்னதான மனப்பாங்கு அடிப்படையிலான திறமைகளையும் கொண்டிருப்பது அவசியமாகும். இந்த நெறிமுறை முழுவதும் குறிப்பிட்ட செயற்பாடுகளுக்குத் தேவையான விசேட திறமைகளையும் பயிற்சிகளையும் குறிப்பிட்டுக்காட்டுகின்றது. (வயது வந்தவர்களையும் சிறுவர்களையும் பேட்டி காணுதல், பௌதீக சான்றுகளை திரட்டுதல் மற்றும் டிஜிடல் தகவல்களை உறுதிப்படுத்தல் போன்றன). எனினும், குறைந்தபட்சம் இந்தப்பணியில் சம்பந்தப்பட்டுள்ள எல்லா செயற்பாட்டாளர்களும் பின்வரும் அடிப்படை அறிவு மற்றும் மனப்பாங்கு அடிப்படையிலான திறமைகள் ஆகியவற்றை வெளிகாட்டவேண்டும்:

**அறிவு**

- *பாலியல் வன்முறை பற்றிய குறிப்பிட்ட சூழலையும் அது உயிர் தப்பியவர்களின் மீது கொண்டிருக்கக்கூடிய தாக்கங்களையும விளங்கிக் கொள்ளுதல் (சுகாதார, சமூக உளவியல், அபிவிருத்தி மற்றும் சமூகப் பொருளாதார)*
- *உயிர் தப்பியியவர்களை மையமாக கொண்ட அணுகுமுறை, தன்னாட்சி, தீங்கிழைக்காமை, அறிவிக்கப்பட்ட சம்மதம், இரகசியம் பாதுகாத்தல் மற்றும் பாரபட்சம் காட்டாமை போன்றவற்றின் எண்ணக்கருவினைப் பரிந்துகொள்ளல்*
- *குறிப்பிட்ட சூழ்நிலைக்குரிய பல்துறை சார் ஆதரவு மாதிரியும் அதனை எவ்வாறு பெறுவது என்பதையும் புரிந்துகொள்ளல்*

***மனப்பாங்குகள்***

- *பால்நிலை சமத்துவம் மற்றும் எந்த வடிவிலான பாரபட்சமின்மை என்பன பற்றிய கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தலும் புரிந்து கொள்ளுதலும். எனினும் குறிப்பாக பால், பால்நிலை அடையாளம், பாலியல் நடத்தை அல்லது பாலியல் வன்முறையைின் வடிவங்கள் தொடர்பாக புரிந்துகொள்ளல்.*
- *தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கும் மற்றும் சரி-பிழை எது என முடிவுகட்டிவிடாத மனப்பாங்கிற்கும் மதிப்பளித்தல், அனுதாபங்காட்டுதல்*

**ஆணை.** CARSV தொடர்பான தகவல்களை சேகரிக்கும் அமைப்புக்களின் ஆணை சந்தேகமன்றி வேறுபட்டதாக இருக்கும் என்பதோடு, அரச அதிகாரிகளோடு நேரடியாகப் பணியாற்றும் நிறுவனங்களையும் அத்துடன் சட்டம் மற்றும் அரச கட்டமைப்புகள் ஆகியன இல்லாத சூழ்நிலைகளில் செயற்படுவோரையும் இது உள்ளடக்கும். எனினும், சகல செயற்பாட்டாளர்களும் குறைந்தபட்சம் அவர்கள் செயற்படும் பிரதேசத்தில் மூன்றாம் தரப்பு விசாரணைகள் தொடர்பான தேசிய மற்றும் உள்ளூர் சட்டங்களையும் அறிந்திருக்க வேண்டும். குறிப்பாக சாட்சியற்கள் சேகரித்தலை சீராக்கும் சட்டங்கள் மற்றும் தேசிய அதிகாரிகளுக்கு அவற்றை கையளிக்கும் கடப்பாடுகள் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும் செயற்பாட்டாளர்கள் தமது செயற்பாடுகள் பாதிக்கப்பட்டோருக்கு நீதி பெற்றுத் தருவதற்கான தற்போது நடைமுறையில் இருக்கும் உத்தியோகபூர்வ முயற்சிகளுக்கு பங்களிப்புச் செய்வதையும் அவற்றைச் சீர்குலைக்காதிருப்பதையும் உறுதிப்படுத்த முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும்.

**உள்நாட்டு சூழ்நிலை:** அதேபோன்று, நெறிமுறையைப் பயன்படுத்தும் செயற்பாட்டாளர்கள் தாம் பணியாற்றும் உள்ளூர் சூழ்நிலைக்கு தக்கவாறு தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்வதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். கலாச்சாரம், சமயம், எவ்வாறு பாலியல் வன்முறை கையாளப்படுகின்றது பற்றிய தாக்கங்கள், சமூக விதிகள் பற்றிய பால் மற்றும் பாலியல் விதிகள் தொடர்பிலான உள்ளூர் நடைமுறைகளையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட சட்ட வரைவிலக்கணங்கள், நடைமுறை விதிகள் ஆவணப்படுத்தல் இடம்பெறும் நியாயாதிக்கத்திற்குப் பொருந்தக்கூடிய பாலியல் வன்முறை தொடர்பான சாட்சியங்கள் பற்றியும் அறிந்திருக்க வேண்டும் என்பதையும் இது குறிக்கின்றது.

## C. சர்வதேச நெறிமுறையை எவவாறு பயன்படுத்துவது?

நெறிமுறையின் **பகுதி I** இந்த நெறிமுறை என்ன, அதனை யார் பயன்படுத்தலாம் மறறும் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விளக்குகிறது.

**பகுதி II** CARSV, பால்நிலை தொடர்புபட்ட வன்முறைமுறையுடனான, அதன் தொடர்பு மற்றும் பால்நிலை சமனின்மை, பாலியல் வன்முறையின் விசேட நிகழ்முறை மற்றும் நிலவுதல், பாலியல் வன்முறையோடு தொடர்புபட்ட பாரதுரமான விளைவுகள் மற்றும் உயிர்தப்பியிருப்போர் நீதியை நாடிச்செல்வதில் எதிர்நோக்கும் தடைகள் ஆகியவைபற்றிய ஒரு மேலோட்டத்தை வழங்குகிறது. பாலியல் வன்முறை நடைபெறுகிறதென்பதை எடுத்துக்காட்டும் சுட்டிகள் அல்லது "செங்கொடிகளை"யும் அது உள்ளடக்கியுள்ளது.

**பகுதி III** சர்வதேச சட்டத்தின் கீழான பாலியல் வன்முறைகளை ஆராய்கிறது. அது பொறுப்புக்கூறல் வழிகள், தனிமனிதர் எதிர் அரச பொறுப்புகள் மற்றும் தயார்படுத்தல்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

**பகுதி IV** நடைமுறை ஆவணப்படுத்தலுக்கு எவ்வித தயார்படுத்தல்கள் தேவை என்பதை விளக்குகிறது: அதாவது, ஆராய்ச்சி செய்வதற்கு, ஆவணப்படுத்தல் நடைமுறையொன்றை தயாரித்து நிறுவுவதற்கு பாலியல் வன்முறையின் பல்வேறு வகை சான்றுகளின் வகிபாகங்களை புரிந்துகொள்வதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை பகுதிIV "தீங்கு செய்யாமை"யின் முக்கிய கோட்பாடுகளை உள்ளடக்குவதோடு, பாலியல் வன்முறையோடு தொடர்புபட்ட இடர்களை குறைப்பதற்கும் தீர்ப்பதற்கும் அத்துடன் அச்சுறுத்தல் மற்றும் இடர் மதிப்பீடுகளை எவ்வாறு மேற்கொள்வது, தெரிவித்த சம்மதத்தை எவ்வாறு பெற்றுக்கொள்வது, இரகசியம் பேணல் கோட்பாடுகளுக்கமைவாக எவ்வாறு செயற்படுவது, மற்றும் பாதிக்கப்பட்டோரையும் ஏனைய சாட்சிகளையும் எவ்வாறு ஆற்றுப்படுத்துவது என்பவற்றில் செயற்பாட்டாளர்கள் பயன்படுத்தக்கூடிய நடைமுறைச் சாத்தியமான உத்திகளையும் பரிந்துரைக்கின்றது. பாதுகாப்பு மற்றும் பத்திரம் தொடர்பான ஒரு அத்தியாமும் இப்பிரிவில் அடங்கியுள்ளது.

**பகுதி V** தகவல் திரட்டுவதற்கான நடைமுறைகளை விளக்குகின்றது: அதாவது, பாதுகாப்பானதும் பயன்மிக்கதுமான நேர்காணல்களை எவ்வாறு நடத்துவது மற்றும் பாலியல் வன்முறைகளின் காணொளிக் காட்சிகள் மற்றும் உடல்ரீதியான மற்றும் ஆவணரீதியான சான்றுகளை திரட்டும்போது, கையாளும்போது மற்றும் சேமித்து வைக்கும்போது குறைந்தபட்ச தேவைகள் என்பவற்றை விளக்குகிறது.

**பகுதி VI** கவனிக்கவேண்டிய நிகழ்முறையின் வகைகள் அடங்கலாக சேகரிக்கப்படும் சான்றுகளை ஒழுங்கமைப்பதற்கும் மதிப்பிடுவதற்கும் வலுப்படுத்துவதற்குமான வழிகளை பரிந்துரைக்கிறது.

**பகுதி VII** கணிசமாளவு மேலதிக விபரங்கள் தேவைப்படும் விடயங்கள் பற்றியது மட்டுமன்றி, நெறிமுறை முழுவதும் குறுக்கிடுவதாகவும் அமைகின்றது. அது, உளக்காயத்தையும், அதிலும் குறிப்பாக 'யுத்த வன்புணர்வு" உளக்காயத்தையும் அதன் பல்வேறு வெளிப்பாடுகளையும் புரிந்துகொள்ளுதல் ஆண் பாதிப்புற்றோருக்கு எதிரான பாலியல் வன்முறைகளை ஆவணப்படுத்தல் மற்றும் பாதிக்கப்பட்டோராகவும் சாட்சிகளாவும் பிள்ளைகள் தொடர்பான தனித்து நிற்கும் அத்தியாயங்களை உள்ளடக்கியுள்ளது.

**பகுதி VIII** CARSV தகவல்களை அறிக்கையிடும்போது, சமர்ப்பிக்கும்போது அல்லது பயன்படுத்தும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயங்களை விளக்குவதோடு, நெறிமுறைகளின் எதிர்கால பயன்பாட்டிற்கான பரிந்துரைகளை வழங்குவதோடு நிறைவடைகிறது.

**பின்னிணைப்புகள்** ஆவணப்படுத்துனர்கள் தமது புலனாய்வுகளை நடத்தும்போது அவர்களுக்கு நேரடியாக பயனுள்ளவையாக இருக்குமென நம்பப்படும் சில கருவிகளையும் மேலதிக தகவல்களையும் கொணடுள்ளன. இவற்றுள், குற்றங்களின் அடிப்படைகளையும் ஒவ்வொரு அடிப்படையோடும் தொடர்புபட்ட பல்வறுவகைச் சான்றுகளையும் எவ்வாறு ஒழுங்கமைப்பது என்பதை விளக்கும் ஓர் உதாரண சான்றுச் செயல்நூலும் அடங்குகிறது. இப்பின்னிணைப்புகள் நடைமுறைப் படிவங்கள், நேர்முகம் காணுதல் தொடர்பான தயார்நிலை பட்டியல்கள், தனிப்பட்ட தரவுகளை ஆவணப்படுத்தல், அச்சுறுத்தல் மதிப்பீடுகளை மேற்கொள்தல், உடல்ரீதியான மற்றும் ஆவண சான்றுகளை கையாளுதல் மற்றும் சான்று நோக்கங்களுக்கான மருத்துவ ஆவணப்படுத்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

# பகுதி II: பாலியல் வன்முறை என்றால் என்ன?

## அத்தியாயம் 2 பொருளடக்கம்

**A.** **பாலியல் வன்முறையை அது ஏற்படும் சூழலிலிருந்த பார்த்தல் .....17**

1. பால்நிலை மற்றும் மோதல் .....17

*பெட்டி 1*
பால்நிலை அடிப்படையிலான வன்முறை .....18

**B.** **பால்நிலை அடிப்படையிலான வன்முறை .....18**

*பெட்டி 2*
பாதிக்கப்பட்டோரும் உயிர் தப்பியிருப்போரும் .....19

**C.** **மோதல் மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை .....19**

1. நிலவுதலும் உந்துதல்களும் .....19

*பெட்டி 3*
நெருக்கடிநிலைகளில் நிலவும் பாலியல் வன்முறைகள் .....20

2. பாலியல் வன்முறைகளை மறைத்தல் .....20
3. பாதிப்புற்றோர் .....21

*பெட்டி 4*
பெண் ஓரினச் சேர்க்கையாளர், ஆண் ஓரின சேர்க்கையாளர், ஈரின சேர்க்கையாளர், பால் மாறிய மற்றும் இருபால் ஆட்கள் ஆகியோருக்கு எதிரான பாலியல் வன்முறை .....22

4. குற்றமிழைத்தோர் .....22
5. புண்புகள் .....23
    i. தொடரும் வன்முறையும் பொதுவான பாதுகாப்பின்மையும் .....23
    ii. செயல்களின் பகிரங்கத் தன்மை .....23
    iii. செயல்களின் மிருகத்தன்மை .....23
6. சுட்டிகள் .....24

*பெட்டி 5*
செங்கொடிகள் .....24

**D.** **பாலியல் வன்முறையின் தாக்கம் .....25**

*பெட்டி 6*
பாலியல் வன்முறையின் தாக்கம் .....25

# அத்தியாயம் 2: பாலியல் வன்முறையைப் புரிந்துகொள்ளல்

பாலியல் வன்முறை என்பது குறிப்பாக ஒரு கொடுமையான வன்முறை வடிவமாகும். பெண்கள், பெண் பிள்ளைகள், ஆண்கள் அல்லது சிறுவர்கள் ஆகியோருக்கு எதிராக இழைக்கப்படும் வன்புணர்வும் உடல் அல்லது உள ரீதியாக பாலியல் தன்மை கொண்ட வேறு ஏதேனும் தாக்குதலும் அதில் அடங்கும். அதன் விளைவுகள் கொடூரமானவையாக அமைவதோடு, பாதிப்புற்றோருக்கும் வேறு சாட்சிகளுக்கும் கடுமையான உடல் மற்றும் உளவியல் பாதிப்புக்களையும் ஏற்படுத்தும். பாலியல் வன்முறையானது, சமூகங்கள் மீதும் பொதுவாக மொத்த குடிமக்கள் மீதும் ஒரு ஆழமாக நிலைகுலையச் செய்யும் தாக்கத்தை ஏற்படுத்தும் (☞ பிரிவைப் பார்க்கவும்: பாலியல் வன்முறையின் தாக்கம்).

## A. பாலியல் வன்முறையை அதன் நிகழ் சூழலிலிருந்து பார்த்தல்

### 1. பால்நிலையும் மோதலும்

துரதிஷ்ட வசமாக பாலியல் வன்முறை ஆயுத மோதல்களின் போது அல்லது வேறு பாரிய கொடுமைகளின் போது வயது வேறுபாடின்றி ஆண்களுக்கும் பெண்களுக்கும் எதிராக இழைக்கப்படும் ஒரு புதிய வகை வன்முறையோ அல்லது தனிப்பட்ட வகையிலான வன்முறையோ அல்ல. ஏதோ ஒரு வகையில் அது ஒரு கணிசமான எண்ணிக்கையிலான கடந்த கால மற்றும் நிகழ்கால மோதல்களின் ஒரு தெளிவான அம்சமாக இருந்து வருகிறது.[1] மோதல் மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறைகள் (CARSV) எவராலும், யார்மீதும் எந்த வழியிலும் இழைக்கப்படலாம் என்பதோடு, அதற்கென்று ஒரு குறிப்பிட்ட உதாரணம் இல்லை. ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் பால்நிலை வழக்கங்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது என்பதை புரிந்துகொள்வது, பாலியல் வன்முறை யாரால், யார்மீது, எவ்வாறு, எவ்வித தாக்கத்தோடு இழைக்கப்படுகிறது என்பதை புரிந்துகொள்வதற்கு முக்கியமாகும்.

பால்நிலை வடிவமானது பல்வேறு சமூகங்களிலும் வெவ்வேறாக காணப்படும் அத்துடன் அவற்றிலிருந்து தவிர்க்க முடியாத வகையில் குறிப்பிட்ட பாலுக்குரிய பணிகளும் உருவாகின்றன, ஆண்கள், சிறுவர்கள், பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் ஆகியோர் மோதலை எவ்வாறு வெவ்வேறு விதமாக அனுபவிக்கின்றனர் என்பதை தீர்மானிககின்றது. இதனால் தான் ஆண்கள், பெண்கள் மற்றும் பிள்ளைகள்:

வெவ்வேறு விதமான உருவத்தைக் கொண்டுள்ளார்கள், தமது சமூகங்களுக்கும் தம்மைத் தாக்குபவர்களுக்கும் வெவ்வேறு விடயங்களையும் அடையாளப்படுத்துகிறார்கள் வெவ்வேறு விதமாக இலக்கு வைக்கப்படுகிறார்கள் அவர்களது காயங்கள் வெவ்வேறு சமூக மற்றும் வாழ்வாதார தாக்கங்களைக் கொண்டிருக்கின்றன் தமது குடும்பங்களிலும் சமூகங்களிலும் வெவ்வேறு பொறுப்புகளைக் கொண்டிருக்கிறார்கள் அதனால் வெவவேறு விதமாக தீமையின் பாதையில் சிக்கிக்கொள்கிறார்கள் வெவ்வேறு வாழ்வாதாரங்கள், காசுப் பொருளாதாரத்திற்கான வாய்ப்பு பரம்பரைச் சொத்தை பெற்றுக்கொள்வதற்கான அதற்கு உரிமை சக்தி ஆகியவற்றைக் கொண்டிருக்கிறார்கள். இவையனைத்தும் அவர்கள் உயிர் வாழ்வதற்கும் மீட்சிபெறுவதற்குமான உதவியை நாடுவதற்கான வழங்கள் மீது தாக்கத்தை கொண்டிருக்கும்.[2]

மேலும், பாரம்பரிய ஆணாதிக்க சமூக முறைமைகள் பெண்களையும் பெண் பிள்ளைகளையும் பணிவான, அமைதியான மற்றும் ஆண்களைவிட குறைந்த மதிப்புள்ளவர்களாக சித்திரிக்கின்றது. பெண்களும் பெண் பிள்ளைகளும் குடும்பத்தின் சின்னமாக, கன்னியமானவர்களாக, புனிதமானவர்களாக அதனால் "இயற்கையாக" பலியாகுபவர்களாக ஆக்கப்படுகின்றனர். இம்முறைமைகள் பெண்களுக்கெதிராக பாலியல் வன்முறைகள் இழைக்கப்படுவதை ஊக்குவிப்பதோடு, அதன் பல்வேறு வெளிப்பாடுகளையும், நோக்கங்களையும் அத்துடன் அது ஒரு அதிர்ச்சியான ஒரு மீறலாக இனங்காணப்படாமல் அது வழக்கமானது தான் என்ற நிலையையும் உருவாக்குகின்றது.

அதேபோன்று, ஆண்களின் ஆண்மைத்துவம், பலம், ஆக்கிரமிக்கும் தன்மை மற்றும் மேலாதிக்கம் பற்றிய எதிர்ப்பாலுணர்வினை நியாப்படுத்தும் அனுமாங்களும் தப்பபிப்பிராங்களும் ஆண்கள் வன்முறை மூலம் பெண்கள் மீதான கட்டுப்பாட்டை காட்டுவதற்கும் அதனை பிரயோகிப்பதற்கும் அவர்களைத் தூண்டும் அத்தோடு, பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட ஆண் இருப்பதை ஏற்றுக்கொள்ள விரும்பாத நிலையையும் ஏற்படுத்தும். இவ்விரு மனப்பாங்குகளும் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் நிலவும் அதிகார ஏற்றத்தாழ்வுகளை மேலும் உருவாக்குவதுடன் CARSV விற்கான நீதி ஆண் அல்லது, பெண் என்று இல்லாமல் அனைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கும் மறுக்கப்படுகின்றது.

---

1 வெளிப்படுத்தலுக்கும் நிலவுதலுக்குமான மேலோட்டங்களுக்கு அஸ்கின் கே (2013) 'ஆயுதமோதல்களின் போது நடைபெறும் பாலியல் வன்முறைகளை கையாளுதல்: ஒரு வரலாற்றுபூர்வமான கண்ணோட்டமும் முன்னோக்கிய பாதையும். டி புரோவர் எட் எல் (eds) சர்வதேச குற்றமாக பாலியல் வன்முறை: பல்துறை அணுகுமுறை. என்ட்வெப்: இன்டெசென்டியா: பாஸ்ட்டிக், எம்.கிரிம் கே, மற்றும் குன்ஸ், ஆர். (2017) ஆயுத மோதல்களின் போது நடைபெறும் பாலியல் வன்முறை: உலகளாவிய கண்ணோட்டமும் பாதுகாப்பு பிரிவினருக்கான சிக்கல்களும். ஜெனிவா: ஆயுத படைகளின் சனநாயக ரீதியான கட்டுப்பாட்டுக்கான நிலையம்.: கெஹேன், டீ.கே மற்றும் நோர்டாஸ், ஆர். (2016) 'ஆயுத மோதல்களின் போது இடம்பெறும் பாலியல் வன்முறை': SVAC தரவுத்தொகுதியை அறிமுகப்படுத்தல், 1989-2009', சமாதான ஆராய்ச்சி சஞ்சிகை, 513: 418-428

2 மசுரானா, டீ, மற்றும் புரொக்டர், கே (2013), பால்நிலை, மோதல் மற்றும் சமாதானம். சமர்விலே, எம்ஏ: உலக சமாதான மன்றம், டப்ஸ் பல்கலைக்கழகம்.

*சிலவகையான பாலியல் வன்முறைகள் நடைபெறுவதற்கு ஒருவரரை உடல்ரீதியாக ஆக்கிரமிப்பு அவசியமில்லை.*

**பெட்டி 1**

**பால்நிலை அடிப்படையிலான வன்முறை**

பாலியல் வன்முறையானது, 'தீவிர அவசர நிலைகளில் ஏற்படும் மிகவும் முக்கிமானதும் ஆபத்தானதுமான வகை பால்நிலை அடிப்படையிலான வன்முறை' என குறிப்பிடப்பட்டுள்ளது. பால்நிலை அடிப்படையிலான வன்முறை (GBV) 'ஒரு நபரின் விருப்பத்திற்கு மாறாக இழைக்கப்படும் ஏதேனும் தீமை பயக்கும் செயல்' எனவும் அது ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே சமூக ரீதியாக ஏற்படும் வேறுபாடுகளை (உ.ம்: பால்நிலை) அடிப்படையாகக் கொண்டதெனவும் விபரிக்கப்படுகிறது. அது உடல், பாலியல் அல்லது உள ரீதியான தீமை அல்லது துன்பம் ஏற்படுத்தும் செயல்கள் அல்லது அத்தகைய செயல்கள் பற்றிய அச்சுறுத்தல், பலவந்தம் மற்றும் வேறு வித்தில் சுதந்திரத்தைப் பறித்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்'[3]

அனைத்து வடிவிலான பாலியல் வன்முறைகளும் பொதுவாக GBV செயல்களாகக் கருதப்படலாம் அதேவேளை, எல்லா வகை GBV களும் பாலியல் தன்மை கொண்டவையல்ல.[4]

## B. பாலியல் வன்முறைகளின் வடிவங்கள்

பாலியல் வன்முறைகள் பலவேறுபட்ட வடிவங்ளை எடுக்கக்கூடும் என்பதோடு, அது பாலியல் வன்புணர்விற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவதில்லை. பலத்தைப் பயன்படுத்தி அல்லது பலவந்த சூழ்நிலைகளில் புரியப்படும் ஏதேனும் பாலியல் தன்மைகொண்ட செயலை அல்லது ஒரு நபரின் பாலியல் செயற்பாடுகளை அல்லது உறுப்புகளை குறிப்பாக இலக்கு வைத்து புரியப்படும் ஏதேனும் செயலை அது உள்ளடக்கும். பாதிக்கப்படுபவரின் உண்மையான சம்மதம் தெரிவிக்க முடியாத தன்மையைப் பயன்படுத்திக் கொள்ளுதலும் - உதாரணமாக பாதிக்கப்படுபவர் ஒரு சிறுபிள்ளையாயின் அல்லது உடல் அல்லது உள ரீதியாக சம்மதிக்க முடியாதவராக இருப்பின், இதுவும் ஒரு வகை பலவந்தப்படுத்தலாகும்.

பாலியல் வன்முறை என்பது பொதுவாக 'ஏதாவது பாலியல் செயலை, பாலியல் செயலைப் பெற்றுக் கொள்ளும் முயற்சி, தேவையற்ற பாலியல் கருத்துகள், நெருங்கி வருதல் அல்லது பலவந்தத்தைப் பிரயோகித்து ஒரு நபரின் பாலியல் நிலைக்கு எதிராக எவரேனும் நபரினால் பாதிக்கப்பட்டவருடனான அவரது உறவைப் பொருட்படுத்தாமல் வீடு மற்றும் வேலைத்தளம் என்று மட்டுப்படுத்தப்படாமல் எந்தச் சூழலிலும் இடம்பெறும் செயல்கள்' என விபரிக்கப்படுகிறது.[5]

உடல் ரீதியான ஆக்கிரமிப்பு ஒரு சில பாலியல் வன்முறைகள் ஏற்படுவதற்கு அவசியமல்ல.

பாலியல் வன்முறை பின்வருவனவற்றை உள்ளடக்கும், ஆனால் பின்வருவனவற்றிற்குள் மாத்திரம் வரையறுக்கப்பட்டதில்லை:

» குற்றமிழைப்பவரினால் அல்லது பாதிக்கப்பட்டவரால் உடலின் ஒரு பகுதி அல்லது ஒரு பொருள் பெண் பிறப்பு உறுப்பை அல்லது மல வாசலை ஊடறுத்துப் புகுத்தப்படுதல் அல்லது பாலியல் உறுப்பு ஒன்று வாயில் புகுத்தப்படுதல் அடங்கலான வன்புணர்வு

» ஏதேனும் வகையிலான வன்புணர்வு செய்வதற்கான அச்சுறுத்தல் மற்றும் முயற்சிகள் அல்லது வேறு ஏதேனும் பாலியல் தாக்குதல் பற்றிய அச்சுறுத்தல் மற்றும் முயற்சிகள்

» பெண்ணுறுப்பு, (பெண்ணுறுப்பைச் சிதைத்தல்) பெண்ணுறுப்புப் பகுதி மற்றும் கிளிட்டோரிஸ் ஆகியவற்றைக் காயப்படுத்தல் அடங்கலாக பெண் பாலுறுப்புபைக் காயப்படுத்தல், மார்பு மற்றும் முலைக்காம்பு, ஆண் பாலுறுப்பு ஆகியவற்றைக் காயப்படுத்தல் அல்லது துண்டித்தல் அல்லது பாலுறுப்புகளில் ஏற்படுத்தப்படும் வேறு வகையிலான வன்முறைகள் உள்ளடங்கும்.

» பாலுப்புறுக்களில் மின்சாரம் பாய்ச்சுதல் அல்லது முலைக் காம்புகளைக் கிள்ளுதல் அல்லது வாழ்க்கை துணை அல்லது பிள்ளை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகப்படுத்தப்படுவதைப் பார்ப்பதற்கு பலவந்தப்படுத்தல் உள்ளிட்ட பாலியல் சித்திரவதை

» பலவந்த விபச்சாரம்

» பலவந்தமாக கர்ப்பமாக்கப்படுதல்

» பலவந்த மலடாக்குதல் மற்றும் பலவந்த கர்ப்பச் சிதைவு

» பலவந்த நிர்வாணம்.

(உதாரணத்திற்கு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உரோம சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டுள்ள பாலியல் வன்முறைக் குற்றங்களின் அம்சங்களை நிரல்படுத்தும் பின்னிணைப்பு 1 ஐ பார்க்க)

---

3 மனிதாபிமான சூழ்நிலைகளில் பால்நிலை அடிப்டையிலான வன்முறை தொடர்பான தலையீடுகளுக்கான சர்வ நிறுவன நிலையியற் குழு (2015) வழிகாட்டி நெறிகள்: இடரைக் குறைத்தல், மீட்சிபெறுதலை மேம்படுத்தல் மற்றும் மீட்சிக்கு உதவுதல் ஜெனீவா IASC.

4 பாலியல் ரீதியிலானதல்லாத பால்நிலை அடிப்படையிலான குற்றங்களின் (உம்: விசேட போராடும் வயதுக் குழுவைச் சேர்ந்த ஆண்கள் இலக்கு வைத்து தெரிவு செய்யப்பட்டு கொலை செய்யப்படுவது) ஆவணப்படுத்தலை இவ்நெறிமுறைகள் நேரடியாக கையாளாது. எனினும், சில கருவிகளும் முறைகளும் பாலியல் ரீதியில்லாத பால்நிலை தொடர்புபட்ட வன்முறைகளை ஆவணப்படுத்த பயன்மிக்கதாக அமையும்.

5 உலக சுகாதார நிறுவனம் 2016 பெண்களுக்கெதிரான வன்முறைகள்: நெருங்கிய வாழ்க்கை துணையும் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் -தரவுத் தாள் ஜெனீவா WHO.

**பெட்டி 2**

**பாதிப்புற்றோரும் உயிர் தப்பியிருப்போரும்**

'பலியானோர்' எனும் பதம் இவ்நெறிமுறை முழுவதும் பாலியல் வனமுறைக் குற்றங்கள் மற்றும் மீறல்களின் பலியானோரைக் குறிப்பிடுவதற்கு மாத்திரமன்றி, வன்புணர்வினால் உண்டான கர்ப்பத்தின் விளைவாகப் பிறந்த குழந்தைகள் அடங்கலான அவர்களது குடும்ப உறுப்பினர்களையும் சமூக உறுப்பினர்களையும் உளளடக்குவதாகவும் புரிந்துகொள்ளப்படுகிறது. முக்கியமாக,'பலியானோர்' எனும் பதம்பாலியல் வன்முறைகளிலில் உயிர்தப்பியோரையும் தப்பாதோரையும், அதாவது காயங்கள் காரணமாக இறந்திருக்ககூடய அல்லது தாக்குதலின் பின்னர் கொலை செய்யப்பட்டிருக்கக்கூயவர்களையும் குறிக்கும்.

'உயிர்தப்பிவாழ்வோர்' என்ற சொல்லைவிட 'பலியானோர்' என்ற சொல்லைப் பயன்படுத்துவது எவ்வகையிலும் தனிப்பட்ட பலியானோரின் நிறுவனம், தன்னாதிக்கம் மற்றும் மீட்சி ஆகியவற்றைக் குறைப்பதாக பொருள்படாது. 'உயிர்தப்பிவாழ்வோர்' என்ற சொல்லைப் பிரயோகித்தல் தர்க்க ரீதியாக இதைவிட சிறப்பாக பொருள் உணர்த்துவதாக அமையலாம். எனினும், இந்த நெறிமுறைகளின் நோக்கத்திற்கு அமைவாக - பாலியல் வன்முறைகளுக்கான பொறுப்புக் கூறலை நாடுவதற்காக - பயன்படுத்தப்படும் சொல் தனித்தனியாகவும் கூட்டாகவும் உரிமைகள் மீறப்பட்டுள்ள ஆட்களின் சட்ட அந்தஸ்தை சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்களினாலும் மீறல்களினாலும் பலியானவர்களாக துல்லியமாக பிரதிபலிப்பதோடு அவ்வாறு இணங்காட்டவும் வேண்டும்.

## C. மோதல் மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை

இவ்நெறிமுறைகளில் பயன்படுத்தப்பட்டவாறு மோதல் மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை(CARSV) எனும் சொற்றொடரின் விளக்கத்திற்கு அத்தியாயம் 1இல் உளள பிரிவு … ஐ: சர்வதேச நெறிமுறைப் பயன் படுத்துதல் பார்க்கவும்.

### 1. நிலவுதல் மற்றும் உந்துதல்

ஒரு யுத்தக் குற்றமாக இழைக்கப்படினும், மனிதகுலத்திற்கெதிரான அத்துடன்/அல்லது இனப்படுகொலையாக அல்லது சர்வதேச சட்டத்தின் வேறு ஏதேனும் மீறலாக இழைக்கப்படினும், பாலியல் வன்முறை என்பது எப்போதும் பிள்ளைகள் உள்ளிட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கெதிராக மோதலின்போது இழைக்கப்படும் துயரமான மற்றும் மிருகத்தனமான வகைக் குற்றவியல் செயலின் அங்கமாகும்.

எடுத்துக்காட்டாக:

- மோதல் சூழ்நிலைகளில், இராணுவ நோக்கங்களை முன்னெடுக்கும் ஓர் உத்தியாக சிவிலியன்கள் உள்ளிட்ட பல தனிமனிதர்களுக்கெதிராக பாலியல் வன்முறைகள் இழைக்கப்படக்கூடும். அத்தகைய வன்முறை ஒரு குடி மக்களுக்கெதிராக நடத்தப்படும் பரவலான அல்லது திட்டமிட்ட தாக்குதலின் அல்லது இனப்படுகொலை செயல்களின் ஓர் அங்கமாக அமையும்.
- சமூகங்களை பலவீனப்படுத்தி அவற்றின்மீதான கட்டுப்பாட்டை அடைவதற்காக பாலியல் வன்முறை பயன்படுத்தப்படலாம். அது ஒரு குறிபபிட்ட குழுவினரைத் தண்டிப்தற்கு அல்லது அழித்தொழிப்பதற்கு, அவர்கள் மனதில் திகில் ஊட்டுவதற்கு, அவர்கள்மீது பலிக்குப்பலி வாங்குவதற்கு அல்லது ஓரிடத்திலிருந்து அவர்களைத் தப்பியோடச் செய்வதற்கு மற்றும் தாக்குதல்கள் நடக்குமென்ற வார்த்தையைப் பரப்புவதற்கு பயன்படுத்தப்படலாம்.
- தடுப்பு முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் விசாரணை நிலையங்களிலும் தண்டிப்பதற்கு, இழிவுபடுத்துவதற்கு, அச்சுறுத்துவதற்கு அல்லது ஆண் மற்றும் பெண் தடுத்துவைக்கப்பட்டோரிடமிருந்து பலவந்தமாகத் தகவல் பெறுவதற்கு பாலியல் வன்முறை ஒரு வகை சித்திர வதையாகப் பயன்படுத்தப்படும்.
- ஒரு சமூகத்தில் அவர்களது விசேட பணி, வகிபாகம் அல்லது தலைவர், செயற்பாட்டாளர் அல்லது ஆதரவாளர் என்ற அந்தஸ்து காரணமாக தனிமனிதர்கள் பாலியல் வன்முறைக்கு இலக்கு வைக்கப்படலாம். அவர்களுடைய செயற்பாடுகள், அல்லது இருக்குமிடம் தொடர்பான தகவல்களை வழங்குமாறு பலவந்தப்படுத்துவதற்காக அவர்களது குடும்ப உறுப்பினர்கள் ஒரு தண்டனை வடிவமாக பாலியல் வன்முறைக்கு இலக்கு வைக்கப்பட்டு சித்திரவதைப் படுத்தப்படலாம்.
- இராணுவ வீரர்களையும் போராளிகளையும் ஒன்றாகப் பிணைத்து வைத்திருப்பதற்காக தோழமையுணர்வு,

வெகுமதி அல்லது குழுவின் இளம் உறுப்பினர்கள் குற்றத்தில் ஈடுபட்டு குழுவுடன் பிணிக்கப்படும் ஒரு முறையாகிய தொடக்கக் கிரியையின் ஒரு வடிவமாக பாலியல் வன்முறை சிவிலியன்கள் மற்றும் எதிரிப் படையின் உறுப்பினர்கள் மீது பாலியல் வன்முறை இழைக்கப்படக்கூடும்.

» பாலியல் வன்முறைகள் கிரியை அல்லது தீங்கிழைக்கும் இனவாத நடைமுறையின் பகுதியாகவும் இழைக்கப்படலாம். உதாரணமாக கன்னிப்பெணகள் அல்லது பிள்ளைகளுடனான பாலியல் உடலுறவு போராளிகளுக்கு விசேட சக்தியையும் தோற்கடிக்க முடியாத தன்மையையும் வழங்குகிறது அல்லது நோய்களுக்கான ஒரு நிவாரணம் என்ற நம்பிக்கையில் புரியப்படும்.

**பெட்டி 3**

### நெருக்கடிகளின்போது பாலியல் வன்முறை

மோதல், அவசரகாலம் மற்றும் இடப்பெயர்வு முதலிய சூழ்நிலைகளில் பாலியல் வன்முறை CARSV செயல்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்ததப்பட்டிருப்பதில்லை – உண்மையில், அது முக்கியமாக சமூக மற்றும் குடும்ப கட்டமைப்புகள் சிதைவடைந்திருப்பதன் விளைவாக, பாதுகாப்பின்மை காரணமாக, சட்டத்தின் ஆட்சி இல்லாமையினால் மற்றும் குற்ற விலக்களிப்பு நிலவுவதன் காரணமாக இழைக்கப்படுகிறது. இது, ஆயுதமேந்தி போரிடுவோர் அல்லது சிவிலியன்கள், இனந்தெரியாதோர் அல்லது நெருங்கிய பங்காளர் ஆகியோரினால் இழைக்கப்படும் பால்நிலை தொடர்புபட்ட கடுமையான வகை வன்முறைகளுக்கு பெண்கள் மற்றும் பிள்ளைகள் பாதிப்புறத்தக்கவர்களாகவும் ஆட்படக்கூடியவர்களாகவும் ஆகும் நிலைக்கு இட்டுச் செல்லக்கூடிய ஏற்றத்தாழ்வின் பின்னணியல் விருத்தியுறுகிறது. இந்நெறிமுறைகளின் கவனக் குவிப்பு CARSV இன் ஆவணப்படுத்தல் மீதாகவிருப்பினும், எந்த வன்முறைகளுக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் பொறுப்புக்கூறல் நாடப்பட வேண்டுமோ, அந்த வேறு வகை பாலியல் வன்முறைகளிலிருந்து விலகி தனித்து CARSV இடம்பெறுவதில்லை என்பதை செயற்பாட்டாளர்கள் அறிந்திருக்க வேண்டும்.

## 2. பாலியல் வன்முறைகளின் குறைவான அறிக்கையிடல்

மோதல்களின் போது ஏற்படும் ஏனைய வகை வன்முறைகளைப் போலன்றி, பாலியல் வன்முறை மிகவும் குறைவாகவே அறிக்கையிடப்படுகிறது குறைவாகவே ஆவணப்படுத்தப்படுகிறது. பாலியல் வன்முறைக்குப் பலியாவோர் சேவைகளையும் நீதிப் பொறிமுறைகளையும் ஏனைய மோதலுக்குப் பிந்திய நிவாரணங்களையும் நாடிச் செல்வதில் கணிசமான தடைகளை எதிர்நோக்குகின்றனர்.

உயிர் தப்பியுள்ள சிலர் சமூகத்தினால் சமத்தப்படும் வடு, வெட்க உணர்வு மற்றும் அவமதிப்பு காரணமாகவும் உயிர் தப்பியுள்ளவர்களும் அவர்களது குடும்பத்தினரும் அனுவபவித்த மனதை பலவீனப்படுத்தும் உளக் காயம் கராணமாகவும் அறிவிக்க முன்வருவதில்லை. ஏனையவர்கள் வாழ்க்கை துணையினாலும் ஏனைய குடும்ப உறுப்பினர்களினாலும் தமது சமூகத்தினாலும் ஒதுக்கி வைக்கப்படுவோம் என்று அஞ்சுகின்றனர். சிலர் பலிக்குப்பலி வாங்கல் அல்லது கௌரவக் கொலை முதலிய மேலும் வன்முறைகளை எண்ணி அஞ்சுகின்றனர். பலியானவர்கள் தேசிய பொலிஸ் அல்லது சர்வதேச சமாதானப் படையினர் அல்லது புலனாய்வாளர்களில் நம்பிக்கையற்றவர்களாவும் உள்ளனர். சில நாடுகளில், பாலியல் வன்முறைகளுக்குப் பலியானோர் ஓரினச்சேர்க்கை அல்லது விபச்சாரத்தில் ஈடுபட்டதென்ற குற்றசாட்டின் பேரில் குற்றவியல் வழக்கை எதிர்நோக்கவும் கூடும்.

பாலியல் வன்முறைகளுக்குப் பதிற் செயற்பாடாற்றுகின்ற அதிலும் குறிப்பாக அதனை ஆவணப்படுத்துகின்ற செயற்பாட்டாளர்கள், தாங்கொனா வெட்க உணர்வின் மேலீட்டினாலேயே பலியானோர் அறிவிக்க முன்வருவதில்லை என்று எண்ணிவிடக்கூடாது – அவர்கள் நீதியை நாடியடைய முடிதிருப்பது, அதனைச் செய்வதற்கான பாதுபாப்பானதும் உறுதுணையானதுமான சூழ்நிலை இல்லாமையினாலும் அத்துடன்/ அல்லது முன்வருவதினால் பலியானவர்களும் சாட்சிகளும் எதிர் கொள்ளும் ஆபத்தினாலுமாகும். பாலியல் வன்முறைகளில் உயிர் தப்பிருப்போர் மற்றும் சாட்சிகள் முன்வந்து அக்குற்றங்கள் பற்றி அறிவிப்பதற்குப் போதுமானளவு பாதுகாப்பாகவும் சௌகரியமாகவும் இருப்பாதாக உணரும் ஒரு பாதுகாப்பான, இரகசியம் பேணுகின்ற மற்றும் உறுதுணையான சூழ்நிலையை கூட்டாக ஏற்படுத்த செயற்பாட்டாளர்கள் அனைவரும் முயல வேண்டும்.

## 3. பலியானோர்

பாலியல் வன்முறைகளினால் எல்லாரும் பாதிக்கப்படலாம்:

### பெண்கள்

பாலியல் வன்முறைகளினால் எல்லாரும் பாதிக்கப்படலாமெனினும், ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே நிலவுகின்ற வரலாற்று ரீதியானதும் கட்டமைக்கப்பட்டதுமான ஏற்றத் தாழ்வுகளும் உலகெங்கிலும் பெண்கள் அனுபவிக்கும் பல்வேறு வகை பால்நிலை அடிப்படையிலான பாரபட்சமும் மோதல் பின்னணிகளில் நிகழும் பாலியல் வன்முறைகளினால் பெண்களும் பெண்பிள்ளைகளும் பெருமளவில் பாதிப்படைவதற்கு பங்களிப்புச் செய்கின்றன. மோதல்களின்போது இடம்பெறும் பாலியல் வன்முறைகள் இந்தப் பரவலான சூழ்நிலையிலும், மிகவும் உயர் மட்டத்திலான நெருங்கிய பங்காளர்களினால் இழைக்கப்படும் வன்முறைகளை அனுபவிப்பதிலிருந்து போரிடாதவர்களினால் புரியப்படும் பாலியல் மற்றும் உடல்ரீதியான வன்முறைகள், பலவந்தமான இளவயது திருமணம், பெண்ணுறுப்பை சிதைவுறுத்தல், கௌரவக் கொலை மற்றும் பாலியல் பயன்பெறுதலுக்காக ஆட்கடத்தல் வரையிலான பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் எதிரன வன்முறைகளின் ஓர் உலகளாவிய வழமை மயப்படுத்தலின் அங்கமாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

### எல்லா வயதினரும்

எல்லா வயது பெண்களும் ஆண்களும் பாதிக்கப்படுகின்றனர். கிழக்கு கொங்கோ ஜனநாயகக் குடியரசில் நடத்தப்பட்ட ஒரு 2010 ஆம் ஆண்டு ஆய்வு 49 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் ஏனையவர்கள் அனுபவித்த அதே விகதத்தில் பாலியல் வன்முறைகளை அனுபவித்தனர் எனக் கண்டறிந்தது.[6]

### வலது குறைந்தோர்

உடல் அத்துடன்/அல்லது உள குறைபாடுடையவர்கள் குறிப்பாக பாதிப்புறத் தக்கவர்கள். வட உகண்டாவில் உள்ள ஒரு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் (HRW) அறிக்கை நேர்முகம் காணப்பட்ட வலது குறைவான பெண்களுள் மூன்றிலொரு பங்கினர் அவர்களது தனிமை, உறுதுணை கட்டமைப்புகள் இல்லாமை, உடல் ரீதியான நகர்வின் மட்டுப்பாடுகள், தொடர்பாடல் தடைகள் ஆகியன காரணமாகவும் வலது குறைவான பெண்கள் பலவீனமானவர்கள், முட்டால்கள் அல்லது பாலுறுப்பற்றவர்கள் எனும் மூடநம்பிக்கையின் காரணமாகவும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர,[7] மற்றும் இலக்கு வைக்கப்படிருந்தனர் என்பதை வெளிச்சமிட்டுக் காட்டியது.[8]

### ஆண்கள்

பாலியல் வன்முறைகளுக்குப் பலியானவர்களுள் ஆண்கள் ஒரு கணிசமான வீதம் உள்ளனர். தரவுகள் குறைவாக இருப்பினும், ஆண் பலியானவர்களுக்கும் பெண் பலியானவர்களுக்கும் இடையில் வரலாற்று ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டதைக் காட்டிலும் குறைவான வேறுபாடே உண்டு என்று அண்மைக்கால கண்டறிதல்கள் எடுத்துக்காட்டுகின்றன. [9]

### பிள்ளைகள்

சில மோதல்களில், பூப்படைவதற்கு முந்திய மற்றும் கட்டிளமைப்பருவத்தினர் உள்ளிட்ட சிறுவன் மற்றும் சிறுமி ஆகிய இருபால் பிள்ளைகளும் பாலியல் வன்முறைகளுக்குப் பலியாவோர்களுள் 80 வீததிற்கு மேல் உள்ளனர்.[10] ஆறு மாத பச்சிளம் குழந்தைகள் கூட பாலியல் வன்முறைக்கு பலியானதாக அறிக்கைகள் உள்ளன.

பாலியல் வன்முறைக்கு பலியாவோர் இன்ன பிரிவினர்தான் என்று “குறிப்பிட்டு” கூறக்கூடிய பிரிவினர் எவரும் இல்லை – அது கட்டான உடல் கொண்ட இளம் பெண்கள் மீது மட்டும் புரியப்படும் ஒரு குற்றச் செயல் அல்ல.

சில பிரிவினர் ஏனையவர்களை விட அடிக்கடி பாலியல் வன்முறைச் செயல்களுக்கு இலக்கு வைக்கப்படக்கூடும். இவர்களுள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர், அகதிகள், பிள்ளைகள், பெண் குடும்பத் தலைவிகள், ஆண் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள், ஆண் மற்றும் பெண் தடுப்புக் காவலிலுள்ளோர் (ஓர் ஆயுதக் குழுவின் கடுப்பாட்டில் உள்ளவர்கள் அடங்கலாக), ஆயுதப் படைகள் அல்லது ஆயுதக் குழுக்களுடன் தொடர்புபட்டோர், குறிப்பிட்ட ஒரு இன, மத, அரசியல், தேசிய அல்லது இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் அடங்குவர்.

6 ஹாவர்ட் மனிதாபிமான முன்னெடுப்பு மற்றும் ஒக்ஸ்பேம் இண்டெர்நெஷனல் (2010) ‘தற்போது உலகம் நானின்றி உள்ளது’: கிழக்கு கொங்கோ சனநாயக குடியரசில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் பற்றிய ஓர் ஆய்வு. கேம்பிரிஜ் ஒக்ஷ்பர்ட்:ஒக்ஸ்பேம் இன்டெர்நெஷனல்: p 9.

7 மனித உரிமைகள் கண்காணிப்பகம் (2010) ‘நாம் மானுடர்கள் அல்லாதது போல’ : வடஉகன்டாவில் வலது குறைந்த பெண்களுக்கு எதிரான பாரபட்சமும் வன்முறையும். நியுயோர்க்: மனித உரிமைகள் கண்காணிப்பகம்

8 மனித உரிமைகள் கண்காணிப்பகம் (2010) ‘நாம் மானுடர்கள் அல்லாதது போல’ : வடஉகன்டாவில் வலது குறைந்த பெண்களுக்கு எதிரான பாரபட்சமும் வன்முறையும். நியுயோர்க்: மனித உரிமைகள் கண்காணிப்பகம் p 8.

9 அத்தியாயம் 17: ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கு எதிரான பாலியல் வன்முறை ஐ பார்க்க.

10 சேவ்த சில்ரன் (2014) பிள்ளைகளுக்கு எதிரான சொல்லொனா குற்றங்கள்: மோதல்களின் போது இடம்பெறும் பாலியல் வன்முறை: லண்டன்.சேவ்த சில்ரன

*…பாலியல் வன்முறைச் செயல்கள் புரியும் சிறுவர்கள் அடிக்கடி அத்தகைய செயல்களைப் புரியுமாறு தூண்டப்பபட்டுள்ளார்கள் அல்லது கட்டாயபடுத்தப்பட்டுள்ளார்கள் என்பதோடு அவர்களே பலியானவர்களும் ஆவர்.*

**பெட்டி 4**

**பெண் ஓரினச்சேர்க்கையாளர்கள், ஆண் ஓரினச்சேர்க்கையாளர்கள், ஈரினச்சேர்க்கையாளர்கள், மாற்றுப் பாலின மற்றும் இருபாலின ஆட்களுக்கு எதிரான பாலியல் வன்முறை**

உலகெங்கும் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள், ஆண் ஓரினச்சேர்க்கையாளர்கள், ஈரினச் செர்க்கையாளர்கள், மாற்றுப் பாலின மற்றும் இருபாலின ஆட்கள் (LGBTI) தமது பாலியல் நாட்டம் மற்றும் பால்நிலை அடையாளம் காரணமாக வன்முறைகளையும் பாரபட்சத்தையும் எதிர்நோக்குகின்றனர். ஆயுதமோதல்கள் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையின்மை ஆகிய சூழ்நிலைகளில் LGBTI சமூக உறுப்பினர்களுக்கு எதிராக இழைக்கப்படும் CARSV செயல்கள் நடைபெறுவதோடு, அவை மிக மோசமான வகைப் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளாகவும் மனித உரிமை மீறலாகவும் அமைகின்றன. எனினும் அவை மிக மிகக் குறைவாகவே ஆவணப்படுத்தப்படுகின்றன.

LGBTI ஆட்களைத் தண்டிப்பதற்காக, அவர்கள் மனதில் திகிலூட்டுவதற்காக அல்லது அல்லது அவர்களது பாலியல் நடத்தைகளையும் பால்நிலை அடையாளத்தையும் திருத்துவதற்காக அவர்களுக்கெதிரா அரச அதிகாரிகளினாலும் போராளிகளினாலும், மத அல்லது அரசியல் அல்லது ஒத்துழைக்கும் சிவிலியன்களினாலும் போராளிகளினாலும் பல்வேறு வகையான வன்புணர்வுகள், பாலுறுப்பு சிதைவுறுத்தல் மற்றும் வேறு பாலியல் தாக்குதல் செயல்கள் புரியப்படுகின்றன.

மேலும், பல பிராந்தியங்களில், ஓரினச் சேர்கையை குற்றவியல் செயலாக்குவது, பாலியல் சிறுபான்மையினருக்கெதிரான பரவலான பாரபட்சம் மற்றும் கொடுமைப்படுத்தலும் பொருத்தமான சேவைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு இல்லாமையும் பாலியல் வன்முறைகளுக்குப் பலியாவோர் அக்குற்றங்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்குமான ஈடுசெய்தல் உள்ளிட்ட உளச்சமூக அல்லது மருத்துவ, சட்ட அல்லது பொருளதார உதவிகள் மற்றும் நிதி ஆகியவற்றை நாடியடைவதில் கணிசமான தடைகளை எதிரநோக்குகின்றனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

## 4. குற்றமிழைத்தோர்

பாலியல் வன்முறை ஆயுதப்படை உறுப்பினர்கள், பொலிஸ் மற்றும் வேறு அரச திகாலிகள், துணைப்படை குழுவினர், அரச சார்பற்ற ஆயுதக்குழுக்கள், சமாதானப் படையினர், மனிதாபிமான செயற்பாட்டாளர்கள் மற்றும் குடிமக்கள் உள்ளிட்ட யாராலும் இழைக்கப்படலாம்.[11]

பாலியல் வன்முறைகள் புரிவோருள் மிகப் பெரும்பான்மையினர் ஆண்களேவெனினும், பெண்களும் பாலியல் வன்முறைகள் புரிவதாக, அதற்கு ஒத்துழைப்பதாக மற்றும் அதனைத் தூண்டுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.[12]

ஆயுதக் குழுக்கள் மற்றும் படையினரோடு தொடர்புபட்ட பிள்ளைகளினால் பாலியல் வன்முறைகள் இழைக்கபடும் சந்தர்ப்பங்களில்,[13] பாலியல் வன்முறைச் செயல்கள் புரியும் பிள்ளைகள் அத்தகைய செயல்களைச் செய்யுமாறு ஆட்டிப்படைக்கப்படுகின்றார்கள் அல்லது கட்டாயப்படுத்தப்படுகின்றனர் என்பதையும் எனவே அவர்களும் பலியாவோர் என்பதையும் செயற்பாட்டாளர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். குற்றங்களின் பலியாகும் பிள்ளைகள் மற்றும் சாட்சிக்காரப் பிள்ளைகள் தொடர்பான நீதி விடயங்கள் பற்றிய ஐநா வழிகாட்டு நெறிகள்[14] மற்றும் சிறுவர் தொடர்பான ஐநா சமவாயம் ஆகியவற்றிற்கமைய பிள்ளைகள் உயிர்தப்பிருப்போராக/சாட்சிகளாக நடத்தப்பட வேண்டுமேயன்றி குற்றமிழைத்தோராக நடத்தப்படலாகாது.[15]

---

11 பார்க்க: ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, மோதல் தொடர்புபட்ட பாலியல் வன்முறை – செயலாளர் நாயகத்தின் அறிக்கை (S/2016/361)[EN/AR]; ஐநா பொதுச் சபை, மத்திய ஆபிரிக்க குடியரசின் சர்வதேச சமாதான படையினரால் புரியப்பட்ட பாலியல் பயன்பெறுதல் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பான சுயேட்சையான ஒரு மீளாய்வின் அறிக்கை(A/71/99); UNHCR and சேவ்த சில்ரன், பாலியல் பயன்பெறுதல் மற்றும் வன்முறை- கினி, லைபீரியா மற்றும் சியராலியோன் ஆகிய நாடுகளில் அகதி சிறுவர்களின் அனுபவம் (நியுயோர்க் NYமற்றும் லண்டன், 2002).

12 டிபுரோவர், ஏ., மற்றும் ருயிஸ் எல் (2017) தெற்கு மவுத்தான் மற்றும் ஓ.ஜுராஸ் ஆகிய இடங்களில் இடம்பெற்ற மோதல்களின் போது நடைபெற்ற ஆண் பாலியல் வன்முறை மற்றும் மற்றும் பெண் பாலியல் வன்முறைகளின் பெண் குற்றமிழைத்தோர் (eds) நிலைமாற்று நீதியில் பாலியல் வன்முறை .என்வெப்:இன்டெர்சென்டியா (வரவுள்ள)

13 சிறுவர்கள் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான வரைவிலக்கணங்களுக்கும் கலந்துரையாடல்களுக்கும் அத்தியாயம் 16 ஐ பார்க்க: பாலியல் வன்முறையும் சிறுவர்களும்

14 UNICEFமற்றும்UNODC(2005) குற்றத்தில் சிறுவர் பலியோனோரும் சிறுவர் சாட்சிகளும் சம்பந்தப்பட்ட நீதி விடயங்கள் தொடர்பான வழிகாட்டும் நெறிகள். நியுயோர்க் மற்றும் வியன்னா UNICEF andUNODC.

15 ஐநா பொதுச் சபை, சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம், நவம்பர் 20, 1989.

## 5. பண்புகள்

'சமாதானகால'பாலியல் வன்முறையிலிருந்து 'மோதலின் போதான' பாலியல் வன்முறை வேறுபடும் விதம் அதன் பின்னணிகளுக்கும் தூண்டல்களுக்கும் அப்பால் செல்கிறது. 'மோதலின் போதான' பாலியல் வன்முறை எபபோதும் பின்வரும் பண்புகளைக் கொண்டுள்ளது:

### i. தொடர்ச்சியான வன்முறையும் பொதுவான பாதுகாப்பின்மையும்

பாலியல் வன்முறை தனியான செயலாக இழைக்கப்படுவதில்லை என்பதோடு, விரிவான ஒரு குற்றச்செயல்கள் திட்டத்தின் ஓர் அங்கமாகவே இடம்பெறுகிறது (உ.ம்: பெருமளவிலான கொலைகள் மற்றும் சூறையிடல்). CARSVவிற்கு ஆட்பட்டு உயிர்தப்பியிருப்போர் பெரும்பாலும் ஏனைய கொடுமைகளுக்கும் உள்ளாகி உயிர் தப்பியிருப்போராக இருக்கக்கூடும் என்பதோடு, ஏனைய குற்றச்செயல்களுக்கான சாட்சிகளாகவும் இருக்கலாம். வன்முறையின் அதிகரிக்கும் தொடர்ச்சியும் முரண்பாட்டின் பாதுகாப்பற்ற தன்மையும் பாலியல் வன்முறைக்கு உள்ளாகி உயிர்தப்பிய பலர் தாக்கப்பட்ட பின்னர் வீட்டிற்குத் திரும்ப அல்லது பாதுகாப்பான இடத்திற்குத் தப்பியோட முடியாதுள்ளனர் என்பதைக் குறிக்கும். உடல் ரீதியான ஆபத்தின் உண்மையான அச்சுறுத்தல் இன்னமும் நிலவவே செய்யும். எனவே, உயிர் தப்பியோர் ஒரு தொடர்ச்சியான எச்சரிக்கை, பீதி மற்றும் பதகளிப்பு மனநிலையிலிருந்து விடபட முடியாதிருப்பர். உயிர் தப்பியிருப்போர் சிலவேளைகளில் குற்றமிழைப்போர்களோடு சேர்ந்து வாழ வேண்டியிருக்கலாம் - ஒன்றில் ஒரே சமூகத்தினுள் வாழ்வதனால் அல்லது அண்டிய பகுதிகளில் செயல்படுவதனால். அவர்கள் தாம் மீண்டும் வன்புணர்விற்கு உள்ளாகக்கூடும் என்ற ஆழமான அச்சத்தோடு வாழக்கூடும் - பலர் அவ்வாறு மீண்டும் வன்புணர்விற்கு ஆளாகின்றனர்.

### ii. உண்மைகளின் பகிரங்கத்தன்மை

CARSV எப்போதுமில்லாவிட்டாலும் அடிக்கடி மற்றப் பலியானோர், இராணுவ வீரர்கள் அல்லது சமூக உறுப்பினர்கள் பார்த்திருக்க புரியப்படும் ஒரு பகிரங்கக் குற்றமாகும். மனைவிமார் அவர்களது கணவன்மார் முன்னிலையில் வன்புணர்வு செய்யபப்படுகின்றனர் ஆண்கள் ஏனைய தடுத்து வைக்கப்பட்டிருப்போர் முன்னிலையில் பாலியல் சதியாக துஷ்பிரயோகிக்கப்படுகின்றனர் சிறுவர்கள் அவர்களது பெற்றார் முன்னிலையில் தாக்கப்பபடுகின்றனர். சமூகங்கள், இனக் குழுக்கள் அல்லது பாலியல் சிறுபான்மையினர் கூட்டாக பாலியல் ரீதியாக பயங்கர செயல்களுக்கு உட்படுத்தப்படலாம்.

உண்மைகள் பற்றிய பொதுமக்கள் அறிவு ஓர் உயிர் தப்பிருப்பவரின் 'களங்க' முற்றிருப்பதான உணர்விற்கும் வெட்க உணர்விற்கும் பங்களிப்புச் செய்கிறது. முழுச் சமூகதிற்கும் தாம் தோல்வியின் சின்னமாக இருப்பதாக உயிர்தப்பியிருப்போர் உணர்வதற்கும் - பெற்றோராயினும், உறவினராயினும் அல்லது வேறு யாராயினும் - சாட்சிகள் தமது அன்புக்குரியவர்களை பாதுகாக்கத் தவறிவிட்டதாக உணர்வதற்கும் அது இட்டுச்செல்லும்.

CARSV பகிரங்கமாக ஊக்குவிக்கப்பட்டு – ஊடகம், அரசு மூலமாகவும் ஆயுதக் குழுக்களுக்குள்ளும் - CARSV விற்கான வாய்ப்புகளைக் குறைப்பதற்குப் பதிலாக அதனை புரிவதற்கான வாய்ப்புகளை ஏற்பத்தும்

### iii. செயல்களின் மிருகத்தனம்

மோதலின் போதான பாலியல் வன்முறைகள் குறிப்பாக மிருகத்தனமானதாக, துன்புறுத்தி இன்பம் காண்பதாக, அந்நியரை வெறுப்பதாக, பெண்களை வெறுப்பதாக அமையக்கூடும். பலியாவோர் அடிக்கடி கும்பல்களினால் வன்புணர்வு செய்யப்படுகின்றன. அடுத்து ஏற்படும் ஒவ்வொரு வன்புணர்வும் அதைவிட வன்முறையானதாக அமையும். பாலியல் வன்முறையில் ஏற்படும் உடல் காயங்கள் குறிப்பாக கடுமையானதாக இருக்கும் என்பதோடு, துப்பாக்கிச் சூடுகள் அல்லது துப்பாக்கிகள் மற்றும் துப்பாக்கி முனை ஈட்டிகள் ஆகியவற்றை கொண்டு பலியானோர் உடலில் உட்புகுத்துவதற்கு பயன்படுத்தும் ஆயுதங்களின் மூலம் பிறப்புறுப்பு பகுதியில் சிதைவை ஏற்படுத்துதல் அல்லது வேறு காயங்கள் ஏற்படுத்துதல் ஆகியவற்றையும் உள்ளடக்கும். தமது அன்புக்குரியவர்களின் சிதைக்கப்பட்ட உடற்பாகங்களை கொண்டு பலியானவர்கள் உடலினுள் உட்புகுத்தப்படலாம். பெண்களின் மார்புகள், முலைக்காம்புகள் வெட்டி எறியப்படலாம். ஆண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை விடயத்தில் ஆண் உறுப்பைச் சுற்றி கயிறுகள் சுற்றப்பட்டு கடுமையான காயங்கள் ஏற்படும் வண்ணம் இழுக்கப்படலாம். என்பதோடு, ஆண்கள் தமது சகோதரிகள், புதல்விகள் அல்லது தாய்மாரோடு பாலியல் உறவு செய்யுமாறு பலவந்தப்படுத்தக்கூடும்.

பலியாவோரும் ஏனைய சாட்சிகளும் குழந்தைப் பருவத்துப் பிள்ளைகள் உள்ளிட்ட தமது அன்புக்குரியவர்கள் வன்புணர்வு செய்யப்படுவதை, காயப்படுத்தப்படுவதை அல்லது கொல்லப்படுவதை பார்க்க நிர்ப்பந்திக்கப்படக்கூடும். இறந்த உடல்களோடு ஆண்கள் பாலியல் உடலுறவு கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டதாக அறிக்கைகள் உள்ளன. மோதலின்போது நடைபெறும் பல வகையான பாலியல் வன்முறகளில் காணப்படும் மிக மோசமான மிருகத்தனம், மனிதத்தன்மையிழக்கச் செய்தல் மற்றும் மனிதரை வெறும் ஜடமாக நடத்துதல் ஆகியன பல பலியானோர் கடுமையான உடல் மற்றும் உளக் காயங்களுக்கு உள்ளாவதையும் அக்காயங்களுக்கு போதுமான ஆதரவு அவர்களுக்கு இல்லாதிருப்பதையும் குறிக்கின்றது. (அத்தியாயம் 15 ஐ பார்க்கவும்: உளக்காயம்)

## 6. சுட்டிகள்

ஒரு சில சூழ்நிலைகளும் சம்பவங்களும் பாலியல் வன்முறைத் தாக்குதல்கள் நடைபெறக்கூடும் அல்லது நடைபெறுகின்றன என்பதை எடுத்துக் காட்டும் சுட்டிகளாக அமையக்கூடும்.[16] இச் 'செங்கொடிகள்' ஆயுதக்குழுக்களுக்கு பலவந்தமாக ஆட்சேர்ப்புச் செய்தல் ஆட்கடத்தல்கள் ஆயுதப்படையினரால் அல்லது ஆயுதக் குழுக்களினால் சூறையாடல் பாடசாலை முற்றுகைகள் சோதனைச்சாவடிகள் தடுத்து வைப்புகள் ஆண்களும் பெண்களும் பலவந்தமாக வேறுபடுத்தப்படும் சூழ்நிலைகள் சித்திரவதை பற்றிய அறிக்கைகள் மற்றும் போர் மற்றும் இடப்பெயர்வு ஆகியவற்றை உள்ளடக்குமென்பதோடு, அவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவதுமில்லை. எனினும், இவ்வகை சுட்டிகள் எதுவும்' இல்லாதபோதும், CARSV இடம்பெறக்கூடும்.

**பெட்டி 5**

### செங்கொடிகள்

| பாலியல் வன்முறை நடைபெறக்கூடும் அல்லது நடைபெறுகிறது என்பதை எடுத்துக்காட்டும் சம்பவங்களும் சூழ்நிலைகளும் | |
|---|---|
| இராணுவம்/ பாதுகாப்பு | » பலவந்த ஆட்சேர்ப்பு மற்றும் ஆட்கடத்தல்<br>» பெண்கள் மற்றும் இளம் சிறுவர்களிலிருந்து ஆண்களையும் மூத்த சிறுவர்களையும் வேறுபடுத்தல்<br>» வீடுகளை சோதனையிடல்<br>» பாடசாலைகளை சோதனையிடல்<br>» சூறையாடலும் கலவரமும்<br>» பலிக்குப் பலி தாக்குதல்கள்<br>» சோதனைச் சாவடிகளும் வாகனங்களைப் பதுங்கியிருந்து தாக்குதலும்<br>» தடுத்து வைத்தல், விசாரணை மற்றும் சித்திரவதை |
| அரசியல்/ சட்ட | » பெண்கள் தொடர்பான இழிவுபடத்தும் மற்றும் மனித தன்மையை இழக்கச்செய்யும் பேச்சு உள்ளிட்ட பிரசாரமும் குரோத பேச்சும்,<br>» இனத்துவப் பிரிவுகள்<br>» பெண்ணுரிமையையும் மனித உரிமைகளையும் மட்டுப்படுத்தும் அவசர காலச் சட்டப் பிரகடனம், மத ஈடுபாடு மற்றும் கட்டாய கடமைகள்<br>» பெண் அரசியல்வாதிகள், அபேட்சகர்கள் மற்றம் பெண்ணுரிமை பாதுகாவலர்களை இலக்கு வைத்தல்<br>» LGBTI சமூக உறுப்பினர்கள் முதலிய பாலியல் சிறுபான்மையினரை இலக்கு வைத்தல்<br>» இசைவாகாத பால்நிலை நியமங்களை இலக்கு வைத்தல் |
| சமூக/ மனிதாபிமான | » அகதிகள் மற்றம் உள்நாட்டில் இடம்பெயர்றந்தோர் (IDP) தப்யோடுதலும் இடம்பெயர்தலும்<br>» இடம்பெயர்வு சூழ்நிலைகளில் நிலவும் மோசமான பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு<br>» பொது இடங்களிலும் நடவடிக்கைகளிலும் பெண்களின் அவதானிக்கத்தக்க பிரசன்னமின்மை<br>» முகாம்களின் ஆயுதமேந்திய கட்டுப்பாடு<br>» சமாதானப்படையினருக்கும் வேறு ஆயுதக்குழுக்கள் மற்றும் உள்நாட்டு மக்களில் பாதுகாப்பற்றுள்ள பிரிவினர் ஆகியோருக்குமிடையிலான அனுமதிக்கப்படாத சேவை மற்றும் பொருட்களின் பறிமாற்றங்கள் பற்றிய அறிக்கைகள்<br>» இரானுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள், பெரக்குகள் அல்லது சமாதானப்படை நிலையங்களில் அனுதியற்ற சிவிலியன் பெண்கள் மற்றும் பிள்ளைகளின் அறிவிக்கப்படும் பிரசன்னம். |

16 மோதல்களின்போது நடைபெறும் பாலியல் வன்முறைகளுக்கு எதிரான ஐநா நடவடிக்கை (2001) மெட்ரிக்ஸ்: மோதல் தொடர்புபட்ட பாலியல் வன்முறையை காட்டும் முன்கூட்டிய எச்சரிக்கை சுட்டிகள். நியுயோர்க்: ஐநா நடவடிக்கை:சர்வதேச குற்றவியல் புலனாய்வுகளுக்கான நிறுவகம் (2015) மோதல்களின்போது இடம்பெறும் பாலியல் வன்முறைகள் பற்றிய ஆவணப்படுத்தல் மற்றும் விசாரணை செய்தல் பற்றிய சர்வதேச நெறிமுறைகள்: பயிற்சி ஆவணங்கள்: பிராமெட்ஸ், பீ.எஸ்., ஜாவிஸ்,எம்., eds. (2016) ICTYஇல் மோதல் தொடர்புபட்ட பாலியல் வன்முறைகளுக்கு எதிராக வழக்கு தொடுத்தல். ஒக்ஸ்பர்ட்: ஒக்ஸ்பர்ட் பல்கலைக்கழக பதிப்பகம் 250–253.

## D. பாலியல் வன்முறையின் தாக்கம்

பாலியல் வன்முறையானது பாதிக்கப்படுவோருக்கு உடனடி மற்றும் பாரதூரமான உடல் மற்றும் உளவியல் தீங்குகளை ஏற்படுத்தக்கூடும். அது, காயங்கள், நோய்கள் மற்றும் தொற்று, அதிர்ச்சி, உளக் காயத்திற்குப் பிந்திய அழுத்தம் மற்றும் மனவழுத்தம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

எனினும், சுகாதார, பொலிஸ் அல்லது நீதித் துறையினால் வழங்கப்படும் தேவையை உணராத மற்றும் போதாத சேவைகளினாலும் பாதிக்கப்படுவோருக்கு ஆதரவளிக்காத மற்றும் அவர்களை ஒதுக்கி வைக்க, குறைகூற மற்றும் தண்டிக்கக்கூடிய குடும்ப மற்றும் சமூக உறுப்பினர்களினாலும் பாதிக்கப்படுவோருக்கு மேலதிக மற்றும் பாரதூரமான தீங்கு ஏற்படுகிறது.

**பெட்டி 6**

### பாலியல் வன்முறையின் தாக்கம்

பாலியல் வன்முறையானது பாதிக்கப்படுவோருக்கு உடனடி மற்றும் பாரதூரமான உடல் மற்றும் உளவியல் தீங்குகளை ஏற்படுத்தக்கூடும். அது, காயங்கள், நோய்கள் மற்றும் தொற்று, அதிர்ச்சி, உளக் காயத்திற்குப் பிந்திய அழுத்தம் மற்றும் மனவழுத்தம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

எனினும், சுகாதார, பொலிஸ் அல்லது நீதித் துறையினால் வழங்கப்படும் தேவையை உணராத மற்றும் போதாத சேவைகளினாலும் பாதிக்கப்படுவோருக்கு ஆதரவளிக்காத மற்றும் அவர்களை ஒதுக்கி வைக்க, குறைகூற மற்றும் தண்டிக்கக்கூடிய குடும்ப மற்றும் சமூக உறுப்பினர்களினாலும் பாதிக்கப்படுவோருக்கு மேலதிக மற்றும் பாரதூரமான தீங்கு ஏற்படுகிறது.

#### உடல்ரீதியான தாக்கங்கள்

| *அனைத்துப் பலியானோரும்* | *பெண் பலியானோர்* | *ஆண் பலியானோர்* | *பலியான சிறுவர்* |
|---|---|---|---|
| » பாலுறுப்புப் பகுதி, பாலுறுப்பு மற்றும் வாய் காயங்கள் அடங்கலான காயங்கள் சிலவேளைகளில் மரணத்திற்கு இட்டுச்செல்லும்.<br>» நோய்<br>» HIV, கிளமீடியா, கெனோரியா, சிபிலிஸ் ஹேப்பஸ் மற்றும் மானுட பப்பிலோமாவைரஸ் (HPV) ஆகியன அடங்கலான பாலியல் ரீதியாகப் பரப்பப்படும் தொற்றுகள் (STIs).<br>» அங்கவீனம்<br>» பாலியல் செயலிழப்பு<br>» மலட்டுத்தன்மை | » கிழிப்புகள்/ காயத்தினால் ஏற்படும் பிளவு அடங்கலான பாலுறுப்பு, பாலுறுப்புப் பகுதி மற்றும் மலவாசல் காயங்கள்<br>» கருச் சிதைவு<br>» தேவையற்ற கர்ப்பம்<br>» பாதுகாப்பற்ற கருக்கலைப்பினால் ஏற்படும் சிக்கல்கள்<br>» மாதவிடாய் ஒழுங்கீனம்<br>» கர்ப்ப சிக்கல்கள்<br>» மகப்பேற்று ஒழுங்கீனங்கள்<br>» மலட்டுத்தன்மை<br>» பாலுறுப்புப் பகுதியில் வலி மற்றும் செயலிழப்பு | » மலவாசல் சேதமுறல் (உ.ம்: கிழிப்புகள், பிளவுகள், கீழிறங்கல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட மலம் கழிவதை கட்டுப்படுத்த முடியாமை)<br>» ஆணுறுப்பு மற்றும் விதை சேதமுறல்<br>» மேலும் மலவாசல் சேதமுறுதலைத் குறைக்குமுகமாக பலியானோர் சாப்பிடுவதைத் தவிர்க்கும்போது ஏற்படும் போசாக்கின்மை<br>» ஆணுறுப்பு கட்டப்படும்போது குருதியோட்டம் தடைப்படுவதால் ஏற்படும் ஆணுறுப்பு பலவீனமுறல்<br>» தீராத முதுகு, மலவாசல் வலி | » இளவயதில் கர்ப்பமுறுவதால் ஏற்படும் மரணம்<br>» கடும் உடற் காயங்கள் (உடல் முழுமையாக வளர்ச்சியுறாததால் மேலும் கடுமையானதாக இருக்கக்கூடும்)<br>» STIs களின் அதிகரித்த இடர் (அளவில் சிறிதாக இருப்பதனால் பாலுறுப்பு திசுக்களின் அதிகரித்த அழிவு) |

பெட்டி 6

## பாலியல் வன்முறையின் தாக்கம்

### உளவியல்/ மனோதத்துவ விளைவுகள்

| *அனைத்துப் பலியானோரும்* | | *பலியான சிறுவர்கள்* |
|---|---|---|
| » கடும் அழுத்தக்கோளாறு<br>» மனவழுத்தம்<br>» கோபம், கவலை மற்றும் பயம்<br>» வெட்கம், தன்னைத்தானே குறைகாணல் மற்றும் குறைந்த சுய மதிப்பு<br>» தற்கொலை எண்ணங்களும் நடத்தையும்<br>» போதைப்பொருள் துஷ்பிரயோகம் உள்ளிட்ட அதிக இடர்கொண்ட சுகாதார நடத்தை<br>» மனவெழுச்சி உணர்விழத்தல்<br>மேலும் விபரங்களுக்கு உளக்காயம் தொடர்பான அத்தியாயம் 15 ஐ பார்க்கவும். | » உளக்காயத்திற்குப் பிந்திய அழுத்த ஒழுங்கீனம் (PTSD) மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஒன்றுக்கு மேற்பட்ட நோய்கள்<br>» தீராத களைப்பு<br>» நடத்தை ஒழுங்கீனம்.<br>» தூக்க ஒழுங்கீனம்<br>» பாலியல் செயற்பாட்டில் ஆர்வமிழப்பு<br>» அதிக இடர்கொண்ட பாலியல் நடத்தை<br>» பாலியல் செயலிழப்பு / பாலியல் பலவீனம் | » அவர்கள் வளரும்போது நரம்புத்தொகுதி மற்றும் நரம்பியல் செயலிழப்பிற்கு இட்டுச் செல்லும் உளக் காயத்தின் விளைவாக மூளையில் ஏற்படும் நரம்பியல் மாற்றங்கள்<br>» துஷ்பிரயோகத்தை வழமையானதாக்குதல்/ பாலியல் பற்றி ஆரோக்கியமான புரிந்துணர்வை விருத்தி செய்யாமை. |

### சமூக

| *அனைத்துப் பலியானோரும்* | *பெண் பலியானோர்* | *ஆண் பலியானோர்* | *பலியான சிறுவர்* |
|---|---|---|---|
| » பங்காளர்/ வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகளுடன் தடைப்படும் உறவு<br>» பங்காளரினால்/ வாழ்க்கைத் துணையினால் கைவிடப்படல்<br>» சமூக வடு, சமூகத்தினால் நிராகாரிக்கப்படல் மற்றும் தனிமைப்படல்<br>» இடப்பெயர்வு காரணமாக தனிமைப்படல் | » களங்கமுற்ற, தூய்மையற்ற பெண்களாக மற்றும் பெண்பிள்ளைகளாக அவமதிக்கப்படுவதாக உணர்வதுபோன்ற, தடைபட்ட பெண்மை பற்றிய கலாசார ரீதியான விசேட உணர்வு<br>» ஆக்கிரமிப்பிற்கான காரணமாக இருப்பதாக எண்ணி பெண்மையையும் பெண் பாலியல் தன்மையையும் வெறுத்து ஒதக்குதல்<br>» வன்புணர்வினால் பிறந்த குழந்தைகளுடன் கடினமான உறவு | » வேலை செய்ய முடியாமையினால், வருமானம் ஈட்டுவதற்கும் தமது குடும்பங்களைத் தாங்குவதற்குமான திறன் அழிவுறுவதனால் தடைப்படும் ஆண்மை.<br>» குடும்ப வன்முறை அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு | » வளரும்போது (பிறரை) நம்புவதில் அல்லது நெருக்கமான உறவை ஏற்படுத்துவதில் சிரமம். |

பெட்டி 6

## பாலியல் வன்முறையின் தாக்கம்

### சமூக-பொருளாதார மற்றும் சட்டம்

| அனைத்துப் பலியானோரும் | பெண் பலியானோர் | ஆண் பலியானோர் | பலியான சிறுவர் |
|---|---|---|---|
| » வாழ்வாதாரத்தின் இழப்பும் பொருளாதார தங்கி வாழ்தலும்<br>» சமூகத்தில் வகிபாகம் மற்றும் பணி இழப்பு | » திருமணத்திற்குப் புறம்பாக அல்லது விபச்சாரம் மூலமான பாலியல் உறவிற்காக கைது, தடுத்து வைத்தல் மற்றும் மரண தண்டனை/சில நாடுகளில் கல்லெறிந்து கொல்தலை உள்ளடக்கும் தண்டனை<br>» அதிகரித்த பால்நிலை ஏற்றத்தாழ்வுகள் | » ஓரின சேர்க்கைக்காக கைது, தடுத்துவைப்பு மற்றும் ஒரு சில சூழ்நிலைகளில் மரண தண்டனையை உள்ளடக்கும் தண்டனை | » கல்விக்கான வாய்ப்பை இழத்தல்<br>» வாழ்க்கைத்தொழில் மற்றும் வாழ்வாதார இழப்பு |

# பகுதி III: சர்வதேச சட்டத்தின் கீழ் பாலியல் வன்முறை

## அத்தியாயம் 3 பொருளடக்கம்

**அத்தியாயம் 3: பொறுப்புக்கூறல் வழிகளும் நிவாரணங்களும் ........................................ 29**

**A. அறிமுகம் ........................................................................................................................29**

**B. சர்வதேச சட்டத்தின் கீழான மீறலாகவும் குற்றமாகவும் பாலியல் வன்முறை ..........................................................29**

*பெட்டி 1*
சர்வதேச குற்றவியல் சட்டம், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாடு யாது?..........................................................................30

**C. பாதிக்கப்பட்டோருக்கான பொறுப்புக்கூறல் வழிகள் மற்றும் நிவாரணங்கள் பற்றிய மேலோட்டம் .......................................30**

1. உள்நாட்டு வழிகள் ..........................................................................................32

*பெட்டி 2*
குற்றவிலக்களிப்பபை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு கருவியாக சர்வதேச நியாயாதிக்கம்..........................................33

2. பிராந்திய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறைகள்...............................................................34
3. புலனாய்வு மற்றும் உண்மை கண்டறிதல் அமைப்புகள் .......................................................................35
4. சர்வதேச மற்றும் கலப்பு நீதிமன்றங்களும் நியாய சபைகளும்................................................................36
5. அரசுகளுக்கிடையலான பூசல்களுக்கான வழிகள்...................................................................................37

# அத்தியாயம் 3: பொறுப்புக்கூறலுக்கான வழிகளும் நிவாரணங்களும்

## A. அறிமுகம்

மோதல் மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறைகள் என்பது, வன்புணர்வு, சித்திரவதை மற்றும் - மோதல்களின் போது அல்லது சிவிலியன் பொது மக்களுக்கெதிரான தாக்குதலாகப் புரியப்படும் மனித உரிமைகள் மீறலாக மாத்திரமின்றி, யுத்தக் குற்றங்களாகவும் மனித குலத்திற்கெதிரான குற்றங்களாகவும் அல்லது இனப்படுகொலையாகவும் அமையும் வேறு வடிவிலான பாலியல் வன்முறைகள் முதலிய குற்றங்களை உள்ளடக்கும்.

அனைத்து அரசுகளும் - அரசுகள் ஒரு குறிப்பிட்ட சர்வதேச ஆவணத்தில் தாம் ஒரு தரப்பாக இருப்பினும் அல்லது இல்லாவிடினும் - கட்டுப்பட வேண்டிய எழுதப்படாத பொது விதிகளாக அமையும் சர்வதேச வழமைச்சட்டத்தின் படி, சர்வதேச சட்டத்தின் பாரதூரமான மீறலாகவும் அச்சட்டத்தின் கீழான குற்றங்களாவும் அமையும் பாலியல் வன்முறைக்கு பலியானோர்[1]:

- நீதிக்குரிய சமமானதும் பயனுறுதிமிக்கதுமான வாய்ப்பிற்கு
- தாம் அனுபவித்த தீமைக்கு போதுமான, பயனுறுதிமிக்க மற்றும் உடனடியான ஈடு செய்தலுக்கு உரித்துடையவர்களாவர்.

செயற்பாட்டர்களினால் திரட்டப்படும் பாலியல் வன்முறை பற்றிய தகவல்களை பொறுப்புக்கூறல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய பல வழிகள் உள்ளன. இத்தகவல்கள் குற்றவியல் வழக்குத் தொடுத்தல், சிவில் நட்டஈட்டுக் கோரிக்கைகள், மனித உரிமை முறைப்பாடுகள் ஆகியவற்றுக்கும் ஈடுசெய்தலுக்காக அல்லது அரச சமூக ஆதரவிற்காக முறையான பலியானோர் அந்தஸ்தை பெற விரும்பும் தனிமனிதர்களுக்கும் அத்துடன் வேறு காரணங்களுக்கும் பயன்மிக்கவையாக அமையலாம். CARSV இல் பாதிக்கப்பட்டோருக்கு உள்நாட்டு, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் கிடைக்கக் கூடிய முக்கிய பொறுப்புக்கூறல் வழிகள் மற்றும் நிவாரணங்கள் பற்றிய ஒரு மேலோட்டம் C பிரிவில் வழங்கப்பட்டுள்ளது.

## B. சர்வதேசச் சட்டத்தின் மீறலாக மற்றும் அதன் கீழான குற்றமாக பாலியல் வன்முறை

வன்புணுர்வு மற்றும் ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகள் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினால் (IHL) நீண்ட காலமாகத் தடை செய்யப்பட்டுள்ளதோடு, தற்போது சர்வதேச வழமைச் சட்டத்தின் படி எல்லாக் காலங்களிலும் (சமாதான காலத்திலும் ஆயுத மோதல் இடம்பெறும் காலத்திலும்) தடை செய்யப்படுவதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.[2] பாலியல் வன்முறை பாதுகாப்பிற்கான உரிமை, பாரபட்சத்தின் மீதான தடை மற்றும் சித்திரவதை, கொடுமை மனிதாபிமானமற்ற அல்லது இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துதல் அல்லது தண்டனை மீதான தடை ஆகியவற்றின் மூலம் பல்வேறு சர்வதேச மனிதாபிமானச் சட்ட ஆவணங்களினாலும் IHRL), சர்வதேச குற்றவியல் சட்டத்தினாலும் (ICL) தடை செய்யப்பட்டுள்ளது. முன்னாள் யுகோஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாயமன்றம் மற்றும் ருவாண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாயமன்றம் ஆகியவற்றின் (சிறப்பு நியாய மன்றங்கள் அல்லது ICTY மற்றும் ICTR) நியாயாதிக்கத்தின் மூலம் தான் குறிப்பாக வன்புணர்வு ஒரு யுத்தக் குற்றமென்ற வகையில் மனிதகுலத்திற்கெதிரான குற்றம் என்ற வகையில் மற்றும் இனப் படுகொலை செயல் என்ற வகையில் அதற்கெதிராக முதன்முதலாக வழக்குத் தொடுக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, அக்காயெசு வழக்கில், ICTR வன்புணர்வு இனப்படுகொலையில் அடங்கும் ஒரு செயலாக அமைகிறதென்று குறிப்பிட்டது மாத்திரமின்றி, வன்புணர்வு சித்திரவதையாக அமையுமென்றும் அறிவித்தது.[3]

---

1 ஐநா பொதுச் சபை, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் ஆகியவற்றில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் மற்றும் ஈடுசெய்தலுக்கான உரிமைகள் தொடர்பான அடிப்படை கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டு நெறிகள், ஐநா பொதுச் சபை தீர்மானம் 60/147(2005) (நிவாரணம் மற்றும் ஈடுசெய்தலுக்கான உரிமை தொடர்பான ஐநா அடிப்படை கோட்பாடுகள்) VII 'பலியானோரின் நிவாரணத்திற்கான உரிமை', கோட்பாடு 11.

2 சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழு, சர்வதேச வழமை மனிதாபிமான சட்ட தரவுத்தளம், விதி 93, 'வன்புணர்வும் ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகளும் தடைசெய்யப்பட்டுள்ளன' https://ihl-databases.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul_rule93 இல் கிடைக்கும்

3 வழக்குத் தொடுனர் எதிர் அக்காயெசு (டிரயல் என் ஜஜ்மன்ட்,ICTR-96-4-T,2செப்.1998இபந்தி.687.

*...சர்வதேசச் சட்டம் அச்சட்டங்களின் இரு வரைவிலக்கணங்கள் மீதானதும் சர்வதேச சட்டத்தின் கீழ் பாலியல் வன்முறை எத்தகைய குற்றமாகும் என்பதுமீதானதுமான மரபுகள் மற்றும் நியமங்களைக் கொண்டிருக்கின்றது.*

**பெட்டி 1**

**சர்வதேச குற்றவியல் சட்டம், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் என்பதும் மீதானதுமான வேறுபாடு யாது?**

**சர்வதேச குற்றவியல் சட்டம்** (ICL) யுதத்க் குற்றங்கள், மனிதகுலத்திற்கெதிரான குற்றங்கள், மற்றும் இனப்படுகொலைச் செயல்கள் முதலிய மிகவும் பாரதுராமான மற்றும் சிறைவாசம் போன்ற தண்டனைகளுக்கு வழி வகுக்கும் சர்வதேச குற்றங்களுக்கான தனிமனிதர்களின் குற்றவியல் பொறுப்புகள் தொடர்பான பகிரங்க சர்வதேச சட்ட ஏற்பாடாகும்.

**சர்வதேச மனித உரிமைகள் சட்டம்** (IHRL) சிவில் உரிமைகளாயினும், அரசியல், பொருளாதாரா, சமூக அல்லது கலாசார உரிமைகளாயினும், பலவித உரிமைகளைப் மதிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் நிறைவேற்றுவதற்குமான அரசுகளின் கடப்பாடுகளை விதித்துரைக்கிறது. ஓர் அரசின் ஆள்புலத்தினுள் அல்லது அதன் நியாயாதிக்கத்தின் கீழ் தனிமனிதர்களை அவ்வரசின் தான்தோன்றித்தனமான செயல்கள் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகம் ஆகியவற்றிலிருந்து பாதகாப்பதே அதன் பிரதான நோக்கமாகும். அது சமாதான காலத்திற்கும் மோதல் இடம்பெறும் காலத்திற்கும் பொருந்தும். அரசுகளின் அனுமதி, விருப்பம் மற்றும் ஆதரவுடன் செயற்படும் அவற்றின் சொந்த அமைப்புகள் அல்லது ஆட்கள் இவ்வுரிமைகளை மீறி, செய்கின்ற அல்லது செய்யாது விடுகின்ற செயல்களுக்காக மட்டுமின்றி, அவ்வுரிமைகளைப் பாதுகாக்கச் செயற்படத் தவறியமை மற்றும் அரச மற்றும் அரசசார்பற்ற செயற்பாட்டாளர்களினால் அவ்வுரிமைகள் மீறப்படுவதை தடுக்கத் தவறியமைக்காகவும் அரசுகள் பொறுப்பாக்கப்படும்.

**சர்வதேச மனிதாபிமானச் சட்டம்** (IHL) ஆயுத மோதல்கள் நடைபெறும் காலங்களுக்குப் பொருந்துவதோடு, மோதலில் பங்கேற்காத அல்லது மோதலில் இப்போது பங்கேற்காத சில பிரிவினரை பாதுகாப்பதையும் யுத்த செயற்பாடுகளின் தொனிப்பொருள் மற்றும் முறைமைகள் ஆகியவற்றை ஒழுங்குபத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. IHL விதிகள் மோதலில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு (அரசுகள் மற்றும் அரசைச் சாராத, ஒழுங்கமைக்கப்பட்ட ஆயுதக் குழுக்கள்) கடமைகளை விதிப்பதோடு, ஐரீடு இன் பல மீறல்கள் ICL இன் கீழ் யுத்தக் குற்றங்களாகக் கருதப்படுகின்றன் அவற்றிற்கு தனி மனிதர்கள் குற்றவியல் ரீதியாக பொறுப்பாகலாம்.

ICL,IHRLandIHL ஆகியன ஒன்றிற்கொன்று குறை நிரப்புவதோடு, உண்மைகள் வெவ்வேறு சட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யுமாயின், ஒரு குறிப்பிட்ட வழக்கில் அவை சம காலத்தில் பிரயோகிக்கப்படவும் முடியும்.

பாலியல் வன்முறையை ஆவணப்படுத்தும்போது, பாலியல் வன்முறைச் சம்பவங்கள் (உ-ம்: வன்புணர்வு) தொடர்பான விளக்கத்திற்கும் சர்வதேசச் சட்டத்தின் கீழ் இச் செயல்களை எவ்வாறு வகைப்படுத்துவது, அதிலும் குறிப்பாக பல்வேறு வகையான சர்வதேச குற்றங்களுக்குக் குற்றப் பகிர்வு செய்வது போல இவற்றிற்கு எவ்வாறு குற்றப்பகிர்வு செய்வது என்பது தொடர்பான விளக்கதிற்குமிடையே வேறுபாடு ஒன்று காணப்படவேண்டும். செயல்கள் பற்றிய விளக்கம் மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் பாலியல் வன்முறை எத்தகைய குற்றமாக அமையும் என்பது பற்றிய விளக்கம் தொடர்பான மரபுகளையும் நியமங்களையும் சர்வதேசச் சட்டம் கொண்டுள்ளமையினால், இந்த வேறுபாடு முக்கியமாகும். CARSV ஐ ஆவணப்படுத்துவதற்கான எந்த முயற்சியும் இவ்விரு அம்சங்கள் பற்றிய சான்றுகளைத் திரட்டுவதை தேவைப்படுத்தும், அதாவது, அச் செயல் தொடர்பான சான்றுகளும் அதனை சர்வதேச சட்டத்தின் கீழான ஒரு குற்றமாக்கும் அச்செயல் புரியப்பட்ட சந்தர்ப்பம் தொடர்பான சான்றுகளும் உள்நாட்டுச் சட்டங்கள் பாலியல் வன்முறைச் செயல்களின் விளக்கத்திலும் இவை எவ்வாறு சர்வதேசக் குற்றங்களாக வகைப்படுத்தப்படுகின்றன என்பது பற்றிய விளக்கத்திலும் போதுமானவையாக இல்லாதிருக்கக்கூடும்.

உதாரணமாக, வன்புணர்வு சம்பந்தப்பட்ட தேசிய குற்றவியல் சட்டக்கோவையில் ஆண்களை குற்றமிழைப்போராகவும் பெண்களை பலியாவோராகவும் மட்டுப்படுத்துவது போன்ற கட்டுப்படுத்தப்பட்ட விதத்தில் விளக்கப்படலாம் இது, வன்புணர்வை பால்நிலை ரீதியில் நடுநிலையாக விளக்கும் சர்வதேச நியமங்களுக்கு ஒவ்வாததாகும். மேலும், சர்வதேச சட்டத்தின் மீறலாக அல்லது அதன்கீழான குற்றங்களாக அமையும் வன்புணர்வும் வேறு வடியிலான பாலியல் வன்முறைகளும் (உ-ம்: சித்திரவதை, யுத்தக் குற்றங்கள், மனிதகுலத்திற்கெதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை) குற்றங்களாக்கப்பட வேண்டுமென்பதோடு, அக்குற்றங்களின் வன்முறைமிக்க தன்மையையும் தாக்கத்தையும் பிரதிபலிக்கும் வண்ணம் உள்நாட்டில் அவற்றிற்கெதிராக வழக்குத் தொடக்கப்படவேண்டும் இது அரசுகளுக்குள்ளே எப்போதும் நடைபெறுவதில்லை.

## C. பாதிக்கப்படுவோருக்கு பொறுப்புக்கூறலுக்கான வழிகள் மற்றும் நிவாரணங்கள்

சர்வசே சட்டத்தின் ஒரு மீறலாக அல்லது அதன் கீழான ஒரு குற்றமாக அமையும் பாலியல் வன்முறைகளுக்குப் பலியாவோருக்குக் கிடைக்கக்கூடியதாகவிருக்கும் முக்கிய பொறுப்புக்கூறல் வரைச்சட்டகம் மற்றும் நிவாரணங்கள் பற்றிய ஒரு மேலோட்டத்தை இப்பிரிவு வழங்குகிறது.

வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறை ஆகியவற்றுக்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கான அரசின் பொறுப்பும் நிவாரணம் மற்றும் ஈடுசெய்தல் ஆகியவற்றிற்கான பலியானோரின் உரிமையும் சர்வதேச சட்டத்தின் கீழ் ஒன்றுக்கொன்று குறைநிரப்பும் இரு மரபுத் தொகுதிகளாகும் என்பதை கவனத்தில் கொள்வது முக்கியமாகும். சர்வதேச சட்டத்தின் கீழ் அல்லது தேசிய சட்டத்தின் கீழ் குற்றமாக அமையும் பாலியல் வன்முறைச் செயல்களுக்குப் பொறுப்பானவர்களை விசாரித்து அவர்களுக்கெதிராக வழக்குத் தொடுப்பதற்கும், அரசாங்கமே காரணமென்று காட்டக்கூடிய செயல்கள் மற்றும் செய்யாதுவிட்டவை ஆகியவற்றிற்காக

*...நீதி நியாயமானதும் போதுமானதுமான ஈடு செய்தலுக்கு உறுதுணை புரியுமுகமாக அனுபவித்த தீமைகளின் முழுமையான அளவும் ஆவணப்படுத்தப்படுவதையும் ஆவணப்படுத்தல் உறுதிசெய்ய வேண்டும்.*

CARSV இல் பலியானோருக்கு பயனுறுதிமிக்க நிவாரணங்களை வழங்குவதற்குமான முதன்மையான பொறுப்பு அரசுகளுக்கு உண்டு.[4] ஈடுசெய்தல் பொதுவாக இழப்பீட்டை உள்ளடக்கும்: எனினும் பொறுத்தமானவாறு, உடமைகளை மீள வழங்கல், புனர்வாழ்வு, பகிரங்க மன்னிப்கோரல், பகிரங்க நினைவுச் சின்னங்கள், மீண்டும் நிகழாதிருப்பதற்கான உத்தரவாதம் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் நழைமுறைகளிலான மாற்றங்கள் ஆகியவற்றையும் மனித உரிமை மீறல்கள் புரிந்தோரை நீதியின் முன் கொண்டு வருதலையும் உள்ளடக்கும்.[5]

பாலியல் வன்முறைகளை ஆவணப்படுத்தல் பிரதானமாக அக்குற்றங்கள் தொடர்பான தகவல்களை திரட்டுவதன் மூலம் வெற்றிகரமான வழக்குத் தொடுத்தலை நோக்கமாகக் கொண்டிருக்கலாம் என்ற அதேவேளை, அச் செயற்பாடு பலியானோரினால் ஈடுசெய்தலுக்காக விடுக்கப்படும் கோரிக்கைகளை மனதில் கொண்டு நடத்தப்படவேண்டுமென்பதோடு, அவ்வாவணப்படுத்தல் நீதியான மற்றும் போதுமான ஈடுசெய்தலுக்கு உறுதுணை புரியுமுகமாக (பலியானோர்) அனுபவித்த தீமையின் முழுமையான அளவும் ஆவணப்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் (மேலும் விபரங்களுக்கு அத்தியாயம் 6 ஐ பார்க்கவும்: ஈடு செயதல், பெட்டி 2: போதுமான நிவாரணமாகவும் ஈடுசெய்தலாகவும் அமைவது யாது?).

எனினும், பாலியல் வன்முறைக் குற்றங்களை விசாரிப்பதற்கு தேசிய நிறுவனங்களுக்கு முடியாதிருக்கும்போது அல்லது விருப்பமில்லாதிருக்கும்போது, உரிய பயிற்சியும் கருவிகளும் ஆணையும் உடைய செயற்பாட்டாளர்கள் பாலியல் வன்முறைக் குற்றங்களை பயனுறுதிமிக்க வகையில் ஆவணப்படுத்தி, திரட்டடிய சான்றுகளை பாதுகாப்பதன் மூலமும் பாதிக்கப்பட்டோருக்கான தெரிவுகளை திறந்த நிலையில் வைத்திருப்பதன்மூலமும் பொறுப்புக்கூறல் மற்றும் பயன்மிக்க நிவாரணத்திற்கும் ஈடுசெய்தலுக்குமான பாதிக்கப்பட்டோரின் உரிமைகளை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கு வகிக்க முடியும்.

பாதிக்கப்பட்டோருக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ள பொறுப்புக்கூறல் பொறிமுறைகளின் அளவு பின்வரும் சில காரணிகளில் தங்கியுள்ளது:

» குற்றம் இடம்பெற்ற நாட்டில் நிலவும் பொருத்தமான சட்ட வரைச்சட்டகம்

» சம்பந்தப்பட்ட நாடு ஒரு தரப்பாகவிருக்கும் பிராந்திய மற்றும் சர்தேச ஆவணங்கள் மற்றும் இவை எவ்வாறு அமுல்படுத்தப்பட்டுள்ளன என்பது.

» உள்நாட்டு நிவாரணங்கள் தீர்ந்துபோதல் (இது பெரும்பாலான பிராந்திய மற்றும் மனித உரிமைகள் பொறிமுறைகளை நாடியடைவதற்கு அவசியமாகும்)

» முதலாவது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை (ICC) தாபிக்கும் ரோம் சட்டத்தை அங்கீகரித்தல்

» சர்வதேச சமூகத்தின் பதிற்செயற்பாடு (உதாரணமாக, ஒருவிசாரணை ஆணைக்குழு, ஒரு சர்தேச அல்லது கலப்பு நீதிமன்றத்தை தாபிப்பதன் மூலம் அல்லது நிலைமையை ICC ற்கு ஆற்றுப்படுத்து வதன் மூலம்)

» பாதிப்படைந்தோர் வகை, குற்றம் இழைக்கப்பட்ட திகதி மற்றும் சூழ்நிலை.

CARSV விற்கு பலியானோர் உள்நாட்டு, பிராந்திய மற்றும் சர்வதச மட்டங்களில் நீதியையும் ஈடுசெய்தலையும் நாடக்கூடியதாக இருக்கும்.[6] இதனுள், பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் பரவலாகப் பின்வருமாறு வகைப்படுத்தப்படலாம்:

(i) ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் அளிக்கப்படும் சட்டரீதியான வலுகொண்ட தீர்ப்பிற்கு இட்டுச்செல்லும் நீதித்துறை.

(ii) ஓரளவிலான நீதித்துறை (உ.ம்: ஐநா உடன்படிக்கை அமைப்புகள் மற்றும் ஏனைய பிராந்திய மனித உரிமைகள் கண்காணிப்பு பொறிமுறைகளினால் அரசுகளுக்கு விடுக்கப்படும் பரிந்துரைகளுக்கு அல்லது பாதிப்படைந்தோர் அந்தஸ்தின் அங்கீகாரத்திற்கு இட்டுச்செல்லும்)

(iii) நீதித்துறையல்லாத (உ.ம்: விசாரணை ஆணைக்குழுக்கள், உண்மை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்கள், விசேட அறிக்கையாளர்கள் மற்றும் செயற்படும் குழுக்கள் முதலிய ஐநா மனித உரிமைகள் பேரவையின் விசேட நடைமுறைகள்)[7]

ஓரளவு நீதித்துறையிலான மற்றும் நீதித்துறையல்லாத பொறிமுறைகளின் மூலம் பொறுப்புக்கூறலை நாடுவது, நீதித்துறை பொறிமுறைகள் தவிர்க்க முடியாதனவாகின்றன என்று பொருள்படாது – உண்மையில், தகவல் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குச் சென்றடையும்போது, ஓரளவு நீதித்துறை மற்றும் நீதித்துறையல்லாத பொறிமுறைகள் இறுதியில் குற்றவியல் பொறுப்புக்கூறலுக்கும் வேறு நீதித்தறை பதிற்செயற்பாடுகளுக்கும் இட்டுச்சொல்லக்கூடும்.

4 நிவாரணம் மற்றும் ஈடுசெய்தலுக்கான உரிமை தொடர்பான ஐநா அடிப்படை கோட்பாடுகள், சுப்ரா குறிப்பு1,,IX 'அனுபவித்த தீமைக்கான ஈடுசெய்தல்', கோட்பாடு15.

5 நைனார்,V.(2012)ஆபிரிக்காவின் பாலியல் வன்முறைக்கான வழக்காடல் உத்திகள், லண்டன்:ரெட்ரெஸ்

6 பாலியல் வன்முறைகளில் பலியானோருக்கு கிடைக்கக்கூடிய பொறுப்புக்கூறலுக்கான ஒரு சில வழிகள் தொடர்பான மேலும் விபரமான தகவல்களை நைனார் வகிடாவில் காணலாம். 'ஆபிரிக்காவில் பாலியல் வன்முறைகளுக்கான வழக்காடல் உத்திகள் (லண்டன்:ரெட்ரெஸ்இ2012).

7 ஐநா விசேட நடைமுறைகளின் அங்கமாக இருக்கும் எதேச்சதிகார தடுத்து வைத்தல் தொடர்பான தொழிற்படு குழு அதன் செயற்படு முறைமைகளின் காரணமாக ஒரு ஓரளவு அமைப்பாக கருத்தப்படலாம்.

## 1.உள்நாட்டு வழிமுறைகள்

உள்நாட்டு மட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பின்வருவனவற்றைச் செய்யக்கூடியதாக இருக்கும்:

### a.நீதித்துறை ரீதியாக உள்ளகம்

» பாலியல் வன்முறை புரிந்தமைக்காகக் கூறப்படும் தனிப்பட்ட குற்றமிழைத்தவருக்கு (குற்றமிழைத்தோருக்கு) எதிராக வழக்குத் தொடர்தலை தூண்டுவதற்கு சம்பந்தப்பட்ட சட்ட வரைச்சட்டகத்தைப் பொறுத்து சர்வதேச சட்டத்தின் கீழான ஒரு குற்றமாக அல்லது தேசிய (உள்நாட்டு) சட்டத்தின் கீழான ஒரு 'சாதாரண'[8] குற்றமாக ஒரு குற்றவியல் முறைப்பாட்டினை பதிவு செய்தல். குற்றவியல் வழக்குத் தொடர்தல் குற்றமிழைத்ததாகக் கூறப்படுபவருக்கெதிராக அரசினால் மேற்கொள்ளப்படும். குற்றம் உறுதி செய்யபப்பட்டால் குற்றமிழைத்தவர் (குற்றமிழைத்தவர்கள்) குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனையளிக்கப்படுவார்கள். சில நாடுகளில் வன்புணர்வும் வேறு வடிவிலான பாலியல் வன்முறைகளும் தேசிய குற்றவியல் சட்டத்தில் சாதாரணக் குற்றங்களாகவே கருதப்படுகின்றன. வேறு நாடுகளில், குறிப்பாக ICC இன் ரோமச் சட்டம் (பிரிவு 4 ஐ பார்க்வும். சர்வதேச மற்றும் கலப்பு நீதிமன்றங்களும் மன்றுகளும்) அல்லது வேறு ICL பாகாகங்களும் உள்நாட்டுமயப்படுத்தப்படும் அல்லது பொருந்தும் நாடுகளில் சாதாரணக் குற்றங்களுக்கொன்றும் சர்வதேசச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு ஒன்றுமாக இரண்டு சட்டப் பிரிவுகள் நிலவும். ஒரு பிரிவிலுள்ள நோக்கெல்லை, வரைவிலக்கணங்கள் மற்றும் சட்ட அம்சங்கள் மற்றப் பிரிவிலுள்ளதிலிருந்து வேறுபட்டதாக இருக்கக்கூடும் ICL இன் குறிப்பிட்ட மூலங்களைப் பொறுத்து பின்னர் உள்ள பிரிவினுள் முக்கிய பொருத்தமான வேறுபாடுகள் இருக்கலாம். சில அரசுகள் சர்வதேச குற்றங்கள் தொடர்பில் விசேட இராணுவ நீதிமன்ற நியாயாதிக்கத்திற்கு ஏற்பாடு செய்யும் அதேவேளை, மேலும் முற்போக்கு அரசுகள் சிவில் நீதித்துறையில் சர்வதேச குற்றங்களை கையாள்வதற்கான விசேட ஆளணியினர் கொண்ட பணியாள்தொகுதியுடனான விசேட நீதித்துறை, வழக்குத் தொடர்தல் மற்றும் புலனாய்வுப் பிரிவுகள் ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளன[9]

» இழப்பீட்டிற்காக அத்துடன்/அல்லது நிவாரணத்திற்காக (உ.ம்: பொருட்களை மீளவழங்குதல் மன்னிப்புகோருதல் மீண்டும் ஏற்படாதிருப்பதற்கான உத்தரவாதம் போன்ற திருப்திபடுத்தும் முறைகள்) குற்றமிழைத்தவருக்கு, கூட்டுத்தாபமொன்றிற்கு (சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றத்தைப் புரிந்ததில் கம்பனியின் ஈடுபாட்டிற்காக) அல்லது சில சந்தர்ப்பங்களில் பொறுப்பான அரசிற்கு (உதாரணமாக, பாலியல் வன்முறைகள் பொலீஸ் மறறும் இரணுவத்தினரால் அல்லது வேறு அரச உத்தியோகத்தகளினால் இழைக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது குற்றமிழைத்தவர் மிகவும் வறியவராயின்) எதிராக சிவில் வழக்கொன்றைத் தொடுத்தல் சில உள்நாட்டு சட்ட முறைமைகள் இழப்பீடுகள் குற்றவியல் நடைமுறைகளின் ஒரு பகுதியாக கருதப்படுவதற்கு இடமளிக்கின்றன. எனினும், தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு தனியான சிவில் வழக்கொன்றைக் கோரி நிற்கின்ற அதேவேளை, வேறு சிலவற்றில் அது அவசியமற்றதாக இருக்கலாம்.

» தமது அடிப்படை உரிமைகளின் மீறலைக் கண்டறிவதற்கு அரசைத் துாண்டுவதற்காக அத்தடன்/அல்லது உண்மைகள் தொடர்பாக முழுமையான விசாரணையொன்றை அத்துடன் தமது உரிமைகளின் பாதுகாப்பை இலக்காகக் கொண்ட வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகளை நிர்ப்பந்திற்பதற்கு அரசிற்கு எதிராக அரசியலமைப்பு வழக்கொன்றைத் தொடுத்தல் (அத்தியாயம் 5 ஐ பார்க்க: அரசின் பொறுப்பு).

### b. குவாசி நீதித்துறை

» ஒரு தேசிய மனித உரிமைகள் நிறுவனம் (NHRI)இ பாதிக்கப்பட்டோருக்கான ஒரு நம்பிக்கை நிதியம் அல்லது நிர்வாக நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற குவாசி நீதித்துறை அமைப்புகளில் இழப்பீட்டை அல்லது மீறலொன்று இழைக்கப்பபட்டதென்ற வெளிப்படுத்தலொன்றைக் கோருதல். நிர்வாக நிவாரண நிகழ்ச்சித் திட்டங்களின் தன்மை அவற்றின் கட்டமைப்பில் தங்கியுள்ளது. எனினும், அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் பெருமளவிறகு ஓரளவு நீதிதுறை தன்மைகொண்டனவாக உள்ளன.

### c. நீதித்துறையயல்லாத[10]

» உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்கள் முதலிய நிலைமாற்று நீதிக்கான பொறிமுறைகளுக்கு தகவல் வழங்குதல்[11]

---

8 "சாதாரண" என்ற சொல் தேசிய சட்டத்தின் கீழ் சர்வதேச குற்றங்களாக வரைவிலக்கணப்படுத்தப்படாத குற்றங்களை குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. ( உ.ம்: மனித குலத்திற்கெதிரான குற்றங்களென கருதப்படாத வன்புணர்வுகள்). எனினும், அக்குற்றங்கள் மிகவும் பாரதுாரமானவை கொடுமையானவை அல்ல என்று அது எவ்வகையிலும் பொருள்படாது.

9 மோதல்களின் போது பாலியல் வன்முறை தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயலாளர் விசேட பிரதிநிதி (2013) யின் மோதல் சூழ்நிலைகளில் ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகள் ஆகியோர் மீதான பாலியல் வன்முறைகள் தொடர்பான அறிக்கை பக்.19.

10 குறிப்பிட்ட சில நாடுகளில் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களும் குற்றமிழைத்தோரும் ஒரு "சுமுகமான" ஏற்பாட்டிற்கு வரும் முறைசாரா நீதித்துறை நடைமுறையொன்றிற்கு தமது வழக்கை கொண்டுசெல்லுமாறு பாதிக்கப்பட்டோர் தமது குடும்பத்தினராலும் சமூகத்தினாலும் வற்புறுத்தப்படலாம். நீதி மன்றங்களுக்கு வெளியேயான இத்தீர்வுகள் பாதிக்கப்பட்டோர்- மைய அணுகுமுறையொன்றை ஊக்குவிப்பதில்லையென்பதோடு, அவை பாதிக்கப்பட்டவருக்கான காத்திரபூர்வமான நீதியை வழங்குவதுமில்லை.

11 உதாரணமாக, 1974 ஆம் ஆண்டிற்கும் 1999 ஆம் ஆண்டிற்குமிடையேயான மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் பணி வழங்கப்பட்ட ஏற்றுக்கொள்ளல், உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்கத்திற்கான டீமர் - லெஸ்டே ஆணைக்குழு பாலியல் வன்முறைகள் தொடர்பான சான்றுகளை உள்ளடக்கியது.

பெட்டி 2

## குற்ற விலக்களிப்பை எதிர்த்து போராடுவதற்கான ஒரு கருவியாக சர்வதேச நியாயாதிக்கம்

தேசிய சட்டங்களின் கீழ் குற்றவியல் நியாயாதிக்கம் வழமையாக குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளி அல்லது பாதிக்கப்பட்டவரின் (உ.ம்: நியாயாதிக்கத்தை பிரயோகிக்கும் அரசினுள் அக்குற்றம் இடம்பெற்றிருந்தால்), வாழ்விடத்தோடு அல்லது தேசியத்தோடு தொடர்புபடுத்தப்படுகிறது. எனினும் மோதல் இடம்பெறும் மற்றும் மோதலுக்குப் பின்னரான நாடுகளின் 'ஆள்புல அரசுகளில்' அமைந்துள்ள நீதிமன்றங்கள் பாதுகாப்பு பிரச்சினைகள், வளங்களின்மை, மற்றும் நிறுவன ரீதியான திறமையின்மை, உள்நாட்டு குற்றவிலக்களிப்பு, மன்னிப்புப்பளிப்பு நிலவுதல் அல்லது போதியளவு அரசியல் விருப்பமின்மை குறிப்பாக அக்குற்றங்கள் அரசின் அனுசரணை பெற்றதாகவிருக்குமிடத்து அல்லது அரச முகவர்கள் சம்பந்தப்பட்டதாகவிருக்குமிடத்து, அல்லது குற்றமிழைத்தவர் நாட்டை விட்டு தப்பியோடியிருத்தல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடையக் கூடியதாக இருப்பதில்லை.

சர்வதேச நியாயாதிக்க கோட்பாடுகள் அதன் விரிவான வடிவத்தில் எந்தவொரு அரசினதும் தேசிய அதிகாரிகள் யுத்தக்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை மற்றும் சித்திரவதை முதலிய சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்களை புரிந்ததாக சந்தேகிகப்படும் தனி மனிதர்கள், எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை அல்லது அவர்கள் எங்கு தமது வாழ்விடங்களை அமைத்துக்கொண்டுள்ளார்கள் என்பதை பொருட்படுத்தாது, விசாரித்து அவர்களுக்கு எதிராக வழக்குத்தொடுப்பதற்கு அனுமதிக்கின்றது.

இந்த கோட்பாட்டை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அனுமதிக்கின்ற சட்ட ரீதியான கட்டமைப்புக்களை பல நாடுகள் கொண்டிருக்கின்ற அதேவேளை, நடைமுறையில் காலப்போக்கில் விசாரணைக்குச் சென்ற பெரும்பாலான வழக்குகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் (முக்கியமாக பெல்ஜியம், ஜேர்மனி, ஸ்பெயின், சுவிட்சர்லாந்து மற்றும் நெதர்லாந்து) மற்றும் ஆபிரிக்காவிலும் (உ.ம்: தென்னாபிரிக்கா) இந்நாடுகளில் தமது வாழ்விடங்களை அமைத்துக்கொண்டுள்ள குற்றமிழைத்தவருக்கு எதிராகவும் இடம்பெற்றுள்ளன.

சர்வதேச நியாயாதிக்க கோட்பாடு சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு வழங்கப்படும் குற்றவிலக்களிப்புக்கெதிராக போரடுவதற்கான ஒரு பிரதான ஆயுதமாக அமைந்துள்ளது என்பதோடு, அரசுகள் தமது நிலப்பரப்புக்களில் குற்றமிழைத்தவர்கள் தஞ்சம் கோருவதற்குரிய பாதுகாப்பான இடங்களாக மாறாதிருப்பதை உறுதி செய்வதற்கு பொதுவாக உறுதிபூண்டுள்ளன.

உதாரணம்1- ஜேர்மனி: 2015 செப்டெம்பர் 28 திகதி, ஒரு முக்கிய நான்கு வருட சர்வதேச நியாயாதிக்க வழக்கை முடித்து வைத்து, ஜேர்மனியின் ஸ்டட்கார்ட்டில் அமைந்துள்ள பிராந்திய உயர் நீதிமன்றம் இரண்டு ருவாண்டா நாட்டவர்களையும் போர்ஸஸ் டிமோகிரட்டிக்போர்லா லிபரேஷன் ருவாண்டா என்ற இயக்கத்தின் சிரேஷ்ட்ட தலைவர்களையும் பயங்கரவாத இயக்கமொன்றை வழிநடத்தியமைக்காகவும் கிழக்கு கொங்கோ சனநாயக குடியரசின் கிவு மாகாணங்களில் அவர்கள் புரிந்த யுத்தக் குற்றங்களுக்காகவும் முறையே 13 மற்றும் 8 வருட சிறைத்தண்டை விதித்தது.

உ.ம் 2- ஆர்ஜன்டீனா: 2010 ஆண்டில், ஸ்பெயின் நாட்டில் பிரான்சிஸ்கோ பிரான்கோ சர்வாதிகார ஆட்சியின் போது (1939-1975), புரியப்பட்ட மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியவற்றுக்காக சர்வதேச நியாயாதிக்க கோட்பாட்டை பயன்படுத்தி ஸ்பெயின் மற்றும் ஆர்ஜன்டீனா பிரசைகளின் உறவினர்கள் ஒரு முறைப்பாட்டை ஆர்ஜன்டீனாவில் தாக்கல் செய்தனர். இவ்வழக்கு தற்பொழுது பர்னஸ் அயரிஸிலுள்ள முதலாம் இலக்க சமஸ்டி குற்றவியல் மற்றும் திருத்த நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. 2016 இல் விமன்ஸ் லிங்க் வேர்ல்ட்வைட் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தினால், இக்காலப்பகுதியில் குடியரசுவாதிகளாக அல்லது இடதுசாரிகளாக இருந்ததாக சந்தேகிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை குற்றங்களையும் அத்துடன் பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்புணர்வுகள் பால்நிலைப்படுத்தப்பட்ட சித்திரவதைச் செயல்கள் (உ.ம்: பாலுறுப்புக்களில் மின்சார அதிர்வுகள் மற்றும் பெண்களின் பிறப்புறுக்கள் மீதான தாக்குதல்கள்) பலவந்தமான கருச்சிதைவுகள் மற்றும் பெண் அரசியல் கைதிகளின் பிள்ளைகளை கடத்திச் செல்லல் பின்னர் அப்பிள்ளைகள் ஆட்சியாளர்களுக்கு ஆதரவான குடும்பங்களுக்கு கொடுக்கப்பட்டு தத்தெடுத்த பெற்றோர்களை உண்மையான பெற்றோர்களாக காட்டும் போலியான பிறப்புச் சான்றிதழ்களை வழங்கியமை ஆகிய குற்றங்களையும் உள்ளடக்கி விசாரணை செய்யக் கோரி மேலதிக தகவல் அளிக்கப்பட்ட முறைப்பாடொன்று செய்யப்பட்டது. இவ்வன்முறைகள் இடம்பெற்று நீண்ட காலம் கடந்துள்ளமையால், இம்முறைப்பாடானது வலுவான சூழ்நிலை மற்றும் வடிவ சான்றுகளையும் ICL மற்றும் ஐர்சுடு இன் தரநியமங்களை பயன்படுத்தி ஒரு பால்நிலைக் கண்ணோட்டத்துடன் நடத்தப்பட்ட சான்றுகளையும் அடிப்படையாக கொண்டது.

*…சர்வதேச சட்டம், குற்றச் செயல்கள் மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் பாலியல் வன்முறை எத்தகைய குற்றமாக அமைகிறது என்பது பற்றியதுமான இரு வரைவிலக்கணங்கள் மீதான வழக்கங்களையும் நியமங்களையும் கொண்டுள்ளது.*

## 2. பிராந்திய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறைகள்

உப பிராந்திய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களின் ஒரு விசேட உடன்படிக்கையின் கீழான முதன்மை அல்லது நடைமுறை உரிமைகளின் மீறலுக்காக பலியானவர்கள் (குற்றமிழைத்தவர்களின் தனிப்பட்ட குற்றவியல் பொறுப்புகளோடு ஒப்பிடுகையில்) அரச பொறுப்பை நாடுவதற்கு மனித உரிமைகள் பொறிமுறைகளின் முன்னே நிவாரணங்களையும் ஈடு செய்தலையும் நாடி முறைப்பாடொன்றை செய்யக்கூடியவர்களாக இருக்கும். (அத்தியாயம் 5ஐ பார்க்கவும்: அரச பொறுப்புகள்)

பெரும்பாலான மனித உரிமை உடன்படிக்கைகள் பாலியல் வன்முறைகளின் விசேட அல்லது தெளிவான தடை செய்தலை கொண்டிருக்கவில்லை.[12] எனினும், பாலியல் வன்முறை ஏனைய உரிமைகள் மற்றும் சுதந்திரமாக இருப்பதற்கான உரிமை/மனிதாபிமானமற்ற மற்றும் இழிவுபடுத்தும் நடத்துகை அத்துடன்/அல்லது வாழ்வதற்கான உரிமை, சுதந்திரம், தனிப்பட்ட பாதுகாப்பு, உடல் ரீதியான ஒருமைப்பாடு, உடல்நலம், சட்டத்தின் கீழ் சமமான பாதுகாப்பு மற்றும் பயன்மிக்க நிவாரணம் முதலிய ஏனைய சுதந்திரம் ஆகியவற்றின் மீறலுக்கு வழிவகுக்கலாம்.

மனித உரிமை உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்களின் அமுலாக்கம் வழமையாக நீதிமன்றங்களினால் அல்லது கண்காணிப்பு அமைப்புக்களினால் கண்காணிக்கப்படலாம். இவற்றுள் சில தனிமனிதர்கள் அத்துடன்/அல்லது அரசசார்பற்ற நிறுவனங்கள் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க அனுமதிக்கின்றன. ஒரு விசேட பொறிமுறை இருப்பது பல நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். குறிப்பாக:

» அரசு சம்பந்தப்பட்ட சர்வதேச ஆவணத்தை அங்கீகரித்துள்ளது அல்லது அதற்கு இணங்கியுள்ளது அத்துடன்/அல்லது நீதிமன்றம், ஆணைக்குழு அல்லது குழுவின் தகைமையை தெளிவாக அங்கீகரித்துள்ளது.

» வன்முறைகள் சம்பந்தப்பட்ட அரசில் அவ்வாவணம் அமுல்ப்படுத்தப்பட்டப் பின்னர் புரியப்பட்டிருத்தல்.

» விசேட சூழ்நிலைகள்/விதிவிலக்குகள் பொருந்தினால் ஒழிய பெரும்பாலான சர்வதேச மனித உரிமை பொறிமுறைகளுக்கு ஒரு முக்கிய தேவைப்பாடாக அமையும் உள்நாட்டு நிவாரணங்கள் முன்னதாகவே தீர்ந்துபோயிருக்கும் சூழ்நிலையில் அனுமதி நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தியாக்கப்பட்டிருத்தல்.

பாலியல் வன்முறைகளில் பாதிக்கப்படுவோர் கவனத்தில் கொள்ளக்கூடிய சில மனித உரிமைகள் பொறிமுறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

### a. நீதித்துறை

மனித உரிமை நீதி மன்றங்களின் தீர்ப்புக்கள் அரசுகளின் மீது சட்ட ரீதியான கட்டுப்பாட்டை கொண்டிருக்கும்.

*பிராந்திய /*

» மனித மக்கள் உரிமைகள் தொடர்பான ஆபிரிக்க நீதிமன்றம் (ACtHR)

» ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் (ECtHR)

» அமெரிக்க நாடுகளுக்கிடையிலான மனித உரிமைகள் நீதிமன்றம் (IACtHR).[13]

---

12 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயத்தை (1966 டிசம்பர் நிறைவேற்றப்பட்டு 1976 மார்ச் 23 அமுலுக்கு வந்தது) (ICCPR) மனித உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய சமவாயம் (1950 நவம்பர் 04 நிறைவேற்றப்பட்டு 1953 செப்டெம்பர் 3 திகதி அமுலுக்கு வந்தது. ETS5(ECHR) மனித உரிமைகள் தொடர்பான அமெரிக்க சமவாயம் (1969 நவம்பர் 22 திகதி நிறைவேற்றப்பட்டு 1978 ஜூலை 18 திகதி அமுலுக்கு வந்தது) 'சன்ஜோஸ் உடன்படிக்கை', கொஸ்ட்டரிக்கா (ECHR)மனித உரிமைகள் மற்றும் மக்கள் உரிமைகள் தொடர்பான ஆபிரிக்க பிரகடனம் (1981 ஜூன் 27 திகதி நிறைவேற்றப்பட்டு 1986 ஒக்டோபர் 21 அமுலுக்கு வந்தது) CAB/LEG/67/3 rev. 5, 21 I.L.M. 58 (1982) (பன்ஜூல் பிரகடனம்). பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தை அழித்தொழித்தல் தொடர்பான சமவாயம் (1979 டிசம்பர் 18 திகதி நிறைவேற்றப்பட்டு 1982 செப்டெம்பர் 3 திகதி அமுலுக்கு வந்தது) 1249UNTS13(CEDAW) கூட 'பெண்களை கடத்துதல் மற்றும் பெண் விபச்சாரத்தை பயன்படுத்திக்கொள்ளல்' மட்டுமே தடை செய்கிறதே (Art6)இ தவிர பாலியல் வன்முறைகளே அல்லது. அதாவது சர்வதேச மட்டத்தில் 1989 ஆண்டின் சிறுவர்கள் உரிமைகள் தொடர்பான சமவாயம் (1989 நவம்பர் 20 திகதி நிறைவேற்றப்பட்டு 1990 செப்டெம்பர் 2 திகதி அமுலுக்கு வந்தது) அனைத்து வடிவிலான பாலியல் பயன்பெறுதல்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களிலிருந்தும் சிறுவர்களை பொருத்தமான சட்டங்கள், நிர்வாக, சமூக, கல்வி நடவடிக்கைகள் ஊடாக (Art19(1) மற்றும் 34). அரசு பாதுகாக்க வேண்டுமென தெளிவாக ஏற்பாடு செய்கிறது. பிராந்திய மட்டத்தில் சில ஆவணங்கள் 'பெண்களுக்கு எதிரான வன்முறைகளை' தடை செய்யும் ஏற்பாடுகளை கொண்டிருக்கின்றன. இவ்வேற்பாடுகளில் குறிப்பாக பாலியல் வன்முறை உள்ளடங்கியுள்ளது. எனினும் பொதுவாக அவற்றிற்கு தனிமனிதர்களினால் செய்யப்படும் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் கண்காணிப்பு பொறிமுறை ஒன்று இல்லை. பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்தல், தண்டித்தல், மற்றும் இல்லாதொழித்தல் தொடர்பான அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான சமவாயத்தை பார்க்க. (1994 ஜூன் 9 நிறைவேற்றப்பட்டு 1995 மார்ச் 3 திகதி ஆமுலுக்கு வந்தது) (பெலம்டுபரா சமவாயம்) (Art1-3) ஆபிரிக்காவிலுள்ள பெண்களின் மனித மற்றும் மக்கள் உரிமைகள் தொடர்பான ஆபிரிக்க பிரகடனத்துக்கான மூல உடன்படிக்கை. (2003 ஜூலை 11) (மபுடோ உடன்படிக்கை) (Art3(4),4(2),11(3),12(1)(c)(d),13(c),14(2)(c),22(b),23(b)).

13 தனிமனிதர்கள் IACtHR இடம் நேரடியாக முறைப்பாடுகளை செய்ய முடியாது. வழக்குகள் முதலில் மனித உரிமைகளுக்கான ஆபிரிக்க நாடுகளுக்கிடையிலான ஆணைக்குழுவினால் பரீசீலக்கப்பட்டு அதன் பின்னர் IACtHRவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டும்.

*உப-பிராந்திய*

- மேற்காபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகத்தின் சமூக நீதிமன்றம் (CCtJECOWAS)[14]
- கிழக்கு ஆபிரிக்க நீதிமன்றம் (EACtJ).

### b. ஓரளவு நீதித்துறை

ஓரளவு நீதித்துறை அமைப்புக்களின் தீர்ப்புக்கள் வழக்கமாக சட்டரீதியான பிணைப்புகளை கொண்டிருப்பதில்லை. எனினும் அவை அதிகாரத்துவ பெறுமதியை கொண்டுள்ளன. அவை பொதுவாக விரிவான பரிந்துரைகளை விடுப்பதோடு, எவ்வாறு தமது தீர்மானங்களை அமுல்படுத்துவது என்ற தற்துணிபை அரசுகளுக்கு விட்டுவிட்டு விசேட இடைக்கால தடை உத்தரவுகளை வழங்குவதிலிருந்து அல்லது பட்டங்கள் அளிப்பதிலிருந்து தவிர்த்துக்கொள்கின்றன. கவனத்தில் கொள்ளக்கூடிய சில பொறிமுறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

சர்வதேச

- பின்வருவன அடங்களாக ஐநா உடன்படிக்கை அமைப்புக்கள்:
  - மனித உரிமைகள் குழு (HRC)
  - சித்திரவதைக்கு எதிரான குழு (CAT)
  - பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தை இல்லாதொழித்தல் தொடர்பான குழு (CEDAW)
- சிறுவர் உரிமை தொடர்பான குழு (CRC).

பிராந்திய

- மனித மற்றும் மக்கள் உரிமைகள் தொடர்பான ஆபிரிக்க ஆணைக்குழு (ACHPR)
- மனித உரிமைகள் தொடர்பான அமெரிக்க நாடுகளுக்கிடையிலான ஆணைக்குழு (IACHR).

### c. நீதித்துறை அல்லாத

சர்வதேச

நாட்டு அல்லது விடய வாரியான பணி ஆணைகளை கொண்டுள்ள விசேட அறிக்கையாளர்கள் மற்றும் தொழிற்படு குழுக்கள் முதலிய ஐநா விசேட நடைமுறைகள் பணி ஆணையை கொண்டிருக்கும் அமைப்புகளுக்கும் விசேட மனித உரிமை மீறல்கள் பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படலாம். விசேட நடைமுறைகளுக்கு எவ்வித நீதித்துறை அதிகாரமும் இல்லை. எனினும் அவை அவசர வேண்டுகோள் மற்றும் வேறு தொடர்பாடல்களை உள்ளடக்கும் கடிதங்கள் மூலமாக தமது ஆணைப் பணிக்குள் வரும் மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அரசாங்கங்களோடு நேரடியாக தலையீடு செய்யலாம்.[15]

அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனிமனிதர்கள் உள்ளிட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தமது சார்புரை பணியின் ஓர் பகுதியாக, பாலியல் வன்முறைகள் பற்றிய தகவல்களை நான்கு வருட ஒரு சுழற்சியில் ஐநா உறுப்பு நாடுகளின் மனித உரிமை கடப்பாடுகளின் மீளாய்வை உறுதி செய்யும் சர்வதேச காலவாரியான மீளாய்வு நடைமுறையின்போது பரிசீலனைக்காக வழங்கவும் முடியும்.

பிராந்திய

இதேபோன்ற விசேட பொறிமுறைகள் ஆபிரிக்க மற்றும் அமெரிக்க நாடுகளுக்கிடையிலான மனித உரிமைகள் முறைமைகளின் ஓர் அங்கமாக தாபிக்கப்பட்டுள்ளன:

- ACHPR இன் ஆபிரிக்க ஒன்றிய விசேட பொறிமுறைகள் (உ-ம்: விசேட அறிக்கையாளர்கள், குழுக்கள் மற்றும் செயற்படு குழுக்கள்)
- IACHR அமெரிக்க அரசுகள் அறிக்கையாளர் நிறுவனம்.

## 3. புலனாய்வு மற்றும் உண்மை கண்டறிதல் அமைப்புக்கள்

பாலியல் வன்முறை தொடர்பான தகவல்கள் வழக்கமாக பின்தொடர் நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளை வழங்கும் நோக்கத்தோடு, மனித உரிமை மீறல்கள் அத்துடன்/அல்லது குறிப்பிட்ட ஒரு நாட்டின் பிராந்தியத்தின் இழைக்கப்பட்ட சர்வதேச குற்றங்களை விசாரிப்பதாக தாபிக்கப்பட்ட புலனாய்வு மற்றும் உண்மை கண்டறிதல் அமைப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்படலாம். இவ்வமைப்புக்கள் உரிய நியாயாதிக்கம் கொண்ட பிராந்திய மற்றும் தேசிய அதிகார சபைகளினால் (உ-ம்: தேர்தலுக்குப் பின்னரான வன்முறைகள் தொடர்பான விசாரணை ஆணைக்குழு (CIPEV)/2007/08 தேர்தலுக்குப் பின்னரான வன்முறைகளை விசாரிப்பதற்காக கென்ய அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட வக்கி ஆணைக்குழு; சூடான் தொடர்பான ஆபிரிக்க ஒன்றிய விசாரணை ஆணைக்குழு). சர்வதேச விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் உண்மை அறிதல் ஆணைக்குழுக்கள் ஐநா

---

14 CCtJ ECOWAS இற்கு ஒரு வழக்கை சமர்ப்பிக்கும் முகமாக உள்நாட்டு நிவாரணங்களை வேண்டிக்கத் தேவையில்லை.

15 விசேட நடைமுறைகளுக்கு தகவல்களை யாராலும் சமர்ப்பிக்க முடியும் (பலியானவர்கள் மாத்திரம் அல்ல) என்பதோடு அது எந்த உடன்படிக்கையினதும் அங்கீகாரத்தில் தங்கியிருக்கவில்லை. இதன் மூலம் இவ்வழி நீதித்துறை மற்றும் ஓரளவு நீதித்துறை அமைப்புகளில் வழக்குத் தொடுத்தலை விட மிகவும் நாடியடையக்கூடியதாக உள்ளது. மேலும் தனிப்பட்ட வழக்கொன்றை சமர்ப்பிக்கும் பொருட்டு உள்நாட்டு நிவாரணங்களை வேண்டிப்பதற்கான அல்லது விசேட நடைமுறைகளுக்கான சூழ்நிலைக்குத் தேவை இல்லை. தொடர்பாடல்கள் தனித்தனி வழக்குகள், பொதுவான முறைமைகள் மற்றும் போக்குகள், ஒரு குறிப்பிட்ட பிரிவினரைப் பாதிக்கும் வழக்குகள் நகல் அல்லது தற்போதுள்ள சட்டங்களின் உள்ளடக்கங்களின், சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு முழுமையாக அமைந்திராதவை என கருதப்படும் கொள்கைகள் அல்லது வழக்கங்கள் ஆகியவற்றை கையாளலாம். தலையீடு ஏற்கனவே நடைபெற்ற, தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அல்லது ஏற்படக்கூடிய பெறுமளவு வாய்ப்புடைய ஒரு மனித உரிமை மீறல் தொடர்புபட்டதாக இருக்கலாம். மேலும் தகவல்களுக்கு http://www.ohchr.org/EN/HRBodies/SP/Pages/Welcomepage.aspx. ஐ பார்க்க.

பாதுகாப்புச் சபையினாலும் பொதுச் சபையினாலும் மனித உரிமைகள் பேரவையினாலும் செயலாளர் நாயகத்தினாலும் மற்றும் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்த்தாணிகராலும் பல்வேறு சூழ்நிலைகளில் மிகவும் அடிக்கடி தாபிக்கப்பட்டுள்ளன. சிரிய அரபு குடியரசு தொடர்பான சுயேட்சையான சர்வதேச விசாரணை ஆணைக்குழு (COI Syria)இ மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்த்தாணிகராலய அலுவலகத்தின் இலங்கை தொடர்பான மனித உரிமைகள் விசாரணை ஆணைக்குழு (OISL). எரித்திரியாவில் மனித உரிமைகள் தொடர்பான விசாரணை ஆணைக்குழு (COIEritrea).[16] உள்ளிட்ட அண்மைக்கால உதாரணங்களோடு இற்றைவரை 50 மேற்பட்ட சர்வதேச விசாரணை ஆணைக்குழுக்களும் உண்மை கண்டறிதல் குழுக்களும் பல்வேறு ஐக்கிய நாடுகள் அமைப்புக்களினால் தாபிக்கப்பட்டுள்ளன.

பொதுவாக விசாரணை மற்றும் உண்மை கண்டறிதல் அமைப்புக்களின் அறிக்கைகள் பொறுப்புக்கூறலுக்கான மிகச்சிறந்த வழிகளை உறுதிப்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதோடு உள்நாட்டு அத்துடன்/அல்லது சர்வதேச மட்டத்தில் குற்றவியல் வழக்கு தொடுத்தல்களை ஊக்குவிப்பதற்கான உந்துதல்களை வழங்கக்கூடும்.

## 4. சர்வதேச மற்றும் கலப்பு நீதி மன்றங்களும் நியாயச் சபைகளும்

சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்களாக அமையும் பாலியல் வன்முறைகளை புரிபவர்கள் சர்வதேச, விசேட மற்றும் கலப்பு நீதிமன்றங்களினாலும் அத்துடன் உரிய நியாயாதிக்கம் கொண்ட நியாயச் சபைகளினாலும் விசாரிக்கப்படலாம்.

ICC ஒரு இறுதி தெரிவு நிரந்தர நீதிமன்றமாக செயற்படுமென்பதோடு, இனப்படுகொலை, யுத்த குற்றங்கள் மற்றும் பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றுக்காக குற்றம் சாட்டப்பட்ட தனிமனிதர்களை விசாரிக்க வேண்டுமென கருதப்படும் தேசிய சட்ட முறைகள் நடைமுறையில் அவ்வாறு செய்ய விரும்பாமல் அல்லது நேர்மையாக அவ்வாறு செய்ய முடியாமல் இருக்கும் அல்லது அவ்வாறு செய்யத் தவறும் சந்தர்ப்பங்களில் அது தனது நியாயாதிக்கத்தை[17] பிரயோகிக்க முடியும். தேசிய குற்றவியல் நியாயாதிக்கங்களுக்கு குறைநிரப்புச் செய்தல் கோட்பாடு ICC யின் நியாயாதிக்கத்தின் பிரயோகம் தொடர்பானதாகும்[18] என்பதோடு, ICC இன் ரோம் சட்டம் சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்களை விசாரிப்பதற்கும் அவற்றுக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்குமான முதல் பொறுப்பும் உரிமையும் அரசுகளுக்கு உண்டு என்பதை தெளிவாக அங்கீகரிக்கின்றது.[19]

சர்வதேச மற்றும் விசேட நீதிமன்றங்கள் (ICTYமற்றும் ICTR (MICT)[20] முதலியவை அல்லது கலப்பு நீதிமன்றங்கள் சியெரா லியோனுக்கான விசேட நீதிமன்றம் ((SCSL), கிழக்கு தீமோரில் இடம்பெற்ற பாரதூர குற்றங்களுக்கான விசேட குழு (SPSC) மற்றும் முன்னாள் சார்ட் நாட்டு சனாதிபதியான ஹிஸ்ஸேன் ஹப்ரேவை விசாரித்த செனகல் நாட்டிலுள்ள நீதிமன்றங்களிலிருந்த அதிவிசேட ஆபிரிக்க பிரிவுகள் முதலியன). விசேட சூழ்நிலைகளை கையாள்வதற்காக தாபிக்கப்பட்டன[21] வேறு சிறப்பு நீதிமன்றங்களும் கலப்பு நீதிமன்றங்களும் (தேசிய மற்றும் சர்வதேச தன்மை கொண்டவை) கம்போடியாவின் நீதிமன்றங்களிலுள்ள விசேட பிரிவுகளை உள்ளடக்குகின்றது. இவை பலியானோர் பங்குபற்றுதலை ஏற்றுக்கொள்ளும்.மத்திய ஆபிரிக்க குடியரசு அரசாங்கமும் அந்த நாட்டில் 2003[22] ஆண்டிலிருந்து இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு

---

16 மனித உரிமைகளுக்கான ஐநா உயர்ஸ்த்தாணிகராலயம் (2015) : விசாரணை ஆணைக்குழு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டம் தொடர்பான உண்மையை அறிதல் குழு, வழிகாட்டி நெறியும், நடைமுறையும் OHCHR பின்னிணைப்பு III 1992-2014 CHCHR இனால் ஆதரிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட (50 சர்வதேச ஆணைக்குழுக்களையும் உண்மை அறியும் குழுக்களையும் நிரல்படுத்தும்)

17 (a) குற்றம்சாட்டப்பட்டவர் ஓர் அரச தரப்பாக அல்லது நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளும் ஓர் அரசாக இருந்தால் (b) அக்குற்றம் ஓர் அரச தரப்பின் அல்லது நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளும் ஓர் அரசின் ஆட்புலத்தினுள் நடத்தியிருந்தால் அல்லது (c) ஐநா பாதுகாப்புச் சபை குழுவினரின் எந்த தேசத்தை சேர்ந்தவர் என்பதை அல்லது குற்றம் இடம்பெற்ற இடத்தை பொருட்படுத்தாது நிலைமையை வழக்குத்தொடுநருக்கு ஆற்றுப்படுத்தியிருந்தால் (குறிப்பாக ரோம் சட்டத்தின் உறுப்புரை 12 மற்றும் 13 ஐ பார்க்க) மட்டுமே ICC தனது நியாயாதிக்கத்தை பிரயோகிக்க முடியும்.

18 ICC இன் ரோம் சட்டத்தின் உறுப்புரை 1.

19 சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், வழக்கு தொடுநர் அலுவலகம் (2003) முறைசாரா வல்லுணர் பத்திரம், நடைமுறை The Hague: ICC-OTP. p 3.

20 2010 ஐநா பாதுகாப்புச் சபையினால் தாபிக்கப்பட்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான பொறிமுறை (MICT) (சர்வதேச நியாயாதிக்கத்திற்கான முறைசார் சர்வதேச எஞ்சிய பொறிமுறை) முன்னர் ICTR மற்றும் ICTY ஆகியோரினால் நிறுவப்பட்ட பல அத்தியவசிய பணிக்களுக்கான பொறுப்பை ஏற்றதோடு, ருவான்டா இனபடுகொலை தொடர்பான விசாரணைக்கான வழக்குகளை இன்னும் கொண்டுள்ளது. MICT இன் ஆணைக்குழுக்களில் அது ICTR மற்றும் ICTY கு சமாந்தரமாக இயங்கியதோடு இந்நீதிமன்றம் முடிவுறுத்தப்பட்டது. பின்வரும் தொடர்ந்து இயங்கும் ICTR 2015 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் முடிவுறுத்தப்பட்டது. ICTY 2017 இறுதியில் முடிவுறுத்தப்படுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. மேலும் தகவல்களுக்கு www.unmitc.org. ஐ பார்க்கவும்.

21 இவ்நெறிமுறைகளினுள் நிறுவனங்கள் சிறப்பு மற்றும் கலப்பு நீதிமன்றங்கள் என்று குறிப்பிடப்படும்.

22 ICC மத்திய ஆபிரிக்கக் குடியரசிலும் விசாரணைகளை மேற்கொள்கின்றது, எனினும், அது ஒருசில சந்தேக நபர்களுக்கெதிராக மட்டுமே வழக்குத் தொடரக்கூடும். ICC தாபிக்கப்பட்டதும், அது தேசிய நீதித்துறை முறைமைக்கும் சிறப்பு குற்றவியல் .

இந்நெறிமுறைகள் சர்வதேச குற்றவியல் வரைச்சட்டகமொன்றிற்கமைய உண்மைகளைத் திரட்டுவதற்கு உறுதுணைபுரிவதை முதன்மை நோக்கமாகக்கொண்ட ஆவணப்படுத்தல் முறைமைகளை விளக்குகிறது

எதிரான குற்றங்களை விசாரித்து அவற்றுக்கெதிராக வழக்கு தொடுப்பதற்கான தேசிய நீதித்துறை முறைமைகளை விசாரிப்பதற்கு தமது தேசிய நீதித்துறை முறைமையினுள் ஒரு விசேட கலப்பு குற்றவியல் நீதிமன்றத்தை தாபிக்கும் நடைமுறையில் ஈடுபட்டுள்ளது. மேலும், 1998 முதல் 2000ஆம் ஆண்டு வரையில் கொசோவோ விடுதலை இராணுவ வீரர்களினால் இழைக்கப்பட்டதாகக்கூறப்படும் குற்றங்களை விசாரிப்பதற்காக தாபிக்கப்பட்ட, ஐரோப்பிய ஒன்றியத்தினால் ஆதரிக்கப்படும் கொசோவோ சிறப்பு நீதிமன்றம் தனது பணிகளை 2017 இல் ஆரம்பிக்குமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.[23]

## 5. நாடுகளுக்கிடையிலான பூசல்களைத் தீர்ப்பதற்கான வழிகள்

பாலியல் வன்முறைக் குற்றங்கள் மற்றும் சர்வதேச சட்டத்தின் ஏனைய மீறல்கள் தொடர்பான தகவல்கள், ஒருநாட்டின் மக்களுக்கெதிராக ஆயுதப்படையினரால் அல்லது இன்னொரு அரசின் குழுக்களினால் மீறல்கள் புரியபட்டும்போது, நாடுகளுக்கிடையிலான பூசல்களின் ஒரு பகுதியாகவும் அமையும். நாடுகளுக்கிடையிலான பூசல்கள் அரசுகளினால் தமது சார்பிலும் தமது மக்களின் சார்பிலும் ஐநா வின் முதன்மையான நீதித்துறை அங்கமாக விளங்குவதும், சர்வதேச சட்டத்திற்கமைய அரசுகளுக்கிடையிலான சட்ட பூசல்களை தீர்த்துவைத்தல் மற்றும் அதிகாரம்பெற்ற ஐநா அமைப்புகளினாலும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிறுவனங்களினாலும் தனக்கு ஆற்றுப்படுத்தப்படும் சட்டப் பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசனை வழங்குதல் ஆகிய பொறுப்புகளைக் கொண்டுள்ளதுமான சர்வதேச நீதி மன்றத்தின் (ICJ) முன்னே சமர்ப்பிக்கப்படும். அரசுகளுக்கிடையிலான பூசல்கள் சம்பந்தப்பட்ட அரசுகளினால் 2009இல் எதியோப்பியாவிற்கும் எரித்ரியாவிற்கும் இடையிலான பூசலைத் தீர்த்து வைத்ததோடு,இவ்விரு நாடுகளுக்குமிடையிலான இரண்டு வருட யுத்தத்தினால் ஏற்பட்ட இறப்புகள், காயம், வன்புணர்வு, சூறையாடல் மற்றும் அழிவுகள் ஆகியவற்றிற்கு இழப்பீடு வழங்கியதும் நிரந்தர மத்தியஸ்த நீதி மன்றத்தினால் தாபிக்கப்பட்டதுமான குழு போன்ற சர்வதேச மத்தியஸ்த குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்படலாம்.[24] இப்பொறிமுறைகள் முறைசார் அரச வழிமுறைகளினூடாக மாத்திரமே ஈடுபடுத்தப்படலாம் என்பதோடு, அவை பொதுவாக தனிமனிதர்களுக்கும் குழுக்களுக்கும் கிடைக்கக்கூடிய வழிகள் அல்ல.

**அவதானிக்க முக்கியமானவை**

- மேலே காணப்படும் தெரிவுகள் அனைத்தும் பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கும் ஒட்டுமொத்த நோக்கத்தை அடைவதற்கு உதவியபோதும், அவை ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு ஆணைப்பணிகள், ஏற்றுக்கொள்ளல் மற்றும் சான்று நிபந்தனைகள் உண்டு. உதாரணமாக, சான்று, குற்றத்தை நிருபிக்கும் பொறுப்பு ஒரு குற்றவியல் வழக்கில் அரசியலமைப்பு வழக்கு, சிவில் வழக்கு அல்லது ஒரு மனித உரிமைகள் நிறுவனத்தில் விடுக்கப்படும் ஒரு கோரிக்கை என்பவற்றைவிட கண்டிப்பானதாக இருக்கக்கூடும்.
- ஒருசில பொறுப்புக் கூறலுக்கான வழிகள் சமாந்தரமாகப் பயன்படுத்தப்படும் அதேவேளை, ஏனையவை ஒன்றிலிருந்து ஒன்று விடுபட்டுக் காணப்படும். உதாரணமாக, குற்றவியல் சட்டத்தில், ஒரே குற்றத்திற்காக ஒரு ஆள் அல்லது நிறுவனம் இருமுறை விசாரிக்கப்பட முடியாது என்பது பொதுவான கோட்பாடாகும்.
- எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்காக சான்றுகளைப் பாதுகாக்குமுகமாக, அக் காலத்தில் பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறைகள் எதுவும் இல்லாதபோதும் கூட, பாலியல் வன்முறைகள் தொடர்பான ஆவணப்படுத்தல் மேற்கொள்ளப்பட முடியும்.
- இவ் நெறிமுறைகள் சர்வதேச குற்றவியல் சட்ட வரைச்சட்டகமொன்றிற்கமைய தகவல் திரட்டலுக்கு உறுதுணை புரிவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட ஒரு ஆவணப்படுத்தல் முறையியலை விளக்குகிறது. இருப்பினும், பாலியல் வன்முறைக்கான குற்றவியல் பொறுப்பை சர்வதேச சட்டத்தின் கீழான ஒரு குற்றமாக நிறுவுவதற்கு திரட்டப்படும் தகவல்கள் பல்வேறு பொறிமுறைகளில் பயன்படுத்தப்பட முடியும். அது, அரச பொறுப்பையும், சட்டரீதியபக ஒரு தெரிவாக அமைகின்றவிடத்து நிறுவனப் பொறுப்பை அல்லது வேறு அரச சார்பற்ற செயற்பாட்டாளர்களின் பொறுப்பையும் நிறுவுவதற்கும் பயன்படுத்தப்பட முடியும். அது, ஈடுசெய்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், நீதித்துறை அல்லாத பொறிமுறைகளுக்கான அறிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படக்கூடும் - அவை ஈற்றில் குற்றவியல் வழக்குத் தொடுத்தலுக்கு இட்டுச்செல்லக்கூடும்

23 கொசோவோ சிறப்பு நீதிமன்றம் (முன்னர் மீளமைக்கப்பட்ட கொசோவோ சிறப்பு நீதித்துறை நிறுவனம்) ஹேக் நகரில் தாபிக்கப்படும், கொசோவோ சட்டத்தின்கீழ் செயற்படும் ஒரு கொசோவோ தேசிய நீதிமன்றமாக விளங்கும்.

24 மேலும் தகவல்களுக்கு https://pcacases.com/web/view/71 ஐப் பார்க்க.

கீழ்காணும் அட்டவணை விரிவானதாகவிருக்க உத்தேசிக்கப்படவில்லை என்பதோடு, ஒரு சில சாத்தியமான பொறுப்புக்கூறல் வழிகளையும் நிவாரணங்களையும் மட்டுமே வழங்குகின்றது:

## சர்வதேச மட்டம்

| தனி மனித பொறுப்பு | அரச பொறுப்பு | இரண்டும் |
|---|---|---|
| ***நீதித்துறை***<br>சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC)<br>ஆகியவற்றிடமிருந்து கடமைகளைப் பொறுப்பேற்கும் சர்வதேச குற்றவியல் நியாய சபைகளுக்கான (MICT) பொறிமுறை<br>• முன்னாள் யுகோஸ்லேவியாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாய சபை (ICTY, 2017 இல் முடிவுறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது)<br>• ருவாண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் நியாய சபை (ICTR,31.12. 2015 இல் முடிவுற்றது) | ***நீதித்துறை***<br>• சர்வதேச நீதிமன்றம் (ICJ)[1]<br>• சர்வதேச மத்தியஸ்த குழு[2]<br>***ஓரளவு நீதித்துறை***<br>ஐநா உடன்படிக்கை அமைப்புகள் உ.ம்:<br>• மனித உரிமைகள் குழு<br>• சித்திரவதைக்கெதிரான குழு<br>• CEDAWகுழு<br>• சிறுவர் உரிமைகள் தொடர்பான குழு<br>***நீதித்துறையல்லாத***<br>• ஐநா விசேட நடைமுறைகள் (உ.ம்: சிறப்புத் தூதுவர்களும் தொழிற்படு குழுக்களும்)<br>• சர்வதேச கால வாரியான மீளாய்வு (UPR) | ***நீதித்துறையல்லாத***<br>சர்வதேச விசாரணை ஆணைக்குழுக்களும் (COI) உண்மை கண்டறிதல் குழுக்களும் உ.ம்:<br>• COI சிரியா<br>• இலங்கை தொடர்பான OHCHR விசாரணை (OISL)<br>• COI எரித்திரயா<br>• வேறு. |

## பிராந்திய மட்டம்

| தனி மனித பொறுப்பு | அரச பொறுப்பு | இரண்டும் |
|---|---|---|
| ***நீதித்துறை***<br>ஆபிரிக்க நீதிமன்றமும் மனித உரிமைகள் நீதி மன்றமும் (ஆபிரிகக் நீதி மன்றம் இன்னும் நிறுவப்படவில்லை ) | ***நீதித்துறை***<br>• மனித உரிமைகள் மற்றும் மக்கள் உரிமைகள் தொடர்பான ஆபிரிக்க நீதிமன்றம் (ACtHR,ஆபிரிக்கநீதி மற்றும் மனித உரிமைகள் மன்றத்துடன் இணைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.)<br>• ஐரோப்பிய மனித உரிமைகள் நீதி மன்றம். (ECtHR)<br>• ஆமெரிக்க நாடுகளுக்கிடையிலான மனித உரிமைகள் நிதிமன்றம் (IACtHR)<br>• ECOWAS சமூக நீதி மன்றம் (CCtJECOWAS)<br>• கிழக்காபிரிக்க நீதிமன்றம் (EACtJ)<br>***ஓரளவு நீதித்துறை:***<br>• மனித உரிமைகள் மற்றும் மக்கள் உரிமைகள் தொடர்பான ஆபிரிக்க ஆணைக்குழு(ACHPR)<br>• அமெரிக்க நாடுகளுக்கிடையிலான மனித உரிமைகள்ஆணைக்குழு (IACHR)<br>***நீதித்துறையல்லாத***<br>• ACHPR இன்ஆபிரிக்க ஒன்றிய சிறப்புப் பொறிமுறை (உ.ம்: சிறப்புத் தூதுவர்களும் தொழிற்படு குழுக்களும்)<br>• அமெரிக்க அரசுகளின் IACHR அறிக்கையாளர் நிறுவனம் | ***நீதித்துறையல்லாத***<br>பிராந்திய விசாரணை ஆணைக்குழுக்களும் (COI) உண்மை கண்டறிதல் குழுக்களும் உ.ம்:.<br>• சூடான் தொடர்பான ஆபிரிக்க ஒன்றியம் COI |

1 சர்வதேச நீதி மன்றம் முக்கியமாக நாடுகளுக்கிடையிலான பூசல்களையே கையாளும். தனி மனிதர்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் கோரிக்கைகளை அது பரிசீலிப்பதில்லை.

2 அரசுகள் தமக்கிடையிலான பூசல்களை தீர்த்தக்கொள்வதற்கு சர்வதேச மத்தியஸத குழுக்களை நிறுவலாம். அவை பொதுவாக தனி மனிதர்களுக்கு அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கிடைக்கக்கூடிய வழிகள் அல்ல.


## உள்நாட்டு மட்டம்

| தனி மனித பொறுப்பு | | | அரச பொறுப்பு | இரண்டும் |
|---|---|---|---|---|
| ***நீதித்துறை*** | ***நீதித்துறை*** | ***நீதித்துறை*** | ***நீதித்துறை*** | ***நீதித்துறையல்லாத*** |
| குற்றவியல் நிதிமன்றம் | இராணுவ நீதிமன்றம் | சிவில் நீதி மன்றம் | தேசிய சட்டங்களுக்கும் நடைமுறைகளுக்கும அமைய | தேசிய விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் உண்மை கண்டறிதல் குழுக்கள் உ.ம்: |
| குற்றங்கள் இடம்பெற்ற நாட்டில் அல்லது நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் இன்னொரு நாட்டில் உ.ம்: சர்வதேச நியாயாதிக்க (UJ) வழக்குகள் | தேசிய சட்டங்களுக்கும் நடைமுறைகளுக்கும் அமைய பொருத்தமாயின். | குற்றமிழைத்த தனி மனிதர்(கள்), கூட்டுத்தாபனங்கள் அல்லது நிறுவனங்களுக்கெதிரான கோரக்கைகள் | ***ஓரளவு நீதித்துறை***<br>• தேசிய மனித உரிமை நிறுவனங்கள்(NHRI)<br>• பலியானோருக்கான தேசிய நம்பிக்கை நிதியம் /நிர்வாக ஈடுசெய்தல் நிகழ்ச்சித் திட்டங்கள். | • தேர்தலுக்குப் பிந்திய வன்முறைகள் பற்றிய விசாரணை ஆணைக்குழு CIPEV/ கென்யாவில் Waki ஆணைக்குழு<br>• உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (TRC) |

## சர்வதேசமயப்படுத்தப்பட்ட மற்றும் கலப்புநியாய சபைகள் உ.ம்:

- சீராலியோனுக்கான சிறப்பு நீதிமன்றம்(SCSL)
- கிழக்குத் தீமோரில் இடம்பெற்ற பாரதூர குற்றங்களுக்கான சிறப்புக் குழு (SPSC)
- கம்போடிய நீதிமன்றங்களில் விசேட பிரிவுகள்(ECCC)
- அதிவிசேட ஆபிரிக்க சபைகள் (EAC)
- கொசோவோ சிறப்பு நீதிமன்றம் (KSC)
- மத்திய ஆபிரிக்க குடியரசின் சிறப்பு குற்றவியல் நீதிமன்றம் (CARSCC)

சர்வதேசமயப்படுத்தப்பட்ட மற்றும் கலப்பு நீதிமன்றங்களில் சில ஓர் அரசுக்கும் ஐநா விற்குமிடையிலான ஒரு ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டதெனினும் அவை ஒன்றாக இணைக்கப்பட்டுள்ள அதேவேளை, ஏனையவை ஒரு அரசுக்கும் ஆபிரிக்க ஒன்றியம் (AU) அல்லது ஐரோப்பிய ஒன்றியம் (EU) போன்ற பிராந்திய நிறுவனத்திற்குமிடையிலான ஒப்பந்தத்தின் மூலம் நிறுவப்பட்டன. மேலும், EU ஆதரவுபெற்ற கொசோவோ சிறப்பு நீதிமன்றம் தொழில்நுட்பரீதியாக ஹேக் இல் தாபிக்கப்பட்ட ஒரு கொசோவோ தேசிய நிதிமன்றமாகும்.



# அத்தியாயம் 4 பொருளடக்கம்

**அத்தியாயம் 4: தனிமனிதர் குற்றவியல் பொறுப்பு ........ 41**

**A. அறிமுகம் ........ 41**

1. சட்ட வரைச் சட்டகம் ........ 41

*பெட்டி 1*
பாலியல் வன்முறைக்குப் பொருந்தும் சர்வதேச சட்டதின் கீழ் பிரதான வகைக் குற்றங்கள் ........ 41

2. சட்டரீதியான வரைவிலக்கணங்கள் ........ 42

**B. சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்களின் அம்சங்கள் ........ 43**

1. குற்ற அம்சங்களை அறிமுகப்படுத்துதல் ........ 43

*பெட்டி 2*
பாலியல் வன்முறையைஅதன் நிகழ் சூழலிலிருந்து பார்த்தல் ........ 44

2. குற்ற அம்சங்களின் தேவைப்பாடுகள் ........ 45

(i) பகுதி அ: அடிப்படையிலுள்ள குற்றங்களின் சிறப்பு அம்சங்கள் ........ 45

*பெட்டி 3*
ஒத்த வயதுக் குழு அனுபவம்—பாலியல் வன்முறையைப் பயன்படுத்தி இழைக்கப்படும் ஏனைய குற்றங்கள் ........ 46

*பெட்டி 4*
யுத்தக் குற்றம், மனிதகுலத்திற்கெதிரான குற்றம் மற்றும் இனப்படுகொலையாக அமையக்கூடிய விசேட செயல்கள் ........ 47

(ii) பகுதி ஆ:குற்ற வகைகளின் பொது அம்சங்கள் ........ 48

*பெட்டி 5*
யுத்தக் குற்றம், மனிதகுலத்திற்கெதிரான குற்றம் மற்றும் இனப்படுகொலை ஆகியவற்றின் பொது அம்சங்கள் ........ 49

*பெட்டி 6*
சம்பவ சட்ட உதாரணங்கள் —இனப்படுகொலையாக பாலியல் வன்முறை ........ 53

(iii) பகுதி இ:தொடர்பு அம்சங்கள்/பொறுப்புகளின் வகைகள் ........ 53

*பெட்டி 7*
தொடர்பு அம்சங்கள்/பொறுப்புகளின் வகைகள் ........ 54

*பெட்டி 8*
சம்பவ சட்ட உதாரணம் - ஆணையிடல் பொறுப்பு - பெம்பா சம்பவம் ........ 55

**C. உண்மைச் சூழ்நிலைகள் ........ 56**

*பெட்டி 9*
அமைதிப்படையினரால் பாலியல் பயன்பெறுதல் மற்றும் துஷ்பிரயோகம் ........ 58

**D. நடைமுறை மற்றும் சான்று விதிகள் ........ 59**

1. சம்மதம் ........ 59

*பெட்டி 10*
பலவந்தப்படுத்தும் சூழ்நிலைகளில் சம்மதம் இருப்பதில்லை ........ 60

2. நிரூபித்தல் ........ 61

*பெட்டி 11*
சம்பவ சட்ட உதாரணம்—ஹாப்ரே தீர்ப்பு ........ 61

3. சம்பவத்திற்கு முந்திய மற்றும் பிந்திய பாலியல் நடத்தை ........ 62

*பெட்டி 12*
பலியானோரின் கன்னித்தன்மையும் ‘கன்னித்தன்மை பரிசோதனை’யும் ........ 62

4. ஏனைய பாதுகாப்பு நடவடிக்கைகள் ........ 63

*பெட்டி 13*
பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான உதாரணங்கள் ........ 63

# அத்தியாயம் 4: தனிமனித குற்றவியல் பொறுப்பு

## A. அறிமுகம்

### 1. சட்டவரைச்சட்டகம்

கடந்த 20 வருடங்களாக ஒரு போர் குற்றமாக, மனித குலத்திற்கெதிரான குற்றமாக அல்லது மனிதப்படுகொலை சம்பவமாக இழைக்கப்படும் பாலியல் வன்முறை அடங்கலாக மிகவும் மோசமான குற்றங்களுக்குப் பெரும் பொறுப்புக்கூறலை நாடும் திசையில் சர்வதேசச் சட்டம் விருத்தியுற்றுள்ளதனால் - சர்வதேச குற்றவியல் நியாயாதிக்கம் விருத்தியடைந்துள்ளமையினால் - முதலில் ICTY[1] மற்றும் ICTR,[2] சூழ்நிலையிலும் அதன் பின்னர் ICC இன் ரோம சட்டத்தில் மேலும் குறியிடப்பட்டு SCSL, ECCC, EAC மற்றும் வேறு கலப்பு மற்றும் உள்நாட்டு நியாய சபைகளினால் மேலும் விருத்தி செய்யப்பட்டுள்ளது - வன்புணர்வு மற்றும் வேறு வடிவத்திலான பாலியல் வன்முறைகள் சர்வதேசச் சட்டத்தின் கீழ் பின்வரும் மூன்று பிரதான வகைகளாக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் விசாரணை செய்யப்படுகின்றன:

**பெட்டி 1**

**பாலியல் வன்முறைகளுக்குப் பொருந்தும் சர்வதேச சட்டத்தின் கீழான பிரதான வகைக் குற்றங்கள்**

தயவு செய்து, பொருத்தமான உள்நாட்டுச் சட்டங்கள் ஏதுமிருப்பின், அவற்றில் யுத்தக் குற்றங்கள், மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியன எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளன என்று பார்க்கவும்.

| *பாலியல் வன்முறை அமையலாம்* | யுத்தக் குற்றங்கள் | மனித குலத்திறகெதிரான குற்றங்கள் | இனப்படுகொலை |
|---|---|---|---|
| *எப்போது* | ஓர் ஆயுத மோதல் சூழ்நிலையிலும் அதனோடு தொடர்புபட்டும் இழைக்கப்படும் போது[3] | ஒரு சிவிலியன் மக்கள் குழுவிற்கு எதிராக நடதகப்படும் ஒரு பரந்தளவான அல்லது திட்மிட்ட தாக்குதல் சூழ்நிலையில் இழைகப்படும் போது | ஒரு தேசிய, மொழிவாரி, இன அல்லது மத குழுவினரை பூண்டோடு அல்லது பகுதியளவில் அழித்தொழிக்கும் எண்ணத்தோடு இழைக்கப்படும் போது |
| *ஓர் ஆயுத மோதலுடனான தொடர்பு* | தேவை | தேவை இல்லை | தேவை இல்லை |

3

இந்த நெறிமுறைகளின் சூழ்நிலையில் பாலியல் வன்முறைச் செயல்களுக்குரிய சர்வதேச குற்றங்கள் பற்றிய கலந்துரையாடலுக்கான ஆரம்பம் ரோம் சட்டமாகும். எனினும், ரோம் சட்டம் பொருத்தமான சர்வதேச குற்றவியல் சட்டத்தின் மிகவிரிவான விளக்கமாக அமையவில்லை. சர்வதேச வழமைச் சட்டமும் சில நாடுகளின் சட்டமும் பல் வழிகளில் அதைவிட மிக விரிவானவையாகும். விசேட நியாய சபைகள், ECCC மற்றும் SCSL ஆகியன அனைத்தும் வழக்கமான சர்வதேச வழமைச்சட்டத்தின் கோட்பாடுகளை பிரயோகித்துள்ளதோடு, அந்நிறுவனங்களிலிருந்து தோன்றும் நியாயாதிக்கமும் அறிவுறுத்தல் மிக்கதாகவும் இவ்விரிவான கோட்பாடுகளைப் பிரதிபலிப்பனவாகவும் உள்ளன. இந்நெறிமுறைகள் ரோம் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறான ஏற்பாடுகள் மீது கவனக்குவிப்பைக் கொண்டிருக்கும் அதேவேளை, ரோம் சட்டத்தின் பல ஏற்பாடுகள் இன்னும் வழக்கு தொடரப்படவில்லை அல்லது தீர்க்கப்படவில்லையாகையால், செயற்பாட்டாளர்கள் பிரயோகிக்கத்தக்க கொள்கைகளின் ஒரு மூலம் என்ற வகையில் விசேட மற்றும் கலப்பு நீதிமன்றங்கள் கிடைக்கக்கூடிய ஒரே வழிகாட்டுதலை வழங்கக்கூடும். தேசிய குற்றவியல் நீதிமன்றங்கள், மனித உரிமைகள் நீதிமன்றங்கள் மற்றும் பொறிமுறைகள் ஆகியவற்றின் தீர்மானங்கள் மற்றும் விளக்கங்களும் உதாரணமாக சர்வதேச வழமைச்சட்டம் அல்லது பொருத்தமாயின் சட்டத்தின் பொதுவான கொள்கைகளை நிறுவுவதன் மூலம் பயனுள்ளவையாக அமையலாம்.

1 பிராமேர்டஸ் பீ.எஸ்., ஜாவிஸ் எம், எட்ஸ், (2016) மோதல் தொடர்புபட்ட வன்முறைக்கு எதிராக ICTY இல் வழக்குத் தொடுத்தல், ஒக்ஸ்பட்: ஒக்ஸ்பட் பல்கலைக்கழக பதிப்பகம்.

2 சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் பொறிமுறை (2014) பாலியல் வன்முறைகளுக்கெதிராக வழக்குத் தொடுத்தல்: மோதலுக்குப் பிந்திய பிராந்தியங்களில் பாலியல் வன்முறைக் குற்றங்களுக்கான விசாரணை மற்றும் வழக்குத்தொடுத்தலுக்கான மிகச் சிறந்த நடைமுறை தொடர்பான கைநூல்: ருவாண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான வழக்குத் தொடுநர் அலுவலகத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் http://www..unictr.org/.

3 ICTY மற்றும் ICTR சட்டங்களின் கீழ் செயலுக்கும் ஆயுத மோதலுக்குமிடையே ஒரு தொடர்பு இருக்கவேண்டும்.

## 2. சட்டவரைவிலக்கணம்

ரோம் சட்டத்திற்கு ஒரு தரப்பாக அமையும் பல அரசுகள் பாலியல் வன்முறையை சர்வதேச குற்றமாகக் கருதும் இச்சட்டத்தின் விளக்கத்தைத் தமது சட்டத்தில் சேர்த்துக் கொண்டுள்ளபோதிலும் வேறுபல அரசுகள் அவ்வாறு செய்யவில்லை. ICCகான சில அரசுத் தரப்புகள் சேர்த்துக்கொண்டுள்ளன அல்லது[4] இச்சட்டத்தின் விளக்கங்களை மாத்திரம் பிரயோகிக்கக்கூடும். எனினும் ICC வரைவிலக்கணங்களையும் பின்பற்றுகின்றன. சில அரசுகள் பொறுப்புகளின் வகைகள் உள்ளிட்ட ICC சட்டத்தின் வேறு அம்சங்களையும் சேர்த்துக் கொண்டுள்ளன அல்லது பிரயோகிக்கக்கூடும்.[5] சம்பந்தப்பட்ட வேறு உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச சட்டத்தின் வழமையான மூலங்கள் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் அவற்றின் பிரயோகிக்கக்கூடிய தன்மை தொடர்பாக, நிலைமை நாடுகளுக் கிடையில் வேறுபடுகிறது.

சர்வதேச சட்டத்தில் ஏற்பட்டுள்ள சிறந்த அபிவிருத்தி இருந்தும், வன்புணர்வும் வேறு வடிவத்திலான பாலியல் வன்முறைகளும் பல அரசுகளின் சட்டங்களில் தொடர்ந்து ‘சாதாரண குற்றவியல் குற்றங்களாகவே’ உள்ளன. குற்றவியல் செயல்களினதும் அவற்றில் அடங்கியுள்ள அடிப்படை அம்சங்களினதும் அத்துடன் குற்றவியல் சட்டத்தின் சம்பந்தப்பட்ட வேறு பகுதிகளினதும் (பொறுப்புச் சட்டம் மற்றும் பிரதிவாதம் அல்லது குற்றவியல் பொறுப்பை சேர்த்துக் கொள்ளாமைக்கான அடிப்படை தொடர்பான சட்டத்தினதும் வரைவிலக்கணங்கள், இக்குற்றங்கள் புலனாய்வு செய்யப்பட்டு வழக்குத் தொடுக்கப்படும் நியாயாதிக்கத்திற்கமைய - தேசிய சட்டங்கள் அவற்றைச் சர்வதேசக்குற்றங்களாகக் கருதி நடத்தும் போதும்கூட ஓரளவு வேறுபடலாம். இது பாலியல் வன்முறைக்குற்றங்களான ஆவணப்படுத்துவதற்கு முக்கியமானதாக அமையக்கூடும். உதாரணமாக, சர்வதேக் குற்றவியல் நடைமுறையில், பாலியல் மயப்படுத்தப்பட்ட சித்திரவதை ஒரு யுத்தக்குற்றமாக அல்லது மனித குலத்திற்கெதிரான குற்றமாகக்கருதி அதற்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுகிறது. எனினும், தேசிய குற்றவியல் சட்டக்கோவைகள் சித்திரவதையை யுத்தக்குற்றங்கள், மனிதகுலத்திற் கெதிரான குற்றங்கள் அல்லது இனப்படுகொலை ஆகிய குற்றங்களின் குடையமைப்பின் கீழின்றி, தனியான குற்றமாகமதித்து நடத்தலாம். பாலியல் வன்முறை குற்றங்களின் - வன்புணர்வு அல்லது சித்திரவதை போன்றவை – தேசிய வரைவிலக்கணமும் எப்போதும் சர்வதேச வகைப்படுத்தலுக்கு அமைவானதாக இல்லாதிருக்கக்கூடும்.[6] சாதாரண குற்றங்களாக வன்புணர்வு மற்றும் வேறு வடிவத்திலான வன்முறைகள் ஆகியவற்றுக்கு ஒன்றும் சர்வதேசச் சட்டத்தின் கீழான குற்றமாக ஒன்றுமாக இருவகைச் சட்டமுறைமைகள் ஒரே சமயத்தில் சேர்ந்திருக்கும் நாடுகளில் இரு முறைமைகளுக்கு மிடையிலான வரைவிலக்கணங்கள் வேறுபடக்கூடுமென்பதோடு, விசேட உள்நாட்டு நீதிமன்றங்களே சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்களை விசாரிக்கத் தகுதி பெற்றதாக இருக்கும்.

**இப்பிரிவு, உள்நாட்டு மட்டத்தில் ஒரு விசேட முறைமை நிலவினாலும் இல்லாவிடினும், சர்வதேசச் சட்டத்தின் கீழான குற்றங்களாக அமையும் வன்புணர்வு மற்றும் ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகளை மாத்திரம் ஆராய்கிறது.**

குற்றங்களினதும் அவற்றின் அடிப்படை அம்சங்களினதும் வரைவிலக்கணங்கள் எவ்வகையான தகவல்கள் திரட்டப்பட வேண்டும் என்பதில் சம்பந்தப்பட்ட சான்றுகளை தெளிவுபடுத்துவதற்கான நேர்முகங்களின்போது பலியானோரிடமும் சாட்சிகளிடமும் எவ்வகையான கேள்விகள் கேட்க வேண்டும் என்பதிலும் நேரடியாகத் தாக்கம் செலுத்தப்படுகின்றமையினால் பாலியல் வன்முறைகளை சர்வதேசச் சட்டத்தின் கீழான குற்றமாக ஆவணப்படுத்தும் செயற்பாட்டாளர்கள்:

- » ரோம் சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான குற்றங்களின் அடிப்படை அம்சங்கள்
- » பொறுப்புகளின் வகைகள், (அச்சுறுத்தி இனங்காண வைத்தல் போன்ற) குற்றவியல் பொறுப்பைச் சேர்த்துக் கொள்ளாமைக்கான அடிப்படைகள், மற்றும் நியாயாதிக்கம் எந்தச் சட்ட வரைச்சட்டகம் தொடர்பாகத் தொழிற்படுகிறதோ அந்தக் குற்றவியல் நியாயாதிக்கத்தின் சட்ட வரைச்சட்டத்திற்கான தடைகள்

4 குற்றங்களின் அம்சங்கள் என்பது அவற்றின் உள்ளடக்கப் பகுதிகளாகும், அதாவது ஒரு குறிப்பிட்ட குற்றத்தை நிரூபிப்பதற்காக நிரூபிக்கப்பட வேண்டியவை அல்லது பூர்த்தி செய்யப்பட வேண்டியவை.

5 பொறுப்புகளின் வகை ஓர் தனிமனிதர் எவ்வாறு ஒரு குற்றத்திற்கு குற்றவியல் ரீதியாக பொறுப்பாக்கப்படலாம் என்பதை குறிக்கும்.

6 செயற்பாட்டாளர்கள் தமது ஆணையைப் பொறுத்து, தமது சார்புரை பணிகளில் ஓர் அங்கமாக, பாலியல் வன்முறை பற்றிய தேசிய வரைவிலக்கணத்தில் இடைவெளிகளை இனங்காண விரும்பலாம் என்பதோடு, சர்வதேச நியமங்களுக்கு மாறாக உள்ள பிற்போக்கான மற்றும் பாரபட்சமான விலக்கங்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கலாம். ( உ.ம்: பெண்கள் மட்டமே பலியாவோராகவும் ஆண்கள் மட்டுமே குற்றமிழைப்பவராகவும் உள்ள சட்டங்கள், வாய்வழி பாலியல் உறவு அல்லது பொருட்களை பயன்படுத்துதல் வன்புணர்வாக கருதப்படாத சட்டங்கள் அல்லது பலத்தைப் பிரயோகித்தல் அல்லது பலியானோரின் எதிர்ப்பு நிரூபிக்கப்படவேண்டியுள்ள சட்டங்கள்)

» சிறப்பு மற்றும் கலப்பு நீதிமன்றங்கள் மற்றும் ICC[7] ஆகியவற்றின் சம்பந்தப்பட்ட நியாயாதிக்கம்.

» சட்டவரைச் சட்டகம் எந்த நடைமுறை மற்றும் சான்று தொடர்பாக செயற்படுகிறதோ அந்தநடைமுறை மற்றும் சான்று தொடர்பான சட்டம்.

**செயற்பாட்டாளர்கள்:**

» பொருத்தமானவாறு உள்நாட்டு நீதிமன்றங்கள் மற்றும் மனித உரிமை பொறிமுறைகள் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் மற்றும் விளக்கங்களையும் அறிந்திருக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர்:

இவ்நெறிமுறைகளின் நோக்கத்திற்காக, முக்கிய கவனக் குவிப்பு பாலியல் வன்முறைக்குற்றங்களுக்குப் பொருந்தும் ரோம் சட்ட வரைச் சட்டகத்தின் மீதாகும்.

## B. சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களின் அம்சங்கள்

### 1. குற்றங்களின் அம்சங்களை அறிமுகப்படுத்தல்

சான்றுச் செயல் நூலில் விளக்கமாக விபரிக்கப்பட்டவாறு, எந்தவொரு வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறைச் செயலும் ஒரு சர்வதேசக் குற்றமாக கணிக்கப்டுவதற்கு செயற்பாட்டாளர்கள் மூன்றுவகை அம்சங்களை நிரூபிப்பதற்கு தகவல்களைக் கண்டறிய வேண்டும். (பின்னிணைப்பு 1 ஐப் பார்க்கவும்) பாலியல் வன்முறைக் குற்றங்களை ஆவணப்படுத்துவதற்கான சான்றுச் செயல்நூல்: சான்று இடைவெளிகளை நிரப்புவதில் ஆய்வாளர்களுக்கு உதவுவதற்கான ஒரு கருவி)[8]

A. கீழுள்ள குற்றத்தின் விசேட அம்சங்கள்

B. பொதுவான அம்சங்கள் அல்லது சப்போ அம்சங்கள்

C. தொடர்பு அம்சங்கள் அல்லது பொறுப்புகளின் வகைகள்.

இம்மூன்று வகைத் தகவல்களும் குறிப்பிட்ட செயல்கள் யுத்தக் குற்றமாக, மனித குலத்திற்கெதிரான குற்றமாக அல்லது இனப்படுகொலையாக அமைகிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்கும். அக்குற்றங்களைப் புரிந்தமைக்காக யார் தனிப்பட்டவகையில் குற்றவியல்ரீதியாக பொறுப்பாக இருக்கக்கூடும் என்பதை எடுத்துக் காட்டுவதற்கும் தேவைப்படும். முழுத் தகவலின் A, B மற்றும் ஊ பகுதிகளைக் கொண்டிருப்பதாகக் கருதலாம்.

சர்வதேசச் சட்டத்தின் கீழான ஒரு குற்றத்திற்கு தனிநபர் ஒருவர் பொறுப்பாக இருப்பதாக காணப்படுவதற்கு, கீழுள்ள குற்றத்தின் (வன்புணர்வு போன்றை) அம்சங்கள், குற்றவாளியின் பொதுவான அம்சங்கள் (மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் தொடர்பில்) மற்றும் பொறியின் வகைகள் (கட்டளையிடல் முதலியன) ஆகியன ஒரு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்படவேண்டும்.

உதாரணமாக, ரோம் சட்டத்திற்கமைய (உறுப்புரை 7(i)(g )-1 மற்றும் 25(3)(b), குற்றத்தைப் புரியுமாறு கட்டளையிட்டதன் வாயிலாக இழைக்கப்பட்ட மனித குலத்திற்கெதிரான வன்புணர்வு குற்றத்திற்கு நிரூபிக்கப்பட வேண்டிய அம்சங்களாவன:

7 அமெரிக்க பல்கலைக்கழக வோசிங்டன் சட்டக் கல்லூரியில் அமைந்துள்ள பால்நிலை நீதி நியாயாம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்ட கருத்திட்டம் தனது http://www.genderjurisprudence.org/index.php/gender-jurisprudence-collections. இல் கிடைக்கும் தரவுத் தளத்தில் சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புகள் மற்றும் தீர்மானங்கள் போன்ற சம்பந்தப்பட்ட ஆவணங்களின் பெரும் திரட்டு ஒன்றை பேணுகின்றது. சர்வதேச நியுரம்பேக் கோட்பாட்டு அகடெமியினால் (www.nurembergacademy.org) விருத்தி செய்யப்பட்ட மோதல்களின்போது இடம்பெறும் பாலியல் வன்முறைகள் தரவுத் தளத்தையும் தயவு செய்து பார்க்கவும். இந்த இணைய தரவுத்தளம் முரண்பாடு தொடர்புபட்ட பாலியல் வன்முறைகள் மற்றும் பாலநிலை அடிபப்படையிலான வன்முறைகள் தொடர்பாக சர்வதேச, சிறப்பு மற்றும் கலப்பு நீதிமன்றங்கள் மற்றம் இராணுவ நீதிமன்றங்கள் அடங்கலாக பிராந்திய மற்றும தேசிய நீதிமனறங்கள் ஆகியவற்றினால் வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் வழக்குச் சட்டம் ஆகியவற்றின் தொகுப்பு ஒன்றையும் அத்துடன் விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் உண்மை கண்டறிதல் குழுக்கள் முதலிய நிலைமாற்று நீதி பொறிமுறைகளின் கண்டறிதல்களையும் வழங்குகிறது.

8 மார்க்கஸ் எம், (2013) 'சர்வதேச குற்றவியல் சட்டத்தின்கீழ் பாலியல் வன்முறை குற்றங்கள், மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பான விசாரணை' , ஏ.டீ. பிரெளனர் எட் எல்.,(எட்ஸ்) சர்வதேச குற்றமாக பாலியல் வன்முறை: பல்துறை அணுகுமுறைகள். ஏண்ட்வேர்ப்: இண்டர்சென்சிய பக் 227-233.

## *பலியானோர் மீது குற்றத்தின் தாக்கம் பறறிய சான்றுகளையும் செயற்பாட்டாளர்கள் முறையாக திரட்டவேண்டும்....*

### A. அடியிலுள்ள குற்றங்களின் விசேட அம்சங்கள்: வன்புணர்வு

1. பலியானோரது அல்லது குற்றமிழைத்தவரது உடலின் ஏதேனும் பகுதியினுள் ஒரு பாலியல் உறுப்பைக்கொண்டு அல்லது பலியானவரின் மலவாசல் அல்லது பிறப்புறுப்புத் துளையில் ஏதேனும் பொருளைக்கொண்டு அல்லது உடலின் வேறு ஏதேனும் பகுதியைக்கொண்டு - எவ்வளவு மென்மையானதாயினும் - உட்புகுத்துவதற்குக் காரணமாக அமையும் ஒரு நடத்தையின் மூலம் குற்றமிழைத்தவர் ஓர் ஆளின் உடலை ஆக்கிரமிப்புச் செய்தார்.

2. ஆக்கிமிப்பு பலவந்தமாக அல்லது பலத்தைப் பிரயோகிப்பதென்ற அச்சுறுத்தலைப் பயன்படுத்தி அல்லது அத்தகைய ஆளுக்கு அல்லது இன்னொரு ஆளுக்கு எதிராக அச்சம் அல்லது வன்முறை, அச்சுறுத்தி இணங்கவைத்தல், தடுத்தது வைத்தல், உளவியல் ரீதியான ஒடுக்குமுறை அல்லது அதிகாரத் துஷ்பிரயோகம் ஆகியவற்றை ஏற்படுத்தும் கட்டாயப்படுத்தலினால் அல்லது பலவந்தப்படுத்தல் சூழ்நிலையைப் பயன்படுத்தி இழைக்கப்பட்டது அல்லது அவ்வாக்கிரமிப்பு உண்மையான சம்மதம் வழங்க முடியாதிருக்கும் ஒரு ஆளுக்கெதிராக இழைக்கப்பட்டது.[9]

### B. பொதுவான அம்சங்கள்: மனிதகுலத்திற்கெதிரான குற்றங்கள்

3. ஒரு மக்கள் கழுவிற்கு எதிராக பரவலாக அல்லது திட்டமிட்டு நடத்தப்படும் ஒரு தாக்குதலின் ஒரு பகுதியாக அச் செயல் புரியப்பட்டது.

4. ஒரு மக்கள் குழுவிற்கு எதிராக பரவலாக அல்லது திட்டமிட்டு நடத்தப்படும் ஒரு தாக்குதலின் ஒரு பகுதியாக அச் செயல் அமைந்திருந்தது என்பதை குற்றமிழைத்தவர் அறிந்திருந்தார் அல்லது அச்செயல் அவ்வாறு இருக்கவேண்டுமென எண்ணியிருந்தார்.

5. அத்தகைய தாக்குதலை மேற்கொள்வதற்கான ஓர் அரச அல்லது நிறுவன கொள்கைக்கமைய அல்லது அக்கொள்கையை முன்னொடுத்துச் செல்லுமுகமாக அத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (செற்பாட்டாளர்கள் ஆவணப்படுத்தல் செய்யும் நியாயாதிக்கத்தில் தேவைப்படக்கூடிய அல்லது தேவைப்படாத அம்சங்கள்)

### C. தொடர்பு அம்சங்கள்/ பொறுப்புகளின் வகைகள்: ஆணையிடல்

6. குற்றம்சாட்டப்பட்டவர் ஆணைகள் ஈடுபடுவதற்கு அதிகாரம் கொண்டிருந்தார் என்பதோடு, அவை நிறவேற்றப்படவேண்டுமெனவும் எதிர்பார்த்தார்.

7. ஆணை வழங்கியமை குற்றத்ததை அல்லது அடியிலுள்ள குற்றத்தைப் புரிவதில் கணிசமான பங்களிப்பு ஒன்றை வழங்கியது.

**பெட்டி 2**

**வன்முறை அதன் சூழ்நிலையிலிருந்து பார்த்தல்**

ஒரு தாக்குதல் பல்வேறு வன்முறைகளை உள்ளடக்கியிருக்கலாம் என்பதை அறிந்து செயற்பாட்டாளர்கள் ஆவபணப்படுத்தலை நடத்த வேண்டும். பாலியல் வன்முறைகளை அதன் நிகழ் சூழ்நிலையிலிருந்து பார்த்தல் என்பது, பாலியல் வன்முறைக்கும் ஏனைய குற்றங்ளுக்குமிடையிலான தொடர்புகளையும் வன்முறைச் செயற்பாட்டில் பாலியல் வன்முறை வகிக்கும் பங்கையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று பொருள்படும். உதாரணமாக, என்டாகண்டா வழக்கில்[10] சூறையாடலோடு கூடவே கொலை மற்றும் வன்புணர்வு, உடல்ரீதியான மற்றும் வார்த்தை மூலமான துஷ்பிரயோகங்கள் அல்லது வன்முறை அச்சுறுத்தல்கள் ஆகியனவும் இடம்பெற்றன. குற்றங்கள் அனைத்தையும் அத்துடன் பாலியல் வன்முறை எவ்வாறு சூழ்நிலையோடு தொடர்புபட்டுள்ளது என்பதையும் நிறுவுவதற்கு அம்சங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவது குற்றச் செயலின் முழு அளவையும் துல்லியமாக விபரிப்பதற்கும் அதனை இன்னவகையானதென குறிப்பிடுவதற்கும் இன்றியமையாததாகும். ஆவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் பாலியல் வன்முறையை உயர் அதிகாரிகளோடு சம்பந்தப்படுத்துவதற்கும் பங்களிப்புச் செய்யலாம். [11]

---

9 ஓர் ஆள் இயற்கை, பிறர் செயல் அல்லது வயது தொடர்புபட்ட இயலாமையினால் பாதிக்கப்பட்டிருப்பின் உண்மையான சம்மதம் வழங்க முடியாமலிருக்கலாம் என்பது புரிந்து கொள்ளப்படும். ரோம சட்டம் குற்றத்தின் அம்ங்கள் பக்கம் 8 ஐ பார்க்கவும்.

10 வழக்குத்தொடுநர் எதிர் பொஸ்கோ என்டகாண்டா ICC-01/04.02/06 (ongoing).

11 பெயிக் எல், ஜாவிஸ் எம், சல்காது எம், பின்சோட்டி ஜி (2016) 'பாலியல் வன்முறையை அதன் நிகழ் சூழலிலிருந்து பார்த்தல்: பி. எஸ் பிராம் - மெட்ஸ் மற்றும் எம் ஜாவிஸ் (eds): மோதல் தொடர்புபட்ட பாலியல் வன்முறைகளுக்கு எதிராக வழக்குத் தொடுத்தல் ICTY ஒகஸ்பட் பல்கலைக்கழக பதிப்பகம் 172 -216

# *ஏனைய கொடுமைகளிலிலிருந்து தனித்து பாலியல் வன்முறைக் குற்றங்களை ஆவணப்படுத்த முடியாது.....*

## A. அடியிலுள்ள குற்றங்களின் விசேட அம்சங்கள்

*'யாருக்கு, என்ன, எங்கு, எப்போது நடந்தது?'*

எந்த குறிப்பிட்ட குற்றச்செயல் இழைக்கப்பட்டது என்பதைக் காட்டும் தகவல்களினாலும், அடியிலுள்ள வனபுணர்வு, பாலியல் அடிமைத்தனம், திணிக்கப்படும் மலட்டுத்தன்மை, சித்திரவதை அல்லது வேறு சம்பந்தப்பபட்டக் குற்றங்களின் அம்சங்கள் உணரப்பட்டுள்ளன என்பதனாலும் விசேட அம்சங்கள் பூர்த்தி செயயபப்டும்.

## B. குற்ற வகைகளின் பொதுவான அம்சங்கள் (யுத்தக் குற்றங்கள், மனிதககுலத்திறகெதிரான குற்றங்கள் அல்லது இனப்படுகொலை)

குற்றம்/அடியியிலுள்ள குற்றம் புரியப்பட்ட சூழ்நிலை யாது?

அடிக்கடி 'சப்போ' அம்சங்கள் என்று குறிபிடப்படும் பொதுவான அம்சங்கள் ஒரு குறிப்பிட்ட குற்றச் செயல் புரியப்பட்ட சூழ்நிலைகளை விபரிப்பதும் அச்செயலை ஒரு யுத்தக்குற்றம், மனிதகுலத்திற்கெதிரான குற்றம் அல்லது இனப்படுகொலை என்ற அளவிற்கு உயர்த்துவதுமான தகவல்களினால் திருப்தியடைகிறது.

அடியிலுள்ள குற்றமொன்று (மேலே அ ஐ பார்க்கவும்) அதனை ஒரு யுத்தக் குற்றமாக, மனிதகுலத்திற்கெதிரான குற்றமாக அல்லது இனப்படுகொலையாக ஆக்கும் ஒரு விசேட உண்மைச் சூழ்நிலையில் புரியப்பட்டிருந்தால் மாத்திரமே சர்வதேச சட்டத்தின்கீழான ஒரு குற்றமாக அமையும் (உ.ம்: ஒரு யுத்தக்குற்றமாக பாலியல் அடிமைத்தனம், மனிதகுலத்திற்தெிரான குற்றமாக வன்புணர்வு, ஒரு குழுவின் உறுப்பினர்களுக்கு கடும் உடல் மற்றும் உள தீமையை ஏற்படுத்தும் செயல் ஓர் இனப்படுகொலையாக).

பொதுவான அம்சங்கள் உரிய முறையில் ஆவணப்படுத்தப்படாவிடில், ஒரு குற்றம் தேசிய சட்டத்தின்கீழ் 'சாதாரண குற்றமாக' (உ.ம்: வன்புணர்வு முதலியன) கருதி வழக்குத் தொடுக்கப்படலாமேயன்றி, சர்வதேச சட்டத்தின்கீழான ஒரு குற்றமாக (உ.ம்: யுத்தக் குற்றமாக வன்புணர்வு, அல்லது மனிதகுலத்திற்கெதிரான ஒரு குற்றமாக வன்புணர்வு) அல்ல என்பது இதன் பொருளாகும். வன்புணர்விற்கும் ஏனைய வடிவங்களிலான பாலியல் வன்முறைளுக்கும் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்படுதல் சாதாரணக் குற்றமாகவன்றி சர்தேச சட்டத்தின் கீழான குற்றமாக வழக்குத்தொடுக்கபட்டால் அது வலிமையான தடைகளை ஈர்க்கக்கூடும்.

## C. தொடர்பு அம்சங்கள்/பொறுப்பகளின் வகைகள்

*'யார் பொறுப்பு, எப்படி?'*

பொறுப்புகளின் வகைகள் என்றும் அறியப்படும் தொடர்பு அம்சங்கள் சர்வதேச சட்டத்தின்கீழான ஒரு குற்றமாக அமையும் ஒரு செயலைப் புரிந்தமைக்காக அல்லது செயலொன்றைப் பரியாமைக்காக ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குற்றமிழைத்தவர்(கள்) பொறுப்பாகவிருக்கும் விதத்தை விபரிக்கும் தகவல்களினால் திருப்திபடுத்தப்படுகின்றன.

## 2. குற்ற அம்சங்ளின் தேவைகள்

அடுத்த பிரிவு பாலியல் வன்முறைகள் தொடர்பான செயற்பாட்டாளரின் விசாரணையில் உள்ள மூன்று கட்டங்களுள் ஒவ்வொன்றிலும் என்ன தேவை என்பதை விளக்கும். சான்று செயல்நூலில் (அட்டவணை 1 ஐ பார்க்கவும்) இச்சர்வதேச குற்றங்களின் விசேட, சூழ்நிலை மற்றும் தொடர்பு அம்சங்களை நிரூபிக்க உதவக்கூடிய சான்றுபத்திரங்கள், ஆவண மற்றும் புகைப்பட/காணொளி சான்றுகளின் உதாரணங்களைப் பார்க்கலாம்.( அத்துடன் அத்தியாயம் 10: பாலியல் வன்முறை வகைகளின் சான்றுகள் உம் பார்க்கவும்.)

*(i) பகுதி அ:அடியிலுள்ள குற்றங்களின் விசேட அம்சங்கள்:*

*'யாருக்கு, என்ன, எங்கு, எப்போது நடந்தது?*

ஒரு குறிப்பிட்ட குற்றம்/ அடியிலுள்ள குற்றம் (உ.ம்: வன்புணர்வு) இழைக்கப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கு செயற்பாட்டாளர்கள் யாருக்கு, என்ன, எங்கு, எப்போது நடந்தது என்பதைக் காட்டும் தகவல்களை திரட்டுதல்வேண்டும். இத்தவல் சம்பந்தப்பட்ட அடியிலுள்ள குற்றத்தின் விசேட அம்சங்கள் ஒவ்வொன்றையும் பூர்த்திசெய்ய வேனண்டும். ஒரு தகவல் ஒன்றுக்கு மேற்பட்ட அடியிலுள்ள குற்றங்களுக்குப் பொருந்தலாம்'.

செயற்பாட்டளர்கள் பலியானோர் மீதான குற்றத்தின் தாக்கங்கள்' பற்றிய சான்றுகளை திட்டமிட்ட முறையில் திரட்டுதல் வேண்டும். ஏனெனில், இது சில குற்றங்களுக்கு ஓர் அம்சமாக இரக்கக்கூடும். உதாரணமாக, அடியிலுள்ள சித்திரவதைக் குற்றத்திற்கு உடல் அலலது உள ரீதியான கடும் வலியை அல்லது துன்பத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்பதோடு, இனப்படுகொலை கடும் உடல் அல்லது உளத் தீங்கை ஏற்படுத்துவதன் மூலம் புரியப்பட்டிருக்கலாம். இந்தச் சான்று, தண்டனை விதிப்பதற்கும் ஈடு செய்வதற்கும் ஒரு தாக்க எல்லைக் கொள்கை பொருந்தும் இடங்களுக்கு பயனுள்ளதாக அமைலாம் (உ.ம் 'ஒப்பிடத்தக்க தாக்க குற்றம்') ( அத்தியாயம் 6,D: தீமையை ஆவணப்படுத்துவதற்கான அம்சங்கள்)

வன்புணர்வு அல்லது பலவந்தப்படுத்தப்பட்ட விபச்சாரம் முதலிய பாலியல் வன்முறை சம்பந்தப்பட்ட சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்கள் எப்போதும் உண்டு. ஆனால், பாலியல் அல்லது பாலியல் சாராத நடத்தை மூலம் இழைக்கப்படும் சித்திரவதை அல்லது கொலை முதலிய வேறு குற்றங்களும் உண்டு. பாலியல் வன்முறை தொடர்பான சான்றுகள் இரு வகை குற்றங்களையும் நிரூபிப்பதற்கு பயன்படுத்தப்பட முடியும்:

- குறிப்பிட்ட பாலியல் வன்முறைக் குற்றங்கள்
- பாலியல் வன்முறைப் பயன்பத்தி புரியக்கூடிய ஏனைய சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்கள்.[12]

பாலியல் வன்முறைக் குற்றங்களை ஏனைய கொடுஞ் செயல்களிலிருந்து வேறுபடுத்தி தனித்து ஆவணப்படுத்த முடியாது என்பதோடு, அவற்றை அவற்றின் நிகழ் சூழ்நிலைகளிலிருந்து பார்க்க வேண்டும். தாம் ஆவணப்படுத்தப்போகும் குற்றங்களை வகைப்படுத்தும் நடைமுறையை ஆரம்பிக்கும்போது செயற்பாட்டாளர்கள் பாலியல் வன்முறையுடன் மாத்திரம் இழைக்கப்படக்கூடிய குற்றங்களுக்கு மாத்திரம் தம்மை மட்டுப்படுத்திக்கொள்ளக்கூடாது என்று பரிந்துரைக்கப்படுகிறது.

**பெட்டி 3**

**ஒத்த வயதினர் அனுபவம் - பாலியல் வன்முறையைப் பயன்படுத்தி புரியப்படும் ஏனைய குற்றங்கள்**

*ஆரிப், ஆய்வாளர்: ‘எப்போதும் ஒரு திறந்த மனதுடன் எந்த விசாரணையையும் ஆரம்பித்து பல்வேறுவகைக் குற்றங்களினது அம்சங்களுக்கும் புறவயமாகப் பொருந்தும் சான்றுகளை திரட்டுவது முக்கியமாகும். இரேமெம்பேரா வழக்கில் ஒரு இனச் சிறுபான்மைக் குழுவின் ஆண் உறுப்பினர்கள் தமது உடைகளைக் களைய நிர்ப்பந்திக்கப்பட்டு, மிளகாயத்தூள் அவர்களது பிறப்புறுப்புகளில் தேய்கக்ப்பட்டு வன்புணர்வு செய்யப்பட்டனர்.*

*வன்புணர்வு மற்றும் ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகள் தொடர்பான சான்றுகள் மாத்திரமின்றி, சிதிதிரவதைக் குற்றங்களையும் நிரூபிபப்தற்கான சான்றுகளை நாம் திரட்டினோம். சித்திரவதைகக் குற்றச்சாட்டு முக்கியம். ஏனெனில், அது குற்றத்தின் வன்முறைத் தன்மையை அது மேலும் சிறப்பாக பிரதிபலிப்பதோடு, அம்மனிதர்கள் அனுபவித்த கொடுமைகளின் அளவை துல்லியமாவும் முழுமையாகவும் விபரிப்பதற்கு உதவியது.’*

12 ரோம் சட்டம் பாலியல் வன்முறைக் குற்றங்களையும் பாலியல்மயப்படுத்தப்படக் கூடியவையும் யுத்தக் குற்றங்களாக, மனிதகுலத்திற்கெதிரான குற்றமாக மற்றும் இனப்படுகொலையாக அமையக்கூடியவையுமாகிய குற்றங்களை நிரல்படுத்துகிறது. இக்குற்றங்களுள் சில பெட்டி 4 இல் நிரல்படுத்தப்பட்டுள்ளன. இக்குற்றங்கள் ஒவ்வொன்றினதும் அம்சங்கள் பற்றிய மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து சான்று செயல் நூலைப் பார்க்கவும் (பின்னிணைப்பு 1 ஐ பார்க்கவும்). சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்கள் மற்றும் ரோம் சட்டத்தில் விளக்கப்பட்டவாறான அவற்றின் அம்சங்கள் பற்றிய விரிவான தொகுப்பு ICCE குற்றங்களின் அம்சங்களில் அடங்கியுள்ளது. மேலும், சிறப்பு மற்றும் கலப்பு நீதிமன்றங்களின் இச் சட்டங்களும் குற்றங்களின் அம்சங்களும் மற்றும் உள்நாட்டு குற்றவியல் சட்டக் கோவைகளின் ஏற்பாடுகளும் பிரயோகிக்கக்கூடிய ஏற்பாடுகள் மற்றும் வரைவிலக்கணங்களின் மேலதிக மூலங்களாகத் திகழ்கின்றன.

பெட்டி 4

## யுத்தக் குற்றமாக, மனித்குலத்திற்கெதிரான குற்றமாக, இனப்படுகொலையாக அமையக்கூடிய குறிப்பிட்ட செயல்கள்

**யுத்தக் குற்றங்கள்** (உதாரணமாக உள்நாட்டு ஆயுத மோதல், உறுப்புரை 8.2 (c)-(e) ரோம் சட்டம்)

கீழே பட்டியலிடப்பட்டுள்ள குறிப்பிட்ட செயல்கள்/அடியிலுள்ள குற்றங்கள் ஒரு ஆயுத மோதல் சூழ்நிலையில் மற்றும் அதனோடு தொடர்புபட்டு புரியப்படும்போது ஒரு யுத்தக் குற்றமாக அமைகிறது.

| பாலியல் வன்முறை யுத்தக் குற்றங்கள் | ஏனைய சம்பந்தப்பட்ட யுத்தக் குற்றங்கள் |
|---|---|
| யுத்தக் குற்றங்களான:<br>» வன்புணர்வு<br>» பாலியல் அடிமைத்தனம்<br>» திணிக்கப்பட்ட விபசாரம்<br>» பலவந்தமான கர்ப்பம்<br>» திணிக்கப்பட்ட மலட்டுத்தன்மை<br>» வேறுவடிவங்களிலான பாலியல் வன்முறை | யுத்தக் குற்றங்களான:<br>» கொலை<br>» சித்திரவதை<br>» கொடுமையான நடத்துகை<br>» சிதைவுறுத்தல் அல்லது மருத்துவ/விஞ்ஞான பரிசோதனை<br>» சிறுவர்போராளிகளைப் பயன்படுத்தல்<br>» தனிப்பட்ட கௌரவத்தின்மீது ஆத்திரமூட்டுதல் உ.ம்: இழிவுபடுத்தல்/ தாழ்வுபடுத்தல் நடத்துகை |

**மனிதகுலத்திற்கெதிரான குற்றங்கள்** (உப்புரை 7, ரோம் சட்டம்)

கீழே பட்டியலிடப்பட்டுள்ள குறிப்பிட்ட செயல்கள்/ அடியிலுள்ள குற்றங்கள் ஒரு சிவிலியன் மக்கள் குழுவிற்கு எதிராக பரந்தளவிலும் திட்டமிட்டும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களின் சூழ்நிலையில் புரியப்படும்போது ஒரு யுத்தக் குற்றமாக அமைகிறது.

| மனிதகுலத்திற்கெதிரான பாலியல் வன்முறைக் குற்றங்கள் | ஏனைய சம்பந்தப்பட்ட மனிதகுலத்திற்கெதிரான குற்றங்கள் |
|---|---|
| மனிதகுலத்திற்கெதிரான குற்றமான<br>» வன்புணர்வு<br>» பாலியல் அடிமைத்தனம்<br>» திணிக்கப்பட்ட விபசாரம்<br>» பலவந்தமான கர்ப்பம்<br>» திணிக்கப்பட்ட மலட்டுத்தன்மை<br>» வேறுவடிவங்களிலான பாலியல் வன்முறை | மனிதகுலத்திற்கெதிரான குற்றமான<br>» கொலை[13]<br>» அழித்தொழித்தல்[14]<br>» அடிமைப்படுத்தல்<br>» சிறைப்படுத்தல்<br>» சித்திரவதை<br>» கொடுமை<br>» வேறு மனிதாபிமானமற்ற செயல்கள் |

**இனப்படுகொலை** (உறுப்புரை 6, ரோம் சட்டம்)

கீழே பட்டியலிடப்பட்டுள்ள குறிப்பிட்ட செயல்கள்/ அடியிலுள்ள குற்றங்கள் ஒரு தேசிய, மொழிவாரி, இன அல்லது மத குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ அழித்தொழிக்கும் எண்ணத்தோடு புரியப்படும்போது இனப்படுகொலையாக அமையும்

» அக் குழு உறுப்பினர்களைக் கொல்லுதல் உ.ம்: வன்புணர்வு செய்து பின்னர் கொல்லுதல்

» குழு உறுப்பினர்களுக்கு பாரதூரமான உடல் அல்லது உள தீமையை ஏற்படுத்துதல் உ.ம்: வன்புணர்வு

» அக்குழுவினரை அழித்தொழிக்கும் நோக்கம் கொண்ட வாழ்க்கை நிலைமைகளை உண்டுபண்ணுதல்

» அக்குழுவில் பிறப்புகளைத் தடுக்கும் நோக்கம் கொண்ட நடவடிக்கைகளை விதித்தல்

» அக்குழுவின் பிள்ளைகளை பலவந்தமாக இன்னொரு குழுவிற்கு மாற்றியனுப்புதல்.

---

13 ஊஸ்ட்டர்வெல்ட் வி.(2012)'சிராலியோனுக்கான சிறப்பு நீதி மன்றத்தில் பால்நிலை மற்றும் சால்ஸ் டெயிலர் வழக்கு', விலியம் மற்றும் மேரி பெண்கள் மற்றும் சட்டம் சஞ்சிகை 19,1:6–33.

14 உதாரணமாக, குடிமக்களை பெருவாரியாகக் கொன்றொழிப்பதன் ஓர் அங்கமாக சிவிலியன் மக்களை ஒன்றாகச் சேர்த்தல், அவர்களை தடுத்து வைத்தல், ஆடைகளைக் களைதல், பிறப்புறுப்புப் பகுதியில்(வேறு பகுதியிலும்) சாகும் வரை அடித்தல்

அடியிலுள்ள குற்றங்களை விசாரிக்கும்போதும் ஆவணப்படுத்தும் போதும் கவனம் செலுத்தவேண்டிய முக்கிய விடயங்கள்:

» ஒவ்வொரு அடியிலுள்ள குற்றத்திற்கும் நிரூபிக்கவேண்டிய விசேட அம்சங்கள் (உ.ம்: வன்புணர்வு, பாலியல் அடிமைத்தனம், சித்திரவதை, கொடுமை) பின்னிணைப்பு 1 இல் காணப்படும் சான்று செயல் நூலில் விளக்கப்பட்டுள்ளன.

» பாலியல் வன்முறை ஏனைய கொடுமைகளிலிருந்து தனித்து ஆவணப்படுத்தப்பட முடியாது. எனவே செயற்பாட்டாளர்கள் பாலியல் வன்முறைகளையும் அதே தாக்குதலில் அல்லது சூழ்நிலையில் புரியப்பட்ட ஏனைய குற்றங்களையும் ஆவணப்படுத்த ஊக்குவிக்கப்படுகின்றனர்.

» மேலும், உண்மைகள் அதனை ஆதரித்து நிற்குமாயின், செயற்பாட்டாளர்கள் பாலியல் வன்முறை நடத்தைகளை பட்டியிலிடப்பட்ட பாலியல் வன்முறையின் கீழும் ஏனைய குற்றங்களின் கீழும் விசாரித்து ஆவணப்படுத்துமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். இது, சர்வதேசச் சட்டத்தின் கீழான ஒரு குற்றம் என்ற வகையில் அத்தகைய நடத்தை வேறொரு வடிவத்திலான குற்றவியல் வன்முறை என்பதையும் பெருமளவிலான கொடுஞ்செயல்களின் பின்னணியில் புரியப்படும் வேறுகுற்றங்களிலிருந்து வேறுபட்டதொன்றல்ல என்பைதயும் எடுத்துக்காட்டி பாலியல் வன்முறை நடத்தைக்கான பொறுப்புக்கூறலை அதிகரிப்பதற்கு உதவக்கூடும். இது, ஒரு குறிப்பிட்ட தீமையின் தன்மை சரியாக சித்தரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுவத உறுதி செய்வதற்கும் உதவக்கூடும்.இதனை அடைவதற்கு, செயற்பாட்டாளர்கள் பாலியல் வன்முறைக் குற்றங்களை மட்டுமின்றி, எல்லா அடியிலுள்ள குற்றிங்களினதும் வரைவிலக்கணங்களை நன்குஅறிந்திருத்தல் வேண்டும் என்பதோடு, விசாரணையின் போது அக்குற்றங்களின் அம்சங்களை நிறுவுவதற்கு உதவும் உண்மைகளை தேடவும் வேண்டும். உதாரணமாக, வன்புணர்விற்கு (அல்லது வேறு பாலியல் வன்முறைக் குற்றத்திற்கு) பலியான ஒருவர் ஒரு குறிப்பிட்ட இனக் குழுவின் ஓர் உறுப்பினராகவிருப்பின், செயற்பாட்டாளர் பலியானவரின் இனம் அல்லது பாலிநிலை காரணமாகத்தான் அவர்/அவள் மீது பாலியல் வன்முறை பிரயோகிகப்பட்டதா என்பதை பரிசீலிக்க வேண்டும். ஏனெனில், அது ஒரு மேலதிக அடியிலுள்ள குற்றம் என்ற வகையில் ஒரு கொடுஞ்செயல் என்பதை நிரூபிக்க உதவும்.

» ரோம் சட்டம், ICTY மற்றும் ICTR சட்டங்கள் (சர்வதேச குற்றவியல் நியாயசபைகளுக்கான பொறிமுறைகள் -மற்றும் SCSL சட்டங்கள˙ MICT)

» ஆகியன "ஏனைய மனிதாபிமானமற்ற செயல்களான" மனிதகுலத்திற்கெதிரான குற்றங்களுக்கு ஏற்பாடு செய்கின்றன. இக்

» குற்றம் விசேடமாக பட்டியலிடப்படாத ஏனைய எல்லா குற்றவியல் செயல்களுக்குமான ஒரு எஞ்சியதாக அல்லது அனைத்தையும் உள்ளடக்குவதொன்றாகவிருக்கும். SCSL இல் இக்குற்றம் பலவந்தப்படுத்தி திருமணம் செய்யும் நடத்தையை விசாரித்தல், அதற்கெதிராக வழக்குத் தொடுத்தல் மற்றும் இறுதியில் குற்றவாளியாக தீர்ப்பளித்தல் ஆகியவற்றுக்கான அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டது. பலவந்தமான திருமணத்திற்கு SCSL பின்னர் 'தாம்பத்திய அடிமைத்தனம்' என்ற சொற்றொடரை முன்மொழிந்தது.[15] 'ஏனைய மனிதாபிமானமற்ற செயல்களான' மனிதகுலத்திற்கெதிரான குற்றமாக வழக்குத் தொடுக்கக்கூடிய வேறு குற்றவியல் நடத்தைகள் பலவந்தமான கருக்களைப்பு மற்றும் பலவந்த நிர்வாணப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

» ரோம் சட்டமே பால்நிலை அடிப்படையில் கொடுமைப்படுத்தல் எனும் மனிதகுலத்திற்கெதிரான குற்றத்தை நிரல்படுத்திய முதலாவது சர்வதேச சட்டமாகும். சர்வதேச சட்டத்தின்கீழான மனிதப்படுகொலை நான்கு விசேட பிரிவினரை (தேசிய, மொழிவாரி, இன, அல்லது மத: (பகுதி B, பெட்டி5 ஐ பார்க்க) மாத்திரம் உள்ளடக்குவதனால், மனிதகுலத்திற்கெதிரான குற்றமாக பால்நிலை அடிப்படையிலான குற்றத்திற்கெதிராக[16] வழக்குத் தொடுத்தல் (i) பால்நிலை அடிப்படையில் பாரபட்சம் காட்டுதலிலிருந்து ஏற்படும் குற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட முடியும் (உதாரணம் தமது பாலியல் நாட்டத்திற்காக அல்லது எதிர்பாலார்போல் உடை உடுத்துபவர் போன்ற பால்நிலை அடையாளத்திற்கு அமைய நடந்துகொள்ளாமைக்காக இலக்கு வைக்கப்படும் LGBTI மக்கள் மீதான கொடுமை) அல்லது (ii) பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வடிவத்திலான தீங்கினைக் கொண்டுள்ள செயல்கள் (உ.ம் ஒரு குறிப்பிட்ட அரசியல் குழுவின் உறுப்பினர்களாக இருக்கின்றமைக்காக இலக்கு வைக்கப்படும் பெண்கள் மீதான பாலியல் அடிமைப்படுத்தல் அல்லது வன்புணர்வு)

---

15 SCSL-04-15-A ஆம் இலக்க, புரட்சிகர ஐக்கிய முன்னணி (RUF)வழக்கு என அறியப்படும் வழக்குத் தொடுநர் எதிர் ஐசா ஹஸன் சேசே, மொரிஸ் கெலொன் மற்றும் ஒகஸ்டின் கெபோ வழக்கில் SCSLதீர்ப்பு – 2009 ஒக்டோபர் 26 ஆம் திகதி மேன்முறையீட்டு பிரிவினால் உறுதி செய்யப்பட்டது - பாலியல் அடிமைப்படுத்தலை ஒரு சர்வதேச அல்லது கலப்பு நியாய சபையில் மனித குலத்திற்கெதிரான குற்றமாகவும் வேறு மனிதாபிமானமற்ற செயல்களின் மனிதகுலத்திற்கெதிரான குற்றமாகவும் முதன் முதலாக கொண்டு வந்தது.( SCSL சட்டம் பலவந்த திருமணத்தை தெளிவாக தடைசெய்யவில்லை. SCSL-03-01-T ஆம் இலக்க வழக்குத் தொடுநர் எதிர் சார்ல்ஸ் டெய்லர் வழக்கின் 2012மே 18 ஆம் திகதிய தனது திருப்புமுனைத் தீர்ப்பில் SCSL பாலியல் அடிமைப்படுத்தல் பற்றிய சர்வதேச சட்ட வரைவிலக்கணத்தை உறுதிப்படுத்தியதோடு, "தாம்பத்திய அடிமைத்தனம்" (அடிமைப்படுத்தலின் மூலம் பாலியல் அடிமைத்தனம் மற்றும் பால்நிலை வடிவிலான பலவந்த தொழில் ஆகியவற்றின் ஒரு கூட்டு) சொற்றொடர் முன்னர் பலவந்த திருமணமென்று குறிப்பிடப்பட்டதற்கு பதிலாக பயன்படுத்தப்பட வேண்டுமென முன்மொழிந்தது. ஊஸ்டவெல்ட், வெலேரி,"சீராலியோனுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் பால்நிலை மற்றும் சார்ல்ஸ் டெய்லர் வழக்கு, வில்லியம் மற்றும் மேரி பெண்கள் மற்றும் சட்டம் சஞ்சிகை,19/1(2012)இ6–33.

16 ரோம் சட்டம் பால்நிலை என்பதற்கு சமூகத்தின் சூழலில் ஆண் மற்றும் பெண் என்ற இருபாலாரென்று வரைவிலக்கணம் தருகிறது என்பதை அவதானிக்க. ரோம் சட்டம், உறுப்புரை 7(3) ஐப் பார்க்க.

## *ஒரு குறிப்பிட்ட குற்றத்தை சர்வதேச சட்டத்தின்கீழான ஒரு குற்றம் என்ற மட்டத்திற்கு உயர்த்தும் நியாயாதிக்க நிபந்தனைகளை பூர்த்தி செய்யும்பொதுவான அம்சங்கள்...*

*(ii) பகுதி B: பொதுவான வகை குற்ற அம்சங்கள்*

*'எந்தச் சூழ்நிலையில் அடியிலுள்ள குற்றம் புரியப்பட்டது?'*

மூன்று வகை சர்வதேச குற்றத்தில் - யுத்தக் குற்றம், மனிதகுலத்துக்கெதிரான குற்றம் மற்றும் இனப்படுகொலை – ஒவ்வொன்றுக்கும் பகுதி A இல் குறிப்பிடப்பட்ட அச் செயல்களுடன்/அடியிலுள்ள குற்றத்துடன் தொடர்புபட்ட அம்சங்களுக்கு மேலதிகமாக நிரூபிக்கப்படவேண்டிய ஒருசில பொதுவான அம்சங்கள் உண்டு.

பொதுவான அம்சங்கள் ஒரு குறிப்பிட்ட குற்றத்தை சர்வதேச சட்டத்தின் கீழான ஒரு குற்றம் என்ற மட்டத்திற்கு உயர்த்தும் நியாயாதிக்க நிபந்தனைகளைப் பூர்த்திசெய்வதோடு, பின்புல சூழ்நிலைகள் இச்செயல் நிகழ்வதற்கான ஒரு ஈர்ப்பு எல்லையை எய்த வேண்டும்.

பாலியல் வன்முறை குற்றங்களை சர்வதேச குற்றவியல் சட்டத்தின் ஒரு மீறலாக சாட்டுவதற்கு செயற்பாட்டாளர் அணியினால் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் அக்குற்றம் இடம்பெற்ற சூழ்நிலைகள் பற்றிய தகவல்களை உள்ளடக்க வேண்டும். இத் தகவல்கள் யுத்த குற்றங்கள், மனிதகுலத்துக்கெதிரான குற்றங்கள் அல்லது இனப்படுகொலைக்கு பொருந்தும் பொதுவான அம்சங்களுக்கு ஆதாரமாக இருத்தல் வேண்டும். இக்குற்றங்கள் அடிக்கடி ஒன்றின்மேல் ஒன்று பரவிச் செல்வதோடு, ஒரே பாலியல் வன்முறை செயல், உதாரணம். வன்புணர்வு – சட்ட முறைமையைப் பொறுத்து – ஒரே நேரத்தில் யுத்த குற்றமாகவும் மனிதகுலத்துக்கெதிரான குற்றமாகவும் இனப்படுகொலையாகவும் விசாரிக்கப்பட்டு வழக்கு தொடரப்படலாம்.

**பெட்டி 5**

### யுத்தக் குற்றங்கள், மனிதகுலத்துக்கெதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியவற்றின் பொதுவான அம்சங்கள்.

யுத்த குற்றங்கள், மனிதகுலத்துக்கெதிரான குற்றங்கள் அல்லது இனப்படுகொலைச் செயல்களை நிரூபிப்பதற்கு, ரோம் சட்டத்தில் கோவையிடப்பட்டவாறு பின்வரும் பொதுவான அம்சங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்பதை நிரூபிப்பதற்கு தாம் போதுமான தகவல்களைத் திரட்டுவதை உறுதி செய்துகொள்ள வேண்டும்:

#### யுத்தக் குற்றங்கள்

1. தடைசெய்யப்பட்ட அடியிலுள்ள செயல் (பகுதி A, பெட்டி 4 ஐ பார்க்க) 'ஒரு ஆயுத மோதல் சூழ்நிலையிலும் அதனோடு தொடர்புபட்டும் புரியப்பட்டது (சர்வதேச அல்லது சர்வதேசமல்லாத)
2. நேரடி குற்றமிழைத்தவர் ஆயுத மோதல் நிலவுவதை நிரூபிக்கும் உண்மைச் சூழ்நிலைகளை அறிந்திருந்தார்.

#### மனித குலத்திற்கெதிரான குற்றங்கள்

1. தடைசெய்யப்பட்ட அடியிலுள்ள செயல் (பகுதி A, பெட்டி 4 ஐ பார்க்க) :
   - 'பரவலான அல்லது திட்டமிட்ட'
   - ஏதேனும் சிவலியன் மக்கள் குழுவிற்கெதிராக நடத்தப்பட்ட ஒரு தாக்குதலின் பகுதியாக புரியப்பட்டது.
2. நேரடி குற்றமிழைத்தவர் அச்செயல் தாக்குதலின் பகுதியாக அமையுமென்பதை அறிந்திருந்தார் அல்லது அவ்வாறு சித்தம் கொண்டிருந்தார்.

#### இனப்படுகொலை

தடைசெய்யப்பட்ட அடியிலுள்ள செயல் (பகுதி அஇ பெட்டி 4 ஐ பார்க்க) :

1. பின்வரும் குழுக்களை முழுமையாக அல்லது பகுதியளவு அழித்தொழிக்கும் எண்ணத்துடன் புரியப்பட்டது.
2. ஒரு தேசிய, மொழிவாரி, இன அல்லது மதக் குழு

**யுத்தக் குற்றங்களை** விசாரிக்கும் போதும் ஆவணப்படுத்தும் போதும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள்:

» வன்புணர்வும் ஏனைய வடிவங்களிலான பாலியல் வன்முறைகளும் சர்வதேச மற்றும் சர்வதேசமல்லாத ஆயுத மோதல்களில்[17] தடை செய்யப்பட்டுள்ளதெனினும், வெவ்வேறு சட்ட வரைச்சட்டகங்கள் இவ்விருவகை ஆயுத மோதல்களகளாக அமைவது எது என்பது பற்றி வெவ்வேறு விதமான வரைவிலக்கணங்களை தருகின்றன. சர்வதேச மனிதாபிமானச் சட்டம் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்படும் இரு வகை ஆயுத மோதல்களைக் குறிப்பிடுகிறது:

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகளுக்கிடையே (ஆயுத மோதலின் காரணத்தையும் தீவிரத் தன்மையையும் பொருட்படுத்தாது) ஆயுதப் பலத்தைப் பிரயோகிப்பதற்கான முடிவு மேற்கொள்ளப்படும்போது சர்வதேச ஆயுதமோதல் (IACs) நிலவுகிறது.
- சர்வதேசமல்லாத ஆயுத மோதல்கள் (NIACs) என்பது அரசாங்க ஆயுதப் படைகளுக்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அரசு சாராத ஆயுதக் குழுக்களுக்குமிடையே அல்லது அத்தகைய ஆயுதக் குழுக்களுக்கிடையே ஓர் அரசின் ஆள்குலத்தினுள் நீண்டகாலம் நடைபெறும் ஆயுத மோதலாகும். அவ்வாயுத மோதல் ஒரு குறைந்த பட்ச அளவு தீவிரத் தன்மையயை அடைய வேண்டுமென்பதோடு, மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புகள் ஒரு குறைந்தபட்ச ஒழுங்கமைப்பை காட்டவேண்டும்[18]

» ஓர் ஆயுத மோதல் எப்போது தொடங்கியது, எப்போது முடிவுற்றது என்பது தொடர்பான தகவல்களையும் குறிப்பாக அயுதமோதலின் தீவிரத் தன்மை மற்றும் நிழ்ந்த காலம் ஆகியன பற்றிய தகவல்களையும் திரட்டுவது முக்கியமாகும். கலவரங்கள், சமூக எழுச்சி மற்றும் பொலீஸ் நடவடிக்கைகளில் பொதுவாக உளநாட்டு ஆயுத மோதலாக அமைவதில்லை.

» மனிதாபிமானச் சட்டத்தின்கீழ் (IHL) பாலியல் வன்முறைக்கெதிரான பாதுகாப்பை எதிர்த்து நிற்கும் ஆயுதப் படைகளின் உறுப்பினர், போரிட முடியாத ஆட்கள் அல்லது மோதலல் நேரடியாகப் பங்குப்பற்றாத குடிமக்கள் ஆகியோருக்கு மாத்திரம் மட்டப்படுத்தப்படவில்லை. எனவே, ஏனைய யுத்தக் குற்றங்களைப் போலன்றி, பாலியல் வன்முறைக்குப் பலியான ஒருவர் ஒரு சிவிலியன் அல்லது வேறு பாதுகாக்கப்பட்ட ஆள் என்பதை நிரூபிக்கத் தேவையில்லை. யுத்தக் குற்றங்களுக்கான பொது அம்சங்கள் பூர்த்தி செய்யப்படுமளவிற்கு( பெட்டி 5 ஐ பார்க்க), ICC ரோம் சட்டத்திற்கமைய, பாலியல் வன்முறைச் செயலொன்று பலியானவரது அந்தஸ்து என்னவாகவிருப்பினும் ஒரு யுத்தக் குற்றமாக அமையும். குறிப்பாக, IACs சூழ்நிலையிலோ அல்லது NIACs சூழ்நிலையிலோ ஒரே ஆயுதக் குழுவின் உறுப்பினர்கள் மீது இழைக்கப்படும் வன்புணர் மற்றும் பாலியல் அடிமைத்தனம் ஆகியன ரோம் சட்டத்தின் கீழ் ஒரு யுத்தக்குற்றமாக அமையும்.[19]

---

17 ககியோலி,ஜி (2014) ‘ஆயுத மோதல்களில் பாலியல் வன்முறை: சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் மனித உரிமைகள் சட்டம் ஆகியவற்றின் மீறல் செஞ்சிலுவைச் சங்க சர்வதேச மீளாய்வு 96, 894: 511–313.

18 செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு (2008) ‘ஆயுத மோதல் என்ற சொற்றெடர் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தில் எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது: கருத்துப் பத்திரம், ஜெனீவா: ICRC.p.5

19 2017 ஜனவரி 4 ஆம் திகதிய வழக்குத் தொடுநர் எதிர் பொஸ்கோ என்டகண்டா ICC விசாரணை பிரிவு VI வழக்கில், ஒரே ஆயுதப் படையின் உறுப்பினர்கள் வன்புணர்வு மற்றும் பாலியல் அடிமைத்தனம் ஆகிய யுத்தக்குற்றங்களில் பலியாவோராக இருப்பதிலிருந்து நீக்கப்படவில்லையென்றும் எனவே நீதிமன்றம் கொங்கோ நாட்டுப்பற்றாளர் ஒன்றிய(UPC)/ கொங்கோ விடுதலைக்கான நாட்டுப்பற்றுப் படை (FPLC) ஆகியவற்றின் உறுப்பினர்களால் 15 வயதிற்குக் குறைவான UPC/FPLC சிறுவர் போராளிகளுக்கெதிராக இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் வன்புணர்வு அத்துடன்/அல்லது பாலியல் அடிமைப்படுத்தல் குற்றச் செயல்கள்மீது நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்க முடியும் என்றும் தீர்ப்பளித்தது. அதேபோன்று, கொலம்பிய உள்நாட்டு ஆயுத மோதலின்போது தமது ஆயுதக் குழுவினராலேயே பெண் போராளிகள் பலவந்தமாக கரு களைப்பு செய்யப்பட்டமை அவர்களது அடிப்படை உரிமைகளின் மீறலாகவும் யுத்தக் குற்றமாகவும் அமைவதாக மெடலின் நீதி மற்றும் சமாதான மன்றம் தெரிவித்தது. ஸ்பானிய http://www.saladejusticiaypazmedellin.com/comunicadoprensa/c21/16.12.2015-sentencia-ejercito-revolucionario-guevarista-olimpo-de-jesus-sanchez-caro-y-otros.pdf இல் கிடைக்கும் ஒலிம்பொடே ஜீசஸ் சன்செஸகாரோ வன் 2015 டிசெம்பர் 16 ஆம் திகதி வழக்கைப் பார்க்க.

# கலவரங்கள், சமூக எழுச்சி மற்றும் பொலிஸ் நடவடிக்கைகள் ஆகியன பொதுவாக சர்வதேச ஆயுத மோதலாக அமைவதில்லை

**மனித குலத்திற்கெதிரான குற்றங்களை** விசாரிக்கும்போதும் ஆவணப்படுத்தும்போதும் கவனத்திற்கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள்:

» ரோம் சட்டத்தின் கீழ், மனிதகுலத்திற்கெதிரான குற்றங்கள் ஆயுத மோதலுடன் தொடர்புபட்டிருக்க வேண்டியதில்லை – அவை சமாதான காலத்திலும் இடம்பெறலாம். எனினும், யுத்தக் குற்றங்களும் மனித குலத்திற்கெதிரான குற்றங்களும் ஒரே அல்லது ஒத்த சந்தர்ப்பங்களில் இழைக்கப்படுவது வழமையானதாகும்.

» அச் செயல் ஒரு சிவிலியன் மக்கள் குழுவினருக்கு எதிரான பரந்தளவு அல்லது திட்டமிட்ட தாக்குதலின் ஓர் அங்கமாக அமைதல்வேணடும் - அது இவ்விரண்டினதும் ஓர் அங்கமாக இருக்கத் தேவையில்லை. அது பரந்தளிவனதாகவும் திட்டமிட்டதாகவும் இருக்கும்வரை, அத்தாக்குதல் ஆயுதமேந்தியதாக அல்லது இராணுவ தாக்குதலாக இருக்கத் தேவையில்லை.[20] 'பரந்தளவு' என்பது பெருமளவினதாகும் என்று வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. பல பலியானோருக்கெதிராக இத்தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்பது இதன் பொருளாகும். 'திட்டமிட்ட' என்ற எண்ணக்கரு, முன்னரே உருவாக்கப்பட்ட ஒரு திட்டத்தை அல்லது கொள்கையைத் தொடர்ந்து தாக்குதல் இடம்பெறும் என்று பொருள்படும்.[21]

» அது மனித குலத்திற்கெதிரான ஒரு குற்றமாக அமைவதற்கு, பாலியல் வன்முறை மட்டும்தான் பரந்தளவானதாகவும் திட்டமிட்டதாகவும் இருக்க வேண்டுமென்றில்லை அது சிவிலியன் மக்கள் குழுவொன்றிற்கு எதிரான தாக்குதலாக[22] இருக்கவேண்டும். உண்மையில், தனியொரு வன்புணர்வு குற்றச் செயல் அல்லது வேறு வடிவிலான பாலியல் வனமுறை ஒரு சிவிலியன் மக்கள் குழுவிற்கு எதிராக இழைக்கபடும் பரந்தளவிலான அலலது திட்டமிட்ட தாக்குதலின் ஓர் அங்கமாக இழைக்கப்படின், அது மனிதகுலத்திற்கெதிரான ஒரு குற்றமாக அமையும். பெருமளவிலான பாலியல் வன்முறை தொடர்பான சான்றுகளும் இத்தாக்குதலை நிரூபிக்க உதவும்.

» ரேராம் சட்டம் அக்குற்றத்தைப் புரிவதற்கான ஓர் அரச அல்லது நிறுவன கொள்கைக்கமைவாக அல்லது அதனை முன்னெடுக்கும் வகையில் அத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதை நிரூபிக்கும் சான்றுகளை வேண்டி நிற்கிறது.[23] இத்தேவைப்பாடு செயற்பாட்டாளர் தகவல் திரட்டும் நியாயாதிக்கங்களில் தேவைப்படலாம், அல்லது தேவைப்படாது போகலாம் எனினும் மனித குலத்திற்கெதிரான குற்றம் இழைக்கப்பட்டிருக்கலாம் என்ற முடிவிற்கு வருவதற்குப் போதுமான தகவல்கள் திரட்டுவதை உறுதிப்படுத்திகொள்ளுமுகமாக செயற்பாட்டாளர் தகவல் திரட்டும் சந்தர்ப்பச் சூழ்நிலையில் சட்டரீதியாக தேவைப்படுவது என்ன என்பதை அறிந்திருப்பது செயற்பாட்டாளரின் பொறுப்பாகும். சம்பந்தப்பட்ட நியாயாதிக்கத்தில் இது ஒரு சட்டத் தேவைப்பாடாக இல்லாதிருக்கும்போதுகூட, அச் செயல் ஒரு சிவிலியன் மக்கள் குழுவிற்கு எதிராக நடத்தப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கு அரச அல்லது நிறுவன கொள்கை தொடர்பான சான்றுகளைத் திரட்டுவது பயனுள்ளதாக அமையும்.

---

20 ICC குற்றங்களின் அம்சங்கள், Art7, அறிமுகம் பந்தி 3

21 சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான தயார்ப்படுத்தல் ஆணைக்குழு, குற்றங்கள் தொடர்பான தொழிற்படு குழு, http://www.iccnow.org/documents/3rdSesProposalArticle7.pdf.

22 ரோம் சட்ட உறுப்புரை 7 இச்சந்தர்ப்ப சூழ்நிலையில் 'தாக்குதல்' என்பதற்கு மனித குலத்திற்கு எதிரான குற்றங்களான செயல்களின் பல நிறைவேற்றங்களை உள்ளடக்கும் ஒரு நடத்தைத் தொடர் என வரைவிலக்கணம் தருகிறது.

23 சர்வதேச வழமைச் சட்டத்தின் கீழ், இத்தேவைப்பாடு மனித குலத்திற்கெதிரான குற்றங்களின் ஒரு பொதுவான அம்சமாகக் கருதப்படவில்லை. சிறப்பு அல்லது கலப்பு நீதிமன்றங்கள் பற்றிய சட்டங்கள் இம்மேலதிக தேவைப்பாட்டை உள்ளடக்கவில்லை. மனிதகுலத்திற்கெதிரான ICC குற்ற அம்சங்களில் இத்தேவைப்பாடு சேர்க்கப்பட்டிருப்பது ICC நியாயாதிக்கத்திற்கு உட்படக்கூடிய மனித குலத்திற்கெதிராக குற்றங்களுக்கு ஒரு எல்லை ஏற்படுத்துகிறது.

*...தனியொரு வன்புணர்வு குற்றச்செயல் ..... ஒரு சிவிலியன் மக்கள் குழுவிற்கு எதிராக நடத்தப்பட்ட ஒரு பரந்தளவு அல்லது திட்டமிட்ட தாக்குதலின் ஓர் அங்கமாக இழைக்கப்பட்டால், அது மனித குலத்திற்கெதிரான ஒரு குற்றமாக அமையும்*

**இனப்படுகொலை** செயற்பாடுகளை விசாரிக்கும்போதும் ஆவணப்படுத்தும்போதும் கவனத்திற்கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள்:

» மனிதகுலத்திற்கெதிரான குற்றங்கள் ஆயுத மோதலுடன் தொடர்புபட்டிருக்க வேண்டியதில்லை – அவை சமாதான காலத்திலும் இடம்பெறலாம்.

» இனப்படுகொலையின் குறிப்பிட்ட அடியிலுள்ள குற்றங்கள் ஒரு தேசிய, மொழிவாரி, இன அல்லது மத குழுவினரை முழுமையாக அல்லது பகுதியளவில் அழித்தொழிக்கும் திட்டவட்டமான எண்ணத்துடன் இழைக்கப்படுவதை இனப்படுகொலை வேண்டி நிற்கிறது. குற்றம் எவ்வளவு தீவிரமானதெனினும், பல பெருமளவிலன கொலைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் வேறு குற்றங்களை இனப்படுகொலையாகக் கருத முடியாது.

» இனப்படுகொலை என்பது வெறுமனே பெருமளவு கொலையைக் குறிப்பதில்லை. இனப்படுகொலையானது, வன்புணர்வு மற்றும் ஏனைய வடிவலான பாலியல் வன்றைகள் மூலம் அவை ஒரு குறிப்பிட்ட குழுவினரை முழுமையாக அல்லது பகுதியளவில் அழித்தொழிக்கும் திட்டவட்டமான எண்ணத்தோடு இழைக்கப்படுமளவிற்கு – நிறைவேற்றப்படும் (உ.ம்: வன்புணர்வும் ஏனைய வடியிலான பாலியல் வன்முறைகளும் ஒரு குறிப்பிட்ட குழுவைச்சேர்ந்த மக்கள் குழந்தை பெறுவதை அசாத்தியமானதாக்குகிறது, எனவே அது 'திட்டவட்டமான எண்ணம்' என்ற அம்சத்தை பூர்த்திசெய்கிறது.)

» பாலியல் வன்முறை பொவாக 'ஒரு குழுவின் உறுப்பினர்களுக்கு பாரதுாரமான உடல் மற்றும் உள தீங்கை ஏற்படுத்துதன் மூலம்' இனப்படுகொலையின் அடியிலுள்ள குற்றச் செயலாக இருக்கக் காணப்படுகிறது. இருப்பினும், பாலியல் வன்முறை வேறு அம்சங்களின் மூலமும் இனப்படுகொலையாக அமையும். உதாரணமாக, "குழுவின் உறுப்பினர்களைக் கொல்லுதல்" என்ற அம்சம் முதலில் வன்புணர்வு செய்யப்பட்டு கொல்லப்படும் அல்லது பாலியல் வன்முறையின் விளைவாக இறக்கும் பலியானோர் விடயத்தில் பூர்த்தி செய்யப்படலாம். மேலும், பாலியல் உறுப்புகளை சிதைவுறுத்தல், மலட்டுத்தன்மையாக்குதல், பலவந்த குடும்பக் கட்டுப்பாடு, பாலியல் வேறுபடுத்தல் மற்றும் திருமணங்களைத் தடைசெய்தல் ஆகியனவும் இலக்குக் குழுவினுள் 'குழந்தை பிறப்புகளை தடுப்பதை நோக்கமாகக்கொண்ட நடவடிக்கைகளாக அல்லது அக்குழுவை அழித்தொழிப்பபதற்கு திட்டமிடப்பட்ட வாழ்க்கை நிலைமைகளாக கருதப்படலாம். வன்புணர்வு மூலமான பலவந்தமான கர்ப்பம் பலியானவர் தனக்கு/ தாயின் குழுவிற்கு சேராமல் போகும் ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கும்போது இனப்படுகொலையாக அமையும். பிள்ளகளைக் கடத்துதல் 'பிள்ளைகளை பலவந்தமாக ஒரு குழுவிடமிருந்து இன்னொரு குழுவிற்கு மாற்றி அனுப்பும்' அம்சத்தைப் பூர்த்தி செய்யும்.

» இனப்படுகொலை புரிவதற்கான நேரடி மற்றும் பகிரங்க துாண்டுதலும் பாலியல் வன்முறையை ஊக்குவிக்கும் ஒரு குற்றமாகும் என்பதோடு, அது சர்வதேச வழமைச் சட்டம் மற்றும் ரோம் சட்டம் (உறுப்புரை.25(3)(e) ஆகியவற்றின் கீழ் அவ்வாறு குற்றமாக்கப்படுகிறது.[24]

» இனப்படுகொலை ஒரு தனி மனிதருக்கு தீங்கிழைப்பதாக இருக்கும் போதுகூட அது ஒரு குழுவினருக்கு எதிரான குற்றமாகும்.

» குற்றமிழைப்பவர் அக்குற்றத்தைப் புரிகின்றபோது ஒரு குறிப்பிட்ட மனநிலையில் இருப்பதை இனப்படுகொலை வேண்டி நிற்கிறது: ஒரு குறிப்பிட்ட குழுவை உடல்ரீதியாக அல்லது உயிரியல் ரீதியாக அழித்தொழிக்கும் ஒரு விசேட மனநிலை. இனப்படுகொலை நிரூபிப்பதற்கு ஒரு எளிதான குற்றமல்ல. ஏனெனில், ஓர் குறிப்பிட்ட குழுவினரை முழுமையாவோ அல்லது பகுதியளவிலோ அழித்தொழிப்பதற்கான குறிப்பிட்ட நோக்கத்தை நிரூபிப்பது எப்போதும் சிரமமானதாகும்.

» சர்வதேச சட்டத்தின்கீழ், தேசிய, மொழிவாரி, இன அல்லது குழுக்கள் மட்டுமே இனப்படுகொலைக் குற்றங்களுள் அடக்கப்பட்டுள்ளன. (சில தேசிய நியாயாதிக்கங்கள் ஏனைய குழுக்களையும் சேர்த்துக்கொண்டிருக்கக்கூடும்). பாரபட்ச அடிப்படையில் - பால்நிலை, பாலியல் நாட்டம் அல்லது அரசியல் அபிப்பிராயம் - ஏனைய குழுக்களை இலக்குவைத்தலும் மனித குலத்திற்கெதிரான கொடுஞ்செயல் குற்றமாக அமையும். மனித குலத்திற்கெதிரான அழித்தொழிப்புக் குற்றம் எண்ணற்ற ஆட்களை கொல்வதை உள்ளடக்கும் இனப்படுகொலையுடன் ஒன்று கலந்து செல்லலாம்.

---

24 டிம்மர்மேன், டப்ளியு கே, (2005) 'குரோத பிரசாரங்களுக்கும் இனப்படுகொலைக்கான துாண்டுதலுக்குமிடையிலான தொடர்பு: சர்வதேச சட்டத்தில் குரோத பிரசாரங்களை குற்றமாக்குவதைநோக்கிய ஒரு புதிய நோக்கு? சர்வதேச சட்டம் பற்றிய லெய்டன் சஞ்சிகை 18, 2:257–282.,

*இனப் படுகொலை தனிமனிதர்களுக்கு தீங்கிளைப்பதாக இருப்பினும், அது ஒரு குழுவினருக்கு எதிரான குற்றமாகும்.*

பெட்டி 6

**கேஸ் லோ உதாரணங்கள் - இனப்படுகொலையாக பாலியல் வன்முறை**

ICTR தான் வன்புணர்வும் பாலியல் வன்முறையும் இனப் படுகொலையாக அமையலாம் என்பதை 1998 செப்டெம்பர் 02 திகதி வழக்குத் தொடுநர் எதிர் அக்கயேசு வழக்கின் தனது தீர்ப்பில் (வழக்கு இல.ICTR96- 4-T) அங்கிகரித்த முதலாது சர்வதேச நீதிமன்றமாகும். வன்புணர்வும் பாலியல் வன்முறையும் பலியாவோர் மீது நிச்சயமாக கடும் உடல் மற்றும் உள தீமைகளை ஏற்படுத்துவதாக அமைகிறது எனக் ICTR கண்டது பாலியல் வன்முறை அழித்தொழிப்பு நடைமுறையின் ஓர் உள்ளார்ந்த அம்சமாகும், குறிப்பாக அது டுட்சி பெண்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டதோடு, அப்பெண்களதும் முழு டுட்சி குழுவினதும் அழிவிற்கு அது குறிப்பாக பங்களிப்புச் செய்தது. (பந்தி 731)

உள்நாட்டு மட்டத்தில் ஜூண்டா போராளிக் குழுவின் முன்னாள் தலைவரும், கௌத்தமாலா குடியரசின் முன்னாள் ஜனாதிபதியுமான ஜோஸ் எப்றெயின் றியோஸ் மொண்ட்டிற்கு 1,771 இக்சில் சுதேச மக்களின் (ஒரு மாயான் இனக் குழு) கொலை மற்றும் சித்திரவதை மற்றும் ஆயிரக்கணக்கான அம்மக்களின் பலவந்தமான இடம்பெயர்வு ஆகியவற்றில் அவரது பொறுப்பிற்காக இனப்படுகொலை மற்றும் மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளின்பேரில் 2013 மே மாதம் 10 ஆம் திகதி 80 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. நீதி மன்றம் தனது தீர்ப்பில் இராணுவ வீரர்களினால் இக்சில் பெண்கள் பெருமளவு வன்புணர்வு, நிர்வாணப்படுத்தல், பாலியல் அடிமைப்படுத்தல் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஆகியவற்றை அனுபவித்ததையும், இக் கர்ப்பிணி பெண்கள் வன்புணர்வு செய்யப்பட்டது மாத்திரமின்றி, அவர்கள் வயிற்றிலிருந்த சிசுக்கள் வயிற்றைப் பிளந்து எடுத்து அகற்றப்பட்டதையும், அப்பெண்களின் சாட்சியங்களையும் பால்நிலை அடிப்படையிலான குற்றங்களின் சர்வதேச நிபுணர்களின் சாட்சியங்களையும் சான்றாகக் கொண்டு உறுதிப்படுத்தியது. பாலியல் வன்முறைகளையும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளையும் இந்நீதிமன்றம் இனப்படுகொலையாக அமையும் குற்றச் செயல்களென இனங்கண்டதோடு, வன்முறை மூலம் பெண்களை உடல்ரீதியாக அடைந்துகொள்வது, அச்செயலினால் அவர்கள் கொல்லப்படுகிறார்களோ இல்லையோ, ஆண். பெண் இருசாராரையும் மனமுடையச் செய்யும் செயலாகுமென்பதோடு, அவர்களது தனித்துவத்தின் அடிப்படையையும் இக்சில் மாயா இனக்குழு உறுப்பினர்களின் உடல்ரீதியான இனப்பெருக்கத்தையும் இல்லாதொழிக்க பங்களிப்புச் செய்யும் அம்சங்களுள் ஒன்றாக அமைவதாகவும் கண்டது.[25] இத்தீர்ப்புதான் முன்னாள் அரசத் தலைவரொருவர் இனப்பபடுகொலையாக மற்றும் மனித குலத்திற்கெதிரான குற்றங்களாக பாலியல் வன்முறைக் குற்றங்கள் மற்றும் பால்நிலை அடப்படையிலான வன்முறைகளுக்காக தண்டணை விதிக்கப்பட்ட முதலாவது தீர்ப்பாகுமென்பதோடு, கௌத்தமாலாவிலும் லத்தீன் அமெரிக்கா முழுவதும் இனப்படுகொலைக்கான முதலாவது குற்றத்தீர்ப்பாகும்.

*(iii) பகுதி இ: தொடர்பு அம்சங்கள் / பொறுப்புகளின் வகை*

*'யார் பொறுப்பு, எவ்வாறு?'*

'பொறுப்பின் வகைகள்' மேலே விபரிக்கப்பட்ட பல்வேறு குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது குற்றவியல் பொறுப்புகளை சாட்ட பிரயோகிக்கப்படும் சட்ட தத்துவங்களை விபரிக்கின்றது. இந்தப் பிரிவின் பின்னாலுள்ள அடிப்படைக் கோட்பாடு என்னவெனில், குற்றவியல் செயல்கள் தொடர்பான தகவல்களை(பகுதி அ) திரட்டுவது மற்றும் அதற்கு மேலதிகமாக குற்றவியல் செயல் புரியப்பட்ட சூழ்நிலை தொடர்பான தகவல்களைத் திரட்டுவது (பகுதி ஆ) போலவே, ஆவணப்படுத்தல் நடைமுறை அக்குற்றம் எவ்வாறு புரியப்பட்டது, இப்பாலியல் வன்முறைக் குற்றச் செயலை நிறைவேற்றுவதில் குற்றமிழைத்ததாகக் கூறப்படுபவரது (களது) வகிபாகத்தின் தன்மை யாது என்பவை தொடர்பான தகவல்களை திரட்டுவதையும் நோக்கமாகக் கொள்ளவேண்டும்.

25 பார்க்க: விமென்ஸ் லிங் வேல்வைட், கால்நிலை மற்றும் நீதி விருதுகள் வழக்கு: றியோஸ் மொண்ட் பந்தி 72 http://womenslinkworldwide.org/premios/interna-caso.php?lis=1%24%24-42BLXMn2mtpPXMBVvgB&idi=en. கிடைக்கும். 2013 ஏப்றிலிலில் விமென்ஸ் லிங் வேல்ட்வைட் சட்டத்தரணியொரவர் நீதி மன்றத்தின் முன் தோன்றி, கௌத்தமாலா இராணுவத்தினால் பெண்களும் பெண் பிள்ளைகளும் இலக்கு வைக்கப்பட்ட முறை தொடர்பான நிபுணத்துவ சாட்சி வழங்கினார். பார்க்க: https://vimeo.com/109211759.

பெட்டி 7

## தொடர்பம்சங்கள் / பொறுப்புகளின் வகை

ரோம் சட்டத்தில்[26] குறிப்பிடப்பட்ட கீழ் காணும் முக்கிய பொறுப்புகளின் வகைகளை நிரூபிப்பதற்கு செயற்பாட்டாளர்கள் பின்வருவனவற்றை எடுத்துக் காட்டுவதற்குப் போதுமான தகவல்களை தாம் திரட்டுவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

| பொறுப்புகளின் வகை | ரோம் சட்ட ஏற்பாடு | சான்றுத் தேவைப்பாடுகள் |
|---|---|---|
| கூட்டுக் குற்றமிழைப்பு | 25 (3) (a) | சர்வதேச சட்டத்தின் கீழான குற்றத்தைப் புரிவதற்கு சந்தேக நபர் ஒரு குழுவினருடன் ஒரு பொதுவான திட்டத்தை வகுத்தார்.[27] |
| பொது நோக்கங்கொண்ட பொறுப்பு | 25 (3) (d) | சந்தேக நபர் ஒரு பொதுவான நோக்கத்துடன் செயற்படும் குழுவினரால் இழைக்கப்பட்ட ஒரு குற்றத்திற்கு பங்களிப்புச் செய்கிறார். |
| மறைமுக குற்றமிழைப்பு | 25 (3) (a) | சந்தேக நபர் குற்றத்தின்மீது கட்டுப்பாடு பிரயோகித்தார், (உ.ம்: நேரடியாகக் குற்றமிழைப்பரின் அல்லது பொலிஸ் அல்லது இராணுவம் போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட அதிகார கட்டமைப்பின் விருப்பத்தின்மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிபபதன்மூலம்), நேரடி குற்றமிழைத்தவர் அக்குற்றத்தைப் புரியவேணடுமென எண்ணினார் என்பதோடு, குற்றத்தின்மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கு தனக்கு உதவிய சூழ்நிலைகள்றித்து அறிந்திருந்தார்.[28] |
| கட்டளையிடல் | 25 (3) (b) | கட்டளையிடுவதற்கும் அக்கட்டளை நிறைவேற்றப்படுமென எதிர்பார்ப்பதற்கும் சந்தேக நபருக்கு அதிகாரம் இருந்தது என்பதோடு, அக்கட்டளை விடுத்தல் குற்றத்தை அல்லது அடியிலுள்ள குற்றத்தைப் புரிவதில் கணிசமான பங்கொன்றை வகித்தது. . |
| வேண்டுதல்/ தூண்டுதல் | 25 (3) (b) | அக்குற்றத்தைப் புரிவதற்கு நேரடி குற்றமிழைத்தவரை சந்தேக நபர் ஊக்குவித்தார், தூண்டினார், ஊக்குவிப்பு வழங்கினார் அல்லது சம்மதிக்க வைத்தார். |
| துணைபோதல் | 25 (3) (c) | சந்தேக நபர் குற்றமிழைத்தவருக்கு நடைமுறை உதவி (உ.ம்: குற்றமிழைப்பதற்கான வழிவகைகளை வழங்கி) உற்சாகம் அல்லது தார்மீக ஆதரவு வழங்கினார். |
| கட்டளை பொறுப்பு[29] | 28 (a) | இராணுவ தளபதிக்கு (i) கீழ் உத்தியோகத்தர்கள் மீது கட்டுபாடு இருந்தது, (ii) கீழதிகாரிகள் குற்றம் புரிகிறார்கள் என்பதை அறிந்திருந்தார் அல்லது அறிந்திருக்கவேண்டும், (iii) தடுப்பதற்கு அல்லது தண்டிப்பதற்கு அல்லது விசாரணை செய்வதற்காக தகுதிவாயந்த அதிகார பீடத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு தவறிவிட்டார் அத்துடன் (iv) அதன் விளைவாக அக் குற்றம் இழைக்கப்பட்டது. |
| உயரதிகாரி பொறுப்பு | 28 (b) | (i)உயரதிகாரியும் நேரடி குற்றமிழைத்தவரும் உயரதிகாரி – கீழ் உத்தியோகத்தர் என்ற உறவைக் கொண்டவர்கள், (ii) கீழ் உத்தியோகத்தர்கள் குற்றங்கள் புரிகிறார்கள் என்பதை அறிந்திருந்தார் அல்லது அதனை எடுத்துக் காட்டும் தகவல்லை தெரிந்தே உதாசீனம் செய்தார், (iii) அக்குற்றங்கள் மேலதிகாரியின் பொறுப்பிற்கு அல்லது கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட செயல்களாகும். (iv) தடுப்பதற்கு அல்லது விசாரணை செய்வதற்காக தகுதிவாயந்த அதிகாரபீடத்திற்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான மற்றும் நியாயமான நடவடிக்கை எடுக்க மேலதிகாரி தவறிவிட்டார், (V) அதன் விளைவாக அக் குற்றம் இழைக்கப்பட்டது. |

26 சர்வதேச வழமைச் சட்டத்தின்கீழ் பொறுப்புகளின் வகைகள் வித்தியாசமானவையாகும் என்பதோடு, ரோம் சட்டத்தில் கோவையிடப்பட்டதைவிட விரிவானவையாகும் என்தை அவதானிக்க. உதாரணமாக, ICTY,ICTR மற்றும் SCSL ஆகியவற்றின் சட்டங்களின்கீழ் திட்டமிடுதல் ஒரு மேலதிக வகை பொறுப்பாகும் என்பதோடு, ICC தனது சட்டம் இவ்வகைப் பொறுப்பை உள்ளடக்குவதாக விளக்கமளிக்காவிடில், இச்சட்டங்களின்கீழ் தூண்டுதலுமாகும்.

27 சிறப்பு நீதிமன்றங்கள் கூட்டு குற்றவியல் முயற்சிகள் அல்லது ஒரு பொது திட்டம் அல்லது வடிவமைத்தலில் பங்கேற்பு என்று அழைக்கப்படும் தத்துவத்தின்கீழ் கூட்டு குற்றமிழைப்பு தொடர்பான கேஸ் லோ க்களை விருத்தி செய்துள்ளன. சில தேசிய நீதி மன்றங்களும் கலப்பு நீதிமன்றங்களும் இத் தத்துவத்தைப் பிரயோகித்துள்ளன, ஆனால் ஏனையவை அவ்வாறு செய்வதிலலை.

28 இவ்வகை பொறுப்புகளின் உண்மையான ஆதாரங்கள் உறுப்புரை 28(a) விற்கமைய இராணுவத் தளபதிகளின் கட்டளையிடும் பொறுப்பு முதலிய ஏனைய வகைகளை நிரூபிக்கவும் உதவக்கூடும் என்பதை கவனிக்கவும்.

29 ரோம் சட்டமும் அதனால் ஊக்குவிக்கப்படும் தேசிய சட்டங்களும் ‘கட்டளை பொறுப்பு’ என்ற தத்துவத்தின் கீழ் இராணுவத் தளபதிகளின் பொறுப்பிற்கும் சிவிலியன் உரதிகாரிகளின் பொறுப்புகளுக்குமிடையே தெளிவான வேறுபாடு ஒன்றைக் காட்டுகின்றன.

**பொறுப்புகளின்** வகைகளை விசாரிக்கும்போதும் ஆவணப்படுத்தும்போதும் கவனத்திற்கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள்:

» குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக ICC இல் வழக்குத் தொடுப்பதற்குப் பிரயோகிக்கக்கூடிய பொறுப்புகளின் வகைகளை ரோம் சட்டம் விதித்துரைக்கிறது.[30] செயற்பாட்டாளர்கள் தாம் செயற்படுகின்ற குறிப்பிட்ட சூழலில் நிலவும் உள்நாட்டு சட்டங்கள் சர்வதேச ரீதியக பிரயோகிககப்படுவற்றிற்கு முற்றிலும் வேறுபட்ட பொறுப்புகளின் வகைகளை குறித்துரைக்கக்கூடும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த நெறிமுறைகளில் குறிப்பிடப்படும் ரோம் சட்டத்தின் கீழான பொறுப்புகளின் வகைகள் உள்நாட்டில் முற்றிலும் இல்லாமல் இருக்கக்கூடும்.

» சர்வதேச வழமைச் சட்டத்தின் கீழ், பாலியல் வன்முறையின் நேரடி குற்றமிழைத்தோரை மாத்திரமின்றி, குற்றம் நடைபெற்ற இடத்தில் இருந்திராத அல்லது பலியானோரை ஒருபோதும் சந்தித்திராத ஆனால் மற்றவர்கள் மூலமாக குற்றம் புரிந்த, உதாரணமாக கட்டளையிட்ட, தூண்டிய, நேரடியாக பகிரங்மாகவும் தூண்டிய, உற்சாகப்படுத்தியதன் மூலம் அல்லது செயல்பட தவறியதன் மூலம் குற்றத்திற்கு துணைநின்ற தொலைவிலுள்ள குற்றமிழைத்தோரையும் பொறுப்புதாரிகளாக்குவது சாத்தியமாகும்.

» ரோம் சட்டம் (நேரடியாக, மறைமுகமாக அல்லத ஒரு கூட்டு குற்றமிழைத்தவராக) குற்றமிழைக்கும், கட்டளையிடும், வேண்டுகோள் விடுக்கும், தூண்டும் அல்லது துணை நிற்கும் அல்லது வேறு வகையைில் ஒரு பொது நோக்கத்தோடு செயற்படும் ஒரு குழுவினர் அக்குற்றத்தை புரிவதற்கு (அல்லது குற்றம் புரியும் முயற்சிக்கு) பங்களிப்புச் செய்யும் குற்றமிழைத்தோரின் நேரடி பொறுப்புகளுக்கு ஏற்பாடு செய்கிறது. தமது கீழ் உத்தியோகத்தர்கள் பாலியல் வனமுறைகள் புரிகினறனர் எனபதை அறிந்த அல்லது அறிந்திருக்க வேண்டிய இராணுத் தளிபதிகள் மற்றும் தமது கீழ் உத்தியோகத்தர்கள் குற்றம் புரிகின்றனர் என்பதை அறிந்திருந்த அல்லது அதனைத் தெளிவாகக் காட்டும் தகவல்களை உதாசீனம் செய்த சிவில் மேலதிகாரிகள் அக்குற்றங்களைத் தடுப்பதற்கு அல்லது தண்டிபதற்கு நியாயமான நடவடிக்கைகள் எடுக்கத் தவறுமிடத்து, முறையே கட்டளையிடல் மற்றும் மேலதிகாரி பொறுப்பு என்ற அடிப்படையில் பொறுப்புதாரிகளாக்கப்படலாம்.[31]

» பெரும்பாலான சர்வதேச நீதிமன்றங்களும் கலப்பு நீதிமன்றங்களும் குறைந்த வளங்கள் மற்றும் காலம் காரணமாக தமது நியாயாதிக்கத்தை வரையறை செய்து கொள்கின்றன அல்லது நடு மட்டத்திலான அல்லது உயர் மட்ட குறறமிழைத்தோருக்கு அல்லது குற்றத்திற்கு மிகவும் பொறுப்பான தனி மனிதர்களுக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தொடுக்கும் கொள்கையை கொண்டுள்ளன. குறிப்பாக ICC. இன் முன்னுள்ள நிலைமை இதுதான்.[32]

» செயற்பாட்டாளரின் சம்பந்தப்பட்ட நியாயாதிக்கத்தில் எந்த வகை குற்றவியல் பொறுப்பு பொருந்துவதாயினும், அவர்கள் அக் குற்றங்களுக்கு பொறுப்பானவர்களின் தொடர்பை நிரூபிக்கும் விளக்கமான தகவல்களை ஆவணப்படுத்துவது முக்கியமாகும்.

**பெட்டி 8**

### கேஸ்லோ உதாரணங்கள் - கட்டளைப் பொறுப்பு – பெம்பா வழக்கு

2016 மாரச் 21 திகதி, ஜீன்-பீரே பெம்பா கொம்போ மத்திய ஆபிரிக்க குடியரசில்(CAR)2002 ஒக்டோபர் மாதத்திற்கும் 2003 மார்ச் மாதத்திற்கும் இடையில் மூமெண்ட டீ லிபெறேஷன் டூ கொங்கோ (MLC) படையினரால் இழைக்கப்பட்ட மனித குலத்திற்கெதிரான இரண்டு சுற்று குற்றங்களுக்கும் (கொலை மற்றும் வன்புணர்வு) மூன்று சுற்று போர் குற்றங்களுக்கும் (கொலை, வன்புணர்வு மற்றும் சூறையாடல்) குற்றவாளியாகக் காணப்பட்டார்.

விசாரணை மன்றம் தனது தீர்ப்பில், ரோம சட்டத்தின் உறுப்புரை 28(a) இன் கீழ் திரு. பெம்பாவை தனது அதிகாரத்தினதும் கட்டுப்பாட்டினதும் கீழிருந்த MLC படைகள் கொலை மற்றும் வன்புணர்வு ஆகிய மனிதகுலத்திற்கெதிரான குற்றங்களையும் கொலை, வன்புணர்வு மற்றும் சூறையாடல் ஆகிய போர் குற்றங்களையும் புரிந்தனர் அல்லது புரியவிருந்தனர் என்பதை நன்கு அறிந்திருந்த ஒரு நபராகக் கண்டு குற்றவாளியாகத் தீர்ப்பளித்து. அம்மன்றம் திரு. மெம்பா தனது கட்டுப்பாட்டை உரியமுறையில் பிரயோகிக்கத் தவறியமையினால் இக்குற்றங்கள் இடம்பெற்றதெனக் கண்டது. அதன் சாட்சியங்களுக்மைய, மத்திய ஆபிரிக்க குடியரசில் தான் இறுதியானதும் உறுதியானதுமான அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் செலுத்திய MLC படைகளினால் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பாக தொடர்ச்சியான தகவல்கள் திரு. மெம்பாவிற்கு கிடைத்தவண்ணமிருந்தன என்பதை நீதி மன்றம் அவதானித்தது. அவருடைய அதிகாரங்கள் வழங்கல்கள், தொடர்பாடல், இராணுவ நடவடிக்கைகள் மற்றும் மூலோபாயங்கள் மற்றும் ஒழுக்காறு ஆகியனவரை விரிவடைந்திருந்தது. அவர் அங்கு சரீர ரீதியில் பிரசன்னமாகவில்லையொனினும், திரு. மெம்பா தினந்தோறும் இல்லாவிடினும், கிரமமான அறிக்கைகளை கோரியும் பெற்றும் அத்துடன் MLC படைகளை மத்திய ஆபரிக்க குடியரசில் ஈடுபடுத்துவது மற்றும் மீளப் பெறுவது முதலிய மிக முக்கிய தீர்மானங்களை மேற்கொள்வது அடங்கலாக தனது அதிகாரத்தைப பிரயோகித்தும் ஒரு தொலை பிரசன்னத்தை தொடர்ச்சியாகப் பேணி வந்தார். திரு. மெம்பா 2002 நொவெம்பரில் MLC படைகளை சந்தித்தது அடங்கலாக பல தடவைகள் CAR பகுதிகளுக்குச் சென்று வந்தார். அவர் தனது படைகளுக்கும் ஜனாதிபதி பட்டேசே வுடன் சேர்ந்தியங்கிய படைகளுக்கும் ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் மேலதிக துருப்பு ஆகியவற்றை வழங்கினார்.[33]

---

30 சர்வதேச வழமைச் சட்டத்தின்கீழ், பொறுப்பகளின் வகைகள் ரோம் சட்டத்தில் கோவையிடப்பட்டதைவிட விரிவானவையாகும் என்பதை அவதானிக்க.

31 நேரடி குற்றமிழைத்தோர் இறந்துவிட்ட, இனங்காணப்படாதுள்ள அல்லது வேறு ஒரு நாட்டிற்கு தப்பிச் சென்றுவிட்ட சூழ்நிலைகளில், இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதியை பெற்றுக்கொள்வதற்கு பலியானோருக்கு உள்ள ஒரே வழி கட்டளை அதிகாரிகளும் மேலதிகாரிகளுமேயாகும்.

32 சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்(2014) பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பான கொள்கைப் பத்திரம் ஹேக் ICC பந்தி 13

33 ICCTJ, வழக்குத் தொடுநர் எதிர் ஜீன் பீரே பெம்பே கொமபோ,ICC-01/05-01/08,21March2016.

## C. உண்மை நிகழ்ச்சியோடு தொடர்புடைய விடயங்கள்

மேற்குறிப்பிட்டதன் பிரகாரம் பாலியல் வன்முறைச் செயலானது கீழ்க்குறிப்பிடப்படும் பல்வேறு வகையான குற்றங்களைக் கணிசமானளவு கொண்டதாகவிருக்கலாம். செயற்பாட்டாளர்கள் என்ற முறையில் இரு வகையான குற்றங்களையும் ஆவணப்படுத்துவதற்கு உட்சாகப்படுத்தப்படுகின்றார்கள். இவை எப்போதும் பாலியல் வன்முறை, அதாவது பாலியல் வன்புணர்வு, பலவந்த கருத்தரிப்பு அல்லது பாலியல் அடிமைத்தனம் மற்றும் ஏனைய குற்றங்களையும் உள்ளடக்கியதாகவிருக்கலாம். இவற்றுள் பாலியல் செயல்களினூடாக அல்லது பாலியல் சாராத நடத்தைகளின் மூலமாக மேற்கொள்ள முடியும். அவையாவன, சித்திரவதை அல்லது கொலை செய்தல் போன்றன.

இத்தகைய பாலியல் வன்முறைச் செயல்களானது யுத்தக் குற்றங்கள், மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும்/ அல்லது இனப்படுகொலை போன்ற சர்வதேச குற்றங்களும் பல்வேறு விதமான வகைகளின் பொதுவான அம்சங்களை சமகாலத்தில் உள்ளடக்கியதாக அவற்றின் பின்புலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப இருக்கலாம்.

உண்மைச் சம்பவங்களுக்கான உதாரணங்களும் ரோம் சட்டங்களின் கீழ் எத்தகைய குற்றங்களாக அவற்றைக் கணிப்பிட முடியும் என்பது தொடர்பிலான சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| உண்மை நிகழ்ச்சியோடு தொடர்புடைய குறிகாட்டிகள்[34]<br>*இத்தகைய செயல்கள் இழைக்கப்பட்டனவா* | யுத்தக் குற்றங்கள்<br>*ஆயுத மோதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சூழமைவுகள்* | | மானிடத்திற்கு எதிரான குற்றங்கள்<br>*பொதுமக்கள் மீதான திட்டமிடப்பட்ட தாக்குதல்கள் அல்லது பரந்த தாக்குதல்களின் ஓர் அங்கம்* | | இனப்படுகொலை<br>*ஒரு குறிப்பிட்ட இனக்குழுவை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன் மே-ற்கொள்ளப்படுகிறது* |
|---|---|---|---|---|---|
| | பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய யுத்தக் குற்றங்கள் | ஏனைய சம்பந்தப்பட்ட யுத்தக் குற்றங்கள் | பாலியல் வன்முறை தொடர்பான மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் | மானுடத்திற்கு எதிரான ஏனைய சம்பந்தப்பட்ட குற்றங்கள் | |
| பெண்களுடைய இறந்த உடல்கள் கிராமம் ஒன்றில் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றின் உடைகள் அகற்றப்பட்டிருந்தன. சிலவற்றில் கால்கள் அகற்றப்பட்டிருந்தன. | பாலியல் வன்புணர்வு?<br>ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகள்? | கொலை?<br>சித்திரவதை?<br>தன்மானத்திற்கு எதிரான மூர்க்கத்தனங்கள்? | பாலியல் வன்புணர்வு?<br>ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகள்? | கொலை?<br>சித்திரவதை?<br>ஏனைய மனிதாபிமானம் அற்ற செயல்கள்? | அக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களை கொலை செய்தல்?<br>அக் குழுவில் பிறப்பு ஏற்படுவதைத் தடுத்தல்? |
| பெண் கமாண்டர் ஒருவருக்கு குழந்தை தேவைப்பட்டது. எனவே, அவள் கர்ப்பம் தரிக்கும் வரை பாலியல் உறவில் ஈடுபடும்படி பையன் ஒருவரை நிர்ப்பந்தித்தாள். | பாலியல் வன்புணர்வு?<br>பாலியல் அடிமைத்தனம்?<br>ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகள்? | இளம் இராணுவ வீரர்களை உபயோகித்தல்?<br>தன்மானத்திற்கு எதிரான மூர்க்கத்தனங்கள்? | பாலியல் வன்புணர்வு?<br>அடிமைத்தனம்?<br>ஏனைய வடிவிலான பாலிய ல் வன்முறைகள்? | சிறைப்படுத்தல்?<br>ஏனைய மனிதாபிமானம் அற்ற செயல்கள்? | |
| ஆண் மற்றும் பெண் சிறைக் கைதிகள் மிகவும் கீழ்த்தரமான முறையில் நிர்வாணமாக புகைப்படம் எடுக்கப்பட்டனர் | ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகள்? | தன்மானத்திற்கு எதிரான மூர்க்கத்தனங்கள்? | | | |
| இரண்டு ஆண் யுத்தக் கைதிகள் வாய் மூலமான பாலியல் உறவில் ஈடுபடும்படி அவர்களை கைப்பற்றியவர்களினால் நிர்ப்பந்திக்கப்பட்டனர். | பாலியல் வன்புணர்வு? | சித்திரவதை?<br>தன்மானத்திற்கு எதிரான மூர்க்கத்தனங்கள்? | பாலியல் வன்புணர்வு? | சித்திரவதை?<br>சிறைப்படுத்தல்?<br>ஏனைய மனிதாபிமானம் அற்ற செயல்கள்? | |
| பொலிசாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட கிளர்ச்சியாளர்[35] ஒருவரை நாற்காலியில் கட்டிவைத்து அவரது ஆண்குறி மற்றும் விகைள் ஆகியன கயிறு ஒன்றினால் தாக்கப்பட்டன. | ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகள்? | சித்திரவதை?<br>தன்மானத்திற்கு எதிரான மூர்க்கத்தனங்கள்? | ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகள்? | சித்திரவதை?<br>ஏனைய மனிதாபிமானம் அற்ற செயல்கள்? | |

| உண்மை நிகழ்ச்சியோடு தொடர்புடைய குறிகாட்டிகள்[34]<br>*இத்தகைய செயல்கள் இழைக்கப்பட்டனவா* | யுத்தக் குற்றங்கள்<br>*ஆயத மோதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சூழமைவுகள்* | | மானிடத்திற்கு எதிரான குற்றங்கள்<br>*பொதுமக்கள் மீதான திட்டமிடப்பட்ட தாக்குதல்கள் அல்லது பரந்த தாக்குதல்களின் ஓர் அங்கம்* | | இனப்படுகொலை<br>*ஒரு குறிப்பிட்ட இனக்குழுவை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன் மே-ற்கொள்ளப்படுகிறது* |
|---|---|---|---|---|---|
| | பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய யுத்தக் குற்றங்கள் | ஏனைய சம்பந்தப்பட்ட யுத்தக் குற்றங்கள் | பாலியல் வன்முறை தொடர்பான மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் | மானுடத்திற்கு எதிரான ஏனைய சம்பந்தப்பட்ட குற்றங்கள் | |
| ஆயுதக் குழுவொன்று தாம் ஆட்கொண்டிருந்த பிரதேசப் பாடசாலையிலுள்ள பல இளம் பெண்களைக் கடத்தி அவர்களை அடிமையாக விற்பனை செய்வதற்காக சந்தைக்கு எடுத்துச் சென்றது | பாலியல் அடிமைத்தனம்? | தன்மானத்திற்கு எதிரான அட்டூழியம் | பாலியல் அடிமைத்தனம்?<br>ஏனைய மனிதாபிமானமற்ற செயல்களின் கீழ் கட்டாய பலவந்த திருமணம் | அடிமைத்தனம்?<br>ஏனைய மனிதாபிமானம் அற்ற செயல்கள் | குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் கடும் பாதகங்களை ஏற்படுத்தலல் |
| எதிர்க்கட்டிசியைச் சேர்ந்த பெண் உறுப்பினர் ஒருவர் அவரது கட்சியைச் சேர்ந்த ஏனையவர்களுடன் கைதுசெய்யப்பட்டார். தான் ஒரு கிளர்ச்சிக்குத் திட்டமிட்டதாக ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில் அவளது மகன் அவள் முன்னிலையில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுவார் என அச்சுறுத்தப்பட்டது. | | சித்திரவதை? | | சித்திரவதை?<br>அடக்குமுறை? | |
| ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள பெண் ஒருவர் தன்னை கீழ்ப்படிநிலையில் வேலை செய்கின்ற இராணுவ அதிகாரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளுமுகமாக சிரேஷ்ட கமாண்டருடன் உறங்குவதற்கு இணங்கினாள் | பாலியல் வன்முறை?<br>பாலியல் அடிமைத்தனம்?<br>ஏனைய பாலியல் வன்முறைகள்? | தன்மானத்திற்கு எதிரான அட்டூழியம்? | பாலியல் வன்முறை?<br>பாலியல் அடிமைத்தனம்?<br>ஏனைய பாலியல் வன்முறைகள்? | ஏனைய மனிதாபிமற்ற நடவடிக்கைகள்? | |
| ஒரு கிராமத்தில் வாழ்ந்த சிறுபாண்மை இனத்தைச் சேர்ந்த சகல மக்களும் கைதுசெய்யப்பட்டனர். இராணுவத்தில் சேர்வதற்கான வயதுடைய ஆண்கள் தாக்கப்பட்டனர் அதேவேளை சிலர் கொலை செய்யப்பட்டனர். அதேவேளை, பெண்களும் பெண் பிள்ளைகளும் ஏனைய இனக்குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு மனைவியாக நிர்ப்பந்திக்கப்பட்டு வழங்கப்பட்டனர். | பாலியல் வன்முறை?<br>பாலியல் அடிமைத்தனம்?<br>ஏனைய பாலியல் வன்முறைகள் | கொலை (ஆண்கள்)?<br>தன்மானத்திற்கு எதிரான அட்டூழியதம் (பெண்கள்)? | பாலியல் வன்முறை?<br>பாலியல் அடிமைத்தனம்?<br>ஏனைய பாலியல் வன்முறைகள் | கொலை (ஆண்கள்) ?<br>அடக்குமுறை (பெண்கள்)?<br>ஏனைய மனிதாபிமற்ற நடவடிக்கைகள்? | ஏனைய குழுக்களைச் சேர்ந்தோரைக் கொலை செய்தல் (ஆண்)?<br>ஏனைய குழுக்களைச் சேர்ந்தோரை உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் கடும் பாதகங்களை ஏற்படுத்தல்/ அக்குழுவில் இனப்பெருக்கம் ஏற்படுவதைத் தடுத்தல் (பெண்கள்)? |

34 இந்த உண்மைச் சம்பவங்கள் தொடர்பான விபரங்கள் ஆவணப்படுத்தல் தொடர்பான சர்வதேச நீதி முறை மற்றும் மோதலின் போதான பாலியல் வன்முறை விசாரணை என்ற IICI பயிற்சி நூலிலிருந்து பெறப்பட்டது. (2015).

35 ஐ.நா. செயலகம் (2003) செயலாளர் நாயகத்தின் சஞ்சிகை: பாலியல் சுரண்டலிலிருந்து பாதுகாப்பதற்கான விசேட நடைமுறைகள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் ST/SGB/2003/13, 9 October 2003.

பெட்டி 9

## பாலியல் சுரண்டல் மற்றும் அமைதிப்படையினால் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகம்

**நிகழ்விற்கான உதாரணம்:** பதின்ம வயதுப் பெண் பிள்ளைக்கு கையடக்கத் தொலைபேசியும் ஆடைகளும் வழங்கப்பட்டு அதற்குப் பதிலாக அமைதிப்படையினரினால் பாலியல் சார்ந்த உதவிகள் பெறப்பட்டன.

இவ்விடயங்கள் நடைபெற்ற சூழலை மையமாகக் கொண்டு ஆராய்கையில், அமைதிப் படையினர் உள்ளடங்கலாக மனிதாபிமான செயற்பாட்டாளர்களினால் இவர்கள் பாலியல் ரீதியான சுரண்டலுக்கும் துஷ்பிரயோகத்திற்கும் உள்ளாக்கப்பட்டதை அறியமுடிந்தது. இச்செயலானது மானுடத்திற்கு எதிரான குற்றங்களாக அல்லது யுத்த குற்றங்களாகக் கருத முடியும். 18 வயதை விடக் குறைவான சிறுவர்களுடன் குறிப்பிட்ட பாலியல் உறவுகளை ஏற்படுத்துவதை ஐ.நா. மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு இடையிலான நிலையியற்குழு (IASC) தராதரங்கள் தடை விதிக்கின்றன. பாலியல் ரீதியிலான உதவிகளைப் பெற்றுக்கொள்வதை நோக்காகக் கொண்டு உணவு, ஏனைய பொருட்கள், சேவைகள் மற்றும் பணம் ஆகியவற்றை வழங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது[35] இத்தகைய சில செயல்கள் குற்றங்களாகும். பெரும்பாலும் நடைமுறையில் இத்தகைய குற்றங்களுக்குத் தண்டனையளிக்கப்படுவதில்லை அல்லது படைகளை அனுப்பிவைத்த நாட்டினால் மிகவும் அரிதாக உள்ளூர் மட்டத்தில் சட்டங்கள் எடுக்கப்படுகின்றன. படைகளை அனுப்பிவைத்த நாட்டுடன் ஐ.நா. மேற்கொண்ட மாதிரி புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் தமது இராணுவப் படையை முழுமையாக ஒழுக்கத்திலும் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் பேணுகின்ற பொறுப்பு அவர்களை அனுப்பிவைத்த நாட்டினைச் சார்ந்ததாகும். எனவே, பொறுப்புக் கூறல் செயற்பாடு தொடர்பில் இராணுவப் படையினை அனுப்பிவைத்த நாட்டின் அர்ப்பணிப்பு மிகவும் முக்கியமானதாகும். ஏதாவது குற்றச் செயல்கள் இழைழத்தாகத் தோன்றும் பட்சத்தில் அவர்கள் இருக்கும் நாட்டில் வைத்தே இராணுவ நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி கோரப்பட்டது. அமைதிப்படைச் செயற்பாடுகளின் போது மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஐ.நா. இராணுவப் படையினர் ஆகியோர் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக சம்பந்தப்பட்ட உறுப்பு நாடுகள் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்திக்கொள்ளும் முகமாக சர்வதேச சமவாயத்தை இற்றைப்படுத்திக்கொள்வது சிறப்பானதாகும்[36].

பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பில் எவ்வித பொறுமைகளையும் மேற்கொள்ளாத கொள்கையை வலுப்படுத்துவதற்காக ஐ.நா. தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இவற்றுள் 2016 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பிலான ஐ.நா. வின் பதிலளிப்புகளை மேம்படுத்தக்கூடிய விசேட ஒருங்கிணைப்பாளர் மற்றும் SEA[37] தொடர்பில் ஐ.நா. வின் உபாயங்களை விருத்தி செய்வதற்காக உயர்மட்டச் செயற்படையை உருவாக்குதல் ஆகியன ஆகியன[38].

ஐ.நா. செயற்பாட்டாளர்களினால் அல்லது ஏனைய வெளிநிலைச் செயற்பாட்டாளர்களினால் அமைதிப்படையினரினால் மேற்கொள்ளப்பட்ட SEA செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதற்கான முயற்சிகள் முக்கியமானவைகளாகும். பொறுப்புக் கூறலை மேம்படுத்துவதற்கு இவை துணை புரியும். இந்நோக்கத்தின் நிமித்தம் ICC அல்லது ஏனைய சர்வதேச நீதிமன்றங்களைத் தாபிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக தேசிய நியாயாதிக்கத்தின் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்[39]

---

36 ஐ.நா. செயலகம், செயலாளர் நாயகத்தின் சஞ்சிகை: பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதற்கான விசேட நடைமுறைகள், ST/ SGB/2003/13, 9 ஒக்டோபர் 2003இ பாலியல் சுரண்டலை இது இவ்வாறு வரைவிலக்கணப்படுத்துகிறது "பாலியல் நோக்கங்களுக்காக ஏதாவது பதவிகளை, தனிமனிதர் அதிகாரங்களை, நம்பிக்கையை துஷ்பிரயோகம் செய்தல் அல்லது துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தல். இவற்றுள் பண ரீதியாக இலாபமடைவதற்காக அல்லது சமூக அரசியல் காரணங்களுக்காக பாலியல் ரீதியாக மற்றவரை சுரண்டல் போன்றன உள்ளடங்கிய பொழுதிலும் இதற்கு மாத்திரம் இதனை மட்டுப்படுத்த முடியாது. அதேவேளை, "பாலியல் துஷ்பிரயோகம்" எனும் பொழுது பாலியல் தன்மையுடன் உடல் ரீதியாக உண்மையில் அத்துமீறல்களை மேற்கொள்ளல் அல்லது அச்சுறுத்துதல். இங்கு பலவந்தம் பிரயோகிக்கப்படுகிறது. அல்லது சமத்துவமற்ற கட்டாயப்படுத்தல் சூழ்நிலைகளில் இது இடம்பெறுகிறது.

37 டீ புரோவர், ஆன்-மேரி, 'சமாதானச் செயற்பாடுகளில் பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு எதிராகப் போராடுதல் - ரெர்ரி கில், டியடர் பிளக் மற்றும் பில் பூத்பி, சமாதான செயற்பாடுகளுக்கு ஏற்புடைய சர்வதேச சட்டம் தொடர்பான கையேடு (The Hague) (2017).

38 ஐ.நா. செய்திகள் நிலையம், 'அமைதிப் படையினரால் மேற்கொள்ளப்படும் பாலியல் துஷ்பிரயோகங்களை நிறுத்தும் முகமாக ஐ.நா.வின் முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்காக குறிப்பிட்ட காலத்திற்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள்', (8 பெப்ரவரி. 2016).

39 ஐ.நா. செய்திகள் நிலையம், பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பில் ஐ.நா. வின் பதிலளிப்புக்களை வலுப்படுத்தும் முகமாக நெறிப்படுத்துவதற்கு உபாயங்களை விருத்திசெய்யக் கூடிய புதிய செயற்படை, (6 ஜனவரி 2017).

40 பார்க்க : ஐ.நா. பெண்கள், மோதல்களைத் தடுத்தல், நீதி பரிமாற்றங்கள், பாதுகாப்பு, சமாதானம்: ஐ.நா. வின் பாதுகாப்புச் சபை நடைமுறைப்படுத்தல்கள் தொடர்பான சர்வதேச ஆய்வு 1325' (நிவ்யோக்இ NY, 2015), ஐ.நா. அமைதி காக்கும் படையினர் மற்றும் பணியாட்தொகுதியினர் ஆகியோரினால் சர்வதேச விசாரணை மன்றத்தைத் தாபிப்பது தொடர்பான சிந்தனைகள் SEA ஓ பிரைன், மிலானீ, பாலியல் சுரண்டல் மற்றும் அதற்கு அப்பால்: பால்நிலை மையக் குற்றங்களுக்காக ஐ.நா. அமைதிகாக்கும் படைகளுக்காக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோமானியச் சட்டத்தைப் பயன்படுத்தல், சர்வதேச குற்றவியல் சட்ட மீளாய்வு, 11 (2011), 803–827.

## D. செயன்முறை மற்றும் சான்றுகள் தொடர்பான நெறிமுறைகள்

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய சாட்சிகள் ஆகியோரைப் பாதுகாப்பதற்கான கருவியாக செயன்முறை மற்றும் சான்றுகள் தொடர்பான (RPE) விதிகளைப் பயன்படுத்த முடியும். ஒவ்வொரு நியாயாதிக்கமும் மாறுபட்டதாகும். அத்தோடு ஒவ்வொரு நீதிமன்றத்திலும் மாறுபட்ட செயன்முறை மற்றும் சான்றுகள் தொடர்பான நெறிமுறைகள் காணப்படுகின்றன. தேசிய நீதிமன்றமொன்றில் எவ்வித சந்தேகத்திற்கும் அப்பால் குற்றவியல் வழக்கொன்றை நிரூபிப்பதற்கு அவசியமான சான்றுகள் மிகவும் கடினமானவை, விரிவானவை மற்றும் தொடக்க நிலைகளும் சிரமமானவை. மிகக் கடினமான சான்று முறைகளை பிரயோகிக்கின்ற அதேவேளை, சர்வதேச நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பு மன்றங்கள் ஆகியவற்றில் சான்றுகளை ஏற்றுக்கொள்வது தொடர்பில் மிகவும் தாராள அணுகுமுறைகள் பொதுவாக பின்பற்றப்படுகின்றன: சான்றுகள் இல்லாத நிலையில் அல்லது ஆவண ரீதியான சான்றுகள் அழிக்கப்பட்டுள்ள நிலையில் சாட்சிகள் வழங்குகின்ற வாக்குமூலச் சான்றுகளில் தங்கியிருக்கின்ற அதேவேளை, எண்பிக்கின்ற பெறுமதிமிக்க சான்றுகளை ஏற்றுக்கொள்கின்றன. இவற்றுள் பகிரங்க வளங்களில் வழங்கப்படுகின்ற தகவல்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லது ஐ.நா. அறிக்கைகள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. ஆனால் இச்சான்றுகளின் பெறுமதி மாறுபட்டதாகக் காணப்படுகிறது.

மேலும் ICC[41], ஏனைய சர்வதேச தீர்ப்பு மன்றங்கள் மற்றும் நீதிமன்றங்கள்[42] ஆகியன சான்றளித்தலின் பொழுது பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் ஆகியவற்றை பாதுகாப்பதற்கான விதிகள் மற்றும் பொறிமுறைகளை தாபித்துள்ளன. அத்தோடு பின்வரும் விடயங்கள் தொடர்பில் செயற்படுகின்றன.

1. சம்மதம்
2. உறுதிப்படுத்தல்
3. முன்கூட்டிய மற்றும் பின்னரான பாலியல் நடத்தை
4. ஏனைய பாதுகாப்பு நடைமுறைகள்

பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் ஆகியோரை மேலதிக மனு வடுவிலிருந்து பாதுகாக்கும் முகமாக இந்த விதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், குறிப்பிட்ட பாலியல் வன்முறைக் குற்றத்தின் தன்மை இதன்பொழுது கருத்திற்கொள்ளப்படுகின்றன. இவற்றுள் அவை மேற்கொள்ளப்பட்ட பலவந்தமான பின்புலங்களும் இத்தகைய சந்தர்ப்பங்களில் கருத்திற் கொள்ளப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்களை பொருத்தமற்ற, வெளிப்படையாக கோபமூட்டக்கூடிய, அவமானத்திற்குள்ளாக்கக்கூடிய, கேள்வி கேட்டல் முறைகளிலிருந்து பாதுகாக்கும் முகமாக இவை உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியை செயற்பாட்டாளர்கள் நீதிமன்றச் செயன்முறையின் பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் பங்குபற்றுகின்ற முறையை மேம்படுத்துவதற்கான விதிகளை ஏற்றுக்கொள்வதற்கான பரிந்துரைகளை மேற்கொள்வதற்கான வளமாக பயன்படுத்த முடியும். உள்நாட்டில் பாலியல் வன்முறை குற்றங்கள் தொடர்பில் நீதிமன்றங்களில் உறுதிப்படுத்தல், பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்காகவும் இவற்றைப் பிரயோகிக்க முடியும். நீதிமன்றங்களில் சான்றளிக்கின்ற பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் ஆகியோருக்காக தேசிய வழக்குத் தொடுப்பவர்கள், நீதிபதிகள் ஆகியோர் தொடர்பில் இத்தகைய ஆலோசனைகளை பிரயோகிப்பதானது ஒரு காத்திரமான நடைமுறையாக அமையுமென நம்பப்படுகின்றது.

சர்வதேச குற்றவியல் நடைமுறைகளில் பின்வரும் செயன்முறை மற்றும் சான்றுகள் (RPE:[43] ) தொடர்பான நெறிமுறைகள் காணப்படுகின்றன.

### 1. சம்மதம்

உள்நாட்டுச் சூழமைவுகளில் பாலியல் வன்முறைக் குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது சம்மதமின்றியே இத்தகைய செயல்கள் இடம்பெற்றன என்பதை நிரூபிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஆனால் சர்வதேச குற்றவியல் நடைமுறைகளின் பொழுது சம்மதம் தொடர்பான கேள்விகளிலிருந்து பாதிக்கப்பட்டவரைப் பாதுகாக்க் கூடிய விதத்திலேயே நீதித்துறை முறைகள் காணப்படுகின்றன. சம்மதமின்றியே நடைபெற்றது என நிரூபிக்க வேண்டிய தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு **பலவந்தமாக மேற்கொள்ளப்பட்டமைக்காக** காணப்படுகின்ற சான்றுகளின் அடிப்படையிலேயே விடயங்கள் தொடரப்படுகின்றன. பாரிய வன்முறைகள், பலவந்த நடவடிக்கைகள், தடுப்புக்காவல்கள், அச்சுறுத்தல்கள், பலவந்தமான செயற்பாடுகள் ஆகியவற்றின் பொழுது சம்மதத்தைப் பெற்றுக்கொண்டார் என்பதுடன் தொடர்புடைய விடயங்கள் நிரூபிக்க முடியாதவையாகவே கருதப்படுகின்றன. தடுப்புக்காவல், ஆயுத மோதல், இராணுவப் பரிசன்னம், சிறுவர்கள், புத்திக்கூர்மை, அறிவாற்றல் ரீதியான குறைபாடுடையோர் ஆகியோர் தொடர்பில் பலவந்தம் பிரயோகிக்கப்படும் பொழுது அதனைத் தடுக்க முடியாத நிலையேற்படுகின்றது.

சர்வதேச குற்றவியல் நடைமுறைகளின் கீழ் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டார் என்பதை நிரூபிப்பதற்கு போதியளவு சான்றுகள் இல்லாதபட்சத்திலும் கூட பலவந்தத்தைப் பிரயோகித்தமைக்கான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இவை ஆராயப்படுகின்றன. எனவே, சம்மதம் பெறாத சூழ்நிலையில் இவை நடைபெற்றன என்பதை நிரூபிப்பதற்குப் பாதிக்கப்பட்டவர் மேலதிகச் சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. எனவே, குற்றமிழைத்தவருக்கு எதிராக பாதிக்கப்பட்டவர் உடல் ரீதியாக எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்டாரா என்ற கேள்விகள் இங்கு அவசியமில்லை[44]

41 போபாலன், பீ. கிராவட்ஸ், டீ, மெனன். ஏ (2016) ‘பாலியல் வன்முறை தொடர்பான குற்றங்களை நிரூபித்தல்’, பீ.எஸ். பிராம்மெர்ஸ் அன்ட் எம் ஜாவிஸ். மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறை பற்றிய சட்ட நடவடிக்கைகள்: ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் 111–167.

42 பார்க்க ICTY/ICTR RPE 96; கோபாலன், பிரியா, கிராவட்ஸ் டீ. மெலன். ஏ. ‘பாலியல் வன்முறை தொடர்பான குற்றங்களை நிரூபித்தல்’, பீ.எஸ். பிராம்மெர்ஸ் பாருன் சேர்ஜ் அன்ட் மைக்கல் ஜாவிஸ். ICTY மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறைகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் (ஒக்ஸ்போட், 2016), 111–167.

43 ICC இன் RPE மற்றும் தற்காலிக மற்றும் கலப்பு நீதிமன்றங்கள் ஆகியவற்றில் பல்வேறு முறைகளில் இந்த எண்ணக்கருக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நியாயாதிக்கம் தொடர்பில் விசேட மேற்கோள் எதனையும் மேற்கொள்ளாமல் பொதுவான நியதி பற்றிய எண்ணக்கருக்களை ஒழுங்கு மரபு பற்றிய இந்தப் பிரிவு கொண்டுள்ளது,

44 பார்க்க உதாரணம்இ ICC TJ வழக்குத் தொடுனர் வீ ஜீன் பிரே பெம்பா கொம்பா, ICC-01/05-01/08-3343, 21 மார்ச் 2016, பந்தி. 105-106 : ‘சட்டத்தின் கீழ் பாலியல் வன்புணர்வு தொடர்பான குற்றங்களில் பாதிக்கப்பட்டவரது இணக்கம் தொடர்பான விடயங்கள் ஒரு சட்ட ரீதியான அம்சம் அல்லவென சபை குறிப்பிட்டது. சட்டத்திதை உருவாக்குகின்ற முன் செயற்பாடுகளின் பொழுது பாதிக்கப்பட்டவர் தனது இணக்கத்தைத் தெரிவிக்கவில்லையென்பதை எவ்வித சந்தேகமும் இன்றி வழக்குத் தொடுனர்கள் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லையென தேவைப்படுத்துவதற்கு சட்டத்தை வரைந்தவர்கள் தீர்மானித்தனர். அதாவது இத்தகைய தேவைப்பாடுகள் பல வழக்குகளில் குற்றமிழைத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கான செயற்பாட்டினை குறை மதிப்பீடு செய்யும் என்பதன் அடிப்படையிலேயே இது மேற்கொள்ளப்பட்டது. ஆகவே, எங்கே பலவந்தம், அச்சுறுத்தல் அல்லது வலுக்கட்டாயம் இடம்பெற்றிருக்கிறதோ அல்லது பலவந்தமான சூழ்நிலை சாதகமாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றதோ என நிரூபிக்கப்படும் பட்சத்தில் பாதிக்கப்பட்டவரது இணக்கம் அல்லது இணக்கமின்மை தொடர்பான விடயங்களை வழக்குத் தொடுனர் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லையென சபை பரிசீலித்தது.

பெட்டி 10

## பலவந்தமான சூழ்நிலைகளும் சம்மதமும்

சர்வதேச தராதரங்களுக்கு[44] ஏற்ப பால்நிலை வன்முறை தொடர்பான உள்நாட்டு செயல்முறைகள் மற்றும் சான்றுகள் தொடர்பான நெறிமுறை விடயங்களானவை சர்வதேச சட்டங்களின் கீழ் ஒரு குற்றமாகும். அவை பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

» சம்மதம் தொடர்பான சான்றுகளுக்காக வழக்குத் தொடுப்பவர்கள் பலவந்தம் அல்லது அச்சுறுத்தல் தொடர்பான சான்றுகளை வழங்க வேண்டியதில்லை[45]

» பலவந்தமான சூழ்நிலையில் நடைபெற்றுள்ளது என்பதை நிரூபிப்பதற்குப் போதிய ஆதாரங்கள் காணப்படும் பட்சத்தில் அவை நேர்மையான சம்மதம் தொடர்பான சான்றுகளுக்கான அவசியத்தை இல்லாதொழிக்கிறது.

» அமைதி அல்லது பாதிக்கப்பட்டவர் உடல் ரீதியாக எதிர்த்தார் என்பதற்கான சான்றுகள் இல்லையென்பதைக் கொண்டு அவர் தனது சம்மதத்தை தெரிவித்தார் எனப் பொருட்படாது.

» நீதிமன்றம் மூடியநிலையில் தனது விசாரணைகளை மேற்கொண்டாலொழிய பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியளிப்பவரிடமிருந்து சம்மதம் தொடர்பான கேள்விகளைக் கேட்கக்கூடாது. சம்பந்தப்பட்ட தரப்பினருடைய விவாதங்களைச் செவிமடுத்த பின்னர் அதற்கான தேவை ஏற்பட்டுள்ளதாக உணரும் பட்சத்தில் முன்கூட்டியே தெளிவான அனுமதிகள் வழங்கப்படுவதுடன் மூடிய அமர்வின் பொழுதே அத்தகைய கேள்விகள் கேட்கப்படல் வேண்டும்.

சம்மதம் தொடர்பான சான்றுகளை அறிமுகப்படுத்துகின்ற பொழுது பதிலளிக்கும் முகமாக பலவந்தமான சூழலில்தான் நடைபெற்றது என்பது தொடர்பிலான சான்றுகள் மற்றும் விவாதங்கள் தொடர்பில் செயற்பாட்டாளர்கள் குறிப்பாக வழக்குத் தொடுப்பவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவரது சட்டத்தரணிகள் ஆகியோர் தயாராகவிருத்தல் வேண்டும்.

### சட்ட வழக்கு - உதாரணம்

உடல் ரீதியான பலவந்தம், அச்சுறுத்தல், பயமுறுத்தல், பலவந்தமாக பறித்தெடுத்தல் மற்றும் ஏனைய வடிவிலான கட்டாயப்படுத்தல்கள் ஆகியவற்றைக் காண்பிக்கின்ற சான்றுகளின் மூலமாகத்தான் பலவந்தமான சூழ்நிலையில் நடைபெற்றது என்பதற்கான சான்றுகள் இருக்க வேண்டியதில்லையென ICTR குறிப்பிட்டது. ஒருவரிடம் காணப்படுகின்ற அச்சம் அல்லது விரக்தி ஆகிவற்றைக் கருத்திற்கொண்டும் பலவந்தம் பிரயோகிக்கப்பட்டது எனலாம். சில சூழ்நிலைகளில் இத்தகைய பலவந்தம் பிரயோகிக்கப்படுவதை ஒருவரினால் தவிர்க்க முடியாத சூழ்நிலை இருக்கலாம். அதாவது ஆயுத மோதல் அல்லது இராணுவப் பரிசன்னம் போன்ற சந்தர்ப்பங்களில் இவை ஏற்படலாம் (வழக்குத் தொடுப்பவர் வீ. ஜீன் பாவுல் அகேசு 1998, பந்தி 688)

மேலும் குறிப்பிடுவதாவது, ICTY வன்புணர்வின் பொழுது பலவந்தம் பிரயோகிக்கப்பட்டது என்பதை இலகுவாகக் காணமுடியாத சூழ்நிலைகளும் உள்ளன. பலவந்தம் பிரயோகிக்கப்பட்டது என்பது தொடர்பில் அல்லது அச்சுறுத்தல் மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பில் அவதானத்தைச் செலுத்துகின்ற சந்தர்ப்பங்களில் குற்றமிழைத்தவர் தான் மேற்கொண்ட பாலியல் செயற்பாட்டிற்கான பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. பாதிக்கப்பட்டவர் சம்மதத்தினைத் தெரிவித்தாரா இல்லையா என்ற சான்றுகளில் அதிக கவனத்தைச் செலுத்துகின்ற பொழுது குற்றமிழைத்தவர் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. பலவந்தமான சூழ்நிலையில் இத்தகைய உடல் ரீதியான சான்றுகள் தொடர்பில் தங்கியிருக்க வேண்டியதில்லை. சில இராணுவத் தலைமையகங்களில் பெண்களுக்கெதிராக இடம்பெற்ற பாலியல் வன்புணர்வு தொடர்பில் ஆராய்கையில் இராணுவத் தலைமையகங்கள், தடுப்புக்காவல் நிலையங்கள் மற்றும் ஏனைய சில குடியிருப்புகள் ஆகிய இராணுவத்தினரின் வீடுகளாகத் தொழிற்பட்டன. அத்தகைய இடங்களில் பலவந்தம் பிரயோகிப்பதற்கான அதிக வாய்ப்புகள் காணப்பட்டன. பாதிக்கப்பட்டவர் இணக்கம் தெரிவித்தாரா என்பதற்கான சான்றுகளுக்கான அவசியம் இத்தகைய சூழலில் இல்லை (வழக்குத்தொடுனர் வீ. ரேடோமிர் கொவா மற்றும் சொரான் வுகோவிக், 2002, பந்தி 129-133)

---

45 பார்க்க- ICC RPE 70-72; ICTY/ICTR RPE 96.

46 ரோம் சட்டத்தின் கீழ் மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் அல்லது யுத்தக் குற்றங்கள் ஆகியவற்றின் கீழ் பாலியல் வன்புணர்வு தொடர்பான குற்றங்களின் பொழுது இணக்கமின்மை சார்ந்த விடயத்தை ஒரு அம்சமாக பரிசீலிக்க வேண்டியதில்லை (முறையே Art 7 (1) (g) மற்றும் Art 8 (2) (b)(xxii)). குறிப்பிட்ட நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட நியாய சபைகளின் பொருட்கோடல்களின் பிரகாரம் பாலியல் வன்புணர்வுகளின் பொழுது இணக்கமின்மையை நிரூபிப்பதானது ஒரு முறை சார்ந்த முறையாகக் காணப்பட்டது. இருப்பினும், வலவந்தச் சூழ்நிலைகளை நிரூபிக்கின்ற சந்தர்ப்பங்களில் இதற்கான தேவை இல்லை.

*பாரிய வன்முறைகள், வலுக்கட்டாயம், தடுப்புக்காவல், அச்சுறுத்தல்கள், பலவந்தம் ஆகிய சூழ்நிலைகளில் சம்மதம் தொடர்பான சான்றுகளைச் சமர்ப்பிப்பது இயலாத விடயமாகவே கருதப்படுகிறது*

## 2. உறுதிப்படுத்தல்

சர்வதேச குற்றவியல் செயல்முறைக் கொள்கைகளின் கீழ் பாலியல் வன்முறை தொடர்பான வழக்குகளுக்கு உறுதிப்படுத்தல் அவசியமில்லை. நடைமுறையில் உறுதிப்படுத்தல் என்பது நம்பகத்தகுந்த விடயங்களை ஏற்படுத்திய பொழுதிலும் கூட பாலியல் வன்முறை சார்ந்த குற்றங்களுடன் நோக்குகையில் பாதிக்கப்பட்டவர் வழங்குகின்ற சுய சான்றே போதுமானதாகும். வேறு ஏதாவது உறுதிப்படுத்துவதற்கான சாட்சிகள், ஆவணங்கள், மருத்துவ அறிக்கைகள், புகைப்படங்கள் அல்லது உறுதிப்படுத்துவதற்கான வேறு ஏதாவது சான்றுகள் இல்லாத சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களின் சான்றுகளை ஏற்றுக்கொள்ள முடியும்[47]. நடைமுறையில் உறுதிப்படுத்துவது என்பது வழக்கை வலுப்படுத்தக்கூடியதாகத் திகழ்ந்த பொழுதிலும்கூட உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் இல்லையென்பதை மையமாகக் கொண்டு சான்றுகள் இல்லையெனவோ அல்லது குற்றவாளியென நிரூபிப்பதற்கான சான்றுகள் இல்லையெனவோ கருதவேண்டியதில்லை.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டோர்களது நம்பகத்தன்மையை இல்லாதொழிக்கும் முகமாக அல்லது அவமதிக்கும் முகமாக குறுக்கு விசாரணைகளின் பொழுது பல கேள்விகள் கேட்கப்படுகின்றன. பாதிக்கப்பட்டவரது சான்றுகள் எந்தவிதத்திலும் நம்பகத்தன்மை குறைந்தது அல்ல என்பது தொடர்பிலான தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள், வழக்குகள் தொடர்பில் செயற்பாட்டாளர்கள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். நம்பகத்தன்மையை நிரூபிப்பதற்கு உறுதிப்படுத்தல்கள் அவசியமில்லை.

**பெட்டி 11**

**சட்ட வழக்கு உதாரணம் - ஹேப்ரே தீர்ப்பு**

1982 மற்றும் 1990 காலப்பகுதியில் இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள் மற்றும் மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றுக்காக விசேட ஆபிரிக்க சனகலீஸ் நீதிமன்றமானது 2016 மே 30 ஆம் திகதியன்று முன்னாள் ஜனாதிபதி சார்ட் ஹிஸ்னே ஹேப்ரே குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டு அவருக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. குறிப்பாக சித்திரவதைகளை மேற்கொண்ட குற்றவாளியாகவும் அத்தோடு, மானுடத்திற்கு எதிராக குற்றங்களை இழைத்தவராகவும் அதேவேளை, வன்புணர்வு மற்றும் மனிதர்களுக்கு எதிராக பாலியல் அடிமைத்தனத்தை மேற்கொண்டவராகவும் இனங்காணப்பட்டார். குறிப்பாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த பெண்களுக்கு எதிராக சிறைச்சாலை அதிகாரிகளும் இராணுவ வீரர்களும் மேற்கொண்ட வன்புணர்வுகள் தொடர்பில் பரிசீலித்த நீதிமன்றமானது இவை கூட்டாக இணைந்து மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்களாக கண்டறிந்தது. இக்குழுவின் உறுப்பினராக திரு. ஹேப்ரே அவர்களும் இருந்தார். ஹேப்ரே ஜேம்ஸ் அவர்கள் கதீஜா ஹசன் சிடேன் என்ற பெண் மணியை பாலியல் வல்லுணர்வுக்கு உட்படுத்திய குற்றவாளியாக அவள் வழங்கிய தனிமனிதர் சாட்சியத்தை மாத்திரம் வைத்து கண்டறியப்பட்டார். பாதிக்கப்பட்டவரின் நம்பகத் தன்மை மற்றும் பால்நிலைக் கூருணர்வு ஆகியவற்றை நீதிமன்றம் பகுப்பாய்வு செய்தது. பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலமானது நீண்டகாலத்திற்குப் பின்னர் வழங்கப்பட்ட போதிலும் கூட அது அவரது நம்பகத்தன்மையைப் பாதிக்கவில்லையென நீதிமன்றம் கூறியது (பந்தி 733). கதீஜா ஹசன் சிடேன் வழங்கிய வாக்குமூலத்தில் துல்லியத்தன்மை குறைவாகவும் சில விடுபாடுகள் காணப்பட்ட போதிலும் கூட அவை அவளின் நம்பகத்தன்மையைப் பாதிக்கவில்லையென நீதிமன்றம் கருதியது. ஏனெனில், சில விடயங்களை மீண்டும் ஞாபகப்படுத்துவதில் அவளுக்கு சிரமங்கள் இருந்திருக்கலாம் அல்லது பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண் என்ற முறையில் மிகவும் மோசமான சூழ்நிலையில் அவள் வாழ்ந்திருக்கிறாள். அத்தகைய பின்புலத்தில் தனது வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்குச் சில விடயங்களை மறக்க வேண்டிய தேவைகளும் ஏற்பட்டிருக்கலாம் (பந்தி 734).

வழக்குத் தொடுநர் மற்றும் ஹேப்ரே, ஆபிரிக்க விசேட நீதிமன்றம், செனகல், 2016 மே 30 ஆம் திகதி (குறிப்பாக பந்தி 719-736 மற்றும் பந்தி 1577-1582).

47 ரோம் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்ட ஏதாவது குற்றம் தொடர்பில் உறுதிப்பாடு அவசியமில்லையென ICC RPE தெளிவாக எடுத்துரைக்கிறது. பீமா வழக்கின் குறிப்பு 44 இல் பந்தி 245 இல் சபை குறிப்பிடுவதாவது: நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் ஏதாவது குற்றமொன்றை நிரூபிப்பதன் பொருட்டு உறுதிப்பாடு அவசியம் என்ற சட்டத் தேவையை விதிப்பதை 63(4) விதி சபைக்கு தடைசெய்கிறது. குறிப்பாக பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய குற்றங்களுக்கு இது ஏற்புடையதாகும். சான்று தனியாக இருந்த பொழுதிலும் சான்றானது காத்திரமாக இருக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பில் அது வலுவுள்ளதாக இருக்கின்றது. சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு தனியொரு சான்றும் கூட குறிப்பிட்ட உண்மையைத் தாபிப்பதற்கு போதுமானது என மேன்முறையீட்டுச் சபை தீர்மானித்தது. ஆனால் உண்மையைக் கண்டறிதலை அடிப்படையாகக் கொண்டு ஏதாவது சான்று போதிய சான்றாதாரங்களை வழங்குகின்றது என அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இந்த அணுகுமுறையுடன் சபை உடன்படுகிறது.

## 3. முன்கூட்டிய மற்றும் பின்னரான பாலியல் நடத்தை

பாதிக்கப்பட்டவரது முன்னரான பாலியல் நடத்தையுடன் தொடர்புடைய கேள்விகளைக் கேட்பதற்கு பெரும்பாலான சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள் தடைவிதித்துள்ளன. ICC RPE உம் பின்னரான பாலியல் நடத்தை தொடர்பிலான கேள்விகளைக் கேட்பதற்கு தடைவிதித்துள்ளது. யுத்தக் குற்றங்கள், மானுடத்திற்கு எதிரான குற்றங்கள், இனச் சுத்திகரிப்பு ஆகிய சூழமைவுகளில் இத்தகைய கேள்விகளை ஒருவரை அவமானப்படுத்துவதாக அமையலாம். அத்தோடு, இவை சம்பந்தமற்றதாகவும் பொருத்தமற்றதாகவும் கருதப்படுகின்றன. பொருத்தமான கேள்விகள் எனும் பொழுது அவை சம்பந்தப்பட்ட சூழ்நிலை தொடர்பில் ஆராய்கின்றதா இல்லையா எனக் கருத்திற்கொள்ளப்படுகின்றன. அத்தோடு, குறிப்பிட்ட சூழ்நிலையில் சார்த்துரைக்கப்பட்ட குற்றம் இழைத்தவருடன் பாலியல் உறவை மேற்கொள்வதற்காக பாதிக்கப்பட்டவர் சுயாதீனமாக சிந்தித்து தீர்மானங்களை எடுப்பதற்கான வாய்ப்புகள் இருந்தனவா என ஆராயப்படுகின்றன.

முன்கூட்டிய மற்றும் பின்னரான பாலியல் நடத்தை தொடர்பான கேள்விகள் பொருத்தமற்றவை. ஏனெனில், அத்தகைய சந்தர்ப்பங்களில் சுயாதீனமாக ஒருவர் தனது விருப்பத்தைத் தெரிவித்திருக்கலாம். ஆனால் குறிப்பிட்ட குற்றம் தொடர்பில் அத்தகைய கேள்விகள் எவ்விதமான காத்திரமான தகவல்களையும் வழங்குவதில்லை. இத்தகைய கேள்விகள் ஆணாதிக்கப் பால்நிலைச் சூழமைவுகளிலிருந்து தோன்றுகின்றன. உதாரணமாக, பல்வேறு விதமான சூழ்நிலைகளில் பாலியல் உறவை மேற்கொள்வதற்காக தனது சம்மதத்தைத் தெரிவித்த பெண்களும் பெண் பிள்ளைகளும் இந்த வழக்குடன் தொடர்புடைய விடயத்தைப் பொறுத்தவரை சார்த்துரைக்கப்பட்ட குற்றவாளியுடன் இணங்கியே பாலியல் உறவினை மேற்கொண்டார் எனக் காட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாதிக்கப்பட்டவரது நம்பகத்தன்மையைக் குறைக்கும் முகமாக இத்தகைய கேள்விகள் கேட்கப்படுகின்றன. இவர்கள் பொய் கூறுகின்றார்கள் என்பதை நிரூபிப்பதற்காகவும் இத்தகைய கேள்விகள் கேட்கப்படுவதுண்டு (உதாரணம் - பல சந்தர்ப்பங்களில் பாலியல் உறவினை மேற்கொள்வதற்காக தமது சம்மதத்தைத் தெரிவித்தவர்கள் குறிப்பிட்ட வழக்குடன் தொடர்புடைய விடயத்திலும் தமது சம்மதத்தைத் தெரிவித்திருக்கலாம் எனக்காட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேவேளை, பல ஆண்களுடன் பல சந்தர்ப்பங்களில் பாலியல் உறவினை மேற்கொண்ட பெண்களினதும் பெண் பிள்ளைகளினதும் தன்மானத்தைக் குறைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவர்களை விட தனது வாழ்க்கைத்துணை அல்லது காதலருடன் பாலியலில் ஈடுபட்ட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் மதிக்கத்தக்கவர்கள் எனக்காட்டுவதற்கான முயற்சிகளும் இடம்பெறுவதுண்டு.

**பெட்டி 12**

### பலியானவரின் கன்னித்தன்மை மற்றும் 'கன்னித்தன்மை' சோதனை

நீங்கள் கன்னித்தன்மையுடன் இருக்கிறீர்களா அல்லது இருந்தீர்களா போன்ற கேள்விகள் அனுமதிக்கப்படக்கூடாது. அவை பாதிக்கப்பட்டவருக்கு மனவழுத்தங்களை ஏற்படுத்தலாம். அத்தோடு சார்த்துரைக்கப்பட்ட குற்றச் செயலை நிரூபிப்பதற்கோ அல்லது நிரூபிக்கப்படாமல் விடுவதற்கோ இத்தகைய கேள்விகள் பொருத்தமற்றவை. பொதுவாக கூறுவோமெனில், இவ்விடயம் தொடர்பில் சான்றுகளை அறிமுகம் செய்வது தடைசெய்யப்படல் வேண்டும். அதாவது, பாதிக்கப்பட்டவர் தனக்கு இழைக்கப்பட்ட குற்றத்துடன் தொடர்புபடுத்தி உடல், உள மற்றும் சமூக ரீதியான விடயங்களுக்கு இத்தகைய கேள்விகள் அவசியமெனக் குறிப்பிட்டு அதற்கு இணங்கினாலொழிய இத்தகைய கேள்விகளைக் கேட்பது அனுமதிக்கப்படக் கூடாது. இத்தகைய கேள்விகளைத் தவிர்க்கும் நடைமுறைகளை உள்ளடக்கும் முகமாக சர்வதேச நடைமுறைகள் மீது செயற்பாட்டாளர்கள் தமது கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

ஒரு பெண் அல்லது பெண் பிள்ளை கன்னித்தன்மையுடன் இருக்கின்றாள் என்பதை நிரூபிப்பதற்காகவும் பாலியல் புனர்வுகளுக்கு பழக்கப்பட்டுள்ளாள் என்பதை அறியும் முகமாகவும் சில நியாயாதிக்கங்களில் பெண் மருத்துவர் சார்ந்த சோதனைகளும் மேற்கொள்ளப்படுவதுண்டு. இத்தகைய சோதனைகள் தன்மானத்திற்கு எதிரானவை, பாரபட்சம் மிக்கவை மற்றும் விஞ்ஞானம் சாராதவை என்பதனடிப்படையில் உலக சுகாதார அமைப்பு[48] மற்றும் சில சுயாதீன சட்ட மருத்துவம் சார்ந்த நிபுணர் குழுக்கள்[49] ஆகியன இவற்றைக் கண்டனம் செய்துள்ளன. மற்றும் இத்தகைய சோதனைகள் உளவியல் ரீதியாக அவமானப்படுத்துவதுடன், உடலியல் ரீதியாக வருத்தத்தை ஏற்படுத்தக்கூடியன. இவற்றை மேற்கொள்வது பாரபட்சம் மிக்கதாகும். அத்தோடு, பெண்களுக்கு எதிரான சகல வன்முறைகளையும் இல்லாதொழிப்பது தொடர்பிலான சர்வதேச சமவாயம் மற்றும் ஏனைய தராதரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இவை சட்டத்திற்கு முரணானதாகும். குற்றவியல் நீதி முறையின் கீழ் தேவைப்படுத்தி இத்தகைய நடைமுறைகளுக்கு பெண்களை அல்லது பெண் பிள்ளைகளை கட்டாயப்படுத்துவது அவர்களது மனித உரிமைகளை மீறும் செயலாகும்[50]. பெண் உறுப்பு மூலமாக உட்செலுத்துகின்ற "இரண்டு விரல் சோதனை எனவறியப்படுகின்ற" முறை மூலம் வலுக்கட்டாயமாக சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்ற பொழுது இவற்றை வன்புணர்வு அல்லது சித்திரவதைக்கு நிகராகக் கருதமுடியும். இவற்றுக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். அதேவேளை இத்தகைய சோதனைகளை மையமாகக் கொண்டு கண்களினால் ஆராய்வது கூட உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, அவமதிக்கும் செயலாகவும் அமைகின்றது. இவற்றுக்கு அரசாங்கமே பொறுப்பாக இருத்தல் வேண்டும் (ஐ.நா. வின் சித்திரவதை தொடர்பான சமவாய ஆக்கத்தின் 1-16 வரை பார்க்கவும்).

---

48 உலக சுகாதார அமைப்பு (2014) காதலர்சார்ந்த வன்முறைகள் மற்றும் பாலியல் வன்முறை அடிப்படையிலான பெண்களுக்கான சுகாதார பராமரிப்புகள், ஒரு சிகிச்சை ரீதியான கையேடு, ஜெனீவா. டபிள்யு.எச்.ஓ.

49 சுயாதீன தடயவியல் நிபுணர் குழு (2015) கன்னித் தன்மைச் சோதனை தொடர்பான கூற்று தடயவியல் சட்ட மருத்துவம் தொடர்பான சஞ்சிகை 33, 121-124.

50 கொம்லி எல் (2016) பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பில் பெண்கள் நீதியைப் பெற்றுக்கொள்ளல், செயற்படுத்துனர் ஒருவரின் வழிகாட்டி, ஜுரிகளது சர்வதேச ஆணைக்குழு, செயற்படுத்துனர்களுக்கான வழிகாட்டி N°12, 239–240

## 4. ஏனைய பாதுகாப்பு நடைமுறைகள்

சாட்சியமளிப்பதற்காக வழங்கிய ஒத்துழைப்புக் காரணமாக பாதிக்கப்பட்வர்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கியவர்கள் பழிவாங்கப்படுவதற்கோ அல்லது மீண்டும் மனவடுவிற்கு உள்ளாக்கப்படுவதற்கான வாய்ப்புக்களோ வழங்கப்படுதல் கூடாது[51].

**பெட்டி 13**

### பாதுகாப்பு முறைகளுக்கான உதாரணங்கள்

ஒவ்வொரு நீதித்துறையிலும் பாதிக்கப்பட்டவர்களை அல்லது சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான நடைமுறைகள் காணப்படுகி-ன்றன. அத்தகைய நடைமுறைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியதாகவிருத்தல் சிறப்பானதாகும்:

*கட்டமைப்புச் சார்ந்தவை*

» நீதிமன்றக் கட்டமைப்பினுள் ஆண், பெண் இரு பாலாரும் நியாயமான முறையில் பிரதிநிதித்துவம் செய்யப்படல் வேண்டும்.

» பாலியல் வன்முறைக் குற்றங்களுடன் தொடர்புடைய மனவடு தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற பணியாட்கள் இருத்தல்.

» பால்நிலைக் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடுத்தல்கள் ஆகியவற்றில் சட்ட நிபுணத்துவம் பெற்ற பணியாட்தொகுதியினர்.

» பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் சாட்சிகள் தொடர்பில் நிபுணத்துவம் மிக்க பணியாட்தொகுதியினர்

*சாட்சிகளை நீதிமன்றத்திற்கு வெளியில் பாதுகாத்தல்*

» சாட்சியளித்தலின் பொழுது சாட்சியளிப்பவருக்கான போக்குவரத்து மற்றும் தங்குமிடம் போன்றவற்றுக்கு உரிய பாதுகாப்பினை வழங்கவும். மற்றும் பேட்டிகள் ஏனைய விடயங்கள் ஆகியவற்றின் பொழுதும் உரிய தொடர்புகளை மேற்கொண்டு பாதுகாப்பினை வழங்கவும்.

» சாட்சியளிப்பவருடைய வீட்டிற்கு பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் (உதாரணம், வெளிச்சுவர்கள், நுழைவாயில்கள் மற்றும் காவலாளிகள் போன்றன)

» சாட்சிகளை வேறு இடத்திற்குக் கொண்டு செல்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் (இறுதித் தீர்வாக இவை மேற்கொள்ளப்படல் வேண்டும்).

*சாட்சிகளை நீதிமன்றத்தில் பாதுகாப்பதற்கான நடைமுறைகள்*

» விசாரணைகளுக்கு பொது மக்களை அனுமதிக்காதிருத்தல்

» தொலைதூர சாட்சியமளித்தல், உதாரணமாக வீடியோ பதிவு முறை

» புனைப்பெயரில் சாட்சியமளித்தலுக்கு ஏற்பாடு செய்தல்[52]

» குரல் மற்றும் விம்பத்தை மாற்றிக்காட்டும் முறைகளைப் பயன்படுத்தல். இத்தகைய தொழில்நுட்பம் சார்ந்த வசதிகள் இல்லாத பட்சத்தில் திரைகளைப் பயன்படுத்தல்.

» சாட்சிகள் மற்றும் வழக்குத் தொடுத்தவர்கள் ஆகியோர் தங்கியிருப்பதற்கும் பிரவேசிப்பதற்கும் தனிப்பாதைகள்.

» ஒளிபரப்புக்களைத் தாமதித்தல் (தொலைக்காட்சி ஒளிபரப்பு)

» சட்டத்தரணி ஒருவரினால் பிரதிநிதித்துவம் செய்வதற்கான உரிமை

*சாட்சிக்கான உதவிகள், உதாரணமாக பாதிக்கப்பட்டவர்/சாட்சி தொடர்பிலான விசேட பிரிவு. இவை விசாரணைக்கு முன்னும் விசாரணையின் பொழுதும் விசாரணையின் பின்னரும் மேற்கொள்ளப்படல்.*

» சாட்சிகளின் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான சட்ட ஆலோசனைகளை இலவசமாக வழங்குதல்.

» நடுநிலை மிக்க ஒருவரினால் சாட்சியளிக்கின்ற முறைகள் தொடர்பில் விளக்கமளித்தல். சாட்சியளிப்பதற்கு முன்னர் நீதிமன்ற அறைக்கு விஜயம் செய்தல்.

» சாட்சியளிக்கின்ற விடயங்களைத் தயார் செய்வதற்காக முன்கூட்டியே போதியளவு அறிவித்தலையும் நேரத்தையும் வழங்குதல்.

» ஆலோசனைகள்

» உணவு மற்றும் தங்குமிட வசதிகளுடன் கூடிய நிர்வாக ரீதியான உதவிகள். உதாரணமாக, மொழிபெயர்ப்பு மற்றும் போக்குவரத்து, செலவுகளைக் கோருவதற்கான வசதிகள்

» விசாரணைச் செயன்முறை நடைபெறுகின்ற காலப்பகுதிவரை மேலதிக உதவியாக சாட்சியுடன் இணைந்து செல்வதற்கு உதவியாளர் ஒருவரை வழங்குதல். இத்தகைய விடயங்களை ஏற்பாடு செய்வது தொடர்பிலான வாய்ப்புக்களை செயற்படுத்துனர்கள் கண்டறிதல் வேண்டும். இத்தகைய குற்றச்செயல்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகளுக்கு விளக்கமளிப்பதற்காக பரந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

---

51 சான்றளித்ததன் பின்னர் குற்றம் தொடர்பான விபரங்களை மீட்டுப் பார்ப்பதன் காரணமாக உணர்வு மற்றும் உளவியல் ரீதியான அழுத்தங்கள் ஏற்படலாம். பழைய சம்பவங்களை மீட்டுப் பார்ப்பதும் தவிக்க முடியாததாகவும் போகலாம். எனவே, சான்றளிப்பதற்கு முன்னர், சான்றளிக்கும் பொழுது, சான்றளித்த பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருத்தமான உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்துகொள்ளல் வேண்டும்.

52 அதாவது, பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியின் பெயர் பயன்படுத்தப்படமாட்டாது. அத்தோடு, விசாரணையின் முன்னர், விசாரணையின் பொழுது, மற்றும் விசாரணையின் பின்னர் சகல சந்தர்ப்பங்களிலும் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளின் பெயர்களுக்குப் பதிலாக புனைப் பெயரே பயன்படுத்தப்படும் என்பதற்கான அனுமதியை முன்கூட்டியே நீதிமன்றத்திடமிருந்து பெற்றுக்கொள்ளல்.

அத்தியாயம் 5: அரசாங்கத்தின் பொறுப்பு

# அத்தியாயம் 5 உள்ளடக்கம்

**அத்தியாயம் 5: அரசாங்கத்தின் பொறுப்பு.......................................................65**

**A.** அறிமுகம் ........................................................................................65

*பெட்டி 1..........................................................................................66*
அரசாங்கப் பொறுப்புடன் தொடர்புடைய நடத்தை வகைகள்.....................................66

**B.** அரசாங்கப் பொறுப்புகளுக்கு இட்டுச்செல்கின்ற செயல்கள் மற்றும் செய்யாமல் விட்டவைகள் ..........66

*பெட்டி 2..........................................................................................68*
வழக்குச் சட்டம், உதாரணம்—COHRE v. Sudan: அரசாங்கத்திற்குரிய பொறுப்புகளின் கீழ் பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்கு, விசாரணை செய்வதற்கு, சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான கடப்பாடுகள்..........68

*பெட்டி 3..........................................................................................69*
பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்படல் மற்றும் சட்ட மற்றும் நடைமுறை சார்ந்த தடைகளுக்கு எதிரான சவால்கள் 69

**C.** மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான வகைகள் ..........................................70

1. ‘எத்தகைய உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன?’ ...........................................70
2. ‘அரசாங்கத்தின் பொறுப்பு எவ்வாறு இருக்கிறது?’.........................................71

*பெட்டி 4..........................................................................................72*
பாலியல் வன்புணர்வு ஒரு வகையான சித்திரவதை அல்லது ஏனைய விதத்தில் மோசமாக நடத்துதல் ..........72

*பெட்டி 5..........................................................................................73*
சட்ட வழக்கு - பாலியல் வன்புணர்வு ஒரு வகையான சித்திரவதை அல்லது ஏனைய விதத்தில் மோசமாக நடத்துதல் ..........73

# அத்தியாயம் 5: அரசாங்கத்தின் பொறுப்பு

## A. அறிமுகம்

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் IHRL ஆனது கடப்பாடுகளை குறிப்பிட்டுள்ளது[1]. இவற்றை அரசாங்கங்கள் மதித்தல் வேண்டும். அவற்றை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளையும் மேற்கொள்ளல் வேண்டும். சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளை அவை ஏற்றுக்கொண்டு இணங்குவதற்கு உடன்படும் பட்சத்தில் அத்தகைய உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை **மதித்துப் பாதுகாத்து அவற்றை நிறைவேற்றுவதற்கான** செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இவற்றை மதிப்பதற்கான கடப்பாடுகள் எனும்பொழுது, அரசாங்கமானது மனித உரிமைகள் செயற்பாடுகளில் தலையிடாமல் இருத்தல் வேண்டும் அல்லது அவற்றைக் குறைக்காமல் இருத்தல் வேண்டும், அவற்றை முழுமையாக அனுபவிப்பதற்கு வாய்ப்பளித்தல் வேண்டும். மக்களைப் பாதுகாப்பதற்கான கடப்பாடுகளில் தனிமனிதர் நபர்களையும் குழுக்களையும் மனித உரிமை மீறல்களிலிருந்து பாதுகாத்தல் வேண்டும். இவற்றை நிறைவேற்றுவதற்கான கடப்பாடுகள் எனும் பொழுது மனித உரிமைகளை அனுபவிப்பதற்கு அவசியமான சாதகமான வழிமுறைகளை அரசாங்கம் இலகுபடத்தல் வேண்டும்[2].

அரசாங்கம் இவை தொடர்பிலான கடப்பாடுகளுக்கு இணங்கி நடக்காத சந்தர்ப்பங்களில் சர்வதேச சட்டங்களில் உறுதிப்படுத்தப்பட்ட மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு இவற்றுக்குச் சவால் விடுக்கக்கூடியதாக இருப்பதுடன் உள்ளூர் மட்டத்தில் இவற்றை அடிப்படையாகக் கொண்டே இழப்பீடுகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். மனித உரிமைகள் செயற்பாடுகள் தொடர்பில் உள்ளூர்ச் சட்ட செயன்முறைகள் செயற்படாத பொழுது தனிமனிதர்வர்களும் குழுக்களும் முறைப்பாடுகளை மேற்கொண்டு பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொறிமுறைகளும் செயன்முறைகளும் காணப்படுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் சர்வதேச மனித உரிமைகள் தராதரங்கள் மதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளூர் மட்டத்தில நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்துகொள்வதற்கான உதவிகளை அசாங்கம் வழங்குதல் வேண்டும்.

அத்தகைய சந்தர்ப்பங்களில் பின்வருவன தொடர்பில் அரசாங்கம் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்:

(i) **தமது சொந்த செயற்பாடுகள் அல்லது செயற்படாமல் விட்டமைகள் அதிகாரம் படைத்தோரினால் செய்யப்பட்ட விடயங்கள்** அல்லது செய்யாமல் விடப்பட்ட சில விடயங்கள் ஆகியன தொடர்பிலும் அவசியமான உதவிகளை வழங்குதல்.

(ii) இவற்றை **முறையாக நிறைவேற்றுவதற்குத் தவறியமை, மனித உரிமைகள் செயற்பாடுகளைப் பாதுகாப்பதற்கு அல்லது பதிலளிப்பதற்குத்** தவறியமை போன்ற செயற்பாடுகளை அரசாங்கம் மற்றும் அரசாங்கம் சாராத செயற்பாட்டாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பொழுது அவை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இத்தகைய சந்தர்ப்பங்களில் அரசாங்கம் அறிந்திருக்கலாம் அல்லது அத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் அறிந்திருக்கக் கூடியதாகவிருந்திருக்கலாம்.

மோதல் காலப்பகுதியிலும் சமாதானக் காலப்பகுதியிலும் இரு வகையான பொறுப்புகள் எழுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இவற்றின் சூழமைவு, உண்மையான சந்தர்ப்பங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் இத்தகைய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு அரசாங்கப் பொறுப்புகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்:

» **உள்ளூர் மட்டத்தில்:** அரசியலமைப்பு, ஏனைய தேசிய சட்டங்கள், சர்வதேச உடன்படிக்கைகள் ஆகியவற்றின் கீழ் அடிப்படை உரிமை மீறல்கள் உறுதிப்படுத்தப்படுகின்ற பொழுது இவை நேரடியாக தேசிய சட்டங்களுக்கு ஏற்புடையதாகும். தேசிய சட்டங்களானவை சர்வதேச தராதரங்களுடன் வித்தியாசங்களை ஏற்படுத்துகின்ற பொழுது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அரசாங்கம் இணங்கியிருக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றுக்கு ஏற்பவே இதற்கான பொருட்கோடல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

» **பிராந்திய/ சர்வதேச மட்டங்கள்:** மனித உரிமைகள் உடன்படிக்கையின் கீழ் அடிப்படை உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்படுகின்ற பொழுது அதனோடு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறிப்பிட்ட மனித உரிமைகள் நீதிமன்றம், ஆணைக்குழு அல்லது குழு அதற்குப் பொறுப்பாகவிருக்கும். அத்தகைய சந்தர்ப்பங்களில் இவற்றைத் துரிதமாக மேற்கொள்வதற்கான பொறிமுறைகளைத் தாபிப்பதற்கான பொறுப்பினை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். அத்தோடு, இவற்றை நிறைவேற்றுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளையும் மேற்கொள்ளல் வேண்டும். கடந்த காலங்களில் உள்ளூரில் இத்தகைய மீறல்களுக்கான பரிகாரங்கள் குறைவாக இருந்திருக்கலாம். சில விசேட சந்தர்ப்பங்கள் அல்லது தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் ஆகியவற்றைத் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் பல வழக்குகளில் இத்தகைய விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. (அத்தியாயம் 3: பொறுப்பக்கூறலுக்காகன வழிகளும் நிவாரணங்களும் ஐ பார்க்க.

1 அரச பொறுப்பு என்பது குற்றவியல் தன்மை கொண்டதல்ல

2 கொம்லி எல். (2016), பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் நீதியைப் பெற்றுக்கொள்ளல், செயற்படுத்துனரது வழிகாட்டி, ஜூரர்களது சர்வதேச ஆணைக்குழு, செயற்படுத்துனர்களுக்கான வழிகாட்டி N°12, p. 50.

பெட்டி 1

### அரசாங்கப் பொறுப்புடன் தொடர்புடைய நடத்தை வகைகள்

பாலியல் வன்முறைக் குற்றங்கள் சர்வதேச மனித உரிமைகள் மீறல்களுக்கு இட்டுச்செல்வதாக அமையலாம். *அத்தகைய சந்தர்ப்பங்களில் செயற்படுவதற்கான அரசாங்கத்தின் பொறுப்புகள் பின்வருமாறு:*

» இத்தகைய குற்றங்களை அரச நிறுவனங்கள் மேற்கொள்ளல்

» அரசாங்கத்தின் அதிகாரத்துடன் அல்லது அதன் உதவியுடன் இத்தகைய குற்றங்களை தனிமனிதர்கள் அல்லது குழுக்கள் மேற்கொள்ளல்.

» அரசாங்கம் சாராத செயற்பாடுகளினால் இத்தகைய குற்றங்கள் இழைக்கப்படுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் தவறுதல்

*பதிலளித்தல் தொடர்பில் அரசாங்கத்தின் பொறுப்பு (முழுமையான பட்டியல் அல்ல):*

» அரசாங்கம் உடனடியாக வினைத்திறன் மிக்க முறையில் சுயாதீனத் தன்மையுடன் பக்கச் சார்பற்ற முறையில் மற்றும் பால்நிலைக் கூருணர்வுடைய முறையில் விசாரணைகளை மேற்கொள்ளத் தவறுதல்.

» அரசாங்கமானது பொறுப்பானவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கத்தவறுதல் மற்றும் தடை விதிக்கத் தவறுதல், இதன் காரணமாக குற்றத்தின் பாரதூரத்தன்மையைப் பிரதிபலிக்கத் தவறுதல்.

» அரசாங்கமானது போதியளவு வினைத்திறன் மிகக் முறையில் பரிகாரங்களை மேற்கொள்ளத் தவறுதல். இவற்றுள் பாதிக்கப்பட்டவர்களுக்கு பால்நிலைக் கூருணர்வுடைய இழப்பீடுகளை வழங்குதல், இத்தகைய குற்றங்களை அரசாங்கத்தைச் சாராதவர்கள் இழைத்தல் போன்றன இவற்றுள் உள்ளடங்கும்.

» அரசாங்கமானது பாதிக்கப்பட்டவர்களுக்கு சுகாதார ரீதியான பராமரிப்பு உதவிகளை வழங்குவதற்குத் தவறுதல். இவற்றுள் அவசரகால பாலியல் சார்ந்த மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரம் சார்ந்த பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை வழங்குதல், பாலியல் வன்முறையின் காரணமாக எழுகின்ற இப்பிரச்சினைகள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றன உள்ளடங்கும்.

» அரசாங்கமானது சட்ட ரீதியான செயற்பாடுகளின் பொழுது பாதிக்கப்பட்டவர்களை மேலும் பாதிப்படையக்கூடிய விதத்தில் பங்களிப்புக்களை மேற்கொள்ளல்.

» அரசாங்கமானது பாரபட்ச நடவடிக்கைகளுக்குப் பங்களிப்புச் செய்தல். இவற்றுள் மாறுபட்ட சூழ்நிலையில் பல்வேறு வகையான பாரபட்சங்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படுத்தல் ஆகியன உள்ளடங்கும். (உதாரணமாக, கல்வி, வேலை செய்கின்ற இடம், குடும்பம், சமுதாயம், சமூக சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் ஆகியன உள்ளடங்கும்)

» நேர வரையறை தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தவறுதல் மற்றும் விசாரணைகளின் முன்னேற்றம் பற்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிவித்தல் அல்லது விசாரணைகளில் பயனுறுதிமிக்க முறையில் பங்குபற்றுவதற்கான அவர்களது உரிமைகளை மறுத்தல் ஆகியன உள்ளடங்கும்.

» அரசாங்கமானது இழப்பீடுகளை வழங்குதல் தொடர்பிலான வடிவமைப்பு நடவடிக்கைகள், நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை, மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் பாதிக்கப்பட்டவர்களை உள்ளடக்குவதற்கு அரசாங்கம் தவறுதல்.

மனித உரிமைகள் வரைவுச்சட்டகத்துடன் தொடர்புடைய கருவிகளையும் பொறிமுறைகளையும் பயன்படுத்துவதற்கு அரசாங்கமே பொறுப்புமிக்கதாகும். இவற்றுள் உள்நாட்டு அரசியலமைப்பு நீதிமன்றங்கள், ஐ.நா. உடன்படிக்கைக் கண்காணிப்பு அமைப்புகள், ஐரோப்பிய, ஆபிரிக்க மற்றும் அமெரிக்க மனித உரிமைகள் முறைகள் உள்ளடங்கும் (அத்தியாயம் 3 ஐப் பார்க்கவும்: பொறுப்புக் கூறல் தொடர்பான அமைப்புகள் மற்றும் பரிகாரங்கள்)

## B. அரசாங்கப் பொறுப்புகளுக்கு இட்டுச்செல்கின்ற செயல்கள் மற்றும் செய்யாமல் விட்டவைகள்

பல்வேறு விதமான சர்வதேச மனித உரிமைகள் கருவிகளினால் பாலியல் வன்முறை தடைசெய்யப்பட்டிருக்கிறது. அடிப்படையில் ஒருவரது உடல் ரீதியான மற்றும் உள ரீதியான தன்மான உரிமைகளை மீறுவதாக இது இருக்கின்றது. அத்தோடு, சித்திரவதை, கொடூரமான நடவடிக்கைகள் மனிதாபிமானமற்ற தரக்குறைவான நடத்தைகள் ஆகியனவும் இவற்றுள் உள்ளடங்குகின்றன[3]. பாலியல் வன்முறையானது பால்நிலை அடிப்படையிலான வன்முறையென்றும் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான கட்டமைப்பு சார்ந்த பாரபட்சம் எனவும் பாதகமான பால்நிலை மாறாக் கருத்துக்களில் இவை ஆழமாக வேரூன்றியுள்ளதுடன், பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் தமது மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் ஆகியவற்றை அனுபவிப்பதற்கு இது தடையாக அமைகிறது எனவும் பெண்களுக்கு எதிரான சகலவிதமான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயம் வலியுறுத்தியுள்ளது[4] ஐக்கிய அமெரிக்காவைத் தவிர ஏனைய நாடுகள் ஏற்றுக்கொண்ட CRC குறிப்பிடுவதாவது, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் சுரண்டல் ஆகியவற்றிலிருந்து சகல பிள்ளைகளுக்கும் அவசியமான பாதுகாப்பினை அரசாங்கம் வழங்க வேண்டுமென இது குறிப்பிடுகிறது. இவற்றுள் பொருத்தமான சட்டம், நிர்வாகம், சமூக, கல்வி சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகியன உள்ளடங்கும்[5]. பிராந்திய மட்டங்களில் அமெரிக்காவுக்கு இடையிலான மனித உரிமைகள் முறையில்

---

3 பார்க்க, உதாரணமாக, ICCPR, 1966; ECHR, 1950; ACHR, சான் ஜோஸ் உடன்படிக்கை, கொஸ்ரா ரிக்கா 1989, பென்சுல் சமவாயம் 1981

4 பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களை இல்லாதொழிப்பதற்கான ஐ.நா. வின் குழு, (1992) CEDAW பொது விதப்புரைகள் இல. 19, பெண்களுக்கு எதிரான வன்முறைகள், நியுயோக்: CEDAW. பந்திகள் 7, 9, 24(a).

5 The CRC, 1989, Art 19 (1) and 34.

பெலம்டு பரா[6] சமவாயம், ஆபிரிக்க முறையிலுள்ள பல்வேறு விதமான கருவிகள்[7] , ஐரோப்பிய முறையிலுள்ள ஸ்தான்புள்[8] சமவாயம் ஆகியன பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறையை கடுமையாகவும் தெட்டத்தெளிவாகவும் தடைவிதித்துள்ளன. இவற்றுள் குறிப்பிட்ட பாலியல் வன்முறைகளும் உள்ளடங்குகின்றன.

மேலும் பாலியல் வன்முறையானது ஏனைய உரிமைகளை கணிசமானளவு மீறுவதாகவும் அரசாங்கப் பொறுப்புடன் சம்பந்தப்பட்ட ஏனைய நடைமுறை சார்ந்த உரிமைகளை மீறுவதாகவும் காணப்படுகிறது.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ளவற்றைப் பார்க்கவும். அரசாங்கத்தின் பொறுப்புடன் சம்பந்தப்பட்ட பாலியல் வன்முறை, நடத்தைகள், நிலைமைகள் ஆகியன தொடர்பிலான முழுமையற்ற பட்டியலொன்று தரப்பட்டுள்ளது[9]

*சட்டத்துடன் தொடர்புடைய அரசாங்கத்தின் பொறுப்புகள்:*

» அரசாங்க அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறைகள் (இராணுவம், பொலிஸ் போன்றோர்)[10]

» சிறைச்சாலை அதிகாரிகளின் அத்துமீறிய பௌதீகச் சோதனைகள். ஆண் காவலர்கள் பெண் கைதிகளை நிர்வாணமாக்கி சோதனை செய்தல். உடல் ரீதியான சோதனைகள் (டிஜிடல் முறையிலான சோதனைகள்)[11]

» கட்டாயக் குடும்பக்கட்டுப்பாடு

» அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அல்லது அறிவுறுத்தல்களின் கீழ் செயற்படும் நபர்கள் அல்லது குழுக்களினால் மேற்கொள்ளப்படும் பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறைகள். இவற்றுள் இராணுவ செயற்பாடுகள் மற்றும் சிறைச்சாலைகள் ஆகியவற்றை நடத்துவதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் தனிமனிதர் இராணுவம் மற்றும் பாதுகாப்பு முகவர்கள் போன்றனவும் உள்ளடங்கும்

» அரசாங்கம் சாராத செயற்பாட்டாளர்களினால் மேற்கொள்ளப்படும் பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறைகள், இவற்றுள் தனி நபர்கள் மற்றும் ஆயதக்குழுக்கள் ஆகியன உள்ளடங்கும். தனது நியாயாதிக்கத்தின் கீழுள்ள மக்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் தவறுகின்ற சந்தர்ப்பங்கள், இவர்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும்[12]. அதற்கான உரிய நடடிவக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். தனிமனிதர் நபர்களைப் பாதுகாப்பதற்கு பொலிசார் அல்லது இராணுவத்தினர் தவறுகின்ற பட்சத்தில் அல்லது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறுகின்ற சந்தர்ப்பத்தில் இவையும் அரசாங்கப் பொறுப்புக்களாகவே கருதப்படும். சில சந்தர்ப்பங்களில் இத்தகைய விடயங்கள் ஏற்படுவதுமுண்டு.

*பதிலளித்தல் தொடர்பிலான அரசாங்கத்தின் பொறுப்பு:*

» வன்முறை அல்லது துஷ்பிரயோகம் நடந்த சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வதற்குத் தவறுதல் மற்றும் தனது கடமைகளை உடனடியாக நிறைவேற்றுவதற்குத் தவறுதல், அத்தோடு, உடனடியாகவும் வினைத்திறன் மிக்க முறையிலும் சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்ற முறையிலும் உரிய முறையில் விசாரணைகளை மேற்கொள்ளத் தவறுதல், பாலியல் வன்முறைக் குற்றங்களை இழைத்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு தண்டனை வழங்கத் தவறுதல் (இவை அரசாங்க அதிகாரிகளினால் அல்லது அரச சார்பற்ற செயற்பாட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்டவையாகவிருக்கலாம்)[13] கடும் மனித

6 பெலம் டு பரா சமவாயம், 1994 (உறுப்புரை 1-3).

7 பார்க்க, உதாரணமாக, மெப்புட்டோ ஒழுங்கு மரபு, 2003 (உறுப்புரை 3(4), 4(2), 11(3), 12(1)(c)(d), 13(c), 14(2)(c), 22(b), 23(b).

8 பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் வீட்டு வன்முறைகள் ஆகியவற்றுக்கு எதிராகவும் அவற்றைத் தடுப்பதற்குமான ஐரோப்பிய சபை சமவாயம், 2011 மே 11 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது, 2014 ஆகஸ்ட் 01 இல் நடைமுறைக்கு வந்தது CETS No 210 (ஸ்தான்புள் சமவாயம்) (உறுப்புரை 2-4)

9 ECtHR சம்பந்தப்பட்ட வழக்குகள் தொடர்பான பூரணமற்ற பட்டியல், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான பாலியல் வன்முறை மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான பகுதியை தயவுசெய்து பார்க்கவும். 2016 ஜூன், http://echr.coe.int/Documents/FS_Violence_Woman_ENG.pdf.

10 பார்க்க - IACHR, ராகுல் மாட்டின் டி மெஜே வீ. பெரு வழக்கு 10.970, அறிக்கை இல. 5/96, 01 மார்ச் 1996 (மனித உரிமை பாதுகாவலரின் மனைவியை இராணுவம் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியமை) IACtHR, ரொசன்டோ காட்டோ வீ மெக்சிகோ, 31 ஆகஸ்ட் 2010 (இராணுவ மயப்பட்ட பிரதேசம் ஒன்றில் இராணுவத்தினால் அப்பிரதேச பெண் பிள்ளையொருவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை). HRC, பத்திமா மெஹல்லி வீ அல்ஜெரியா CCPR/C/110/D/1900/2009, 21 மார்ச் 2014 (அல்ஜீரிய சிவில் யுத்தக் காலப்பகுதியில் தடுப்புக் காவலில் இருந்த பெண் ஒருவரை பெண் பொலிஸார் ஒருவர் தடியொன்றைப் பிரயோகித்து பாலியல் வன்புணர்வு செய்தமை).

11 பார்க்க, IACHR, ஓ எ. ஆஜன்டீனா, வழக்கு 10.506, அறிக்கை இல. 38/96, 15 ஒக்டோபர் 1996 (சிறைச் சாலையைப் பார்வையிடச் சென்ற பெண் ஒருவரை கன்னித்தன்மைச் சோதனைக்கு உட்படுத்தியமை, 10 மற்றும் அவளது 13 வயது பெண் பிள்ளை இருவரையும் கன்னிச் சோதனைக்கு உட்படுத்தியமை).

12 பார்க்க, ACUPR, தனிமனிதர் உரிமைகள் மற்றும் நபர்களுக்கு இடையிலான உரிமைகள் தொடர்பிலான எகிப்திய முன்னெடுப்புகள், எகிப்து தொடர்பாடல் 323/06இ 16 டிசம்பர் 2011 (ஆர்ப்பாட்டம் ஒன்றின் பொழுது பொலிஸாரினாலும் தனிமனிதர் சில நபர்களினாலும் பெண் ஊடகவியலாளர் ஒருவர் பாலியல் தொல்லைக்கு உட்படுத்தப்பட்டமை).

13 பார்க்க, IACtHR, கான்சிலா எட் எல். (கொட்டன் பீல்ட்) வீ மெக்ஸிகோ 2009 நவம்பர் 16 தீர்ப்பபு (3 பெண்களை பாலியல் வன்புணர்வுக்குப்படுத்தி கொலை செய்தமை தொடர்பில் முறையாக விசாரணைகளை மேற்கொள்ளாமை சட்ட நடவடிக்கை எடுக்காமை, அவற்றைத் தடுக்காமை).

உரிமைகள் மீறல்களைப் பொறுத்தவரையில் இவற்றுள் சித்திரவதை, பாலியல் வன்புணர்வு ஆகியவற்றோடு தனது பதவியை அல்லது தொழிலை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்கெனப் பாதிக்கப்பட்டவர் பிரத்தியோகமாக முறைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை.[14] மேலும், பால்நிலை மற்றும் வயதை மையமாகக் கொண்ட கூருணர்வு முறையிலும் இரகசியத்தன்மைக்கு உரிய இடம் வழங்கப்பட்டும் பொறுப்பானவர்களை இனங்காணும் நோக்கிலும் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களுக்கு தண்டனை வழங்குவதை அடிப்படையாகக் கொண்டும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பயனுறுதிமிக்க பரிகார முறைகளை வழங்குவதையும் இழப்பீடுகளை வழங்குவதையும் நோக்காகக் கொண்டு இவர்கள் விசாரணைகளில் காத்திரமாக பங்களிப்பதற்கு வழிவகைகளை மேற்கொள்ளும் வகையிலும் இவை நடைபெறல் வேண்டும்.[15] மாநிலமொன்று இவ்வாறான கடப்பாடுகளை மீறும் போது வேறான நடைமுறை மீறல் ஏற்படும்.

» இத்தகைய கடப்பாடுகளுக்கு அரசாங்கம் இணங்காமையானது தனியான நடைமுறை சார்ந்த மீறல்களுக்கு இட்டுச்செல்கின்றன. சர்வதேச தராதரங்களுடன் ஒப்பிடுகையில் பாலியல் வன்புணர்வு தொடர்பில் உள்நாட்டு வரைவிலக்கணங்கள் சில சந்தர்ப்பங்களில் போதாதுள்ளது. மேலும் பாதிக்கப்பட்டவர்கள் உரிய முறையில் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் குன்றியதாகவும் இது காணப்படுகிறது. அதாவது பலவந்தத்தைப் பிரயோகித்தமைக்கான சான்றுகள், பாதிக்கப்பட்டவர் உடல் ரீதியாக தடுத்துள்ளார்[16] அல்லது எதிர்த்துள்ளார் என்பதற்கான சான்றுகள் அல்லது பாதிக்கப்பட்டவர்களாக ஆண்களை உள்ளடக்காமை போன்றன.

» விசாரணை நடவடிக்கை முறைகளின் பொழுது பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் பாதிப்புக்குள்ளாக்குதல். இது தனியான, தடை விதிக்கப்பட்ட மோசமான நடத்தைக்கு இட்டுச் செல்வதாகும். அதாவது, நடைமுறை தொடர்பிலான பாரபட்சமான நெறிமுறைகள் அல்லது பாலியல் வன்புணர்வு தொடர்பான இதிகாசங்கள் போன்றன.[17]

**பெட்டி 2**

### வழக்குச் சட்டம், உதாரணம்— சூடான் மனித உரிமைகள் அமைப்பு மற்றும் வீட்டு உரிமைகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் தொடர்பான நிலையம்COHRE v. Sudan: அரசாங்கத்திற்குரிய பொறுப்புகளின் கீழ் பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்கு, விசாரணை செய்வதற்கு, சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான கடப்பாடுகள்

2003 ஆம் ஆண்டில் சூடானில் டவ்பர் பிராந்தியத்தில் இடம்பெற்ற ஆயுத மோதலின் காரணமாக ஜன்ஜாவீட் எனவழைக்கப்படும் ஆயுதக் குழுவானது அப்பிராந்தியத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்களை பலாத்காரமாக வெளியேற்றியது, கொலைசெய்தது மற்றும் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியது. இது தொடர்பில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், ஆபிரிக்க ஆணைக்குழுவானது சூடான் குடியரசு மனித உரிமைகள் தொடர்பான ஆபிரிக்க சமவாயத்தின் பல்வேறு உறுப்புரைகளை மீறியதாக கண்டறிந்தது. குறிப்பாக உறுப்புரை 4 மற்றும் 5 ஆகியன உள்ளடங்கும். பாரியளவிலான சித்திரவதை, வன்புணர்வு, ஏனைய மனித உரிமைகள் ஆகியவற்றைத் தடுப்பதற்கு சூடான் தவறியுள்ளமை கண்டறியப்பட்டது. இவை டவ்பா பிராந்தியத்திலும் ஏனைய பிரதேசத்திலும் இடம்பெற்றன. அத்தோடு, இவை தொடர்பில் வினைத்திறன் மிக்க விசாரணைகளை மேற்கொண்டு சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தவறியிருந்தது (ACUPR, சூடான் மனித உரிமைகள் அமைப்பு மற்றும் வீட்டு உரிமைகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் தொடர்பான நிலையம் (COHRE) சூடான் (2005)).

---

14 பார்க்க, IACtHR, எஸ்டினோசோ கொன்சலாஸ் வ. பெரு, 2014 நவம்பர் 2 இன் தீர்ப்பு, பந்தி 241 (தடுப்புக் காவலில் சித்திரவதை எனக் கருதக்கூடிய பாலியல் வன்புணர்வு மற்றும் ஏனைய செயல்களை பொலிசார் மேற்கொண்டமை மற்றும் இத்தகைய குற்றங்களை முறையாக விசாரிக்கத் தவறியமை) ACUPR, சிம்பாபே மனித உரிமைகள் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், சிம்பாப்வே தொடர்பாடல் 245/02இ 15 மே 2006இ பந்தி. 70 (தேர்தலின் பின்னர் பரந்தளவில் காணப்பட்ட பாலியல் வன்புணர்வுகள் மற்றும் ஏனைய வன்முறைகள்).

15 பார்க்க, IACtHR, ஜே..வி. பெரு, 2013 நவம்பர் 27 தீர்ப்பு, பந்தி 393-408 (தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பெண்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் சித்திரவதைக்கும் உள்ளாக்கியமை, குற்றங்களை முறையாக விசாரணை செய்யத் தவறியமை மற்றும் நிவாரணங்கள் வழங்காமை, இற்றுள் புனர்வாழ்வு மற்றும் திருப்திகள் உட்பட மீண்டும் நிகழாமைக்கான உறுதிக் வழங்கப்படாமை) ECtHR, El-மார்ஸ்ரி வி. முன்னாள் யுகஸ்லேவியா மெக்டோனியா குடியரசு, 2012 டிசம்பர் 13 தீர்ப்பு, பந்தி 185 (பாலியல் வன்புணர்வு, ஆண் தன்பால் சேர்க்கை, அரச அதிகாரிகளினால் ஆண் கைதிகள் மோசமாக நடத்தப்பட்டமை)

16 பார்க்க, ECtHR, எம்.சீ. வீ. பல்கேரியா, விண்ணப்ப இல. 39272/98இ 4 டிசம்பர் 2003இ பந்தி. 180-182 (கட்டாயக் கடப்பாடுகளின் காரணமாக வன்முறைகள் இடம்பெற்ற பொழுது பாதிக்கப்பட்டவர் உறுதியாக அதனைத் தடுக்கவில்லை என்பதன் காரணமாக மோதலற்ற சூழ்நிலையின் பொழுது வன்புணர்வுகளை மேற்கொண்டவர்கள் விடுதலை செய்யப்பட்டமை, சர்வதேச சட்டங்களின் பிரகாரம் பலவந்தம் பிரயோகிக்கப்பட்டு பாலியல் வன்புணர்வுகள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களில் சம்மதம் தொடர்பான விடயங்களை நிரூபிக்க வேண்டியதில்லை).

17 பார்க்க, CEDAW, கரென் டயாக் வேர்டிடு வி. பிலிபைன்ஸ், தொடர்பாடல் 18/2008, ஐ.. நா ஆவணம் CEDAW/C/46/D/18/2008, 22 செப்டம்பர் 2010 (வன்புணர்வு வழங்குகளின் பொழுது பால்நிலை மாறாத் தன்மை சார் சிந்தனைகள்).

பெட்டி 3

## பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்படல் மற்றும் சட்ட மற்றும் நடைமுறை சார்ந்த நடைமுறை சார்ந்த தடைகளுக்கு எதிரான சவால்கள்

பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெற்றுக்கொள்வதற்குத் தடையாக இருக்கின்ற பல விடயங்கள் மற்றும் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் அல்லது நடைமுறைகளை உள்ளடக்கியதாக சில உள்நாட்டு சட்டங்கள் இருக்கின்றன என்பது புதிய விடயமல்ல.

- கூடாத ஒழுக்கத்தைக் குற்றமாக்குகின்ற சட்டங்கள் உடன்பாட்டுடன் நடைபெற்ற பொழுதும் கூட இவ்விதமாகக் காணப்படுகின்றன. அதாவது, பாதிக்கப்பட்டவருக்கு எதிராக இறுதியில் குற்றம் சுமத்தப்படல்.
- பெண்களையும் பெண் பிள்ளைகளையும் மாத்திரம் குற்றவாளிகளாக அங்கீகரிக்கின்ற சட்டங்கள் மற்றும்/அல்லது உடன்பாடில்லா சம பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர் குற்றவாளியாக்கப்படல், பாதிக்கப்பட்ட ஆண்களுக்கு நடைமுறை ரீதியாக நீதி வழங்குவதற்கான சாத்தியப்பாடுகள் இன்மை
- வன்புணர்வினை நிரூபிக்கும் முகமாக நான்கு ஆண்கள் சாட்சியமாக இருத்தல் சட்டம்[18] போன்ற சான்றுகள் ரீதியான தடைகள் குற்றம் இழைத்தவர் தான் இழைத்த குற்றத்தை ஏற்றுக்கொண்டால் அன்றி குற்றம் சுமத்துவது பெரும்பாலும் சாத்தியப்பாடற்றது.
- பாலியல் வன்முறையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கு அவசியமான நடைமுறை விதிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் இன்மை அத்தோடு, மீண்டும் மனவடுவிற்கு உள்ளாவதை தடுப்பதற்கான நடைமுறை விதிகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் இன்மை
- பொது மன்னிப்புகள்சட்ட ரீதியான மட்டுப்பாடுகள்[19]
- பாலியல் வன்முறை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட அதிகாரிகள் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளல்
- இழப்பீடு வழங்குவதற்கான நடைமுறை ரீதியான தடைகள், இவற்றுள் பெண்கள், ஆண்கள், பெண் பிள்ளைகள், ஆண் பிள்ளைகள் தொடர்பில் அவர்களது மாறுபட்ட அனுபவங்கள் பற்றி போதியளவு கூருணர்வு இன்மை மற்றும் மனவடுவிற்கு உள்ளான பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிபுணத்துவம் இன்மை.

இத்தகைய சட்ட ரீதியான தடைகளுக்கு எதிராக சவால்விடுத்து அரசாங்கத்தைப் பொறுப்புக் கூறக் கூடியதாக மாற்ற முடியும். பல்வேறு விதமான மனித உரிமைகள் கருவிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன அல்லது இணங்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் நடைமுறை சார்ந்த கடப்பாடுகள் மற்றும் பாதிக்கப்பட்டவரது பரிகாரத்திற்கான உரிமை ஆகியன தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

---

18 ஷரியா சட்டம் ஏற்புடைய சில நாடுகளில் குற்றமிழைத்தவர் குற்றத்தை ஒப்புக்கொண்டாலன்றி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக கூறப்படும் பெண் தான் பாலியல் வன்புணர்வுக்கு உட்பட்டதை நிரூபிக்கும் முகமாக, நான்கு ஆண் சாட்சிகளை முன்கொண்டுவர வேண்டும்.

19 மட்டுப்பாடுடைய சட்டங்கள் எனும் பொழுது குறிப்பிட்ட காலவரையறைக்குள் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். பார்க்க, சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் கீழ் கடும் மீறல்கள் தொடர்பான பாதிக்கப்பட்டவர்கள் பரிகாரத்தையும் இழப்பீடுகளையும் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகள் பற்றிய ஐ.நா.வின் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள். பொதுச்சபைத் தீர்மானம் 60/147 மூக 16 டிசம்பர் 2005, IV, ‘மட்டுப்பாடுகள் தொடர்பான சட்டங்கள்’, கொள்கைகள் 6-7.

## C. மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான வகைகள்

ஒவ்வொரு மனித உரிமைகள் பொறிமுறைக்கும் ஏற்புடைய சட்ட வரைவுச்சட்டகமானது மாறுபட்டதாகக் காணப்படுகிறது. யாருடைய உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதைத் திட்டவட்டமாகத் தீர்மானித்து அவை தொடர்பிலான விவாதங்களை மேற்கொண்டு, அத்தகைய உரிமை மீறல்கள் அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதை நிரூபிப்பதற்கு அவசியமான விடயங்களை உள்ளடக்கியதாக இது காணப்படுகிறது. பின்வரும் விடயங்களை நிரூபிப்பதற்கு அவசியமான சான்றுகளை செயற்பாட்டாளர்கள் சேகரித்தல் வேண்டும்[20]

### 1. 'எத்தகைய உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன?'

பாலியல் வன்முறையானது ஏனைய பல்வேறு வகையான உரிமைகளை மீறுவதற்கு இட்டுச்செல்வதாக அமையலாம். கணிசமான நடைமுறை சார்ந்த மீறல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன[21].

#### பாரிய மீறல்கள்

பாரிய மீறல்களானவை பாரியளவில் உரிமைகள் மீறப்படும் பொழுது ஏற்படுகின்றது. உதாரணமாக, உடல் சார் தன்மானத்திற்கான உரிமை, தனிமனிதர் பாதுகாப்பு, சுதந்திரம், உயிர் வாழ்தல், குடும்ப வாழ்க்கை, சித்திரவதை மற்றும் மோசமான நடத்தைகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ளல், சுகாதாரத்திற்கான உரிமை, பாரபட்சத்திற்கு உட்படாத உரிமை, சட்டத்தின் கீழ் சமத்துவமான பாதுகாப்பு, வினைத்திறன் மிக்க பரிகாரம் மற்றும் இழப்பீடுகளுக்கான உரிமை (பார்க்க: 4 ஆம் சதுரத்தைப் பார்க்கவும்: பாலியல் வன்புணர்வு ஒருவகையான சித்திரவதை அல்லது ஏனைய மோசமான நடத்தைகள் மற்றும் அத்தியாயம் 6: நிவாரணங்கள்)

#### நடைமுறை சார்ந்த மீறல்கள்

சில வகையான உரிமைகள் நடைமுறை சார்ந்த அம்சங்களை உள்ளடக்கியனவாகக் காணப்படுகின்றன. இவை நியாயப்பாட்டுடன் தொடர்புடையதாகவிருக்கின்றது. உரிமையைப் பிரயோகிப்பதற்கு அவசியமான நடைமுறை சார்ந்த அம்சங்களை மீறுவதானது நடைமுறை சார்ந்த மீறல்கள் எனவழைக்கப்படுகின்றன. சார்த்துரைக்கப்பட்ட கணிசமான உரிமைகள் மீறப்படுகின்ற பொழுது அவற்றை மதிப்பீடு செய்வதற்கான முக்கிய வகிபாகத்தை நடைமுறை சார் உரிமைகள் மீறல்கள் வகிக்கின்றன. கணிசமானளவு உரிமைகள் மீறப்பட்டுள்ளனவா என்பதற்கு அப்பால் சுயாதீன நடைமுறைசார் மீறல்களுக்கு இட்டுச்செல்வதாக இவை காணப்படுகின்றன.

உதாரணமாக, வினைத்திறன் மிக்க முறையில் பரிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையானது இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையை உள்ளடக்கியுள்ளதுடன், இழப்பீடுகளை அணுகிப் பெற்றுக்கொள்வதற்கு நடைமுறை சார்ந்த உரிமைகள் அவசியமாகும். அதாவது இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளும் பொறிமுறைகள் தொடர்பான தகவல்களுக்கான உரிமைகள் இத்தகைய உரிமைகள் மீறப்படுகின்ற பொழுது பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீடுகளை அணுகிப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் இழக்கப்படுகின்றன. மேலும் அரசாங்கமானது தனது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றத் தவறுகின்ற பொழுதும் உடனடியாக வினைத்திறன் மிக்க முறையில் சுயாதீனமாக பக்கச்சார்பற்ற முறையிலும் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான குற்றங்களை முறையாக விசாரிக்கத் தவறுகின்ற சந்தர்ப்பங்களிலும் சுயாதீன நடைமுறை சார்ந்த மீறல்களுக்கு அவை இட்டுச்செல்கின்றன (இவை அரசாங்க அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் அல்லது அரசு சாரா செயற்பாட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்டவையாக இருக்கலாம்).

பின்வருவனவற்றை வெளிப்படுத்துவதற்கு அவசியமான பொருத்தமான தகவல்களைச் செயற்படுத்துனர்கள் சேகரித்தல் வேண்டும்:

(i) **குறிப்பிட்ட பாலியல் வன்முறைச் சம்பவமொன்று இழைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில்** அதனை நிரூபிப்பதற்கு அவசியமான தகவல்களை சேகரித்தல் வேண்டும். அதாவது 'என்ன நடைபெற்றது' மற்றும் குற்றவியல் பொறுப்பிற்கான சூழமைவு என்ன போன்றன (அத்தியாயம் 4: தனிமனிதர் குற்றவியல் பொறுப்பு).

(ii) **அத்தகைய செயலின் காரணமாக ஏனைய பல்வேறு விதமான உரிமைகள் மீறப்பட்டிருக்கலாம்.** (உதாரணம், சித்திரவதை மற்றும் மோசமான நடத்தைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல், பாரபட்சம் காட்டாமைக்கான உரிமை, தனிமனிதர் சுதந்திரம், பிரத்தியோக விடயங்களைப் பேணுதல், சுகாதாரம், குடும்ப வாழ்க்கை, கல்வி, வேலை, வினைத்திறன் மிக்க பரிகாரம் மற்றும் நிவாரணங்கள் போன்றன). உண்மையான சூழமைவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு உரிமையும் மீறப்பட்டிருக்கின்றன என்பதைத் திருப்திப்படுத்துவதற்கு அவசியமான தகவல்களைச் சேகரித்தல். உதாரணமாக பாலியல் வன்முறையானது ஐ.நா. வின் சித்திரவதை தொடர்பான சமவாயத்தின் கீழ் சித்திரவதைக்கு உட்படாமலிருப்பதற்கான உரிமையை மீறியுள்ளதாக நிரூபிப்பதற்கு அவசியமான விடயங்கள். அத்தோடு பின்வரும் விடயங்கள் நிரூபிக்கப்படல் வேண்டும்[22].

- இத்தகைய செயல்கள் கடும் வலியை அல்லது துன்பத்தை உடல் ரீதியாகவோ அல்லது உள ரீதியாகவோ ஏற்படுத்தியிருத்தல்.
- வேண்டுமென்றே செய்யப்பட்ட செயல்
- குறிப்பிட்ட நோக்கத்தின் பொருட்டு இத்தகைய துன்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன (உதாரணமாக, குற்றவியல் ஒப்புதல் வாக்குமூலம், தண்டனை, பலவந்தம், பாரபட்சம்)

---

20 குறை தீர்த்தல் (2013) பாலியல் வன்புணர்வுக்கான குறை தீர்வுகள்: பாலியல் வன்புணர்வினை ஒருவகை சித்திரவதையாக பிரயோகித்தல் அல்லது ஏனைய மோசமான நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேச சட்டயியலைப் பயன்படுத்தல். லண்டன் குறைதீர்வு 45–100.

21 கணிசமான மற்றும் நடைமுறை சார்ந்த உரிமைகளுக்கு இடையிலான வித்தியாசமானது குறிப்பிட்டளவு பொருத்தப்பாடுகளுடன் கூடிய யதார்த்த தன்மை மிக்கதாக காணப்படுகின்றது. அத்தோடு, ஒரே வழக்கில் பலமுறை இடம்பெறுவதற்கான வாய்ப்புகளும் உண்டு. எனவே, செயற்படுத்துனர்கள் நடைமுறை சார்ந்த அம்சங்களையும் அதனோடு தொடர்புடைய மீறல்களையும் கருத்திற்கொண்டு செயற்படுவது சிறப்பானதாகும்.

22 சித்திரவதை மற்றும் ஏனைய வகை கொடூரம், மனிதாபிமானமற்ற அல்லது தரக்குறைவாக நடத்துகின்ற முறைகள் அல்லது தண்டனை தொடர்பானவைகள் மற்றும் தொடர்புபட்ட ஐ.நா. சமவாயம் 1984 டிசம்பர் 10, உறுப்புரை 1.

» அரசாங்க அதிகாரி அல்லது உத்தியோகபூர்வ கடமையில் ஈடுபட்டுள்ள நபர் ஆகியோரினால் இத்தகைய செயல்கள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் அல்லது இவர்களது ஈடுபாட்டினால் அல்லது அனுசரணையினால் இடம்பெற்றிருத்தல்.

பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படலாம், கல்வி தொடர்பான பாரபட்சங்கள் காட்டப்படலாம். உதாரணமாக, பாலியல் வன்முறையின் காரணமாக மாணவி ஒருவர் கர்ப்பம் தரிக்கும் பட்சத்தில் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படலாம். இதற்கான காரணம் கர்ப்பம் தரித்திருத்தல். ஆனால் இத்தகைய உரிமை மீறல்களை நிரூபிப்பதற்கு செயற்பாட்டாளர்கள் பின்வருவனவற்றை நிரூபித்தல் வேண்டும்:

» பாலியல் வன்முறையின் காரணமாகவே கர்ப்பம் தரிக்கப்பட்டுள்ளது

» இவ்வாறு பாதிக்கப்பட்டவர் கல்வி பயிலுபவராக இருக்கின்றார், இவற்றுள் தொழிற்பயிற்சி போன்றனவும் உள்ளடங்கும்

» கல்வி கற்பதற்கு மறுக்கப்பட்டுள்ளது

» கர்ப்பம் தரித்தமையின் காரணமாகவே கல்வி கற்பதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.[23]

(iii) இத்தகைய கோரிக்கைகளின் காரணமாகவே பாதிக்கப்பட்டவருக்கு உடல், உள மற்றும் சமூக பொருளாதார ரீதியான பாதகங்கள் ஏற்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்டுள்ள பாதகமான விடயங்கள் தொடர்பில் பூரணமாக ஆவணப்படுத்தப்படல் வேண்டும். இத்தகைய நடைமுறை சார்ந்த கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் மறுக்கின்ற பொழுது பாதிக்கப்பட்டவருக்கு அதனால் பாதகம் ஏற்படுகின்றன. அத்தோடு, இவை மனித உரிமை மீறல்கள் செயல்களாகவும் அமைகின்றன.

## 2. 'அரசாங்கத்தின் பொறுப்பு எவ்வாறு இருக்கிறது?'

பின்வருவனவற்றை நிரூபிப்பதற்கு அவசியமான தகவல்களையும் செயற்பாட்டாளர்கள் சேகரித்தல் வேண்டும்:

(iv) **குறிப்பிட்ட செயல்களைச் செய்தமை அல்லது அவற்றை அரசாங்கம் செய்யாமல் விட்டமையின் காரணமாக அல்லது அரச சார்பற்றவர்கள்** (சம்பந்தப்பட்டிருப்பின்) இவற்றைச் செய்தமை அல்லது செய்யாமல் விட்டமையின் காரணமாக குறிப்பிட்ட பாலியல் வன்முறைக்கு அல்லது ஏனைய மீறல்களுக்கு பொறுப்பாகவிருக்கின்றனர். (பெட்டி 1 இல் பட்டியலிடப்பட்டுள்ளது) தற்சமயம் உள்ள வழக்கு தொடர்பில் அரசாங்கத்தின் பொறுப்பினை நிரூபிப்பதற்கு எந்த வகையைச் சார்ந்த தகவல்கள் அவசியம் என்பதை தீர்மானித்தல் வேண்டும்.

(v) **அரசாங்கம் பின்வருவனவற்றை மேற்கொண்டதா அல்லது மேற்கொள்ளவில்லையா என்பதை செயற்பாட்டாளர்கள் கண்டறிதல் வேண்டும்** பாலியல் வன்முறை மற்றும் அதனோடு தொடர்புடைய ஏனைய வன்முறைகள் ஆகியவற்றைத் தடுப்பதற்குச் சாதகமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருந்ததா, இவற்றுள் உரிய விசாரணைகளை மேற்கொள்ளல், சட்ட நடவடிக்கைகளை எடுத்தல், பாலியல் வன்முறைக் குற்றங்களைத் தடுத்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குதல் ஆகியன உள்ளடங்கும்:

» பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் முகமாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தனவா. (உதாரணமாக, பாலியல் ரீதியாக சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த நபர் தொடர்ந்தும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதிலிருந்தும் பாதுகாக்கும் முகமாக சித்திரவதையை மேற்கொண்டவரிடமிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதை உறுதிசெய்து கொள்ளல்).

» உடனடியாக குற்றவியல் விசாரணைகளை ஆரம்பித்தல்.

» இவ்விடயம் தொடர்பான விசாரணைகளை உரிய முறையில் மேற்கொள்ளல்.

» விசாரணையின் முன்னேற்றம் தொடர்பிலான தகவல்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் வழங்குதல் மற்றும் அத்தகைய விசாரணைகளில் வினைத்திறன் மிக்க முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பங்கேற்பதற்கான வாய்ப்புக்களை வழங்குதல்.

» குற்றத்தின் தன்மையைப் பிரதிபலிக்கக்கூடிய விதத்தில் தீர்ப்பினை வழங்குதல்.

» போதியளவு இழப்பீடுகளை வழங்குதல் (பார்க்க: அத்தியாயம் 6: நிவாரணங்கள்)

» சுகாதார பராமரிப்புகளைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்தல், இவற்றுள் பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரம் தொடர்பான பொருட்கள் மற்றும் சேவைகள் உள்ளடங்கும்.

» தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு பாரபட்சம் காட்டுவதிலிருந்து பாதுகாத்தல். இவற்றுள் கல்வி, வேலை போன்றனவும் உள்ளடங்கும்.

வாய்ப்புள்ள சந்தர்ப்பங்களில், பாலியல் வன்முறை ஏற்பட்டுள்ளமை தொடர்பில் அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளன என்பதை நிரூபிப்பதற்கு அவசியமான சான்றுகளை செயற்பாட்டாளர்கள் சேகரித்தல் வேண்டும். (உதாரணமாக, ஊடக அறிக்கைகள் மற்றும் ஐ.நா. அறிக்கைகள் போன்றன). மற்றும் பதிலளித்தல்

23 கர்ப்பிணிப் பெண்களுக்கும் கல்வி அவர்களது மனித உரிமை என்பதைக் கருத்திற்கொள்ளவும். இத்தகைய கருத்தரித்தல்கள் பாலியல் வன்முறையின் காரணமாகவும் ஏற்பட்டிருக்கலாம். இங்கு பாலியல் வன்முறைக்கும் கருத்தரிப்புக்கும் தொடர்புள்ளது என்பதை செயற்பாட்டாளர்கள் கருத்திற்கொள்கின்ற அதேவேளை பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய ஏனைய வன்முறைகளையும் நிரூபித்தல் வேண்டும்.

*பாலியல் வன்புணர்வு மற்றும் ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகள் ஆகியன பாரிய சித்திரவதையாகக் கருதப்படுகின்றன...*

தொடர்பில் அவசியமான நடவடிக்கைகள் உரிய நேரத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை, குறிப்பாக தனது பதவி வழிப்பொறுப்பினை மையமாகக் கொண்டு அவசியமான விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என்பன போன்றன. இவ் வழக்கினை மேலும் வலுப்படுத்தும் முகமாக பாதிக்கப்பட்டவர் நீதியை நாடுவதில் உறுதியாக உள்ளார் என்பதை நிரூபிப்பதற்கு அவசியமான சான்றுகளை செயற்பாட்டாளர்கள் சமர்ப்பித்தல் சிறப்பானதாகும். உதாரணமாக, விசாரணை ஒன்றுக்கு அவசியமான காரணிகளாகத் திகழ்ந்த விடயங்கள் தொடர்பிலான தகவல்களை விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளைத் தொடர்புகொண்டு வழங்குதல்.

விசாணையொன்று ஆரம்பிக்கப்பட்டு ஆனால், வினைத்திறன் மிக்க முறையில் போதியளவு மேற்கொள்ளப்படாத பட்சத்தில் அல்லது வழக்கு பூரணப்படுத்தப்பட்டுள்ள பொழுது அல்லது பாதிக்கப்பட்டவர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது சார்த்துரைக்கப்பட்ட சந்தேக நபர் ஆகியோர் விசாரிக்கப்படாத பொழுது அல்லது தண்டனை வழங்கப்படாமல் குற்றம் கைவிடப்பட்டுள்ள நிலையில் அல்லது மிகக் குறைவான தண்டனைகள் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது சட்டத்தில் அநாவசியமான தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போது அல்லது பாதிக்கப்பட்டவருக்கு போதியளவு நிவாரணங்கள் வழங்கப்படாத பொழுது அல்லது பாலியல் வன்முறைக் குற்றங்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு அவசியமான போதிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வதற்குத் தவறியுள்ள பொழுது அத்தகைய சந்தர்ப்பங்களில் இத்தகைய செயல்கள் அல்லது செய்யாமல் விடப்பட்ட விடயங்கள் ஆகியன அரசாங்கத்தின் பொறுப்பினை எடுத்துரைக்கின்றன.

எவ்வாறு பொறுப்பாகவுள்ளது என்பதை நிரூபிப்பதற்குச் சேகரிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் யார் பொறுப்பு, எவ்வாறு குற்றவியல் செயலுக்குப் பொறுப்பாகின்றனர் என்பன தொடர்பிலான தகவல்களும் சேகரிக்கப்படல் வேண்டும். (பார்க்க: அத்தியாயம் 4 : தனிமனிதர் குற்றவியல் பொறுப்பு)

**பெட்டி 4**

## பாலியல் வன்புணர்வு ஒரு வகையான சித்திரவதை அல்லது ஏனைய விதத்தில் மோசமாக நடத்துதல்[24]

**குறிப்புக்கான பிரதான காரணிகள்**

» சர்வதேச மனித உரிமைக்கள் சட்டம், சர்வதேச மனிதாபிமான மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டம் ஆகியவற்றின் கீழ் மோதல் சூழ்நிலையிலோ அல்லது சமாதானச் சூழ்நிலையிலோ சித்திரவதை, கொடூரம், மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள், தரக்குறைவான செயற்பாடுகள், தண்டனை (வேறு விதமான மோசமான நடவடிக்கைகள்) ஆகியன தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தடுக்கப்பட்டுள்ளன. சர்வதேச வழக்கச் சட்டங்களின் கீழ் சகல நாடுகளும் இவற்றுக்கு கட்டுப்பட்டுப் பேண வேண்டும்.

» ஒரு செயலை தடைசெய்யப்பட்ட, மோசமான நடத்துதலாகக் கருதுவதற்கு அது கொண்டிருக்க வேண்டிய ஆகக் குறைந்த கொடூரம் அல்லது உக்கிரம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்குச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், அரசாங்கம் அல்லது அரசாங்கம் சாராதவர்களினால் பாலியல் வன்புணர்வு மேற்கொள்ளப்படுகின்ற பொழுது அது கொண்டுள்ள மோசமான நடத்துதல்களின் அடிப்படையில் தடைசெய்யப்பட்ட செயலாக அது கருதப்படுகின்றது. எனவே, சர்வதேச சட்டங்களின் கீழ் அரசாங்கங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கடப்பாடுடையனவாகும். இத்தகைய நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் அவற்றுக்கு உரிய பதிலளிப்பதற்குமான விடயங்களை மேற்கொள்வதற்கான கடப்பாடு அரசாங்கத்திற்கு உள்ளது.

» சித்திரவதை ஒருவகையான தடை செய்யப்பட்ட, மோசமான நடத்துதல் ஆகும். ஏனைய மோசமான நடத்துதல்களிலிருந்து சித்திரவதையை வேறுபடுத்திக் காட்டுவதற்கு மாறுபட்ட அமைப்புகள் மாறுபட்ட அணுகுமுறைகளைக் கொண்டுள்ளன. பொதுவாக பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு சித்திரவதை என அழைக்கப்படுகின்றது:

(i) உடலியல் ரீதியாகவோ அல்லது உளவியல் ரீதியாகவோ கடும் துன்பங்களை ஏற்படுத்தல்

(ii) வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

(iii) குறிப்பிட்ட நோக்கத்தை மையமாகக் கொண்டு அத்தகைய துன்பங்கள் இழைக்கப்படுதல் (உதாரணமாக, விசாரணைகள், பயமுறுத்துதல், தண்டனை, பழிவாங்குதல், அவமானத்திற்குட்படுத்தல், பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சம்).[25]

ஐ.நா. வின் சித்திரவதை தொடர்பான சமவாயம் மற்றும் சித்திரவதையைத் தடுப்பதற்கான அமெரிக்க சமவாயம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், சித்திரவதையானது அரச அதிகாரிகளின் ஈடுபாட்டுடன் அல்லது அவர்களின் அனுசரணையுடன் பல்வேறு அமைப்புகளில் நடைபெறுவதாகும். இருப்பினும் பல்வேறு வகையான வழக்கம் சார்ந்த சர்வதேச சட்டங்கள் மற்றும் பல்வேறு வகையான உள்நாட்டுக் குற்றவியல் நடத்தைக் கோவைகள் ஆகியவற்றின் கீழ் இது ஒரு தேவைப்பாடல்ல.

அரச முகவர்கள் அல்லது அதிகாரத்துடன் செயற்படும் நபர்கள் அல்லது குழுக்கள் ஆகியவற்றினால் இவை மேற்கொள்ளப்படுகின்ற பொழுது அல்லது அரசாங்கத்தின் உதவியுடன் அல்லது அனுசரணையுடன் இடம்பெறுகின்ற பொழுது, பாலியல் வன்புணர்வு மற்றும் ஏனைய வடிவத்திலான பாலியல் வன்முறைகள் ஆகியன பாரிய சித்திரவதையாகக் கருதப்படுகின்றன.

பெட்டி 5

## பாலியல் வன்புணர்வு ஒரு வகையான சித்திரவதை அல்லது ஏனைய விதத்தில் மோசமாக நடத்துதல்

*சர்வதேச மனித உரிமைகள் சட்ட சட்டவியல்*

தடுப்புக்காவலில் வைத்திருக்கின்ற பொழுது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சித்திரவதைகள் மற்றும் மோசமாக நடத்துதல் போன்றன ஏற்படுகின்றன. இதற்கான முக்கிய காரணம் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற நபருக்கும் அவரை தடுத்து வைத்திருக்கின்ற அதிகாரத்துவத்திற்கும் இடையில் காணப்படுகின்ற பாரிய அதிகார வித்தியாசமாகும். மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம், மனித உரிமைகளுக்கான அமெரிக்க ஆணைக்குழு, மனித உரிமைகளுக்கான அமெரிக்கர்களுக்கிடையிலான நீதிமன்றம் ஆகியன தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள நபர் ஒருவரை அரச அதிகாரிகள் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்துகின்ற பொழுது அவை சித்திரவதையாகக் கருதப்படுகின்றன[26]. பாலியல் வன்புணர்வானது ஒரு தனி நடத்தையாக அல்லது அரசாங்க வசதிகளுக்கு வெளியே நடைபெற்றாலும் கூட அவை சித்திரவதையாகவே கருதப்படுகின்றன [27].

*சர்வதேச குற்றவியல் சட்ட சட்டவியல்*

அக்காயெசு (Akayesu) வழக்கின் பொழுதே பாலியல் வன்புணர்வானது சித்திரவதையையும் உள்ளடக்கியுள்ளதாக முதன் முதலில் ICTR ஏற்றுக்கொண்டது. தடுப்புக்காவலிலுள்ள நபர் ஒருவரை வலுக்கட்டாயமாக வாய் மூலமான பாலியலுக்கு உட்படுத்துகின்ற பொழுது அத்தகைய சித்திரவதையானது ஒரு யுத்தக் குற்றங்களாக[28] ICTY அங்கீகரித்துள்ளது. மற்றும் வழமையான சர்வதேச சட்டத்தின் கீழ் பாலியல் வன்புணர்வுச் செய்களானது எவ்வித சந்தேகத்திற்குமின்றி ஒரு சித்திரவதையென இது பிரகடனப்படுத்தியது[29] . ஐ.நா. வின் சித்திரவதை தொடர்பான சமவாய.[30] வரைவுச்சட்டகத்திற்கு வெளியே தனிநபர் ஒருவரை சித்திரவதைக்கு உள்ளாக்கிய பொழுதிலும் அது தொடர்பிலான குற்றவியல் பொறுப்புகள் வழமையான சர்வதேச சட்டத்தின் கீழ் அரச அதிகாரியின் தேவைப்பாடுகள் தேவையற்றவையென குணாரக் (முரயெசயஉ) வழக்கின் பொழுது தீர்மானித்தது. மேலும் செமன்சா (Semanza) திர்ப்பின் போது இந்நிலைப்பாடே பின்னர் பின்பற்றப்பட்டது[31].

---

24 குறை தீர்த்தல் (2013) பாலியல் வன்புணர்வுக்கான குறை தீர்வுகள்: பாலியல் வன்புணர்வினை ஒருவகை சித்திரவதையாக பிரயோகித்தல் அல்லது ஏனைய மோசமான நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேச சட்டயியலைப் பயன்படுத்தல். லண்டன் குறைதீர்வு

25 ரோம் சட்டத்தின் கீழ் சித்திரவதையை ஒரு யுத்தக் குற்றமாகக் கருதுவதற்கு சில விசேட நோக்கங்கள் இருத்தல் வேண்டும். ஆனால் சித்திரவதையை மானுடத்திற்கு எதிரான குற்றமாகக் கருதுவதற்கு இது அவசியமில்லை.

26 பார்க்க, ECtHR, ஐடின் வீ. ரேர்கி, 25 செப்டம்பர் 1997 IACHR, ரெகுவர் மெஜா வீ பெரு வழக்கு 10.970, அறிக்கை இல. 5/96, 1 மார்ச் 1996; IACtHR, மிகுவர் கெஸ்ரோ- கெஸ்ரோ சிறைச்சாலை வீ பெரு. 2006 நவம்பர் 25 தீர்ப்பு.

27 பர்க்க முக்கிய குறிப்பு 91: ரொசன்டோ கென்டு வீ. மெக்ஸிகோ பந்தி 118; ஏ.டு. எ. சுவிட்சர்லாந்து, 2007 ஜனவரி 22 தீர்ப்பு, ஐ.நா. ஆவணம்/CAT/ C/37/D/262/2005, பந்தி. 8.10 IACtHR, பெர்னான்டர் ஓர்டகே எட் எல் வீ. மெக்சிகோ, 2010 ஆகஸ்ட் 30 தீர்ப்பு.

28 ICTY TJ, வழக்குத் தொடுனர் வீ. அன்டோ பேர்ருன்சிஜா வழக்கு இல. IT-95-17/1-T, 10 டிசம்பர் 1998, பந்தி. 183.

29 ICTY TJ, வழக்குத் தொடுனர் வீ. மியுசிஸ் எட். எல். வழக்கு இல. IT-96-21-T, 16 நவம்பர் 1998, பந்தி. 495-496.

30 ICTY AJ, வழக்குத் தொடுனர் வீ. ட்ரகோல்ஜப் குனரக், ராடோமிர் கோவாக் மற்றும் சொரான் வுகோவிக், 12 ஜுன் 2002, பந்தி. 146-148.

31 ICTR TJ, வழக்குத் தொடுனர் வீ. லொரன்ட் சமான்சா, 15 மே 2003, பந்தி. 342-343.

# அத்தியாயம் 6 உள்ளடக்கம்

அத்தியாயம் 6: நிவாரணங்கள்....................75

A. அறிமுகம் ....................75

B. இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள் ....................76

*பெட்டி 1*....................*77*
குற்றவியல் வழக்கு மற்றும் சிவில் நட்டஈட்டுக் கோரிக்கைகள் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்புமுறைகள் என்ன?.........77

C. நிவாரணங்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் வடிவங்கள ....................77

*பெட்டி 2*....................*79*
போதியளவு பரிகாரம் மற்றும் நிவாரணங்கள் ஆகியன எவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்?....................79

D. தீங்கினை ஆவணப்படுத்தல்....................82

# அத்தியாயம் 6: நிவாரணங்கள்

## A. அறிமுகம்

ஒரு தனிநபரது உரிமைகள் மீறப்படுகின்ற பொழுது பயனுறுதிமிக்க பரிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அவரது உரிமை தொடர்பில் சர்வதேச வழக்கச் சட்டங்கள் மற்றும் பல்வேறு வகையான சர்வதேச[1] மற்றும் பிராந்திய[2] மனித உரிமைகள் சட்டம் மற்றும் மனிதாபிமான சட்டக் கருவிகள் ஆகியவற்றில் ஓர் அங்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. CARSV இன் கீழ் (மோதல் மற்றும் கொடுமை தொடர்பான பாலியல் வன்முறை) பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு இச்செயன்முறையின் ஒரு பகுதியாகும். இது உண்மையை அறிதல், நீதியைப் பெற்றுக்கொள்ளல், இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. IHRL உடன் தொடர்புடைய உரிமைகள் முழுமையாக மீறப்படுகின்ற பொழுது அதற்கான பரிகாரங்களாக ஜர்டு மீறப்படுகின்ற பொழுது சர்வதேச சட்டங்களின் பிரகாரம் அரசாங்கங்கள் பொறுப்பாகவுள்ளன. அவற்றுள் பின்வருவனவும் உள்ளடங்குகின்றன[3]:

1. நீதி சார்ந்த மற்றும் நீதி சாராத பரிகாரங்கள் மூலமாக சமமான வினைத்திறன் மிக்க முறையிலான சட்ட அணுகுகை. இதில் உள்ளூர் சட்டத்தின் கீழான பொறிமுறைகள், நிர்வாகத்தை அணுகல் ஆகியன உள்ளடங்கும்.
2. ஏற்பட்ட துன்பத்தின் நிமித்தம் போதியளவு வினைத்திறன் மிக்க உடனடியான நிவாரணங்கள் வழங்கப்படல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள 2 ஆம் இலக்கச் சதுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பார்க்கவும், போதியளவு பரிகாரம் மற்றும் நிவாரணங்கள் எனும் போது அவை எதனைக் குறிக்கின்றன.)[4]
3. மீறல்கள் மற்றும் இழப்பீட்டுப் பொறிமுறைகள் தொடர்பான சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ளல். அதாவது, காணப்படுகின்ற சகலவிதமான மருத்துவ, உளவியல், சமூக, நிர்வாக மற்றும் ஏனைய சகலவிதமான சேவைகளையும் பொதுமக்களுக்கும் குறிப்பாக, பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் அறிவித்தல் வேண்டும். அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை அவர்களுக்குண்டு.

ரோம் சட்டம் மற்றும் ICC RPE ஆகியன இக்கொள்கைகளை உள்ளடக்கியுள்ளன. மற்றும் ICL அங்கீகரித்தமைக்கு ஏற்ப வளர்ந்து வருகின்ற முறைகளைப் பிரதிபலிக்கக்கூடிய விதத்தில் இழப்பீட்டுப் பொறிமுறையொன்றினை அறிமுகம் செய்தல் வேண்டும். வெறுமனே தண்டனை வழங்கல் முறைக்கு அப்பால் செல்ல வேண்டிய தேவை இங்கு காணப்படுகிறது. அதாவது, அதிக உள்ளடக்கமான பங்குபற்றுதலை உட்சாகப்படுத்தக்கூடிய பாதிக்கப்பட்டவருக்கு பயனுறுதிமிக்க பரிகாரங்களை வழங்குவதன் அவசியத்தை அங்கீகரிக்கக்கூடிய தீர்வுகளை நோக்கி அமைதல் வேண்டும்[5]

இழப்பீட்டு நோக்கத்திற்காக CARSV இனால் பாதிக்கப்பட்டவர்கள் எனும் பொழுது இதனை விரிவாக வரைவிலக்கணப்படுத்தல் வேண்டும். இவற்றுள் தனியாகவோ அல்லது குழுவாகவோ பாதிக்கப்பட்ட நபர்கள் அதாவது, இத்தகைய மீறல்களின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்கள், சிறுவர்கள், ஏனைய பங்காளர்கள் மற்றும் வன்புணர்வின் காரணமாக கருத்தரிக்கப்பட்ட பிள்ளைகள்

---

1 சர்வதேச மனித உரிமைகள் சட்ட மீறல்களின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகாரங்களைப் பல்வேறு வகையான சர்வதேச கருவிகளிலுள்ள செயற்பாடுகள் அதனை ஒரு உரிமையாக வழங்குகின்றன. குறிப்பாக சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் 8 ஆம் உறுப்புரை (ஏற்றுக்கொள்ளப்பட்டது 1948 டிசம்பர் 10 ஆம் திகதி) UNGA Res 217 A(III) (UDHR); ICCPR , இன் உறுப்புரை 2, சித்திரவதை மற்றும் ஏனைய கொடுமைகள் தொடர்பான சமவாயத்தின் உறுப்புரை 14, மனிதாபிமானமற்ற, தரக்குறைவான நடத்தைகள் அல்லது தண்டனை (1984 டிசம்பர் 10 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது, 1987 ஜூன் 26 முதல் நடைமுறைக்கு வந்தது) UNTS 1465 சிறுவர் உரிமைகள் உறுப்புரை 39 மற்றும் சகலவிதமான இன ரீதியான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சர்வதேச சமவாயம் (1965 டிசம்பர் 21 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது, 1969 ஜனவரி 4 முதல் நடைமுறைக்கு வந்தது) UNTS 660. அத்துடன் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் அதாவது, 1907 ஒக்டோபர் 18 இன் யுத்தம் தொடர்பான சட்டங்களையும் மரபுகளையும் மதிப்பது தொடர்பான ஹேக் சமவாயத்தின் 3 ஆம் உறுப்புரை (சமவாயம் 4): சர்வதேச ஆயுத மோதல்கள் காரணமாக பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது தொடர்பான 1949 ஆகஸ்ட் 12 ஆம் திகதி ஜெனீவா சமவாயங்களின் மேலதிக ஒழுங்கு மரபின் 91 அம் உறுப்புரை (ஒழுங்கு மரபு 1) 1977 ஜூன் 8: மற்றும் ICC இன் ரோம் சட்டத்தின் உறுப்புரைகள் 68 மற்றும் 75.

2 சர்வதேச மனித உரிமைகள் மீறல்களின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகாரங்களை ஓர் உரிமையாக பல்வேறு பிராந்திய சமவாயங்களின் ஏற்பாடுகளும் வழங்குகின்றன. குறிப்பாக வெஞ்சால் பட்டயத்தின் 7 ஆம் உறுப்புரை, ஆபிரிக்க நீதிமன்றச் சட்டம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஒழுங்கு மரபின் 45 ஆம் உறுப்புரை (ஆபிரிக்க நீதிமன்றம் மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் ஒழுங்கு மரபின் பிரகாரம் உறுப்புரை 20 இனால் திருத்தப்பட்டது). ACHR இன் 25 ஆம் உறுப்புரை மற்றும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான சமவாயத்தின் 13 ஆம் உறுப்புரை (1950 நவம்பர் 04 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது, 1953 செப்டம்பர் 03 இல் நடைமுறைக்கு வந்தது) ETS 5.

3 சர்வதேச மனித உரிமைகள் சட்டம் பாரியளவில் மீறப்பட்டமையினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகாரம் மற்றும் இழப்பீடுகளுக்கான உரிமைகள் தொடர்பான அடிப்படைக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள், ஐ.நா. பொதுச்சபைத் தீர்மானம் A/RES/60/147 (21 மார்ச் 2006) (பரிகாரம் மற்றும் நிவாரணங்கள் தொடர்பான ஐ.நா. வின் அடிப்படைக் கொள்கைகள்)இ VII 'பரிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான பாதிக்கப்பட்டவர்களின் உரிமை, கொள்கை 11.

4 சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான உரிமைகள் ஆகியவற்றை மீறியமையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை அரசாங்கம் வழங்க வேண்டுமென IHRL குறிப்பிடுகிறது. உரித்துடைய நபருக்கு வேறேதாவது நாடு இழப்பீடுகளை வழங்குவதற்கு மறுக்கும் பட்சத்தில் பாதிக்கப்பட்டவர் எந்த நாட்டுப் பிரஜையோ அந்த நாடு அவருக்கான உரிமைகளை வழங்கி அவருக்கான இழப்பீடுகளை வழங்கி அவரது உரிமைகளை நிலைநிறுத்தல் வேண்டும். குறிப்பாக ஐ.நா. வின் பரிகாரம் மற்றும் நிவாரணங்கள் தொடர்பான அடிப்படைக் கொள்கையில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொள்கைகள் 1 (c), 3(d), 11, 13, 15, 16.

5 ICC வழக்குத் தொடுனர் வீ. தோமஸ் லுபங்கா டிலியோ, இழப்பீட்டுக் கொள்கைகள் தொடர்பான தீர்ப்பு, ICC-01/04-01/06-3129, 3 மார்ச் 2015, பின்னிணைப்பு அ (லுபன்கா திருத்தப்பட்ட நிவாரணங்கள் கட்டளை), பந்தி 1.

*மோதல் மற்றும் கொடுமையுடன் தொடர்புபட்ட பாலியல் வன்முறையினால் (CARSV) பாதிக்கப்பட்டவர்களுக்கு நிர்வாக ரீதியான இழப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களே விரும்பத்தக்க இழப்பீட்டு வடிவங்களாகும்...*

ஆகியோரும் இவற்றுள் உள்ளடங்குவர். பாலியல் வன்முறையின் காரணமாக பாதிக்கப்பட்டவரும் தங்கியிருந்த நபர்களும் பாதிக்கப்பட்ட நபர்களாகவே கருதப்படுவர். மேலும் வன்முறை பிரயோகிக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட பின்விளைவுகளினால் பாதிக்கப்பட்டவர்களும் இவற்றுள் உள்ளடங்குவர். பாதிக்கப்பட்டு நிர்கதிக்குள்ளானவர்களுக்கு உதவிசெய்வதற்கு முன்வந்தோர்கள் மற்றும் இடையீட்டுச் செயற்பாடுகளை மேற்கொண்டதனால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காக முன்வந்து பாதிக்கப்பட்டவர்கள் போன்றோரும் பாதிக்கப்பட்ட நபர்களாகக் கருதப்படுவர [6]

## B. இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள்

முரண்பாடு மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை CARSV இனால் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக உள்நாட்டிலும் பிராந்தியத்திலும் அல்லது சர்வதேச மட்டங்களிலும் மாறுபட்ட இழப்பீட்டு வடிவங்களை நாட முடியும்:

» **சிவில் வழக்குத் தொடுத்தல்** மூலம் அதாவது, ஒரு நபருக்கு எதிராக நட்டஈடுகளைக் கோரி வழக்குத் தாக்கல் செய்தல் அதாவது, உள்நாட்டில் பாலியல் வன்முறைக் குற்றங்களுக்குப் பொறுப்பான நபர் அல்லது கூட்டுத்தாபனம் அல்லது ஏனைய அமைப்புகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து நட்டஈட்டைக் கோருவதாகும்.

» **மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வழக்குத்தாக்கல்** செய்தல். அதாவது உள்நாட்டில் சிவில் அல்லது அரசியலமைப்பு ரீதியான கோரிக்கைகளை விடுத்தல், அதன் நிமித்தம் வழக்குத்தாக்கல் செய்தல், அல்லது தேசிய அல்லது பிராந்திய அல்லது சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறைகள் முன்னிலையில் முறைப்பாடுகளை மேற்கொள்ளல் (உதாரணமாக, NHRI, ஒம்புட்ஸ்மன், நீதிமன்றம், ஆணைக்குழு அல்லது பொறுப்பான அரசுடன் தொடர்புடைய ஆணைக்குழு அல்லது குழு). (பார்க்க: அத்தியாயம் 5: அரசாங்கத்தின் பொறுப்பு)

» **குற்றவியல் வழக்குத் தொடுத்தல்** மூலமாக அதாவது சட்டத்தினால் இழப்பீட்டிற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பட்சத்தில் அத்தகைய சூழமைவில் நட்டஈட்டிற்கான கோரிக்கையை அல்லது மீட்டளிப்பிற்கான கோரிக்கையை முன்வைத்து குற்றவியல் சார் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் (பார்க்க: சதுரம் 1: குற்றவியல் ரீதியாக வழக்குத் தொடுத்தலுக்கும் சிவில் நட்டஈடுக் கோரிக்கைகளுக்கும் இடையிலான தொடர்புமுறைகள் என்ன?)

» **இழப்பீடுகளுக்கான நிர்வாக ரீதியான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள்.** வன்முறைகள் பாரியளவில் நடைபெற்ற சந்தர்ப்பங்களில் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான அருகதையுள்ளவர்களாக இருக்கின்ற பொழுது இழப்பீடுகளை அரசாங்கம் வழங்குதல் வேண்டும். இவற்றுள் தமது கடப்பாடுகளை நிறைவேற்ற மறுக்கின்ற அல்லது விருப்பமற்ற ஏனைய அரசுகளும் உள்ளடங்கும். பல்வேறு காரணிகளின் நிமித்தம், CARSV இனால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகளை வழங்குவது தொடர்பில் நிர்வாக ரீதியான இழப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் விரும்பத்தக்கது. (உதாரணம், மன வடுவினைத் தவிர்த்தல், அனுகிப் பெறுகைகளை இலகுபடுத்தல், நேரம் தொடர்பானவைகள்) மேலும் நிர்வாக ரீதியான நிவாரணங்கள் நிகழ்ச்சித்திட்டமானது CARSV இனால் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான இழப்பீடுகளை உள்நாட்டு அல்லது சர்வதேச நீதி மன்றங்கள் மூலமாக பெற்றுக்கொள்வதைத் தடுத்தல் கூடாது. நிர்வாக ரீதியான நிவாரணங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இவர்கள் கருத்திற்கொள்ளப்பட்டு உரிய நிவாரணங்கள் வழங்கப்படல் வேண்டும்[7]

» **பாதிக்கப்பட்டவர்களுக்கான ICC நம்பிக்கை நிதியம்** மூலம் வழங்குதல். ICC இன் நியாயாதிக்கத்தின் மூலம் அதன் இரண்டு வகையான தனியான நிவாரணங்கள் மற்றும் உதவியளித்தல் ஆணையின் கீழ் இனப்படுகொலை, மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் யுத்தக் குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்குவது இதன் செயற்பணியாகும். CARSV இனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யும் TFV இன் ஆணையின் கீழ் வளங்களும் குறிப்பிடக்கூடிய நிதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன[8].

---

6 மோதல்களுடன் தொடர்புடைய பாலியல் வன்முறைகள் பற்றிய நிவாரணங்கள் தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் வழிகாட்டிக் குறிப்புகள் நியுயோக் UN. p. 3.

7 பார்க்க, குறிப்பாக, ஐ.நா. குறைதீர்த்தல் மற்றும் நிவாரணங்கள் தொடர்பான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள், குறிப்பு 3, கொள்கை 16, CRSV நிவாரணங்கள் தொடர்பான ஐ.நா. வழிகாட்டல் குறிப்புகள். தலைப்பு 6, பக்கம் 6, ஐ.நா. சித்திரவதை சமவாயம் தொடர்பான சித்திரவதைக்கு எதிரான குழுவின் 3 ஆம் இலக்கப் பொதுக் கருத்துக்கள்இ 19 நவம்பர் 2012 (CAT GC No 3), பந்தி 29.

8 (i) நிவாரணங்கள் ஆணை: குற்றமிழைத்த நபர் ஒருவருக்கு எதிராக ICC இன் கட்டளைப் படி இழப்பீடுகளை வழங்குதல் (ii) உதவி ஆணை: ICC நியாயாதிக்கத்தின் கீழ் ஏனைய வளங்களைப் பாவித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல். அதாவது உடலியல் ரீதியான புனர்வாழ்வு, உளவியல் சார் புனர்வாழ்வு, மற்றும்/ அல்லது பொருள் ரீதியான உதவிகள். உதவிகளுக்கும் இழப்பீடுகளுக்கும் இடையிலான பிரதான வித்தியாசம் என்னவெனில், இழப்பீடுகளானது பொறுப்புக்கூறலுடன் தொடர்புடையதாகும். குற்றமிழைத்த நபர் ஒருவர் தொடர்பில் தனிமனிதர் குற்றவியல் பொறுப்புகளுடன் தொடர்புடையது. ஆனால் உதவி ஆணையுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றி அறிந்துகொள்வதற்கு ரோம் சட்டத்தின் 79 ஆம் உறுப்புரை மற்றும் 98 ஆம் விதி ஆகியவற்றைப் பார்க்கவும் (1-5) ICC RPE ; ICC TFV இணையத்தளம் யவ http://www.trustfundforvictims.org/.

**பெட்டி 1**

**குற்றவியல் வழக்கு மற்றும் சிவில் நட்டஈட்டுக் கோரிக்கைகள் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்புமுறைகள் என்ன?**

நியாயாதிக்கத்திற்கு ஏற்ப குற்றவியல் வழக்குத் தொடுத்தல் மற்றும் சிவில் செயற்பாடுகள் ஆகியவற்றை சமகாலத்திலோ அல்லது மாற்றீடாகவோ மேற்கொள்ள முடியும். சில சூழமைவுகளைப் பொறுத்தவரை குற்றவியல் வழக்குத் தொடுத்தாலன்றி சிவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. இது இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளைக் கடுமையாக்குவதுடன், சர்வதேச தராதரங்களுக்கு[9] முரண்பட்டதாகவும் காணப்படுகிறது. ஆனால் சில இடங்களில் குற்றவியல் சார் வழக்குத் தொடுப்பதற்கு முன்னரே சிவில் நட்டஈட்டுக் கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. சில வழக்குகளைப் பொறுத்தவரையில் குற்றவியல் வழக்குத் தொடுத்தல் நடைமுறையின் ஓர் அங்கமாக சிவில் கோரிக்கைகள் காணப்படுகின்றன. அதாவது குற்றவியல் நீதிமன்றத்தின் மூலமாகவே நட்டஈடுகளை வழங்குவதற்கான தீர்ப்புகள் நேரடியாக வழங்கப்படுகின்றன[10]

## C. நிவாரணங்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் வடிவங்கள்

பிரதான பரிசீலனைகள் மற்றும் நிவாரணங்கள் தொடர்பான கொள்கைகள்:[9]

» இழப்பீடுகளானவை பாதிக்கப்பட்டவர் மையமாகவும் பால்நிலை கூருணர்வு மிக்கதாகவும் போதியளவு, வினைத்திறன் மிக்கதாகவும் முழுமையானதாகவும் அத்தோடு, பாதிக்கப்பட்டவரது குறிப்பிட்ட தேவைகளை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டதாகவும் இருப்பதோடு, இழைக்கப்பட்ட துன்பத்தின் தன்மைக்கு ஏற்ப பொருத்தமுடையதாக இருத்தல் வேண்டும். CARSV இனால் பாதிக்கப்பட்டவர்களுக்கான போதியளவு நிவாரணங்கள் இவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். அதாவது, இழைத்த தீங்கிற்கான மாற்றீடு, நட்டஈடு, திருப்தியுடையதாயிருத்தல், புனர்வாழ்வளித்தல், மீண்டும் நிகழாதிருத்தல் போன்றவற்றை உறுதிசெய்யக் கூடியதாகவிருத்தல் வேண்டும் (சதுரம் 2 ஐப் பார்க்கவும்: போதியளவு பரிகாரம் மற்றும் நிவாரணங்கள் ஆகியவற்றை எவை உள்ளடக்கியுள்ளன?).

» CARSV இனால் பாதிக்கப்பட்டவர்கள் தமது உரிமையின் ஓர் அங்கமாக உடனடியாக, போதியளவு, பயனுறுதி மிக்க பரிகாரங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நீதி மற்றும்/ நிர்வாக ரீதியான நிவாரணங்கள் இருத்தல் வேண்டும். பாரியளவில் வன்முறைகள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களில் இவ்வன்முறைக்கு அல்லது மீறலுக்குப் பொறுப்பான தரப்பினர் இழப்பீடுகளை வழங்க விருப்பமற்றவர்களாக இருக்கின்ற பொழுது அல்லது மறுக்கின்ற பொழுது பாதிக்கப்பட்டவர்களுக்கான ஏனைய உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அல்லது நிர்வாக ரீதியான இழப்பீடுகளை வழங்குவதற்கான பொறிமுறைகளை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்[10]

» பாரியளவில் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் நீதிமன்றங்களை நாடுவதை விட நிர்வாக ரீதியான இழப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நாடுகின்ற பொழுது அவற்றை இலகுவாகவும் உரிய நேரத்திலும் பலரை உள்ளடக்கிய முறையிலும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் எளிமையானவையாக இருத்தல் வேண்டும். அத்தோடு, நிர்வாக ரீதியான அதிகாரிகள் எளிய முறையில் இவற்றை மதிப்பீடு செய்து மிகக் குறைவான முறை சார்ந்த முறையில் இழப்பீடுகளை வழங்குதல் வேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களை பொதுமக்கள் இனங்காணாமல் இருப்பதுடன் அவர்களுக்கு ஏற்படக்கூடிய மனவழுத்தம், செலவு, சிக்கல்கள் ஆகியவற்றைத் தவிர்ப்பதோடு, சட்ட நடவடிக்கைகளுக்காக தேவைப்படுகின்ற நேரத்தை விட அவை குறைவானதாக இருத்தல் வேண்டும்.

» நிர்வாக ரீதியான நிவாரணங்கள் நிகழ்ச்சித்திட்டத்தைப் பெற்றுக்கொள்வதானது தேவையற்ற விதத்தில் நேர மட்டுப்பாடுகளைக் கொண்டிருத்தல் கூடாது. நிவாரணங்கள் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான தகவல்களை இவை தொடர்பிலான உதவிகளைப் பெறவிருப்பவர்களுக்கு அல்லது விண்ணப்பதாரிகளுக்கு உரிய நேரத்தில் அறிவித்தல் வேண்டும். இவற்றுள் இவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள், உள்ளடக்கப்படுவதுடன் போதியளவு நேரம் இதற்கென வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

» நிவாரணங்கள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டமானது பொருட்கள் மற்றும்/ அல்லது குறியீட்டு நிவாரணங்கள் மற்றும் தனிநபர் ஒருவருக்கு அல்லது கூட்டு அடிப்படையில் வழங்க முடியும். தனி நபர்களுக்கான நிவாரணங்கள் மற்றும் கூட்டு நிவாரணங்கள் ஆகியன மாறுபட்ட நோக்கங்களின் நிமித்தம் வழங்கப்படுகின்றன. குழுக்களுக்கான இழப்பீடுகளானது தனி நபர்களுக்கான இழப்பீட்டிற்கு மாற்றீடாக இருத்தல் கூடாது. CARSV இனால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கூட்டு இழப்பீடுகளானது அந்தரங்கத்தைப் பேணுகின்ற அதேவேளை, மனவடுவைத் தடுப்பதாகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களில் தனி நபர்களுடைய பெயர்களைக் கோருவது அவசியமில்லை. அத்தோடு, பாதிக்கப்பட்டவர்கள் வாழுகின்ற சமூகத்தில் அவர்களை ஒருங்கிணைப்பதற்கான இலக்குகளைக் கொண்டதாகவும் வாழ்வாதாரம் மற்றும் வலுவூட்டல் கருத்திட்டங்களை மேம்படுத்தக் கூடியதாகவும்

9 இத்தகைய முடிவுகள் அடிப்படையில் ஐ.நா. வின் குறை தீர்த்தல் மற்றும் நிவாரணங்கள் தொடர்பிலான ஐ.நா. வின் அடிப்படைக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. முக்கிய குறிப்பு 3, லுபானா அமென்ட் நிவாரணங்கள் கட்டளை, முக்கிய குறிப்பு 5 CRSV, நிவாரணங்கள் தொடர்பான ஐ.நா. வழிகாட்டல், முக்கிய குறிப்பு 6

10 குறை தீர்த்தல் மற்றும் நிவாரணங்கள் தொடர்பான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகள் முக்கிய குறிப்பு 3 IX துன்பப்பட்ட தீங்குகளுக்கான நிவாரணங்கள், கொள்கை 16

## *நிவாரணங்கள் தொடர்பான வடிவமைத்தல்கள், நடைமுறைப்படுத்தல்கள், தாக்கங்கள் ஆகியன மாற்றத்திற்கான முயற்சிகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்....*

இருத்தல் சிறப்பானதாகும்.

» இழப்பீடுகளானது அதன் வடிவமைப்பு, நடைமுறைப்படுத்தல், தாக்கம் ஆகியவற்றில் புதிய மாற்றத்தினை ஏற்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். பாலியல் வன்முறைக்கு அடிப்படைக் காரணியான கட்டமைப்பு சார்ந்த சமத்துவமின்மைகள் மற்றும் பால்நிலை மாறா நிலைகள் போன்றவற்றுக்குச் சவால் விடுக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும். CARSV இனால் பாதிக்கப்பட்டவர்கள் காத்திரமான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவர்களாகவும் இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் தன்னை வலுப்படுத்தக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

» திட்டமிடல், வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல், இழப்பீடுகளை மேற்பார்வை செய்தல், மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் CARSV இனால் பாதிக்கப்பட்டவர்களது பங்களிப்பும் ஆலோசனைகளும் அர்த்தமுள்ளவைகளாக இருத்தல் வேண்டும். இதனை காத்திரமான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெளிக்கள நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் உட்சாகப்படுத்த முடியும். இத்தகைய சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையாக அறிவிக்கப்பட்டுள்ளது, சகலரும் இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கின்றார்கள், ஓரங்கட்டப்பட்ட மக்களோ அல்லது யாராவது பாதிக்கப்பட்டவர்களோ இவற்றிலிருந்து தவிர்க்கப்படவில்லை என்பதை உறுதிசெய்துகொள்வதோடு, இவை பால்நிலைக் கூருணர்வு மிக்கதாகவும் கலாசாரத்திற்கு உகந்ததாகவும் இருத்தல் வேண்டும். அத்தோடு, எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் எச்செயற்பாடுகள் தமக்கானது என்ற உணர்வு மிக்கதாகவும் இருத்தல் வேண்டும்.

» பாதிக்கப்பட்டவர்களை முன்வருவதற்காக உட்சாகப்படுத்துவதற்காகவும் இச்செயன்முறையில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் மேலதிக பாதிப்புக்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் முகமாகவும் இழப்பீடுகளை வழங்குகின்ற சகல செயன்முறைகளின் பொழுதும் அந்தரங்கம் மற்றும் இரகசியத்தன்மை ஆகியன தொடர்பிலான பரிசீலனைகளை மேற்கொள்வது அவசியமாகும் (அத்தியாயம் 7 ஐப் பார்க்கவும்: பாதிப்புக்களை ஏற்படுத்த வேண்டாம்/ இரகசியத்தன்மை) திட்டமிடல் நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் போன்ற விடயங்களை இழப்பீடுகளை வழங்குகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் பொழுது பாதிக்கப்பட்டவர்கள் காத்திரமாக பங்குபற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அதேவேளை, அவர்களது அந்தரங்க உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது, அத்தோடு, அநாமதேயக் கோரிக்கைகளும் கோரப்படக்கூடாது.

» CARSV இனால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான உடனடித் தேவைகளுக்கு பதிலளிக்கும் முகமாக தற்காலிக, உடனடி இடைக்கால இழப்பீடுகளை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருதல் வேண்டும். அவசர நிர்வாக ரீதியான நிவாரணங்கள் நிகழ்ச்சித்திட்டமானது பெண்களுக்கான சிகிச்சை, வைரஸ் நோக்கு எதிரான மருந்துகள், பாதுகாப்பான கருக்கலைப்புச் சேவைகள், முன் பிரசவ பராமரிப்புகள், பிரசவம் மற்றும் பிரசவத்திற்குப் பின்னரான சேவைகள், உளவளச் சேவைகள் மற்றும் ஏனைய அவசியமான சேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

» குற்றவியல் பொறுப்பினை நிரூபித்தல் மற்றும் இழப்பீடுகளை வழங்குதல் ஆகியன தொடர்பில் சில கடும் செயற்பாட்டுத் தன்மைகள் காணப்படுவதன் காரணமாக பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான இழப்பீடுகளைச் செவிமடுக்கின்ற நீதிமன்றங்கள் மற்றும் ஏனைய அமைப்புகள் பின்வருவனவற்றையும் கருத்திற்கொள்ளல் வேண்டும்:

- குற்றவியல் சார் வழக்குத் தொடுத்தலுக்கு அவசியமான கடும் தராதரங்களை விட நிரூபிப்பதற்கு அவசியமான எளிய தராதரங்களைப் பிரயோகித்தல் வேண்டும். (உதாரணமாக, எவ்வித சந்தேகமும் இன்றி நிரூபிக்கப்படல் வேண்டும் என்பதற்குப் பதிலாக சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதன் அடிப்படையில் பரிசீலித்தல்[11]
- பாதிக்கப்பட்டவரின் நலனைப் பாதுகாப்பதனை மையமாக்க கொண்டு (CARSV இனால் பாதிக்கப்பட்டவர்கள்) விதிகளும் நடைமுறைகளும் உருவாக்கப்படல் வேண்டும் (உதாரணமாக, உறுதிப்படுத்தல் அவசியமில்லை) [12]
- பாலியல் வன்முறை தொடர்பான சான்றுகள் பற்றிய நோக்கெல்லையை விரிவுபடுத்தல். உதாரணமாக, ஏனைய சாட்சிகளிடமிருந்து சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல், விஞ்ஞான நிபுணர்களது சான்றுகள். அதாவது, உளவியலாளர்கள் மற்றும் சமூகவியலாளர்களிடமிருந்து சான்றுகளைப் பெற்றுக்கொள்கின்ற பொழுது அவை பாதிக்கப்பட்டவர்களது நடத்தைகள், தெரிவுகள், தேவைகள் என்பவற்றைப் புலப்படுத்தும்.

» அபிவிருத்தி தொடர்பான ஒத்துழைப்புகள் மற்றும் உதவிகள் ஆகியன இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்வதற்கான அரசாங்கத்தின் கடப்பாட்டிற்கு உதவி செய்தல் வேண்டும். இருப்பினும் இழப்பீடுகளை வழங்குவது தொடர்பிலான அரசாங்கத்தின் வகிபாகத்திற்கு மாற்றீடாக இவை இருத்தல் கூடாது[13]

---

11 லுபென்கா திருத்தப்பட்ட நிவாரணங்கள் கட்டளை முக்கிய குறிப்பு 5 பந்தி 22: 'நிவாரணங்கள் செயன்முறையின் அடிப்படையில் மாறுபட்ட தன்மைகளைக் கருத்திற்கொண்டு தராதரம் மிக்க முறையொன்றினை தெரிவு செய்தல் சிறப்பானதாகும். இதன் பொழுது வழக்குத் தொடுப்பவர் எவ்வித சந்தேகத்திற்கு இடமின்றி உண்மைகளை நிரூபிக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும். நிவாரணங்கள் செயன்முறைகள் தொடர்பில் தராதரம் மிக்க பொருத்தமான முறையொன்றைத் தீர்மானிக்கையில் வழக்குடன் தொடர்புடைய தனித்துவமான அம்சங்களைப் பரிசீலித்தல் வேண்டும். இவற்றுள் சான்றுகள் அல்லது அதனோடு தொடர்புடைய விடயங்கள் இன்மையின் காரணமாக நிரூபிப்பதற்கு ஏற்ற ஆதாரங்கள் இன்றி பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

12 சில நாடுகளைப் பொறுத்தவரையில் அங்கவீனர்களுக்கான ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளும் முகமாக பாதிக்கப்பட்டவர்கள் சில விடயங்களை உறுதிப்படுத்த வேண்டிய தேவையுடையவர்களாக இருக்கின்றனர். சில வேளைகளில் இவற்றை நிரூபிப்பதற்கு ஏற்ற ஆதாரங்கள் இல்லாத பொழுது பாதிக்கப்பட்டவர்கள் இத்தகைய நலன்களைப் பெறமுடியாத சந்தர்ப்பங்களும் உள்ளன. இவர்களுக்கான பாதுகாப்பு உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமலும் போகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன.

13 CRSV தொடர்பான நிவாரணங்கள் பற்றிய ஐ.நா. வழிகாட்டிகள் குறிப்பு, முக்கிய குறிப்பு 6 பக்கம் 9-10

# *பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பண ரீதியான இழப்பீடுகளை மாத்திரம் பரிகாரமாக வழங்குவது போதாது*

பெட்டி 2

## போதிய பரிகாரம் மற்றும் தீர்வு என்பது உள்ளடக்க வேண்டிய விடயங்கள்?

சர்வதேச சட்டம் மற்றும் நடைமுறைகளின்[16] கீழ் இழப்பீடுகளானது பாதிக்கப்பட்டவர்களை அடிப்படையாக கொண்டதாகவும், பால்நிலை உணர்திறன் , போதிய, வினைத்திறன் மற்றும் பூரணத்துவம் மிக்கதாக அத்தோடு, பாதிக்கப்பட்டவர்களது தனித்துவமான தேவைகளைக் கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்டதாக, இழைக்கப்பட்ட துன்பத்தின் தன்மையைக் கருத்திற்கொண்டு அதற்கு ஏற்ற விதத்தில் உருவாக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். CARSV இனால் பாதிக்கப்பட்டவர்கள் பின்வரும் ஐந்து அம்சங்களை உள்ளடக்கிய இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடையவர்களாவர்[17]:

**1. பரிகாரம் (இழைத்த தீங்கிற்கான மாற்றீடு)**

» இது சாத்தியமான எல்லா வகையிலும் பாதிக்கப்பட்டவரை வன்முறை நிகழ்வதற்கு முன்னர் இருந்த நிலைமைக்குக் கொண்டுவருவதைக் குறிக்கின்றது.

» இவற்றுள் அவர்களின் வீடு காணி, சொத்துக்களை புனர்நிர்மானம் செய்தல் அல்லது வேறு இடத்தில் குடியமர்த்தல், கல்வி மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களை பெற்றுக்கொடுத்தல், சுதந்திரம், வேலைவாய்ப்பு மற்றும் ஏனைய மனித உரிமைகளை அனுபவித்தலை மீண்டும் உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

» பரிகாரம் காண்பது மாற்றமடையக்கூடியதாக இருப்பதற்கு மீளஉருவாக்குதல் மீது கவனம் செலுத்துவது போதாது ஏற்கனவே காணப்படும் பால்நிலை சமத்துவமின்மைகள் மற்றும் வன்முறை மற்றும் பாரபட்சம் போன்றவற்றுக்கு உதவும் சமூக சமத்துவமின்மைகள் போன்றவற்றுக்கு இட்டுச்செல்லலாம். (கீழுள்ள நிலைமாற்று இழப்பீடுகளைப் பார்க்கவும்).

**2. நட்டஈடு**

» பொருத்தமான வகையில் பொருளாதார ரீதியில் மதிப்பிடக்கூடிய பாதிப்புக்களுக்கு பண ரீதியான நட்டஈடுகளை வழங்குவதை கருதுகின்றது.

» (i) உடல் மற்றும் உளவியல் சார்ந்த பாதிப்புகள் (ii) வேலைவாய்ப்புகள், கல்வி, திருமணம், குடும்ப வாழ்க்கை, சமூக போன்றவற்றை உள்ளடக்கிய இழக்கப்பட்ட வாய்ப்புகள், (iii) பொருள் சார்ந்த இழப்புகள், வருமானத்தை இழத்தல், வருமானத்திற்கான வாய்ப்புகள் (iv) ஒழுக்கம் அல்லது உளவியல் சார்ந்த பாதிப்புகள், (v) மருத்துவச் செலவுகள் மற்றும் எதிர்கால புனர்வாழ்வுச் சேவைகளுக்கான செலவு மற்றும் சட்ட மற்றும் ஏனைய நிபுணத்துவம் சார்ந்த சேவைகளுக்கான கட்டணங்கள் போன்றவற்றை உள்ளடக்கும்.

» பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பண ரீதியான இழப்பீடுகளை மாத்திரம் பரிகாரமாக வழங்குவது போதாது.

» இத்தகைய பாதிப்புகளுக்கான இழப்பீடுகளை வழங்குகின்ற பொழுது பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களை தற்போது காணப்படுகின்ற மாறா நிலைகள் மற்றும் கலாச்சார நியமங்கள் போன்றன பாதகமாக அமையாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். அத்தோடு, எந்த வடிவத்தில் நட்டஈடு வழங்கப்படுகிறது என்பதையும் பார்த்துக் கொள்ள வேண்டும்.- அதாவது மொத்த மாத தொகை அல்லது ஓய்வூதியம் இவை நிலைமாறு சத்தியை மேம்படுத்துவதாக அமையும். (உதாரணமாக, இரகசியம் பாதுகாக்கும் தன்மை மற்றும் அவமானம் தொடர்புடைய விடயங்கள், பாதுகாப்பு மற்றும் நிதி சார் சுதந்திரம் போன்றன).

பெட்டி 2

## போதியளவு பரிகாரம் மற்றும் தீர்வு ஆகியன உள்ளடக்க வேண்டியவை?

14 குறைதீர்த்தல் மற்றும் நிவாரணங்கள் தொடர்பான ஐ.நா. அடிப்படைக் கொள்கைகளைப் பார்க்கவும், முக்கிய குறிப்பு 3, லுபங்கா திருத்தப்பட்ட நிவாரணங்கள் கட்டளை, முக்கிய குறிப்பு 5, CRSV நிவாரணங்கள் பற்றிய ஐ.நா. வழிகாட்டல் குறிப்பு, முக்கிய குறிப்பு6

15 ரோம் சட்டத்தின் 75 ஆம் உறுப்புரையானது இழப்பீடுகளாக மீட்டளித்தல், நட்டஈடு, புனர்வாழ்வு ஆகியவற்றைக் குறிப்பிட்ட பொழுதிலும் கூட இது ஒரு முழுமையான பட்டியல் அல்ல. இருப்பினும் ICC இன் பிரகாரம், குறியீடாக தடுக்கக் கூடிய, நிலைமாற்று பெறுமதியுடைய ஏனைய இழப்பீடுகளும் ஏற்புடையதாகக் காணப்படுகின்றன. பார்க்க, இழப்பீடுகளுக்கான லுபங்கா திருத்தப்பட்ட கட்டளை முக்கிய குறிப்பு 5, பந்தி 34.

**3.** புனர்வாழ்வளித்தல்

அதாவது, பாதிக்கப்பட்டவர்கள் கௌரவமான முறையில் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு அவசியமான சகலவிதமான சேவைகளையும் வழங்குவதை இது குறிக்கும். ஏனைய விடயங்களுக்கு மத்தியில் போதியளவு இருத்தல், உரிய நேரம், ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போதல், பால்நிலை, கலாசார மருத்துவ, உளவியல் ரீதியான பராமரிப்புகள், சட்டம் மற்றும் சமூக சேவைகள் (உதாரணமாக வீடு வழங்குதல்), பொருளாதார ரீதியான புனர்வாழ்வளித்தல் போன்றன. கல்வி மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புகள் தொடர்பான முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்படும் போது புனர்வாழ்வளித்தல் செயற்பாடுகளானது பாதிக்கப்பட்டவர்களின் ஆற்றலை அதிகரிப்பதற்கு உதவி செய்பவையாக இருக்க வேண்டும்.

**4. திருப்திபடுத்தல்:** சாத்தியமான அல்லது பொருத்தமான வகையில் திருப்திபடுத்தல் என்பது பின்வரும் எந்த வடிவத்திலும் இருக்கலாம்:

» வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வெற்றிகரமான நடவடிக்கைகள்

» நீதியை நிலைநாட்டுதல் அத்தோடு குற்றமிழைத்தவருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள்.

» பாதிக்கப்பட்டவர்களுக்கான பொது நினைவாலயங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் அஞ்சலி செலுத்தல்கள் போன்றன.

» உண்மைகளையும் மற்றும் பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ளல் உள்ளடங்கலான பகிரங்க மன்னிப்புக் கோருதல்

திருப்திப்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட நடைமுறைகள் சமூக வெட்கம் , அவமானம் பற்றிய ஒரு முழுமையான புரிந்துணர்வைக் கொண்டிருப்பது அவசியம். மேலும் பாதிக்கப்பட்டவர்களை இவை மென்மேலும் பாதிப்படையக் கூடிய நிலைக்கு இட்டுச்செல்லக்கூடாது. இவ்வாறான திருப்திப்படுத்தும் நடவடிக்கைகள் பாலியல் உணர்திறன் கொண்டதாகவும் அத்தோடு, பாதிக்கப்பட்டவர்களை சம பிரஜைகளாக அவர்களின் சம உரிமையை மேல்நிலைநிறுத்துவதாகவும் இருத்தல் வேண்டும். அவர்களை மேலும் துன்பப்படும் நிலைக்கு இட்டுச்செல்லக் கூடாது.

**5. மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்கள்,** வன்முறையுடன் தொடர்புடைய கட்டமைப்புச் சார்ந்த காரணிகளை இனங்கண்டு அவற்றை சரிசெய்வதன் மூலம் நிலைமாற்றுக்கால[18] இழப்பீட்டுக்கு தேவையானவற்றுக்கு மாற்றத்தைக் கொடுத்தல் உட்பட. அத்தோடு, இவற்றுடன் தொடர்புடைய ஏதாவது பாரபட்ச முறைகள், உதாரணமாக, பால், பால்நிலை, பாலியல் சார் விருப்பங்கள், பால்நிலை அடையாளம், உள அல்லது ஏனைய அங்கவீனங்கள், சாதி, நிறம், அரசியல் அல்லது ஏனைய தெரிவுகள், இனம், வயது, சமயம், பொருளாதார அல்லது உள்நாட்டு அந்தஸத்துகள் பாரபட்சம் தொடர்பான ஏனைய சகல அடிப்படைகளும் பரிசீலிக்கப்படல் வேண்டும். பொருத்தமான சந்தர்ப்பங்களிலேயே இவற்றை மேற்கொள்ள வேண்டும். அவசியமான சந்தர்ப்பங்களில் இவை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

» சம்பந்தபட்ட சட்டங்கள் மற்றும் நடைமுறைகளில் உரிய மாற்றங்கள்

» நீதி முறை மறுசீரமைப்பு மற்றும் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையை வலுப்படுத்தல்.

» இராணுவம் மற்றும் பாதுகாப்புப் படைகள் தொடர்பில் வினைத்திறன் மிக்க சிவில் கட்டுப்பாடு

» சிவில் மற்றும் இராணுவ நடைமுறைகளை சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப நடப்பதை உறுதிசெய்துசொள்ளல்

» இன நியமங்கள் மற்றும் நடைமுறைகள் விதிகள் கடைப்பிடிக்கப்படுவதை மேம்படுத்தல்.

» சர்வதேச தராதரங்கள் தொடர்பான பயிற்சிகளை அரச அதிகாரிகளுக்கு வழங்குதல்.

» பாரபட்சம் சார்ந்த கண்ணோட்டங்கள் மற்றும் பால்நிலை பாகுபாடுகள் ஆகியவற்றை மாற்றும் முகமாக துல்லியம் மிக்க பிரச்சாரச் செயற்பாடுகள்

» வன்முறைக்கான அடிப்படைக் காரணிகளைக் கண்டறிந்து அவை தொடர்பிலான சிபாரிசுகளை மேற்கொள்ளும் முகமாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுக்களை உருவாக்குதல்.

16

பெட்டி 2

16 பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான விசேட அறிக்கையாளரின் அறிக்கை மற்றும் அதற்கான காரணிகள், பின்விளைவுகள், ரசீதா மஞ்சு A/HRC/14/22, பந்தி. 31; IACtHR கொட்டன் பீல்ட் வீ. மெக்சிகோ முக்கிய குறிப்பு 97 பந்தி 450 நைரோபி குறைதீர்த்தல் மற்றும் நிவாரணங்கள் பற்றிய பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளது உரிமைகள் தொடர்பான நைரோபி பிரகடனம், கொள்கை 3.ரு ICC TC வழக்குத் தொடுனர் வீ. தோமஸ் லுபங்கா டிலோ, நிவாரணங்கள் தொடர்பில் ஏற்புடைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைத் தாபிப்பதற்கான தீர்மானம், ICC-01/04-01/06-2904, 7 ஆகஸ்ட் 2012, பந்தி. 222.

*இந்த ஐந்து வகையான இழப்பீடுகளும் பரஸ்பரம் ஒன்றையொன்று புறந்தள்ளக்கூடியவை அல்ல, ஆனால் ஒன்று மற்றொன்றைச் சிறப்பாக்குகின்றது...*

## போதியளவு குறைதீர்த்தல் மற்றும் நிவாரணங்கள் ஆகியன எவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்?

இந்த ஐந்து வகையான இழப்பீடுகளும் பரஸ்பரம் ஒன்றையொன்று புறந்தள்ளுபவை அல்ல, ஆனால் ஒன்று மற்றொன்றைச் சிறப்பாக்குகின்றது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாறுபட்டட வகையிலான நிவாரணங்கள் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் காணப்படுகின்ற மாறுபட்ட வகையிலான தேவைகள் தொடர்பில் செயற்படுகின்றன. பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதியளவு இழப்பீடுகளை வழங்கும் முகமாக பரந்த அடிப்படையில் இத்தகைய வகைகள் பரிசீலிக்கப்படல் வேண்டும். இங்கு கட்டமைப்பு சார்ந்த மற்றும் ஏனைய சமத்துவமின்மைகள் தொடர்பில் வலியுறுத்தக்கூடாது[19]. முன்கூட்டியே காணப்படுகின்ற கட்டமைப்பு சார்ந்த பால்நிலை சமத்துவமின்மைகளானது பாலியல் வன்முறைகளின் பின்விளைவுகளை அதிகரிப்பது மாத்திரமல்லாது பாலியல் வன்முறையினால் ஏற்பட்ட பாதகங்களைக் கருத்திற்கொண்டு வடிவமைத்து நடைமுறைப்படுத்துகின்ற வழிமுறைகளுக்கும் இவை சவால் விடுக்கின்றன.

**ஏற்கனவே காணப்படுகின்ற மாறா நிலையிலுள்ள விடயங்கள் வலியுறுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தோடு, மேலதிக பாதகங்களும் தவிர்க்கப்படல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுடன் போதியளவு உரிய கலந்தாலோசனைகளை மேற்கொள்ளல், அந்தரங்கத்தன்மையை மதித்தல், பால்நிலை சமத்துவத்துடனான ஒருமைப்பாடுகள், கலாசார பின்புலம் தொடர்பில் போதியளவு புரிதல்களை ஏற்படுத்தல் ஆகியவற்றின் மூலம் இதனை அடைய முடியும்.**

மேலதிக விபரங்களுக்கு பின்வருவனவற்றைப் பார்க்கவும்:

» பாரியளவில் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினை மீறுதல் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தைக் கடுமையாக மீறுதல், ஐ.நா. பொதுச்சபைத் தீர்மானங்கள் 60/147 (2005) ஆகிய தொடர்பிலான அடிப்படைக் கொள்கைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களது பரிகாரத்திற்கும் மற்றும் இழப்பீட்டிற்குமான உரிமை.

» மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறைகள் தொடர்பான நிவாரணங்கள் பற்றிய ஐ.நா. செயலாளர் நாயகத்தின் வழிகாட்டி (2017 ஜுன்)

» பெண்கள் உரிமைகள் தொடர்பாக பரிந்துரைக்கின்ற செயற்பாட்டாளர்கள் மற்றும் பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் அதாவது, ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பா, மத்திய, வடக்கு மற்றும் தென் அமெரிக்கா ஆகிய நாடுகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் மற்றும் நிவாரணங்கள் வழங்குவது தொடர்பிலான (பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள்) நைரோபி பிரகடனம் (2007 மார்ச்)

» மனித உரிமைகள் குழு, பொதுவான கருத்துகள் இல. 31 , 2004, பந்தி 16

» CEDAW, பொதுவான விதப்புரைகள், இல. 28 (2010), பந்தி 32

» சித்திரவதைக்கு எதிரான குழு, பொதுவான கருத்துகள் இல. 3, அரச தரப்பினர்களினால் உறுப்புரை 14 ஐ நடைமுறைப்படுத்தல் (2012) குறிப்பாக பந்தி 6, 29, 38 மற்றும் 39.

» பாதிக்கப்பட்டவர்களுக்கான ICC நம்பிக்கை நிதியத்தின் இணையத்தளம் http://www.trustfundforvictims.org.

17 ஐ.நா. பெண்கள் (2016) மோதல்கள் எமக்கு மலர்களைக் கொண்டுவரவில்லை: கொசோவோவில் மோதல்களுடன் தொடர்புடைய பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான முழுமையான இழப்பீடுகளை வழங்குவதன் அவசியம். நியுயோக் ஐ.நா. பெண்கள் பக்கம் 20–21.

## D. தீங்கினை ஆவணப்படுத்தல்

பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீட்டினை நாடுவதற்கு வழிவகைகளைச் செய்யும் முகமாக இவர்கள் இறுதியாக எங்கிருந்து இழப்பீடுகளைக் கோரிய பொழுதிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட பல்வேறு வகையான தீங்கினை செயற்பாட்டாளர்கள் முழுமையாக ஆவணப்படுத்துவது அவசியமாகும். இதன் பொழுது பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பங்கள், சமூகம் ஆகிய சகலவற்றுக்கும் ஏற்பட்ட தீங்கினை ஆவணப்படுத்தல் வேண்டும். (பார்க்க அத்தியாயம் 2: பாலியல் வன்முறைகளைப் புரிந்துகொள்ளல், பகுதி ஈ: பாலியல் வன்முறைகளின் தாக்கம்). தீங்குகளை ஆவணப்படுத்துகின்ற பொழுது குற்றவியல் ரீதியான சான்றுகளை அது வலுப்படுத்துகின்றது. குற்றத்தை நிரூபிப்பதற்கான விடயங்களை அது வழங்குகின்றது (பார்க்க அத்தியாயம் 4 : தனிமனிதர் குற்றவியல் பொறுப்புகள், பிரிவு ஆ, பகுதி அ, குற்றங்களுடன் தொடர்புடைய தனித்துவமான அம்சங்கள்). மற்றும் தண்டனை வழங்குவதற்கும் இது அவசியமாகும். இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு அதன் தன்மைக்கு ஏற்ப ஈடுசெய்வதாகவும் இது காணப்படுகிறது[18]

தீங்குகளை ஆவணப்படுத்தும் போது பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளல் வேண்டும்

(i) உடல் ரீதியான தீங்கு, உதாரணமாக, உடனடியாக மற்றும் நீண்ட கால காயங்கள் மற்றும் நோய்கள், இவற்றுள் இனப்பெருக்கச் சுகாதாரப் பிரச்சினைகளும் உள்ளடங்கும்.

(ii) உளவியல் ரீதியாக ஏற்பட்ட தீங்கு, உதாரணமாக, மனவடு, மனவழுத்தம், மனரீதியான நோய்கள் போன்றன.

(iii) சமூக ரீதியான தீங்கு. உதாரணமாக, கலங்கம், சமூகத்திலிருந்து ஒதுக்கிவைத்தல், நற்பெயருக்கு ஏற்பட்ட பாதிப்பு, விவாகரத்து, அல்லது திருமண வாய்ப்புக்களை இழந்தமை மற்றும் ஏனைய உளவியல் ரீதியான தாக்கங்கள்

(iv) பொருளாதார ரீதியான பாதிப்புகள். உதாரணமாக, வருமானத்தை இழத்தல் மற்றும் சம்பாதிப்பதற்கான வாய்ப்புக்களை இழத்தல், இழக்கப்பட்ட வாய்ப்புகள் இவற்றுள் வேலை, கல்வி, சமூக நன்மைகள் போன்றன உள்ளடங்கும். அத்தோடு ஏற்பட்ட மருத்துவச் செலவுகள், எதிர்கால புனர்வாழ்விற்கான செலவுகள், இவற்றுள் உளவியல் சேவைகள், சட்ட செயன்முறைகளுக்கான செலவுகள் (சட்ட நிபுணர்கள் கட்டணம்) பாலியல் வன்புணர்வின் காரணமாக பிறந்த பிள்ளையை வளர்ப்பதற்கான செலவு, தனிப் பெற்றோர்களினால் பிள்ளைகளை வளர்த்தல், பாதிக்கப்பட்டவர் திருமண பந்தத்தை இழந்தபின்னர் பிள்ளை பராமரிப்புக்கான செலவுகள் மற்றும் மறுமணத்திற்கான வாய்ப்புகள், குடும்பத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்படல், இடம்பெயர்வு.

நட்டஈட்டு வழங்கல் தொடர்பான விடயங்களை பொருளாதார ரீதியாக மதிப்பீடு செய்கின்ற பொழுது பாலியல் வன்முறையினால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் கட்டமைப்பு ரீதியாக காணப்பட்ட சமத்துவம் இன்மைகளின் காரணமாக பால்நிலை காரணிகள் போன்றன இத்தகைய கணிப்புகளை தாக்கக்கூடியன. உதாரணமாக, பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு ஏற்பட்ட உளவியல் ரீதியான பாதிப்புக்களை அளவிடுவதும் நிரூபிப்பதும் சிரமமானதாகும். அதேபோல் அவர்களுக்கு ஏற்பட்ட வருமான இழப்புகளை சில நேரங்களில் கணிப்பிடுவதும் சிரமமானதாகக் காணப்படுகிறது. குறிப்பாக அவர்கள் வீட்டில் அல்லது குடும்பக் காணியில் வேலை செய்கின்ற பொழுது கணிப்பிடுவது கடினமாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் வருமானம் பெறாதவர்களாகவும் இருக்கலாம்[19]

ஏற்பட்ட தீங்கினை ஆவணப்படுத்துகின்ற பொழுது குறிப்பாக பின்வரும் (i) கேள்விகளை பேட்டியின் பொழுது கேட்டல் சிறப்பானதாகும் (ii) ஆவணப்படுத்துகின்ற அதேவேளை, அவர்களுக்கு ஏற்பட்ட உடல் ரீதியான காயங்களைப் படம்பிடித்தல் வேண்டும். (iii) மருத்துவச் சான்றிதழ், மருத்துவ மற்றும் சட்ட ரீதியான செலவுகள் தொடர்பான ஆவணங்கள் ஆகியவற்றின் பிரதிகளைப் பெற்றுச் சான்றாக ஆவணப்படுத்தல். (பார்க்க, பிற்சேர்க்கை 4: பாலியல் தாக்கம் தொடர்பான மருத்துவச் சான்றிதழ் மாதிரி)

---

18 பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட தீங்குகள் முழுமையாக ஆவணப்படுத்தப்படுவது அவசியமாகும். உதாரணமாக, கருத்திற்கொள்ளக் கூடியளவு தாக்குதல் மிக்கதாக குற்றங்கள் காணப்படும் பட்சத்தில், உதாரணமாக, கடும் துன்பங்களையும் வலியையும் ஏற்படுத்தக் கூடிய சித்திரவதைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் இது உடலியல் ரீதியாக அல்லது உளவியல் ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தலாம். அத்தோடு, கடுமையான உடல் மற்றும் மன ரீதியான தீங்குகளை விளைவிக்கக் கூடிய இனப்படுகொலை போன்றன இடம்பெறும் பட்சத்தில் அவை ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.

19 CRSV தொடர்பான நிவாரணங்கள் பற்றிய ஐ.நா. வழிகாட்டல் குறிப்பு, முக்கிய குறிப்பு 6 பந்தி 17

# பகுதி IV: நடைமுறையில் ஆவணப்படுத்தல் தயார்படுத்தல்

## அத்தியாயம் 7 உள்ளடக்கம்

**அத்தியாயம் 7: தீங்கிழைக்க வேண்டாம் ........ 85**

**A. பிரதான எண்ணக்கருக்கள் ........ 85**

1. தீங்கிழைத்தல் ........ 85

*பெட்டி 1*
பாதிக்கப்பட்டவரது அனுபவம் - தீங்கிழைக்கப்பட்ட மூலம் ........ 88

2. சுயாதீனத்தன்மை ........ 88

**B. அறிவிக்கப்பட்ட சம்மதம் ........ 89**

*பெட்டி 2*
அறிவிக்கப்பட்ட சம்மதத்திற்கான அடிப்படைகள் ........ 89

**C. தீங்கினை தணித்தல் ........ 92**

*பெட்டி 3*
தீங்கினை தணித்தல் ........ 92

1. அச்சுறுத்தல் மற்றும் இடர் தொடர்பான மதிப்பீடுகள் ........ 92

*பெட்டி 4*
அச்சுறுத்தல்கள், இடர்கள் மற்றும் பாதிப்புறும் தன்மை ........ 92

2. ஒருங்கிணைப்பு ........ 93
3. இரகசியத்தன்மை ........ 95

*பெட்டி 5*
தகவல்களுக்கான உத்தியோகபூர்வ கோரிக்கைகள் ........ 96

*பெட்டி 6*
இணை நிலையினர் அனுபவம்— இரகசியத்தன்மையின் மட்டுப்பாடுகள் ........ 97

4. ஆற்றுப்படுத்தல் சேவைகள் ........ 98

*பெட்டி 7*
ஆற்றுப்படுத்தல் வகைகள் ........ 98

*பெட்டி 8*
ஆற்றுப்படுத்தல் உதவி வகைகள் ........ 99

*பெட்டி 9*
இணை நிலையினர் அனுபவம்—சரியான ஆற்றுப்படுத்தல்களை உருவாக்குதல் ........ 100

*பெட்டி 10*
பரவலான துணைச் சேவைகள் ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கு கிடைக்காமை ........ 102

# அத்தியாயம் 7: தீங்கிழைக்க வேண்டாம்

## A. பிரதான எண்ணக்கருக்கள்

### 1. தீங்கிழைத்தல்

**தீங்கிழைக்க வேண்டாம் என்பதன் அர்த்தம் என்ன?**

CARSV தொடர்பான ஆவணப்படுத்தல்களை மேற்கொள்கின்ற பொழுது கருத்திற்கொள்ள வேண்டிய மிகவும் முக்கியமான நன்னெறி சார்ந்த கொள்கை என்னவெனில், தீங்கிழைக்காமல் பார்த்துக்கொள்வது அல்லது அதனை மிகமிகக் குறைத்தல். அதாவது, பாதிக்கப்பட்டவர்கள், ஏனைய சாட்சிகள், சமூகம் ஆகியவற்றுக்கு ஆவணப்படுத்தலின் காரணமாக நிகழக்கூடிய எதிர்மறையான தாக்கங்கள் பற்றி செயற்படுத்துனர்கள் முழுமையாக அறிந்திருத்தல் வேண்டும். இத்தகைய பாதகமான விளைவுகளைத் தடுப்பதற்கு அல்லது அவற்றைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.


அத்தியாயம் 2 இல் கலந்துரையாடப்பட்டதன் பிரகாரம் பாலியல் வன்முறை, பாலியல் வன்புணர்வு, கடும் பாலியல் ரீதியான தாக்குதல்கள் மற்றும் ஏனைய பாலியல் சார்ந்த வன்முறைகள் ஆகியன பாதிக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் ஏனையவர்களுக்கும் கடும் உள ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தலாம். சில சந்தர்ப்பங்களில் குற்றம் இழைத்தவர்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் ஏற்படுகின்ற உடனடி தாக்கத்தை அல்லது துன்பத்தைவிட ஏனைய விதங்களில் அதிகமாக தாக்கத்திற்குள்ளாகலாம். அதேவேளை போதியளவு சுகாதார வசதிகள், பொலிசார் மற்றும் நீதிச்சேவை சார்ந்த உதவிகள், குடும்பம் மற்றும் சமூகத்திலிருந்து கிடைக்கக் கூடிய உதவிகள், பதிலளிப்புகள் போன்றன முறையாக இடம்பெறாத பட்சத்தில் மேலதிக பாதிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் உண்டு. சில சந்தர்ப்பங்களில் இவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவதுடன், தகாத வார்த்தைகளுக்கும் உட்படுத்தப்பட்டு தண்டனைக்கும் உள்ளாகின்றனர். அத்தோடு ஆவணப்படுத்தல்களை முறையாகப் பயிற்றப்படாதவர்கள், முறையாக தயார் நிலைக்கு வராதவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பொழுது அவர்கள் மேற்கொள்கின்ற அணுகுமுறைகளின் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் மேலும் பாதிப்படைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இத்தகையவர்கள் தமது இடையீடுகளை முறையாகத் திட்டமிடுவதில்லை. அத்தோடு, நிகழக்கூடிய பாதிப்புக்களை குறைப்பதற்கான உபாயங்களும் சிலர் மத்தியில் இருப்பதில்லை.

CARSV ஐ ஆவணப்படுத்துகையில் சில வகையான இடர்கள் தவிர்க்க முடியாதவை. பாதிக்கப்பட்டவர்களுடைய பாதுகாப்பிற்கு அல்லது நலத்திற்கு அல்லது சாட்சிகள், முழுச் சமூகத்தின் நலத்திற்கு அல்லது பாதுகாப்பிற்கு அவசியமான பூரணமான உத்திரவாதங்களை விசாரணையாளர்கள் வழங்குவதில்லை.

இருப்பினும், பாதிக்கப்பட்டவர்களுடைய பாதுகாப்பு, தன்மானம் ஆகியனவே இந்த ஆவணப்படுத்தல் செயற்பாட்டின் மிக முக்கியமான அம்சம் என்பதை விசாரணையாளர்கள் கருத்திற்கொள்ளல் வேண்டும். அதாவது, பாதிக்கப்பட்டவர்களுடைய தேவைக்கும் அவசியப்பாட்டிற்கும் முன்னுரிமையளிக்கின்ற அதேவேளை அவர்களுடைய பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் வேண்டும். இவை எப்படியிருப்பினும், மேலதிகமாக ஏற்படக்கூடிய இடர்களைக் கருத்திற்கொள்ளல் வேண்டும். தனக்கு ஏற்பட்ட நிலையை எடுத்துரைப்பதில் பாதிக்கப்பட்டவர் காட்டுகின்ற ஆர்வம், நீதியை நாடுதல், இழைக்கப்பட்ட குற்றத்திற்கான இழப்பீடுகளைப் பெறுவதற்கான முயற்சி ஆகியவனவும் பரிசீலிக்கப்படல் வேண்டும்.

**தீங்கிழைக்க வேண்டாம் எனும் கொள்கையினை மதிக்கின்றோம் என்பதனை அடிப்படையாகக் கொண்டு CARSV பாதிக்கப்பட்டவர்களை ஆவணப்படுத்த வேண்டிய அவசியமில்லையென பிழையான பொருட்கோடல்களை மேற்கொள்ளக் கூடாது. இது பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்பினை வழங்குகின்ற அதேவேளை, பாதிக்கப்பட்டவர்கள் தாமாகவே கருத்துரைக்கின்ற வாய்ப்பினையும் வழங்குதல் வேண்டும். அதேவேளை அவர்களுக்கு வழங்க வேண்டிய உதவிப் பொறிமுறைகளையும் இனங்காணல் அவசியமாகும். இச்சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுடைய சுயாதீனத்தன்மைக்கு உதவியளித்து அவற்றை மதித்தல் வேண்டும்.**

## பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கு யார் தீங்கிழைத்தார்கள்?



| தீங்கின் வகை/ யார் இழைத்தது | உதாரணங்கள் |
|---|---|
| **உடனடி உடல் ரீதியான தீங்கு**<br>• தீங்கிழைத்தவர்கள் | நேரடி உடற் காயத்திற்கு காரணமாக மற்றும்/ அல்லது இறப்பிற்கு காரணமாக பாலியல் வன்முறைச் செயல்கள் |
| **இரண்டாம் நிலை உடலியல் ரீதியான தீங்கு**<br>• தீங்கிழைத்தவர்கள்<br>• நிறுவனங்கள்<br>• சமுதாயம்<br>• செயற்படுத்துனர்கள் | தொற்றுநோய் உள்ளடங்கலாக பாலியல் வன்முறை தொடர்பில் வழங்கப்பட்ட வினைத்திறனற்ற மருத்துவப் பதிலளிப்புகள்<br>பாலியல் வன்புணர்வின் காரணமாக கர்ப்பம் தரித்தவர்களுக்கு சட்ட ரீதியான கருக்கலைப்பு வசதிகள் இல்லாத இடங்களில் அப்பிரதேச சமுதாயத்தைச் சேர்ந்தவர்களினால் பாதுகாப்பற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட கருக்கலைப்புகள்<br>பாலியல் வன்முறையினால் ஏற்பட்ட பாதிப்புக்களை வெளிப்படுத்துவதன் காரணமாக குடும்பத்தினருக்கு அல்லது சமுதாயத்திற்கு அவப்பெயர் ஏற்படும் என்ற நோக்கில் கவனிக்காமல் விடப்பட்ட உடல் ரீதியான காயங்களினால் ஏற்பட்ட சிக்கல்கள்<br>கௌரவக் கொலைகள் |
| **உள ரீதியான தீங்கு**<br>• தீங்கிழைத்தவர்கள்<br>• நிறுவனங்கள்<br>• சமுதாயம்<br>• செயற்படுத்துனர;fs; | பாலியல் வன்முறையினால் ஏற்பட்ட மனவடு<br>உதவிச் சேவைகள் இன்மையின் காரணமாகவும் வன்முறை தொடர்பில் நிறுவன ரீதியான அங்கீகாரம் இன்மையின் காரணமாகவும் உளவியல் ரீதியாக ஏற்பட்ட சுகாதார சிக்கல்கள்<br>பாதிக்கப்பட்டவர்களை சமுதாயம் திட்டுவதனால் அல்லது நம்பாமையின் காரணமாக ஏற்படுகின்ற மனவழுத்தம், தனிமையாக வாழுதல், துன்பங்கள், தற்கொலை தொடர்பான எண்ணங்கள்<br>முறையற்ற விதத்தில் பேட்டி காண்பதன் விளைவாக மீண்டும் மனவழுத்தம் ஏற்படுகின்றது. |
| **சமூக-பொருளாதார தீங்கு**<br>• நிறுவனங்கள்<br>• சமுதாயம்<br>• செயற்படுத்துனர்கள் | பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்காமை, சமூகத்தில் மீள இணைந்து வாழ்வதற்கான வசதிகளை வழங்காமை<br>தொழிலை இழத்தல் கல்வி போன்றவற்றை இழப்பதன் காரணமாக ஏற்படுகின்ற கலங்கம் அந்தரங்கத்தைப் பேணுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள்தொடர்பில் தேவையற்ற முறையில் சமூகம் அறிந்துகொள்கிறது. இதன் காரணமாக தொழிலை இழக்கலாம் அல்லது பாடசாலையிலிருந்து விரட்டப்படலாம் |
| **சட்ட ரீதியான தீங்கு**<br>• நிறுவனங்கள்<br>• சமுதாயம்<br>• செயற்படுத்துனர்கள் | வன்புணர்வை வெளிப்படுத்துவதன் காரணமாக சில வழக்குகளில் சிறைக்குச் செல்கின்றனர். குறிப்பாக திருமண பந்தத்திற்கு வெளியில் மேற்கொள்கின்ற பாலியல் உறவுகள் அல்லது தன்னினச் சேர்க்கை போன்றன குற்றமாகக் கருதுகின்ற இடங்கள்.<br>சமுதாயத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற முறைசாராத நீதிப் பொறிமுறைகள். இவை பாதிக்கப்பட்டவரது உரிமைகளைப் போதியளவு பிரதிநிதித்துவம் செய்வதில்லை. தனிமனிதர் வர்ண நீதியையும் இழப்பீடுகளையும் பெற்றுக்கொள்கின்ற உரிமைக்குப் பதிலாக குடும்பத்தை மையமாகக் கொண்ட நட்ட ஈடுகள் வழங்கப்படுகின்றன.<br>சான்றுகளைப் சேகரிப்பது தொடர்பிலான நெறிமுறைகள் ஆவணங்கள் தொடர்பிலான செயன்முறையை முறையாக மதிப்பதில்லை. உத்தியோகபூர்வமான விசாரணைகள் மற்றும் குற்றங்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்தல் தொடர்பிலான நீதியை நாடுகின்ற பாதிக்கப்பட்டவரது உரிமையை எதிர்மறையாக இவை தாக்குகின்றன. |

**பெட்டி 1**

### பாதிக்கப்பட்டவரது அனுபவம் - தீங்கிழைக்கப்பட்ட மூலம்

*சபா* 17, எனக்கு 12 வயதாகவிருக்கின்ற பொழுது ஆயுததாரி ஒருவரினால் முதன்முதலாக நான் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டேன். எனக்கு 13 வயதாகிய பொழுது எனக்கு மீண்டும் இத்தகையதொரு சந்தர்ப்பம் இடம்பெற்றது. இது சில வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றவைகளாகும். அதனைச் சிந்திக்கையில் இப்பொழுதும் மிகவும் வலியாக இருக்கின்றது. இது பற்றி முதன் முதலாக எனது சகோதரர் அறிந்துகொண்டார். இதனை மறந்துவிடும் படியும் இது பற்றி யாரிடமும் கூற வேண்டாமெனவும் அவர் கூறினார். இச்சம்பவம் எமது பெற்றோருக்க அவமானத்தை ஏற்படுத்தும் எனவும் எனவே, இது தொடர்பில் யாரிடமும் கூறாமல் இதனை இரகசியமாக வைத்திருக்கும் படியும் எனது சகோதரர் குறிப்பிட்டார். நான் மிகவும் பயந்து போயிருந்தேன். அதிருப்தியுற்றவளாக இருந்தேன். யாரிடமும் தெரிவிக்கவில்லை. நான் விழுந்ததன் காரணமாகவே உராய்வுகள் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டேன். எனக்கு பயங்கர உணர்வுகள் தோன்றின. என்னால் உறங்க முடியவில்லை. என்னால் சாப்பிட முடியவில்லை. நான் ஒரு உறுதியான பெண் பிள்ளை என்பதை அவர்கள் முணுமுணுத்ததை என்னால் கேட்க முடிந்தது.

இரண்டாம் முறையும் இத்தகைய சம்பவம் ஒன்று ஏற்பட்டது. இதனை என்னால் மறைக்க முடியவில்லை. அப்பொழுது மூன்று நபர்கள். எனது உட்பகுதியிலிருந்து இரத்தம் வடிந்தது. நான் மனமுடைந்துவிட்டேன். அவர்கள் என்னை ஒரு வைத்தியரிடம் அழைத்துச் சென்றனர். நான் கன்னித் தன்மையுடன் இருக்கின்றேனா என அவர் கேட்டார். நான் இல்லையெனக் குறிப்பிட்டேன். அவ்வாறு நான் குறிப்பிட்டதற்கான காரணம் எனக்கு முதன்முதலில் ஏற்பட்ட சம்பவமாகும். நான் அவ்விடயத்தை இரகசியமாக வைத்திருந்ததன் காரணமாக அவர் அதனை நம்பவில்லை. பெண்கள் தங்களது கன்னித்தன்மையை வைத்திருப்பதில்லை எனவும் அவர்களது உடம்பு ஆண்களுக்கு சமிக்ஞை ஒன்றை அனுப்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். ஆண்களை எவ்வாறு திட்ட முடியும் என அவர் குறிப்பிட்டார். ஏனைய அப்பாவி நோயாளர்களுக்கு அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற சிகிச்சை எனக்கு வழங்கப்பட முடியாது. ஏனெனில், அதற்கு நான் அருகதையில்லையென அவர் குறிப்பிட்டார். என்னுடன் கதைப்பதற்கு எனது பெற்றோர்களும் வெட்கப்பட்டனர். இது மிகவும் கடினமான விடயமாகக் காணப்பட்டது. நான் அங்கிருந்து வெளியேறினேன்.

முகாம்களில் வாழ்வதென்பது மிகவும் கடினமான விடயம். இருப்பினும், எனது கடந்தகால வாழ்க்கை பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை. அதன் பின்னர் எனக்கு என்ன நடை பெற்றது என்பது பற்றி முகாமிலுள்ள ஊழியர் ஒருவரிடம் நான் குறிப்பிட்டேன். எனக்கு உதவி செய்யக் கூடிய ஒருவரிடம் என்னைப் பற்றிய தகவல்களைக் குறிப்பிடுவதில் எவ்வித பிரச்சினைகளும் இல்லையென நான் குறிப்பிட்டேன். என்னுள் ஏற்படுகின்ற அபாயகரமான நினைவுகளை மறைப்பதற்கு யாராவது உதவி செய்வார்கள் அல்லது இதற்குப் பொறுப்பான நபரைக் கண்டு பிடிப்பார் என்ற நம்பிக்கையில் நான் குறிப்பிட்டேன். தொடர்ச்சியாக ஆறு நபர்கள் என்னுள் வந்து ஒரேவிதமான கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்டார்கள். அதன் பின்னர் அவர்கள் சென்றுவிட்டார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை. மீண்டும் சகல விடயங்களும் இடம்பெற்றன. நான் இவ்விடயம் பற்றி யாரிடமும் கதைத்திருக்கக் கூடாது

(*அவளது உண்மையான பெயர் குறிப்பிடப்படவில்லை)

## 2. சுயாதீனத்தன்மை

ஆவணப்படுத்தல்களை மேற்கொள்கின்ற பொழுது பாதிக்கப்பட்டவர் மைய அணுகுமுறை முக்கியமானதாகும். இதனுடன் தொடர்புடைய பாதிப்புக்களை தணிப்பது என்பது தொடர்பில் முதலாவதாக பாதிக்கப்பட்டவருடைய சுயாதீனத் தன்மையை மதித்தல் வேண்டும். சுயாதீனத் தன்மை எனும் பொழுது பாதிக்கப்பட்டவர் தானாகவே தீர்மானங்களை மேற்கொள்வதற்கான தகுதியாகும். பாதிக்கப்பட்ட நபர் சுயாதீனமாக தெவுகளை மேற்கொள்வதற்கான சுதந்திரம், அவருடைய சுய நம்பிக்கைகள், பெறுமதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் நடவடிக்கைகளை அல்லது செயல்களை மேற்கொள்ளல் என்பன அவரது சுயாதீனத்தன்மையை மதித்தல் ஆகும்.

தீங்கிழைக்கக் கூடாது என்ற ஒழுக்க நெறி சார்ந்த கடப்பாடானது சில சமயங்களில் பாதிக்கப்பட்டவருடைய சுயாதீனத் தன்மையை மதிக்கின்ற செயலுடன் முரண்படக் கூடியதயதாகவிருக்கலாம். அதாவது பாதிக்கப்பட்டவர் மேற்கொள்கின்ற தீர்மானங்களானது பாதகத்தை ஏற்படுத்தும் அல்லது சுய பாதிப்புக்களை ஏற்படுத்துமென செயற்பாட்டாளர் கருதுகின்ற பொழுது இத்தகைய மோதல்கள் எழுகின்றன. இருப்பினும் எல்லா சந்தர்ப்பங்களிலும் பாதிக்கப்பட்டவருடைய சுயாதீனத்தன்மை மதிக்கப்படல் வேண்டும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இது இலகுவான விடயமல்ல. கலாசாரப் பின்புலங்கள், குடும்ப அழுத்தங்கள் போன்றன பாதிக்கப்பட்டவருடைய சுயாதீனமான தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றலைப் பாதிக்கின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் சுயாதீனமாக இயங்கவில்லையென செயற்பாட்டாளர்கள் கருதுவதுமுண்டு. பாதிக்கப்பட்டவர்கள் தமது நலனுக்காக செயற்படவில்லை. ஆனால் குழுவின் நலனுக்காகவே செயற்படுகின்றார்கள் என செயற்பாட்டாளர்கள் கருதுவதற்கான வாய்ப்புகளும் உண்டு. இத்தகைய விடயங்களைக் கருத்திற்கொண்டு செயற்பாட்டாளர்கள் பாதிக்கப்பட்டவர்களுடன் தம்மால் இயலுமானவரை தகவல்களைப் பரிமாறிக்கொள்ளல் வேண்டும். அத்தோடு, இதனுடன் தொடர்புடைய சகலவிதமான இடர்கள், பங்குபற்றுவதன் நன்மை ஆகியன தொடர்பிலும் கலந்துரையாடல் வேண்டும். இவற்றை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் மத்தியில் கல்துரையாடலாம். அவசியமானவிடத்து இரகசியத்தன்மையைப் பேணவேண்டும். அவர்கள் சிறப்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமான சேவைகளையும் உதவிகளையும் பெற்றுக்கொள்வதற்கான உதவிகளை வழங்குதல் வேண்டும்.

## B. அறிவிக்கப்பட்ட சம்மதம்

அறிவிக்கப்பட்ட சம்மதமானது சுயாதீனம் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. பாலியல் வன்முறையை ஆவணப்படுத்துகையில் தனது ஈடுபாடு தொடர்பிலான சுய செயற்பாட்டினை சம்பந்தப்பட்ட நபர் சுயமாக தெரிவுசெய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

**பங்குபற்றுவது தொடர்பான சம்மதத்தைத் தெரிவிக்கும் முழுமையான அதிகாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உண்டு. அவர்களது சுயாதீனத்தை மதித்தல் என்ற ஒழுக்க நெறி மற்றும் சுய நிர்ணயத்திற்கான அவர்களது சட்ட ரீதியான அதிகாரம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.**

மனித உரிமைகள் மீறல் உள்ளடங்கலாகப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சி தொடர்பிலான சர்வதேச சட்டத்தின் கீழ் தகவல்களைச் சேகரிக்கின்ற நபர் அறிவிக்கப்பட்ட சம்மதத்தைப் பெற்றுக்கொள்வதானது சட்டம் மற்றும் ஒழுக்க ரீதியான கடப்பாடாகும்.

**பெட்டி 2**

### அறிவிக்கப்பட்ட சம்மதத்திற்கான அடிப்படைகள்

அறிவிக்கப்பட்ட சம்மதத்தைத் தெரிவிப்பது என்பது பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், வேறு யாராவது ஒத்துழைக்கின்ற நபர்கள் ஆகியோர் பின்வரும் அடிப்படையில் பங்குபற்றுவதற்கான தமது சம்மத்தைத் தெரிவித்துள்ளதாகக் கருதப்படும்:

**1. முழுமையாகப் புரிந்துகொள்ளல்**

» ஆவணப்படுத்தல் செயன்முறையின் சகல அம்சங்கள் மற்றும் சகல மட்டங்கள் தொடர்பான தகவல்களை முழுமையாக வெளியிடல் மற்றும் அதனோடு தொடர்புபட்ட இடர்கள், நன்மைகள்

» அவர்களுக்கு வெளியிடப்பட்ட தகவல்களை முழுமையாக புரிந்துகொள்ளல்

**2. தொண்டர் அடிப்படையில்**

» எவ்வித பலவந்தமும் பிரயோகிக்காத நிலையில் தாமாக முன்வந்து சம்மதத்தைத் தெரிவித்தல்

**3. தெரிவிக்கப்பட்ட அனுமதி**

» அவர்களது சம்மதத்தை தெரிவிக்கின்றது

**அறிவிக்கப்பட்ட சம்மதத்தை யாரால் தெரிவிக்க முடியாது?**

தாமாக முன்வந்து அறிவிக்கப்பட்ட சம்மதத்தை தெரிவிப்பது என்பது பொதுவான தேர்ச்சித் தேவையின் அடிப்படையில் அமைந்துள்ளது. கடும் அறிவு சார்ந்த அங்கவீனத்தையுடைய அல்லது மூளை வளர்ச்சி குன்றிய ஆண்கள் மற்றும் பெண்கள், சம்பந்தப்பட்ட விடயங்களை முழுமையாக புரிந்துகொள்வதற்கு தடையாகவிருக்கின்ற உள ரீதியான அல்லது ஏனைய உடல் ரீதியான அல்லது உணர்வு ரீதியான பிரச்சினைகளையும் நோய்களையும் உடையவர்கள். இத்தகையவர்கள் அறிவிக்கப்பட்ட சம்மதத்தை வழங்குவதற்குத் தகுதியற்றவர்கள்.

பொதுவாக தமது சம்மதத்தைத் தெரிவிப்பதற்கு சிறுவர்கள் அருகதையற்றவர்கள் என கருதப்படுகின்றது. இருப்பினும், அவர்களது வயது, முதிர்ச்சி போன்ற காரணிகளைக் கருத்திற்கொண்டு அறிவிக்கப்பட்ட சம்மதத்தினைத் தெரிவிப்பதற்கு அவர்களை அனுமதிக்க முடியும் (பார்க்க அத்தியாயம் 16: மேலதிக விபரங்களுக்கு சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை எனும் பிரிவு).

அறிவிக்கப்பட்ட சம்மதத்தினைத் தெரிவிப்பதற்கு தகுதியற்ற தனிநபர்கள், வயதானவர்கள் அல்லது சிறுவர்கள் ஆகியோரைப் பொறுத்தவரையில் அறிவிக்கப்பட்ட சம்மதத்திற்குப் பதிலாக சட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஏற்புடைய விடயங்களின் பிரகாரம் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நபர் ஒருவர் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படலாம்.

### கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய விடயம்

**அறிவிக்கப்பட்ட சம்மதமானது ஒரு தொடர் செயன்முறையாகும். ஆவணப்படுத்தலின் சகல மட்டங்களிலும் சம்மதம் தெரிவித்தல் நடைபெறுகிறது:** ஒவ்வொரு பொருத்தமான கட்டம் அல்லது செயன்முறை ஆகியவற்றின் பொழுது சகல ஒத்துழைக்கின்ற நபர்களும் தமது அறிவிக்கப்பட்ட சம்மதத்தினைத் தெரிவிக்க வேண்டும். இது பின்வருவனவற்றுள் ஏதாவதை உள்ளடக்கியதாக இருக்கலாம்:

1. பேட்டி காண்கின்ற பொழுது மற்றும்/ அல்லது விசாணையின் பொழுது
2. புகைப்படம் எடுக்கின்ற பொழுது
3. அவர்களது தகவல்களை பதிவுசெய்கின்ற பொழுது
4. ஏதாவது உதவிச் சேவைகளுக்கு ஆற்றுப்படுத்துகின்ற பொழுது
5. அவர்கள் பற்றிய தகவல்களை மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய விபரங்களை மூன்றாவது தரப்பினர்களிடம் பகிர்ந்துகொள்கின்ற பொழுது

**அறிவிக்கப்பட்ட சம்மதமானது ஆவணப்படுத்தலின் சகல அம்சங்களின் பொழுதும் சம்மதம் தெரிவித்தலுடன் தொடர்புடையதாகும்:** செயற்படுத்துனர்கள் இதனை தெளிவாகவும் முழுமையாகவும் புரிந்திருத்தல் வேண்டும்.:

1. ஆவணப்படுத்தலின் சகல அம்சங்களுடன் தொடர்புடைய நோக்கங்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்காலப் பயன்பாடு
2. அந்தரங்கத் தன்மை அல்லது இரகசியத்தன்மை அவர்கள் வழங்குகின்ற தகவல்களுடன் எவ்விதம் இது ஏற்புடையதாக இருக்கின்றது அல்லது ஏற்பில்லாமல் இருக்கின்றது.

3. பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் - கோரப்பட்ட தகவல்களின் தன்மை மற்றும் எதிர்காலத்தில் எத்தகைய தகவல்கள் வெளியிடப்படும் என்பன போன்றன
4. பங்குபற்றுவதனால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய இடர்கள் மற்றும் நன்மைகள்

**அறிவிக்கப்பட்ட சம்மதம் என்பது ஒரு சட்ட ரீதியான கடப்பாடாகும்.** முறையான அறிவிக்கப்பட்ட சம்மதத்தினைப் பெறாமல் மேற்கொள்ளப்பட்ட பேட்டிகள் சில சட்ட ரீதியான செயன்முறைகளின் பொழுது ஏற்றுக்கொள்ளப்படாமலும் இருக்கலாம். அல்லது ஏதோ ஒரு வகையில் பலவந்தத்தைப் பிரயோகித்துப் பெறப்பட்ட தகவல்கள் அல்லது பிழையான அல்லது மோசமான உத்தரவாதங்களை வழங்கிப் பெறப்பட்ட தகவல்கள் போன்றன ஏற்றுக்கொள்ளப்படாமல் விடப்படலாம்.

**அறிவிக்கப்பட்ட சம்மதத்தை ஏன் பெற்றுக்கொள்ள வேண்டும்?**

### நற்சான்றிதழ் தொடர்பான தகவல்களை ஆவணப்படுத்துவதற்கு முன்னர் அறிவிக்கப்பட்ட சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளல்:

பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி தனது சொந்த அனுபவங்கள் தொடர்பில் முழுமையான கட்டுப்பாட்டினையும் அதிகாரத்தையும் பேணுகின்றனர் என்பதை உறுதிசெய்துகொள்ளல். இவர்கள் அறிவுள்ளவர்களாக இருப்பதுடன் நீதிச் செயன்முறையில் பங்குபற்றுவதற்கு விருப்பமுடையவர்களாகவும் இருத்தல்.

### அறிவிக்கப்பட்ட சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளாமல் விடுதல்:

இது பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியினுடைய உரிமைகளை மீறுவதாகும். இது அவர்களை அவமரியாதைக்கு உட்படுத்துவதுடன் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தலாம்.

**அறிவிக்கப்பட்ட சம்மதத்திற்கான தடைகள்**

**A. பொய், ஏமாற்றுதல், ஒரு பகுதி விடயத்தை மாத்திரம் தெரிவித்தல்.** உதாரணமாக, சம்மதத்தினைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டு இடர்கள் பற்றி முழுமையாகத் தெரிவிக்காமல் விடுவது. தகவல்களை தடுத்து வைப்பதற்கான எண்ணம் குரோதமற்றது என்ற விடயங்களையும் இது உள்ளடக்கியுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் கோமடைவதையோ அல்லது ஆத்திரமடைவதையோ தடுப்பதற்காகவும் இது இடம்பெறலாம். விருப்பமின்றி ஏமாற்றப்படுவதைத் தவிர்ப்பதற்கு மேலதிகமாக அறிவிக்கப்பட்ட சம்மதம் தொடர்பிலான கலாசாரமானது சம்பந்தப்பட்ட சகலவிதமான தகவல்களையும் விரிவான சாதகமான கடப்பாடுகளுடன் வெளிப்படுத்துவதற்கு அனுமதிக்கிறது.

**B. முழுமையாக கிரகிக்க முடியாமை.** பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் தாமாகப் புரிந்துகொண்டார்கள் என்பதன் அர்த்தம் வெளிப்படுத்துதல் மாத்திரம் என்பதாகாது. இச்சந்தர்ப்பத்தில் முழுமையான தேர்ச்சியுடையவர்களாக இருக்கலாம். சம்பந்தப்பட்ட சகலவிதமான தகவல்களையும் விளக்கமளிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மொழி ரீதியான பிரச்சினைகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட கிரகித்தல் ஆற்றல் போன்ற பிரச்சினைகளும் காணப்படலாம். உதாரணமாக, மருத்துவச் சோதனைகளின் பொழுது இடர்கள் தொடர்பான புள்ளிவிபரம் சார்ந்த தகவல்களின் அர்த்தத்தை முழுமையாக பலர் புரிந்துகொள்ளவில்லை என இனங்காணப்பட்டது. எனவே, முழுமையான சம்மதத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு வினைத்திறன் மிக்க தொடர்பாடல் அவசியமாகும்.

**C. பலவந்தப்படுத்தல் மற்றும் தூண்டுதல்.** பலவந்தம் பிரயோகிக்கப்பட்டிருப்பின், தாமாகத் தெரிவிக்கின்ற இணக்கம் பொருத்தமற்றதாகும். அதாவது, இத்தகைய பலவந்தம் விசாரணையாளர்களினால் அல்லது பாதிக்கப்பட்டவருடைய குடும்ப உறுப்பினர்களினால் அல்லது சாட்சிகளின் குடும்பத்தினர்களினால் அல்லது சமுதாயம் அல்லது ஏனையவர்களினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பொழுது தானாக தெரிவித்த சம்மதம் ஏற்புடையதாக இருக்க முடியாது. அதேவேளை, இச்சந்தர்ப்பத்தில் வழங்கப்படுகின்ற உதவிகள் வாபஸ் பெறப்படும் என்ற அச்சுறுத்தல்களையும் கருத்திற்கொள்ளல் வேண்டும். உதாரணமாக பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி பாலியல் வன்முறை தொடர்பில் வெளிப்படுத்தாத சந்தர்ப்பங்களில் சம்மதத்தினை பெறுமதியற்றதாக்குதல். அதேவேளை சில விடயங்களை வெளிப்படுத்தலை மாத்திரம் மையமாகக் கொண்டு வழங்கப்படுகின்ற தூண்டுதல் சார்ந்த உதவிகளும் பெறுமதியற்றதாகும். எதிர்கால நன்மைகள் பற்றிய விடயம் முறையற்ற அவதானத்தின் அடிப்படையில் நிகழுமாயின். இடர்கள் தொடர்பான பரிசீலனைகள் அபாயத்திற்குள்ளாகின்றன.

### அறிவிக்கப்பட்ட சம்மதத்தைப் பெற்றுக்கொள்வதானது ஒரு தொடர் செயன்முறையாகும்:

**1. பாதிக்கப்பட்டவர்/சாட்சியினால் வழங்கப்பட்ட சம்மதமானது அவரது சுய விருப்பத்தின் பேரில் தெரிவிக்கப்பட்டது என்பதை உறுதிசெய்துகொள்ளல்.**

» நேர்மையான நம்பிக்கைக்குரிய சூழலை உருவாக்கவும் இச்சூழலானது பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி தனது சுய விருப்பத்தின் பேரில் தாமாகவே வந்து விடயங்களைத் தெரிவிப்பதற்கு அல்லது மறுப்பதற்கான வாய்ப்பினை வழங்குதல் வேண்டும். உண்மையில் இத்தகைய நம்பிக்கைகளை இவ்வாறு கட்டியெழுப்புவது என்பது தொடர்பிலான ஆலோசனைகள் பேட்டி காண்பது தொடர்பான அத்தியாயம் 11 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

» பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி செயற்பாட்டாளருடன் தான் விரும்பிய நேரத்தில் கதைப்பதற்கு அல்லது கதைக்காமல் விடுவதற்கான தெரிவுகள் உள்ளன என்பதை அவர்களுக்கு தெளிவாக விளங்கப்படுத்தவும். இச்செயன்முறை முழுவதும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்த தெரிவினைப் பயன்படுத்தலாம் என்பதைக் குறிப்பிடவும்.

» பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகள் ஆகியோர் கேள்விகளைக் கேட்பதற்கான வாய்ப்பினை வழங்கவும். அத்தோடு, அவர்களது அக்கறைகளை பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பினையும் வழங்கவும்.

- செயற்பாட்டாளர் என்ற உங்களது அதிகார நிலையை மிகவும் கவனமாகப் பிரயோகிக்கவும். பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியுடன் மிகவும் கண்ணியமான முறையில் ஊடாட்டத்தினை மேற்கொள்ளவும்.
- அதிகார இயங்காற்றல் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருக்கவும். பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியுடன் இணைந்து வருகின்றவர்களின் பலவந்தம் பிரயோகிக்கப்படுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. அதாவது இவர்களுடன் கூட வருகின்ற ஆண்கள் அல்லது பெற்றோர்களினால் இவை ஏற்படலாம்.
- பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி தீர்மானத்தை மேற்கொள்வதற்கும் பாதிப்புறு நிலையில் இருக்கின்ற பொழுது இடர்கள் மதிப்பீடு செய்யப்படும் பட்சத்தில் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்கின்ற சவால்களைப் புரிந்துகொள்வதற்கும் மற்றும் மோதலின் போது பொழுது துரிதமாக மாறிவருகின்ற சூழல்களைப் புரிந்துகொள்வதற்கும் போதியளவு நேரமுள்ளது என்பதை உறுதிசெய்துகொள்ளல். பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பங்கள், சமூகம் இப்பொழுதும் எதிர்காலத்திலும் பங்குபற்றுகின்ற பெழுது எழக்கூடிய பின்விளைவுகள், சிக்கலான சூழ்நிலைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு அவர்களுக்குரிய நேரம் வழங்கப்படல் வேண்டும்.
- ஒவ்வொரு முறையும் நீங்கள் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளுடனான தொடர்புகளை மேற்கொள்கின்ற பொழுது கூற்றுக்களைப் பயன்படுத்துவது தொடர்பிலோ அல்லது மூன்றாம் தரப்பிற்கு தகவல்களைப் பரிமாறிக்கொள்வது தொடர்பிலோ அவர்களது சிந்தனையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளினால் இலகுவாக புரிந்துகொள்ளக் கூடிய மொழியைப் பயன்படுத்தவும். குறிப்பாக பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளது தாய்மொழியைப் பயன்படுத்தவும்.
- வார்த்தைக்கு வார்த்தை தெளிவாக எடுத்துரைக்கக் கூடிய தேர்ச்சிபெற்ற உரைபெயர்ப்பாளர்களைப் பயன்படுத்தவும். அறிவிக்கப்பட்ட சம்மதம் தொடர்பிலும் அதன் தேவைப்பாடுகள் தொடர்பிலான அர்த்தங்கள் பற்றியும் அவர்கள் முழுமையாக புரிந்து கொண்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தவும்.

**2. பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிக்குச் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் விளக்குவதற்கான நேரத்தை எடுத்துக்கொள்ளவும்.**

- சமூகமளித்த குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களை இனங்காணவும் மற்றும் அவர்களது செயற்பாடுகள் யாருக்காக வேலை செய்கின்றார்கள், யாருக்காக தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன என்பது தொடர்பிலும் அறிந்துகொள்ளவும்.
- தகவல் சேகரிப்புச் செயன்முறையின் நேர்ககம் மற்றும் அதன் தன்மை மற்றும் ஆக்கவமைவு, தொடர்பு முறைகள் மற்றும் குழுவின் ஆணை ஆகியன பற்றி தெரிவாக முழுமையாக விளக்கமளிக்கவும்.
- வழங்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துவது தொடர்பான சகல சாத்தியப்பாடுகளையும் தெளிவுபடுத்துவதி சம்மதத்தினைப் பெற்றுக்கொள்ளவும் (தரவு சேகரித்தல், தகவல்களைப் பரிமாறிக்கொள்ளல் போன்றன). இவற்றுள் தகவல்களை வெளிப்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகளும் உள்ளன. இந்தச் செயன்முறையின் பொழுது இவற்றினை உறுதிப்படுத்துவதற்குக் கேட்கப்படலாம் அல்லது கேட்கப்படாதுவிடலாம் ஆகியன உள்ளடங்கலாக.
- ஆவணப்படுத்தல் செயன்முறையில் பங்குபற்றுவதனால் ஏற்படக் கூடிய இடர்கள் மற்றும் நன்மைகள் ஆகியவற்றை எடுத்துரைக்கவும் அத்தோடு வழங்கப்படுகின்ற சேவைகளின் மட்டுப்பாடுகள் தொடர்பில் குறிப்பிடவும்.
- பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளிடம் கேட்கப்படக் கூடிய கேள்விகள் பற்றிக் குறிப்பிடவும்.
- பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி தெளிவாக புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் தகவல்களைச் சமர்ப்பிக்கவும். இந்தத் தகவல்களை அவர்கள் புரிந்துகொண்டுள்ளார்கள் என்பதை உறுதிசெய்துகொள்ளவும். பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகள் இந்தக் கேள்விகளை சரியாகப் புரிந்துகொண்டுள்ளனரா என்பதை அறிந்துகொள்ளும் முகமாக அவர்களிடம் மீண்டும் செயற்படுத்துனர்கள் கேள்வியைக் கேட்பது ஒரு சிறந்த நடைமுறையாகும்.

**3: விடேச தொடர்பாடுகள் தொடர்பில் தெளிவான சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளவும்**

- தமது அடையாளம், தொடர்பு விளக்கங்கள், ஏனைய தகவல்கள் ஆகியவற்றை மூன்றாம் தரப்பினருக்கு வழங்குவதற்கான உடன்பாட்டினை பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் தெளிவாக வழங்குதல் வேண்டும். குறிப்பாக தேசிய அல்லது சர்வதேச புலனாய்வாளர்கள் அல்லது அமைப்புகள், நீதிமன்றங்கள், பொலிஸ் போன்றன.
- குறிப்புக்களை எடுத்தல், ஒளிப்பதிவுக் கருவிகள் போன்றவற்றைப் பயன்படுத்தல் அல்லது வீடியோக் கெமரா போன்றவற்றை பேட்டியின் பொழுது பயன்படுத்தல் போன்றவற்றுக்காக சம்மதம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஒளிப்பதிவு அல்லது வீடியோக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதை பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சி அறிந்துள்ளார் என்பதை உறுதிசெய்து கொள்ளவும்.
- பாதிக்கப்பட்டவரை புகைப்படம் எடுத்தல், உடல் ரீதியான சோதனைகள், ஆவணங்கள் அல்லது அவர் வழங்கிய ஏனைய விடயங்களை புகைப்படப் பிரதியெடுத்தல் போன்றன தொடர்பில் மேலதிக சம்மத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

## C. பாதிப்பினை (தீங்கினை) தணித்தல்

ஏற்படக்கூடிய மேலதிக தீங்கினை அல்லது பாதிப்பினைத் தணிப்பதற்கு அல்லது அவை தொடர்பிலான பதிலளிப்புக்களை மேற்கொள்வதற்கு நெறிமுறை சார்ந்த பொறுப்புகள் CARSV விசாரணையாளர்களுக்கு இருத்தல் வேண்டும். விசாரணையாளர்களினால்ற்படக்கூடிய மேலதிக தீங்கினை அல்லது பாதிப்பினைத் தணிப்பதற்கு அல்லது அவை தொடர்பிலான பதிலளிப்புக்களை மேற்கொள்வதற்கு நெறிமுறை சார்ந்த பொறுப்புகள் CARSV விசாரணையாளர்களுக்கு இருத்தல் வேண்டும். விசாரணையாளர்களினால் ஏற்படக்கூடிய பாதிப்பிற்கு அப்பால் செயற்படக்கூடியதாக தணித்தல் நடைமுறைகள் இருத்தல் வேண்டும். மேலும் ஏனைய சூழமைவுகள், சமூகம் மற்றும் நிறுவனம் சார்ந்த சக்திகள் ஆகியவற்றினால்

ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தணிப்பதாகவும் அவற்றுக்கு பதிலளிப்பதாகவும் இவர்களது பொறுப்புகள் இருத்தல் வேண்டும்.

**பெட்டி 3**

### தீங்கினை தணித்தல்

**தீங்கினை எவ்வாறு தணிக்கலாம்?**

1. **இடர்களை மதிப்பீடு செய்யவும்** அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்வைக்கவும்
2. உங்களது முயற்சிகளை இயலுமானவரை ஏனைய குழுக்களுடன் **ஒருங்கிணைக்கவும்**
3. அந்தரங்கத் தன்மையை மதிப்பதுடன் அதன
4. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரைப் பொருத்தமான சேவைகளுக்கு **ஆற்றுப்படுத்தவும்**

## 1. அச்சுறுத்தல் மற்றும் இடர் தொடர்பான மதிப்பீடுகள்

**இடர்களை மதிப்பீடு செய்கையில்** முதலாவதாக நிகழக்கூடிய அச்சுறுத்தல்களை இனங்காணல் வேண்டும். அத்தோடு, எத்தகைய இடர் காரணிகள் அச்சுறுத்தலை உருவாக்குகின்ற என்பதும் மதிப்பீடு செய்யப்பட்டு இறுதியில் அத்தகைய நிகழக்கூடிய இடர்களைத் தடுப்பதற்கான வழிமுறைகளைச் செயற்படுத்தல் வேண்டும்.

பாலியல் வன்முறைகளை ஆவணப்படுத்தல் தொடர்பான திட்டமிடல்களை மேற்கொள்கின்ற பொழுது செயற்பாட்டாளர்கள் பல்வேறு வகையான **அச்சுறுத்தல்களை** மதிப்பீடு செய்தல் வேண்டும். அதாவது உண்மையான அச்சுறுத்தல், கற்பனை செய்யப்பட்ட அல்லது உணரப்பட்ட அச்சுறுத்தல் போன்றன, இவை பாதிக்கப்பட்டவர்கள், ஏனைய சாட்சிகள், பரந்த சமூகம், விசாரணையாளர்கள் ஆகியோருக்கு பாதிப்புக்களை அல்லது தீங்கினை ஏற்படுத்தலாம். அத்தோடு, இத்தகைய அச்சுறுத்தல்கள் கொண்டுசெல்கின்ற **இடர்களையும்** மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**பெட்டி 4**

### அச்சுறுத்தல்கள், இடர்கள் மற்றும் பாதிப்புறும் தன்மை

அச்சுறுத்தல் எனப்படும் பொழுது பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், பரந்த சமூகம், செயற்பாட்டாளர்கள் ஆகியோரைப் பாதிக்கக் கூடிய ஏதாவது காரணிகள் (செயல்கள், பின்புலங்கள் அல்லது நிகழ்வுகள் அல்லது சான்றுகளைப் பாதிக்கக் கூடிய அல்லது அவற்றை அழிக்க கூடிய காரணிகள் அல்லது ஏதாவது உட்கட்டமைப்பு அல்லது ஒட்டுமொத்தச் செயற்பாட்டினையும் அழிக்கக் கூடிய காரணிகள் அச்சுறுத்தல்கள் எனப்படுகின்றன.

பாதிப்புறும் தன்மை எனும் பொழுது குறைபாடுகள் அல்லது இடைவெளிகள் ஆகும். உண்மையான பாதகத்தை ஏற்படுத்தும் முகமாக அச்சுறுத்தல்கள் இவற்றை தம் வயப்படுத்திக்கொள்கின்றன.

இடர் என்பது அச்சுறுத்தல் ஏற்படுவதற்கான சாத்தியப்பாட்டினைக் குறிப்பிடுகிறது. இது ஏற்படுத்தக் கூடிய தாக்குதலுக்கு மேலதிகமாக உண்மையில் நிகழும் பட்சத்தில் தாக்கங்கள் ஏற்படலாம்.

இடர்களை மதிப்பீடு செய்வதானது முதலில் நிகழக்கூடிய அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்தல், எத்தகைய இடர் காரணிகள் அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு பங்களிப்புச் செய்கின்றன என்பதை மதிப்பீடு செய்தல், அதனால் ஏற்படக் கூடிய தாக்கத்தை மதிப்பீடு செய்தல், இறுதியாக அத்தகைய நிகழக்கூடிய இடர்களை தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய விடயம்

**தீங்கினை தணிக்கின்ற, அவற்றைத் தடுக்கின்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பொழுது முழுமையான அச்சுறுத்தல் மற்றும் இடர் மதிப்பீடு** தொடர்பான விடயத்தை **முதலில் மேற்கொள்வது மிகவும் முக்கியமான படிமுறையாகும்.** அத்தோடு தீங்கு தொடர்பில் போதியளவு **பதிலளிப்புச்** செயற்பாட்டினை மேற்கொள்வதிலும் இது முக்கியத்துவம்பெறுகின்றது.

CARSV ஆவணப்படுத்தல் செயன்முறையின் பொழுது மாறுகின்ற யதார்த்தங்களையும் சூழல்களையும் கருத்திற்கொண்டு ஆவணப்படுத்தல் செயன்முறை முழுவதும் அச்சுறுத்தல் மற்றும் இடர் மதிப்பீடுகளை **தொடர்ச்சியாக** மேற்கொள்ளல் வேண்டும். தொடர்ச்சியாக இடர் மதிப்பீடுகளை மேற்கொள்கின்ற பொழுது ஆவணப்படுத்தல் செயன்முறை எந்தத் திசையில் செல்ல வேண்டுமென்பதை அது எடுத்துரைக்கும்.

இங்கு மேற்கொள்ள வேண்டிய **மிக முக்கியமான** மதிப்பீடு என்னவெனில், சகல தனி **நபர்களுக்கும் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் குறிப்பாக விசாரணையின் காரணமாக ஏற்பட்ட தாக்கங்கள் ஆகியவற்றை மதிப்பீடு** செய்வதாகும். இருப்பினும் உட்கட்டமைப்பு வசதிகளின் பாதுகாப்பு மற்றும்

*இடர் மிகக் கடினமாகவிருந்து அதனைத் தணிக்க முடியாத சந்தர்ப்பங்களில் சாட்சியையோ அல்லது தகவல்களையோ தொடரக்கூடாது.*

உபகரணங்களின் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஒரு முழுமையை நோக்கிய பாதையில் அச்சுறுத்தல் அல்லது இடர் தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் (பார்க்க அத்தியாயம் 8 : பாதுகாப்பு).

**பாலியல் வன்முறைகளை** ஆவணப்படுத்துகின்ற பொழுது பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் குறிப்பிட்ட வகையிலான **அச்சுறுத்தல்களையும் இடர்களையும்** எதிர்கொள்வதற்கான வாய்ப்புகள் உண்டு. வன்முறை அல்லது பலவந்தத்தின் காரணமாக அவமரியாதைக்கு உள்ளான குடும்ப உறுப்பினர்கள் பழிவாங்குவதற்கான அச்சுறுத்தல்களை விடுக்கலாம். தீங்கிழைத்தவரையே திருமணம் செய்யும்படி பாதிக்கப்பட்டவருக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம் அல்லது நடந்ததை மாற்றி பொய் கூறும்படி கூறலாம். திருமண பந்தத்திற்கு வெளியே பாலியல் உறவுகளை வைத்துக்கொள்வது அல்லது தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுவது குற்றமாகக் கருதப்படுகின்ற கலாசாரப் பின்புலங்களில் பாதிக்கப்பட்டவர் கைதுசெய்யப்படுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. தகவல்களை வெளிப்படுத்துவதன் காரணமாக ஏற்படக்கூடிய பொதுவான இடர்களுக்கு அப்பால் செயற்பாட்டாளர்கள் சிந்தித்துச் செயற்படல் வேண்டும். சில வேளைகளில் பாதிக்கப்பட்டவர் முன்வந்து விடயங்களைக் குறிப்பிடுவதற்கு நிறுவன ரீதியான, சமூக ரீதியான அல்லது சட்ட ரீதியான தடைகளும் இருக்கலாம்.

### அச்சுறுத்தல் மற்றும் இடர் தொடர்பான மதிப்பீட்டினை எவ்வாறு மேற்கொள்வது?

**படிமுறை ஒன்று: அச்சுறுத்தல்களை பட்டியல்படுத்தவும்:** எவ்வகையான அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன? யார் அல்லது எது அச்சுறுத்தப்பட்டது? யாரால் அல்லது எதனால் அச்சுறுத்தல் உருவாக்கப்பட்டது?

**படிமுறை இரண்டு: இடர்களை மதிப்பீடு செய்தல்:** அச்சுறுத்தல் எவ்வாறு யதார்த்தமாகும். தனி நபர்கள், உட்கட்டமைப்பு வசதிகள் அல்லது தகவல்கள் ஆகியவற்றில் எத்தகைய கடும் தாக்கத்தினை இது ஏற்படுத்தும்?

**படிமுறை மூன்று: இடரைத் தணித்தல் அல்லது முகாமைத்துவம் செய்தல்:** இத்தகைய இடர்களைக் குறைப்பதற்கு அல்லது அவற்றுக்கு எதிராகச் செயற்படுவதற்கு எத்தகைய நடைமுறைகளைப் பிரயோகிக்கலாம்.

பார்க்க பின்னிணைப்பு 2 : அச்சுறுத்தல் மற்றும் இடர் மதிப்பீடுகள்.

## 2. ஒருங்கிணைப்பு

குறிப்பிட்ட நேரமொன்றில், மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பாலியல் வன்முறை தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கும் பதிவுசெய்வதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் பல்வேறு விதமான முயற்சிகள் நடைபெறலாம். பாலியல் வன்முறைகள் அதிகமாக இடம்பெறுவதாக நம்பப்படுகின்ற பிரதேசங்கள், மனிதாபிமான பதிலளிப்புகள் தாபிக்கப்பட்ட இடங்கள் அல்லது உத்தியோகபூர்வமான சர்வதேச அல்லது தேசிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட இடங்களில் இந்நிலைமை பொதுவாக காணப்படலாம்.

பல்வேறு வகையான விசாரணைகள் காணப்படுகின்ற பொழுது அது தனி நபர்களையும் சமூகத்தையும் பாதிக்கக் கூடியதாகவிருக்கும். மற்றும் சேகரிக்கப்படுகின்ற தகவல்களின் தன்மையைப் பாதிக்கக் கூடியதாகவிருக்கும். அத்தோடு, அவற்றைக் குற்றவியல் விசாரணைகளில் பயன்படுத்தல் மற்றும் அப்பிரதேசத்தில் செயற்படுகின்ற அமைப்புகளின் பணி ஆகியவற்றையும் பாதிக்கலாம்.

### மோசமான ஒருங்கிணைப்பானது பின்வருவனவற்றுக்கு இட்டுச்செல்லலாம்:

» பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் தமது கதையை தொடர்ச்சியாக பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு நபர்களிடம் மாறுபட்ட நோக்கங்களுக்காக குறிப்பிட வேண்டி ஏற்படலாம். சில வேளைகளில் இது மீள் மனவடுவிற்கும் இட்டுச் செல்லலாம். கேட்கப்படும் கேள்விகள் எத்தகைய கூருணர்வுமிக்கவையாக இருந்த பொழுதிலும் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி இதனை விசாரணையாகவே உணர்வார்.

» மதிப்பீட்டுச் சோர்வு – பல்வேறு வகையான விசாரணைகள், தலையீடுகள் மற்றும் வாக்குறுதிகள் ஆகியவற்றின் காரணமாக சமூகம் சோர்வுற்றதாகவிருக்கலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் உதவிகளை வழங்குவதற்கு முன்வரமாட்டார்கள்.

» தொடர்ச்சியான அவதானத்தின் காரணமாக தனி நபர்கள் அல்லது சமூகம் இடர்களை எதிர்கொள்ளலாம். தமது சொந்த சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களைக் காட்டிக்கொடுக்கின்றோம் அல்லது அவர்கள் மீது குற்றம் சுமத்துகின்றோம் என்ற உணர்வுகளும் ஏற்படலாம்.

» பல்வேறு விதமான நடவடிக்கைகளின் காரணமாக சில வேளைகளில் முரணான தன்மைகள் ஏற்படலாம், உண்மை தொடர்பான கூற்றுக்களில் முரண்பாடுகள் ஏற்படலாம். இதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்களது எதிர்கால குற்றவியல் சார் நீதி, இழப்பீடுகள் அல்லது ஏனைய செயன்முறைகள் பாதிக்கப்படலாம்.

சாட்சிகளையும் பாதிக்கப்பட்டவர்களையும் மதிப்பதற்காகவும் சிறந்த தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்துகொள்ளும் முகமாகவும் வாய்ப்புள்ள சகல சந்தர்ப்பங்களிலும் இத்தகைய செயன்முறைகள் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும். இதன் இறுதியில் செயற்பாட்டாளர்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ளல் வேண்டும்:

**ஏற்கனவே ஆவணப்படுத்தல் இடம்பெற்றுள்ளதா என்பதைக் கண்டறியவும்.** ஏனைய அமைப்புகளினால் அல்லது நிறுவனங்களினால் செயற்பாட்டாளர்கள் சேகரிப்பதற்கு முற்படுகின்ற தகவல்கள் ஏற்கனவே சேகரிக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல் வேண்டும். அத்தகைய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமா, மற்றும் பேட்டி காணல் உள்ளடங்கலாக மீள் ஆவணப்படுத்தல் அவசியமா என்பதையும் முன்கூட்டியே தீர்மானித்தல் வேண்டும்.

குறிப்பிட்ட பிரதேசத்திற்கு விஜயம் செய்வதற்கு முன்னர் அங்குள்ள அமைப்புகளுடன் **தொடர்புகளை வளர்த்துக்கொள்ளவும்.** வாய்ப்புள்ள சகல சந்தர்ப்பங்களிலும் அவர்கள் சேகரித்த அல்லது சேகரிக்காது விட்ட தகவல்களின் வகை, அவற்றின் தன்மை மற்றும் கால அளவு, நோக்கம் ஆகியவற்றை மதிப்பீடு செய்யவும்.

**தேசிய, பிராந்திய, பிரதேச மட்டங்களில் காணப்படுகின்ற தற்போதைய பால்நிலை மைய வன்முறை ஒருங்கிணைப்புப் பொறிமுறைகள் பற்றி அறிந்துகொள்ளவும்.** தற்போதைய முறை தொடர்பில் அறிந்துகொள்கின்ற பொழுது தகவல்களை பரிமாறிக்கொள்ளல், தரவுகளை மதிப்பீடு செய்தல், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் தொடர்பில் பாதுகாப்பான தீர்வுகளை நாடுதல் ஆகியவற்றை இது இலகுபடுத்தலாம்.

**தகவல்களைச் சேகரிக்கின்ற ஏனைய அமைப்புகளின் பாதுகாப்பு முறை, மேலதிக அக்கறைகள் ஆகியன பற்றி அறிந்துகொள்ளவும்.** சில அமைப்புகள் மிகவும் ஜாக்கிரதையாக தகவல்களைச் சேகரிக்கலாம். இவை கடும் பாதுகாப்பு ஒழுங்கு மரபின் கீழ் செயற்படலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் மற்றவர்களும் அவர்களது அணுகுமுறை மற்றும் ஒருங்கிணைப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இருக்கலாம்.

தகவல்களைக் கையாளுவதன் மூலம் அல்லது திரிபுபடுத்துவதன் மூலம் சில அமைப்புகளும் **சில தனி நபர்களும் பாதிக்கப்பட்ட சமூகத்தை பிழையாக வழிநடத்தலாம். தகவல்களை முன்வைத்தால் பின்விளைவுகளை எதிர்நோக்க வேண்டியேற்படும் என அச்சுறுத்தப்படலாம்.** மேலும், ஆவணப்படுத்தல் செயன்முறைகளை தரம் குறைக்கும் நோக்குடன் வேண்டுமென்றே பிழையான தகவல்களை முன்வைக்கலாம்.

பாலியல் வன்முறைகள் தொடர்பிலான தரவுகளைச் சேகரிக்கின்ற, **அங்கு நிலவுகின்ற தற்போதைய முறைகள் பற்றி அறிந்துகொள்ளவும்:** மேலும் அவற்றின் நோக்கங்கள், அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன, சேகரிக்கப்பட்ட தகவல்களை பரிமாறிக்கொள்வதில் எத்தகைய மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன போன்றன பற்றியும் அறிந்திருத்தல் இவற்றுள் பால்நிலை வன்முறை தகவல்கள் முகாமைத்துவ முறைமைகள் (GBVIMS) மோதல்களுடன் தொடர்புபட்ட பாலியல் வன்முறைகள் தொடர்பான கண்காணிப்பு பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல் (MARA) ஆகியனவும் உள்ளடங்கும். இவை 1960 ஆம் ஆண்டு ஐ.நா. வின் பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**சமூகங்கள் மத்தியில் மாறுபட்ட நிகழ்ச்சி நிரலுடன் செயலாற்றுகின்ற ஏனைய அமைப்புகளினது ஆணைகளையும் மதிக்கவும்.** அனைவருக்கும் பக்கச்சார்பற்ற உதவிகளை வழங்கும் நோக்கில் சில சேவை வழங்குனர்களும் அங்கு செயற்படலாம். அத்தோடு, மோதல்களை மத்தியஸ்தம் செய்தல், சட்ட நடவடிக்கை முயற்சிகளை சுயாதீனமாக மேற்கொள்ளல், ஒட்டுமொத்தச் சமூகத்துடனும் ஒருங்கிணைந்து நடந்துகொள்ளல் ஆகியன இங்கு பிரதான வகிபாகமாகும்.

அகதி முகாம்களில் இருக்கின்ற அமைப்புகள் மற்றும் சமூகங்கள், அங்குள்ள இடம்பெயர்ந்தோருக்கான முகாம்கள் மற்றும் ஏனைய இடங்கள், உதவிகளை வழங்குபவர்களது அலுவலகங்கள், சிகிச்சை நிலையங்கள், சமுதாய பாதுகாப்பு இடங்கள் ஆகியவற்றுக்கு **விஜயம் செய்கின்ற பொழுது முன்கூட்டியே மேலதிக கவனத்தை எடுக்கவும்.** பொருத்தமான சந்தர்ப்பங்களில் முன்கூட்டியே அத்தகைய விஜயங்களைத் திட்டமிடவும். அறிவிக்காமல் தகவல்களைப் பெறுவதற்கான கோரிக்கையை விடுக்க வேண்டாம்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் **இரகசியத்தன்மையை உறுதிப்படுத்துவதன் அடிப்படையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்குமான சேவை சார்ந் ஏற்பாடுகள் வழங்கப்படுகின்றன என்பதைக் கருத்திற்கொள்ளவும்.** இதனை மீறமுடியாது. பாலியல் வன்முறைகள் தன்மை, அவை நடைபெற்ற இடம், பதிலளிப்புகள் ஆகியவற்றை தாபிப்பதற்கு உதவியாக சில அநாமதேய தரவுகள் இருக்கலாம். இருப்பினும், சில இடங்களில் அவற்றைப் பகிர்ந்துகொள்வது தடைசெய்யப்பட்டிருக்கலாம்.

**1888 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஐ.நா. வின் பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தின் பிரகாரம், ஐ.நா.** மற்றும் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியன தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் மேம்பட்ட மேற்பார்வைகளையும், அதாவது பாலியல் வன்முறைகள் தொடர்பான அறிக்கையிடல் ஆவணப்படுத்தல் மற்றும் மேற்பார்வை ஆகியன தொடர்பில் அவசியமான உதவிகளை வழங்குவதற்கு கோரப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகின்ற சேவை வழங்குனர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் ஆகியன சிறப்பான ஒழுக்கநெறி சார்ந்த நடைமுறைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களது சம்மதத்தினை பெற்ற தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தகவல்களை பரிமாறி பதிலளிக்கின்ற முறையினை தெரிவு செய்யலாம்.

## 3. இரகசியத்தன்மை

### இரகசியத்தன்மை என்றால் என்ன?

பாலியல் வன்முறைகளை ஆவணப்படுத்துகின்ற பொழுது இரகசியத்தன்மை ஒரு ஒழுக்கம் சார்ந்த, நெறிமுறை சார்ந்த கொள்கையாகும். அதாவது, பாலியல் வன்முறை தொடர்பில் செயற்பாட்டாளர்கள் தாம் சேகரித்த தகவல்களை பாதுகாப்பது அவசியமாகும். ஆவணப்படுத்தல் செயன்முறை முழுவதும் இந்தக் கொள்கையை செயற்பாட்டாளர்கள் பிரயோகித்தல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு, பகிரப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவற்றைக் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கின்ற சந்தர்ப்பங்களில் மிகவும் இரகசியத்தன்மையுடன் இவற்றை மேற்கொள்ள வேண்டும். சூழமைவுகளை கருத்திற்கொண்டு இரகசியத்தன்மை சார்ந்த நடவடிக்கைகளானது பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளுடைய அடையாளத்தைப் பாதுகாப்பதற்காக மட்டுமல்லாது சேகரிக்கப்பட்ட ஏதாவது தகவல்கள் வழங்கப்பட்ட உளவளச் சேவைகள், மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள், தற்போதைய ஆவணப்படுத்தல் செயன்முறைகள் ஆகிய சகலவற்றின் பொழுதும் இரகசியத்தன்மை பேணப்படல் வேண்டும். இது தொடர்பிலான வசதிகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை செயற்பாட்டாளர்கள் கொண்டிருத்தல் வேண்டும் (பார்க்க – அத்தியாயம் 8: பாதுகாப்பு)

**இரகசியத்தன்மை கொள்கைகளின் பிரகாரம் எவ்வாறு செயற்படுவது:**

**இரகசியத்தன்மை சோதனைப் பட்டியல்**

- **இரகசியத்தன்மைச் செயன்முறையை** வரையறை செய்யவும். எத்தகைய தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன, எவை சேகரிக்கப்படவில்லை என்பன பற்றியும் எங்கு அவற்றை எவ்வாறு களஞ்சியப்படுத்த முடியும் என்பது பற்றியும் அவற்றை யார் அணுகிப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது பற்றியும் ஆவணப்படுத்தல் செயன்முறையில் ஈடுபடுகின்ற சகல உறுப்பினர்களும் அறிந்துள்ளனர் என்பதை உறுதிசெய்துகொள்ளவும். ஒளி அல்லது காணொளி வடிவத்திலான பதிவுகள் அனுமதிக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பிலான கொள்கையொன்றினைத் தீர்மானிக்கவும்.
- பாதிக்கப்பட்டவர், சாட்சிகளை இனங்காண்பது தொடர்பான **தகவல்கள் மற்றும் அவர்கள் சான்றளித்தல்,** அதாவது சான்றளித்தல் தகவல்களின் நிமித்தம் புனைப்பெயர்களைப் பயன்படுத்தல், குறியீடுகளைப் பயன்படுத்தல் மற்றும் ஏதாவது உளவள ஆலோசனைத் தெரிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டனவா அல்லது பாதுகாப்பு நடைமுறைகள் நடைமுறையில் உள்ளனவா போன்றன உள்ளடங்கலாக (பார்க்க – அத்தியாயம் 8: பாதுகாப்பு மற்றும் அத்தியாயம் 13: தகவல்களைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் கையாளுதல்)
- ஆவணப்படுத்தல் செயன்முறையின் போது தாபிக்கப்பட்ட இரகசியத்தன்மையின் அளவுகோள் **பாவனை** தொடர்பில் குழுவிலுள்ள சகல உறுப்பினர்களும் தெளிவாக **புரிந்துள்ளனர்** என்பதை உறுதிசெய்து கொள்ளவும். மேலும், இக்குழுவில் உறுப்பினர்கள் அல்லாத குடும்பம், நண்பர்கள் அல்லது சகபாடிகள் மத்தியில் வழக்குத் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடவில்லை என்பதையும் உறுதிசெய்துகொள்ளவும்.
- **இரகசியத்தன்மை தொடர்பான நிபந்தனைகள் மற்றும் மட்டுப்பாடுகள்** பற்றி பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் முழுமையான தெளிவினை ஏற்படுத்தவும். அவர்களது தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதற்கான சம்மதத்தை அவர்கள் தெரிவித்துள்ளனர் என்பதை உறுதிசெய்துகொள்ளவும்.
- பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் தம்மை எவ்வாறு அணுகுவதில் விருப்பமுடையவர்கள் மற்றும் அவர்களுடன் பொது இடங்களில் எவ்விதமான ஊடாட்டத்தில் ஈடுபடலாம், அவர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்வது, ஏனைய எதிர்காலச் சாட்சிகள் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துகின்ற பொழுது எவ்வாறு அவர்களுடைய அந்தரங்கத்தன்மையும் பாதுகாப்பும் பேணப்படல் வேண்டும் போன்றன தொடர்பிலான இணக்கம்.

### இரகசியத் தன்மையின் மட்டுப்பாடுகள் என்ன?

இரகசியத் தன்மை என்ற கொள்கையின் பிரகாரம் பணியாற்றுவதை ஓர் நெறிமுறை சார்ந்த கடப்பாடாகவும் செயற்படுவதற்கு அவசியமான விடயமாகவும் கருதி புரிந்துகொள்ளல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சியளிப்பவர்களுடனான நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புவதற்கு இரகசியத்தன்மை வாய்ந்த நடைமுறைகள் பெரும்பாலும் முக்கியமானவையாகும். இது அவர்களைப் பாதுகாப்பதுடன், அவர்களுடைய அந்தரங்கத்தையும் மதிப்பதாகவிருக்கின்றது. சில வேளைகளில் செயற்பாட்டாளர்களையும் பாதுகாக்கிறது.

இரகசியத் தன்மையில் காணப்படுகின்ற மட்டுப்பாடுகள் தொடர்பில் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுடன் ஆவணப்படுத்தல்களானது நேர்மையாக இருத்தல் வேண்டும். குற்றவியல் நீதி சார் அதிகாரிகளுடன் இவற்றை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதாவது, பாதிக்கப்பட்டவர் தொடர்பான தகவல்களை பதிவுசெய்துகொள்வதற்கு முன்னர் இவ்விடயம் பற்றி அவருக்கு எடுத்துரைத்தல் வேண்டும். இறுதியில் ஏற்புடையதாயின் சில வேளைகளில் இத்தகவல்கள் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் வெளிப்படுத்தப்படலாம். அதேவேளை, இந்த ஆவணங்களின் அநாமதேயத் தன்மை முழுமையாகப் பேணப்படும் என்ற வாக்குறுதிகள் வழங்கப்படக் கூடாது. அதேவேளை, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இரகசியத்தன்மை பேணப்படும் என்ற உறுதியும் வழங்கக் கூடாது. ஏனெனில், எதிர்பாராத சூழ்நிலைகளில் இவற்றை மீறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆவணப்படுத்தல் குழுவின் ஆற்றல்களுக்கு அல்லது வல்லமைகளுக்கு ஏற்ப இயலுமானவரை தகவல்களைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றதன் பிரகாரமும்

## *இரகசியத்தன்மையின் மட்டுப்பாடுகள் மற்றும் சான்றளிக்கத் தவறுதல் அல்லது தகவல்களை கையளிக்கத் தவறுதல் ஆகியவற்றின் காரணமாக ஏற்படக்கூடிய பின்விளைவுகள் பற்றி ஆவணப்படுத்தல் குழுவின் சகல உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்படல் வேண்டும்.*

இரகசியத்தன்மையை பேணுவதற்கான உத்தரவாதங்கள் வழங்கப்பட்டுள்ளன என பாதிக்கப்பட்டவருக்க அறிவித்தல் வேண்டும். பொருத்தமான சந்தர்ப்பத்தில் இத்தகைய உத்தரவாதங்களை எழுத்து மூலம் வழங்கலாம்.

அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த ஆவணப்படுத்துனர்கள் தாம் பொறுப்பேற்கின்ற இரகசியத்தன்மை சார்ந்த நடவடிக்கைகளானவை அத்தகைய தகவல்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் இரகசியமாக வைத்திருப்பதற்கான சட்ட ரீதியான சிறப்புரிமை அல்ல என்பதையும் எடுத்துரைத்தல் வேண்டும்.

பாலியல் வன்முறைக் குற்றங்கள் தொடர்பில் அரச சார்பற்ற நிறுவனங்களினால் சேகரிக்கப்படுகின்ற தகவல்களானவை தேசிய மற்றும் சர்வதேச நீதிமன்றங்களுக்கு வழங்கப்படுகின்ற பொழுது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கோரிக்கையின் பிரகாரம் அவை பாதுகாக்கப்படுவதில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் இத்தகைய தகவல்களை அறிக்கை வடிவத்தில் சமர்ப்பிக்கின்ற பொழுது பெரும்பாலும் இது பொருந்தும். ஆனால், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இது பொருந்தாது. அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆரம்பத்தில் சமர்ப்பித்த தகவல்களை விட சில விடயங்களைப் பூரணப்படுத்துவதற்காக சில மேலதிக தகவல்களை வழங்கும் படி அரச சார்பற்ற நிறுவனங்களை நீதிமன்றங்கள் கோரலாம். அதாவது விரிவான முதல்நிலைத் தகவல்கள், சாட்சிகளை இனங்காணல், சேகரிக்கப்பட்ட சான்றுகள் போன்றன. மேலும் செயற்பாட்டாளர்கள் எதனைக் கண்டார்கள் என்பது பற்றி நேரடியாக வருகை தந்து சான்றளிக்கும் படியும் கோரப்படலாம்.

தற்சமயம் விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சூழமைவில் பணியாற்றுகின்ற பொழுது முறைமன்ற அழைப்பு ஆணைகள் அல்லது மன்றில் நேரடியாக தோன்றுவதற்கான உத்தரவுகள் வழங்கப்படலாம். இச்சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரது பாதுகாப்பு தொடர்பில் நேர்மையான அக்கறைகள் செயற்படுத்துனர்களுக்கு இருத்தல் வேண்டும். இவை பகிரங்கப்படுத்தப்படுமென சாட்சிகளுக்கு அறிவிக்கப்படல் வேண்டும். இத்தகைய சந்தர்ப்பத்தில் அவர்களது சான்றுகளையோ அல்லது அவர்கள் எங்கிருக்கிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவிக்கும் விபரங்களையோ அல்லது அடையாளங்களையோ வெளிப்படுத்தாமல் இருத்தல் வேண்டும். இரகசியத்தன்மையின் மட்டுப்பாடுகள் மற்றும் சான்றளிக்கத் தவறுதல் அல்லது தகவல்களை கையளிக்கத் தவறுதல் ஆகியவற்றின் காரணமாக ஏற்படக்கூடிய பின்விளைவுகள் பற்றி ஆவணப்படுத்தல் குழுவின் சகல உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்படல் வேண்டும்.

**பெட்டி 5**

### தகவல்களுக்கான உத்தியோகபூர்வ கோரிக்கைகள்

நீதிமன்ற நடவடிக்கைகளில் கட்டாயம் பங்குபற்றி சான்றுகளை அளித்து தகவல்களை சமர்ப்பிக்கும்படி சாட்சிகளை கட்டாயப்படுத்துவதற்கான உத்தியோகபூர்வ அதிகாரம் சர்வதேச நீதிமன்றங்களுக்கும் தேசிய நீதிமன்றங்களுக்கும் காணப்படுகின்றன. சர்வதேச சூழமைவுகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள் சான்றளித்தல் சிறப்புரிமையை தவிர்க்க முடியாது (சான்றளிக்க மறுப்பதற்கான உரிமை). தகவல்களுக்கான கோரிக்கைகள் வழங்கப்படும் பொழுது அதனை நிராகரிக்க முடியாது. ஆனால், சில உள்நாட்டுச் சூழமைவுகளில் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த உரிமையைப் பிரயோகிக்க முடியும். இது அரச சார்பற்ற நிறுவனம் ஆற்றுகின்ற பணியின் தன்மையின் அடிப்படையிலும் அது இயங்குகின்ற நாட்டில் காணப்படுகின்ற சட்டத்தின் அடிப்படையிலும் தங்கியுள்ளன.

**சிறப்புரிமைகள்**

உதாரணமாக, தனிமனிதர்வர்களுடனான இரகசியப் பரிமாற்றங்கள் தொடர்பில் சட்டத்தரணிகள், வைத்தியர்கள், மதகுருமார்கள் போன்றோர் சான்றளிப்பதை பல்வேறு வகையான தேசிய சட்டங்கள் தடைவிதித்துள்ளன. இருப்பினும் சர்வதேச குற்றவியல் சூழமைவுகளில் இத்தகைய தொழில்வாண்மை சார்ந்த சிறப்புரிமைகள் ICC இன் செயன்முறைகள் மற்றும் சான்றுகள் தொடர்பான விதிகளில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு நபருக்கும் அவரது வைத்தியர், மனநல மருத்துவர், உளவியலாளர், ஆலோசகர், மதத்தலைவர்கள் அல்லது அதனைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆகியோருக்கு இடையிலான தொடர்பாடல்களை சிறப்புரிமையாக சில நீதிமன்றங்கள் அங்கீகரித்துள்ளன. இருப்பினும் CARSV ஆவணப்படுத்தல் செயன்முறையின் பொழுது பல சிவில் சமூக அமைப்புகளினால் சேகரிக்கப்பட்ட சான்றுகள் இத்தகைய பாதுகாக்கப்பட்ட தொடர்பாடல் வகைக்குள் பொதுவாக உள்ளடங்குவதில்லை.

முறைமன்ற அழைப்பாணைகளை நிராகரிப்பதன் காரணமாக அல்லது புறக்கணிப்பதன் காரணமாக பல பின்விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைமைகளும் உள்ளன. இதற்காக தண்டப்பணம் விதிக்கப்படலாம். அல்லது செயற்பாடுகள் இடைநிறுத்தப்படலாம். சிலவேளைகளில் சிறைச்சாலைக்கு அனுப்பிவைப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

விசாரணைகளை மேற்கொள்பவர்கள் அல்லது நீதி சார்ந்த அதிகார அமைப்புகள் தகவல்கள் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிக்கைகளை விடுக்கும் பட்சத்தில் அவற்றுக்குப் பதிலளிப்பதற்கு முன்னர் அரச சார்பற்ற நிறுவனங்கள் சட்ட ரீதியான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது சிறப்பானதாகும்.

பெட்டி 6

## இணை நிலையினர் அனுபவம் (Peer experience) — இரகசியத்தன்மையின் மட்டுப்பாடுகள்

*பெடரிகோ, ஆலோசனைக் குழுத் தலைவர்: “பாதுகாப்புத் தொடர்பான கருத்திட்டம் ஒன்றை ---- வருடத்தில் சில மாதங்களாக நாம் நடத்தி வந்தோம். இது முகாம் ஒன்றில் இடம்பெற்றது. பெண்கள் இங்கு வந்து தங்களுடைய அக்கறைகள், பிரச்சனைகள் தொடர்பில் எடுத்துரைப்பார்கள். இதன் மூலம் சமூகத்தில் நாம் நம்பிக்கையினைக் கட்டியெழுப்பினோம். ஒவ்வொரு அமர்வின் பின்னரும் அங்கு வருகை தந்த சில பெண்களிடம் தனிமனிதர் முறையில் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காக ஆலோசகர்கள் அவர்களைச் சந்திப்பார்கள். தேவையேற்படுகின்ற பொழுது இத்தகைய சந்திப்புகள் இடம்பெறும். முகாமிற்கு அருகில் செயற்படுகின்ற குழுவொன்றின் மூலமாக பல இளம் பெண்கள் தாக்குதலுக்கு உட்பட்டதற்கான அறிக்கைகள் ஏற்கனவே கிடைக்கப்பெற்றன. இத்தகைய சம்பவங்களை ஆவணப்படுத்திய அதேவேளை, பாதிக்கப்பட்டவர்கள் மேலதிக உதவிகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டனர்.*

*நானும் மற்றுமொரு பெண் பிள்ளையும் இத்தகைய அமர்வுகளில் பங்கேற்பதற்கு வெட்கப்பட்டோம். இருப்பினும் அந்தப் பெண் பிள்ளைக்கும் எனக்கும் இடையில் குடும்ப ரீதியான சில தொடர்புகள் இருப்பதை அறிய முடிந்தது. அமர்வுகளுக்காக அவள் எப்பொழுதும் தனது வீட்டிலிருந்தே வருகை தந்தாள். அதன் பின்னர் என்னைச் சந்திப்பாள். நாம் கோப்பி அருந்திவிட்டு உத்தியோகப்பற்றற்ற நிலையில் பல விடயங்களைக் கலந்துரையாடினோம். அத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில் ஒவ்வொரு வாரமும் அவளது குடிசைக்கு வந்துபோகின்ற நபர் ஒருவரைப் பற்றி அவள் குறிப்பிட்டாள். சில சமயங்களில் வாரத்திற்கு இரு முறையும் அவன் வருவதுண்டு. அந்த நபர் யாரென்பதை அவள் தெரிவிக்கவில்லை. இருப்பினும், முழு இரவும் அவளுடன் அவன் தங்கியிருந்து அவனுடன் உறவுகளை மேற்கொள்வதற்கு கட்டாயப்படுத்தியுள்ளான். யாரும் அவதானிப்பதற்கு முன்னர் அந்த வீட்டிலிருந்து வெளியே சென்றுவிடுவான். இது பற்றி அவள் யாரிடமும் குறிப்பிடுவாளாயின், அவளே அவனை அங்கு வரச்சொன்னதாகவும் அவள் ஒரு விலைமாது என மற்றவர்களுடன் கூறப்போவதாகும் கூறியிருந்தான்.*

*அவளை ஒரு வைத்தியரைச் சந்திக்கும் படி நான் கூறினேன். வைத்தியரைச் சந்தித்து அவளுக்கு என்ன நடைபெற்றது என்பது பற்றி கூறும்படி எடுத்துரைத்தேன். ஆனால், அதற்கு அவள் மறுத்தாள். அதேவேளை, அவளுக்கு என்ன நடைபெற்றது என்பது தொடர்பில் யாரிடமும் எடுத்துரைக்க வேண்டாமென என்னிடம் குறிப்பிட்டாள். ஒருநாள் காலை நாம் முகாமிற்கு வந்த வேளை அங்கு எல்லா இடங்களிலும் பொலிஸார் காணப்பட்டனர். அந்தப் பெண் வசித்து வந்த டீ கட்டிடத்தில் நபர் ஒருவருக்கு பல முறை கத்தியால் குத்தப்பட்டிருந்தது. அந்த நபர் இப்பெண்ணிடம் செல்வதாக பொலிஸார் கண்டறிந்தனர். அவள் எதனையும் பேசுவதற்கு மறுத்தாள். அதன் பின்னர் அப்பெண் என்னுடன் காப்பி அருந்தியதை பொலிஸார் கண்டறிந்தனர்.*

*அந்தப் பெண் அந்த நபர் பற்றி என்னிடம் ஏதாவது குறிப்பிட்டாளா என பொலிஸார் என்னை அழைத்துக் கேட்டனர். நான் பதிலளிப்பதற்கு மறுத்தேன். நான் குறிப்பிட்டேன், இந்தத் தகவல்கள் இரகசியமானவை, ஆனால் அதனை ஏற்றுக்கொள்ள பொலிஸார் மறுத்தனர். அவர்கள் குறிப்பிட்டதாவது, நான் உத்தியோகபூர்வமாக ஒரு ஆலோசகர் இல்லை. அத்தோடு, உத்தியோகபூர்வ அமர்வொன்றின் போதும் நாம் கதைக்கவில்லை. எமது அமைப்பிற்கு அபராதம் விதிக்கப் போவதாக அவர்கள் அச்சுறுத்தினர். தொடர்ந்தும் நான் மறுத்தேன். அதன் பின்னர் என்னைக் கைதுசெய்யப் போவதாகப் பயமுறுத்தினர். அந்தப் பெண்ணைப் பாதுகாக்க வேண்டிய தேவை எனக்கு இருந்தது. ஏனென்றால், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தகவல்களை இரகசியமாக வைத்திருப்போம் என நான் குறிப்பிட்டேன். அந்தச் சந்தர்ப்பத்தில் எனது மனைவி கர்ப்பவதியாகவிருந்தாள். எம்மிடம் பெரிதளவு பணமும் இருக்கவில்லை. கைதுசெய்யப்படுவதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. அந்தப் பெண்ணுடைய விடயம் பற்றி நன்கு அறிந்திருந்தாலும் என்னால் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இறுதியில் அப்பெண்மணி என்னிடம் எதனைக் குறிப்பிட்டாள் என்பது பற்றி சான்றளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. மறுப்பதற்கான உரிமை எனக்கு இல்லையென்பதை நான் அறிந்திருக்கவில்லை. ஐ.நா. போன்ற சில சர்வதேச அமைப்புகளுக்கு இத்தகைய உரிமைகள் இருப்பது எனக்குத் தெரியும். இருப்பினும், இவ்வித உரிமைகள் எமக்கு இல்லை.*

# பாதிக்கப்பட்டவர்களை ஆற்றுப்படுத்துவதானது ஆவணப்படுத்தல் செயன்முறையில் அவர்களது பங்குபற்றுதலில் தங்கியிருக்கவில்லை

## 4. ஆற்றுப்படுத்தல் சேவைகள்

ஏதாவது ஆவணப்படுத்தல் செயன்முறையை ஆரம்பிப்பதற்கு முன்னர் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பாதிக்கப்பட்டவர்களை அல்லது சாட்சிகளை (சிறுவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட ஆண்கள் உள்ளடங்கலாக) ஆகியோரை ஆற்றுப்படுத்துவதற்கான தெரிவுகளை இனங்காண்பதற்கான முயற்சிகளைச் செயற்பாட்டாளர்கள் மேற்கொள்ளல் வேண்டும். அத்தோடு, ஆற்றுப்படுத்தல் சேவைகளுக்கான நடைமுறைகளையும் செயற்படுத்தல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளுக்க உடனடி மருத்துவ, சமூக, உளவியல்சார் சேவைகள் அல்லது பாதுகாப்பு உதவிகள் ஆகியன தேவைப்படலாம். அல்லது தகவல்களை வெளிப்படுத்துவதானது உணர்வு ரீதியாக சிரமமான விடயங்களாக அவர்கள் உணரலாம். அல்லது இவை மனவடுவை ஏற்படுத்துவதாகவோ அல்லது மேலதிக இடர்களை உருவாக்குவதாகவோ அவர்கள் உணரலாம். பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளை இனங்காண்பதற்கு முன்னர் எத்தகைய உள சமூகவியல் சேவைகள், சட்ட மற்றும் சமூக சேவைகள் காணப்படுகின்றன என்பதை முன்கூட்டியே அறிந்துகொள்வதற்கான உரிமை சாட்சிகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உண்டு.

**பெட்டி 7**

### ஆற்றுப்படுத்தல் தொடர்பான நியதிகள்

பாலியல் வன்முறையை அனுபவித்த ஆண்கள், பெண்கள் மற்றும் பிள்ளைகள் ஆகியோருக்கு பல்வேறு வகையான தேவைகள் காணப்படலாம். இவற்றுள் மருத்துவம், சமூகம், உளவியல் சாா் பராமரிப்புகள், பாதுகாப்புகள், சட்டரீதியான ஆலோசனைகள் ஆகியவற்றுடன் மேலும் பல தேவைப்படலாம். இத்தகைய மாறுபட்ட சேவைகளுக்க பாதிக்கப்பட்டவா்களை ஆற்றுப்படுத்துவதானது ஆவணப்படுத்தல் உள்ளடங்கலாக பாலியல் வன்முறை தொடா்பிலான பதிலளிப்புச் செயற்பாடுகளின் ஒரு முக்கிய அம்சமாகும்.

பாதிக்கப்பட்டவா்களுக்கு அவசியமான சகலவிதமான சேவைகளையும் தனியொரு அமைப்பினால் அல்லது நிறுவனத்தினால் மாத்திரம் வழங்க முடியுமென எதிா்பாா்க்க முடியாது. பாதிக்கப்பட்டவா்களுக்கு முழுமையை நோக்கிய உதவிகளை வழங்கும் பொருட்டு பல்வேறு விதமான அமைப்புகள், சேவைகள், தனிநபா்கள் ஆகியோா் கூட்டாக இணைந்து சேவையாற்ற வேண்டிய அவசியம் காணப்படுகிறது. பயனுறுதிமிக்க முறையில் சேவையாற்றுகின்ற பொழுது இத்தகைய மாதிரிச் சேவைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் உதவிகளானது பொதுவாக பல்துறை மாதிரிச் சேவைகள் எனவழைக்கப்படுகிறது.

ஆற்றுப்படுத்தல் முறை என்பது சில வேகைளில் ஆற்றுப்படுத்தல் வழிமுறைகள் எனவும் அழைக்கப்படுகிறது. அதாவது, பல்வேறு விதமான செயன்முறைகளையும் வரைவுச்சட்டகங்களையும் இணைக்கின்ற மாறுபட்ட சேவைகள், தனிநபா்கள், நிறுவனங்கள் ஆகியன ஒன்றுக்கொன்று தமது சேவைகளை வழங்குகின்ற பொழுது எவ்வாறு பாதிக்கப்பட்டவரை மையமாகக் கொண்டு செயற்படுகின்றது என்பதைக் குறிப்பதாகும்.

### கருத்திற்கொள்ள வேண்டிய முககிய விடயங்கள்

பாதிக்கப்பட்டவர்களினால் பெற்றுக்கொள்ள முடியாத ஆற்றுப்படுத்தல் சேவைகள் தொடர்பான வாக்குறுதிகளை செயற்படுத்துனர்கள் வழங்கக் கூடாது.

ஆவணப்படுத்தல் செயன்முறையில் பங்குபற்றுவதை மையமாகக் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் சேவைகள் இருத்தல் கூடாது. பாதிக்கப்பட்டவர்கள் சான்றளிப்பதற்குத் தவறினாலும் கூட அல்லது மறுத்தாலும் கூட அவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் சேவைகள் அவர்களின் அனுமதியுடன் இடம்பெறல் வேண்டம்.

சான்றளித்தலுக்குப் பதிலாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆற்றுப்படுத்தல் சேவைகள் அல்லது பண்டங்கள் வழங்கப்படுகின்றன என்ற பொருட்கோடலை மேற்கொள்ளக் கூடாது. பாதிக்கப்பட்டவர்கள் ஆற்றுப்படுத்தல் சேவைகளை எவ்வாறு பெற்றுக்கொள்கின்றார்கள் என்பது தொடர்பில் தெளிவான கொள்கைகள் செயற்படுத்துனர்கள் மத்தியில் இருத்தல் வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் ஆற்றுப்படுத்தல் சேவைகளை அல்லது உதவிகளைப் பெற்றுக்கொள்வதானது பால்நிலையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படலாம் - சிலவேளைகளில் உதவிகளை நாடுகின்ற பொழுது ஆண் மற்றும் பெண் பாதிக்கப்பட்டவர்கள் வித்தியாசமாக கவனிக்கப்படுவதுமுண்டு (சதுரம் 10 ஐப் பார்க்கவும்): ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கு பரந்தளவில் கிடைக்காத உதவிகள்)

முறை சார்ந்த சேவைகள் கிடைக்காத பட்சத்தில் அல்லது இல்லாத சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவக் கூடிய முறை சாராத சேவை முறைகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை செயற்படுத்துனர்கள் அறிந்திருத்தல் வேண்டும். இவற்றுள் குடும்பம் மற்றும் சமூக ரீதியான உதவிகளும் உள்ளடங்கும். பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் சாட்சிகளை இனங்காண்கின்ற பொழுது இத்தகைய குடும்ப ரீதியான மற்றும் சமூக ரீதியான உதவிகள் பற்றி பரிசீலித்தல் வேண்டும்.

சிறுவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துகின்ற செயற்படுத்துனர்கள் எத்தகைய சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கருதும் பட்சத்தில் பொருத்தமான அதிகார அமைப்புகளுடன் இவை பற்றிய தொடர்பாடல்களை மேற்கொள்ளல் வேண்டும். அத்தோடு, சில நாடுகளில் கட்டாய அறிக்கையிடல் சட்டங்களும் காணப்படுகின்றன.

**i. ஆற்றுப்படுத்தல் உதவி வகைகள்**

பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளுக்கு கிடைக்கக் கூடிய உதவி வகைகள் பற்றி கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.:

**பெட்டி 8**

## ஆற்றுப்படுத்தல் வகைகள்

### மருத்துவ ரீதியான உதவிகள்

பாலியல் வன்முறையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களை அல்லது சாட்சிகளை சிகிச்சையளிக்கக் கூடிய உரிய வசதிகளுடன் காணப்படக்கூடிய வைத்தியசாலைகள், சுகாதார நிலையங்கள் மற்றும் சிகிச்சை நிலையங்கள். ஆகக் குறைந்தது பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:

» உயிர் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்ற சிக்கல்களைக் கொண்டுள்ளக் கொண்டவர்களுக்கான சிகிச்சை முறைகள் மற்றும் ஆற்றுப்படுத்தல்கள்.

» பாலியல் நடவடிக்கைகளின் காரணமாக தொற்றுகின்ற நோய்களுக்கான சிகிச்சை முறைகள் அல்லது தடுப்பு முறைகள், இவற்றுள் எச்.ஐ.வி. இனால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நோய்த்தடுப்பு முறைகளும் உள்ளடங்கும்.

» அவசரகால கருத்தடைகள்

» புண்களைப் பராமரித்தல்

» மனநல மருத்துவச் சேவைகள்

» ஆலேலாசனை உதவிகள்

» சமூக உதவிகள் மற்றும் சமூக உளவியல் சார் சேவை ஆலோசனைச் சே

### சமூக உளவியல் சார் உதவிகள்

சம்பவ முகாமைத்துவ ஆற்றல்கள், சமூக சேவை நிலையங்கள் ஆகியன வழங்குகின்ற ஆலோசனைச் சேவைகள், பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிக் குழுக்கள், அல்லது அமைப்புகள் ஆகியன தொடர்பில்:

» இரகசிய உணர்வு ரீதியான உதவிகள் மற்றும் நேரடி ஆலோசனைகள்

» குடும்ப இணக்கம் மற்றும் ஆலோசனைச் சேவைகள்

» மீள் இணைத்தல் மற்றும் வாழ்வாதார உதவிகள்

» திறன்கள் பயிற்சி மற்றும் வருமான ஈட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்.

### சட்ட ரீதியான உதவிகள்

பின்வருவனவற்றை வழங்குகின்ற சட்ட ஆலோசனைச் சேவைகள், பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிக் குழுக்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன:

» சட்டத்தின் பிரகாரம் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளது உரிமைகள் தொடர்பான சட்டக்கல்வி

» சட்ட ரீதியான உரிமைகள் மற்றும் தெரிவுகள் தொடர்பான இரகசிய ஆலோசனைகள்

» பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளுக்கான சட்ட ரீதியான பிரதிநிதித்துவங்கள்

### பாதுகாப்பு ரீதியான உதவிகள்

பின்வருவனவற்றை வழங்குகின்ற அமைப்புகள், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்கும் குழுக்கள் மற்றும் நிலையங்கள் போன்றன:

» பாதுகாப்பான இல்லங்கள்

» மீள்குடியமர்த்தல் மற்றும் போக்குவரத்து உதவிகள்

» சாட்சிகள் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்.

**ii. எவ்வாறு ஆற்றுப்படுத்துவது: உதவிகளை மதிப்பீடு செய்தல் மற்றும் ஆற்றுப்படுத்தல் வழிமுறைகளை விருத்திசெய்தல்**

ஆவணப்படுத்துனர்கள் **தமக்கான சொந்த ஆற்றுப்படுத்தல் வழிமுறைகளை** விருத்திசெய்தல் வேண்டும். அப்பிரதேசத்தில் **தற்சமயம் காணப்படுகின்ற ஆற்றுப்படுத்தல் முறைகளை பிரதிபலிக்கக் கூடியதாகவும்** அவற்றை உள்வாங்கியதாகவும் இது இருத்தல் வேண்டும். அத்தோடு, அவர்கள் ஊடாட்டத்தில் **ஈடுபடுகின்ற பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளது எதிர்கால தேவைகளையும்** கருத்திற்கொண்டிருத்தல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலான மேற்பார்வைகளை மேற்கொள்வதற்கான அவர்களது சுய ஆற்றல்கள் மற்றும் வழிப்படுத்தல்கள், அவர்களது உதவி மதிப்பீட்டுக் கட்டத்தின் பொழுது அவர்கள் எதிர்கொள்கின்ற **சேவைகளை மதிப்பீடு செய்வது தொடர்பான ஏதாவது மட்டுப்பாடுகள்** ஆகியவற்றையும் இவை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

**பெட்டி 9**

**இணை நிலையினர் அனுபவம் (Peer experience)— சரியான ஆற்றுப்படுத்தல்களை உருவாக்குதல்**

*புளோரன்ஸ், விசாரணையாளர்: '(.....) பொதுமக்கள் அமைதியின்மைக் காலத்தின் பொழுது அரசாங்கப் படையினர்களினால் பாலியல் வன்புணர்வுக்கும் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டதாகக் கோருகின்ற பெண் குழுக்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து சாட்சிக் கூற்றுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு சிறிய பிரதேசத்தைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் முகமாக ஒரு குழுவை நாம் தாபித்தோம். எமது திட்டமிடல் கட்டத்தின் பொழுது அப்பிரதேச சிகிச்சை நிலையங்களைத் தொடர்புகொண்டு பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களினால் வழங்கக் கூடிய மருத்துவ வசதிகள் பற்றிய மதிப்பீடுகளை மேற்கொண்டோம். அச்சந்தர்ப்பத்தில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு மனநல மருத்துவர்களுடனும் தொடர்புகளை மேற்கொண்டோம். ஆனால், நாம் விசாரணை செயன்முறைகளை ஆரம்பித்த பொழுது நாம் பிளையான சேவைகளையே ஆரம்பித்துள்ளதாக உணர்ந்தோம். ஏனெனில், இந்த பெண்கள் சுமார் 10 – 15 வருடங்களுக்கு முன்னர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள். இவர்களுள் பெரும்பாலானவர்களுக்கு பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய உடனடி மருத்துவத் தேவைகள் அவசியப்படவில்லை. இவர்களை எம்மிடம் ஆற்றுப்படுத்திய அரச சார்பற்ற நிறுவனத்திடம் இருந்து இவர்களுள் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே மருத்துவ மற்றும் சமூக உளவியல் சார் சேவைகளைப் பெற்றிருந்தனர். இவர்கள் சட்ட ரீதியான உதவிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதிலேயே அதிகம் ஆர்வம் உடையவர்களாக இருந்தனர். இப்பொழுது தங்களுடைய கதைகளைக் கூறுவதற்கு அவர்கள் தயாராக இருந்த அதேவேளை, பொறுப்புக் கூறல் சார்ந்த விடயங்களை மேற்கொள்வதற்கும் தயாராகவிருந்தனர். இத்தகையதொரு விடயத்தை நாம் எதிர்பார்த்திருக்கவில்லை, அதற்குத் தயாராக இருக்கவில்லை என்பதை நாம் வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம். இவ்வகையானதொரு சம்பவம் இடம்பெறுமென நாம் நினைத்துப் பார்க்கவுமில்லை'*

## பாதிக்கப்பட்டவர்களையும் ஏனைய சாட்சிகளையும் எவ்வாறு ஆற்றுப்படுத்துவது

| | |
|---|---|
| படிமுறை 1 | **தற்போது காணப்படுகின்ற சேவைகள் தொடர்பான வரைபடத்தைப் பெற்று ஏதாவது தாபிக்கப்பட்ட ஆற்றுப்படுத்தல் முறைகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறியவும்.**<br>**இவற்றுள் பின்வருவனவும் உள்ளடங்கும்:**<br>» சமூக உளவியல் சார் சேவைகளில் நிபுணத்துவம் பெற்ற அரச சார்பற்ற நிறுவனங்கள், சுயாதீன சுகாதார சிகிச்சை நிலையங்கள், சட்ட உதவிகளை வழங்குகின்ற நிறுவனங்கள் போன்ற விசேட சேவைகளை வழங்குகின்ற தனி நிறுவனங்கள் உள்ளனவா என்பதைக் கண்டறிதல்.<br>» தேசிய, பிராந்திய பிரதேச பால்நிலையை அடிப்படையாக்க கொண்ட வன்முறைகள் தொடர்பான ஆற்றுப்படுத்தல் பொறிமுறைகள். இவற்றுள் சர்வதேச, தேசிய நிவாரண நிறுவனங்களும் உள்ளடங்கும்.<br>» பாதிப்புறு நிலையில் வாழ்கின்ற சிறுவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் வழிகாட்டி முறைகள். இவற்றுள் முறைசாரா சமுதாயத் தலைவர்கள், முக்கிய நபர்கள், சிறுவர் நல மையக் குழுக்கள், மன வடு தொடர்பில் உதவிகளை வழங்குகின்ற சிறப்பு நிறுவனங்கள் ஆகியன உள்ளடங்கும்.<br>» பாதிக்கப்பட்டவர்களினாலேயே உருவாக்கப்பட்ட முறைசாரா உதவிக் குழுக்கள், சமயத் தலைவர்கள், சுய உதவி வலையமைப்புகள்<br>» பாலியல் வன்முறை தொடர்பான வழக்குகளுடன் செயற்படுகின்ற தேசிய தராதரம் மிக்க செயற்பாட்டு முறைகள்.<br>» பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் தொடர்பிலான அழைப்பு நிலையங்கள் அல்லது தொலைபேசி சேவைகளை வழங்கும் நிறுவனங்கள்.<br>» பல்துறை சார் பதிலளிப்புச் சேவைகள் மற்றும் பாலியல் ரீதியான தாக்கம் தொடர்பான ஆற்றுப்படுத்தல் நிலையங்கள் அல்லது சகல சேவைகளையும் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே இடம். |
| படிமுறை 2 | **தற்போது காணப்படுகின்ற உதவிச் சேவைகள் நிறுவனங்களின் பாதுகாப்பு மற்றும் சாத்தியப்பாடு ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்.**<br>சேவை நிலையங்களை நீங்கள் இனங்கண்ட பின்னர், சம்பந்தப்பட்ட நபர்களை அங்கு ஆற்றுப்படுத்துகின்ற பொழுது உங்களிடம் காணப்படுகின்ற மட்டுப்பாடுகள் என்னவென்பதைத் தீர்மானித்துக்கொள்ளவும். மற்றும் அங்குள்ள சேவைகளை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பெற்றுக்கொள்வதில் காணப்படுகின்ற மட்டுப்பாடுகளையும் அறிந்துகொள்ளவும். பின்வரும் கேள்விகளைக் கேட்கவும்.:<br>*தன்மை தொடர்பான மட்டுப்பாடுகள்:*<br>இங்கு காணப்படுகின்ற சேவைகள் போதியளவு உதவிகரமான பராமரிப்புக்களை வழங்குகின்றனவா?<br>*பாதுகாப்பு தொடர்பான மட்டுப்பாடுகள்:*<br>ஆற்றுப்படுத்துகின்ற சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் மேலும இடருக்கு உள்ளாக்குகின்றனவா? உதாரணமாக, அரசாங்கத்தினால் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சேவைகள் போன்றன வழங்கப்படுகின்ற பட்சத்தில் சிலவேளைகளில் பிரச்சினைகள் காணப்படலாம். அல்லது தகவல்களின் இரகசியத்தன்மை உரிய தரத்திற்கு ஏற்ப பேணப்படாமலும் இருக்கலாம்.<br>சமூகக் குழுக்கள் மற்றும் முக்கிய நபர்கள் போன்றோர் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவிகளை வழங்குகின்றார்களா அல்லது அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப நடந்துகொள்ளும் படி அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றார்களா?<br>*உணவு, தங்குமிட வசதிகள் மற்றும் நிதி ரீதியான மட்டுப்பாடுகள்:*<br>இத்தகைய உதவி நிலையங்கள் மிகவும் தொலைவிலுள்ளனவா அல்லது பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் இவற்றை அணுகுவதில் சிரமங்கள் உள்ளனவா?<br>ஏனைய மட்டுப்பாடுகள், அதாவது முழுமையாக கலாசாரம் சார்ந்த நம்பிக்கைகள் மற்றும் பாரபட்சம் ரீதியான மனப்பாங்குகள் போன்றன:<br>அங்கு தற்சமயம் கலாசார ரீதியான நம்பிக்கைகள் காணப்படுகின்றனவா, அதாவது பாரட்சம் மிக்க மாறிலிகள் அல்லது கொள்கைகள், இதன் காரணமாக பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளை பிரதேச சேவைகளைப் பெற்றுக்கொள்வதன் நிமித்தம் ஆற்றுப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றதா? |
| படிமுறை 3 | **நீங்கள் பயன்படுத்தக்கூடிய விதத்தில் பிராந்திய-தனித்துவம் மிக்க ஆற்றுப்படுத்தல் வழிமுறைகளை விருத்தி செய்யவும் அல்லது ஏற்றுக்கொள்ளவும்.**<br>வினைத்திறன் மிக்க, இரகசியமான மற்றும் பாதுகாப்பான ஆற்றுப்படுத்தல் சேவைகளை வழங்கும் முகமாக உடன்படிக்கைகள், தராதரம் மிக்க செயற்பாட்டு நடைமுறைகள், புரிந்துணர்வு உடன்படிக்கைகள் போன்றவற்றை சேவை வழங்குனர்களுடன் மேற்கொள்ளவும்.<br>ஆற்றுப்படுத்தல் சேவைகளுக்கான அணுவழியில் குறிப்பிட்ட சேவை பற்றி குறிப்பிடவும். அதாவது, எத்தகைய சேவைகள் வழங்கப்படுகின்ற, அவை ஒன்றுடனொன்று எத்தகைய தொடர்புகளிலுள்ளன போன்றன. |

| | |
|---|---|
| படிமுறை 4 | **பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரை ஆற்றுப்படுத்துவதற்கான உள்ளக தராதரம் மிக்க செயற்பாட்டு நடைமுறைகளை நடைமுறைப்படுத்தவும்.**<br>பின்வருவனவற்றை உள்ளடக்கிய நெறிமுறைகளைத் தாபிக்கவும்:<br>» செயற்படுவர் **எவரோ** மேலதிக உதவிகளை வழங்குவதற்காக எத்தகைய செயற்படுத்துனர்கள் காத்திரமாகச செயற்படுவர். இவற்றுள் பாதிக்கப்பட்டவர்கள்/ சாட்சிகள், குடும்ப உறுப்பினர்கள் அல்லது சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளடங்குவர்.<br>» **ஏன்** செயற்படுத்துனர்கள் ஆற்றுப்படுத்தலை மேற்கொள்ள வேண்டியது<br>» சம்பந்தப்பட்ட நபர்களை **எத்தகைய** சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக செயற்படுத்துனர்கள் ஆற்றுப்படுத்துவர்.<br>» பாதிக்கப்பட்டவர்கள் **எவ்வாறு** சேவைகளைப் பெற்றுக்கொள்ளவர் - பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளைக் கொண்டுசெல்வது தொடர்பில் எத்தகைய போக்குவரத்து ரீதியான கொள்கைகள் காணப்படுகின்றன.<br>» ஆற்றுப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்ற **பொழுது** ஆவணப்படுத்தல் மற்றும் பேட்டி தொடர்பான செயன்முறைகளின் எந்தக் கட்டத்தில் அவை இருக்கும். |
| படிமுறை 5 | **பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுடன் தெளிவாக தொடர்பாடல்களை மேற்கொள்ளவும்**<br>செயற்படுத்துனர்களினால் வழங்கக்கூடிய உதவிகளின் மட்டுப்பாடுகள் பற்றி பாதிக்கப்பட்டவர்கள்/ சாட்சிகளுக்குத் தெளிவாக எடுத்துரைக்கவும்.<br>காணப்படுகின்ற தெரிவுகள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகளுக்கு முழுமையாக எடுத்துரைக்கவும்.<br>சான்றுகளை வழங்குகின்ற ஏற்பாடுகளின் அடிப்படையிலோ அல்லது உதவிகள் வழங்கப்படாது என்பதை விளங்கப்படுத்தவும். அத்துடன் உதவிகளை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் தான் சான்றுகள் வழங்கப்பட வேண்டிய அவசியமில்லை என்பதையும் குறிப்பிடவும். |

**பெட்டி 10**

## ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகள் ஆகியோருக்கு பரந்தளவில் உதவிச் சேவைகள் இன்மை

மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பெரும்பாலும் ஆண்களுக்கென தங்குமிட வசதிகள் இல்லை. அத்தோடு, பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கான சேவைகளும் இல்லை. இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றன. குறிப்பாக மருத்துவ ரீதியான இடையீடுகளை மேற்கொள்வதற்கான பிரச்சினைகள் உள்ளன. பாதிக்கப்பட்ட ஆண்கள் பெரும்பாலும் மகப்பேற்று மருத்துவப் பிரிவுகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றனர். ஆண், பெண் இருபாலாரும் இங்கு வரிசைகளில் நிற்கின்ற பொழுது, அவர்களுக்கு பல சங்கடங்கள் ஏற்படுகின்றன.

மருத்துவ மற்றும் சமூக உளவியல் சார்ந்த சேவைகளை வழங்குபவர்கள் மற்றும் மனிதாபிமான தொழில்வாண்மையாளர்கள் போன்றவர்கள் பொதுவாக ஆண் பாலியல் வன்புணர்வு மற்றும் ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகள் பற்றி இனங்காண முடியாதவர்களாகவும் அந்தப் பிரச்சினைகள் தொடர்பில் நம்பிக்கையற்றவர்களாக இருப்பதுடன், பாதிக்கப்பட்ட ஆண்களை மேலும் மனவடுவிற்கு இட்டுச்செல்கின் மனப்பாங்குகளைக் கொண்டவர்களாகவும் இருப்பதுண்டு.

இத்தகைய நிறுவன ரீதியான குறைபாடுகளைக் கருத்திற்கொண்டு பாலியல் வன்முறையின் காரணமாக பாதிக்கப்பட்ட ஆண்களைப் பொருத்தமான ஆற்றுப்படுத்தல் சேவை நிலையங்களுக்கு அனுப்புவது தொடர்பிலான திட்டங்களை மேற்கொள்வது சவால் மிக்கதாகும். பாலியல் வன்புணர்வின் காரணமாக பாதிக்கப்பட்ட ஆண்களை ஆற்றுப்படுத்தல் நிலையங்களுக்க அனுப்புவதற்கு முன்னர் அவர்களிடம் சரியான புரிதல்கள், திறன்கள் மற்றும் மனப்பாங்குகள் காணப்படுகின்றவா என்பது பற்றி முன்கூட்டியே தெரிந்துகொள்வது சிறப்பாகும். செயற்படுத்துனர்கள் முறைசாரா முறைகள் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதுடன், சுய உதவி வலையமமைப்புகள் மற்றும்/ அல்லது உள்ளூர் சேவை வழங்குனர்களின் ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை அவர்களை அணுகுவதற்கு முன்னரே மேற்கொள்ளல் வேண்டும்.

பகுதி IV: நடைமுறையில் ஆவணப்படுத்தல்: தயார்படுத்தல்

# அத்தியாயம் 8 உள்ளடக்கம்


அத்தியாயம் **8** பாதுகாப்பு மற்றும் பத்திரம் ........ **105**

**A.** அறிமுகம் ........ **105**

**B.** முழுமையான பாதுகாப்பு உபாயம் ........ **106**

*பெட்டி* ***1***
பாதுகாப்பு மற்றும் பத்திரம் தொடர்பான முக்கிய குறிப்புகள் ........ 107

**C.** செயற்பாட்டாளர்கள் இடர்களை முகாமைத்துவம் செய்தல் ........ **108**

1. செயற்பாட்டாளர்கள் எதிர்கொள்ளக்கூடிய இடர்கள் ........ 108
2. தணிப்பு முறைகள் ........ 108

*பெட்டி* ***2***
சக அமைப்புகளின் அனுபவம் - பாதுகாப்புத் திட்டம் ........ 108

*பெட்டி* ***3***
செயற்பாட்டாளர்களுக்கான இடர்களை தணித்தல் ........ 109

1. தகவல் தொடர்பான இடர்கள் ........ 111
2. தணிப்பு நடைமுறைகள் ........ 111

*பெட்டி* ***4***
தகவல் தொடர்பான இடர்களைத் தணித்தல் ........ 112

**E.** பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் தொடர்பான இடர்களை முகாமைத்துவம் செய்தல். ........ **115**

1. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் தொடர்பான இடர்கள் ........ 115
2. தணிப்பு நடைமுறைகள் ........ 115

*பெட்டி* ***5***
பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு ஏற்படக்கூடிய இடர்களைத் தணித்தல் ........ 116

# அத்தியாயம் 8: பாதுகாப்பு மற்றும் பத்திரம்

## A. அறிமுகம்

பாதுகாப்பு மற்றும் பத்திரம் தொடர்பான பரிசீலனைகள் மிகவும் முக்கியமானவையாகும். இவ்விரு எண்ணக்கருக்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. பாதுகாப்பு எனும் பொழுது அது உணர்வு ரீதியான மற்றும் உடலியல் ரீதியான பரிமாணங்களைக் கொண்டுள்ளது. இது உணர்வு ரீதியான நலன்கள் மற்றும உடல் ரீதியான தீங்குகளிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளோம் என்ற உணர்வுகள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. ஆனால் பத்திரம் எனும் பொழுது சில பாதுகாப்பு நடைமுறைகள் செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்து கொள்வதை இது குறிக்கிறது.

செயற்படுத்துனர்கள் தமது வேலைகளைச் செய்கின்ற பொழுது பாதுகாப்பு மற்றும் பத்திரம் தொடர்பான அம்சங்களை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். மற்றும் அவர்களுக்கு ஏற்படக்கூடிய இடர்கள், பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் அவர்களது குடும்பங்கள், சமூகம் ஆகியவற்றுக்கு ஏற்படக்கூடிய இடர்கள் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். வழியில் குன்றிய பாதுகாப்பு மற்றும் பத்திர முறைகள், இரகசியத்தன்மை அல்லது அந்தரங்கம் மீறப்படல் அல்லது போதியளவு உதவியின்மை, பாதுகாப்புடன் தொடர்புடைய சேவைகள் ஆகியன தனிப்பட்டவர்களுக்கு மாத்திரம் அல்ல ஆவணப்படுத்தல் செயன்முறை மற்றும் தகவல்கள் ஆகியவற்றுக்கும் இடர்களை அதிகரிக்கக் கூடியதாகவிருக்கும். ஆகவே, பொருத்தமான பாதுகாப்பு மற்றும் பத்திர நடைமுறைகளை உருவாக்கிச் செயற்படுத்துவதானது நெறிமுறை சார்ந்த மற்றும் செயற்பாட்டு ரீதியான கடப்பாடுகளாகும்.

யுத்தக் குற்றங்களை ஆவணப்படுத்தல், மானுடத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை, ஏனைய அதிர்ச்சியூட்டும் மீறல்கள் ஆகியன பெரும்பாலும் பாதிப்புறும் நிலையிலும் மற்றும் பாதுகாப்பற்ற சூழலிலும் இடம்பெறுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் நிகழக்கூடிய பல்வேறு வகையான அனர்த்தங்கள் பற்றி பரிசீலித்தல் வேண்டும். ஆவணப்படுத்தல் செயன்முறையுடன் தொடர்புடையதாக மேலதிக இடர்கள் மற்றும் நிகழக்கூடிய தீங்குகள் ஆகியன காணப்படுகின்றன. குறிப்பாக பாலியல் வன்முறைக் குற்றங்கள் சம்பந்தப்படுகின்ற பொழுது இது அதிகரித்துக் காணப்படுகிறது.

பல்வேறு அமைப்புகளைப் பொறுத்தவரையில், பாதுகாப்புத் திட்டமிடல் முகாமைத்துவமானது பயிற்றப்பட்ட விசேட நிபுணத்துவம் மிக்க பாதுகாப்பு நிறுவனங்களின் ஆளுகையின் கீழ் காணப்படுகின்றன. பெரும்பாலும் ஆவணப்படுத்துனர்களின் ஆளுகைக்குள் உட்பட்டதாக இருப்பதில்லை. நிபுணர்களினால் விருத்திசெய்யப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகளில் தங்கியிருக்கின்றார்களா அல்லது தமது சுய பாதுகாப்பு நெறிமுறைகளில் ஆவணப்படுத்துனர்கள் தங்கியிருக்கின்றார்களா, எது எப்படியிருந்த பொழுதிலும் இவ் அத்தியாயத்தில் கருத்திற்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த வழிகாட்டிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பாதுகாப்பு மற்றும் பத்திர நடைமுறைகளை உருவாக்குவதானது பின்வருவனவற்றில் தங்கியுள்ளது:

» ஆவணப்படுத்தல் நடைபெறுகின்ற சம்பந்தப்பட்ட நாடு, அதன் சூழமைவுகள். இங்கு ஆயுத முறண்பாடுகள் நடைபெறலாம் அல்லது நடைபெறாதிருக்கலாம்.

» ஆணை, தோற்றப்பாடு மற்றும் பால்நிலை செயற்படுத்துகின்றார்கள்.

» குற்றங்களை இழைக்கக் கூடியவர்கள் தொடர்பான அடையாளம், தொடர்புகள், வளங்கள் அல்லது மீறல்களை ஆவணப்படுத்துகின்ற பொழுது

» பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் தொடர்பான விபரங்கள்

» ஆரம்பக் கட்ட திட்டமிடலின் பொழுது இனங்காணப்பட்ட பாதிப்புறும் தன்மைகள். உதாரணமாக, பேட்டிகளை எடுக்கின்ற பொழுது முழுமையாக இரகசியத்தன்மையைப் பேணுவதற்கான வாய்ப்புகள் இன்மை. மோதல்கள் நடைபெறுகின்ற இடங்களிலிருந்து அப்பால அலுவலகத்தை வைத்திருக்க முடியாத சூழ்நிலை. மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பணியாளர்கள் வேலை செய்வதன் காரணமாக வேலைகள் கடினமாகின்றமை. பிறர் மனவடு தொடர்பிலான நிகழ்ச்சித்தன்மை.

பாதுகாப்பு மற்றும் பத்திரம் தொடர்பான பரிசீலனைகள் தீங்கிழைக்கக் கூடாது என்ற கொள்கையுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றன (பார்க்க அத்தியாயம் 7: தீங்கிழைக்க வேண்டாம்) மற்றும் ஆவணப்படுத்தல் செயன்முறை முழுவதிலும் செயற்பாட்டாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற ஏதாவது தீர்மானம் அல்லது செயல் இதனுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். அதாவது திட்டமிடல் செயற்பாடுகள், பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் எவ்வாறு அணுகுவது, அவர்களை எங்கு சந்திப்பது, எவ்வாறு பதிவுகளை மேற்கொள்வது, தகவல்களைக் கொண்டுசெல்வது, களஞ்சியப்படுத்துவது, ஆற்றுப்படுத்தும் சேவைகளை வழங்குவது என்பன போன்றன.

## B. முழுமையான பாதுகாப்பு உபாயம்

பாதுகாப்பு ரீதியான இடர் முகாமைத்துவத்திற்கு ஒழுங்கமைக்கப்பட்ட முழுமையை நோக்கிய அணுகுமுறையொன்றினை ஏற்றுக்கொள்வதற்குச் செயற்பாட்டாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இது பின்வரும் அம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:[1]

» பௌதீக ரீதியான மற்றும் அமைப்பு ரீதியான பாதுகாப்பு: தனி நபர்களது உடலியல் ரீதியான தன்மானத்திற்கு மற்றும் அமைப்புகள், தனிநபர்கள், வீடுகள், அலுவலகங்கள், வாகனங்கள் மற்றும் பௌதீக ரீதியான பொருட்கள், தலைவர்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தணிக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும்.

» சமூக உளவியல் நன்மைகள்: தனிப்பட்டவர்களது சமூக உளவியல் நலன்களுக்கு ஏற்படுகின்ற இடர்களைத் தணித்தல்.

» எண்ம பாதுகாப்பு (Digital security): இணைய ரீதியான தகவல்கள், தொடர்பாடல்கள் மற்றும் உபகரணங்களுக்கு ஏற்படக்கூடிய இடர்களைத தணித்தல்.

அவணப்படுத்தல் செயன்முறை மற்றும் அமைப்பு ஆகியவற்றுக்கு ஏற்படக்கூடிய ஒட்டுமொத்த இடர்களைத் தணிக்கும் முகமாக மேற்படி அம்சங்கள் ஒரு முழுமையை நோக்கிய பாதுகாப்பு உபாயங்களை உள்ளடக்கியுள்ளது.

இந்த மாறுபட்ட அம்சங்கள் ஒன்றுக்கிடையில் தொடர்புடையதாக்க காணப்படுகின்றன. செயற்படுத்துனர்கள் முழுமையான பாதுகாப்பு உபாயமொன்றை விருத்திசெய்கையில் இவற்றைக் கூட்டாகப் பரிசீலித்தல் வேண்டும். பாதுகாப்புத் திட்டங்கள் பின்வருவற்றில் தொகுப்பாக இருக்கின்றன.

» மதிப்பீடுகள்

» நிகழக் கூடிய அச்சுறுத்தல் ஒன்று உண்மையில் அச்சுறுத்தலாக மாறுவதைக் குறைப்பதை நோக்காகக் கொண்டு தணித்தல் மற்றும் தடுத்தல் நடைமுறைகள்.

» அச்சுறுத்தலின் காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைப்பதை நோக்காகக் கொண்ட பதிலளிப்புச் செயற்பாடுகள்.

அச்சுறுத்தல்கள் அடிக்கடி மாற்றமடைகின்ற தன்மை கொண்டதனால் செயற்பாட்டாளர்களது பாதுகாப்பு ரீதியான உபாயத் திட்டங்கள் குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்ப இயங்காற்றல் மிக்கதாக இருக்கின்ற பட்சத்திலேயே அது விளைதிறன் மிக்கதாகவிருக்கும்.

அமைப்பு மட்டத்தில் செயற்பாட்டாளர்களினால் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளானது பாதுகாப்பு மற்றும் பத்திர முகாமைத்துவங்களுக்காக மாத்திரம் தனிமைப்படுத்தப்பட்டதாக அல்லது மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தல் கூடாது. பின்வரும் சகல விடயப்பரப்புகளையும் பாதுகாப்புத் திட்டமிடல்கள் பிரதானப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

» தனிப்பட்ட பாதுகாப்பு

» மனித வளங்கள்

» வசதிகள் மற்றும் அலுவலக பாதுகாப்பு

» நிகழ்ச்சித்திட்டமிடல்

» பயணம் மற்றும் போக்குவரத்து

» தொடர்பாடல் மற்றும் தரவுகள்

» சுகாதாரம் மற்றும் நலனோம்புகை

தயவுசெய்து பார்க்க, பிற்சேர்க்கை 5: இவ் ஒவ்வொரு அமைப்பு ரீதியான விடயப்பரப்புகளையும் பரிசீலிப்பதற்கான நடைமுறை சார்ந்த பாதுகாப்பு படிமுறைகள் தொடர்பான அமைப்பு ரீதியான பாதுகாப்பு சிறந்த செயன்முறைகள் சோதனைப் பட்டியல்[2].

(இ) செயற்பாட்டாளர்கள், (ஈ) தகவல்கள், (உ) பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோருக்கு ஆகியோருக்கு ஏற்படக் கூடிய விசேட இடர்கள் பற்றி கீழுள்ள பிரிவில் தனித்தனியாக கலந்துரையாடப்பட்டுள்ளன. யதார்த்த பூர்வமாக நோக்குகையில் அவை ஒவ்வொன்றுக்கு இடையிலும் தொடர்புகள் காணப்படுகின்றன. உதாரணமாக, மோசமான இணையத் தொடர்பாடல் பாதுகாப்பு முறை காரணமாக தகவல்களுக்கு ஏற்படக்கூடிய இடர்கள் (உதாரணம்- பாதுகாப்பற்ற மின்னஞ்சல்கள் மூலமாக பாதிக்கப்பட்டவர்களது பெயர்கள் மற்றும் ஏனைய அடையாளம் சார்ந்த தகவல்களை வெளியிடல்). இதன் காரணமாக குற்றமிழைத்தவர்கள் பாதிக்கப்பட்டவர்களை பழிவாங்க முயற்சிக்கலாம். மேலும் தனது குடும்பம் மற்றும் சமூகம் ஆகியவற்றிலிருந்து நிராகரிக்கப்படலாம். இதன் காரணமாக செயற்பாட்டாளர்களது பாதுகாப்பிற்கும் இடர் ஏற்படலாம்.

1 சர்வதேச மனித உரிமைகள் நிதி வழங்குனர்களுக்காக இந்த சோதனைப் பட்டியல் விருத்திசெய்யப்பட்டது. இது அலக்ஸான்டர் கார்லர், கெட்டே ஸ்காட்வேட் மற்றும் கத்தரீன் எச். தௌன்சென்ட் ஆகியோரால் பகிரப்பட்டது.

2 முழுமையை நோக்கிய பாதுகாப்பு: மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான உபாய ரீதியான கையேடு, ரெக்டிகல் தொழில்நுட்பச் சேகரிப்பு 2016, ஒன்லைனில் காணப்படுகின்றது.

*திட்டமிடல் படிமுறையின் பொழுது மதிப்பீடு செய்வதற்கு அவசியமான அச்சுறுத்தல்கள், இடர்கள், பாதிப்புறுநிலைகள் மற்றும் ஆவணப்படுத்தல் செயன்முறை முழுவதும் இவற்றைத் தொடர்ச்சியாக மீள் மதிப்பீடு செய்தல் வேண்டும்.*

**பெட்டி 1**

**பாதுகாப்பு மற்றும் பத்திரம் தொடர்பான முக்கிய குறிப்புகள்**

1. தமது பணியாளர்களைப் பராமரிக்க வேண்டிய கடமை அமைப்புகளுக்கு உண்டு. அதேவேளை, ஒவ்வொரு நபருக்கும் தனது தனிப்பட்ட பாதுகாப்பினையும் அதேவேளை, தனது சகபாடிகளின் பாதுகாப்பினையும் உறுதிசெய்துகொள்ள வேண்டிய பொறுப்பு உள்ளது.
2. செயற்பாட்டாளர்கள் மற்றும் அவர்களது அமைப்புகள் ஆகியவற்றுக்கு பின்வரும் கடமைகள் உள்ளன.
    - » பூகோளப் பாதுகாப்புக் கொள்கை வடிவத்தில் பாதுகாப்பு இடர் முகாமைத்துவங்களுக்கு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையொன்றை உருவாக்கவும். அச்சுறுத்தல்கள் மற்றும் இடர்கள் முகாமைத்துவங்கள் ஆகியவற்றை நடத்துவதற்கு உள்ளக பாதுகாப்பு ஒழுங்கு மரபொன்றினை விருத்திசெய்யவும்.
    - » தமது பணியாளர்கள், பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், அவர்களது குடும்பங்கள், சமுதாயங்கள், தகவல் ஆகியவற்றின் பாதுகாப்பினையும் பத்திரத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான உகந்த படிமுறைகளை மேற்கொள்ளவும்.
    - » எழக்கூடிய பாதுகாப்பு ரீதியான இடர்கள் தொடர்பில் உரிய நேரத்தில் சிறப்பான முறையில் பதிலளிக்கும் முகமாக போதியளவு நிதி, வளங்கள் ஆகியவற்றைப் பேணவும்.
    - » பாதுகாப்புத் தொடர்பான நிலைமைகளின் பொழுது குறுகிய காலத்தில் அவை தொடர்பில் செயற்படும் முகமாகவும் உரிய உதவிகளை வழங்கும் முகமாகவும் உள்ளக மனித வளங்கள் பொறிமுறைகள் மற்றும் வெளிநிலைப் பங்காளர்கள் ஆகியவற்றை இனங்காணவும்.
3. தொடர்ச்சியாக மாறிவருகின்ற உள்ளக மற்றும் வெளிநிலைச் சூழல்களை பிரதிபலிக்கக் கூடிய விதத்தில் திட்டமிடல் படிமுறையின் பொழுது மதிப்பீடு செய்வதற்கு அவசியமான அச்சுறுத்தல்கள், இடர்கள், பாதிப்புறு நிலைகள் மற்றும் ஆவணப்படுத்தல் செயன்முறை முழுவதும் இவற்றை தொடர்ச்சியாக மீள் மதிப்பீடு செய்தல் வேண்டும். உதாரணமாக, அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள்: குழுவின் செயற்பாட்டுக் கட்டமைப்பில் அல்லது ஆற்றலில் ஏற்படுகின்ற மாற்றங்கள்: ஆவணப்படுத்தல் நெறிப்படுத்தலில் ஏற்படுகின்ற மாற்றங்கள் அல்லது ஆவணப்படுத்தல் செயன்முறையின் பொழுது வெளிப்படுத்துவதன் காரணமாக ஏற்படக்கூடிய உயரிய இடர்கள் போன்றன உள்ளடங்கும்.
4. இனங்காணப்பட்ட இடர்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் தணிப்பதற்கு அவசியமான முயற்சிகளை செயற்பாட்டாளர்கள் மேற்கொள்ளல் வேண்டும். இதற்குரிய சாத்தியப்பாடுகள் இல்லாதவிடத்து திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளவோ அல்லது அவற்றை ஒத்திவைக்கவோ கூடாது.
5. நீண்டகால ஆயுத மோதல், பயங்கரவாதம், ஸ்திரத்தன்மையற்ற நிலைமை போன்ற பல சூழமைவுகளின் பொழுது அவற்றுக்கேயுரிய தனித்துவமான இடர்கள் காணப்படலாம்.
6. இடர் முகாமைத்துவத்தின் பொழுது ஏற்றுக்கொள்ளக்கூடிய இடர்களுக்கும் தேவையற்ற இடாகளுக்கும் இடையிலான தெளிவான புரிதல்கள் இருத்தல் அவசியமாகும். அதாவது நன்மைகள் செலவை விட அதிகமாகக் காணப்படும் பட்சத்தில் அல்லது நேர்மாறாகக் காணப்படும் பட்சத்தில். குறிப்பிட்டளவு இடர்கள் இருப்பதை ஏற்றுக்கொள்வதானது இடர் மதிப்பீடு மற்றும் இடர் முகாமைத்துவத்தின் ஒரு செயற்பாடாகும். இடர்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் தொடர்ச்சியாக இதனை மேற்கொள்ளல் வேண்டும். இடர்களைத் தாங்கிக் கொள்ளக்கூடிய மட்டம் மற்றும் இடர் தணிப்பு முறைகளை வெளிப்படைத்தன்மையுடன் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றை அமைப்புகள் அல்லது செயற்படுத்துனர்கள் உரிய முறையில் தீர்மானித்தல் வேண்டும். இவற்றுள் தாங்கிக் கொள்ளக் கூடிய இடர் மட்டத்திற்கு மேல் காணப்படுகின்ற செயற்பாடுகளைத் தவிர்த்துக்கொள்வதும் உள்ளடங்கும்.

*...முன்கூட்டிய பாதுகாப்பு உபாயம் அற்ற நிலையில் மேற்கொள்ளப்படுகின்ற புனனாய்வுகள் பொதுவாக தோல்வியுற்றவையாகக் கருதப்படுகின்றன.*

## C. செயற்பாட்டாளர்கள் இடர்களை முகாமைத்துவம் செய்தல்

### 1. செயற்பாட்டாளர்கள் எதிர்கொள்ளக்கூடிய இடர்கள்

செயற்பாட்டாளர்கள் பல்வேறு வகையான அச்சுறுத்தல்களையும் இடர்களையும் எதிர்கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றனர். இவை அவர்களது உடல், உணர்வு மற்றும் சுகாதார நலன்களைப் பாதிக்கக் கூடியதாகவிருக்கலாம், அவர்களைக் கொலை செய்யக் கூடியதாகவும் இருக்கலாம். இவை யாவும் அவர்கள் பணியாற்றுகின்ற சூழலிலும் அவர்கள் வகிக்கின்ற வகிபாகங்களிலும் தங்கியுள்ளன. பொதுவான அச்சுறுத்தல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. இது ஒரு திட்டவட்டமான பட்டியல் அல்ல. தனிப்பட்ட செயற்பாட்டாளர் அவரது விசேட சூழமைவு ஆகியவற்றுக்கு ஏற்ப இவை மாறுபடலாம். அவற்றை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்:

» வீதிப் போக்குவரத்துச் சார்ந்த விபத்துகள்[3]

» பொதுச் சேவைகளை அழிப்பதன் காரணமாக அல்லது தரக்குறைவின் காரணமாக ஏற்படக்கூடிய சுகாதார ரீதியான அனர்த்தங்கள்

» அழுத்தம், களைப்பு, பிறர் சார்ந்த மனவடு மற்று PTSD

» ஆட்கடத்தல்

» ஆயுதக் குழுக்கள் அல்லது பயங்கரவாதிகள் அல்லது குற்றவியல் வலையமைப்புக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைத் தாக்குதல்ள்.

» அவ்வப்போது ஏற்படுகின்ற வன்முறைகள்.

» புலனாய்வுகளை மேற்கொள்கின்றவர்கள் அல்லது அவர்களது உதவியாளர்கள் தனிப்பட்டவர்களினால் இலக்காகக் கொண்டு தாக்கப்படுதல்.

» முன்னாயத்தமில்லா வெடிபொருட்கள் (IEDs)இ வெடிக்காத பொருட்கள், யுத்தச் சிதைவுகள்[4] போன்றன சுற்றாடல் சார் காரணிகளின் காரணமாக வெடிக்கலாம் (உதாரணம் - வெப்பநிலை, ஈரப்பதன் ஆகியவற்றில் ஏற்படுகின்ற மாற்றம்)

» செல் தாக்குதல் அல்லது வான் தாக்குதல்

» சுற்றாடல் சார் இடர்கள் (உதாரணம்- வெள்ளப்பெருக்கு. மண் சரிவுகள் அல்லது மோசமான வானிலை போன்றன)

» அரச.

அதிகாரிகளினால் (பொலிஸ், இராணுவம், அரசாங்க அதிகாரிகள்) இழைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற குற்றங்களை ஆவணப்படுத்துகின்ற மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஏனைய செயற்படுத்துனர்கள் அவர்கள் மேற்கொள்கின்ற விடயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியவரும் பட்சத்தில் பல்வேறு விதமான அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். அவையாவன,

» அலுவலகம் சுற்றிவளைக்கப்படல்

» ஆவணம் தொடர்பான பேரம்பேசுதல்கள் மற்றும் ஊடுருவலின் காரணமாக அவர்களது அடையாளம் வெளிப்படுத்தப்படலாம்.

» நீதி சார்ந்த தொல்லைகள், தான்தோன்றித்தனமான கைதுகள் அல்லது தடுப்புக்காவல்கள் அல்லது சட்டத்திற்கு முரணாக கொலை செய்யப்படல் (பொதுவாக தேசிய ரீதியான செயற்பாட்டாளர்களுக்கு இவை ஏற்படலாம்)

» பதிவினை இரத்துச் செய்தல் (தேசிய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இவை ஏற்படலாம்)

» இவர்களுக்கான வீசா மறுக்கப்படலாம், ஏனைய நிர்வாக ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க ஏற்படலாம் (வெளிநாட்டவர்கள்)

பர்க்க அத்தியாயம் 9 : திட்டமிடல், Box 4: அச்சுறுத்தல் மற்றும் இடர்கள் தொடர்பான வழிகாட்டிக் கேள்விகள்

### 2. தணிப்பு முறைகள்

**பெட்டி 2**

**சக அமைப்புகளின் அனுபவம் - பாதுகாப்புத் திட்டம்**

நான்சி ஒரு மனித உரிமைகள் பாதுகாவலர்: *எமது அமைப்புக்கான முதல் ஆவணம் பாதுகாப்புத் திட்டமாகும். இது சம்பந்தப்பட்ட சூழமைவுகளை முழுமையாகப் பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இதற்கான காரணம் என்னவெனில், முன்கூட்டிய பாதுகாப்பு உபாயம் அற்ற நிலையில் பொறுப்பேற்கப்படும் புலனாய்வுகள் பொதுவாகத் தோல்வியுற்றவையாகக் கருதப்படுகிறன.*

3 விரோதம் மேலோங்கியிருக்கின்ற சூழ்நிலைகளின் பொழுது வீதி விபத்துக்கள், வாகன விபத்துக்கள் போன்ற விடயங்கள் அதிகமாக இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இவை தொடர்பான இடர்களும் அதிகம் காணப்படலாம்.

4 யுத்த சூழ்நிலைமைகளின் போதான நிலக்கன்னி வெடிகள் மற்றும் வெடிபொருட்களின் எச்சங்கள் போன்றவற்றினால் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்கள் தொடர்பில் சிறப்பான புரிதலைப் பெற்றுக்கொள்வதற்கான மிகவும் பயன் தரக்கூடிய கருவியாக ஐ.நா.வின் கன்னிவெடிகள் தடுப்புச் சேவையினால் விருத்திசெய்யப்பட்ட அப்ஸ்கள் பயன்தரக்கூடியதாகவுள்ளன. இதனை App Store இலிருந்த பதிவிறக்கம் செய்யலாம்.

பெட்டி 3

## செயற்பாட்டாளர்களுக்கான இடர்களை தணித்தல்

**தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் முகமாக செயற்பாட்டார்கள் சில படிமுறைகள் தொடர்பில் பரிசீலித்தல் வேண்டும். அவற்றுள் பின்வருவனவும் உள்ளடங்கும்:**

### பாதுகாப்புத் திட்டம் மூலமாக இடர்களைத் தணித்தல்

(i) பாதுகாப்புத் தொடர்பில் கட்டமைக்கப்பட்ட முழுமையான அணுகுமுறையொன்றினை ஏற்றுக்கொள்ளல். இவற்றுள் அர்ப்பணிப்பு மிக்க வளங்கள் (கீழே பார்க்கவும்), இயங்காற்றல் மிக்க அச்சுறுத்தல், இடர்கள் மதிப்பீடுகள் மற்றும் இனங்காணப்பட்ட இடர்களைத் தணிக்கும் முகமாக போதியளவு திட்டங்கள்

(ii) பூகோள ரீதியான பாதுகாப்புத் திட்டம்/கொள்கையினை விருத்திசெய்து அதிகமாக நிகழக்கூடிய சம்பவங்களுக்கான பாதுகாப்பு ரீதியான நெறிமுறைகளை நடைமுறைப்படுத்தல். சம்பவங்கள் நடைபெற்றதன் பின்னர் கற்றுக்கொண்ட பாடங்களை உள்ளடக்கும் முகமாக அவற்றை மீளாய்வு செய்து நெறிமுறையினை இற்றைப்படுத்தவும்[5]

(iii) பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படுத்துமென சந்தேகிக்கின்ற அபிவிருத்திகளை இனங்காணவும் (அரசியல், சட்டம், சமூகம், தொழில்நுட்பம், சட்டம் அல்லது சுற்றாடல்).

(iv) ஒற்றுமை, நம்பிக்கை மற்றும் தாக்குப்பிடிக்கும் திறன் ஆகியன தொடர்பிலான பாதுகாப்புச் செயற்பாடுகளை திறந்த முறையில் ஆரோக்கியம் மிக்க தொடர்பாடல்களுடன் மேற்கொள்ளவும். உங்களது நிகழ்ச்சிநிரலின் ஓர் அங்கமாக பாதுகாப்புடன் தொடர்புடைய பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி முறையாக கூட்டங்களை நடத்துவதற்கு அட்டவணைப்படுத்தவும்.[6] வற்றுள் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்கள் மற்றும் இடர்கள் தொடர்பான மூலத் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட விளக்கமளிப்புகள், பாதுகாப்புக் குறிகாட்டிகளைப் பகிர்ந்துகொள்ளல், பகுப்பாய்வுசெய்தல், கூருணர்வுமிக்க செயற்பாடுகள் தொடர்பில் முறையாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகியன உள்ளடங்கும் (உதாரணம், இடம், நேர அளவு அல்லது கூட்டங்கள் தொடர்பான புரிந்துணர்வு).

(v) தற்செயல் அல்லது வருநிகழ்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

### பயிற்சி

(i) பணியாளர்களது வேலையுடன் நெருங்கிய தொடர்புடைய பாதுகாப்பு மற்றும் பத்திர நடவடிக்கைகள் தொடர்பில் பயிற்சிகளை பணியாளர்களுக்கு வழங்கவும். அத்தோடு, பாதுகாப்பு முகாமைத்துவம், முதலுதவி, எண்மப் பாதுகாப்பு, பாதுகாப்பாக வாகனத்தைச் செலுத்துதல், தனிப்பட்ட பாதுகாப்பு (இத்தகைய பயிற்சிகளை தொடர்ச்சியாக முன்னேற்றும் முகமாக அவை தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளவும்.)

(ii) ஆகக் குறைந்தது சகல பணியாளர்களும் நிகழக்கூடிய மோசமான கண்காணிப்பு பற்றிய விழிப்பூட்டல்களைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்தோடு, தனிப்பட்ட மற்றும் தொடர்பாடல் தொடர்பான பாதுகாப்புப் பயிற்சிகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) எண்மத் தொழில்நுட்பங்கள், அவை எவ்வாறு செயற்படுகின்றன அல்லது எவ்வாறு செயலிழிக்கின்றன போன்றன தொடர்பான பணியாளர்களது புரிதனை அதிகரிக்கவும். தகவல்களைப் பாதுகாப்பதானது ஒட்டுமொத்த பாதுகாப்புச் செயற்பாடுகளின் முக்கிய பகுதியாகும்.

### அர்ப்பணிக்கப்பட்ட வளங்கள்

(i) நிகழ்ச்சித்திட்ட மட்டத்திலான கருத்திட்டங்களுக்கான பிரேரணைகள் மற்றும் வரவுசெலவுத் திட்டங்கள் ஆகியன முறையாக பாதுகாப்பு மற்றும் பத்திரம் தொடர்பான அம்சங்களை உள்ளடக்கியுள்ளன என்பதை உறுதிசெய்துகொள்ளல்.

(ii) பணியாளர்கள் தமது மருத்துவச் செலவுகள், சட்ட அல்லது ஏனைய எதிர்பாராத செலவுகளை தமது செயற்பாட்டின் பொழுது எதிர்கொள்ளலாம் அல்லது குறுகிய அறிவித்தலின் பிரகாரம் வெளியேற்றப்படலாம் இத்தகைய விடயங்களுக்காக அவசரகால நிதியொன்றினை கையிருப்பில் வைத்திருக்கவும்.

(iii) நிறுவன ரீதியான அல்லது தனிப்பட்ட அவசரகால உதவிகள் அல்லது பாதுகாப்பு நிதி ஆகியன செயற்பாட்டாளர்கள் தமது நெறிமுறைகளை நிறைவேற்றுவதற்காக அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பில் பரிசீலிக்கவும். (உதாரணமாக, மனித உரிமை பாதுகாவலர்கள், பெண்கள், LGBTI நபர்கள், இணையம் சார் செயற்பாடுகள், ஊடகவியலாளர்கள், கல்வியியலாளர்கள்). எத்தகைய உதவிகள் என்பதையும் பரிசீலிக்கவும் (உதாரணம், பௌதீக ரீதியான பாதுகாப்பு, எண்மப் பாதுகாப்பு, மீள்குடியமர்த்தல், சட்டம், மருத்துவம் அல்லது ஏனைய விதமான உதவிகள்). இவை நன்கொடைகளின் தன்மைக்கு ஏற்ப மாறுபடலாம்[7]

### பதுகாப்பு வலையமைப்பு

(i) பாதுகாப்பு ரீதியான தொடர்புகள் பற்றிய வலையமைப்பு ஒன்றினை விருத்திசெய்யவும். இவற்றில் பொருத்தமானவிடத்து உள்ளூரில் சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்கள், இராணுவ மற்றும் பொதுமக்கள் சமாதானப் படையினர்கள், தனிப்பட்ட பாதுகாப்புக் கம்பனிகள், மதத்தலைவர்கள், பெரியோர்கள், தூதுவராலயங்கள், பங்காளர்கள், தகவல்களை வழங்கக் கூடிய அல்லது முக்கியமான நிலைமைகளின் பொழுது இடையீடுகளை மேற்கொள்ளக்கூடிய ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினர்கள்.

(ii) அத்தகைய வலையமைப்புகளை உள்ளடக்கிய தொடர்புகொள்ளக்கூடிய பட்டியலை இரகசியமாக வைத்திருக்க வேண்டுமா, அவ்வாறாயின் எவ்வாறு வைத்திருப்பது என்பது தொடர்பிலான பரிசீலனைகளை மேற்கொள்ளவும்.

பெட்டி 3

## செயற்பாட்டாளர்களுக்கான இடர்களை தணித்தல்

### பயணம்[8]

(i) இடர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவை தணிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே பிரயாணங்கள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுதிசெய்துகொள்ளக்கூடிய விதத்தில் பயணம் தொடர்பான அதிகாரமளிக்கும் நெறிமுறைகளை நடைமுறைப்படுத்தவும்.

(ii) இடர்கள் மிகவும் உயர்வாகக் காணக்கூடிய இடங்களில் அல்லது சூழல்களில் நன்கு பயிற்றப்பட்ட நபர்களை மாத்திரம் செயற்படுத்துவதற்கு ஏற்ற விதத்தில் பொருத்தமான அங்கீகாரங்களை வழங்கவும்.

(iii) குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைவதற்கு பல்வேறுவிதமான வழிகளை உருவாக்கவும். அத்தோடு, குறுகிய கால அவகாசத்தில் பயணத் திட்டத்தை மாற்றுவதற்கும் தயாராகவிருக்கவும்.

(iv) பணியாளர்கள் தொடர்பிலான பயணத் திட்டங்களை நன்கு ஆராயவும். சரி பார்த்தல் ஒழுங்குமுறைபின் ஓர் அங்கமாக முறையான தொடர்பாடல்களை உறுதிசெய்யவும். ஏதாவது பிழையாக நடைபெறும் பட்சத்தில் யாருடன் தொடர்புகளை ஏற்படுத்துவது என்பது தொடர்பில் முன்கூட்டியே இணங்கிக் கொள்ளவும்.

(v) சரி பார்த்தல் விடயங்கள் பிழைக்குமாயின், அதற்கேற்ற விதத்தில் அவசரகால தொடர்பாடல் ஒழுங்குமுறைகளைத் தயார் நிலையில் வைத்திருக்கவும்.

(vi) பாதுகாப்பான இடங்களை இனங்காணவும். அவசரகால நிலைமைகளின் பொழுது தொடர்புகொள்ளக் கூடிய தகவல்களை பணியாளர்கள் தம்முடன் கொண்டு செல்கின்றார்கள் என்பதை உறுதிசெய்து கொள்ளவும். (உதாரணம், நெருங்கிய உறவினர்கள் பற்றிய விபரங்கள், அலுவலக இலக்கம், அவசரகால மருத்துவச் சேவைகள், பாதுகாப்புக் கம்பனி, சட்டத்தரணி போன்றன.) இவர்கள் பயணங்களை மேற்கொள்கின்ற பொழுதும் அவசரநிலைமைகளின் பொழுதும் தொடர்புகொள்ளக் கூடிய இலக்கங்களை தமது தொலைபேசியில் பதிந்து வைத்திருப்பது சிறப்பானதாகும். வாய்ப்புள்ள சந்தர்ப்பங்களில் ஸ்பீட் டயல் முறையில் அல்லது தமது விருப்பத்திற்கு இலக்கங்களில் பதிந்து வைத்திருப்பது சிறப்பானதாகும்..

(vii) மக்கள் அதிகமாக கூடுகின்ற ஆர்ப்பாட்டங்கள், சந்தை போன்ற இடங்களைத் தவிர்க்கவும்.

(viii) அவசர நிலைமையின் பொழுது தொடர்புகொள்ளக் கூடிய வசதிகளை வாகனங்களில் வைத்திருக்கவும். (உதாரணமாக, மாற்றீட்டுத் தொலைபேசி இலக்கம், ரேடியோ அல்லது செய்மதித் தொலைபேசி போன்றன.) அத்தியாவசிய அல்லது அடிப்படை பாதுகாப்பு உபகரணங்கள் (உதாரணம், திருத்துவதற்கான உபகரணங்கள் மற்றும் தீயணைப்புக் கருவிகள் போன்றன). எல்லா சந்தர்ப்பங்களிலும் முதலுதவிப் பொருட்கள் மற்றும் மனவடு சம்பந்தமான விடயங்கள், பிளாஸ் லைட், தண்ணீர், உணவு, அவசர தேவைக்கான நிதி, அடையாளம் காண்பதற்கான ஆவணங்கள், அடையாள அட்டை மற்றும் புகைப்படங்கள் போன்றன). தயவுசெய்து சேர்க்கை 6 ஐப் பார்க்கவும்: பயணப் பொதி தொடர்பான விடயங்கள்.

(ix) உங்களது அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு போன்றனவற்றின் போட்டோப்பிரதிகளை எடுத்துச் செல்லவும். சிலவேளைகளில் மூலப்பிரதிகள் தொலைந்தால் அல்லது திருடப்பட்டால், இவை உதவலாம். முடியுமாயின், உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது நம்பிக்கையான நபர் ஒருவரின் மின்னஞ்சலுக்கு இவற்றை அனுப்பிவைக்கவும்.

(x) இரகசியத் தன்மையைப் பாதுகாப்பதற்கு சிரமங்களை ஏற்படுத்தும் பொருட்களையோ அல்லது உபகரணங்களையோ வாகனத்தில் வைத்திருக்க வேண்டாம்.

(xi) நீங்கள் பயணத்தை ஆரம்பிக்கின்ற பொழுதும் திரும்பி வருகின்ற பொழுதும் முடியுமாயின் வெவ்வேறான பயணப் பாதைகளைப் பயன்படுத்தவும்.

(xii) பயிற்றப்பட்ட வாகன ஓட்டுனர்களைப் பயன்படுத்தவும்.

(xiii) உங்களுடன் ஆதாரச் சான்றுகள் அல்லது உதவிக் கடிதங்கள் ஆகியவற்றைக் கொண்டுசெல்வது தொடர்பில் பரிசீலிக்கவும். இவை உங்களுக்கு உதவலாம்.

### சுகாதாரம் மற்றும் சுய பராமரிப்பு

(i) அருகிலுள்ள மருத்துவ நிலையத்தை எவ்வாறு சென்றடைவது என்பது தொடர்பில் அறிந்திருக்கவும். அதேபோல் ஏனைய உதவிச் சேவை நிலையங்கள் எங்கு காணப்படுகின்றன என்பது தொடர்பிலும், குறிப்பாக தொலைதூரங்களுக்குப் பயணிக்கும் பொழுது இவற்றை அறிந்துவைத்திருக்கவும்.

(ii) பிறர் சார்ந்த மனவடு தொடர்பான இடர்களைக் குறைக்கும் முகமாக முறையான கலந்துரையாடல்களைப் பணியாளர்களுடன் மேற்கொள்ளவும்.[9] வேலைத்தளங்களுக்கு வெளியே பணியாளர்கள் மிகவும் கூருணர்வு மிக்க விடயங்களைக் கலந்துரையாடுவதை மட்டுப்படுத்துவதற்கு இது உதவலாம். அத்தோடு இதனுடன் தொடர்புடைய இரகசியத்தன்மையை மீறுவது தொடர்பான இடர்களைத் தவிர்ப்பதற்கும் உதவலாம். அவசியமேற்படின், உளவியல் சார் உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக இவர்களை ஆற்றுப்படுத்தவும்.

(iii) பணியாளர்களது உடலியல் ரீதியான மற்றும் உணர்வு ரீதியான நலன்களை பாதுகாக்கும் முகமாகவும் சிறந்த தொழில் வாழ்க்கையைப் பேணும் முகமாகவும் மனவழுத்தம், களைப்பு, மனவடு போன்றவற்றை தணிக்கும் முகமாகவும் சகல பணியாளர்களும் சுய பராமரிப்புத் திட்டமொன்றினை விருத்திசெய்து அவற்றைப் பேணுவதற்கும் ஆரோக்கியமான நட்பழக்க வழக்கங்களைப் பேணுவதற்கும் உட்சாகப்படுத்தவும். இங்கு குறிப்பிடப்பட்ட மனவழுத்தங்கள், களைப்பு மற்றும் மனவடு போன்ற விடயங்கள் பணியாளர்கள் அச்சுறுத்தல்களை இனங்கண்டு அவற்றுக்குப் பதிலளிக்கும் ஆற்றல்களைப் பாதிக்கலாம்.[10] (பார்க்க அத்தியாயம் 9: திட்டமிடல்/ சுய பராமரிப்பு).

---

5 தயவுசெய்து பகிரங்க சமூக நீதி முன்னெடுப்புக்களைப் பார்க்க. பயிற்சிக் குறிப்பு: மனித உரிமைகள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான பாதுகாப்பு, பிற்சேர்க்கை 2, உதாரணம்- பாதுகாப்புச் சம்பவ அறிக்கை ஒன்றியம்

6 முறையான குழுக்கூட்டங்கள் ஏற்கனவே நடைபெறும் பட்சத்தில், பாதுகாப்பு தொடர்பான விடயங்களை நிகழ்ச்சிநிரலில் சேர்க்க முடியும்.

7 அவசரகால நன்கொடைகள் தொடர்பான முன்னேற்றப் பட்டியல் தொடர்பான விபரங்களுக்கு தயவுசெய்து துரித பதிலளிப்பு நன்கொடைகள் விபரக் கொத்து 2015 ஐப் பார்க்கவும். சர்வதேச மனித உரிமைகள் நிதியிடலாளர்கள் குழு https://ihrfg.org/sites/default/files/Directory_EmergencyResponseGrants_2015_0.pdf; http://www.icanpeacework.org/emergency-assistance-for-activists-scholars/; and ProtectDefenders.eu https://www.protectdefenders.eu/en/supporting-defenders.html#emergency-support.

8 பின்னிணைப்பு OSJI ஐப் பார்க்கவும். பயிற்சிக் குறிப்புகள்: மனித உரிமைகள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான பாதுகாப்பு: பின்னிணைப்பு1, உதாரணமாக பயணத்திற்கு முந்தியதான பாதுகாப்புக் கையேடு

9 புகைப்படங்கள், வீடியோக்கள் போன்ற தொடர்ச்சியான மனவழுத்தங்களைத் தரக்கூடிய ஆவணங்களை செயற்பாட்டாளர்கள் தடுப்பது அல்லது மட்டுப்படுத்துவது தொடர்பான விபரங்களையும் படிமுறைகளையும் அறிந்துகொள்வதற்காக நடைமுறை சார்ந்த படிமுறைகள் பட்டியலைப் பார்க்கவும் கீழுள்ள விடயங்களைப் பார்க்கவும். சர்வதேச மன்னிப்புச் சபை: மனித உரிமைகள் ஆய்வுக்காக டிஜிடல் தரவுகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது.

10 முழுமையை நோக்கிய பாதுகாப்பு, முக்கிய குறிப்புகள் 1, 1.2 அச்சுறுத்தல் தொடர்பில் தனிப்பட்ட பதிலளிப்புகள்.

## D. தகவல் தொடர்பான இடர்களை முகாமைத்துவம் செய்தல்

### 1. தகவல் தொடர்பான இடர்கள்

எந்தவொரு தகவலும் பல்வேறு வகையான அச்சுறுத்தல்களையும் இடர்களையும் எதிர்கொள்ளலாம். இது இரகசியத்தன்மையை மீறுவதற்கு இட்டுச்செல்லலாம். அத்தோடு செயற்பட்டாளர்கள், பாதிக்கப்பட்டவர்கள், ஏனைய சாட்சிகள் ஆகியோரது தனிப்பட்ட பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையலாம் அல்லது ஆவணப்படுத்தல் செயன்முறையை பல்வேறு விதமான சிரமங்களுக்கு உள்ளாக்கலாம். இவற்றுள் பின்வருவனவும் உள்ளடங்கும்:

» திருட்டு

» காணாமற் போதல் அல்லது அழிக்கப்படல்

» பறிமுதல் செய்தல்

» மாற்றங்களை மேற்கொள்ளல்.

» இணைய ரீதியான திருட்டு (ஹெக்கிங் அல்லது அதிகாரமற்றவர்கள் பெற்றுக்கொள்ளல் (வெளியிலுள்ளவர்கள் அல்லது உள்ளே பணியாற்றுபவர்கள்)

» கண்காணிப்புகள்.

» இடைமறித்தல்கள்

அச்சுறுத்தல்கள் எப்போதும் வெளியிலிருந்து மாத்திரம் வருபவை அல்ல (உதாரணம், ஹெக்கிங்). இவை குரோத மனப்பாண்மையுடன் மேற்பட்டவையாக இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். இருப்பினும் இடர்களைக் கருத்திற்கொள்ளல் வேண்டும்.

### 2. தணிப்பு நடைமுறைகள்

எந்தவொரு பாதுகாப்புத் திட்டத்திலும் தகவல் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு அகியன முக்கிய அம்சங்களாகும். இதன் நோக்கம் தரவூகளைப் பாதுகாப்பது மட்டுமல்லஇ தரவூ சேகாப்பிற்குத் தமது பங்களிப்புக்களை நல்கியவர்கள் மற்றும் அத்தரவுகளில் காணப்படும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்கள் ஆகியோரையும் பாதுகாப்பது அவசியமாகும். பொதுவாகக் கருத்துரைக்கயில்இ பௌதீக ரீதியான இடர்களை இனங்காண்பதை விட எண்ம (டிஜிடல்) ரீதியான இடர்களை இனங்காண்கின்ற ஆற்றல்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. எனவேஇ செயற்பாட்டாளர்கள் தமது அன்றாடக் கடமைகளின் பொழுது பயன்படுத்துகின்ற டிஜிடல் கருவிகள் பற்றி நன்கு அறிந்திருத்தல் அவசியமாகும். (உதாரணம்- எங்கே, எவ்வாறு தகவல்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் அவற்றை யார் அணுகிப் பெற்றுக்கொள்ள முடியும்). அத்தோடு, புதிய கருவிகள் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திகள் பற்றிய இற்றைப்படுத்தல்களும் முக்கியமாகும்.[11]

தகவல்களின் பாதுகாப்பினைப் பேணுவதற்கான தணிப்பு நடைமுறைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

» பரிமாறப்படுகின்ற தகவல்கள், அதாவது, தொடர்படப்படுகின்ற தரவுகள் போன்றன (உதாரணம்- நேரடியானவை, தொலைபேசி அல்லது வீடியோ தொலைபேசி தொடர்பாடல்கள், மின்னஞ்சல், உரையாடல்கள், குறுஞ்செய்திகள், இணையத்தின் மூலமாக பதிவேற்றம் செய்யப்படும் தகவல்கள் அல்லது கிளவுட் ஸ்ரோரேஜ் மற்றும் அவற்றின் மெட்டா டேட்டா ஆகியவற்றிலிருந்து பெறப்படுகின்ற தரவுகள்).

» கையிருப்பிலுள்ள தரவுகள், அதாவது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள தரவுகள் (உதாரணம் - அலுமாரியில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள வன் பிரதிகள் (ாயசன-உழிநைள), அச்சுப்பிரதிகளாகக் காணப்படுகின்ற தகவல்கள், பொதுவாக எண்ம வடிவத்தில் காணப்படுவதுமுண்டு. கணினியில் காணப்படுகின்ற டிஜிடல் கோவைகள், க்ளவுட் ஸ்ரோரேஜ் அல்லது டிஜிடல் உபகரணங்கள் மற்றும் அவற்றின் மெட்டா தரவுகள் போன்றன.)

11 முழுமையை நோக்கிய பாதுகாப்பு, முக்கிய குறிப்பு 1, 1.2, அச்சுறுத்தல் தொடர்பிலான தனிப்பட்ட பதிலளிப்புகள்.

பெட்டி 4

## தகவல் தொடர்பான இடர்களைத் தணித்தல்

தகவல்களின் பாதுகாப்பினைப் பேணுவதற்கான தணிப்பு நடைமுறைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

### தகவல் பாதுகாப்புக் கொள்கைகள்

கூருணர்வுமிக்க தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், தரவுத் தொடர்பாடல்கள், தரவுகளை களஞ்சியப்படுத்தல், சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தல், ஆவணப்படுத்தலின் பொழுதும் போக்குவரத்துச் செய்கின்ற பொழுதும் கூருணர்வுமிக்க தகவல்களைக் கையாளுதல் ஆகியவற்றுடன் ஏனைய பல விடயங்களையும் உள்ளடக்கிய தகவல் பாதுகாப்புக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தவும். பாதுகாப்பு மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அத்தகைய கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுவது அவசியமாகும். செயற்பாட்டாளர்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ளக்கூடிய விதத்தில் அத்தகைய கொள்கைகள் இருத்தல் வேண்டும்:

(i) பாதிக்கப்பட்டவர்களது தனிப்பட்ட தரவுகள் மற்றும் ஏனைய சாட்சிகளது தனிப்பட்ட தரவுகள் ஆகியவற்றுக்கு ஒத்துப்போகக் கூடிய விதத்தில் குறியீட்டு முறையொன்றினைப் பயன்படுத்தல் (coding system). (பர்க்க பிற்சேர்க்கை 8: பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளிடமிருந்து சேகரிக்க வேண்டிய தனிப்பட்ட தரவுகள் தொடர்பான படிவம்) இக்குறியீட்டு முறையினை அவர்களது உண்மையான கூற்றுக்காகப் பயன்படுத்தவும்.

(ii) மிகவும் கண்டிப்பான சூழ்நிலைகளை மையமாகக் கொண்டு தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் நடைமுறைகளை உருவாக்கவும். ஏதாவது தகவல்கள் கசியும் பட்சத்தில் எந்த மூலத்திலிருந்து அத்தகைய தகவல்கள் வெளியிடப்பட்டன என்பதை இலகுவாக அறிந்துகொள்வதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளவும்.

(iii) கூருணர்வு மிக்க தகவல்களின் மென் பிரதிகளை (soft copies) பெற்றுக்கொள்ளக் கூடியவர்களது எண்ணிக்கையை மட்டுப்படுத்தவும். மற்றவர்களுக்கு அச்சிடப்பட்ட பிரதிகளை (hard copies) வழங்கவும்.

(iv) தீயிலிருந்து பாதுகாக்கக் கூடிய ஹாட் ட்ரைவ்களை (hard drive) பயன்படுத்தவும். மற்றும் உங்களது கணினியை வேறோரு வலையமைப்புடன் இணைக்காமல் தனியாகப் பயன்படுத்தவும். கூருணர்வுமிக்க தகவல்களை ஏனைய சேவர்களுடன் பகிரக்கூடாது.

(v) கடவுச்சொற்களைப் பாதுகாக்கக் கூடிய போல்டர்களையும் என்கிரைப்ட் ட்ரைவ்களையும் பயன்படுத்தவும்.

(vi) மேசையைப் பயன்படுத்துவது தொடர்பில் தெளிவான கொள்கைகளை வகுக்கவும். எத்தகைய கூருணர்வுமிக்க தகவல்களைக் கொண்ட பத்திரங்களும் மேசையில் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படக்கூடாது.

(vii) தீயினால் பாதிக்கப்படாத பாதுகாப்பான இடங்களில் வைக்கக் கூடிய மடிக் கணினிகளைப் பயன்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கவும்.

(viii) கூருணர்வுமிக்க தகவல்கள் மற்றும் மின் உபகரணங்கள் ஆகியவற்றைக் கவனிப்பாரற்ற நிலையில் உங்களது வாகனங்கள், சிற்றுண்டிச்சாலைகள், ஹோட்டல்கள் அல்லது வீடுகளில் வைக்க வேண்டாம்.

(ix) பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளை அவர்களது பெயர் மூலமாக இனங்காணக்கூடிய கூருணர்வுமிக்க தகவல்களைக் கொண்டுசெல்வதைத் தவிர்க்கவும். விசேடமாக சோதனைச் சாவடிகளைக் கடக்கின்ற பொழுது இதனைப் பேணவும்.

### எண்மத் தரவுகள் (Digital data)

(i) எண்மத் தரவுகளை ஆவணப்படுத்தல் நோக்கங்களுக்காக சேகரிப்பதற்கு முன்னர் அத்தகைய தரவுகளைச் சேகரிப்பதற்கு, சேமிப்பதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு போதிய வசதிகளும் ஆற்றல்களும் உள்ளன என்பதை முன்கூட்டியே தீர்மானித்துக்கொள்ளவும். எண்மத்தரவுகளைப் பயன்படுத்துவது தொடர்பிலான சாதகமான மற்றும் பாதகமான அம்சங்களை மதிப்பீடு செய்கையில் அல்லது இவற்றை ஆவணப்படுத்துவதற்காக இணையத்தை (online) பயன்படுத்துகின்ற பொழுது அதிக கவனம் செலுத்தவும். இத்தகைய சந்தர்ப்பங்களில் தகவல்களைப் பிழையாகக் கையாளுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே, மிகவும் கவனமாக இதனைப் பரிசீலிக்கவும் (பார்க்க அத்தியாயம் 10, பிரிவு ஈ: டிஜிடல் சான்றுகள் மற்றும் பயிற்சி தொடர்பான குறிப்புகள்)

(ii) சில சூழமைவுகளைக் கருத்தற்கொண்டு நோக்குகையில் கண்காணிப்பு ரீதியான இடர்கள் அதிகமாகக் காணப்படும் பட்சத்தில் டிஜிடல் ரீதியான தரவுச் சேகரிப்பு அல்லது தொடர்பாடல் முறையோ விரும்பத்தக்கதல்ல[12]

(iii) தொடர்பாடல் அல்லது உதவி ஆவணங்கள் ஆகியவற்றுக்காக apps ஐப் பயன்படுத்துகின்ற பொழுது அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பான நியதிகளையும் நிபந்தனைகளையும் நன்கு ஆராயவும். சில apps கள் உண்மையில் உங்களது இரகசியத்தன்மையைப் பேணுவதற்கு உதவாது. இதன் விளைவாக நீங்கள் பயன்படுத்தும் விடயங்களை மூன்றாம் தரப்பைச் சேர்ந்த ஒருவர் அறிந்துகொள்வதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

*...பௌதீக ரீதியான அச்சுறுத்தல்களை இனங்காணல் தொடர்பில் எம்மிடம் காணப்படுகின்ற திறன்களை விட டிஜிடல் ரீதியான அச்சுறுத்தல்களை இனங்காண்பது தொடர்பில் காணப்படும் திறன்கள் மிகக் குறைவாகவேயுள்ளன. ...*

பெட்டி 4

## தகவல் தொடர்பான இடர்களைத் தணித்தல்

தகவல்களின் பாதுகாப்பினைப் பேணுவதற்கான தணிப்பு நடைமுறைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

### தரவுத் தொடர்பாடல்கள்

(i) எப்போதும் கண்காணிப்பின் கீழுள்ளீர்கள் எனக் கருதிச் செயற்படவும்

(ii) கூருணர்வுடைய விடயங்களையும் கூருணர்வுடைய தகவல்களையும் தொலைபேசி மூலமாக உரையாடுவதை அல்லது அத்தகைய தகவல்களை மின்னஞ்சல் மூலமாகப் பரிமாறிக்கொள்வதையும் தவிர்த்துக்கொள்ளுங்கள். மேலும் சமூக வலைத்தளங்களினூடாக பரிமாறிக்கொள்வதையும் தவிர்த்துக்கொள்ளவும். தவிர்க்க முடியாத சூழலின் நிமித்தம் அத்தகைய நிலைமை ஏற்பட்டால் மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

(iii) உயர் தாராதரமுடைய மறைக் குறியாக்கப்பட்ட மின்னியில் முறைகளை (encrypted electronic systems) பரிசீலிக்கவும். சில நாடுகளில் இந்த மறைக் குறியாக்கப்பட்ட முறைகள் சட்ட ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.[13] வேறு சில நாடுகளில் இது சட்ட விரோதமான செயலாகும். எனவே, செயற்படுத்துனர்கள் உள்ளூர் பாதுகாப்பு நிபுணர்களுடன் இவை தொடர்பில் கேட்டறியவும். அல்லது குறிப்பிட்ட நாட்டில் எது அனுமதிக்கப்பட்டுள்ளது மற்றும் எது அனுமதிக்கப்படவில்லை என்பது தொடர்பிலான விபரங்களை இணையம் மூலமாக அறிந்துகொள்ளவும். மறைக் குறியாக்கப்பட்ட முறைகளைப் பாவிப்பதானது இடத்திற்கு இடம் வேறுபடலாம். இருப்பினும், இவற்றை சூழ்நிலைக்கு ஏற்ப மறைக்குறியாக்கப்பட்ட முறைகளைப் பாவிப்பது சட்ட ரீதியானதாகவிருக்கலாம். இருப்பினும் இதனை பிரயோகிப்பது விரும்பத்தக்கதல்ல (ஏனெனில், அரசாங்கத்தைக் குற்றம் சுமத்துகின்ற மீறல்கள் தொடர்பான விடயங்களை ஆவணப்படுத்துபவர்கள் கவனத்திற்கொள்ளல் வேண்டும்). ஏனெனில், அதிகாரிகளுடைய கவனத்தை இது ஈர்க்கலாம். சில விடயங்களின் பொழுது இத்தகைய மறைக்குறியாக்கப்பட்ட முறைகளைப் பாவிப்பது விரும்பத்தக்கதல்ல. இச்சந்தர்ப்பங்களில் வேறு நுட்பங்களைப் பாவித்து தகவல்களை மாற்றுதல் சிறப்பானதாகும். இவ்வாறு மாற்றும் பொழுது உரிய முறையில் அவற்றைப் பாதுகாத்தல் வேண்டும்.

(iv) பாதுகாப்பற்ற ஊடகங்கள் அல்லது மூலங்கள் ஊடாக தொடர்பாடல்களை மேற்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கின்ற பொழுது பாதிக்கப்பட்டவர்களது பெயர்கள் மற்றும் சாட்சிகளது பெயர்கள் மற்றும் அவர்களது இடங்கள் தொடர்பான விபரங்களை வெளியிடாமல் தொடர்பாடுவதற்கான முறைகளைக் கண்டறியவும்[14]

### தரவுச் சேமிப்பிடம்

(i) அத்தியாயம் 13 இல் குறிப்பிடப்பட்ட பிரதான கொள்கைகளின் பிரகாரம், தரவுகள் பாதுகாப்பான முறையில் சேமிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்துகொள்ளவும் (டிஜிடல் அல்லது டிஜிடல் அற்றவை): தகவல்களைச் சேமித்தல் மற்றும் கையாளுதல்.

(ii) டிஜிடல் தரவுகளைப் பொறுத்தவரையில் மறைக்குறியாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் தொடர்பில் பரிசீலிக்கவும் (மேற்படி (iii) ஐப் பார்க்கவும்). இற்றைப்படுத்த அன்ரிவைரஸ் முறைகளைப் பாவிக்கவும். சகல தொடர்பாடல் உபகரணங்களையும் கூருணர்வுமிக்க கோவைகளையும் உறுதியான கடவுச்சொற்களைப் பாவித்துப் பாதுகாக்கவும். சேமிப்பகத்தில் தொடர்ச்சியாகச் சேமித்து வைக்கவும். அவசியமாயின் ஹாட் ட்ரைவை அப்புறப்படுத்தவும்.

(iii) வன் பிரதிகள் (hard copies), யூ.எஸ்.பீ. (USB sticks) போன்றவற்றை தீப்பற்றாத இடங்களில் பாதுகாப்பாகப் பூட்டி வைக்கவும்.

### ஒன்லைன் ஊடாக அஞ்சல்கள்

(i) அமைப்பொன்றின் இணையத்தளத்தில் அல்லது சமூக வலைத்தளங்கள் மூலமாக ஏதாவது ஆவணத்தை ஒன்லைன் மூலமாக அனுப்புகின்ற பொழுது சைன் ஓப் நடைமுறையைப் பின்பற்றவும் (முகநூல், டுவிட்டர்). மேலும் கூருணர்வு வாய்ந்த தகவல்கள் மிகவும் உன்னிப்புடன் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்துகொள்வதற்காக இதனை மேற்கொள்ளவும். அத்தோடு, பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளின் அடையாளம், அவர்களது தங்குமிடங்கள், வாழ்விடங்கள், பேட்டிகளை வழங்கிய இடங்கள், வேலைசெய்கின்ற இடங்கள் அல்லது பின்னணியில் காணக்கூடிய ஏனைய வேலைத்தளங்கள் ஆகியவற்றை கவனக் குறைவின் காரணமாக வெளிப்படுத்தக்கூடிய ஆவணம் அல்லது புகைப்படங்களைத் தவிர்க்கவும்.

(ii) பணியாளர்கள் தமது தனிப்பட்ட வாழ்க்கைக்கும் தொழில் வாழ்க்கைக்கும் இடையிலான வேறுபாடுகள் தொடர்பில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும். தம்மை வெளிப்படுத்துவதன் காரணமாக ஏற்படக்கூடிய இடர்கள் பற்றி எடுத்துரைக்கவும். மற்றும் சமூக வலைத்தளங்களை முறைதவறிப் பாவிப்பதன் காரணமாக அவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் சாட்சிகளுக்கும் நிகழக்கூடிய இடர்கள் தொடர்பில் எடுத்துரைக்கவும். (உதாரணமாக, தற்போது தங்கியுள்ள இடங்கள் அல்லது ஏனைய கூருணர்வுமிக்க தகவல்களை அனுப்புதல்).

பெட்டி 4

## தகவல் தொடர்பான இடர்களைத் தணித்தல்

தகவல்களின் பாதுகாப்பினைப் பேணுவதற்கான தணிப்பு நடைமுறைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

### இடம் தொடர்பான பாதுகாப்பு

அலுவலக பாதுகாப்புத் தொடர்பில் அலுவலகங்களையும் ஏனைய கட்டிடங்களையும் பொருத்தமான முறையில் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை பரிசீலனை செய்யவும். சர்ததியப்பாடு உள்ளதெனில், பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளவும்:

(i) வேலிகள் மற்றும் அனுமதிக் கட்டுப்பாட்டு முறைகள் போன்ற பௌதீக ரீதியான தடைகள்
(ii) பூட்டி வைக்கக் கூடிய விதத்திலான கதவுகளையும் ஜன்னல்களையும் பொருத்தவும்.
(iii) அனுமதி இன்றி உள்ளே நுழைவதைக் கண்டறியும் முறைகள்
(iv) பாதுகாப்பு விளக்குகள் மற்றும் வீடியோ கண்காணிப்புகள்
(v) பயிற்றப்பட்ட பாதுகாப்பு ஆளணியினர்
(vi) அவசியமற்ற ஆவணங்களை மிகச் சிறியதாக கிழிக்கக் கூடிய உபகரணங்கள்
(vii) சேமிப்பக அறை, அலுவலகப் பணிப்பாளர் அல்லது முகாமையாளர், உறுப்பினர்கள், தகவல் தொழில்நுட்பக் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு மட்டுப்பட்ட அனுமதிகளை வழங்கக் கூடிய பாதுகாப்புக் கொள்கைகளும் நடைமுறைகளும்[15]
(viii) பாதுகாப்பு அறை
(ix) தீயணைப்பு உபகரணங்கள்
(x) அவசரத்தின் பொழுது வெளியேறுவதற்கான வழிகள்

ஆவணப்படுத்தல் செயன்முறையின் பொழுது தனியார் வீடுகள், ஹோட்டல்கள் அல்லது ஏனைய இருப்பிடங்களைச் செயற்படுத்துனர்கள் பயன்படுத்திக்கொள்ளும் பொழுது பின்வரும் பாதுகாப்புக் காரணிகளைக் கருத்திற்கொள்ளல் சிறப்பானதாகும்.:

(i) எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கதவுகளைப் பூட்டவும், கதவைப் பூட்டுவதற்கான உபகரணத்தைப் பயன்படுத்தவும், நீங்கள் உள்ளே இருந்தாலும் கூட கதவைப் பூட்டி வைக்கவும். மேலதிக உரிய பாதுகாப்பு நடைமுறைகள் இல்லாத சந்தர்ப்பங்களில் ஜன்னல்களைத் திறந்துவைத்து விட்டு உறங்க வேண்டாம்.
(ii) கூருணர்வுமிக்க ஆவணங்களை அல்லது மின்னியில் உபகரணங்களை வீடுகளிலோ, ஹோட்டல்களிலோ யாரும் இல்லாத நிலையில் விட்டுச்செல்ல வேண்டாம்.
(iii) சாவியைப் பொருத்தமானவரிடம் வைத்திருக்க ஏற்பாடு செய்யவும். அனுமதி பெற்று சிலர் வருகை தந்த பின்னரே அங்கு வரவும். (உதாரணமாக, துப்பரவு செய்பவர்கள், நிர்மாணப் பணிகளை மேற்கொள்பவர்கள் போன்றோர்).
(iv) இருக்கின்ற வளவுகள், அவசரரகால வெளியேற்றங்கள் ஆகியவற்றை அறிந்துவைத்திருக்கவும். அத்தோடு, உங்களது அயலவர்கள் யார் என்பதையும் அறிந்து வைத்திருக்கவும்.
(v) அவசர நிலைமையின் பொழுது நீங்கள் இருக்கின்ற இடத்தை விட்டு வெளியேற நேரும் பட்சத்தில் பாதுகாப்பான இடமொன்றை முன்கூட்டியே இனங்கண்டு வைத்திருக்கவும்.

### தகவல் தொடர்பாடல் தொடர்பான பாதுகாப்பு

(i) தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு மென்பொருட்கள் தொடர்பிலான புதிய அபிவிருத்திகள் பற்றி இற்றைப்படுத்திய தகவல்களை வைத்திருக்கவும்.
(ii) திறந்த மூலமாகக் காணப்படுகின்ற மென்பொருட்களைப் பாவிக்கவும் (இலவசமாகக் கிடைக்கக் கூடியவை) இவற்றின் பாதுகாப்புத் தொடர்பான அம்சங்கள் சுயாதீனமாக மீளாய்வு செய்யப்பட்டு, கணக்காய்வு செய்யப்படல் வேண்டும். இத்தகைய மூலங்கள் பரவலாக கிடைக்கின்ற பொழுதிலும் திறந்த மூல மென்பொருட்கள் தொடர்ச்சியாக அபிவிருத்தியாளர்களினால் சீர்செய்யப்படுகின்றன. அதாவது இது மிகவும் பாதுகாப்பான முறையாகும். உங்களது சுய தேவைக்கு ஏற்ற விதத்தில் இதனை மாற்றி அமைத்துக்கொள்ளலாம்.
(iii) "kill switch'" செயற்பாடுடைய உபகரணங்களைப் பயன்படுத்தவும். ஏதாவது இழப்புகள் அல்லது பாதிப்புறும் தன்மைகள் ஏற்படும் பட்சத்தில் தொலைதூரத்திலிருந்து இவற்றை இயக்க முடியும்.

---

12 சர்வதேச மன்னிப்புச்சபை *(2016) DatNav:* மனித உரிமைகள் ஆய்வுக்காக டிஜிடல் தரவுகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது. https://www.theengineroom.org/datnav-digital-data-in-human-rights-research. p 14.

13 OSJI, 'பயிற்சிக் குறிப்புகள் மனித உரிமைகள் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான பாதுகாப்பு மார்ச் 2016, பக்கம் 07.

14 மேலதிக வழிகாட்டிகளுக்காக, தகவல்களைப் பாதுகாப்பது தொடர்பான நடைமுறை சார்ந்த துணுக்குகள் மற்றும் கருவிகள், இவற்றுள் அனாமதேய உசாவல்கள், மறைக்குறியாக்கப்பட்ட மின்னஞ்சல்கள், வீடியோ மற்றும் குரல் மையத் தொடர்பாடல்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கு தயவுசெய்து பார்க்கவும் OSJI பயிற்சிக் குறிப்புகள்: மனித உரிமைகள் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான பாதுகாப்பு, மார்ச் 2016, பக்கம் 7-17.

15 அலுவலக பாதுகாப்பை மேம்படுத்துவது தொடர்பான இடம், உபகரணங்கள், நடைமுறைகள் பற்றிய மேலதிக வழிகாட்டி பற்றி அறிந்துகொள்ள OSJI, மனித உரிமைகள் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்களின் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிக் குறிப்புகள். மார்ச் 2016, பக்கம் 3-4.

சாட்சிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் ஏனைய வடிவிலான கூருணர்வுமிக்க தகவல்கள் தொடர்பிலான பாதுகாப்பு மற்றும் இரகசியத்தன்மைக் கொள்கைகள் மீறப்படுகின்ற பட்சத்தில் உடனடியாக அவை தொடர்பில் முழுமையாக அமைப்பிற்கு அறிவிக்கப்படல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் ஏதாவது இடர்கள் காணப்படின் அவை மதிப்பீடு செய்யப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படும். இவ்விதமான மீறல்களை வெளிப்படுத்துவதை உட்சாகப்படுத்தும் முகமாக அவர்களுக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடைவடிக்கைகளையோ அல்லது பின்விளைவுகளையோ ஏற்படுத்தாத கொள்கையொன்றினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பரிசீலிக்கவும்.

## E. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் தொடர்பான இடர்களை முகாமைத்துவம் செய்தல்.

### 1. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் தொடர்பான இடர்கள்

பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் பல்வேறு வகையான அச்சுறுத்தல்களையும் இடர்களையும் எதிர்கொள்ள வாய்ப்புண்டு. இதன் காரணமாக அவர்களது உடல் மற்றும் உணர்வு ரீதியான சுகாதாரம் மற்றும் நலன்கள் பாதிக்கப்படலாம். ஆவணப்படுத்தல் செயன்முறையில் பங்குபற்றுவதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள், சமூகம் ஆகியன பல்வேறு வகையான இடர்களை எதிர்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன (பார்க்க அத்தியாயம் 07: தீங்கிழைக்க வேண்டாம்).

ஆவணப்படுத்தல் திட்டமிடல் படிமுறையின் பொழுது, தனிப்பட்ட மற்றும் பிரதேசம் சார்ந்த அல்லது சமூகம் சார்ந்த குறிப்பிட்ட இடர்கள் பற்றி பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரை ஆலோசித்தல் வேண்டும். இவர்களை நேரடியாகச் சந்திப்பதற்கு முன்னர் உரிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இருப்பினும் செயற்பாட்டாளர்கள் ஒரு விடயத்தைக் கருத்திற்கொள்ளல் வேண்டும். அதாவது சாட்சிகளும் பாதிக்கப்பட்டவர்களும் சில வேளைகளில் அச்சுறுத்தல்களை சரியாக இனங்கண்டிருக்கமாட்டார்கள். பொறிமுறையின் இணைந்த செயற்பட்டின் ஓர் அங்கமாக இடர்கள் குறைவதாகக் கருதலாம். அல்லது கடந்தகால மனவுடுமிக்க அனுபவங்களின் காரணமாக அல்லது பிழையான தகவல்களின் காரணமாக ஆதாரமற்ற பயன்கள் அவர்கள் மத்தியில் காணப்படலாம்.

பொதுவான அச்சுறுத்தல்கள் மற்றும் இடர்கள் பற்றிய பொதுவான பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. இது ஒரு திட்டவட்டமான பட்டியல் அல்ல. பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளது தனித்துவமான தன்மைகளுக்க ஏற்பவும் மற்றும் குறிப்பிட்ட சூழமைவுக்கு ஏற்பவும் இதனை அமைத்துக்கொள்ளலாம். (பார்க்க அத்தியாயம் 7: தீங்கிழைக்க வேண்டாம்):

- குற்றமிழைத்தவர்களினால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் அல்லது பழிவாங்கல்கள்
- கைதுசெய்தல் மற்றும் தடுப்புக்காவலில் வைத்தல்.
- சமூகத்தினால் ஏற்படக்கூடிய களங்கங்கள்
- விவாகரத்து, குடும்பங்களினால் நிராகரிக்கப்படல், திருமணம் செய்வதற்கான குறைவான வாய்ப்புகள்.
- கருணைக் கொலை
- சேவை வழங்குனர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும்/ அல்லது நீதி முறை ஆகியவற்றில் பால்நிலை கூருணர்வின்மையின் காரணமாக மீண்டும் மனவடுக்குள்ளாக்கப்படுதல். இதன் காரணமாக தமக்குத் தாமே தீங்கிழைத்துக்கொள்ளக் கூடியவர்களாக அல்லது தற்கொலை செய்யக் கூடியவர்களாகவும் மாறலாம்.
- பெண்கள் தகாப்புணர்ச்சியில் ஈடுபட்டதற்காகவும் அல்லது திருமண பந்தத்திற்கு வெளியில் புணர்வில் ஈடுபட்டமையின் காரணமாகவும் சிறைவாசம் செல்லலாம். ஆண்கள் பொதுவாக ஒருபாற் சேர்க்கை விரோதச் சட்டங்களின் காரணமாகவும் தன்பால் சேர்க்கையின் காரணமாகவும் பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். சில பின்புலங்களில் இததகைய சட்டங்கள் பரஸ்பர ஒப்புதல் அற்றவையாகவும் இருக்கலாம்.

### 2. தணிப்பு நடைமுறைகள்

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு ஏற்படக் கூடிய இடர்களை தணிப்பது தொடர்பான வழிகாட்டிகளும் உபாய முறைகளும் நெறிமுறை முழுவதும் காணப்படுகின்றன. குறிப்பாக அத்தியாயம் 7: தீங்கிழைக்க வேண்டாம், 9: திட்டமிடல், 11: பேட்டி காணல் ஆகியவற்றில் காணப்படுகிறன. பாதுகாப்பு முகாமைத்துவக் கண்ணோட்டத்திலான நடைமுறைப்படுத்தக் கூடிய, நடைமுறை சார்ந்த சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அத்தோடு, ஒழுங்குமரபின் ஏனைய அத்தியாயங்களுடன் மேலும் விருத்திசெய்யக் கூடிய வழிகாட்டிகளும் தரப்பட்டுள்ளன.

*ஆவணப்படுத்தல் திட்டமிடல் படிமுறையின் பொழுது தனிப்பட்ட பிரதேச அல்லது சமூகத்திற்கான குறிப்பிட்ட இடர்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் கலந்தாலோசிக்கப்படல் வேண்டும்...*

**பெட்டி 5**

## பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு ஏற்படக்கூடிய இடர்களைத் தணித்தல்

பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் பாதுகாக்கும் முகமாக செயற்பாட்டாளர்கள் மேற்கொள்ளக் கூடிய சில படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் பின்வருவனவும் உள்ளடங்கும்.:

### தீங்கிழைக்க வேண்டாம்

தீங்கிழைக்க வேண்டாம் என்ற கொள்கையுடன் இணங்கி நடக்கவும் (அத்தியாயம் 07) மற்றும் இரகசியத் தன்மையை மிகக் கூடிய தராதரத்துடன் பேணவும்.

(i) மிகவும் அவசியமான நிலைமைகளில் மாத்திரமே பாலியல் வன்முறை தொடர்பான கேள்விகளை பாதிக்கப்பட்டவரிடம் கேட்கவும். ஏனைய சந்தர்ப்பங்களில்இளத்தகைய தகவல்களை வெளிப்படுத்த வேண்டியதில்லை. இவர்களிடம் மேற்கொள்கின்ற பேட்டிகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தவும்.

(ii) இவர்களை நேரடியாகச் சந்திப்பதற்கு முன்னர் ஏற்றுக்கொள்ளக் கூடிய, நிகழக்கூடிய இடர்கள் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் ஆகியன பற்றி பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் அறிவிக்கவும்.

(iii) பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரது அடையாளத்தைப் பாதுகாக்கவும். பாதுகாப்பான, தனிப்பட்ட, நடுநிலைத் தன்மை வாய்ந்த, சௌகரியமான, இலகுவில் செல்லக்கூடிய கலாசார ரீதியான பொருத்தப்பாடுகளை உடைய இடங்களிலேயே இத்தகைய பேட்டிகளை மேற்கொள்ளவும் (பார்க்க அத்தியாயம் 11: பேட்டி காணல், பெட்டி 3: பேட்டி காணும் பொழுது செய்யக்கூடிய மற்றும் செய்யக்கூடாத விடயங்கள்)

(iv) பாதுகாப்புத் தொடர்பான அக்கறைகள் காணப்படும் பட்சத்தில் பொதுவாக சாட்சிகளது படத்தினையோ அல்லது அவர்களது குரலையோ பதிவுசெய்ய வேண்டாம்.

(v) பொது இடங்களிலோ, டெக்ஸிகளிலோ அல்லது சாரதிகளின் முன்னிலையிலோ அல்லது உங்களது நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் அல்லது சகபாடிகள் அல்லது ஆவணப்படுத்தல் குழுவிற்கு வெளியிலுள்ளோர் ஆகியோரிடம் வேலை பற்றியோ அல்லது கூருணர்வுமிக்க விடயங்கள் பற்றியோ கலந்துரையாட வேண்டாம்.

(vi) பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் எவ்வாறு பாதுகாப்பான முறையில் அணுகுவது என்பது பற்றி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கலந்துரையாடவும். இவர்களை வீடுகளில் சந்திப்பதனால் அல்லது தகவல்களை அனுப்பிவைப்பதனால் அல்லது மின்னஞ்சல்களை அனுபவதனால் அல்லது நேரடியாகச் சந்திப்பதனால் இவர்கள் மேலும் பல இடர்களை எதிர்கொள்ளலாம்.

(vii) ஆவணப்படுத்தல் செயன்முறைகள் பற்றி யாரிடமும் கூறவேண்டாமென பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் ஆலோசனை வழங்கவும் (அதாவது, யாரிடம் கூறலாம் அல்லது எந்தளவு தகவல்களைத் தெரிவிக்கலாம் என்பது பற்றியது)

(viii) அவர்கள் அறிந்திருக்க வேண்டிய அவசியமற்ற ஆவணப்படுத்தல் செயன்முறைகள் பற்றிய எந்த விடயத்தையும் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளிடம் தெரிவிக்க வேண்டாம். புலனாய்வுக் குறிப்புகள், கூற்றுகள் அல்லது அவர்களது சான்றுகளுடன் அவசியமற்ற ஏனைய ஏதாவது ஆவணங்கள் ஆகியவற்றை பாதிக்கப்பட்டவர்களிடமோ அல்லது சாட்சிகளிடமோ காண்பிக்க வேண்டாம்.

(ix) சாட்சிகள் தொடர்பான தகவல்களை ஏனைய சாட்சிகளிடம் தெரிவிக்க வேண்டாம்.

(x) உங்களது வகிபாகம் எத்தகையதாக இருந்த பொழுதிலும் கூட பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோருடனான உங்களது ஊடாட்டங்களின் பொழுது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உதவி செய்யக் கூடியவர்களாகவும் கூருணர்வுமிக்கவர்களாகவும் பராமரிக்கக் கூடியவர்களாகவும் இருக்கவும் (அத்தியாயம் 15: மனவடு)

(xi) பாலியல் வன்முறையின் காரணமாக பாதிக்கப்பட்ட ஆண்கள், பெண்கள் ஆகியோரை ஏனைய சேவைகளுடன் கூட்டிணைக்கப்பட்ட உதவிச் சேவை நிலையங்களுக்கு ஆற்றுப்படுத்தி இவர்களது மாறுபட்ட தேவைகள் தொடர்பில் பதிலளிக்கக் கூடிய முழுமையை நோக்கிய உதவிகளை இலக்காகக் கொண்டு வழங்கவும். பாலியல் வன்முறையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் ஏனைய தீங்குகளினாலும் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். (உதாரணமாக, இடம்பெயர்தல், தடுப்புக்காவல், மோசமாக நடத்தப்படல் மற்றும் உறவினர்களை இழத்தல் போன்றன). வன்முறைகளைப் பிரிவுபடுத்துகின்ற நடவடிக்கைகள் தவிர்க்கப்படல் வேண்டும். பாலியல் வன்முறை அல்லது சித்திரவதை ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கென மாத்திரம் வடிவமைக்கப்பட்ட ஆற்றுப்படுத்தல் சேவைகளானது சில வேளைகளில் இவர்களை மேலும் மனவடுவிற்கு இட்டுச்செல்லலாம்.

*சில சூழ்நிலைகளில் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பொழுதிலும் கூட இடர்களை ஏற்றுக்கொள்ளக் கூடியளவிற்கு குறைக்க முடியாதுள்ளது... பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளை சந்திக்கக் கூடாது அல்லது வேறு திகதிகளில் சந்திக்கவும் (ஒத்திவைக்கவும்) கூடாது...*

**பெட்டி 5**

### பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு ஏற்படக்கூடிய இடர்களைத் தணித்தல்

பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் பாதுகாக்கும் முகமாக செயற்பாட்டாளர்கள் மேற்கொள்ளக் கூடிய சில படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் பின்வருவனவும் உள்ளடங்கும்.:

**தற்செயல் நிகழ்வுத் திட்டம்**

(i) அவசரகால நிலைமைகளின் பொழுது பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் 24/7 மணித்தியாலமும் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கமொன்றினை வழங்கவும்.

(ii) ஏதாவது பிழையாக நடக்கும் பட்சத்தில் பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்காக தற்செயல் நிகழ்வுத் திட்டமொன்றினையும் போதியளவு நிதியையும் வைத்திருக்கவும். இவர்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பதும் இவற்றுள் உள்ளடங்கும்.

**பாதுகாப்பு நடைமுறைகள்**

(i) பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளைப் பேட்டிகண்டு 24 மணித்தியாலங்களின் பின்னர் அவர்களின் உணர்வுகள் எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறியும் முகமாக தொடர்புகொள்ளவும். அதன் பின்னர் சாத்தியப்பாடுள்ள சந்தர்ப்பங்களில் முறையாகத் தொடர்புகளை ஏற்படுத்தவும்.

(ii) பேட்டிகண்ட குறிப்புகளுடன் ஒன்றாக வைத்திருக்காமல் தனிமைப்படுத்தி பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் தொடர்பான தகவல்களை வைத்திருக்கவும். மற்றும் குறியீட்டு முறையையும் பயன்படுத்தவும்.

(iii) பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் வழங்குகின்ற சான்றுகளின் நிமித்தம் தான் அவர்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்படுகின்றன என்ற எண்ணத்தைத் தவிர்க்கும் முகமாக ஏற்கனவே தயார் நிலையிலுள்ள உதவிகளை வழங்கவும்.

(iv) சாட்சிகளைப் பாதுகாக்காத நீதிமன்றங்கள் மற்றும் ஏனைய பொறுப்புக் கூறக்கூடிய பொறிமுறைகள் ஆகியவற்றுடனான ஈடுபாடுகளைத் தவிர்க்கவும்.

(v) பார்க்க அத்தியாயம் 4 பிரிவு ஈ, பெட்டி 13: 'ஏனைய பாதுகாப்பு நடைமுறைகளுக்கான உதாரணங்கள்' பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் பாதுகாக்கும் முகமாக நீதித்துறை முறைகளினால் நடைமுறைப்படுத்தக் கூடிய பாதுகாப்பு நடைமுறைகள்[16]

சில சூழ்நிலைகளில் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பொழுதிலும் கூட இடர்களை ஏற்றுக்கொள்ளக் கூடியளவிற்குக் குறைக்க முடியாதுள்ளது. அவை மிக அதிகமாகக் காணப்படுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களை அல்லது சாட்சிகளைச் சந்திக்கவோ, தொடர்புகளை மேற்கொள்ளவோ கூடாது. அல்லது வேறொரு திகதிக்கு ஒத்திவைக்கவோ கூடாது.

16 பொதுநலவாய நாடுகள் செயலகம் (2011), குற்றவியல் நீதிமன்ற முறையினுள் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் பாதுகாப்பது தொடர்பான சிறந்த நடைமுறை வழிகாட்டிகள், லண்டன்: பொதுநலவாயச் செயலகம்.

# அத்தியாயம் 9: உள்ளடக்கம்


## அத்தியாயம் 9: திட்டமிடல் ........ 119

**A.** அறிமுகம் ........ **119**

*பெட்டி 1*
சரியிணை நண்பர்கள் இணை நிலையினர் அனுபவம்— ஏன் திட்டமிட வேண்டும்? ........ 120

**B.** மோதல் மற்றும் கொடுமை தொடர்பான பாலியல் வன்முறைகளை **(CARSV)** ஆவணப்படுத்தல் திட்டம் ........ **121**

1. ஆரம்பக் கட்ட ஆராய்ச்சிகள் மற்றும் பகுப்பாய்வுகள் ........ 122

*பெட்டி 2*
ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகள் தொடர்பான வழிகாட்டல் கேள்விகள் ........ 123

2. நோக்கங்கள் ........ 125

3. சம்பந்தப்பட்ட செயல்கள் ........ 125

*பெட்டி 3*
சரியிணை நண்பர்கள் அனுபவம் - மீறல்கள் என்றால் என்ன? ........ 126

4. நோக்கம் ........ 126

5. இடர்கள் ........ 126

*பெட்டி 4*
இடர்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பான வழிகாட்டல் கேள்விகள் ........ 127

6. வளங்கள் ........ 129

7. தகவல் சேகரித்தல் உபாயங்கள் ........ 129

*பெட்டி 5*
தகவல் சேகரிப்பு உபாயம் ........ 129

7a. எத்தகைய முரண்பாடு மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை CARSV தகவல்கள் தேவைப்படுகின்றன? ........ 130

7b. முரண்பாடு மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை CARSV தகவல்களை எங்கு பெற்றுக்கொள்ளலாம் ........ 130

*பெட்டி 6*
சரியிணை நண்பர்கள் அனுபவம் - சான்றுகளை தேடுதல் ........ 130

7c. முரண்பாடு மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை CARSV தகவல்களை எவ்வாறு சேகரிப்பது 130

i. பாதிக்கப்பட்டவரையும் சாட்சிகளையும் இனங்காணல் ........ 131

ii. இடைத்தரகர்கள் மூலமாக அணுகுதல் ........ 132

*பெட்டி 7*
வழக்குச் சட்டம் உதாரணம் - இடைத்தரகா்களை பயன்படுத்துவதனால் ஏற்படக் கூடிய இடா்கள் - ஐ.சீ.சீ. இன் லுபங்கா வழக்கு ........ 132

*பெட்டி 8*
இடைத்தரகர்களுடன் ஈடுபடுதல் தொடர்பான சோதனைப் பட்டியல் ........ 133

iii. உரைபெயர்ப்பாளர்களைப் பயன்படுத்தல் ........ 134

7d. தகவல்களை எவ்வாறு களஞ்சியப்படுத்திக் கொண்டுசெல்வது ........ 135

7e. தகவல்களை எவ்வாறு ஒழுங்கமைப்பது ........ 136

8. மீள்பார்வை மற்றும் அறிக்கையிடல் தொடர்பான ஏற்பாடுகள் ........ 137

*பெட்டி 9*
மீள்பார்வை மற்றும் அறிக்கையிடல் தொடர்பான ஏற்பாடுகள் ........ 137

9. நன்னடத்தைக் கோவைகள் ........ 138

*பெட்டி 10*
நன்னடத்தைக் கோவைக் கொள்கைகள் தொடர்பான உதாரணங்கள் ........ 138

10. தராதரம் மிக்க செயற்பாட்டு நடைமுறைகள் ........ 139

11. சுய-பராமரிப்பு ........ 139

# அத்தியாயம் 9: திட்டமிடல்

## A. அறிமுகம்

**மோதல் மற்றும் கொடுமை தொடர்பான பாலியல் வன்முறைகளை (CARSV) முறையாக ஆவணப்படுத்துவதானது பூரணமான ஆவணப்படுத்தல் திட்டமிடல் செயன்முறையில் தங்கியுள்ளது: உங்களது CARSV ஆவணப்படுத்தலைத் திட்டமிடுதல் எனும் பொழுது குறிப்பிட்ட பொறுப்புக் கூறல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான சகலவிதமான செயற்பாடுகள் தொடர்பிலும் சிந்தித்து அவற்றை ஒழுங்கமைப்பதாகும்.**

நெறிமுறை என்ற விடயத்தின் பிரகாரம் CARSV ஆவணப்படுத்தலின் பொழுது மேற்கொள்ள வேண்டிய படிமுறைகள் பற்றி கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணப்படுத்தல் திட்டத்தில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. **சர்வதேச குற்றம் என்ற முறையில் பாலியல் வன்முறையை வெறுமனே தனியாக மாத்திரம் ஆவணப்படுத்தல் கூடாது.** பாரியளவு வன்முறை மிக்க சூழ்நிலையில் இத்தகைய குற்றங்கள் எவ்வாறு பொருந்துகின்றன என்பதை எடுத்துரைப்பதற்கான பிரதான கருவியாக இவ் ஆவணம் காணப்படுகிறது (உதாரணமாக, பாரிய கொலைகள், வலுக்கட்டாயமாக காணமல ஆக்கப்பட்டோர், சிறுவர்களை வேலைக்குச் சேர்த்தல், கிராமங்களை அழித்தல் போன்றன). பின்புலம் சார்ந்த விடயங்களையும் தொடர்புகளையும் தாபிப்பதற்கு இத்தகைய விடயங்கள் குறிப்பாக அவசியமாகும்.

ஓர் அமைப்பின் அடிப்படை நோக்கம் எவ்வாறாக இருந்த பொழுதிலும் - அது குற்றவியல் சார்ந்த நீதிகளையோ அல்லது ஏனைய பொறுப்புக் கூறல் வடிவங்களையோ நாடுவதாக இருந்த பொழுதிலும் கூட இவை தொடர்பிலான கலந்தாராய்வுகளை மேற்கொண்டு நோக்கத்தை அடைவதற்கு அவசியமான செயற்பாடுகளை ஒழுங்கமைப்பது அடிப்படை முக்கியமாகும். அதாவது, CARSV தொடர்பான தகவல்களை செயற்பாட்டாளர்கள் ஏன் சேகரிக்க வேண்டும், அந்தச் செயன்முறை எத்தகைய பங்களிப்புக்களை வழங்குகின்றது, தற்போதைய புலனாய்வுச் செயன்முறைகளைத் தாக்காமல் இருக்கின்றதா, அத்தகைய தகவல்களை எவ்வாறு சேமிப்பது என்பது தொடர்பான திட்டமிடல்கள், இறுதியில் என்ன, எந்த வரைவுச்சட்டத்தின் அடிப்படையில் இவை நடைபெறுகின்றது என்பன போன்றன.

CARSV ஆவணப்படுத்தல் திட்டமிடலின் ஓர் அங்கமாக இத்தகைய சகல அம்சங்களையும் ஒழுங்கமைக்க முடியும். இக்கேள்விகளுக்கு பதிலளிக்கும் பொழுது **– ஏன்** தகவல்களைத் திரட்டுதல் வேண்டும்: அத்தகைய தகவல்களை **எவ்வாறு** திரட்டுவது: இறுதி என்ன: **எத்தகைய** வரைவுச் சட்டகத்தின் பிரகாரம் - இத்தகைய பதில்களைத் திட்டமொன்றில் உள்ளடக்குவதற்கு விரிவான ஆய்வு, மதிப்பீடுகள், தயார் நிலைகள் ஆகியன அவசியப்படுகின்றன.

ஆவணப்படுத்தலின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்படும் முறையான திட்டமிடலானது செயற்பாட்டாளர்களுக்கு பின்வருவன தொடர்பில் உதவும்:

- தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவசியமான சம்பந்தப்பட்ட மற்றும் பொருத்தமான சான்றுகளைத் திரட்டுதல்.
- தேவையற்ற இடர்களைத் தவிர்த்தல்
- பொருட்கள் மற்றும் தங்குமிட வசதிகள் உள்ளடங்கலாக நிதி ரீதியாக தயார் நிலையிலிருந்தல்.
- சேகரிக்கப்பட்ட சான்றுகளை வைத்து என்ன செய்யப் போகின்றோம் என்பதை அறிந்திருத்தல்.
- போதியளவு ஆற்றுப்படுத்தல் தெரிவுகளை நடைமுறைப்படுத்தல்.

**பெட்டி 1**

### சரியிணை நண்பர்கள் இணை நிலையினர் அனுபவம்— ஏன் திட்டமிட வேண்டும்?

*நயாணி, பெண்கள் உரிமைகள் குழு அமைப்பாளர்: 'பெண்களுக்கென பாதுகாப்பு இல்ல நிகழ்ச்சித்திட்டமொன்றை எமது அமைப்பு நடத்தி வருகின்றது. வன்முறையினால் பாதிக்கப்பட்டு தப்பித்து வந்த பெண்கள், திருமண துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட பெண்கள் மற்றும் அவர்களது பிள்ளைகள் ஆகியோருக்கு ஆரம்பத்தில் நாம் புகழிடம் அளித்து வந்தோம். இப்பொழுது பல பெண்கள் எங்களுடன் தங்கியிருக்கின்றனர். ஏனெனில், இவர்கள் மோதல்களின் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள். அவர்களின் குடும்பங்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்குச் செல்வதற்கு வேறு இடம் இல்லை. அவர்கள் முதன்முதலில் தங்களுடைய கதைகளைக் கூற ஆரம்பித்த பொழுது அவர்களை ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் ஆற்றுப்படுத்தினோம். அதன் பின்னர் அவர்கள் சில தகவல்களைத் தெரிவித்தனர். அச்சமயத்தில் அவர்கள் எம்மிடம் ஒரு கேள்வியைக் கேட்டனர். அதாவது அவர்களுக்கு இந்த அனர்த்தத்தை இழைத்த ஆண்களைக் கண்டுபிடிக்க முடியுமா எனக் கேட்டனர். அதன் மூலம் மற்றவர்களுக்கும் இத்தகைய துன்பங்கள் இழைக்கப்படுவதைத் தவிர்க்க முடியுமெனக் குறிப்பிட்டனர். அல்லது சர்வதேச சமூகத்திற்குப் பரந்தளவில் இவர்களது கதைகளைக் கூற முடியுமா எனக் கேட்டனர்.*

*அவர்களது சான்றுகளை மிகவும் காத்திரமான முறையில் நாம் தொகுத்தோம். அதன் பின்னர் அவர்களது தகவல்களை X என்ற சர்வதேச மனித உரிமைகள் கருவியிடம் சமர்ப்பித்தோம். அச்சந்தர்ப்பத்தில் எங்களிடம் சரியான விடயங்கள் இருக்கவில்லையெனக் குறிப்பிடப்பட்டது. நாம் சரியான கேள்விகளைக் கேட்கவில்லையெனத் தெரிவித்தனர். பெண்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும் அவர்களுக்கு அவசியமான உதவிச் செயன்முறைகளை மேற்கொள்வதற்கும் வேறு என்ன விடயங்களை நாம் செய்திருக்க வேண்டுமென்பதை அறிந்திருக்கவில்லை. இப்பொழுது நாம் சிறப்பாக தயாராக இருக்கின்றோம். எங்களிடம் சிறப்பான முறையியல் ஒன்று காணப்படுகிறது. நாம் மற்றவர்களுக்கு உதவ முடியும். சிறிய அமைப்புகள் தமது சொந்த செயற்பாடுகளைத் திட்டமிடுகின்றன'*

**CARSV ஐ ஆவணப்படுத்துவதற்கான முழுமையான திட்டமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள திட்டமிடல் தொடர்பான கேள்விகளுக்கு இயலுமானவரை முழுமையாக பதில் அளித்தல் வேண்டும்.**

ஆவணப்படுத்தல் செயன்முறை முழுவதும் திட்டங்கள் எந்தளவிற்கு மாறிய பொழுதிலும் கூட தகவல் சேகரிப்புச் செயன்முறைக்கு முன்னர் செயற்பாட்டாளர்களினால் கீழ்க்குறிப்பிட்டுள்ள சலக கேள்விகளுக்கும் பதிலளிக்க முடியாத சூழ்நிலை ஏற்படலாம்.

CARSV ஆவணப்படுத்தல் திட்டமானது ஒரு இயங்காற்றல் மிக்க ஆவணமாகும். இதனை மீள் பார்வைக்கு உட்படுத்த வேண்டிய அவசியமுள்ளது. அத்தோடு, நிலைமைகளுக்கு ஏற்ற சீராக்கல்களையும் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பேட்டியின் பின்னரும் சேகரிக்கப்பட்ட தகவல்களைக் கருத்திற்கொண்டு, காணப்படுகின்ற குறைபாடுகளை இனங்கண்டு வாய்ப்புள்ள புதிய விசாரணைகளை மேற்கொள்ளலாம் (பார்க்க, அத்தியாயம் 11: பேட்டி காணல், பிரிவு ஆ: பேட்டிக்கான வரைவுச்சட்டகம் 5 மதிப்பீடு)

கேள்விகளுக்குத் தொடராக இலக்கங்கள் வழங்கப்பட்ட பொழுதிலும் கூட பல்வேறு கேள்விகளுக்கான பதில்களை ஒன்றிலிருந்து மற்றொன்றைத் தனிமைப்படுத்தி அல்லது அன்னியப்படுத்திப் பார்க்க முடியாது. குறிப்பிட்ட செயல் ஒன்று ஆவணத்தின் எந்தக் கேள்வியின் கீழ் இடம்பெற வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதானது பெரும்பாலும் ஒட்டுமொத்தப் பொறுப்புக் கூறலின் அடிப்படையில் தங்கியுள்ளது. மற்றும் ஒரு நிறுவனத்தினால் பிரயோகிக்கக் கூடிய ஆற்றல்கள், திறன்கள், அதனோடு தொடர்புடைய இடர்கள், ஏனையவற்றிலிருந்து சம்பந்தப்பட்ட சாட்சிகளை இனங்காண்பதற்கான ஆற்றல் ஆகியவற்றில் தங்கியுள்ளது.

## B. மோதல் மற்றும் கொடுமை தொடர்பான பாலியல் வன்முறைகளை (CARSV) ஆவணப்படுத்தல் திட்டம்

**CARSV ஆவணப்படுத்தல் திட்டமானது 3 பிரதான அம்சங்களைக் கொண்டுள்ளது.**

**A. ஆய்விற்கும் மதிப்பீட்டிற்கும் உள்ளாக்கப்பட வேண்டிய அடிப்படை விடயங்கள்**

1. உங்களது ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகள் மூலமாக நீங்கள் எதனைக் கண்டறிந்தீர்கள்?
2. உங்களுடைய நோக்கம் என்ன?
3. எத்தகைய விடயங்களை நீங்கள் புலனாய்வு செய்து வருகின்றீர்கள்?
4. உங்களது விசாரணையின் செயற்பாட்டெல்லை என்ன?
5. இடர்கள் எவை?
6. எத்தகைய வளங்கள் உங்களுக்கு அவசியப்படுகின்றன, அவற்றுக்கான செலவுகள் என்ன?

**B. தகவல் சேகரிப்பு உபாயமுறை**

7. உங்களது தகவல் சேகரிப்பு உபாய முறை எத்தகையது?
   a. எத்தகைய CARSV தகவல்கள் அவசியம்?
   b. உங்களது தகவல் குறைபாடுகள் எவை?
   c. எங்கிருந்து CARSV தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வீர்கள்?
   d. CARSV தகவல்களை எவ்வாறு சேகரிப்பீர்கள்?
   e. தகவல்களை எவ்வாறு களஞ்சியப்படுத்தி அல்லது சேமித்து அவற்றைக் கொண்டுசெல்வீர்கள்?
   f. தகவல்களை எவ்வாறு ஒழுங்கமைப்பீர்கள்?

**C. நடைமுறைப்படுத்த வேண்டிய செயன்முறைகள்**

8. அறிக்கையிடல் தொடர்பான ஏற்பாடுகள் எவை?
9. செயன்முறைகளை எவ்வாறு மீளாய்வு செய்வீர்கள்?
10. உங்களது நன்னடத்தைக் கோட்பாடு என்ன?
11. உங்களது தராதரம் மிக்க செயற்பாட்டு நடைமுறைகள் என்ன?
12. சுய-பராமரிப்பினை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

## 1. ஆரம்பக் கட்ட ஆராய்ச்சிகள் மற்றும் பகுப்பாய்வுகள்

**உங்களது ஆரம்பக் கட்ட ஆராய்ச்சிகள் மற்றும் பகுப்பாய்வுகளின் பொழுது நீங்கள் எதனைக் கண்டறிந்தீர்கள்? முதல் படிமுறையாக செயற்பாட்டாளர்கள் தாம் நாடுகின்ற தகவல்களை ஏற்கனவே வேறு செயற்பாட்டாளர்கள் அல்லது அமைப்புகளினால் சேகரிக்கப்பட்டுள்ளனவா, அத்தகைய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமா, மற்றும் பேட்டி காணல் உள்ளடங்கலாக அவற்றை மீள் ஆவணப்படுத்துவது அவசியம் தானா என்பதை மதிப்பீடு செய்தல் வேண்டும்.**

மேலதிக ஆவணப்படுத்தல் அவசியப்படும் பட்சத்தில் அதனோடு தொடர்புடைய பல்வேறு விதமான பிரச்சினைகளை முழுமையாக மதிப்பீடு செய்வதுடன், ஆவணப்படுத்தல் செயன்முறையை ஆரம்பிப்பதற்கு முன்னர் செயற்பாட்டாளர்கள் ஆய்வினையும் மேற்கொள்ளல் வேண்டும். ஆவணப்படுத்தல் திட்டத்திற்கான அடிப்படையாக இத்தகைய தகவல்கள் திகழ முடியுமா, பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் எந்தவிதத்திலும் சமூக சூழமைவுகளில் வலுவற்றவர்களாக மாற்றப்படவில்லையென்பதை உறுதிசெய்துகொள்ளல் வேண்டும். அத்தோடு ஆவர்களினால் நீதியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதுடன், அவர்களது பாதுகாப்புத் தொடர்பிலான எத்தகைய அச்சுறுத்தலோ அல்லது பேரம்பேசுதலோ இருத்தல் கூடாது.

செயற்பாட்டாளர்கள் தமது விசாரணைகளை ஆரம்பிக்கின்ற பொழுது குறிப்பாக பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய விடயங்களை ஆவணப்படுத்துகின்ற சந்தர்ப்பங்களில் கருத்திற்கொள்ள வேண்டிய சில முக்கிய விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

பகிரங்க மூலங்களையுடைய அறிக்கைகள், ஆவணங்கள், இணையத்தளங்கள் ஆகியவற்றில் சில தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். சில தகவல்கள் தொடர்பில் விரிவான ஆய்வுகள் அவசியப்படுவதுடன், ஐ.நா. மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகள், தேசிய மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் மற்றும் அடிமட்ட அமைப்புகள், சிந்தனையாளர் குழாம் ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். ஏனைய தகவல்கள் தமது சொந்த தேசிய சூழமைவுகளில் பணியாற்றுகின்ற செயற்பாட்டாளர்கள் நேரடியாகவும் தமது பிரதேசத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

பெட்டி 2

## ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகள் தொடர்பான வழிகாட்டல் கேள்விகள்

**குறிப்பிட்ட குற்றங்கள் தொடர்பான ஆரம்பக் கட்ட ஆய்வுகள்**

» பிரதேசத்தின் பால்நிலை இயங்காற்றல் எத்தகையது. இதில் பால்நிலை வெளிப்பாடுகள் மற்றும் பால் நாட்டம் ஆகியன உள்ளடங்குகின்றன. மீறல்கள் இடம்பெறுகின்ற உள்ளூர் மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் இவை எவ்வாறு காணப்படுகின்றன. பால்நிலை வகிபாகங்கள் தொடர்பில் சமூகத்தில் காணப்படுகின்ற பாரம்பரிய மற்றும் கலாசார ரீதியிலான நம்பிக்கைகள் எவை, பாதிக்கப்பட்டவர்கள் பாலியல் வன்முறை தொடர்பான குற்றங்கள் தொடர்பில் அறிக்கையிடுவதற்கான ஆற்றல்களையும் நீதியைப் பெற்றுக்கொள்ளும் தன்மையையும் எவ்வாறு இது பாதிக்கின்றது?

» இடம்பெறுவதாக சார்த்துரைக்கப்படுகின்ற அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள், பயங்கரவாதங்கள் உள்ளடங்கலாக பாலியல் வன்முறை தொடர்பான செயல்களின் தன்மையும் நோக்கெல்லையும் எத்தகையது? இத்தகைய குற்றவியல் செயல்கள் எந்த வடிவத்தில் இடம்பெறுகின்றன? தாக்குதலின் ஒட்டுமொத்த தன்மைகளுடன் இவை எவ்வாறு பொருந்துகின்றன?

» எவை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன? யாரிடம் அறிக்கையிடப்பட்டுள்ளன? எங்கே தனிப்பட்டவர்கள் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளனர்?

» மாறுபட்ட பாலியல் வன்முறை வடிவங்கள் தொடர்பில் சமூகத்தின் புரிதல்கள், மனப்பாங்குகள் இவற்றுள் பிள்ளைகள், அங்கவீனர்கள், இன ரீதியான சிறுபாண்மையினர், சுதேச மக்கள் அல்லது LGBTI சமூகம் ஆகியவற்றுக்கு எதிரானவை அடங்களாக எவ்வாறு காணப்படுகின்றன? இதன் பின்விளைவுகள் என்ன? பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் தொடர்பில் ஏதாவது உள்ளனவா? தமது சமூக உறுப்பினர் ஒருவருக்கு எதிராக பாலியல் குற்றம் இழைக்கப்பட்டுள்ளதாக சமூகத்திற்கு அறிவிக்கப்படும் பட்சத்தில் அந்தச் சமூகம் அல்லது குடும்பம் எவ்வகையான பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்துகின்றன? பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியின் வயது அல்லது பால்நிலைக்கு ஏற்ப அதன் தாக்கம் மாறுபடுகின்றதா?

» எத்தகைய பாதுகாப்பு நிலைமைகள் உள்ளன? பாதிக்கப்பட்டவர்கள் பொறுப்புக் கூறல் பொறிமுறைகளை அணுகிப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்ற பொழுது எதிர்கொள்ளக் கூடிய தடைகள் எவை?

» மாறுபட்ட பாலியல் வன்முறைகள் எவ்வாறு குற்றச் செயல்களாக்கப்படுகின்றன? பாலியல் வன்முறை தொடர்பான குற்றங்களை நிரூபிப்பதற்கு எத்தகைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் அவசியப்படுகின்றன? சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற வாய்ப்பினை தேசிய சட்ட முறை வழங்குகின்றதா? ஆமெனில், நடைமுறையில் இதனைப் பிரயோகிக்க முடியுமா? விதிகள் தொடர்பான நடைமுறைகள் மற்றும் சான்றுகள் ஆகியன பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுகின்றதா? அல்லது தடையாக அமைகிறதா? உதாரணமாக - ஆண், பெண் இரு பாலாரது சான்றுகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படுகின்றதா? பிள்ளைகள் தொடர்பில் விசேட சட்ட ஏற்பாடுகள் எதுவும் நடைமுறையில் காணப்படுகின்றதா?

» தேசிய மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் எவ்வாறு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன? பாலியல் வன்முறை தொடர்பான குற்றங்களை விசாரணை செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கென, சிறுவர்கள் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விசேட நிபுணத்துவம் உடைய பொலிஸ் உள்ளிட்ட விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட பொலிசார் இருக்கின்றனரா?

» சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோர் தொடர்பில் முறை சார்ந்த மற்றும் முறை சாராத முறையில் எத்தகைய மாறுபட்ட நீதி முறைகள் காணப்படுகின்றன? இந்த நீதி முறைகளின் பலங்கள், பலவீனங்கள் யாவை? முறை சாரா பொறிமுறைகள் நாட்டில் பால்நிலை சமத்துவமின்மைகள் தொடர்பான விடயங்களை பிரதிபலிக்கின்றதா அல்லது அதனை மேலும் அதிகரிக்கச் செய்கின்றதா? முறை சாரா நீதிப் பொறிமுறைகளில் ஆண், பெண் இரு பாலாரும் சமத்துவமாக நடத்தப்படுகின்றனரா? மரபு ரீதியான முறைகளைப் பின்பற்றாமல் ஆனால், அரசாங்கத்துடன் தொடர்புடைய பொறிமுறைகளைப் பின்பற்றுவதற்கு தெரிவுசெய்த பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகள் எதிர்கொள்ளக் கூடிய பின் விளைவுகள் என்ன (காணப்படின்)? இவர்கள் இந்த இரண்டினையும் அணுகிப் பெற்றுக்கொள்ள முடியுமா? இந்த இரண்டு முறைகளையும் சிறுவர்கள் பெற்றுக்கொள்ள முடியுமா?

*ஆய்வுகளை மேற்கொள்வதற்கான பயன்மிக்க கருவியாக பால்நிலை நீதி மற்றும் பால்நிலைச் சமத்துவ மரபுகள் குறிகாட்டிச் சோதனைப் பட்டியல் ஆகும். பால்நிலை நடைமுறை வெளியீடாகும்: ஆயத மோதல்லின் பொழுது பால்நிலை அடிப்படையிலான குற்றங்கள் தொடர்பில் செயற்படுவதற்கான முறைகள் மற்றும் வழிகாட்டிகள். பக்கம் 9 -14 (இதனை http://www. iccwomen.org/whatwedo/training/docs/Gender_Training_Handbook.pdf) இல் பெற்றுக்கொள்ளலாம்.)*

பெட்டி 2

## ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகள் தொடர்பான வழிகாட்டல் கேள்விகள்

### சூழமைவுகள் தொடர்பான ஆரம்பக் கட்ட ஆய்வுகள்

» அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் என்ன? மோதல் அல்லது குரோதங்கள் தொடர்பான வரலாறு என்ன? இன, சமய அல்லது இன ரீதியான அடக்குமுறைகள் தொடர்பான வரலாறுகள் இங்கு காணப்படுகின்றனவா? பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட அட்டூழியங்களுக்கான வரலாறு உள்ளதா (உதாரணமாக – பால்நிலையின் அடிப்படையில் அடிப்படை உரிமைகள் கடுமையாக தடுக்கப்பட்டுள்ளனவா)?

» யார் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளனர்? குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவர்கள் இலக்காக்க கொள்ளப்பட்டுள்ளனரா? விசேடமாக சிறுவர்கள் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளனரா? அத்தகைய குழுக்கள் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பதை எவ்வாறு அறிந்துகொண்டீர்கள்? அவர்களை யார் இலக்காகக் கொண்டனர்? இவர்கள் ஆண்களால் அல்லது பையன்களால், பெண்களால் அல்லது பெண் பிள்ளைகளால் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளனரா?

» இத்தகைய தாக்குதலின் ஓர் அங்கமாக ஏனைய குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமைக்கான ஏதாவது பதிவுகள் அல்லது சான்றுகள் காணப்படுகின்றனவா? வீடுகளைச் சுற்றி வளைத்தமை, கைதுசெய்யப்பட்டமை, பொதுமக்களைத் தடுப்புக்காவலில் வைத்தமை, கிராமங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் அல்லது சோதனைச் சாவடிகளில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், பாலியல் ரீதியாக அல்லது பாலியல் சாராத வகையில் சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான அறிக்கைகள் போன்றன தொடர்பில் அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் உள்ளனவா? இத்தகைய குற்றங்களின் தன்மை எத்தகையதாகக் காணப்படுகின்றன?

### சார்த்துரைக்கப்பட்ட குற்றமிழைத்தவர்கள் தொடர்பான ஆரம்பக்கட்ட ஆய்வு

» அரசியல், இராணுவ, பாதுகாப்பு உட்கட்டமைப்பு வசதிகள் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன? ஆயுதக் குழுக்களா அல்லது ஏனைய விதமான குழுக்களா அங்கு செயற்படுகின்றன? பிரதேச மக்களுடன் அவர்களது உறவுகள் எவ்வாறு காணப்படுகின்றன?

» ஆயுதக் குழுக்கள் எங்கிருந்து வருகின்றன? அவர்களுக்கிடையிலான தொடர்புகள் என்ன? இக்குழுக்களானது ஆண், பெண் இரு பாலாரையும் கொண்டுள்ளதா? இக்குழுக்களானது பையன்கள் மற்றும் பெண் பிள்ளைகளைக் கொண்டுள்ளதா? இக்குழுக்களின் மாறுபட்ட வகிபாகங்கள் என்ன?

» ஆவணப்படுத்தல் செயன்முறை நடைபெறுகின்ற இடத்தில் சார்த்துரைக்கப்பட்ட குற்றவாளிக் குழுக்கள் மற்றும் அவ்விடத்தில் பிரசன்னமாகியுள்ள ஆயுதப்படைகள் (ஏதாவது காணப்படின்) ஆகியவற்றுக்கிடையில் எத்தகைய தொடர்புகள் அல்லது கூட்டணிகள் காணப்படுகின்றன? ஆவணப்படுத்தல் செயன்முறை நடைபெறுகின்ற சந்தர்ப்பங்களில் குற்றமிழைத்தவர்கள் அல்லது அவர்களது கூட்டாளிகள் யாருக்காவது பாதிக்கப்பட்ட சமூகத்துடன் ஏதாவது தொடர்புகள் அல்லது செல்வாக்குகள் காணப்படுகின்றனவா?

### காணப்படுகின்ற மற்றும் அணுகிப் பெற்றுக்கொள்ளக் கூடிய சேவைகள் தொடர்பிலான ஆரம்பக்கட்ட ஆய்வு

» பாதிக்கப்பட்டவர்களுக்கு அல்லது பழியானவர்களுக்கு பொதுவாக எத்தகைய மருத்துவ, சமூக, உளவியல் உதவிகள் அவசியப்படுகின்றன?

» எத்தகைய மருத்துவ அல்லது சமூக, உளவியல் சேவைகளைப் பாதிக்கப்பட்டவர்கள் பெற்றுக்கொண்டனர்?

» பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளுக்கு எத்தகைய சுகாதார ரீதியான, சமூக, உளவியல் சார்ந்த, சட்டம் மற்றும் பொருளாதார ரீதியான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான தெரிவுகள் காணப்படுகின்றன? எத்தகைய மட்டுப்படுத்தல் சேவைகள் அல்லது உதவிகளை வழங்கக் கூடிய சேவைகள் நடைமுறையிலுள்ளன? இவை பாதுகாப்பாகவும் கவனமாகச் செயற்படக்கூடியவையாகவும் பயனுறுதி மிக்கவையாகவும் இருக்கின்றனவா?

» இத்தகைய சேவைகளை உள்ளூர், பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் யார் வழங்குகிறார்கள்?

» இத்தகைய சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அல்லது சாட்சிகளுக்கு ஏதாவது தடைகள் காணப்படுகின்றனவா (உதாரணமாக – பாதுகாப்பு ரீதியான அக்கறைகள், நிதி ரீதியான பிரச்சினைகள், பாரபட்ச ரீதியான மனப்பாங்குகள் அல்லது கொள்கைகள்)?

## 2. நோக்கங்கள்

உங்களது நோக்கங்கள் என்ன? ஆரம்பத்திலேயே பொறுப்புக் கூறல் தொடர்பான நோக்கங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது முக்கியமானதாகும். செயற்படுத்துனர்கள் **(i) CARSV தொடர்பான ஆவணப்படுத்தல்களை ஏன் மேற்கொள்கின்றனர்** - எதிர்கால பொறுப்புக் கூறல் பொறிமுறைகளுக்காக இவற்றைப் பாதுகாப்பதா அவர்களது நோக்கம், அல்லது மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் எடுத்துரைப்பதா அல்லது சர்வதேச குற்றவியல் புலனாய்வுகளுக்கு உதவி செய்வதா, அல்லது ஏனையவையா என்பதை தாபித்தல் வேண்டும்.

இவர்களது நோக்கம் நீதி சார்ந்த பொறிமுறைகள் எனில், இவர்களை மீண்டும் பேட்டிகாண்பது தவிர்க்க முடியாத விடமாகிவிடும். இருப்பினும் இவர்களுக்கான ஆணை பரிந்துரைத்தல் எனில், இதற்கான அவசியம் இல்லை (பார்க்க, அத்தியாயம் 7: தீங்கிழைக்க வேண்டாம், பகுதி இ 2. ஒருங்கிணைப்பு)

செயற்படுத்துனர்கள் பின்வருவன தொடர்பிலும் கவனமாக பரிசீலித்தல் வேண்டும் **(ii)** தமது ஆவணப்படுத்தல் செயன்முறை மூலமாக **எத்தகைய விளைவுகளை** அவர்கள் எதிர்பார்க்கின்றனர் - அந்த விளைவுகளின் இறுதி பெறுபேறு தண்டனை அளித்தலா அல்லது நிதி திரட்டுதல் செயற்பாடுகளை அதிகரித்தலா அல்லது குறிப்பிட்ட நாட்டின் மீது சர்வதேச அழுத்தங்களைப் பிரயோகிப்பதா என்பதை தீர்மானித்தல் வேண்டும். உதாரணமாக - இத்தகைய விடயங்களைத் தீர்மானிப்பதன் காரணமாக அவை பின்வருவன பற்றி தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இட்டுச்செல்லும். **(iii) எத்தகைய பொறுப்புக் கூறல் பொறிமுறைகளைத்** தொடர்வது. **(iv) குறிப்பிட்ட பொறிமுறை தொடர்பில் எத்தகைய தேவைப்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்,** அதற்கான தேவைகளும் அவற்றை மேற்கொள்வதற்கான **(v) ஆற்றல்கள் மற்றும் திறன்கள் உங்களிடம் காணப்படுகின்றனவா** என்பன போன்றன.

இத்தகைய கேள்விகளுக்கு பதிலளிப்பதன் காரணமாக செயற்பாட்டாளர்கள் **(vi) தகவல்களைச் சேகரிப்பது தொடர்பிலான ஒட்டுமொத்தச் சட்ட ரீதியான வரைவுச் சட்டகத்தை** CARSV தொடர்பில் தாபித்தல், அதாவது தனிப்பட்ட குற்றவியல் பொறுப்புகள் தொடர்பான விடயங்களைத் தாபிப்பதை நோக்காகக் கொண்டதா, அரச பொறுப்பு அல்லது உள்ளூர் மட்டத்தில் ஏனைய நோக்கங்கள், பிராந்திய அல்லது சர்வதேச மட்டங்களிலான ஏனைய நோக்கங்கள், சான்றுகள் தொடர்பான சம்பந்தப்பட்ட விதிகள்: நிரூபிப்பது தொடர்பில் பிரயோகிக்கக் கூடிய தராதரங்கள் (பார்க்க, அத்தியாயம் 3: பொறுப்புக்கூறல் இடங்கள் தொடர்பான மேலோட்டப் பார்வை). தகவல்களைச் சேகரிக்கின்ற செயற்பாட்டாளர்கள் எதிர்கால பொறுப்புக்கூறல் நோக்கங்களுக்காக அவற்றைப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர் என்பது உண்மை. இவற்றுள் குற்றவியல் சார் தண்டனையளித்தலும் உள்ளடங்கும்.

## 3. சம்பந்தப்பட்ட செயல்கள்

**எத்தகைய சம்பந்தப்பட்ட செயல்கள் தொடர்பிலான ஆவணப்படுத்தல்களை நீங்கள் மேற்கொள்கின்றீர்கள்?** CARSV ஆவணப்படுத்தலின் பொழுது எத்தகைய சட்ட ரீதியான வரைவுச்சட்டகத்தில் தங்கியிருத்தல் வேண்டுமென்பதைத் தீர்மானித்ததன் பின்னர் அத்தகைய வரைவுச்சட்டகத்தின் கீழ் எத்தகைய செயல்களை ஆவணப்படுத்துவதற்கான நிலையில் செயற்பாட்டாளர்கள் உள்ளனர் என்பதை தீர்மானிக்க முடியும். அவற்றுள் உள்ளடங்கப்பட்டுள்ள ஏனைய அம்சங்கள் என்ன என்பதையும் தீர்மானிக்க முடியும். இவற்றைத் தீர்மானிப்பதன் பொருட்டு செயற்பாட்டாளர்கள் பின்வரும் கேள்விகளைக் கேட்க வேண்டும்.

- எவை அறிவிக்கப்பட்டுள்ள?
- சார்த்துரைக்கப்பட்ட எத்தகைய குற்றங்கள் இழைக்கப்பட்டன?
- சம்பந்தப்பட்ட சட்ட ரீதியான வரைவுச்சட்டகத்தின் பிரகாரம் அத்தகைய குற்றங்கள் தொடர்பான அம்சங்கள் என்ன?
- எதனை நீங்கள் நிரூபித்தல் வேண்டும்?
- இதனை மேற்கொள்வதற்காக எத்தகைய ஆற்றல்கள், ஆணைகள் அல்லது நிபுணத்துவங்கள் உங்களிடம் காணப்படுகின்றன? *(உதாரணமாக – குறிப்பிட்ட குற்றம் சுமத்தப்பட்டவருக்கு எதிராக பாலியல் வன்புணர்வு, பாலியல் அடிமைத்தனம் போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கும் பட்சத்தில் அத்தகைய குற்றச்சாட்டுக்களில் எத்தகைய அம்சங்களை ஆவணப்படுத்துவதற்கான நிலையில் நீங்கள் உள்ளீர்கள்)?*

**பெட்டி 3**

**சரியிணை நண்பர்கள் அனுபவம் - மீறல்கள் என்றால் என்ன?**

*நசீம், மனித உரிமைகள் புலனாய்வாளர்: "எமது நிகழ்ச்சித்திட்டத்தின் பொழுது சான்றுகளை வழங்கிய இளம் பெண் ஒருவர், அப்பெண்ணுக்கும் அவளது குடும்பத்தினருக்கும் ஏனைய பாதிக்கப்பட்டவர்களுக்கும் இழைக்கப்பட்ட வன்முறைகள் மற்றும் மீறல்கள் தொடர்பில் எடுத்துக் கூறினாள். அவளது சகோதரர்கள் மற்றும் அவளது தந்தை ஆகியோர் கொலை செய்யப்பட்டதை அவள் கண்டுள்ளாள். அதற்கு முன்னர் அவள் பல இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு அவளால் எந்தளவிற்கு தாக்குப்பிடிக்க முடியும் என்பதை அறிந்துகொள்வதற்காக தொடர்ச்சியாக பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றாள். அவளது நினைவுகளை மீட்டுப்பார்க்கையில் இறுதியாக ஓர் இடத்தில் வைத்து அவளை விற்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியில் சண்டையிடுகின்ற நபர் ஒருவருக்கு பரிசாக அவள் வழங்கப்பட்டாள். தடுத்து வைத்திருந்த இடத்திலிருந்து 6 மாதங்களின் பின்னர் தப்பித்துச் செல்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. இவர் கைதுசெய்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதி முதல் மற்றொருவருக்கு மனைவியாக வழங்கப்பட்ட காலப்பகுதி வரை தடுப்புக் காவலிலிருந்து ஏனைய பலர் கொலைசெய்யப்பட்டதை நேரில் கண்டுள்ளாள். வன்முறகைளுடன் கூடிய பாலியல் வன்புணர்வுகளின் காரணமாக சிலர் இறந்துள்ளனர். ஏனெனில் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு உரிய மருத்துவ வசதிகள் அளிக்கப்படவில்லை. சிலர் தற்கொலை செய்துகொண்டுமுள்ளனர்.*

*இவளுக்கு ஏற்பட்டதைப் போல் பல விடயங்கள் அங்கே நிகழ்ந்துள்ளன. அங்கு என்ன நடந்திருக்கலாம் என்பதை நாம் மதிப்பீடு செய்த பொழுது, எங்களது புலனாய்வுகளை ஒழுங்கமைக்கப்பட்ட பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் தாக்கங்கள் மற்றும் பாலியல் அடிமைத்தனம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. அத்தோடு, கொலை, சித்திரவதை, வலுக்கட்டாயப்படுத்தப்பட்ட திருமணம் ஆகியன தொடர்பிலான சான்றுகளையும் சேகரிக்க முடிந்தது"*

## 4. நோக்கம்

**உங்களது விசாரணையின் நோக்கம் என்ன?** புவியியல் ரீதியாகவிருக்கலாம் அல்லது தற்காலிகமாக இருக்கலாம், CARSV ஆவணப்படுத்தலின் நோக்கத்தை தீர்மானிப்பது திட்டமிடல் செயன்முறையின் முக்கிய அம்சமாகும். செயற்பாட்டாளர்கள் தமது முயற்சிகளை எந்த விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்போகின்றார்கள், எவ்வளவு நேரம் அதற்கு ஒதுக்கப்போகிறார்கள் என்பதை முன்கூட்டியே தீர்மானித்துக்கொள்ளல் வேண்டும். பாலியல் வன்முறை தொடர்பான வரலாற்று ரீதியான குற்றச்சாட்டுக்களை ஆவணப்படுத்துகையில் குறிப்பிட்ட கால வரையறை ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது முக்கியமானதாகும்.

» தமது விசாரணைகளுக்கான நோக்கங்களை நிர்ணயம் செய்கின்ற பொழுது அத்தகைய தீர்மானமானது தமது வளங்கள் மற்றும் ஆணை மீது ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் பற்றி செயற்பாட்டாளர்கள் பரிசீலித்தல் வேண்டும். பல்வேறு வகையான குற்றச்சாட்டுகள், தொடர்ச்சியான விசாரணைகள் மற்றும் குறிப்பிட்ட இடத்திலிருந்து தொலைதூரத்தில் அமைப்புகள் இருக்கின்ற பொழுது குறிப்பிட்ட பிராந்தியத்தில் நீண்டகாலம் வேலை செய்வதில் பல சிரமங்கள் ஏற்படலாம். அல்லது தமது செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குப் போதியளவு நிதிகளைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகள் ஏற்படலாம் அத்தகைய சந்தர்ப்பங்களில் பல்வேறுவிதமான குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய சிக்கல் மிக்க ஆவணப்படுத்தல் செயன்முறையில் ஈடுபடுவதானது யதார்த்தபூர்வமற்றதாகவும் நெறிமுறை சாராததாகவும் இருக்கலாம்.

» பாரியளவிலான குற்றச்செயல்களைப் பொறுத்தவரையில் குறிப்பாக இது முக்கியத்துவம் மிக்கதாகும். இயலுமானவரை அதிகளவிலான மக்களைப் பேட்டி காண்பதன் மூலம் பாரியளவிலான வன்முறைகளை அல்லது மீறல்களைத் தாபிக்க முடியுமென செயற்பாட்டாளர்கள் சிந்திக்கலாம். இருப்பினும் பல விடயங்களை நோக்குகையில் சிறியளவில் பாதிக்கப்பட்டவர்களை பேட்டிகண்டு அத்தகைய சான்றுகளிலும் சான்றாதாரங்களிலும் இருந்து சம்பந்தப்பட்ட விடயங்களை தாபிக்க முயற்சிப்பதும் சிறப்பானதென பல விடயங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. செயற்பாட்டாளர்களது ஆற்றல், நிதி, மனித மற்றும் தொழில்நுட்ப வளங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இவ்வாறு செயற்படுவது சிறப்பானதாகும்.

## 5. இடர்கள்

**எத்தகைய இடர்கள் காணப்படுகின்றன?** ஆவணப்படுத்தல் செயன்முறைகளின் திட்டமிடல் படிமுறைகளின் பொழுது அச்சுறுத்தல் மற்றும் இடர் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். செயன்முறை முழுவதும் இதனை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய மதிப்பீடுகளின் பெறுபேறுகள், இனங்காணப்பட்ட இடர்கள், அவற்றைத் தணிப்பதற்கு அல்லது பதிலளிப்பதற்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் CARSV ஆவணப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

» திட்டமிடல் கட்டத்தின் பொழுது அச்சுறுத்தல்கள் அச்சுறுத்தல்கள் மற்றும் இடர்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்கின்ற பொழுது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு ஏற்படக்கூடிய இடர்களை மாத்திரமல்ல, தகவல்கள் மற்றும் தமக்கு ஏற்படக்கூடிய இடர்கள் பற்றியும் செயற்பாட்டாளர்கள் பரிசீலித்தல் வேண்டும் (பார்க்க, அத்தியாயம் 8: பாதுகாப்பு மற்றும் பத்திரம்)

*(அச்சுறுத்தல் மற்றும் இடர் மதிப்பீடுகளை மேற்கொள்வது தொடர்பிலான விரிவான வழிகாட்டல் தீங்கிணைக்க வேண்டாம் எனும் 7ஆம் அத்தியாயம் மற்றும் பிற்சேர்க்கை 2 : அச்சுறுத்தல் மற்றும் இடர் மதிப்பீடுகளை மேற்கொள்ளல் ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.*

பெட்டி 4

## இடர்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பான வழிகாட்டல் கேள்விகள்

**ஒட்டுமொத்த இடர்கள்**

» பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், செயற்பாட்டாளர்கள், தகவல்கள் உள்ளடங்கலாக ஆவணப்படுத்தல் செயன்முறைக்கு அச்சுறுத்தல்களை யார் பிரதிநிதித்துவம் செய்யலாம் (தனிப்பட்ட நபர்கள், குழுக்கள் அல்லது அமைப்புகள்)?

**பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய சாட்சிகள் தொடர்பான இடர்களை மதிப்பீடு செய்தல்**

» உங்களது ஆவணப்படுத்தல் செயற்பாடானது பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் அவர்களது சமூகங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பினையும் பத்திரத்தையும் தாக்கக் கூடியதாகவுள்ளதா?

» அருகில் மருத்துவ வசதிகள் காணப்படுகின்றனவா? ஆமெனில் உங்களால் அந்த வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியுமா? நீங்கள் ஊடாட்டத்தில் ஈடுபட்டுள்ள சகல விதமான பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் சாட்சிகளுக்கும் இது சேவைகளை வழங்குகின்றதா அல்லது குறிப்பிட்ட ஒருசிலருக்கு மாத்திரம் வழங்குகின்றதா? அனைவருக்கும் இல்லையெனில், எஞ்சியவர்களுக்கான சேவைகளை அல்லது பராமரிப்புக்களை யார் வழங்குவர்?

» மோதல்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற இடங்களிலா ஆவணப்படுத்தல்கள் நடைபெறுகின்றன, தாக்குபவர்கள் தொடர்ச்சியாக அங்கே இருக்கின்றார்களா, அல்லது அங்கு வாழுகின்ற மக்கள், பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் போன்றவர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுகின்றார்களா அல்லது தாக்குதல்களை எதிர்கொள்கின்றார்களா (கருத்துக்களைக் கூறுவதன் காரணமாக பழிவாங்கப்படுகின்றார்கள் போன்றவை உள்ளடங்கலாக) அல்லது இடம்பெயர்தல்கள் நடைபெறுகின்றனவா? ஆமெனில், இத்தகைய தடைகளை வெற்றிபெறுவதற்கு எத்தகைய உபாய முறைகளை உங்களால் நடைமுறைப்படுத்த முடியும்.

» ஓர் இடம் தொடர்பான தகவல்களை வெளியிடுவதன் காரணமாக அங்குள்ள பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது சாட்சிகள் மேலும் இடர்களை எதிர்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளனவா? அத்தகைய தகவல்களின் காரணமாக இவர்கள் பாதிக்கப்படுவார்கள் எனில், பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் அல்லது வேறு ஏதாவது இடர் மூலங்களைப் பாதுகாக்கும் முகமாக எத்தகைய பொறிமுறைகளை உங்களால் நடைமுறைப்படுத்த முடியும்.

» இத்தகைய குறிப்பிட்ட குற்றம் இடம்பெற்ற இடங்களுக்கு விஜயம் செய்வதன் காரணமாக அந்தத் தகவல்களை வழங்கியவர்கள் மேலதிக அபாயங்களை எதிர்கொள்ள வேண்டியேற்படுமா? ஆமெனில், இத்தகைய இடங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு வேறு வழிமுறைகள் உள்ளனவா? (இடைத்தரகர்கள் மூலமாக)

» பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் போன்றோர் முன்வரும் பட்சத்தில் அவர்கள் குறிப்பாக எதிர்கொள்ளக் கூடிய இடர்கள் என்ன? குற்றம் தொடர்பில் அவர்கள் அறிக்கையிடும் பட்சத்தில் புறக்கணிக்கப்படுவதற்கான அல்லது ஓரங்கட்டப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளனவா? தகாப்புனர்ச்சி மற்றும் தன்பால் சேர்க்கை ஆகியவற்றில் ஈடுபட்டமைக்காக அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளனவா? குறிப்பிட்ட வகையான குற்றங்கள் தொடர்பிலான இடர்கள் மற்றும் தீங்குகள் ஆகியன அடையாளங்காணப்படும் பட்சத்தில், அவை தொடர்பில் செயற்படுவதற்கு எத்தகைய நெறிமுறைகள் காணப்படுகின்றன.

» இடர்கள் தொடர்பான உங்களது சொந்த அறிவு மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் ஆகியோரது அறிவு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டுள்ளீர்களா? செயற்பாட்டாளர்கள் பாதிக்கப்பட்டவர்களை அல்லது சாட்சிகளை ஆலோசித்தல் வேண்டும். ஏனெனில், குறிப்பிட்ட சில நபர்கள், பிரதேச மக்கள் அல்லது சமுதாயம் தொடர்பான இடர்களை அவர்கள் மாத்திரமே அறிந்திருக்கலாம்.

பெட்டி 4

## இடர்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பான வழிகாட்டல் கேள்விகள்

**செயற்பாட்டாளர்கள் எதிர்கொள்ளக்கூடிய இடர்களை மதிப்பீடு செய்தல்**

» உங்களது ஆவணப்படுத்தல் செயன்முறையானது உங்களது பாதுகாப்பினையும் பத்திரத்தையும் அதேபோல் உங்களது அமைப்பு அல்லது குழு ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் பத்திரம் ஆகியவற்றைப் பாதிக்கக் கூடியதாகவுள்ளனவா?

» குறிப்பிட்ட இடத்திற்குச் செல்வது அல்லது அங்கு பிரயாணங்களை மேற்கொள்வதன் காரணமாக இடர்களை எதிர்கொள்ள வேண்டியேற்படுமா?

» குறிப்பிட்ட அந்த இடங்களில் ஆயுதக் குழுக்கள், பயங்கரவாதக் குழுக்கள் அல்லது குற்றமிழைக்கின்ற வலையமைப்புகள் ஆகியன செயற்படுகின்றனவா? அவற்றின் காரணமாக இடர்கள் உள்ளனவா?

» உங்களது குழு இலக்காகக் கொள்ளப்படுவதற்கான இடர்கள் காணப்படுகின்றனவா? குற்றமிழைத்தவர்கள், அவர்களது குடும்பங்கள், அவர்களது ஆதரவாளர்கள் ஆகியோரினால் நீங்கள் அல்லது உங்களது குழுவினர் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான வாய்ப்புகள் அல்லது இடர்கள் உள்ளனவா (குறிப்பாக தேசிய ரீதியான செயற்பாட்டாளர்கள் இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம்)

» ஏதாவது உடலியல் சாராத வேறுவிதமான மேலதிக இடர்கள் தொடர்பில் நீங்கள் சிந்தித்துப் பார்ததுண்டா (குறிப்பாக தேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள்)? உதாரணமாக – தேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்ச்சியாக வேலைசெய்யும் பட்சத்தில் அவர்களது மீள்பதிவுகள் இரத்துச் செய்யப்படலாமென அச்சுறுத்தப்படலாம்.

» நீதித்துறை சார்ந்த தொல்லைகள் மற்றும் தான்தோன்றித்தனமாக தடுப்புக்காவலில் வைத்தல் அல்லது ஏனைய விதமான இடர்கள் அங்கே காணப்படுகின்றனவா?

» மற்றவரது பல்வேறுவகையான மனவடுக்கள் தொடர்பான இடர்களை செயற்பாட்டாளர்கள் எதிர்கொள்ள வேண்டியேற்படுமா?

» குறிப்பிட்ட இடங்களுக்கு நேரடியாக விஜயம் செய்வது பாதுகாப்பானதா?

» குறிப்பிட்ட இடங்களுக்கு விஜயம் செய்வது பாதுகாப்பானதா? அங்கு வெள்ளப்பெருக்கு, மண் சரிவுகள் மற்றும் மோசமான வானிலை போன்ற இடர்கள் காணப்படுகின்றனவா?

» குறிப்பிட்ட இடம் மிகவும் தொலைவிலுள்ளதா? அங்கு செல்வதாயின் இரவு தங்கவேண்டியேற்படுமா? அவ்வாறு தங்கவேண்டியேற்படின் அதற்குரிய வசதிகள் உள்ளனவா?

» வெடி பொருட்கள் அங்கு காணப்படுகின்றனவா? வெடிக்காத வெடிபொருட்கள் வெடிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளனவா?

» எவ்வித சத்தமும் அற்ற கட்டிடங்களுக்கு அருகில் அல்லது கட்டிடத்திற்கு உள்ளே இவ்விடம் காணப்படுகின்றதா?

» நீங்கள் சேகரிக்கின்ற சான்றுகள் அல்லது ஏதாவது தகவல்கள் உங்களிடம் இருப்பது கண்டறியப்படும் பட்சத்தில் எவ்விதமான பாதிப்புக்களை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியேற்படலாம்?

» ஏற்படக் கூடிய ஏதாவது பின்விளைவுகளைச் சமாளிப்பதற்கு ஏற்றவிதத்தில் போதியளவு தயார்நிலையில் உள்ளீர்களா? உதாரணமாக – போதியளவு மேலதிக எரிபொருட்கள், ஏனைய விநியோகங்கள், முதலுதவிகள் மற்றும் தொடர்பாடல் கருவிகள் போன்றன.

» உங்களுடைய குழுவினால் அருகிலுள்ள மருத்துவ வசதி நிலையமொன்றுக்கு விஜயம் செய்ய முடியுமா?

» அவசியம் ஏற்படும் பட்சத்தில் உங்களது வாகனத்திலுள்ள உபகரணங்கள் அல்லது ஏனைய அடையாளங்களை அகற்ற முடியுமா?

**தகவல்களுக்கு ஏற்படக்கூடிய இடர்களை மதிப்பீடு செய்தல்**

» நீங்கள் சேகரிக்கின்ற தகவல்களை இரகசியத்தன்மையுடனும் பாதுகாப்புடனும் சேமித்து வைப்பதற்கான ஆற்றல்கள் உங்களிடம் காணப்படுகின்றதா?

» தகவல்களையும் சான்றுகளையும் பாதுகாப்பான முறையில் கொண்டுசெல்வதற்கான வசதிகள் உங்களிடம் உள்ளனவா?

» நீங்கள் வேலை செய்கின்ற இடங்களில் சோதனைச் சாவடிகள் காணப்படுகின்றனவா? அத்தோடு, தொடர்ச்சியாக தேடல்கள் இடம்பெறுகின்றனவா?

» நீங்கள் சேகரிக்கின்ற தகவல்கள் பற்றியும் அவற்றை எங்கே வைக்கின்றீர்கள் என்பது பற்றியும் எத்தனைபேர் அறிந்துள்ளர்கள்? அவர்களுள் யாரிடமாவது இருந்து நீங்கள் சேகரிக்கின்ற தகவல்களுக்கு ஏதாவது இடர்கள் ஏற்படுமா?

## 6. வளங்கள்

திட்டமிடல் செயன்முறையின் பொழுது ஆவசியமான வளங்கள் தொடர்பிலான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றுக்கான செலவுகளும் குறிப்பிடப்படல் வேண்டும்.

» பணியாளர்களின் தேவைகள் குறிப்பாக உரைபெயர்ப்பாளர்கள், விசாரணையாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் போன்ற மேலதிக பணியாளர்களும் வளங்களும் உள்ளடங்குகிறது. உதாரணமாக, சிறுவர் பாதுகாப்பு விசேட நிபுணர் அல்லது தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் ஆகியோரின் சேவைகளை செயற்படுத்துனர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதா என்பதையும் கருத்திற்கொள்ளவும்.

» வளங்களைத் திட்டமிடுவதானது உங்களுக்கு அவசியப்படுகின்ற உபகரணங்கள், போக்குவரத்து, உட்கட்டமைப்பு வசதிகள், பொருட்கள் ரீதியான தேவைகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருக்கும். அத்தோடு, களஞ்சியசாலை வசதிகள், மேலதிக மென் பொருட்கள் (விடய முகாமைத்துவ முறைமைகள் அல்லது ஏனைய மின்னியல் தரவு மையங்கள்), அவசியமாயின் பயிற்சிகள் போன்றனவும் இவற்றுள் உள்ளடங்கும்.

» வளங்கள் மதிபீடுகளுக்கு மேலதிகமாக செலவு தொடர்பான மதிப்பீடுகளானது போக்குவரத்துச் செலவுகள், தங்குமிட செலவுகள், பொருட்களுக்கான படிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அத்தோடு, பாதிக்கப்பட்டவர், சாட்சிகளுடன் தொடர்புடைய ஏதாவது செலவுகள், அதாவது அவர்களுக்கான போக்குவரத்துச் செலவுகள் அல்லது இரவு நேரத்தில் தங்குவதற்கான செலவுகள் போன்றவற்றையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

## 7. தகவல் சேகரித்தல் உபாயங்கள்

பாரிய CARSV ஆவணப்படுத்தல் திட்டத்தினுள் விசேட **தகவல் சேகரிப்பு உபாயமொன்றை** செயற்படுத்துனர்கள் விருத்திசெய்தல் வேண்டும். ஆவணப்படுத்தப்படுகின்ற குற்றங்கள் அல்லது மீறல்கள் தொடர்பிலான சான்றுகள் தொடர்பான தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எத்தகைய தகவல்கள் அவசியப்படுகின்றன என்பதை **தகவல் சேகரிப்பு உபாய முறை** மூலம் இனங்காணல் வேண்டும். மேலும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சான்று ரீதியான விதிகள், சான்று ரீதியான ஏனைய விடயங்கள், எங்கிருந்து செயற்படுத்துனர்களினால் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும், அத்தகைய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான யதார்த்தபூர்வமான முறையான அணுகுமுறை தொடர்பில் குறிப்பிடல், தகவல்களை ஒழுங்கமைத்தல், இறுதியில் அவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்களை களஞ்சியப்படுத்திக் கொண்டுசெல்லல் போன்றனவும் உள்ளடங்கும்.

**பெட்டி 5**

### தகவல் சேகரிப்பு உபாயம்

தகவல் சேகரிப்பு உபாயமானது பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| **a) CARSV தொடர்பில் எத்தகைய தகவல்கள் அவசியப்படுகின்றன?** | நீங்கள் ஆவணப்படுத்துகின்ற குற்றங்கள் அல்லது மீறல்கள் தொடர்பில் திருப்திப்படுத்துவதற்கு எத்தகைய தகவல்கள் தேவைப்படுகின்றன? |
| **b) காணப்படுகின்ற குறைபாடுகள் என்ன, CARSV தகவல்களை எங்கிருந்து பெற்றுக் கொள்வீர்கள்?** | எத்தகைய சாத்தியப்பாடுள்ள மூலங்கள் மற்றும் தகவல் வகைகள் காணப்படுகின்றன – சான்றுகள், ஆவணங்கள், டிஜிடல் மற்றும் பௌதீகம்? அவை எங்கு காணப்படுகின்றன? |
| **c) CARSV தகவல்களை எவ்வாறு சேகரிக்க முடியும்?** | பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் இனங்கண்டு அவர்களை அணுகி பேட்டி காண்பதற்கான அணுகுமுறைகளை எவ்வாறு நீங்கள் மேற்கொள்வீர்கள்? ஏனைய தகவல்களையும் சான்றுகளையும் நீங்கள் எவ்வாறு சேகரிப்பீர்கள்? |
| **d) CARSV தகவல்களை களஞ்சியப்படுத்தி எவ்வாறு கொண்டுசெல்வீர்கள்?** | நீங்கள் பெற்றுக்கொண்ட தகவல்களை எவ்வாறு பாதுகாப்பாகக் கொண்டு சென்று களஞ்சியப்படுத்துவீர்கள்? |
| **e) தகவல்களை எவ்வாறு ஒழுங்கமைப்பீர்கள்?** | தகவல்களை வினைத்திறன் மிக்க முறையில் ஒழுங்கமைப்பதற்கு எத்தகைய முறைகள் நடைமுறையில் உள்ளன? |

## 7a. எத்தகைய முரண்பாடு மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை CARSV தகவல்கள் தேவைப்படுகின்றன?

ஒவ்வொரு சார்த்துரைக்கப்பட்ட குற்றம் அல்லது மீறல்கள் தொடர்பில் நிரூபிக்கவேண்டிய தனித்தனியான அம்சங்கள், ஒவ்வொரு அம்சத்தையும் நிரூபிப்பதற்கு அவசியமான தகவல் வகைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய விளக்கமான சான்று பணிப்புத்தகமொன்று திட்டமிடல் செயன்முறையின் எக்கட்டத்தில் செயற்பாட்டாளர்களினால் உருவாக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலுமான சகலவிதமான சான்றுகள் தொடர்பான தகவல் தேவைப்பாடுகளை நிறைவேற்றக்கூடிய விதத்தில் மிகவும் பூரணத்துவம் மிக்க தகவல்களை மிகவும் வினைத்திறன் மிக்க முறையில் செயற்பாட்டாளர்கள் சேகரிக்கின்றனர் என்பதை இத்தகைய பணிப்புத்தகம் உறுதிசெய்தல் வேண்டும். பார்க்க, பிற்சேர்க்கை 1, உதாரணமாக, ரோம் சட்டத்தின் ஆரம்பக் குறிப்பில் வரைவிலக்கணம் செய்யப்பட்டதன் பிரகாரம் குற்றங்கள் தொடர்பான வரைவிலக்கணம் மற்றும் குற்றங்களுடன் தொடர்புபட்ட அம்சங்கள் தொடர்பான வரைவிலக்கணம் ஆகியவற்றின் பிரகாரம், தனிப்பட்ட குற்றவியல் பொறுப்புக்களைத் தாபிப்பதற்கு உருவாக்கப்பட்ட சான்றுகள் தொடர்பான பணிப்புத்தகத்தைப் பார்வையிடவும்.

## 7b. முரண்பாடு மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை CARSV தகவல்களை எங்கு பெற்றுக்கொள்ளலாம்

*பாலியல் வன்முறைகள் தொடர்பான குற்றங்கள் மற்றும் மீறல்கள் பற்றிய சான்றுகள் வகை பற்றிய விரிவான வழிகாட்டிக்காக அத்தியாயம் 10ஐப் பார்க்கவும்: பாலியல் வன்முறைகள் தொடர்பான சான்றுகளின் வகைகள்.*

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் செயற்பாட்டாளர்கள் நிரூபிப்பதற்கு அவசியமான ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அம்சங்களை திருப்திப்படுத்தக்கூடிய செயற்பாட்டாளர்களுக்கு கிடைக்கின்ற அல்லது கிடைக்கக் கூடிய சகலவிதமான தகவல் மூலங்கள், தகவல் வகைகள் ஆகியவற்றை செயற்பாட்டாளர்கள் பட்டியலிடல் வேண்டும். இவற்றுள் நற்சான்றிதழ்கள், ஆவணப்படங்கள், டிஜிடல் அல்லது பௌதீக ரீதியான சான்றுகள் போன்றன உள்ளடங்கும் - இவை ஒவ்வொரு செயற்பாட்டாளர்களின் ஆணை மற்றும் ஆற்றல்கள் ஆகியவற்றில் தங்கியுள்ளன. முன்னுரிமைகளை எவ்வாறு தெரிவுசெய்யப்போகிறோம் மற்றும் ஒன்றைத்தொடர்ந்து அடுத்து வருவது என்ன என்பது பற்றி செயற்பாட்டாளர்கள் பரிசீலித்தல் வேண்டும்.

**பெட்டி 6**

**சரியிணை நண்பர்கள் அனுபவம் - சான்றுகளை தேடுதல்**

காலோஸ், ஒரு புலனாய்வாளரும் ஒரு பகுப்பாய்வாளருமாவார். இவர் X என்ற நாட்டில் அமைதியின்மை நிலவிய காலப்பகுதியில் தடுப்புக் காவல் நிலையங்களில் இழைக்கப்பட்ட பாலியல் வன்முறைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை ஆவணப்படுத்தி வருகின்றார். “இங்கு தாம் அடிக்கப்பட்டதாகவும் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்குத் தொடர்ச்சியாக உட்படுத்தப்பட்டதாகவும் தரக்குறைவான பாலியல் நடத்தைகளில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் மற்றும் ஏனைய பல்வேறுவிதமான பயங்கரமான துஷ்பிரயோகங்கள் தமக்கு இழைக்கப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் அறிக்கையிட்டிருந்தனர். ஏற்கனவே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களும் தற்போது எல்லையிலுள்ள இடைத்தங்கல் நிலையங்களில் வசித்து வருபவர்கள் வழங்கிய முழுமையான சான்றாதாரங்களின் அடிப்படையில் அறிக்கை ஒன்றைத் தயாரிப்பது எமது ஆரம்பக் கட்ட நோக்கமாகும். இருப்பினும் எமது ஆவணப்படுத்தல் செயற்பணியின் திட்டமிடல் செயன்முறையின் பொழுது நாம் ஏனைய தகவல் மூலங்களையும் இனங்கண்டோம் - வேறு பல இடங்களில் தடுப்புக்காவலில் கைதிகள் வைக்கப்பட்டிருந்தாக அதற்கான வதந்திகள் பரவி வந்திருந்தன. அவர்கள் எவ்வளவு காலம் அங்கு இருந்தனர் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்தகைய ஆவணங்களை எமக்குப் பெற்றுக்கொள்வதற்கு உதவிகளை வழங்க சில அரச நிறுவனங்கள் முன்வந்தன. அவர்களுடனான தொடர்பு எமக்குக் காணப்பட்டது. சில கைதிகளுக்கு கடும் காயம் இழைக்கப்பட்டதாகவும் அத்தகைய காயங்களுக்கு சிறைச்சாலை மருத்துவர்களினால் சிகிச்சையளிக்க முடியாத பொழுது அவர்களை வெளியே கொண்டு சென்று அங்குள்ள வைத்தியர்கள் சிகிச்சையளித்ததாகவும் இதனை அரச சார்பற்ற நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சில வைத்தியர்கள் கண்டதாகவும் குறிப்பிடப்பட்டதுடன் ஒவ்வொரு நோயாளி தொடர்பிலும் தனித்தனியான மருத்துவப் பதிவுகளைச் சமர்ப்பித்தனர்”

## 7c. முரண்பாடு மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை CARSV தகவல்களை எவ்வாறு சேகரிப்பது

எத்தகைய தகவல் மூலங்கள் காணப்படுகின்றன என்பதைத் தீர்மானித்த பின்னர், **அத்தகைய மூலங்களிலிருந்து தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது** என்பது பற்றி செயற்பாட்டாளர்கள் சிந்தித்தல் வேண்டும்.

» பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை எவ்வாறு இனங்கண்டு அவர்களை அணுகுவது, அத்தகைய

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளிடமிருந்து எத்தகைய தகவல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன, அத்தகைய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முகமாக எத்தகைய கேள்விகள் கேட்கப்படவுள்ளன, மேலும் பேட்டிகளை எவ்வாறு நடத்துவது, தகவல்களை எவ்வாறு பதிவுசெய்வது போன்றன இவற்றுள் உள்ளடங்கும்.

» நேரடி அனுபவத்தையுடைய நபரிடமிருந்து குறிப்புக்களை எடுப்பதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் பற்றிக் கவனமாக செயற்பாட்டாளர்கள் பரிசீலித்தல் வேண்டும். கூற்றுக்களை எடுத்தல், பேட்டிகளைப் பதிவுசெய்தல், அவற்றில் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளது கையொப்பத்தினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும்/ அல்லது பேட்டிகளை ஒளி, ஒலிப் பதிவுசெய்தல் ஆகியன பற்றியும் கருத்திற்கொள்கின்ற அதேவேளை, உத்தியோகபூர்வ புலனாய்வாளர்களினால் எடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ கூற்றுக்கள் மீது பின்னர் முரண்படக்கூடிய செயல்கள் என்ன, பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளது நம்பகத்தன்மைக்கு சவால் விடுக்கும் வகையில் இவை பிரயோகிக்கப்படுமா என்பது பற்றியும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும் (இவ்விடயம் தொடர்பில் மேலதி விபரங்களுக்கு அத்தியாயம் 11 ஐப் பார்க்க: பேட்டிகாணல்).

» பொருத்தமானவிடத்து தகவல்களை எவ்வாறு சேகரிப்பது தொடர்பிலான திட்டமிடலானது பின்வருவனவற்றையும் உள்ளடக்கியதாகவிருக்கும். செயன்முறைகளை எவ்வாறு மேற்கொள்வது, புகைப்படங்களை எடுக்கும் முறை, வரைபு ரீதியான சான்றாதாரம், குற்றம் நடைபெற்ற இடங்கள், தகவல் சேகரிப்புக் கட்டத்தின் பொழுது சான்றுகளைச் சேகரித்து அவற்றைத் தொடர்ச்சியாகப் பேணுதல்.

*பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பேட்டிகாணல், புகைப்படம் எடுத்தல், குற்றம் தொடர்பான நடைபெற்ற இடங்கள் பற்றிய வரைபுகளை வரைதல், தகவல்களை சேக-ரித்தல், கையாளுதல் தொடர்பான விரிவான வழிகாட்டி பற்றி அறிந்துகொள்வதற்கு அத்தியாயம் 11 ஐப் பார்க்கவும்: பேட்டி காணல், மற்றும் அத்தியாயம் 12: மேலதிக தகவல்களைச் சேகரித்தல்)*

### i. பாதிக்கப்பட்டவரையும் சாட்சிகளையும் இனங்காணல்

சர்வதேச சட்டத்தின் கீழ் ஏனைய குற்றங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களையும் ஏனைய சாட்சிகளையும் இனங்காண்பதை விட பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களையும் அது தொடர்பான சாட்சிகளையும் இனங்காண்பது மிகவும் சவாலுக்குரிய விடயமாகும். பாலியல் வன்முறைகள் தொடர்பில் பல்வேறு வகையான அறிக்கைகள் காணப்பட்ட பொழுதிலும் கூட பல்வேறு காரணிகளின் நிமித்தம் பாதிக்கப்பட்டவர்களும் ஏனைய சாட்சிகளும் முன்வருவதற்கு விருப்பமற்றவர்களாகவிருப்பர். பாலியல் வன்முறையின் காரணமாக ஏற்பட்ட மனவடுவை மீட்டுப்பார்ப்பதற்கு விருப்பமுடையவர்களாக பாதிக்கப்பட்டவர்கள் இருக்கமாட்டார்கள். பாலியல் வன்முறையானது அவர்களது குற்றம் என சிந்திக்கவும் கூடும் அல்லது அதனை அவர்கள் நிரூபிக்காத பட்சத்தில் அவர்களை யாரும் நம்பமாட்டார்கள் என எண்ணவும்கூடும். சமூக, பாரம்பரிய மற்றும் கலாசாரப் பின்புலங்களின் அடிப்படையில் பாலியல் வன்முறைக் குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் இடர்களை எதிர்கொள்ளலாம் அல்லது அவர்கள் வசிக்கின்ற சமூகத்தினால் அவர்களுக்கு இடர்கள் உருவாக்கப்படலாம். இத்தகைய செயல்கள் குற்றமிழைத்த குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்படலாம் அல்லது அருகில் வசிப்பவர்களினால் மேற்கொள்ளப்படலாம் அல்லது பாதிக்கப்பட்டவரது சொந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களினால் மேற்கொள்ளப்படலாம் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் எப்போதும் இவர்கள் மீது குற்றம் சுமத்துகின்ற மனப்பாங்குடன் நடந்துகொள்பவர்களினால் மேற்கொள்ளப்படலாம். பாதிக்கப்பட்டவர்களை அவமானப்படுத்தி வெட்கத்திற்குள் உள்ளாக்கி தண்டனை வழங்கலாம் அல்லது பாலியல் வன்முறையை மையமாகக் கொண்டு பாதிக்கப்பட்டவர்களை அவர்களது குடும்பத்திலிருந்து தனிமைப்படுத்தி, வீட்டிலிருந்து விலக்கிவைத்து அவர்களது வாழ்வாதாரம் மற்றும் கல்வி வாய்ப்புக்களையும் பாதிக்கடையச் செய்யலாம். பாதிக்கப்பட்டவாகள் விரும்பினாலும் கூட அவர்களினால் கதைக்க முடியாத சூழல் நிலவலாம். சிலருக்க குறிப்பிடக் கூடிய சில சிரமங்க்ள இருக்கலாம். உதாரணமாக, இவர்களுக்கு அறிவு அல்லது புலமை சார்ந்த பிரச்சினைகள் இருக்கின்ற சந்தர்ப்பங்களில் அல்லது ஏனைய விதமான அங்கவீனங்கள் இருக்கின்ற பொழுது தொடர்பாடல்களில் ஈடுபடுவதில் பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம்.

பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் பாதுகாப்பான சூழலை உணர்ந்து தமாகவே முன்வந்து குற்றம் தொடர்பான அறிக்கைகளை வழங்குவதற்கான வாய்ப்பினை உருவாக்கக் கூடிய பாதுகாப்பான சூழலை வழங்குவது முக்கியமானதாகும். வெளிக்களப் பணிகள் விரும்பத்தக்கது எனில், ஏதாவது குறிப்பிட்ட சமூகத்தின் பாலியல் வன்முறைகள் தொடர்பான தகவல்களைப் பொறுக் கொள்வதற்கு முன்னர் பொறுப்பேற்பதற்கு அவசியமான வெளிக்களப் பணிகளின் மட்டம் பற்றித் தீர்மானித்துக்கொள்ளவும். அதேவெளை, பாலியல் வன்முறை தொடர்பான பயன்மிக்க தகவல்களை பல்வேறு விதமான மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதை செயற்பாட்டாளர்கள் கருத்திற்கொள்ளல் வேண்டும். இவற்றை வெறுமனே பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளிடமிருந்து மாத்திரம் தான் பெறவேண்டுமென்பதிலலை.

பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான விடயங்களை சாட்சிகள் சமர்ப்பித்தாலும் சமர்ப்பிக்காவிட்டாலும் அவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டுமென்பது மிக முக்கியமானது என்பதை செயற்பாட்டாளர்கள் கருத்திற்கொள்ளல் வேண்டும். சம்பந்தப்பட்ட தகல்களை வழங்குவதற்கு முன்வருகின்ற நபர்கள் சிலவேளைகளில் பாதிக்கப்பட்டவர்களாகவும் இருக்கலாம். இங்கு நம்பகத்தகுந்த உறவு முறைகள் கட்டியமைக்கப்படும் என்ற உறுதிகள் வழங்கப்படல் வேண்டும். (பார்க்க, அத்தியாயம் 10: பாலியல் வன்முறைகள் தொடர்பான சான்று வகைகள்).

சிலவேளைகளில் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டோர் ஆகியோர் தாமாகவே முன்வந்து தமது சான்றுகளை வழங்கலாம். இது சுய விருப்பத்தின் பேரில் நிகழலாம். இத்தகைய விடயங்கள் இடம்பெறுகின்ற பொழுது செயற்பாட்டாளர்கள் வேகமாகவும் வினைத்திறன் மிக்க முறையிலும் பாதுகாப்பாகவும் பதிலளிப்பதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளுடன் செயற்பாட்டாளர்கள் ஈடுபடுவதற்கு முன்னர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், இடர் மதிப்பீடுகள் மற்றும் திட்டங்கள் ஆகியன கைவசம் இருத்தல் வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் சிலவேளைகளில் மதிப்பீடுகள், மதிப்பாராய்வுக் கருவிகள் மற்றும் ஏனைய ஆய்வுகள் மூலமாக

நேரடியாக இனங்காணப்படலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளை நாம் அணுகுகின்ற பொழுது அத்தகைய விடயங்கள் அவர்களது விருப்பத்திற்கு ஏற்பவும் அவர்களது தெரிவுக்கு ஏற்பவும் இடம்பெறல் வேண்டும். அவர்கள் மதிப்பீட்டில் ஈடுபடுவதற்கு இணங்குகின்ற சந்தர்ப்பங்களில் அல்லது தாம் தொடர்பான அனாமதேயம் பேணப்படவேண்டுமெனக் கூறுகின்ற பட்சத்தில், அதாவத தம்மைப்பற்றிய பெயர் விபரங்களைத் தெரிவிக்கக் கூடாது எனக் கேட்கின்ற சந்தர்ப்பங்களில் அவர்களை அணுகுவதற்கு முன்னர் அத்தகைய விடயங்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

### ii. இடைத்தரகர்கள் மூலமாக அணுகுதல்

இடைத்தரகர்களாகப் பணியாற்றுகின்ற நபர்களைச் செயற்பாட்டாளர்கள் தமது பட்டியலில் உள்ளடக்கி சமூகத்தில் இருக்கின்ற உறுப்பினர்களை இனங்காண்பதற்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்தோடு, கலாசாரம் மற்றும் சமூகம் சார்ந்த தடைகளை வெல்லுவதற்கும் பாதிக்கப்பட்டவர்களையும் மற்றும் சாட்சிகளையும் இவர்கள் மூலமாக இனங்காண முடியும். குறிப்பிட்ட சமூகம் பற்றியும் அங்கிருக்கின்ற உறுப்பினர்கள் பற்றியும் அச்சமூகம் தொடர்பான இயங்காற்றல் பற்றியும் செயற்பாட்டாளர்கள் அறிந்திருக்காத நிலையில் இடைத்தரகர்களின் உதவியுடன் தமது பணிகளை மேற்கொள்ளலாம். சிலவேளைகளில் செயற்பாட்டாளர்கள் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் நேரடியாக அணுகுகின்ற பொழுது அவர்கள் பாதிப்புக்களை எதிர்கொள்ளலாம். சிலவேளைகளில், சமூகத்திற்கு வெளியிலுள்ள உறுப்பினர்களுடன் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது ஏனைய சாட்சிகள் தொடர்புகளையோ அல்லது ஊடாட்டங்களையோ ஏற்படுத்துவதற்கு அச்சமுடையவர்களாக இருக்கலாம்.

இடைத்தரகர்கள் வினைத்திறன் மிக்க சமூகத் தொடர்பாளர்களாக செயற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்களது பக்கச்சார்பின்மை தொடர்பில் அவதானம் செலுத்துதல் வேண்டும் (பார்க்க, பெட்டி 8: இடைத்தரகர்கள் தொடர்பான அபாயம் பற்றிய சோதனைப்பட்டியல்). பெரும்பாலும் இத்தகைய இடைத்தரகர்கள் பிரதேச அடிமட்ட மக்கள் உறுப்பினர்களாகவோ அல்லது தேசிய அல்லது சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது சேவைகளை வழங்குபவர்களாகவோ அல்லது ஏனைய சமூக வலையமைப்புக்களைச் சேர்ந்தவர்களாகவோ இருக்கலாம். மற்றும் தேவாலயங்கள், ஏனைய கட்டமைப்புகள், பெண்கள் குழுக்கள் போன்றவற்றுக்கு உதவி செய்யக் கூடியவர்களாக இருக்கலாம். மேலும் தற்போது காணப்படுகின்ற பால்நிலை மைய வன்முறை உதவிப் பொறிமுறையின் கீழ் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுபவர்களாகவும் இருக்கலாம்.

**பெட்டி 7**

**வழக்குச் சட்டம் உதாரணம் - இடைத்தரகர்களை பயன்படுத்துவதனால் ஏற்படக் கூடிய இடர்கள் - ஐ.சீ. சீ. இன் லுபங்கா வழக்கு**

சர்வதேச குற்றவியல் விசாரணைகளின் பொழுது இடைத்தரகர்களைப் பயன்படுத்துவது குறிப்பாக விசாரணைகளின் பொழுது அவர்களது பக்கச்சார்பற்ற தன்மை மற்றும் வகிபாகம் தொடர்பான கேள்விகள் ஆகியன ஐ.சீ.சீ. இல் நடைபெற்ற தோமஸ் லியாகோ வழக்கின் பொழுது அவதானத்தைப் பெற்றது. இந்த வழக்கின் பொழுது சாட்சிகள் வழங்கிய சில சான்றுகளை லுபங்கா நீதிமன்றம் நிராகரித்தது. சில இடைத்தரகர்கள் வழங்கிய சான்றுகளை மையமாகக் கொண்டு சிறுவர் சிப்பாய்களது சான்றாதாரங்களையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் இடைத்தரகர்கள் பணம் கொடுத்து சான்றுகளை வழங்கும்படி தூண்டியதாகும். அந்தத் தீர்ப்பு கீழுள்ளவாறு காணப்பட்டது:

*'வழக்குத் தொடுனர்கள் புலனாய்வு செய்வது தொடர்பான பொறுப்புக்களை இடைத்தரகர்களிடம் விட்டிருத்தல் கூடாது. அவர்கள் எத்தகைய பாதுகாப்பு ரீதியான சிரமங்களை எதிர்கொண்ட பொழுதிலும் இதனை மேற்கொண்டிருத்தல் கூடாது. இந்த விசாரணையின் பொழுது பல சாட்சிகள் சான்றுகளை வழங்குவதற்காக அழைக்கப்பட்டனர். முக்கிய மூன்று இடைத்தரகர்கள் எவ்வித மேற்பார்வைகளையும் மேற்கொள்ளாமல் சில விடயங்களை மேற்கொண்டதன் காரணமாக அவர்கள் மீதான நம்பகத்தன்மை இழக்கப்பட்டது. சான்று வழங்கியவர்களுடைய பின்புலங்கள் பற்றி ஆராய்வதற்கு குறிப்பிடக் கூடியளவு நேரத்தை நீதிமன்றம் செலவுசெய்தது. இவர்களது சான்றுகள் துல்லியத்தன்மை அற்றதாகவும் நேர்மையற்றதாகவும் காணப்பட்டது. இத்தகைய ஆவணங்களை போதியளவு ஆராய்ந்து உறுதிப்படுத்த வழக்குத் தொடுனர்கள் தவறியமையின் காரணமாக நீதிமன்றத்திற்கு அதிக செலவும் ஏற்பட்டது. மேலும் இடைத்தரகர்கள் உரிய முறையில மேற்பார்வை செய்யப்படாமையின் காரணமாக அவர்கள் சாட்சிகளை தொடர்புகொண்ட பொழுது தமக்குச் சாதகமாக சாட்சிகளைப் பயன்படுத்திக் கொண்டனர். சார்த்துரைக்கப்பட்ட இந்த சிறுவர் சிப்பாய்களின் நம்பகத்தன்மை தொடர்பில் நீதிமன்றத்தின் தீர்ப்பு எவ்வாறு இருந்தபொழுதிலும் இவர்களது வயது மோதல்களில் இவர்கள் பாதிக்கப்பட்ட தன்மை போன்றவற்றைக் கருத்திற்கொண்டு அவர்களை தமக்கு வேண்டிய விதத்தில் மாற்றியமைத்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.'* ICC-01/04- 01/06-2842, பந்தி 482.

**பெட்டி 8**

## இடைத்தரகர்களுடன் ஈடுபடுதல் தொடர்பான சோதனைப் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1 | செயற்பாட்டாளர்கள் பயனுறுதிமிக்க முறையில் சரியான இடைத்தரகர்களைத் தெரிவுசெய்யும் முகமாக பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் ஆகியோரை சூழவுள்ள சமூகத்தில் உள்ள சகலவிதமான செயலாற்றுபவர்கள் பற்றிய தகல்களைப் பெற்றுக்கொள்ளவும்.<br><br>*இவற்றுள் சமூகத்தில் காணப்படுகின்ற பெண் தலைமைத்துவம் உள்ளடங்கலாக சமூகப் படிமுறைகளை இனங்காண்பதும் உள்ளடங்கும். (உதாரணமாக – பெரியவர்கள், மருத்துவச்சிகள், ஆசிரியர்கள், பெண் கிராமியத் தலைவர்கள் அல்லது பெண் மதத்தலைவர்கள் ஆகியோர் உள்ளடங்குவர்). பல சமூகங்களில் தலைமைத்துவம் ரீதியான கட்டமைப்புகள் காணப்படுகின்றன. பெண்களை உள்ளடக்கிய ஒவ்வொரு சமூகத்திலும் தலைவர் அல்லது தலைவர்கள் இருக்கலாம். செயற்பாட்டாளர்கள் பாதிக்கப்பட்டவர்களை அல்லது சாட்சிகளை அணுகுவதற்கு இவர்கள் உதவலாம் அல்லது தடையேற்படுத்தலாம். குழு மேற்கொள்கின்ற வேலைகளுக்கு பெரும்பாலும் முக்கியமான உதவிகளை வழங்கக்கூடிய வல்லமை உடையவர்களாக பெண்கள் தலைமைத்துவம் இருக்கலாம். ஆனால் இதற்கு அப்பிரதேசத்தில் பணியாற்றுகின்ற குழுவானது கொள்கையின் அடிப்படையிலும் மரியாதையுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் பணியாற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும்.* | ✓ |
| 2 | பாதிக்கப்பட்ட ஆண்களை இனங்காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்ற பொழுது பொருத்தமான இடைத்தரகர்களை நாடவும். உதாரணமாக பாதிக்கப்பட்ட ஆண்களுடன் மாத்திரம் பணியாற்றுகின்ற சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள் - இத்தகைய சந்தர்ப்பங்களில் ஆண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளுடன் தொடர்புடைய குறிப்பிட்ட கலாசார ரீதியான மனப்பாங்குகள், கூருணர்வுத் தன்மைகள் ஆகியன தொடர்பிலான விழிப்புணர்வுகள் இருத்தல் சிறப்பானதாகும். | ✓ |
| 3 | இடைத்தரகர்கள் ஊடாக பாதிக்கப்பட்டவர்களை அல்லது சாட்சிகளை அணுகுகின்ற பொழுது சமூகத்தைச் சேர்ந்த தனி நபர்கள் அல்லது அணுகப்படுகின்ற அமைப்புகள் ஆகியவை தொடர்பிலான இடர்களை கவனமாக மதிப்பீடு செய்யவும். இடைத்தரகர்கள் பங்குபற்றுவதைக் கட்டாயப்படுத்துகின்றார்களா அல்லது சாட்சிகளை அம்பலப்படுத்துகின்றார்களா மற்றும் அடிப்படை ஒழுக்கநெறித் தாராதரங்களின் பிரகாரம் நடந்துகொள்கின்றார்களா என்பதை முறையாக மதிப்பீடு செய்யவும். | ✓ |
| 4 | அமைப்பின் ஆணையை நன்கு உணர்ந்து அதன்படி செயற்படக்கூடியவர்களாக இடைத்தரகர்கள் இருக்கின்றார்களா என்பதை உறுதிசெய்துகொள்ளவும். ஆவணப்படுத்தல் செயன்முறையின் பொதுவான நோக்கத்தினை இடைத்தரகர்கள் உணர்ந்துள்ளார்களா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளவும் (சில இடங்களுக்குச் செல்ல முடியாத நிலைமை, காலப்பகுதி, சிறுவர்கள் போன்ற சாட்சிகள் ஆகியன). இதன் மூலம் சாட்சிகளாக வரக்கூடியவர்கள் தொடர்பிலான பிழையான தொடர்பாடல்களைத் தவிர்க்கக் கூடியதாக இருப்பதுடன், பிழையான எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்துவதையும் தவிர்க்க முடியும். | ✓ |
| 5 | ஆவணப்படுத்தல் செயன்முறையின் நோக்கமானது சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பானது என்பதை இடைத்தரகர்கள் அறிந்திருக்கிறார்களா அல்லது அறியவில்லையா என்பதை உறுதிசெய்துகொள்ளவும். குறிப்பாக சிறுவர்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்வதற்கு புலனாய்வாளர்கள் பயிற்றுவிக்கப்படாதவர்களாக இருக்கின்ற சந்தர்ப்பங்களில் அல்லது சிறுவர்களைப் பேட்டிகாண்பதற்கு அதிகாரமளிக்கப்படாதவர்களாக இருக்கின்ற சந்தர்ப்பங்களில் வயது குறைந்தவர்களை அதாவது சிறுவர்களை சாட்சியாக அறிமுகம் செய்தல் கூடாது. | ✓ |
| 6 | சமூகத்தில் ஏதாவது பிழவுகள் அல்லது பிரிவுகள் காணப்படுகின்றனவா என்பதை அவதானிக்கவும். எதிர்க்கருத்தக்களைக் கொண்ட உறுப்பினர்கள் குறிப்பிட்ட அதே சமூகத்தில் வாழ்கின்றார்களா என்பதையும் அறிந்துகொள்ளவும். | ✓ |

பெட்டி 8

**இடைத்தரகர்களுடன் ஈடுபடுதல் தொடர்பான சோதனைப் பட்டியல்**

| | | |
|---|---|---|
| 7 | பாதுகாப்பானது எனக்கருதும் பட்சத்தில் பாதிக்கப்பட்டவர்களாக அல்லது ஏனைய சாட்சிகளாக வரக்கூடியவர்களை இனங்காணும் முகமாக சமுதாய உறுப்பினர்கள், சமுதாயத் தலைவர்கள், மருத்துவச் சேவைகளை வழங்குபவர்கள், உதவிக்குழுக்கள், நிறுவனங்கள் ஆகியவற்றுடன் மிகவும் நெருக்கமாக பணியாற்றவும். | ✓ |
| 8 | பிரதேச அமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய சாட்சிகள் முன்வருவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவும். இவற்றுள் பெண்கள் வலுவூட்டல் அமைப்புகள், பாதுகாப்பான இடங்கள், இரகசியத்தன்மையைப் பேணுதல், ஏனைய பாதுகாப்பு ரீதியான நடைமுறைகள் ஆகியன உள்ளடங்கும். | ✓ |
| 9 | இடைத்தரகர்களாக வரக்கூடியவர்களை கவனமாக ஆராயவும் (குற்றச்செயல் தொடர்பான பதிவுகள், பக்கச்சார்பின்மை, நம்பகத்தன்மை, வகிபாகம் தொடர்பிலான ஆற்றல்கள், கூட்டணிகள், பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் ஆகியோருடன் பணியாற்றுவது தொடர்பிலான ஆற்றல்கள்). | ✓ |
| 10 | பெற்றுக்கொள்கின்ற சான்றுகளுக்கு பிரதியீடாக ஏதாவது ஒன்றை செயற்பாட்டாளர்களோ அல்லது இடைத்தரகர்களோ வழங்கக் கூடாது. இவை தொடர்பில் கவனமாக இருத்தல் வேண்டும். இவற்றுள் நிதி மற்றும் பொருட்கள் சார்ந்த உதவிகள் அல்லது உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான முறையற்ற உதவிகள் ஆகியன உள்ளடங்கும். ஆனால் இச்செயல் அவர்களை ஆற்றுப்படுத்தல் சேவைகளுக்கு அனுப்பிவைப்பதைத் தடுக்கக் கூடாது. வாய்ப்புள்ள எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இது வழங்கப்படல் வேண்டும். | ✓ |
| 11 | இடைத்தரகர்களது வகிபாகம், அவர்களது மட்டுப்பாடுகள் தொடர்பில் தெளிவான வரையறைகளை ஏற்படுத்திக்கொள்ளவும். செயற்பாட்டாளர்களிடமிருந்து அவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய உதவிகள் மற்றும் வழிகாட்டிகள் ஆகியவற்றின் அளவுகளையும் வரையறை செய்துகொள்ளவும். | ✓ |
| 12 | எந்தவொரு இடைத்தரகரும் மிகவும் நம்பகமான முறையில் செயற்பாட்டாளர்களைத் தொடர்புகொள்வதற்கான வழிமுறைகள் இருக்கின்றன என்பதை உறுதிசெய்துகொள்ளவும். | ✓ |
| 13 | இடைத்தரகர்களுடனான அவர்களது சுய ஊடாட்டங்களை ஆவணப்படுத்திக் கொள்ளவும். அதாவது அத்தகைய இடைத்தரகர்கள் தொடர்பில் ஏதாவது தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் அதனை நியாயப்படுத்தக் கூடிய நிலையில் அவர்கள் உள்ளனரா என்பது போன்றன. | ✓ |

### iii. உரைபெயர்ப்பாளர்களைப் பயன்படுத்தல்

செயற்பாட்டாளர்களது குழுவில் முக்கிய பாகத்தினை உரைபெயர்ப்பாளர்கள் வகிக்கின்றனர். இத்தகைய உரைபெயர்ப்பாளர்கள் தமது உரைபெயர்ப்பில் மாத்திரமல்ல பாலியல் வன்முறையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள், பொருத்தமானவிடத்து சிறுவர்களுடனும் பணியாற்றக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். இத்தகைய உரைபெயர்ப்பாளர்கள் முறையாகப் பயிற்றப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுடன் செயற்பாட்டாளர்கள் ஊடாட்டங்களை மேற்கொள்கின்ற எந்த சந்தர்ப்பத்தின் பொழுதும் தமது சேவைகளை வழங்கக் கூடியவர்களாக உரைபெயர்ப்பாளர்கள் இருத்தல் வேண்டும். இவற்றுள் பேட்டிகாணல் போன்றனவும் உள்ளடங்கும். சரியான மொழியிலும், பிரதான சொற்களுக்கான கலாசாரம் சார்ந்த பொருட்கோடல்களை வழங்கக் கூடியவர்களாகவும் உரைபெயர்ப்பாளர்கள் இருப்பதுடன், குறிப்பிட்ட சூழமைவில் பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய நடத்தைகள் மற்றும் கருத்துக்கள் ஆகியவற்றை மாற்றாமல் இருப்பதுடன், பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளினால் வழங்கப்படுகின்ற தகவல்களை மாற்றாமலும் அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்தாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பேட்டிகாண்கின்ற சந்தர்ப்பங்களில் உரைபெயர்ப்பாளர்கள் மிகவும் கூருணர்வுடனும் தொழில்வாண்மை மிக்கவர்களாகவும் தீங்கிழைக்க வேண்டாம் என்ற கொள்கையின் அடிப்படையிலான ஒழுக்கநெறியின் பிரகாரம் பணியாற்றக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். அறிவிக்கப்பட்ட சம்மதம் என்ற எண்ணக்கரு தொடர்பில் அவர்கள் முழுமையான புரிதல்களை

உடையவர்களாக இருத்தல் வேண்டும். அத்தோடு, குழுவின் இரகசியம் பேணல் எனும் கொள்கைக்கு இணங்கி நடத்தலும் வேண்டும்.

**உரைபெயர்ப்பாளர்களைத் தெரிவுசெய்யும் போது பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ளவும்:**

- பயிற்றப்பட்ட சுயாதீன உரைபெயர்ப்பாளர்களைத் தெரிவுசெய்து அவர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கு ஏற்ற உரிய வகையிலான போதியளவு நிதி மற்றும் மனித வளங்களை ஒதுக்கவும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இத்தகைய நபர்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை இருக்கலாம்.
- இரகசியத்தன்மையைப் பேணும் முகமாக குடும்ப உறுப்பினர்களை உரைபெயர்ப்பாளர்களாக பயன்படுத்த வேண்டாம். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளது சமூகங்களைச் சேர்ந்தவர்களை உரைபெயர்ப்பாளர்களாகப் பயன்படுத்தலாம். குறிப்பாக சுதேச சமூகங்களைப் பொறுத்தவரையில் இது ஏற்புடையதாகும்.
- உரைபெயர்ப்பாளர்களாக வரக்கூடியவர்களது ஆற்றல்களை மதிப்பீடு செய்வதற்கு போதியளவு நேரத்தை ஒதுக்கவும். உரைபெயர்ப்பாளர்களாக வரக்கூடியவர்கள் தொடர்பான குற்றம் சார்ந்த பதிவுகள், பக்கச்சார்பின்மை, நம்பிக்கைத் தன்மை, சிறுவர்களுடன் பணியாற்றும் ஆற்றல்கள் ஆகியன தொடர்பில் நன்கு ஆராயவும்.
- உரைபெயர்ப்பாளர்களது பால், வயது, அடையாளம், இனம், கலாசாரம், அரசியல் கூட்டணிகள் ஆகியவற்றை முறையாக இனங்காணவும். ஏனெனில் இவை பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாடசிகளின் நம்பிக்கை மீது தாக்கத்தை ஏற்படுத்தலாம். அத்தகைய விடயங்களை கூருணர்வு மிக்க முறையில் பரிசீலிக்கவும். இதன் மூலம் மாறாநிலைக் கருத்துடையவர்களையோ அல்லது மற்றவர்களைத் துன்பப்படுத்துகின்ற சிந்தனைகளைக் கொண்டவர்களையோ தவிர்க்க முடியும்.
- இவர்களது சேவைகளை வாடகைக்கு அமர்த்துவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட நபரது பாலியல் வன்முறை மற்றும் பால்நிலைச் சமத்துவம் தொடர்பான தனிப்பட்ட கருத்துக்களை அறியவும். பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய சொற்கள் பற்றி அவர்கள் நன்கு அறிந்துள்ளனர் என்பதை உறுதிசெய்துகொள்ளவும். இவர்களது அறவீனம் சான்றுகளைச் சேகரிக்கின்ற செயன்முறைகளை எதிர்மறையாக தாக்காததாக இருத்தல் வேண்டும். (உதாரணம் - துயரம் மற்றும் அதிர்ச்சி போன்றன). வாய்ப்புள்ள சந்தர்ப்பங்களில் ஆண் மற்றும் பெண் உரைபெயர்ப்பாளர்களை குழுவில் உள்ளடக்கவும்.
- சிறுவர்களைப் பேட்டிகாண்கின்ற பொழுது அத்துறை சார்ந்த பயிற்சிகளையும் முன் அனுபவங்களையும் உடைய சிறுவர்களுடன் பணியாற்றிய உரைபெயர்ப்பாளர்களை மாத்திரம் பயன்படுத்தவும்.
- உரைபெயர்ப்பாளர்கள் தொடர்பில் பின்வருவனவற்றை உறுதிசெய்துகொள்ளவும்:
- தாம் பணியாற்றுகின் பிரதேசங்களில் பாதுகாப்பு ரீதியான விடயங்களில் சௌகரியமாக பணியாற்றக் கூடியவர்களாக இருப்பதுடன், செயற்பாட்டாளர்கள் கூறுகின்ற பிரதேசங்களில் சுமுகமாக பணியாற்றக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
- பிரதேச சூழமைவுகளைப் புரிந்தவர்களாக இருத்தல் வேண்டும். அதேவேளை, புறவயத்தன்மையுடன் பணியாற்றக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
- பாலியல் வன்முறை மற்றும் அது தொடர்பிலான பிரதேச கலாசாரம் ஆகியவற்றை நன்கு புரிந்தவர்களாகவும் அனுபவம் மிக்கவர்களாகவும் இருத்தல் வேண்டும். அத்தோடு, இத்தகைய விடயங்கள் எவ்வாறு பேட்டிகாண்பவர்களுடனான தொடர்பாடலைப் பாதிக்கின்றது என்பதை அறிந்திருத்தலும் வேண்டும்.
- பாலியல் வன்முறை தொடர்பான விடயப்பரப்பினை நன்கு அறிந்தவர்களாகவும் அதனோடு தொடர்புடைய துறை சார்ந்த சொற்களை நன்கு அறிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் பாலியல் வன்முறையை விபரிக்கின்ற பொழுது பலர் முன்னிலையில் கூறத்தகாத சொற்களும் இருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் அதனை வேறுவிதமாக மறைத்துக்கூறும் ஆற்றல் படைத்தவராக இருத்தல் வேண்டும்.

## 7d. தகவல்களை எவ்வாறு களஞ்சியப்படுத்திக் கொண்டுசெல்வது

CARSV தொடர்பான புலனாய்வுச் செயன்முறை திட்டமிடலின் ஓர் அங்கமாக தகவல்கள் சேகரிக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய தகவல்களை காத்திரமான முறையில் களஞ்சியப்படுத்திக் கொண்டு செல்வது தொடர்பான விடயங்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். தகவல்களையும் சான்றுகளையும் களஞ்சியப்படுத்தி அவற்றைப் பேணுவது முக்கியமாகும். உதாரணமாக – குற்றம் நடைபெற்ற இடம் தொடர்பான புகைப்படங்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளின் பேட்டிகளைப் பதிவுசெய்த ஆவணங்கள் போன்றன – அவற்றின் நேர்மை அல்லது நாணயத்தில் எத்தகைய குந்தகமும் ஏற்படாத விதமாக பாதுகாக்கப்படல் வேண்டும். அத்தோடு, பாதிக்கப்பட்டவர்களையோ அல்லது சாட்சிகளையோ மேலதிக இடர்களுக்கு இட்டுச்செல்லக் கூடாது.

தகவல்களை எவ்வாறு களஞ்சியப்படுத்திக் கொண்டு செல்வது என்பது தொடர்பான திட்டமிடல் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

- தகவல்களை பறிமுதல் செய்வதற்கான இடர்கள் காணப்படுகின்ற பொழுது செயற்பாட்டாளர்கள் எவ்வாறு, எங்கே, எவ்விதமாக அதனை அழிக்கப்போகின்றார்கள் என்பதைத் தீர்மானித்திருத்தல் வேண்டும்.
- செயற்பாட்டாளர்களினால் காவல் தொடர் காப்புச் சங்கிலியைப் (Chain of Custody) பேணக்கூடியதாக இருத்தல் வேண்டும் (குற்றம் தொடர்பான தடயங்கள் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்படும் போது யார் யார் அதனைக் கையாண்டனர், யாரின் மேற்பார்வையின் கீழ் அவை இருந்தன என்பதைப் பதிவுசெய்து தெளிவாக வைத்திருத்தல் காவல் தொடர் காப்புச் சங்கிலி, அதாவது Chain of Custody எனப்படும்) (பார்க்க, அதியாயம் 12: மேலதிக தகவல்களைச் சேகரித்தல், ஈ. Chain of Custody)
- நீண்ட காலமாக இத்தகைய தகவல்களை பாதுகாப்புடன் பத்திரமாக பேணுவதற்கான ஆற்றல்கள் இருக்கின்றனவா,

இவற்றுள் பொருத்தமற்ற முறையில் கையாளுதல் அல்லது களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றின் மூலமாக ஏற்படக்கூடிய அழிவுகள் அல்லது மாசுறுதல் ஆகியவற்றைத் தடுத்தலும் உள்ளடங்கும்.

**தகவல்களை எவ்வாறு களஞ்சியப்படுத்துவது** என்பது தொடர்பிலான திட்டமிடல்களை மேற்கொள்ளும் பொழுது அத்தகைய தகவல்கள் எங்கே சேகரிக்கப்படும், அவை யாரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் போன்ற விடயங்களைச் செயற்பாட்டாளர்கள் திட்டமிடல் வேண்டும். தாம் சேகரித்த தகவல்களை எவ்வாறு பாதுகாப்புடனும் அவற்றின் இரகசியத்தன்மை பேணப்படக்கூடிய விதத்திலும் வைத்திருக்கப் போகின்றோம் என்பதை செயற்பாட்டாளர்கள் மிகக் கவனமாக பரிசீலிக்க வேண்டும். பாதுகாப்பான வலயமொன்றில் மத்திய களஞ்சியப்படுத்தல் முறையொன்றை இதற்காகப் பயன்படுத்தலாம். குறிப்பாக மோதல் பிரதேசத்தில் இருத்தல் கூடாது. தகவல்களைப் பாதுகாப்பவரினால் எப்போது மேற்பார்வை செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும் (களஞ்சியப்படுத்தல் முறை தொடர்பான விரிவான வழிகாட்டிகளுக்காகா அத்தியாயம் 13 : தகவல்களை களஞ்சியப்படுத்திக் கையாளுதல் என்பதைப் பார்க்கவும்).

**தகவல்களை ஓரிடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு கொண்டுசெல்கின்ற** சந்தர்ப்பங்களில் செயற்பாட்டாளர்கள் அதனோடு தொடர்புடைய இடர்களைப் பரிசீலித்தல் வேண்டும். குறிப்பாக வாகனங்கள் அல்லது நபர்கள் சோதனையிடப்படுகின்ற சோதனைச் சாவடிகள், விமான நிலையங்கள் அல்லது ஏனைய பிரதேசங்களுக்குக் கொண்டு செல்லும் போது அவதானமாகவிருத்தல் வேண்டும். மேலும் எத்தகைய போக்குவரத்து வசதிகள் தம்மிடம் உள்ளன, அந்த போக்குவரத்து வசதியானது தகவல்களையும் சான்றுகளையும் கொண்டுசெல்வதற்குப் பொருத்தமானதா என்பது பற்றியும் தீர்மானித்தல் வேண்டும்.

## 7e. தகவல்களை எவ்வாறு ஒழுங்கமைப்பது

தகவல்கள் களஞ்சியப்படுத்தப்பட்டதன் பின்னர், அத்தகைய தகவல்கள் **ஒழுங்கமைக்கப்படும்** முறையானது ஆவணப்படுத்தல் செயன்முறையின் முக்கிய அம்சமாகும். ஆவணப்படுத்தல் செயன்முறையின் பொழுது முன்கூட்டியே இவை தொடர்பில் மிகக் கவனமாக பரிசீலித்தல் வேண்டும். மின்னியில் தரவு மையமொன்றைப் பிரயோகிப்பது பொருத்தமானதாகும். அதேவேளை, சேகரிக்கப்பட்ட சகல விதமான தகவல்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். இத்தகைய தகவல்கள் உள்ளக ரீதியில் இணைக்கப்பட்டிருப்பதுடன், **குறைந்தளவு** பின்வரும் தகவல்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

» பேட்டி காணப்பட்ட பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நபர், சாட்சிகள் தொடர்பான தனிப்பட்ட தரவுகள்

» பேட்டி காணப்பட்ட ஒவ்வொரு பாதிக்கப்பட்டவர், சாட்சி தொடர்பான பாதுகாப்பு ரீதியான அக்கறைகள்

» பேட்டியில் பங்குபற்றுவதற்காக அறிவிக்கப்பட்ட சம்மதத்தை வழங்கியமைக்கான சான்றுகள்

» சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியினால் வழங்கப்பட்ட நற்சான்றிதழ் தொடர்பான தகவல்கள்

» அத்தகைய பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியினால் வழங்கப்பட்ட ஆவண ரீதியான தகவல்கள்

» மருத்துவ அல்லது பொலிஸ் ரீதியான பதிவுகள் காணப்படுவது தொடர்பான தகவல்கள்.

» பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி தொடர்பான புகைப்பட அல்லது ஒளி, ஒலி ரீதியான தகவல்கள்

» அவசியமாயின் மேற்கூறப்பட்ட விடயங்களின் மொழிபெயர்ப்புகள்.

வாய்ப்புள்ள சந்தர்ப்பங்களில் இந்த தரவு மையமானது போதியளவு விருத்திசெய்யப்படல் வேண்டும். அதாவது, பல்வேறு வகையான நெறிமுறைகளின் கீழ் இந்த தரவுகளைத் தேடிப்பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். சர்வதேச குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியன தொடர்பான ஆவணப்படுத்தலுக்கு உதவக்கூடிய பல்வேறு வகையான பகிரங்க மூல தரவுமையப் பிரயோகங்கள் காணப்படுகின்றன.

### பயன்படுத்தக் கூடிய கருவிகள் தொடர்பான சில உதாரணங்கள்

### 1. OpenEvsys

OpenEvsys என்பது Open Events System இன் சுருக்கமாகும். இது சுயாதீனமாக பகிரங்க மூலமாகக் காணப்படுகின்றதொரு தரவு மையப் பிரயோகமாகும். இதனை HURIDOCS விருத்திசெய்ததது. மனித உரிமைகள் தொடர்பில் செயற்படுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பின்வருவனவற்றை மேற்கொள்வதற்கு OpenEvsys உதவுகிறது:

» பாதிக்கப்பட்டவர்கள், குற்றமிழைத்தவர்கள், மனித உரிமை மீறல்கள் சம்பவங்கள் ஆகியன பற்றிய தகவல்களைப் பதிவுசெய்தல், உலாவித் தேடுதல் மற்றும் மீளப்பெறல்.

» தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல், அறிக்கைகளை உலாவித் தேடுதல், போக்குகள் மற்றும் துஷ்பிரயோக வகைகள் பற்றி அறிந்துகொள்ளல்.

» இடையீடுகளை இனங்கண்டு முகாமைத்துவம் செய்தல், அதாவது மருத்துவ மற்றும் சட்ட உதவிகள் போன்றன.

» நற்சான்றிதழ்கள், உறுதிப்பத்திரங்கள் மற்றும் ஒளிக்கோப்புகள் போன்றவற்றுடன் தொடர்புடைய ஆவணங்களைப் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தல்.

http://www.openevsys.org

### 2. I-Doc

I-DOC எனப்படுவது மற்றுமொரு சுயாதீன திறந்த மூலங்களைக் கொண்ட தரவு மைய பிரயோகமாகும். சர்வதேச குற்றங்கள் மற்றும் கடுமையான மனித உரிமை மீறல்கள் ஆகியன தொடர்பான ஆவணப்படுத்தல் சார்ந்த பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கு இது உதவுகிறது. செயற்பாட்டாளர்கள் பின்வருவன தொடர்பிலும் I-doc ஐப் பயன்படுத்தலாம்:

» உண்மைச் சம்பவங்களையும் சான்றுகளையும் இனங்கண்டு, சேகரித்து உறுதிப்படுத்தி, தொகுத்துப் பொருத்திப் பார்த்தல.

» அவசியமான தகவல் வகைகளைத் தொகுத்து

வகைப்படுத்திக் கொள்ளல். உதாரணம்- சான்றுகள், சம்பவங்கள், பின்புலங்கள், நபர்கள் (சந்தேக நபர்கள், பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள்), நிறுவனங்கள், பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஏனைய பொருட்கள்.

» குறிப்பிட்ட சட்ட வரைவுச்சட்டகத்தின் பிரகாரம் பகுப்பாய்வு செய்தல் (அரசு, சமஷ்டி, பிராந்தியம், சர்வதேசம்).

» புவியியல் மற்றும் நேரத்தின் அடிப்படையில் வரைபடங்களை வரைதல், இணைப்புக்களையும் புள்ளிவிபரங்களையும் உருவாக்குதல்.

» தகவல் முறைகளைப் பயன்படுத்தி அறிக்கைகளை உருவாக்குதல், சட்ட ரீதியான முறைப்பாடுகள், ஐ.சீ.சீ. தொடர்பாடல்கள், வெளிக்கள வேலைகள், குற்றவியல் மற்றும் மனித உரிமைகள் சார்ந்த விடயங்கள்.

» Case Matrix உடன் இணைத்தல் / முக்கிய சர்வதேச குற்றச் சட்டத் தேவைகள் மற்றும் நிரூபிப்பதற்கு அவசியமானவற்றுடன் தொடர்புடைய CICD பகுப்பாய்வுகள்.

http://blog.casematrixnetwork.org/toolkits/databases/i-doc/

## 8. மீள்பார்வை மற்றும் அறிக்கையிடல் தொடர்பான ஏற்பாடுகள்

மேலும் பார்க்க, அத்தியாயம் 14: தற்போது நடைபெறுகின்ற ஆவணப்படுத்தல் செயன்முறைகளை மீள்பார்வைக்கு உட்படுத்துவது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளும் முகமாக சான்றுகள் மற்றும் தகவல்களை பகுப்பாய்வு செய்தலைப் பார்க்கவும்.

**பெட்டி 9**

### மீள்பார்வை மற்றும் அறிக்கையிடல் தொடர்பான ஏற்பாடுகள்

*IICI புலனாய்வாளர்கள் கையேட்டிலிருந்து 9வது பதிப்பு*

புதிய தகவல்கள் கிடைக்கின்ற பொழுது ஆவணப்படுத்தல் திட்டத்தை தொடர்ச்சியாக எவ்வாறு மீள்மதிப்பீடு செய்யப்போகின்றோம் என்பது பற்றி செயற்பாட்டாளர்கள் குறிப்பிடல் வேண்டும். குறிப்பாக ஆரம்பத்தில் மேற்கொண்ட ஊகங்கள் தொடர்ந்தும் பெறுமதியானவையா என்பதைத் தீர்மானித்தல் வேண்டும். பின்வருவனவற்றைத் தீர்மானிப்பதற்காகவும் மீள்மதிப்பீடு அவசியமாகிறது:

» புதிய தகவல்கள் சேகரிக்கப்பட்டதன் விளைவாக எத்தகைய மேலதிக வேலைகள் அவசியப்படுகின்றன?

» உங்களது குறிப்பிட்ட ஆவணப்படுத்தல் செயன்முறைக்கு மேலதிக வளங்கள் பிரயோகிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளதா அல்லது மீள் நியமிக்க வேண்டிய அவசியம் உள்ளதா?

» குறிப்பிட்ட கால வரையறையினுள் அதன் விளைவுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமா அல்லது அடைய முடியுமா?

» ஆவணப்படுத்தல் திட்டத்தினை சீரமைக்க வேண்டிய அவசியம் உள்ளதா?

» ஆவணப்படுத்தல் செயன்முறையின் ஏதாவது அம்சத்தினை நிறைவேற்றுவதற்கு புதிதாக இனங்காணப்பட்ட தடைகள் ஏதும் காணப்படுகின்றனவா?

## 9. நன்னடத்தைக் கோவைகள்

குழுவிலுள்ள சகல உறுப்பினர்களும் ஒழுக்கநெறி சார்ந்த முறையிலும் தொழில்வாண்மை மிக்க முறையிலும் நடந்துகொள்வதற்கான கடப்பாடுகளை உடையவர்கள். தாம் ஏன் இவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பது தொடர்பான புரிதல்கள் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர், பிழையான அல்லது மோசமான நடத்தைகளின் காரணமாக ஏற்படக்கூடிய பின்விளைவுகளையும் நன்கு புரிந்திருத்தல் வேண்டும். நன்நடத்தைக் கோவையானது இத்தகைய அர்ப்பணிப்புக்களைத் தொகுப்பதுடன் தொழில்வாண்மைமிக்க முறையில் CARSV ஆவணப்படுத்தல் நடத்தைகளுக்கு வழிகாட்டுகிறது.

CARSV ஆவணப்படுத்தலுக்கு முன்னராக குறிப்பிட்ட ஆவணப்படுத்தல் தொடர்பிலான நன்னடத்தைக் கோவைகளை செயற்பாட்டாளர்கள் உருவாக்குதல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் நன்னடத்தைக் கோவையானது இந்த தேவைகளுக்குப் போதாமல் இருக்கலாம் அல்லது ஆவணப்படுத்தல் செயன்முறையில் பங்குபற்றுகின்ற உறுப்பினர்கள் ஆவணப்படுத்தலை மேற்கொள்கின்ற குறிப்பிட்ட அமைப்பின் உறுப்பினர்களாக இல்லாதவர்களாகவும் இருக்கலாம். ஒவ்வொரு குழு உறுப்பினரதும் தொழில்வாண்மை மிக்க நடத்தை சார்ந்த கடப்பாடுகளைப் பிரதிபலிக்கக் கூடியதாக இவை இருத்தல் வேண்டும். அத்தோடு, குழு உறுப்பினர்கள் இணங்கி நடக்க எதிர்பார்க்கின்ற ஒழுக்கநெறி சார்ந்த கொள்கைகளையும் இவை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

குறிப்பாக:

- புலனாய்வாளர்கள் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றுக்கிடையில் இரகசிய உடன்படிக்கைகள் பெரும்பாலும் அவசியப்படுகின்றன. இவற்றுள் சகலவிதமான பொருட்கள், அறிவு, நடைமுறைகள், கூட்டங்கள், தீர்மானங்கள் போன்ற விடயங்கள் தொடர்பான இரகசியத்தன்மை உள்ளடக்கப்படுவது அவசியமாகும். இவை பொது செயற்தளத்தில் காணப்படுவதில்லை.
- இத்தகைய நன்னடத்தைக் கோவைகள் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை தொடர்பான விடயங்களை கட்டாயம் அறிக்கையிடப்பட வேண்டிய தேவைப்பாடுகள் பற்றி குறிப்பிட்டிருக்க வேண்டும். கட்டாய அறிக்கையிடல் தேவைப்பாடுகள் காணப்படுகின்ற சூழலில் சந்தேகத்திற்கு இடமான அல்லது உண்மையான பாலியல் துஷ்பிரயோகம் பற்றி அறிக்கையிடுவதற்கான நடைமுறைகளை செயற்பாட்டாளர்கள் தாபித்தல் வேண்டும்.

கட்டாய அறிக்கையிடல் சட்டங்கள் அல்லது கொள்கைகள் நடைமுறையில் இருக்கும் பட்சத்தில் செயற்பாட்டாளர்கள் பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளித்தல் வேண்டும்:

- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விடயங்களை அறிக்கையிட வேண்டிய தேவை யாருக்குள்ளது?
- அத்தகைய அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்தொதுக்கப்பட்ட அதிகாரிகள் யார்?
- அறிக்கையிடுவதற்கான கடப்பாடு எப்போது ஏற்பட்டது (உதாரணமாக – துஷ்பிரயோகம் தொடர்பான சந்தேகம் இருந்தபொழுது)?
- எத்தகைய தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்படல் வேண்டும்?
- நேரம் மற்றும் ஏனைய நடைமுறைகள் தொடர்பான அறிக்கையிடல் ஒழுங்குவிதிகள் என்ன?
- இரகசியத்தன்மை எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது?
- அறிக்கையிடாமல் விடுவதன் காரணமாக ஏற்படக்கூடிய சட்ட ரீதியான தாக்கங்கள் என்ன?

( IRC/UNICEF ஆகியவற்றிலிருந்து – பாலியல் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பராமரித்தல்: மனிதாபிமான சூழமைவுகளில் சுகாதாரம் மற்றும் சமூக உளவியல் சேவைகளை வழங்குவதற்கான வழிகாட்டிகள் (நியுயோக், NY, 2012))

**பெட்டி 10**

### நன்னடத்தைக் கோவைக் கொள்கைகள் தொடர்பான உதாரணங்கள்

நன்னடத்தைக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒழுக்கநெறி சார்ந்த விடயங்கள் பொதுவாக பின்வரும் கொள்கைகளையும் பெறுமானங்களையும் உள்ளடக்கியதாகவிருக்கும்:னுழ ழே ர்யசஅ

- தீங்கிழைக்க வேண்டாம்
- பாரபட்சமின்மை
- சுயாதீனம் மற்றும் பக்கச்சார்பின்மை
- இரகசியத்தன்மையை மதித்தல்
- கலாசாரங்கள் மற்றும் சமயங்களை மதித்தல்
- தீர்மானம் மேற்கொள்ளலில் சமூக பங்குபற்றுதலை உறுதிப்படுத்தல்.
- மனித உரிமைகள் தொடர்பான அர்ப்பணிப்புகள்.

நன்னடத்தைக் கோவைகளிலுள்ள **செயலாற்றுகை அடிப்படையிலான** அல்லது நடைமுறைப்பொறுப்புகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

- நிதி, பணியாளர்கள், வளங்கள் ஆகியவற்றை எவ்வாறு முகாமைத்துவம் செய்தல்.
- தகவல் பரிமாற்றம் தொடர்பான கொள்கைகள்
- நல்லாட்சி
- உள்ளக முறைப்பாட்டுப் பொறிமுறைகள்.

**CARSV தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோருடன் பணியாற்றுகையில் நன்னடத்தைக் கோவைகள் குறிப்பாக முக்கியத்துவம் பெறுகின்றன:**

- பாதிக்கப்பட்டவர் மைய அணுகுமுறைக்கு ஏற்ப பணியாற்றவும்.
- தீர்ப்பு வழங்க வந்தவர்கள் போன்ற தோற்றப்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய நடத்தைகளை வெளிப்படுத்த வேண்டாம்.
- பாதிக்கப்பட்டவரை குறைகூறவேண்டாம்.
- பாதிக்கப்பட்ட சகலரையும் தன்மானத்துடனும் மரியாதையுடனும் நடத்தவும்
- சான்றுகளின் பிரகாரம் பாதிக்கப்பட்டவர்களது பாதுகாப்பினை முன்னுரிமைப்படுத்தவும்.

அவசியமாயின் நன்னடத்தைக் கோவையில் குழு உறுப்பினர்கள் கையொப்பமிடுவது பொதுவான நடைமுறையாகும்.

## 10. தராதரம் மிக்க செயற்பாட்டு நடைமுறைகள்

எதிர்வுகூறக்கூடிய செயற்பாட்டு நிகழ்வுகள் தொடர்பில் சீரான நடைமுறைகள் மற்றும் பதிலளிப்புகள் பற்றிய தேவைப்பாடுகள் தொடர்பில் செயற்படும் முகமாக உள்ளக தராதரச் செயற்பாட்டு நடைமுறைகளை செயற்பாட்டாளர்கள் தாபித்தல் வேண்டும்.

பின்வருவனவற்றை விருத்தி செய்கின்ற விடயங்களை இவை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

» சாட்சிகளை கையாளுகின்ற நடைமுறைகள்
» ஆவணம், பௌதீக மற்றும் டிஜிடல் ரீதியான சான்றுகளை கையாளுகின்ற நடைமுறைகள்
» பாதுகாப்பு மற்றும் மதிப்பீட்டுத் திட்டங்கள்
» டிஜிடல் பாதுகாப்பு நெறிமுறைகள்
» இரகசியத்தன்மை ரீதியான ஒழுங்குமரபுகள்
» டிஜிடல் முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள கூருணர்வுமிக்க தகவல்கள் மற்றும் லாக்கர்களில் பௌதீக ரீதியாக வைக்கப்பட்டுள்ள பொருட்கள் ஆகியவற்றை யார் அணுகிப்பெறலாம் என்பது தொடர்பான கொள்கைகள். மற்றும் இவற்றை அணுகிப் பெறுகின்ற நபர்களது எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கான காரணம் என்ன (பார்க்க, அத்தியாயம் 13: தகவல்களை களஞ்சியப்படுத்திக் கையாளுதல்)
» தொடர்பாடல் திட்டங்கள்
» எவ்வகையான ஆவணங்கள் (குறிப்புகள், ஒளி, ஒலி வடிவங்கள், புகைப்படங்கள்) ஆவணப்படுத்தல் தொடர்பான உபகரணங்களை எவ்வாறு கையாளுவது.
» வன்முறைகள் இடம்பெற்ற இடங்கள் தொடர்பான நடைமுறைகள்
» ஆற்றுப்படுத்தல்கள் (பார்க்க, அத்தியாயம் 8: தீங்கிழைக்க வேண்டாம்/ ஆற்றுப்படுத்தல்கள்)
» யாராவது பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள், தனியாக உள்ள சிறுவர்கள் அல்லது ஏனைய நபர்கள் ஆகியோரை வேறு இடங்களுக்கு போக்குவரத்துச் செய்தல், அவசரகால உதவிகள் ஆகியன தொடர்பில் நடைமுறையில் உள்ள திட்டங்கள், கொள்கைகள் மற்றும் ஆற்றுப்படுத்தல் ரீதியான தெரிவுகள்.
» தகவல்களை பறிமுதல் செய்வதற்கான இடர்கள் காணப்படும் பட்சத்தில் செயற்பாட்டாளர்கள் அதனை எவ்வாறு அழிக்க முடியும்.

## 11. சுய-பராமரிப்பு

இடர் மிகுந்த, வன்முறையுடன் கூடிய மோதல் சூழலில் பணியாற்றுவதன் காரணமாக மற்றவர்களது துன்பியல் சார்ந்த அனுபவங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை செயற்பாட்டாளர்களுக்கு ஏற்படலாம். இதன் காரணமாக கடும் மற்றவர் மனவடு என்ற நிலையில் குழு உறுப்பினர்கள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இவர்களுக்கு ஏற்படக்கூடிய மனவழுத்தங்களைத் தணிக்கும் முகமாக அமைப்பு மற்றும் செயற்பாட்டு ரீதியிலான மட்டங்களில் செயற்பாட்டாளர்களுக்காக பொருத்தமான சுய-பராமரிப்பு நடைமுறைகளை விருத்திசெய்தல்.

பாலியல் வன்முறை தொடர்பான ஆய்வு முன்னெடுப்புகள், பாலியல் மற்றும் நெருங்கிய வாழ்க்கைத் துணை வன்முறைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டவர்களுக்கு ஏற்படுகின்ற மற்றவர் தொடர்பான மனவடுவை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதனைத் தடுத்தல் தொடர்பான வழிகாட்டிகள் ஆகியவற்றிலிருந்து பின்வரும் உதாரணங்கள் பெறப்பட்டுள்ளன (பிறிரோரியா 2015)

செயன்முறைகளும் பாதுகாப்புகளும் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

» குழு உறுப்பினர்களுக்கான பேட்டிகளானது தனிப்பட்டவர்களது தாக்குப்பிடிக்கும் தன்மை தொடர்பான மதிப்புகள் மற்றும் பரந்த அனுபவம் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான ஆவணங்களுக்கு முகங்கொடுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியிருத்தல்.
» பிறர் பற்றிய மனவடு தொடர்பான நோய் அறிகுறிகள் மற்றும் ஏனைய காரணிகள் ஆகியன பற்றி அறிந்துகொள்ளும் முகமாக குழுவிலுள்ள உறுப்பினர்கள் பயிற்றப்பட்டிருத்தல் வேண்டும். அத்தோடு, அவற்றுக்கு எவ்வாறு பதிலளித்தல், உதவிகரமான மேற்பார்வைகளை எவ்வாறு பெற்றுக்கொள்ளல், அவசியமானவிடத்து மனவடு தொடர்பான ஆலோசனைகள் ஆகியன பற்றிய பயிற்சிகளும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
» புலனாய்வாளர்களுக்கு முன்கூட்டிய மற்றும் நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில், பணிக்குப் பின்னர் ஆகிய சந்தர்ப்பங்களில் ஆலோசனைகளை வழங்கக் கூடிய ஆலோசகரை அணுகக்கூடிய வாய்ப்புகள்.
» பல்வேறு விதமான மற்றும் சமநிலையைமப் பேணக்கூடிய விதத்தில் வேலைகளை வழங்குவதன் மூலமாக மனவடுவை ஏற்படுத்தக் கூடிய பொருட்களுடன் ஈடுபடுவதை மட்டுப்படுத்தக்கூடிய முறைகள். இவற்றுள் சுழற்சி அடிப்படையில் தொழில் ரீதியான பொறுப்புக்களை வழங்குதல், இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களை அல்லது குற்றமிழைத்தவர்களை அவர்கள் தொடர்பான கதைகளை பேட்டிகாண்பவர்கள் தொடர்ச்சியாக கேட்கவேண்டிய அவசியம் இல்லை. ஆய்வாளர்கள் குழுக்களாகப் பணியாற்றுதல், அதன் மூலம் குழு உறுப்பினர்களுக்கு கள ரீதியான பேட்டிகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய தொழில்கள், சாரதி, தரவுகளைப் பதிதல், எழுதுவினைஞர் மற்றும்/ அல்லது நிர்வாக ரீதியான தொழில்கள் போன்றவற்றை வழங்கலாம். மற்றும் ஓய்வெடுத்தல், உடற்பயிற்சிகளைச் செய்தல், தியானத்தில் ஈடுபடுதல் போன்ற சுய பராமரிப்புச் சார்ந்த செயற்பாடுகளிலும் ஈடுபட முடியும்.
» ஒரு நாளைக்கு மேற்கொள்ளக் கூடிய பேட்டிகள் மற்றும் ஆய்வுகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தல்.
» புலன் விசாரணைகளில் ஈடுபடுபவர்கள் போதியளவு ஓய்வினை பேட்டிகளுக்கிடையில் பெற்றுக்கொள்கின்றார்கள் என்பதை உறுதிசெய்தல்.
» ஆய்வுகளைப் பொறுப்பேற்பதன் காரணமாக ஏற்படக்கூடிய உணர்வு ரீதியான தாக்கங்களைக் கருத்திற்கொண்டு விசேட இரகசியக் கூட்டங்களை நடத்துதல். ஆவணப்படுத்தலுடன் தொடர்புடைய தொழில்நுட்ப மற்றும் செயற்பாட்டு ரீதியான அம்சங்களை மீளர்பார்வை செய்கின்ற கூட்டங்களை ஏனையவற்றிலிருந்து பிரித்து தனியாக நடத்துதல்.

# அத்தியாயம் 10 உள்ளடக்கம்


## அத்தியாயம் 10: பாலியல் வன்முறைகள் தொடர்பான சான்றுகளின் வகைகள் ............141

A. அறிமுகம் ........................................141

*பெட்டி 1*
சான்றுகள் மற்றும் நடைமுறைகள் சார்ந்த தேவைப்பாடுகளின் தாக்கம்........................................142

*பெட்டி 2*
பகிரங்க மூலத் தகவல்கள்........................................143

கவனிக்க வேண்டிய பிரதான குறிப்புகள்........................................144

*பெட்டி 3*
முரண்பாடு மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை CARSV குற்றங்களுக்கு உள்நாட்டில் வழக்குத் தொடுத்தல் - சான்றுகள் தொடர்பான கேள்விகள்........................................145

**B. சாட்சிப்பத்திரம் மூலமான சான்றுகள் ........................................146**

1. சாட்சிப்பத்திரம் மூலமான சான்றுகள் என்றால் என்ன?........................................146
2. சாட்சிப்பத்திரம் சார்ந்த சான்றுகளை எங்கிருந்து பெற்றுக்கொள்ளலாம் ........................................147
3. சாட்சிப் பத்திரம் மூலமான சான்றுகளின் வகிபாகம் என்ன? ........................................147

*பெட்டி 4*
சரியிணை நண்பர்கள் அனுபவம் - சாட்சியே சான்றாகும்........................................148

**C. ஆவண ரீதியான சான்றுகள; ........................................148**

1. ஆவண ரீதியான சான்றுகள் என்றால் என்ன?........................................148
2. ஆவண ரீதியான சான்றின் வகிபாகம் என்ன?........................................149
3. ஆவண ரீதியான சான்றின் வகிபாகம் என்ன?........................................149

**D. டிஜிடல் சான்றுகள் ........................................150**

1. டிஜிடல் சான்றுகள் என்றால் என்ன?........................................150

*பெட்டி 5*
டிஜிடல் சான்றுகள் சேகரிப்புக் கருவிகளைத் தெரிவு செய்கின்ற பொழுது பரிசீலிக்க வேண்டிய விடயங்கள்..................151

2. டிஜிடல் சான்றினை எங்கே கண்டறிவது? ........................................152

*பெட்டி 6*
சகபாடி அனுபவம் - சமூக ஊடகப் பயன்பாட்டின் உதாரணம் ........................................152

3. டிஜிடல் சான்றின் வகிபாத்திரம் என்ன?........................................153

*பெட்டி 7*
டிஜிடல் சான்றுகளைச் சேகரிப்பதுடன் தொடர்புடைய விசேட அபாய நேர்வுகள்........................................153

**E. பௌதீகச் சான்று........................................154**

1. பௌதீகச் சான்று என்றால் என்ன?........................................154

*பெட்டி 8*
பௌதீகச் சான்றினை என்னால் சேகரிக்க முடியுமா?........................................154

2. பௌதீகச் சான்றுகளை எங்கே கண்டறிவது?........................................155
3. பௌதீகச் சான்றின் வகிபாத்திரம் என்ன?........................................155

*பெட்டி 9*
CARSV க்கான மருத்துவ - சட்டச் சான்றினைப் புரிந்து கொள்ளுதல் ........................................156

# அத்தியாயம் 10: பாலியல் வன்முறைகள் தொடர்பான சான்றுகளின் வகைகள்

## A. அறிமுகம்

மிகவும் சிறந்ததும் நம்பகத்தகுந்ததுமான தகவல்களை அல்லது சான்றுகளைப் பெற்றுக்கொள்வதே ஒவ்வொரு ஆவணப்படுத்தல் செயன்முறையின் நோக்கமாகும்.

பிணக்கிலுள்ள விடயமொன்றைத் தாபிப்பதற்காக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கின்ற பொழுது எண்பிக்கின்ற பெறுமானமும் வடிவமும் உடைய சில வகையான சம்பந்தப்பட்ட தகவல்களை பொதுவாக சான்று என்ற சொல் குறித்து நிற்கின்றது. குற்றவியல் சார்ந்த வழக்குத் தொடுத்தல்களின் பொழுது பொதுவாக எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்க வேண்டிய தேவை உள்ளன. ஆனால் பரிந்துரைத்தல் அல்லது நீதித்துறை சாராத நோக்கங்களுக்காக ஆவணப்படுத்துகின்ற பொழுது செயற்பாட்டாளர்கள் நிரூபித்தல் தொடர்பில் சற்று குறைவான தராதரம் உடையவற்றையும் பிரயோகிக்க முடியும் (உதாரணமாக – எண்பிப்பதன் சமநிலைத்தன்மை அல்லது ஏனையவை). இத்தகைய நெறிமுறை சார்ந்த சூழமைவில் தகவல்கள் மற்றும் சான்றுகள் போன்ற சொற்பிரயோகங்கள் மாறுபட்ட செயற்பாட்டாளர்களினால் மாறுபட்ட நோக்கங்களுக்காக பாலியல் வன்முறை தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. சில வகையான தகவல்கள் முறைசார்ந்த சான்று முறைகளையும் காவல் தொடர் காப்புச் சங்கிலி முறை கொண்டிருத்தல் வேண்டும். ஏனையவற்றுக்கு இவை அவசியமில்லை. எத்தகைய தராதரம் மிக்க சான்று ரீதியான நிருபணங்கள் தமக்கு அவசியப்படுகின்றன அல்லது ஏற்புடையன என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு செயற்பாட்டாளர்களைச் சார்ந்ததாகும். அவர்களது நோக்கத்திற்கு எது அவசியமோ அதனை மையமாகக் கொண்ட தகவல்களைச் சேகரிப்பது இவர்களது பொறுப்பாகும்.

பாலியல் வன்முறையுடன் தொடர்பான ஆவணப்படுத்தலானது சம்பந்தப்பட்ட நிகழ்வு அல்லது சூழல்கள் பற்றிய தகவல்களை வழங்குகின்ற எந்த விடயமாகவும் இருக்கலாம். இது ஆவணப்படுத்தப்படும். இது பின்வருவனவாகவும் இருக்கலாம்:

» ஆய்வு செய்யப்பட்டவைகள் அல்லது கண்டறியப்பட்டவைகள் (உதாரணமாக – கைவிடப்பட்ட தடுப்புக்காவல் நிலையமொன்றில் இருந்து கண்டறியப்பட்ட கைதிகள் தொடர்பான பெயர்ப் பட்டியல், இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அறிக்கை, அல்லது ஒன்லைனில் காணப்பட்ட வீடியோ)

» செயற்பாட்டாளர்களுக்குக் கையளிக்கப்பட்டவை அல்லது நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் கையளிக்கப்பட்டவைகள் (உதாரணமாக – மருத்துவப் பதிவுகளின் பிரதி, கையடக்கத் தொலைபேசி ஒன்றிலுள்ள வரலாற்றுப் பதிவுகள்)

» செயற்பாட்டாளர்களினால் அல்லது மூன்றாந்தரப்பினால் உருவாக்கப்பட்டவைகள் (உதாரணமாக – சாட்சிகளின் கூற்றுக்கள், வன்முறைகள் இடம்பெற்ற இடங்கள் தொடர்பான வரைபடங்கள், காயங்கள் பற்றிய புகைப்படங்கள், காவல் தொடர் காப்புச் சங்கிலிப் பதிவுகள், செயற்பாட்டாளர்களது சுய அவதானிப்புகள் மற்றும் விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வுகள்)

தனிப்பட்ட பாலியல் தாக்கம் தொடர்பான தகவல்களை மாத்திரமல்ல பாலியல் வன்முறைகளின் நோக்கங்களைத் தாபிக்கக் கூடிய விடயங்களையும் செயற்பாட்டாளர்கள் சேகரித்தல் வேண்டும். அத்தோடு, பாதிக்கப்பட்டவர் மீது இழைக்கப்பட்ட ஏனைய வகையான மீறல்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான தகவல்களையும் இவர்கள் சேகரித்தல் வேண்டும். அதாவது சிறையிலடைத்து வைத்தல் அல்லது பாலியல் அடிமைத்தனம் போன்றன. சாதாரண குற்றங்களிலிருந்து சர்வதேச சட்டங்களின் கீழான குற்றங்களைப் பிரித்தறிவதற்கு அவசியமான பின்புலம் மற்றும் பொதுவான அம்சங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய தகவல்களையும் செயற்பாட்டாளர்கள் சேகரித்தல் வேண்டும். மற்றும் மீறல்களுக்கு அல்லது குற்றங்களுக்கு யார் பொறுப்பு என்ற தகவல்களைச் சேகரிப்பதுடன் எவ்வாறு என்பதையும் சேகரித்தல் வேண்டும் (பார்க்க, அத்தியாயம் 4: தனிப்பட்ட குற்றவியல் பொறுப்புகள், மற்றும் அத்தியாயம் 5: அரச பொறுப்புகள்).

பெட்டி 1

## சான்றுகள் மற்றும் நடைமுறைகள் சார்ந்த தேவைப்பாடுகளின் தாக்கம்

அவசியப்படுகின்ற பாலியல் வன்முறை தொடர்பான சான்றுகள் வகை மற்றும் யாரால், எவ்வாறு அசை சேகரிக்கப்படல் வேண்டும் மற்றும் பாதுகாக்கப்படல் வேண்டும் போன்றவற்றை ஏற்றுக்கொள்ளும் தன்மையானது நீதித்துறை நியாயாதிக்கங்கள் மற்றும் பொறுப்புக் கூறல் பொறிமுறைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப மாறக்கூடியதாகவுள்ளன (காவல் தொடர் காப்புச் சங்கிலி). குற்றவியல் சார்ந்த வழக்குகளைப் பொறுத்த வரையில் சான்றுகளை ஏற்றுக்கொள்ளும் தன்மையானது மிகவும் இறுக்கமானதாகவும் விரிவானதாகவும் காணப்பட்ட பொழுதிலும் கூட, குற்றவியல், மனித உரிமைகள் அல்லது ஏனைய வகையான பொறுப்புக் கூறல் பொறிமுறைகள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் இவற்றுக்கு ஏற்புடைய திட்டவட்டமான நெறிமுறைகள் இல்லை. ஏதாவது ஆவணப்படுத்தல் செயன்முறையொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் எந்த விடயங்கள் தொடர்பில் அவர்கள் செயற்படுகின்றனவோ அவற்றுடன் தொடர்புடைய சான்றுகள் மற்றும் நடைமுறை சார்ந்த தேவைப்பாடுகள் ஆகியன பற்றி செயற்பாட்டாளர்கள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். குறிப்பாக பாலியல் வன்முறைகள் சார்ந்த விடயங்களை நிரூபிப்பதற்கு எத்தகைய சான்றுகளை அவர்கள் சிவில் குற்றவியல் அல்லது ஏனைய நிறுவனங்களிடம் கையளித்தல் வேண்டும். மற்றும் அத்தகைய தகவல்களைச் சேகரித்து அவற்றைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான அனுமதிகள் எத்தகைய அமைப்புகளுக்கு அல்லது நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும்.

சில சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு சில வகையான சான்றுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. உதாரணமாக, மற்றொரு நபர் கூறுவதை தான் கேட்டதன் மூலம் அறிந்துகொண்டதாக சாட்சி ஒருவர் சான்றாகத் தெரிவிக்கின்ற விடயங்களை பல்வேறு விதமான பொதுவான சட்டத்தின் கீழ் நியாயாதிக்கம் உடைய நீதிமன்றங்கள் அவற்றை ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் இவை தொடர்பில் விசேட விதிவிலக்குகள் உள்ளன என்பதையும் கருத்திற்கொள்ளவும். வாய் மூலமான சான்றுகளுக்குப் பதிலாக முன்கூட்டிய சாட்சிகளை ஏற்றுக்கொள்வதற்கு குற்றவியல் நீதிமன்றங்கள் மறுக்கலாம். இதற்கு எதிர்வாதி சவால்களை விடுக்க முடியும்.

ஐ.சீ.சீ. விதிகள் தொடர்பான நடைமுறைகள் மற்றும் சான்றுகள் (RPE) ஆனது ஏற்றுக்கொள்ள முடியத சான்றுகள் வகை பற்றி எதனையும் குறிப்பிடவில்லை. இருப்பினும் சான்று ரீதியான பகுப்பாய்வுகள் பற்றி நெகிழ்ச்சித்தன்மையுடைய வரைவுச்சட்டகமொன்றை அவை வழங்குகின்றன.[1] அதனடிப்படையில் பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு சான்றுகளை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம்:

» சம்பந்தம்

» நிகழ்தகவுப் பெறுமதி

» அனுகூலமற்றவையை உண்டாக்குகின்ற தாக்கம்

ஐ.சீ.சீ. மற்றும் ஏனைய சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள் மற்றும் நியாயாதிக்கங்கள் ஆகியன சான்றுகளைச் சமர்ப்பிப்பது தொடர்பில் இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றவில்லை. பல சான்றுகள் இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. சான்றுகள் தொடர்பான கேள்விகள் பெரும்பாலும் அதன் பொருத்தப்பாடுகள் மற்றும் காத்திரத்தன்மை ஆகியன தொடர்பிலேயே அக்கறையைச் செலுத்துகின்றன. அதனை ஏற்றுக்கொள்வது பற்றிய விடயங்களை விட இவற்றுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றன. (உதாரணமாக – பாதிக்கப்பட்டவரது கடந்த கால பாலியல் நடத்தைகள் பற்றிய விடயங்கள் சம்பந்தமற்றவை). இருப்பினும் உள்நாட்டு மட்டங்களில் சீது மிகவும் மட்டுப்பாடுகளைக் கொண்டது. செயற்பாட்டாளர்கள் இதற்காக அத்தியாயம் 4 ஐப் பயன்படுத்த முடியும்: தனிப்பட்ட குற்றவியல் பொறுப்புகள், பிரிவு ஈ: நெகிழ்ச்சித்தன்மையுடைய சான்றுகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நீதிமன்றச் செயன்முறையின் பொழுது பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் பங்குபற்றுவதை மேம்படுத்தும் முகமாக தற்போதைய சீது இற்கு முன்னேற்றகரமான பொருட்கோடல்களை வழங்குவது தொடர்பான பரிந்துரைகள், அவற்றைப் பாதுகாக்கின்ற அதேவேளை பாலியல் வன்முறை சார்ந்த குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறல்களையும் பேணுதல் வேண்டும்.

1 ஐ.சீ.சீ நடைமுறை மற்றும் சான்றுகள் (63) மற்றும் (64) பற்றிய விதிகள். http://www.icc-cpi.int.

சகலவிதமான சான்றுகளையும் 4 வகையாக வகைப்படுத்தலாம். அவையாவன:

» நட்சாட்சிப்பத்திர சான்று

» ஆவண ரீதியான சான்று

» டிஜிடல் சான்று

» பௌதீகவியல் சான்று (தடயவியல் சான்றுகள் உள்ளடங்கலாக)

சான்றுகள் இந்த 4 வகைகளுக்குள் உள்ளடங்கிய பொழுதிலும் கூட ஒவ்வொரு சான்றுகளுக்கு இடையிலும் நெருங்கிய தொடர்புகளும் ஊடாட்டங்களும் காணப்படுகின்றன. ஒன்று மற்றொன்றுக்கு உதவிசெய்யக் கூடியதாகவும் அதனை வலுப்படுத்தக்கூடியதாகவும் இருக்கலாம். உதாரணமாக – வன்முறைச் சம்பவம் இடம்பெற்ற இடமொன்றில் சித்திரவதை தொடர்பான உபகரணமொன்று எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதை அதனை நேரடியாகக் கண்ட ஒருவர் விளக்கமளிக்கலாம். அல்லது சான்றுகளுக்காககச் சேகரிக்கப்பட்ட ஆவணங்களுடைய அர்த்தங்களை அதிகரிக்கக் கூடிய விதத்திலான பொருட்கோடல்களை செயற்பாட்டாளர்களுக்கு வழங்கலாம். சான்றுகளைச் சேகரிக்கின்ற முறை, அவற்றைக் களஞ்சியப்படுத்துகின்ற முறை ஆகியவற்றின் காரணமாக ஒரே விதமான விடயங்கள் மீண்டும் மீண்டும் நிகழ்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. சான்று ஒன்று சேகரிக்கப்பட்டு அது டிஜிடல் வீடியோவாக பாதுகாக்கப்படலாம். அல்லது ஆவணமொன்று டிஜிடல் மயப்படுத்தப்பட்டு பாதுகாக்கின்ற பொழுது அச்செயல் மீண்டும் இடம்பெறலாம். உள்ளடக்கத்தை மையமாகக் கொண்டு ஆவணமொன்று சான்றுகளை உள்ளடக்கியிருக்கலாம் (ஆவணம்) ஏனெனில் அதில் ஓர் இலட்சனை காணப்படுவதன் காரணமாக அதிகாரம் மிக்கதாக அதனைக் கருதுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

குறிப்பிட்ட சம்பவம் இடம்பெற்றது என்பதைக் காட்டுவதற்குச் சில வகையான சான்றுகள் பயன்தரக்கூடியதாக இருக்கலாம். உதரணமாக – மருத்துவ ரீதியான பதிவுகள் போன்றன. அதேவேளை நிகழ்ச்சிகள் சார்ந்த தரவுகளானவை குறிப்பிட்ட வகையான குற்றங்கள் தொடர்பான பெறுமதிகளை அதிகரிப்பதற்கு உதவலாம் (சான்று வகை) (பார்க்க அத்தியாயம் 14: சான்றுகளையும் தகவல்களையும் பகுப்பாய்வு செய்தல், பெட்டி 11: சில வகைகளைத் தாபிப்பதற்காக நிகழ்வு சார்ந்த சான்றுகளைப் பயன்படுத்தல்) சில வகையான சான்றுகள் அதாவது, சாட்சிகள் அல்லது வைத்தியர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட நட்சாட்சிப் பத்திரங்கள் தாதிகள் அல்லது மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் வழங்குகின்ற சான்றுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வன்முறைகள் அல்லது மீறல்களின் நோக்கம் எத்தகையது என்பதைத் தாபிக்க முடியும். அதேவேளை, ஏனைய விதமான சான்றுகள் தனிப்பட்ட முறையிலும் குற்றங்களை நிரூபிப்பதற்கு உதவுகின்ற ஆவணங்களாகவும் இருக்கலாம். குறிப்பிட்ட கிராமமொன்றைச் சேர்ந்த பாரியளவிலான நபர்கள் பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்ற பொழுது அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்ற சான்றுகள் அங்கு பரந்தளவில் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன என்பதை நிரூபிப்பதற்கு உதவலாம்.

**பெட்டி 2**

## பகிரங்க மூலத் தகவல்கள்

'பொதுவாக செய்தி ஊடகங்கள், அரசாங்க அறிக்கைகள், கல்விசார் பணிகள், சமூக ஊடகம், ஒன்லைன் வீடியோக்கள், படங்களைப் பரிமாறிக் கொள்ளும் கருவிகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கின்ற தகவல்கள் பகிரங்க மூலத் தகவல்கள் எனப்படுகின்றன. (பார்க்க, பிரிவு இ: ஆவண ரீதியான சான்றுகள் மற்றும் ஈ: டிஜிடல் ரீதியான சான்றுகள்)

பகிரங்க மூலங்களிலிருந்து சேகரிக்கப்படுகின்ற தகவல்களானது பல சந்தர்ப்பங்களில் சான்றுகளாக ஏற்றுக்கொள்ளக் கூடியன. ஆனால் அதன் நம்பகத்தன்மை தொடர்பில் பல பிரச்சினைகள் இருக்கலாம். ஆகவே அதன் நிகழக்கூடிய தன்மை பற்றிய பெறுமதிகளை கேள்விக்குட்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. அதனை உறுதிப்படுத்துவது முக்கியமாகும். பகிரங்க மூலத் தகவல்களுடன் செயற்படுகின்ற பொழுது முதன்முதலில் அதனை உறுதிப்படுத்திக்கொள்வது மிகவும் முக்கியமாகும். சரியாக உறுதிப்படுத்திக் கொள்ளாமல் அங்குள்ள தகவல்கள் உண்மையானவை என செயற்படுத்துனர்கள் ஊகிக்கக் கூடாது. (உதாரணமக- ஒன்லைனில் உள்ள வீடியோ ஒன்றை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது சிலவேளைகளில் அங்கு பின்புலமாகக் காட்டப்பட்டுள்ள இடத்திற்கும் சம்பந்தப்பட்ட நிகழ்விற்கும் எவ்வித தொடர்பும் இல்லாமல் இருக்கலாம். ஆகவே ஆவணப்படுத்தப்பட்ட நிகழ்வை அது உண்மையில் பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்பதை அறியமுடியும்).

பகிரங்க மூலத் தகவல்களைப் பயன்படுத்தக் கூடியதாக இருந்த பொழுதிலும் CARSV தொடர்பான விடயங்களின் பொழுது புலனாய்வு சார்ந்த மூலமாக இதனை பயன்படுத்துவதில் சிரமங்கள் இருக்கின்றன. பகிரங்க மூலங்களில் இருந்து தகவல்களைப் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்களில் சில வேளைகளில் அத்தகை தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் முகமாக அதனைத் தயாரித்த நபரையும் நேரில் சமூகமளித்து உறுதிப்படுத்துவதற்கான தேவைகளும் எழலாம். (அதனைத் தயாரித்த ஊடகவியலாளர், புகைப்படக் கலைஞர், திரைப்படத் தயாரிப்பாளர் போன்றோர்). பின்புலம் சார்ந்த அல்லது நீதித்துறை சார்ந்த சான்றுகளாகக் கருதக்கூடிய சில் பகிரங்க மூலத் தகவல்களைப் பொறுத்தவரையில், அதாவது யுத்தமொன்றைப் பிரகடனப்படுத்தியமை போன்றன நீதித்துறையைப் பொறுத்தவரையில் நம்பகமான தகவல்களாக ஏற்றுக்கொள்ளலாம்.

பகிரங்க மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்கின்ற தகவல்கள் மாத்திரம் போதாது. சட்ட ரீதியாக நிரூபிக்கும் முகமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் பெற்றுக்கொண்ட ஏனைய வகையான சான்றுகளும் அவசியப்படலாம். நேரில் கண்ட சாட்சிகளிடமிருந்து பெற்றுக்கொள்கின்ற தகவல்கள் விரும்பத்தக்கது. மோதல்களினால் பாதிக்கபடப்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற பௌதீக ரீதியான அபாயங்களைக் கருத்திற்கொண்டு கணினி அல்லது ஏனைய தொழில்நுட்பக் கருவிகள் மூலமாகப் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பகிரங்க மூலத்தகவல்கள் பாதுகாப்பானவை. இது ஆவணப்படுத்தல் செயன்முறையை பாதுகாப்பு மிக்கதாக மாற்றியமைப்பதுடன் மரபு ரீதியாக நேரில் கண்டவர்களினால் வழங்கப்படுகின்ற சாட்சிகளை விட செலவு குறைந்ததாகும்.[2]

2 ஹைட், கே (2016) 'வழக்குகள் தொடர்பான பகிரங்க மூலச் சான்றுகள், யாலே சட்ட சஞ்சிகை ஒன்றியம், 125, 2015-2016: 323–330.

*பல்வேறு வகையான ஆவணங்களைப் பொறுத்தவரையில்... பௌதீக ரீதியான சான்றுகளைச் சேகரிப்பது சட்ட ரீதியாகவோ அல்லது சான்றுகள் சார்ந்தோ அவசியமில்லை...*

## கவனிக்க வேண்டிய பிரதான குறிப்புகள்

» சில வகையான சான்றுகள், அதாவது பௌதீக ரீதியான சான்றுகள் போன்றன அவற்றைச் சேகரிப்பதற்கும் மற்றும்/ அல்லது செயன்முறைக்குள்ளாக்குவதற்கும் கையாளுவதற்கும் மற்றும் சேமிப்பதற்கும் விசேட சட்ட ரீதியான அங்கீகாரங்கள் அல்லது அதிகாரமளித்தல்கள் அவசியம் என்பதைக் கருத்திற்கொள்ளல் வேண்டும். இவற்றைப் பயிற்றப்பட்ட தொழில்வாண்மை மிக்கவர்கள் மேற்கொள்ளல் வேண்டும். அவசியமான அதிகாரங்களோ அல்லது பயிற்சிகளோ அற்ற செயற்பாட்டாளர்கள் இத்தகைய ஆவணங்களை சேகரித்தல் கூடாது. இவர்கள் இதனை பிழையாக கையாளுவதற்கான வாய்ப்புகள் இருப்பதோடு, அவை பயனற்றதாகவும் மாறலாம். இதன் காரணமாக நீதிமன்றங்கள் இவற்றை ஏற்றுக்கொள்ளாமல் விடலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் வேறுவிதமான பதிவுசெய்தலையோ அல்லது ஆவணப்படுத்தலையோ மேற்கொள்ளலாம் (உதாரணமாக – புகைப்படம் எடுத்தல்).

» பல்வேறு விதமான ஆவணப்படுத்தல்களைப் பொறுத்த வரையில் குறிப்பாக பரிந்துரைத்தல் அல்லது நீதி சாராத நோக்கங்களின் பொழுது பௌதீக ரீதியான சான்றுகளைச் சேகரிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இத்தகைய விடயங்களை தராதரம் மிக்கவையாக மாற்றியமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன (உதாரணமாக- சமநிலையான நிகழ்வுகள் அல்லது ஏனையவை). இத்தகைய ஆவணங்கள், வரைபுகள், புகைப்படங்கள், பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் வழங்குகின்ற சாட்சிகளை மேற்குறிப்பிட்ட விடயங்களைப் பயன்படுத்தி தராதரம் மிக்கவையாக அமைக்கலாம்.

» பல்வேறு சந்தர்ப்பங்களில் குற்றங்கள் அல்லது மீறல்கள் நீண்ட காலத்திற்கு முன்னர் இழைக்கப்பட்டிருப்பதன் காரணமாக சான்றுகள் பழுதாகியிருக்கலாம் அல்லது அவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். அட்டூழியங்கள் இழைக்கப்பட்ட காலப்பகுதியில் மருத்துவச் சேவைகள் குறைவாக இருந்திருக்கலாம். அல்லது ஏனைய காரணிகளினால் பௌதீக அல்லது டிஜிடல் ரீதியான சான்றுகளோ ஆவணப்படுத்தல்களோ இல்லாதிருந்திருக்கலாம். இத்தகைய சந்தர்ப்பத்தில் இதனைச் சேகரிக்க முடியாது. இத்தகைய சந்தர்ப்பங்களில் பாலியல் வன்முறைகள் தொடர்பில் சேகரிக்கக் கூடிய ஒரேயொரு ஆவணமாக அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்ற நற்சான்றிதழ்கள் மாத்திரமே இருக்கலாம். ஆகிவேதான் பேட்டிகாண்கின்ற தொழில்நுட்பங்கள் தொடர்பில் முக்கிய வலியுறுத்தல்களை இந்த நெறிமுறை மேற்கொள்கின்றது. அதாவது, ஏனைய வடிவிலான சான்றுகள் தொடர்ந்தும் பொதுவான அம்சங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் வகைகள் ஆகியவற்றைத் தாபிப்பதன் நிமித்தம் அங்கு இருக்கலாம்.

» CARSV போன்ற சர்வதேச குற்றங்களைக் கருத்திற்கொண்டு நோக்குகையில், பாலியல் வன்முறைக் குற்றங்கள் தொடர்பான சான்றுகளாக இவற்றை ஆவணப்படுத்துவது முக்கியமாகும். பல சந்தர்ப்பங்களில் பாலியல் வன்முறைகள் மற்றும் பாரியளவிலான குற்றங்கள் ஆகியவற்றை ஆவணப்படுத்துகின்ற செயற்பாட்டாளர்கள் பாலியல் வன்முறை தொடர்பான குற்றங்களைப் பற்றி மாத்திரமே அக்கறைகளைச் செலுத்துகின்றனர். அதனோடு தோடர்புடைய சூழமைவு சார்ந்த சான்றுகளைச் சேகரிக்கபதற்கு மறந்து விடுகின்றனர் அல்லது அத்தகைய சான்றுகளின் முக்கியத்துவத்தை குறைமதிப்பீடு செய்கின்றனர். ஆனால், இவற்றை நிருபிப்பதற்கு அவை அவசியம் என்பதைக் கருத்திற்கொள்ளல் வேண்டும் (உதாரணமாக –ஆயுத மோதல் காணப்பட்டமை அல்லது குறிப்பிட்ட சிவில் சமூகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பரந்தளவிலான திட்டமிடப்பட்ட தாக்குதல்கள் போன்றன).

பெட்டி 3

## முரண்பாடு மற்றும் கொடுமை தொடர்புபட்ட பாலியல் வன்முறை CARSV குற்றங்களுக்கு உள்நாட்டில் வழக்குத் தொடுத்தல் - சான்றுகள் தொடர்பான கேள்விகள்

குற்றங்கள் தொடர்பில் காணப்படுகின்ற வலைவிலக்கணங்கள், பொறுப்புக் கூறல் வகைகள் (பொறுப்புக் கூறக்கூடியவர்கள் யார், இணைந்த குற்ற நடவடிக்கைகள்) உள்நாட்டு மற்றும் சர்வதேச நீதிமன்றங்களில் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான நடைமுறை சார்ந்த பாதுகாப்புக்கள் ஆகியவற்றுடன் நெருங்கி தொடர்புடையதாக சான்றுகள் தொடர்பான தேவைப்பாடுகள் காணப்படுகின்றன. செயற்பாட்டர்கள் மத்தியில் எழுகின்ற பிரதானமான கேள்வி யாதெனில், உள்நாட்டு நியாயாதிக்கங்கள் மிகவும் நெகிழ்ச்சித்தன்மை உள்ள முறையில் சான்றுகளின் தராதரங்களைப் பேணுமா, சர்வதேச சட்டத்தின் கீழ் உள்நாட்டு நீதிமன்றங்களில் பாலியல் வன்முறைகளை ஓர் குற்றமாகக் கருதி அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுப்பதற்கான வாய்ப்புக்களை சர்வதேச மற்றும் கலப்பு நீதிமன்றங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் காத்திரமான சீநு (நடைமுறை மற்றும் சான்று விதிகள்) அடிப்படையில் மேற்கொள்ள முடியுமா என்பதாகும். நெகிழ்ச்சித்தன்மையுடைய சீநு ஐ அதிகளவில் கூட்டிணைப்பதன் காரணமாக சர்வதேச சட்டங்களின் கீழ் குற்றங்கள் தொடர்பான சர்வதேச வரைவிலக்கணங்களை உள்ளூர்மயப்படுத்த முடியும்.

**I. CARSV தொடர்பில் உள்ளூரில் வழக்குத் தொடுக்கின்ற பொழுது சான்றுகள் தொடர்பான கேள்விகள்.**

» CARSV தொடர்பான வழக்குத் தொடுத்தல்களை மேற்கொள்கின்ற பொழுது எத்தகைய சீநு முறையை தேசிய நீதிமன்றங்கள் பின்பற்றும்?

**II. அளவுகளிலும் CARSV தொடர்பான சூழமைவுகளிலும் மாற்றங்களைப் பிரதிபலிக்கின்ற RPE ஐ ஏற்றுக்கொள்ளல்[3]**

சர்வதேச நீதிமன்றங்கள் மற்றும் உள்நாட்டு நீதிமன்றங்கள் ஆகியவற்றுக்கிடையிலான பிரதான வித்தியாசங்கள் பின்வருவனற்றையும் உள்ளடக்கியிருக்கும்:

» குற்றம் தொடர்பான ஆக்கக் கூறுகள்

» பொறுப்புக்கூறும் வழிமுறைகள்

» நடைமுறை மற்றும் சான்றுகள் தொடர்பான விதிகள்

ICTR RPE[4] மற்றும் ICTY RPE[5] ஆகியவற்றின் 96 ஆம் விதியானது பாலியல் வன்முறையின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்காக பின்வரும் பிரதான பாதுகாப்புக்களைத் தாபித்துள்ளது:

» பாதிக்கப்பட்டவரது சான்றுகளை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை

» பாதிக்கப்பட்டவரது கடந்தகால பாலியல் வாழ்க்கை தொடர்பான தகவல்களைச் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

» யுத்தம், பாரியளவிலான வன்முறைகள், தடுப்புக்காவலில் வைத்திருத்தல் போன்ற சூழமைவுகளில் சம்மதம் தொடர்பான விடயங்கள் அவசியமில்லை. இத்தகைய சூழல்கள் பலவந்தச் சூழல்களாகக் கருதப்படுகின்றன.

ICC RPE இத்தகைய பாதுகாப்புகளை தமது 70, 71 மற்றும் 72.[4] ஆம் விதிகளில் மேலதிகமாகச் சேர்த்துள்ளனர். 63 ஆம் விதியின் பிரகாரம் ICC இன் நியாயாதிக்கத்தின் கீழ் எத்தகைய குற்றங்களையும் நிரூபிப்பதற்கு உறுதிப்படுத்தல் அவசியமற்றதாகும்

சர்வதேச மற்றும் கலப்பு நீதிமன்றங்களைப் போலல்லாது தேசிய நீதிமன்றங்கள் அல்லது நியாயாதிக்கங்களில் சான்றகளை உறுதிப்படுத்துவது பெரும்பாலும் அவசியமாகும். ஒரு வழக்கினை நீதிமன்றத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு மருத்துவ ரீதியான அல்லது தடயவியல் ரீதியான சான்றுகள் முறைசார்ந்த முறையிலோ அல்லது முறைசாரா முறையிலோ தேவைப்பாடுகளாக இருக்கலாம். பெரும்பாலும் இத்தகைய சான்றுகள் இல்லாத நிலைமை காணப்படுவதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை இழக்கின்றனர். பாலியல் வன்புணர்வு இடம்பெற்றதாக அறியமுடிகின்ற பொழுதிலும் கூட அது தொடர்பான தடயவியல் சான்றுகளையோ அல்லது மருத்துவ ரீதியான சான்றுகளையோ பெற்றுக்கொள்ள முடியாத நிலைமைகளே காணப்படுகின்றன. வன்முறை இடம்பெற்ற சூழ்நிலை இதற்கான பிரதான காரணியாகும். தாக்குதல் இடம்பெற்ற தருணம் மற்றும் மருத்துவ ரீதியான மதிப்பீடு ஆகியவற்றுக்கிடையிலான காலப்பகுதி சில வேளைகளில் அதிகமாகவிருக்கலாம். மற்றும் தடயவியல் ரீதியான சான்றுகளை சேகரிப்பதற்கான தொழில்நுட்பம் இல்லாத நிலைமைகளும் இருக்கலாம். இத்தகைய சான்றுகள் இன்மையின் காரணமாக சட்ட நடவடிக்கைகள் அல்லது வழக்குத் தொடுத்தலை இவை தடுக்கலாம். நீதியைப் பெற்றுக்கொள்ள முனைகின்ற பாதிக்கப்பட்டோருக்கு இதுவோர் தடையாக இருக்கலாம்.

**III. கலந்துரையாடுவதற்கான கேள்விகள் மற்றும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய விடயங்கள்**

உள்நாட்டு நியாயாதிக்கங்கள் RPE ஐ எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றன மற்றும் சர்வதேச நீதிமன்றங்களிலிருந்து எவ்வாறு பாடங்களைக் கற்றுக்கொள்கின்றன என்பது தொடர்பில் அறிந்துகொண்டு தேசிய மட்டத்தில் உடனடியாக கலந்துரையாடல்களை ஆரம்பிக்கும் முகமாக செயற்பாட்டாளர்கள் பின்வரும் கேள்விகளைப் பயன்படுத்தலாம்:

1. CARSV தொடர்பான புலனாய்வுகள் மற்றும் வழக்குத் தொடுத்தல்கள் ஆகியவற்றை உள்ளூரில் மேற்கொண்ட பொழுது எத்தகைய சான்றுகள் தொடர்பான தேவைப்பாடுகள் எழுந்தன?
2. உள்ளூர் நீதிமன்றங்களில் CARSV தொடர்பான வழக்குத் தொடுத்தல்களை இலகுபடுத்தும் முகமாக எத்தகைய புத்தாக்க ரீதியான, சட்ட ரீதியான உபாயங்கள் விருத்திசெய்யப்பட்டன?
3. CARSV தொடர்பான வழக்குத் தொடுத்தல்களுக்கு சர்வதேச நீதிமன்றங்கள் பயன்படுத்தியவைகளுக்கு நிகரான புத்தாக்கம் மிக்க RPE முறைகளை ஏற்றுக்கொள்வது தொடர்பில் உள்ளூர் நியாயாதிக்கங்கள் பரிசீலித்தனவா? தடைகள் யாவை? அத்தகைய தடைகளை எவ்வாறு மீற முடியும்?

---

3 சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் பொறிமுறை 2014, பாலியல் வன்முறைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்: மோதல்களுக்குப் பின்னரான பிராந்தியங்களில் பாலியல் வன்முறைக் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் பற்றிய சிறந்த நடைமுறைக் கையேடு: ருவண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்களிலிருந்து வழக்குத்தொடுனர் அலுவலகத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் http://www.unictr.org/.

4 ICTR, நடைமுறை மற்றும் சான்றுகள் தொடர்பான விதிகள் (விதிகள் 96), மீளாய்வு 22. 1995 ஜூன் 29 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2013 ஏப்ரல் 10 இல் திருத்தப்பட்டது. http://www.unictr.org/.

5 ICTYஇ நடைமுறை மற்றும் சான்றுகள் தொடர்பான விதிகள் (விதிகள் 96), மீளாய்வு 49. 1994 பெப்ரவரி 11 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது 2013 மே 22 இல் திருத்தப்பட்டது. http://www.icty.org/sid/136.

6 நடைமுறை மற்றும் சான்றுகள் தொடர்பான ஐ.சீ.சீ. விதிகள் (விதிகள் 70, 71, 72). முக்கிய குறிப்பு 1.

## B. சாட்சிப்பத்திரம் மூலமான சான்றுகள்

### 1. சாட்சிப்பத்திரம் மூலமான சான்றுகள் என்றால் என்ன?

சாட்சிப்பத்திரம் மூலமான சான்றுகள் எனும் பொழுது பாதிக்கப்பட்டவர்கள், நேரில் கண்ட சாட்சிகள், உள்ளிருந்த சாட்சிகள், தொடர்ச்சியாகக் கண்ட சாட்சிகள், நிபுணத்துவச் சாட்சிகள், சந்தேகத்திற்கு இடமானவர்கள் ஆகியோர் (இதன் பிரதான இலக்குப் பார்வையாளர்கள் எவ்வாறிருந்த பொழுதிலும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய உண்மை விடயம் சார்ந்த சாட்சிகளின் சாட்சிப்பத்திரம் தொடர்பில் இவ் ஒழுங்குமரபு அக்கறை செலுத்துகிறது.) தமது ஐம்புலன்களில் ஒன்றின் மூலமாக அனுபவித்த விடயம் பற்றி எடுத்துக்கூறுவதாகும்.

சாட்சிப்பத்திரம் மூலமான சான்றுகளின் தன்மை பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. இவற்றுள் சாட்சிகளதும் பேட்டிகாண்பவர்களது சாட்சிகளை மீட்டுப்பார்க்கும் ஆற்றல் மற்றும் தொலைத்தொடர்பாடல் ஆற்றல்கள் ஆகியன நம்பகத்தன்மையின்[7] பொருட்டு நட்சாட்சிப்பத்திரம் மூலமான சான்றுகள் மதிப்பீடு செய்யப்படல் அவசியமாகும் (பார்க்க, அத்தியாயம் 14: தகவல்களையும் சான்றுகளையும் பகுப்பாய்வு செய்தல், பாலியல் வன்முறை தொடர்பான நட்சாட்சிப்பத்திர ரீதியான தகவல்களை மதிப்பீடு செய்தல்)

சாட்சிப்பத்திரம் மூலமான சான்றுகளை வாய்மொழி மூலமாக நேரடியாக நிதிமன்றங்களில் வழங்கலாம் அல்லது பேட்டிக் குறிப்புகள் வடிவத்தில் எழுத்து மூலமாக பதிவுசெய்யப்பட்டு அல்லது சாட்சிகளின் கூற்றுகளாக உறுதிமொழி மூலமாக அல்லது ஓடியோ அல்லது வீடியோ போன்ற மின்னியல் வடிவில் பதிவுகளை மேற்கொண்டு நீதிமன்றங்களில் வழங்கலாம் (பார்க்க, அத்தியாயம் 11: பேட்டிகாணல், பிரிவு ஈ: பேட்டித் தகவல்களைப் பதிவுசெய்தல் மற்றும், பெட்டி 11: சரியிணை நண்பர்களது அனுபவம் - தகவல்களைப் பெற்றுக்கொண்டு பதிவுசெய்தல்).

வழக்கமான அல்லது மாதிரி இடத்திற்கான பாலியல் வன்முறை பற்றிய சாட்சிப்பத்திர மூலமான சான்றுகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருக்கலாம்[8]:

- அறிந்திருப்பின், பாலியல் வன்முறை நடைபெற்ற இடம், நேரம், திகதி போன்றன பற்றிய துல்லியமான தகவல்களை இயலுமானவரை வழங்குதல்.
- பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி சம்பந்தப்பட்ட வன்முறை தொடர்பான குற்றங்கள் இழைக்கப்படுவதற்கு முன்னர் அல்லது இழைக்கப்பட்ட பொழுது அல்லது அதன் பின்னர் நடைபெற்ற குற்றம் சார்ந்த விளக்கமளித்தல்கள் (உதாரணமாக – தடுப்புக்காவலில் வைத்திருந்த காலப்பகுதி)
- குற்றமிழைத்தவர் அல்லது குற்றமிழைத்தவர்களது கட்டுப்பாட்டின் கீழ் பாதிக்கப்பட்டவர் எவ்வாறு கொண்டுவரப்பட்டார் என்பது தொடர்பான விளக்கங்கள்
- வன்முறை இடம்பெற்ற இடத்திற்கு பாதிக்கப்பட்டவர் எவ்வாறு கொண்டுசெல்லப்பட்டார் என்பது தொடர்பான விளக்கங்கள். உதாரணமாக - அவ்விடம் எவ்வாறு காணப்பட்டது, அங்கு வேறு யார் சமுகமளித்திருந்தார்கள், பாதிக்கப்பட்டவர் எவ்வளவு நேரம் நடந்துசென்றார் அல்லது இழுத்துச் செல்லப்பட்டார் போன்ற விபரங்கள்.
- நிரூபிப்பதற்கு உதவும் முகமாக குற்றம் நடைபெற்ற இடத்தின் பின்புலம் தொடர்பான தகவல்கள். உதாரணமாக – ஆயுத மோதல் அங்கு காணப்பட்டதா அல்லது பொதுமக்களுக்கு எதிராக திட்டமிடப்பட்ட பரந்தளவிலான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டனவா, தாக்குதலை மேற்கொண்டவரது நோக்கத்தை நிரூபிக்கும் முகமாக அவர் எத்தகைய கீழ்த்தரமான வார்த்தைகளைப் பிரயோகித்தார் என்பது தொடர்பான விபரங்கள், அதனை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ குறிப்பிட்ட மக்கள் கூட்டத்திற்கு எதிராக எவ்வாறு பாவித்தார் என்பது பற்றிய விபரங்கள்.
- குற்றமிழைத்தவர்களது தோற்றம், நடத்தை, ஆடை அணிந்திருத்த விதம் பற்றிய விளக்கங்கள். (உதாரணமாக – சீருடைகள் அல்லது ஏனைய உடைகள்) அறிந்திருப்பின் அவர் தொடர்பான அடையாளம்.
- குற்றமிழைத்தவர்கள் பயன்படுத்திய மொழி தொடர்பான விளக்கங்கள் மற்றும் அவர்களில் ஒருவர் மற்றொருவருடன் எவ்வாறு உரையாடினார்கள் என்பது. (உதாரணமாக – பட்டப்பெயர்கள் அல்லது கெப்டன், சீப் என பதவிப் பெயர்களைக் கொண்டு அழைத்தார்களா என்பன). எத்தகைய தகவல்களை மையமாகக் கொண்டு குற்றமிழைத்தவர்கள் தொடர்பான அதிகார ரீதியான கட்டமைப்புகளை இனங்காண முடியும்.
- பாலியல் வன்முறையை நேரில் கண்டவர் தொடர்பான ஏதாவது விளக்கங்கள்.
- பாலியல் வன்முறையின் காரணமாக பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட உடலியல் மற்றும் உளம் சார்ந்த துன்பங்கள் அத்தோடு, இதன் காரணமாக அவருக்கு ஏற்பட்ட பொருளாதார, சமூக, உள, சமூகவியல் சார்ந்த பொறுப்புகள். செயற்படுத்துனர்களது ஆணைக்கு ஏற்ப குறிப்பிட்ட பாலியல் வன்முறை பற்றிய குற்றங்கள்

---

7 பெம்பா வழக்கு முக்கிய குறிப்பு 73, பந்தி 229-330. நீதிமன்றம் இவ்வாறு குறிப்பிட்டது: 'சாட்சியின் நம்பகத்தன்மையை மதிப்பீடு செய்யும் பொழுது ஒவ்வொரு சாட்சியினதும் தனிப்பட்ட சூழ்நிலைகள் பற்றி மன்று பரிசீலித்தது. இவற்றுள் குற்றவாளிகளுக்கும் அவர்களுக்கும் இடையிலான தொடர்புகள், வயது, பாதிப்புறும் தன்மை, கருத்திற்கொள்ளப்படும் நிகழ்வுகள் தொடர்பில் காணப்படுகின்ற ஏதாவது ஈடுபாடுகள், குற்றமிழைத்தாக தானாக ஏற்றுக்கொள்வதனால் ஏற்படக்கூடிய இடர்கள், குற்றவாளி மீது ஏற்படக்கூடிய சாத்தியப்பாடுள்ள பாரபட்சங்கள், மற்றும்/ அல்லது உண்மையைக் குறிப்பிடுவதற்கான உள்நோக்கம் அல்லது பிழையான சான்றுகளை வழங்குவதற்கான நோக்கம் போன்றன. சாட்சியின் சான்று மீதான நம்பகத்தன்மை தொடர்பில் கருத்துரைக்கையில், வழங்கப்பட்ட தகவல்களுக்கு முன்னுரிமையளித்து பெறுமதிமிக்கதாக கருத்திற்கொள்ளவேண்டுமென மன்று தீர்மானித்தது. இதன் நிமித்தம் சான்றுகளை மொத்தமாக இது பரிசீலித்தது. குறிப்பிடப்பிடப்பட்ட விடயங்களின் ஒத்ததன்மை மற்றும் துல்லியத் தன்மை ஆகியன பரிசீலிக்கப்பட்டன: (ii) வழங்கப்பட்ட தகவல்கள் பாராட்டுக்குரியவையா: (iii) சாட்சி ஏற்கனவே வழங்கிய கூற்றுடன் அவரது சான்று முரண்பட்டதா. இறுதியாக பொருத்தமானவிடத்தும் அவசியமானவிடத்தும் சான்றுகளை வழங்கிய பொழுது சாட்சியின் நடத்தை பற்றி மன்று பரிசீலித்தது. இவற்றுள் இவர்களது தயார் நிலைகள் மற்றும் விருப்பங்கள் மற்றும் தரப்பினர்களினால் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்கின்ற விதம், சட்ட ரீதியான பிரதிநிதிகள் ஆகியவற்றை மன்று பரிசீலித்தது.

8 ஆபிரிக்காவில் பாலியல் வன்முறைகள் தொடர்பான பரிகாரங்ள் மற்றும் வழக்குத் தொடுத்தல் உபாய முறைகள் 2012: பரிகாரம் பக்கம் 71-72.

*...உள்ளிருக்கின்ற சாட்சிகளை அணுகித் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுகின்ற பொழுது மிகக் கவனமாக அதனை மேற்கொள்ளவேண்டும். பயிற்றப்பட்ட புலனாய்வாளர்கள் மாத்திரமே இதனை மேற்கொள்ள வேண்டும்*

தொடர்பான தேவைப்படுகின்ற தகவல்களின் தன்மை மாறுபட்டதாக இருக்கலாம் என்பதைக் கருத்திற்கொள்ளவும். தமது நோக்கத்திற்கு அவசியமற்ற சிக்கலான தேவையற்ற கேள்விகளைக் கேட்பதை இவர்கள் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

## 2. சாட்சிப்பத்திரம் சார்ந்த சான்றுகளை எங்கிருந்து பெற்றுக்கொள்ளலாம்

பாலியல் வன்முறைக் குற்றங்கள் தொடர்பான சாட்சிப்பத்திரச் சான்றுகளை பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அது தொடர்பான சாட்சிகளை பேட்டிகாண்பதில் மாத்திரம் அல்லாது இந்தக் குற்றங்களின் ஓர் அங்கமாகக் காணப்படுகின்ற ஏனைய மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் சாட்சிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும் (உதாரணம் - கொலையாளிகள், முடமானவர்கள், அழிவுக்குள்ளான கிராமங்கள், கொள்ளையர்கள்[9]. இத்தகைய சாட்சிகள் பின்வருவனவற்றுள் ஒன்றாகவும் அல்லது அதனை விட அதிகமானதாகவும் இருக்கலாம்:

» பாலியல் வன்முறையின் காரணமாக பாதிக்கப்பட்ட நபர் அல்லது சாட்சி தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை நேரடியாக விளக்கலாம். மற்றும்/ அல்லது ஏனைய பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எடுத்துரைக்கலாம். அதாவது, தடுப்புக் காவலிலுள்ள சக கைதிகளுக்கு ஏற்பட்ட விடயங்களைக் கூறலாம். நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் போன்ற ஆயுத மோதலுடன் தொடர்புடைய முக்கியமான பின்புலம் சார்ந்த தகவல்களைக் குறிப்பிடலாம். அதாவது ஆயுத மோதல் காணப்பட்ட விதம், அப்பிரதேசத்தில் இருந்த ஏயை குழுக்கள், அருகிலிருந்த சோதனைச் சாவடிகள், பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்கம், அவற்றின் தன்மை, எவ்வளவு காலம் போன்றன.

» தாக்குதல்களை நேரடியாக கண்டவர்கள் அல்லது அது தொடர்பான அனுபவங்களையுடைய குடும்ப உறுப்பினர்கள், சமூக உறுப்பினர்கள், சேவை வழங்குனர்கள், நிவாரணப் பணியாளர்கள் போன்றோர் (உதாரணமாக – சம்பவத்தை நேரடியாகக் கண்டவர்கள் மற்றும் ஏனைய குற்றங்களை நேரடியாகக் கண்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து அவற்றைக் கேட்டறிந்தவர்கள் அல்லது சம்பவத்திற்குப் பின்னர் பாதிக்கப்பட்டவருக்குச் சிகிச்சையளித்தவர்கள்.

» அப்பகுதியில் பணியாற்றிய வைத்தியர்கள், தாதிகள், ஆலோசகர்கள், பிரதேச தலைவர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், இராணுவ அதிகாரிகள் மற்றும் அவதானிப்பாளர்கள் போன்றவர்களிடம் பாலியல் வன்முறையின் காரணமாகவும் ஏனைய குற்றங்களினாலும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான பல்வேறுவிதமான தகவல்கள் இருக்கலாம். இவை நடைபெற்ற காலப்பகுதி, நடைபெற்ற இடம் தொடர்பான தகவல்களும் இவர்களிடம் இருக்கலாம். நிகழ்ந்த குற்றம் தொடர்பில் பொதுவான விடயங்களைத் தாபிப்பதற்கும் பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் அறிந்துகொள்ள முடியும். (பார்க்க, அத்தியாயம் 4: தனிப்பட்ட குற்றவியல் பொறுப்பு, பெட்டி 2: பாலியல் வன்முறை தொடர்பான சந்தர்ப்ப சூழ்நிலைகளை அறிந்துகொள்ளுதல்.

» உள்ளே வசதித்தவர்கள் மற்றும் ஆயுதப் படைகளைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர்கள் அல்லது ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்கள்[10] ஏற்கனவே குற்றமிழைத்தவருடன் சேர்ந்து செயற்பட்டவர்கள், தற்சமயம் ஏற்பட்ட செயலுக்காக வருந்துகின்ற நபர்கள், மிகவும் முக்கியமான சான்றுகளை வழங்க முடியும். ஏனெனில், இவர்கள் குற்றமிழைத்தவர்களுடன் நேரடியாக தொடர்பில் இருந்தவர்கள். அதேவேளை, உள்ளே இருக்கின்ற சாட்சிகளை அணுகுகின்ற பொழுது மிகவும் கவனமாக அணுகுதல் வேண்டும். பயிற்றப்பட்ட புலனாய்வாளர்கள் மாத்திரமே இதனை மேற்கொள்ள வேண்டும்.

» நிபுணத்துவம் மிக்க சாட்சிகள், அதாவது விசேட திறன்களுடன் கூடிய தொழில்வாண்மை மிக்க நபர்களினால் நிபுணத்துவம் சார்ந்த கருத்துக்களை வழங்க முடியும். அதாவது, தடயவியல் சார்ந்த ஆதாரங்கள், இராணுவ தத்துவார்த்தங்கள், அரசியல் கட்டமைப்புகள், வழக்கங்கள், மரபுகள் அல்லது சான்றுகளைத் தெரிவிப்பதன் காரணமாக ஏற்படக்கூடிய மனவடு போன்ற விடயங்களைத் தெரிவிக்க முடியும்.

**ஏனைய நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களையும் சாட்சிப்பத்திர சான்றுகளாக பயன்படுத்துவது தொடர்பில் செயற்பாட்டாளர்கள் பரிசீலிக்கலாம். உதாரணமாக- பாதிக்கப்பட்டவர்களையும் ஏனைய சாட்சிகளையும் தேவையற்ற விதத்தில் மீண்டும் மீண்டும் பேட்டிகாண்பதைத் தவிர்க்கும் முகமாக ஆயுதப் போராட்டம் ஒன்று அப்பிரதேசத்தில் நிலவியதைக் காட்டுதல்.**

## 3. சாட்சிப் பத்திரம் மூலமான சான்றுகளின் வகிபாகம் என்ன?

பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளிடமிருந்து சான்றுகளே பெரும்பாலும் செயற்பாட்டாளர்களுக்கு மிகவும் இலகுவாகக் கிடைக்கின்ற தகவல்கள் ஆகும். இருப்பினும், இவை தொடர்பில் மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும். சிலவேளைகளில் பாலியல் வன்முறைக் குற்றங்கள் தொடர்பில் கிடைக்கின்ற ஒரேயொரு சான்று இதுவாகவும் இருக்கலாம்

9 பாலியல் வன்முறையானது மற்றவற்றிலிருந்து தனிப்படுத்தப்பட்ட நிலையில் மாத்திரம் இடம்பெறுவதில்லை. ஆகவே, உங்களுக்கு வழங்கப்பட்ட ஆணையானது குறுகியதாகக் காணப்பட்டபொழுதிலும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய சாட்சிகளுடன் அனுபவித்த அல்லது கண்டுள்ள ஏனைய குற்றங்கள் தொடர்பில் கலந்துரையாடுவது அத்தியவசியமாகும். வன்முறைகள் தொடர்பான பிரச்சார செயற்பாடுகளுடன் இது இத்தகைய பாலியல் வன்முறைகள் எந்தளவிற்குப் பொருந்திச் செல்கின்றன என்பதைக் காட்டுவது முக்கியமாகும். இவற்றின் பொதுவான அம்சங்கள், தொடர்புடைய அம்சங்கள், பொறுப்புக்கூறல் முறைகள் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கு இது உதவும்.

10 உள்ளே இருப்பவர்களும் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். ஆனால் இவர்கள் தமக்கு இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் எடுத்துக் கூறுவதற்கு முன்வராதவர்களாக இருக்கலாம். உதாரணமாக தடுப்புக்காவல் நிலையங்களில் இவை நிகழலாம். பரன் டிஜிசா வழக்கின் பொழுது சாட்சி ட ஆனவர் பாலியல் ரீதியான தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர். தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக முன்வர மறுத்த ஒருவருக்கு எதிராக ஒருவரை நீதிமன்றத்தின் முன்வந்து சாட்சியாக வரும்படி நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட்டது. இவருக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களானது வழக்குத் தொடுத்தலின் ஓர் அங்கமாகும். சாட்சி ஏ பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்துவதைப் பார்க்கும் படி இவர் நிர்ப்பந்திக்கப்பட்டமையானது இவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சித்திரவதை என நிதிமன்றம் குறிப்பிட்டது. ICTY TJ வழக்குத்தொடுனர் அன்ரோ புரன்டிசிஜா, ஐவு-95-17/1இ 10 இ டிசம்பர் 1998,பந்தி 267.

*...உள்ளிருக்கின்ற சாட்சிகளை அணுகித் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுகின்ற பொழுது மிகக் கவனமாக அதனை மேற்கொள்ளவேண்டும். பயிற்றப்பட்ட புலனாய்வாளர்கள் மாத்திரமே இதனை மேற்கொள்ள வேண்டும்..*

**பெட்டி 4**

**சரியிணை நண்பர்கள் அனுபவம் - சாட்சியே சான்றாகும்.**

நீதிபதி, பெடரேசன் ஒப் பொஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினா உயர் நீதிமன்றம்: *'பொஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினா ஆகிய இடங்களில் 20 வருடங்களின் பின்னர் வழக்குத் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றன. சாட்சிகளின் கூற்றுக்களை மாத்திரமே பெரும்பாலும் வழக்குத் தொடுத்த அதிகாரிகள் பார்வையிட்டனர். அங்கு தடயவியல் ரீதியான சான்றுகளோ அல்லது உடலியல் ரீதியான சான்றுகளோ அல்லது DNA அல்லது பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான மருத்துவ அறிக்கைகளோ இருக்கவில்லை'*

சாட்சிப் பத்திர ரீதியான சான்றுகளின் முக்கிய வகிபாகத்தை மையமாகக் கொண்டு இக்கூற்று காணப்படுகின்றது. விசேடமாக தடயவியல் ரீதியான சான்றுகள் அற்ற நிலையில் வரலாற்று ரீதியான குற்றங்களுடன் எவ்வாறு செயற்படுவது, குற்றம் நடைபெற்ற இடம் மற்றும் மீறல்கள் ஆகியன ஆராயப்படல் வேண்டும். இதனை நிரூபிப்பதற்கு சாட்சியிடமிருந்து குறைவான விளக்கங்கள் போதுமானவை. சில சந்தர்ப்பங்களில் தடயவியல் சான்றுகள் சார்த்துரைக்கப்பட்ட குற்றம் இடம்பெற்று பல வருடங்களின் பின்னரே கிடைக்கின்றது.

பாலியல் வன்முறை தொடர்பிலான ஆவணங்கள் அல்லது தடயவில் அல்லது பௌதீகம் அல்லது மருத்துவம் அல்லது ஓடியோ அல்லது வீடியோ ரீதியான சான்றுகள் இல்லையென்பதற்கான அத்தகைய குற்றங்கள் தொடர்பில் நீதியைப் பெற்றுக்கொள்ள முடியாது என்ற அர்த்தம் இல்லை. ஐ.சீ.சீ. போன்ற சர்வதேச நீதிமன்றங்களில் பௌதீக ரீதியான அல்லது தடயவில் ரீதியான சான்றுகள் பாலியல் வன்முறை தொடர்பான குற்றங்களை சர்வதேச சட்டங்களின் கீழ் நிரூபிப்பதற்கு அவசியமில்லை. பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் வழங்குகின்ற முழுமையான சான்றுகளின் அடிப்படையில் சர்வதேச குற்றங்களைத் தாபிக்க முடியும். சர்வதேச நீதிமன்றங்கள் மற்றும் நியாயாதிக்கங்கள் ஆகியன பெரும்பாலும் சாட்சிப் பத்திரத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுகின்ற வழக்குகளை ஏற்றுக்கொள்கின்றன. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் வழங்குகின் சான்றின் அடிப்படையில் இவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் வழங்குகின்ற சாட்சிப்பத்திர ரீதியான சான்றுகளானது வெற்றிகரமாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் குற்றத் தீர்ப்புக் அளிப்பதற்கும் உதவுகின்றன[11].

பாலியல் வன்முறை தொடர்பான விடயங்களைத் தாபிப்பதற்கு சாட்சி ரீதியான சான்றுகள் முக்கியமாகும்:

» பாலியல் வன்முறைச் செயல்கள் இடம்பெற்றுள்ளன.

» அத்தகைய செயலைச் சூழவுள்ள சூழ்நிலைகள் இவற்றுள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த காலம் மற்றும் பலவந்தம் பிரயோகிக்கப்பட்ட சூழ்நிலை ஆகியன கருத்திற்கொள்ளப்படும்.

» தாக்குதல் இடம்பெற்ற சூழ்நிலை, அத்தகைய குற்றங்கள் தொடர்பில் தற்போது நடைபெறுகின்ற பரந்தளவிலான சர்வதேச ஆணைக்குழுக்கள் சார்த்துரைக்கப்பட்ட குற்றவாளிகளது நடத்தைகள் மற்றும் பின்புலம் சார்ந்த ஏனைய தகவல்கள்.

» மோதலின் தன்மை, அதன் வகை, அரசியல் செல்வாக்குகள் மற்றும் பிரதேச அதிகார இயங்காற்றல்கள்

» சார்த்துரைக்கப்பட்ட குற்றவாளிகள் தொடர்பான அடையாளம் மற்றும் பொறுப்புக்கூறலுடன் தொடர்புடைய ஏனைய அம்சங்கள்.

» குற்றமிழைத்தவர்களது குழுக்கள், அமைப்புகள் மற்றும் கட்டளை வழங்கியமை தொடர்பான கட்டமைப்புகள் போன்றன.

» மேலதிக சான்றுகள் தொடர்பான இடம் மற்றும் அவற்றின் வகை.

## C. ஆவண ரீதியான சான்றுகள்

### 1. ஆவண ரீதியான சான்றுகள் என்றால் என்ன?

எழுத்து வடிவிலான அல்லது ஆவண வடிவிலான பௌதீக பொருள் ரீதியாக பதிவுசெய்யப்பட்ட தகவல் ஆவண ரீதியான சான்றுகளைக் குறிக்கும். உண்மையான சான்றுகளானது பௌதீக ஆவணத்தில் பதிவுசெய்யப்பட்ட தகவலாகும். இது ஆவணத்திற்கு உதவுவதாகவும் இருக்கலாம். ஒரு ஆவணமானது உண்மையான பௌதீக ரீதியான சான்றுகளைக் கொண்டதா-கவும் இருக்கலாம். உதாரணமாக – அதன் மீது முத்திரையோ அல்லது ஒருவரது கையொப்பமோ பதியப்பட்டிருக்கும் பட்சத்தில் அல்லது அதில் ஏதாவது இரத்தக் கறை படிந்து காணப்படும் பட்சத்தில் அதனை அவை உறுதிப்படுத்துகின்றன. (பார்க்க, பௌதீக ரீதியான சான்றுகள், பிரிவு D).

பாலியல் வன்முறை தொடர்பான வழக்கமான ஆவண ரீதியான சான்றுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

**உத்தியோகபூர்வமானது**

» இராணுவ அறிக்கைகள் மற்றும் ஏனைய செயற்பாட்டு ரீதியான ஆவணங்கள். (உதாரணமாக – உணவு மற்றும் தங்குமிடம் தொடர்பான பதிவுகள், கடமை ரீதியான ஆவணங்கள், செயற்பாடுகள் தொடர்பான நிலைமை அறிக்கைகள், எல்லை அறிக்கைகள், இராணுவத் திட்டங்கள், உபாயங்கள், தொடர்பாடல் பதிவுகள், எழுதப்பட்ட நெறிப்படுத்தல்கள் மற்றும் உத்தரவுகள், சண்டை தொடர்பான அறிக்கைகள் மற்றும் இடையீடுகள்

» மருத்துவச் சான்றிதழ்கள்

» கைதிகள் பட்டியல் மற்றும் பொலிஸ் பதிவுகள்

» அடையாளம் மற்றும் பதிவு சார்ந்த ஆவணங்கள், இவற்றுள் காணாமற்போன நபர்கள் தொடர்பான

11 உதாரணமாக, ICTY இன் RPE 96 இன் பிரகாரம் பாலியல் ரீதியான தாக்கதல்கள் தொடர்பான வழக்குகளின் பொழுது பாதிக்கப்பட்டவரின் சான்றினை உறுதிப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

*ICC போன்ற சர்வதேச நீதிமன்றங்களில் சர்வதேச குற்றமாக பாலியல் வன்முறை தொடர்பான குற்றங்களை நிரூபிப்பதற்கு பௌதீக மற்றும் தடயவியல் சார்ந்த சான்றுகள் அவசியமில்லை.*

உத்தியோகபூர்வ ஆவணங்கள் மற்றும் காத்திரமான பதிவுகள் போன்றன உள்ளடங்கும்.

- அரசாங்க அமர்வுகளின் கூட்ட அறிக்கைகள், கட்டளை மற்றும் கட்டுப்பாடு தொடர்பான ஆவணங்கள், மனிதாபிமான அமைப்புகளுடன் அரசாங்கம் மேற்கொண்ட உள்ளகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் தொடர்பாடல்கள்
- புலனாய்வு அறிக்கைகள்
- பேச்சுவார்த்தை நிபந்தனைகளுடன் தொடர்புடைய தொடர்பாடல் ஆவணங்கள் மற்றும் இராஜதந்திர ரீதியான ஆவணங்கள்.
- உத்தியோகபூர்வமான தகவல்களைப் பெற்றுக்கெள்ளும் இடம் மற்றும் கடந்தகால வழக்குச் சட்டம்

**உத்தியோகப்பற்றற்றது**

- ஏனைய சுகாதார ரீதியான பதிவுகள், இவற்றுள் மனநல மருத்துவர், உளவியலாளர் அறிக்கைகள்[12], குறிப்புகள், புகைப்படங்கள், மருத்துவத் தொழில்வாண்மை மிக்கவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏனைய தடயவியல் சார்ந்த மருத்துவச் சான்றுகள் (பார்க்க, பெட்டி 9: CARSV தொடர்பிலான மருத்துவ ரீதியான சான்றுகளைப் புரிந்துகொள்ளல்). இருப்பினும் பாதிக்கப்பட்டவரிடமிருந்து அறிவிக்கப்பட்ட சம்மதத்தை பெற்றுக்கொள்ளாத நிலையில் இத்தகைய ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது. பாதிக்கப்பட்டவருடைய அந்தரங்கத்தைப் பேணவேண்டுமென்பதன் காரணமாக பல்வேறு விதமான சுகாதார சேவைகளை வழங்குபவர்கள் இத்தகவல்களை வழங்குவதற்கு மறுக்கலாம்
- தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளின் அறிக்கைகள் மற்றும் பதிவுகள். உதாரணமாக - இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான பதிவுகள், ஏனைய தகவல்கள் மற்றும் மேற்பார்வை, கண்டறிதல் பொறிமுறைகள், சம்பவம் தொடர்பான தரவுகள், மனித உரிமைகள் அறிக்கைகள், குறிப்பாக இழைக்கப்பட்ட மீறல்கள் தொடர்பான பகுப்பாய்வுகளை உள்ளடக்கிய ஆவணங்கள், அத்தகைய மீறல்கள் அல்லது வன்முறைகளின் தாக்கம், நடைமுறையிலுள்ள முன்னெச்சரிக்கைப் பொறிமுறைகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய சாட்சிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற கூற்றுகள்.
- பிரதேசத்தின் மரபு ரீதியான தலைவர்கள் அல்லது சமயத் தலைவர்கள் ஆகியோரிடமிருந்து கிடைக்கப் பெற்ற குற்றங்கள் தொடர்பான அறிக்கைகள், பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளினால் வழங்கப்பட்ட அறிக்கைகள்.
- பத்திரிகை ஆக்கங்கள், இவற்றுள் பத்திரிகைகளுக்காக எடுக்கப்பட்ட தகவல்கள், ஆனால் அவை வெளியிடப்படாதவையாகவும் இருக்கலாம்.
- சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள், அறிக்கைகள், கற்கைகள், நிகழ்ச்சித்திட்டம் சார்ந்த தரவுகள், புள்ளிவிபரங்கள், பாலியல் வன்முறைகள் இழைக்கப்பட்ட கால இடைவெளி, அதனோடு சம்பந்தப்பட்ட தகவல்கள், சார்த்துரைக்கப்பட்ட குற்றத்தை இழைத்த நபர்கள் மற்றும் அவர்களது மேலதிகாரிகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளினால் இனங்காணப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் மற்றும் அவற்றின் தேவைகள்.
- டயறிகள் மற்றும் சுவர்களில் கிறுக்கப்பட்ட அல்லது எழுதப்பட்ட வார்த்தைகள். உதாரணமாக தடுப்புக்காவலில் காணப்பட்டவை.
- வரைபுகள், உதாரணமாக, வன்முறை இடம்பெற்ற இடத்தில் காணப்பட்டவைகள்
- காவல் தொடர் காப்புச் சங்கிலி தொடர்பான ஆவணங்கள் (chain of custody).

## 2. ஆவண ரீதியான சான்றின் வகிபாகம் என்ன?

பல்வேறு விதமான மாறுபட்ட இடங்களிலிருந்து ஆவண ரீதியான சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்:

- உத்தியோகபூர்வமான கட்டிடங்கள்
- துணைப்படைகள் மற்றும் ஏனைய ஆயுதக் குழுக்களினால் பயன்படுத்தப்பட்ட இராணுவத் தளங்கள் மற்றும் ஏனைய வசதிகள்
- வைத்தியாசலைகள் மற்றும் மருத்துவ செயற்பாட்டாளர்களது தகவல் சேகரிக்கும் இடங்கங்கள்
- சார்த்துரைக்கப்பட்ட குற்றம் அல்லது மீறல் அல்லது வன்முறை இழைக்கப்பட்ட ஏதாவது இடம்.
- வரலாற்று ரீதியாக தகவல்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் இடம்
- பகிரங்க மூலங்கள்

## 3. ஆவண ரீதியான சான்றின் வகிபாகம் என்ன?

பாலியல் வன்முறைகளை ஆவணப்படுத்துகின்ற பொழுது உத்தியோகபூர்மான மற்றும் உத்தியோகப்பற்றற்ற ஆவணங்களே சம்பந்தப்பட்ட தகவல் மூலங்களாகக் காணப்படுகின்றன. ஆவணங்களில் காணப்படுகின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தாபிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன:

- அறிக்கையிடப்பட்ட பாலியல் வன்முறை[13] தொடர்பான தன்மை, கால அளவு மற்றும் அதன் காத்திரத்தன்மை போன்றன: மருத்துவ மற்றும் சுகாதார ரீதியான ஆளணியினரிடம் காணப்படுகின்ற பதிவுகள், விடய

12 மருத்துவ தடயவியல் ஆவணப்படுத்தலைப் பொறுத்தவரையில் மனநல மருத்துவர் அல்லது உளவியலாளர் சார்ந்த சான்றுகள் முக்கிய பகுதியாகக் காணப்படுகின்றன. பாலியல் வன்முறைகள் தொடர்பான வழக்குகளில் பௌதீக ரீதியான சான்றுகளைப் பொறுத்தவரையில் இவை குறிப்பிடக் கூடியளவு வளர்ச்சி பெற்றுள்ளதுடன், முக்கியத்துவம் மிக்கதாக இதற்கான அங்கீகாரங்களும் உண்டு. உள மருத்துவ ரீதியான தொழில்வாண்மை மிக்கவர்கள், அதாவது தடயவியல் பயிற்சிகளைப் பெற்ற உளநல மருத்துவத்துறை தொழில்வாண்மை மிக்கவர்கள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் குறைவாகவே காணப்படுகின்றனர்.

13 பாலியல் வன்முறை தொடர்பான இத்தகைய தரவுகள் பின்புல ஆய்வுகள் தொடர்பில் பயன்மிக்கதாகக் காணப்பட்ட பொழுதிலும் அல்லது குறிப்பிட்ட குற்றச்சாட்டு தொடர்பில் உதவக்கூடியதாக இருந்தபொழுதிலும் அல்லது பாலியல் வன்முறை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு உதவக்கூடியதாக இருந்த பொழுதிலும், ஆய்வுகள், சம்பவ அறிக்கைகள் மற்றும் ஏனைய மதிப்பீடுகள் மூலமாக சேகரிக்கப்பட்ட தரவுகளானது நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பிலான முழுமையான பிரதிபலிப்புக்களை வழங்குவதில்லை. பாலியல் வன்முறை தொடர்பான தரவுகளைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய விடயங்கள் மற்றும் செய்யக்கூடாத விடயங்களுக்கான மேலதிக வழிகாட்டலுக்கான ஐ.நா. செயலகம், மோதல்களினால் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து பாலியல் வன்முறை தொடர்பான அறிக்கையிடல் மற்றும் பொருட்கோடல்: செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவைகள் (2008).

முகாமைத்துவப் புள்ளிவிபரங்கள், சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட அறிக்கைகள், பாலியல் வன்முறை தொடர்பான ஆய்வுகள் மற்றும் ஏனைய கற்கைகள், மற்றும் ஊடகவியலாளர்கள், மேற்பார்வையாளர்களிடம் காணப்படும் பதிவுகள், இவற்றுள் தேசிய மற்றும் சர்வதேச சிவில் அமைப்புகளுடன் காணப்படுகின்ற தகவல்களும் உள்ளடங்கும்.

» குற்றமிழைத்தவர் மற்றும் அவரது மேலதிகாரிகள் ஆகியோரை இனங்காணல்: சார்த்துரைக்கப்பட்ட குற்றவாளிகள், அமைப்புகள், கட்டளை ரீதியான கட்டமைப்புகள், முறைசார்ந்த மற்றும் முறைசாராத அதிகார அமைப்புகள் ஆகியவற்றின் பிரசன்னத்தையும் அவர்களது நடவடிக்கைகளையும் உறுதிப்படுத்தக்கூடிய உத்தியோகபூர்வமான இராணுவப் பதிவுகள் மற்றும் அரசாங்க பதிவுகள் ஆகியவற்றில் காணப்படுகின்ற தகவல்கள், சார்த்துரைக்கப்பட்ட குற்றவாளிகள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துகின்ற, அதாவது அவர்களது தோற்றம், ஆடைகள், குறிப்பிடக்கூடிய அடையாளங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தக் கூடிய பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகள் வழங்கிய தகவல்கள். சார்த்துரைக்கப்பட்ட குற்றவாளிகள் தொடர்பான தகவல்கள் அவர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் மற்றும்/ அல்லது அவர்களது நடமாட்டம் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளது பதிவுகள

» ஏதாவது திட்டம் அல்லது உபாயம் அல்லது பொறுப்புக் கூறலுடன் தொடர்புடைய ஆவணங்கள் காணப்படல்: வழங்கப்பட்ட உத்தரவுகளின், கட்டளைகளின் பதிவுகள், சில இடங்களைத் தாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள், ஒரு தாக்குதலுக்கு முன்னர் அல்லது தாக்குதலின் பொழுது அல்லது தாக்குதலின் பின்னர் தமது படைப்பிரிவுகளுடன் அல்லது படைப்பிரிவுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட தொடர்பாடல்கள் தொடர்பான பதிவுகள்.

» மேலதிக விசாரணைகளுக்கான இடங்கள்: உத்தியோகபூர்வமான அல்லது உத்தியோகப்பற்றற்ற ஆவணங்களில் காணப்படுகின்ற தகவல்கள் ஏதாவது விடயம் பற்றிய முழுமையான தகவல்களை வெளிப்படுத்தாமலிருக்கலாம். ஆனால் எதிர்கால புலனாய்வு முயற்சிகளை மேற்கொள்வதற்கு அவசியமான முன்னணித் தகவல்களை அவை வழங்கலாம்.

## D. டிஜிடல் சான்றுகள்

### 1. டிஜிடல் சான்றுகள் என்றால் என்ன?

டிஜிடல் சான்று அல்லது மின்னியல் சான்று எனும் பொழுது ஒரு மின்னியல் கருவியில் சேகரிக்கப்பட்டுள்ள அல்லது அதற்குக் கிடைக்கப் பெற்ற அல்லது அதன் மூலமாக பரிமாறப்பட்ட சான்றளிக்கக் கூடிய தகவல் அல்லது தரவுகள் ஆகும். கணினிகள், ஸ்மாட் மொபைல் தொலைபேசிகள் போன்றன சுவீகரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றிலிருந்து இத்தகைய சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அதேநேரம் இணையத்திலுள்ள பகிரங்க மூலத்திலிருந்தும் இவ்விதமான சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். டிஜிடல் ரீதியான சான்றுகள் சில சந்தர்ப்பங்களில் விசேட ஆவண ரீதியான சான்றுகளாகப் பரிசீலிக்கப்படுவதும் உண்டு. ஏனைய ஆவண ரீதியான சான்றுகளுக்கு ஏற்புடைய விதிகளும் கொள்கைகளும் இதற்கும் பொதுவாக ஏற்புடையனவாகக் காணப்படுகின்றன (பார்க்க ஆவணப்படுத்தல் சான்றுப் பிரிவு இ). சுவீகரிக்கப்பட்ட மின்னியல் உபகரணம் ஒன்றிலிருந்து டிஜிடல் ரீதியான சான்றுகளைப் பெற்றுக்கொள்ளும் பொழுது அத்தகைய மின்னியில் உபரகணங்கள் பௌதீக ரீதியான சான்றுகளாகப் பாதுகாக்கப்படல் வேண்டும்[14] (பார்க்க பௌதீக ரீதியான சான்றுகள் பிரிவு இ). இத்தகைய தகவல்களைக் கருவிகளிலிருந்து பெற்றுக்கொண்ட டிஜிடல் நிபுணர் நீதிமன்றங்களில் ஆவண ரீதியான சான்றுகளாகப் பயன்படுத்தக் கூடிய விதத்திலான அறிக்கையொன்றை அல்லது உறுதிப்பிரமாணம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் (பார்க்க ஆவண ரீதியான சான்றுகள் பிரிவு ஆ).

பாலியல் வன்முறைக் குற்றங்களை நிரூபிப்பதற்கு உதவுகின்ற வழக்கமான அல்லது மாதிரி எடுத்துக்காட்டான டிஜிடல் சான்றுகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியதாகவிருக்கும்[15].

» மின்னியல் சார்ந்த சுகாதாரப் பதிவுகள், இவற்றுள் மனநல மருத்துவர், உளவியலாளர் ஆகியோரது அறிக்கைகள், புகைப்படங்கள், டிஜிடல் மருத்துவப் படங்கள் (எக்ஸ் கதிர்ப் பரிசோதனை, அல்ட்ராசவுன்ட், மின்காந்த படங்கள், ஸ்கான் போன்றன). மற்றும் சுகாதார தொழில்வாண்மை மிக்கவர்களினால் தயாரிக்கப்பட்ட ஏனைய தடயவியல் சார்ந்த மருத்துச் சான்றுகள், இவற்றுள் விடேச மருத்துவத் தொலைபேசிக் கருவிகளினூடாக சேகரிக்கப்பட்ட தரவுகளும் உள்ளடங்கும்[16] (பார்க்க, பெட்டி 9: CARSV தொடர்பான மருத்துவ மற்றும் சட்ட ரீதியான சான்றுகள்

---

14 பிரதான பொலிஸ் அதிகாரிகளுக்கான சங்கம் (2012) டிஜிடல் சான்றுகளுக்கான சிறப்பான நடைமுறைகள் பற்றிய வழிகாட்டி, லண்டன் ஏ.சி.பி.ஓ. பந்தி 2.2.1

15 யுடியூப் விடியோ போன்ற சில வகையான டிஜிடல் சான்றுகளை குற்றவியல் சட்ட நடவடிக்கைகளுக்காக ஏற்றுக்கொள்ள முடியுமா அல்லது ஏனைய பொறுப்புக்கூறல் நோக்கங்களுக்காக ஏற்றுக்கொள்ள முடியுமா அல்லது இவை ஒரு நியாயாதிக்கத்திலிருந்து மற்றொரு நியாயாதிக்கத்திற்கு ஏற்றவகையில் அல்லது ஒரு பொறிமுறையிலிருந்து இன்னுமொரு பொறிமுறைக்கு ஏற்ற விதத்தில் மாறுபடலாம்.

16 கையடக்கத் தொலைபேசிப் பிரயோகத்திற்கான (mobile application) உதாரணமாக MediCapt ஐக் குறிப்பிடலாம். மோதல் பிரதேசங்களில் பாலியல் வன்முறை தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தினால் மனித உரிமைகள் தொடர்பான மருத்துவர்களின் பயன்பாட்டினைக் கருத்திற்கொண்டு தற்போது இது விருத்திசெய்யப்பட்டு வருகிறது. பாலியல் வன்முறைகள் தொடர்பான தடயவியல் சார்ந்த மருத்துவச் சான்றுகளை சிகிச்சை மருத்துவர்கள் பயனுறுதிமிக்க முறையில் சேகரித்து, ஆவணப்படுத்திப் பாதுகாப்பதன் மூலம் உள்நாட்டில் இத்தகைய குற்றச்செயல்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளை பொதுமக்கள் மேற்கொள்வதற்கு உதவ முடியும். இக்கருவியானது தராதரம் மிக்க மருத்து கொள்பொருள் வடிவத்தில் தடயவியல் ஆவணப்படுத்தலாக டிஜிடல் தளத்தில் மாற்றி தடயவில் சார் புகைப்படத் துறையை இலகுபடுத்தும் முகமாக பாதுகாப்பான கையடக்கத் தொலைபேசி கெமராவுடன் ஒருங்கிணைக்கிறது. இத்தகைய அம்சங்களை ஒருங்கிணைப்பதன் ஊடாக பாலியல் வன்முறை, சித்திரவதை உள்ளடங்கலான பாரிய அட்டூழியங்கள் தொடர்பான முக்கிய தடயவியல் மருத்துவச் சான்றுகளைப் பாதுகாத்து அவற்றை நீதிமன்றங்களில் பயன்படுத்துவதற்கு ஆநனஊைஙிவ உதவுகிறது. மருத்துவப் பராமரிப்புக்களை வழங்குகின்றவர்கள் இந்த App ஐப் பயன்படுத்தி மருத்துவச் சான்றுகள், பாதிக்கப்பட்டவரது காயங்கள் தொடர்பான புகைப்படம் ஆகியவற்றை வழக்குத் தொடுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் அத்தகைய குற்றங்களுக்காக பொறுப்புக்கூறல்களை நாடுபவர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பான முறையில் அவற்றை அனுப்பிவைக்க முடியும். மேலதிக தகவல்களுக்கு பார்க்க, http://physiciansforhumanrights.org/medicapt/.

*...ஆவணப்படுத்துனர்கள் தாம் பயன்படுத்துவதற்கு பரிசீலிக்கின்ற ஏதாவது "app" ஐப் பயன்படுத்துவது தொடர்பான நியதிகளைக் கவனமாகப் பரிசீலித்தல் வேண்டும்.*

பற்றிய புரிதல்கள்).

» டிஜிடல் கெமரா அல்லது மொபைல் போன் போன்றவற்றைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட படங்கள், வீடியோக்கள், உதாரணமாக வன்முறைகள் இடம்பெற்ற இடங்களது படங்கள் மற்றும் காயங்களது படங்கள் போன்றன. இத்தகைய கருவிகளைப் பயன்படுத்தி இவற்றைப் பதிவுசெய்து பாதுகாப்பான முறையில் சான்றுகளாக மாற்ற முடியும் (பார்க்க பெட்டி 5: டிஜிடல் சான்று சேகரிப்புக் கருவிகளைத் தெரிவுசெய்கின்ற பொழுது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள்).
» தொலைபேசியில் அல்லது சமூக வலைத்தளங்களில் சேமிக்கப்பட்ட இடம் தொடர்பான தகவல்கள்
» டுவிட்டல், முகநூல், யூடியூப் போன்றவற்றில் உள்ள படங்கள், வீடியோக்கள், ஏனைய தகவல்கள்
» கணினியின் ஹாட் ட்ரைவ், பெரிபரல் சாதனங்கள், மெமரி அட்டை, யு.எஸ்.பி., தம் ட்ரைவ், சீ.டீ. ரொம் போன்வற்றில் சேமிக்கப்பட்ட தகவல்கள்
» மின்னஞ்சல், பதிவுகள் மற்றும் உடனடித் தகவல்கள் போன்றன.
» வான் புகைப்படங்கள் மற்றும் செய்மதிப் புகைப்படங்கள் போன்றன. உதாரணமாக – ஆயுதப்படையினர் அல்லது பொதுமக்களது நடமாட்டம் தொடர்பான படங்கள். அல்லது கிராமங்களில் அல்லது ஏனைய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அழிவுகள் தொடர்பான படங்கள்[17]
» மீட்டா தொடர்பான தரவுகள், அதாவது ஒரு கோப்பினுள் காணப்படுகின்ற ஏனைய கோப்புகள் பற்றிய தகவல்களாகும். (அதாவது, படங்கள், வீடியோ, வேட் ஆவணங்கள் போன்றன. டிஜிடல் புகைப்படத்துடன் தொடர்புடைய மீட்டா தரவுகளானது புகைப்படம் எடுக்கப்பட்ட நேரம், அதன் இடம் போன்ற தகவல்களை மீட்டா தரவுகள் வழங்கலாம். அதேவேளை, ஒரு செய்தி அல்லது குறுஞ்செய்தி அனுப்பப்பட்டிருக்கும் பட்சத்தில், அது எங்கு உருவாக்கப்பட்டது, எந்த நேரத்தில் உருவாக்கப்பட்டது, எவ்வாறு அனுப்பப்பட்டது என்பது போன்ற தகவல்களையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

**பெட்டி 5**

## டிஜிடல் சான்றுகள் சேகரிப்புக் கருவிகளைத் தெரிவு செய்கின்ற பொழுது பரிசீலிக்க வேண்டிய விடயங்கள்

மனித உரிமைகள் பாதுகாவலர்கள், ஆவணப்படுத்துனர்கள், ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பிரஜைகள் ஆகியோர் யுத்தக் குற்றங்கள், மானுடத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை, சித்திரவதை போன்ற மனித உரிமைகள் மீறல்கள், அட்டூழியங்கள் தொடர்பான புகைப்படங்களையும் வீடியோக்களையும் பாதுகாப்பான முறையில் எடுத்து அத்தகைய மறைக் குறியாக்கப்பட்ட தகவல்களை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தும் முகமாக சில கருவிகளும் கைபேசி, அப்ஸ்களும் உருவாக்கப்பட்டுள்ளன. காட்சிகளை உறுதிப்படுத்திக்கொண்டு அதனை நீதிமன்றம் ஏற்றுக்கொள்வதை உறுதிசெய்துகொள்ளும் விதத்தில் குற்றம் இழைத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டுவருவதற்கு ஏற்ற வகையில் சிலவகையான இந்த கையடக்கத் தொலைபேசி அப்ஸ்கள் விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அப்ஸ்களில் மறைக் குறியாக்கம், மெட்டா டேட்டா பதிவுகள், இத்தகைய சான்றுகளை வைத்திருப்பதன் காரணமாக அதனை வைத்திருப்பவர் ஏதாவது அபாயங்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும் பொழுது உடனடியாக அத்தகைய தகவல்களை தமது கையடக்கத் தொலைபேசியில் மறைத்து வைத்திருப்பதற்கு ஏற்ற வகையில் மற்றும்/ அல்லது அவற்றை அதில் காணப்படுகின்ற உள்ளடக்கத்துடன் சேர்த்து உடனடியாக அழித்து விடக்கூடிய வகையில் இத்தகைய அப்ஸ்களில் சிறப்பான அம்சங்கள் காணப்படுவதுமுண்டு.

எனவே, ஆவணப்படுத்துனர்கள் தாம் பயன்படுத்துவதற்குப் பரிசீலிக்கின்ற ஏதாவது அப்ஸ் தொடர்பான நியதிகளைக் கவனமாக ஆராய்ந்து பரிசீலித்தல் வேண்டும். குறிப்பாக அதன் உரிமைத்துவம், அனுமதிப்பத்திரம், எதிர்கால பயன்பாடு, அதனைப் பயன்படுத்துகின்ற முறையை அடிப்படையாகக் கொண்டு அதில் காணப்படுகின்ற மறைக்குறியாக்கம் மற்றும்/ அல்லது மெட்டா டேட்டா களஞ்சிய அம்சங்கள் ஆகியவற்றின் மட்டுப்பாடுகள் பற்றி பரிசீலித்தல் வேண்டும். செயற்பாட்டாளர்கள் கருத்திற்கொள்ள வேண்டிய அம்சங்களில் பின்வருவனவும் உள்ளடங்கும்:

» பதிவேற்றம்செய்யப்பட்டதன் பின்னர் அதிலுள்ள உள்ளடக்கங்களுக்கு என்ன நடைபெறும்?
» தாமாக மறைக்குறியாக்கப்பட்ட உள்ளடக்கம் குறிப்பிட்ட நேரத்திற்கு மாத்திரமா அல்லது அது பதிவேற்றம் செய்வதற்கு மாத்திரமா?
» ஒரு பாதுகாப்பான வைப்பகத்திற்கு அதனை பதிவேற்றம் செய்ததன் பின்னர் அதிலுள்ள உள்ளடக்கத்தின் எதிர்காலப் பயன்பாட்டினை யார் கட்டுப்படுத்துவது?
» வைப்பகம் எங்கே காணப்படுகின்றது? இது அந்தரங்கத்தன்மை தொடர்பான பிரச்சினைகளையோ அல்லது அரசாங்கத்தின் கண்காணிப்பு தொடர்பான பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றதா?
» இத்தகைய அப்ஸ்களைப் பயன்படுத்துவதன் காரணமாக நிகழக்கூடிய ஏனைய பிரச்சினைகள் அல்லது இடர்கள் என்ன?

17 The Engine Room, Benetech, சர்வதேச மன்னிப்புச்சபை (2016) னுயவயேஎ: மனித உரிமைகள் ஆராய்ச்சிக்காக டிஜிடல் தரவுகளை எவ்வாறு பயன்படுத்த முடியும். இதனை இணைய முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். https://www.theengineroom.org/datnav-digital-data-in-human-rights-research. பக்கம். 55–58.

## 2. டிஜிடல் சான்றினை எங்கே கண்டறிவது?

டிஜிடல் சான்றுகளை வெவ்வேறு இடங்களில் கண்டறிய முடியும்.:[18]

» வன்முறைகள் இடம்பெற்ற இடத்திலே தேடுதல் மேற் கொண்டபோது கிடைத்த முடிவுப் பயன்படுத்துநர் சாதனம் -பயன்படுத்துனர்களின் கணனிகள், மொபைல் தொலைபேசிகள் /ஸ்மாட் தொலைபேசிகள், USB தம் டிரைவ் அல்லது டிஜிடல் கெமெரா.

» ஒன்லைன் / உதாரணமாக சமூக வலையமைப்பு உருவாக் கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட இணையத்தளங்கள், கலந்துரையாடல் மன்றுகள் மற்றும் செய்திக் குழுக்கள்

» பயன்படுத்துனரின் செயற்பாடு பற்றிய இணையச்சேவை வழங்குனரின் பதிவுகள், மொபைல் தொலைபேசிக் கம்பனியின் வாடிக்கையாளர்களின் கட்டணப்பட்டியல் பற்றிய பதிவுகள், பயன்படுத்துனரின் இணையக் கணக்கு மற்றும் பயன்படுத்துனரின் ரிமோட் கோப்புக் களஞ்சியம் போன்ற தனிப்பட்ட வளங்கள்.

» இடைமாற்றத்தின் போது – உதாரணமாக மொபைல் தொலைபேசி குறுஞ்செய்திகள், வொய்ஸ் அழைப்புக்கள், மின்னஞ்சல்கள் அல்லது இணையக் கலந்துரையாடல்கள்

» குற்றசெயல் அல்லது வன்முறை இழைக்கப்பட்டதாக கூறப் படுகின்ற ஏதாவது இடங்கள்

இணையத்தளம் பற்றிய வெளிப்படையான மூலத் தகவல்கள் எவரினாலும் அணுகப்படக்கூயவையாகும்.[19] ஆனால் இவற்றினை ஒன்லைன் பதிவுகளாக, இணையப் பக்கங்களாக, இணைய உள்ளடக்கமாகப் பதிவது அல்லது பாதுகாப்பது அவசியமாகும். குறிப்பாக நுண்மையானவைகள் பொதுவாக அழிக்கப்பட்டு விடுகின்றன அல்லது பின்பு கிடைக்காமல் போகின்றன. ஏனைய டிஜிடல் சான்றுகளின் வகைகளான செய்திகளின், குறிப்பிட்ட மொபைல் தொலைபேசிகளின் வரலாறு அல்லது சமூக ஊடகக் கணக்குகள் போன்றவை மூன்றாம் தரப்பினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதுடன் அவை அந்தரங்கங்களிற்கான சட்டங்களின் கீழ் பாதுகாக்கப்படுகின்றன. எனவே இவ்வாறான தகவல்களினை ளரழிழநயெஇ தரவுப்பதிவு உடன்படிக்கை அல்லது ஏனைய வடிவிலான இணக்கமின்றி வழங்குவதோ அல்லது அவற்றிற்கு அதிகாரம் அளிப்பதோ அல்லது அதன் meta தரவுகளை (முறைசார் அல்லது முறைசாரா)[20] பிரித்தெடுப்பதோ சாத்தியமற்றதாகும். அதிகாரமின்றிக் கைப்பற்றப்பட்டவை அல்லது இடைமறிக்கப்பட்டவை பொதுவாகச் சான்றாக அனுமதிக்கப்படமாட்டாது.

**பெட்டி 6**

**சகபாடி அனுபவம் - சமூக ஊடகப் பயன்பாட்டின் உதாரணம்**

*Léonie, சட்டத்தரணி, சுவிட்சர்லாந்து, : போஸ்கன் நாட்டவர்கள் மிகக் குரூரமான இனச் சிவில் யுத்தத்திற்கு முகம்கொடுத்த போது எனது கட்சிக்காரரான Lej-laவிற்கு 14 வயதாகும். அவரும் 15 வயதுடைய அவருடைய ஒன்றுவிட்ட சகோதரியும் கடத்தப்பட்டு படைவீரர்களினால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டனர். மோதலிலே சம்பந்தப்பட்டுள்ள மற்றைய தரப்பிற்கு இவர்களின் குடும்பத்தினர் ஆதரவு வழங்கியமைக்காகத் தண்டிப்ப தற்காகவே இது மேற்கொள்ளப்பட்டது. தம்மைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய நபரினை Lej-la அறிந்திருந்தார். ஏனெனில் அவர் உள்;ரைச் சேர்ந்தவர். இது 1993இல் இடம்பெற்றது. இந்த வழக்கினை எமது நிறுவனம் கையேற்ற பின்பு குற்றத்தை நிகழ்த்தியவர் சுவிட்சர்லாந்தில் தஞ்சமடைந்து வாழ்வதாகவும் ஆனால் அவர் அங்கே எங்கே வாழ்கின்றார் எனத் தெரியாதெனவும் குறிப்பிட்டார். 2013ஆம் ஆண்டிலே யுத்தம் முடிவடைந்து 20 வருடங்களின் பின்னர் சமூக ஊடகத்தின் மூலமாக குற்றத்தை நிகழ்த்தியவரை எம்மால் கண்டுபிடிக்கக் கூடியதாக இருந்தது. முகநூலிலே அவர் வெளியிட்ட புகைப்படம் ஒன்றிலிருந்து அவர் பயன்படுத்திய காரொன்றின் இலக்கத்தகட்டினைக் காணக்கூடியதாக இருந்தது. இதன் மூலமாக சுவிட்சர்லாந்தின் கார்கள் பதியப்படுகின்ற canton இனை அடையாளம் காணக் கூடியதாயிருந்தது. இதனால் எமக்குக் குற்றமிழைத்தவர் உண்மையிலேயே சுவிட்சர்லாந்தில் வாழ்கின்றார் என்பதை நிரூபிக்கக்கூடியதாக இருந்ததுடன் வழக்குத் தொடுனர் அலுவலகத்தில் இவருக்கு எதிராகக் குற்றவியல் முறைப்பாடொன்றைத் தாக்கல் செய்யக்கூடியதாகவும் இருந்தது. இது யுத்தக் குற்றங்களுக்கான குற்றவியல் விசாரணைகளை நடத்துவதற்குத் தகைமை வாய்ந்த நீதிமன்றமாகும்.*

---

18 *ACPO Digital Evidence Good Practice Guide* இலிருந்து தழுவப்பட்டது. சுப்ரா குறிப்பு 14, பந்தி 3.3.

19 The Engine Room, Benetech, Amnesty International (2016) DatNav: மனித உரிமைகள் ஆய்வில் டிஜிடல் தரவுகளை எவ்வாறு பயன்படுத்துவது, https://www.theengineroom.org/datnav-digital-data-in-human-rights-research and Frontline Defenders and Tactical Technology Collective, 'Security in-a-Box: Digital Security Tools and Tactics', https://securityinabox.org/en.

20 சட்ட அமுலாக்கல் முகவர்கள் கம்பெனிகளுடன் தகவல் பகிர்வு உடன்படிக்கைகளைக் கொண்டிருக்கலாம். இதன் மூலம் கம்பெனிகள் பயன்படுத்துநர் தரவுகளை நீதிமன்றக் கட்டளை இல்லாமலே முகவரின் வேண்டுகோளுக்கிணங்க வழங்கலாம். சில வேளைகளில் தகவல் பகிர்வு உடன்படிக்கை இல்லாமலேயே சட்ட அமுல்படுத்தல் முகவர்கள் பயன்படுத்துநர் தகவல்களைக் கோரலாம். மேலும் கம்பெனிகள் வேண்டப்படும் தரவுகளை வழங்குவதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிக்கலாம். எவ்வாறாயினும் கம்பெனிகள் எவ்விதமான பயன்படுத்துநர் தரவுகளையும் அரச சார்பற்ற விசாரணைக் குழுக்களுக்கு வழங்கியதா என்பது தெளிவற்ற விடயமாகும்.

## 3. டிஜிடல் சான்றின் வகிபாத்திரம் என்ன?

டிஜிடல் தடயவியல் சான்றின் தன்மை காரணமாக தடயவியல் டிஜிடல் நிபுணர்கள் பொதுவாக டிஜிடல் சான்றுகளின் உரிய சேகரிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தலை உறுதிப்படுத்துமாறு வேண்டப்படுவதுடன் அவற்றின் அர்த்தப்படுத்தலையும் உறுதிப்படுத்துமாறு வேண்டப் படுகின்றனர். தடயவியல் டிஜிடல் நிபுணர் ஒருவரின் அர்த்தப்படுத்தலானது கண்டெடுக்கப்பட்ட டிஜிடல் சான்று தெளிவாக உள்ளது என்கின்ற சான்று ரீதியான அதன் முக்கியத்துவத்தினை உறுதிப்படுத்தத் தேவைப்படுத்தப் படுகிறது. உதாரணமாக போட்டோக்கள் மற்றும் ஒன்லைனில் பதியப்படுகின்ற வீடியோக்கள் போன்ற சான்று ரீதியான பகிரங்கமான மூலங்களைக் கொண்ட தகவல்கள் அவை இட்டுக்கட்டப்பட்டவை அல்ல அத்துடன்/அல்லது அவை ஆவணப்படுத்த நாடுகின்ற நிகழ்வுகளையே குறிக்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு கவனமாக அவை பரீட்சிக்கப்பட்டு உண்மை காணப்படல் வேண்டும்.

டிஜிடல் சான்றுகளின் சேகரிப்புக்காக சில நியாயாதிக் கங்கள் தேவைப்படுத்தப்படும் தராதரங்களை அமுலில் கொண்டுள்ளன. ஆவணப்படுத்துனர்கள் டிஜிடல் சான்று களை ஆராய்வதை பொறுப்பேற்பதற்கு முன்னர் பொருத்த மான நியாயாதிக்கங்களில் சட்டரீதியான தேவைப்பாடுகளை பரிசீலிக்க வேண்டும். குறிப்பாக ஆவணப்படுத்துனர்கள் இந்தப் பரப்பிலே சம்பந்தப்பட்ட ISO தராதரங்களைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். சில சட்ட முறைமைகள் செல்லுபடியாகத்தக்க டிஜிடல் சான்றுகளின் சேகரிப்பிற்காக அவற்றிற்கு இயைபுறுவதைத் தேவைப்படுத்துகின்றன.[21]

டிஜிடல் சான்றுகளின் பகுப்பாய்வானது குற்றச்செயல்களின் சகல கூறுகளையும் நிரூபிப்பதற்கு உதவலாம், உதாரணமாக

» பிரஜைகளின் வீடியோ சான்று பதிவேற்றங்களுடன் உள்ளார்ந்ததான குற்றச்செயல்கள் அல்லது குற்றத்தை நிகழ்த்துபவர்கள் தாமாகவே சம்பவத்தினை வீடியோ செய்திருத்தல்.

» குற்றச்செயல் நடைபெற்றபோது குற்றத்தை நிகழ்த்திய வர்களின் நோக்கம், அந்தச் சந்தர்ப்பத்திலே அவர்கள் எங்கே இருந்தனர் என்பதையும், மொபைல் தொலைபேசி களுடனான தகவல்கள், கணனிகளின் வன் தகடுகள், USB குச்சிகள், மின்னஞ்சலிலுள்ள கூற்றுக்கள் அல்லது சமூக ஊடகப் பதிவுகளுடனான ஏனைய சந்தேக நபர்களுடனான தொடர்புகள்

» தொலைபேசி அல்லது மின்னஞ்சல் குறுக்கீடுகள் மூலமாக பொதுவான திட்டம் ஒன்று இருத்தல் மற்றும் பொறுப்புக் களின் வகைகளுக்கான ஏனைய கூறுகள்.

» குற்றத்தை நிகழ்த்தியதாகக் கூறப்படுவோரின் நகர்வு களின் பாங்கு / சிவிலியன்களின் மீதான தாக்குதல் அல்லது ஏனைய சூழியல் தகவல்கள், வான் அல்லது செய்மதி பிம்பம் மூலமாகக் காட்டப்படுவது, உதாரணமாக துருப்புக்களின் நகர்வுகள், செல் வீச்சுக்களின் தாக்கத்திற்குள்ளான இடங்கள், பாரிய மனிதப் புதைகுழிகள்

» பாதிக்கப்பட்டவர்கள் / சான்றுகளின் வாக்குமூலங்களை ஆதரப்படுத்துதல். உதாரணமாக குற்றத்தை நிகழ்த்திய வரின் வீடியோக்கள் அல்லது புகைப்படங்கள் பாதிக்கப் பட்டவர் விபரிப்பதைப் போன்ற அதே ஆடையுடன் இருப்பதைக் காட்டுதல் (சட்டமுறைமைகளில் இது தேவைப்படுத்தப்படுகின்றது.

குறிப்பிடப்பட்ட டிஜிடல் சாதனங்களின் எந்த வடிவங்களும் குற்றச்செயலின் எந்தவொரு அம்சத்திற்கும் ஆதரவான சான்றினை வழங்கலாம் என்பதை அவதானிக்கவும்.

**பெட்டி 7**

### டிஜிடல் சான்றுகளைச் சேகரிப்பதுடன் தொடர்புடைய விசேட அபாய நேர்வுகள்

டிஜிடல் சான்றுகளைக் கையாள்வதற்கு விசேட அறிவு தேவைப்படுகின்றது. முறையான பயிற்சிகள் இன்றி டிஜிடல் சான்றுகளைச் சேகரிப்பதில் அல்லது பிரித்தெடுப்பதில் உள்ள பிரதான அபாயநேர்வுகள் பின்வருவன வாகும்:

» தரவினைக் கைப்பற்றுகின்ற செயன்முறையின் போது தரவினை மாற்றுகின்ற அதன் மூலம் அதனை சான்றாக ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாக மாற்றுகின்ற அபாயநேர்வு

» முதல் தடவையாகத் தகவலினைத் திரட்டி அதனை ஒன்லைனின் இற்றைப்படுத்துவோர் முகங்கொடுக்கும் அதிகரித்த அபாயநேர்வு

» அதீத வெப்பநிலை, நிலையியல் மின்சாரம் அல்லது ஈரப்பதன் ஆகியவற்றிற்கு உட்படுகின்ற காரணத் தினால் கோப்புகளுக்கு ஏற்படும் இழப்புக்கள் அல்லது சேதம்

» சாதாரணமாக கோப்பு ஒன்றினைத் திறப்பதன் மூலமாக, பார்ப்பதன் மூலமாக அல்லது அதன்மேல் சொடுக்குவதன் மூலமாக கோப்பு ஒன்றினை இறுதியாக அணுகிய திகதி அல்லது வன்பொருள் இறுதியாக அணுகப்பட்ட திகதி, மாற்றப்படுகின்ற காரணத்தினால் தரவுகளை சமரசம் செய்தல்

» தொடர்பற்ற கணனியொன்றிலிருந்து அணுகலானது மேற்கொள்ளப்படாவிட்டால் விசாரணையின் அக்கறைக்காக இணையப்பக்க உரிமையாளரை அவதானமுறச் செய்தல்

» ஆவணப்படுத்துனர் அறியாமல் சேய்மையான கட்டளைகளின் மூலமாகத் தரவுகளின் அழிப்பினை அனுமதித்தல்

» டிஜிடல் சான்றினைத் தேடுவதற்கோ அல்லது கைப்பற்றுவதற்கோ உரிய அதிகாரம் வழங்கப்படா விட்டால், அவற்றினைத் தேடுவதற்கும் பிரித்தெடுப் பதற்கும் உத்திகள் பயன்படுத்தப்படாவிட்டால் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பூரண பதிவு அல்லது பாதுகாத்து வைத்திருப்போரின் வரிசை நிரூபிக்கப்படாவிட்டால் அவை நீதிமன்றங்களில் அனுமதிக்கப்படாமல் போகலாம்.

---

21 பார்க்க: ISO/IEC 27037:2012 டிஜிடல் சான்றினை அடையாளம் காண்பது, திரட்டுவது, பாதுகாப்பது பற்றியது ISO/IEC 27042:2015 டிஜிடல் சான்றின் பகுப்பாய்வு மற்றும் அர்த்தப்படுத்தல் பற்றியது.

## E. பௌதீகச் சான்று

### 1. பௌதீகச் சான்று என்றால் என்ன?

பாலியல் வன்முறை இடம்பெற்றுள்ளது என்பதை நிரூபிப்பதற்கு உதவுவதற்குப் பொருத்தமான தகவலினை வழங்கக்கூடிய அல்லது குற்றச்செயலுக்கும் பாதிக்கப் பட்டவருக்குமிடையில் தொடர்பினை வழங்கக்கூடிய அல்லது குற்றச்செயலுக்கும் அதனை நிகழ்த்தியவருக்குமிடையிலான தொடர்பை வழங்கக்கூடிய எந்தவொரு பௌதீகத் தொடர்பினையோ அல்லது விடயத்தினையோ குறிப்பிடு கின்ற சான்றே பௌதீகச் சான்றாகும்.

பாலியல் வன்முறையின் வகைமாதிரியான பௌதீகச் சான்றுகளுள் பின்வருவன அடங்கலாம்.

» **பௌதீகப் பொருட்கள்:** ஆடைகள், சீருடைகள் அல்லது சீருடையின் பாகங்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் / சாட்சிகள் அல்லது குற்றத்தை நிகழ்த்தியவரால் அணியப்பட்டிருந்த ஆடைகள் கண்ணைக்கட்டிய துணிகள், படுக்கை விரிப்புகள், துவாலைகள், ஆணுறைகள், குருதி வடிவதைத் தடுப்பதற்கான கட்டு, கயிறுகள்/ பட்டிகள்

» **ஆயுதங்கள்:** சுடுகலன்கள், கத்திகள், தோட்டாக்கள், தோட்டா உறை, செல் உறை, வெடிபொருட்கள், கூரான பொருட்கள், சித்திரவதைச் சாதனம், தொங்கல்.

» **உயிரியல் ரீதியான / தடயவியல் பொருட்கள்:** உடல்கள், உடல் பாகங்கள். தோல், முடி, விரல் நகத் துணுக்குகள், எலும்பு, பற்கள், கறைகள், விந்து, எச்சில், குருதி, வாந்தி, சளி, வியர்வை, யோனித்திரவங்கள் அத்துடன் / அல்லது மலம்

» **உடல் காயங்கள்:** கண்டல் காயங்கள், எரி காயங்கள், வெட்டுக்கள், வடுக்கள், உட்காயங்கள் அல்லது வெளிக் காயங்கள்

» **இலத்திரனியல் / டிஜிடல் பொருட்கள்:** தொலைபேசிகள். கணனிகள் மறறும் ஏனைய தொலைத்தொடர்பு சாதனங்கள்

» **நச்சியல் பகுப்பாய்வு:** போதைப்பொருட்கள், நஞ்சு அல்லது மதுசாரம் இருப்பதைக் காட்டுதல்,

» **தடயங்கள்:** இழையங்கள், முடி, கண்ணாடி, மண், பெயின்ட், உலோகம், பிளாஸ்டர்

» **பதிவுகள்:** விரல் அடையாளங்கள். காலடித்தடங்கள். கருவித்தடங்கள், டயர் தடங்கள்

» **வன்முறை இடம்பெற்ற இடங்கள்:** இடம் / தடுப்பு முகாம், இருத்தல் / கண்டறிதல், சாட்சியின் வாக்குமூலத்துடன் பொருந்துகின்ற இடத்தின் வரைபடம் அல்லது பௌதீக விபரிப்பு, அந்த இடத்தில் வாழ்ந்தமைக்கான அல்லது வாழ்கின்றமைக்கான சான்று.

» **பகுப்பாய்விற்கான ஆவணங்கள்:** கையெழுத்து, டைப் செய்யப்பட்ட எழுத்து, மாற்றங்கள், கடதாசி, மைப் பகுப்பாய்வு. ஆவணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்கள் தாமே ஆவணச்சான்றாக இருக்க முடியும். (பார்க்க: C ஆவணச்சான்று)

**பெட்டி 8**

### பௌதீகச் சான்றினை என்னால் சேகரிக்க முடியுமா?

பௌதீகச் சான்றினைச் சேகரிப்பதற்கான தீர்மானம் - சம்பவத்திற்கு ஏற்ப இதில் ஆவணங்கள் உள்ளடங்கலாம் - மிகவும் பாரதூரமான ஒன்றாகவும் கவனமான ஒன்றாகவும் எடுக்கப்பட்டு மிக அவதானமாகச் சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும். பௌதீகச் சான்றொன்றினைச் சேகரிப்பதைப் பற்றி பரிசீலிக்கும் நடைமுறைப்படுத்துனர்கள் பின்வரும் வினாக்களைத் தமக்குத் தாமே கேட்கவேண்டும்.

- 1. **அதிகாரம்: எனக்குத் தேவையான சட்ட அதிகாரம் உள்ளதா? ஆம் / இல்லை**
- 2. **ஆற்றல்:** சம்பந்தப்பட்ட பௌதீகச் சான்றினை சேகரித்து, களஞ்சியப்படுத்துவதற்கான தொழில் ரீதியான பயிற்சி என்னிடம் உள்ளதா? (ஒரு விசாரணையாளர் என்கின்ற ரீதியில், சுகாதார தொழில் ரீதியானவர் என்கின்ற ரீதியில் அல்லது வேறு? ஆம் / இல்லை
- 3. **வளங்கள்:** சம்பந்தப்பட்ட பௌதீகச் சான்றினை என்னால் உரிய முறையில் களஞ்சியப்படுத்தி, எடுத்துச்சென்று மற்றும் பாதுகாக்க முடியுமா? ஆம் / இல்லை

**மேற்குறிப்பிட்டுள்ள வினாக்கள் எவற்றிற்காவது இல்லை** என்று பதில் வந்தால் நீங்கள் சான்றினை சேகரிக்கக்கூடாது. உங்களினால் அவற்றினை பயன்படுத்த முடியாமல் போகலாம். மேலும் அதனை சேகரிப்பது உங்களுடைய நியாயாதிக்கத்தில் சட்ட விரோதமாக இருக்கலாம். இதற்கு பதிலாக நீங்கள் உங்களால் இயலுமான அளவு சிறப்பாகச் சான்றினைப் பதிவு செய்யவேண்டும் (பதிவுக் குறிப்புக்கள், வரைபடம் உருவாக்குதல், புகைப்படம் எடுத்தல் அத்துடன் / அல்லது வீடியோ பதிவு. பின்னர் நீங்கள் உரிய முறையில் அதிகாரம் வழங்கப்பட்ட, தகைமை வாய்ந்த மேலும் பௌதீக சான்றினைச் சேகரிப்பதற்குத் தயாரான ஒருவரினைத் தொடர்பு கொள்வதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

மிகவும் அசாதாரணமான சூழ்நிலைகளில் நடை முறைப்படுத்துனர் பௌதீகச் சான்றினை சேகரிப் பதற்குத் தீர்மானிக்கும்போது அத்தியாயம் 12 இல் மேலதிக தகவல்களை சேகரிப்பது எனும் தலைப்பின் கீழே, குறிப்பாக பெட்டி 5இல், பாதுகாத்து வைத்திருப்பவர் வரிசை என்பதன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாத்து வைத்திருப்பவர் கோட்பாடுகளை / பௌதீக சான்றிற்கான தனிவிளக்க விபரங்களைப் பின்பற்ற வேண்டும்.

*டிஜிடல் சான்றுகளை ஆராயும் பொறுப்பினை ஏற்பதற்கு முன்னர் சில பொருத்தமான நியாயாதிக்கங்களில் காணப்படுகின்ற சட்டரீதியான தேவைப்பாடுகளை ஆவணப்படுத்துனர்கள் பரிசீலிக்க வேண்டும்.*

## 2. பௌதீகச் சான்றுகளை எங்கே கண்டறிவது?

நடைமுறைப்படுத்துனர்கள் பின்வரும் இடங்களில் பௌதீகச் சான்றினைக் காணலாம்.

» பாதிக்கப்பட்டோரின் / சாட்சிகளின் / குற்றத்தை நிகழ்த்தி யோரின் உடல்கள். இவை உயிருடன் உள்ளவையாக அல்லது இறந்தவையாக இருக்கலாம். இது காயங்களின் காலஅளவு, மற்றும் காயங்களின் தன்மை ஆகியவற்றில் தங்கியுள்ளது.

» குற்றம் அல்லது வன்முறை நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் எந்தவொரு இடமும்

» குற்றத்தை நிகழ்த்தியவர்கள் இருந்த இடங்கள். இதிலே கைது அல்லது பிடித்துவைப்பு இடம்பெற்ற ஆரம்ப இடங்கள் உள்ளடங்கும்

» மயானங்கள் அல்லது எச்சந்தர்ப்பத்திலும் உடல்களை விட்டுச்சென்ற இடங்கள்

எனவே, கண்டறியக்கூடிய பாலியல் வன்முறையின் பௌதீகச் சான்றுகளின் அளவும் வகையும் குறிப்பாக எவ்வளவு காலத்திற்கு முன்னர் வன்முறை இடம்பெற்றது மேலும் பாதிக்கப்பட்டவர் வைத்தியரினால் பார்க்கப்பட்டுள்ளாரா மேலும் வன்முறை இடம்பெற்ற இடத்தினை அணுகக்கூடியதாக உள்ளதா என்பதில் தங்கியுள்ளன.

## 3. பௌதீகச் சான்றின் வகிபாத்திரம் என்ன?

பின்வருவனவற்றினை நிரூபிப்பதற்கு பௌதீகச் சான்று உதவும்

» பாதிக்கப்பட்டவரின் உடம்பினுள் அத்துமீறல் நடை பெற்றுள்ளது, உதாரணமாக பாதிக்கப்பட்டவரின் யோனியில் இருந்து அல்லது குதத்திலிருந்து விந்து கசிந்து கொண்டிருத்தல்

» செயற்பாட்டினைச் சுற்றியுள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகள், உள்ளார்ந்த பலவந்தம் மிகு சூழ்நிலை காணப்படுதல், உதாரணமாக வன்முறை இடம்பெற்ற இடம் ஒரு தடுப்பு முகாமாக இருத்தல் அல்லது போதைப்பொருள் அல்லது மதுபானம் ஆகியவை பாதிக்கப்பட்டவரின் உடலினுள் இருப்பது போன்ற இணக்கத்தினை இல்லாமலாக்குகின்ற சூழ்நிலை.

» குற்றத்தை நிகழ்த்தியதாகக் கூறப்படுவோரின் அடையாளம், உதாரணமாக படுக்கை விரிப்புக்கள், அல்லது ஆடைகளின் பாகங்களிலிருந்து கண்டறியப்பட்ட மாதிரிகளின் மூலமாக, மேலும், பொறுப்புக்களுக்கான வகைகளுக்கான கூறுகளின் மூலமாக

» பாதிக்கப்பட்டவரின் அடையாளம் அறியப்படாவிட்டால், உதாரணமாக பாதிக்கப்பட்டவரின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட உயிரியல் மாதிரிகளின் டீஎன்ஏ பகுப்பாய் வினால் கூட

» வன்முறை நடந்த இடம் இருத்தலும் அதனைக் கண்டுபிடித்துள்ளமையும் பிரதேசத்தில் குற்றத்தை நிகழ்த்தியோர் இருந்தமையை நிரூபிக்க உதவும். சிவிலியன்களின் மீது தாக்குதல் இடம்பெற்றமைக்கான அல்லது நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான ஓர் அங்கமாக இது பகுப்பாய்வு செய்யப்பட முடியும். அல்லது தனிப்பட்ட பௌதீகச் சான்றுகள் ஒன்று சேர்க்கப்படும்போது ஏனைய சூழியல் சார் தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்படமுடியும்.

» பாதிக்கப்பட்டவர் / சாட்சியின் வாக்குமூலத்தினை ஆதாரப் படுத்துதல் (இதனைத் தேவைப்படுத்துகின்ற சட்டமுறை மையில்) அல்லது பொருத்தமானவாறாக பாதிக்கப்பட்டவர் / சாட்சியின் வாக்குமூலத்தினில் பயன்படுத்தப்படுதல். உதாரணமாக பாதிக்கப்பட்டவர் இறந்திருந்தால் அல்லது அவர் இல்லாமலிருந்தால் (இதனை அனுமதிக்கின்ற சட்ட முறைமைகளுள்)

» கிழிதல்கள், அல்லது பௌத்திரங்கள் போன்ற காயங் களின் ஆவணப்படுத்தல் மூலமாகப் பாலியல் தாக்குதலின் உடல் ரீதியான தாக்கம்

சில குறிப்பிட்ட உண்மைகளை ஆதாரப்படுத்துவதற்கு பௌதீகச் சான்றுகள் உதவலாம் அல்லது அவற்றினை நிரூபிப்பதற்கு உதவலாம் என்கின்ற போதிலும் பௌதீகச் சான்றுகளைச் சேகரிப்பதானது சகல சந்தர்ப்பங்களிலும் ஏனைய ஆதாரப்படுத்துகின்ற அல்லது அதன் பயன்பாட்டுக்கு உதவக்கூடிய விளக்கச்சான்றுகளைச் சேகரிப்பதுடன் சேர்த்து இடம்பெறவேண்டுமென்பதை நடைமுறைப்படுத்துனர்கள் அறிந்து கொள்ளவேண்டும். பௌதீகச் சான்றுகள் பொதுவாக வாக்குமூலத்துடன் சேர்ந்தே வருகின்றன. நிபுணத்துவச் சான்றும் உள்ளடங்குகின்றது. மேலும் மாசடைதலைத் தடுப்ப தற்காகவும் இதற்கு மாசுமறுவற்ற பாதுகாப்புச் செயன்முறைகள் தேவைப்படுத்தப்படுவதுடன் பாதுகாத்து வைத்திருப்போர் வரிசையும் நிரூபிக்கப்படல் வேண்டும்.

*பௌதீகச் சான்றானது பொதுவாக நிபுணத்துவச் சாட்சிகள் உள்ளடங்கலாக வாக்குமூலத்தினையும் கொண்டுள்ளது.*

பெட்டி 9

## CARSV க்கான மருத்துவ - சட்டச் சான்றினைப் புரிந்து கொள்ளுதல்

**மருத்துவ - சட்டச் சான்று என்பது என்ன?**

பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பினை வழங்கும்போது சம்பவங்களின் கூற்று வரலாற்றினை சுகாதார நிபுணர்கள் சேகரிக்கலாம், பாதிக்கப்பட்டவரின் உடலினைப் பரிசீலிக்கலாம். அவர்கள் கண்டறிந்தவற்றினை ஆவணப்படுத்தலாம். சட்ட நோக்கங்களுக்காக பாலியல் வன்முறைச் சம்பவங்கள் பற்றிய விபரங்களை ஆதரப்படுத்தும் குறிக்கோளுடன் தடயவியல் மாதிரிகளைச் சேகரிக்கலாம். இந்தச் செயன்முறையினால் உருவாக்கப்படுகின்ற சான்றுகள் **மருத்துவ - சட்டச் சான்றின்** ஒரு வகையாகக் கருதப்படுகின்றது.

மருத்துவ - சட்டச் சான்றினைச் சேகரிப்பதானது பின்வருவனவற்றினை ஈடுபடுத்துகின்றது. **(1) பாதிக்கப்பட்ட வரிடமிருந்து பெற்றுக்கொண்ட வரலாற்றின் வெவ்வேறு அம்சங்களை ஆவணப்படுத்துதல், மருத்துவப் பரிசோதனை மற்றும் அதிலிருந்து கண்டறிந்தவற்றினை ஆதரப்படுத்தும் நோக்கங்களுக்காக ஆற்றல் உள்ள போது ஆவணப்படுத்தல். (2) பௌதீகச் சான்றுகளைச் சேகரித்தல் - தடயவியல் மாதிரிகள் - பாதிக்கப் பட்டவரின் உடலில் இருந்து.**

(1) **ஆவணப்படுத்தலில்** உள்ளடங்குபவை :

» நோயாளியின் மருத்துவ வரலாற்றினை ஆவணப்படுத்துதல்

» பாலியல் வன்முறை பற்றிய தனிநபரின் விபரிப்புக்களை ஆவணப்படுத்துதல்

» மருத்துவப் பரிசீலனையிலிருந்து கண்டறியப்பட்டவற்றினைப் பதிவுசெய்தல் - இதில் உடலில் எப்பகுதியிலாவது உடல் ரீதியான காயங்கள் கண்டறியப்படுவது - யோனி மற்றும் குதம் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்படுவது உள்ளடங்குகின்றது

» உளவியல் மதிப்பீட்டிலிருந்து கண்டறியப்பட்டவற்றினைப் பதிவுசெய்தல்

» வழங்கப்பட்ட சிகிச்சைகள் எவையாவது இருப்பின் அவற்றினைப் பதிவு செய்தல்

» சேகரிக்கப்பட்டுச் செயன்முறைப்படுத்தப்பட்ட ஏதாவது மாதிரிகளின் பெறுபேறுகள்

மருத்துவ - சட்ட ஆவணப்படுத்தல்கள் எழுதப்பட்ட அல்லது தட்டச்சுச் செய்யப்பட்ட குறிப்புக்களின் வடிவத்தினை, மருத்துவ அட்டவணை வடிவத்தினை (காயங்கள் உள்ள இடங்களைக் காட்டுவதற்காக படவரைபியல் - உடல் அட்டவணை) உத்தியோகபூர்வ மருத்துவச் சான்றிதழ் கணனிக் கோப்புக்களின் வடிவத்தினை, டிஜிடல் மொபைல் கோப்புக்களின் வடிவத்தினை, பதிவுகளின் வடிவத்தினை, புகைப்பட வடிவங்களினை அல்லது மேற்குறிப்பிடப்பட்டவற்றின் சேர்க்கையின் வடிவத்தினை உள்ளடக்கலாம்)

(2) **தடயவியல் மாதிரியினைச் சேகரித்தல்** மருத்துவ - சட்டச் சான்றின் பிரதான அம்சமாக உள்ளடங்குகின்றது. ஆனால் மாதிரிகளைக் களஞ்சியப்படுத்தி, செயன்முறைப்படுத்தி, தடயவியல் பகுப்பாய்வினை நடத்துவதற்கு ஆற்றல் இருக்கும்போது மாத்திரமே இவற்றை மேற்கொள்ள முடியும். பாலியல் வன்முறைச் சம்பவங்களில் சேகரிக்கப்பட்ட தடயவியல் மாதிரிகளின் வகைகளுள் உயிரியல் (வாய், குதம், யோனி, ஆகியவற்றில் இருந்து மற்றும் சிறுநீர், குருதி விந்து உள்ளடங்கலாகச் சுரக்கப்படுபவை மற்றும் தோல்) மற்றும் உயிரியல் சாரா மாதிரிகள் (ஆடை) உள்ளடங்குகின்றன. சேகரிக்கப்பட்டதும் மாதிரிகள் செயன்முறைப்படுத்தப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு, உத்தியோகபூர்வமாகக் கண்டறியப்பட்டவைகள் பதியப்படுகின்றன. இவ்வாறு கண்டறியப்பட்டவை இறுதி மருத்துவ - சட்ட ஆவணப்படுத்தலின் அம்சமாக மாறுகின்றன.

*பயிற்றப்பட்ட சுகாதார நிபுணர்களும் தடயவியல் நிபுணர்களும் மாத்திரமே மருத்துவ - சட்டச் சான்றுகளைச் சேகரித்து, செயன்முறைப்படுத்திப் பகுப்பாய்வு செய்ய முடியும்.*

பெட்டி 9

## CARSV க்கான மருத்துவ - சட்டச் சான்றினைப் புரிந்து கொள்ளுதல்

### மருத்துவச் சான்றிதழ்கள்

மருத்துவ சான்றிதழ்கள் என்பவை பொதுவாகத் தடயவியல் மருத்துவப் பரிசோதனைகளை நடத்தி, உடல் ரீதியான மற்றும் நடத்தை ரீதியான அவதானிப்புகளை ஆவணப்படுத்தி அதன் பின்னர் நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படுவதற்காக மருத்துவ ரீதியாகக் கண்டறிந்த தரவுகளை வழங்கும் உத்தியோகபூர்வ ஆவணங்களாகும்.

பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் மருத்துவச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆற்றலானது தேசிய நியாயாதிக்கங்களில் வேறுபடுகின்றது. உதாரணமாக, சில நாடுகளில் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு குற்றச்செயலினைப் பொலிசாருக்கு முறைப்பாடு செய்ய வேண்டும் இதன் பின்னரே அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட வைத்தியரினால் மருத்துவச் சான்றிதழ் பூர்த்திசெய்யப்படும். இன்னும் சில நியாயாதிக்கங்களில் பூர்த்திசெய்யப்பட்ட மருத்துவச் சான்றிதழானது நீதிமன்றத்திலே பாதிக்கப்பட்டவர் வழக்கினைத் தாக்கல் செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றது. இந்தச் சட்டம் மற்றும் செயல்விதி சார்ந்த தேவைப்பாடுகள் நீதியை அணுகுவதற்கான பாதிக்கப்பட்டவரின் ஆற்றலுக்குப் பாரிய தடைகளை விதிக்கின்றது. குறிப்பாக குற்றச்செயல்கள் அரச அனுசரணையுடன் நடைபெறும் போது அல்லது அரசாங்கம் நியமித்த சுகாதார அதிகாரிகள் போதியளவில் இல்லாதபோது அல்லது சேவைகளுக்காகக் கொடுப்பனவினைக் கோரும் போது இத்தடை ஏற்படுகின்றது.

சில மருத்துவ, அரசு சாரா நிறுவனங்கள் பாதிக்கப்பட்டவரின் வேண்டுகோளின் பேரின் அவற்றின் சொந்த மருத்துவச் சான்றிகழ்களை வழங்குகின்றன. இருப்பினும் இவ்வாறான பதிவுகளை நீதிமன்றங்களிலே உத்தியோகபூர்வச் சான்றுகளாகச் சமர்ப்பிக்கக்கூடிய ஆற்றலானது குறிப்பிட்ட நியாயாதிக்கங்களில் தங்கியுள்ளது.

### மருத்துவ-சட்ட சான்றிதழ் என்பது என்ன?

மருத்துவ - சட்டச் சான்றிதழின் குறிக்கோளானது பாலியல் வன்முறைச் செயற்பாடு நடந்துள்ளது என்பதை நிரூபிப்பதாகும். இது குற்றத்தை நிகழ்த்தியவருக்கும் பாதிக்கப்பட்டவருக்கும் இடையிலுள்ள இணைப்பினை நிரூபிப்பதற்கும் உதவக்கூடியதாகும் என்பதுடன் வன்முறை இடம்பெற்ற இடத்துடன் உண்மைகளையும் தனிநபர்களையும் இணைக்கின்றது.

எவ்வாறாயினும் மருத்துவ - சட்டச் சான்றுகளுக்கும் சாதகமான சட்டப் பலாபலன்களுக்கும் இடையிலான உறவானது தெளிவற்றதாகக் காணப்படுகின்றது.[22] பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட பலர் உடல் ரீதியான காயங்களை அடைவதில்லை. அல்லது குத மற்றும் யோனிப் பாதிப்பினை அடைவதில்லை அல்லது ஆவணப்படுத்தப்பட்ட வகையில் விந்து அல்லது விந்தணுவினை அவர்களின் உடலில் கொண்டிருப்பதில்லை என்பது மாத்திரம் தெரிந்த விடயமாகும். இந்தச் சான்றுகள் இல்லாமையானது பாலியல் வன்முறை நடக்கவில்லை என்ற அர்த்தத்தினை வழங்காது.

22 டியுமொன்ட், ஜெனிஸ் மற்றும் வைட், டீ., 'பாலியல் வன்முறை சம்பவங்களின் மருத்துவ-சட்ட தடயங்களின் பாவனையும் அழு: உலகளாவிய கண்ணோட்டம்'இ பாலியல் வன்முறை ஆய்வு முன்முனைவு (ஜெனீவா, 2007).

பெட்டி 9

## CARSV க்கான மருத்துவ - சட்டச் சான்றினைப் புரிந்து கொள்ளுதல்

### யாரினால் மருத்துவ - சட்டச் சான்றினைச் சேகரிக்க முடியும்? மேலும் எங்கே சேகரிக்க முடியும்?

பயிற்றப்பட்ட தொழில்ரீதியான சுகாதாரப் பணியாளர்களாலும் தொழில்ரீதியான தடயவியலாளர்களாலும் மாத்திரமே மருத்துவ - சட்டச் சான்றுகளைச் சேகரித்து, செயன்முறைப்படுத்தி, பகுப்பாய்வு செய்யமுடியும். குறிப்பிட்ட முறையில் தடயவியல் மாதிரிகளைச் சேகரிப்பதானது அம்மாதிரிகளைக் களஞ்சியப்படுத்தி, செயன்முறைப்படுத்தி, தடயவியல் பகுப்பாய்வினை நடத்துவதற்கான ஆற்றல் இருக்கும் சூழமைவில் மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். தகைமை வாய்ந்த தொழில்ரீதியான சுகாதாரப் பணியாளர்களும் தொழில்ரீதியான தடயவியலாளர்களும் ஏனைய சான்றுகளைச் சேகரிப்பதற்கோ, களஞ்சியப்படுத்துவதற்கோ, பகுப்பாய்வு செய்வதற்கோ அல்லது உயிரியல் மாதிரிகளை மாற்றுவதற்கோ ஆற்றல் இல்லாதபோதிலும் அச்சான்றுகளை ஆவணப்படுத்தலாம்.

இதேபோன்று, பயிற்றப்பட்ட தொழில்ரீதியான சுகாதாரப் பணியாளர்களாலும் தொழில்ரீதியான தடயவியலாளர்களாலும் இந்தச் சான்றுகளுக்காக நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்க முடியும். எவ்வாறாயினும் செயன்முறையின் எந்தக் கட்டத்திலும் சட்டரீதியான தீர்மானங்களை எடுப்பது சுகாதார உத்தியோகத்தர்களின் தொழில் அல்ல. அவர்களினால் தமது பரிசீலனையின் முடிவு அவதானிப்புகளைப் பற்றிச் சாட்சியமளிக்க மாத்திரமே முடியும். மேலும் பாலியல் வன்முறை இடம்பெற்றுள்ளதா இல்லையா என்கின்ற தீர்மானத்தினை அவர்களினால் வழங்க முடியாது.

மருத்துவ - சட்டப் பரிசோதனைகள், அவை தனிப்பட்ட ரீதியானவையாகவும் பாதுகாப்பானவையாகவும் இருக்கின்றவரையில், வெவ்வேறு வித்தியாசமான இடங்களில் மேற்கொள்ளப்பட முடியும். பாலியல் வல்லுறவு /பாலியல் துஷ்பிரயோகம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சை அளிப்பதற்கான பொருத்தமான வசதிகளைக் கொண்ட வைத்தியசாலைகள், சுகாதார மையங்கள் பாதிக்கப்பட்டவரின் மருத்துவ - சட்டப் பரிசோதனைகளை நடத்துவதற்கான ஆற்றலினைக் கொண்டிருக்கலாம். எனவே பாதிக்கப்பட்ட ஒருவர் உட்பட வேண்டிய செயல்விதிகளின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கு மருத்துவ சிகிச்சைகளையும் மருத்துவ - சட்டப் பரிசோதனைகளையும் ஒரே நேரத்தில் மேற்கொள்வது சிறந்ததாகும்.

### அவதானிக்கப்பட வேண்டிய குறிப்புகள்

» சர்வதேச குற்றவியல் நடைமுறையில் CARSVயினை நிரூபிப்பதற்கு மருத்துவ - சட்டச் சான்றினைப் பயன்படுத்துவது அவசியமில்லை. இவ்வாறான தேவைப்பாட்டினை விதிப்பதானது பாலியல் வன்முறை நிகழ்த்தப்பட்ட சந்தர்ப்பத்திலே மருத்துவ சேவைகளை அணுகமுடியாத, பாதிக்கப்பட்ட பெரும்பான்மையானோர் நீதியினைப் பெறுவதற்குத் தடையினை ஏற்படுத்திவிடும். தடுத்து வைப்பு அல்லது பலவந்தப்படுத்தி இடம்பெயரச்செய்தல், பாலியல் அடிமைத்தனம் போன்ற சூழ்நிலைகளில் தொடர்ந்து இடம்பெறுகின்ற வன்முறையானது நடமாட்டத்திற்கும் சுகாதார சேவைகளை அணுகுவதற்கும் வாய்ப்பினைச் சாத்தியமற்றதாக்குகின்ற குறிப்பிட்ட சூழமைவில் பாலியல் வன்முறை நடத்தப்படுகையில் இது உண்மையானதாகும்.

» மருத்துவ - சட்டப் பரிசோதனை நடைபெறாவிட்டாலும் கூட வழமையான பாலியல் வல்லுறவுக்குப் பின்னரான அல்லது காயத்திற்கு சிகிச்சை அளிக்கின்ற பாராமரிப்பின் போது உருவாக்கப்படுகின்ற தனிப்பட்ட நோயாளர்களின் மருத்துவப் பதிவுகளையும் வாக்குமூலங்களை ஆதரப்படுத்தப் பயன்படுத்தமுடியும் - உதாரணமாக அடைந்த காயத்திற்கான சான்றினை வழங்குவதன் மூலமாக, தாக்குதலின் உளவியல் தாக்கத்தின் ஆவணப்படுத்தலாக மேலும் தாக்குதலின் முதலாவது வெளிக்கூறல் அல்லது விபரிப்பாக –

» சுகாதார நிபுணர்கள் மருத்துவப் பதிவுகளை விசாரணையாளர்களுக்கு வெளிக்கூறலானது ஒவ்வொரு சம்பவ அடிப்படையிலும் இடம்பெற வேண்டுமென்பதுடன் அது பாதிக்கப்பட்டவரின் பூரணமான அறிவார்ந்த இணக்கத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

» பாலியல் வன்முறை எதனை உள்ளடக்குகின்றது என்கின்ற வரைவிலக்கணங்கள் நியாயாதிக்கங்களிலிருந்து நியாயாதிக்கத்திற்கு வித்தியாசப்படலாம் என்பதுடன் இது தேவையற்ற ஊடுருவலாக மருத்துவ - சட்ட பரிசோதனைகளை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படலாகாது. அல்லது அவமானப்படுத்தும் வகையில் அல்லது பாகுபாடு காட்டும் வகையில் எவ்விதமான மருத்துவரீதியாகச் செல்லுபடியாகும் தன்மையின்றி மருத்துவப் பரிசீலனைகளை நடத்துவதற்குப் பயன்படுத்தப்படலாகாது. இது தேவையற்ற முறையில் யோனியினை அல்லது குதத்தினை டிஜிடல் பரிசோதனைக்கு உட்படுத்துவதை உள்ளடக்குகின்றது என்பதுடன் ஆனால் இதற்கு மாத்திரம் வரையறுக்கப்படாததாகும். உள்நுழைவித்த பாலியல் செயற்பாடு இடம்பெற்றுள்ளதா அல்லது கன்னித்தன்மை இருக்கின்றதா என்பதைப் பரிசீலிப்பதற்காக அவற்றின் அறிகுறிகளை அறிய கன்னித்திரையினைப் பரிசீலிப்பது அல்லது எவ்விதத்திலும் கன்னித்தன்மையைப் பரிசீலிப்பது ஆகியவற்றினை கன்னித்தன்மைப் பரிசீலனை உள்ளடக்குவதுடன் இது இவற்றிற்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை (பார்க்க அத்தியாயம் 4 : தனிப்பட்ட குற்றவியல் பொறுப்பு பெட்டி 12 : (பாதிக்கப்பட்டவரின் கன்னித்தன்மையும் கன்னித்தன்மைப் பரிசோதனைகளும்)

» மருத்துவ - சட்டச் சான்றுகளும் மருத்துவப் பதிவுகளும் பாலியல் வன்முறையின் தனிப்பட்ட வாக்குமூலச் சான்றுகளை ஆதரப்படுத்துவதற்கு மாத்திரம் பயன்மிக்கதாக இருக்காமல் CARSV ஆனது குறிப்பிட்ட பிரதேசத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிகழ்த்தப்பட்ட பாங்குகளையும் அளவுகளையும் அவற்றின் பொதுவான சூழமைவினையும் நிரூபிப்பதற்கும் உதவுகின்றது. (பார்க்க அத்தியாயம் 14 : பாங்குகளையும் தரவுகளையும் பகுப்பாய்வு செய்தல்/ பாங்குகளை அடையாளம் காணுதல்.

# பகுதி V: நடைமுறையிலுள்ள ஆவணப்படுத்தல் - தகவல்களைத் திரட்டுதல்

## அத்தியாயம் 11 உள்ளடக்கங்கள்

**அத்தியாயம் 11: நேர்காணுதல்............................................................161**

**A.** அறிமுகம் ....................................................................161

*பெட்டி 1*
தொடர்பாடலில் செய்யக்கூடியவையும் செய்யக்கூடாதவையும் .....................162

**B. நேர்காணல் சட்டகம் .........................................................163**

*பெட்டி 2*
PEACE மாதிரி..................................................................163
1. திட்டமிடுதலும் தயார்படுத்தலும் ..........................................164

*பெட்டி 3*
நேர்காணல் ஒழுங்கமைப்பு – செய்யக்கூடியவையும் செய்யக்கூடாதவையும் ............167
2. ஈடுபடுத்தி விளக்குதல்.......................................................168

*பெட்டி 4*
சாதகமான சூழலை உருவாக்குவதற்கான உதவிக்குறிப்புக்கள் .........................168

*பெட்டி 5*
மொழிபெயர்ப்பாளர்களுடன் பணியாற்றுதல் ..........................................171
3. நடந்தவற்றைப் பற்றிய கூற்றும் தெளிவுபடுத்தலும்...............................172
i. வினாக்களின் வகைகள் ........................................................172

*பெட்டி 6*
ஆக்கத்திறன்மிகு குறிப்பிட்ட பதிலைத் தேவைப்படுத்தாத வினாக்களின் வகைகள் ........172

*பெட்டி 7*
வினாக்களின் வகைகள் ...........................................................173
ii. வினாக்களுக்கான விடயப் பரப்புக்கள்; .........................................176

*பெட்டி 8*
சர்வதேச சட்டத்தின் மீறல் அல்லது குற்றச்செயலாகப் பாலியல் வன்முறை பற்றிய வினாக்களுக்கான விடயப்பரப்புக்கள்176
iii. வினாக்களின் உதாரணங்கள் ...................................................177
iv. நேர்காணல் உத்திகள் ..........................................................178

*பெட்டி 9*
ஒத்திசையாமைகளைக் கையாளுதல் .................................................181
4. முடித்து வைத்தல் ............................................................182
5. மதிப்பீடு ......................................................................183

*பெட்டி 10*
சகபாடி அனுபவம் — உரிய நேரத்திலான மற்றும் உரிய மதிப்பீடுகளின் முக்கியத்துவம் ....184

**C. நேர்காணல் தகவல்களைப் பதிதல் ..............................................185**

*பெட்டி 11*
சகபாடி அனுபவம் — தகவல்களைக் கையகப்படுத்தி பதிதல் .............................185

# அத்தியாயம் 11: நேர்காணுதல்

## A. அறிமுகம்[1]

பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தும் ஏனைய சாட்சிகளிட மிருந்தும் துல்லியமானதும் நம்பத்தகுந்ததுமான தகவல் களைப் பெறுவதற்காக பிரக்ஞையுடன் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற ஓர் உரையாடலாக நேர்காணலினை நோக்க முடியும். இதனைக் குற்றவியல் விசாரணையாளர்களினால், மனித உரிமைகள் விசாரணையாளர்களினால் அல்லது பொதுவான ஆதரித்து வாதாடல் நோக்கங்களுக்காக தகவல் திரட்டுவோரினால் நடத்த முடியும். எந்தவொரு நேர்காணலினதும் உள்ளார்ந்த அத்திவாரமானது பெற்றுக்கொள்ளப்படும் எத்தகவலும் நேர்காணல் நடத்தப்படுகின்ற விதத்தினால் முறையற்ற விதத்தில் செல்வாக்குக்கு உட்படுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதாகும். இதனை அடைந்து கொள்வதற்கும் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் பாதிக்காமல் இருப்பதற்கும் நடைமுறைப்படுத்துனர்கள் பின்வருவனவற்றினை மேற்கொள்ளவேண்டும

» திட்டமிடல் மற்றும் தயார்படுத்தல்

» சிறந்த தொடர்பாடல் திறன்கள்

» இந்தத் திறன்களை பிரயோகிப்பதற்கான ஒரு கட்டமைப்பு

### அவதானிக்கப்படவேண்டிய குறிப்புக்கள்

» பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தும் ஏனையோரிடமிருந்தும் தகவல்களைத் திரட்டுவதற்கான மிகப் பொதுவான பயன்மிக்க முறையாக நேர்காணல் காணப்படுகின்றது. உரிய முறையிலும், கூருணர்வுடனும், தொழில்ரீதியாகவும் மேற்கொள்ளப்படும் போது நேர்காணலானது பாதிக்கப்பட்டோரையும் ஏனைய சாட்சிகளையும் வலுப்படுத்தி அவர்கள் மீதான ஒரு அதிகாரத்தினையும் கட்டுப்பாட்டினையும் வழங்கும்.

» எவ்வாறாயினும் உரிய முறையில் நடத்தப்படாவிட்டால் நேர்காணல்கள் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சி களையும் மீள மனஅதிர்ச்சி வடுவிற்கு உள்ளாக்கி அவர்களை மேலதிக அபாயநேர்வுக்கு உட்படுத்தி வழங்கப்படுகின்ற தகவல்களின் தரம் மற்றும் நம்பகத் தன்மையினைப் பாதித்து பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் நிகழ்வுகள் பற்றிய ஞாபகங்களை திரிபடையச் செய்யும்.

» உரிய முறையில் ஆவணப்படுத்தப்படாவிட்டால் நேர் காணல் நிகழ்வுகளை முறையாகப் பதிவதில் ஒத்திசை யாத தன்மை ஏற்படலாம். இது எதிர்கால வழக்குத் தொடுப்புக்களின் போது பாதிக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் நம்பகத்தன்மையின் மீது பாதகமாக தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.

» நேர்காணலொன்றினை நடத்தினால் நடைமுறைப்படுத்து னர்கள் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் / சாட்சிகளை நேர்காண்பதில் குறிப்பிட்ட அனுபவத்துடன் உரிய முறையில் நேர்காணலை நடத்துவதற்கு பயிற்றப் படல் வேண்டும். சிறுவர்களையும் ஏனைய பாதிப்புறு நிலையிலுள்ள பாதிக்கப்பட்டோரையும் சாட்சிகளையும் நேர்காணும்போது நேர்காணப்படுபவர்களின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் ஆற்றல்களுக்கு பொருத்தமான முறையில் பதிற்செயற்பாடு ஆற்றும் வகையில் நடைமுறைப்படுத்துனர்கள் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். (மனநல அல்லது உடல் ரீதியான இயலாமையினைக் கொண்டிருப்போருடன்)

» சில சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களை / சாட்சி களை நேர்காண்பதானது அவசியமற்றதாகவும் அல்லது பரிந்துரைக்கப்படாததாகவும் காணப்படுகின்றது. மேலும் அவ்வாறு செய்வதற்கான தேவையினை நடைமுறைப்படுத்துனர்கள் தெளிவாக நியாயப்படுத்தக் கூடியவர்களாக இருக்கவேண்டும். பொருத்தமான பயிற்சி மற்றும் அனுபவம் இல்லாத நடைமுறைப்படுத்துனர்கள் பாதிக்கப்பட்டவர்களையும் ஏனைய சாட்சிகளையும் நேர் காண்பதிலிருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும்.

» நேர்காணல் என்பது ஒரு விசாரணையல்ல.

1 பாலியல் வன்முறைகளை ஆவணப்படுத்துதல் மற்றும் விசாரித்தல் பற்றிய நெறிமுறை : சர்வதேச குற்றவியல் விசாரணைகளுக்கான நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட பயிற்சி சாதனங்கள் மற்றும் ஏனைய IICI பயிற்சி சாதனங்களிலிருந்து இந்த அத்தியாயம் உள்ளீடுகளைப் பெற்றுள்ளது.

பெட்டி 1

## தொடர்பாடலில் செய்யக்கூடியவையும் செய்யக்கூடாதவையும்

### செய்யக்கூடியவை

» நீங்கள் நேர்காணப்படுபவரில் பூரண கவனத்தினைச் செலுத்தவேண்டும். மேலும் தீவிரமாகச் செவிமடுக்கின்ற வகையில் உடலினை நிலைப்படுத்துவதன் மூலமாக இதனை நீங்கள் காட்டமுடியும். மரியாதைமிகு கண் தொடர்பினைப் பேணவும். தலை அசைக்கவும் அல்லது பாதிக்கப்பட்டவர்/ சாட்சியினைத் தொடர்ந்து பேச வைப்பதற்காக ஊக்குவிக்கவும் ஓர் உறவினைத் தொடர்ந்து பேணவும். ம்ம். என்பதைக் கூறவும்.

» இடையூறின்றி பாதிக்கப்பட்டவர்/ சாட்சி சுதந்திரமாகப் பேச அனுமதிக்கவும்.

» நேர்காணல் செயன்முறையின் போது மௌனமாக இருக்கவும். உங்களுடைய உணர்வுகள் ஊடாடு வதற்கு அனுமதிக்க வேண்டாம். பாதிக்கப்பட்டவரே வெளிக்கூறலின் வேகஅளவினையும் எவை வெளிக்கூறுகின்றன என்பவற்றின் அளவினையும் கட்டுப்படுத்த அனுமதிக்கவும்.

» சௌகர்யமான உணர்வினை வழங்குபவராகவும் உதவியினை வழங்குபவராகவும் உத்தரவாதத்தினை வழங்குபவராகவும் இருக்கவும்.

» தெளிவான, எளிமையான, குறிப்பிட்ட சுருக்கமான பதில்களைத் தேவைப்படுத்தாத வினாக்களைத் தொடுக்கவும். மேலும் ஒரு நேரத்தில் ஒரு வினாவினை மட்டுமே கேட்கவும்.

» தெளிவான, எளிமையான மொழியினைப் பயன்படுத்தி பரிச்சயமற்ற சொற்பதங்களைத் தெளிவுபடுத்துவதை உறுதிப்படுத்தவும்.

» கூறுகின்ற விடயங்களின் மிகவும் கடினமான அம்சங்களை ஏற்றுக்கொண்டு ஏன் இந்த விபரங்கள் தேவைப்படுகின்றன என்பதை, அவ்வாறானவை இருப்பின் / விளக்கவும்.

» மொழியற்ற தொடர்பாடலில் கவனம் செலுத்தவும். சில குறிப்பிட்ட கேள்விகளைக் கேட்பதை எப்போது நிறுத்த வேண்டும் அல்லது எப்போது தலைப்பினை மாற்ற வேண்டும் என்பதை அறிந்திருக்கவும்.

» பாதிக்கப்பட்டவர் / சாட்சிகளின் அபிப்பிராயங்களை, நம்பிக்கைகளை, சிந்தனைகளை, மற்றும் உணர்வு களை மதிக்கவும். அவர்களை அழ வேண்டாம் என்றோ அல்லது அமைதியடையும் படியோ கூறவேண்டாம்.

### செய்யக்கூடாதவை

» பாதிக்கப்பட்டவரை/ சாட்சியினை இடையூறு செய்தல்

» அழுத்தம் கொடுப்பதும் ஒரே கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்பதும்

» வெவ்வேறு நபர்களிடம் அவரின் துஷ்பிரயோகக் கதையினை பாதிக்கப்பட்டவரோ / சாட்சியோ கூறச் செய்தல்

» கோபமடைதல் அல்லது பாதிக்கப்பட்டவரை/ சாட்சியினைப் பேசுமாறு பலவந்தப்படுத்துதல்

» பாதிக்கப்பட்டவர்/ சாட்சியினை உற்றுப்பார்த்தல்

» நம்பிக்கையீனம், அருவருப்பு, விருப்பமின்மை, ஆச்சரியம் அல்லது அதிர்ச்சியினை வெளிப் படுத்துதல்

» பாதிக்கப்பட்டவர்/ சாட்சி எதைக் கூற விரும்பு கின்றார் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள் என ஊகித்தல்

» நேர்காணலினை அவசர அவசரமாக நடத்துதல் அல்லது நேர்காணலின் ஓட்டத்தினை முடிவுறுத்துதல்

## B. நேர்காணல் சட்டகம்

வெற்றிகரமான நேர்காணல் ஒன்று வெறுமனே நிகழ்வதில்லை. அது நன்கு திட்டமிடப்பட்டு, ஒரு ஒத்திசைவான மற்றும் முறையான கட்டமைப்பினைப் பின்பற்ற வேண்டுமென்பதுடன் அது விபரமாக எழுதப்பட்ட திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டு விபரமான மற்றும் துல்லியமான, நம்பத்தகுந்த தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான சிறந்த வாய்ப்புக்களை வழங்குவதற்காக கவனமாக முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும்.

PEACE[2] மாதிரியானது பயன்மிகு சட்டகமாகும். இது சிக்கலும் இயங்குதிறனும் மிக்க செயன்முறையின் மீது நடைமுறைப்படுத்துனர்கள் கட்டுப்பாட்டினை பேணுவதற்கு உதவுவதுடன் நேர்காணலின் முன்னரும் நேர்காணலின் போதும் நேர்காணலின் பின்னரும் தெளிவினையும் கட்டமைப்பினையும் வழங்குகின்றது. இந்த PEACE மாதிரியினை சிறுவர்களை நேர்காணுவதற்குப் பயன்படுத்துவது பற்றிய வழிகாட்டலுக்கு பார்க்க அத்தியாயம் 16 :சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை – ஆவணப்படுத்தல் செயன்முறையிலே சிறுவர்களை சம்பந்தப்படுத்துவதற்கான பிரதான வழிகாட்டி.

**பெட்டி 2**

### PEACE மாதிரி

PEACE மாதிரியானது கலந்துரையாடல் போன்று அமைந்திருக்கின்ற தொனியிலே செயற்றிறன் மிக்க மற்றும் நெறி சார்ந்த நேர்காணல்களை நடத்துவதற்குத் தொழில்ரீதியான சட்டகத்தினை வழங்குகின்றது. PEACE மாதிரியானது விசாரணை ரீதியான நேர்காணலின் சகல 5 அம்சங்களையும் உள்ளடக்குகின்றது.

- **P** Planning and Preparation (திட்டமிடல் தயார்படுத்துதல்)
- **E** Engage and Explain (ஈடுபடுத்துதல் விளக்குதல்)
- **A** Account and Clarification (நடந்தவை பற்றிக் கூறுதலும் தெளிவுபடுத்தலும்)
- **C** Closure (முடிவுறுத்துதல்)
- **E** Evaluation (மதிப்பீடு)

குறிப்பிட்ட நேர்காணலின் விபரங்களைக் கட்டமைக்கக்கூடிய ஓர் அடிப்படையாக நடைமுறைப்படுத்துனர்கள் PEACE சட்டகத்தினையும் நேர்காணல் பரிசீலனைப் பட்டியலையும் பயன்படுத்த முடியும். (பார்க்க பின்னிணைப்பு 7)

2 நா பொதுச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட சித்திரவதை மற்றும் குரூரமாக, மனிதாபிமானமற்ற அல்லது அவமானப்படுத்துகின்ற முறையில் நடத்தப்படுதல் அல்லது தண்டித்தல் பற்றிய விசேட தூதுவரின் இடைக்கால அறிக்கை http://www.ncl.ac.uk/press/news/2016/10/unitednationsan- ti-torturemeeting.

# உத்தியோகபூர்வ ஆணையற்ற நடைமுறைப்படுத்துனர்கள் நிகழ்வுகளின் அதிகாரபூர்வமான பதிவுகளை உருவாக்குவதைத் தவிர்ப்பதற்காக தகவல்களை நேர்காணல் வடிவிலே பதிய வேண்டும்.

## 1. திட்டமிடுதலும் தயார்படுத்தலும்

PEACE மாதிரியின் சகல கட்டங்களும் முக்கியமானதாக இருக்கின்ற அதேவேளை இந்தச் சட்டகத்தின் பிரதானமான பாகமாகத் திட்டமிடுதலும் தயார்படுத்தலும் அமைந்துள்ளது. போதியளவு திட்டமிடுவதற்கும் தயார்படுத்துவதற்கும் தவறுகின்ற நடைமுறைப்படுத்துனர்கள் நேர்காணலினைக் கட்டமைக்கப்படாத ஒரு கலந்துரையாடலாக மாற்றலாம் என்பதுடன் இது பொதுவாக ஏற்கனவே நடைமுறைப்படுத்துனருக்குத் தெரிந்த அல்லது அவர் நம்புகின்ற அல்லது அவர் கேட்க விரும்புகின்ற விடயத்தினையே பாதிக்கப்பட்டோரும் சாட்சிகளும் உறுதிப்படுத்தக் காரணமாகலாம். துல்லியமற்ற அத்துடன் / அல்லது பூரணமற்ற தகவல்களுக்கு மேலதிகமாக திட்டமிடாமையும் தயார்படுத்தாமையும் பாதிக்கப்பட்டவர்களையும் ஏனைய சாட்சிகளையும் மேலும் பாதிப்படையச் செய்யலாம்.

### திட்டமிடுதல் மற்றும் தயார்படுத்தல் கட்டத்தில் என்ன செய்ய வேண்டும் மற்றும் கூறவேண்டும் என்பதன் தொகுப்பு

#### a. பூர்வாங்கப் பரிசீலனைகள்

1. வெவ்வேறு வகையிலான பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வகையிலான ஆற்றுப்படுத்தல் மற்றும் உதவி முறைமைகள் கிடைக்கக்கூடியதாக உள்ளன என்பதைப் பரிசீலிக்கவும் (ஆண், பெண், சிறுவர்கள்) குறிப்பாக மருத்துவ / உள சமூக ஆதரவு மற்றும் சாட்சிப் பாதுகாப்பு இருப்பின் அவையும். மேலும் பாதிக்கப்பட்டோருக்கு / சாட்சிகளுக்கு ஆவணப் படுத்தல் அணியினரால் வழங்கக்கூடிய மேலும் வழங்கமுடியாத கடப்பாடுகளைப் பற்றித் தீர்மானிக்கவும் (பார்க்க அத்தியாயம் 7: தீங்கிழைக்க வேண்டாம், ஆற்றுப்படுத்தல்கள். அத்தியாயம் 16 : சிறுவர்களுக் கெதிரான பாலியல் வன்முறை / பூர்வாங்க ஆய்வு மற்றும் பகுப்பாய்வு அத்தியாயம் 17 : ஆண்கள் மற்றும் பையன்களுக்கெதிரான பாலியல் வன்முறை, பூர்வாங்க ஆய்வு மற்றும் பகுப்பாய்வு)
2. பாதிக்கப்பட்டோர் / சாட்சிகள் உங்களைச் சந்திப்பதில் சம்பந்தப்படுகின்ற அபாயநேர்வுக் காரணிகளை மதிப்பிடவும். ஒரு பூரணமான அபாய நேர்வு மதிப்பீட்டினை நடாத்தி பாதுகாப்புத் திட்டம் ஒன்றினைத் தயார்படுத்தவும் (பார்க்க அத்தியாயம் 7: தீங்கிழைக்க வேண்டாம், அச்சுறுத்தல்கள் மற்றும் அபாயநேர்வுகள் மதிப்பீடுகள், அத்தியாயம் : 9 திட்டமிடுதல் - அபாயநேர்வுகள், அத்தியாயம் 8 : பாதுகாப்பு – நடைமுறைப்படுத்துனர்களுக்கான அபாயநேர்வுகளை முகாமைத்துவம் செய்தல், அத்தியாயம் 16 : சிறார்களுக்கெதிரான பாலியல் வன்முறை - பூர்வாங்க ஆய்வு மற்றும் விசாரணை திட்டமிடல் அத்தியாயம் 17 : ஆண்கள் மற்றும் பையன்களுக்கெதிரான பாலியல் வன்முறை - பூர்வாங்க ஆய்வு மற்றும் பகுப்பாய்வு)
3. பாலியல் வன்முறை நிகழ்கின்ற சூழமைவு பற்றிய பொருத்தமான புரிதலினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களின் கீழ் குற்றச்செயல்களின் வெவ்வேறு மூலக்கூறுகளையும் அறிந்திருக்க வேண்டும். (பார்க்க அத்தியாயம் 9 : திட்டமிடுதல் - தகவல் சேகரிப்பு உபாயமார்க்கம்)
4. பாலியல் வன்முறை குற்றச்செயல்கள் இடம் பெற்றுள்ள பிராந்தியத்திலே அல்லது நாட்டிலே இயங்குகின்ற பால்நிலை இயக்கவியலைப் பற்றி அறிந்திருக்க வேண்டும் (உதாரணம் பால்நிலை அடையாளம், பாலியல் சிறுபான்மை, இன சாதி அல்லது சுதேச குழுக்கள் அல்லது அங்கவீனமான நபர்களுடனான பாலியல் ரீதியான மாறாக்கருத்து நிலைகள் (பார்க்க : அத்தியாயம் 9 : திட்டமிடுதல் - ஆய்வு மற்றும் பகுப்பாய்வு)
5. வெவ்வேறு கலாசாரங்கள் வெவ்வேறு விதமான தொடர்பாடல் பாங்குகளைக் கொண்டுள்ளன என்பதைப் பற்றி அறிந்திருக்கவும். (உதாரணம் சிலர் விடயங்களுக்கு நேரடியாக வருவதுடன் சிலர் மறைமுகமாக விடயத்திற்கு வருவர்)
6. பணியாளர்கள் உரிய முறையில் பயிற்றப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பதை உறுதிப் படுத்தவும் (பார்க்க அத்தியாயம் 9 திட்டமிடல் - வழங்கல்)

#### b. நேர்காணலுக்காகத் தயார்படுத்துதல்

1. நீங்கள் இயங்குகின்ற சட்டச் சட்டகத்தில் முறைசார் சாட்சிகளின் வாக்குமூலத்தினைச் சேகரிப்பதற்கு ஏதாவது தனித்துவமான சட்டத் தேவைப்பாடுகள் இருப்பின் அவற்றினை ஆராயவும். (சத்தியப்பிரமாணத்தின் கீழ் எடுக்கப்படுவது, உத்தியோகபூர்வ ரீதியாகப் பதிவு செய்யப்படுவது, சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புக்களினால் சேகரிக் கப்படுவது). இது உங்களது குறிக்கோளாக இருந்து உத்தியோகபூர்வ ஆணையினையும் நீங்கள் கொண்டிருப்பின். சில நடைமுறைப்படுத்துனர்கள் முறைசார் சாட்சிகளின் வாக்குமூலத்தினை சேகரிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதேவேளை ஏனையோர் வெறுமனே கூற்றுக்களை அல்லது நேர்காணல் குறிப்புக்களை எடுக்கலாம். (முதலாம் நபரில் எடுக்கப்படுவது, மூன்றாம் நபரில் எடுக்கப் படுவது) சட்ட நடவடிக்கைகளின் போது பாதிக்கப்பட்டோர் / சாட்சிகளுக்கு எதிராக பயன்படுத்தப்படக்கூடிய நிகழ்வுகளின் அதிகாரபூர்வமான பதிவுகளை உருவாக்குவதிலிருந்து தவிர்ந்துகொள்வதற்காக அதிகாரமற்ற நடைமுறைப்படுத்துனர்கள் தகவல்களை நேர்காணல் குறிப்புக்கள் வடிவத்திலே பதிவு செய்யவேண்டும். (பார்க்க, பெட்டி 11 : சகபாடி அனுபவம் - தகவல்களை கையகப்படுத்தி பதிவு செய்தல்) தரவு கையகப்படுத்துவதற்கான முறையியலினைத் தீர்மானித்தல் (உதாரணம் - கையால் எழுதப்பட்ட குறிப்புக்கள் மாத்திரம் / தட்டச்சு செய்யப்பட்ட குறிப்புக்கள்).
2. நேர்காணல் குறிக்கோளினை நிலைநாட்டவும், கையகப் படுத்த வேண்டிய தனிப்பட்ட தரவுகளின் பட்டியலை உருவாக்கவும், (பார்க்க பின்னிணைப்பு 8, பாதிக்கப் பட்டோர் / சாட்சிகளிடமிருந்து சேகரிக்கப்படவேண்டிய தனிப்பட்ட தரவுகளுக்கான மாதிரி உரு) மேலும் நேர்காணல் திட்டம் ஒன்றினை எழுதவும்(பூர்வாங்க நேர்காணல் மாதிரியுரு அல்லது வரைபு). உங்களுக்கு வரையறுக்கப்பட்ட நேரம் இருந்தால் அல்லது எதிர்பாராத விதமாக நேர்காணலை முடிக்கநேரிட்டால் முன்னுரிமைக்குரிய வினாக்கள் / தலைப்புக்களை அடையாளம் காணவும் (உதாரணம்

*...பாதிக்கப்பட்டவர் / சாட்சி சந்திப்பதைத் தவிர்ப்பதற்காகப் பொருத்தமான, ஆச்சரியமூட்டலுடனான நேர்காணலை உறுதிப்படுத்தவும்...*

நேர்காணல் தாமதிக் கப்பட்டால், நேரத்துடன் செல்லவேண்டி ஏற்பட்டால்)

3. சூழ்நிலைகளின் அடிப்படையில் மிகவும் பொருத்தமான நேர்காணல் அமைவிடத்தினைப் பரிசீலிக்கவும் - தெரிவுகள் வரையறுக்கப்பட்டிருந்தாலும் (பெட்டி 3 : நேர்காணல் சூழலை உருவாக்குவதில் செய்யவேண்டியவையும் செய்யக்கூடாதவைகளும்)

   » நேர்காணப்படுபவர்களுக்கான பாதுகாப்பும் அமைவிடங்களின் சௌகரியங்களும்

   » பார்க்கப்படாததை ஒட்டுக்கேட்க முடியாததை உறுதிப்படுத்துகின்ற அமைவிடத்தின் அந்தரங்கம் (வெளியிடத்திலோ அல்லது கட்டடத்தின் உள்ளேயோ)

   » SGBV /சித்திரவதை போன்ற குறிப்பிட்ட விடயங்களுடன் தொடர்புபட்டிருக்காத நடுநிலையான அமைவிடம்

   » பாதிக்கப்பட்டவர்களோடு சாட்சிகள் செல்வதைக் காணக்கூடியதான அல்லது முத்திரை குத்தப்படுவதான நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்காக இரகசிய நுழைவாயிலினைப் போன்ற நுழைவாயிலினை அணுகுதல்

   » கலாசார, சமய, மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் பொருத்தமான தன்மை

   » நேர்காணப்படுபவரிற்கு அமைவிடத்திற்குச் செல்வதற்கான சௌகரியம் மற்றும் தூரம்

   » நேர்காணப்படுபவர்கள் அமைவிடத்திற்கு வருவதற்கு போக்குவரத்திற்கான செலவு அல்லது போக்குவரத்தினை வழங்குதல்

4. பூரணமான நேர்காணலினை நடத்துவதற்கு போதிய நேரத்தினை அனுமதிக்கவும் (உதாரணம்: வளர்ந்தோரின் நேர்காணலில் இடைவேளைகளுடன் 3-6 மணித்தியாலங்கள் ஆகக்குறைந்தது) எவ்வளவு நேரத்திற்கு நேர்காணப்படுபவர் இருக்கலாம் என்பதை உறுதிப்படுத்தி பாதிக்கப்பட்டவர் / சாட்சி ஒருவரை யொருவர் சந்திப்பதைத் தவிர்ப்பதற்காக பொருத்தமான நேர்காணலை உறுதிப்படுத்தவும். மொழிபெயர்ப்பாளர்களைப் பயன்படுத்தும்போது நேர்காணல் கால அளவானது கணிசமான அளவு நீண்டதாக அமையுமென்பதுடன் மேலதிக நேரம் தேவைப்படக் கூடியதாக இருக்கும். களைப்பினைத் தவிர்ப்பதற்கு அல்லது பாதிக்கப்பட்டவர் / சாட்சிகளின் நாளாந்த வேலைகளில் இடையூறு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு அடுத்த நாள் நேர்காணலைத் தொடர்வதற்குரிய ஆலோசனையை வழங்கவும். ஒவ்வொரு நேர்காணலின் பின்னும் உங்களது ஆவணப்படுத்தலை சேகரிக்கப்பட்ட புதிய தகவல்களின் அடிப்படையில் மீளாய்வு செய்வதற்கு போதிய நேரத்தினை ஒதுக்க மறக்க வேண்டாம். (பார்க்க 5 : மதிப்பீடு கீழே)

5. நேர்காணப்படுபவரின் விபரங்களை மதிப்பீடு செய்து சாத்தியமான எதிர்வினைகள் அல்லது தேவைகளுக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளவும். நேர்காணப்படுபவர் ஏன் உங்களைச் சந்திக்கின்றார் என்பதை வேறொருவர் அவரிடம் கேட்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதனை சமாளிப்பதற்காக பொருத்தமெனில் அவரிடம் ஒரு முகப்புக் கதையினைத் தயாரித்துக் கலந்துரையாடவும்.

6. நீங்கள் ஆவணப்படுத்துகின்ற சூழமைவில் பிரயோகிக்கத் தக்க குற்றச்செயல்களின் கூறுகளுக்கு தனித்துவமான முக்கியமான தலைப்புக்கள் மற்றும் சாத்தியமான வினாக்களை அடையாளம் காணவும் (பார்க்க பெட்டி 8 : வினாக்களுக்கான விடயப்பரப்புக்கள்). 'சொல்லுங்கள் என்ன நடந்தது' போன்ற ted வினாக்கள் மூலம் ('கூறுங்கள், விளக்குங்கள், தெளிவுபடுத்துங்கள்) குறிப்பிட்ட பதிலினைத் தேவைப்படுத்தாத பரந்த வினாக்களைக் கொண்டு நேர்காணலினை ஆரம்பித்து குற்றச்செயலினை யார், என்ன, எப்பொழுது, எப்படி மேற்கொண்டனர் என்கின்ற வினாக்களைக் கேட்பதை உறுதிப்படுத்தவும் (பார்க்க பெட்டி 6 : ஆக்கபூர்வமான குறிப்பிட்ட பதிலை தேவைப்படுத்தாத வினாக்களின் பாங்கு)

7. நேர்காணலின் போது பயன்படுத்துவதற்கான பொருத்தமான மொழி மற்றும் சொற்பதங்களைப் பரிசீலித்து அதனை உரைபெயர்ப்பாளருடன் கலந்துரையாடவும். குறிப்பாக பாலியல் செயல்பாடுகள் மற்றும் உடல் அங்கங்களைக் குறிப்பதற்கு கலாசார ரீதியாகப் பயன்படுத்தப்படுகின்ற சொற்களைப் பயன்படுத்துவதற்கு பிரதான சொற்பதங்கள் உள்ளடங்கிய அகராதிகளையும் கோவைகளையும் பரிசீலிக்கவும் (அவர்கள் என்னை அவமானப்படுத்தினர் அல்லது அவர்கள் எனக்குக் கூடாத விடயங்களைச் செய்தனர் என்பவை பாலியல் வல்லுறவுக்கான குறியீடாகவும் அவர்கள் என்னை சித்திரவதை செய்தனர் என்பது மிக மோசமான பரந்த வீச்சிலான உடல் மற்றும் உளவியல் வன்முறையினைக் குறிப்பதற்கான குறியீடாகவும் பயன்படுத்தப்படலாம். மேலும் சிறுவர்கள் அல்லது வளந்தோருடன் நேர்காணலை மேற்கொள்ளும் போது வகைமாதிரியாகப் பயன்படுத்தப்படும் மொழி வேறுபாடுகளையும் அறிந்திருக்கவும்.

8. சாத்தியமானபோது மற்றும் பொருத்தமானபோது நேர்காண்பவரைத் தவிர வேறொரு நபரினை நேர்காணலின் குறிப்புக்களை எழுதுவதற்கு நியமிக்கவும். ஏனெனில் பாதிக்கப்பட்டவர் / சாட்சி கூறுவதைச் செவிமடுத்து அவற்றைத் துல்லியமாகப் பதிவு செய்வது என்பது கடினமாக காரியம் என்கின்ற காரணத்தினால் இது தேவைப்படுகின்றது. இவ்வாறு மூன்றாம் நபர் ஒருவரை அறையிலே பதிவதற்காக நியமிக்கும் பொழுது சில விடயங்களைக் கவனத்திற் கொள்ளவேண்டும். (பாதிக்கப்பட்டவரின் வகை, குறிப்பெடுப்பவரின் பால்நிலை, மற்றும் அணியிலுள்ள ஏனையோரின் ஆக்கக்கூறு.)

9. நீங்கள் பாதிக்கப்பட்டவர் / சாட்சிக்கு காட்டக்கூடிய தேவையான ஆவணங்களையும் உபகரணங்களையும் (காயங்களை புகைப்படம் எடுப்பதற்கு கமராவையும், வரைவதற்கான அடிமட்டமும் கடதாசியும் பேனையும்) தயார்படுத்திக் கொள்ளவும். வரைபடங்கள், புகைப் படங்கள், வீடியோக்கள் மேலும் தொழில்நுட்ப உபகரணங்களை எவ்வாறு பயன்படுத்தவேண்டு மென்பதை நீங்கள் அறிந்திருப்பதை உறுதிப்படுத்தவும். எவ்வாறாயினும்

*ஆண் அல்லது பெண் நேர்காண்பவரையா அத்துடன் / அல்லது உரைபெயர்ப்பாளரையா பாதிக்கப்பட்டவர்/ சாட்சிகள் விரும்புகின்றனர் என்பதை நேரத்துடன் கேட்டுக் கொள்ளவும்.*

தமது சாட்சியினை மாற்றுவதற்கு இட்டுச் செல்லக்கூடிய ஏதாவது வரைபடத்தினை அல்லது புகைபடத்தினை, வீடியோவினை பாதிக்கப்பட்டவர் / சாட்சிக்கு காட்டாமல் இருப்பதில் கவனமாக இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர் / சாட்சிக்கு ஏதாவது விடயத்தினைக் காட்டுவதானது அவர் தனது சாட்சியினை மாற்றுவதற்கு இட்டுச்செல்லலாம் என நீங்கள் உறுதியாக இருந்தால் அவற்றினை அவருக்கு காட்ட வேண்டாம்.

10. எழுதுவதற்கும் கீறுவதற்கும் அத்துடன் அவரது கண்ணோட்டத்தினை கையகப்படுத்துவதற்கும் பாதிக்கப் பட்டவருக்கும் சாட்சிக்கும் கடதாசியினை வழங்குவதற்கு தயாராக வைத்திருக்கவும் (உதாரணங்கள் வரை படங்கள், அறையின் அமைப்புத் தோற்றம்)

11. சாத்தியமான பொழுது பாதிக்கப்பட்டவர் / சாட்சி ஆண் நேர்காண்பவரையா அத்துடன் / அல்லது பெண் நேர்காண்பவரையா அத்துடன்/அல்லது ஆண் அல்லது பெண் உரை பெயர்ப்பாளரையா பாதிக்கப்பட்டவர் / சாட்சி விரும்புகின்றார் என்பதை நேரகாலத்தோடு கேட்டு அறியவும். சகல பெண் பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் எப்பொழுதுமே பெண் உரைபெயர்ப்பாளர்களையும் நேர்காண்பவரையும் தான் விரும்புவர் என்றோ அல்லது சகல ஆண் பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் எப்பொழுதுமே ஆண் உரைபெயர்ப்பாளர்களையும் நேர்காண்பவரையும் தான் விரும்புவர் என்றோ ஊகிக்கக்கூடாதென்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும். ஒவ்வொரு பாதிக்கப்பட்டவரும் சாட்சியும் தமது சொந்தத் தெரிவினை மேற்கொள்ள முடியும்.

12. பாதிக்கப்பட்டவர் / சாட்சிகள் எதனை எதிர்பாரக்கலாம் என்பதை அறிந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்துங்கள். இதனால் அவர்கள் பௌதீக ரீதியாகத் (உதாரணம் பிள்ளைப் பராமரிப்பு, வேலைக்கு செல்லாமல் இருத்தல்/ வீட்டிற்கு வெளியே செல்லுதல்) திட்டமிடலாம் மேலும் CSவியல் ரீதியாகவும்/ உணர்வு ரீதியாகவும் (நம்பிக்கையான நபரிடம் இருந்து உதவி) திட்டமிடலாம்.

13. நடைமுறை ஏற்பாட்டினைப் பரிசீலிக்கவும். தேவையெனின் நேர்காணப்படுபவருடன் கலந்துரையாடி நேர்காணலின் அமைவிடத்தினைத் தயார்படுத்தவும். சாத்தியமெனின் :

    » அறையில் குடிநீர் தயாராக வைத்திருக்கவும்.

    » கழிப்பறைக்கான வசதியினை செய்திருக்கவும்

    » உங்களது தொலைபேசியினைச் செயற்படாமல் முடக்கி எந்தவிதமான இடையூறுகளும் இல்லையென்பதை உறுதிப்படுத்தவும்.

    » இருக்கை வசதிகளை ஏற்பாடு செய்யவும் (கதிரைகள், மேசைகள் பேன்றவை). இதனால் பாதிக்கப்பட்டவர் / சாட்சி மற்றும் நேர்காண்பவர் (பிள்ளை ஒன்றை நேர்காணும் போது பார்க்க அத்தியாயம் 16 சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை ஆவணப் படுத்தல் செயன்முறையில் சிறுவர்களை ஈடுபடுத்துவது பற்றிய பிரதான வழிகாட்டி, சிறுவருக்கு நட்பான முறையில் அறையினை ஏற்பாடு செய்வதற்கான விளக்கங்கள்) சௌகரியத்தினையும் பாதுகாப்பினையும் உணர்வர்.

    » நேர்காணல் நடைபெறுமிடத்திற்குப் பாதிக்கப்பட்டவர் / சாட்சி எவ்வாறு வருவார் மேலும் எவ்வாறு அங்கிருந்து செல்வார் என்பதைப் பரிசீலிக்கவும் (பாதுகாப்பினை கருத்திற் கொள்ளவும், தூரம், பாதிக்கப்பட்டவர் / சாட்சி பயணம் செய்வதற்கு ஏறபடக்கூடிய செலவு மேலும் நேர்காணல் முடிகின்ற நேரம் )

    » சிறுவர் பராமரிப்பு ஏற்பாடுகளைப் பரிசீலிக்கவும். வயது முதிர்ந்தோர், நோயாளிகள் ஆகியோரைப் பராமரிப்பதைப் பற்றிக் கருத்திற் கொள்ளவும் அல்லது ஏனைய முக்கிய மான குடும்பத்தேவைகள் அத்துடன் தொழில் தொடர்பான பொறுப்புக்கள் பற்றியும் கவனம் செலுத்தவும். பொருத்தமெனில் பாதிக்கப்பட்டவர் / சாட்சி சௌகரியமான உணர்வினை உணர்வதில் கவனம் குவிக்கவும்.

    » நேர்காணப்படுபவர் பிள்ளையாக இருப்பின் அவருடன் வேறொருவர் வருவதற்கான ஏற்பாடுகளைப் பரிசீலிக்கவும்.

    » சகல செலவுகளும் போதிய அளவிற்கு வழங்கப்பட்டு ஆவணப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தவும். ஏனெனில் பின்னர் சில சந்தர்ப்பங்களில் நேர்காணப்பட்டவர் நிதி ரீதியாக வெகுமதியளிக்கப்பட்டார் அல்லது தேவையற்ற முறையில் செல்வாக்கிற்கு உட்படுத்தப்பட்டார் போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படலாம். சாட்சிகளுக்கு ஒருபொழுதும் அவர்களின் வாக்குமூலத்திற்காகக் கொடுப்பனவு செலுத்தப்படமுடியாத அதேவேளை நேர்காணலில் பங்குபற்றுவதுடன் தொடர்புடைய நியாயமான மற்றும் உண்மையான செலவுகளை மீள அவர்களுக்கு வழங்குவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும்.

14. நேர்காணலின் போது, குறிப்பாக நுண்மையான தகவல்களைப் பெறும்போது பெற்றுக்கொண்ட தகவல்களைப் பதிவுசெய்வதற்குப் பாதுகாப்பான மற்றும் இரகசியமான முறையினைத் தீர்மானிக்கவும். (பெயர்கள், திகதிகள், அமைவிடங்கள்). இதன்மூலம் பாதிக்கப் பட்டவரின் மற்றும் சாட்சியின் அடையாளம் பாதுகாக்கப்படும். பார்க்க பின்னிணைப்பு 8 பாதிக்கப்பட்டவர் / சாட்சியிடமிருந்து சேகரிக்கப்பட்ட தனிப்பட்ட தரவிற்கான மாதிரியுரு பின்னிணைப்பு.

பெட்டி 3

## நேர்காணல் ஒழுங்கமைப்பு – செய்யக்கூடியவையும் செய்யக்கூடாதவையும்

| செய்யக்கூடியவை | செய்யக்கூடாதவை |
|---|---|
| **அமைவிடங்கள்[3]** | |
| பின்வரும் அமைவிடங்களில் நேர்காணல்களை நடத்தவும்:<br>» பாதுகாப்பானதும், சௌகரியமானதும், கலாசார ரீதியாக பொருத்தமானதும் (உதாரணமாக சூழமைவின் அடிப் படையில் ஹோட்டல் அறை பொருத்தமாக இருக்காது)<br>» தனியார் (செவியுறல் மற்றும் கட்புல அந்தரங்கம்)<br>» நடுநிலைமையானது<br>» இலகுவாக அணுகக்கூடியது / சௌகரியமானது | பின்வரும் அமைவிடங்களில் நேர்காணல்களை நடத்த வேண்ட-ாம்:<br>» மிகவும் சனசந்தடி மிக்க நெரிசலான அல்லது கண்காணிப்பு அபாயம் மிக்க இடங்கள்<br>» SGBV /சித்திரவதையுடன் தொடர்புடைய அல்லது அந்தரங் கத்திற்கு வேறு அபாயநேர்வுகளை உருவாக்கக்கூடிய இடங்கள் (அகதி முகாம்களிலுள்ள கொட்டகைகள், இதிலே நேர்காணலினை மற்றவர்கள் கேட்க முடியும்)<br>» பொறுப்பான பணியாளர்களுடன் உரிய முன்னேற்பாடு இன்றி மூன்றாம் தரப்பினரால் நடத்தப்படுவது (கிளினிக்குகள், நிவாரண உத்தியோகத்தரின் அலுவலகங்கள், சமுதாய அமைவிடங்கள், மகளிர் மன்றங்கள்)<br>» பாதிக்கப்பட்டவர் / சாட்சியின் வீடு. சாட்சிக்கு வேறு இடங் களுக்குச் செல்லமுடியாத பட்சத்தில் மேலும் அந்தரங்கத்தையும் இரகசியத்தையும் பேணக்கூடியதாக இருக்கும்போது – வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் அல்லது பெற்றோர் இருப்பது சுதந்திரமாக இவர்கள் உரையாடுவதைத் தடுக்கலாம். மேலும் ஆவணப்படுத்தல் அணியின் விஜயம் வழமைக்கு மாறானதாகத் தென்படுவதுடன் அயலவரின் கவனத்தையும் ஈர்க்கலாம் |
| **தனிப்பட்ட பிரசன்னம்** | |
| நேர்காணல் அறையிலே நேர்காணல் செயன்முறைக்கு மிக அவசியமானவர்கள் (பாதிக்கப்பட்டவர் / சாட்சி, நேர்காண்பவர், மொழிபெயர்ப்பாளர் (இருப்பின்) தவிர அத்துடன் / அல்லது குறிப்பெடுப்பவரைத் (நேர்காணப் படுபவரைத் தவிர வித்தியாச மாக இருப்பின்) தவிர பிரசன்னமாகியுள்ள ஏனைய நபர்களின் எண்ணிக்கையை வரையறுக்கவும்.<br>எந்த ஒரு உதவி நபரும்,<br>» நேர்காணப்படுபவர் நம்பிக்கையானவராகவும், இரகசியம் காப்பவராகவும், தொடர்புகொள்ளப்பட்டதை வெளியிடாத வராகவும் இருக்க வேண்டும்.<br>» ஈடுபடுத்துதல் மற்றும் விளக்கல் கட்டத்தின் போதும் இடைவேளையின் போதும் மாத்திரம் சமுகமளித்திருத்தல். சிறுவர்களை நேர்காணும் சந்தர்ப்பங்கள் தவிர, ஏனெனில், சிறுவர்களை நேர்காணும் பொழுது அவர்களுடன் குடும்ப உறுப்பினரோ பாதுகாவலரோ ஏனைய நம்பிக்கைக்குரிய வளர்ந்தவரோ அவர்களுக்கு உதவுவதற்காக இருக்க முடியும்.<br>நேர்காணல் அணியானது :<br>» திருமணமான/ திருமணமாகாத பெண்கள் அல்லது சிறுவர் களுடன் இடையீடு மேற்கொள்வதற்கான கலாசார மற்றும் சமூக விதிகளைப்பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.<br>» மிகக் கவனமாக நடந்துகொள்ளக்கூடியவராகவும் பால்நிலை வகிபாத்திரங்கள் மற்றும் இயக்கங்களுக்கு கூருணர்வு உடையவராகவும் இருக்கவேண்டும். இது ஆண் பெண் பாதிக்கப்பட்டவர்கள் / சாட்சிகளின் வெளிக்கூறல்களில் செல்வாக்குச் செலுத்தலாம். | பின்வருவனவற்றுடன் நேர்காணலை நடத்த வேண்டாம்.<br>» ஒருவர் கூறுவதில் மற்றவர் பாதிப்பினை ஏற்படுத்தலாம் என்கின்ற காரணத்தினால் குழுக்கள் அல்லது ஏனைய சாட்சிகள் / பாதிக்கப்பட்டவர்களின் பிரசன்னம் (ஏனைய சாட்சிகள் வேறாகவே நேர்காணப்படல் வேண்டும்.<br>» ஏனையோரின் பிரசன்னமானது நேர்காணப்படுபவரில் செல்வாக்குச் செலுத்தலாம் அல்லது அவரை அச்சுறுத்தலாம், நேர்காணல் செயன்முறையில் அது தலையீடு செய்யலாம் அல்லது நேர்காணல் செய்பவரை பதற்றமடையச் செய்யலாம் அல்லது நிச்சயமற்ற உணர்வினை உணரச்செய்யலாம் (உதாரணம் : வாழ்க்கைத்துணை, இடைநிலையாளர்கள்)<br>» சம்பவத்தினைக் கூறுதல் மற்றும் தெளிவுபடுத்தல், அல்லது முடிவுறுத்தல் கட்டத்தின்போது உதவிநபர் ஒருவர் பிரசன்னமாகியிருத்தல்<br>» சிறுவர்கள், குடும்ப உறுப்பினர்கள், இணைப் பணியா ளர்கள், ஏனையோர் சமுகமளித்திருத்தல். இவர்கள் இடருக்கு உள்ளாகலாம் அல்லது அந்தரங்கத்தினை மீறுகின்ற அபாயநேர்வினை அதிகரிக்கலாம். |

3

3 தெரிவுகள் மிகவும் வரையறுக்கப்பட்டவையாக இருக்கும் போது சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்வதற்கு தெரிவுகள் கவனமாக பரிசீலிக்கப்படல் வேண்டும். (உதாரணம் : மரத்தின் கீழ் யாரும் பார்க்காமலும், கேட்காமலும்)

*அறிந்து வழங்குகின்ற இணக்கத்தை பெறுகின்ற செயன்முறையானது நேர்காணலின் இந்தக் கட்டத்தின் இன்றியமையாத பாகத்தினைக் கொண்டுள்ளது.*

## 2. ஈடுபடுத்தி விளக்குதல்

உண்மையான நேர்காணலின் முதலாவது கட்டம் ஈடுபடுத்துதலும் விளக்குதலும் ஆகும். ஈடுபடுத்துதலே முதலாவது படியாகும். உறவினையும் கலந்துரையாடுவதற்கான ஊக்கத்தினையும் இது வழங்குவதாக அர்த்தப்படுத்தப்படுகின்றது. விளக்குகின்ற கட்டமானது நேர்காணலின் நோக்கத்தினை விளக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றது என்பதுடன் நேரகாணப்படுபவரிடமிருந்து என்ன எதிர்பார்க்கப் படுகின்றது என்பதையும் விளக்குகின்றது. இதன் நேக்கமானது செயற்படுவதற்கான சிறந்த உறவினை உருவாக்கி நேர்காணப்படுபவர் பேச விரும்பித் தகவல்களைப் பகிருவதற்கான ஒரு சூழலினை உருவாக்குகின்றது. நேர்காணலொன்றின் வெற்றி அல்லது தோல்விக்கு நேரகாண்பவர் என்கின்ற அடிப்படையில் நடைமுறைப் படுத்துனர்கள் உருவாக்குகின்ற சூழலானது இன்றியமையாத தாக இருப்பதுடன் நேர்காணல் செயன்முறையின் எஞ்சிய பகுதியினை முதல் மணப்பதிவு சாதகமாக அல்லது பாதகமாகப் பாதிக்கலாம். எனவே நேர்காணலின் இந்த முக்கியமான கட்டத்தில் இயலுமானளவு நேரத்தை செலவழிப்பது முக்கியமானதாகும். பாதிக்கப்பட்டவர் / சாட்சி நேர்காண்பவரை அல்லது மொழிபெயர்ப்பாளரை விரும்பா விட்டால் அல்லது நம்பாவிட்டால் அல்லது ஏனைய அணி உறுப்பினர்களை விரும்பாவிட்டால் அல்லது நம்பாவிட்டால் அவர் தனது தகவல்களை வழங்க மாட்டார்

அறிந்து வழங்குகின்ற இணக்கத்தினைப் பெற்றுக்கொள்கின்ற செயன்முறையானது - இது சகல கட்டங்களினூடும் இணக்கத்தினை ஈடுபடுத்துவதுடன் ஆவணப்படுத்தலின் சகல அம்சங்களுடனும் தொடர்புபடுகின்றது - நேர்காணலின் முக்கியமான கட்டத்தினைக் கொண்டுள்ளது. அறிந்து வழங்குகின்ற இணக்கத்தின் அர்த்தம் அத்ததியாயம் 7இலே - அறிந்து வழங்கும் இணக்கத்திலே வழங்கப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர் / சாட்சி பிரச்சினை ஒன்றினைப் புரிந்து கொண்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்துவதற்கான சிறந்த வழி அவரது சொந்த வார்த்தைகளிலேயே உங்களிடம் தகவல்களை மீளக்கூறுமாறு கேட்பதாகும்.

**பெட்டி 4**

**சாதகமான சூழலை உருவாக்குவதற்கான உதவிக்குறிப்புக்கள்**

- ✓ உங்களுடைய தோற்றம், நீங்கள் நடந்து கொள்ளும் விதம் மற்றும் பேச்சு (நீங்கள் நேர்காணப்படுபவரை எவ்வாறு அழைக்கின்றீர்கள் என்பது) ஆகியவற்றில் கவனத்தினைச் செலுத்தவும் (உதாரணமாக கலாசார ரீதியாக பொருத்தமான ஆடைகளை அணிவதையும் உபசரிக்கின்ற முறையினையும் உறுதிப்படுத்துதல்) வெவ்வேறு கலாசாரங்களில் கண்களால் தொடர்பினை ஏற்படுத்துவதற்கான முன் விருப்புக்கள் பாரிய அளவில் வித்தியாசப்படுகின்றன என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும். – சிலர் நீண்ட நேரம் கண்களினால் தொடர்புகொள்வதை விரும்புகின்றனர். வேறுசிலர் அதை அவமரியாதையாகப் பார்க்கின்றனர்.
- ✓ அந்தரங்கமான, பாதுகாப்பான, சௌகரியமான சூழலை வழங்கவும் (போதிய சிற்றுண்டி, கழிப்பறைக்கான வசதி)
- ✓ கலந்துரையாடல் போன்று உங்களது தொனியினைப் பேணவும்
- ✓ பாதிக்கப்பட்டவரிடம் / சாட்சியிடம் ஆவணப்படுத்தல் செயன்முறையிலிருந்து அவர்கள் எதனை வேண்டு கின்றனர் அல்லது எதிர்பார்க்கின்றனர் என்பதை கேட்கவும்.
- ✓ நேர்காணப்படுபவர்களிடம் அவர்களுக்கு ஏதாவது வீட்டுப்பிரச்சினை அல்லது பாதுகாப்புப் பிரச்சினை இருக்கின்றதா என்பதைக் கேட்டு அவர்களது உடனடித் தேவைகள், கரிசனைகளைப் பூர்த்தி செய்யவும்.
- ✓ தேவையான அளவு நேரத்தினைச் செலவழிப்பதற்குத் தயாராக இருக்கவும். பொறுமையான மற்றும் பதற்ற மின்றிய அணுகுமுறையினை எடுத்து சகல பொருத்த மான காரணிகளையும் தேவையெனின் பல தடவைகள் மீண்டும் மேற்கொண்டு அதனை பாதிக்கப்பட்டவர் / சாட்சி பூரணமாக அறிந்துள்ளார் என நீங்கள் திருப்தியடையும் வரையில் மேற்கொள்ளவும்.
- ✓ சகல கௌரவமாகவும் தொழில் ரீதியாகவும் கௌரவமாகவும் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் பச்சாதாபம் உள்ளவராக இருக்கவேண்டுமென்பதுடன் நீங்களே தீர்மானத்திற்கு வருபவராக இருக்கக்கூடாது. நம்பிக் கையினையும் மரியாதையினையும் நிலைநாட்டுங்கள்

### ஈடுபடுத்தி விளக்குகின்ற கட்டத்தில் என்ன செய்ய வேண்டும் மற்றும் என்ன கூறவேண்டும் என்பது பற்றிய தொகுப்பு

1. அறையிலுள்ள ஒவ்வொருவரையும் பாதிக்கப்பட்ட வருக்கும் /சாட்சிக்கும் அறிமுகப்படுத்தி அவர்களது வகிபாத்திரங்கள் என்னவென்பதை தெளிவாக விளக்கி ஏதேனும் கரிசனைகள் எழுப்பப்பட்டால் அவற்றினைத் தீர்த்துவைக்கவும். உங்களது தகைமை பற்றிய உத்தரவாதத்தினை பாதிக்கப்பட்டவர்/ சாட்சிக்கு வழங்கி அமுலிலுள்ள இரகசியத்தன்மை பேணுவதற் கான நடவடிக்கைகளை விளக்கவும். மொழி மொழிபெயர்ப்பாளரை அல்லது குறிப்பெடுப்பவரினைப் பயன் படுத்துவதாயின் அவர்களையும் விசேடமாக அறிமுகப் படுத்தி நேர்காணப்படுபவர்களிடம் அவர்கள் நேர் காணலையும் அதன் உள்ளடக்கங்களையும் அணியில் உள்ள ஏனையோரைப் போன்றே இரகசியத்தன்மை பேணும் வழிகாட்டல்களுக்கு அமைவாக மேற்கொள்வர் என உறுதிப்படுத்தவும். பாதிக்கப்பட்டவர்/ சாட்சி தன்னைப்பற்றியும் அவர்களது பின்புலம் (விசேடமாக அவர்கள் சிறிய மொழிக்குழுமம் ஒன்றினைச் சேர்ந்த வர்களாகவும் ஏதோ வழியில் அவர்கள் தொடர்புடைய வர்களாகவும் இருக்கும் போது) பற்றியும் மொழி மொழிபெயர்ப்பாளரிடம் கேள்விகளைக் கேட்பதற்கு அனுமதிக்கவும். மேலும் நேர்காணப்படுபவர் மொழிபெயர்ப்பாளரின் நம்பிக்கையினையும் சௌகரியத்தினையும் அளப்பதற்கும் அனுமதிக்கவும். மொழிபெயர்ப்பாளர்களுடன் எவ்வாறு பணியாற்றுவது என்பதை விளக்கவும். (பார்க்க : பெட்டி 5 : மொழி பெயர்ப்பாளர்களுடன் பணியாற்றுதல்
2. நேர்காண்பவருடன் (பால்நிலை,சாதி) உரையாற்றுவது சௌகரியமாக உள்ளதா எனப் பாதிக்கப்பட்டவர்/ சாட்சியிடம் கேட்கவும். மேலும் அவர்கள் நேர்காண்பவர் அல்லது மொழிபெயர்ப்பாளர் தொடர்பாக சௌகரியமாக உணரவில்லையெனில் அவர்களை மாற்றுவதற்கு கோர அவர்களை வலுவூட்டவும்.
3. உங்களது நிறுவனத்தின் ஆணை, நேர்காணலின் நோக்கம் மற்றும் குறிக்கோள் ஆகியவற்றினை விளக்கவும். நேர்காணல் தொடர்பான காரணங்களைப் பற்றி பாதிக்கப்பட்டவர் / சாட்சி நிச்சயமற்றிருந்தால் உதாரணமாக அவர்களது சொந்த அனுபவங்கள் பற்றிய கதைகளை வரையறை செய்து தாம் எதைப் பார்த்தார்களோ அதைப் பரந்த ஆவணப்படுத்தல் செயல்முறையில் பதிவதற்கான முக்கியத்துவத்தையும் உணராமல் இருக்கலாம்.
4. நேர்காணலின் கட்டங்களை விளக்கி நடைமுறைப் படுத்தப்படவுள்ள கிரமமான ஒழுங்கினையும் விளக்கவும். இது நேர்காணப்படுபவரைப் பதற்றம் அற்றவராக ஆக்கி அவரின் பதகளிப்பினையும் குறைக்கும். இந்த அம்சமானது குறிப்பாக பாதிக்கப்பட்டவர்/ சாட்சி இவ்வாறான செயன்முறைக்கு முதற் தடவையாக உட்படும்போது மிகவும் முக்கியமானதாகும்.
5. கேட்கப்படக்கூடிய வினாக்களின் வகைகளை விளக்கவும், பின்வருவனவற்றினைக் கோடிட்டுக் காட்டி:
   - » பாதிக்கப்பட்டவர்/சாட்சி நிகழ்வு தொடர்பாக அவர்க ளினால் ஞாபகப்படுத்தக்கூடிய இயலுமான அளவு விடயங்கள் அனைத்தையுமே கூற வேண்டும்.
   - » நிகழ்வு ஒன்றினை ஞாபகத்திற்கு கொண்டுவந்து ஞாபகத்தில் இருந்து சகல விபரங்களையும் நினைவுகூர்வது என்பது மிகவும் சவால் மிக்க ஒன்றாகும் (மன ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும்). குறிப்பாக, குறிப்பிட்ட சில காலங்கள் கடந்த பிறகு எனின் அல்லது நிகழ்வுகள் சங்கடம் ஏற்படுத்துபவையாகவும் மனஅதிர்ச்சி வடு ஏற்படுத்துபவையாகவும் சிக்கல் மிக்கவையாகவும் அல்லது குழப்பம் மிக்கவையாகவும் அல்லது முன்னர் வேறு நேர்காணல்கள் இடம்பெற்றிருந்தாலும் இந்த நிலைமை ஏற்படலாம்.
   - » இடரினை ஏற்படுத்தக்கூடிய அனுபவங்கள் பற்றிய கேள்விகளும் இடம்பெறலாம்.
   - » பாதிக்கப்பட்டவர் / சாட்சி கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போது அல்லது தகவல்களை வழங்கும் போது ஊகிக்கக்கூடாது. ஏதாவதொன்றைத் தெரிந்திராவிட்டால் அல்லது ஞாபகப்படுத்த முடியாவிட்டால் அது ஒரு பிரச்சினைக்குரிய விடயமல்ல. இவ்வாறான சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவர்/ சாட்சி அவ்வாறு கூறி ஏனையோர் அவர் எதைக் கூறவேண்டும் என விரும்புகின்றார்கள் என்பதனால் அவரது சிந்தனையில் செல்வாக்குச் செலுத்தப்படலாகாது. குறிப்பாக சிறுவர்களும் பாதிப்புறுநிலையிலுள்ள வளர்ந்தோரும் நேர்காணப்படுகையில் இது முக்கியமானதாகும்.
   - » சில சந்தர்ப்பங்களில் தனிநபர்கள் நிகழ்வுகளையும் விபரங்களையும் தமது கண்களை மூடியிருக்கும் போது ஞாபகப்படுத்துவதை இலகுவாக உணரலாம். எனவே இவ்வாறு செய்வதற்கு பாதிக்கப்பட்டவரும் / சாட்சியும் அனுமதிக்கப்படல் வேண்டும்.
6. எவ்வளவு நேரம் நேர்காணல் இடம்பெறலாம் என்பதைக் கலந்துரையாடி நேர்காணலின் போது நீங்கள் நெகிழ்வுத் தன்மையுடையவராக இருப்பதற்கு விரும்புவதை வலியுறுத்தவும் (உதாரணம்: ஒரு அமர்வுக்கு மேல் கலந்துரையாடலை நடத்த விரும்பினால்). மேலும் பாதிக்கப்பட்டவர்/சாட்சி இடைவேளைகளை எடுத்துக் கொள்ளலாம். மேலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் நேர் காணலை முடித்துக்கொள்ளலாம் என்பதையும் தெளி வாகக் குறிப்பிடவும்.
7. வழங்கப்பட்டுள்ள தகவல்களின் சகல சாத்தியமான பயன்பாடுகளையும் விபரிக்கவும். இதிலே எவ்விதமான வழக்குத்தொடுப்புக்களிலும் குறிப்பிட்ட நபரிடம் வாக்குமூலம் அளிக்கக் கோரினாலும் கோரப்படாவிட்டாலும் தகவலானது வெளிக்கூறப்பட வேண்டிய சாத்தியம் இதில் உள்ளடங்குகின்றது. பாதிக்கப்பட்டவர் / சாட்சி எழுப்பக்கூடிய எக்கரிசனைகளையும் தீர்த்து வைக்கவும்.

8. உங்களுடன் பேச வேண்டுமா இல்லையா என்கின்ற தெரிவினை பாதிக்கப்பட்டவர் / சாட்சி கொண்டுள்ளார் என்பதைத் தெளிவாக விளக்கவும். மேலும் சேவைகளை வழங்குதலானது அவர்களின் பங்கேற்புடன் தொடர்புடையதல்ல என்பதையும் விளக்கவும். அத்துடன் இந்தத் தெரிவினை அவர்கள் நேர்காணலின் முன்பும் நேர்காணலின் போதும் நேர்காணலின் பின்பும் மேற்கொள்ள முடியும் என்பதையும் தெளிவாக விளக்கவும். பாதிக்கப்பட்டவர் / சாட்சி தாம் மதிக்கப்படுவதாக, ஆதரவு வழங்கப்படுவதாக மேலும் தாம் கட்டுப்பாட்டில் இருப்பதாக மேலும் ஒத்துழைப்புக்கு வலுவூட்டப்பட்டதாக உணர வேண்டும்.

9. அறிந்து வழங்கும் இணக்கச்செயன்முறையின் ஓர் அங்கமாக நேர்காணலுக்காகத் தாமே பாதிக்கப் பட்டவர் / சாட்சி அறிந்து வழங்கிய இணக்கத்தினை ஆவணப்படுத்தி அந்த இணக்கமானது அவரது சுதந்திரமான இணக்கத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதையும் அவர் வழங்கிய தகவல்களின் சாத்தியமான பயன்பாட்டினையும் அதனுடன் இணைந்துள்ள அபாயநேர்வினையும் புரிந்து கொள்கின்றார் என்பதையும் உறுதிப்படுத்தவும். பாதிக்கப்பட்ட சிறுவர் / சாட்சியினைப் பொறுத்தளவில் அறிந்து வழங்கப்படுகின்ற இணக்கமானது பொதுவாகப் பெற்றோரிடமிருந்தும் சட்டரீதியான பாதுகாவலரிடமிருந்தும் பெறப் படுகின்றது. இது சிறுவரின் வயது மற்றும் முதிர்ச்சி ஆகியவற்றில் தங்கியுள்ளது (பார்க்க அத்தியாயம் 16 சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை -ஆவணப்படுத்தல் செயன்முறையில் சிறுவர்களை ஈடுபடுத்துதல் தொடர்பான வழிகாட்டி

10. நேர்காணலை நடத்தும்போது எந்தக் காரணத்திற்காகவும் நேர்காணப்படுபவர் உங்களுடன் பேசுவதற்கு உகந்த சூழலினை உங்களினால் உருவாக்கக்கூடிய நிலையில் நீங்கள் இல்லையென உணர்ந்தால் நேர்காணலினை நிறுத்தி இன்னுமொரு நபரினால் அதை சிறப்பாக நிறைவேற்ற முடியுமா என்பதைப் பரிசீலிப்பதற்குத் தயாராக இருக்கவும். பொருத்தமான தொழில்ரீதியான மற்றும் நடத்தை ரீதியான திறன்களை கொண்டிருப்பதற்கு மேலதிகமாக வயது, பால்நிலை, கலாசாரம், சாதி, தேசியம் மற்றும் இனத்துவம் போன்ற சில குறிப்பிட்ட மேலதிக காரணிகளும் நேர்காணப்படுபவர் தமது மனதில் உள்ளவற்றை வெளிப்படையாகக் கூறுவதற்கு சௌகரியமாக உணர்கின்றாரா இல்லையா என்பதில் முக்கியமான வகிபாத்திரத்தினை வகிக்கலாம்.

11. தேவையானபொழுது – உதாரணமாக நேர்காணல் நடைபெறும் இடத்திற்கான தெரிவு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கையிலும் நேர்காணலின்போது யாராவது எதிர்பாராதவிதமாக வரலாம் என்கின்ற சூழ்நிலையிலும் அந்தரங்கத்தினை பாதுகாக்கும் முகமாக பாதிக்கப்பட்டவர்/சாட்சியுடன் உங்களது முகப்புக் கதையுடன் இணைந்த நடுநிலையான தலைப்பு ஒன்றிற்கு நீங்கள் உரையாடலை மாற்றுவதற்கு இணங்கவும். நேர்காணலானது பாதிக்கப்பட்டவர்/ சாட்சியின் வீட்டில் நடத்தப்படுதல்.

12. பாதிக்கப்பட்டவர் / சாட்சி முன்பு ஏதாவது கூற்றுக்களை வழங்கியுள்ளாரா அல்லது அவர்கள் நேர்காணப் பட்டுள்ளனரா அத்துடன்/ அல்லது அவர்கள் இந்த விடயங்களை முன்பு கலந்துரையாடியுள்ளனரா என்பதைக் கேட்கவும்.

13. நிகழ்வின் ஏனைய சாட்சிகள் நடந்தவை பற்றி முன்பு கூறிய விடயங்களைப் பாதிக்கப்பட்டவர்/ சாட்சி செவிமடுத்துள்ளாரா எனக் கேட்கவும். பாதிக்கப்பட்டவர்/ சாட்சி அவர் இரண்டாம் நபர் மூலம் பெற்ற தகவல்களை அல்லாது தான் உண்மையிலேயே பார்த்த மற்றும் கேட்ட விடயங்கள் தொடர்பான தகவலையா வழங்குகின்றார் என்பதை அவர் கூறுகின்ற கூற்றுக்களின் போது தெளிவுபடுத்திக் கொள்ளுமாறு அவர்களுக்கு விளக்குவது முக்கியமானதாகும்.

சிறுவர்களை நேர்காணும் போது ஈடுபடுத்தல் மற்றும் விளக்கம் கட்டம் பற்றிய குறிப்பிட்ட வழிகாட்டலுக்காக பார்க்க அத்தியாயம் 16 – சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை – ஆவணப்படுத்தல் செயன்முறையில் சிறுவர் களை ஈடுபடுத்துதல் பற்றிய பிரதான வழிகாட்டி.

பெட்டி 5

## மொழிபெயர்ப்பாளர்களுடன் பணியாற்றுதல்

நேர்காணலில் மொழிபெயர்ப்பாளரைச் சம்பந்தப்படுத்தும் போது நேர்காண்பவர் பின்வருவனவற்றினை மேற்கொள்ள வேண்டும்.

- » மொழிபெயர்ப்பாளரினைப் பரிசீலித்து அவரது பின்புலத்தைப் பற்றி நேர்காணப்படுபவர் சௌகரியமாக உணர்வதற்கு அவரிடம் கேள்வி கேட்பதற்கு அனுமதிக்கவும்
- » மொழிபெயர்ப்பாளர் பாதிக்கப்பட்டவரையும் சாட்சியையும் பார்த்து அவர்களுடன் நேரடியாகப் பேசுவதை உறுதிப்படுத்தவும் மேலும் அவர் குரலின் உயர்வு தாழ்வுகள், தொனி, வேகம், ஏற்ற இறக்கங்கள் பற்றி அறிந்துள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துங்கள்.
- » பாதிக்கப்பட்டவருடன்/சாட்சியுடன் நேரடியாகப் பேசுங்கள் (நீங்கள் அதன் பின்னர் என்ன கூறினீர்கள்?) மொழிபெயர்ப்பாளருடன் அல்ல (அவர் அதன் பின்னர் என்ன கூறினார்?)
- » சுருக்கமான வாக்கியங்களைப் பயன்படுத்தவும். அடிக்கடி நிறுத்திக்கொள்ளவும்.
- » மொழிபெயர்ப்பாளர் கேள்விகளையும் பதில்களையும் மொழிபெயர்க்கும் போது குறிப்பு எழுதுவதைத் தவிர்க்கவும் அல்லது குறைக்கவும் (பாதிக்கப்பட்டவரின்/ சாட்சியின் உடல் மொழியினையும் குரலின் தொனியினையும் அவதானிப்பது முக்கியமானதாகும்.
- » நேர்காணப்படுபவரின் மொழியிலேயே பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய சொற்களைப்பற்றி பரிச்சயம் அடைந்திருங்கள், இதனால் பாலியல் வன்முறையைப் பற்றிக் கலந்துரையாடும் போது உங்களினால் பொருத்தமாக எதிர்வினையாற்ற முடியும்.
- » முனைப்புடன் செவிமடுங்கள் ஏனெனில் இது நம்பிக்கையினை அதிகரித்து சொல்லாடலினை மேம்படுத்தும் (உதாரணம் தலையசைத்தல், பாதிக்கப்பட்டவர் / சாட்சி வேறொரு மொழியில் நடைமுறைப்படுத்துனருடன் பேசும்போது கூட துணைக்குரல் புரிதலினை வெளிப்படுத்துதல்
- » சிறுவர்களை நேர்காணும்போது விசேட பயிற்சி பெற்ற மேலும் சிறுவர்களுடன் பணியாற்றிய முன் அனுபவமுடைய மொழிபெயர்ப்பாளர்களை மாத்திரம் பயன்படுத்தவும்.

நேர்காணலின் போது மொழிபெயர்ப்பாளர்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும்.

- » பாதிக்கப்பட்டவரின் / சாட்சியின் மற்றும் நேர்காண்பவரின் சொற்களை மாத்திரம் பயன்படுத்தவும், அவருடைய சொந்தச் சொற்கள் எதுவுமே நேர்காணலின் போது பயன்படுத்தப்படலாகாது.
- » கேள்விக்கு பதிலளிக்கப்படாவிட்டாலும் என்ன கூறப்படுகின்றதோ அதனை மாத்திரம் மொழிபெயர்க்கவும்.
- » சிறுவர்களின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் ஆற்றல் தொடர்பாகக் கூருணர்வுடையவர்களாக இருக்கவும் - சிறுவர்களின் குறிப்பிட்ட தொடர்பாடல் சிரமங்களினைக் கையாள்வதற்கான உத்திகள் பற்றிய பயிற்சி உள்ளடங்கலாக.
- » பச்சாதாபத்தினைக் காட்டுங்கள் ஆனால் அனுதாபத்தினை, அதிர்ச்சியினை அல்லது தீர்மானத்தினை அல்ல.
- » பாதிக்கப்பட்டவரின் மீது / சாட்சியின் மீது தமது உடல் ரீதியான பிரசன்னம், ஏற்படுத்தும் தாக்கம் பற்றி கூருணர்வு மிகு விழிப்புணர்வு கொண்டிருக்கவும். மேலும் அறையினுள் நுழைவது, நடமாடுவது தொடர்பாகக் கவனமாக இருக்கவும். மேலும் பாதிக்கப்பட்டவரை / சாட்சியினை அச்சுறுத்தாத அல்லது பயமுறுத்தாத வகையில் அமரவும்.

மொழிபெயர்ப்பாளர் பின்வருவனவற்றினை செய்யக்கூடாது :

- » நடைமுறைப்படுத்துனரினால் நேரடியாகப் பேசப்பட்டவை தவிர்ந்த பாதிக்கப்பட்டவர் /சாட்சியுடன் வழங்கப்பட்ட தகவல் தொடர்பாக எந்தவிதச் சொற்களையும் பரிமாறுதல். மொழிபெயர்ப்பாளர் உரையாடலின் ஒரு அங்கத்தவர் அல்ல. ஆனால் நேர்காண்பவருக்கும் நேர்காணப்படுபவருக்கும் இடையில் ஒரு பெறுமதிமிகு தொடர்பாடல் முறையாக அவர் காணப்படுகின்றார். மொழிபெயர்ப்பாளருக்கும் பாதிக்கப்பட்டவர் / சாட்சிக்குமிடையில் பரிமாறப்படுகின்ற சொற்கள் முக்கியமற்ற விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். அதாவது எங்கே அமர்வது மற்றும் பொதுவான நட்பான பரிமாற்றங்கள் ஆகியவை. மேலும் இவையும் நேர்காணும் செயன்முறைகளின் போது வழங்கப்படும் இடைவேளைகளில் மாத்திரமே பரிமாற்றப்பட வேண்டும்.
- » நடைமுறைப்படுத்துனரினால் மேற்கொள்ளுமாறு தெளிவாக அறிவுறுத்தப்படாவிட்டால் பாதிக்கப்பட்டவருக்கு / சாட்சிக்கு அல்லது நேர்காண்பவருக்கு எல்லாவற்றையும் விளக்கவும்.
- » எவரது சொற்களையும் மாற்றுதல். பாதிக்கப்பட்டவர் /சாட்சி ஏதாவது இடக்கரடக்கலினைப் பயன்படுத்தினால் மொழிபெயர்ப்பாளர் அதே சொற்பதத்தினையே நடைமுறைப்படுத்துனருக்கு பயன்படுத்த வேண்டும். மேலும் இது வேறு அர்த்தத்தினைக் குறிக்கலாம் என்பதையும் குறிப்பிட வேண்டும். இதனால் நடைமுறைப்படுத்துனர் தெளிவுபடுத்தல் வினாக்களை தொடுக்க முடியும்.
- » அவர்களது பார்வையில் முக்கியமற்றதெனத் தென்படுகின்ற நேர்காணலின் பகுதிகளைத் தவிர்க்கவும்.
- » நேர்காணலை எவ்வாறு வழங்கலாம் என்பது பற்றிய ஆலோசனைகளை வழங்கவும்.

## 3. நடந்தவற்றைப் பற்றிய கூற்றும் தெளிவுபடுத்தலும்

நடந்தவற்றைப்பற்றி கூறுதல் மற்றும் தெளிவுபடுத்தல் கட்டத்தின் நோக்கமானது ஆவணப்படுத்தப்படுகின்ற நிகழ்வுகளின் துல்லியமான மற்றும் நம்பத்தகுந்த விபரங்களைப் பெற்றுக்கொள்வதாகும். ஈடுபடுத்துதல் மற்றும் விளக்குதல் கட்டத்தின் போது நேர்காண்பவர் மிக அதிகமாகப் பேசுவதில் ஈடுபடுவார் ஆனால் நேர்காண்பவர் நடந்தவற்றைப்பற்றிக் கூறுதல் மற்றும் தெளிவுபடுத்தல் கட்டத்திலே என்ன கூறப்படுகின்றதென்பதைப் புரிந்துகொண்டு பகுப்பாய்வு செய்யவேண்டிய காரணத்தினால் அவர் குறைவாகப் பேசி அதிகம் செவிமடுத்தல் நிகழ்கின்றது.

### i. வினாக்களின் வகைகள்

நடைமுறைப்படுத்துனர் பரிச்சயம் அடைந்து பாதிக்கப்பட்டவருடனும் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவருடனும் ஏனைய சாட்சிகளுடனும் நேர்காணலினை நடத்தும் பொழுது பயன்படுத்தக்கூடிய சில அடிப்படை வினாக்களின் வகைகள் பற்றிப் பரிச்சயம் அடைய வேண்டும்.

முதலில் கேட்கப்படும் கேள்விகள் மிக முக்கியமானதாக இருப்பதுடன் நேர்காணலின் எஞ்சிய பகுதிகளுக்கான ஒரு சூழலினை அது உருவாக்குகின்றது. இந்த அணுகுமுறையானது நேர்காணப்படுபவரிடமிருந்து தகவலினை பெறுகின்ற ஒன்றாக இருக்க வேண்டும். ஏனெனில் இது ஆரம்பத்தில் பரந்த அடிப்படையிலான குறிப்பிட்ட பதில்களைத் தேவைப்படுத்தாத வினாக்களில் இருந்து ஆரம்பித்து அவருடைய பரந்த இடையூறற்ற நடந்தவை பற்றிய கூற்றுக்களைப் பெற்று அதன் பின்னர் நடந்தவை பற்றிய மிகக் குறிப்பான விபரங்களைப் பெறுவதை நோக்கி சில குறிப்பிட்ட வினாக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு நகர்கின்றது. தேவையெனின் இன்னும் சில குறிப்பிட்ட பதில்களைத் தேவைப்படுத்தாத திறந்த வினாக்களைத் தொடுக்கலாம் (உதாரணம் ஒரு கூற்று பதிலினை தேவைப்படுத்தாக வினாக்கள்)

இடையூறுகள் நடந்தவற்றினை நினைவுபடுத்துவதில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தி இன்றியமையாத தகவல்களினை நடைமுறைப்படுத்துனர்கள் தவறவிடுவதற்குக் காரணமாக அமையலாம். இடையூறின்றித் தாராளமாக நடந்தவற்றை நினைவு படுத்துவதற்காக பாதிக்கப்பட்டவரை/ சாட்சியினை அனுமதித்து அதற்கான நேரத்தையும் அவகாசத்தையும் வழங்குவதானது அவர் தொடர்ந்து பேசுவதற்கு அவரை ஊக்கப்படுத்துவதுடன் மிகவும் பூரணமான விரிவான சம்பவ விபரங்களைக் கூறுவதற்கும் அவை காரணமாக அமையும்.

**பெட்டி 6**

**ஆக்கத்திறன்மிகு குறிப்பிட்ட பதிலைத் தேவைப்படுத்தாத வினாக்களின் வகைகள்**

| அகலத்திற்கான வினாக்கள் | ஆழத்திற்கான TED வினாக்கள் | மிகவும் தனித்துவமான தகவல்களுக்கான ஙுர் வினாக்கள் |
|---|---|---|
| சொல்லுங்கள் என்ன நடந்தது? என்பதுடன் நடந்தவற்றை கூறுகின்ற கட்டத்தினை ஆரம்பிக்கவும்.<br>பாதிக்கப்பட்டவர் / சாட்சியினை தொடர்ந்து பேச வைப்பதற்கு ஊக்குவிக்கவும்.<br>பாதிக்கப்பட்டவர் / சாட்சியினை இடையூறு செய்ய வேண்டாம்.<br>நீண்ட மௌனம் நிலவும் சந்தர்ப்பங்களில் அவர்களை மீண்டும் பேசத் தொடங்க ஊக்குவிப்பதற்கு பாதிக்கப்பட்டவர் / சாட்சியியின் கடைசிச் சொற்களை மீண்டும் கூறவும். | T 'Tell me…' (கூறுங்கள்)<br>E 'Explain to me…' (எனக்கு விளக்குங்கள்)<br>D 'Describe to me…' (எனக்கு விபரியுங்கள்) | W 'Who…?' யார்..?<br>W 'What…?' என்ன..?<br>W 'When…?' எப்பொழுது..?<br>W 'Where…?' எங்கே..?<br>H 'How…?' எப்படி..?<br>ஏன் என்கின்ற W[4] வினாவினை தவிர்த்து பின்வரும் H வினாவினை சேர்க்குமாறு நாம் பரிந்துரைக்கின்றோம்.<br>H உங்களுக்கெப்படி தெரியும்? |

4 ஏனைய பல வழிகாட்டல்கள் WH mnemonic களின் why(ஏன்) வினாக்களைக் கொண்டுள்ளன. எவ்வாறாயினும் why (ஏன்) என்பது பொதுவாக ஒரு ஆக்கத்திறன் மிகு வினா வகை அல்ல. ஏனெனில் அது உண்மையினை அடிப்படையாகக் கொண்ட பதிலுக்கு மாறாக அபிப்பிராயத்தினை (ஏன் அவர் அதை உனக்குச் செய்தார்) அடிப்படையாகக் கொண்ட பதில்களைக் கோரலாம். மேலும் இது ஒரு மாறாக் கருத்துநிலை ஆக்கத்தினை அல்லது குற்றம் கூறுதலினை (ஏன் நீங்கள் எதிர்த்து சண்டை போடவில்லை / தப்பவில்லை) உருவாக்கலாம். நடைமுறைப்படுத்துனர்கள் ஏன் என்கின்ற வினாக்களை தொடுப்பதற்கு வினாக்களை மீள உருவாக்கி சிறந்த வழிகளை முயற்சிக்க வேண்டும்.

## *நடைமுறைப்படுத்துனர்கள் குறிப்பிட்ட பதில்களைத் தேவைப்படுத்தாத திறந்த வினாக்களை மட்டும் இலக்காகக் கொள்ள வேண்டும்.*

நடைமுறைப்படுத்துனர்கள் குறிப்பிட்ட பதில்களைத் தேவைப்படுத்தாத திறந்த வினாக்களை மட்டும் இலக்காகக் கொள்ள வேண்டும். பதிலுக்கு இட்டுச்செல்கின்ற அல்லது கருத்துக்களை, கூற்றுக்களைக் கொண்ட வினாக்களை, பல்வேறு வினாக்கள் சேர்ந்த வினாக்களை, குறிப்பிட்ட பதிலைத் தேவைப்படுத்தும் வினாக்களை அல்லது பலவந்தப்படுத்தித் தெரிவினை திணிக்கும் வினாக்களைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் இவை நேர்காணப்படுபவரினால் தகவல்கள் வழங்கப்படவேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றன அல்லது அவற்றிற்கான அழுத்தத்தினை வழங்குகின்றன.

கீழே உள்ள அட்டவணையானது பிரதான வினாக்களின் வகைகளை விபரிக்கின்றது. மேலும் எப்போழுது அதனை பயன்படுத்துவது சிறந்தது என்பதையும் அதற்கான உதாரணங்களையும் வழங்குகின்றது.

**பெட்டி 7**

### வினாக்களின் வகைகள்

| வினாக்களின் வகைகள் | அவை என்ன? | எப்பொழுது அவற்றினை பயன்படுத்துவது | உதாரணங்கள் |
|---|---|---|---|
| வெளிப்படையான வினாக்கள் (குறிப்பிட்ட பதில்களை தேவைப் படுத்தாத வினாக்கள்) | பரமானங்களை வழங்கக்கூடிய வினாக்கள் ஆனால் கூற்றினை உள்ளடக்கிய பதிலினை தேவைப்படுத்தி மேலதிக வினாக்களை வழங்கக்கூடிய வினாக்கள் (ஒரு பதில் ஒரு சொல் பதில்களை விட) | நேர்காணலின் ஆரம்பத்தில் நேர்காணப்படுபவர் மனதில் உள்ளதை கூறுவதற்கு ஊக்கப்படுத்துவதற்கு நீங்கள் TED வினாக்களை பயன்படுத்தி இடையூறற்ற சுதந்திரமான ஞாபகப்படுத்தல் / நடந்தது என்னது என்பதற்கான விபரத்தைப் பற்றியது.<br><br>நடந்தது என்ன? என்பது பற்றி ஆரம்பத்தில் கூறியதன் பின்னர் நீங்கள் அதனைத் தொடர்ந்து மேலதிக WH வினாக்களைக் கேட்க முடியும். இவை குறிப்பிட்ட விடயங்களை பெறுவதற்கான அதிக குறிப்பிட்ட பதில்களை தேவைப்படுத்துகின்றன. (உதாரணம் : அணிந்திருந்த ஆடை, பயணம் செய்த வழி, குறிப்பிட்ட இடத்தில் அல்லது நேரத்தில் என்ன நடந்தது? | **TED வினாக்கள்**<br>*அன்றைய தினம் நீங்கள் பாடசாலையை விட்டுச் சென்றதில் இருந்து அடுத்த நாள் படை வீரர்கள் உங்களை விடுதலை செய்யும் வரை நடந்த அனைத்தையும் கூறுங்கள். உங்களால் ஞாபகப்படுத்தக் கூடிய ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு கணப்பொழுதிலுமான நிகழ்வுகளின் விபரிப்பினை அறிய நான் ஆவலாக உள்ளேன்.*<br><br>**WH வினாக்கள்**<br>*தாக்குதலை நடத்தியவர்கள் என்ன அணிந்திருத்தனர் (அது பதில்) நீங்கள் படைவீரர்கள் சீருடைகளை அணிந்ததாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். தயவு செய்து சீருடைகளைப் பற்றி எனக்கு இன்னும் விபரிக்க முடியுமா? (அதனைத்தொடர்ந்து) சீருடைகளின் நிறம் என்ன?*<br><br>*2ஆம் திகதி பெப்ரவரி மாதம் என்ன நடந்தது?*<br><br>*உங்களது உடலின் அந்தப்பகுதிக்கு அவர்கள் என்ன செய்தனர்?*<br><br>*நீங்கள் குறிப்பிட்ட படைவீரர்களின் இணைப்பு என்ன?*<br><br>*அந்த முடிவுக்கு நீங்கள் எவ்வாறு வந்தீர்கள்?*<br><br>*இதனை உங்களுக்கு யார் செய்தது?*<br><br>*இது எப்பொழுது நடந்தது?*<br><br>*அது நடந்தபொழுது நீங்கள் எங்கே இருந்தீர்கள்?*<br><br>*நீங்கள் அங்கே எவ்வாறு சென்றீர்கள்?*<br><br>*அவர் தான் தலைவரென உங்களுக்கு எப்படி தெரியும்?* |

பெட்டி 7

## வினாக்களின் வகைகள்

| வினாக்களின் வகைகள் | அவை என்ன? | எப்பொழுது அவற்றினை பயன்படுத்துவது | உதாரணங்கள் |
|---|---|---|---|
| தெளிவுபடுத்தும் வினாக்கள் | ஒத்திசைவற்ற தன்மையினைப் பற்றிய அல்லது நடந்தவை தொடர்பான தெளிவற்ற அம்சம் தொடர்பாக விளக்கத்தை கோரும் வினாக்கள் | நேர்காணலின் பிந்திய கட்டத்தில் நடந்தவை பற்றி கூறப்படுகின்றவற்றில் உங்களுக்கு ஒத்திசைவற்ற தன்மை புலப்பட்டால் அல்லது நேர்காணப்படுபவர் என்ன கூறுகின்றார் என்பது பற்றி உங்களுக்கு தெளிவற்ற தன்மை ஏற்பட்டால். சிறுவர்களை நேர்காணும் போது சில கருத்தியல்களை (திகதிகள், நேரங்கள், அளவு) புரிந்து கொள்ளக்கூடிய அவர்களின் ஆற்றலானது படிப்படியாகவே விருத்தி அடைகின்றது என்பது பற்றி அறிந்து அதற்கமைய உங்களது வினாக்களை திட்டமிடவும் | *பல ஆண்கள் என நீங்கள் குறிப்பிட்டீர்கள். உங்களது ஆடையினை அகற்றுமாறு கோரப்பட்டபோது அறையிலே எத்தனை ஆண்கள் இருந்தனர் என்பதை உங்களால் கூற முடியுமா? உங்களுக்கு நிச்சயமில்லை என்றால் அதற்கான ஏதேனும் காரணமுள்ளதா அவ்வாறாயின் அது என்ன? (அவர்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள், என் கண்கள் கட்டப்பட்டிருந்தன, நிலத்திலிருந்து பார்வையை உயர்த்துவதற்கு பயப்பட்டேன். குறிப்பு : வினாவிலுள்ள சகல தகவல்களும் சாட்சியினால் முன்னால் வழங்கப்பட்டிருந்தன.* |
| மூடிய வினாக்கள் (ஒரு சொல் பதிலினைத் தேவைப்படுத்தும் வினாக்கள்) | மிகவும் குறிப்பிட்ட பதில் களுக்கு பதிலினைச் சாதாரணமாக வரையறை செய்கின்ற வினாக்களும் வெறுமனே ஆம் - இல்லை என்கின்ற பதிலை உருவாக்குகின்ற வினாக்களும் | அவை பொதுவாக இட்டுச் செல்கின்ற காரணத்தினால் தவிர்க்கப்பட வேண்டும். (பின்வரும் சந்தர்ப்பத்தில் கடைசி வழியாக மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும்) (i) உங்களுக்கு குறிப்பிட்ட ஒரு விடயத்திற்கு திட்டவட்டமாக ஆம் அல்லது இல்லை என்கின்ற பதிலே தேவை (ii) ஏனைய பொருத்தமாக சகல தகவல்களும் சாட்சியினால் சுதந்திரமாக வழங்கப்பட்ட பின்னர் மாத்திரமே (iii) இந்த தகவலினை கோருவதற்கான ஏனைய சகல பொதுவான வழிகளும் உங்களுக்கு பதிலினை வழங்கவில்லை. | *அவர் ஆணுறையை பயன்படுத்தினாரா*<br>*அவருக்கு விந்து வெளியேறியதா?* |

பெட்டி 7

## வினாக்களின் வகைகள்

| வினாக்களின் வகைகள் | அவை என்ன? | எப்பொழுது அவற்றினை பயன்படுத்துவது | உதாரணங்கள் |
|---|---|---|---|
| பதிலுக்கு இட்டுச்செல்கின்ற/ செல்வாக்குச் செலுத்துகின்ற வினாக்கள் | உண்மைகளைச் சுட்டிக்காட்டுகின்ற அல்லது ஊகிக்கச்செய்கின்ற அல்லது குறிப்பிட்ட பதிலினை ஆலோசனையாக வழங்குகின்ற வினாக்கள் | ஒருபோதும் இல்லை/ தவிர்க்கப்பட வேண்டும். | *அப்பொழுதுதானா அவர் உங்களது ஆடையை அகற்றினார்?*<br>*அவர் உங்களை அடித்தாரா?*<br>*அவர்கள் உங்களை முகாமுக்கு அழைத்து சென்றார்களா?*<br>*நீங்கள் முன்பு பார்த்த அதே தளபதி தானா?* |
| பல் வினாக்கள் | பல்வேறு கூறுகளைக் கொண்டுள்ளதும் அதனால் புரிந்து கொண்டு பதிலளிக்க முடியாததுமான வினாக்கள் | தவிர்க்கப்பட வேண்டும், விசேடமாக சிறுவர்களுடன் | *அவர்கள் எவ்வாறு தோற்றமளித்தனர் மேலும் அவர்கள் என்ன கூறினர்?* |
| பலவந்தப்படுத்தப் பட்ட தெரிவு வினாக்கள் | நேர்காண்பவரினால் ஒரு தெரிவிற்கு வரையறுக்கப் படுகின்ற பதிலினைக் கொண்ட வினாக்கள் | தவிர்க்கப்பட வேண்டும். | *சீருடை பச்சை நிறமானதா? அல்லது நீலமா?* |

**ii. வினாக்களுக்கான விடயப் பரப்புக்கள்**

திட்டமிடல் மற்றும் தயாரிப்புக்கட்டத்தின் போது நடைமுறைப்படுத்துனர்கள் வினாத்தொடுப்பதற்கான தலைப்புக்கள் மற்றும் விடயப் பரப்புக்களை அடையாளம் காணவேண்டியிருக்கும்.

குறிப்பிட்ட பாலியல் வன்முறை செயற்பாடுகள் தொடர்பாக நடைமுறைப்படுத்துனர்கள் நிரூபிக்க விரும்புகின்ற விபரங்களின் வகைகளும் அளவும் ஆணை மற்றும் நியாயாதிக்கத்தில் தங்கியுள்ளவாறு வித்தியாசப்படும் என்பதுடன் அதற்கமைய வினாக்களைத் தயாரிக்க வேண்டும். மேலும் தீங்கிழைக்க வேண்டாம் எனும் கோட்பாட்டை மனதில் இருத்தி நோக்கத்திற்கு அவசியம் தேவைப்படாத கடினமான அல்லது சங்கடத்தை ஏற்படுத்தக்கூடிய வினாக்களைத் தவிர்த்துக் கொள்வதும் சிறந்ததாகும் (பார்க்க அத்தியாயம் 7 : தீங்கிழைக்க வேண்டாம், சிறுவர்களுடனான நேர்காணலுக்காக பார்க்க அத்தியாயம் 16 : பாலியல் வன்முறைக்கு எதிரான சிறுவர்கள் / நெறிசார் பரிசீலனைகள்)

பாலியல் வன்முறையினை ஒரு குற்றச்செயலாக விசாரணை செய்கின்ற நடைமுறைப்படுத்துனர்கள் உள்நுழைவிப்பது தொடர்பாக அல்லது உடல் பாகங்கள் தொடர்பாகக் குறிப்பிட்ட விபரங்களை நிரூபிக்க வேண்டியிருக்கும் என்பதுடன் அது தொடர்பான விபரமான வினாக்களையும் கேட்க வேண்டியிருக்கும். எனவே நடைபெற்ற விடயத்தினை மாத்திரமல்லாது சர்வதேச சட்டத்தின் கீழ் அவர்கள் ஆவணப்படுத்துகின்ற சூழமைவிற்கு அமைவாக ஒரு குற்றச்செயலாக பாலியல் வன்முறையின் அனைத்துக் கூறுகள் பற்றியும் அவர்கள் வினாக்களை உள்ளடக்க வேண்டியிருப்பது அவசியமானதாகும்.

ஆதரித்து வாதாடுதலுக்காக அல்லது அறிக்கையிடல் நோக்கங்களுக்காக பாலியல் வன்முறையினை ஆவணப்படுத்தும் நடைமுறைப்படுத்துனர்கள் மறுபுறத்திலே உள்நுழைவிப்பு அல்லது உடல் பாகங்கள் பற்றிய மட்டங்களினை நிரூபிக்கவேண்டிய அவசியமில்லை மேலும் என்ன நடந்தது என்பது பற்றிய விபரங்கள் அவர்களுக்கு தெரியாமல் இருக்கும் போது அவர்கள் சட்ட சொற்களை பயன்படுத்தாமல் இருப்பதையிட்டு அவதானமாக இருத்தல் வேண்டும்.

பாதிக்கப்பட்டவர் / சாட்சியின் மீது பாலியல் வன்முறை ஏற்படுத்திய உடல், மன, சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கங்கள் தொடர்பாகவும் நடைமுறைப்படுத்துனர்கள் முறைமை வாய்ந்த வகையில் வினாக்களை உள்ளடக்க வேண்டும். ஏனெனில் தாக்கச் சான்றானது குற்றச்செயல் அல்லது வன்முறைகளின் கூறுகளை அதன் பாரதூரங்களுடன் மாத்திரம் நிரூபிப்பதற்கு உதவாமல் தண்டனை வழங்குவதற்கும் நட்டஈட்டு நோக்கங்களுக்கும் அவசியமானதாகும் (பார்க்க அத்தியாயம் 6 நட்டஈடு வழங்குதல் / தீங்கினை ஆவணப்படுத்துவதற்கான கூறுகள்)

**பெட்டி 8**

**சர்வதேச சட்டத்தின் மீறல் அல்லது குற்றச்செயலாகப் பாலியல் வன்முறை பற்றிய வினாக்களுக்கான விடயப்பரப்புக்கள்** பற்றிய[5]

| தனித்துவமான கூறுகள் | பொதுவான கூறுகள் | இணைப்புக் கூறுகள் | தாக்கம் |
|---|---|---|---|
| குறிப்பிட்ட செயற்பாடு நடைபெற்றுள்ளதென்பதை நிரூபிப்பதற்கான தகவல் (பாலியல் வல்லுறவு, பாலியல் அடிமைத்தனம், | நடைபெற்ற குற்றச்செயலானது மானுடத்திற்கு எதிரான குற்றச்செயல், யுத்தக்குற்றம், இனப்படுகொலை அல்லது மனித உரிமை மீறல் என நிரூபிப்பதற்குத் தேவையான தகவல்கள் | குறிப்பிட்ட தனிநபர் செயற்பாட்டிற்குத் தனிப்பட்ட ரீதியாகக் குற்றவியல் பொறுப்பினைக் கொண்டுள்ளார் என்பதையும் மேலும் என்ன பொறுப்பு முறை மூலமாக அல்லது எவ்வாறு அரசு பொறுப்பானது என்பதை நிரூபிப்பதற்கானதொரு தகவல் | பாதிக்கப்பட்டவர் / சாட்சி, அவரது குடும்பம் மற்றும் சமுதாயம் ஆகியவற்றின் மீது குற்றச்செயல் ஏற்படுத்திய பாரதூரமான பின்விளைவு களை ஆவணப்படுத்துகின்ற மேலும் ஏனைய மனித உரிமை மீறல்களுக்கு இட்டுச்செல்கின்ற விடயங்கள் பற்றிய ஆவணப்படுத்துகின்ற தகவல்கள் |
| தாக்குதல் மற்றும் ஏனைய குற்றச்செயல் வன்முறைகள் பற்றிய விபரங்கள் | குடிமக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட மோதல்கள் / தாக்கம் பற்றிய விபரங்கள் | நோக்கம் / அறிவு பற்றிய விபரங்கள் | உடல் ரீதியாக தீங்கு (உடனடியான மற்றும் நீண்டகால) |
| வன்முறை நடத்தப்பட்ட இடத்தின் அமைவிடம், திகதி பலவந்தப்படுத்திய சூழ்நிலைகள் மற்றும் விபரங்கள் | அரசியல் மற்றும் பாதுகாப்பு சூழ்நிலை, அளவு, இதேபோன்ற தாக்குதல்கள் அல்லது சம்பவங்கள் | கட்டளை மற்றும் அதிகார கட்டமைப்பு, தொடர்பாடல், உபகரணம் | மனநல ரீதியான தீங்கு (உடனடியான மற்றும் நீண்டகால) |
| சமூகமாக இருந்த ஏனைய மக்கள் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய விபரங்கள் | குற்றத்தை நிகழ்த்தியவர்களின் சொற்கள் மற்றும் நடவடிக்கைகள் / வன்முறைக்கான சாத்தியமான காரணங்கள் (பால்நிலை, இனத்துவம், அரசியல், தொடர்புகள்) | குற்றத்தினை இழைத்தோர் பற்றிய மேலும் அவர்களுடைய வகிபாத்திரங்கள் / பொறுப்புக்கள் பற்றிய விபரங்கள் | சமூக / பொருளாதார தீங்கு |

5 சர்வதேச குற்றவியல் விசாரணைகளுக்கான நிறுவனம் 2015 : மோதலில் பாலியல் வன்முறையினை ஆவணப்படுத்தி விசாரிப்பதற்கான சர்வதேச நெறிமுறை. பயிற்சி சாதனங்கள் : The Hague: Institute for International Criminal Investigations. Module 6, Testimony.

### iii. வினாக்களின் உதாரணங்கள்

**செயற்பாடு பற்றிய வினாக்களின் உதாரணங்கள் : உதாரணமான பாலியல் வல்லுறவின் குறிப்பிட்ட கூறினை நிரூபிப்பதற்கு**

பாலியல் வல்லுறவின் முதலாவது கூறு

- *சாத்தியமெனில் உங்களுக்கு அதிக சிரமம் இல்லையெனில் நீங்கள் தயவு செய்து அவர்கள் உங்களுக்கு என்ன செய்தார்கள் என்பதை விபரிக்க முடியுமா? எனக்குத் தெரியும் இது இலகுவான ஒன்றாக இருக்காது. தயவு செய்து உங்களுக்கு தேவையான நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.*
- அவர்/ தன்னை அவர்கள் ஒருவர் பின் ஒருவராக பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார்கள் என்றோ பாலியல் வல்லுறவைத்தான் குறிக்கின்றது என உங்களுக்கு தெரிந்த வேறு வட்டார மொழியினையோ அல்லது சமுதாயச் சொற்பதத்தையோ அவர் பயன்படுத்தினால் உட்புகுவித்தல் இடம்பெற்றதா என்பதைக் கண்டறிவதற்கான உண்மைகளின் அடிப்படையிலான விபரிப்பினை பெறுவதற்கு நீங்கள் பின்தொடர வேண்டும்.
- *'அவர்கள் உங்களைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார்கள் என நீங்கள் கூறும்போது தயவு செய்து அவர்கள் பாலியல் வல்லுறவு மேற்கொள்ளும் போது என்ன செய்தார்கள் எனக் கூறமுடியுமா?*
- *என்ன நடந்தது என்பதை இன்னும் விபரமாகப் புரிந்து கொள்வது எனக்கு மிகவும் உதவியாக இருக்கும். உங்களால் முடியுமாக இருந்தால் தயவு செய்து உங்கள் உடலின் எப்பகுதி பாதிக்கப்பட்டது எனக் கூறுங்கள்.*
- *அதனை அவர்கள் செய்வதற்கு எதனைப் பயன்படுத்தினர்.*

பாலியல் வல்லுறவின் இரண்டாவது கூறு

- *இந்த நிகழ்வுகள் இடம்பெற்ற போது சுற்றுச்சூழலில் காணப்பட்ட சந்தர்ப்பங்களைத் தயவு செய்து நீங்கள் எங்களுக்காக விபரிக்க முடியுமா?*
- *நீங்கள் எங்கே இருந்தீர்கள் என்று சொல்ல முடியுமா?*
- *யார் சுற்றிவர இருந்தனர்*
- *என்ன நடைபெற்றுக்கொண்டிருந்தது*
- *சுற்றுச்சூழலைப்பற்றித் தயவுசெய்து விபரிக்க முடியுமா?*

**சூழமைவு பற்றிய வினாக்களின் உதாரணங்கள்˙ உதாரணமாக மானுடத்திற்கெதிரான குற்றச்செயல்களாக பாலியல் வல்லுறவின் கூறுகளை நிரூபித்தல்**

முதலாவது மற்றும் இரண்டாவது கூறுகள்

- *நீங்கள் விபரித்த செயற்பாடுகளுக்கு முன்னராக வேறென்ன நடைபெற்றதென எனக்குக் கூற முடியுமா?*
- *நீங்கள் விபரித்த செயற்பாடுகள் நடைபெறும் போது வேறு என்ன நடைபெற்றது என மேலும் எனக்குக் கூற முடியுமா?*
- *நீங்கள் விபரித்த செயற்பாடு இடம்பெற்று முடிந்த பின்னர் வேறு என்ன இடம்பெற்றது என மேலும் எனக்குக் கூற முடியுமா?*
- *நீங்கள் எனக்கு கூறிய நபர்கள் பற்றி எனக்குக் கூற முடியுமா?*
- *அவர்கள் என்ன அணிந்திருந்தனர்*
- *அவர்கள் என்ன வைத்திருந்தனர்*
- *அவர்கள் எங்கிருந்து வந்தனர்'*
- *என்ன இராணுவத்தளம், உபகரணம், ஆளணி அண்மையில் இருந்தது, அவ்வாறு இருப்பின்*
- *'நீங்கள் பேசுகின்ற தாக்குதல் நடைபெற்ற விதத்தினை விபரிக்க முடியுமா?*
- *'முதலில் என்ன நடந்தது? அடுத்தது என்ன? அதன் பின்னர் என்ன?*
- *'இதே விதமாக வேறு யாராவது நடத்தப்பட்டனர் என உங்களுக்குத் தெரியுமா?*
- *அந்த முடிவுக்கு வர உங்களுக்கு எது காரணமாக அமைந்தது*
- *'நீங்கள் சற்றுமுன் விபரித்தது போன்ற தாக்குதல் சம்பந்தப்பட்ட சம்பவங்களை நீங்கள் சாட்சியாகக் கண்டீர்களா?*

(இந்த சம்பங்களைத் தான் கண்டதாக அவர் உங்களுக்கு விபரிக்கின்றார். எனவே உங்களினால் யார், என்ன, எப்பொழுது, எங்கே எப்படி மற்றும் எவ்வாறு அவருக்கு தெரியும் என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.)

# *'யார்' 'என்ன' 'எப்பொழுது' 'எங்கே' 'எப்படி' மற்றும் 'உங்களுக்கு எப்படித் தெரியும்' ஆகியவற்றினைக் கண்டுபிடிப்பதற்கு வெவ்வேறான வினாக்களைத் தொடுக்கவும்.*

**என்ன விதமான பொறுப்புக்களின் வகைகளின் ஊடாக குற்றத்தை நிகழ்த்தியவர் குற்றத்தை இழைத்துள்ளார் என்பதனை நிருபிப்பதற்கு கேட்கப்படக்கூடிய கேள்விகளுக்கான உதாரணங்கள். உதாரணமாக, நேரடியாக (கட்டளை, மேலதிகாரியின் பொறுப்புக்கு எதிராக)**

- *நீங்கள் என்னிடம் அவர்கள் மேற்கொண்டதாக கூறப்படும் செயல்களை நிகழ்த்தியவர்களைப் பற்றி விபரிக்க முடியுமா?*
- *அவர்களுடைய ஆடைகளைப் பற்றி குறிப்பிட முடியுமா?*
- *அவர்களுடைய தோற்றத்தின் முக்கியமான அம்சத்தை விபரிக்க முடியுமா? அதாவது அவர்களுடைய தலை, தலைப்பாகை ஆகியவை*
- *அவர்களின் கையில் வேறு ஏதாவது இருந்ததா?*
- *அவர்கள் எதை வைத்திருந்தனர்?*
- *அவர்களுடைய ஆயுதங்கள். அவர்களுடைய உபகரணம், வாகனத்தினைப் பற்றி விபரிக்க முடியும்?*
- *அந்த நேரத்தில் யாராவது அதிகாரத்தில் இருந்ததை உங்களுக்கு அவதானிக்கக்கூடியதாக இருந்ததா?*
- *இந்தத் தனிநபர் ஏதாவது கூறியதை உங்களுக்கு கேட்கக்கூடியதாக இருந்ததா? (இந்தத் தனிநபர்கள்)*
- *அவர் என்ன கூறினார்?*
- *அவர் யாருக்கு கூறினார்?*
- *என்ன சூழ்நிலையின் கீழ் அவர் அதனைக் கூறினார்.*
- *அவர்கள் கூறியதன் காரணமாக என்ன ஏற்பட்டது? என்ன எதிர்வினை ஆற்றப்பட்டது?*
- *இந்த குழுவிலுள்ள தனிநபர்களுக்கிடையிலுள்ள ஊடாட்டத்தினை உங்களுக்கு அவதானிக்க கிடைத்ததா?*
- *அவர்களின் ஊடாட்டம் தொடர்பாக உங்களால் எதை அவதானிக்க முடிந்தது.*
- *அவர்கள் மற்றவர்களை பெயரினால், தலைப்பினால், பதவியினால் அழைத்ததை உங்களினால் கேட்கக் கூடியதாக இருந்ததா?*

மேலும் யார்? என்ன? எப்பொழுது? எங்கே? எப்படி? மற்றும் எப்படி உங்களுக்குத் தெரியும் அல்லது இந்த தனிநபர் தான் அதிகாரப்பதவியினைக் கொண்டிருந்தார் என நீங்கள் தீர்மானிப்பதற்கு எது உங்களுக்கு காரண-மாக இருந்தது ஆகியவற்றைக் கண்டுபிடிப்பதற்கு நடை-டமுறைப்படுத்துனர் வேறான கேள்விகளைக் கேட்க வேண்டும்.

### iv. நேர்காணல் உத்திகள்

நேர்காணும் போது சரியான உத்திகளையும் நடத்தையினையும் மனப்பாங்கினையும் பயன்படுத்துவது பாதிக்கப்பட்டவர்/ சாட்சி மதிக்கப்படுவதாக உணர்வதற்கும், வலுவூட்டப்படுவதாக உணர்வதற்கும், தகவல்களைப் பகிர்வதற்கு சௌகரியமான உணர்வினைப் பெறுவதற்கும் இன்றியமையாததாகும்.

### நடந்தவற்றை விபரித்தல் மற்றும் தெளிவுபடுத்தல் கட்டத்தின் போது என்ன செய்ய வேண்டும் மற்றும் கூற வேண்டுமென்பதற்கான கூற்று

1. தனித்துவமான கேள்விகளைக் கேட்பதற்கு முன்னர், குறிப்பாக பாலியல் வன்முறை தொடர்பான செயற்பாட்டினை பற்றிக் கேட்பதற்கு முன்னர் பாதிக்கப்பட்டவர் /சாட்சி அவர்களுடைய வழியிலேயே நடந்த நிகழ்வுகளைப் பற்றிய முதலாவது விபரிப்பினை பூரணமாக இடையூறு இன்றி விளக்கப்படுத்துவதைப் பெற்றுக் கொள்ளல்.
2. வெளிப்படையான வினாக்களைக் கேட்கவும். இயலுமான அளவு சுருக்கமானதாகவும், துல்லியமானதாகவும் மேலும் நேர்காணலினை TED வினாக்களைக் கொண்டு ஆரப்பிக்கவும் (கூறுங்கள்.... விளக்குங்கள்.... விபரியுங்கள்) இது நேர்காணப் படுபவர்கள் மனதில் உள்ளதை கூறுவதற்கும் அவர்களிடமிருந்து நடந்தை பற்றிய கூற்று வடிவிலான பதிலைப் பெறுவதற்கும் ஊக்கப்படுத்தும் (ஒரு சொல் ஆம் அல்லது இல்லை என்கின்ற சொல்லுக்கு எதிராக)
3. சாட்சியின் கதையினைப் பின்தொடர்ந்து கால ஒழுங்கிலான கட்டமைப்பினைப் பின்பற்றவும். ஏனைய சாத்தியங்கள் இருந்தபோதிலும் கால ஒழுங்கிலான நேர்காணலானது மிகவும் பொதுவானதாகவும் பெரும்பாலான சம்பவங்களில் மிகவும் இலகுவான அணுகுமுறையாகவும் காணப்படு கின்றது. தெளிவுபடுத்தல் கட்டத்தின் கால ஒழுங்கினை பின்பற்றுவதற்கு இடையிலான சமநிலையினைக் கண்டறிந்து சகல கூறுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதையும் நேர முகாமைத்துவ கரிசனைகள் பின்பற்றப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்தவும்.
4. நடந்தவற்றைப் பற்றிக் கூறுகின்ற ஆரம்பக் கூற்றின் பின்னரும் நேர்காணப்படுபவர் பல்வேறு தலைப்புக்களை குறிப்பிடும் போதும் ஒவ்வொன்றிற்கும் பட்டியலிடுவது பயன்மிக்கதாகும். அதாவது நேர்காணப்படுபவரோடு கலந்துரையாடும் போது விரைவாகவும் குழப்பமின்றியும் ஒவ்வொரு விடயத்தினையும் குறிப்பிடுவதற்கு இது உதவும்.
5. பாதிக்கப்பட்டவர்/சாட்சியிடம் ஏன் என்கின்ற வினாக்களைத் தொடுத்து அவரின் மீது குற்றத்தினைச் சுமத்துகின்ற நிலையினை ஏற்படுத்துவதை தவிர்ப்பதற்காக ஒவ்வொரு தலைப்பிற்கும் யார், என்ன? எங்கே? எப்பொழுது? எப்படி? என்கின்ற குற்றச்செயல்கள் தொடர்பாக வினாக்களை தொடுக்கவும். நீங்கள் மிகவும் இறுக்கமாக இந்தப் பட்டியலை பின்பற்ற வேண்டியதில்லையென்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும். நீங்கள் பாதிக்கப்பட்டவர்/ சாட்சி எதைக் கூறுகின்றாரோ அதிலிருந்துதான் எதிர்வினையாற்றுகின்றீர்கள் என்பதை உறுதிப்படுத்தவேண்டும். உங்களுக்கு எப்படித் தெரியும் என்ற கேள்வியை கேட்க மறக்கவேண்டாம். அல்லது

*..எப்போதும் தகவல்களை விடப் பாதிக்கப்பட்டவரையும் / சாட்சியினையும் முன்னுரிமைப்படுத்தவும்..*

நீங்கள் இந்த முடிவுக்கு வர என்ன காரணம் என்கின்ற வினாவினையும் கேட்க மறக்கவேண்டாம். இதன் மூலமாக பாதிக்கப்பட்டவர் / சாட்சியின் ஊகங்கள் மற்றும் தீர்வுகளை தெளிவுபடுத்த முடியும். அவ்வாறான வினாக்களுக்கான விடைகள் உங்களுக்கு பொதுவாக இன்றியமையாத சான்றுகளை வழங்கும். சிறுவர்களை நேர்காணும்போது அவசர அவசரமாக தலைப்புக்களுக்கிடையில் மாறுவதற்கு முயற்சிக்க வேண்டாம். மேலும் ஒரு அமர்விலேயே பல்வேறு வினாக்களைத் தொடுக்கவேண்டாம் (உதாரணம் எங்கே இருந்தீர்கள்? மற்றும் யாருடன் இருந்தீர்கள்)

6. குறிப்பிட்ட வினாக்களைக் கேட்கும்போது 'எனக்குத் தெரியாது' 'எனக்கு ஞாபகமில்லை' போன்றவற்றினை உண்மையான பதில்களாக ஏற்றுக்கொள்ளவும். வலியுறுத்துவதானது நல்லுறவினை இழக்கச் செய்யலாம். அல்லது சாட்சிகள் ஊகிக்க ஆரம்பிக்கலாம்.

7. ஏனைய நபர்களுடன் அல்லது மூலங்களுடன் மேற்கொண்ட நேர்காணல்களிலிருந்து பெற்ற தகவல்களினை நேரடியாக அறிமுகப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளவும். மேலும் ஒவ்வொரு நேர்காணலினையும் இரகசியமாகப் பேணவும்.

8. சில வன்முறை வடிவங்கள் வெளிக்கூறப்பட்டதன் பின்னரும் அவர்களுக்கு ஏதாவது மேற்கொள்ளப்பட்டதா அல்லது அவர்களைச் செய்யுமாறு வலியுறுத்தப்பட்டதா என்பதை பாதிக்கப்பட்டவர் / சாட்சியிடம் தொடர்ந்து கேட்கவும். பொதுவாக ஒரு வகையிலான தாக்குதலைப் பற்றி வெளிக்கூறிய பின்னர் நேர்காண்பவர்கள் நிறுத்தி விடுகின்றனர். ஆனால் அவ்வளவுதான் நடந்ததென ஊகிக்கக்கூடாது. அனுபவமானது மிகவும் இடர்மிக்கதாக இருக்கும்போது பாதிக்கப்பட்டவர் / சாட்சிக்கு வார்த்தைகளைக் கண்டுபிடிப்பதும் மிகவும் கடினமாக இருக்கும்.

9. ஒரே விடயம், ஒரே நிகழ்வு பல தடவைகள் நடந்ததாக முறைப்பாடு செய்யப்படுகையில் (உதாரணம் தடுத்து வைக்கப்பட்டவர் விசாரணைக்காகவும் துஷ்பிரயோகத்திற் காகவும் கூட்டிலிருந்து வெளியே அழைக்கப்படுதல்). பொதுவாக என்ன நடந்ததென்பதையும் அதன் பின்பு முதலாவது தடவை மற்றும் கடைசித் தடவை பற்றியும் கேட்கவும். மேலும் ஏனைய சந்தர்ப்பங்களினைப் பற்றி ஏதாவது தனித்துவமானது அல்லது அசாதாரணமானது இருக்கின்றதா என்பதையும் கேட்கவும் (இது மிகவும் தெளிவாக ஞாபகப்படுத்தக்கூடியதாக இருக்கின்றது).

10. கிரமமான குறுகிய சிற்றுண்டி அல்லது சௌகரியத்திற்கான இடைவேளைகளை அறிமுகப்படுத்தவும். இது நேர்காண லானது சரியான பாதையில்தானா செல்கின்றது என்பதைப் பற்றிச் சிந்திப்பதற்கும் குழப்பங்கள் விடுபடுதல்கள் ஆகிய வற்றைப் பற்றிச் சிந்திப்பதற்கும் அவகாசம் வழங்கும்.

11. தெளிவுபடுத்தல் செயன்முறையின் போது அடுத்த தலைப்பிற்குச் செல்வதற்கு முன்னர் உங்களது புரிதலானது துல்லியமானதாக இருக்கின்றதா என்பதைப் பரிசீலிப்பதற்கு நடந்தவற்றைப் பற்றிய விபரிப்பின் ஒவ்வொரு அம்சம் பற்றியும் என்ன கூறப்பட்டது என்பதை உறுதிப்படுத்தவும். பாதிக்கப்பட்டவர் / சாட்சியின் சொந்தச் சொற்களையே மீண்டும் கூறவும். ஒருபொழுதும் அவர்களுடைய வார்த்தைகளை மாற்ற வேண்டாம். அது வேறு பதில்களுக்கு இட்டுச்செல்லும். அதிகமான தகவல்கள் இருந்தால் நேர்காணப்படுபவரின் பதிலினை உறுதிப்படுத்தி அடுத்த நகர்விற்கு செல்லும்முன் பாதிக்கப்பட்டவரின் சொந்தச் சொற்களையே பயன்படுத்தி முழுத்தலைப்பினையும் தொகுக்கவும். என்ன கூறப்பட்டது என்பதைச் செவிமடுத்துப் புரிந்து கொண்டுள்ளீர்கள் என்பதைக் காட்டுவதன் மூலமாக இந்த அணுகுமுறையானது ஒரு தொழில் ரீதியான செயற்பாட்டு உறவினைப் பேணுவதற்கு உதவுகின்றது. மேலும் நேர்காணப்படுபவருக்கு அவர்கள் கூறியவற்றிற்கு மேலும் விடயங்களை சேர்க்க அல்லது மாற்ற அனுமதி வழங்கப்படுகின்றது. கலந்துரையாடலின் ஓட்டத்தினைப் பேணுவதற்கு தொகுப்பினை அடுத்த தலைப்புடன் ஒரு வெளிப்படையான வினாவுடன் சேர்த்து இணைக்கவும். உதாரணமாக முதலாவது நபர் உள்ளே வந்து உங்களை நிலத்திலே தள்ளினார் என நீங்கள் குறிப்பிட்டீர்கள், அடுத்ததாக என்ன நடந்தது?

12. பொருத்தமெனின், நேர்காணப்படுபவரிடம் சம்பவம் நடந்த இடத்தின் வரைபடமொன்றினை வரையுமாறு கேட்கவும். இவ்வாறான வரைபடங்களை திகதியிட்டு, பட்டியலிட்டு / குறியீட்டு அதற்கானதொரு உசாவல் குறிப்பினையிட்டு எதிர்கால உசாவலுக்காகப் பேணவும். எவ்வாறாயினும் சிலர் வரைபடங்களை பயன்படுத்துவது பற்றி அல்லது மேலிலிருந்து பார்க்கின்ற கண்ணோட்டத்தினைப் பற்றி பரிச்சயமற்றவர்களாக இருப்பர். எனவே, சில சாட்சிகளுடன் வித்தியாசமான உத்திகள் பொருத்தமானதாக இருக்கும்.

13. பொருத்தமெனில் நேர்காணப்படுபவரிடம் அவர்களிடம் ஏதாவது பொருத்தமான படங்கள், வீடியோக்கள், குறுஞ்செய்திகள் அவர்களது தொலைபேசியில் அல்லது வேறேதும் சான்றுகளில் உள்ளனவா எனக் கேட்கவும்.

14. ஞாபகத்திலிருந்து நிகழ்வுகளை மீண்டும் நினைவுகூறுவது மன ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் அதிக முயற்சியினைத் தேவைப்படுத்துகின்ற ஒன்று என்பதை ஏற்றுக்கொண்டு மனிதர்களின் ஞாபகசக்தி மற்றும் வாய்மொழி மூலமற்ற தொடர்பாடல்களின் உறுதியற்ற தன்மையினையும் பற்றி அறிந்திருக்கவும் (குரலில் தொனியில் மாற்றம், கண் மற்றும் முக நகர்வுகள்). நேர்காணப்படுபவர் எவ்வாறு உணருகின்றார் அவருக்கு ஏதாவது ஓய்வு தேவையா போன்ற விடயங்களை பொருத்தமான இடைவெளிகளில் பரிசீலித்துக் கொள்ளவும். ஆனால் அவர் வெளிக்கூறுபவற்றிற்கு இடையூறு செய்ய வேண்டாம். அல்லது உங்களுக்கு அந்த விடயத்தினை மாற்ற வேண்டுமென்கின்ற செய்தியினையோ இடர் தரும் அனுபவங்களைப் பற்றிச் செவிமடுப்பதை நிறுத்த வேண்டுமென்ற செய்தியினையோ அவர்களுக்கு அனுப்ப வேண்டாம். இவ்வாறு பரிசீலிப்பதானது புதிய வினாக்களினை அறிமுகப்படுத்துவதற்கும் செயன்முறையினை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தினை நேர்காணப் படுபவருக்கு வழங்குவதன் மூலம் அவருக்கு வலுவூட்டப் படுவதற்கான வாய்ப்பினை வழங்குவதற்கும் இயலுமாக்கு கின்றது.

15. கேள்விகளை எவ்வாறு சொற்றொடராக அமைப்பது என்பதைக் கவனமாகப் பரிசீலிக்கவும். விசேடமாக சிறுவர்களுடன் பணியாற்றும்போது இதனை மேற்கொள்ளவும். ஏனெனில் அவை ஆலோசனை வழங்குபவையாகவும் ஒரு வளர்ந்தவரை திருப்திப்படுத்தும் என அவர்கள் நினைக்கின்ற ஒரு பதிலினை வழங்குவதற்கு விடயங்களை அர்த்தப்படுத்துவதாகவும் அமைந்துவிடும் (பார்க்க அத்தியாயம் 16 : சிறுவர்களுக் கெதிரான

பாலியல் வன்முறை / ஆவணப்படுத்தல் செயன்முறையில் சிறுவர்களை ஈடுபடுத்துதல் தொடர்பான பிரதான வழிகாட்டி.

16. வினாத் தொடுப்பதற்கான முறைவடிவம் எதுவாக இருந்தாலும் பின்வருவனவற்றினை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

» இடையூறு செய்தல்

» பதில்களுக்கு இட்டுச்செல்கின்ற வினாக்களைத் தொடுத்தல்

» மேலதிக விபரங்களைக் கோரும் போது பதிலினை ஆலோசனையாக வழங்குதல்

» பல்வேறு வினாக்களைத் தொடுத்தல் (அவர்கள் எவ்வாறு தோற்றமளித்தனர் மேலும் என்ன கூறினர்). அல்லது தெரிவு வினாக்களை பலவந்தப்படுத்தல் (சீருடை பச்சையா அல்லது நீலமா). இவை நேர்காணப்படு பவருக்கு புரிந்துகொள்வதற்கு சிரமமானதாக இருப்பதுடன் பதிலுக்கும் இட்டுச்செல்லலாம்)

» எந்தவொரு உண்மையினையும் ஊகித்தல் - குறிப்பிட்ட சம்பவத்தின் அமைவிடத்தினை கடைசி 50 பாதிக்கப்பட்டவர் /சாட்சிகள் அடையாளம் கண்டிருந்தாலும் கூட 51 வது பாதிக்கப்பட்டவர்/சாட்சி அதே இடத்தினைத்தான் குறிப்பிடுவார் என ஊகிக்க வேண்டாம். இதே வினாவினை ஒவ்வொரு பாதிக்கப்பட்டவர் / சாட்சி யிடமும் கேட்கவும்.

» வாக்கியங்களை முடித்து வைத்தல்

» விபரங்களை ஞாபகப்படுத்துமாறும் பகிருமாறும் நேர்காணப்படுபவரை பலவந்தப்படுத்துதல்

» துறைச்சொற்களை பயன்படுத்துதல்

» உங்களுடைய அபிப்பிராயத்தை வழங்குதல் அல்லது ஒன்றின் நியாயத்தினை நீங்கள் தீர்மானித்தல் (உண்மையிலேயே அதுவல்ல நடந்தது, அப்படித்தானே அல்லது நீங்கள் தப்புவதற்கு முயற்சித்து இருக்க வேண்டும்.)

» பாதிக்கப்பட்டவரைக் குற்றம் கூறுவதை உணர்த்துகின்ற வினாக்களை கேட்டல் மற்றும் தீர்மானத்தினை ஊகிக்கின்ற அல்லது சாட்சியினை ஊகிக்க வைக்கின்ற 'ஏன்' வினாக்களை (ஏன் அந்த நபர் அதை உங்களுக்கு செய்தார்? நீங்கள் ஏன் அவரை பின்தொடர்ந்து அறைக்குள் சென்றீரகள்)

17. பாதிக்கப்பட்டவர் / சாட்சியினை வலுவூட்டும் வகையில் நேர்காணல் முழுவதினூடும் கௌரவமான முறையிலும், தொழில் ரீதியாகவும், நடந்து கொள்ளவும்.

» தகவலை விட எப்பொழுதுமே பாதிக்கப்பட்டவர் / சாட்சிக்கு முன்னுரிமை வழங்கவும்.

» ஒரே கண் மட்டத்தில் அமர்ந்திருக்கவும். அல்லது பாதிக்கப்பட்டவர் / சாட்சியை விட தாழ்வான மட்டத்தில் அமர்ந்திருக்கவும்.

» இணங்குவதற்கு, இணங்காமல் இருப்பதற்கு, பதிலளிப் பதற்கு அல்லது பதிலளிக்காமல் இருப்பதற்கு வினாக்களைத் தொடுத்துத் தகவலினை இயலுமான அளவு தேவையானபோது மீண்டும் மீண்டும் திரும்பக்கூறுவதற்கு, ஓய்வெடுப்பதற்கு அல்லது தமக்கு அசௌகரியம் எனில் இடர் இருப்பதாக நினைக்கும் போது நேர்காணலை எந்த சந்தர்ப்பத்திலும் நிறுத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரத்தினை தொடர்ச்சியாக வழங்குவதன் மூலம் செயன்முறை மூலம் அவர்களுக்கு கட்டுப்பாட்டு உணர்வினை வழங்குதல்

» அறிந்து வழங்கப்படும் இணக்கம் என்பது ஒரு செயன்முறை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும். அவர் நேர்காணலின் முன்னரும், நேர்காணலின் போதும், நேர் காணலின் பின்னரும் மேற்கொள்கின்ற தெரிவுகள் பூரண தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு தகவலினை தொடர்ச்சியாக வழங்கவும். அறிந்து வழங்கப்படும் இணக்கத்தினை தேவைப்படுத்துகின்ற ஒரு விடயத்தினை நீங்கள் முதல் தடவை சமர்ப்பிக்கும் போது அல்லது அவர் அதனைப் புரிந்துகொண்டாரா இல்லையா என்பது பற்றி நிச்சயமற்றபொழுது அவருடைய வார்த்தைகளிலேயே இந்த தகவல்களில் சிலவற்றினை உங்களுக்கு விளக்குமாறு கோரவும்.

» ஆதரவினையும் பாராட்டுதலையும், கௌரவத்தினையும் காட்டவும். பரிதாபத்தினையோ, அருவருப்பினையோ, வெறுப்பினையோ காட்ட வேண்டாம்.

» எப்பொழுதும் நிதானமாகவும், கவனத்தினைச் செலுத்துபவராக வும், கலாசார மற்றும் சமூக விழுமியங்களைப் பற்றி அறிந்த வராகவும் இருங்கள் (சமூக அந்தஸ்து மற்றும் வகிபாத்திரம் தொடர்பான நடத்தைப் பாங்குகள் பற்றிய எதிர்பார்ப்புகள்)

» உடல் மொழி மற்றும் முகபாவங்கள் பற்றி அறிந்திருக்கவும். மேலும் தீர்மானம் ஒன்றுக்கு வருபவர் போல் தென்படாமல் இருப்பதையிட்டுக் கவனம் செலுத்தவும். அதேபோல் ஆச்சரியப்பட்டவராகவோ, அதிர்ச்சிக்குள்ளானவராகவோ, அங்கீகரிக்காதவராகவோ அல்லது நம்பாதவராகவோ எந்த சந்தர்ப்பத்திலும் நடக்க வேண்டாம்.

» நேரம் தொடர்பாக நெகிழ்வுத்தன்மையுடன் நடந்து கொண்டு பாதிக்கப்பட்டவர் / சாட்சி உங்களுடைய வினாக்களுக்கு எவ்வாறு பதிலளிக்கின்றார் என்பது தொடர்பாகப் பொறுமையாக இருக்கவும். (நேர்காண்பவருக்கு போதிய நேரத்தினை வழங்குவதை ஞாபகத்தில் வைத்திருக்கவும்)

18. பாதிக்கப்பட்டவர் / சாட்சிக்கு அவரது அச்சங்கள் மற்றும் கரிசனைகள் தொடர்பாக மீள உத்தரவாதத்தினை வழங்கவும் ஆனால் நீங்கள் அவர்களது எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய வேண்டுமென்பதுடன் எவ்விதமான வாக்குறுதிகளையும் அவர்களுக்கு வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளவும். வாக்குறுதிகள் என்பவை உறுதியாக வழங்கப்படவேண்டு மேயன்றி தெளிவுபடுத்தல் இல்லாமல் ஒரு ஆலோசனையாக வழங்கப்படக்கூடாது என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும். வாக்குறுதி வழங்க வேண்டாம் (சொற்களினாலோ அல்லது மௌனத்தினாலோ)

» அனாமதேயம் அல்லது அந்தரங்கத்தன்மை, வழக்கானது நிலுவையில் இருக்கும் போது எவ்வகையான பாதுகாப்பு நடவடிக்கைகளை வழங்க வேண்டுமெனத் தீர்மானிப்பது பொதுவாக நீதிமன்றத்தினது அல்லது எனைய வகைப்பொறுப்புப் பொறிமுறையினது பொறுப்பு என்பதை அவதானிக்கவும் (பார்க்க அத்தியாயம் 7 : தீங்கிழைக்க வேண்டாம்/ இரகசியத்தன்மை, பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பானது/ சாட்சிகள் பார்க்க அத்தியாயம் 16 : சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை, நெறிசார் பரிசீலனைகள்)

» பணம் அல்லது வேறு எவ்வகையிலான சேவைகளை வழங்குதல்

- அவர்களுக்கு அல்லது அவர்களின் குடும்பத்திற்கான பாதுகாப்பு
- நீதி, உண்மை, திடசங்கற்பங்கள்
- அவர்களை மீண்டும் சந்திப்பது அல்லது அவர்களிடத்து விஜயம் செய்வது. நீங்கள் பின்தொடரல் கூட்ட மொன்றிற்கு இணங்கலாம். ஆனால் அது உத்தரவாதப்படுத்தப்படவில்லை என்பதையிட்டு

19. பாதிக்கப்பட்டவர் மற்றும் ஏனைய சாட்சிகளிடமிருந்தும் உங்களிடமிருந்தும் அங்கே உள்ள அணியின் ஏனைய உறுப்பினர்களிடமிருந்தும் பரந்த வீச்சிலான உணர்வுகளின் எதிர்வினைகளுக்கான சாத்தியத்திற்கு முகங்கொடுப்பதற்கு தயாராக இருங்கள். நடத்தைக்கென ஒரு குறிப்பிட்ட வழி இல்லை. பாதிக்கப்பட்டவர்/சாட்சி ஒரு குறிப்பிட்ட விதத்தில் தான் நடந்துகொள்வார் என யூகிக்க வேண்டாம். பாதிக்கப்பட்டவரோ/சாட்சியோ

- இடருக்குள்ளாகலாம், குழப்பமடையலாம், பின்வாங்கலாம் அல்லது தம்மை வெளிப்படுத்துவதற்கு க்'டப்படலாம்.
- கோபமடையலாம், தம்மை பாதுகாக்கும் உணர்வினை அடையலாம், துண்டித்துக்கொள்ளலாம், குழப்பமடையலாம், கவனம் திரும்பலாம், சில வினாக்களுக்கு பதிலளிப்பதற்கு அல்லது பொருத்தமற்ற விடயங்களைப் பற்றி நீண்டநேரம் பேசுவதற்கு மறுக்கலாம்.
- அமைதியாக இருக்கலாம், தெளிவாக இருக்கலாம், நிதான மாக இருக்கலாம் மேலும் சம்பவம் தொடர்பான சகல சூழ்நிலைகளையும் துல்லியமாக ஞாபகப்படுத்துவதற்கு இயலுமாக இருக்கலாம்.
- சிறிய விடயங்களையும் ஞாபகப்படுத்துவதில் சிரமத்தினை எதிர்கொள்ளலாம். மேலும் சம்பவங்களின் தொடரானது மாற்றம் அடையலாம். இது மன அதிர்ச்சி வடிவின் ஒரு பின்விளைவாகும் இது அவரின் நம்பகத்தன்மையினை பாதிக்காது. ஒவ்வொரு தனி நபரும் மன அதிர்ச்சி வடிவினால் வித்தியாசமாக பாதிக்கப்படுகின்றனர். எனவே யூகங்களை மேற்கொள்ள வேண்டாம். (பார்க்க அத்தியாயம் 15 மன அதிர்ச்சி வடு

20. பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள்/ சாட்சிகள் பற்றிய மாறாக் கருத்து நிலைகள் மற்றும் யூகங்களை அடையாளம் காண்பதற்கும் அவற்றினை தவிர்ப்பதற்கும் அவதானமாக இருக்கவும். ஏனெனில் அவர்கள் தனிநபர்களாவர் அத்துடன் ஒரே விதமான உணர்வுகளையோ எதிர்வினைகளையோ கொண்டிருக்க மாட்டார்கள் பின்வருவனவற்றினை ஊகிக்கவோ அல்லது எதிர்பார்க்கவோ வேண்டாம்.

- அவர்கள் வெட்கப்படுவார்கள் அல்லது அசுத்தம் எனும் உணர்வினை அடைவார்கள்
- அவர்கள் மிக மோசமாக மன அழுத்த வடுவிற்கு உட்படுத்தப்படுவர்.
- பாலியல் வன்முறை பற்றிப் பேசுவதற்கு அவர்கள்
- விரும்ப மாட்டார்கள்.
- அவர்கள் பலவீனமானவர்களாக இருப்பார்கள்
- அவர்களுக்கு உடற்காயங்கள் இருக்கும்
- அவர்களின் மன அதிர்ச்சி வடுவானது அவர்களின் மதிப்புறு நிலையின் மீது பாதகமான தாக்கங்களைக் கொண்டிருக்கும்
- அவர்களின் அனுபவங்களில் மிகவும் கடினமான பகுதி அல்லது மிகவும் மோசமான பகுதி பாலியல் வன்முறையாகும்.
- பெண் பாதிக்கப்பட்டவர்கள்/சாட்சிகள் பெண் விசாரணையாளர் களுடன் மாத்திரமே பேசுவதற்கு விரும்புவார்கள் அத்துடன் ஆண் பாதிக்கப்பட்டவர்கள்/ சாட்சிகள் ஆண் விசாரணையாளர் களுடன் மாத்திரமே பேசுவதற்கு விரும்புவார்கள். எவ்வா றாயினும் தெரிவு ஒன்று இருக்கும் போது பாதிக்கப்பட்டவர் /சாட்சியின் தெரிவு என்ன என்பதை எப்பொழுதும் கேட்கப்படல் வேண்டும்.

21. நேர்காணலின் இறுதிக்கட்டத்திற்கு நகர்வதற்கு முன்னர் பாதிக்கப்பட்டவர்/சாட்சி எவற்றினையாவது உறுதிப்படுத்து வதற்கு, மாற்றுவதற்கு, தெளிவுப்படுத்துவதற்கு, மறுப்பதற்கு அல்லது சேர்ப்பதற்கு இறுதிச் சந்தர்ப்பத்தினை வழங்கவும்.

**பெட்டி 9**

## ஒத்திசையாமைகளைக் கையாளுதல்

மோதல் இன்றி ஒத்திசையாமையினைத் தீர்ப்பதற்காக பரிந்- துரைக்கப்படும் உத்திகள்

- ஒத்திசையாமைகளைப் புறக்கணிக்க வேண்டாம்.
- சாட்சி வாக்குமூலத்தினைக் குறிப்பிடுகையில் ஒத்திசையாமையினைக் குறித்து கொள்ளவும்.
- சாட்சி உண்மையிலேயே எவற்றைக் கூறியுள்ளார் மற்றும் ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் அவற்றை கையாளுவதற்கான செயன்முறை பற்றி பரிசீலிப்பதற்கு ஒரு இடைவேளையினைப் பற்றி சிந்திக்கவும்.
- இருக்கின்ற ஒத்திசையாமைகளின் வகைகளை பற்றி பரிசீலிக்கவும். ஒத்திசையாமைகள் பற்றி உங்களுக்கு என்ன தெரிந்து கொள்ளவேண்டுமென்பதைப் பரிசீலிக்கவும். அவை ஏன் நிகழ்கின்றன?
- பாதிக்கப்பட்டவர்/சாட்சியுடன் ஒத்திசையாமை தொடர்பாக நேரடியாக முரண்பட வேண்டாம்.
- அவர்கள் பொய் கூறுகிறார்கள் எனச் சுட்ட வேண்டாம்.
  - ஒத்திசையாமை தொடர்பான எந்தவொரு விடயத்தினையும் உள்ளார்ந்ததாகவும் தொழில் ரீதியானதாகவும் கையாளவும்.
  - ஏன் ஒத்திசையாமைகள் நிகழ்கின்றன என்பதை மதிப்பிடுவதற்கு உங்களுக்கு தேவையான தகவல்களை பெற வெளிப்படையான் வினாக்களை தொடுக்கவும்.
  - சாட்சிகளுடனான ஒரு நல்ல உறவு ஒத்திசையாமைகளை சிறந்த முறையில் கையாள உங்களை அனுமதிக்கும்.
  - ஒத்திசையாமைகளை ஏற்படுத்தக்கூடிய மனஅதிர்ச்சிவடு, அச்சம் அல்லது அழுத்தக்காரணிகள் ஆகியவற்றினை குறைக்கக்கூடிய ஏதாவது நடவடிக்கைகள் இருப்பின் அவற்றினை பரிசீலிக்கவும்.
  - நீங்கள் நினைப்பது தான் நிகழ்வுகளின் சரியான முறை என்பதை சாட்சிக்கு கூறுவதற்கான உங்களின் ஆவலினை கட்டுப்படுத்தவும்.

» பிரச்சினையானது மிகவும் சிறியதாக இருப்பின் நேர்காணலினை நேரகாலத்தோடு முடிப்பதற்கு அல்லது சுருக்கிக்கொள்வதற்கு உள்ள வாய்ப்பினை பரிசீலிக்கவும்.
» முடிவிலே நேர்காணலின் பதிவானது முக்கியமான ஒத்திசையாத்தன்மைகள் பற்றிய குறிப்பினை உள்ளடக்க வேண்டும் அத்துடன் உங்களுக்கு ஏதாவது மனப்பதிவுகள் இருப்பின் அவற்றினையும் உள்ளடக்க வேண்டும்.

ஓத்திசையாமை தொடர்பான மிகவும் விபரமான வழிகாட்டலுக்கு அத்தியாயம் 14னை பார்க்கவும். சான்றினையும் தகவல்களையும் பகுப்பாய்வு செய்தல்/ஒத்திசையாமைகளை விளக்குதல்.

## 4. முடித்து வைத்தல்

உண்மையான நேர்காணலின் கடைசிக் கட்டமே முடித்து வைத்தல் ஆகும். நேர்காணல்கள் சடுதியாக முடிக்கப்படக் கூடாது. மேலும் அவற்றினை உரிய முறையில் முடித்து வைத்து அடுத்த செயன்முறையின் கட்டங்கள் பற்றி பாதிக்கப்பட்ட வர்களுக்கும் சாட்சிகளுக்கும் விளக்குவதற்கு போதிய நேரத்தினை ஒதுக்குவது முக்கியமானதாகும்.

நேர்காணலினை முடித்து வைப்பதற்கு முன்னர் நடைமுறைப் படுத்துனர்கள் அவர்களின் எழுதப்பட்ட நேர்காணல் திட்டத்திற்கு அமைவாகவும் நேர்காணலின் போது பெற்றுக்கொண்ட தகவல் களுக்கு அமைவாகவும் பின்வரும் வினாக்களை பரிசீலிக்க வேண்டும்.

» நான் கேட்க விரும்பிய அனைத்து கேள்விகளையும் கேட்டுள்ளேனா?
» பாதிக்கப்பட்டவர்/சாட்சி அவர்களினால் இயலுமான சகல தகவல்களினையும் வழங்கியுள்ளனரா மேலும் வழங்கு வதற்கு ஆவலாக உள்ளனரா?
» நேர்காணலின் சகல நோக்கங்களையும் நான் பூர்த்தி செய்து உள்ளேனா?

### முடித்து வைத்தல் கட்டத்தின் போது என்ன செய்ய வேண்டும் மற்றும் என்ன கூற வேண்டுமென்பது பற்றிய குறிப்பு

1. பாதிக்கப்பட்டவர்/சாட்சியிடம் அவர்கள் சேர்க்க வேண்டிய ஏதாவது விடயங்கள் உள்ளனவா என்றும் அல்லது கலந்துரையாடப்படாத நிகழ்வுகளின் ஏதாவது அம்சங்கள் உள்ளனவா என்றும் கேட்கவும்.
2. பாதிக்கப்பட்டவர்/சாட்சியிடம் அவர்களுக்கு ஏதாவது வினாக்கள் அல்லது கரிசனைகள் உள்ளனவா எனக் கேட்கவும். அவர்கள் தமது தனிப்பட்ட பாதுகாப்பு தொடர்பாக அல்லது ஏனைய சில சந்தேகங்கள் தொடர்பாக அச்சப்படலாம். மேலும் கரிசனை கொண்டிருக்கலாம். அவர்கள் கேள்விகளைக் கேட்டால் உண்மையான பதில்களை வழங்கவும். உங்களுக்கு பதில் தெரியா விட்டால் தெரியாதென கூறவும்.
3. பாதிக்கப்பட்டவர்/சாட்சியுடன் அவர்களின் தேவைகள் பற்றி கலந்துரையாடி அவர்களுக்கு கிடைக்கக்கூடியதாக விருக்கின்ற உசாவல் தெரிவுகள் பற்றி விளக்கவும். உசாவல் சேவை வழங்குனர்கள் பாதிக்கப்பட்டவர்/சாட்சி நேர்காணலில் பங்குபற்றியதில் தங்கியிருக்கவில்லை என்பதையும் அவர்களின் விபரங்கள் அவர்களின் அறிந்து வழங்கும் இணக்கத்தின் பின்னர் மாத்திரமே சேவை வழங்குனர்களுடன் பகிரப்படுமென்பதையும் வலியுறுத்தி கூறவும்(பார்க்க அத்தியாயம் 07 தீங்கிழைக்க வேண்டாம்/அறிந்து வழங்கும் இணக்கம்: சிறுவர் பாதிக்கப்பட்டவர்/சாட்சிக்காக, பார்க்க அத்தியாயம் 16 சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை ஆவணப் படுத்தல் செயன்முறையில் சிறுவர்களை ஈடுபடுத்துவது பற்றிய பிரதான வழிகாட்டி). பாதிக்கப்பட்டவர்/சாட்சி ஆற்றுப்படுத்தப்படுவதற்கு இணக்கம் வழங்காவிட்டால் அவருக்கு சேவை வழங்குனரின் தொடர்புத் தகவல்களை வழங்கி அவர் பின்னர் அவரது மனத்தினை மாற்றினால் அவர்களை தொடர்பு கொள்ளுமாறு கூறவும்.
4. தொடர்புகொள்வதற்கு பாதிக்கப்பட்டவர்/சாட்சி விரும்பு கின்ற மிகவும் விருப்புக்குரிய முறையினைப்பற்றி கேட்கவும். அவர்களை நேர்கண்டு பல மாதங்களின் பின்னோ அல்லது பல வருடங்களின் பின்னோ எவ்வாறு அவர்களைத் தொடர்பு கொள்வது மேலும் கண்டுபிடிப்பது என்பதைப் பரிசீலிக்கவும். உதாரணமாக நேர்காணப்பட்ட வரின் இணக்கத்துடன் குடும்ப உறுப்பினர்களின் சமுதாயத்திலே உள்ள நெருங்கிய நண்பர்களின் குழுவின் அல்லது குழுக்களின் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவும். இவர்களில் எவராவது நேர்காணப்பட்டவரை கண்டுபிடிப்பதற்கு நடைமுறைப்படுத்துனர்களுக்கு உதவக்கூடிய நிலையில் இருக்கலாம். பாதிக்கப்பட்டவர் /சாட்சி உங்களை தொடர்பு கொள்வதற்கு இயலுமாக இருப்பதற்கு போதிய தகவல்களை வழங்குங்கள்.
5. பாதிக்கப்பட்டவர்/சாட்சிகளிடம் அவர்களின் கரிசனைகள் மற்றும் அவர்கள் வழங்கிய தகவல்கள் பற்றி மீண்டும் கூறி அவர்கள் எழுப்பிய ஏதாவது நடைமுறை சார்ந்த பிரச்சினைகள் இருப்பின் அவற்றினைத் தீர்க்கவும். (பாதுகாப்பு கரிசனைகள், சேவை வழங்குனர்களுக்கான உசாவல்கள், எதிர்காலத் தொடர்பு ஏற்பாடுகள்)
6. வாக்குமூலத்தினை, கூற்றுக்களை அல்லது பாதிக்கப் பட்டவர்/சாட்சிக்கான குறிப்புக்களை மீண்டும் வாசிக்கவும்.

இதனை மிகக்கவனமாக வாசிக்கவும் ஏனெனில் அவர்களுடைய அனுபவங்களைத் தட்டையான மொழியில் உணர்வுகளின்றி வெளிப்படுத்துவது அவர்களுக்கு மிகுந்த இடரினை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். பாலியல் வன்முறைகளை நீதித்துறை நோக்கங்களுக்காக ஆவணப்படுத்துவதற்கான உத்தியோகப்பூர்வ ஆணையினை கொண்டுள்ள நடைமுறைப்படுத்துனர்களுக்கு பொருத்த மெனின் அவர்களுடைய ஒப்பத்தினைப் பெறுவதே சிறந்ததாகும். உத்தியோகப்பூர்வ ஆணையின்றி பாலியல் வன்முறையினை ஆவணப்படுத்தும் நடைமுறைப்படுத்து னர்கள் நிகழ்வுகளின் அதிகாரப்பூர்வமான பதிவினை உருவாக்குவதை தவிர்ப்பதற்காக பாதிக்கப்பட்டவர்/ சாட்சிகளின் ஒப்பத்தினைப் பெறுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில் இது நீதிமன்றத்திலே பின்னைய கட்டத்திலே பாதிக்கப்பட்டவர்/ சாட்சிக்கெதிராக பயன்படுத்தப்பட முடியும். (பார்க்க பகுதி உ நேர்காணல் தகவல்களை பதிதல்)

7. புதிய தகவல்களுக்காகத் தயாராக இருக்கவும். மேலும் தேவையெனின் நடந்தவற்றைப் பற்றி கூறுகின்ற கட்டத்திற்கு திரும்பச் செல்லவும். நெகிழ்வுத் தன்மையுடன் தொடர்ந்து இருப்பது முக்கியமானதாகும். மேலும் இந்த கட்டத்தில் இதுவரையில் கலந்துரையாடப்படாத திருத்தமான தகவல்களை பாதிக்கப்பட்டவர்/சாட்சி கூறக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.
8. பாதிக்கப்பட்டவர்/சாட்சிக்கு அவர்கள் எதிர்காலத்திலே மேலதிக தகவல்களை ஞாபகப்படுத்தினால் என்ன செய்ய வேண்டுமென்பதை விளக்குக. உதாரணமாக அவர்கள் ஏதாவது விடயங்களை ஞாபகப்படுத்தினால் உங்களை தொடர்பு கொள்ள முன்னர் அவர்கள் அதனை ஒரு குறிப்பாக எழுதிக்கொள்ளலாம்.
9. பாதிக்கப்பட்டவர்/சாட்சியிடம் நிகழ்வு தொடர்பாக நேர் காண்பவர் பேச வேண்டிய யாராவது இருக்கின்றார்களா எனக் கேட்கவும்.
10. நேர்காணலினை நடுநிலையான தலைப்புகளில் முடிவுறுத்தி பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் உணர்வு ரீதியிலான நிலையினை மதிப்பிடவும். அவர் நேர்காணலின் காரணமாக மன இடர் நிறைந்தவராகக் காணப்பட்டால் அவரை ஒரு சாதகமான மனநிலைக்கு மீண்டும் கொண்டு வருவதற்கு முயற்சிக்கவும். அவர் அடுத்ததாக என்ன செய்கிறார் என்பதைக் கண்டறியவும். அவர் எங்கே போகின்றார் மேலும் எவ்விதமான உதவி அவருக்கு உடனடியாக நேர்காணலை அடுத்து கிடைக்கும் என்பதை கேட்கவும். அவர்களது அனுபவங்களை ஞாபகப்படுத்தி விபரிப்பதானது ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மனஅதிர்ச்சி வடு தருகின்ற ஞாபகங்களை நிலவச் செய்யும் என்பதை அவர்களுக்கு விளக்கி சில குறிப்பிட்ட நேரம் அவர்களுக்கு தூங்குவது கூட கடினமாக இருக்கும் என்பதையும் விளக்கவும். அவர் வெளித்தோற்றத்திலே குழப்பமடைந்தவராக நேர்காணலில் முடிவுக்கட்டத்தின் போது காணப்பட்டால் தொழில் ரீதியான உளவியல் ஆதரவினை அல்லது உளவியல் உதவியினை தேடவும்.
11. பாதிக்கப்பட்டவர்/சாட்சி அடுத்ததாக என்ன நடக்கும் என்பதை விளக்கி உறுதிப்படுத்தி அவரது எதிர்பார்ப்பு களை காலச்சட்டகம், சாத்தியமான மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் முகாமைத்துவம் செய்வதை உறுதிப் படுத்தவும். நேர்காணல் முடிவடைந்ததன் பின்னர் பாதிக்கப் பட்டவர்/ சாட்சியினைப் பின்தொடர்வதைப் பரிசீலிக்கவும். சாத்தியமாக இருந்து நடைமுறைக்கு உகந்ததாக இருந்தால் அதனை செயற்திறனுடன் மேற்கொண்டு அதனை கிரமமான இடைவெளியில் மேற்கொள்ளவும். எவ்விதமான மேலதிக தொடர்புகளும் இன்றி தகவல்களை ஒரு தடவையில் கையகப்படுத்துவதில் நின்றுவிடுவது தான் பாதிக்கப்பட்டது போன்ற உணர்வினை பாதிக்கப்பட்டவர்/சாட்சியில் ஏற்படுத்தும்(பார்க்க அத்தியாயம் 7 : தீங்கிழைக்க வேண்டாம்). சம்பவத்திற்கு ஏற்ப நீங்கள் அவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காக தொடர்பு கொள்வீர்கள் என்பதைக் கூறவும். மேலும் ஏதாவது சாத்தியமான மாற்றங்கள் இருப்பின் பொருத்தமாக இருப்பின் அதனை அவர்களுக்கு அறிவித்து அவர்கள் எதையாவது வேறு விடயங்களை ஞாபகப்படுத்தி உள்ளார்களா என்பதையும் பரிசீலிக்கவும்
12. நேர்காணலுக்கு அவர்கள் அறிந்து வழங்குகின்ற இணக்கத்தினை அவர்கள் வழங்குகின்றார்களா என்பதை மீண்டும் கேட்டு மேலும் தகவலினைப் பயன்படுத்துவதற்கும் அல்லது வெளிக்கூறுவதற்கும் அவர்கள் அறிந்து வழங்குகின்ற இணக்கத்தினை வழங்குகின்றார்களா எனக் கேட்கவும். அவர்களது மனதினை மாற்றி அவர்கள் விரும்பினால் இணக்கத்தினை மீளப்பெறுவதற்கு அனுமதிக்கவும் (பார்க்க அத்தியாயம் 7 : தீங்கிழைக்க வேண்டாம் / அறிந்து வழக்கும் இணக்கம்).
13. பாதிக்கப்பட்டவர் / சாட்சி நேர்காணலில் பங்குபற்றியமைக் காக அவருக்கு நன்றி தெரிவித்து அவர் உங்களோடு பேசியதற்காகவும் நன்றி தெரிவிக்கவும். பிரிந்து செல்லும் போது கலாசார ரீதியான பொருத்தமான சைகைகளை பயன்படுத்துவதை உறுதிப்படுத்தவும் (கைகளைக் குலுக்குதல்)

## 5. மதிப்பீடு

PEACE செயன்முறையின் கடைசிக்கட்டம் மதிப்பீடாகும். இது நேர்காணல் செயன்முறையின் இன்றியமையாத அங்கத்தினை உள்ளடக்குகின்றது. இது ஏனைய கட்டங்களைப் போன்று முக்கியம் வாய்ந்ததாகும். நேர்காணலொன்று ஏன் மற்றும் எதற்காக மேற்கொள்ளப்படுகின்றது என்பதை நீங்கள் அறிந்து அதன்பின்னர் நீங்கள் அதன் தாக்கத்தினையும் (திட்டமிடல் மற்றும் தயாரிப்பு) முக்கியத்துவத்தினையும் மதிப்பீடு செய்தால் மாத்திரமே நேர்காணல் செயற்திறன் மிக்கதாகின்றது. (மதிப்பீடு)

## எந்தவித மேலதிக தொடர்புகளுமின்றி தகவல்களை ஒரு தரத்தில் முடிக்கும் செயன்முறையாகக் கையகப்படுத்துவது பாதிக்கப்பட்டவர்/ சாட்சி தாம் பயன்படுத்தப்பட்டது போன்ற உணர்வினை ஏற்படுத்தும்

**பெட்டி 10**

### சகபாடி அனுபவம் — உரிய நேரத்திலான மற்றும் உரிய மதிப்பீடுகளின் முக்கியத்துவம்

Adrian, சர்வதேச விசாரணையாளர்

*உரிய காலத்தில் பூரணமாக மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீடுகளின் முக்கியத்துவத்தினைப் பற்றி என்னால் போதியளவிற்கு வலியுறுத்த முடியாது. கடந்த வருடங்களில் நான் மனித உரிமைகள் ஆவணப்படுத்துனர்கள், குற்றவியல் விசாரணை யாளர்கள் இதனைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ள பல சம்பங்களைக் கேள்விப்பட்டுள்ளேன். மதிப்பீடுகள் பணிநோக்கின் கால இக்கட்டுக்களை பூர்த்தி செய்வதற்காக சம்பவ இடத்திலேயே நிகழ்த்தப்படக் கூடாது. நேர்காணல் செயன்முறையானது தொடரும். சில சந்தர்ப்பங்களில் சில வாரங்களுக்குத் தொடரும். மேலும் சகல மதிப்பீடுகளும் முடிவிலே ஒரே நேரத்திலே மேற்கொள்ளப்படும். அதன் பின்னர் தகவல் சேகரிப்பு செயன்முறையானது தடம் புரண்டுள்ளது என்பதை மக்கள் உணர ஆரம்பிப்பர். பல நேர்காணல்கள் தேவையற்ற விதத்திலே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கு காரணம் அவை குற்றச்செயல்களின் சில குறிப்பிட்ட கூறுகள் பற்றி ஏற்கனவே போதிய தகவல்களைக் கொண்டிருக்கின்றதனால் ஆகும். மேலும் அவை சான்றுரீதியாகப் பல இடைவெளிகளை விட்டுச்சென்றுள்ளதுடன் ஆவணப்படுத்தல் செயன்முறையில் அதிக மீள்கவனத்தினைச் செலுத்தவில்லை. இது ஆவணப்படுத்தல் செயன்முறையினில் மாத்திரம் சேதத்தினை ஏற்படுத்தாது தீங்கிழைக்க வேண்டாம் என்ற கோட்பாட்டையும் மீறுகின்றது.*

### மதிப்பீட்டுக் கட்டத்தில் என்ன செய்ய வேண்டுமென்பது பற்றிய தொகுப்பு

1. ஒவ்வொரு நேர்காணலின் பின்னரும் அல்லது அதே தினத்தில் ஆரம்பச் சாட்சி மதிப்பீடு உள்ளடங்கலாக ஒரு பூரண மீள்விளக்கத்தினை நடத்தவும். மேலும் ஆவணப்படுத்தும் அணி உறுப்பினர்களின் சாத்தியமான இரண்டாம் நிலை மனஅதிர்ச்சி வடுவினை பரிசீலிக்கவும். இது குறிப்பாக முக்கியமானதாக இருக்கும். ஏனெனில் மிகவும் மனஅழுத்தத்தினை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் கூறப்பட்டவைகளில் இடம்பெற்றிருந்தால் நடந்தவற்றினை மீள ஆராய்வ தானது குறிப்புக்களை ஒப்பிடுவதில் ஈடுபட்டவர்களில் என்ன கூறப்பட்டது என்பதைப் பார்ப்பதற்கும் அவற்றின் மொழிபெயர்ப்புகளை கலந்துரையாடுவதற்கும் அனுமதிக் கின்றது. மீளநோக்குவது இல்லாத சந்தரப்பத்தில் ஆவணப்படுத்தல் அணியின் உறுப்பினர்கள் பணிச் சூழலுக்கு வெளியே விடயத்தினைப் பற்றிக் கலந்துரை யாடுவதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால் இது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அதிகரித்த பாதுகாப்பு அபாயநேர்வினை கொண்டுள்ளது.

2. பெற்றுக்கொண்ட தகவல்களை மதிப்பிட்டு நேர்காணலின் நோக்கங்களும், குறிக்கோள்களும் அடையப்பட்டுள்ளனவா என்பதைப் பரிசீலிக்கவும். இதற்காக நீங்கள் உங்களிடமே பின்வரும் வினாக்களை தொடுக்க முடியும்
   - » கையகப்படுத்தப்பட்ட குறிப்புக்களின் தரம் என்ன?
   - » உங்களுடைய நேர்காணல் திட்டத்தினையும் ஆரம்ப குறிக்கோளையும் பரிசீலித்து இவை நேர்காணல் செயன்முறையின் போது திருத்தப்பட்டனவா என்பதை பார்க்கவும் ஆம் எனில் ஏன்?
   - » நீங்கள் உங்களது ஆரம்ப குறிக்கோள்களை அடைந்துள்ளீர்களா?
   - » சம்பந்தப்பட்டுள்ள பாலியல் குற்றச்செயலை நிரூபிப் பதற்கு தேவையான சகல கூறுகளையும் விடயங் களையும் பற்றிய தகவல்களை நீங்கள் பெற்றுள் ளீர்களா?
   - » உங்களிடம் இப்பொழுது என்ன மேலதிக தகவல்கள் உள்ளன?
   - » ஏற்கனவே பெற்றுள்ள சான்றுகளுடன் இவை ஒத்திசைகின்றனவா?
   - » தீர்க்கப்படவேண்டிய ஏதாவது மோதல்கள் உள்ளனவா?
   - » நேர்காணலின் விளைவாக நீங்கள் என்ன மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்?

3. நேர்காணலின் போது பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் ஆவணப்படுத்தல் திட்டத்தினை மீளாய்வு செய்யவும் (பார்க்க அத்தியாயம் 9 : திட்டமிடுதலும் CARSV ஆவணப்படுத்தல் திட்டத்தின் கூறுகளும். இதற்காக நீங்கள் உங்களிடம் பின்வரும் வினாக்களை கேட்க முடியும்.
   - » ஒட்டுமொத்தமாக ஆவணப்படுத்தல் திட்டத்தின் மீது புதிய தகவல் ஏற்படுத்திய தாக்கம் என்ன?
   - » மேலதிக சாத்தியமான பாதிக்கப்பட்டவர் / சாட்சி பற்றி தகவல்களைப் பெற்றீர்களா?
   - » நீங்கள் பின்தொடர வேண்டிய ஏதாவது புதிய விசாரணை வசதிகள் உள்ளனவா?
   - » நீங்கள் அடுத்ததாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?

4. ஒரு நேர்காண்பவர் என்கின்ற அடிப்படையில் உங்களது சொந்தச் செயலாற்றுகையினை மதிப்பிடுவதன் மூலமாக உங்களது நேர்காணல் திறன்களை மேம்படுத்துவதற்கு முயற்சிக்கவும். மேலும் தேவையெனில் எதிர்காலத்திற் காக இலக்குகளை நிர்ணயிக்கவும். இதற்காக நீங்கள் உங்களிடம் பின்வரும் வினாக்களைக் கேட்க முடியும், நீங்கள் இன்னுமொரு சகபாடியுடன் சேர்ந்து பணியாற்றினால் நீங்கள் பின்னூட்டல்களை பரிமாற முடியும்.
   - » நீங்கள் எதனைச் சிறப்பாகச் செய்தீர்கள்?
   - » நீங்கள் இன்னும் சிறப்பாக எதனைச் செய்திருக்க முடியும்?
   - » என்னென்ன திறன்களை நீங்கள் மேலும் விருத்தி செய்ய முடியும்?
   - » எவ்வாறு இந்தத் திறன்களை நீங்கள் அடைய முடியும்?

## C. நேர்காணல் தகவல்களைப் பதிதல்

பாதிக்கப்பட்டவர்களையும் ஏனைய சாட்சிகளையும் நேர்காணும்போதும் மேலும் குறிப்புக்களை எடுக்கும்போதும் பின்வருவனவற்றை மிகக் குறைவாக மேற்கொள்வதை உறுதிப்படுத்தவும்.

1. இயலுமான அளவு அதிகமாக தனிப்பட்ட தகவல்களை உள்ளடக்கவும்(பார்க்க பின்னிணைப்பு 8 பாதிக்கப் பட்டவர்கள்/ சாட்சிகளிடமிருந்து சேகரிக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகளுக்கான மாதிரி வடிவம்). இதனை தனிப்பட்ட தரவுகளைக் கூற்றுடன் அல்லது நேர்காணல் குறிப்புடன் இணைப்பதற்காக பாதுகாப்பு நோக்கங்களுக்காக இலக்கமிடல் முறைமையினை பயன்படுத்தவும். பாதிக்கப்பட்டவர்/சாட்சி அவருடைய தனிப்பட்ட தகவல்களைத் தருமாறு கோரப்படுவது அவர்களுக்கு நெருடலை ஏற்படுத்தலாம் என்பதைப் பற்றி அறிந்திருக்கவும்.
2. நேர்காண்பவரின் கருத்துக்கள் (இடையூறுகள், உணர்வு ரீதியான எதிர்வினைகள்) மற்றும் சிந்தனைகள் மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றினை நேர்காணல் குறிப்புகளி லிருந்து வேறாக வைத்திருக்கவும்.
3. உத்தியோகபூர்வ ஆணையுடன் செயற்படுகின்ற பங்குபற்றுனர் களுக்காகக் குறிப்புக்களைப் பாதிக்கப்பட்டவர்/சாட்சி கூறுவதைத் தான் கூறுகின்ற கூற்றாகவே பதியவும். உத்தியோகபூர்வ ஆணையின்றி செயற்படுகின்ற நடைமுறைப்படுத்துனர்கள் அவர்களுடைய குறிப்புக்களை பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்ற அதே வடிவத்திலேயே பதியவேண்டிய தேவையில்லை. மேலும் நேர்காணலின் கூற்றுக்களை, பதிவுகளை பாதிக்கப்பட்டவர்/ சாட்சி ஒப்பமிடுமாறு கூறுவதும் அல்லது நேர்காணலின் ஓடியோ அல்லது வீடியோ பதிவுகளை பயன்படுத்துவதும் தேவையில்லை. இவை நிகழ்வுகளின் அதிகாரபூர்வமான பதிவுகளை உருவாக்கலாம். இவை பின்னைய கட்டங்களில் உத்தியோகபூர்வ ஆணையினைக் கொண்ட எடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ கூற்றுக்களுடன் முரண்பட்டு பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் நம்பகத்தன்மைக்கு சவால் விடுப்பதற்கு பயன்படுத்தப்படலாம். (பார்க்க பெட்டி 11 : தகவல்களை கையகப்படுத்தி பதிதல்)
4. பாதிக்கப்பட்டவர் சாட்சியின் தகவல்களைத் தொகுக்க வேண்டாம், வெட்டி நீக்க வேண்டாம் அல்லது அவற்றின் பகுதிகளை நீக்க வேண்டாம்.
5. நேர்காணலை இறுதிப்படுத்தி முடிப்பதற்கு முன்னர் கூற்றுக்களையும் நேர்காணல் குறிப்புக்களையும் பாதிக்கப் பட்டவர்/சாட்சிக்கும் மீண்டும் வாசித்துக் காட்டவும். இது நேரத்தினை எடுக்கக்கூடியது என்கின்ற போதிலும் நீங்கள் சாட்சியிடம் இருந்து சேகரித்த தகவல்கள் இயலுமான அளவு துல்லியமானதாக இருக்கின்றதென்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானதாகும்.
6. இந்த பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் மூலமாக பெற்றுக் கொண்ட வேறு ஏதாவது சான்றுகளை கூற்று/ நேர்காணல் குறிப்பினுள் குறித்துக்கொள்ளவும். மேலும் குறுக்கு உசாவலுக்காக இலக்கமிடல் முறைமையினை பயன் படுத்தவும். (உடல் ரீதியான சான்றுக்கான புகைப்படம்)
7. பாதுகாப்புக் காரணங்களுக்காக கூற்றுக்கள் / நேர்காணல் குறிப்புக்களில் இருந்து பெயர்களையும் தனிப்பட்ட தரவுகளையும் வேறாக பேணவும். (பார்க்க அத்தியாயம் 8 பாதுகாப்பு / தகவலுக்கான அபாயநேர்வினை முகாமைத்துவம் செய்தல்
8. நேர்காணல் குறிப்புக்களைப் பெயரிடுவதற்கு தராதரம் மிக்க முறைமையினை பயன்படுத்தவும்.
9. ஒவ்வொரு பாதிக்கப்பட்டவரையும் / சாட்சியினையும் வெவ்வேறாகப் பதிவு செய்து கோப்பிடவும் (தனிப்பட்ட ஆவணங்கள், கோப்புகள்)
10. பாதிக்கப்பட்டவர் / சாட்சி பற்றிய ஏனைய தகவல்களை வேறாகப் பேணவும். – பாதுகாப்பு கரிசனைகள், வாழ்க்கை நிலை, சுகாதார விடயங்கள் அல்லது பாதிக்கப்பட்டவர் சாட்சிகள் வேறு விடயங்கள்
11. பாதிக்கப்பட்டவர் / சாட்சியினால் வழங்கப்பட்ட வேறு தகவல்களுக்கு இட்டுச்செல்கின்ற விடயங்களை வேறாக பேணவும் / மேலும் இவை பாதுகாப்பாக வெறொரு இடத்தில் பேணப்படல் வேண்டும்

**பெட்டி 11**

**சகபாடி அனுபவம் — தகவல்களைக் கையகப்படுத்தி பதிதல்**

Hannah, விசாரணையாளர்இ சிரியா மற்றும் ஈராக்

*‘சர்வதேச பகுப்பாய்வாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளின் பணிப்புரைகளின் கீழ் பணியாற்றுகின்ற எமது உள்;ர் விசாரணையாளர்களைக் கொண்ட அணியானது 2012இல் சிரியாவிலும் 2015இல் ஈராக்கிலும் இடம்பெற்ற மானுடத்திற்கு எதிரான பாலியல் வன்முறை சம்பவங்களையும் யுத்த குற்றங்களையும் விசாரணை செய்து வருகின்றது. சிரியாவிலும் ஈராக்கிலும் இழைக்கப் பட்ட பிரதான சர்வதேச குற்றச்செயல்களை விசாரிப் பதற்கு இப்பொழுது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சர்வதேச நீதிமன்றங்கள் அல்லது நியாயமன்றங்கள் நிறுவப்படும் என்பது எமக்கு தெரியாத காரணத்தினால் நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய சாட்சிகளுடன் நேர்காணல் பதிவுகளை உருவாக்கி வருகின்றோம். இவற்றினைச் சாட்சிகளின் வாக்குமூலங்களுடன் குழப்பிக்கொள்ளக் கூடாது. குறிப்பாக நேர்காணல்களின் பதிவுகள் மூன்றாம் நபர் கூறுகின்ற கூற்றாகவே வரையப்பட்டுள்ளன. மேலும் இந்தப் பதிவுகளின் முதலாம் நபர் கூறுவதை போன்ற பதிவினை உருவாக்குவதைத் தவிர்ப்பதற்காக சாட்சிகளின் கையொப்பங்கள் பெறப்படவில்லை. ஏனெனில் இவை வழக்கு விசாரணைகளின் போது உத்தியோகபூர்வமான விடயங்களாகக் கருதப்படலாம் என்பதனால் ஆகும். இதே காரணத்திற்காக நாங்கள் நேர்காணலில் ஓடியோ மற்றும் வீடியோ பதிவுகளையும் தவிர்த்துள்ளோம்.*

# அத்தியாயம் 12 உள்ளடக்கங்கள்


அத்தியாயம் 12: மேலதிக தகவல்களைச் சேகரித்தல்....187

**A.** ஆவணங்களைச் செயல்முறைப்படுத்துதல்....**187**

1. அறிமுகம்....187
2. ஆவணங்களை கையாளுதல்....187

*பெட்டி 1*
ஆவணங்களை கையாளுவதிலுள்ள சிறந்த நடைமுறைகள்....187

i. இரகசியத்தன்மையினை மதித்தல்....187
ii. துல்லியமாகப் பதிவு செய்யவும் சாத்தியமெனில் பிரதி செய்யவும்....187
iii. உங்களுக்கு ஆணை வழங்கப்படாவிட்டால் ஆவணங்களைக் கைப்பற்ற வேண்டாம்....187

*பெட்டி 2*
ஆவணங்களை எவ்வாறு கையாள்வது என்பதற்கான நடைமுறை உதாரணங்கள்....188

**B.** மீறல்கள் நடந்த இடங்களை செயன்முறைப்படுத்தல்....**189**

1. அறிமுகம்....189
2. வன்முறைகள் இடம்பெற்ற இடங்களை கையாளுதல்....190

*பெட்டி 3*
வன்முறைகள் இடம்பெற்ற இடங்களை அணுகும் போது பின்பற்றப்படவேண்டிய பிரதான நடவடிக்கைகள்....190

i. இடம் அமைந்துள்ள இடத்தினைப் பதிவு செய்தல்....190
ii. ஒருவரை அந்த இடத்திற்கான முகாமையாளராக நியமித்து அந்த இடத்திற்கு வருகை தருபவர்களைப் பதிவதற்கான பதிவேட்டினை உருவாக்குதல்....190
iii. அந்த இடத்தில் எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளினதும் விரிவான குறிப்புக்களைத் தயாரித்தல்....190
iv. இடத்தினையும் சான்றினையும் புகைப்படம் எடுத்தல்....190
v. சம்பவம் நடைபெற்ற இடத்தினையும் சான்றுகள் உள்ள அமைவிடத்தையும் வரைதல்....191
vi. இடத்தினை எவ்வாறு கண்டீர்களோ அவ்வாறு விட்டுச் செல்லவும்....191

*பெட்டி 4*
பௌதீகச் சான்றுகளை சேகரித்தல்....192

**C.** வன்முறை நடந்த இடத்தினையும் பௌதீகச் சான்றுகளையும் உடற்காயங்களையும் புகைப்படம் எடுத்தல், வீடியோ பதிவு செய்தல், மற்றும் வரைபடமாக வரைதல்....**193**

1. அறிமுகம்....193

*பெட்டி 5*
உதாரணக் கருவி : சாட்சி ச்சான்று கள வழிகாட்டியாக வீடியோ....196

3. வரைபடம் தயாரித்தல்....198

**D.** பாதுகாத்து வைத்திருக்கும் வரிசை....**199**

1. அறிமுகம்....199
2. கோட்பாடுகள்....199

*பெட்டி 6*
பாதுகாத்து வைத்திருக்கும் வரிசையிலுள்ள பிரதான படிகள்....199

i. ஆவணம் அல்லது பொருள் எவ்வாறு சேகரிக்கப்பட்டது....199

*பெட்டி 7*
பாதுகாத்து வைத்திருக்கும் வரிசை பௌதீக சான்றுகளின் தனித்துவமான அம்சங்கள்....200

ii. ஆவணத்தின் அல்லது பொருளின் உடைமையானது தனிநபர்களுக்கிடையில் அல்லது நிறுவனங்களுக்கிடையில் மாற்றப்பட்டுள்ளதா?....201

# அத்தியாயம் 12 : மேலதிக தகவல்களைச் சேகரித்தல்

## A. ஆவணங்களைச் செயல்முறைப்படுத்துதல்

### 1. அறிமுகம்

ஆவணச்சான்றுகள் வாக்குமூலச்சான்றுகளை ஆதாரப்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் பயன்மிக்கவையாக இருக்கும். சில வழக்குகளில் இவை ஆவணப்படுத்தலில் விசாரணைக்கான புதிய பாதைகளையும் திறக்கின்றன. ஆவணப்படுத்தலின் போது நடைமுறைப்படுத்துனர்கள் சில குறிப்பிட்ட ஆவணங்களைக் கண்டறியலாம். உதாரணமாக (a)கைவிடப்பட்ட இராணுவக் கட்டடத்திலே கண்டெடுக்கப்படுகின்ற ஒரு ஆவணம் குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே இராணுவ ரோந்து அணியின் கட்டளை கட்டமைப்பினை விளக்கலாம் அல்லது (b) அவர்கள் அகதி முகாமிலே வைத்தியர் ஒருவரைச் சந்திக்கலாம். அவர் தன்னிடம் பாலியல் வல்லுறவினால் பாதிக்கப்பட்ட ஒருவரின் மருத்துவப் பரிசோதனைச் சான்றினை வைத்திருக்கலாம் அல்லது (c) அவர்கள் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரைச் சந்திக்கலாம். அவர் குற்றத்தை நிகழ்த்தியவரை அடையாளம் காண்பதற்கு ஆவணத்தினை வழங்கலாம். இந்த விடயங்கள் எவையுமே ஆவணச்சான்றுகளாக இருக்க முடியும். இவை குற்றச்செயல் அல்லது CARSV மீறப்பட்டுள்ளதை நிரூபிப்பதற்கு உதவ முடியும்.

பொதுவாக உத்தியோகபூர்வ விசாரணைகளை நடத்துகின்ற நடைமுறைப்படுத்துனர்கள் ஆவணங்களை சேகரிக்கக் கூடாது. மாறாக கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு CARSV இன் ஆவணப்படுத்தலுக்கு உதவுவதற்காக ஆவணங்களில் உள்ளடங்கியுள்ள தகவல்களை உத்தியோகபற்றற்ற நடைமுறைப்படுத்துனர்கள் துல்லியமாகப் பதிவுசெய்து பிரதி செய்யலாம்.

### 2. ஆவணங்களை கையாளுதல்

**பெட்டி 1**

**ஆவணங்களை கையாளுவதிலுள்ள சிறந்த நடைமுறைகள்**

ஆவணச்சான்றுகளை கையாளும் போது நீங்கள் ஆகக்குறைந்தது பின்வருவனவற்றினை மேற்கொள்ள வேண்டும்

i. இரகசியத்தன்மையினை மதித்தல்

ii. துல்லியமாக பதிவு செய்து சாத்தியமெனில் பிரதி செய்தல்

iii. உங்களுக்கு ஆணை வழங்கப்படாவிட்டால் ஆவணங்களை கைப்பற்ற வேண்டாம்.

இந்த பிரதான விடயங்கள் பற்றிய மிகவும் விரிவான வழி-காட்டலுக்கு தயவுசெய்து கீழே பார்க்கவும்.

#### i. இரகசியத்தன்மையினை மதித்தல்

» பாலியல் வன்முறை சம்பவத்துடன் தொடர்புடைய பதிவுகள் அறிக்கைகள் ஆய்வுகள் மற்றும் புள்ளிவிபரங்களை எவ்விதத்திலும் பகிர்வதானது நெறிசார் முறையிலும் பாதுகாப்பாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்டவர் மேலும் சாட்சியின் அந்தரங்க தன்மையினை மதிக்கும் விதத்தில் இவை மேற்கொள்ளப்பட வேண்டும் (பார்க்க அத்தியாயம் 7 : தீங்கிழைக்க வேண்டாம்/இரகசியத்தன்மை)

» தனிப்பட்ட மட்டத்திலான தகவல்களை உள்ளடக்கியுள்ள ஆவணங்கள் பாதிக்கப்பட்டவர்/ சாட்சியின் அறிந்து வழங்கும் இணக்கத்துடன் மாத்திரமே பகிரப்படல் வேண்டும் (பார்க்க அத்தியாயம்7 : தீங்கிழைக்க வேண்டாம் அறிந்து வழங்கும் இணக்கம்)

#### ii. துல்லியமாகப் பதிவு செய்யவும் சாத்தியமெனில் பிரதி செய்யவும்.

» கண்டெடுக்கப்பட்ட அல்லது பெற்றுக்கொண்ட ஆவணங்களின் உள்ளடக்கத்தினை உத்தியோகபற்றற்ற நடைமுறைப்படுத்துனர்கள் துல்லியமாகப் பதிவு செய்யலாம். என்ன சூழ்நிலையின் கீழ் அவை கண்டெடுக்கப்பட்டன அல்லது பெற்றுக்கொள்ளப்பட்டன அவை எந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டன யாரிடமிருந்து அவை பெறப்பட்டன. மேலும் ஆவணம் கண்டெடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட போது வேறு யார் அங்கு சமுகமளித்திருந்தனர் போன்ற விபரங்கள் பதியப்படல் வேண்டும்.

» மூன்றாம் தரப்பு ஒன்றினால் ஆவணச்சான்று வழங்கப் பட்டிருந்தால் மூன்றாம் தரப்பிடம் இருந்து பின்வரும் தகவல்களை உள்ளடக்கிய கூற்றினைப் பெறவும். மூன்றாம் தரப்பு ஆவணத்தை என்ன சூழ்நிலையின் கீழ் பெற்றுக்கொண்டது எப்பொழுது மற்றும் யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது ஆவணமானது அசலானதா அல்லது பிரதியா் முத்திரைகளின் அர்த்தம் இல்லது முக்கியத்துவம் பற்றிய விளக்கம்˙ ஆவணத்திலுள்ள கையொப்பங்கள் மற்றும் பெயர்கள்˙ மேலும் எவ்வாறு மூன்றாம் தரப்பு இந்த தகவல்களை அறிந்து கொண்டது.

» ஆவணமானது பிரதி செய்யப்பட்டிருந்தால் பிரதியானது தெளிவானதாக இருக்கின்றது என்பதையும் ஆவணத்தின் முன்பக்கம் மற்றும் பின்பக்கம் பிரதி செய்யப்படுவதையும் உறுதிப்படுத்தவும். மேலும் எப்பொழுது, எவ்வாறு, யாரினால் என்பது பற்றியும் பதிவு செய்யவும்.

#### iii. உங்களுக்கு ஆணை வழங்கப்படாவிட்டால் ஆவணங்களைக் கைப்பற்ற வேண்டாம்

ஒரு விதியாக உத்தியோகபற்றற்ற விசாரணையாளர்கள் எந்தவொரு நிறுவனத்திடமிருந்தும் அரசாங்கத்திடமிருந்தும் அல்லது இராணுவ அமைப்பிடமிருந்தும் அல்லது தனிநபர்களிடமிருந்தும் ஆவணங்களைக் கைப்பற்றுவதை தவிர்த்தல் வேண்டும். தமது பணிக்குப் பொருத்தமான ஆவணப்படுத்தல்கள் தம்மால் கண்டெடுக்கப்படும்போது அல்லது தமக்கு வழங்கப்படும்போது அவர் என்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதைக் குறித்துரைக்கின்ற செயல்விதிகளை நடைமுறைப்படுத்துநர்கள் அமுல்படுத்த வேண்டும். அழிக்கப்படுகின்ற அபாயநேர்வு இல்லாதபோது தெளிவான அதிகாரமின்றி இவ்வாறான ஆவணப்படுத்தலினை நடைமுறைப்படுத்துனர்கள் ஒருபொழுதும் கைப்பற்றாத போதும் தன்னிச்சையாகக் கையளிக்கப்படுகின்ற ஆவணப்படுத்தலினை அதற்கான செயல்விதிகள் அமுலில் இருக்கும்போதும் ஆவணம்

*...ஆவணப் பொருட்களை எப்போது, எங்கே, யாரிடமிருந்து மேலும் எவ்வாறு பெற்றுக்கொண்டனர் என்பதை நடைமுறைப்படுத்துனர்கள் எடுத்து விளக்க வேண்டும்*

தொடர்பாகத் தாமே நடைமுறைப்படுத்துனர்கள் போதிய தகவல்களைத் திரட்டும்போதும் அவற்றினை ஏற்றுக்கொள்வது சாத்தியமானதாகும்.

» சில பதிவுகளின் உள்ளடக்கம் மற்றும் அவற்றின் அமைவிடம் தொடர்பான துல்லியமான தகவல்கள் கையகப்படுத்தப்படாமல், சான்றுகளைக் கையகப்படுத்துவதற்கான ஆணையுடன் எதிர்கால விசாரணைகளுக்குப் பயன்மிக்கதாக இருக்கும்.

» ஆவணங்களை சேகரிப்பதற்கு நடைமுறைப்படுத்துனர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் (அசலான ஆவணம் அல்லது ஆவணத்தின் பிரதி), பிரிவு B யிலே பாதுகாத்து வைத்திருத்தல் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள கோட்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும்.

**பெட்டி 2**

## ஆவணங்களை எவ்வாறு கையாள்வது என்பதற்கான நடைமுறை உதாரணங்கள்

உதாரணம் (அ) குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் இராணுவ ரோந்து அணியின் கட்டளைக் கட்டமைப்பினைக் குறிப்பிடுகின்ற ஆவணமொன்றினைக் கைவிடப்பட்ட இராணுவக்கட்டடத்தில் இருந்து நடைமுறைப்படுத்துனர்கள் கண்டெடுத்தால் இந்த ஆவணம் அந்தக் கட்டடத்திலேயே விடப்பட்டால் அழிக்கப்பட்டுவிடும் என அவர்கள் நம்புவதற்கு காரணம் உண்டு. இந்த சந்தர்ப்பத்தில் உத்தியோகப்பற்றற்ற நடைமுறைப்படுத்துனர்கள் அந்த ஆவணத்தின் பிரதியினை எடுத்து அதற்கு ஆதாரப்படுத்தல் சான்றினைப் பெறவேண்டும். (ஆவணத்தின் தகவல் மற்றும் அது கண்டெடுக்கப்பட்ட சூழ்நிலை, அதாவது சாட்சியின் வாக்குமூலம் போன்ற சான்றுகளை விபரப்படுத்த வேண்டும்)

உதாரணம் (ஆ) : அகதிமுகாம் ஒன்றிலே நடைமுறைப் படுத்துனர்கள் வைத்தியர் ஒருவரைச் சந்திக்கும் பொழுது அந்த வைத்தியரிடத்திலே பாலியல் வல்லுறவினால் பாதிக்கப்பட்ட ஒருவரின் மருத்துவப்பரிசோதனை சான்று இருப்பதை அறியும்பொழுது அவர்கள் அந்த அசலான ஆவணத்தினைச் சேகரிக்கக்கூடாது. உதாரணமாக அந்த நோயாளி அவரின் தேவைக்காக அசலான ஆவணத்தினைத் தேவைப்படுத்தலாம். ஆவணத்தின் ஆதாரப்படுத்தப்பட்ட பிரதியினை (இணக்கம் பெறப்பட்டால்) பெற்றுக்கொள்வது நடைமுறைப்படுத்துனர்களின் கவனமாக இருக்கவேண்டும். மேலும் வைத்தியருடனும் பாதிக்கப்பட்டவருடனும் மேலும் பொருத்தமான சாட்சிகளுடனும் நேர்காணலை நடத்துவதும் நடைமுறைப்படுத்துனர்களின் கவனமாக இருக்க வேண்டும். (பார்க்க அத்தியாயம் 11. நேர்காணல்)

உதாரணம் (இ) : குற்றத்தை நிகழ்த்திய நபரொருவரினை அடையாளப்படுத்த உதவுகின்ற ஆவணமொன்றினை வழங்குகின்ற அரசாங்க உத்தியோகத்தர்களை நடைமுறைப் படுத்துனர்கள் சந்தித்தால் மேலும் எதிர்கால வழக்கொன்றிலே அது தேவைப்படுத்தப்படும் வரை அதனை பாதுகாத்து, சேகரித்து, களஞ்சியப்படுத்திப் பேண முடியுமென அவர்கள் நினைத்தால் அவர்கள் அந்த மூல ஆவணத்தினைச் சேகரிக்க முடியும்.

*மேலே குறிப்பிடப்பட்டுள்ள பல பரிசீலனைகள் ஆவணங்களை டிஜிடல் வடிவிலே பெறுவதற்கு பிரயோகிக்கத்தக்கதாகும்.*

### ஆவணச்சான்றினை சேகரிப்பதற்கான விசேட கருதுகோள்கள்

» எதிர்கால சர்வதேச குற்றவியல் நடைமுறைகளில் சேகரிக்கப் பட்ட ஆவணப்பொருட்களின் எண்பிக்கும் பெறுமதியினை அதிகரிப்பதற்காக நடைமுறைப்படுத்துனர்களினால் அவர்கள் எங்கே, எப்பொழுது, யாரிடமிருந்து, எவ்வாறு ஆவணப் பொருளினைச் சேகரித்தனர் என்பதை எடுத்து விளக்கக் கூடியதாக இருக்கவேண்டும். இந்தத் தகவலானது பாதுகாத்து வைத்திருக்கும் வரிசைப் பதிவேட்டின் முதலாவது பதிவாக இருக்க வேண்டும். ஆவணத்தின் உண்மைத்தன்மையைக் காட்டுவதற்கும் எதிர்காலத்தில் அவற்றின் உண்மைத்தன்மைப் பரீட்சிப்பிற்கு உதவுவதற்கும் ஒவ்வொரு ஆவணச் சான்றிற்காகவும் இந்தத் தகவலினைப் பதியவும் (அல்லது பெரும் எண்ணிக்கையிலான ஆவணச்சான்றுகளை கையாளும் போது ஒவ்வொரு ஆவணச்சான்றினதும் தொகுதிக்காக பாதுகாத்து வைத்திருக்கும் வரிசையின் பதிவுகளை பாதுகாக்கவும்).

» ஆவணப்படுத்தல் செயற்பாட்டுக்கு முக்கியமானதென அடையாளம் காணப்பட்ட சகல விடயங்களையும் அவை அவற்றின் தன்மையில் குற்றம் சாட்டுபவையாக இருப்பினும் அல்லது குற்றசாட்டிலிருந்து விடுவிப்பவையாக இருப்பினும் அவற்றினைச் சேகரிப்பதற்கு முயற்சிக்கவும். குற்றசாட்டிலிருந்து விடுவிக்கக்கூடிய (பொறுப்பானவர்கள் என நம்பப்படுபவர்களை விடுவிப்பதற்கு எத்தனிக்கும் சாட்சிகள்) தன்மையினைக் கொண்டுள்ள விடயத்தினைப் பொருட்படுத்தாது விடுவது அல்லது அலட்சியப்படுத்துவது ஒட்டுமொத்த ஆவணப்படுத்தலின் நேர்மையினையினையும் சேதப்படுத்தலாம். இதனை அடைந்துகொள்வதற்குப் பல்வேறு ஆவணங்களை, பக்கங்களைச் சேகரிக்கும்போது நடைமுறைப்படுத்துனர்கள் சாத்தியமெனின் மூலத்தொடரின் அடிப்படையில் பூரண ஆவணப்படுத்தலினையும் சேகரிக்க முயற்சிக்க வேண்டும். இது ஒரு முக்கியமான பாதுகாப்பு ஏறபாடாக இருப்பதுடன் விடயங்களினைத் தெரிவுசெய்தமை அவற்றில் மாற்றத்தினை ஏற்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுகளையும் தவிர்ப்பதற்கு உதவும்.

» ஆவணப்படுத்தல் சான்றுகளைச் சேகரிக்கும் செயன்முறையின் போது ஆவணங்கள் எந்த நிலையில் பெறப்பட்டதோ அந்த நிலையில் அவற்றை ஆவணப்படுத்துவதற்காக புகைப்படங்களை அல்லது வீடியோக்களை எடுப்பது பாதுகாப்பானதெனின் மேலும் இது பாதுகாத்து வைத்திருக்கும் வரிசையின் பதிவினை வலுப்படுத்துமெனின் அதனை மேற்கொள்ள வேண்டும்.

» இயலுமான அளவு விரைவாக ஆவணங்களைக் குறிப்பிட்ட பாதுகாப்பான இடத்திற்கு வெப்பம், ஈரப்பதன் மற்றும் ஏனைய சாத்தியமான தீங்கு விளைவிக்கும் நிலைமைகளிலிருந்து பாதுகாப்பதற்காக களஞ்சியப்படுத்துவதற்கு எடுத்துச் செல்லவும்.

» ஒவ்வொரு ஆவணத்தினையும் பதிவிலே பதிவு செய்வதை அனுமதிக்கின்ற சான்று முகாமைத்துவ முறையினை அமுல்படுத்தவும்.

## அறிந்து கொள்வதற்கான தேவை எனும் அடிப்படைக்கு அமைய ஆவணச்சான்றுக்கான அணுகலை மட்டுப்படுத்தல்

- சாத்தியமான குற்றவியல் நடமுறைக்காக ஆவணங்களினை பாதுகாத்து வந்தால் பின்வருவன உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
  - ஒவ்வொரு தனிப்பட்ட பக்கம் அல்லது விடயமும் ஒரு தனித்துவமான அடையாளப்படுத்தல் இலக்கத்தை கொண்டுள்ளது.
  - ஆவணங்கள் பெரும் எண்ணிக்கையில் பெறப்பட்டால், (கோப்புக்கள், சேகரிப்புக்கள் அல்லது சுவடிகள்) சாத்திய மெனின் இவை உடைக்கப்படாமல் ஆனால் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு அவை பெற்றுக்கொள்ளப்பட்ட தொடரொழுங்கில் பதியப்படல் வேண்டும்.
  - கோப்புக்கள் அல்லது கட்டப்படும் முகப்பு அட்டைகளும் பதியப்படுகின்றன.
  - ஒரே ஆவணத்தின் பல்வேறு பிரதிகள் தனித்தனியாக முத்திரையிடப்பட்டு வெவ்வேறாக உசாவல் குறியிடப் படுகின்றன.
  - மூல ஆவணங்கள் அடிக்கடி பயன்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் மூல ஆவணங் களின் அசலான தன்மையினைப் பாதுகாப்பதற்காகவும் ஆவணங்களை டிஜிடல் முறைமையில் ஸ்கேன் செய்வதை பரிசீலிக்கவும்.
- அறிந்துகொள்வதற்கான தேவை என்பதன் அடிப்படையிலே ஆவணச் சான்றுதலுக்கான அணுகலினை மட்டுப்படுத்தவும். மேலும் ஆவணச் சான்றுகளில் மாற்றங்கள் செய்யப்படுவதற் கான சாத்தியமின்மையினை எடுத்துக்காட்டுவதற்காக ஆவணங்கள் எப்பொழுது, எங்கே, யாரால், எப்படி அணுகப்பட்டன என்பதனையும் பதிவுசெய்யவும்.
- அனாமதேய மூலங்களிலிருந்து வரக்கூடிய மிகவும் அரிதான தகவல் போன்று தென்படக்கூடிய தனித்த ஆவணங்களை சேகரிப்பதையிட்டு அவதானமாக இருக்கவும். ஏனெனில் அவை மோசடியானவையாக அல்லது தவறாகச் சித்தரிக்கப்பட்டவையாக இருக்கலாம். இந்தப் பொதுவான விதிவிலக்குகள் இருக்கக்கூடிய அதேவேளை சகல ஆவணச்சான்றுப் பொருட்களினதும் அசலான தன்மை மற்றும் உண்மைத்தன்மை ஆகியவற்றினைப் பரிசீலிப்பதற்கான நோக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கு இது முக்கியமானதாகும்.
- பாதிக்கப்பட்டவர்கள் வழங்குகின்ற மருத்துவ ஆவணங்களைப் பொருத்தளவில் அவற்றின் மூலப்பிரதிகளையா அல்லது பிரதிகளையா பெற்றுக்கொள்வது என்பது தொடர்பான கொள்கையொன்றினைக் கடைப்பிடிக்கவும். என்னென்ன மருத்துவ ஆவணங்கள் பொருத்தமற்றன எனத் தீர்மானித்து அவற்றினைச் சேகரிக்காமல் விடவும் (உதாரணமாக கன்னித்திரைப் பரிசோதனையறிக்கைகள்). பிரதிகள் உள்ளடங்கலாக சுகாதாரப் பதிவுகளை மாத்திரமே சேகரிக்கவும். இதனைப் பாதிக்கப்பட்டவரின் அனுபவங்களின் ஆவணப்படுத்தல் அம்சத்திற்கான அறிந்து வழங்கும் இணக்கத்தினைப் பெற்ற பின்பே மேற்கொள்ளவும்.

## B. மீறல்கள் நடந்த இடங்களை செயன்முறைப்படுத்தல்

### 1. அறிமுகம்

பாலியல் வன்முறைக் குற்றச்செயல்கள் இடம்பெற்ற இடங்களை நடைமுறைப்படுத்துனர்கள் அணுக்ககூடியதாக அல்லது அவற்றை கண்டுபிடிக்கக்கூடியதாக இருக்கலாம். இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்ற இடங்கள் பெறுமதிமிகு பௌதீகச் சான்றுகளை, ஆவணச் சான்றுகளை மற்றும் டிஜிடல் சான்றுகளை வழங்கக்கூடிய மூலமாக மாத்திரம் அமையாது அவை வாக்குமூலச் சான்றுகளை ஆதாரப்படுத்தக்கூடியவையாகவும் அமைகின்றன (பார்க்க அத்தியாயம் 10 பாலியல் வன்முறையின் சான்றுகளின் வகைகள்). ஆனால் இந்த இடங்கள் அமைந்துள்ள இடங்களும் அவற்றின் இருப்பும் பிரதேசத்திலேயுள்ள குற்றம் சாட்டப்படுகின்ற குற்றத்தினை நிகழ்த்தியவர்களின் பிரசன்னத்தினை நிரூபிக்க உதவும் என்பதுடன் குற்றத்தினை நிகழ்த்தியவர்கள் மேற்கொள்ளும் நகர்வுகளின் பாங்கினை பகுப்பாய்வு செய்வதற்கும் ஏனைய பழிகள் அல்லது பொறுப்புக்களின் பொதுவான கூறுகளைக் கண்டறிவதற்கும் பயன்படக்கூடியவையாகும். மீறல்கள் நடைபெற்ற இடங்கள் பாதிக்கப்பட்டவர்களின் உடல்களை அல்லது குற்றத்தினை நிகழ்த்தியவர்களின் உடல்களைக் கொண்டிருக்கலாம். இவர்கள் உயிருடன் உள்ளவர்களாக இருக்கலாம் அல்லது இறந்த உடல்களாக இருக்கலாம். இவ்வாறான சான்றுகளை மீளப்பெறுவதற்கு மருத்துவ அல்லது தடயவியல் அறிவியல் நிபுணர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

வன்முறைகள் இடம்பெற்ற இடங்களில் காணப்படும் சான்றுகளின் வகைகள்

1. பின்வருவன போன்ற பௌதீகச் சான்றுகள்
   - ஆடைகள், சீருடைகள், படுக்கை விரிப்புக்கள், கண்ணைக் கட்டிய துணிகள்.
   - ஆயுதங்கள், கத்திகள், துப்பாக்கித் தோட்டாக்கள், செல்கள், கூரான பொருட்கள், சித்திரவதைக் கருவிகள்.
   - உடல்கள், உடற்பாகங்கள் மற்றும் எஞ்சிய எலும்புக் கூடுகள்.
   - கறைகள், குருதி, வாந்தி, விந்து, யோனித்திரவங்கள் அல்லது மலம்.
   - உணவு, மின்சாரம், மருந்துகள், மதுபானம் ஆகியவை பயன்படுத்தப்பட்டமைக்கான நிரூபனம்.
   - சாட்சியின் வாக்குமூலத்துடன் பொருந்துகின்ற தரைத்தோற்ற அமைப்பின் நிரூபனமும் வளவின் பௌதீக விபரிப்பும்.
   - டிஜிடல் சான்றுகளை கொண்டுள்ள தொலைபேசிகள், கணினி மற்றும் ஏனைய இலத்திரனியல் சாதனங்கள்.
2. பின்வருவன போன்ற ஆவணச்சான்று.
   - அதிகாரப் பதிவுகள், கட்டளைகள், கடமைப் பதிவுகள்.
   - சிறைக்கைதிகளின் பட்டியல்கள்.
   - அடையாள அட்டைகள்.

(பார்க்க அத்தியாயம் 10 பாலியல் வன்முறைச் சான்றுகளின் வகைகள் ஆவணச்சான்று/டிஜிடல்சான்று/பௌதீகச்சான்று)

பொருத்தமான ஆவண அல்லது தடயவியல் சான்றினை வன்முறை இடம்பெற்ற இடத்திலிருந்து உத்தியோகபூர்வ விசாரணையாளர்களால் மாத்திரமே சேகரிக்க முடியும். இவ்வகையான சான்றுகளைச் சேகரிப்பதற்குப் பொருத்தமான பயிற்சியைப் பெற்றிராத நடைமுறைப்படுத்துனர்கள் ஒரு விதியாக இடத்தினைப் பதிவு செய்து ஆவணப்படுத்த மாத்திரமே முடியும் (பார்க்க வன்முறைகள் இடம்பெற்ற இடங்களை கையாளுதல்)

## 2. வன்முறைகள் இடம்பெற்ற இடங்களை கையாளுதல்

**பெட்டி 3**

**வன்முறைகள் இடம்பெற்ற இடங்களை அணுகும் போது பின்பற்றப்படவேண்டிய பிரதான நடவடிக்கைகள்.**

வன்முறைகள் இடம்பெற்ற இடங்களைக் கையாளும் போது மேலும் அந்த இடங்களில் பௌதீக/ ஆவணச்சான்றுகள் கண்டுபிடிக்கப்படும் போது நீங்கள் சான்றுகளை நகர்த்தக் கூடாது மேலும் அதற்குப் பதிலாக பின்வரும் ஆறு படிகளைப் பின்பற்ற வேண்டும்.

i. பாலியல் வன்முறை இடம்பெற்ற இடத்தின் அமைவிடத்தினைத் துல்லியமாகப் பதிவு செய்தல்.

ii. யாராவது ஒருவரை அந்த இடத்திற்கு முகாமையாளராக நியமித்து அந்த இடத்திற்கு வருகை தருகின்ற ஒவ்வொருவரினையும் பதிவதற்கான பதிவேடொன்றை உருவாக்குதல்.

iii. அந்த இடத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் தொடர்பாக விரிவான குறிப்புக்களை தயாரித்தல்.

iv. அந்த இடத்தினைப் புகைப்படம் எடுத்தல். சாத்தியமான சான்றுகள் உள்ள அமைவிடங்கள் உள்ளடங்கலாக.

v. அந்த இடத்தின் வரைபடத்தினைத் தயாரித்தல். இதிலே சாத்தியமான சான்றுகள் உள்ள அமைவிடங்கள் மற்றும் விபரங்கள் உள்ளடங்கலாக.

vi. நீங்கள் எவ்வாறு அவ்விடத்தினைக் கண்டீர்களோ அவ்வாறே அதனை விட்டுச்செல்லுதல்.

பிரதான நடவடிக்கைகளுக்கான விரிவான வழிகாட்டல்களுக்குத் தயவு செய்து கீழே பார்க்கவும்.

### i. இடம் அமைந்துள்ள இடத்தினைப் பதிவு செய்தல்

பாலியல் வன்முறை நடந்ததாகச் சந்தேகிக்கப்படும் இடத்தின் அமைவிடத்தினை மிகத் துல்லியமாகப் பதிவு செய்ய வேண்டும். இது உத்தியோகபூர்வ விசாரணையாளர்கள் செயற்றிறன் மிகு முறையில் ஆவணப்படுத்திய பௌதீகச் சான்றுகளை எதிர்காலத்தில் சேகரிப்பவர்கள் கண்டுபிடிப்பதற்கு இது அவர்களை இயலுமாக்கும்.

நீங்கள் செய்ய வேண்டியவை:

» GPS ஆள்கூறுகளை அல்லது வரைபட உசாவல்களை பயன்படுத்தி அமைவிடத்தினைப் பதிவு செய்தல்.

» அமைவிடத்திற்கான அடையாளங்கள், பௌதீக அம்சங்கள் மற்றும் அமைவிடத்தின் பெயர்கள், அருகிலுள்ள சமுதாயங்கள், கிராமங்கள் மற்றும் பட்டினங்கள் ஆகியவை உள்ளடங்கலாக, பிரதேசத்தின் பயன்மிகு அம்சங்களைப் பதிவு செய்தல். இதனை நீங்கள் GPS அல்லது வரைபட உசாவல் இல்லாதபோது அல்லது அவை துல்லியமற்றவையாக இருக்கும்போது மேற்கொள்ளலாம்.

» இந்தத் தகவல்களைப் பாதுகாப்பாகப் பேணவும். மேலும் இவ்வாறான ஒரு இடம் இருப்பதைப் பரந்த சமுதாயத்திற்கு வெளிக்கூற வேண்டாம்.

### ii. ஒருவரை அந்த இடத்திற்கான முகாமையாளராக நியமித்து அந்த இடத்திற்கு வருகை தருபவர்களைப் பதிவதற்கான பதிவேட்டினை உருவாக்குதல்.

நீங்கள் உங்கள் அணியின் ஒருவரை அந்த இடத்திற்கு முகாமையாளராக நியமித்ததும் அவர்

» இடத்திற்கு வருகை தரும் அனைவரினதும் விபரங்களைப் பதிவதற்கான பதிவேட்டினை உருவாக்க வேண்டும்.

» தேவையெனின் அந்த இடத்தினை எவ்வாறு பாதுகாப்பதென்பதை தீர்மானிக்க வேண்டும்.

### iii. அந்த இடத்தில் எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளினதும் விரிவான குறிப்புக்களைத் தயாரித்தல்.

அந்த இடத்தின் முகாமையாளர் அல்லது அந்த முகாமையாளர் நியமிக்கின்ற யாராவது ஒருவர் அந்த இடத்தில் எடுக்கப்படுகின்ற சகல நடவடிக்கைகள் பற்றியும் என்ன அங்கு காணப்பட்டது என்பது பற்றியும் எப்போது அது காணப்பட்டது என்பது பற்றியும் கண்டெடுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தொடர்பாகவும் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

### iv. இடத்தினையும் சான்றினையும் புகைப்படம் எடுத்தல்.

இடத்திலுள்ள பிரதான அம்சங்கள் அல்லது சான்றுகளைப் புகைப்படம் எடுப்பது எதிர்கால விசாரணையாளர்களுக்கு அல்லது சான்றுகளைப் பகுப்பாய்வு செய்யும் நிபுணர்களுக்கு மிகவும் பெறுமதிமிக்கதாக அமையும்.

நீங்கள் செய்ய வேண்டியவை :

- இடத்தினதும் அதன் உள்ளடக்கத்தினதும் புகைப்படத்தினை அவற்றினைக் குழப்பாமல் அல்லது அகற்றாமல் எடுத்தல்.
- இடத்தின் முழுப் பிரதேசத்தையும் சூழமைவு சார்ந்து நெருக்கமான புகைப்படங்களாக எடுத்தல்.
- ஒட்டுமொத்தப் புகைப்படங்களையும் பிரதேசத்தைச் சுற்றியுள்ள புகைப்படங்களையும் புவியியல் மற்றும் பௌதீக அம்சங்களையும் கட்டடங்களையும் வீதிகளையும் உள்ளடக்க வேண்டும்.
- சூழியல் சார்ந்த புகைப்படங்கள் நீங்கள் புகைப்படம் எடுக்கின்றவற்றின் அம்சங்களையும் அல்லது ஏனைய விடயங்களையும் காட்சிப்படுத்த வேண்டும்.
- மிக நெருக்கமான புகைப்படங்கள் நீங்கள் பதிவு செய்கின்ற சாட்சி அல்லது அம்சங்களை விபரமாகக் காட்ட வேண்டும்.
- சாத்தியமான பொழுது அளவீடின்றியும் அளவீட்டுடனும் புகைப்படம் எடுக்கவும்.
- புகைப்படங்கள் எடுக்கப்படுகையிலேயே அவற்றினை பதிவு செய்யவும்.
- பொதுவாக புகைப்படத்தை எடுப்பவரின் பெயர் மற்றும் வகிபாத்திரத்தை உள்ளடக்கவும். மேலும் புகைப்படத்தின் திகதி எடுக்கப்பட்ட நேரம் மற்றும் அமைவிடம் ஆகியவற்றினையும் பயன்படுத்தப்பட்ட படச்சுருளின் வகையினையும் கமெராவின் அமைப்பினையும் உள்ளடக்கவும். மேலும் பயன்படுத்தப்பட்ட வில்லையின் குவி நீளத்தினையும்[1] பதிவு செய்யவும். ஏனெனில் இது வெறுங்கண்களால் பார்க்கக்கூடிய ஒன்றா என்பதை எதிர்காலத்திலே தீர்மானிப்பதற்கு மீளாய்வு செய்யும் நபர்களுக்கு உதவும்.
- ஒவ்வொரு படச் சட்டகத்தினதும் சுருக்கமான விபரத்தினை வழங்கவும்

**V. சம்பவம் நடைபெற்ற இடத்தினையும் சான்றுகள் உள்ள அமைவிடத்தையும் வரைதல்**

நேரம், வளங்கள் மற்றும் பாதுகாப்புக் கரிசனைகள் காரணமாக நீங்கள் இயலுமான அளவு அதிக விபரங்களுடன் உங்களது வரைபடத்தினை வரைய வேண்டும்.

நீங்கள் செய்யவேண்டியது :

- மேலிருந்து நோக்குகின்ற பார்வையில் அமைந்த படவரைபினை நீங்கள் தயாரிக்க வேண்டும்.
- அளவீட்டையும் அளவீடுகளையும் படத்தில் உள்ளடக்க வேண்டும்.
- பிரதான அம்சங்களை உள்ளடக்கவும்.
- அமைவிடத்தையும் கண்டெடுக்கப்பட்ட சாத்தியமான வகைகளையும் சுட்டிக்காட்டவும்.
- படத்தில் ஒப்பமிட்டு திகதியினை இடவும்.

**Vi. இடத்தினை எவ்வாறு கண்டீர்களோ அவ்வாறு விட்டுச் செல்லவும்.**

இடத்தினைக் குழப்பவோ அங்கே உள்ள பொருட்களை நகர்த்தவோ அல்லது அங்கேயுள்ள சான்றுகளை அகற்றவோ கூடாது என்பது முக்கியமானதாகும். இவ்வாறு செய்வதானது அந்த இடத்தின் பயன்பாடு மற்றும் பொருத்தப்பாடு ஆகியவற்றினை பாதகமாக பாதிக்கலாம் என்பதுடன் அவற்றின் உள்ளடக்கங்கள் மற்றும் சான்று ரீதியான பெறுமதியினையும் பாதிக்கும். அதிகமான சந்தர்ப்பங்களில் மிக எளிமையாகவும் துல்லியமாகவும் நீங்கள் கண்டெடுத்த சான்றுகளை பதிவது போதியதாக இருக்கும்.

புகைப்படம் எடுத்தல் மற்றும் வரைபடம் தயாரித்தல் பற்றிய விரிவான வழிகாட்டலுக்கு அடுத்த பிரிவினை உசாவவும்.

1 டிஜிடல் கெமராவினைப் பயன்படுத்துவதாயின் இந்தத் தகவல்களில் மிக அதிகமானவை புகைப்படக் கோப்புக்களின் மெடா தரவுகளில் உள்ளடக்கப்படுகின்றன

*குற்றச்செயல் நடந்த இடத்திலிருந்து பௌதீகச் சான்றுகளைச் சேகரிப்பது ஆணையினையும் ஆற்றலினையும் திறன்களையும் உபகரணத்தினையும் கொண்ட பயிற்றப்பட்ட தொழில்ரீதியான அதிகாரிகளினால் மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும்.*

பெட்டி 4

## பௌதீகச் சான்றுகளை சேகரித்தல்

**பொதுவான கோட்பாடு**

ஒரு பொதுவான விதியாக நடைமுறைப்படுத்துனர் ஒரு விசாரணையாளராகப் பயிற்றப்படாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது தடயவியல் சான்றுகளைச் சேகரிப்பதற்கான ஒரு சுகாதார நடைமுறைப்படுத்துனராக இல்லாத சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வாறு செய்வதற்கு ஆணையினைக் கொண்டிராத சந்தர்ப்பத்தில் எவ்விதமான பௌதீகச் சான்றுகளையும் சேகரிக்கக்கூடாது. உரிய பயிற்சியின்றி நடைமுறைப்படுத்துனர்கள் பௌதீகச் சான்றினைச் சேகரித்தால் அவர்களினால் சான்றுகளில் மாசு ஏற்படுத்தப்பட்டு அவற்றினைப் பயனபடுத்த முடியாமல் போய்விடும்.

மேலும் பௌதீகச் சான்றுகளின் சேகரிப்பானது அவற்றின் உண்மைத்தன்மையினைப் பரீட்சிக்கின்ற தகவல்களின் சேகரிப்புடன் சேர்த்தே எப்பொழுதும் சேகரிக்கப்படவேண்டும். மேலும் விளக்கச் சான்றுகள் அவற்றுடன் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவை பயன்மிக்கவையாக இருக்கும்.

**எனக்கு உண்மையிலேயே பௌதீகச் சான்று தேவையா?**

சில நியாயாதிக்கங்கள் பாலியல் வன்முறை பற்றிய ஏனைய தகவல்களை ஆதாரப்படுத்துவதற்கு பௌதீகச் சான்றுகளைத் தேவைப்படுத்துகின்றன. எந்தவிதமாக ஆவணப்படுத்தல்களிலும் இறங்குவதற்கு முன்னர் ஆதாரப்படுத்துதல் மற்றும் ஏனைய சான்று அடிப்படையிலான விடயங்களுக்கான பிரயோகிக்கத்தக்க விதிகள் மற்றும் உள்நாட்டு தேவைப்பாடுகளைப் பற்றி நீங்கள் ஆராய்ச்சி செய்து அவற்றினைப் புரிந்துகொள்ள வேண்டும்(பார்க்க அத்தியாயம் 9 : திட்டமிடுதல்)

பொதுவாகப் பேசுகையில், சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு குற்றச்செயலாக அல்லது மீறலாக பாலியல் வன்முறையினை ஆதாரப்படுத்துவதற்கு அல்லது நிரூபிப்பதற்கு பௌதீகச் சான்று தேவைப்படுத்தப்படுவதில்லை. அல்லது ஆதரித்து வாதாடல் அல்லது நீதித்துறை சாராத நோக்கங்களுக்காக ஆவணப்படுத்தலின் அங்கமாக அவை தேவைப்படுத்தப் படுவதில்லை. ஆனால் உங்களது குறிப்பிட்ட சூழமைவு மற்றும் நோக்கங்களுக்கு நீங்கள் இதனை உறுதிப்படுத்த வேண்டும்.

**உங்களுடைய ஆவணப்படுத்தலுக்காக பௌதீகச் சான்றுகளைச் சேகரிப்பது உங்களுக்கு அவசியமில்லையெனில் நீங்கள் அவ்வாறு அதனைச் செய்யக்கூடாது. மேலும் அதேவிடயங்களை நிரூபிப்பதற்கு நீங்கள் மாற்று வழிகளினைத் தேடவேண்டும்.** விடயங்களைச் சேகரிப்பதை விட அல்லது அவற்றினை இடத்திலிருந்து அகற்றுவதை விட அவற்றினை படமாக வரைதல், புகைப்படம் எடுத்தல் அல்லது வீடியோப் பதிவுசெய்தலைப் பற்றி நீங்கள் பரிசீலிக்கலாம். பாதிக்கப்பட்டவர்களையும் ஏனைய சாட்சிகளையும் நேர்கண்டு அவர்கள் வழங்குகின்ற தகவல்களைக் கொண்டு ஏனைய சாட்சிகளை அணுகக்கூடியமையும் முக்கியமான தகவல்களை வழங்கலாம் என்பதுடன் பௌதீகச் சான்றுக்கான தேவையினையும் அகற்றலாம் (தயவு செய்து பார்க்க பிற்சேர்க்கை 3). பௌதீக சான்றுகளை சேகரிக்காமல் இருப்பதற்கான காரணங்கள்

**என்னால் எப்போது பௌதீகச் சான்றுகளை சேகரிக்க முடியும்?**

குற்றச்செயல் நடந்த இடத்திலிருந்து பௌதீகச் சான்றுகளைச் சேகரிப்பது அதற்கான ஆணையினையும் ஆற்றலினையும் திறனினையும் அவற்றின் சான்றுரீதியான பெறுமதியில் தாக்கத்தினை ஏற்படுத்தாமல் சேகரிக்கக்கூடிய உபகரணங்களையும் கொண்டுள்ள தொழில்வல்லுனர்களினால் மாத்திரமே முடியும். இருந்தபோதிலும் சில வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளில் சாத்தியமான தெரிவுகளுக்காக மாத்திரம் இவ்வாறு செய்வது பாதுகாப்பானதாகும். மேலும் பௌதீகச் சான்றுகளை ஏனைய நடைமுறைப்படுத்துனர்கள் சேகரிப்பதும் பொருத்தமானதாகவிருக்கும். பௌதீகச் சான்றுகளைச் சேகரிப்பதற்கான தீர்மானமானது தீவிரமான ஒரு தீர்மானமாக மிகக் கவனத்துடன் பரீட்சிக்கப்பட்டு எடுக்கப்படல் வேண்டும். சம்பவ இடங்களிலிருந்து பௌதீகச் சான்றுகள் பின்வரும் மிக அதீத விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரமே அகற்றப்படல் வேண்டும்.

» உங்களுக்கு எவ்விதத்திலும் சான்றினைப் பதிவு செய்யமுடியாத சந்தர்ப்பத்திலும் அந்தச் சான்றுகள் அழிக்கப்படக்கூடிய அல்லது இடையூறுக்கு உட்படக்கூடிய உயர் அபாயநேர்வு காணப்படும் போதும்

» சான்றினைப் பாதுகாப்பாகச் சேகரிக்க அல்லது அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கு உங்களிடம் திறனும் ஆற்றலும் இருந்தால்

» சான்றினை அகற்றி அவற்றினைப் பக்குவமாகக் கையாண்டு எடுத்துச்சென்று களஞ்சியப்படுத்துவதற்கும் அத்துடன் அதனை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான உரிய வரிசையினை உறுதிப்படுத்துவதற்கும் அவற்றினை ஆவணப்படுத்துவதற்கும் உங்களால் இயலுமாக இருந்தால் (பார்க்க: பகுதி D, பாதுகாத்து வைத்திருக்கும் வரிசை).

**பௌதீகச் சான்றினைக் களஞ்சியப்படுத்துவதற்கு உங்களிடம் பொருத்தமான வசதிகள், வளங்கள் இல்லாவிடின் நீங்கள் அவற்றினைச் சேகரிக்கக்கூடாது. உரிய முறையில் சேகரிக்கப்பட்டுக் கையாளப்படாத பௌதீகச் சான்றுகள் மாசடைந்ததாக மாறலாம் அல்லது அவற்றின் உண்மைத்தன்மையினை நிரூபிக்க முடியாதவையாக மாறலாம். இதனால் அவற்றின் பிரயோசனம் அற்பமானதாக மாறிவிடும்.**

*..பௌதீகச் சான்று கிடைக்கும் பட்சத்தில் அவற்றினைச் சேகரிப்பதை விட புகைப்படம் எடுத்தல், வீடியோ பதிவு செய்தல் மற்றும் வரைபடமாக பார்த்துக் கீறுதல் மிகச்சிறந்ததாகும்.*

## C. வன்முறை நடந்த இடத்தினையும் பௌதீகச் சான்றுகளையும் உடற்காயங்களையும் புகைப்படம் எடுத்தல், வீடியோ பதிவு செய்தல், மற்றும் வரைபடமாக வரைதல்

### 1. அறிமுகம்

நீங்கள் களத்திலே பணியாற்றும் போது பாலியல் வன்முறைக் குற்றம் நிகழ்த்தப்பட்ட இடமாகத் தென்படுகின்ற இடங்களை நீங்கள் காண நேரிடலாம் (உதாரணம் கறை படிந்த மெத்தைகளைக் கொண்ட, இரத்தக் கறை படிந்த தரையுடனான அறை, பாலியல் வன்முறை நிகழ்ந்ததைக் காட்டுகின்ற ஒரு பொருளினைக் காணலாம் (பாலியல் வல்லுறவை நிகழ்த்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாகச் சாட்சி குறிப்பிட்ட ஆயுதம் அல்லது பாலியல் வன்முறைக் காயங்கள் பாதிக்கப்பட்டவரின் உடலில் தெளிவாக தெரிதல். பெண் அவரது பின்புறத்தில் கண்டல் காயங்களையும் கீறல் காயங்களையும் கொண்டிருப்பதுடன் இந்தக் காயங்கள் பாலியல் வன்முறைக் காயங்களாக உங்களுக்கு அறிவித்தல்)

நீங்கள் நேர்காணல் மூலம் பாதிக்கப்பட்டவர்/ சாட்சியிடமிருந்து சேகரிக்கின்ற தகவல்களுடன் சேர்த்து இந்தத் தகவலையும் புகைப்படம் எடுத்தல், வரைபடமாக வரைதல் (மற்றும் சாத்தியமெனில் வீடியோ பதிவு செய்தல் முக்கியமானதாகும்).[2] இந்தத் தகவல் உரிய முறையில் சேகரிக்கப்படும் போது அவை எதிர்காலத்திலே நீதிச்செயன்முறைகளின் போது அத்துடன்/ அல்லது நட்டஈட்டுச் செயன்முறைகளின் போது சக்தி மிகுந்த சான்றாக இருக்க முடியும்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டதைப் போல குறிப்பாக உடல்மீதான வன்முறை நிகழ்த்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் சான்றினைச் சேகரிப்பதை விட அவற்றினைப் புகைப்படம் எடுத்தலும் வீடியோ பதிவு செய்தலும் வரைபடமாக வரைதலும் சிறந்ததாகும்.

உடற்காயங்கள் ஏற்பட்டிருக்கையில் பயிற்றப்பட்ட மருத்துவ பரிசோதகர் இந்தக் காயங்களை புகைப்படம் எடுப்பது சிறந்ததாகும். எவ்வாறாயினும் ஏனைய செயற்படுநர்களும் உடலில் மிகவும் மறைவான பிரதேசங்களில் உள்ள காயங்கள் அல்லாத அடிப்படைக் காயங்களை புகைப்படம் எடுக்கலாம் (பின்வரும் வழிகாட்டல்கள் பயன்படுத்தப்பட்டால்). இதனை அவர்கள் காயமடைந்த தரப்பினரின் வெளிப்படுத்தப்பட்ட அனுமதியுடனேயே மேற்கொள்ள முடியும்.

ஆபத்துமிகு சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்டவர்களினதும் / சாட்சிகளினதும் அவர்களது சமுதாயத்தினதும் பாதுகாப்பே உயர் முன்னுரிமைக்குரியதாகும் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும். சகல பரிமானங்களையும் பூர்த்தி செய்கின்ற புகைப்படம் / வீடியோவினை உங்களால் பெற்றுக்கொள்ள முடியாவிட்டால் புகைப்படம், வீடியோ சான்றாக ஒருபோதும் அனுமதிக்கப்படமாட்டாது என்பதை அது கருதாது.

### 2. புகைப்படம் எடுத்தலும் வீடியோ பதிவு செய்தலும்

எவ்விதமான எதிர்கால நீதி அத்துடன் / அல்லது நட்டஈட்டுச் செயன்முறைகளின் போதும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களின் நம்பகத்தன்மையினை நிரூபிக்கக்கூடியதாக இருக்கும் பட்சத்தில் அவை பயன்மிகுந்த சாட்சிகளாக இருக்க முடியும். உண்மைப்படுத்துதல் என்பதன் அர்த்தம் புகைப்படம் அல்லது வேறு ஏதாவது சான்றுகளை உண்மையானதாக காட்டக்கூடியதாக இருத்தல் ஆகும். உண்மைத்தன்மையினை எடுத்துக்காட்டுவதற்கு போதிய தகவல்களை நீங்கள் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவது எப்போதும் இலகுவானதல்ல. மேலும் சான்றுகளின் உண்மைத் தன்மைகளைச் சவாலுக்குட்படுத்துகின்ற ஏனையோரின் வாய்ப்புக்களை குறைப்பதற்கு எடுக்கப்படக்கூடிய பல நடவடிக்கைகள் இருக்கின்றன.

கீழே வழங்கப்பட்டுள்ள சகல குறிப்புக்களும் 6,7 மற்றும் 8 ஆகியவை புகைப்படம் எடுத்தல் தொடர்பான வழிகாட்டலை வழங்குகின்ற அதேவேளை குறிப்பு 9 மாத்திரமே வீடியோ பதிவிற்கான நடைமுறைக் குறிப்புக்களை வழங்குகின்றது.

ஆவணப்படுத்தல் செயன்முறைக்கு முன்னர் :

1. கமெராவினையும், புகைப்படக்கருவிகளையும் ஏனைய வீடியோ கருவிகளையும் எவ்வாறு பயன்படுத்துவது என்பதைக் கற்றுக்கொள்ளவும். குறிப்பாக உங்களது கமெராவில் திகதி மற்றும் நேரத்தினை எவ்வாறு செயற்பட வைப்பது என்பதை அறிந்து கொள்ளுங்கள். மற்றும் உங்களது கமெராவின் ஒலி மற்றும் நிறத்தினை எவ்வாறு சமநிலைப்படுத்துவது என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் வெவ்வேறு நேர வலயங்களில் பணியாற்றினால் கமெராவினை கிரீன்விச் சராசரி நேரத்திற்கு மாற்றிக் கொள்ளவேண்டும். பொருத்தமெனில் உங்களது கமெராவிலே எவ்வாறு புவியியல் ரீதியாகத் தடம் அறிதல் செயற்பாட்டினை இயலுமாக்கலாம் என்பதை கற்றுக் கொள்ளுங்கள்.
2. தனிநபர்களின் புகைப்படங்களை வீடியோக்களை எடுப்பதாயின் அவர்கள் அறிந்து வழங்குகின்ற இணக்கத்தினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
   - » இது புகைப்படங்கள் / வீடியோக்களை எடுப்பதற்கான அதிகாரமளித்தலை கோருதலை உள்ளடக்குகின்றது. குற்றம் நடந்த இடத்தின் மீது கட்டுப்பாட்டினை கொண்டிருக்கின்ற ஒரு சமுதாயம், பௌதீகச் சான்றினை தனது உடமையாகக் கொண்டிருக்கின்ற பாதிக்கப்பட்டவர்/ சாட்சி, அல்லது உடல் ரீதியான காயங்களைக் கொண்டிருக்கின்ற பாதிக்கப்பட்டவர்
   - » தனிநபர்களின் சௌகரியம் மற்றும் அந்தரங்கம் தொடர்பாகக் கரிசனை கொண்டிருக்கவும். புகைப்படங்களையோ அல்லது வீடியோக்களையோ எடுத்த லானது சில கலாசாரங்களில் பொருத்தமற்றதாகக் கருதப்படுகின்றது. உடற்காயங்களை புகைப்படம் எடுக்கும் போது இது மிக முக்கியமானதாகும்.
   - » எடுக்கப்படுகின்ற புகைப்படங்கள்/ வீடியோக்களின்

2 பதிவு செய்யும் முறையியலாக வீடியோ பதிவு மிகவும் பயன்மிக்க ஒன்றாகும். நிலையான புகைப்படங்களும் வீடியோ பிம்பங்களை விட அதிக விபரங்களைக் கொண்டுள்ள காரணத்தினால் மிகவும் பயன்மிக்க சான்றுகளாகக் காணப்படுகின்றன.

நோக்கம் என்ன என்பதை சம்பந்தப்பட்டுள்ள தனிநபர்களுக்கு அறிவிக்கவும். குறிப்பாக பெயர் குறிப்பிடப்படாமை பற்றி கலந்துரையாடவும் : ஏதாவது எதிர்கால நீதி அத்துடன் / அல்லது நட்டஈட்டுச் செயன்முறைகளில் அனுமதிக்கத்தக்க சான்றாக இருத்தல், எந்தவொரு தனிநபரினதும் புகைப்பட மானது பொதுவாக தொடர்ந்தும் பெயரின்றியதாக இருக்காது என்பது (பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள்)

» ஏதாவது புகைப்படங்கள் / வீடியோக்கள் மனித எச்சங் களைக் கொண்டிருந்தால் அவற்றினை கௌரவத்துடன் எந்தவொரு கலாசார நடைமுறையுடனும் தொடர்புபட்டதாக நடத்த வேண்டும்.

» புகைப்படங்கள் /வீடியோக்களைப் பதிவுசெய்த பின்னர் தனிநபரினது அடையாளத்தினை புகைப்படங்களுடன் /வீடியோக்களுடன் இணைக்கவும். (ஒவ்வொரு புகைப்படமும் வீடியோவும் சம்பவ அடையாளப்படுத்தியினை கொண்டுள்ளதை உறுதிப்படுத்தவும். அல்லது மாற்றாக சம்பவ அடையாளப்படுத்தியினை பதிப்பிக்கவும். அதனை தாள் ஒன்றினுள் எழுதி அந்தந்தாளினை புகைப்படச்சுருள் அல்லது மெமரியில் ஆரம்பத்தில் அல்லது இறுதியில் குறிக்கவும்).

4. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் புகைப்படங்களில் என்ன உள்ளடங்கியுள்ளது, மேலும் எப்பொழுது, எங்கே, ஏன், யாரினால் அப்புகைப்படங்கள் எடுக்கப்பட்டன என்பதைப் பற்றியும் மேலும் பாதிக்கப்பட்டவர் / சாட்சி வாக்குமூலம் அளிக்காத பட்சத்தில் புகைப்படங்களோ வீடியோக்களோ அரிதாகவே தம்மளவில் உண்மையானவையாகக் காணப்படும். புகைப்படங்களும வீடியோக்களும் குறைந்த சான்றுக்கான பெறுமதியினை கொண்டுள்ளன.

5. புகைப்படங்களை /வீடியோக்களை உடனடியாக எடுக்கவும்.

» வன்முறை நடந்த ஒரு இடத்தினை அல்லது பௌதீகச் சான்றின் ஒரு பகுதியினை புகைப்படம் எடுத்தால் அல்லது படமெடுத்தால் நீங்கள் புகைப்படம் எடுப்பதற்கு முன்னால் அல்லது படமெடுப்பதற்கு முன்னால் அவற்றினைக் குழப்பாமல் இருப்பதையிட்டு கவனமாக இருக்கவும்.

» நீங்கள் உடற்காயம் ஒன்றினைப் புகைப்படம் எடுக்கும் போதும் பாலியல் வன்முறை அண்மையில் இடம்பெற்றதாக இருக்கும்போதும் புகைப்படங்கள் இயலுமான அளவு விரைவாக எடுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் நீங்கள் காயங்களின் பின்தொடரலை எடுப்பதா என்பதைப் பற்றியும் பரிசீலிக்கவேண்டும். ஏனெனில் சில கண்டல் காயங்கள், அதிர்ச்சி ஏற்பட்டு சில மணித்தியாலங்களின் பின்பே தோன்றுகின்றன.

6. புகைப்படங்களை எடுக்கும்போது அவற்றினை அளவீட்டினைப் பயன்படுத்தி வெவ்வேறு கோணங்களில் இருந்து எடுக்கவும்.

» வன்முறை நடைபெற்ற இடங்களுக்கும் பௌதீகச் சான்றுகளுக்கும்

i. வன்முறை இடம்பெற்ற இடத்தின் முழுப் புகைப்படத்தையும் முதலில் எடுக்கவும். புகைப்படமெடுப்பவர் ஒரு அடிமட்ட அடையாளப்படுத்தலை வைத்திருப்பதை உறுதிப்படுத்தவும். அடிமட்ட அடையாளப்படுத்தி இல்லாவிட்டால் நியமப்படுத்தப்பட்ட அளவினை அதாவது செய்திப்பத்திரிகையினை அளவீட்டிறகாகப் பயன்படுத்தவும்.

ii. ஒவ்வொரு வெவ்வேறான விடயத்தினையும் மத்திய வீச்சிலான அல்லது சூழமைவிலான புகைப்படமாக வன்முறை நடந்த இடத்தின் அமைவிடத்தைக் காட்டுவதற்காக எடுக்கவும்.

iii. பாலியல் வன்முறைக் குற்றத்தின் சூழமைவினை காட்சிப்படுத்தக்கூடிய விடயங்களை மிக நெருக்கமான புகைப்படமாக எடுக்கவும்( உடைகள், இரத்தக்கறைகள் அல்லது பாலியல் வன்முறை நிகழ்த்த பயன்படுத்திய கருவிகள்

» உடல் காயங்களுக்காக

i. புகைப்படங்களை எடுக்கும் பொழுது ஒத்திசைவான முறையினைப் பயன்படுத்தவும். உதாரணமாக சகல புகைப்படங்களையும் ஒத்திசையும் தன்மைக்காக பாதிக்கப்பட்டவரின் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் எடுக்கவும்.

ii. புகைப்படங்களை எடுக்கும் போது பாதிக்கப் பட்டவரின் அந்தரங்கம், நாணத்தினை பாதுகாக்கவும்.

iii. அடையாளப்படுத்தும் நோக்கங்களுக்காக முதலில் பாதிக்கப்பட்டவரின் முகத்தினைப் புகைப்படம் எடுக்கவும். ஒவ்வொரு படத்திலும் பாதிக்கப்பட்டவரின் முகம் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டால் இது தேவையற்றதாகும்.

iv. ஒவ்வொரு காயத்தினதும் வெவ்வேறு கோணங்களிலான குறைந்தது 02 படங்களை எடுக்கவும். கீறல் காயங்கள் ஏற்பட்டிருப்பின் அதன் புகைப்படங்கள் எப்பொழுதுமே 90 பாகைக் கோணத்திலிருந்து எடுக்கப்படல் வேண்டும்.

v. ஒவ்வொரு காயத்தினதும் அல்லது கீறலினதும் நெருக்கமான புகைப்படத்தினை எடுக்கவும். மேலும் காயங்களின் அளவினைக் காட்டுவதற்கு ஒரு அளவீட்டினைப் பயன்படுத்தவும்.

vi. உடலின் எந்தப்பாகம் காயமுற்றுள்ளது என்பதைக் காட்டுவதற்கு ஒவ்வொரு வெவ்வேறான காயத்தினதும் நடுத்தர வீச்சிலான புகைப்படங்களை எடுக்கவும்.

vii. பாதிக்கப்பட்டவரின் காயங்களின் அளவைக் காட்டுவதற்காக முழுநீளப் புகைப்படங்களை எடுக்கும்போது பாதிக்கப்பட்டவரை உரிய முறையில் உடையை அணிவித்து அல்லது போர்த்தி எடுப்பதைப் பரிசீலிக்கவும்.

7. எவ்விதமான எதிர்கால சட்டச் செயன்முறைகளிலும் அத்துடன் / அல்லது நட்டஈட்டு வழங்கும் செயன்முறைகளிலும் மிகவும் துல்லியமானதும் தெளிவானதுமான புகைப்படங்கள் அனுமதிக்கப்படுவதற்கான அதிக சாத்தியங்களைக் கொண்டுள்ளன என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும்.

» சாத்தியமெனில் புகைப்படங்கள் மிகை வெளிச்சத்திற்கு உட்படுவதைத் தவிர்ப்பதற்காக பகல் வெளிச்சத்தின்

*வேறு எந்த மாற்றீடும் இல்லையென்ற பட்சம் தவிர்ந்த வேறு சந்தர்ப்பங்களில் ஸ்மார்ட் தொலைபேசிகள் மூலம் புகைப்படங்களெடுப்பது பரிந்துரைக்கப்படவில்லை.*

போது அல்லது பின்புல வெளிச்சத்தில் அவை எடுக்கப்பட வேண்டும்.

» பின்புலமானது இயலுமான அளவுக்கு நடுநிலையானதாக இருக்கவேண்டும் : வண்ணமயமான அல்லது நெரிசல் மிக்க பின்புலங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். ஏனெனில் அவை புகைப்படத்தின் துல்லியத்தன்மையினை மாற்றலாம்.

» டிஜட்டல் கமெராக்கள் குறைந்தது 4 megapixel ஆற்றலினை அல்லது அதற்கு மேற்பட்ட அளவு பட அளவினைக் கொண்டிருத்தல் வேண்டும். வேறு எந்த மாற்றீடும் இல்லையென்ற பட்சம் தவிர்ந்த வேறு சந்தர்ப்பங்களில் ஸ்மார்ட் தொலைபேசிகளின் மூலமாக புகைப்படங்கள் எடுப்பது பரிந்துரைக்கப்படவில்லை.

8. புகைப்படங்களை அழித்தல்

» கெமெராவின் திகதி மற்றும் நேரச் செயற்பாடுகளை பயன்படுத்தவும். அவை இல்லாவிடின் புகைப்படச்சுருளினை அல்லது அன்றைய செய்தித்தாளினை மெமரி அட்டையில் பதியவும். நீங்கள் வெவ்வேறு நேர வலயங்களில் பணியாற்றினால் கமெராவினை கிரீன்விச் சராசரி நேரத்திற்கு மாற்றிக்கொள்ள வேண்டும். குறிப்பு 1ஐ பார்க்கவும்.

» இவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் புகைப்படத்தின் சாட்சியப்பெறுமதியினை அதிகரிக்கின்றீர்கள் என்பதுடன் சாட்சியினை உண்மைப்படுத்துவதற்கும் உதவுகின்றீர்கள்?

9. வீடியோ பதிவினை மேற்கொள்ளும் போது

» சாத்தியமெனில் கூற்றுக்களைக் கூறுவதைத் தவிர்க்கவும். அதற்கு பதிலாக வீடியோ சான்றினை பாதிக்கப்பட்டவர்/ சாட்சியின் சான்றுடன் இணைக்கவும். வேறு வார்த்தையில் கூறுவதாயின் நேரடியாக படம் எடுக்கும் போது நடைபெறும் நிகழ்வுகளை அவை நடைபெறும் விதத்திலே மௌனமாக எவ்வித கூற்றுக்களும் இன்றி எடுக்கவும். அதன் பின்னர் வீடியோ பதிவிலே தோன்றுவது போலவே என்ன நடந்துள்ளது என்பது பற்றி அறிந்துள்ள கண்களால் கண்ட சாட்சியுடன் நேர்காணலை நடத்தி வீடியோ பதிவுடன் நேர்காணலின் பாதிக்கப்பட்டவர்/ சாட்சியின் கூற்றுக்களை இணைப்பதற்கு முறையொன்று இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தவும். இதனுடன் சேர்த்து வீடியோ பதிவும் பாதிக்கப்பட்டவர்/ சாட்சியின் வாக்குமூலங்களும் பதிவுகளும் சான்றுகளாக மாறுகின்றன.

» யார் படம் எடுப்பது என்பது பற்றிய சகல தகவல் களையும் எழுதிக்கொள்வதையும் மேலும் யார் சமூகமளித்துள்ளனர், திகதி, நேரம், பதிவு செய்த இடம் ஆகியவற்றையும் எழுதிக்கொண்டு படம் எடுக்கத்தொடங்கிய ஆரம்பத்தில் இருந்து படம் யார் யார் வசம் பாதுகாப்பாக வைத்திருக்கப்பட்டுள்ளதோ அவர்களின் பெயர்களையும் குறித்துக் கொள்ளவும் (பார்க்க பிரிவு டி : பாதுகாத்து வைத்திருப்போர் வரிசை. மேலும் வீடியோக்களில் ஏதாவது பிரதிகள் தயாரிக்கப்பட்டிருப்பின் அவற்றையும் குறித்துக் கொண்டு அதனை யார் தயாரித்தனர் அல்லது அதன் பிரதி யாரிடம் உள்ளதென்பதையும் குறித்துக் கொள்ளவும்.

» இயலுமான அளவு, ஒரே நிகழ்வினை அல்லது அமைவிடத்தினைக் கோப்பிடும் போது அடிக்கடி படம் எடுத்தலை நிறுத்தி நிறுத்தி ஆரம்பிக்க வேண்டாம். இது வீடியோவின் ஒரு பகுதியினை துண்டித்த குற்றச்சாட்டு ஏற்படுவதை தவிர்ப்பதற்கு உதவும்.

» வீடியோவின் உள்ளடக்கம் எந்தளவிற்கு அமைவிடத்தையும் நேரத்தையும் திகதியினையும் சுற்றுச்சூழலையும் சிறியளவிற்கு காட்டுகின்றதோ[3] அந்தளவுக்கு அது பெறுமதிமிக்க சான்றாக இருப்பதற்கான சாத்தியத்தினைக் கொண்டுள்ளது. வீடியோவின் சாட்சியினை அதிகரிப்பதற்கு பாதிக்கப்பட்டோர் சாட்சிச்சான்று உதவி வழங்க முடியும்.

» நாடகமயமாக்குதலைத் தவிர்க்கவும் - நீங்கள் அங்கே இல்லையென்கின்றதைப் போல பாவித்து படத்தினை எடுக்கவும். நீங்கள் ஒரு கமெராவைப் போலவும் ஆனால் குறிப்பிட்ட செய்தியை அனுப்புகின்ற ஒருவராக இல்லையென்பதாகவும் கருதிக் கொள்ளுங்கள்.

» நடைபெறுகின்ற ஒரு வன்முறை மிகு செயற்பாட்டினை படமெடுக்கும் போது சான்றினை விட உங்களது பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குங்கள். படம் எடுப்பது பாதுகாப்பானது என நீங்கள் தீர்மானித்தால் இயலுமான அளவுக்கு பெரிய பரப்பினில் படமெடுத்து அதன் பின்னர் நிறுத்தாமல் சிறிய பரப்பிலே விபரமாக விடயங்களைப் பதிவு செய்யவும்.

» இறந்த ஒருவரை, பாதிக்கப்பட்டவரை அல்லது வன்முறையின் ஏனைய இடங்களைப் படமெடுக்கும் போது 360 பாகையில் சுற்றி மற்றும் தூரத்தில் இருந்தும் நெருக்கமாக இருந்தும் உடலைச் சுற்றியும் தொடர்ச்சியாகப் படமெடுக்கவும். படிப்படியாக சுற்றி சுற்றி வந்து உடலைச் சுற்றி வட்டமிட்டு இறுதியாக நெருக்கமாக வந்து அடையாளப்படுத்தக்கூடிய சான்று அல்லது காயங்கள் இருப்பின் அதனைப் படமெடுக்கவும்.

» திரையிலே அன்றைய திகதி மற்றும் நேரம் ஆகியவைகளைக் காட்டுவது படமெடுக்கும் போது சிறந்ததொரு உத்தியாகும். மேலும் திகதியும் நேரமும் துல்லியமாகப் பதியப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தவும

3 அசையாத புகைப்படங்களைப் பார்க்க. வீடியோக்கள் குறைந்தளவு resolution கொண்டிருக்கின்றன. மேலும் சிறியளவிலான அம்சங்களை பதிவு செய்வதற்கு பயன் குறைந்தவையும் ஆகும்.

*புகைப்படம்/ வீடியோ தொடர்பான சகல தகவல்களையும் யார் எடுத்தது, எப்போது, எங்கே, ஏன், எப்படி போன்றவற்றினையும் யார் தகவல்களை வழங்கியது என்பதையும் வேறு யார் பிரசன்னமாகியிருந்தனர் என்பதையும் குறிக்கவும்.*

**பெட்டி 5**

**உதாரணக் கருவி : சாட்சி ச்சான்று கள வழிகாட்டியாக வீடியோ**

சாட்சியின் வீடியோ கள வழிகாட்டிச் சான்றாக இது வழிகாட்டிகள். உத்திகள், நடைமுறைகள் மற்றும் கருத்துக்கள் ஆகியவற்றினை நடைமுறைப்படுத்துனர்கள் இயலுமான அளவு உயர்ந்த தரத்தில் வீடியோக்களை சேகரித்து ஆவணப்படுத்துவதற்கு உதவுகின்றது. இது 'வசயைட-சநயனல' தராதரமெனவும் அழைக்கப்படுகின்றது. இது விசாரணையாளர்கள், பகுப்பாய்வாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் நீதிபதிகள் ஒரு குறிப்பிட்ட நபரின் குற்றவியல் விசாரணையில் அவரின் குற்றமற்ற தன்மை அல்லது குற்றத்தின் தீர்மானத்தினை எடுப்பதற்கு வீடியோவில் தங்கியிருப்பதனை உறுதிப்படுத்துவதுடன் அல்லது ஒரு சிவில் வழக்கிலே பரிகாரம் வழங்குவதற்காகவும் வீடியோவில் தங்கியிருப்பதை உறுதிப்படுத்துகின்றது.

- வழிகாட்டலானது பின்வருவனவற்றினை உள்ளடக்குகின்றது.
- ஒரு வீடியோவினை சான்றாக பயன்படுத்துவதற்காக பொருத்தமான அடிப்படை சட்டக்கோட்பாடுகள் மற்றும் செயன்முறைகள்
- மேம்படுத்தப்பட்ட சான்றுப் பெறுமதியுடன் வீடியோவினை எடுப்பதற்கான குறிப்புக்கள்
- சான்று நோக்கங்களுக்காக வீடியோக்களை எடுப்பது. ஒழுங்கமைப்பது மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கான வழிகாட்டல். சாட்சிகளின் வீடியோக்களை பயன்படுத்துவதற்காக வீடியோ உள்ளடக்கத்தையும்,வழிகாட்டலையும் பரிசீலிப்பதற்கான உத்திகள்

https://vae.witness.org/video-as-evidence-field-guide/

WITNESS என்பது ஒரு NGO ஆகும். இது உலகம் முழுவதிலும் செயற்படுநர்களும் பிரஜைகளும் வீடியோக் களை பாதுகாப்பாகவும், நெறிசார் முறையிலும் பயன்படுத்து வதற்காக மனித உரிமை துஂபிரயோகங்களை செயற்திறன்மிகு முறையில் வெளிக்காட்டுவதற்காக மனித உரிமைகள் மாற்றங்களுக்காக போராடுவதற்காக பயிற்சியும் உதவியும் வழங்கி வருகின்றது.

10. பாதுகாத்து வைத்திருக்கும் வரிசையினை பேணுதல்

- பாதுகாத்து வைத்திருக்கும் வரிசைக்கான பிரிவு டி யைப் பார்க்க.
- புகைப்படங்கள் மாற்றப்படாத அசலானவையாக உண்மைப்படுத்துவதற்கு ஏற்றவையாக இருக்க வேண்டும். இவை மாற்றப்பட்டால் உதாரணமாக கத்தரிக்கப்பட்டால் அதனை ஆவணப்படுத்தி ஏன் என விளக்குவதற்கான நிலையில் இருக்க வேண்டும்.
- சகல புகைப்படங்களும் தெளிவாகப் பட்டியலிடப்பட்டு பாதுகாத்து வைத்திருப்போர் வரிசை பேணப்படல் வேண்டும்.
- சகல புகைப்படங்களும் வீடியோச் சான்றுகளும் நிரூபிக்கப்பட்ட இலக்கமிடல் முறைமையில் பட்டியலிடப்படல் வேண்டும். இலக்கமிடல் முறைமையானது இந்தக் குறிப்பிட்ட புகைப்பட வீடியோவுடன் ஆதாரப்படுத்தும் ஏனைய சான்றுடன் இணைக்கப்படல் வேண்டும் (பாதிக்கப்பட்டவர் / சாட்சி/ சான்று)
- நீங்கள் புகைப்படம் வீடியோ தொடர்பான சகல தகவல்களையும் குறித்துக்கொள்ள வேண்டும் - யார் எதனை எடுத்தது? எங்கே, எப்பொழுது, ஏன் மற்றும் எப்படி. மேலும் புகைப்படம் எடுப்பவர், படத் தயாரிப்பாளர், இதனைப் பதிவதற்கு யார் தகவலினை வழங்கியது. மேலும் வேறு யார் பிரசன்னமாகி யிருந்தனர் என்பவை உள்ளடங்கலாக. கீழே புகைப்படம் ஒன்றிற்கான உதாரணம் வழங்கப்பட்டுள்ளது.

**இடத்தின் புகைப்படப் பதிவு**

| | | | | |
|---|---|---|---|---|
| இடத்தின் பெயர் | | | இடத்தின் குறியீடு | |
| புகைப்படம் எடுத்தவர் | | | | |
| ஏனைய பிரசன்னமாகியிருந்த நபர்கள் | | | | |
| கருத்துக்கள் | | | | |
| திகதி | Disk இல | புகைப்பட இல | விடய இல. | விபரம் |

புகைப்படச் சுருளினால் புகைப்படங்கள் எடுக்கப்பட்டிருந்தால் புகைப்படச் சுருளின் உற்பத்தித் தொடரிலக்கத்தினைக் குறித்துக் கொள்ளவும். மேலும் எடுக்கப்பட்ட ஒவ்வொரு புகைப்படம் தொடர்பாகவும் ஒவ்வொரு அசலான புகைப்பட இலக்கத்தினையும் எழுதிக் கொள்ளவும்.

» டிஜிடல் கமெராக்களுக்கு சின்னங்களுடன் அல்லது நீரடையாளங்களுடன் (அடையாளப்படுத்தும் குறியீடு அல்லது அடையாளச்சின்னம்) தொழினுட்பத் தீர்வினைப் பயன்படுத்தவும். இதனால் புகைப்படங்கள் வீடியோக்கள் எடுக்கப்படும் நேரத்திலேயே அவற்றினை உண்மைப்படுத்துவதற்கு இவற்றைப் பயன்படுத்த முடியும். மேலும் இது புகைப்படத்தின் முக்கியமான பகுதியை திரிபுபடுத்தவோ அல்லது பாதிக்கவோ முடியுமென்பது பற்றியும் அவதானமாக இருக்கவும். ஒவ்வொரு டிஜிட்டல் புகைப்படமும் வீடியோவும் அடங்கிய கோப்பு பொதுவாக பாரிய அளவிலான மெடா தரவினை உள்ளடக்கும் (திகதியும் எடுக்கப்பட்ட நேரமும் திகதியும் மாற்றப்பட்ட நேரமும், கமெராவின் வகை, ஒளியின் அளவு மற்றும் குவிய நீளம்). மெடா தரவு அட்டவணையின் கீழ்வரும் உதாரணத்தை பார்க்கவும்.[4]

» புகைப்படமொன்று சான்றாகப் பயன்படுத்தப்படுவதற்கு அது அசலானதாக இருக்க வேண்டும். உண்மையான புகைப்பட பிம்பத்திலிருந்து எதுவுமே அழிக்கப்படலாகாது மேலும் உண்மையான பிம்பத்திற்கு எதுவும் சேர்க்கப்படலாகாது. உங்களிடம் புகைப்படத்தின் பிரதி மாத்திரம் இருந்தால் நீங்கள் அது உண்மையானது என்றும் அசலான புகைப்படத்தின் மாற்றப்படாத பிரதி என்றும் நிரூபிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

11. பாதுகாப்பான முறையில் புகைப்படங்களையும் வீடியோக்களையும் களஞ்சியப்படுத்திப் பேணவும்(பார்க்க அத்தியாயம் 13 தகவல்களினை களஞ்சியப்படுத்தி கையாளுதல், பெட்டி 3 ஓடியோ வீடியோ பதிவுகளையும் புகைப்படங்களையும் களஞ்சயப்படுத்தல்)

| இல | கோப்பின் பெயர் | அளவு | கமெராவின் வகை/ மாதிரி | எடுத்த திகதி | எடுத்த நேரம் | மாற்றப்பட்ட திகதி | மாற்றப்பட்ட நேரம் | ISO |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8.jpg | 287K | SONY CYBER-SHOT | 14/02/ 2003 | 21:29 | 17/02/ 2003 | 23:16 | 100 |
| 2 | Classroom - 30.JPG | 2037K | SONY DSC-W115 | 13/05 2009 | 15:25 | 13/05/ 2009 | 15:25 | 320 |
| 3 | DSC_0250. JPG | 1721K | NIKON D90 | 15/05/ 2010 | 10:23 | 15/05/ 2010 | 10:23 | 640 |

4 இது பிரித்தெடுக்கப்பட்டது. சில அசலான மெடா தரவுகளின் நிரல்கள் அழிக்கப்பட்டுள்ளன.

## 3. வரைபடம் தயாரித்தல்

வரைபடமொன்று புகைப்படமொன்றிற்கு ஒரு பயன்மிக்க மாற்றீடாக அமையமுடியும் அல்லது அதற்கான ஒரு ஆதாரமாக அமைய முடியும். மேலும் வன்முறை இடம்பெற்ற இடத்தின் அளவு மற்றும் தூரம் தொடர்பான உறவின் நிரந்தரப் பதிவினை அது வழங்குவதுடன் பௌதீகச் சான்றினையும் அதனுள் கொண்டிருக்கின்றது. இந்த வரைபடமானது இறுதியில் சான்றின் ஒரு அடிப்படை வடிவமாக பயன்படுத்தப்படாமல் போனாலும் உங்களுடைய ஞாபகத்தினை மீண்டும் புதுப்பிப்பதற்கு உதவும்.

நீங்கள் எடுத்த எந்தவொரு புகைப்படத்திலும் உள்ள தகவல்களை தெளிவுபடுத்துவதற்கு நீங்கள் ஒரு வரைபடத்தினை தயாரிப்பதற்கு தீரமானிக்கலாம் (கமெராவின் நிலை மற்றும் புகைப்படம் எடுப்பவரின் நிலை உள்ளடங்கலாக)

1. புகைப்படங்கள் எடுத்து முடிந்த பிறகு எதுவும் நகர்த்தப்படுவதன் முன்னர் உங்களுடைய வரைபடத்தினை தயாரிக்கவும்.
2. ஒட்டுமொத்த இடத்தினையும் பொருட்களையும் உள்ளடக்கி உள்ள தகவல்களையும் வரைபடமாக வரையவும். (சம்பந்தப்பட்டுள்ள தனிநபர்களின் அடையாளம்)
3. நீங்கள் ஒரு பருமட்டான வரைபடத்தினை (வன்முறை நடைபெற்ற இடத்தின் அண்ணளவான தோற்ற அமைப்பு மற்றும் பொருட்கள் மட்டும் கட்டமைப்புக்களினதும் பொருட்களுக்கிடையிலான தூரத்தினதும் அளவீடுகளின் பதிவு ஆகியவை) அல்லது இறுதியான / முடிக்கப்பட்ட வரைபடத்தினையும் உருவாக்கலாம் (பருமட்டான வரைபடத்தின் முடிக்கப்பட்ட வடிவம், இது பொதுவாக எதிர்கால வகைப்பொறுப்பு நடைமுறைகளின் போது சமர்ப்பிக்கப்படும்)
4. வன்முறை நடைபெற்ற இடத்தினை நீங்கள் வரைபடமாக வரைந்தால் நீங்கள் அதனை பறவைக் கோணத்திலிருந்து வரையலாம் (அது பொதுவான வரைபட வடிவமாகும். ஆனால் அது பொருட்களின் உயரத்தினைக் காட்டாது). அல்லது ஏனைய கண்ணோட்டங்களை உள்ளடக்கலாம் (பக்கக்கோணம்)
5. பின்வருவனவற்றை உள்ளடக்குவதை உறுதிப்படுத்தவும்:
   - வரைபடம் எதனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது பற்றிய சிறிய விளக்கம்.
   - வரைபடத்தில் ஏதாவது குறியீடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தால் அவற்றின் விளக்கப்பட்டியல்.
   - வரைபடத்தின் திகதி, நேரம் மற்றும் இடம் ஆகியவை (வேறு ஏதாவது முக்கியமான அடையாளப்படுத்தும் தகவல்கள் இருப்பின்)
   - வரைபடத்தினை வரைந்தவரின் பெயர்.
   - திசைகளினைச் சுட்டிக்காட்டுதல். (வடக்கு)
   - வரைபடத்தின் அளவீடு (உதாரணம் - 1:1)
   - அளவீட்டு அட்டவணை (வரைபடத்துடன் தொடர்புடைய தூரங்களையும் அளவீடுகளையும் விளக்குதல் அனைத்து தூரங்களும் வரைபடத்திலே அண்ணளவானவை என்பதை குறிப்பிடுகின்ற குறிப்பு தயாரிக்கப்படுதல் வேண்டும்)
6. உங்களுக்கு ஆற்றல் இருந்தால் பின்வருவனவற்றினை பயன்படுத்துகின்ற வன்முறை இடம்பெற்ற இடத்தினை வரைவதனைப் பரிசீலிக்கவும்:
   - அடிப்படை வரைபடத் தயாரிப்பு (அடிப்படைத் தளத்தினைப் பயன்படுத்துதல் உதாரணமாக இடத்தினை துல்லியமாக அளவிட வேலியினைப் பயன்படுத்தல்)
   - செவ்வக ஆள்கூற்று வரைபடத் தயாரிப்பு (இரண்டு அடிப்படை கோடுகளைப் பயன்படுத்துதல்)
   - முக்கோண வரைபடத் தயாரிப்பு (இரண்டு நிலையான புள்ளிகளைப் பயன்படுத்துதல்)
   - துருவ அச்சு ஆள்கூற்று தயாரிப்பு (நிலையான அல்லது தெரிந்த புள்ளிகளையும் கோணங்களையும் தூரங்களையும் எடுத்துக் காட்டுவதற்கு பயன்படுவது) சம்பவ நிலையினைப் பதிவதற்கு

GPS ,Total Stations களைப் பயன்படுத்துவதைப் பரிசீலிக்கவும் இவை வரைப்படங்களைத் தயாரிக்கும் முறைமைகளாகும் என்பதுடன் இவை துருவ ஆள்கூற்று அளவுகளை எடுக்கக்கூடியதாக இருப்பதுடன் அவற்றினை அச்சு ஆள்கூறுகளிற்கு மாற்றுகின்றன. இவற்றினை நிபுணர்களினால் சிறப்பாக செய்ய முடியும். GPS னைப் பயன்படுத்தினால் அதைத் துல்லியத் தன்மையின் அளவிற்காக பரிசீலிக்கவும் (இதற்கான வாசிப்பு இருக்கும் சில வாசிப்புக்கள் துல்லியத்தன்மையின் மீட்டர் அளவின் கீழ் காட்டப்படும்). ஒரு நிலையான அசையாத பொருளொன்றின் GPS ஆள்கூற்றினைப் எடுப்பது சிறந்ததாகும். ஏனெனில் இது அங்கிருந்து பௌதீக ரீதியாக பொருட்களை அளப்பதை விட இலகுவானதாகும்.

*நடைமுறைப்படுத்துனர்கள் பாதுகாத்து வைத்திருக்கும் வரிசை சம்பந்தப்படுகின்ற நியாயாதிக்கத்துக்கு பொருத்தமான சட்டத் தேவைப்பாடுகள் பற்றியும் அவதானமாக இருக்க வேண்டும்.*

## D. பாதுகாத்து வைத்திருக்கும் வரிசை

### 1. அறிமுகம்

பாதுகாத்து வைத்திருக்கும் வரிசை என்பதன் அர்த்தம் சான்றுகள் சேகரிக்கப்பட்ட நேரம் முதல் அவை நீதிமன்றத்தின் முன் அல்லது வகைப்பொறுப்புப் பொறிமுறையின் முன் சமர்ப்பிக்கப்படும் வரை அவற்றின் நேர்மையை எடுத்து விளக்குவதற்காக அவற்றின் சேகரிப்பு, பாதுகாத்து வைத்திருப்பு, மாற்றம் ஆகியவற்றை கால வரிசையில் கடதாசிப் பாதையினை ஆவணப்படுத்திப் பேணுகின்ற செயன்முறை யாகும்.

பாதுகாத்து வைத்திருக்கும் வரிசை என்பது ஆவணம் அல்லது பொருள் எங்கிருந்து வருகின்றதென்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஆவணமோ அலலது பொருளொன்றோ இடையீடு மேற்கொள்கின்ற காலப்பகுதியிலே அதாவது நடைமுறைப் படுத்துனர்கள் அவற்றினை சேகரித்தது முதல் அதனை பாலியல் வன்முறைக் குற்றத்தின் சான்றாக பயன்படுத்தும் வரையில் அதில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு வழியாகும். பாதுகாத்து வைத்திருக்கும் வரிசை மிகவும் முக்கியமானதாகும். இது அன்றி ஒரு நீதிமன்றமோ அல்லது வகைப்பொறுப்பு பொறிமுறையோ ஆவணமொன்றினை அல்லது பொருளொன்றினை பாலியல் வன்முறைக் குற்றச்செயலின் சட்ட நடவடிக்கையின் பொழுது அவற்றினைச் சான்றாக ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். அல்லது ஏனைய சட்ட நடவடிக்கையில் சான்றாக ஏற்றுக்கொள்ள மறுத்து ஆவணம் அல்லது பொருள் குற்றச்செயலில் சிறந்த சான்றல்ல என்று தீர்மானிக்கலாம். எனவே இது ஒரு நம்பகத்தன்மைக்குரிய வினாவாகும். சான்றின் உண்மைத்தன்மையானது நம்பக்கூடியதாக இருக்க வேண்டுமென்பதை ஏற்று திருப்தியடைய வேண்டும். மேலும் அது மாற்றப்பட்டது அல்லது திரிபுபடுத்தப்பட்டது அல்லது வேண்டுமென்றே மாசுபடுத்தப்பட்டது என்று எண்ணும் நிலை ஏற்படக்கூடாது. பாதுகாத்து வைத்திருக்கும் வரிசைச் செயல்விதிகள் நடைமுறைப்படுத்துனர்கள் இதனை மேற்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும். இந்த வழியில் சாட்சி சான்றுகளுக்கு அதன் உரிய பெறுமதி வழங்கப்படலாம்.

பாதுகாத்து வைத்திருக்கும் வரிசைக் கோட்பாடுகள் கீழெ வழங்கப்பட்டுள்ளவாறு ஆவணப்படுத்தலுக்கும் ஆவணச் சான்றுக்கும் பௌதீகச்சான்றுக்கும் பிரயோகிக்கத்தக்கவை யாகும். இதிலே பௌதீக வடிவிலே அல்லது ஆவண வடிவிலே டிஜிடல் சான்றுகளை உள்ளடக்குகின்றன (உதாரணமாக கடதாசி, புகைப்படங்கள், மெமரி குச்சிகளிலான டியோ பதிவுகள், பௌதீகச்சான்றுகளுடன் தொடர்புடைய சில தனித்துவமான சான்றுகள் பெட்டி 7 இலே மாத்திரம் குறிப்பிடப்படுகின்றன. பாதுகாத்து வைத்திருக்கும் வரிசை) – பௌதீகச் சான்றுக்கான தனித்துவமான தன்மைகள் டிஜிடல் முறை வடிவத்திலே டிஜிடல் சான்றுகள் பாதுகாத்து வைத்திருக்கும் வரிசையினை பேணுவதானது அத்தியாயம் 10 இலோ டிஜிடல் சான்று என்னும் பிரிவில் வழங்கப்பட்டுள்ளது. பாலியல் வன்முறையின் சாட்சிகளின் வகைகள்

### 2. கோட்பாடுகள்

ஆவணமொன்றின் அல்லது பொருளொன்றின் பாதுகாத்து வைத்திருக்கும் வரிசையினைப் பேணுவதற்கு நடைமுறைப் படுத்துனர்கள் பின்வருவனவற்றினைப் பதிய வேண்டும்.

» எவ்வாறு ஆவணம் அல்லது பொருள் சேகரிக்கப்பட்டது

» ஆவணம் அல்லது பொருளின் உடமையானது வெவ்வேறு நபர்களுக்கிடையில் அத்துடன் / அல்லது நிறுவனங்களுக்கிடையில் மாற்றப்பட்டுள்ளது.

பாதுகாத்து வைத்திருக்கும் வரிசையுடன் தொடர்புடைய பொருத்தமான நியாயாதிக்கத்தில் சட்ட தேவைப்பாடுகள் பற்றியும் நடைமுறைப்படுத்துனர்கள் அறிந்திருக்க வேண்டும்.

**பெட்டி 6**

**பாதுகாத்து வைத்திருக்கும் வரிசையில் பிரதான படிகள்**

ஆவணங்களைச் சேகரிக்கத் தீர்மானிக்கின்ற மிகவும் சாத்தியமற்ற சூழ்நிலைகளில் பௌதீகச் சான்றுகளை சேகரிக்க தீர்மானிக்கின்ற நடைமுறைப்படுத்துனர்கள் பாதுகாத்து வைத்திருக்கும் வரிசையினை பேணுவதற்காக பின்வரும் பிரதான படிகளை பின்பற்ற வேண்டும்.

» ஆவணம் அல்லது பொருளை உரிய முறையில் பட்டியலிடுதல்

» பூரணமாக குறிப்புக்களை தயாரித்தல் விசேடமாக தனித்த கடதாசியில்

» ஆவணத்தினை அல்லது பொருளினை சான்றுப்பையில் அல்லது கடிதஉறையில் அல்லது பொருத்தமெனில் பெட்டியினுள் இடுதல்

» சான்றுப்பையிலோ அல்லது கடித உறையிலோ அதன் முத்திரையின் மீது ஒப்பமிடுதல்

» ஆவணம்/ பொருள் இடப்பட்டுள்ள சான்றுப்பையிலே அல்து கடதாசி உறையிலே குறிப்பினைச் சேர்த்தல்

» ஆவணம்/ பொருள் தனிநபர்களுக்கிடையில் அல்லது நிறுவனங்களுக்கிடையில் மாற்றப்படுகையில் அவற்றின் பதிவினை பேணுதல்

இந்த நடவடிக்கைகளுக்கு விரிவான வழிகாட்டல்களுக்கு தயவு செய்து கீழே பார்க்கவும்.

#### i. எவ்வாறு ஆவணம் அல்லது பொருள் சேகரிக்கப்பட்து

இதிலேயுள்ள பிரதான பொதுவான குறிக்கோள் என்னவெனில் ஒவ்வொரு ஆவணமும் அல்லது பொருளும் குறைந்தது பின்வரும் தகவல்களுடன் பட்டியலிடப்பட வேண்டும் (பௌதீக பொருட்களுக்கு சேகரிப்பு மற்றும் பொதியிடல் முறைகள் வித்தியாசப்படுகின்ற போதிலும்)

» சம்பவ அடையாளப்படுத்தி — குறிப்பிட்ட சம்பவத்திற்கு ஒதுக்கப்படுகின்ற இலக்கமானது அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சகல தகவல்களையும் இணைக்கலாம்

» சேகரிப்பு திகதி

» ஆவணத்தினை அல்லது பொருளினைச் சேகரித்த நடைமுறைப்படுத்துனரின் பெயர் மேலும் சேகரிப்பின் போது சமூகமளித்திருந்த வேறு நபர்களின் பெயர்கள்.

» ஆவணம் அல்லது பொருள் சேகரிக்கப்பட்ட போது அவை இருந்த துல்லியமான அமைவிடம் மேலும் யாரிடமிருந்து அது சேகரிக்கப்பட்டது அல்லது எவ்விடத்திலிருந்து சேகரிக்கப்பட்டது.

» சேகரிக்கப்பட்ட ஆவணத்தினது/சான்றினது வகை.

பின்வரும் தகவல்களுடன் நடைமுறைப்படுத்துனர்கள் குறிப்புக்களை உள்ளடக்க வேண்டும்.

» ஆவணமோ அல்லது பொருளோ தமது உடைமையாக இருக்கும்போது பாதுகாப்பாக வைத்திருக்கப்படுகின்றது என உறுதிப்படுத்துவதற்காக அமுல்ப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் (உதாரணம் இது பூட்டிடப்பட்ட அலுமாரியினுள் வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்துனரின் அணிக்கு மாத்திரம் அணுகல் வழங்கப்பட்டது)

» பொருத்தமெனின் பாதுகாத்து வைத்திருக்கும் நிலைமைகள், உதாரணமாக குருதி அல்லது உயிரியல் மாதிரிக்களுக்காக - இது பாதுகாக்கப்பட்டது, குளிர்ப்பதனப்படுத்தப்பட்டது, DNA பிரித்தெடுக்கப்படுவதை இயலுமாக்குவதற்காக குறித்த வெப்பநிலை வீச்சு.

» நடைமுறைப்படுத்துனர் தாமே ஆவணத்தை அல்லது பொருளினைச் சேகரிக்காவிட்டால் ஆவணத்தை அல்லது பௌதீகச் சான்றினைக் கையளிக்கின்ற நபர்களுக்கிடையில் ஆவணத்தை அல்லது பொருளினை பயன்படுத்துவதற்கான ஏதாவது உடன்படிக்கைகள், விதிகள் அல்லது கலந்துரையாடல்கள்.

நடைமுறைப்படுத்துனர் சேகரிக்கின்ற ஏதாவது ஆவணங்கள் அல்லது பொருட்கள் சான்றுப்பையில் கவனமாக இடப்படல் வேண்டும் (இலகுவாக மூடி முத்திரையிடக்கூடிய பிளாஸ்திக் பொதிகள் போதுமானதாக இருக்கும். இதிலே ஆவணத்தில் நீரோ ஈரத்தன்மையோ இல்லாதிருக்கவேண்டும். மேலும் அமிலமற்ற கடதாசிக் கடிதவுறை விரும்பத்தக்கதாகும். இதிலும் நீர் அல்லது ஈரத்தன்மை இல்லாதிருக்க வேண்டும்) பின்வருவனவற்றினை நடைமுறைப்படுத்துனர் உறுதிப்படுத்த வேண்டும்.

» சான்றுப்பை/கடிதவுறை முத்திரையிடப்பட்ள்ளது.

» ஆவணத்தினை அல்லது பொருளினைச் சேகரித்தவரினால் முத்திரையின் மேல் ஒப்பமிடப்பட்டுள்ளது.

» சான்றுப்பை/கடிதவுறை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் திறக்கப்படவில்லை. ஆவணம் அல்லது பொருள் இடப்பட்டுள்ள

சான்றுப்பையில்/கடிதவுறையில் இணைக்கப்பட்டுள்ள குறிப்பானது ஒரு தனித்த கடதாசியில் எழுதப்படுவதே சிறந்ததாகும்.

ஆவணத்தினைச் சேகரிக்கின்ற நபரினது மூலம், திகதி, அமைவிடம் மற்றும் பெயர் ஆகியவை ஒன்றாக இருந்தால் ஒவ்வொரு சேகரிக்கப்படும் ஆவணத்திற்கும் பொருளுக்கும் தகவல்கள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய தேவையில்லை. ஒரு தனித்த மூலத்திலிருந்து ஒரு தனித்த தனிநபரினால் பெரும் எண்ணிக்கையிலான ஆவணங்கள் சேகரிக்கப்பட்டால் உதாரணமாக அந்த ஆவணத்திற்கான தகவல்களை அந்த தொகுதிக்காக பூர்த்தி செய்யமுடியும். தேவையாயின் பட்டியிலிட முடியும். எவ்வாறாயின் செயன்முறையானது

இந்த மாறிகள் மாற்றமடையும் போது மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படல் வேண்டும். குறிப்பாக ஆவணங்கள் அல்லது பொருட்களின் மூலங்களில்

மேலதிகமாக:

» ஆவணங்களைப் பொருத்தளவில் பூரணமான ஆவணங்கள் இயலுமான அளவிற்கு சேகரிக்கப்பட்டு அவற்றின் அசலான தொடரில் பேணப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தவும்.

» எந்தவொரு பக்கத்தினையோ அட்டையினையோ ஏனைய ஆவணப்படுத்தல் பகுதிகளையோ அகற்ற வேண்டாம். இது எண்பிக்கக்கூடிய தன்மையினை பாதூரமாக பாதிக்கும்.

**பெட்டி 7**

## பாதுகாத்து வைத்திருக்கும் வரிசை – பௌதீகச் சான்றுக்கான தனித்துவமான அம்சங்கள்

இந்தப் பிரிவிலே குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாத்து வைத்திருக்கும் வரிசைக்கான பொதுவான கோட்பாடு களுக்கு மேலதிகமாக பௌதீகச் சான்றுகளின் பொருட்களினை கையாள்கின்ற நடைமுறைப்படுத்துனர்கள் பின்வருவனவற்றினை மேற்கொள்ள வேண்டும்.

1. சம்பந்தப்பட்டுள்ள பொருளுக்கு பிரயோகிக்கத்தக்க சேகரிப்பு மற்றும் பொதியிடல் முறைமைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும் (உடல் திரவங்கள் சேகரிக்கப்பட்டு உடைகள் மற்றும் ஏனைய ஆவணங்களிலிருந்து வேறாக்கப்பட்டு பொதியிடப்பட வேண்டும்)
2. ஆவணம் அல்லது பொருள் எவ்வாறு சேகரிக்கப்பட்டது என்பதன் கீழ் உள்ள தகவலுக்கு மேலதிகமாக பின்வரும் குறிப்புக்களை உள்ளடக்கவும்.
   - பாலியல் வன்முறை நிகழ்ந்த பின்னர் எவ்வளவு விரைவாக பௌதீகச் சான்று கண்டெடுக்கப்பட்டது.
   - பௌதீகச் சான்று கண்டெடுக்கப்பட்ட இடம் சம்பவம் நடந்த இடத்திற்கு எவ்வளவு அண்மையாக உள்ளது.
   - இந்த உண்மைகளை அவர்கள் எவ்வாறு அறிவார்கள்?
3. வன்முறை நடைபெற்ற இடத்திற்கு அருகில் உள்ள எந்தச் சாட்சிகளுடனும் நேர்காணலை நடத்தி அவர்கள் தருகின்ற தகவல்களினை முன்னெடுத்து எவ்விதமான பௌதீகச் சான்றுகளைச் சேகரிக்க முன்னர் ஏனைய சாட்சிகளையும் நேர்காணவும்.

**ii. ஆவணங்களின் உடைமையானது அல்லது விடயங்களின் உடைமையானது எப்பொழுதாவது தனி நபர்களுக்கிடையில் அல்லது நிறுவனங்களுக்கிடையில் மாற்றப்பட்டுள்ளதா?**

ஆவணம் அல்லது விடயம் எப்பொழுதாவது தனிநபர்களுக்கிடையில் அல்லது நிறுவனங்களுக்கிடையில் மாற்றப்பட்டிருந்தால் மாற்றத்தின் விபரங்கள் பற்றிய பதிவினைப் பேணுவது முக்கியமானதாகும். இதனை மாற்றப்பதிவு என இலகுவாகக் காட்ட முடியும்.

மாற்றம் பற்றிய இப்பதிவானது ஒவ்வொரு ஆவணம் அல்லது விடயம் மாற்றப்படுகையிலும் உருவாக்கப்படல் வேண்டும்.

- சம்பவ அடையாளப்படுத்தி - சம்பவம் தொடர்பான சகல தரவுகளுடனும் இணைக்கப்படக்கூடிய ஒரு குறிப்பிட்ட இலக்கமானது ஒரு குறிப்பிட்ட சம்பவத்திற்கு வழங்கப்படுதல்
- சேகரிக்கப்பட்ட ஆவணம் அல்லது சான்றின் வகை
- மாற்றத் திகதி
- மாற்றத்திற்கான காரணம்
- மாற்றுபவர் மற்றும் மாற்றத்தினைப் பெற்றுக் கொள்பவர்களின் கையொப்பங்கள்
- சாத்தியமெனின் ஆவணத்தினை அல்லது விடயத்தினைக் கையாளுகையில் அல்லது களஞ்சியப்படுத்துகையில் அவதானிக்கப்பட்ட பாதுகாப்பு நிலைமைகள்

பொதுவாக, பாதுகாப்பாக வைத்திருக்கப்படும் மாற்றங்களின் எண்ணிக்கையினை இயலுமான அளவு குறைவாகப் பேணுவது சிறந்ததாகும்.

பாதுகாப்பாக வைத்திருப்போர் வரிசைக்கான படிவத்திற்கான உதாரணத்தினை பிற்சேர்க்கை 9இல் பார்க்கவும்.

# அத்தியாயம் 13 உள்ளடக்கம்

அத்தியாயம் 13: தகவல்களைக் களஞ்சியப்படுத்துதலும் கையாளுதலும் .............................. 203

A. அறிமுகம் .............................. 203

B. பிரதான கோட்பாடுகள் .............................. 203

*பெட்டி 1*
களஞ்சியப்படுத்தலின் பிரதான கோட்பாடுகள் .............................. 203

*பெட்டி 2*
மருத்துவ - சட்ட / தடயவியல் சான்றுகளை களஞ்சியப்படுத்துதல் .............................. 205

C. கைகளினால் களஞ்சியப்படுத்தும் முறைமை .............................. 205

*பெட்டி 3*
புகைப்படங்கள் ஓடியோ/ வீடியோ பதிவுகளைக் களஞ்சியப்படுத்துதல் .............................. 206

D. டிஜிடல் களஞ்சியப்படுத்தல் முறைமை .............................. 207

*பெட்டி 4*
டிஜிட்டல் களஞ்சியப்படுத்தலின் நன்மைகளும் தீமைகளும் .............................. 207

*பெட்டி 5*
மேலதிக கருவிகளும் வழிகாட்டலும் .............................. 209

# அத்தியாயம் 13: தகவல்களைக் களஞ்சியப்படுத்துதலும் கையாளுதலும்

## A. அறிமுகம்

சான்றுகளையும் ஏனைய தகவல்களையும் கவனமாகக் கையாளுதலும் களஞ்சியப்படுத்தலும் மிகவும் அத்தியாவசியமானதென்பதுடன் இது ஆவணப்படுத்தல் ஒன்றின் ஆரம்பத்திலிருந்தே கவனத்திற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். நடைமுறைப்படுத்துனர்கள் பாதிக்கப்பட்டவருடன் அல்லது ஏனைய சாட்சிகளுடன் பேசுவதற்குத் தீர்மானிப்பதற்கு முன்னர் குற்றம் நடந்த இடத்தின் படத்தினை எடுத்துக் கொள்ளவேண்டும் அல்லது வேறு தகவல்களைத் திரட்டும் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும். நடைமுறைப்படுத்துனர்கள் இவ்வாறான தகவல்களை எங்கே மற்றும் எப்படி களஞ்சியப்படுத்தப்போகின்றனர் என்பதைப் பரிசீலித்து அதற்காகத் திட்டமிடல் வேண்டும். (பார்க்க அத்தியாயம் 9: திட்டமிடுதல்)

நடைமுறைப்படுத்துனர்கள் சேகரிக்கக்கூடிய (உதா: குற்றச் செயல் நடந்த இடங்களின் புகைப்படங்கள் அல்லது காயங்களின் புகைப்படங்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய சாட்சிகளின் வாக்குமூலங்கள், மருத்துவ அல்லது பொலிஸ் பதிவுகள்) பாலியல் வன்முறை தொடர்பான தகவல்கள் மிகவும் நுண்மைத்தன்மை வாய்ந்தவை என்பதுடன் இரகசியமானவையாகும். அத்துடன் இவை தனிநபர்கள் தொடர்பான மிகவும் அந்தரங்கமான தகவல்களாக இருப்பதுடன் இத்தகவல்களைத் தவறாகக் கையாளுகின்றமை அல்லது பகிரங்கப்படுத்துகின்றமை மிகுந்த சேதத்தினை ஏற்படுத்தக்கூடியதாகும். இவ்வாறான தகவல்களைச் சேகரிப்பதற்குத் தீர்மானிக்கின்ற நடைமுறைப்படுத்துனர்கள் தாம் சேகரித்துள்ள சான்று அல்லது தகவலின் இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பினைப் பேணுவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளனர் என்பதுடன் இச்சான்றுகளும் தகவல்களும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய சாட்சிகள், அவர்களுடைய குடும்பங்கள், சமுதாயங்கள் மற்றும் தகவல்களைச் சேகரிப்போர் ஆகியோரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் களஞ்சியப்படுத்தப்படல் வேண்டும் (பார்க்க அத்தியாயம் 7: தீங்கிழைக்க வேண்டாம் / இரகசியத்தன்மை)

தகவல்கள் மிகவும் நுண்மையானவையாக இருந்தால் அவற்றினைப் பாதுகாப்பாகவும் இரகசியமாகவும் பேணுவதற்கான பொறுப்பும் பாரியதாக இருக்கும் (தனிப்பட்ட அல்லது அடையாளப்படுத்துகின்ற விபரங்கள், புகைப்படங்கள் அல்லது பதிவுகள், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் பற்றிய தகவல்கள் அல்லது பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய தகவல்கள்).

கைகளினால் பேணப்படும் களஞ்சியப்படுத்தல் முறைமையினை, டிஜிடல் களஞ்சியப்படுத்தல் முறைமையினை அல்லது இவை இரண்டும் சேர்ந்த முறைமையினை நடைமுறைப்படுத்துனர்கள் பயன்படுத்தலாம்.

மிகவும் பொருத்தமான முறைமையினைப் பரிசீலிக்கும் போது ஒவ்வொரு வகையான தகவலையும் (ஆவணம், டிஜிடல் அல்லது பௌதீகம் / மருத்துவ, சட்ட மற்றும் தடயவியல் தகவல்கள் உள்ளடங்கலாக) பாதுகாப்பாகவும், இரகசிய மாகவும் பேணுவதற்கான பொருத்தமான பௌதீக இடவசதி தேவைப்படும். கொள்ளளவு, தேவையான வளங்கள் மற்றும் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் அமுலில் உள்ளதா என்பதைக் கருத்திற்கொள்ளவேண்டும். நடைமுறைப்படுத்துனர்கள் சான்று அல்லது தகவல்களின் இறுதிப் பயன்பாட்டையும் கருத்திற்கொள்ள வேண்டும். ஏனெனில் எவ்வளவு காலத்திற்கு அவர்கள் இந்தத் தகவல்கள் / சான்றினைக் களஞ்சியப்படுத்த வேண்டும், மேலும் என்ன நிலைமைகளின் கீழ் அவற்றினைக் களஞ்சியப்படுத்த வேண்டும் என்பதில் இறுதிப் பயன்பாடு தாக்கம் செலுத்துகின்றது. தகவல் அல்லது சான்றின் இரகசியத்தன்மையினையும் நேர்மையினையும் அவற்றினை இடத்திற்கு இடம் மாற்றும்போதும் தொடர்பாடல் செய்யும்போதும் அல்லது களஞ்சியப்படுத்துகையிலும் நடைமுறைப்படுத்துனர்களினால் உத்தரவாதப்படுத்த முடியாவிட்டால் அவ்வாறான தகவல்களையும் சான்றுகளையும் சேகரிப்பதில் இருந்தும் அவர்கள் தவிர்ந்துகொள்ள வேண்டும்.

## B. பிரதான கோட்பாடுகள்

**பெட்டி 1**

**களஞ்சியப்படுத்தலின் பிரதான கோட்பாடுகள்**

- ✓ எவ்விதமான தகவலையோ அல்லது சான்றினையோ சேகரிப்பதற்கு முன்னர் நீங்கள் அதை எங்கே மேலும் எவ்வாறு களஞ்சியப்படுத்தப் போகின்றீர்கள் என்பதைத் திட்டமிட வேண்டும். தகவலினைச் சேகரித்த பின்னர் அந்தத் தகவலினைக் களஞ்சியப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் தொடர்பாகப் பரிசீலித்தல் காலதாமதமானதொன்றாகும்.
- ✓ பாலியல் வன்முறை பற்றிய தகவல்களை நீங்கள் சேகரித்தால் அதன் அந்தரங்கத்தினை உறுதிப்படுத்தும் வகையில் அதனை நீங்கள் பாதுகாப்பாகவும் இரகசியமாகவும் பேணுவதற்குரிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளீர்கள். மேலும் அத்தகவல்கள் யாரையும் அபாயநேர்வுக்கு உட்படுத்தவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான கடப்பாட்டினையும் கொண்டுள்ளீர்கள்.
- ✓ தகவல்களின் வகைகளைப் பொறுத்து களஞ்சியப்படுத்தல் தேவைப்பாடுகள் மாற்றமடையலாம் (ஆவணங்கள், டிஜிட்டல் அல்லது பௌதீக, நுண்மைத்தன்மை மற்றும் இறுதிப் பயன்பாடும் மாற்றம் அடையலாம்.
- ✓ தகவல் அல்லது சான்றினைப் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் மற்றும் முறைமைகளை உங்களால் உத்தரவாதப்படுத்த முடியாவிட்டால் அல்லது அவற்றினை உங்களால் பேண முடியாவிட்டால் நீங்கள் அந்தத் தகவல்களையோ சான்றுகளையோ சேகரிக்கக் கூடாது.

## தகவல்களைப் பாதுகாத்து வைத்திருத்தலின் வரிசை தொடர்பான பொருத்தமான நியாயாதிக்கத்தின் சட்டத் தேவைப்பாடுகள் பற்றியும் நடைமுறைப்படுத்துனர்கள் அறிந்திருக்க வேண்டும்.

தகவல்களைப் பாதுகாப்பாகக் கையாண்டு அவற்றினைக் கைகளினால் அல்லது டிஜிடல் முறையினால் களஞ்சியப்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்துனர்கள் பின்வருவனவற்றினை மேற்கொள்ள வேண்டும்.

1. தகவல்கள் எங்கே களஞ்சியப்படுத்தப்படும் மேலும் அவற்றின் மீது யார் கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பர் என்பதைத் திட்டமிட்டு அதற்கமைய அபாயநேர்வுகளை மதிப்பிடவும். தகவல்களைப் பாதுகாத்து வைத்திருப்பவரினால் அல்லது தரவு முகாமையாளரினால் மேற்பார்வை செய்யப்படக்கூடிய ஒரு மத்திய களஞ்சியப்படுத்தல் அமைவிடத்தினைப் பயன்படுத்துவதை நடைமுறைப்படுத்துனர்கள் கருத்திற் கொள்ள நாடலாம். எவ்வாறாயினும் மத்திய களஞ்சியப்படுத்தல் அமைவிடம் என்பது மிகச் சிறப்பான மற்றும் வினைத்திறன் மிக்க தெரிவாக இருக்கின்றபோதிலும் அது தாக்குதலுக்கான அல்லது சமரசத்திற்கான ஒரு தனித்த புள்ளியினை உருவாக்குகின்றது (தகவல்களைப் பாதுகாத்து வைத்திருப்பவர் /தரவு முகாமையாளருக்கு இலஞ்சம் வழங்கப்பட்டால், அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டால் அல்லது அவர் அறியாமல் பாதிப்பினை ஏற்படுத்தும் ஒரு மென்பொருள் தகவல்களை வைத்திருக்கின்ற கணனியிலோ அல்லது கணனி வழங்கியிலோ பொருத்தப்பட்டால் விளைவாக தகவல்கள் அல்லது மக்கள் பாரதூரமான அபாயநேர்வுக்கு உட்படலாம்.
2. நுண்மைமிக்க/ இரகசியமான தகவல்களைக் களஞ்சியப்படுத்தி, அவற்றிற்குப் பக்க ஆதாரம் (back up) வழங்கி, அவற்றினை மாற்றுவதற்குத் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதைக் கருத்திற்கொள்ளவும்.
3. பொதுவான தகவல்களையும் நுண்மைமிக்க தகவல்களையும் களஞ்சியப்படுத்துகையில் நுண்மைமிக்க தகவல்களின் சிறந்த பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக அவற்றினைப் பொதுவான தகவல்களுடன் ஒன்றாகக் களஞ்சியப்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.
4. பாதிக்கப்பட்டவர்கள் / சாட்சிகள் வழங்கிய வாக்குமூலங்கள் மற்றும் சான்றுகளிலிருந்து அவர்களை வேறாக அடையாளப் படுத்துகின்ற தகவல்களைக் களஞ்சியப்படுத்தவும் (உதாரணமாக : வாக்குமூலங்களையும் ஏனைய சான்றுகளையும் களஞ்சியப்படுத்தியிருக்கும் இடத்திலிருந்து வேறு இடத்தில் பாதிக்கப்பட்டவர்கள் / சாட்சிகளின் பெயர்களை மற்றும் தகவல்களை அடையாளப்படுத்துவதற்காக குறியீட்டு இலக்கங்களுடன் பொருந்துகின்ற சுட்டி)

அவதானிக்கப்படவேண்டிய விடயம்

தேவையானபொழுது வாக்குமூலங்கள் மற்றும் அடையாளப்படுத்தும் விடயங்கள் பொருத்திப்பார்க்கப்படலாம் என்பதை உறுதிப்படுத்த விசேட கவனம் எடுக்கப்படவேண்டும். முறையற்ற விதத்தில் தகவல்களைக் களஞ்சியப்படுத்துவதும் ஒழுங்கமைப்பதும் பிரச்சினை களுக்கு இட்டுச்செல்லலாம். சாட்சிகளின் பெயர்களைக் கொண்டுள்ள முதன்மைப் பட்டியலைக் கண்டறிய முடியாவிட்டால் முக்கியமான சான்றுகளை உள்ளடக்கிய வாக்குமூலத்திற்கான மூலத்தினை அடையாளம் காண்பதில் பிரச்சினைகள் ஏற்படலாம்.

5. தேவையானபோது கண்டறியப்படக்கூடிய விதத்தில் இலகு வாகவும் பொருத்தமான முறையிலும் தகவல்களை ஒழுங்கமைக்கவும் (டிஜிடல் முறை மூலம் அல்லது வேறுவிதமாக களஞ்சியப்படுத்தப்பட்டாலும்)
6. பின்வருவனவற்றிற்காகப் பொருத்தமான செயல்விதிகளைப் பணியாளர்களுக்குப் பயிற்றுவிக்கவும் (i) கோப்புக்கள் மூடப் பட்டதும் களஞ்சியப்படுத்தப்பட்ட தகவல்களை மீளக் கண்டறிதல் (ii) அவசரநிலைமையொன்றின் போது வெளியேறவேண்டியேற்படுகையில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மேலும் (iii) அதிகார அமைப்புக்களினால் பணியாளர்களின் அலுவலகம் அல்லது களஞ்சியப்படுத்தல் வசதி முற்றுகையிடப்பட்டால் அந்த நிலைமையில் என்ன செய்வது - கைப்பற்ற முடியாதவாறு தொழில்ரீதியான சிறப்புரிமையினால் எத்தகவலைப் பாதுகாப்பது (பிரயோகிக்கத்தக்கதெனின்) என்பது உள்ளடங்கலாக.
7. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய சாட்சிகளின் பெயர்கள் மற்றும் அவர்களின் அமைவிடங்களை அடையாளப்படுத்தும் வகையில் ஆவணங்களைக் காவிச் செல்லவேண்டாம். குறிப்பாக சோதனைச் சாவடிகளைக் கடந்து செல்லும்போது. சோதனைச் சாவடிகளைக் கடக்கவேண்டிய பயணத்தின்போது மிக மிக அத்தியாவசியமான தகவல்களை மாத்திரம் காவிச்செல்லவும். ஏனெனில், நடைமுறைப்படுத்துனர்கள் வைத்திருக்கக்கூடிய அல்லது அவர்களின் வாகனங்களில் இருக்கக்கூடிய தகவல்களை வெளிக்கூறுமாறு அல்லது அவற்றினைக் கையளிக்குமாறு அவர்கள் கோரப்படலாம்.

**பெட்டி 2**

### மருத்துவ - சட்ட / தடயவியல் சான்றுகளை களஞ்சியப்படுத்துதல்

மருத்துவ - சட்டச் சான்றுகள் உள்ளடங்கிய பௌதீகச் சான்றுகளைச் சேகரித்துக் களஞ்சியப்படுத்துவதற்கு ஆணை வழங்கப்பட்டு, அதற்கென விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் மாத்திரமே அதனை மேற்கொள்ளலாம் (உ.ம் : குருதி, விந்து அல்லது கறை படிந்த ஆடைகள்). நடைமுறைப்படுத்துனர்கள் இவ்வகையிலான சான்றுகளை உரியமுறையில் சேகரித்து, கையாண்டு, களஞ்சியப்படுத்துவதற்குத் தொழில்ரீதியான பயிற்சி பெறாதவர்களாகவிருந்தால் அது நன்மையை விடத் தீன்மையினையே அதிகம் ஏற்படுத்தும் (பார்க்க அத்தியாயம்: 10 பாலியல் வன்முறைச் சான்றுகளின் வகைகள், பெட்டி 9 CARSVக்கான மருத்துவ - சட்டச் சான்றுகளைப் புரிந்து கொள்ளுதல்).

தடயவியல் மருத்துவப் பரிசோதனைகள் / மருத்துவ - சட்டச் சான்றுகளின் சேகரிப்புகள் ஆகியவை மருத்துவப் பராமரிப்பினை வழங்குகின்ற அதே நேரத்திலேயே மேற்கொள்ளப்படவேண்டும் மேலும் அதே நபரினால் மேற்கொள்ளப்படுவது மிகச் சிறந்ததாகும் (பார்க்க: பிற்சேர்க்கை 4 - மாதிரி பாலியல் தாக்குதல் மருத்துவ சான்றிதழ்)

சான்றானது உயிரியல் ரீதியானதாக இருக்கும் பட்சத்திலும் (உதா: குருதி, விந்து அல்லது கறை படிந்த ஆடைகள்) மேலும் நடைமுறைப்படுத்துனர்கள் அவற்றினைச் சேகரித்து, கையாண்டு, களஞ்சியப்படுத்துவதற்குப் பயிற்றப்பட்டும் இருந்தால், தகவல்கள் வேறான கொள்கலனில் இடப்பட்டு, முத்திரையிடப்பட்டு, சேகரித்த உடனேயே ஆய்வுகூடத்திற்கு எடுத்துச்செல்லப்படல் வேண்டும். ஏனெனில் இவை குளிரூட்டப்படவேண்டியவையாக அல்லது உறையவைக்கப்பட வேண்டியவையாக இருக்கலாம்).

மோதலின் நடுவில் சிக்கியுள்ள நாடுகளிலும் அல்லது மோதல் முடிவடைந்து அதிலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கும் நாடுகளிலும் உயிரியல் ரீதியான மற்றும் ஏனைய வகையிலான பௌதீகச் சான்றுகளைக் கையாண்டு, களஞ்சியப்படுத்திப் பகுப்பாய்வு செய்வதற்கு ஆய்வுகூட வசதிகளோ அல்லது ஏனைய அதேபோன்ற வசதிகளோ மேலும் அதற்கான உரிய பணியாளர்களோ இல்லாமல் இருக்கலாம் அல்லது மிகச் சொற்பமான அளவிலேயே இவ்வசதிகள் கிடைக்கக்கூடியதாக இருக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் இவ்வாறான வகையிலான சான்றுகள் சேகரிக்கப்படலாகாது.

## C. கைகளினால் களஞ்சியப்படுத்தும் முறைமை

பாலியல் வன்முறை தொடர்பான தகவல்களை ஆவண வடிவில் அல்லது வேறு வடிவில் (சம்பவக் கோப்புக்களின் வன்பிரதிகள், காயங்களின் அச்சிடப்பட்ட புகைப்படங்கள் அல்லது குற்றச் சம்பவத்தின் வீடியோ பதிவினைக் கொண்டுள்ள வீடியோ மெமரி Key / மெமரி அட்டைகள்) களஞ்சியப்படுத்துவதற்கு கையினால் பேணப்படும் முறையினை நடைமுறைப்படுத்துனர்கள் பயன்படுத்தினால் அவர்கள் பின்வருவனவற்றினை மேற்கொள்ள வேண்டும்.

1. வெப்பமற்றதும் உலர்ந்ததுமான இடத்திலுள்ள களஞ்சியப்படுத்தல் வசதியிலே தகவலினைப் பூட்டிட்டுக் களஞ்சியப்படுத்தவேண்டும்(அலுமாரி அல்லது பாதுகாப்பு பெட்டகம் அல்லது ஏனைய களஞ்சியப்படுத்தல் அலகு)
2. களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இடத்திற்குச் செல்வதற்கு குறிப்பிடப்பட்ட பணியாளர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படுதல். தகவல்களை யார் அணுகலாம் மேலும் ஏன் அணுக வேண்டும் என்பது தொடர்பான தெளிவான கொள்கையொன்று இருக்கவேண்டும்.- அணுகக்கூடிய நபர்களின் எண்ணிக்கையினை ஆகக் குறைவானதாகப் பேணவேண்டும் (பார்க்க -அத்தியாயம்: 9 இயக்கச் செயல்விதிகளைத் திட்டமிடுதல் - அவற்றின் தராதரங்கள்).
3. களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இடத்தினை அணுகக்கூடிய அல்லது அதனைப் பாதுகாப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ள பணியாளர்களின் தனிப்பட்ட பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு அவசர பாதுகாப்புத் திட்டங்கள் அமுலிலுள்ளன (பார்க்க, அத்தியாயம்: 8 பாதுகாப்பு / நடைமுறைப்படுத்துனர்களின் அபாயநேர்வினை கட்டுப்படுத்துதல்)
4. களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இடத்தினை அணுகு பவர்கள் பற்றிய பதிவினைப் பேணுவதற்கு பதிவுப் புத்தகம் ஒன்றினைப் பேணுதல் (நபரின் பெயர், திகதி, அணுகிய நேரம் மற்றும் நோக்கம் மற்றும் என்னென்ன விடயங்கள் அணுகப்பட்டன)
5. தகவலானது தகவல் தொகுதியொன்றின் அங்கமாக இருந்தால் (ஆவணங்களின் சேகரிப்பு அல்லது அச்சிடப்பட்ட புகைப்படங்கள், புகைப்படச்சுருளா அல்லது டிஜிட்டலா) ஒவ்வொரு விடயமும் தொகுதியின் ஓரங்கமாகக் குறியிடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தி எது அதனை முழுத்தொகுதியாக ஆக்குகின்றது என்கின்ற குறிப்பினை எழுதி அதில் ஒட்டிவிடவும். இது தொகுதி பூரணமாகவுள்ளதா என்பதை அடையாளம் காணவும் தொகுதியிலுள்ள ஏதாவது இல்லாமல் இருக்கின்றதா என்பதை அடையாளங்காணவும் நடைமுறைப்படுத்துனர்களை இயலுமாக்குகின்றது.

6. சகல விடயங்களும் (புகைப்படங்கள் மற்றும் ஓடியோ, வீடியோ பதிவுகள் உள்ளடங்கலாக) நியமமான இலக்கமிடல் முறைமையினைப் பயன்படுத்தி வகைப்படுத்தப்படல் வேண்டும். மேலும் இலக்கமிடல் முறைமையானது ஏதாவது சாட்சிகளின் வாக்குமூலங்கள், ஆவணச்சான்றுகள் அல்லது வேறு ஏதாவது சான்றுகள் அல்லது தகவல்களுடன் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.
7. அழிந்து போகக்கூடிய தகவலாக இருப்பின் அவற்றினை வைத்திருக்கின்ற களஞ்சிய நிலைமைகள் பொருத்தமான வையாக இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும். குறிப்பாக அவற்றினை வெப்பம், வெளிச்சம் மற்றும் ஈரப்பதன் ஆகியவற்றில் இருந்து பாதுகாக்க வேண்டுமென்பதுடன் பூச்சிகள், எலி மற்றும் ஏனைய விலங்குகள் மூலமாக ஏற்படக்கூடிய அச்சுறுத்தலில் இருந்தும் அவற்றினைப் பாதுகாக்கவேண்டும்.

**பெட்டி 3**

## புகைப்படங்கள் ஓடியோ/ வீடியோ பதிவுகளைக் களஞ்சியப்படுத்துதல்

பாதுகாப்பான முறையில் புகைப்படங்களையும் ஓடியோ/ வீடியோ பதிவுகளையும் களஞ்சியப்படுத்திப் பராமரிப்பதற்கு நீங்கள் பின்வருவனவற்றினை மேற்கொள்ள வேண்டும்.

- ✓ சேதம், பழுதடைதல் மற்றும் சிதைவடைந்து போவதைத் தவிர்ப்பதற்காக புகைப்படச்சுருள்கள் மற்றும் VHS வீடியோக்களை பொருத்தமான களஞ்சியப்படுத்தல் நிலைமைகளைக் கொண்ட களஞ்சியப்படுத்தல் முறைமைகளுள் பேணவும். (பார்க்க, மேலே 7)
- ✓ டிஜிடல் புகைப்படத்தினைப் பொருத்தளவில் flash அட்டையிலுள்ள உள்ளடக்கத்தினை கணனிக்கு மாற்றவும்,WROM சீடியில் பதியவும் (ஒரு தடவை பதிந்து பல தடவை வாசித்தல் அல்லது பிம்பங்களை கடவுச்சொல்லினால் பாதுகாக்கப்பட்ட 'மெமரி கீ' யினில் பதியவும். இரண்டு பிரதிகளை எடுக்கவும்.
- ✓ புகைப்படச் சுருள்கள், அச்சிடப்பட்ட புகைப்படங்கள், சீடிக்கள், மற்றும் கடயளா அட்டைகள் ஆகியவற்றினை பூட்டப்பட்ட அலுமாரியினுள் வைத்திருக்கவும். மேலும் அதற்கு வரையறுக்கப்பட்ட அணுகலை வழங்கி வழங்கப்பட்ட அணுகலின் பதிவினைப் பேணவும்.
- ✓ தொடர்ச்சியான களஞ்சியப்படுத்தலை நியாயப்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டுமென்பதுடன் புகைப்படங்கள் / பதிவுகளில் காட்சிப்படுத்தப்படுகின்ற தனிநபர்களின் அடையாளங்களின் இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பினைப் பாதுகாக்க வேண்டுமென்பதுடன் இது குறிப்பாக நீண்டகாலத்திற்கு களஞ்சியப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் முக்கியமானதாகும்.
- ✓ சோதனைச் சாவடிகளைக் கடந்து செல்லும்போது கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் நீங்கள் கொண்டு செல்லக்கூடிய புகைப்படங்களை அல்லது புகைப் படங்களின் மூலப்பிரதிகளைக் காட்டுமாறு நீங்கள் கோரப்படலாம் (அச்சிடப்பட்டவை மற்றும் டிஜிடல்). உதாரணமாக, நீங்கள் இரகசியமாக மெமரி குச்சிகளை ஒளித்துவைத்துக்கொண்டு, நடுநிலையான புகைப்படங்களுடன் எந்தவித பதிவுகளுமற்ற மெமரி குச்சிகளை உங்கள் புகைப்படக் கெமராவில் காட்டலாம்.

## D. டிஜிடல் களஞ்சியப்படுத்தல் முறைமை

பாலியல் வன்முறை பற்றிய சில சான்றுகளும் ஏனைய தகவல்களும் இலத்திரனியல் அல்லது டிஜிடல் வடிவத்தில் மாத்திரமே இருக்கலாம் (டிஜிடல் கெமராவில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், பதிவுகள், ஆவணங்களின் ஸ்கேன்கள்). நடைமுறைப்படுத்துனர்கள் அவர்களின் ஆவணங்களையும் பௌதீகச் சான்றுகளையும் ஏனைய தகவல்களையும் வகைப்படுத்தி முகாமைத்துவம் செய்து அல்லது அவற்றின் பிரதிகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு இலத்திரனியல் தரவுத் தளத்தினை அல்லது டிஜிடல் சுவடிக் கூட வசதியினைக் கொண்டிருக்கலாம். இவையும் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தப்படல் வேண்டும்.

கையினால் பேணப்படும் களஞ்சியப்படுத்தல் முறைமைக்கு எதிராகத் தகவல்களை டிஜிடல் முறையில் களஞ்சியப்படுத்தி முகாமைத்துவம் செய்வதென்பது சில நன்மைகளையும் சில உள்ளார்ந்த பிரதிகூலங்களையும் கொண்டுள்ளது.

டிஜிடல் தகவல்களின் பாதுகாப்பு மற்றும் நேர்மையினை உறுதிப்படுத்த நடைமுறைப்படுத்துனர்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும்.

1. டிஜிடல் முறை மூலம் களஞ்சியப்படுத்தப்படப் போகின்ற தகவல்களைச் சேகரிப்பதற்கு முன்னர் அபாயநேர்வு மதிப்பீட்டினை நடத்தி டிஜிடல் பாதுகாப்பு நெறிமுறையினை அமுல்படுத்தவேண்டும். ஒன்லைனிலே இது தொடர்பாகக் கிடைக்கக்கூடிய வெளிப்படையான வழிகாட்டலுக்கு மேலதிகமாக தகவல் முகாமைத்துவம் மற்றும் டிஜிடல் பாதுகாப்பு தொடர்பான நிபுணர்களின் ஆலோசனையினைப் பெற்றுக்கொள்வது சிறந்ததாகும்.[1]
2. தரவுச் சேகரிப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான உங்களது நோக்கத்திற்கும் சூழமைவுக்கும் என்ன தொழில்நுட்பம் மிகவும் பொருத்தமானதென்பதை மதிப்பிடவும். கருத்திற்கொள்ளப்படக்கூடிய சில தொழில்நுட்பங்களின் உதாரணங்கள் அவற்றிற்கு உரித்தான நன்மைகளுடனும் தீமைகளுடனும் பெட்டி 5இல் வழங்கப்பட்டுள்ளன. 'மேலதிக கருவியும் வழிகாட்டலும்'

**பெட்டி 4**

### டிஜிட்டல் களஞ்சியப்படுத்தலின் நன்மைகளும் தீமைகளும்

**நன்மைகள்**

- » குறைந்த பௌதீக இடத்தினைப் பயன்படுத்துகின்றது
- » தேடலை மேற்கொண்டு பகுப்பாய்வு செய்வதற்கு இலகுவானது
- » அறிக்கைகளை இற்றைப்படுத்துவதும் அறிக்கைகளிலிருந்து உருவாக்குவதும் இலகுவானது
- » வெவ்வேறு இடங்களில் பல்வேறு பிரதிகளை வைத்திருப்பது இலகுவானது
- » திருட்டு, தொலைந்துபோதல், அழிக்கப்படுதல் மற்றும் அதிகாரமளிக்கப்படாதோர் அணுகுதல் ஆகியவற்றிலிருந்து குறிப்பிட்ட அளவிற்குப் பாதுகாப்புப் பெறலாம்.

**தீமைகள்**

- » மின்சார விநியோகத்தில் தங்கியுள்ளது, மேலும் சில வேளைகளில் இணைய அணுகலிலும் தங்கியுள்ளது.
- » hacking மற்றும் வைரசுகளின் பாதிப்பிற்கு உட்படக்கூடியது.
- » ஏனைய மென்பொருள் மற்றும் வன்பொருள் பிரச்சினைகள்
- » தரவுகளை உள்ளீடு செய்வதற்கு அதிக நேரத்தினை எடுக்கின்றது.
- » நுண்மையான தகவல்களைக் கையளிக்குமாறு மொபைல்/ இணையச் சேவை வழங்குனர்களை வற்புறுத்தும் அதிகார அமைப்புக்களின் அபாயநேர்வு
- » டிஜிட்டல் களஞ்சியப்படுத்தலில் பாதுகாத்து வைத்திருக்கப்படுவதன் தெளிவான வரிசையினைப் பேணுவது கடினமாக இருக்கின்ற காரணத்தினால் இது குற்றவியல் நீதிமன்றத்தினால் ஒரு சான்றாக நிராகரிக்கப்படலாம்.

1 பார்க்க: குறிப்பாக FrontLine Defenders and Tactical Technology Col- lective at https://securityinabox.org/en. நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட டிஜிடல் பாதுகாப்புத் தொடர்பான வழிகாட்டியினைப் பார்க்கவும் (பூச்சிகள், வைரஸ்கள் மற்றும் டிரோஜன்களைத் தடுப்பதற்கான அடிப்படைக் கோட்பாடுகளை உள்ளடக்குகின்றது, தரவுகளையும் கோப்புக்களையும் குறியீடு செய்வது தொடர்பான வழிகாட்டல்களை வழங்குகின்றது, உறுதியான கடவுச்சொற்களை முகாமைத்துவம் செய்கின்றது, பக்க ஆதாரச் சான்றுகளையும் தரவுகளையும் வழங்கி நீங்கள் அவற்றினைப் பொருத்துவதற்கான படிப்படியான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் மிகவும் அவசியமான டிஜிடல் பாதுகாப்பு மென்பொருளினை நீங்கள் பொருத்திப் பயன்படுத்துவதற்கும் அறிவுறுத்தல்களை வழங்குகின்றது). இது உத்திகளுக்கான வழிகாட்டல்களையும் சமுதாய வழிகாட்டல்களையும் குறிப்பிட்ட மக்களின் மீது கவனம் செலுத்தி வழங்குகின்றது (சில வேளைகளில் குறிப்பிட்ட பிராந்தியங்கள் - இவர்கள் டிஜிடல் அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுப்பவர்கள் உதாரணம்: LGBTI சமுதாயம்)

*தகவல்களை வடிவ மாற்றம் செய்வது சில நாடுகளில் சட்டவிரோதமானதாகும். இவ்வாறு வடிவமாற்றம் செய்யப்பட்ட கோப்புக்கள் இருப்பதே குற்றச்செயல் நிகழ்த்தியதற்கான காரணமாக அமையலாம்.*

3. சகல டிஜிடல் தகவல்களையும் உறுதியான கடவுச்சொல்[2] கொண்டு பாதுகாத்து நம்பத்தகுந்த மென்பொருள் மூலம் அவற்றின் வடிவத்தினை மாற்றுவதைப் பரிசீலிக்கவும் (கடவுச்சொல்களை அணுகுவது வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும்.) (வடிவ மாற்றம் மற்றும் வடிவ மாற்றத்தை அகற்றுவதற்கான வழிகளும் வரையறுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.)[3] சாத்தியமான பொழுது நடைமுறைப்படுத்துனர்கள் மிகவும் மேம்பட்ட செயல்விதிகளையும் முறைகளையும் பயன்படுத்தி, அதாவது வடிவமாற்றம் செய்யும் செலுத்திகள் மற்றும் டிஜிடல் தகவல்களின் பாதுகாப்பான பரிமாற்றங்களை உறுதிப்படுத்தல் போன்ற முறைகள் மூலம் நுண்மையான தகவல்களைப் பாதுகாப்பதற்கான மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.[4]

4. சம்பந்தப்பட்ட கடவுச்சொற்களின் பதிவினைக் குறிப்பிட்ட இடத்திற்கு வெளியே பாதுகாப்பாக வேறு இடத்தில் பேணுவதற்கான தேவை இருக்கின்றதா என்பதைப் பரிசீலிக்கவும். இதனால் சில சந்தர்ப்பங்களில் ஆவணப் படுத்தலின் காலகட்டம் முடிவடைந்த பின்னரும் நீண்ட காலத்தின் பின்னர் தேவையேற்படின் இவற்றினை அணுக முடியும்.

5. பாதுகாக்கப்பட்ட கோப்புக்களை அணுகுவதற்குக் குறிப்பிடப்பட்ட பணியாளர்களுக்கு மாத்திரம் அனுமதி. யாரினால் தகவல்களை அணுக முடியும் என்பது தொடர்பான மேலும் ஏன் அவர்கள் அவற்றினை அணுக வேண்டும் என்பது தொடர்பான தெளிவான கொள்கை இருக்கவேண்டும் - அணுகுவோரின் எண்ணிக்கையினை ஆகக்குறைவானதாகப் பேணவேண்டும் (பார்க்க, அத்தியாயம்: 9 இயக்கச் செயல்விதிகளின் திட்டமிடல் நியமங்கள்)

6. அலுவலகத்திற்கு வெளியே வைத்திருக்கப்படுகின்ற கணனி, மெமரி கீ, யுஎஸ்பி அத்துடன் அல்லது வாசிப்பதற்கு மாத்திரமான சீடி ஆகியவற்றிலே பதிவதன் மூலமாக சகல டிஜிடல் கோப்புக்களினதும் இரட்டைப் பிரதிகளை உருவாக்கிப் பேணவும். மேலும் இவ்வகையான சேவைகளை அனுப்புவதற்கு முன்னர் டிஜிடல் கோப்புக்களை வடிவ மாற்றம் செய்வது இயலுமாக இருந்தால் ஒரு வேறான பக்க ஆதரவு/ களஞ்சியப்படுத்தல் முறைமையினைப் பரிசீலிக்கவும். இது USB கீ அல்லது சீடியினை மாத்திரம் பயன்படுத்தி பக்க ஆதரவினை வழங்கும்போது அந்த பக்க ஆதரவுப் பிரதியினை இழப்பதற்கான சாத்தியத் தினைக் குறைக்கின்றது.

---

2 உறுதியான மற்றும் ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடிய கடவுச்சொற்களை எவ்வாறு உருவாக்கலாம். என்பது பற்றிய வழிகாட்டல்களைப் பல இணையத்தளங்கள் கொண்டுள்ளன. குறிப்பாகப் பார்க்க : பெட்டியிலுள்ள வழிகாட்டியான பாதுகாப்பு என்பதை: 'பாதுகாப்பான கடவுச்சொற்களை உருவாக்கிப் பேணுக. https://securityinabox.org/en/guide/passwords. பிரதான ஆலோசனைகளினுள் உள்ளடங்குபவை: 1. குறைந்தது 14 அம்சங்க ளைக் கொண்ட எழுத்துக்களையும் ஏனைய பண்புகளையும் கொண்ட நீளமான சிக்கலான கடவுச்சொற்களைத் தெரிவு செய்யவும். 2. அகராதியில் இருந்து சொற்களையோ அல்லது பெயர்ச்சொற்களையோ தெரிவு செய்யவேண்டாம், நீங்கள் சில எழுத்துக்களை இலக்கங்களினால் பதிலீடு செய்தாலும் கூட, ஒரே கடவுச்சொல்லினை இரண்டு தடவைகள் பயன்படுத்த வேண்டாம். ஒவ்வொரு கணக்கிற்கும் - கோப்பிற்கும் தனித்துவமான ஒரு கடவுச்சொல்லினைப் பயன்படுத்தவும். 3. வருடத்திற்கு ஒரு தடவையென அல்லது அடிக்கடி உங்களது கடவுச்சொற்களை மாற்றவும். 4. ஏனையோருடன் உங்களது கடவுச்சொற்களைப் பகிர வேண்டாம் அல்லது மிகவும் கட்டாயமாக, அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியதன் அடிப்படையில் மாத்திரம் பகிர்ந்து கொள்ளவும். 5. உங்களது கடவுச்சொற்களைப் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தவும். மாற்றீடாக நீங்கள் கடவுச்சொற்களைப் பிறப்பிப்பதற்கான அல்லது உருவாக்குவதற்கான வெளிப்படையான மூலத்தினைப் பயன்படுத்தி உறுதியான கடவுச்சொற்களை உருவாக்குவதற்கு உதவியினைப் பெற்று அவற்றைப் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தலாம்.

3 நம்பத்தகுந்த மென்பொருள் என்பதன் அர்த்தம் நீண்டகாலமாக நிலைபெற்றுள்ள மென்பொருளினைக் குறிப்பதாகும். இது வெற்றி மற்றும் பாதுகாப்பிற்கான கடந்த கால வரலாற்றினைக் கொண்ட மென்பொருளாக இருக்கவேண்டுமென்பதுடன் இது ஒரு வெளிப்படையான மூலமாக இருக்கும். அத்துடன் வெளிப்படையாகக் கிடைக்கக்கூடிய கணக்காய்வுகளை அது பெற்றிருக்கும். அத்துடன் பாதுகாப்பு நிபுணர்களினால் இது பரிந்துரைக்கப்படுவதாக இருப்பதுடன் அண்மையில் இற்றைப்படுத்தப்பட்டு முனைப்பாகப் பேணப்படுவதாகவும் இருக்கும். சில நாடுகளில் தகவல்களின் வடிவங்களை மாற்றியமைப்பது சட்டவிரோதமானதாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் வடிவம் மாற்றப்பட்ட கோப்புக்களே குற்றத்தை இழைத்தமைக்கான சான்றாக மாறிவிடும். எனவே வடிவங்கள் மாற்றப்பட்ட கோப்புக்களை நடைமுறைப்படுத்துனர்கள் ஒளித்து வைத்திருக்கவேண்டிய தேவையேற்படும். அல்லது அவற்றிற்கான மாற்றீடுகளைப் பரிசீலிக்கவேண்டிய தேவையேற்படும் (அவற்றிற்கு வேறு பெயரிட்டு அவற்றினை இசைக்கோப்புக்களாக அல்லது புகைப்படக் கோப்புக்களாக காட்சிப்படுத்துதல். உங்களது கணனியில் நுண்மைத்தன்மை மிக்க கோப்புக்களை பாதுகாப்பாக வைத்திருக்கவும். https://securityinabox.org/en/guide/secure-file-storage.

4 சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் (2013) பாதுகாப்புப் பணிக்கான தொழில்ரீதியான தராதரங்கள் ஜெனீவா, ஐசீஆர்ச

7. சம்பந்தப்பட்ட கடவுச்சொற்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட கோப்புக்களை அணுகக்கூடிய பணியாளர்களின் தனிப்பட்ட பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு அவசர பாதுகாப்புத் திட்டமொன்றினைக் கொண்டிருக்கவும். மேலும் ஒரு தேடுதலோ அல்லது உடனடியான அச்சுறுத்தலோ ஏற்படுவதற்கு முன்னர் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் டிஜிடல் சான்றுகளைத் துரிதமாக அழிப்பதற்கான திட்டமொன்றினையும் கருத்திற்கொள்ளவேண்டும். அழித்ததன் பின்னர், அச்சுறுத்தல் இனியும் இல்லை என்பதன் அடிப்படையில், மீளப் பெறுவதற்காகக் குறிப்பிட்ட இடத்தில் வைத்திருக்கப்பட்ட டிஜிடல் சான்றுகளின் முன்பு உருவாக்கப்பட்ட அணுகக்கூடிய பக்க ஆதாரப் பிரதிகளை (பார்க்க: மேலே குறிப்பு 6) இது முன்னூகிக்கின்றது.
8. வைரஸுக்கெதிரான மென்பொருளினைப் பயன்படுத்துதல் மற்றும் தரவுத்தளக் கோப்புக்களுக்குப் பக்க ஆதாரங்களை வழங்குதல் போன்ற பொருத்தமான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை எடுக்கவும்.[5]
9. டிஜிடல் கோப்புகள் அணுகப்பட்டால் அவற்றினைத் தன்னியக்கமாகப் பதிந்து, தரவுத்தளத்திலே edit-trail வசதியினைக் கொண்டிருக்கவும். இதனால் குறிப்பிட்ட பயன்படுத்துனர் மேற்கொள்ளும் பதிவொன்றிற்கான சேர்க்கைகள், அழித்தல்கள் அல்லது மாற்றங்கள் ஆகியவற்றினைக் கண்டறியமுடியும்.
10. குற்றவியல் வழக்குகளில் சான்றுகளைப் பயன்படுத்து வதற்காகத் தகவல்களைப் பாதுகாத்து வைத்திருக்கும் வரிசை இறுக்கமாகப் பேணப்படவேண்டிய நிலைமையில் டிஜிடல் களஞ்சியப்படுத்தல் முறைமைகள் எடுத்துக் காட்டக்கூடிய வகையில் கட்டாயம் அணுக முடியாதவையாக இருக்கவேண்டும் என்பதுடன் மதிப்புறுதகுநிலையினைக் கோருவதற்கு ஆதாரமாக அதன் தரவுத்தளத்தில் சான்றின் ஒவ்வொரு தனிப்பட்ட பிரிவிற்காகவும் சான்று / சத்தியக் கடதாசிப் பொதியினையும் கொண்டிருக்கவேண்டும்.

**பெட்டி 5**

## மேலதிக கருவிகளும் வழிகாட்டலும்

பின்வரும் தலைப்புக்களுக்கான மேலதிக வழிகாட்டல்களுக்கு தயவுசெய்து பின்வருவனவற்றை உசாவவும்.

டிஜிட்டல் பாதுகாப்பு மற்றும் தரவுப் பாதுகாப்பு

» முன்னரங்குப் பாதுகாவலர்கள் மற்றும் தந்திரோபாய தொழில்நுட்பக்கூற்று, பெட்டியினுள் பாதுகாப்பு, ஒன் லைனில் அணுகக்கூடிய டிஜிட்டல் பாதுகாப்பிற்கான கருவிகளும் தந்திரோபாயங்களும் https://securityinabox.org/en.

» ஐசீஆர்சீ தொழில்ரீதியான பாதுகாப்புப் பணிக்கான தொழில்ரீதியான தராதரங்கள், 2013 திருத்தப்பட்ட பதிப்பு குறிப்பாக நுண்மையான தகவல்களை பேணுவதற்கான குறிப்பிட்ட 6வது அத்தியாயம்

மருத்துவ ரீதியான தடயவியல் சான்றின் சேகரிப்பு

» பாலியல் வல்லுறவினால் பாதிக்கப்பட்டோரை மருத்துவ ரீதியாக முகாமைத்துவம் செய்வதற்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டல்கள். அகதிகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் நிலைமைகளுக்கான நெறிமுறைகளின் உருவாக்கத்திற்கான வழிகாட்டி 2004.

» PHR,OHCHR,Istanbul நெறிமுறை, சித்திரவதை மற்றும் ஏனைய குரூரமாக, மனிதாபிமானமற்ற முறையில் அல்லது அவமானப்படுத்தும் விதத்தில் நடத்துதல் அல்லது தண்டித்தல் ஆகியவற்றினை ஆவணப்படுத்தல் மற்றும் செயற்திறன்மிகு விசாரணை பற்றிய கையேடு 1999

5 உதாரணத்திற்கு பார்க்க: உங்களது சாதனங்களைப் போலியான மென்பொருட்கள் மற்றும் இணையத் திருடர்களிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். https://securityinabox.org/en/guide/backup. தகவல்: போலியான மென்பொருள்கள் மற்றும் தகவல் திருட்டிலிருந்து மீளுதல்

# பகுதி VI: சான்றுகளையும் தகவல்களையும் பகுப்பாய்வு செய்தல்

## அத்தியாயம் 14 உள்ளடக்கம்

அத்தியாயம் 14: சான்றுகளையும் தகவல்களையும் பகுப்பாய்வு செய்தல்....213

**A.** அறிமுகம் ....213

*பெட்டி 1*
பாலியல் வன்முறைத் தகவல் பகுப்பாய்விற்கான பரிசீலனைப் பட்டியல் ....214

**B.** தகவல்களை மதிப்பிடுதல்....215

1. தகவல்களை மதிப்பிடுவதன் பொதுவான கோட்பாடுகள் ....215
2. பாலியல் வன்முறை பற்றிய சாட்சியத் தகவல்களை மதிப்பிடுதல் ....216
   a. மூலங்களின் மதிப்புறுதிறன் ....216

*பெட்டி 2*
சாட்சிய மூலங்களை வகைப்படுத்துதல்....216
   b. தகவல்களின் நம்பகத்தன்மை ....217
   c. ஒத்திசையாமைக்கான மதிப்பீடு ....217

*பெட்டி 3*
சகபாடிகளின் அனுபவம் — ஒத்திசையாமையினை மதிப்பிடுதல் ....217
   d. ஒத்திசையாமையினை விளக்குதல் ....217

*பெட்டி 4*
பாதிக்கப்பட்டவரின் அனுபவம் – ஒத்திசையாமைகளை விளக்குதல் ....218

*பெட்டி 5*
சிறுவர்களின் வாக்குமூலத்தின் ஒத்திசையாத் தன்மைகள்....219
3. ஆவண, பௌதீக மற்றும் டிஜிடல் சான்றுகளை மதிப்பிடுதல்....219
   a. உண்மைத்தன்மை....219
   b. நம்பகத்தன்மை....219

*பெட்டி 6*
டிஜிடல் சான்றும் உண்மைத்தன்மையும் ....220

**C.** கூறுகளை நிலைநாட்டுதல்....221

*பெட்டி 7*
சகபாடிகளது அனுபவம் — தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்....221

*பெட்டி 8*
உதாரண சான்று அச்சு ....222

**D.** சான்றினை வலுப்படுத்துதல்....224

1. ஆதாரப்படுத்துதல் ....224
2. சூழியல் சார்ந்த தகவல்கள்....224

**E.** பாங்குகளை அடையாளங்காணுதல் ....224

1. வகைமையியல்....224

*பெட்டி 9*
சகபாடி அனுபவம் — பாங்குகளைக் கண்டறிதல் ....225
*பெட்டி 10*
பாங்குகளை நிலைநாட்டுவதில் பயன்மிகு வினாக்கள் ....226
2. பாங்குகளை அடையாளம் காண்பதற்கான மேலதிக முறைகள் ....228
a. தேடக்கூடிய தரவுத்தளங்கள் ....228
b. புள்ளிவிபர ரீதியான பகுப்பாய்வு ....228
*பெட்டி 11*
சகபாடி அனுபவம் - பாங்கினை நிரூபிப்பதற்கு நிகழ்ச்சித்திட்ட ரீதியான தரவினைப் பயன்படுத்துதல் ....228
c. குற்றச்செயல் வரைபடத்தினைத் தயாரித்தல் ....229
*பெட்டி 12*
உதாரணக் கருவி – புவியியல் முப்பரிமாண தொழில்நுட்ப கருத்திட்டம் ....229

# அத்தியாயம் 14: சான்றுகளையும் தகவல்களையும் பகுப்பாய்வு செய்தல்

## A. அறிமுகம்

இந்த நெறிமுறையனுள் உள்ளடக்கப்பட்டுள்ள வழிகாட்டல் களின் நோக்கெல்லைக்கு அப்பால் மேம்படுத்தப்பட்ட சான்றுப் பகுப்பாய்வினை நடத்துவது ஒரு நிபுணத்துவத் திறன் ஆகும்.[1] எவ்வாறாயினும் பாலியல் வன்முறை பற்றிய தகவல்களை இந்த முறையியலுக்கு அமைவாகச் சேகரிக்கும் நடைமுறைப் படுத்துனர்கள் அடிப்படைச் சான்றுப் பகுப்பாய்வுத் திறன்களைப் புரிந்துகொண்டு அவற்றினை நடைமுறைப்படுத்தக்கூடியவர்களாக இருக்கவேண்டும். எவ்வாறு ஒழுங்கமைப்பது என்பதை அறிந்துகொள்ளுதல், ஆவணப்படுத்தல் உபாய மார்க்கத்தினை அறியத்தருவதற்கு தாம் சேகரித்த தகவல்களை மதிப்பிட்டு வலுப்படுத்துதல், சான்றுகளிலுள்ள குறைபாடுகளை அடையாளம் காணுதல் மேலும் சர்வதேச சட்டத்தின் கீழ் பாலியல் வன்முறைக் குற்றசெயல் அல்லது மீறல் இடம்பெற்றிருப்பதை சேகரித்த சான்றுகள் எடுத்து விளக்குகின்றனவா என்பதைத் தீர்மானித்தல்.

***சேகரிப்புச் செயன்முறையும் பகுப்பாய்வும் பொதுவாக கட்டாயம் ஒரு தொடரிலேயே இடம்பெற வேண்டுமென்பதல்ல என்பதை அவதானிக்கவேண்டும். ஆனால் இவை ஒத்திசைவானதாக அமைகின்றன. நடைபெற்று வருகின்ற பகுப்பாய்வானது மேலதிக தகவல் சேகரிப்பினை அறியத்தருகின்றது. இது மீண்டும் மேலதிக பகுப்பாய்வினை தேவைப்படுத்துகின்றது.***

### முக்கியமான குறிப்பு

மரபொழுங்கு முழுவதிலும் வலியுறுத்தப்பட்டதுபோல சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதநேயச் சட்டம் அல்லது சர்வதேசக் குற்றவியல் சட்டம் ஆகியவற்றின் கீழ் குற்றச்செயல் அல்லது மீறல் ஒன்றினை நிலைநாட்டுவதற்கு குற்றச்செயல் அல்லது மீறலின் ஒவ்வொரு கூறும் திருப்திப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும் இது அடிப்படையில் ஒட்டுமொத்தச் சூழ்நிலைகளையும் நிகழ்வுகளையும் பரிசீலிப்பதனையும் உள்ளார்ந்ததாக இருக்கின்ற பாலியல் வன்முறைச் செயற்பாடுகளை அடையாளம் காண்பதையும் அவற்றுள் இந்தச் செயல்களுள் எவை நிரூபிக்கப்படலாம் என்பதை அடையாளம் காண்பதனையும் சம்பந்தப்படுத்துகின்றது. குறிப்பிட்ட குற்றச்செயல்களை அல்லது மீறல்களை ஏனையோர் மீது சுமத்துவதில் கவனம் குவிக்கின்ற குறுகிய பெறுபேறுகளின்பால் நாட்டம் கொண்ட ஆவணப்படுத்தலில் ஈடுபடுவதைத் தவிர்க்கும் முகமாக பொருத்தமான சகல சான்றுகளும் சேகரிக்கப்பட்டதும் எவ்வாறு ஒரு குற்றச்செயலினை அல்லது மீறலினை வகைப்படுத்தலாம் என்பது புறவயமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1 போதைப்பொருட்கள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் அலுவலகம் (2011), குற்றவியல் புலனாய்வுப் பகுப்பாய்வாளர்களுக்கான கையேடு : நியுயோர்க்,UNODC. https://www.unodc.org/documents/organized-crime/Law-Enforcement/Criminal_Intelligence_for_Analysts.pdf இல் கிடைக்கின்றது

பெட்டி 1

## பாலியல் வன்முறைத் தகவல் பகுப்பாய்விற்கான பரிசீலனைப் பட்டியல்

| | |
|---|---|
| 1. தகவலினை மதிப்பீடு செய்தல் | » பின்வருவனவற்றிற்காகத் தகவலினையும் விசாரணையினையும் பரிசீலித்தல்:<br>» மதிப்புறுதிறன்: மூலம் நம்பத்தகுந்ததா?<br>» நம்பகத்தன்மை: தகவல் துல்லியமானதா? |
| 2. கூறுகளை நிர்ணயித்தல் | » சேகரிக்கப்பட்ட சகல தகவல்களையும் திட்டமிடுவதற்கு சான்றுகள் செயல் புத்தகத்தினைப் பயன்படுத்துதல் (பிற்சேர்க்கை 1)<br>» முக்கியமாக பொருத்தப்பாடுமிக்க தகவல்களை அடையாளம் காணுதல்<br>» இடைவெளிகள் இல்லையென்பதையும் எந்தவொரு தனித்த கூறும் புறக்கணிக்கப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்துதல்<br>» குறிப்பிட்ட தகவல் கூறுகளுக்கிடையில் இணைப்பு உள்ளதா என்பதைத் தேடுதலும் ஏனைய விசாரணைகளுக்காக உதவுவதற்கான அவற்றின் ஆற்றலும் |
| 3. தகவல்களை வலுப்படுத்துதல் | » எவை சேகரிக்கப்பட்டுள்ளனவோ அவற்றினை வலுப்படுத்தக்கூடிய மேலதிக சான்றுகளைத் தேடுதல்<br>» நீங்கள் உருவாக்குகின்ற வாதத்தினை வலுப்படுத்தி விபரங்களை சேர்த்து சூழமைவு ஏற்படுத்தி மேலதிக தகவல்களை வழங்குகின்ற மேலதிக சான்றுகளைத் தேடுதல் |
| 4. பாங்குகளை நிர்ணயித்தல் | » பாதிக்கப்பட்டோர், மீறல்கள் மற்றும் குற்றத்தை நிகழ்த்தியோர் ஆகியோருக்கிடையில் ஒற்றுமைகளைக் கண்டறிந்து மீறல்களை வகைப்படுத்துதல்<br>» பாங்குகளைக் கண்டறிவதற்கான மேலதிக முறைகள் |

## B. தகவல்களை மதிப்பிடுதல்

### 1. தகவல்களை மதிப்பிடுவதன் பொதுவான கோட்பாடுகள்

நடைமுறைப்படுத்துனர்களினால் சேகரிக்கப்பட்ட சகல தகவல்களும் மதிப்புறுதிறனுக்காகவும் செல்லுபடியாகக்கூடிய தன்மைக்காகவும் மதிப்பிடப்படல் வேண்டும்.

மதிப்புறுதிறன் என்பது தகவல் கிடைக்கப்பெற்ற மூலத்தினையும் அந்த மூலம் அடிப்படையில் நம்பத்தகுந்ததா என்பதையும் குறிக்கின்றது. செல்லுபடியாகக்கூடிய தன்மையென்பது அந்தத் தகவல் தாமே துல்லியமானதா என்பதையும் அது உண்மையினைப் பிரதிபலிக்கின்றதா என்பதையும் குறிப்பிடுகின்றது. பாலியல் வன்முறையினை ஆவணப்படுத்துகின்ற நடைமுறைப்படுத்துனர்கள் முதலில் சாட்சியத் தகவல்களை மதிப்பிடுவதில் ஈடுபடுவர் - அவற்றின் மதிப்புறுதிறன் மற்றும் ஒத்திசையாத் தன்மைகளைப் பரிசீலித்து சாத்தியமெனில் அந்த ஒத்திசையாத் தன்மைகளை விளக்குவதற்கு முற்படுவர். மறுபுறத்திலே ஏனைய வகையிலான தகவல்களின் மதிப்புறுதிறனினையும் நம்பகத்தன்மையினையும் தீர்மானிப்பதானது மிகவும் நிபுணத்துவம் வாய்ந்த தடயவியல் திறன்களைச் சம்பந்தப்படுத்தலாம்.

மதிப்புறுதிறனுடைய மூலமொன்றினை நம்பத்தகுந்த தகவலுடன் தன்னியக்கமாக இணைப்பதையும் அல்லது நம்பத்தகுந்த தகவலினை மதிப்புறுதிறனுடைய மூலத்துடன் தன்னியக்கமாக இணைப்பதையும் தவிர்ப்பதற்கு மூலத்தின் மதிப்புறுதிறனினையும் தகவலின் நம்பகத்தன்மையினையும் வெவ்வேறாக மதிப்பிடுவது விரும்பத்தக்கதாகும்.

மதிப்பீட்டினை முடித்த பின்பு சகல சான்றுகளையும் - வாக்குமூலம், பௌதீக, ஆவணம் மற்றும் டிஜிடல் - கீழே காட்டப்பட்டுள்ளவாறாக சான்றுப் பகுப்பாய்வுத் தளத்திலே நிர்ணயிக்கப்பட்டுள்ள தெரிவடிப்படைக்கு அமைவாக வகைப்படுத்த முடியும்.

| சான்றுப் பகுப்பாய்வுத் தளம் | | | | |
|---|---|---|---|---|
| வரையறுக்கப்படாதது | சராசரி | முக்கியமானது | நம்பத்தகாதது | ஆதரப்படுத்துவது |
| | | | | |

சேகரிக்கப்பட்ட சான்றுகள் பின்வருவனவற்றினைக் கொண்டிருக்கக்கூடிய சாத்தியத்தினைக் கொண்டுள்ளனவா என்பதையும் நடைமுறைப்படுத்துனர்கள் தீர்மானிக்க வேண்டும்.

» குற்றம் சாட்டுகின்றது அல்லது குற்றம் சாட்டாதது

» சேகரிக்கப்பட்ட ஏனைய தகவல்களுக்கு ஆதாரமாகவிருக்கின்றது அல்லது முரண்படுகின்றது

## 2. பாலியல் வன்முறை பற்றிய சாட்சியத் தகவல்களை மதிப்பிடுதல்

### a. மூலங்களின் மதிப்புறுதிறன்

உங்களுடைய மூலத்தின் மதிப்புறுதிறனினை மதிப்பிடுகையில் பின்வருவனவற்றினைக் கருத்திற் கொள்ளவும்.

- யார் சாட்சியத்தினை வழங்கியது - அவர்களுடைய அரசியல், சமூக, குடும்ப அல்லது ஏனைய குழுமத் தொடர்புகள் யாவை?
- அவர்கள் எவ்வாறு சாட்சியமளிக்கின்றனர்? என்ன தகைமையில், - அவர்கள் தாமே பாதிக்கப்பட்டவர்களா, அவர்கள் தாம் நேரடியாகப் பார்த்த ஒன்றினைப் பற்றியா அல்லது நேரடியாகச் செவிமடுத்த ஒன்றினைப் பற்றியா சாட்சியமளிக்கின்றனர்?
- ஏன் சாட்சியம் வழங்கப்பட்டது? அதற்கான நோக்கம் தெளிவானதா?

**பெட்டி 2**

**சாட்சிய மூலங்களை வகைப்படுத்துதல்**

மதிப்புறுதிறனினை வகைப்படுத்தி மதிப்பிடுவதில் பின்வரும் தெரிவடிப்படை நடைமுறைப்படுத்துனர்களுக்கு உதவலாம்: வழக்குத் தாய வலையமைப்புத் தளப் பிரயோகத்தில் இருந்து *(CMN), I-DOC*

| | |
|---|---|
| சாட்சிய வகை: | » பாதிக்கப்பட்டதை நேரில் கண்ட சாட்சி<br>» குற்றச்செயல்களின் விளைவுகளின் சாட்சி<br>» அடிப்படைச் சாட்சியிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்<br>» குறிப்பிட்ட தகைமையிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்<br>» தனது உத்தியோகபூர்வத் தகைமையிலிருந்து பெற்றுக்கொண்ட சாட்சி<br>» பொதுவான தகவல்கள் பற்றி சாட்சியமளித்தல்<br>» சம்பவத்திற்குத் தயாராவதைக் கண்ட சாட்சி<br>» நேரடிச் சாட்சி<br>» கேள்விப்பட்ட ஒன்றினைப் பற்றிய சாட்சி (பாதிக்கப்பட்டவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணிகள் உள்ளடங்கலாக)<br>» நிபுணத்துவச் சான்று |
| வகிபாத்திரமும் உரித்துடைமையும் | » பொதுமக்கள்<br>» புலம் பெயர்ந்தோர் / வஞ்சக்கடத்தலினால் பாதிக்கப்பட்டோர்<br>» சமுதாயத் தலைவர்கள் (ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், மதகுருமார்கள் உள்ளடங்கலாக)<br>» உள்;ர்க் கொள்கை அத்துடன் / அல்லது பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்கள்<br>» ஆயுதப்படையின் பணியாளர்கள்<br>» பரா இராணுவப்படைகளின் உறுப்பினர்கள்<br>» குற்றச்செயல்களுக்கான அமைப்புக்களின் உறுப்பினர்<br>» உள்;ராட்சி உறுப்பினர்<br>» மாநில அரசாங்கத்தின் உறுப்பினர்<br>» பெடரல் அரசாங்கத்தின் உறுப்பினர்<br>» தேசிய கொள்கை அத்துடன் / அல்லது பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்<br>» பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர் |

### b. தகவல்களின் நம்பகத்தன்மை

நடைமுறைப்படுத்துனர்கள் வாக்குமூலத் தகவல்களை மதிப்பிட்டு அந்த வாக்குமூலத்தில் உள்ளடங்கியுள்ள இயலுமான அளவு விடயங்களைத் தம்மால் இயன்றவரை பரீட்சிக்க வேண்டும். வாக்குமூலத்தில் எந்த அளவிற்கு மிகவும் விபரமான மற்றும் துல்லியமான தகவல்கள் உள்ளடங்கியுள்ளதோ அந்த அளவிற்கு அது நம்பத்தகுந்த மற்றும் மதிப்புறு திறன்கொண்ட சாட்சியாகக் கருதப்படும்.

### c. ஒத்திசையாமைக்கான மதிப்பீடு

தனிப்பட்ட வாக்குமூலங்களை மதிப்பிடுகையில் நடைமுறைப்படுத்துனர்கள் பின்வருவனவற்றை மதிப்பிட வேண்டும்.

i. **வாக்குமூலங்களினுள் ஒத்திசையாத்தன்மை.** என்ன நடந்தது என்பது தொடர்பாகத் தனிப்பட்டவர்கள் கூறுகின்றவற்றில் மோதல்கள் காணப்படுகின்றனவா? குறிப்பாக அமைவிடம், முறைகள், யார் சம்பந்தப்பட்டது எத்தனை பேர் அங்கே இருந்தனர் என்பவை தொடர்பாக இவ்வாறான மோதல்கள் காணப்படுகின்றனவா?

**பெட்டி 3**

**சகபாடிகளின் அனுபவம் — ஒத்திசையாமையினை மதிப்பிடுதல்**

ஜொசபின் - விசாரணையாளர்,

*நேர்காணலின் போது நீங்கள் தவறவிட்ட ஒத்திசையா மைகளைக் கண்டறிவதற்காக நீங்கள் வாக்குமூலங்களை மீளவாசிக்கும் போது மிகவும் திறனாய்வுடன் அவற்றினை வாசிக்க வேண்டும். உதாரணமாக ஒரு சம்பவத்தில் நகரத்திற்கு வெளியே குறிப்பிட்ட கட்டிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதைப் பாதிக்கப்பட்டவர் விபரிக்கையில் (பாதிக்கப்பட்டவரை வீட்டிற்குள் எடுத்துச் செல்கையில் வெளியே வீதியில் யாரும் இருக்கவில்லையென்று குறிப்பிட்டமை விசித்திரமான ஒன்றாக அவதானிக்கப்பட்டது. அவரின் வார்த்தையில் அவ்விடத்தில் விசித்திரமான அமைதி நிலவியதாக அவர் குறிப்பிடுகின்றார். எவ்வாறாயினும், பருத்தியினால் ஆன சாக்கினுள் அவருடைய தலையைத் திணித்து அவரைக் குண்டுக்கட்டாக அந்த வீட்டிலிருந்து வேறொரு இடத்திற்கு 30 நிமிடங்களின் பின்னர் எடுத்துச் செல்கையில் அங்கே சந்தைகளின் சத்தங்களையும் அருகிலுள்ள கோழிகளின் சத்தத்தையும் விளையாடுகின்ற சிறுவர்களின் சத்தத்தையும் கேட்டதாக அவர் விபரிக்கின்றார். இந்த இரண்டு விபரிப்புக்களும் சேர்ந்து சாத்தியமற்றவையாகின்றன. இவை எந்த அர்த்தத்தையும் தரவில்லை. எவ்வாறு வெறிச்சோடிக் கிடந்த ஒரு வீதி அரை மணித்தியால நேரத்தினுள் சந்தடி நிறைந்ததொரு சந்தையாக மாறலாம்.*

ii. **சம்பவங்களின் காலரீதியான ஒழுங்கில் இடைவெளிகள் காணப்படுதல். நிகழ்வுகளின் தொடரும் காலத்திட்ட அமைப்பும் அர்த்தமுள்ளவையாகக் காணப்படுகின்றனவா? பெருமளவிலான நேரம் கணக்கிடப்படாமல் உள்ளதா?**

iii. **வாக்குமூலங்களுக்கிடையில் அத்துடன்/அல்லது வாக்குமூலங்களுக்கும் ஏனைய சாட்சிகளுக்குமிடையில் மோதல்கள் காணப்படுகின்றனவா. ஒரே விடயங்களைப்** பற்றியும் சூழ்நிலைகளைப் பற்றியும் சேகரிக்கப்பட்ட ஏனைய வாக்குமூலங்களுடன் வாக்குமூலம் ஒத்திசைகின்றதா? செயற்பாடு பற்றிய, சூழ்நிலை பற்றிய அல்லது செயற்பாடு நடந்த சூழமைவு பற்றிய சாத்தியமான சான்றுகளைக் கொண்டுள்ள ஏனைய தகவல்களுடன் வாக்குமூலம் ஒத்திசைகின்றதா?

iv. ஒத்திசையாமைகளின் வகைகளுள் பின்வருவன உள்ளடங்கலாம்.

» விபரம் அல்லது கண்ணோட்டத்தில் சிறிய வித்தியாசங்கள் இவை நேரடியாக முரண்படுகின்ற வையாக அல்லது முரண்படாதவையாக இருக்கலாம்.
» ஆலோசனை அல்லது கூற்றின் போது மாற்றமடையக்கூடிய துலக்கமற்ற விடயங்கள்
» தெளிவான உண்மைகளின் வழு
» கண்ணால் கண்ட சாட்சிகளின் வாக்குமூலம், வதந்தி மற்றும் நேரடியாகப் பெறாத தகவல்கள் ஆகியவற்றின் சங்கமம்
» தகவல்களை விட்டுச்செல்லுதல் அல்லது கூற்றுக்களின் பகுதிகளை விட்டுச்செல்லுதல்
» நெருடலான, பொருத்தமற்ற அல்லது முரண்படுகின்ற வாக்குமூலம்
» தெளிவான மிகைப்படுத்தல்
» சாத்தியமுடைய உண்மையற்ற விடயங்கள், பொய்கள் அல்லது ஓரளவு மாத்திரமே உண்மையானவை

### d. ஒத்திசையாமையினை விளக்குதல்

**ஒத்திசையாமைகளும் மோதல்களும் அபூர்வமானவையல்ல. மேலும் அவை சாட்சிகளின் மதிப்புறுதிறனின்மை, நேர்மையீனம் அல்லது நம்பகத்தன்மையின்மை ஆகியவற்றினைச் சுட்டிக்காட்டுபவையாக அவசியம் இருக்க வேண்டுமென்பதுமில்லை.**

» சில ஒத்திசையாமைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகும். ஆனால் அவை நன்கு அடையாளம் காணப்பட்டு கையாளப்பட்டு விளக்கப்படல் வேண்டும்.
» நேர்காணலின் போது விளக்கங்களை உடனடியாகக் கோரக்கூடியதாக இருக்கும்போது ஒத்திசையாமைகளை உடனடியாகவே எப்போதும் நடைமுறைப்படுத்துனர்களினால் அடையாளம் காணக்கூடியதாக இருக்காது. எவ்வாறாயினும் நடைமுறைப்படுத்துனர்கள் மிகவும் தீர்மானகரமான ஒத்திசை யாமைகளை தெளிவுபடுத்துவதில் சாட்சிகளை ஈடுபடுத்த வேண்டும். இவர்களினால் மிகவும் முக்கியமான விளக்கங்களினை வழங்கக்கூடியதாக இருக்கும். அல்லது தேவையெனின் அவர்களது கோரிக்கைகளுக்குப் புறவயமாக ஆதரவு வழங்கக்கூடிய தகவல்களின் மேலதிக மூலங்களை அடையாளம் காணக்கூடியதாக இருக்கும்.

குறிப்பாக பாலியல் வன்முறைச் சம்பவங்களில் ஒத்திசையாமையானது பல்வேறு காரணிகளின் பெறுபேறாக இருக்கலாம்.

i. **மௌனம்.** தமக்கு, தமது குடும்பத்திற்கு அல்லது தமது சமுதாயத்திற்கு என்ன நடந்துள்ளதென்பதை வெளிக்கூறாத பாதிக்கப்பட்டவர்கள் தமது வாக்குமூலத்தினை ஏனைய சாட்சிகள் முரண்படச் செய்வதைக் காணலாம். குறிப்பாக, காணாமற் போதல், உடல் மற்றும் உளவியல் அறிகுறிகள் அல்லது கர்ப்பம் ஆகியவற்றினை விளக்குவதற்காக அவர்கள் முன்பு மாற்றுக் கூற்றுக்களை வழங்கியிருந்தால்

**பெட்டி 4**

## பாதிக்கப்பட்டவரின் அனுபவம் – ஒத்திசையாமைகளை விளக்குதல்

ஹனா:

*பாலியல் வல்லுறவு பற்றி நான் யாரிடமும் கூறவில்லை. எனக்கு இது சரியாகி விடும் என நான் முதலில் நினைத்தேன். ஆனால் நான் மிகவும் பதகளிப்பும், குழம்பமும் நிறைந்தவளாகக் காணப்பட்டேன். நான் எல்லா சந்தர்ப்பங்களிலும் அழ ஆரம்பித்தேன். ஒரு தடவை எனது மைத்துனி என்னை இந்த நிலையில் கண்டு விட்டார். அவரிடம் என்ன கூறுவதென எனக்குத் தெரியவில்லை. எனவே நான் அவரிடம் எனது கணவர் இன்னொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பதை நான் கண்டதாகக் குறிப்பிட்டேன். அவர் இதை எனது சகோதரனிடம் கூறி விட்டார். கோபமடைந்த எனது சகோதரர் எனது கணவனின் வேலைத்தளத்திற்குச் சென்று அவரைச் சத்தம் போட்டு ஏசத்தொடங்கி விட்டார். அப்பொழுது சகலரும் மௌனமாகிய பின்னர் அவர்கள் என்னை நோக்கி நான் ஒரு பொய்க்காரி என்றும் குழப்பத்தை ஏற்படுத்துபவள் என்றும் ஏசத்தொடங்கினர். அப்போது உண்மையைக் கூறுவது சாத்தியமற்றதென நான் உணர்ந்தேன். யாருமே என்னை நம்ப மாட்டார்கள், மேலும் இன்னும் என்னை அனைவரும் பொய்க்காரி என்றே அழைக்கின்றனர்.*

ii. **கலாசாரம்.** காரணமாகவும் நேர்காண்பவருக்கும் நேர்காணப்படுபவருக்கும் இடையிலான தவறான புரிதலின் காரணமாகவும் ஒத்திசையாமைகளும் விட்டுவிடுதல்களும் ஏற்படலாம். தனிநபர்கள் நிகழ்வுகளை ஞாபகப்படுத்தும் முறையும் குறிப்பிட்ட உணர்வுகளை அவர்கள் வெளிப்படுத்தும் முறையும் அவர்களின் அவதானிப்புகளும் தமது செயற்பாடுகளை அவர்கள் வெளிப்படுத்துவதும் அவர்களின் தனித்துவமான சொற்களும் கலாசார ரீதியாகத் தனித்துவமானவையாக இருக்கலாம். பல சம்பவங்களில், செயல்களை விபரிப்பதற்கான குறிப்பிட்ட சொற்கள் வழக்கில் இல்லாதவையாகக்கூட இருக்கின்றன. கூறுகின்ற கதைகள் தற்காலிகமாக விபரிக்கப்பட்டாலும் அல்லது அவை புறநிகழ்வுகளை அல்லது உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் அவற்றின் மத்திய கட்டமைப்பு கலாசா ரீதியாகத் தனித்துவமானதாகும்.

iii. **அரசியல்.** வாக்குமூலங்கள் ஏன் மிகைப்படுத்தப்படுகின்றன, போலியானவையாக ஆக்கப்படுகின்றன அல்லது முரண்படச் செய்யப்படுகின்றன என்பதற்கான காரணம் நேர்காணப்படுபவர்களின் அரசியல் நிகழ்ச்சித்திட்டம் ஆகும். பாலியல் வன்முறைகளை அறிக்கையிடுவது குறிப்பிட்ட குழுமத்திற்கு எதிரான ஒரு பிரச்சார வடிவமாகப் பயன்படுத்தப்படலாம். அவர்களைக் காட்டுமிராண்டிகளாக, சமயப் பற்றற்றவர்களாக அல்லது குற்றவாளிகளாகக் காட்டுவதற்கான எத்தனிப்புக்களாக இருக்கலாம். மாறாக, நடைபெற்ற பாலியல் வன்முறையினைச் சாட்சி மறுப்பதற்கு முன்வந்து, குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவருடன் பாதிக்கப்பட்டவர்கள் கொண்டுள்ள தொடர்புகள் காரணமாக அவர்கள் கதைகளையும் அறிக்கைகளையும் சோடித்துக் கூறுவதாகக் குற்றஞ்சாட்டலாம்.

iv. **உதவிக்கான அணுகல்.** பாலியல் வன்முறையினை வெளிக்கூறிய காரணத்தினால் அதிகரித்த உதவிக்கான, பாதுகாப்பிற்கான, வேறிடத்தில் குடியிருத்துவதற்கான மேலும் சில சம்பவங்களில் நிதியுதவிக்கான ஏற்பாடுகள் உருவாக்கப்படுகின்ற காரணத்தினால் போலியான குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படலாம்.

v. **மன அதிர்ச்சி வடு.** மன அதிர்ச்சி வடுவுக்குள்ளான தனிநபர்களினால் பொதுவாக எப்பொழுதுமே தமக்கு என்ன நடந்ததென்பதைத் துல்லியமாகவும் பூரணமாகவும் ஞாபகப்படுத்த முடியாது. இவர்களின் நினைவுகளில் இடைவெளிகள் காணப்படலாம் அல்லது ஞாபகங்களில் மறந்துபோன விடயங்கள் காணப்படலாம். இவை குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மாத்திரம் வரையறுக் கப்பட்டதாக இருக்கலாம். அல்லது என்ன நடந்தது என்பதை முழுவதுமாக வெளிக்கூறுவதற்கு முடியாத அளவிற்கு நடைபெற்ற சம்பவத்தின் பூரண அதிர்ச்சியினால் இவர்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கலாம் (மேலதிக விபரங்களுக்கு அத்தியாயம் 15 ஐப் பார்க்கவும்: மன அதிர்ச்சி வடு)

vi. **எதிர்தாக்குதல் தொடுக்கப்படலாம் என்ற அச்சம்.** தமது அடையாளம் அத்துடன் / பாலியல் அடையாளம், மேலும் தமக்கு நடைபெற்ற பாலியல் வன்முறையைப் பற்றி அல்லது தாம் கண்ணால் கண்ட பாலியல் வன்முறையின் கூறுகளைப் பற்றி சாட்சியம் வழங்கிய காரணத்தினால் தாம் யார் என்பது தாக்குதல் நடத்தியவர்களுக்கு தெரியவந்து அதன் மூலம் எதிர்தாக்குதல் நடைபெறலாம் என்கின்ற அச்சத்தினால் சாட்சிகள் வழங்குகின்ற வாக்குமூலத்தில் ஒத்திசையாத தன்மைகள் காணப்படலாம். இவர்கள் சில சந்தர்ப்பங்களில் பகுதியான விபரங்களை மாத்திரம் வழங்கலாம். விசாரணையின் போக்கினைத் திசைதிருப்புவதற்கு முயற்சிக்கலாம். மேலும் ஏனைய பாதிக்கப்பட்டவர்களின் சாட்சிகளின் அல்லது தாக்குதல் நடத்தியவர்களின் பிரசன்னத்தினைக் குறிப்பிடுவதனைத் தவிர்க்கலாம்.

vii. **வழுக்களும் பூரணமின்றிய ஞாபகப்படுத்துகையும்.** பாதிக்கப்பட்டவர்களும் ஏனைய சாட்சிகளும் விடயங்களைப் பற்றிக் குழப்பமடைந்தவர்களாகக் காணப்படலாம் - திகதிகள், நேரங்கள், இடங்கள் அல்லது இந்த விபரங்களில் பலவற்றினை ஞாபகப்படுத்துவதற்கு சிரமமப்படலாம்.

viii. **வெட்கம், சங்கடம்.** பகிரங்க மன்று ஒன்றிலே தனிப்பட்ட விடயங்களை மீளக்கூறுகையில் அல்லது முக்கியமான தகவல்களை வெளிக்கூறுகையில் இவர்கள் வெட்க உணர்வினைக் கொண்டிருக்கலாம்.

ix. **செல்வாக்கு:** சாட்சிகளுக்கிடையில் இடம்பெறுகின்ற கலந்துரையாடல் ஒவ்வொருவரினதும் வாக்குமூலத்தில் செல்வாக்குச் செலுத்தலாம். அல்லது சாட்சி வாக்கு மூலத்தை வாசித்தால் சாட்சி எதைக் கருதுகின்றாரோ அதை விட வித்தியாசமாக அதனைக் கேட்ட அல்லது உரைபெயர்த்த மற்றுமொரு நபரினால் எழுதப்பட்ட முன்னைய வாக்குமூலத்தின் செல்வாக்கு

x. **சகபாடிகளின் அழுத்தமும் அச்சுறுத்தலும்**. சமுதாயத்தின் நன்மைக்காக ஒத்துப்போகக்கூடிய விபரங்களை அல்லது ஆதரவாக இருக்கக்கூடிய குற்றச்சாட்டுக்களை வழங்குமாறு சாட்சிகளுக்கு அழுத்தம் வழங்கப்படலாம்.

xi. **மோசமான உரைபெயர்ப்பு**

**பெட்டி 5**

## சிறுவர்களின் வாக்குமூலத்தின் ஒத்திசையாத் தன்மைகள்

சிறுவர்களின் வாக்குமூலத்தில் மேலே குறிப்பிடப்பட்ட காரணங்கள் எவற்றினாலாவது ஒத்திசையாத் தன்மைகள் ஏற்படலாம். வாக்குமூலத்திலே ஒத்திசையாத்தன்மையினை ஏற்படுத்தக்கூடிய பிள்ளையின் வயது மற்றும் விருத்தியுடன் விசேடமாகத் தொடர்புபட்டுள்ள காரணிகளும் உள்ளன. குறிப்பாகத் தெரிவிக்கப்படுகின்ற வினாக்களுக்குச் **சிறுவர்கள் மிகவும் கூருணர்வுடையவர்களென்பதை ஞாபகத்தில் வைத்திருப்பதும் நேர்காண்பவரைத் திருப்திப்படுத்தி சரியான பதிலைக் காண்பதற்காகத் தமக்குத் தெரியாவிட்டாலும் ஏதாவதொரு பதிலைச் சிறுவர்கள் வழங்கலாம் என்பதை அறிந்திருப்பதும் முக்கியமானதாகும்.** குறிப்பாக இளம் சிறுவர்கள் சில கருத்தியல்களைப் புரிந்துகொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கலாம்(அதாவது நேரங்கள், திகதிகள், வயதுகள், எத்தனை தடவைகள் ஏற்பட்டன என்பது பற்றிய தகவல்கள், அளவு, உயரம், எடை). இது வளர்ந்தவர் ஒருவர் குறிப்பிட்ட தகவல்களுடன் ஒத்திசையாத தகவல்களைச் சிறுவர்கள் வழங்குவதற்கு இட்டுச் செல்லலாம். இந்த அபாயநேர்வுகளை எவ்வாறு குறைக்கலாம் என்பது பற்றிய வழிகாட்டல்களுக்கு அத்தியாயம் 16 இல் சிறுவர்கள் மற்றும் பாலியல் வன்முறை பிரிவு E யினையும் ஆவணப்படுத்தல் செயன்முறையில் சிறுவர்களை ஈடுபடுத்துவதில் பிரதான வழிகாட்டி என்பதையும் பார்க்கவும்.

## 3. ஆவண, பௌதீக மற்றும் டிஜிடல் சான்றுகளை மதிப்பிடுதல்

வாக்குமூலத்திற்கு அப்பால் சாட்சிகளின் மேலதிக வடிவங்களை அணுகக்கூடிய நடைமுறைப்படுத்துனர்களுக்கு ஆவண, பௌதீக மற்றும் டிஜிடல் சான்றிதழ்களின் மதிப்புறுதிறன் மற்றும் செல்லுபடியாகும்தன்மையினை மதிப்பிடுவதென்பது அவற்றின் உண்மைத்தன்மையினையும் நம்பகத்தன்மையினையும் தீர்மானிப்பதைச் சம்பந்தப்படுத்து கின்றது.

### a. உண்மைத்தன்மை

சாட்சி ஒன்றின் உண்மைத்தன்மையினை உறுதிப்படுத்துவது அதன் செல்லுபடியாகும்தன்மையினை மதிப்பிடுவதன் முதற்படியாகும். சாட்சி ஒன்று போலியாக உருவாக்கப்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிப்பது சிக்கல் வாய்ந்ததும் நிபுணர்கள் முன்னெடுத்துச் செல்லக்கூடியதுமான ஒரு செயன்முறையாகும். இருப்பினும் நடைமுறைப்படுத்துனர்களினால் குறைந்தது பின்வருவன வற்றினை மேற்கொள்ள முடியும்.

- **எந்த மூலத்தில் இருந்து சாட்சி பெறப்பட்டதோ அந்த மூலம் தொடர்பாக நம்பிக்கை கொண்டிருத்தல்,** நம்பத்தகுந்த மூலத்திலிருந்து, பொருத்தமான பாதுகாத்து வைத்திருக்கும் வரிசையின் தேவைப்பாடுகளைத் தொடர்ந்து
- **ஒப்பிடத்தக்க அல்லது ஒரேவிதமான தகவல்களைக் கண்டறிதல்** - உதாரணமாக ஒரே வகையான ஆவணங்களைப் பெற்றுக்கொண்டு அவற்றினை நேரடியாக ஒப்பிடல்
- **நிபுணர்களின் பகுப்பாய்வினைப் பயன்படுத்துதல்.** தேவையான திறன்களுடன் தடயவியல் மற்றும் ஏனைய நிபுணர்கள் - சுடுகலன் நிபுணத்துவம், ஆவண உண்மைப்படுத்துதல், மானுடவியல் மற்றும் கலாசார வரலாற்றாசிரியர்கள். இவற்றின் உண்மைத்தன்மை மற்றும் மூலங்களைத் தீர்மானிப்பதற்குச் சான்றுகளின் தனிப்பட்ட கூறுகளைப் பகுப்பாய்வு செய்யக்கூடியதாக இருக்கலாம்.

### b. நம்பகத்தன்மை

சாட்சியின் கூறு ஒன்று உண்மைத்தன்மை வாய்ந்ததாக இருக்கலாம். ஆனால் நம்பகத்தன்மை அற்றதாக இருக்க முடியும். அதாவது சாட்சியின் மூலத்தின் மீதான விசுவாசமானது சந்தேகத்திற்குரியதாக இருக்கலாம். உதாரணமாக உண்மைத்தன்மைமிக்க மருத்துவச் சட்ட அறிக்கையானது அரசினால் நடத்தப்படுகின்ற கிளினிக் ஒன்றினால் வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால் அது காயங்கள் பற்றிய பொய்யான தகவல்களை வழங்கியிருக்கலாம். அல்லது பாதிக்கப்பட்டவர் தொடர்பான பாதகமான உளவியல் மதிப்பீட்டினை வழங்கியிருக்கலாம் இது பாதிக்கப்பட்டவரின் மதிப்புறுதிறனினைத் தாக்குவதற்கான ஒரு முயற்சியாக இருக்கலாம். அதற்கு அவர்கள் தவறான முறையியல் அல்லது உறுதியற்ற மருத்துவமனை முறைகளைப் பயன்படுத்தியிருக்கலாம் அல்லது அவை பயிற்றப்படாத அல்லது அனுபவமற்ற சிகிச்சையாளர்களால் மேற்கொள்ளப் பட்டிருக்கலாம். எனவே இவற்றினை நம்பத்தகுந்தவை அல்ல எனக் கருதவேண்டும். (பார்க்க 2 a மூலத்தின் மதிப்புறுதிறன்)

**மீண்டும் நடைமுறைப்படுத்துனர்கள் சாட்சியின் மூலத்தின் மதிப்புறுதிறனினை மதிப்பிட வேண்டும்.**

- வாக்குமூலத்தினை **யார்** வழங்கியது / அவர்களின் அரசியல், சமூக, குடும்ப ஏனைய குழுமத் தொடர்புகள் என்ன
- **ஏன்** சாட்சி வழங்கப்பட்டது? நோக்கம் தெளிவானதா?

பின்வருவனவற்றையும் கருத்திற் கொள்ளவேண்டும்.

- சாட்சி **எங்கே** அமைந்துள்ளது?
- சேகரிக்கப்பட்ட ஏனைய தகவல்களுடன் சாட்சி **எவ்வாறு** பொருந்துகின்றது?

பெட்டி 6

## டிஜிடல் சான்றும் உண்மைத்தன்மையும்

உலகளாவிய ரீதியில் ஸ்மாட் தொலைபேசிகளும் சமூக ஊடகங்களும் பல்கிப் பெருகியுள்ளமையானது நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களினைக் காட்சிப்படுத்தும் புகைப்படங்கள் மற்றும் வீடியோப் பதிவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதைக் கணிசமாக அதிகரித்துள்ளது. சில காட்சிப்பதிவுகள் நடைமுறைப்படுத்துனர்களுக்கு பாலியல் வன்முறை தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு மிகப் பயன்மிக்கதாக இருக்கின்றன. குறிப்பாக குற்றச்செயல்களின் சூழியல் கூறுகளை நிர்ணயிப்பதற்கு இது உதவுகின்றது.

பல்வேறு மனித உரிமைகள் நிறுவனங்கள் புகைப்படங்களையும் வீடியோக்களையும் நடைமுறைப்படுத்துனர்கள் மதிப்பிட்டு அவை உண்மையானவையா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு உதவுவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களையும் வழிகாட்டல்களையும் உருவாக்கியுள்ளன.

உதாரணத்திற்காக பார்க்க:

- சான்றாக வீடியோ: கண்ணால் கண்ட சாட்சியின் வீடியோவினைப் பரீட்சித்தல்
- https://library.witness.org/product/video-as-evidence-verifying-eyewitness-video/
- AmnestyInternational’s இன் பிரஜைகளின் சான்று ஆய்வுகூடம்; https://citizenevidence.org இது மனித உரிமைகள் பாதுகாப்புக்காக பயன்படுத்துனர் உருவாக்கிய உள்ளடக்கத்தின் உண்மைத்தன்மைக்கான சிறந்த நடைமுறைகளையும் உத்திகளையும் கருவிகளையும் உள்ளடக்குகின்றது.
- பரீட்சிப்புக் கைநூல்: அவசர உள்ளடக்கம் மற்றும் பரீட்சிப்புக்கான டிஜிடல் உள்ளடக்கத்தினை பரீட்சிப்பதற்கான திட்டவட்டமான வழிகாட்டி http://verificationhandbook.com
- DatNav: மனித உரிமைகள் ஆய்வில் டிஜிடல் தரவினைப் பயன்படுத்துவதற்கான புதிய வழிகாட்டி. AmnestyInternational, Benetech,TheEngineRoom
- http://www.benetech.org/wp-content/uploads/2016/09/datnav_report_med_res.pdf

**டிஜிடல் சான்றினைப் பரீட்சிப்பதற்கான 5 படிகள்**

*Dat Nav* இல் இருந்து மனித உரிமைகள் ஆய்வில் டிஜிடல் தரவுகளை பயன்படுத்துவதற்கான புதிய வழிகாட்டி *A New Guide to Navigate the Digital Data in Human Rights Research*

1. **நீங்கள் எவ்வாறு உள்ளடக்கத்தினைப் பெற்றுக்கொண்டீர்கள்?**
   உங்களது மேசைக்கு நீங்கள் வருவதற்கு முன்னால் அது என்னென்ன தகவல் மார்க்கங்களுடாகச் சென்று வந்தது என்பதைப் பற்றிச் சிந்திக்கவும். அது எத்தனை தடவைகள் கை மாறி உள்ளது
2. **உள்ளடக்கத்தினை யார் உருவாக்கியது?**
   ஒன்லைனிலுள்ள உள்ளடக்கத்தைப் பதிந்த அல்லது பதிவேற்றம் செய்த நபரே உருவாக்குனரா? அல்லது அது வேறு யாராவது நபரா? உங்களுக்கு தெரியாவிட்டால் விசாரிக்கவும்.
3. **எங்கிருந்து உள்ளடக்கம் வருகின்றது?**
   விபரங்களையும் மெட்டா தகவல்களையும் போலியாக உருவாக்க முடியும். நீங்கள் அமைவிடத்தினை நிச்சயப்படுத்திக் கொள்ளக்கூடிய ஏதாவது புலப்படக்கூடிய அடையாளங்கள் அல்லது ஒலிகள் உள்ளனவா?
4. **உள்ளடக்கம் எப்போது உருவாக்கப்பட்டது?**
   நீங்கள் திகதி முத்திரையை நம்பலாம். காலநிலை போன்ற வேறு ஏதாவது சான்றுகள் உள்ளனவா? புகைப்படம் வேறு எங்காவது தென்படுகின்றதா என்பதைப் பின்னால் செல்கின்ற பிம்ப ஆய்வு காட்டும்.
5. **உள்ளடக்கம் ஏன் உருவாக்கப்பட்டது?**
   உள்ளடக்கத்தினைப் பகிர்வதற்கான நோக்கத்தினை உங்களால் பகிர முடியுமா? பதிவேற்றம் செய்தவருக்கு என்னென்ன அக்கறைகள் உள்ளன.

## C. கூறுகளை நிலைநாட்டுதல்

**பெட்டி 7**

**சகபாடிகளது அனுபவம் — தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்**

Afua, என்ஜீஓ பணிப்பாளர்:

*பிரதேசத்திலே எமது அணி இருந்த 7 மாத காலப் பகுதியில் நாங்கள் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தும் ஏனைய சாட்சிகளிடமிருந்தும் 300க்கும் மேற்பட்ட தனிப்பட்ட வாக்குமூலங்களைச் சேகரித்தோம். அவற்றுள் 140 ஆவணச்சான்றுகளும் டிஜிடல் சான்றுகளும் இருந்தன. இதிலே பாலியல் வல்லுறவு நடைபெற்றதை உறுதிப்படுத்துகின்ற மருத்துவப் பதிவுகளும் மிகவும் வன்முறைமிகு தாக்குதலின் போது உள்ளூர் ஆசிரியர் ஒருவரினால் எடுக்கப்பட்ட வீடியோ படமும் உள்ளடங்கியிருந்தன. எமக்குத் தேவையான அனைத்தையும் நாம் கொண்டுள்ளோம் என நாம் நினைத்தோம். எமது கள அடிப்படையிலான நிதியளிப்பு குறைவடையத் தொடங்கியது. மேலும் நாம் வார முடிவின் போது புறப்படவேண்டியிருந்தது. எனவே நாம் எமது கோப்புக்களைப் பொதிசெய்து எம்மிடமிருந்த ஆவணங்களை வைத்துக்கொண்டு அவற்றை ஒழுங்குபடுத்திப் பகுப்பாய்வு செய்யலாம் என நினைத்துப் புறப்பட்டோம். அது ஒரு தவறாகும். ஒவ்வொரு தகவலினையும் நாம் இறுதியாக ஒழுங்கமைத்துத் திட்டமிட்டபோது எம்மால் நிரூபிக்க முடியும் என நாம் நினைத்த வன்முறை தொடர்பான தேவைப்படும் சகல கூறுகளையும் திருப்திப்படுத்துவதற்கான சரியான வகையிலான சான்று எம்மிடம் இருக்கவில்லையென்பதை அப்போது தான் நாம் உணர்ந்து கொண்டோம். ஆனால் அப்போது மீண்டும் திரும்பிச்சென்று கேட்க வேண்டிய கேள்விகளைக் கேட்பதற்கோ அல்லது எமக்கு உண்மையில் தேவைப்படுகின்ற சான்றுகளைத் தேடுவதற்கோ வாய்ப்புத் தென்படவில்லை. அது காலம் தாமதித்த ஒன்றாகவே காணப்பட்டது. தகவல்களை நாம் தொடர்ச்சியாக ஒழுங்குபடுத்தியிருக்க வேண்டும். சேகரித்து முடிந்ததன் பின்னர் அதைப்பற்றிச் சிந்தித்திருக்க கூடாது.*

தகவல்கள் திரட்டப்பட்டு மதிப்பிடப்பட்டதும் நிரூபிப்பதற்கான எப்பாலியல் வன்முறைக் குற்றச்செயல் அல்லது வன்முறை தொடர்பான போதிய சான்றுகளைத் தாம் கொண்டுள்ளனர் என்பதனை மதிப்பிடக்கூடிய நிலையினில் நடைமுறைப் படுத்துனர்கள் இருப்பர். மேலும் மேலதிக சான்றுகள் ஏதேனும் தேவைப்படின் என்ன செய்வவது என்பதை மதிப்பிடும் நிலையிலும் இருப்பர்.

இந்த முறைவடிவத்திற்கு அமைய கூறுகளைத் திட்டமிடுதல், அவற்றின் தேவைப்பாடுகளைத் திட்டமிடுதல் மற்றும் தகவல்களின் தொகுதியினைத் திட்டமிடுதல் ஆகியவை மதிப்பீட்டிற்காக நடைமுறைப்படுத்துனர்கள் என்னென்ன மூலங்களையும் தகவல்களையும் முன்னுரிமைப்படுத்த வேண்டுமென்பதை அடையாளம் காண அவர்களை இயலுமாக்கும்.

உதாரணமாக நடைமுறைப்படுத்துனர்கள் தாம் திரட்டிய சான்றுகளை மதிப்பிட்டு பாலியல் வல்லுறவினை மானுடத்திற்கு எதிரான ஒரு குற்றச்செயல் எனத் தீர்மானிப்பதற்கான நிலையிலுள்ளனர் என்பதைத் தீர்மானிப்பர். அவ்வாறாயின் அவர்கள் பின்வரும் வினாக்களைத் தம்மைத்தாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

### பாலியல் வல்லுறவு + மானுடத்திற்கு எதிரான குற்றச்செயல்

**1. பாலியல் வல்லுறவின் குறிப்பிட்ட குற்றச்செயல்**

- தொடுகையின் மூலம் குற்றத்தை நிகழ்த்தியவர் நபரொருவரின் உடலின் மீது எல்லை மீறி நடந்து கொண்டதன் விளைவாக, உட்புகுவிப்பு, எவ்வளவு சாதாரணமாக இருந்தாலும், பாலியல் அங்கம் ஒன்றினால் பாதிக்கப்பட்டவர் அல்லது குற்றத்தை நிகழ்த்தியவரின் எந்தவொரு உடல் பாகத்திலும் நிகழ்ந்துள்ளது அல்லது ஏதாவது பொருளின் மூலம் அல்லது உடலின் ஏனைய பாகங்கள் மூலம் பாதிக்கப்பட்டவரின் குதம் அல்லது மர்ம ஸ்தானத் துவாரம் ஒன்றினுள் உட்புகுவிப்பு நிகழ்ந்துள்ளது என்பதை நிரூபிப்பதற்கு என்ன சான்று திரட்டப்பட்டுள்ளது?
- பலவந்தம் பயன்படுத்தப்பட்டுள்ளது அல்லது கட்டாயப் படுத்தும் சூழல் நிலவியுள்ளது என்பதைக் காட்டுவதற்கு என்ன சான்று திரட்டப்பட்டுள்ளது?

**2. மானுடத்திற்கு எதிரான குற்றச்செயலின் வகை**

- இந்த நடத்தையானது பரந்தளவிலான அல்லது முறைமை வாய்ந்த தாக்குதலின் ஓரங்கம் என்பதன் முடிவினை ஆதரிக்கின்ற என்ன தகவல் திரட்டப்பட்டுள்ளது?
- தாக்குதலானது சிவிலியன்கள் மீது நடத்தப்பட்டது என்கின்ற முடிவினை என்ன தகவல்கள் ஆதரிக்கின்றன?
- நடத்தையானது சிவிலியன்களுக்கு எதிரான தாக்குதலின் ஒரு பகுதி அல்லது ஒரு பகுதியாக கருதப்படுவது என்பதை நேரடியாகக் குற்றத்தை நிகழ்த்தியவர் அறிந்திருந்தார் என்கின்ற முடிவினை என்ன தகவல் ஆதரிக்கின்றது?
- தாக்குதலானது அவ்வாறான தாக்குதலை நடத்துவதற்கான அரசின் அல்லது நிறுவனக் கொள்கையின் காரணமாகவே மேற்கொள்ளப்பட்டது என்கின்ற முடிவினை என்ன தகவல்கள் ஆதரிக்கின்றன? (பொருத்தமெனில் நியாயாதிக்கத்தினுள்)

பெட்டி 8

## உதாரண சான்று அச்சு

| உள்ளார்ந்த நோக்கம்: பாலியல் வல்லுறவின் பாலியல் வன்முறை மீறலை மானுடத்திற்கு எதிரான குற்றச்செயலாக நிலைநாட்டல் | வகையின் அடிப்படையில் சான்றின் உதாரணங்கள் | | | |
|---|---|---|---|---|
| | வாக்குமூலம் | ஆவணம் | பௌதீக | டிஜிடல் சான்று |
| **பாலியல் வல்லுறவின் கூறுகள்** | | | | |
| 1. தொடுகையின் மூலம் குற்றத்தை நிகழ்த்தியவர் நபரொருவரின் உடலின் மீது எல்லை மீறி நடந்து கொண்டதன் விளைவாக, உட்புகுவிப்பு, எவ்வளவு சாதாரணமாக இருந்தாலும், பாலியல் அங்கம் ஒன்றினால் பாதிக்கப்பட்டவர் அல்லது குற்றத்தை நிகழ்த்தியவரின் எந்தவொரு உடல் பாகத்திலும் நிகழ்ந்துள்ளது அல்லது ஏதாவது பொருளின் மூலம் அல்லது உடலின் ஏனைய பாகங்கள் மூலம் பாதிக்கப்பட்டவரின் குதம் அல்லது மர்ம ஸ்தானத் துவாரம் ஒன்றினுள் உட்புகுவிப்பு நிகழ்ந்துள்ளது | X எனும் பாதிக்கப்பட்ட நபரின் வாக்குமூலம்:<br><br>*பெரிய நபர் என்னுடைய தலையினைப் பிடித்து வைத்து என்னுடைய கைகளைக் கட்டிய பின்னர் சிறியவர் அவருடைய ஆண்குறியினை என்னுள் நுழைத்து 'இந்தப் பெட்டை நாய்க்கு பிள்ளைகள் இருக்கின்றது. வஅதனால்தான் இவளுடையது பெரிசாக இருக்கின்றது'. பின்னர் அவர் தனது ஆண்குறியினை வெளியில் எடுத்து அதனை என்னுடைய குதத்தினுள் பலவந்தமாக நுழைத்தார்.* | மருத்துவ சட்ட அறிக்கையும் மருத்துவ பதிவுப் படிவமும் சுயாதீனமான மருத்துவ நிறுவனத்தினால் பூர்த்தி செய்யப்பட்டு சாட்சி Y யினால் வழங்கப்பட்டுள்ளது. | நீல ஆடை சாட்சி Z இனால் சேகரிக்கப்பட்ட ஸ்மாட் தொலைபேசி காட்சியிலே உள்ள பெண் அணிந்துள்ள அதே ஆடை போல் தென்படுகின்றது. | எதுவுமில்லை |
| 2. அத்துமீறலானது பலவந்தத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டது. அல்லது பலவந்தப்படுத்துகின்ற அச்சுறுத்தல் மூலமாக அல்லது கட்டாயப்படுத்தல் மூலமாக நிறைவேற்றப்பட்டது. அதாவது, வன்முறை அச்சம், அழுத்தம், தடுத்து வைப்பு, உளவியல் ரீதியான அடக்குமுறை அல்லது அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றினை அவ்வாறான நபருக்கெதிராக அல்லது இன்னுமொருவருக்கு எதிராக அல்லது கட்டாயப்படுத்தும் சூழலின் நன்மையினை எடுப்பதன் மூலமாக மேற்கொள்ளப்பட்டது. அல்லது அத்துமீறலானது உண்மையான இணக்கத்தினை வழங்கமுடியாத ஒரு நபருக்கெதிராக வழங்கப்பட்டது. | X எனும் பாதிக்கப்பட்ட நபரின் வாக்குமூலம்:<br><br>*'ஆயுதம் தாங்கிய நபர்கள் எமது கிராமத்தினுள் இரண்டு இரவுகளுக்கு முன்னரே நுழைந்து விட்டனர். நான் அவர்களை உடனடியாகவே அடையாளம் கண்டு விட்டேன். கடைசித்தடவை அவர்கள் இங்கு இருந்தபோது நான் அலறல் சத்தங்களை கேட்டு என்னுடைய ஜன்னல் மூலம் பார்த்தபோது அவர்கள் ஒரு மனிதனை அவருடைய வீட்டிலிருந்து வெளியே இழுத்துக்கொண்டு சென்று அவரை அந்த இடத்திலேயே சுடுவதை நான் கண்டேன். அவர்கள் என்னுடைய வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அவர்களுடைய ஆயுதங்களை என்னுடைய பிள்ளைகளின் மேல் வைத்து என்னை அவர்களுடன் வருமாறு அழைத்தனர். எனக்கு வேறு தெரிவுகள் இல்லை என்பதை நான் அறிந்து கொண்டேன்.*<br><br>*தான் எடுத்த ஸ்மாட் தொலைபேசி புகைப்படம் தொடர்பாக வாக்குமூலம் வழங்குகின்ற ண இனது வாக்குமூலத்தில் இருந்து மேலும் அவர் அதனை புகைப்படமாக எடுத்த சூழமைவில் இருந்து* | எதுவுமில்லை | எதுவுமில்லை | இரண்டு படைவீரர்கள் நீல ஆடை அணிந்த பெண் ஒருவரை வீட்டினுள் பலவந்தப்படுத்தித் தள்ளுவதை ஸ்மாட் தொலைபேசி புகைபடம் காட்டுகின்றது. இது புவியியல் அமைவிட குறியீடு வழங்கப்பட்டு கிராமம் Y என அடையாளமிடப் பட்டு சாட்சி Z இனால் விசாரணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது |
| **மானுடத்திற்கு எதிரான குற்றச்செயல்களின் கூறுகள்** | | | | |
| 1. குற்றச்செயல்கள் பரந்த அல்லது முறைமை வாய்ந்த தாக்குதலின் ஓரங்கமாக நிறைவேற்றப்பட்டன. | ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குத் தான் தப்பிச்சென்ற 8 மாதங்களில் எவ்வாறு பல கிராமங்கள் தாக்கப்பட்டதைத் தான் கண்களால் கண்டதாகவும் அதில் இடம்பெற்ற பல கொலைகள் மற்றும் தாக்குதல்கள், தடுத்துவைப்புக்கள் மற்றும் ஆயுதமுனையில் நபர்கள் அகற்றப்படல் ஆகியவற்றிற்குத் தாம் சாட்சியாக இருப்பதாகவும் சாட்சி Z விபரிக்கின்றார். பல கிராமங்களில் முதலில் வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் பின்னர் அதனைத் தொடர்ந்து தரைப்படைகள் கிராமத்தினுள் நுழைந்து உடனடியாக அனைவரையும் வெளியேறுமாறு உத்தரவிட்டதாகவும் அதன்பின்னர் காலாற் படையினர் இரவிலே கிராமத்தினுள் நுழைந்து எஞ்சியிருந்த இளம் ஆண்களைச் சுட்டுக்கொன்றதாகவும் குறிப்பிடுகின்றார். (தான் கண்ட அவ்வாறான சம்பங்கள் பற்றிய விபரங்களை சாட்சி தெரிவிக்கின்றார். இதனால் யார், என்ன, எப்போது, எங்கே, ஏன் மற்றும் எவ்வாறு போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்துநர்களினால் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்குமென்பதையும் எவ்வாறு அவர் அதனை அறிந்துகொண்டார் என்பதையும் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். | தாக்குதல் இடம் பெறுகின்ற இடங்களிலிருந்து வெகுதொலைவில் வெவ்வேறு வதிவிட பிரதேசங்களில் ஒரே நேரத்திலும் ஒருங்கிணைக்கப் பட்ட முறையிலும் ஆயுதத் தாக்குதல்கள் இடம்பெறுவதை ஐ.நா வின் இராணுவ அவதானிப்பாளரின் நாளாந்தப் பணி அறிக்கை விபரிக்கின்றது. | சாட்சி Z இனால் விபரிக்கப்பட்ட அமைவிடங்களின் துப்பாக்கி ரவைகளின் உறைகள் காணப்பட்டன. | செய்மதி பிம்பங்கள் கிராமங்கள் தாக்குதலுக்கு பின்னரான ஒவ்வொரு படமும் ஒரேவிதமான விபரங்களை காட்சிப்படுத்துகின்றன. இதில் கிராமத்தில் இருந்து பெண்களும் சிறுமிகளும் அணியாக அழைத்துச் செல்லப்படுவதை காட்டுகின்ற காட்சிகள் உள்ளடங்கு கின்றன. |

| உள்ளார்ந்த நோக்கம்: பாலியல் வல்லுறவின் பாலியல் வன்முறை மீறலை மானுடத்திற்கு எதிரான குற்றச்செயலாக நிலைநாட்டல் | வகையின் அடிப்படையில் சான்றின் உதாரணங்கள் | | | |
|---|---|---|---|---|
| | வாக்குமூலம் | ஆவணம் | பௌதீக | டிஜிடல் சான்று |
| 2. தாக்குதலானது குடிமக்களுக்கு எதிராகவே நடத்தப்பட்டது. | தமது கிராமத்தில் உள்ள குடிமக்கள் குடிமக்களின் ஆடைகளை அணிந்திருந்ததாக சாட்சி Y விபரிக் கின்றார். அவர்கள் எவ்விதமான ஆயுதங்களையும் வைத்திருக்கவில்லை. மேலும் தாக்குதல் நடத்தப்பட்டபோது அந்த இடத்தில் இராணுவ குழுக்களோ அல்லது ஆயுதக்குழுக்களோ இருக்கவில்லை.<br><br>‘நாங்கள் கைது செய்யப்பட்டு வைத்திருக்கப்பட்ட நாட்கள் மற்றும் வாரங்களின் முன்னர் எமது மாகாணத்திலுள்ள எமது கிராமமும் மற்றும் சகல கிராமங்களும் ஆயுதந்தாங்கிய நபர்களினால் முற்றுகையிடப்பட்டன. இது நடைபெறுவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்னரே உள்ளுர் போராளிகள் எமது பிரதேசத்தை விட்டுச் சென்று விட்டனர். ஆனால் ஆயுதந்தாங்கிய நபர்கள் நாங்கள் அனைவருமே கிராமப்பாதுகாப்பின் அங்கமானவர்கள் என்பது போல் நடந்து கொண்டனர். அவர்கள் எமது கிராமத்தினூடு யுத்தத்தாங்கிகளை ஓட்டிச்சென்று அனைத்துக் கால்நடைகளையும் கொன்று எமது வயல்களையும் அழித்து விட்டனர். அதன் பின்னர் அவர்கள் எமது வீடுகளைத் தரைமட்டமாக்கத் தொடங்கினர். இதனால் எம்மில் அதிகமானோர் எமது வீடுகளை விட்டு வெளியே தப்பியோடி தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த திறந்த வெளிகளுக்குள் ஓடத் தொடங்கினோம். அவர்கள் பெண்களையும் சிறுமிகளையும் இளம் பையன்களையும் பிடித்து எம்மை அவர்களின் டிரக்குகளின் பின்பக்கத்திலே தூக்கிப் போட்டனர். | எதுவுமில்லை | எதுவுமில்லை | எதுவுமில்லை |
| 3. நேரடியாகக் குற்றத்தை நிகழ்த்தியவர் நிகழ்த்தப்பட்ட குற்றமானது குடிமக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலின் ஓரங்கம் என்பதை அல்லது தாக்குதலின் ஒரு அங்கமாகக் கருதப்பட்ட ஒன்றென்பதை அறிந்திருந்தார். | பாதிக்கப்பட்ட நபரான ஓ இன் வாக்குமூலம் ‘ஆண்கள் எல்லோரும் ஒரேவிதமாகவே ஆடை அணிந்திருந்தனர். அவர்கள் ஒரே மொழியினையே பேசினர். அத்துடன் எமது கிராமத்தை கைப்பற்றியவர்களில் அவர்கள் இருந்தனர் - எங்களது கிராமத்தை முற்றுகையிட்ட ஆண்களில் சிலர் குழுக்களாக ஒன்றுகூடி எம்மையெல்லாம் டிரக்குகளில் ஏற்றத்தொடங்கினர். பின்னர் அவர்களே எம்மை ஓர் இடத்தில் பிடித்து வைத்தனர். அதுதான் அவர்களது தளமாக இருப்பதுபோல் தெரிய வந்தது. | | | |
| 4. தாக்குதலானது இவ்வாறான தாக்குதலை நடத்தவேண்டும் என்கின்ற அரச கொள்கையின் பின்னரே அல்லது நிறுவனக் கொள்கையின் பின்னரே இடம்பெற்றது. (நியாயாதிக்க கூறு) இது நீங்கள் ஆவணப்படுத்துகின்ற நியாயாதிக்க பிரதேசத்தில் தேவைப்படலாம். அல்லது தேவைப்படாமல் இருக்கலாம். | | எரியூட்டப்பட்ட நிலத்தின் ஒட்டுமொத்த இராணுவ உபாய மார்க்கத்தைக் குறிப்பிடுகின்ற இராணுவக் கட்டளை | | |

*ஆதாரப்படுத்துதல் என்பது சர்வதேச சட்டங்களின் கீழ் பாலியல் குற்றங்களை நிரூபிப்பதற்கான ஒரு சட்ட ரீதியான தேவைப்பாடு அல்ல.*

## D. சான்றினை வலுப்படுத்துதல்

எந்தவொரு குற்றச்செயல் அல்லது வன்முறை தொடர்பாகத் தேவைப்படுத்தப்படும் ஆகக்குறைந்த அளவான கூறுகளை நிரூபிப்பதற்குப் போதிய தகவல்களை நடைமுறைப்படுத்துனர்கள் சேகரித்ததன் பின்னர் அவர்கள் மேலதிக ஆதாரத் தகவல்களைச் சேகரிப்பதன் மூலம் தமது விசாரணைகளின் மதிப்புறுநிலையினை அதிகரிக்க முயற்சிக்கலாம்.

> வாக்குமூலத்தினை ஆதாரப்படுத்துவதன் மூலமும் மேலதிக தகவல்களை வழங்குவதன் மூலமும் சூழமைவினை விபரிப்பதற்கு அல்லது அதிகாரபூர்வமான விளக்கங்களை வழங்குவதற்கு மேலதிக தவல்களைச் சேகரிப்பது விசாரணையினை வலுப்படுத்தலாம்.

### 1. ஆதாரப்படுத்துதல்

4 ஆம் அத்தியாயத்தில் கலந்துரையாடப்பட்டது போல: தனிப்பட்ட குற்றவியல் பொறுப்பு / சாட்சி மற்றும் செயல்விதிகளின் விதிகள், ஆதரப்படுத்துதல் - சாட்சியின் வாக்குமூலத்தினை ஆதாரப்படுத்துவதற்கு மேலதிக சான்றுகளின் தேவை – சர்வதேச சட்டத்தின் கீழ் பாலியல் வன்முறைக் குற்றங்களை நிரூபிப்பதற்கான ஒரு சட்டரீதியான தேவைப்பாடு அல்ல. எவ்வாறாயினும் ஆதரப்படுத்தலானது நடைமுறையிலே சம்பவம் ஒன்றினை வலுப்படுத்தலாம். அத்துடன் சாட்சி மற்றும் செயல்விதிகளுக்கான உள்நாட்டு விதிகள் பாலியல் வன்முறைக் குற்றமானது ஒரு சர்வதேசக் குற்றச்செயலாக விசாரிக்கப்பட்டு வருகின்றபோதிலும் கூட இந்தத் தேவைப்பாட்டினை அகற்றாமல் இருக்கலாம்.

ஆதாரப்படுத்தல் என்பது சாட்சியின் வாக்குமூலம் அல்லது சான்றுகளின் ஏனைய வடிவங்களில் அமைந்திருக்கலாம். அதாவது ஆவண வடிவிலானவை, அல்லது டிஜிடல் மற்றும் பௌதீக வடிவிலானவை. (பார்க்க அத்தியாயம் 10 பாலியல் வன்முறைச் சான்றுகளின் வகைகள்)

ஆதரப்படுத்தும் சான்றுகளைக் கண்டறிதலானது அவை எவ்வடிவிலானதாக இருந்தபோதிலும் பாலியல் குற்றங்களின் குற்றச்சாட்டுகளுக்கு சவால்மிக்கதாக அமையலாம். இருந்தபோதிலும் நடைமுறைப்படுத்துனர்களினால் மேலதிக சான்றுகளைக் கண்டறியமுடியும் - அதாவது மூன்றாம் தரப்பு அவதானிப்பாளர்களின் அறிக்கைகள் அல்லது சாட்சிக் கூற்றுக்கள் - பாதிக்கப்பட்டவர் வழங்கும் நிகழ்வுகளின் காலவரம்புகளை ஆதாரப்படுத்துவதற்கும் தாக்குதலுக்கு முன்னரும் பின்னருமான அவர்களது நகர்வுகள் மற்றும் நடத்தைகள் ஆகியவற்றினை ஆதாரப்படுத்துவதற்கும். இது சாட்சியின் ஒட்டுமொத்த மதிப்புறுநிலையினை நிருபிப்பதில் ஓரளவுக்கு பயன்மிக்கதாக அமையலாம். *உதாரணமாக பாதிக்கப்பட்டவர் தமது வீட்டை விட்டு வெளியேறி பாடசாலைக்குச் சென்றதாகவும் ஆனால் வந்து சேர்வதற்கு முன் கடத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டால் அந்த நேரத்திலே பாதிக்கப்பட்டவர் வீட்டினை விட்டு அதே திசையிலே வெளியேறிச் சென்றமையினை சான்றுப்படுத்த மேலதிக சாட்சியினைக் கோரலாம். அதேபோல் வேறு சாட்சிகள் பாதிக்கப்பட்டவர் பாடசாலைக்கு வரவேயில்லை அல்லது அவரைக் குறிப்பிட்ட இடத்திற்கு அப்பால் காணவேயில்லை என்று கூறலாம்.*

இதனை அனுமதிக்கின்ற சட்ட முறைமைகளில் பொருத்தமான சந்தர்ப்பங்களில் ஆதாரப்படுத்தும் சான்றுகளை பாதிக்கப் பட்டவரின் வாக்குமூலத்திற்குப் பதிலாக – சாட்சியின் வாக்குமூலத்திற்கு பதிலாக - பயன்படுத்தலாம். உதாரணமாக பாதிக்கப்பட்டவர் இறந்திருந்தால் அல்லது அவர் இல்லாமல் இருந்தால்.

### 2. சூழியல் சார்ந்த தகவல்கள்

மேலதிக தகவல்கள் பின்வருவனவற்றினை வழங்குவதற்காக சேகரிக்கப்படலாம்.

விளக்க ங்கள்: நிபுணர்களிடமிருந்து பெறப்படும் வாக்கு மூலங்கள் சம்பவத்திற்கு மிகவும் இன்றியமையாத சில குறிப்பிட்ட காரணிகளின் இறுதியான புரிதல்களில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு தலைப்புக்கள் பற்றிய அதிகாரபூர்மான விளக்கங்களை வழங்கலாம். உதாரணமாக சூழமைவு மற்றும் நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் குறிப்பிட்ட சம்பிரதாயங்கள் மற்றும் பாரம்பரியங்கள், மொழிப்பயன்பர்டு மற்றும் பாலியல் வன்முறையினை விபரிக்கப் பயன்படும் குறிப்பிட்ட சொற்கள், வாக்குமூலத்தின் ஒத்திசைவுத் தன்மையினைப் பாதிக்கக்கூடிய மனவதிர்ச்சி வடுவின் கலாசார ரீதியாகத் தனித்துவமான அனுபவங்கள், பாதிக்கப்பட்டவரின் மௌனம் அல்லது மறுப்பினை விளக்குகின்ற குறிப்பிட்ட சமுதாயத்தில் காணப்படுகின்ற முத்திரை குத்தப்படுவதன் தாக்கங்கள் மேலும் இராணுவ நடவடிக்கைகள், நடத்தை மற்றும் ஆக்கக்கூறு ஆகியவை பற்றிய விபரங்கள்

உதாரணமாக: பின்புலத் தகவல் - நிபுணர்களின் வாக்குமூலமும் அறிக்கைகளும் மற்றும் ஏனைய மதிப்புறு நிலையினைக்கொண்ட ஆவணங்களும் டிஜிடல் தகவல்களும் அரசியல், சமூக, இன, சாதி மற்றும் கலாசார வரலாறுகளை வழங்கக்கூடியதாக இருக்கலாம் என்பதுடன் குறிப்பிட்ட சூழமைவு, நாடு மற்றும் மக்கள் தொகையினை புரிந்துகொள்வதற்கு உதவுகின்ற விபரங்களையும் வழங்கலாம்.

## E. பாங்குகளை அடையாளங்காணுதல்

### 1. வகைமையியல்

தனிப்பட்ட குற்றச்செயல்களின் சகல பொருத்தமான கூறுகளையும் திருப்திப்படுத்துவதற்குப் போதிய தகவல்களைச் சேகரிப்பது போலவே, தனிப்பட்ட சம்பவங்கள், குற்றச்செயல் அல்லது மீறலின் பாங்கின் பகுதிகள் என்பதை அத்தகவல்கள் எடுத்து விளக்கக்கூடியதாக இருந்தால், அப்பட்டமான வன்முறையாக அல்லது சர்வதேச குற்றச்செயலாக பாலியல் வன்முறை நடத்தப்பட்டிருப்பதற்கான சான்று வலுப்படுத்தப்படுகின்றது. அதாவது பொதுவான அம்சங்களைக் கொண்ட எண்ணற்ற, ஒன்றுடனொன்று தொடர்புடைய சம்பவங்கள் உள்ளன என்பதே இதன் அர்த்தமாகும்.

இதற்கமைய சான்றுகளை மதிப்பீடு செய்யும் போது குற்றச்செயல்கள் அல்லது வன்முறைகள் தனிப்பட்ட சம்பவங்களா அல்லது அவை பின்வருவனவற்றுடன் தொடர்புடைய ஒத்ததன்மையினைக் கொண்டுள்ளனவா என்பதனை நடைமுறைப்படுத்துனர்கள் நிறுவ வேண்டும்.

(a) பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள், (b) குற்றத்தை நிகழ்த்தியோரின் விபரங்கள், (c) குற்றச்செயல் இழைக்கப்பட்ட முறை மற்றும் (4) புவியியல் பிரதேசங்கள், (பிரதேசம்) மற்றும் இவை நிகழ்த்தப்பட்ட காலப்பகுதி.

இவ்வகையில் சம்பவங்களுக்கிடையிலான ஒத்ததன்மைகளை அடையாளம் காண்பதானது வன்முறைகளை வகைப்படுத்துவதற்கான ஓர் அடிப்படையாகவும் பாங்குகளை நிரூபிப்பதற்கான அடிப்படையாகவும் குற்றச்செயல்களின் பயன்மிகு வகைமையியலினை உருவாக்குவதற்கு உதவுகின்றது.[2] உதாரணமாக கென்யாவிலே தேர்தலுக்கு பின்னரான வன்முறை தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் 2008 ஆம் ஆண்டு அறிக்கையானது 3 பிரதான வகையாக பாலியல் வன்முறைகளை அடையாளம் கண்டுள்ளது. (a) மக்கள் அவர்களுடைய வீடுகளை விட்டு வெளியேறுவதற்கு அழுத்தம் கொடுப்பதற்கான ஒரு வழியாக, மற்றும் தவறான வேட்பாளருக்கு, கோத்திரத்திற்கு அல்லது கட்சிக்கு வாக்களித்தமைக்காக எதிர்த்தாக்குதல் தொடுப்பதற்கான ஒரு வழியாக, மேலும் செல்வாக்கு செலுத்துபவர்களிடம் ஒத்திசைந்து அவர்களை அவமானப்படுத்தி, தரக்குறைவாக நடத்தி, அவர்களின் சமுதாயங்களை வலுவற்றவர்களாக ஆக்குவதற்கான ஒரு வழியாக, (b) ஏனைய பிரதேசங்களில் பாலியல் வன்முறையானது நிலவுகின்ற சட்டம் இல்லாத நிலையினையும் அதிகார வெற்றிடத்தினையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட குழப்பம் மற்றும் அராஜக நிலையின் சூழமைவில் நடத்தப்பட்ட ஒரு சந்தர்ப்பவாத செயல். (c) இடம்பெயர்ந்த பெண்களின் மீது திணிக்கப்பட்ட துஷ்பிரயோகம் பாலியல் வர்த்தகம்

பெட்டி 9

## சகபாடி அனுபவம் — பாங்குகளைக் கண்டறிதல்

அன்ஜா, களப் பணிப்பாளர்

‘2012 ஆம் ஆண்டு முடிவின் போது நாம் 34 பாலியல் வன்முறைச் சம்பவங்களின் வாக்குமூலங்களையும் ஏனைய சில வகையிலான சான்றுகளையும் சேகரித்திருந்தோம். சான்றுகள் 5 வெவ்வேறு அணிகளினால் சேகரிக்கப்பட்டிருந்தன. சில அணிகள் ஒவ்வொரு அணியிலிருந்தும் முற்றுமுழுவதும் வேறாகச் செயற்பட்டிருந்தன. மேலும் சான்றுகள் 9 நடமாடும் சட்ட கிளினிக்குகள் மற்றும் 02 பால்நிலை அடிப்படையிலான வன்முறை உதவிப் பிரிவுகளினால் சேகரிக்கப்பட்டன. முதலில் சம்பவங்களுக்கிடையில் எம்மால் உடனடியாக ஒற்றுமையினைக் காணமுடியவில்லை. ஆனால் ஒரேயொரு விடயத்தில் மாத்திரம் ஒற்றுமை காணப்பட்டது. அனைத்துப் பாதிக்கப்பட்டவர்களும் ஒரே வயதுக் குழுவினராகக் காணப்பட்டதுடன் ஒரேவிதமான பொருளாதாரப் பின்புலத்தினைச் சேர்ந்தவர்களாகவும் ஓரளவு நடுத்தர வர்க்கத்தினராகவும் இருந்தனர். ஆனால் நாங்கள் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை ஆழமாக மதிப்பிடுகையில் சில விடயங்களை அவதானித்தோம். பாதிக்கப்பட்ட சிறுமிகள் அனைவரும் திருமணம் ஆகாதவர்களாக இருந்தனர். ஆனால் அனைவருக்கும் காதலர்கள் இருந்தனர். இது பொதுவாக ஒரு அசாதாரண நிலையாகக் காணப்பட்டது. ஏனெனில் நாம் ஒரு பழமைவாத சமயப் பிரதேசத்திலேயே பணியாற்றிக் கொண்டிருந்தோம். பாதிக்கப்பட்டவர்களில் பலர் முக்காடு அணிந்திருக்கவில்லை. மேலும் அவ்வாறு அணிந்தவர்களும் அதனை ஒழுங்காக அணிந்திருக்கவில்லை. பாதிக்கப்பட்ட அனைவரும் பாடசாலை சென்றவர்களாகவும் பலர் பல்கலைக்கழகம் சென்றவர்களாகவும் இருந்தனர். இவர்களின் விபரங்களை நாம் மதிப்பீடு செய்யும்போது நாம் ஏனைய மனித உரிமைகள் சகபாடிகளையும் ஆலோசித்தோம். அவர்கள் அந்தத் தீவிலே உருவாகிவரும் அடிப்படைவாத சமயக்குழுக்களினால் சமய மரபுகள் அற்ற நடுத்தரவர்க்கக் குடும்பங்களின் உறுப்பினர்கள் சிலர் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளைச் சேகரித்துக்கொண்டு இருந்தனர். அதிகளவான முறைப்பாடுகள் குற்றத்தை நிகழ்த்தியோர் தொடர்பான விபரங்களைக் கொண்டிருக்கவில்லை. தாக்கப்பட்ட சிறுமிகளில் பெரும்பான்மையானோர் இருட்டிலேயே தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றனர். இவர்களைத் தாக்கியவர்கள் முகமூடிகளை அணிந்தவர்களாகக் காணப்பட்டதுடன் அவர்கள் இந்தச் சிறுமிகளை அச்சுறுத்தும் போது கடவுளை அழைத்தமை ஒரு பொதுவான அம்சமாகக் காணப்பட்டது ‘கடவுள் இல்லாத வேசைகளா, இது கடவுளின் தண்டனை’ இதில் நாங்கள் ஒரு பாங்கினைக் காண ஆரம்பித்தோம். தாக்கப்பட்ட சிறுமிகள் மிதவாத உலகப் பற்றுமிக்க பிரபலங்களின் மகள்களாக, சகோதரிகளாக அல்லது உறவினர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் கல்வி கற்றதன் மூலமாகவும், காதலர்களைக் கொண்டிருந்ததன் காரணமாகவும், முக்காடு அணியாத காரணத்தினாலும் சமய ஒழுங்கினை மதிக்காதவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தனர். இவர்களின் குடும்பங்கள் தண்டிக்கப்பட்டிருந்தன. இவர்களுக்கு ஒரு செய்தி அனுப்பப்பட்டிருந்தது.

2 ஆரன்புரு, எக்ஸ்.ஏ.(2010)‘தகுந்த சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட பாலியல் வன்முறை:சர்வதேச வழக்குகளில் மாதிரி தடயங்கள் மற்றும் ஆய்வுகளை பயன்படுத்துதல்’, *Leiden Journal of International Law*, 23, 4: 609–627.

பெட்டி 10

## பாங்குகளை நிலைநாட்டுவதில் பயன்மிகு வினாக்கள்

| பாங்கின் வகை | வினாக்கள் | மதிப்பீட்டிற்கான சாத்தியமான தெரிவு அடிப்படை CMN இலிருந்து – 1 ஆவணத்திலிருந்து ) |
|---|---|---|
| **a. பாதிக்கப்பட்டவர்கள்** ஒரே வகையிலான பாதிக்கப்பட்டவர்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். | பாதிக்கப்பட்ட பலர்:<br>✓ ஒரே அரசியல் கட்சி அல்லது இனக் குழுமங்களின் அல்லது அதனுடன் இணைந்த அல்லது அதன் உறுப்பினர்களின் உறவினர்களா?<br>✓ குறிப்பிட்ட சிவில் சமூகக்குழு அதாவது பெண்களின் மற்றும் மனிதஉரிமைகளின் பாதுகாவலர்களின் குழுவின் உறுப்பினர்களா அல்லது அதனுடன் இணைந்தவர்களா அல்லது அதன் உறுப்பினர்களின் உறவினர்களா?<br>✓ தனித்துவமான வதிவிடப் பிரதேசங்களை, கிராமங்களை, இடப்பெயர்வுக் குடியேற்றங்களைச் சேர்ந்தவர்களா?<br>✓ ஒரே வயதுக் குழுவினைச் சேர்ந்தவர்களா, அல்லது ஒரே பால்நிலையினைச் சேர்ந்தவர்களா?<br>பின்வருவனவற்றுக்கான சான்றுகள் உள்ளனவா:<br>✓ குறிப்பிட்ட தனிநபர்களை அல்லது தனிநபர் குழுக்களை இலக்கு வைத்து தலைவர்கள், ஊடகம், அரசியல் அல்லது சமயக் குழுக்களினால் பகிரங்க கூற்றுக்கள் விடப்பட்டமை.<br>✓ சட்டவாக்க மற்றும் அரச பாதுகாப்பு நடவடிக்கைகள இலக்குவைக்கப்பட்ட குறிப்பிட்ட குழுக்களா அல்லது தனி நபர்களா?<br>✓ குறிப்பிட்ட தனிநபர்களின் மீது முன்னைய தாக்குதல்கள் அத்துடன்/ அல்லது கொலைகள் | » பாதிக்கப்பட்டவர்களின் வகிபாத்திரமும் அவர்கள் அதற்கு உரித்தானவர்கள் என்பதும்<br>» குறிப்பிட்ட பாதிப்புறுநிலை<br>» பிறப்பிடம்<br>» வன்முறை நிகழ்ந்தபோது முகவரி<br>» வயது வகை<br>» பால்நிலை<br>» பாதிக்கப்பட்டவர்களின் பௌதீக பண்புகள்<br>» தேசியம்/ பிரஜாவுரிமை<br>» இனத்துவ விபரங்கள்<br>» சமயம்<br>» கல்வி<br>» தொழில்<br>» திருமண அந்தஸ்து<br>» ICHL அந்தஸ்து |
| **b. வன்முறைகள்** பல்வேறு சம்பங்களில் ஒரே விதமான முறை கையாளப்பட்டிருப்பது சான்றாக காணக்கிடைக்கின்றது. | ✓ ஒரேவகையான செயற்பாட்டுக்கான எண்ணற்ற சம்பவங்கள் உள்ளனவா? (பாலியல் வல்லுறவு, கூட்டுப்பாலியல் வல்லுறவு,பிறப்புறுப்பு சிதைப்பு, பலவந்தப்படுத்தப்பட்ட நிர்வாணம்)<br>✓ ஒரு நாளில் ஒரே நேரத்திலா பாதிக்கப்பட்டவர்கள் பிடிக்கப்பட்டுள்ளனர் அல்லது தாக்கப்பட்டுள்ளனர்<br>✓ தாக்குதலின் ஏனைய விபரங்களுக்கிடையில் ஒற்ற தன்மைகள் காணப்படுகின்றனவா? (கடத்தல், போதைப்பொருள் பயன்பாடு, தலைமுடியினை மழித்தல், நீடித்த விசாரணைகள்)<br>✓ இதற்கு முன்னர் அறிந்த குழுக்கள் அல்லது படையினரால் குறிப்பிட்ட முறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனவா?<br>*உதாரணம்*<br>*ஒழுங்கற்ற விதத்தில் நடந்துகொள்கின்ற பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவதன் மூலமும் அவர்களது தலைமுடியை மழிப்பதன் மூலமும் பரா இராணுவக் குழுக்கள் வழமையாகத் தண்டித்து வந்தனர். பல இளம் பையன்கள் அவர்களது வீடுகளிலிருந்து போராளிப்படையினால் இரவில் கடத்திச்செல்லப்பட்டு தூர இடங்களில் தடுத்து வைக்கப்பட்டு பலவந்தப்படுத்தி அவர்களுக்கு கொகயினும் வயகராவும் கலந்த மருந்தினை அருந்தச்செய்து குழுவின் பெண் உறுப்பினர்களுடன் பாலியல் வல்லுறவு கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.* | » குற்றம் சாட்டப்பட்டுள்ள குற்றச்செயல்களினால் உரிமைகளும் சுதந்திரமும் மீறப்பட்டுள்ளன.<br>» வன்முறையின் வகை<br>» சம்பவம் இடம்பெற்ற நேரமும் அமைவிடமும்<br>» பாதிக்கப்படும் நிலையினை தூ ண்டிய காரணிகள்<br>» பாதிக்கப்படும் நிலையின் சூழ்நிலைகள்<br>» தூண்டும் சூழ்நிலைகள்<br>» தணிக்கும் சூழ்நிலைகள் |

பெட்டி 10

## பாங்குகளை நிலைநாட்டுவதில் பயன்மிகு வினாக்கள்

| பாங்கின் வகை | வினாக்கள் | மதிப்பீட்டிற்கான சாத்தியமான தெரிவு அடிப்படை CMN இலிருந்து – 1 ஆவணத்திலிருந்து ) |
|---|---|---|
| **c.** குற்றத்தை நிகழ்த்தியவர் ஒரே வகையிலான குற்றத்தை நிகழ்த்துபவரே பொறுப்பானவ ராக இருக்கின்றார். | ✓ தாக்குதல் இடம்பெற்ற இடங்களுக்கு பக்கத்தில் குறிப்பிட்ட படையினர் இருந்துள்ளனரா?<br>✓ இச்சம்பவங்களில் குற்றத்தை நிகழ்த்திய வர்கள் ஒரே விதமான பண்புகளைக் கொண்டிருந்தனரா (மொழி, ஆயுதம், வாகனம், ஆடைகள், இனத்துவம், தேசியம்) | • குற்றத்தை நிகழ்த்தியவரின் வகிபாத்திரமும் அவர் எதனைச் சார்ந்தவர் என்பதையும்<br>• நிறுவனம் அல்லது பிரிவில் பதவி அல்லது நிலை<br>• குற்றத்தை நிகழ்த்தியவரை உடல் ரீதியாக அடையாளப்படுத்தும் பண்புகள்<br>• பால்நிலை<br>• தேசியம் / பிரஜாவுரிமை<br>• இனத்துவம்<br>• சமயம் |
| **d.** புவியியல் மற்றும் காலம் | ✓ குறிப்பிட்ட படை / குழுக்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பிரதேசங்களில் தாக்குதல்கள் இடம்பெறுகின்றனவா?<br>✓ குறிப்பிட்ட குழுக்களின் உறுப்பினர்கள் வாழ்கின்ற பிரதேசங்களில்<br>✓ ஏனைய குற்றச்செயல்கள் நிகழும் காலப்பகுதியிலா குறிப்பிட்ட வன்முறைகள் இடம்பெறுகின்றன.<br>உதாரணம் - ஏதாவது குடிமக்களுக்கு எதிரான தாக்குதலின் பகுதியாக அல்லது ஏற்கனவே நடைபெற்று வரும் மோதல்களின் காலப்பகுதியில் | |

## 2. பாங்குகளை அடையாளம் காண்பதற்கான மேலதிக முறைகள்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வினாக்களுக்கு எதிராகச் சேகரிக்கப் பட்ட சான்றுகளை மதிப்பிட்டது போலவே குற்றச்செயல்களின் பாங்குகளின் பகுப்பாய்வை நடத்துவதற்கும் பாலியல் வன்முறைச் சான்றினை வலுப்படுத்துவதற்கும் மிகவும் விசேட மான முறையியல்களை பயன்படுத்தலாம்.

### a. தேடக்கூடிய தரவுத்தளங்கள்

சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒழுங்கமைத்து களஞ்சியப்படுத்து வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற தரவுத்தளமானது மிகவும் பயன்மிகு பகுப்பாய்வுக் கருவியாகும். மிக எளிமையான தரவுத்தளத்தினைக் கூட வெவ்வேறு தெரிவடிப்படைகளுடன் தேடலுக்கான வாய்ப்புக்களை வழங்குவதற்காகக் கட்டமைக்க முடியும். மிகவும் முன்னேற்றகரமான தரவுத் தளங்கள் தரவுத்தளத்திலுள்ள அவற்றின் இணைப்பில் இருந்து மூல இலத்திரனியல் கோப்புக்களை கொண்டுவருவதற்கான செயற்பாட்டினை உள்ளடக்கக்கூடியவையாக இருக்கமுடியும். நெறிமுறையில் காட்டப்பட்டுள்ள இரண்டு தரவுத்தள செயலிகளும் மற்றும் I -Doc, இந்த செயற்பாட்டினை அனுமதிக்கின்றன. (பார்க்க அத்தியாயம் 9 திட்டமிடுதல்).

### b. புள்ளிவிபர ரீதியான பகுப்பாய்வு

புள்ளிவிபரப் பகுப்பாய்வினைப் பொருத்த அளவில் பயன்படுத்தப்படும் முறையியலானது மிகவும் செயற்றிறன் மிக்கதாகவும் சகபாடிகளின் மீளாய்விற்கு உட்பட்டதாகவும் போதிய வளங்கலைக் கொண்டதாகவும் இருக்கையில் பாலியல் வன்முறை விசாரணைகளுக்கான சாத்தியமான சான்றுகளாக பாரிய வன்முறைகளின் புள்ளிவிபரப் பகுப்பாய்வுகளை வெற்றிகரமாகப் பயன்படுத்த முடியும்.[3] ஒரு விபரிப்பு மிகு கருவியாக புள்ளிவிபரப் பகுப்பாய்விற்கான மிகவும் நேரடியான வகிபாத்திரமானது பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையினையும் வன்முறைகளின் எண்ணிக்கையினையும் எண்ணிக்கைப்படுத்துவதற்கு ஆற்றல் கொண்டதாகக் காணப்படுகின்றது. மேலும் எங்கே, எப்பொழுது பாதிக்கப்பட்டவர்கள் தாக்கப்பட்டனர், அந்தத் தாக்குதல்களினால் ஏற்படுத்தப்பட்ட தீங்குகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் ஆகியவற்றினை அது வழங்குவதற்கான ஆற்றலினைக் கொண்டுள்ளது. புள்ளிவிபரப் பகுப்பாய்வானது குழுக்களுக்கிடையில் பால்நிலை, இனத்துவம், அரசியல் ஆதரவு புவியியல் ஆகியவற்றின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட நிலைக்கான சார்பளவு விகிதங்களின் சந்தர்ப்ப சூழ்நிலை சார்ந்த சான்றுகளையும் வழங்கக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக இதற்கு போதிய தரவுத் தொகுதிகள் உறுதியான ஒப்பீட்டினை இயலுமாக்குவதற்கு பயன்படுத்தப்பட்டால்

இந்த நோக்கத்திற்காக வெவ்வேறு தரவு மூலங்கள் பயன்படுத்தப்பட முடியும். இதிலே பாதிப்பு ஏற்படுத்தியமை தொடர்பான கணிப்பீடுகள், மருத்துவப் பதிவுகள், தடுத்து வைக்கப்படும் இடங்களிலிருந்தான பதிவுகள், இடப்பெயர்வு பாய்ச்சல்கள், அகதிப்பதிவு மற்றும் மக்கள் தொகை தரவுகள் ஆகியவை உள்ளடங்குகின்றன.

எந்தவொரு வன்முறையினதும் குற்றச்செயலின் அடிப்படையினை நிரூபிப்பதற்குப் பங்களிப்பு வழங்கக்கூடிய பயன்மிகு மதிப்பீட்டினைச் சமர்ப்பிப்பதற்கு இந்த மூலங்களில் இருந்தான பகுப்பாய்வானது வாக்குமூலச் சான்றிதழ்களுடனும் குற்றச்செயல் வரைபட உருவாக்கத்துடனும் (கீழே பார்க்க) மேற்கவியமுடியும்.

**பெட்டி 11**

**சகபாடி அனுபவம் - பாங்கினை நிரூபிப்பதற்கு நிகழ்ச்சித்திட்ட ரீதியான தரவினைப் பயன்படுத்துதல்**

றொக்ஸானா – மனித உரிமைகள் பாதுகாவலர்

*'மேற்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட இடையீடுகள் அல்லது குறிப்பிட்ட சுகாதாரப் பிரச்சினைகள் காணப்படுவது போன்ற மருத்துவ நிபுணர்களினதும் சுகாதார நிபுணர்களினதும் பதிவுகள் துஷ்பிரயோகம் திற்கான முக்கியமான தகவல்களை வழங்கலாம் அல்லது துஷ்பிரயோகத்தின் குறிப்பிட்ட பாங்கிற் கான தகவல்களை வழங்கலாம் அல்லது குறிப்பிட்ட பாங்கிலான துஷ்பிரயோகம் நடைபெற்றமைக்கான சான்றினை ஆதரப்படுத்தலாம் (உதாரணம்: குறிப்பிட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பௌத்திர சந்திரசிகிச்சைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட மாற்றம், STD பரிசீலிப்புகளில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது விரும்பப்படாத கர்ப்பங்கள்). உதாரணமாக ஒரு மேற்கு ஆபிரிக்க நாட்டிலே குறிப்பிட்ட போராளிக்குழு ஒன்றினால் தடுத்து வைக்கப்பட்ட ஆண்களுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட பாலியல் வன்முறைப் பாங்கினை எமது நிறுவனத்தினால் நிரூபிக்கக்கூடியதாக இருந்தது. இதனை நாம் பாலியல் வன்முறை விசாரணை மூலம் நிரூபிக்கவில்லை. ஆனால் பாலியல் உறவிலே தமக்கு சிரமம் இருப்பதாக மருத்துவ முகாமில் முறைப்பாடு செய்கின்ற ஆண்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பிலிருந்தே நாம் இதனைக் கண்டுகொண்டோம். எனவே மிகச் சாதாரணமாக அலட்சியப்படுத்தக்கூடிய தகவல் ஒன்று அதன் ஒட்டுமொத்த எண்ணிக்கையில் வைத்து நோக்கப்படுகையில் எவ்வாறு அதீத பெறுமதிமிக்க சான்றாக மாறலாம் என்பதற்கு இது உதாரணமாகத் திகழ்கின்றது.*

3 Aranburu, X.A. (2010) நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் பாலியல் வன்முறைப் பாங்குச் சான்றுகளைப் பயன்படுத்துதலும் சர்வதேச சம்பவங்களுக்காக பாங்குச் சான்றுகளையும் பகுப்பாய்வுகளையும் பயன்படுத்துதல் சர்வதேச சட்டத்திற்கான Leiden பதிவேடு, 23, 4: 623, குறிப்பு 3.

**c. குற்றச்செயல் வரைபடத்தினைத் தயாரித்தல்**

குற்றச்செயல் வரைபடத் தயாரிப்பு என்பது முப்பரிமாணத் தரவுகளைக் கண்டறிந்து, ஒழுங்கமைத்து, வன்முறையின் வெவ்வேறு கூறுகளுக்கிடையிலான ஒற்றுமையை நிரூபிப் பதற்குப் பயன்படுத்துகின்ற புவியியல் தகவல் முறைமையினையும் ஏனைய அறிவியல் கருவிகளையும் குறிப்பிடுவதுடன் இவை பாங்கினை அடையாளம் காண்பதற்குப் பயன்படுத்தக்கூடிய பகுப்பாய்வின் மற்றுமொரு வடிவமுமாகும்.

இதில் பாலியல் வல்லுறவு நடைபெற்ற பிரதேசங்களுக்கு எதிராகத் துருப்பினரின் நகர்வுகளை வரைவது அல்லது பாலியல் வன்முறை நடைபெற்று பாரிய இடப்பெயர்வு ஏற்படுவதற்கு முன்னரும் பின்னரும் குறிப்பிட்ட இனத்துவக் குழுமத்தின் அமைவிடத்தினைச் சுட்டிக்காட்டுவது ஆகியவை உள்ளடங்குகின்றன.

குற்றச்செயல் வரைபடத் தயாரிப்பானது பல்வேறு வடிவங்களை எடுக்கக்கூடியதாகும். தாக்குதல்களை இலத்திரனியல் ரீதியாகத் தடமறிவதற்கும் நகர்வுகள் மற்றும் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஜனத்தொகை ஆகியவற்றினை இலத்திரனியல் ரீதியாகக் கண்டறிந்து பார்ப்பதற்கும் செய்மதி பிம்பத் தயாரிப்புக்களுடன் இணைவதற்கும் பயன்படுத்துநர்களுக்கு மிகவும் மேம்பட்ட வரைபட மென்பொருட்கள் வசதிகளை வழங்குகின்றன. எவ்வாறாயினும் கைகளினால் வரையப்பட்ட அடிப்படை வரைபடமானது அண்ணளவான அமைவிடங்களைப் பயன்படுத்துவதுடன் இது கால இடைவெளிகளுக்கிடையிலான ஒற்றுமைகளையும் பாங்குகளையும் தீர்மானிப்பதில் ஒரு பயன்மிகு கருவியாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

**பெட்டி 12**

## உதாரணக் கருவி – புவியியல் முப்பரிமாண தொழில்நுட்ப கருத்திட்டம்

விஞ்ஞான முன்னேற்றத்திற்கான அமெரிக்க சங்கத்தின் அறிவியல் பொறுப்பு, மனித உரிமைகள் மற்றும் சட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னெடுப்பான புவியியல் முப்பரிமாண தொழில்நுட்பக் கருத்திட்டமானது சேய்மையான விடயங்களைக் கண்டறிதல், புவியியல் தகவல் முறைமை, புவியியல் அமைவிட முறைமைகள் மற்றும் தன்னார்வத்துடன் வழங்கப்படும் புவியியல் தகவல்கள் ஆகியவற்றினைப் பயன்படுத்தி மனித உரிமைகள், மனிதநேய பதிற்செயற்பாடு, கலாசார பாராம்பரியம், சுற்றுச்சூழல் நீதி, மனிதப் பாதுகாப்பு ஆகிய பரப்புக்களில் ஆய்வினையும் ஆவணப்படுத்தல் ஆற்றலினையும் மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த ஆய்வானது மனித உரிமைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நீதிமன்றங்கள் மற்றும் ஆணைக்குழுக்கள் உள்ளடங்கலாக ஏனையோரின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டு வருகின்றது.

புவியியல் முப்பரிமாண தொழில்நுட்பங்கள் சேய்மையான இடங்களைக் கண்டறிதல், GIS மற்றும் GPS போன்ற புவியியல் உசாவல் தகவல்களின் பல்வேறு அடுக்குகளின் பகுப்பாய்வு மற்றும் வரைபடத்தினை அனுமதிக்கின்ற பரந்த வீச்சிலான நவீன கருவிகளை உள்ளடக்குகின்றது.

இவ்வாறான தரவுகளின் பகுப்பாய்வானது பின்வருவன தொடர்பான இன்றியமையாத தகவல்களை வழங்க முடியும்.

- குடிமக்கள் மீதான சேய்மையான தனிமையில் நடத்தப்படுகின்ற தாக்குதல்களின் தாக்கம்
- பல்வேறு வகையிலான மனித உரிமை மீறல்கள்
- கலாசார பாரம்பரிய தளங்களுக்கு ஏற்படுத்தப்படும் சேதம்
- சுற்றுச்சூழல் மற்றும் சமூகநீதிப் பிரச்சினைகள்
- எல்லைகளுக்கிடையிலான மோதல்கள்
- சுதேச மக்களின் உரிமைகள்

புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்றமையானது அரச சார்பற்ற நிறுவனங்கள் விசேடமாக நெருக்கடி நிலைமைகளின் போது அதிகாரபூர்வமான தகவல்களை துரிதமாக சேகரித்து பகுப்பாய்வு செய்து பரப்புவதற்கு அவற்றுக்குள்ள ஆற்றலினை பரவலாக்குகின்றது. இவை மோதல்களின் கள அறிக்கையினை ஆதாரப் படுத்துவதற்கு கட்புல ஆதாரங்களையும் மனித உரிமைகளை பாதிக்கின்ற இயற்கை அனர்த்தங்களின் சான்றுகளை ஆதரப்படுத்துகின்ற தரவுகளையும் வழங்கக்கூடியதாக இருக்கின்றன.

https://www.aaas.org/geotech/humanrights

# பகுதி VII: ஒன்றையொன்று ஊடறுக்கும் விடயங்கள்

## அத்தியாயம் 15 உள்ளடக்கங்கள்

அத்தியாயம் 15: மன அதிர்ச்சி வடு ........ 231

**A.** மன அதிர்ச்சி வடுவினைப் புரிந்து கொள்ளுதல் ........ **231**

*பெட்டி 1*
மன அதிர்ச்சி வடுவினால் பாதிக்கப்பட்டவரின் அனுபவம் ........ 231

1. மன அதிர்ச்சி வடுவும் மன அதிர்ச்சி வடுவின் அனுபவங்களும் ........ 231

*பெட்டி 2*
மனஅதிர்ச்சி வடுவிற்கான தனிநபர்களின் மீண்டெழும் தன்மைக்கு பங்களிப்பு வழங்கும் காரணிகள் ........ 232

**B.** பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய மனஅதிர்ச்சி வடு ........ **233**

1. பாலியல் வன்முறை மனஅதிர்ச்சி வடுவின் எதிர்வினைகள் ........ 233

*பெட்டி 3*
மனஅதிர்ச்சி வடுவிற்குப் பின்னரான மனஅழுத்தக் குறைபாடு (PTSD) ........ 235

**C.** 'யுத்தப் பாலியல் வல்லுறவு' மனஅதிர்ச்சி வடு ........ **236**

*பெட்டி 4*
பாலியல் வல்லுறவு, பாரிய பாலியல் வல்லுறவு மற்றும் ஏனைய வடிவிலான பாலியல் வன்முறை ஆகியவற்றின் மனநல ஆரோக்கிய விளைவுகள் ........ 237

**D.** மனஅதிர்ச்சி வடுவினால் பாதிக்கப்பட்டவர்களுடன் இடையீடு மேற்கொள்ளுதல் ........ **239**

1. நேர்காணலின் போது மீண்டும் மனஅதிர்ச்சி வடுவினை உருவாக்குதல் ........ 239
2. சாட்சிகளின் ஞாபகத்திலும் வாக்குமூலத்திலும் மனஅதிர்ச்சி வடுவின் தாக்கங்கள் ........ 240

*பெட்டி 5*
தனிப்பட்ட மற்றும் கூட்டுக் கலாசாரங்கள் ........ 241

3. ஞாபகக் குறைபாடுடைய சாட்சிகளுடன் சேர்ந்து செயற்படுதல் ........ 241

*பெட்டி 6*
நம்பகதன்மை எதிர் மதிப்புறுநிலை ........ 241

*பெட்டி 7*
வழக்குச் சட்ட உதாரணம் – Anto Furundžija வழக்கு ........ 242

# அத்தியாயம் 15: மன அதிர்ச்சி வடு

## A. மன அதிர்ச்சி வடுவினைப் புரிந்து கொள்ளுதல்

மன அழுத்தம் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மக்கள் வெவ்வேறு விதமாக எதிர்வினையாற்றுகின்ற போதிலும் பாலியல் வல்லுறவு, சித்திரவதை மற்றும் வன்முறை போன்ற யுத்தத்துடன் தொடர்புடைய நிகழ்வுகளை, வயது அல்லது பால் போன்ற ஏனைய காரணிகள் அல்லது கலாசாரங்கள் எவையாக இருந்தபோதிலும், அனேகமாக ஒவ்வொருவரும் அதனை மன அதிர்ச்சி வடுவினை ஏற்படுத்துகின்ற நிகழ்வுகளாகவே அனுபவிக்கின்றனர். எனவே இவ்வாறான அனுபவங்களின் பின்னர் மன அதிர்ச்சி வடுவின் சில அல்லது பல அறிகுறிகளைக் கொண்டிருப்பது சாதாரணமானதாகும்.[1]

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் மீது பாலியல் வன்முறை ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தினைப் பற்றி கலந்துரையாடுகையில் நடைமுறைப்படுத்துனர்கள் பொதுவாக மன அதிர்ச்சி வடுவினையும் மன அதிர்ச்சி வடுவுக்கு உள்ளாக்கப்படுதலையும் அல்லது மன அதிர்ச்சி வடுவிற்கு பின்னரான மன அழுத்தக் குறைபாட்டினையும் உளவியல் ரீதியான குறைபாடுகளாகவே பட்டியலிடுகின்றனர். இவை பாலியல் வன்முறைக்கு உள்ளாகி பாதிக்கப்பட்டோரில் சான்று களாகக் காணக்கிடைக்கக்கூடியதாக இருப்பதுடன் அவர்களது குடும்பங்களிலும் சமுதாயங்களிலும் காணக்கூடியவையாக இருக்கின்றன

ஆனால் மன அதிர்ச்சி வடுவுக்கு உள்ளாக்கப்படுதல் என்பது உண்மையில் எதனைக் கருதுகின்றது? இது எவ்வாறு தனி நபர்களான பாதிக்கப்பட்டோரிலும் குடும்பங்களிலும் சமுதாயங் களிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது? எவ்வாறு ஞாபகத்தில் பாதிப்பினை ஏற்படுத்தி சாட்சிகள் என்ற ரீதியில் தனிநபர்களிலே தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

**பெட்டி 1**

**மன அதிர்ச்சி வடுவினால் பாதிக்கப்பட்டவரின் அனுபவம்**

செலியா, 36.

என்னுடைய கண்கள் திறந்திருக்கையில் என்னால் மன அதிர்ச்சி வடுவினை விபரிக்க முடியாது. என் கண்கள் மூடப்படுகையிலேயே நான் அதனை உணருகின்றேன். இது எப்பொழுதுமே இருக்கின்ற வலியாகும். இதனுடன் வாழ்வதற்கு நான் பழக வேண்டும். இது என்னில் இருந்து எப்பொழுதுமே செல்லாத ஓர் உணர்வாகும். நான் எதைச் செய்தாலும் அந்த உணர்வு அப்படியே நீங்காமல் இருக்கின்றது.

மன அதிர்ச்சி வடுவினை அறிந்துகொண்ட அணுகுமுறைக்கு அமைவாக CARSV ஆவணப்படுத்துதல் என்பதன் அர்த்தம் நடைமுறைப்படுத்துனர்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும்.

» பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களின் மீதான மன அதிர்ச்சி வடுவின் தன்மையினையும் அதன் தாக்கத்தையும் புரிந்து கொள்ளுதல்

» பாதிக்கப்பட்டவர்களையும் ஏனைய சாட்சிகளையும் நேர் காண்பதற்கு முன்னரும் நேர்காணும் போதும் நேர் கண்ட பின்னரும் ஏதாவது மன அதிர்ச்சி வடுவுடன் தொடர்புடைய தேவைகளை போதியளவுக்கு நிவர்த்தி செய்தல்

» மீண்டும் மன அதிர்ச்சி வடுவுக்கு உள்ளாகக்கூடிய சாத்தியங்களைத் தணிப்பதற்கான உபாயமார்க்கங்களை அமுல்படுத்துதல்

» சாட்சிகளின் ஞாபகத்தினையும் வாக்குமூலத்தினையும் எவ்வாறு மன அதிர்ச்சி வடு பாதிக்கலாம் என்பதைப் புரிந்து கொள்ளுதல்

### 1. மன அதிர்ச்சி வடுவும் மன அதிர்ச்சி வடுவின் அனுபவங்களும்

அமெரிக்க உளவியல் சங்கம் மன அதிர்ச்சி வடுவினை மோசமான நிகழ்விற்கான உணர்வு ரீதியான பதிற்செயற்பாடு என வரையறை செய்கின்றது. Health and Human Rights Info[2] இதனை விபரிக்கையில் உயிர் அல்லது உடலுக்கு அச்சுறுத்தல் உள்ள இடங்களாக பாரிய உடல் மனோகாயம் என்பதாக இதனை வரையறை செய்கின்றது. உலக சுகாதார ஸ்தாபனம் இதனை வரையறை செய்கையில் மன அதிர்ச்சி வடு நிகழ்வானது அதீத அச்சுறுத்தல் அல்லது அழிவு தரும் தன்மையுடைய மனஅழுத்த நிகழ்வு என்பதாகவும் இது எவரிலும் ஊடுருவிச்சென்று மன அழுத்தத்தையும் மன இடரினையும் ஏற்படுத்தக்கூடிய சாத்தியத்தினைக் கொண்டது எனவும் விபரிக்கின்றது.[3] உதாரணமாக இயற்கையான அல்லது மனிதர்கள் உருவாக்குகின்ற அனர்த்தங்கள், மோதல்கள், பாரதூரமான விபத்துக்கள், ஏனையோரின் வன்முறை மிகு மரணத்தினைக் கண்கூடாகக் காணுதல் அல்லது சித்திரவதைக்கு உள்ளாகிப் பாதிக்கப்படுதல், பயங்கரவாதம், பாலியல் வல்லுறவு, அல்லது ஏனைய குற்றச்செயல்கள் ஆகியவை இதில் அடங்குகின்றன. மேலும் சிறுவர் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, மோதல், நகர வன்முறை, தடுப்புமுகாம்கள், மோசமான உறவுகள், தொடர்ந்து இழப்புக்களுக்கு முகம்கொடுத்தல் போன்ற நீடித்த அல்லது மீண்டும் மீண்டும் நிகழ்கின்ற அனுபவங்களின் பதிற்செயற்பாட்டையும் உள்ளடக்குகின்றது. சுருக்கமாகக் கூறுவதாயின் உளவியல் ரீதியாக மன அதிர்ச்சி வடுவுக்கு உள்ளாகியுள்ள ஒருவர் வன்முறை மிகு நிகழ்வின் மூலமாக, மன இடரினை ஏற்படுத்தும் நிகழ்வின் மூலமாக, அல்லது

1 Health and Human Rights Info (2014) *உளநலம் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை: மோதல்களில் பாலியல் வன்முறையில் தப்பியவர்களுக்கு உதவுதல்–பயிற்சிக் கையேடு.*Oslo: Healthand Human Rights Info

2 Health and Human Rights Info (2014) *உளநலம் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை: மோதல்களில் பாலியல் வன்முறையில் தப்பியவர்களுக்கு உதவுதல்–பயிற்சிக் கையேடு.* Oslo: Healthand Human Rights Info.

3 World Health Organisation (1992) *The ICD-10 உளவியல் மற்றும் நடத்தை கோளாறுகளின் வகைப்படுத்தல்: Clinical descriptions and diag- ழெளவைஉ பயிற்சிக் கையேடு.* Geneva: WHO

## *பொதுவான நோக்கினைக் கொண்டு நடைபெறுகின்ற நிகழ்வொன்றின் காரணமாக தனக்கு ஏற்படுகின்ற அனுபவமே மனஅதிர்ச்சி வடு என்பதைப் புரிந்து கொள்வது இன்றியமையாததாகும்.*

மன உறுதியினைக் குலைக்கும் நிகழ்வின் மூலமாக ஏற்பட்ட ஒரு மன அதிர்ச்சி வடுவின் காரணமாக கணிசமான மனக் காயத்தினால் வருந்துபவராக இருக்கின்றார்.

பொதுவான நிகழ்வொன்றின் காரணமாக தனக்கு ஏற்படுகின்ற அனுபவமே மனஅதிர்ச்சி வடு என்பதைப் புரிந்து கொள்வது இன்றியமையாததாகும். அதன் அர்த்தமானது வெவ்வேறு தனி நபர்கள் ஒரேவிதமான, வன்முறைமிகு, உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகளை மன அதிர்ச்சி வடுமிகு எதிர்வினைகளைக் காட்டாமல் அனுபவிக்கலாம். முன அதிர்ச்சி வடுவுக்கு உள்ளானவர்கள் அனுபவிக்கின்ற இதன் உளவியல் ரீதியான பின்விளைவுகளும் ஒருவரிலிருந்து மற்றவருக்கு மாறுபடலாம்.

தனிநபர்கள் அனுபவிக்கின்ற மன அதிர்ச்சி வடுவின் தீவிரத் தன்மையும் வகையும் அதனுடன் தொடர்புடைய அபாயநேர்வு மற்றும் பாதுகாப்பு காரணிகளில் தங்கியுள்ளன.

- மன அதிர்ச்சி வடுவுக்கு முன்னரான அவர்களின் சூழ்நிலையும் நிலைமைகளும் (மன அதிர்ச்சி வடுவுக்கு முன்னரான)
- மன அழுத்தத்தினை ஏற்படுத்துகின்ற நிகழ்வின் தீவிரத் தன்மையும் மன அதிர்ச்சி வடுவின் போதான அனுபவத்தின் புலனுணர்வும் (peri-traumatic)
- உடனடியாக ஈடுகொடுக்கும் உபாயமார்க்கங்களும் அனுபவத்திற்கு பின்னர் அவர்களுக்கு கிடைக்கக்கூடியதாக உள்ள உதவியின் மட்டமும் (மன அதிர்ச்சி வடுவுக்கு பின்னரான)

முன அதிர்ச்சி வடுவினைத் தொடர்ந்து ஏற்படுகின்ற உளவியல் ரீதியான மீண்டெழும் தன்மையுடன் தொடர்புடைய எண்ணற்ற காரணிகளை கீழுள்ள பெட்டி விபரிக்கின்றது. மீண்டெழும்தன்மையென்பது பன்முகம் கொண்டதாக காணப்படுவதுடன் காயத்திற்கு ஈடுகொடுத்து செயற்பாட்டினையும் மீளலின் வேகம் மற்றும் இலகுத்தன்மையினைப் பேணுவதையும் மன அதிர்ச்சி வடுவின்போது சாதகமாகத் தகவமைக்கும் ஆற்றலினையும் உள்ளடக்குகின்றது. ஆவணப்படுத்து நர்கள் நேர்காணலின் போது மீள மன அதிர்ச்சிவடு[4] வினை ஏற்படுத்தும் சாத்தியமிகு ஆபத்தினை மதிப்பீடு செய்வதற்கு இயலுமாக இருப்பதற்காக மீண்டெழும் தன்மை மீது தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய பாதுகாப்பு மற்றும் அபாயநேர்வுக் காரணிகள் தொடர்பாக பரிச்சயம் அடைந்திருத்தல் வேண்டும்.

**பெட்டி 2**

### மனஅதிர்ச்சி வடுவிற்கான தனிநபர்களின் மீண்டெழும் தன்மைக்கு பங்களிப்பு வழங்கும் காரணிகள்

#### 1a: பாதுகாப்பு காரணிகள்

- இயங்குகின்ற மற்றும் ஓர் அன்பான உறவின் அங்கமாக இருத்தல்
- குடும்பத்தினாலும் சமுதாயத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு உதவி வழங்கப்படுதல்
- செயற்திறனும் மதிப்பும் உரிய மருத்துவ சேவைகளை அணுகக்கூடியதாக இருத்தல் (உளவியல் உதவி உள்ளடங்கலாக)
- உள, சமூக உதவியினை அணுகக்கூடியதாக இருத்தல் - ஆற்றுப்படுத்தல் மற்றும் ஏனைய வகையிலான சிகிச்சைகள் உள்ளடங்கலாக
- அத்தியாவசிய வளங்களை அணுகக்கூடியதாக இருத்தல் - வருமானம், வீடமைப்பு, தொழில்வாய்ப்பு
- கல்வியினைக் கொண்டிருத்தல்
- தன்னம்பிக்கையினையும், சுய கௌரவத்தினையும் கொண்டிருத்தல்
- சமயப்பற்றுள்ளவராக இருத்தல் அல்லது ஆன்மீக நபராக இருத்தல்
- மன அதிர்ச்சி வடுவில் சாதகமான அர்த்தத்தினைக் காணக் கூடியவராக இருத்தல் (உதாரணமாக இதிலிருந்து தப்புவதற்கு நான் அதிஷ்டம் செய்திருக்கின்றேன். குறைந்தது கடவுள் என்னை ஓர் ஆரோக்கியமான அழகான குழந்தையாக இதனை விரும்புவராக என்னை ஆக்கி இருக்கின்றார் 'எனது குடும்பம் என்னை நேசிக்கின்றது, மதிக்கின்றது என்பதை என்னை உணரச்செய்கின்றது)

#### 1b: அபாயநேர்வுக் காரணிகள்

- பாதிக்கப்பட்டவர் ஏற்கனவே நெருங்கிய துணையின் வன்முறை அல்லது ஏனைய வகையிலான முரண்பாட்டுடன் தொடர்புடைய வன்முறை போன்ற ஏதோ சில வடிவிலான வன்முறைக்கு முகம் கொடுத்துள்ளார்.
- தாக்குதலானது மிகக் குரூரமாகவும் வன்முறை மிக்கதாகவும் இருக்கின்றது அத்துடன் / அல்லது தீவிரமான அல்லது நீடித்த உடல் காயத்தினை ஏற்படுத்தி உள்ளது.
- பல்வேறு தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன, அத்துடன் / அல்லது அவை நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்கின்றன (மீண்டும் மீண்டும் இடம்பெறும் பாலியல் வல்லுறவுகள், நீண்ட காலத்திற்கு வைத்திருத்தல்)
- பாதிக்கப்பட்டவர் பாதுகாப்பின்மை, அபாயம் மற்றும் அச்சம் ஆகியவற்றின் தொடர்ச்சியான நிலையில் இருக்கின்றார்
- மருத்துவ, உள சமூக, மற்றும் பாதுகாப்பு உதவிச்சேவைகள் வரையறுக்கப்பட்டவையாக உள்ளன அல்லது போதாதவையாக உள்ளன.
- சமூகப்பாதுகாப்பு இல்லை மேலும் சமுதாயங்கள் பாதிக்கப் பட்டவர்களை ஓரங்கட்டுகின்றன அல்லது வெளியேற்றுகின்றன.
- பாதிக்கப்பட்டவர் அன்புக்குரியவரின் இழப்பு, வாழ்வாதாரங்கள், காரணிகளுக்கு இடப்பெயர்வு போன்ற மேலதிக அழுத்தக் காரணி களுக்கு ஈடுகொடுக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

---

4 மோல்ட்பை, ஜோன், டேல்., பிளெவ்எச்., எடல். 'நெகிழ்வு பணிபின் சூழலியல் கட்டமைப்பு மாதிரி': இடை-கலாச்சாரம் மற்றும் மருத்துவ சார்பு', *Personality And Individual Differences* [serial online], 98 (August 2016), 96–101.

## B. பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய மனஅதிர்ச்சி வடு

பாலியல் வல்லுறவும் ஏனைய பாரதூரமான பாலியல் வன்முறைச் செயற்பாடுகளும் அதீத மனஅழுத்தக் காரணி களாகச் செயற்படுவதுடன் இவை தீவிரமான மனஅதிர்ச்சி வடு[5] எதிர்வினைகளை ஏற்படுத்தக்கூடிய சாத்தியங்களையும் கொண்டுள்ளன. பாலியல் வல்லுறவு என்பது ஒரு தனித்துவமான மன அதிர்ச்சி வடு அனுபவமாக[6] விபரிக்கப்படுவதுடன் இது எண்ணற்ற பரிமாணங்களைக் கொண்டுள்ளது.

- காயப்படுத்தப்படுவோம், கொல்லப்படுவோம் என்கின்ற அச்சம், இல்லாமல் ஆக்கப்படுவோம் என்கின்ற அச்சம்
- மனிதம் என்பது அகற்றப்படல், அதீதமாக பண்டமாக்கப்படுதல்
- உடலின் மீதான மற்றும் நிகழ்வுகளின் மீதான கட்டுப்பாட்டின் மீதான இழப்பு, இயலாமை, சக்தியின்மை
- அடையாள அழிப்பு
- உடலினுள் குற்றத்தை நிகழ்த்துபவரினது வன்முறை மிகு ஊடுருவல், உடல் மீதான படையெடுப்பு
- மிக நெருக்கமான உடல் மற்றும் உளவியல் தளத்தினுள் எல்லை மீறுதல்
- அவமானம்
- வலி, சித்திரவதை[7]

### அவதானிக்கப்பட வேண்டிய விடயம்

உடல்ரீதியாக உள்நுழைப்பதானது பாலியல் வன்முறை யினால் பாதிக்கப்பட்டவர்களில் காணப்படுகின்ற தீவிரமான மனஅதிர்ச்சி வடு பின்விளைவுகளுக்கான ஒரு முன் தேவைப்பாடு அல்ல – பாலியல் வல்லுறவின் மனஅதிர்ச்சி வடு அனுபவமானது பல்வேறு காரணிகளின் விளைவாக இருப்பதுடன் இவை வெறுமனே உள்நுழைக்கின்ற செயற்பாட்டிற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல.

### 1. பாலியல் வன்முறை மனஅதிர்ச்சி வடுவின் எதிர்வினைகள்

மன அதிர்ச்சி வடுவினை அனுபவிக்கின்ற பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவருக்கு என்ன நடக்கின்றது?

மன அதிர்ச்சி வடுவின் உளவியல் பின்விளைவானது பல்வேறு வழிகளில் வெளிப்படலாம். இருந்தபோதிலும் சில எதிர்வினைகள் மிகவும் அடிக்கடி காணப்படுபவையாகவும் வகைமாதிரியானவையாகவும் உள்ளன. அவற்றுள் பின்வருவன உள்ளடங்குகின்றன.

a. தீவிரமான மன அழுத்த எதிர்வினை

b. பதகளிப்பு

c. மன அழுத்தம்

d. விலகியிருத்தல்

e. மன அதிர்ச்சி வடுவிற்குப் பின்னரான மன அழுத்தக் குறைபாட்டு அறிகுறிகள்

f. போதை மாத்திரைகளைத் தவறாக பயன்படுத்துதல்

---

5 சுப்ரா குறிப்பு 1.

6 சுப்ரா குறிப்பு 1.

7 பல்வேறு மூலங்கள் பார்க்க : உதாரணம் சுப்ரா குறிப்பு 1: *Bosniaa nd Herzegovina வில் பாதிக்கப்பட்டவர்களின் யுத்தப்பாலியல் வல்லுறவின் நீண்டகால பின்விளைவுகளும் அவர்கள் ஈடுகொடுத்த உபாயமார்க்கங்களும் பற்றிய ஆய்வு braveandstrong'*, (Cologne, 2014); Hagen, KT., 'The Nature and Psychological Consequences of War Rape for Individuals and Communities', *International Journal of Psychological Studies*, 2/2 (2010).

**'பாலியல் வல்லுறவு மனஅதிர்ச்சி வடு சிண்ட்ரோம்'**

பாலியல் வல்லுறவு நிகழ்ந்த பின்னர் அனுபவிக்கப்படும் உடனடியான அல்லது நீண்டகால எதிர்வினைகளின் தொகுதியினைக் குறிப்பிடுவதற்கு நடைமுறைப்படுத்துனர்கள் பொதுவாக பாலியல் வல்லுறவு மன அதிர்ச்சி வடு சிண்ட்ரோம் என்கின்ற ஒரு பொதுவான சொற்பதத்தினைப் பயன்படுத்துகின்றனர் (RTS). RTS என்பது உடற்கூறு சார்ந்த, புலனுணர்வு சார்ந்த, உளவியல் சார்ந்த, அத்துடன் / அல்லது நடத்தை சார்ந்த அறிகுறிகளின் சேர்வையின் மூலம் வெளிப்படுத்தப்படுவதுடன் இது இரண்டு கட்ட எதிர்வினைகளின் மாதிரியாக ஒழுங்கமைக்கப்படுகின்றது. 1. ஒழுங்கு கெடுதல் 2. மீள் ஒழுங்கமைத்தல்.

கீழே பெட்டியில் விபரிக்கப்பட்டுள்ள நிலைமைகளுடன் தீவிரமான / ஒழுங்கு கெடுகின்ற கட்டத்திலே பல்வேறு வகையிலான உச்சநிலையில் காணப்படுகின்ற உணர்வுரீதியிலான பதிற்செயற்பாட்டினை அனுபவிப்பதனை RTS உள்ளடக்கலாம். அதாவது அழுதல், தேம்புதல், சிரித்தல் அல்லது பாதிக்கப்படாதது போல் காணப்படுதல் அல்லது அனுபவம் ஏற்பட்ட உடனேயே வெளியுலகிலிருந்து துண்டிக்கப்பட்டிருத்தல். பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் ஆரம்ப உணர்வுகள் கலைந்து சென்ற பின்னர் கோபம், அவமானம், பழிவாங்குவதற்கான ஆர்வம் மற்றும் சுய குற்றம்கூறல் போன்ற உணர்வுகளையும் உணரலாம்.

நீண்டகால ஒழுங்கமைத்தல் கட்டத்திலே பாதிக்கப்பட்டவர்கள் வீட்டிலோ அல்லது பாடசாலையிலோ செயற்படுவதில் சிரமங்களை எதிர்நோக்கலாம். அவர்கள் தனிமையாக இருப்பதற்கு பயம், ஓய்வாக இருப்பதில் அல்லது தூங்குவதில் சிரமம் போன்ற பல அச்சங்களை உணரத் தொடங்கலாம். மேலும் பாலியல் ரீதியான செயற்பாடின்மையும் உருவாகலாம்.

மன அதிர்ச்சி வடுவிற்குப் பின்னரான மனஅழுத்தக் குறைபாடு போலல்லாது RTS என்பது ஒரு தனித்துவமான தெரிவடைப்படையிலான நோயறிதலைப் போலல்லாது மீளளின் அறிகுறிகள் மற்றும் கட்டங்களின் விபரிப்பாகும். எவ்வாறாயினும் PTSD மற்றும் RTS தொடர்பான நிபுணத்துவ சாட்சி வாக்குமூலமானது பாதிக்கப்பட்டவர்கள் அனுபவிக்கின்ற பாலியல் வல்லுறவு மற்றும் சிக்கலான எதிர்வினைகள் பற்றி ஜூரர்களுக்கும் நீதிபதிகளுக்கும் அறிவூட்டுவதற்காக இது பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச நியாயாதிக்கங்களில் சான்றாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. - இதில் வெற்றியின் மட்டம் வேறுபட்ட போதிலும்.[8]

8 பார்க்க, உதாரணமாக, Ellison, Louise, 'Closing the Credibility Gap: The Prosecutorial Use of Expert Witness Testimony in Sexual Assault Cases', *சான்று மற்றும் நிரூபிப்பிற்கான சர்வதேச ஏடு*, 9/4 (2005), 239-268; Bleil, Charles, 'Evidence of Syndromes: No Need for a Better "Mousetrap",' *South Texas Law Review*, 32 (1990) 37, 38; Gupta, Nina, 'Disillusioning the Prosecution: The Unfulfilled Promise of Syndrome Evidence', *சட்டம் மற்றும் நடைமுறைப் பிரச்சினைகள்*, 76/3-4 (2013), p234; Brammertz, Baron Serge, and Michelle Jarvis, (eds), *Prosecuting Conflict-Related Sexual Violence at the ICTY*, (Oxford, 2016).

பெட்டி 3

## மனஅதிர்ச்சி வடுவிற்குப் பின்னரான மனஅழுத்தக் குறைபாடு (PTSD)

மனஅதிர்ச்சி வடுவிற்குப் பின்னரான மனஅழுத்தக் குறைபாடு என்பது மனஅதிர்ச்சியினை ஏற்படுத்தும் நிகழ்வொன்று ஏற்பட்டதன் பின்னர் அதன் விளைவாக ஒரு தாமதித்த அல்லது நீடித்த பதிற்செயற்பாடு உருவாகும் நிலைமையாகும். மனஅதிர்ச்சி வடுவினை அடையும் அனைவருக்கும் PTSD ஏற்படுவதில்லை. எவ்வாறாயினும் நபர்களுக்கிடையிலான மன அதிர்ச்சி வடுவினால் பாதிக்கப்படுகின்ற நபர்கள், குறிப்பாக மோதலின் போது பாலியல் வன்முறைக்கு உட்படுபவர்கள், தாக்குதலினை அடிப்படையாகக் கொண்டிராத (கார் விபத்து போன்றவை) மனஅதிர்ச்சி வடு மூலம் பாதிக்கப்படுபவர்களை விட PTSD யினைக் கொண்டிருப்பதற்கான அதிக சாத்தியத்தினை கொண்டுள்ளனர். பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் நீண்ட காலத்தில் PTSD இற்கான அறிகுறிகளைக் காட்டினாலும் இல்லாவிட்டாலும் தனிப்பட்ட மீண்டெழும் தன்மை அதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. (பார்க்க: பெட்டி 2 மனஅதிர்ச்சி வடுவிலிருந்து தனிப்பட்ட ரீதியில் மீண்டெழுவதற்கு பங்களிப்பு வழங்கும் காரணிகள்). PTSD ஆனது ஒரு தீவிரமான மனஅழுத்த எதிர்வினையாக ஆரம்பிக்கலாம். இதனைத் தொடர்ந்து பூரணமான PTSD குறைபாடு ஆரம்பமாகலாம். எவ்வாறாயினும் பாதிக்கப்பட்டவர்கள் சில சந்தர்ப்பங்களில் பல வாரங்களுக்கு அல்லது மாதங்களுக்கு சொற்பமான அறிகுறிகளைக் காட்டலாம் அல்லது காட்டாமல் இருக்கலாம். இவர்கள் தீவிரமான மன அழுத்தத்தினைக் காட்டலாம். அதன் பின்னர் எவ்விதமான மனஅழுத்தமுமின்றி உறுதியானவர்களாக இருந்து பின்னர் PTSD இனை உடையவர்களாக மாறலாம்.

மனநிலைக் குறைபாடுகள் தொடர்பான நோயறிதல் மற்றும் புள்ளிவிபரக் கையேடானது PTSDயை நோயறியவேண்டிய தனிநபர்களுக்கு பூர்த்திசெய்யவேண்டிய தனித்துவமான தெரிவடிப்படையில் குறித்துரைக்கின்றது. (a) இவர்கள் உண்மையான மரணம் அல்லது அச்சுறுத்தப்படுகின்ற மரணம், பாரதூரமான காயம் அல்லது உடலின் சுயாதீனத்திற்கு ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல் ஆகியவை சம்பந்தப்படுகின்ற மனஅதிர்ச்சி வடு ஏற்படுத்தும் நிகழ்வுகளை அனுபவித்திருக்கலாம் அல்லது அவற்றினைக் கண்டிருக்கலாம் மேலும் அந்த நிகழ்விற்கு அவர்கள் மிகத் தீவிரமான அச்சத்துடன் பரிதவிப்புடன் அல்லது பயத்துடன் எதிர்வினையாற்றலாம். (b) அந்த நிகழ்வினை மீண்டும் அனுபவிப்பது உள்ளடங்கலாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அறிகுறிகளை இவர்கள் முறைப்பாடு செய்யலாம். மேலும் இதில் தவிர்ப்பு, அதியுச்சக் கிளர்ச்சி ஆகியவை உள்ளடங்கலாம். அத்துடன் (c) அறிகுறிகள் குறைந்தது ஒரு மாதம் அளவிற்கு நீடித்து மருத்துவ ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த மன அழுத்தத்தினை அல்லது செயற்பாட்டுப் பாதிப்பினை ஏற்படுத்த வேண்டும்.

வகை மாதிரியான வெளிப்படுத்தல்களில் உள்ளடங்குபவை:

» தொல்லை தருகின்ற ஞாபகங்களில் மனஅதிர்ச்சி வடுவினை மீண்டும் மீண்டும் எண்ணுகின்ற நிகழ்வுகள்

» கனவுகள் அல்லது கொடுங்கனவுகள்

» ஏனைய மக்களிலிருந்து விலகி இருத்தல், சுற்றுச்சூழலுக்கு எதிர்வினையற்று இருத்தல்

» சந்தோசத்தினை அனுபவிக்க இயலாமை

» செயற்பாடுகளைத் தவிர்த்தல் மற்றும் மனஅதிர்ச்சி வடுவினை ஏற்படுத்தியமை போன்ற சூழ்நிலைகளை தவிர்த்தல்

» தன்னிச்சையின்றி அதியுச்ச விழிப்புணர்வினை அடைதல்

» மிகவும் அதிகரிக்கப்பட்ட திடுக்கிடும் எதிர்வினையினைக் காட்டுதல்

» தூக்கமின்மை

» பதகளிப்பு மற்றும் மனவிரக்தி

» தற்கொலைக்கான கருத்தாக்கம்

அதிகமான சம்பவங்களில் PTSD இனால் வருந்துபவர்கள் அந்தக் குறைபாட்டிலிருந்து மீளுகின்றனர். ஆனால் இந்த நிலைமையானது நீடித்ததாக மாறவும் முடியும். மோசமான சூழ்நிலைகளில் ஆளுமையில் இவை நீடித்த மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

*அனைத்து மனஅதிர்ச்சி வடு அனுபவங்களிலும் மிகவும் அழிவு தருகின்றதாக இருப்பது யுத்தமும் பாலியல் வல்லுறவுமாகும்.*

## C. 'யுத்தப் பாலியல் வல்லுறவு' மனஅதிர்ச்சி வடு

மனஅதிர்ச்சி வடுவின் தொடர்பத்தின் அங்கமாகப் பாலியல் வன்முறை இருக்கும் போது மேலும் வன்முறையானது மோதல் சூழ்நிலைகளில் நிகழும்போது மேலே விபரிப்பிடப்பட்டுள்ள பாலியல் வல்லுறவு காரணமான மனஅதிர்ச்சி வடுக்களின் பண்புகளில் பல மோசமாக்கப்படுகின்றன.

போராளியாக அல்லது சிவிலியனாக மோதல்களுக்கு முகம் கொடுக்கையில் அவற்றின் பாதிப்பிலிருந்து தப்புவதென்பது மிகுந்த மனஅதிர்ச்சி வடு ஏற்படுத்தும் நிகழ்வாகவே கருதப் படுகின்றது. அதீத வன்முறையினையும் உயிரிழப்புகளையும் கண்கூடாகக் காண்பதனால் ஏற்படும் பன்மடங்கு அதிர்ச்சி, அன்புக்குரியவர்களை இழத்தல், வீடுகளையும் வாழ்வா தாரங்களையும் இழத்தல், தப்பிச்செல்லுதல், இடப்பெயர்வு ஆகியவை சாதாரண மனிதர்களை விட இவ்வாறான துயரங்களிற்கு முகங்கொடுத்தவர்களில் மனநல ஆரோக்கியக் குறைபாடுகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியம் அதிகமாகும். உலகம் முழுவதும் ஆயுத மோதல்களின் காரணமாக மனஅதிர்ச்சி வடு தரும் நிகழ்வுகளுக்கு முகங்கொடுக்கின்ற மக்களில் 10% ஆனோர் மிகப் பாரதூரமான மனநல ஆரோக்கியப் பிரச்சினைகளைக் கொண்டுள்ளனர் என்றும் ஏனைய 10% ஆனோர் செயற்றிறன்மிகு முறையில் செயற்படுவதற்கான தமது ஆற்றலைப் பாதிக்கின்ற நடத்தைகளை கொண்டிருக்கின்றனர் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் மதிப்பிட்டுள்ளது.[9]

மோதல் சூழ்நிலைகளில் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்படுவதற்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்டவர்கள் பாலியல்சாராத உடல் ரீதியான வன்முறைக்கும் இடப்பெயர்வுகளுக்கும் பாதுகாப்பற்ற நிலைமைகளில் வாழ்வதற்கும் குற்றத்தை நிகழ்த்தியவருடன் சேர்ந்து வாழ வேண்டிய நிலைமைக்கும் வீட்டு வன்முறைக்கும் உட்படும் நிலைமை காணப்படுகின்றது. மேலும் மோதல் இடம்பெறும் நிலைமைகளில் காணப்படும் பொதுவான அனுபவங்கள் மனஅதிர்ச்சி வடுவின் மேல் மற்றொரு மனஅதிர்ச்சி வடுவினையும் திரண்ட மனஅதிர்ச்சி வடுவினையும் ஏற்படுத்துகின்றன. மோதல் மற்றும் அட்டூழியத்துடன் தொடர்புடைய பாலியல் வன்முறை நிகழ்த்தப்படுகின்ற குறிப்பிட்ட முறையின் கொடூரம் மற்றும் அதன் பொதுவான தன்மை மற்றும் சூழமைவு ஆகியவை ஏற்கனவே உளவியல் ரீதியாக பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டோருக்கு மேலும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன.

பல்வேறு மனஅதிர்ச்சி வடு ஏற்படுத்துகின்ற நிகழ்வுகளின் மத்தியில் யுத்தமும் பாலியல் வன்முறையும் அனைத்து மனஅதிர்ச்சி வடு ஏற்படுத்தும் அனுபவங்களினையும் விட மிகவும் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியதாக இருப்பதை சர்வதேச மனஅதிர்ச்சிவடு ஆய்வுகள் நிரூபிக்கின்றன. யுத்தத்தினதும் பாலியல் வன்முறையினதும் சேர்க்கையானது துயருருகின்ற பாதிக்கப்பட்டவர் மீது மிகப்பாரிய உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அவர்களின் மனநல மற்றும் உடல் ஆரோக்கியத்தையும் ஏனையோருடனான அவர்களின் உறவையும் பாதிக்கும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.[10]

---

9 உலக சுகாதார ஸ்தாபனம் (2001) *உலக சுகாதார அறிக்கை 2001- மனநல ஆரோக்கியம் :புதிய புரிதல்இ புதிய எதிர்பார்ப்பு ஜெனீவா:* WHO.

10 மெடிகா ஸெனிகா மற்றும் மெடிகா ஸெனிகா (2014) *பொஸ்னியா மற்றும் ஹெர்ஜிகொவினியாவில் உயிர் தப்பியவரிகளின் போர் பாலியல் வல்லுறவுவின் நீண்டகால தாக்கங்களின் ஆராய்ச்சி மற்றும் பிரதியாக்க நுணுக்கங்கள்': 'நாம் இன்னும் உயிருடன். நாம் ஆயுதமேந்தினோம் ஆனால் துணிச்சலாக பலமாக உள்ளோம்'.* கோலொன் மற்றும் ஸெனிகா மொன்டியேல் மற்றும் மெடிகா ஸெனிகா

பெட்டி 4

## பாலியல் வல்லுறவு, பாரிய பாலியல் வல்லுறவு மற்றும் ஏனைய வடிவிலான பாலியல் வன்முறை ஆகியவற்றின் மனநல ஆரோக்கிய விளைவுகள்

*ஸ்டென்போர்ட் பல்கலைக்கழகம் - மருத்துவக் கல்லூரி*

*ICC வழக்குத்தொடுநர் எதிர் Jean Pierre Bemba Gombo வின் தீர்ப்பு வழங்கல் கட்டத்தின் போது சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு*

ஸ்டென்போர்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள மனஅதிர்ச்சி வடு மனநல ஆரோக்கிய சுகாதார ஆய்வுகூடத்தின் சான்றுகள் மற்றும் வழக்குப் பதிவுகளின் மீளாய்வினை அடிப்படையாகக் கொண்டு Bemba வழக்கின் தீர்ப்புக் கட்டத்தின் போது சமர்ப்பிக்கப்பட்ட நிபுணர்களின் சமர்ப்பணம்(ICC வழக்குத்தொடுநர் எதிர் Jean Pierre Bemba Gombo வழக்கு இலக்கம் ICC-01/05-01/08). ஆய்வுகூடத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையானது மன அதிர்ச்சிவடு மனநல ஆரோக்கியத்தில் கணிசமான அனுபவத்தினைக் கொண்ட சட்டத்தரணிகளை உள்ளடக்கி 2002-2003 வரையில் மத்திய ஆபிரிக்க குடியரசில் இழைக்கப்பட்ட பாரியதும் முறைமை வாய்ந்ததுமான பாலியல் வன்முறையினால் தனிப்பட்ட, குடும்ப, சமுதாய மற்றும் பரம்பரைகளுக்கிடையில் ஏற்பட்ட தாக்கத்தினை விபரிக்கின்றது.

பாலியல் வன்முறையின் உள சமூக விளைவுகள் பற்றிய பரிசோதனை ஆய்வுகள், வழக்கு விசாரணையின் போது வழங்கப்பட்ட நிபுணத்துவ வாக்குமூலம் மற்றும் மத்திய ஆபிரிக்கக் குடியரசின் நிகழ்வுகள் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புகளைப் பற்றிக் குறிப்பிடும் அறிக்கை, தனிப்பட்ட மட்டத்திலும் கூட்டு மட்டத்திலும் மக்கள் மீது நடத்தப்பட்ட பாரிய பாலியல் வன்முறையின் பல்வேறு உளவியல் தாக்கங்களை விபரிக்கின்றது. ஏனையவற்றின் மத்தியில் பாலியல் வன்முறையின் விளைவுகள் பின்வருவற்றை உள்ளடக்குவதாக அது குறிப்பிடுகின்றது. PTSD, பதகளிப்பு, மனவிரக்தி, மனநிலைக் குழப்பங்கள் மற்றும் விலகியிருத்தல் - உடலிலிருந்து மனம் விலகியிருத்தல் அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

*பாலியல் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட இவ்வாறானவர்களுக்கு உளவியல் நூல்கள் மிகவும் குறைவான செயற்பாட்டு விளைவுகளையே எதிர்வுகூறுகின்றன. விளைவாக ஏற்படும் தனிப்பட்ட பாதிப்புக்களுள் PTSD, மனவிரக்தி, பதகளிப்பு போன்ற உளவியல் குறைபாடுகள் உள்ளடங்குகின்றன. பெயர் குறிப்பிடப்பட்ட இந்த மனநல ஆரோக்கிய நோயறிதலுக்கு வெளியே தனிநபர்கள் எதிர்பார்ப்பின்மை உணர்வினாலும் ஆன்மீக வீழ்ச்சியினாலும், அதிகரித்த சந்தேகத்தினாலும் தொடர்ச்சியான குழப்பத்தினாலும் அச்சத்தினாலும் துயருருகின்றனர். மனஅதிர்ச்சி வடுவினால் பாதிக்கப்பட்டவர்கள் தம்மைப் பாதிப்புறு நிலையிலுள்ளவர்களாக நோக்குகின்றனர், உலகினை அர்த்தமற்றதாக நோக்குகின்றனர், தம்மைப் பெறுமதியற்றவர்களாக நோக்குகின்றனர்.*

https://www.icc-cpi.int/RelatedRecords/CR2016_06768.PDF

வேறான அனுபவங்களாக பாலியல் வன்முறை மற்றும் மோதல்களின் மனஅதிர்ச்சி வடுமிக்க தன்மையுடன் சேர்த்து, பாதிக்கப்பட்டவர்களை CARSV பின்வரும் வழிகளில் தாக்கலாம்.

1. பாலியல் வன்முறையானது மீண்டும் மீண்டும் நடைபெறும் **வன்முறை மற்றும் பாதுகாப்பின்மை** எனும் சூழமைவில் நிகழுதல்
2. **முறைசார் மற்றும் முறைசாரா உதவிப் பொறிமுறைகள்** பொதுவாக போதியளவிற்கு கிடைக்காமை
3. பாலியல் வன்முறை என்பது அதன் **தன்மையில் பொதுவானது**
4. பாலியல் வன்முறை என்பது **குறிப்பாக குரூரமானது**

(இந்தக் காரணிகளின் மேலதிக பூரண விளக்கங்களுக்கு பார்க்க அத்தியாயம் 2: பாலியல் வன்முறையினைப் புரிந்து கொள்ளுதல்)

## 1. தொடரும் வன்முறையும் பொதுவான பாதுகாப்பின்மையும

பாதிக்கப்பட்டோரின் வாழ்க்கையின் பின்புலத்தினை அமைக்கின்ற தொடர்ச்சியான மோதல்களும் வன்முறைச் செயல்களும் அவர்களைப் பல்வேறு வகையான திரண்ட மனஅதிர்ச்சி வடு அனுபவங்களுக்கு இட்டுச்செல்லலாம். இது தீவிரமாக்கப்பட்ட மனநிலை ஆரோக்கிய பிரச்சினைகளை[11] அவர்கள் வெளிப்படுத்துவதற்கான சாத்தியத்தினை அதிகரிக்கலாம். பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் மீண்டும் பழைய காட்சிகள் மனக்கண்முன் தோன்றுதல் அல்லது கொடுங்கனவுகள் தோன்றுதல் ஆகியவற்றினைத் தமது வாழ்வில் பல்வேறு சாத்தியமான தூண்டிகளின் காரணமாகத் தொடர்ச்சியான தொந்தரவாக அனுபவிக்கலாம். அவர்கள் தொடர்ச்சியான ஒரு அவதான நிலையிலிருந்து கீழே இறங்கிவர முடியாத இயலாமையினைக் கொண்டுள்ள காரணத்தினால் நீடித்த மன அழுத்தத்தினாலும் வருந்தலாம். உண்மையிலேயே அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி அவர்கள் பேசுவதென்பது அவர்களுக்கு பாதுகாப் பற்றதாக இருக்கலாம். இதனால் அவர்களைத் தீவிரமான மனநல ஆரோக்கியக் குறைபாடுகளிலிருந்து நீண்டகாலத்தில் பாதுகாப்பதற்கு இன்றியமையாததான உதவியினையும் ஆதரவினையும் அவர்கள் அணுகுவது மறுக்கப்படுகின்றது. மேலும் பரந்த அளவில் நடைபெறுகின்ற வன்முறைச் சூழலில் சமுதாயங்களும் சுயமீளளிலே ஈடுபட்டு தனிநபர் களுக்கு உதவி வழங்க முடியாமல் இருக்கலாம். உடல் ஆரோக்கியம், ஒத்திசையும் தன்மை, குடும்ப உறவுகள், கட்டமைப்புகள் மற்றும் ஒட்டுமொத்த சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை இலக்கு வைக்கும் பாலியல் வன்முறை உள்ளிட்ட பாரிய வன்முறையின் விளைவாக சமுதாயம் அனுபவிக்கும் கூட்டு மனஅதிர்ச்சி வடு குறிப்பிடுவது என்னவெனில், இச்சூழமைவில் பாலியல் வன்முறையின் விளைவானது தனிப்பட்ட பாதிக்கப்பட்டவரில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டிலிருந்து அளக்கப்படக்கூடியதை விட மிகவும் விரிவானதும் ஊடுருவல்மிக்கதும் சீரழிவேற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரும் ஏதாவதொரு வகையில் மோசமான நிலைகளால் பாதிக்கப்பட்டு கூட்டு இழப்பினால் வருந்தும்போது தனிப்பட்ட பாதிக்கப்பட்டவரின் தனித்துவ மான அனுபவங்கள் இழக்கப்படலாம். குற்றத்தில் ஈடுபட்டவர்களை வகைப்பொறுப்பு கூறச்செய்யாமல் இருக்கும் போது ஏற்படுகின்ற அநீதி இழைக்கப்படும் உணர்வானது குறிப்பாக வலுவிழக்கச்செய்கின்றது. யுத்தப்பாலியல் வல்லுறவின் தனிப்பட்ட மற்றும் கூட்டு[12]

விளைவுகள் யுத்தத்தின் பரந்த பின்விளைவுகளுடன் பொதுவாக இரண்டறக் கலந்து அதிலே வறுமை, வன்முறை மற்றும் மனஅதிர்ச்சி வடுவின் சுற்றினையும் உள்ளடக்குகின்றது.'[13]

## 2. போதிய பதிற்செயற்பாடின்மை

மோதல்கள் வரையறுக்கப்பட்ட உட்கட்டமைப்பினையும் உதவிச் சேவைகளையும் பண்பாகக் கொண்டுள்ள காரணத் தினால் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் மனநலக் குறைபாடுகளிலிருந்து மீள்வது மேலதிக சவால் மிக்கதாக உள்ளது. போதிய மருத்துவ மற்றும் உளசமூக உதவிகள் இல்லையென்பதன் அர்த்தம் அதிகமான சந்தர்ப்பங்களில் மனஅதிர்ச்சி வடுவானது நோய் அறியப்படாமல் சிகிச்சை அளிக்கப்படாமல் அப்படியே விடப்படுகின்றது என்பதாகும்.

பொதுவாக பொது மக்களுக்கான கல்விசார்ந்த மற்றும் பொருளாதாரம் சார்ந்த வாய்ப்புக்கள் இல்லாமை என்பது மனஅதிர்ச்சி வடுவிலிருந்து மீண்டெழுவதற்கான தனிநபர்களின் ஆற்றலைப் பாதித்து மனஅதிர்ச்சி வடுவிற்கு உள்ளான தனிநபர் அவரின் மீளளுக்கு உதவக்கூடிய சமூக மற்றும் நிதி வளத்தினை அணுகுவதற்கான ஆற்றலையும் மட்டுப்படுத்தலாம்.

போதியதல்லாததும் பதிற்செயற்பாடு ஆற்றாததுமான குற்றவியல் நீதி நிறுவனங்கள் மன அதிர்ச்சி வடுவின் உளவியல் விளைவுகளை மோசமாக்கலாம். குறிப்பாக பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலத்தினை மனஅதிர்ச்சி வடு எவ்வாறு பாதிக்கலாம் என்பதைப் புரிந்து கொள்ளாமலிருப் பதன் மூலம் அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் மனஅதிர்ச்சி வடுவினை ஏற்படுத்தக்கூடிய மோசமான நேர்காணும் உத்திகளை பயன்படுத்துவதன் மூலம் இது நடைபெறுகின்றது.

## 3. செயற்பாட்டின் குரூரத்தன்மை

இவ்வாறான குரூரமான வடிவிலான பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களை அதீதமாகப் பண்டமாக்குதலும் அவர்களின் மனிதத்துவத்தை அகற்றுதலும் மிக மோசமான மனஅதிர்ச்சி வடுவாக்க வடிவங்களுக்கு இட்டுச்செல்லலாம்.[14]

---

11 Mollica R.F., McInnes K., Tor S. (1998) 'The Dose-Effect Relationships of Trauma to Symptoms of Depression and Post-traumatic Stress Disorder Among Cambodian Survivors of Mass Violence', *பிரித்தானிய உளவியல் ஏடு*, 173, 6: 482–489.

12 Stanford பல்கலைக்கழக மருத்துவக்கல்லூரி, 'Mental Health Outcomes of Rape, Mass Rape, and other Forms of Sexual Violence', Brief submitted at sentencing phase of ICC *Prosecutor v. Jean Pierre Bemba Gombo.*

13 See Hagen, சுப்ரா குறிப்பு 6.

14 MacKinnon, C.A. (1994) 'Rape, Genocide, and Women's Human Rights' in *Are Women Human? And Other International Dialogues,* Cambridge, MA: The Belknap Press of Harvard பல்கலைக்கழகத்தின் Belknap அச்சகம், 2006, pp. 180-191.

## D. மனஅதிர்ச்சி வடுவினால் பாதிக்கப்பட்டவர்களுடன் இடையீடு மேற்கொள்ளுதல்

### 1. நேர்காணலின் போது மீண்டும் மனஅதிர்ச்சி வடுவினை உருவாக்குதல்

மீண்டும் மனஅதிர்ச்சி வடுவினை உருவாக்குதல் என்பது உண்மையாக இடம்பெற்ற மனஅதிர்ச்சி வடுவின் நிகழ்வுகளை அல்லது அவற்றின் இயக்கவியலை மீண்டும் அனுபவிப்பதற்கு காரணமான சூழ்நிலை, மனப்பாங்கு, இடையீடு, சுற்றுச்சூழல் ஆகியவற்றினைக் குறிக்கின்றது. மேலும் உண்மையான மனஅதிர்ச்சி வடுவுடன் தொடர்புடைய அதீத உணர்வுகளையும் எதிர்வினைகளையும் இது தூண்டுகின்றது. மனஅதிர்ச்சி வடு எதிர்வினைகள் பாரதூரமான மனஅழுத்தக் குறைபாடுகளாக மாற்றமடையும் போது பாதிக்கப்பட்டவர்கள் மனஅதிர்ச்சி வடுவுக்கு உள்ளாகலாம். மனஅதிர்ச்சி வடு போன்ற ஒரு நிலைக்கு குறிப்பிட்ட தூண்டிகளின் காரணமாக அவர்கள் மீண்டும் உட்தள்ளப்படலாம். – சொற்கள், மணம், ஒலிகள் - இவை அவர்கள் அந்த அனுபவத்திற்கு மீண்டும் முகம்கொடுப்பது போல் அவர்களது உடல் பதிற்செயற்பாடாற்றுவதற்கும் தூண்டப்படுவதற்கும் காரணமாக அமைகின்றன. பாதிக்கப்பட்டவர்களும் ஏனைய சாட்சிகளும் மனஅதிர்ச்சி வடு ஏற்படுத்திய காட்சிகள் மீண்டும் தம் கண்முன்னே தோன்றுவதையும் அல்லது ஊடுறுவித் தாக்குகின்ற சிந்தனைகள் ஏற்படுவதையும் உணரலாம். இதன்போது அவர்கள் செயற்பாட்டினை மீண்டும் அனுபவிப்பதுடன் அவற்றினைப் பற்றிச் சிந்திப்பதை அவர்களினால் நிறுத்த முடியாது. உடலியல் ரீதியாக இவர்களுக்கு இதயப் படபடப்பு, வியர்வை, தலைசுற்றல் அல்லது குமட்டல் ஆகியவை ஏற்படலாம்.

பாதிக்கப்பட்டவர்களுடன் இடையீடு மேற்கொள்ளும் போது அல்லது அவர்களை நேர்காணும் போது அவர்களுக்கு மீளவும் மனஅதிர்ச்சி வடு ஏற்படுவதை நடைமுறைப்படுத்துநர்களினால் எப்போதும் தடுக்க முடியாது. இருப்பினும் மீண்டும் மனஅதிர்ச்சி வடு ஏற்படுவதைக் குறைப்பதற்கு பாதிக்கப்பட்டவரின் அனுபவம் பற்றிய முன் புரிதலின் அடிப்படையில் குறிப்பிட்ட சில செயற்பாடுகள் அல்லது நடத்தைகளுடன் சேர்ந்து சில பொதுவான மனஅதிர்ச்சி வடு பற்றிய உபாயமார்க்கங்களைப் பயன்படுத்துவது பயனளிக்கும் - குற்றமிழைத்தவர்களாகக் கூறப்படுபவர்களுடன் தொடர்புடையதான, குமட்டலை ஏற்படுத்தக்கூடிய மணங்கள் பற்றிக் குறிப்பிடப்படுவது உள்ளடங்கலாக பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து தகவல்கள் ஏதாவது கிடைக்கப்பெற்றிருந்தால் அல்லது சேகரிக்கப்பட்டிருந்தால் அதற்கமைய கடுமையான நறுமணங்களைப் பூசிச்செல்வதை தவிர்த்தல்

#### மீள் மனஅதிர்ச்சி வடுவுக்கு உள்ளாகுவதை தணித்தல்: மனஅதிர்ச்சி வடு கூருணர்வுமிகு அணுகுமுறைக்கு அமைய பணியாற்றுவதற்கான உபாயமார்க்கங்கள்

**a. நேர்காணலின் முன்பும், நேர்காணலின் போதும் நேர்காணலின் பின்புமான உடல் மற்றும் உணர்வு ரீதியான பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்**

- பௌதீகத் தளமானது பாதுகாப்பானதாகவும், அணுகக் கூடியதாகவும், சௌகரியமானதாகவும் உள்ளதென்பதை உறுதிப்படுத்துதல்
- அமைவிடம் இரகசியமானதாக இருப்பதை உறுதிப்படு-த்துதல்
- பாதிக்கப்பட்ட தனிநபர் மனஅதிர்ச்சிவடுவுக்கு உள்ளா-குவதற்கான அறிகுறிகளைக் காட்டினால் இதிலே பழைய நினைவுகள் கண் முன்னே தோன்றுதல், அதி-கமாக தீவிர உணர்வு உள்ளட ங்கலாக, அப்போது அவரை சமாதானப்படுத்த வேண்டிய உத்திகள் பற்றி அறிந்திருத்தல்ய
- அணியின் அனைவரும் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் பயிற்றப்பட்டவர்களாகவும் பராமரிப்பு மேற்கொள்ளக்கூடி-யோராகவும் இருப்பதை உறுதிப்படுத்துதல்
- நேர்காணலின் பின்பு நீங்கள் பரிபூரணமான பரிசீலிப்ப-ினை நடத்துவதை உறுதிப்படுத்துதல்
  - இடர் ஏற்படுத்தக்கூடிய ஞாபகங்கள் நேர்காணலின் பின்பும் அவர்களுக்கு இருக்கலாம் என்கின்ற உண்மையினைப் பற்றி தனிநபர்களுடன் கலந்துரையாடுதல்
  - வீட்டிலே அவர்களுக்கு ஆதரவு உள்ளதா அவர்கள் யாரிடமாவது கூறியுள்ளார்களா என்பதை பரிசீலித்தல்.
  - தமது அனுபவத்தினை வெளிக்கூறிய காரணத்தினால் இப்போது அதை எவ்வாறு உணர்கின்றனர் என்பதை கேட்டல்
  - அவசியம் மற்றும் பொருத்தமானதெனில் அவர்களை பொருத்தமான சேவைக்கு ஆற்றுப்படுத்துதல்
  - சுயதீங்கிற்கான அடிப்படை அபாயநேர்வு மதிப்பீட்டினை நடத்துதல்

**b. நம்பிக்கையினை மேம்படுத்துதல்**

- வகிபாத்திரங்கள், செயல்விதிகள் மற்றும் குறிக்கே-ாள்கள் தெளிவாக விளங்கப்பட்டு புரிந்துகொள்ளப்பட்டதெ-தன்பதை உறுதிப்படுத்துதல்
- எதிர்பார்ப்புக்கள் புரிந்துகொள்ளப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதிப்படுத்துதல்
- பாதிக்கப்பட்டோர்/ சாட்சிகள் மற்றும் குழு உறுப்பினர் களுக்கிடையிலான உறவு இதமானதாகவும் தொழில் வாண்மை ரீதியானதுமாக இருப்பதை உறுதிப்படுத்துதல் நேர்காணப்படுகின்றவர்களும் அணியின் சகல
- உறுப்பினர்களும் இரகசியத்தன்மையின் பரமான-ங்களையும் அதன் வரையறைகளையும் புரிந்திருப்பதை உறுதிப்படுத்துதல

**c. தெரிவு**

- பாதிக்கப்பட்டவரை மையப்படுத்துவதான அணுகுமுறை இருப்பதை உறுதிப்படுத்துதல்
- பாதிக்கப்பட்டவர்களுக்கு பூரணமான அறிவார்ந்த இணக்கத்தை வழங்குவதை உறுதிப்படுத்துதல்
- நேர்காணப்படுபவர்கள் நேர்காணலின் போது பூரண கட்டுப் பாட்டினை கொண்டிருப்பதை உறுதிப்படுத்துதல்

**d. ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பு**

- பாதிக்கப்பட்டவர்கள் கலந்துரையாடப்பட்டு அவர்கள் விசாரணையின் அங்கமாக இருப்பதை உணர்வதை உறுதிப்படுத்துதல்
- பாதிக்கப்பட்டவர்கள் நடைமுறைப்படுத்துநர்களுடன் தொடர்பாடுவதற்கான முறைமையினைக் கொண்டுள்ள-னர் மேலும் தேவையெனின் முறைப்பாடு செய்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துதல்
- பாதிக்கப்பட்டவர்கள் கிரமமான தகவல்கள் மற்றும் இற்றைப்படுத்தல்களை பெறுகின்றனர் என்பதை உறுதி-ப்படுத்துதலும் அதை எந்த நேரமும் நிறுத்தக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்துதலும்

**e. வலுவூட்டல்**

- பாதிக்கப்பட்டவர்கள் அவர்களுடைய உரிமைகளையும் உரித்துக்களையும் அறிந்துள்ளனர் என்பதை உறுதி-ப்படுத்துதுல்
- பாதிக்கப்பட்டவர்கள் ஆவணப்படுத்தலையும் பரிகாரத்-திற்கான சகல வழிகளையும் பூரணமாக புரிந்து கொ-ாண்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்துதல்

## 2. சாட்சிகளின் ஞாபகத்திலும் வாக்குமூலத்திலும் மனஅதிர்ச்சி வடுவின் தாக்கங்கள்

மனஅதிர்ச்சி வடுவுக்குள்ளான தனிநபர்கள் அவர்கள் அனுபவித்த மனஅதிர்ச்சி வடுவினைத் துல்லியமாகவும் பூரணமாகவும் ஞாபகப்படுத்துவதில் குறிப்பிட்ட சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதை அண்மைய ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறான ஞாபகக் குறைபாடு குறிப்பாக PTSD உள்ளவர்களிடம் காணப்படுவதுடன் மனஇடரினை ஏற்படுத்தக்கூடிய ஊடுருவித் தாக்குகின்ற ஞாபகங்கள், ஞாபக இடைவெளிகள் (ஞாபகத்தில் இடைவெளிகளைக் கொண்டிருத்தல் அல்லது ஞாபகத்தின் பகுதிகள் தடுக்கப்படுதல், இது குறிப்பிட்ட காலப்பகுதிகளுக்கு நிலவுதல்) ஏற்படுதல் போன்றவை காணப்படுகின்றன(மனஅதிர்ச்சி வடுவானது அவர்களின் மனதிற்குள் தொடர்ந்தும் ஊடுருவிச் சென்று நோய் அறிகுறியினை மீண்டும் அனுபவிக்கச் செய்கின்றது).

அதிகமான PTSD நோய்க்குறிகள் காணப்படுகையில் ஞாபகத்தினை மீட்டுவதிலும் அதிகமான அளவிற்கு ஒத்திசையாத்தன்மைகள் காணப்படுவதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

மொத்தத்தில் மனஅதிர்ச்சி வடுவுக்குள்ளானர்களின் ஞாபகங்கள் விபரங்களைக் கொண்டிராதவையாகவும் ஒத்திசைவைக் கொண்டிராதவையாகவும் காணப்படலாம்.[15] இவை பொதுவாக வாக்குமூலத்தின் நம்பகத்தன்மையை தீர்மானிப்பதில் காரணிகளாகத் தீர்ப்புகளில் குறிப்பிடப்படுகின்றன.

### a. தவிர்த்தல்

மனஅதிர்ச்சி வடுவுக்குள்ளான பாதிக்கப்பட்டவர்கள்/ சாட்சிகள் நிகழ்வின் சில குறிப்பிட்ட அம்சங்களைக் கலந்துரையாடுவதைத் தவிர்க்கலாம் அல்லது ஈடுகொடுக்கும் ஒரு வழியாக ஒட்டுமொத்த நிகழ்வினைப் பற்றிக் கலந்துரையாடுவதையும் தவிர்க்கலாம். மேலே கலந்துரையாடப்பட்டவாறாக நேர்காணல் உபாயமார்க்கங்கள் பூரண வாக்குமூலத்தினை வழங்குவதற்கு ஈடுகொடுக்க முடியும் என ஆரம்பத்தில் நினைத்த மனஅதிர்ச்சி வடுவுக்குள்ளான பாதிக்கப்பட்டவர்கள்/ சாட்சிகளுக்கு நேர்காணல் சூழமைவுகள் தீவிரமான மனஅழுத்த பதிற்செயற்பாடுகளின் மற்றும் ஊடுருவித் தாக்குகின்ற ஞாபகங்களின் வீச்சினைத் தூண்டலாம். எவ்வாறாயினும் நேர்காணல் ஆரம்பித்ததும் அவர்களினால் சில குறிப்பிட்ட விபரங்களை வழங்குவதற்கு இயலாமல் இருக்கலாம். மேலும் என்ன நடந்தது என்பதைப் பற்றி சிந்திப்பதற்கு அல்லது கலந்துரையாடுவதற்கு அவர்கள் ஆர்வமற்று இருக்கலாம். மேலும் அது நடந்ததென்பதையே அவர்கள் மறுக்கலாம். அல்லது பகுதியான விபரங்களை அவர்கள் வழங்கலாம் (தாம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் ஆனால் தமது குழந்தை பாதிக்கப்படவில்லை எனவும் அவர்கள் கூறலாம். ஆனால் அதேவேளை அவர்களின் குழந்தை அவர்களின் முன்னால் மீண்டும் மீண்டும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டிருக்கும்)

### b. ஞாபகப்படுத்த இயலாமை

மனஅதிர்ச்சி வடுவானது வெவ்வேறு காரணங்களுக்காக ஞாபகத்தினையும் ஞாபகப்படுத்துவதையும் பாதிக்கின்றது:

i. அதீத மனஅழுத்தமுடைய சூழ்நிலைகளின் போது சுற்றுச் சூழலை அவதானித்துப் புலனுணர்கின்ற ஆற்றல் குறைவடையலாம். மனஅழுத்தத்தின் மூலத்திற்கு கவனம் செலுத்துகின்ற கவனக்குவிப்பு மட்டுப்படுத்தப்பட எத்தனிக்கலாம். இதன் விளைவாக நிகழ்வில் சுற்றுப்புற அம்சங்களை விட பிரதான அம்சங்கள் ஞாபகத்தில் பதிவதற்கான சாத்தியம் உள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் மனஅதிர்ச்சி வடு ஏற்படுத்திய சம்பவத்தின் பிரதான, மத்திய அம்சங்களை மனதில் மீண்டும் ஒத்திகை பார்த்து ஞாபகப்படுத்துவதற்கான அதிக வாய்ப்புக்களை கொண்டுள்ளனர் (குற்றத்தை இழைத்தவர் தொடர்பான அம்சங்கள்). மேலும் தம்மீது கவனம் செலுத்தி சுற்றயல் அம்சங்களை விடத் தாம் எவ்வாறு உணர்ந்தனர் என்பதில் கவனம் குவிக்கலாம்(உதாரணமாக பக்கத்தில் இருப்ப வர்கள் மற்றும் சுற்றியுள்ள பௌதீக சூழல்). PTSD யினால் பாதிக்கப்பட்டுள்ள தனிநபர்கள் உள்ளடங்கலாக மக்கள் பொதுவாக இலகுவாக மையமான விடயங்களை ஞாபகப்படுத்தி மனஅதிர்ச்சி வடுவுடன் தொடர்புடைய விடயங்களை அதீத துல்லியத்துடன் வெளிக்கொணரக் கூடியதாக இருக்கலாம். எவ்வாறாயினும் மனஅதிர்ச்சி வடு ஏற்பட்ட போது அது இடம்பெற்ற அமைவிடம், அறையின் வகை மற்றும் அங்கே சமூகமளித்திருந்த ஏனையோரின் தோற்றங்கள் பற்றிய விபரங்களை விபரிக்கையில் அவை துல்லியம் குறைவானதாகவும் அவற்றினை ஞாபகப் படுத்துவது கடினமானதாகவும் இருக்கலாம்.

ii. தமது அடையாளத்தையும் சுயத்தினையும் மீள நிலைநாட்டு வதற்கான மனஅதிர்ச்சி வடுவின் ஒரு பாதுகாப்புமிகு பதிற்செயற்பாடாக மனஅதிர்ச்சி வடு அனுபவமானது ஞாபகத்தினை மாற்றலாம்.[16]

iii. மனஅதிர்ச்சி வடு மிகு ஞாபகங்கள் சாதாரண ஞாபகங்களை விட வித்தியாசமான பண்புகளைக் கொண்டுள்ளன. சாதாரண ஞாபகங்களின் மீள் உருவாக்கமானது தன்னார்வமிக்கதும் கூட்டாக அனுபவிக்கப்படுவதும் ஆகும். இதிலே ஆரம்பமும் நடுப்பகுதியும் முடிவும் இருக்கும். ஆனால் மனஅதிர்ச்சி வடு மிகு ஞாபகங்கள் தன்னார்வமற்ற வையாகும். இவற்றினை ஒரு தலையீடாக அல்லது குறிப்பிட்ட ஊக்கி ஒன்றின் மூலமாக மனதில் மீண்டும் மீண்டும் தோன்றும் ஒரு நினைவாக அனுபவிக்க முடியும். இது பொதுவாக இணைக்கப்படாததாகவும் ஒரு கூற்றுக்கான கட்டமைப்பினை ஞாபகப்படுத்துகையில் கொண்டிராத தாகவும் இருக்கும்.[17]

iv. மனஅதிர்ச்சி வடுவுக்கு உள்ளான பாதிக்கப்பட்டவர்கள் / சாட்சிகள் வழங்கிய வாக்குமூலத்தில் காணப்பட்ட ஒத்திசையாததன்மைகள் தற்காலிக ஞாபக இழப்பும் அதனைத் தொடர்ந்ததான அதிகரித்த ஞாபகமும் ஆகும். இது தானே வேண்டுமென்று விட்டுச்செல்வதைக் குறிக்காது.[18]

மனஅதிர்ச்சி வடு மிகு ஞாபகங்களின் பண்புகள் பல்வேறு உளவியல் குறைபாடுகளினால் வருந்துவோரினால் அனுபவிக்கப்பட முடியும் (உதாரணம் PTSDஇ விரக்தி)

---

15 Sparr, L.F., and Bremner, J.D. (2005) 'Post-traumatic Stress Disorder and Memory: Prescient Medicolegal Testimony at the International War Crimes Tribunal?', *மனநோய் மற்றும் சட்ட அமெரிக்க அகடமியின் சஞ்சிகை* 33, 1: 71-78.

16 Herlihy, J., and Turner, S. (2013) 'What Do We Know So Far About Emotion and Refugee Law?', *வடஅயர்லாந்து சட்ட காலாண்டு வெளியீடு*, 64, 1: 47–62, pp. 52.

17 Berthold, M., and Gray, G. (2011) 'Post-Traumatic Stress Reactions and Secondary Trauma Effects at Tribunals: The ECCC உதாரணம்', in B. Van Schaack, D. Reicherter and Y. Chhang (eds) *Cambodia's Hidden Scars: Trauma Psychology in the Wake of the Khmer Rouge*. Phnom Penh: கம்போடிய ஆவணமாக்கல் நிலையம்.

18 சுப்ரா 16.

**பெட்டி 5**

## தனிப்பட்ட மற்றும் கூட்டுக் கலாசாரங்கள்

மனஅதிர்ச்சி வடுவுக்கு உள்ளாக்கப்பட்ட தனிநபர்கள் சுற்றயல் நிகழ்வுகளை விட மத்திய நிகழ்வுகளிலேயே கவனம் குவிக்கின்றனரென ஆய்வுகள் காட்டுகின்ற போதிலும் வெவ்வேறு கலாசாரங்கள் எவ்வாறு ஞாபகங்களை செயல்முறைப்படுத்தி விபரிக்கின்றன என்பதும் பல்வேறு ஆய்வுகளின் விடயப்பொருளாக இருந்து வருகின்றது.

*'மொழியும் கலாசாரமும் சுயவிளக்க ஞாபகத்தில் செல்வாக்குச் செலுத்துபவையாக அறியப்பட்டுள்ளன. தனிப்பட்ட கலாசாரத்தினைச் சேர்ந்த உறுப்பினர்கள் சுயாதீனமான, நீண்ட, தனித்துவமான, உணர்வுரீதியாக விளக்கமான மற்றும் சுயத்தின் மீது கவனம் குவிக்கப்பட்ட ஞாபகங்களை மீட்டுகின்றனர். இது தனிநபர்களின் வகிபாத்திரங்களை, அனுபவங்களை, உணர்வுகளை வலியுறுத்துகின்றது. மாறாக கூட்டுக் கலாசாரத்தினைக் கொண்ட உறுப்பினர்கள் சமூக இடையீடுகள் மற்றும் ஏனைய முக்கியமானோரின் ஞாபகங்களை வழங்குவதற்கு எத்தனிக்கின்றனர். இவை ஏனைய மக்களின் வகிபாத்திரங்களிலும் கூட்டுச்செயற்பாடுகளிலும் பொதுவான வழக்கமான செயற்பாடுகளிலும் உணர்வு ரீதியாக நடுநிலையான நிகழ்வுகளிலும் கவனம் குவிக்கின்றன.*

*மார்ஸ்ச்னர், எல்"சர்வதேச குற்றவியல் வழக்குகளில் மனவதிர்ச்சிக் கோளாறு விளைவு பற்றிய சான்றாவணம் Implications of Trauma on Testi- monial Evidence in International Criminal Trials" எஸ்ட்டனில், பீ மற்றும் நக்கீ, எஸ், (ஈடிஎஸ்) மனித உரிமைகள் உண்மை – ஆய்வின் பரிமாற்றம் in Alston, P and Knuckey,S,(eds) The Transformation of Human Rights Fact-Finding*

## 3. ஞாபகக் குறைபாடுடைய சாட்சிகளுடன் சேர்ந்து செயற்படுதல்

பிரிவு 2 இலே வழங்கப்பட்டுள்ள காரணங்கள் ஏன் சில குறிப்பிட்ட பாதிக்கப்பட்டவர்கள் ஒத்திசையாத கூற்றுக்களை வழங்குகின்றனர் என்பதையும் தாக்குதல் பற்றிய விரிவான அறிவு இல்லாதிருக்கின்றனர் என்பதையும் விபரிக்கின்றது. பாதிக்கப்பட்டவர்கள் / சாட்சிகளின் மதிப்புறு நிலையினை மதிப்பிடும் போது **வாக்குமூலத்தில் காணப்படுகின்ற ஒத்திசையாததன்மைகள் மனஅதிர்ச்சி வடுவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இயற்கையானது என்பதையும் சாட்சி என்ற ரீதியில் அது அவர்களின் மதிப்புறு நிலையினைக் குறைக்கவில்லையென்பதையும்** நடைமுறைப்படுத்துநர்கள் தெரிந்திருக்க வேண்டும்.

**பெட்டி 6**

## நம்பகதன்மை எதிர் மதிப்புறுநிலை

நடைமுறைப்படுத்துனர்கள் சாட்சிகளின் வாக்குமூலங்களை மதிப்பிடும் போதும் சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்யும் போதும் நம்பகத்தன்மைக்கும் (வாக்குமூலத்தின் துல்லியத் தன்மை) மதிப்புறு நிலைக்குமிடையிலான (வாக்குமூலம் வழங்கியவரின் நம்பகத்தன்மை) வித்தியாசத்தினைப் பிரித்தறியக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

நம்பகத்தன்மை சாட்சியின் வாக்குமூலத்தின் துல்லியத் தன்மையைக் குறிக்கின்ற அதேவேளை மதிப்புறு நிலையானது சாட்சி உண்மையினைப் பேசுகின்றாரா அல்லது அவர் நேர்மையானவராக இருக்கின்றாரா என்பது பற்றியதாகும்.

சாட்சி ஒருவர் மதிப்புறுநிலை உடையவராகத் தென்படலாம். ஆனால் அவர் முற்றுமுழுதும் நம்பகத்தன்மை அற்றவராக இருக்கலாம். அல்லது இது மாறியும் நடக்கலாம். சாட்சி ஒருவர் நம்பத்தகுந்த ஞாபகத்தைக் கொண்டிருக்கலாம் ஆனால் அவர் மதிப்புறு நிலையைக் கொண்டிராமல் இருக்கலாம்.[19]

மனஅதிர்ச்சி வடுவுக்கு உள்ளான தனிநபர்கள் மதிப்புறு நிலை உடையவர்களாகவும் நம்பத்தகுந்த சாட்சிகளாகவும் இருக்க முடியும். அவர்களின் ஞாபகத்தினை மனஅதிர்ச்சி வடு எந்த அளவிற்குப் பாதித்துள்ளது மேலும் எவ்வாறு பாதித்துள்ளது என்பதைத் தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு சம்பவத்தின் அடிப்படையிலும் அவற்றினை அணுகுவது அவசியமானதாகும். பாதிக்கப்பட்டவர்களை நேர்காணுகின்ற நடைமுறைப்படுத்துனர் களில் பெரும்பான்மையானோர் மனஅதிர்ச்சி வடுவின் தாக்கத்தினை மருத்துவ ரீதியாக மதிப்பிடுவதற்கு தேவையான திறன்கள் அற்றவர்களாக இருக்கின்றபோதிலும் மனஅதிர்ச்சி வடுவினால் பாதிக்கப்பட்டுள்ள தனிநபர்கள் தமது வாக்குமூலத்தினைப் பாலியல் வன்முறையின் சான்றாக வழங்க விரும்பும்போது மருத்துவ மதிப்பீடு கோரப்பட்டு அது சான்றாக வழங்கப்படல் வேண்டுமே. (குறுக்கு உசாவல் அத்தியாயம் 10: பாலியல் வன்முறை சான்றுகளின் வகைகள், பெட்டி 10: மருத்துவ சட்டச் சான்றுகளைப் புரிந்து கொள்ளுதல்

19 மேமன, A. (2012) 'Credibility of Asylum Claims: Consistency and Accuracy of Autobiographical Memory Reports Following Trauma', *பிரயோக அறிவுசார் உளவியல்*, 26, 5: 677–679.

பெட்டி 7

## வழக்குச் சட்ட உதாரணம் – Anto Furundžija வழக்கு

மத்திய பொஸ்னியாவின் லஸ்வா ஆற்றுப் பள்ளத்தாக்கிலுள்ள HVO (குரோசிய பாதுகாப்பு சபை) விசேட பொலிஸ் பிரிவின் (the 'Jokers') உள்;ர் தளபதியாக Anto Furundžija கடமையாற்றினார். குரோசிய - பொஸ்னியா யுத்தம் நடந்தபொழுது 1993 மே மாதத்திலே Jokers' சாட்சி A என அறியப்படும் பெண் ஒருவரை Vitez என்கின்ற இடத்திற்கு அருகிலுள்ள மாளிகையொன்றிலே தடுத்து வைத்து அவர் அங்கே Furundžija வினால் விசாரணை செய்யப்பட்டார். விசாரணையின் போது சாட்சி A பாலியல் தாக்குதல்களுக்கும் பாலியல் வல்லுறவிற்கும் ஏனைய உடல்ரீதியான, மன ரீதியான துயரப்படுத்தல்களுக்கும் ஆளாகினார்.

வழக்கு விசாரணையின் போது சாட்சி Aயின் ஞாபகசக்தியானது அவர் அனுபவித்த மனஅதிர்ச்சி வடுவின் காரணமாகத் துல்லியமற்றதாக இருக்கின்றதென Furundžijaவின் சட்டத்தரணிகள் வாதிட்டனர். இங்கே கேள்விக்குட்படுத்தப்பட்டது சாட்சி Aயின் மனஅதிர்ச்சி வடு அனுபவத்தின் ஞாபகமேயன்றி அந்த அனுபவம் தாமே அல்ல. மேலும், குற்றத்தை நிகழ்த்தியவர் தனது துப்பிரயோகத்தின் போது எங்கே இருந்தார் என்பது பற்றிய குறிப்பிட்ட ஞாபகமூட்டல்களும் கருத்திற்கொள்ளப்படவில்லை. பிரதிவாதியின் சட்டத்தரணி சாட்சி Aஇன் வாக்குமூலத்தில் உள்ள ஒத்திசையாததன்மைகளைச் சுட்டிக்காட்டி வழக்கு விசாரணையின் போது மனஅதிர்ச்சி வடு ஏற்படுத்திய ஞாபக மீட்டலானது - மனஅதிர்ச்சி வடு நிகழ்வுகளை ஞாபகமூட்டக்கூடிய ஆற்றல் - PTSD இனால் பாதிக்கப்பட்டவர்களில் தாறுமாறாக இருப்பதாக ஒரு சான்றினைச் சமர்ப்பித்தார்.

பதிலாக வழக்குத்தொடுநர் ஒத்திசையாததன்மையானது துல்லியமற்ற தன்மையினைக் குறிக்காது என்றும் ஒத்திசையாததன்மைகள் தற்காலிக ஞாபக இழப்பொன்று ஞாபகத்தில் அதிகரிப்பு ஏற்படுகின்றதன் பின்னர் ஏற்படலாம் என்றும் வாதிட்டனர். மேலும் PTSD நோயறிதலானது சாட்சியினால் முறைப்பாடு செய்யப்படுகின்ற உண்மையான விடயங்களில் அவசியம் செல்வாக்குச் செலுத்தாது என்றும் PTSD இனை உடைய தனிநபர்களின் மனஅதிர்ச்சி வடு அனுபவங்கள் உண்மையிலேயே அதீதமான அளவுக்கு அணுகக்கூடியவை என்றும் வாதிட்டனர். இரண்டு தரப்பினரும் தமது வாதங்களுக்கு ஆதரவாக நிபுணத்துவ வாக்குமூலத்தினை சமர்ப்பித்தனர்.

பிரதிவாதியின் சட்டத்தரணி செல்லுபடியாகும் விதத்தில் சுட்டிக்காட்டியவாறு, பாதிக்கப்பட்டவரின் நுட்பமான தகவல்கள் தொடர்பான தகவல்களைத் தாண்டி சாட்சி A நம்பத்தகுந்த சாட்சியென நீதிமன்றம் கண்டறிந்தது. இவ்வாறான மனஅதிர்ச்சி வடு அனுபவத்தினைக் கொண்ட பாதிக்கப்பட்டவர்கள் நிகழ்வுகளின் மிக துல்லியமான சிறுசிறு விடயங்களையெல்லாம் ஞாபகப்படுத்துவார்கள் என நியாயமாக எதிர்பார்க்க முடியாது என்கின்ற அபிப்பிராயத்தினை நீதிமன்றம் கொண்டிருந்ததுடன் சரியான திகதிகள் மற்றும் நேரங்களையும் அவர்களால் ஞாபகப்படுத்த முடியும் என நியாயமாக எதிர்பார்க்க முடியாதென்ற கருத்தினையும் கொண்டிருந்தது. சிக்கல் வாய்ந்ததும் மனஅதிர்ச்சி வடு ஏற்படுத்துகின்றதுமான நிகழ்வுகளின் தொடரின் ஒவ்வொரு தனித்த கூறினையும் அவர்களினால் ஞாபகப்படுத்தக்கூடியதாக இருக்கவேண்டுமென்று நியாயமாக எதிர்பார்க்கப்பட முடியாது. உண்மையிலேயே குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஒத்திசையாததன்மைகள் உண்மையினையும் சாட்சிகளில் இடையீடு இல்லாமையினையும் சுட்டிக்காட்டுகின்றது. வழக்குதொடுநர் - V. Anto Furundžija

Furundžijaவினைச் சித்திரவதை, பாலியல் வல்லுறவு உள்ளடங்கலாக தனிப்பட்ட கௌரவத்தில் பாரிய குற்றம் விளைவித்தமைக்காக நீதிமன்றம் குற்றவாளியாகக் கண்டது (சட்டங்கள் அல்லது யுத்த சம்பிரதாயங்களினை மீறுகின்றமை). அவருக்கு 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. நீதிமன்றத்தின் தீர்மானமானது PTSD இனால் பாதிக்கப்பட்டவர்களின் அடிப்படை ஞாபகசக்தியானது நிகழ்வு நடந்துள்ளது என்பதை நிரூபிப்பதற்குப் போதுமானது என்பதையும் ஏனைய ஒத்திசையாததன்மைகள் சாட்சி Aயின் மதிப்புறுநிலையினைப் பாதிக்கவில்லையென்பதையும் உள்ளடக்கியிருந்தது.

# அத்தியாயம் 16 உள்ளடக்கங்கள்


**அத்தியாயம் 16: சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை .................................... 245**

**A. அறிமுகம் .................................................................... 245**

**B. சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை ................................................ 245**

1. பாலியல் வன்முறையின் வடிவங்கள் ................................................ 245
2. அளவும் நோக்கெல்லையும் ................................................ 246

*பெட்டி 1*
சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறையின் அளவினை அடையாளம் காணுதல் ................................ 246

3. அனுபவங்களும் தாக்கங்களும் ................................................ 247

*பெட்டி 2*
பாலியல் வன்முறையும் சிறுவர் ஆட்சேர்ப்பும் ................................................ 248

**C. சட்டம் மற்றும் செயல்விதிகள் சார்ந்த சட்டகம் ................................................ 249**

1. சிறுவர்களுக்கென தனித்துவமான சட்டச் சட்டகம் ................................................ 249
2. சிறுவர்கள் தொடர்பான செயல்விதிகளின் விதிகள் ................................................ 249

*பெட்டி 3*
பாதிக்கப்பட்ட சிறுவர்களும் சர்வதேச நீதிமன்ற நடுவர் தீர்ப்பு மன்றங்களும் ................................ 250

**D. நெறிமுறைசார் பரிசீலனைகள் ................................................ 251**

*பெட்டி 4*
நீதியை அணுகுவதற்கான பிள்ளை நேய அணுகுமுறை ................................................ 251

1. தீங்கிழைக்காதிருத்தல் ................................................ 252

*பெட்டி 5*
சிறுவர்களால் விபரமறிந்து வழங்கப்படும் சம்மதமும் இசைவும் ................................ 254

2. பங்குபற்றலுக்கான உரிமை ................................................ 256

**E. ஆவணப்படுத்தல் செயன்முறையில் சிறுவர்களை ஈடுபடுத்தல் பற்றிய மைய வழிகாட்டி ................................ 257**

1. பூர்வாங்க ஆராய்ச்சி மற்றும் விசாரணைத் திட்டமிடல் ................................................ 257

*பெட்டி 6*
வயதின் பிரகாரம் பாலியல் வன்முறையின் பொதுவான சமிக்ஞைகளும் அறிகுறிகளும் ................................ 258

*பெட்டி 7*
தப்பியுள்ள சிறுவர்கள் மற்றும் சாட்சிகளை ஈடுபடுத்தல் ................................................ 260

2. நேர்காணல் மேற்கொள்ளல் ................................................ 260

*பெட்டி 8*
பிள்ளை நேய சூழ்நிலையொன்றை உருவாக்குதல் ................................................ 261

*பெட்டி 9*
நேர்காணலுக்கான அறிவுறுத்தல்கள் பற்றிய பிள்ளையொருவரின் புரிதலைத் தீர்மானித்தல் ................................ 262

*பெட்டி 10*
கலப்பு பற்றிய அபாயம் ................................................ 262

# அத்தியாயம் 16: சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை

## A. அறிமுகம்[1]

வளர்ந்தோரைப் போலவே சிறுவர்கள் CARSV இனால் பாதிக்கப்படலாம். பாலியல் வன்முறையினால் சிறுவர்கள் பாதிப்புறக்கூடிய நிலையினை கிடைக்கக்கூடிய புள்ளிவிபரங்கள் அதிகரித்த அளவில் பிரதிபலிக்கின்றன. எவ்வாறாயினும் புள்ளிவிபரங்கள் தொடர்ந்தும் குறைத்து மதிப்பீடுகளை மேற்கொள்கின்றன(அத்தியாயம் 2: பாலியல் வன்முறையினைப் புரிந்துகொள்ளுதல் / பாலியல் வன்முறையின் வடிவங்கள்). சிறுவர்கள் குறைவாக முறைப்பாடு செய்கின்றமையானது அவர்களின் தனித்துவமான தேவைகளைத் தீர்ப்பதற்குச் சொற்பமான பதிற்செயற்பாடுகளுக்கு இட்டுச்செல்லுகின்றது. இது மேலும் மேலும் குறைவாக முறைப்பாடு செய்வதற்கான ஒரு நச்சுச்சூழலுக்கு இட்டுச்செல்கின்றது. மேலும் தரவுகள் இப்பொழுது அடிப்படையில் வேறாக்கப்படுவதுடன் பாதிக்கப்பட்டவர்கள் 18 வயதிற்கு மேற்பட்டவரா அல்லது கீழ்பட்டவரா என்பதற்கிடையில் வித்தியாசப்படுத்தத் தவறி விடுகின்றன. பொதுமக்களினதும் ஊடகத்தினதும் புலனுணர்வுகள் பொதுவாக வளர்ந்த பெண் மற்றும் வளரிளம் பருவச் சிறுமிகள் ஆகியோரை பாதிக்கப்பட்டோராக வித்தியாசப்படுத்துவதில்லை.[2] சிறுவர்கள் பற்றிய தகவல்கள் இல்லையென்றே கூறலாம்.

இதிலே யதார்த்தம் என்னவென்றால் சிறுமிகளும் சிறுவர்களும் சகல சந்தர்ப்பங்களிலும் சகல விதமான பாலியல் வன்முறையினாலும் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருப்பதுடன் மோதல் வலயங்களில் சிறுவர்கள் அதிகரித்த அபாயநேர்வினைக் கொண்டுள்ளனர். சமுதாயத்தின் பாதுகாப்புக் கட்டமைப்புகள் சிதைவடையும்போது இவர்களின் பாதிப்புறுநிலையாது அதிகரிக்கின்றது. சிறுவர்களும் குடும்பங்களும் இடம்பெயரும்போது சிறுவர்கள் நேரடி இலக்குகளாக மாறுகின்றனர்.

CARSVஇனை ஆவணப்படுத்தும் போது நடைமுறைப் படுத்துனர்கள் எங்கே பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இருக்கலாம் என்பதைத் தனித்துவமாகப் பரிசீலிக்கவேண்டும் - மோதலுடன் தொடர்புடைய சிறுவர்களுக்கு எதிரான குற்றச்செயல்களை ஆவணப்படுத்துவதானது பாலியல் வன்முறையினைச் சம்பந்தப்படுத்துகின்ற சாத்தியமான குற்றச்செயல்களைக் கருத்திற்கொள்ள வேண்டும். பாலியல் வன்முறையினை ஆவணப்படுத்துவதில் சிறுவர்களை ஈடுபடுத்துவதானது சிறுவர்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும் நீதிக்கான அவர்களின் அணுகலை பெற்றுக்கொடுப்பதற்கும் நன்மை பயக்கத்தக்கதாகும்.

எவ்வாறாயினும் ஆவணப்படுத்தலானது பொருத்தமான பராமரிப்பு மற்றும் கருதுகோளுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் எந்தவிதமான மேலதிக தீங்கும் இழைக்கப்படவில்லையென இது உறுதிப்படுத்துகின்றது.

இந்த அத்தியாயமானது சிறுவர்களுக்கெதிரான வன்முறை யினை ஆவணப்படுத்துவதற்கான குறிப்பிட்ட வழிகாட்டல் களைக் கொண்டுள்ளது. நெறிமுறைகளில் ஏனைய அத்தியாயங்களில் வழங்கப்பட்டுள்ள பொதுவான வழிகாட்ட லானது சமமாகப் பிரயோகிக்கப்பட வேண்டும்.

## B. சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை

### 1. பாலியல் வன்முறையின் வடிவங்கள்

பால்நிலை அடிப்படையிலான வன்முறையானது பொதுவாக பால்நிலையின் அடிப்படையில் மாத்திரம் தங்கியிராது வயதின் (வளர்ந்தோர்/ பிள்ளை) அடிப்படையில் தங்கியுள்ளதாகவும் உருவாகுகின்ற அதிகார சமநிலையின்மையினால் ஏற்படுகின்றது. சிறுவர்கள் சமூகப் புலனுணர்வுகளின் காரண மாகவும் சமூகத்தில் அவர்களின் அந்தஸ்தின் காரணமாகவும் நேரடியாக இலக்கு வைக்கப்படலாம்.[3] உதாரணமாக பிள்ளைகளைப் பாதுகாக்க இயலாமல் இருப்பதானது குடும்பத்தின் ஒரு தவறாக அல்லது ஒட்டுமொத்த சமூகத்தின் தவறாகப் பார்க்கப்படலாம். மேலும் பிள்ளையொன்றுக்கு பாலியல் வல்லுறவு ஏற்பட்டதாகக் கறை ஏற்படுத்துவது அந்தப் பிள்ளையின் எதிர்காலத்தைப் பாழாக்குவதற்கு ஒப்பானதாகும். சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வல்லுறவானது தனிநபர்களுக்கு எதிரான, குடும்பங்களுக்கு எதிரான, சமூகங்களுக்கு எதிரான பழிவாங்கலாக அல்லது தண்டனையாகப் பயன்படுத்தப்படலாம்.3 குற்றத்தை நிகழ்த்தியவர்கள் சிறுவர்களையும் சாட்சிகளையும் அவமானப்படுத்துவதையும் அவமரியாதைக்குள்ளாக்குவதையும் உச்சப்படுத்துவதன் மூலமாக சமுதாயத்தின் அடிப்படை விழுமியங்களையும் சமூகக் கட்டுமானத்தினையும் தாக்க நாடலாம். வளர்ந்தோரைப் பொறுத்தளவில் வலிந்து மேற்கொள்ளப்படும் தன்பால் புணர்ச்சி மற்றும் ஏனைய வடிவிலான பாலியல் வல்லுறவு, பாலியல் சுரண்டல்,

1 சிறுவர் உரிமை பற்றிய சமவாயமானது 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட ஒவ்வொரு மனிதரும் சிறுவரே என வரையறை செய்வதுடன் சிறுவர் ஒருவருக்குப் பிரயோகிக்கத்தக்க சட்டத்தின் கீழ் அச்சிறுவர் இவ்வயதிற்கு முன்னமே பராயமடைந்தவராகக் கருதப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த சந்தர்ப்பங்களை இவ்வரைவிலக்கணம் குறிப்பிடுகின்றது. பாதிக்கப்பட்ட / சாட்சியான தனிநபர் ஒருவரின் மிகச் சரியான வயதினை உறுதிப்படுத்துவது அறிந்து வழங்கப்படும் இணக்கத்தினை எவ்வாறு பெறுவது என்பதை நிலைநாட்டுவதற்கு அவசியமானதாக இருப்பதுடன் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளிலும் தாக்கத்தினைக் கொண்டுள்ளது. பிறப்புப் பதிவு ஆவணங்களைச் சிறுவர் ஒருவர் கொண்டிராத சந்தர்ப்பத்தில் ஞானஸ்நானப் பதிவுகள், பிறப்புக்கள் பற்றிய சமுதாயப் பதிவுகள், மனிதநேய நிறுவனங்களினால் நிறுவப்பட்ட தற்காலிக அல்லது அவசரநிலை முறைமைகள் மூலமான நடவடிக்கைகள் உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகள் வயதினை அடையாளங்காணப் பயன்படுத்தப்படல் வேண்டும். மேலதிக வழிகாட்டலுக்குப் பார்க்க: UNICEF, Innocenti Research Centre, Innocenti Insight: 'Birth Registration and Armed Conflict', 2007.

2 உதாரணமாக, ஜீன் போல் அகயேசுவிற்கு எதிரான ICTRஆனது வழக்குத் தொடர்பான ஊடக மற்றும் ஆதரித்து வாதாடல் செய்திகள் பாலியல் வன்முறைக்கு எதிரான குற்றச்சாட்டினைச் சாத்தியமாக்க முன்வந்த மூன்று துணிச்சலான பெண்களைச் சிலாகித்துக் கூறுகின்றன. இது உண்மையாக இருக்கின்ற அதேவேளை, மூன்று பெண்களில் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டபோது 15 வயதேயுடையவராகவும் வழக்கு நடைபெறுகையில் 17 வயதுடையவராகவும் இருந்தார்.

3 HEAL Africa (2012) *North Kivu – Sexual Violence Targets Children*, pp 10-11, கிடைக்கும் முகவரி http://www.healafrica.org/wp-content/uploads/2012/09/sexual-violence-targets-children-2012.pdf

பலவந்தப்படுத்தி மேற் கொள்ளப்படும் பாலியல் தொழில், பாலியல் அடிமைத்தனம், பலவந்தத் திருமணம் மற்றும் பலவந்தக் கர்ப்பம் உள்ளடங்கலாக பல்வேறு வடிவிலான பாலியல் வன்முறையின் பல்வேறு வடிவங்களுக்கு சிறுவர்கள் முகம் கொடுக்கின்றனர். பாலியல் ரீதியாகத் தமது பெற்றோரோ அல்லது குடும்ப உறுப்பினரோ தாக்கப்படுவதைக் கண்ணால் காணுமாறு சிறுவர்கள் பலவந்தப்படுத்தப்படுகின்றனர் (பார்க்க அத்தியாயம் 2: பாலியல் வன்முறையினைப் புரிந்து கொள்ளுதல், பாலியல் வன்முறையின் வடிவங்களின் விபரங்களுக்கு அத்தியாயம் 17: ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை, பெட்டி 5 ஆண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான பாலியல் வன்முறையின் பொதுவான வடிவங்களுக்கான உதாரணம்)

## 2. அளவும் நோக்கெல்லையும்

மோதல் சூழமைவில் பாலியல் வன்முறையினால் பாதிக்கப் படுகின்ற சிறுவர்களின் எண்ணிக்கை பற்றிய தரவுகளைக் கண்டறிவது கடினமானதாகும்.

இதே காரணங்களுக்காக வளர்ந்தோரின் தகவல்களும் அரிதாகவே காணப்படுகின்றன. குறைவாக முறைப்பாடு செய்தல் (மோதலுடன் இணைந்துள்ள பாதுகாப்பின்மை காரணமாகவும் முறைப்பாடு செய்யும் பொறிமுறைகள் பற்றிய நிச்சயமின்மை அல்லது அவை செயலிழந்துள்ளமை காரணமாகவும் நீதி முறைமைகளில் நம்பிக்கையின்மை காரணமாகவும் வெட்கம், முத்திரை குத்தப்படலாம் அல்லது பழிவாங்கப்படலாம் என்கின்ற அச்சம் காரணமாகவும் பாதுகாப்பானதும் இரகசியமானதுமான உதவிச்சேவைகள் இல்லாத காரணத்தினாலும் இருக்கின்ற சேவைகளை அணுக முடியாமை காரணமாகவும்) மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட தரவுச் சேகரிப்பு ஆகியவை. அதிக விபரங்களுக்கு அத்தியாயம் 2இனைப் பார்க்கவும்: பாலியல் வன்முறையினைப் புரிந்துகொள்ளுதல். பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் வளரிளம் பருவத்தினர் (சிறுவர்கள் சிறுமிகள் ஆகியோர்) அவர்களின் வயதுக்கு பொருத்தமான முறைபாடு செய்யும் பொறிமுறைகள் மற்றும் சேவைகள் இல்லாத காரணத்தினாலும் பாதிக்கப்படுகின்றனர். தரவுகளை வயதுகளின் அடிப்படையில் வேறாகப் பிரித்து வழங்காமை காரணமாகவும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறையின் பூரண அளவினைப் பற்றிய தெளிவானதொரு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்ள இயலாமல் இருக்கின்றது.

**பெட்டி 1**

### சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறையின் அளவினை அடையாளம் காணுதல்

சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறையானது ஒரு முக்கிய மான பிரச்சினை என்பது தொடர்பாக எவ்வித சந்தேகமுமில்லை. 120 மில்லியன் சிறுமிகளும் 73 மில்லியன் சிறுவர்களும் ஏதோவொரு முறையிலான பாலியல் வன்முறைக்கு முகம் கொடுத்துள்ளனர் என்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மோதல்களின் போது கூட சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் பெரும்பான்மையான பாலியல் வன்முறைகள்[4] அவர்களின் குடும்ப உறுப்பினர்களினாலும் அறிந்தவர்களினாலுமே மேற்கொள்ளப்படுகின்றன. சட்டரீதியான மற்றும் பாதுகாப்பு ரீதியான பொறிமுறைகள் வீழ்ச்சியடைந்திருப்பதானது அவ்வாறான சமுதாயத்தில் இவர்களை மிகவும் பாதிப்புறுநிலைக்கு ஆக்குகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான புள்ளிவிபரங்கள் அரிதானவையாகக் காணப்படுகின்ற போதிலும் சில மோதல்களில் முறைப்பாடு செய்யப்பட்ட சம்பவங்களில் 50% இற்கு அதிகமானவை சிறுவர் தொடர்பானவையாகும்.

» சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை ஆப்கானிஸ்தானில் அதிகரித்த அளவிற்கு காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. இங்கே bacha bazi என்ற நடைமுறையும் உள்ளடங்குகின்றது. (நடமாடும் பையன்கள் ஆண்களினால் பாலியல் ரீதியாக சுரண்டப்படுவது)[5]

» 2008ஆம் ஆண்டில் கொங்கோ ஜனநாயக குடியரசில் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தினால் பதிவு செய்யப்பட்ட 16,000 பாலியல் வன்முறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களில் 65% விழுக்காட்டினர் சிறுவர்கள் ஆவர்[6]. கோமாவிலுள்ள HEAL எனும் ஆபிரிக்க வைத்தியசாலையில் பாலியல் வன்முறைக்காக மருத்துவ உதவியினைப் நாடிவரும் தனிநபர்களுள் 70% விழுக்காட்டினர் 18 வயதிற்கு குறைந்தவர்களாவர்.[7]

» Sierra Leone இல் பாலியல் வல்லுறவினால் பாதிக்கப்பட்ட பெண்களுள் 73 விழுக்காட்டினர் 18 வயதிற்கு குறைந்த சிறுமிகளாக இருப்பதாகவும் இதிலே 23 விழுக்காட்டினர் 11 வயதுக்குக் குறைந்தவர்களாகவும் IRC (சர்வதேச மீட்புக்குழு) குறிப்பிட்டுள்ளது.[8]

» 2009ல் கொலம்பியாவிலே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவி வழங்கிய பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட வர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் சிறுவர்கள் ஆவர்.[9]

» 2010 ஆம் ஆண்டின் போது மத்திய ஆபிரிக்க குடியரசிலே யுனிசெப் மேற்கொண்ட கணிப்பீட்டின்படி 50 விழுக் காட்டுக்கு மேற்பட்ட சிறுவர்கள் பாலியல் சுரண்டலையும் துஷ்பிரயோகத்தையும் முறைப்பாடு செய்துள்ளனர்.[10]

---

4 UNICEF, 'Hidden in Plain Sight: A Statistical Analysis of Violence Against Children' (September 2014), p. 206; சிறுவர்களுக்கெதிரான வன்முறை பற்றிய ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தினது ஆய்வு (2006), p.12.

5 பார்க்க உதாரணம்: 'சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் பற்றிய ஐநா செயலாளர் நாயகத்தின் வருடாந்த அறிக்கை", UN Doc A/70/836–S/2016/360, para 25.

6 வேர்ல்ட் விசன் (2014) *Journey of a Survivor* London: வேர்ல்ட் விசன்.

7 HEAL Africa (2012) *North Kivu – Sexual Violence Targets Children*, pp 10-11, கிடைக்கும் முகவரி http://www.healafrica.org/wp-content/uploads/2012/09/sexual-violence-targets-children-2012.pdf

8 சர்வதேச மீட்புக்குழு மற்றும் UNICEF (2012) *பாலியல் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பராமரித்தல், :Guidelines for Health and Psy- மனித நேய சூழமைவில் சுகாதாரம் மற்றும் உள சமூக சேவை வழங்குநர்களுக்கான வழிகாட்டி நியூயோக்*: IRC, UNICEF. p 25.

9 Save the Children (2014) *சிறுவர்களுக்கு எதிரான பேசமுடியாத குற்றங்கள் :மோதலில் பாலியல் வன்முறை.* லண்டன: Save the Children.

10 UNICEF (2012) *மத்திய ஆபிரிக்க குடியரசில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பற்றிய சூழ்நிலைப் பகுப்பாய்வு.* நியூயோக்: UNICEF.

*...வயது ரீதியாகப் பிரிக்கப்பட்ட தரவுகள் இல்லாமையானது சிறுவர்களுக்கெதிராக இழைக்கப்படுகின்ற பாலியல் வன்முறையின் முழுமையான அளவினைப் பற்றிய தெளிவான மதிப்பீட்டினைப் பெற இயலாமல் ஆக்கியுள்ளது.*

சிறுவர்களின் வயதும் அளவும் அவர்கள் வளர்ந்தோரில் உள்ளார்ந்த ரீதியாகத் தங்கிருப்பதும் குறிப்பாக அவர்கள் பாலியல் வன்முறையால்[11] பாதிக்கப்படுவதற்கு அவர்களை உள்ளாக்குகின்றது. தரவுகள் இல்லாத போதிலும் சில சிறுவர்கள், அகதிகள் மற்றும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் உள்ளடங்கலாக, சிறார் படைவீரர்களும்[12] பாலியல் வல்லுறவின் மூலம் பிறந்த குழந்தைகளும் சிறுவர்களைத் தலைமையாகக் கொண்ட குடும்ப உறுப்பினர்களும் தொழில்புரியும் சிறுவர்களும் இளம் தாய்மார்களும் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கின்றனர்.[13]

## 3. அனுபவங்களும் தாக்கங்களும்

பாலியல் வன்முறையினை அனுபவிக்கின்ற சிறுவர்கள் உடல் ரீதியான, உளவியல் ரீதியான மற்றும் சமூக, பொருளாதாரப் பின்விளைவுகளுக்கு வளர்ந்தோர் போன்றே முகம் கொடுக்கின்ற அதேவேளை அவர்களது வயதும் உடல் அளவும் விருத்திக் கட்டமும் சமூகச்சூழலும் அவர்களுக்கு பின்வருவன உள்ளிட்ட தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.[14]

» **உடல் ரீதியான தீங்கு:** அவர்களின் உடல் அளவின் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மிக அதிகமான தீங்கினை அனுபவிக்கலாம் இதிலே அவர்களுக்கு உடலினுள்ளே ஏற்படுகின்ற காயங்கள், குருதிப்பெருக்கு ஆகியவை ஏற்பட்டு அதன்மூலமாக அவர்களுக்கு அவர்களின் இனப்பெருக்கத் தொகுதியிலும் ஏனைய உள்ளுறுப்புக்களிலும் நீண்டகால சேதங்கள் ஏற்படலாம் அத்துடன் அவர்களுக்குப் பௌத்திரம் (fistula) மற்றும் தொற்றுக்கள் ஆகியனவும் ஏற்படலாம். ஏனெனில் அவர்களின் உடல் பூரணமாக விருத்தியடையவில்லை. மேலும் பிரசவிக்கின்ற வளரிளம் பருவ சிறுமிகள் மற்றும் அவர்களுடைய குழந்தைகள் பாரிய சுகாதார சிக்கல்களுக்கும் இறப்புகளுக்கும் முகம் கொடுக்கின்றனர். இதில் குறிப்பாக பாரிய அபாயநேர்வினை 16 வயதுக்கு குறைவான சிறுமிகள் கொண்டுள்ளனர்.[15]

» **உளவியல் தீங்கு:** சிறுவர்கள் பொதுவாக அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது தொடர்பான குற்ற உணர்வும் குழப்பமும் உடையவர்களாக இருக்கின்றனர். தமது உடல்கள் மற்றும் பாலியல்தன்மை தொடர்பான சிறுவர் களின் புரிதலானது அவர்கள் வளரும்போதே விருத்தி யடைகின்றது. பாலியல் துஷ்பிரயோகமானது ஏனையோரை நம்பிக்கை கொண்டு பாலியல் தன்மை தொடர்பாக ஆரோக்கியமான மனப்பாங்கினை உருவாக்குகின்ற சிறுவர்களின் ஆற்றலின் மீது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது(குறிப்பாக வளர்ந்தோர், மேலும் குற்றத்தை நிகழ்த்தியோர் வளர்ந்தோராக இருக்கையில்). இளம் சிறுவர்கள் தமக்கு என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொண்டு விபரிப்பதை மிகவும் கடினமான ஒன்றாக நோக்குகின்றனர். வளர்ந்த பாதிக்கப்பட்டோரைப் போலவே சிறுவர்களும் மனஅதிர்ச்சி வடுவிற்குப் பின்னரான மனஅழுத்தத்திற்கு உள்ளாகலாம். இதிலே பின்வருவன உள்ளடங்குகின்றன: மீண்டும் மீண்டும் வன்முறை தொடர்பாகத் தோன்றுகின்ற ஞாபகங்கள், நடந்த சம்பவங்கள் மனக்கண் முன் தோன்றுதல், உணர்வுகள் மரத்துப்போதல், அதிகரித்த விழிப்பு நிலையும் கொடுங்கனவுகளும். பாதிக்கப்பட்ட சிறுவர்களில் அல்லது பாலியல் வல்லுறவு மூலம் பிறந்த சிறுவர்களில் சுயதீங்கு, தற்கொலைச் சிந்தனைகள் மற்றும் தற்கொலை ஆகியவை ஏற்படலாம்.

» **சமூக பொருளாதார தீங்கு:** பாலியல் வன்முறையுடன் இணைந்துள்ள உடல் ரீதியான மற்றும் உளவியல் ரீதியான தீங்கின் காரணமாக சிறுவர்கள் தமது சமூகத்திலே உள்ள சமூகச் சூழலிருந்து விலகலாம். (குறிப்பாக பாடசாலை). சிறுவர்களினால் வெட்கமும் குற்ற உணர்வும் முன்னெடுக்கப்படலாம் (அவர்களுடைய சுயமரியாதை குறைவடையலாம்). ஆனால் பெரும்பாலும் இது அவர்களின் சகபாடிகளிடமிருந்தும் சமூகத்திட மிருந்தும் வருகின்றது (பாதிக்கப்பட்ட சிறுவர்கள் குடும்பத்திற்கு அவப்பெயரினை கொண்டுவருவதாக பார்க்கப்படும் காரணத்தினால்). சில சம்பவங்களில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சிறுமிகளும் பெண்களும் அவர்கள் தமது குடும்பங்களினால் கௌரவக்கொலை என்ற பெயரில் கொல்லப்பட்ட செய்திகளும் வருகின்றன. கர்ப்பம் அடைகின்ற சிறுமி பாடசாலையிலிருந்து நின்று விடுமாறு வற்புறுத்தப்படலாம். இவ்வாறு விலகுகின்ற செயற்பாட்டின் சமூகத்தாக்கங்கள் உடனடியானதாகக் காணப்படுகின்றன. பிள்ளையானது அதன் நண்பர்களையும் சாதாரண செயற்பாட்டில் ஈடுபடும் அதன் ஆற்றலினையும் இழக்கின்றது. கல்வி வாய்ப்புக்களை இழக்கின்றமையும் நீண்டகால பொருளாதார விளைவுகளைக் கொண்டுள்ளது. சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறையானது வறுமையின் சுற்றுக்கு பங்களிப்பு வழங்குவதுடன் இது வன்முறை மற்றும் வலுவிழத்தல் சுற்றுக்கும் பங்களிப்பு வழங்குகின்றது. சிறுவர்கள் உடல் ரீதியான மற்றும் உளவியல் ரீதியான சிரமங்களுக்கு ஆளாக்கப்படுவதுடன் இவர்கள் தமது பூரண ஆற்றலினை பூர்த்தி செய்வதில் இருந்தும் தவிர்க்கப்படுகின்றனர்.

---

11 சர்வதேச மீட்புக்குழு மற்றும் UNICEF(2012) *பாலியல் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பராமரித்தல், :Guidelines for Health and Psy- மனித நேய சூழமைவில் சுகாதாரம் மற்றும் உள சமூக சேவை வழங்குநர்களுக்கான வழிகாட்டி நியூயோக்:* IRC, UNICEF. p 25.

12 'சிறார்படை வீரர்கள்' எனும் சொற்பதமானது ஆயுதப்படைகள் மற்றும் ஆயுதக்குழுக்களுடன் தொடர்பு கொண்டிருந்த சகல சிறார்களையும் குறிக்கின்றது. இந்த சிறுவர்களுள் சுமை தூக்குபவர்களாக இருந்தவர்கள், வேவு பார்த்தவர்கள், சமையல்காரர்கள், பாலியல் அடிமைகள் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். பார்க்க: பெட்டி 2 பாலியல் வன்முறை மற்றும் சிறுவர்களின் ஆட்சேர்ப்பு தொடர்பான மேலதிக தகவல்கள்

13 World Vision (2015) *நீதியில் எந்த வெட்கமுமில்லை* London: World Vision. p 19.

14 சர்வதேச மீட்புக்குழு மற்றும் UNICEF (2012) பாலியல் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை பராமரித்தல்: *Guidelines for Health and Psy-மனித நேய சூழமைவில் சுகாதாரம் மற்றும் உள சமூக சேவை வழங்குநர்களுக்கான வழிகாட்டி நியூயோக்:* IRC, UNICEF.

15 உலக சுகாதார ஸ்தாபனம் இ'வளரிளம் பருவ கர்ப்பம்',MPS *குறிப்புகள்*, 1/1 (October 2008).

*சிறுவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவது ஆவணப்படுத்தப்படுகையில் பாலியல் வன்முறை சிறுவர்களுக்கும் வளர்ந்தோருக்கும் எதிராக இடம்பெறுவதற்கான உறுதியான சான்றுகள் உள்ளன...*

**பெட்டி 2**

## பாலியல் வன்முறையும் சிறுவர் ஆட்சேர்ப்பும்

சிறார் படைவீரர்கள் 18 வயதிற்கு குறைந்த வயதுடைய தனிநபர்களை உள்ளடக்குவதுடன் இவர்கள் நேரடியாக மோதல்களில் பங்குபற்றுகின்றனர் (மிகச்சரியாக ஆயுதக்குழுக்கள் மற்றும் ஆயுதபடையில் தொடர்புடைய சிறுவர்கள் என குறிப்பிடப்படுகின்றது). பாரிஸ் கோட்பாடுகளுக்கு அமைவாக ஆயுதப்படை அல்லது ஆயுதக்குழுவுடன் தொடர்புடைய சிறுவர் ஒருவர் எந்தவொரு பதவிக்காகவும் சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் உள்ளடங்கலாக ஆனால் அதற்கு மாத்திரம் வரையறுக்கப்படாது பாலியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற ஆயுதப்படையினால் அல்லது ஆயுதக்குழுக்களினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட 18 வயதிற்கு குறைந்த எந்தவொரு நபரையும் குறிக்கின்றதாக குறிப்பிடுகின்றது. இது மோதல்களில் நேரடியாக பங்குபெறுகின்ற அல்லது பங்குபற்றிய சிறுவர்களை மாத்திரம் குறிக்காது.[16] இன்று ஆயுதப்படைகளில் அல்லது ஆயுதக்குழுக்களில் தொடர்புடைய 200000-300000 வரையான சிறுவர்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களுள் பெரும்பான்மையானோர் அவர்கள் இணைவதற்கு முன்னரோ அல்லது இணைந்ததன் போதோ அல்லது இணைந்ததன் பின்னரோ பாலியல் வன்முறைக்கு முகம்கொடுக்கின்றனர்(சிறுவர்களும் சிறுமிகளும்). இவை பொதுவாக குற்றச்செயல்களில் ஒரு குற்றச்செயலாகவே பாதிக்கப்பட்டோரால் வகைப்படுத்தப்படுகின்றது. ஆயுதக்களைவு, அணி கலைப்பு, மீள்ஒருங்கிணைப்புச் செயன்முறை ஆகியவற்றின் போது பொதுவாக பாலியல் வன்முறை புறக்கணிக்கப்படுகின்றது.

மோதலில் சிறுவர்கள் மீதான பாலியல் வன்முறை மற்றும் ஆயுதமோதல் பற்றிய ஐ.நா பொதுச்செயலாளரின் 2016ஆம் ஆண்டின் அறிக்கையில் மோதலினால் பாதிக்கப்பட்ட நாடுகள் அனைத்திலும் சட்டவிரோதமான சிறுவர்களின் ஆட்சேர்ப்பும் அவர்களைத் தாக்குதல்களில் பயன்படுத்துவதும் நடைபெற்று வருவதாகவும் அங்கே பாலியல் வன்முறை ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.[17] சிறுவர் ஆட்சேர்ப்பு ஆவணப்படுத்தப்படுகின்ற இடங்களில் சிறுவர்களுக்கும் வளர்ந்தவர்களுக்கும் எதிராக பாலியல் வன்முறை நடந்தமைக்கான உறுதியான சான்றுகளும் பதியப்பட்டுள்ளன. எனவே பாலியல் வன்முறையினை ஆட்சேர்ப்புடன் இணைக்க முடியும். மேலும் இது சுயாதீனமாகவும் இழைக்கப்படுகின்றது.

**அவதானிக்கத்தக்க பிரதான விடயங்கள்**

» வன்முறையினை ஆவணப்படுத்துகையில் அல்லது விசாரிக்கையில் சிறுவர் ஆட்சேர்ப்பு மற்றும் தடுத்துவைப்பு ஆகிய வற்றுடன் தொடர்புடைய சம்பவங்கள் பற்றியும் அவதானத்தினை செலுத்தவும்

» ஏற்கனவே சிறுவர் ஆட்சேர்ப்பு பற்றி ஆவணப்படுத்தப்பட்டிருந்தால் பாலியல் வன்முறையும் அங்கே நிகழ்வதற்கான சாத்தியத்தினையும் ஒரு அறிகுறியாக இந்த நேரத்தில் எடுத்துக் கொள்ளவும்.

---

16 ஐ.நா. சிறுவர் நிதியம் (2007) *பாரிஸ் கோட்பாடுகள். ஆயுதப்படைகள் அல்லது ஆயுதக்குழுக்களுடன் இணைந்துள்ள சிறுவர்கள் பற்றிய கோட்பாடுகளும் வழிகாட்டல்களும்* நிவ்யோர்க்: UNICEF. para 2.1.

17 'சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் பற்றிய ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் வருடாந்த அறிக்கை', UN Doc A/70/836–S/2016/360, 20 ஏப்ரல் 2016; மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறை பற்றிய செயலாளர் நாயகத்தின் அறிக்கை, UN Doc S/2016/361/Rev.1, 22 ஜூன் 2016.

## C. சட்டம் மற்றும் செயல்விதிகள் சார்ந்த சட்டகம்

### 1. சிறுவர்களுக்கென தனித்துவமான சட்டச் சட்டகம்

சிறுவர்களின் உரிமைகள் பற்றிய சமவாயம் சகல வடிவிலுமான வன்முறை, சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் பாலியல் வன்முறை, ஆயுத மோதல் ஆகியவற்றிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு குறித்துரைக்கின்றது.[18] ஆயுதத் தரப்பில் ஆயுத மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர் 1949 ஆம் ஆண்டின் ஜெனீவா சமவாயம், ஆயுத மோதலின் போது சிறுவர்களை பாதுகாத்து பராமரித்தலை குறிப்பாக சுட்டிக்காட்டுகின்ற 1977ஆம் ஆண்டின் மேலதிக சமவாயங்கள் ஆகியவற்றில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகள் உள்ளடங்கலாக சர்வதேச சிறுவர் பாதுகாப்பு தராதரங்கள் மற்றும் விழுமியங்களுக்கு இயைபுற வேண்டும்.[19]

சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வல்லுறவும் ஏனைய வடிவிலுமான வன்முறைகள் ஆயுதமோதலிலே சிறுவர்களுக்கு எதிரான[20] 'பாரிய மீறலாகக்' காணப்படுவதுடன் இந்த வன்முறைகளை நிகழ்த்துகின்ற ஆயுதப்படைகளும் குழுக்களும் சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல்கள் பற்றிய ஐ. நா. செயலாளர் நாயகத்தின் வருடாந்த அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ளன.[21] அறிக்கையில் காணப்படும் பட்டியலிடலானது வன்முறை தொடர்பாக ஆவணப்படுத்தி முறைப்பாடு செய்வதற்கான நாட்டு மட்டத்திலான கண்காணிப்பு மற்றும் முறைப்பாட்டு பொறிமுறையினை (MRM) முன்னெடுத்து உருவாக்குவதற்கு வழி செய்கின்றது. MRM இற்கான ஆணையானது ஐநா பாதுகாப்புச்சபை யிலிருந்து வருகின்ற அதேவேளை அதன் பணியானது சர்வதேச சட்டச் சட்டகத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேலும் பாலியல் வன்முறையை ஆவணப்படுத்துகையில் அல்லது விசாரணை செய்கையில் இது தகவல்களுக்கும் ஆதரப்படுத்தலுக்கும் சிறந்த மூலமாக அமைய முடியும்.

### 2. சிறுவர்கள் தொடர்பான செயல்விதிகளின் விதிகள்[22]

தமக்கு எதிராக இழைக்கப்பட்ட பாலியல் வன்முறைக்காக நீதியினை அணுகுவதற்கான சிறுவர்களின் ஆற்றலானது தேசிய சட்டச் சட்டகம்.[23] மற்றும் உள்ளூர் செயல்விதிகளில் பகுதியளவிற்கு தங்கியுள்ளது. சிறுவர்கள் தொடர்பாக கூருணர்வுடைய அல்லது சிறுவர்களுக்கு நட்பான நீதியானது சிறுவர்களின் பாதுகாப்பிற்கான உரிமையினை ஏனையவர்களின் சகல உரிமைகள் தொடர்பிலும் சமநிலைப்படுத்துகின்ற ஓர் அணுகுமுறையினையே தேவைப்படுத்துகின்றது. (பங்குபற்றுதலுக்கான உரிமை உள்ளடங்கலாக) அதன் அர்த்தமாவது அந்த அணுகுமுறையானது:

» அணுகக்கூடியதும் வினைத்திறன் மிக்கதுமாக இருத்தல் (துரிதம்)

» வயதுக்கு பொருத்தமானதாக இருத்தல்

» வழக்கு விசாரணைகளை புரிந்து கொள்வதற்கான சிறுவர்களின் ஆற்றலினைப் போஷிக்கின்றது.

» சிறுவர்களின் அந்தரங்கம் மற்றும் கௌரவத்தினைம மதிக்கின்றது.

எவ்வாறாயினும், சிறுவர்கள் நீதியினை அணுகுவதை தேசிய மற்றும் உள்நாட்டுச் சட்டங்களும் நடைமுறைகளும் பொதுவாகக் கடினமானதாக ஆக்குகின்றன. நீதி முறைமைகள் அதன் தன்மையிலே சிக்கல் வாய்ந்தவையாக இருப்பதுடன் குறிப்பாக சிறுவர்கள் அவற்றினைப் புரிந்து கொண்டு அதில் பங்குபற்றுவதைக் கடினமானதாக ஆக்குகின்றன.

---

18 சிறுவர்களின் உரிமைகள் பற்றிய சமவாயம்இ கலைகள் Arts 19, 34 and 38(4).

19 1949 ஆகஸ்ட் 12 ஜெனீவா சமவாயங்களுக்கு மேலதிகமாக நெறிமுறைகள். மேலும் சர்வதேச ஆயுத மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்தல் தொடர்பானது (Protocol I), 8 June 1977, Art 77(1) (*'எவ்விதமான அகௌரவமான தாக்குதல்களில் இருந்தும் சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் விசேட மரியாதைக்குரியவர்களாகவும் இருப்பர்.*) 1949 ஆகஸ்ட் 12 ஜெனீவா சமவாயத்திற்கு மேலதிகமான நெறிமுறைகள் மேலும் சர்வதேசமற்ற ஆயுதமோதல்களின் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்தல் தொடர்பானது (நெறிமுறை I), 8 ஜுன் 1977, Art 4(3) ('சிறுவர்கள் பராமரிப்பு மற்றும் அவர்களுக்கு தேவையான உதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.').

20 ஐ.நா பாதுகாப்புச்சபை பிரகடனம் 1261, S/RES/1261 (1999), 30 August 1999.

21 ஐ.நா பாதுகாப்புச்சபை பிரகடனம் 1882 (S/RES/1882 (2009)), para. 3.

22 பார்க்க: ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அறிக்கை 'சிறுவர்களுக்கான நீதியினை அணுகுதல்' UNDocA/HRC/25/35 (16 டிசெம்பர் 2013).

23 சர்வதேச நடுவர் மன்றங்கள் நீதிக்கான மன்றினை வழங்கலாம்.

பெட்டி 3

## பாதிக்கப்பட்ட சிறுவர்களும் சர்வதேச நீதிமன்ற நடுவர் தீர்ப்பு மன்றங்களும்

சர்வதேச நீதிமன்றங்களிலும் நடுவர் தீர்ப்பு மன்றங்களிலும் சொற்பமான வழக்குகளே பாலியல் வன்முறையினால்[24] பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பானவையாக இருக்கின்றன. மேலும் அதிலும் மிகச் சொற்பமானவையே இந்த சிறுவர்களின் வாக்குமூலத்தினை உள்ளடக்குகின்றன. அவற்றுள் உள்ளடங்குபவை:

» *சார்ள்ஸ் டெயிலர்* வழக்கிலே SCSL சிறுமிகளுக்கெதிரான பாலியல் வன்முறையினை உள்ளடக்கியிருந்தது.[25]

» ICTR[26] யிலே அக்கியேசு வழக்கிலே சாட்சியான OO பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டபோது 15 வயதுடையவராகவும் வழக்கு நடைபெறும் போது 17 வயதுடையவராகவும் இருந்தார்.

» ICTY யில் *Kunarac* et al[27] வழக்கில் பாரிய பாலியல் வல்லுறவுகள் நடந்தபோது 18 வயதாக இருந்த இரண்டு பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்கள் உள்ளடங்கியிருந்தன. இந்த வழக்கிலே சாட்சியம் அளிக்க வந்திராத மற்றுமொரு பிள்ளையின் மீதும் குற்றங்கள் இழைக்கப்பட்டதை சாட்சிகள் வாக்குமூலமாக வழங்கினர்.

» ICCயில் இடம்பெற்ற *Bemba* வழக்கிலே சாட்சியளித்த சாட்சியங்களில் சிறுவர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பான வாக்குமூலங்களும் உள்ளடங்கியிருந்தன. வாக்குமூலம் வழங்கிய சாட்சிகளுள் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டபோது 12 வயதுடையவராக இருந்தார். எவ்வாறாயினும் வழக்கின் போது அவரின் வயது 18

சிறுவர்கள் பற்றிய ICC யின் கொள்கையானது[28] சிறுவர்களைப் பாதிக்கின்ற குற்றச்செயல்களின் பாரதூரத்தினை அடையாளம் கண்டு அவற்றினைத் தீர்ப்பதிலே இற்றைவரையில் காணப்படுகின்ற சவால்களையும் அடையாளம் கண்டுள்ளதுடன் இந்தக் குற்றச்செயல்களுக்கு குறிப்பிட்ட அவதானம் செலுத்தப்படவேண்டுமென்பதையும் தேவைப்படுத்துகின்றது. விபரங்களுக்கு (பார்க்க பிரிவு D நெறிசார் கரிசனைகள்). சிறுவர்களுக்கு எதிரான குற்றச்செயல்களை எண்ணற்ற வழிகளில் அடையாளம் காணலாம். உதாரணமாக பாதிக்கப்பட்டவர் அல்லது நேரடியாக கண்ணால் கண்டவரினால் நீதிமன்றத்தில் வழங்கப்படுகின்ற நேரடியான வாக்குமூலம் மூலமாக அல்லது தடயவியல் அல்லது கர்ப்பம் போன்ற ஏனைய சாட்சிகளின் சான்றுகளின் அறிமுகம் மூலமாக. பாதிக்கப்பட்டவர் என்ற நிலைக்கு விண்ணப்பிப்பதும்[29] பாதிக்கப்பட்ட சிறுவர் மற்றும் அவருக்கெதிரான குற்றச்செயல்கள் ஆகியவற்றினை குற்றவியல் செயன்முறையில் காண்பதற்கான மற்றுமொரு வழியாகும். பார்க்க அத்தியாயம் 3: வகைப்பொறுப்பு வகைகளும் பரிகாரங்களும் அத்தியாயம் 6: பாதிக்கப்பட்டவரின் நிலையின் சூழமைவிற்கான இழப்பீடுகள்

பாலியல் வன்முறைக் குற்றத்தினை நிரூபிப்பதற்கு சூழ்நிலை சார்ந்த சான்றுகள் மாத்திரமே போதுமானவையாக இருக்கும் என்பதுடன் குற்றங்களை ஏனைய வழிகளின் மூலமாகவும் நிரூபிக்க முடியும். இதிலே சிறுவர்களின் வாக்குமூலம் சம்பந்தப்படாது. எவ்வாறாயினும் பங்குபற்றுவதற்கான சிறுவர்களின் உரிமைக்கு தீங்கிழைக்க வேண்டாம் என்கின்ற கருத்தியலினைச் சமநிலைப்படுத்துவது முக்கியமானதாகும். (பார்க்க D: நெறிசார் கரிசனைகள்)

---

24 வழக்குகளில் பெரும்பான்மையானவை வளர்ந்த பாதிக்கப்பட்டவர்களையே குறிப்பிடுகின்றதென பொதுவாக நம்பப்படுகின்ற அதேவேளை வாக்குமூலங்களும் உசாவல்களும் பொதுவாக வயதின் அடிப்படையில் வேறாக்கப்படுவதில்லை. இதன் அர்த்தமாவது எண்ணிக்கைகள் புலனுணர்வப்படுவதை விட அதிகமாக இருக்கலாம் என்பதாகும்.

25 Aptel,C.(2010) *சிறுவர்களும் சர்வதேச குற்றச்செயல்களுக்கான வகைப்பொறுப்பும் : சிறுவர்கள் மற்றும் இடைமாற்ற நீதியில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பங்களிப்பு: உண்மைகளைக் கூறுதல், வகைப்பொறுப்பு மற்றும் மீளிணக்கம்* New York: UNICEF, INNOCENTI Research Centre. p 17.

26 வழக்கு தொடருநர். *Prosecutor vs. Jean-Paul Akayesu*, வழக்கு இல. ICTR-96-4-T.

27 வழக்கு தொடருநர். *Prosecutor vs. Dragoljub Kunarac, Radomir Kovac and Zoran Vukovic*, Case No IT-96-23-T and IT-96-23/1. This trial was also ground-இந்த வழக்கானது மிகவும் பிரபலமானதாகும். ஏனெனில் இந்த வழக்கிலே முதல் தடவையாக சர்வதேச குற்றம் ஒன்றாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் பாலியல் வல்லுறவுக்காகத் தண்டனை வழங்கப்பட்டனர்.

28 வழக்கு தொடருநர் அலுவலகம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், (2016) *சிறுவர் பற்றிய கொள்கை.* The Hague: ICC. Available at https://www.icc-cpi.int/iccdocs/otp/20161115_OTP_ICC_Policy-on-Children_Eng.PDF

29 பாதிக்கப்பட்டவர் அந்தஸ்து, மற்றும் பாதிக்கப்பட்டவரின் பங்கேற்பு தொடர்பான விரிவான தகவல்களுக்கு பார்க்க: சர்வதேச குற்றவியல் *நீதிமன்றம், நீதிமன்ற நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டவர்களின் பங்குபற்றலுக்கான வழிகாட்டி* https://www.icc-cpi.int/NR/rdonlyres/8FF91A2C-5274-4DCB-9CCE-37273C5E9AB4/282477/160910VPRSBookletEnglish.pdf .

*...சிறுவர்கள் நம்பகமான சாட்சிகளாக இருக்க முடியும்...*

## D. நெறிமுறைசார் பரிசீலனைகள்

சிறுவர்களை நேர்காணல் செய்வதற்கு அல்லது அவர்களை குற்றங்களுக்கு சாட்சிகளாக ஆதரிப்பதற்கு விசாரணையாளர்களும் ஆவணப்படுத்துநர்களும் பெரும்பாலும் தயங்குவர்.[30] பிள்ளைக்குத் தீங்கிழைக்கப்படுவது பற்றி இரு தரப்பினரும் பயமடைவதுடன் பிள்ளைகளிடமிருந்து எந்த அளவிற்குத் துல்லியமான தகவல்களைப் பெறமுடியுமெனவும் கேள்வியெழுப்புவர். பிள்ளையின் நல்வாழ்வு தொடர்பான கரிசனைகள் வலிதானவை. ஆயினும், சிறுவர்கள் நம்பகமான சாட்சிகளாக இருக்க முடியுமென்பதுடன், சிறுவர்களை நேர்காணல் செய்தல், சரியாக மேற்கொள்ளப்பட்டால், மோதலின் போதான பாலியல் வன்முறை பற்றியதான, பெரியவர்களிலிருந்து வேறுபட்ட, முக்கியமான புலனுணர்வு ஒன்றை வழங்கக்கூடுமென்பதுடன் பங்குபற்றல் மற்றும் நீதிக்கான அணுகல் ஆகியவற்றிற்கான அவர்களது உரிமையையும் மேம்படுத்தக்கூடும்.

**பெட்டி 4**

### நீதியை அணுகுவதற்கான பிள்ளை நேய அணுகுமுறை

குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்ட மற்றும் அவற்றிற்குச் சாட்சிகளாகவுள்ள பிள்ளைகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் நீதி பற்றிய ஐநாவின் வழிகாட்டிகள்[31] மற்றும் சிறுவர்கள் பற்றிய ICC கொள்கை ஆகியவற்றில் தரப்பட்டுள்ள பிள்ளை நேய அணுகுமுறையானது சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறையை ஆவணப்படுத்துவோருக்கு அல்லது விசாரணை செய்வோருக்கு உறுதியான உசாத்துணையை வழங்குகின்றது. இந்த அணுகுமுறையின் பிரதான கோட்பாடுகள்:

» வயது மற்றும் முதிர்வின் அடிப்படையில், பிள்ளையொன்றின் பாதிப்புக்குட்படும் தன்மை மற்றும் கொள்திறன் ஆகிய இரண்டினதும் அங்கீகாரம்

» பாரபட்சமின்மை, பிள்ளையின் நலன்கள் மற்றும் தம்மைப் பாதிக்கும் அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் தனது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான (மற்றும் அக்கருத்துக்கள் கேட்கப்படுவதற்கும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்குமான)[32] பிள்ளையின் உரிமை உள்ளடங்கலாக பிள்ளையின் உரிமைகள் பற்றிய ஐநாவின் கோட்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்

» உள-சமூக மதிப்பீடுகளை மேற்கொள்ளல்,[33] விபரமறிந்து வழங்கப்பட்ட இணக்கம் /சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளல், சாத்தியமுள்ள சாட்சியத்தின் பொருத்தத்தை மதிப்பீடு செய்தல், மற்றும் பிள்ளையை நேர்காணல் செய்வதா என்பது பற்றித் தீர்மானிப்பதற்கு முன்னதாக தொடர்பீட்டு வழிமுறைகளை இனங்காணல் அத்துடன் நேர்காணல் மேற்கொள்வோர் தகுந்த முறையில் பயிற்றப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தல் மற்றும் சிறுவர்களுடன் தொடர்பாடல் மேற்கொள்ளும் தனியாட்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தல் உள்ளடங்கலாக சிறுவர்களுடனான அனைத்து ஈடுபாடுகளும் உரிய கவனிப்புடனும் திட்டமிடலுடனும் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்.

---

30 இங்கே குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைசார் பரிசீலனைகள் மாத்திரமன்றி நீதிமன்றத்தில் பிள்ளையொருவர் சாட்சியமளிப்பது எவ்வாறு மற்றும் சாட்சியமளிக்க முடியுமா அத்துடன் நீதிமன்ற அமைப்புமுறை மற்றும் செயன்முறைகள் பிள்ளைகளுக்கு உகந்தவையா ஆகியவை பற்றிய பரிசீலனைகளும் உள்ளடங்கலாக, பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளைக் கொண்டுள்ள வழக்குகளைத் தொடுப்பதிலும் விசாரிப்பதிலும் பல தடைகள் காணப்படலாம்.

31 ஐநா ஆவணம். E/RES/2005/20, 22 ஜுன் 2005, https://www.unodc.org/pdf/criminal_justice/Guidelines_on_Justice_in_Matters_involving_Child_Victims_and_Witnesses_of_Crime.pdf

32 சிறுவர்கள் பற்றிய ICC கொள்கைஇ மேற்குறிப்பு 28, பந்திகள் 6-8 இனைப் பார்க்க.

33 எவ்வகையான (மற்றும் எப்போது) உள-சமூக மதிப்பீடுகள் சிறுவர்களின் சாட்சியத்திற்குப் பாதகம் விளைவிக்கப்படும் அபாயத்தை ஏற்படுத்தாது அவர்களின் பராமரிப்பும் பாதுகாப்பும் அதிகரிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் என்பது பற்றிய வெவ்வேறு சிந்தனை முறைகள் காணப்படுகின்றன. பங்குபற்றல் பற்றித் தீர்மானிப்பதற்கும் தேவையற்ற எதிர்மறைத் தாக்கங்களின்றி நேர்காணல் செய்யப்படுவதற்குமான பிள்ளையின் கொள்திறன் பற்றிய மதிப்பீடு ஒன்றைக் கொண்டிருத்தல் முக்கியமானதாகும். சிறுவர்கள் பற்றிய ICC கொள்கைஇ மேற்குறிப்பு 28 இனைப் பார்க்க.

*சிறுவர்களை நேர்காணல் செய்வதில் திடமான அனுபவத்தைக் கொண்டுள்ள அல்லது சிறுவர்களுடன் பணியாற்றுவதில் நிபுணத்துவம் வாய்ந்த செயற்பாட்டாளர்கள் மாத்திரமே சிறுவர்களை நேர்காணல் செய்வதில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.*

சிறுவர்களின் பாலியல் வன்முறை அனுபவங்கள் பற்றி அவர்களை நேர்காணல் செய்வதா என்பது பற்றித் தீர்மானிக்கும்போது, தகவல்களுக்கான தேவை மற்றும் பங்குபற்றலுக்கான சிறுவர்களின் உரிமை (அவர்கள் விரும்பினால்) ஆகியவற்றுடன் தீங்கிழைக்காதிருத்தல் என்னும் கடப்பாட்டை (அத்தியாயம் 7: தீங்கிழைக்காதிருத்தல்) சமநிலைப்படுத்தலும் பிரதானமாகும். தகவலுக்கான அல்லது பங்குபற்றலினால் பிள்ளைக் தாமாகவே பெறக்கூடிய பயன்களுக்கான தேவையை விட பாதிக்கப்படும் அபாயம் அதிகமாகக் காணப்படும் பட்சத்தில் வன்முறைகள் பற்றிய தகவல்களுக்கான மாற்று மூலங்களை நாடவேண்டும். ஆயினும்,சிறுவர்களை நேர்காணல் செய்தல் பாதுகாப்பற்றது அல்லது அவர்களின் நலன்கருதி பாதுகாப்பற்றது எனத் தன்னிச்சையாக அனுமானித்தல் தவறாகும் வழக்குகள் மீதான தனித்தனியான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1. தீங்கிழைக்காதிருத்தல்

அத்தியாயம் 7 இல் தரப்பட்டுள்ள பாதிப்பைக் கட்டுப்படுத்தலுக்கான நான்கு கோட்பாடுகளும் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி ஒரு பிள்ளையாக இருக்கும் பட்சத்தில் சமமாகப் பிரயோகிக்கப்படும். அத்துடன், மேலும் பாதிப்பு ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்காகப் பாதிக்கப்பட்ட மற்றும் ஏனைய சாட்சிகளாகவுள்ள சிறுவர்களுடன் பணியாற்றும்போது விசேட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தப்பியுள்ள மற்றும் சாட்சிகளாகவுள்ள பிள்ளைகளை அணுகும்போது அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டும் — செயற்பாட்டாளர்கள் உரிய பயிற்சியைப் பெற்றிராவிடின் அல்லது தம்மால் சிறுவர்களை உரிய முறையில் அணுக முடியுமென்ற நிச்சயத்தைக் கொண்டிராவிடின், விபரமறிந்து வழங்கப்படும் சம்மதத்தைப் பெற்றுக்கொள்ள முடியாவிடின், தொடர்பீட்டு சேவைகளுக்கான தகுந்த அணுகல் சிறுவர்களுக்கு வழங்கப்படுவதற்கு உத்தரவாதமளிக்க முடியாவிடின், அல்லது நேர்காணல் காரணமாகப் பிள்ளை மீண்டும் பேரதிர்ச்சி நிலையை அடையும் சந்தர்ப்பத்தில் அவருக்கு ஆதரவு வழங்குவதற்கான வளங்களை எவ்வாறு அணுகவேண்டுமெனத் தெரியாவிடின், ஆவணப்படுத்தல் நோக்கங்களுக்காக அச்செயற்பாட்டாளர்கள் சிறுவர்களை அணுகுவதற்கு முயற்சிக்கக்கூடாது.

சிறுவர்களை நேர்காணல் செய்வதில் திடமான அனுபவத்தைக் கொண்டுள்ள அல்லது சிறுவர்களுடன் பணியாற்றுவதில் நிபுணத்துவம் வாய்ந்த செயற்பாட்டாளர்கள் மாத்திரமே சிறுவர்களை நேர்காணல் செய்வதில் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும்.

### அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்தல்

தப்பிய/சாட்சியாகவுள்ள பிள்ளையொருவருக்கான அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்யும்போது, பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளல் பிரதானமாகும்:

- » பிள்ளையின் தனிப்பட்ட குணாம்சங்கள் (வயது, அபிவிருத்திக் கட்டம், முதிர்வு, கல்வி, இயலாமை, பால்நிலை, சிறுபான்மைக் குழுவில் உறுப்புரிமை போன்றவை)
- » சமூக மற்றும் கலாசார சூழமைவு (வாழும் சுற்றாடலின் பாதுகாப்பு மற்றும் நிலைமை, பிரதான பராமரிப்பாளர், குடும்பம் /பராமரிப்பாளர்களுடனான பிள்ளையின் உறவுமுறை போன்றவை)
- » குறிப்பிட்ட பாதிப்புக்குட்படும் நிலைகள் (இடப்பெயர்வு, பாலியல் ரீதியாகப் பரப்பப்படும் நோய்கள், பெற்றோராகவிருத்தல் அல்லது குடும்பத் தலைவராகவிருத்தல் போன்றவை)

### ஒருங்கிணைத்தல்

சிறுவர்கள் மீளவும் பேரதிர்ச்சி நிலையை அடையும் அபாயம் அதிகரிக்கும்போது, அதே ஒருங்கிணைப்புக் கோட்பாடுகள் பிரயோகிக்கப்படும். பொருத்தமாக வடிவமைக்கப்பட்ட பதிலளிப்பு ஒழுங்குமுறைபு காணப்படுதல் மற்றும் ஐநா பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1612 இனால் தாபிக்கப்பட்ட சிறுவர் மற்றும் ஆயுதந்தாங்கிய மோதல் பற்றிய கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடுதல் பொறிமுறை[34] (அவை காணப்படுமிடத்து) மற்றும் ஐநா பாதுகாப்புக் கொத்தணியினுள் காணப்படும் சிறுவர் பாதுகாப்புப் பற்றிய பொறுப்புடைய விடயப்பரப்பு (காணப்படுமாயின்) உள்ளடங்கலான சிறுவர் பாதுகாப்புப் பொறிமுறைகளுடன் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படுதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

34 S/RES/1612, 26 ஜூலை 2005. ஐநா செயலாளர் நாயகத்தின் 'சிறுவர் மற்றும் ஆயுதந்தாங்கிய மோதல் பற்றிய வருடாந்த அறிக்கையின்' பின்னிணைப்பில் மோதலுக்கான தரப்பினர் குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளில் ஆசுஆ தாபிக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பான விபரமறிந்து வழங்கப்படும் சம்மதம்/ இசைவு

பின்னிணைப்பு:7 நேர்காணல் சரிபார்த்தற் பட்டியலிலுள்ள விபரமறிந்து வழங்கப்படும் சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளல் பற்றிய பகுதியானது சிறுவர்களை நேர்காணல் செய்யும்போதும், மேலதிக எச்சரிக்கை அறிவித்தல்களுடன், சமமாகப் பிரயோகிக்கப்படும்:

» பிள்ளையின் குறித்த வயது, தேவைகள் மற்றும் புரிந்துணர்வு மட்டத்தைக் கருத்திற்கொண்டு விபரமறிந்து வழங்கப்படும் சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பதைப் புரிந்துகொள்ளல். சம்மதம் வழங்குவதற்கான வயது தொடர்பான தேசியக் கொள்கையைப் பொறுத்து, ஆவணப்படுத்தலில் பங்குபற்றுவதற்காக பிள்ளையின் பெற்றோர் அல்லது பிள்ளையின் பாதுகாவலரிடமிருந்து சம்மதம் மற்றும்/ அல்லது பிள்ளையிடமிருந்து விபரமறிந்து வழங்கப்படும் சம்மதம் அல்லது இசைவு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். (மேலும் தகவல்களுக்காக கீழுள்ள பெட்டி 5 இனைப் பார்க்க)

» பாலியல் வன்முறை பற்றிய தகவல்களை சிறுவர்கள் தங்கள் பெற்றோரிடம் அல்லது பாதுகாவலர்களிடம் ஏற்கனவே பகிர்ந்திருக்கலாம் இடம்பெற்ற சம்பவம் பாலியல் வன்முறையாக அமையும் என்பதையே சில சிறுவர்கள் உணராது இருக்கக்கூடும். பிள்ளை தனது பெற்றோருக்கோ அல்லது பராமரிப்பாளருக்கோ தெரிவித்திருக்காவிடின், பிள்ளையின் நலன்கள் கருதி மற்றும் பிள்ளையின் வயது மற்றும் முதிர்ச்சியைப் பிரதான பரிசீலனைகளாகக் கொண்டு, அவ்வாறு தீர்மானிப்பதற்கு முன்னதாக எச்சரிக்கை அவதானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

» தேவையற்ற விதத்தில் சிறுவர்கள் பயமுறுத்தப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, ஆவணப்படுத்தல் செயன்முறையில் பங்குபற்றுவதுடன் தொடர்புடைய அபாயங்கள் பற்றி அவர்களின் வயதுக்குகந்த வகையில் மிகவும் கவனத்துடன் சிறுவர்களுக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

» பிள்ளையின் தனிப்பட்ட இயல்திறன்களுக்குப் பதிலளிக்கக்கூடிய பயிற்றப்பட்ட பணியாட்டொகுதியினரால் சாத்தியமான அனைத்துத் தெரிவுகளும் மற்றும் தெரிவுகளின் விளைவுகளும் சிறுவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். பிள்ளையின் உரிமைகள் பற்றிய ஐநா சமவாயம் மற்றும் குற்றச் செயல்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான நீதியின் அடிப்படைக் கோட்பாடுகள் பிரகடனம் ஆகியவற்றின் கீழ் தமக்கு கிடைக்கப்பெறும் உரிமைகள் எவை என்பதை தெரிந்துகொள்வதற்கான உரிமையை சிறுவர்கள் கொண்டுள்ளனர்.

» ஆவணப்படுத்தல் செயற்பாட்டின் ஒவ்வொரு கட்டத்திலும் என்ன இடம்பெறுமெனவும் அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படலாமெனவும் செயற்பாட்டாளர்கள் சிறுவர்களுக்குக் கவனமாக விளக்க வேண்டும்.

» நேர்காணலை நிறுத்துவதற்கு, எந்த நேரத்திலும் செயன்முறையை விட்டு வெளியேறுவதற்கு, அல்லது அவர்கள் விரும்பினால் கேள்விகளுக்குப் பதிலளிக்காதிருப்பதற்கு அவர்கள் உரிமையுள்ளவர்களென சிறுவர்களுக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

» கேள்வியை அவர்கள் புரிந்துகொள்ளாவிடின் சிறுவர்கள் பெரும்பாலும் ‘ஆம்’ எனக் கூறுவர். விபரமறிந்து வழங்கப்படும் இசைவு/ சம்மதத்தை பெறும்பொருட்டு, அவர்களின் உண்மையான புரிதலைப் பரிசோதிப்பதற்காக, அவர்கள் எதற்கு சம்மதம் தெரிவிக்கின்றனரென நேர்காணல் மேற்கொள்ளுபவருக்குக் கூறும்படி அவர்களைக் கேட்பது அவசியமாகலாம்.

பெட்டி 5

## சிறுவர்களால் விபரமறிந்து வழங்கப்படும் சம்மதமும் இசைவும்

பிள்ளையொருவகைக் கையாளும்போது, பெற்றோரிடமிருந்து அல்லது பராமரிப்பதற்கான கடமையைக் கொண்டுள்ள நபரிடமிருந்து (தேவைப்படுமாயின் மற்றும் பொருத்தமாயின்) விபரமறிந்து வழங்கப்படும் சம்மதத்தையும் அத்துடன் பிள்ளையிடமிருந்து சம்மதத்தை/ இசைவையும் பெற்றுக்கொள்ளல் பிரதானமாகும். செயன்முறையில் பங்குபற்றுவதற்கான சம்மதத்தைத் தெரிவிப்பதற்கான சட்டரீதியான கொள்திறனைப் பிள்ளையொருவர் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், பிள்ளையின் முதிர்ச்சி மற்றும் அபிவிருத்தி மட்டத்தின் காரணமாக 'விபரமறிந்து' வழங்கப்படும் சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளல் கடினமாகவிருந்தாலொழிய, இச்சம்மதம் மாத்திரமே தேவைப்படுத்தப்படும். பிள்ளையின் வயது பங்குபற்றுவதற்கான சம்மதம் வழங்கக்கூடிய வயதெல்லையின் கீழ் காணப்படுமாயின், பெற்றோரிடமிருந்து அல்லது பராமரிப்பதற்கான கடமையைக் கொண்டுள்ள நபரிடமிருந்து சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் பிள்ளையினால் விபரமறிந்து வழங்கப்படும் இசைவு வழங்கப்படுதலும் வேண்டும்.

தமது பெற்றோருக்குப் பதிலாக சம்மதம் வழங்குவதற்கு வளரிளம் பருவத்தினருக்கு சட்டரீதியாக இயலக்கூடுமென்றபோதும், பொதுவாக, சம்மதம் வழங்குவதற்கு பெற்றோர் அல்லது பாதுகாவலர்களே பொறுப்பாவர். வரைவிலக்கணப்படி விபரமறிந்து வழங்கப்படும் சம்மதத்தை வழங்குவதற்கான வயதைக் கொண்டிராத, ஆனால், புரிந்துகொள்வதற்கும் பங்குபற்றுவதற்கு இணங்குவதற்குமான வயதைக் கொண்டுள்ள இளம் சிறுவர்கள் தொடர்பில், பிள்ளையினால் 'விபரமறிந்து வழங்கப்படும் இசைவு' (நேர்காணலில் பங்குபற்றுவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தல்) வேண்டப்படுகின்றது.[35]

தெளிவான சட்டங்கள் இல்லாதவிடத்து, பின்வரும் பொதுவான விதிகள் பிரயோகிக்கப்பட வேண்டும். (முதிர்ச்சியும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றபோதும்):[36]

» **16-18 வயதுவரை:** பிள்ளையினால் விபரமறிந்து வழங்கப்படும் சம்மதம் மற்றும் சூழ்நிலைகளுக்கமைய தேவையானது எனக் கருதப்பட்டால் மாத்திரம் பெற்றோர் அல்லது பராமரிப்பதற்கான கடமையைக் கொண்டுள்ள நபரால் விபரமறிந்து வழங்கப்படும் சம்மதம் வழங்கப்படுதல்

» **12-15 வயதுவரை:** சூழ்நிலைகளுக்கமைய தேவையற்றது எனக் கருதப்பட்டாலொழிய, பெற்றோர் அல்லது பராமரிப்பதற்கான கடமையைக் கொண்டுள்ள நபரால் விபரமறிந்து வழங்கப்படும் சம்மதம் வழங்கப்படுதல்இ மற்றும் பிள்ளையினால் வழங்கப்படும் இசைவு.

» **12 வயதிற்குக் கீழ்:** பெற்றோர் அல்லது பராமரிப்பதற்கான கடமையைக் கொண்டுள்ள நபரால் விபரமறிந்து வழங்கப்படும் சம்மதம் வழங்கப்படுதல் மற்றும் பிள்ளையினால் வழங்கப்படும் இசைவு.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும், பிள்ளையின் விருப்பங்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும் என்பதுடன் அவர்கள் பங்குபற்றுவதற்கு உடன்பட்டாலேயொழிய அவர்களை நேர்காணல் செய்யக்கூடாது.

35 சர்வதேச மீட்புக்குழு மற்றும் யுனிசெப் (2012) பாலியல் *துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டுத் தப்பியுள்ள சிறுவர்களைப் பராமரித்தல்: மனிதாபிமான அமைப்பு முறையிலான சுகாதார மற்றும் உள-சமூக சேவை வழங்குநர்களுக்கான வழிகாட்டிகள்.* நியூயோர்க்: IRC, UNICEF

36 கல்வி நிறுவகம், லண்டன் பல்கலைக்கழகம், *ஆராய்ச்சி நெறிமுறைகளுக்கான வழிகாட்டற் புத்தகம், சிறுவர்களுடனான ஆராய்ச்சி.* இணையத்தில் மாத்திரம், http://www.ethicsguidebook.ac.uk/research-with-children-105 இல் கிடைக்கப்பெறும்.

*ஆவணப்படுத்துவோர் … … தமக்கு ஓர் அறிக்கையிடற் கடப்பாடு உள்ளதா எனவும் யாருக்கு வெளிப்படுத்தல்களை அறிக்கையிட வேண்டுமெனவும் … … அறிந்திருத்தல் அவசியம்.*

## அந்தரங்கத்தன்மையை மதித்தல்

தீங்கிழைக்காதிருத்தல் பற்றிய அத்தியாயம் 7 இல் தரப்பட்டுள்ள அந்தரங்கத்தன்மை பற்றிய கோட்பாடுகள் பிரயோகிக்கப்படுமென்றபோதும், பிள்ளையொருவர் தனக்கெதிரான பாலியல் வன்முறையை வெளிப்படுத்தும்போது மேலதிக மட்டுப்பாடுகள் காணப்படலாம். தேசிய சட்டத்தைப் பொறுத்து, தொழில்வாண்மையாளர்களுள் சில பகுதியினர் (சமூகப் பணியாளர்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஏனைய சேவை வழங்குநர்கள்), பாதிக்கப்பட்டுள்ள அல்லது சாட்சியாகவுள்ள பிள்ளைகள் தொடர்புபட்டுள்ள குற்றச் செயல்கள் பற்றி அறிக்கையிடுவதற்கான கடமையைக் கொண்டிருக்கக்கூடும்.[37] ஆகவே, ஆவணப்படுத்துநர்கள் முழுமையான அந்தரங்கத்தன்மையைப் பேணுதல் பற்றிய வாக்குறுதியை வழங்காதிருத்தல் மற்றும் அவர்களுக்கு ஓர் அறிக்கையிடற் கடப்பாடு உள்ளதா என அறிந்திருத்தல் மற்றும் யாருக்கு வெளிப்படுத்துகைகள் அறிக்கையிடப்பட வேண்டும் ஆகியவை பற்றி அறிந்திருத்தல் என்பன பிரதானமாகும். அந்தரங்கத்தன்மை பற்றிய இந்த மட்டுப்பாடு பற்றிப் பிள்ளையொருவர் புரிந்துகொள்வதும் அதேயளவிற்கு முக்கியமானதாகும்.

## தொடர்பீட்டுப் பொறிமுறையுடன் குறிப்பீடு செய்தல் / ஒருங்கிணைப்புச் செய்தல்

தொடர்பீட்டு மற்றும் ஆதரவுச் சேவைகளுக்கான அணுகலைப் பெற்றுக்கொள்வதற்கான தப்பியுள்ளவர் /சாட்சியின் ஆற்றல் மீது அவரது வயது (அத்துடன் பால்நிலை) தாக்கம் செலுத்தலாம். ஆயுதந்தாங்கிய மோதல் அல்லது மோதலுக்குப் பின்னரான நிலைகளில், சேவைகள் காணப்படாதிருக்கக்கூடும் அல்லது பலவீனமாக இருக்கக்கூடும். பாதிக்கப்பட்டுத் தப்பியுள்ள அல்லது சாட்சியாகவுள்ள பிள்ளைகளைக் கையாளும்போது, நேர்காணல்கள் நடத்தப்படுவதற்கு முன்னதாக ஒழுங்கு மரபொன்று அமைக்கப்பட்டிருப்பதையும் சிறுவர்களுடைய உடனடி மற்றும் நீண்டகால தேவைகளைப் பின்வருவன உள்ளடங்கலாக ஏதேனும் வடிவத்தில் சந்திக்கக்கூடிய பொருத்தமான சேவைகளை அல்லது ஆதரவைப் பெறுவதற்கு அவர்களை தொடர்பீடு செய்வதையும் ஆவணப்படுத்துநர்கள் உறுதிப்படுத்த வேண்டும்:

- **உடல்ரீதியாக:** அவசர மருத்துவ சிகிச்சைக்கான பரிந்துரைகளுக்குப் பின்னர், சிறுவர்கள் நீண்ட கால சுகாதாரப் பிரச்சினைகளைக் கொண்டிருக்கலாம் என்பதுடன் பயனுறுதிமிக்க சிகிச்சையும் தேவைப்படலாம்.
- **உளரீதியாக:** பேரதிர்ச்சி மன அழுத்தத்திற்குப் பின்னரான நிலையை எதிர்கொள்வதிலும் நம்பகமான உறவுமுறைகளைக் கட்டியெழுப்புவதிலும் மற்றும் தமது உணர்வுகளைப் புரிந்து கொள்வதிலும் சிறுவர்களுக்கு ஆதரவு தேவைப்படலாம்.
- **சமூகரீதியாக:** பாடசாலை அமைப்பு முறையினுள் மீள இணைவதற்கான ஆதரவும் (ஏதேனும் வடிவத்தில் காணப்படும் சந்தர்ப்பத்தில்) நேர்மறை உறவுமுறைகளை விருத்தி செய்வதற்கான உதவியும் சிறுவர்களுக்குத் தேவைப்படலாம்.
- **பராமரிப்பு ஆயத்தங்கள்:** சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம் வீட்டில் இடம்பெற்றிருந்தால் அல்லது தற்போதுள்ள வீட்டிலிருப்பதால் தொடர்ச்சியான பாதிப்பு அல்லது கவனயீனத்தை அவர்கள் சந்திப்பார்களாயின் அவர்கள் மீண்டு வருவதற்குப் பாதுகாப்பான இடமொன்று தேவையாகும்.

தீங்கிழைக்காதிருத்தல் பற்றிய மதிப்பீட்டின் ஒரு பகுதியாக சேவைகளுக்கான கிடைப்பனவு மற்றும் அணுகல் உள்ளடக்கப்பட வேண்டும். வீட்டில் நடைபெறும் வன்முறை அல்லது துஷ்பிரயோகம் பற்றி செயற்பாட்டாளர்களுக்குத் தெரியாதிருக்கலாம் என்பதுடன், நேர்காணல் ஒன்றின்போது இவ்விடயம் வெளிப்படுத்தப்படலாம். மேலதிகமாக, தீங்கிழைக்காதிருத்தல் பற்றிய கோட்பாடுகள், அவரின் சுற்றாடல் காரணமாக அபாயத்துக்குள்ளாகக்கூடிய பிள்ளையொருவரின் தொடர்ச்சியான பாதுகாப்பிற்காக தொடர்ந்தும் பிரயோகிக்கப்படும் (உதாரணமாக, பாலியல் வன்முறை பற்றிய அறிக்கையிடல் வெளிப்படும்போது).

தீங்கிழைக்காதிருத்தல் பற்றிய அத்தியாயம் 7 இல் தரப்பட்டுள்ள விரிவான மறுதாக்க மற்றும் தொடர்பீட்டுச் செயன்முறைகளுடன், பின்வருவனவற்றுடனான சிறுவர்களுக்கான சேவைகளையும் அடையாளம் காணல் பிரதானமாகும்:

- பாதிக்கப்பட்ட பிள்ளையின் வயது மற்றும் பால்நிலைக்கெனக் குறித்துரைக்கப்பட்டுள்ளவை மற்றும் அவரின் ஆற்றல், கலாசாரம் போன்றவற்றிற்குப் பொருத்தமானவை.
- சிறுவர்கள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்குகந்த இடங்களுக்கான அணுகலை வழங்குபவை
- சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் மற்றும் சிறுவர்களால் நடத்தப்படும் குழுக்கள் உள்ளடங்கலாக சமூகம் சார்ந்த சிறுவர் பாதுகாப்பு முறைமைகளுக்கான அணுகலை வழங்குபவை.

பாதிக்கப்பட்டுத் தப்பியுள்ள/சாட்சியாகவுள்ள பிள்ளைகளைக் கையாளும் செயற்பாட்டாளர்கள் கட்டாயமாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்:

- சிறுவர்கள் குடும்பங்களிலிருந்து தனிமைப்படுத்தப்படுதல் மற்றும் சமூகத்தில் அவதூறுக்கு உட்படுத்தப்படுதல் போன்றவற்றிற்கான அபாயம் உள்ளடங்கலாக சமூக ஆதரவு அற்ற அல்லது மிகக்குறைவான ஆதரவைப் பெறும் அபாயத்தை சிறுவர்கள் எதிர்நோக்கும்போது பொருத்தமான தொடர்பீடுகளைப் பெற்றுக்கொடுத்தல்
- சிறுவர்களின் நலன்களுக்கு எப்போதும் முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அந்தரங்க தகவல்களை சேமித்தல், அணுகுதல் மற்றும் பகிர்தல் பற்றிய தெளிவான வழக்கங்களைத் தாபித்தல்.
- பிள்ளை மற்றும் குடும்பம் ஆகிய இரு தரப்பினருக்கும் கிடைக்கப்பெறும் சேவைகள் பற்றி தெரிவித்து, பெற்றோருக்கும் பராமரிப்பாளர்களுக்கும் ஆதரவளித்தல்.

37 உதாரணமொன்றாக, 'குற்றங்களால் பாதிக்கப்பட்டுள்ள அல்லது அவற்றிற்குச் சாட்சியாகவுள்ள பிள்ளைகளுடன் தொடர்புடைய விடயங்களில் நீதி பற்றிய முன்னோடிச் சட்டம்'இ உறுப்புரை 3 இனைப் பார்க்க.

# *விசேட பயிற்சி பெற்ற அல்லது சிறுவர்களுடன் பணியாற்றுவதில் முன் அனுபவம் கொண்ட உரைபெயர்ப்பாளர்களைப் பயன்படுத்தல்.*

## 2. பங்குபற்றலுக்கான உரிமை

டொமினீக், கொங்கோ சனநாயக குடியரசின் கோமாவைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமி:

*'அவன் எனக்கு இழைத்தது மிகவும் தீய விடயம். எனக்கு இப்போதும் அச்சுறுத்தும் கனவுகள் வருகின்றன. பொலிசார் ஏதாவது செய்ய வேண்டுமென நான் விரும்பினேன். நான் எனது கதையைக் கூற விரும்பினேன், ஆனால் யாரும் செவிமடுக்கவில்லை. எனக்கு நடந்தது ஒரு பொருட்டல்ல என்பதுபோல இருந்தது. ஆனால் பின்னர் நான் மீண்டும் பாடசாலைக்குச் செல்ல உதவியவர்கள் வந்து அதனைக் கேட்க விரும்பினர். அவர்கள் எனது கதையையும் மற்றவர்களது கதையையும் பொலிசாருக்குக் கொண்டு சென்றனர். இப்போது அந்த மனிதன் கைது செய்யப்பட்டுவிட்டான். அவன் இப்போது சிறையிலடைக்கப்படுவான் என நான் நம்புகின்றேன் அத்துடன் நான் எனது வாழ்க்கையை ஆரம்பிக்கவும் முடியும்.'*

தம்மைப் பாதிக்கும் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் அவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்குமான உரிமையை சிறுவர்கள் கொண்டுள்ளனர். பிள்ளையின் உரிமைகள் பற்றிய ஐநாவின் சமவாயம் *'ஏதேனும் நீதி அல்லது நிருவாக நடவடிக்கைமுறைகளில், பிள்ளையைப் பாதிக்கும் விடயங்கள் பற்றி, நேரடியாகவோ அல்லது ஒரு பிரதிநிதி அல்லது உரிய அமைப்பு ஒன்றின் மூலமாகவோ, கேட்கப்படுவதற்கான வாய்ப்பு குறிப்பாக பிள்ளைக்கு வழங்கப்படுதல் வேண்டும்'* எனக் குறிப்பிட்டுக் கூறுகின்றது [38] பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களைக் கொண்டிருக்கக்கூடிய சாத்தியத்தை அல்லது அவர்களின் குரல்களைப் பரிசீலிக்கத் தவறிய பாலியல் வன்முறைக் குற்றச்செயல்களின் ஆவணப்படுத்தலானது இவ்வுரிமைகளுடன் இசைவடையாது.

பாதிக்கப்பட்டுத் தப்பியுள்ள/சாட்சிகளாகவுள்ள வளர்ந்தோரைப் போலவே, குற்றச் செயல்களின் ஆவணப்படுத்தலில் ஈடுபடுதல் சில சிறுவர்களுக்கும் வலுவூட்டுவதாக அமையுமென்பதுடன் அவர்கள் மீண்டுவருவதின் ஒரு பகுதியாகவும் அமையக்கூடும். சேகரிக்கப்பட்ட தகவல்கள், உதாரணமாக, சிறுவர்கள் பாலியல் வன்முறையால் பாதிக்கப்படுகின்றனர் என்பதை அங்கீகரிக்கும் நிலையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் (இது சமூகத்தில் கேள்விக்குட்படுத்தப்பட்டிருந்தால்), பாதிக்கப்பட்டவர் என்னும் அந்தஸ்தை ICC இல் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்திற்கானதோர் அடிப்படையை வழங்கும், அல்லது வேறு வகைகளில் நீதியை அணுகுவதற்கு பிள்ளைக்கு வழிவகுக்கும். குறிப்பிட்ட பிள்ளைக்கு இது பொருத்தமானதா என்பதைப் புரிந்து கொண்டு அதனை மேற்கொள்வதற்கு சிறந்த மற்றும் பாதுகாப்பான வழிமுறையை அவர்களுக்கு வழங்குவதே செயற்பாட்டாளர்களின் வகிபங்காகும்.

ஆயினும் பங்குபற்றுவதற்கான உரிமை என்பது ஒரு தனிப்பட்ட உரிமையாகும் என்பதுடன் இது பங்குபற்றாதிருப்பதற்கான உரிமையையும் குறிப்பாக உணர்த்துகின்றது. குறிப்பிட்ட பிள்ளை பங்குபற்றுவதற்கு விரும்புகிறாரா என்பதைப் புரிந்துகொண்டு அப்பிள்ளைக்கு அதற்கான சிறந்த மற்றும் பாதுகாப்பான வழிமுறையை வழங்குவதே செயற்பாட்டாளர்களின் வகிபங்காகும். ஒவ்வொரு பிள்ளையும் வித்தியாசமானவர், ஆகவே பிள்ளையை நேர்காணல் செய்ய வேண்டுமா என்பது பற்றிய தீர்மானத்தில் பிள்ளையை ஈடுபடுத்த வேண்டுமென்பதுடன் ஆவணப்படுத்தலுடன் தொடர்புடைய ஏதேனும் நலன்களுடன் ஒப்பிடுகையில் ஏற்படக்கூடிய பாதிப்பு மற்றும் பிள்ளையின் விருப்பங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுதல் வேண்டும்.

38 UNCRC, உறுப்புரை 12.

## E. ஆவணப்படுத்தல் செயன்முறையில் சிறுவர்களை ஈடுபடுத்தல் பற்றிய மைய வழிகாட்டி[39]

CARSV இனால் வளர்ந்தோர் மற்றும் சிறுவர்கள் ஆகிய இருவரும் பாதிக்கப்படுவதனால், தகுதி மற்றும் தீங்கிழைக்காதிருத்தல் என்பன பாதிக்கப்பட்ட மற்றும் சாட்சிகளாகவுள்ள வளர்ந்தோரிடமிருந்து பெறப்படும் தகவல்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது என்பதையே பெரும்பாலும் உணர்த்துகின்றன. ஆயினும், மேலே குறிப்பிடப்பட்டவாறு, சிலவேளைகளில் ஆவணப்படுத்தலில் பங்குபற்றல் பிள்ளையொருவரின் நலன்கள் சார்ந்துள்ளதுடன், உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டால், வெளியீடுகளுக்குப் பாரிய பயன்களைப் பெற்றுக்கொடுக்கலாம்.

கீழே தரப்பட்டுள்ள பரிசீலனைகள் சிறுவர்களுக்கெதிரான குற்றச் செயல்கள் மற்றும் வன்முறைகளை ஆவணப்படுத்துவதற்காகக் குறித்துரைக்கப்பட்டவை என்பதுடன் ஆவணப்படுத்தலின் பூர்வாங்க ஆராய்ச்சி மற்றும் திட்டமிடலிலிருந்து பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளின் நேர்காணல் வரையாக இந்த ஒழுங்குமரபின் ஏனைய அத்தியாயங்களில் தரப்பட்டுள்ள பொதுவான வழிகாட்டல்களுடன் பயன்படுத்தப்படலும் வேண்டும். ஆண்பிள்ளைகளுக்கெதிரான குற்றச் செயல்கள் மற்றும் வன்முறைகளை ஆவணப்படுத்தும்போது, பாதிக்கப்பட்ட ஆண்கள் தொடர்பாக அத்தியாயம் 17 இல் தரப்பட்டுள்ள வழிகாட்டல்களும் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். சிறுவர்களைக் கொண்டுள்ள அனைத்து வழக்குகளிலும், உரிய பயிற்சியைப் பெற்றுள்ள தனியாட்களினாலேயே நேர்காணல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

### 1. பூர்வாங்க ஆராய்ச்சி மற்றும் விசாரணைத் திட்டமிடல்

CARSV இனை ஆவணப்படுத்தும்போது, செயன்முறையின் பகுதியாக சிறுவர்களை நேர்காணல் செய்வதா இல்லையா என்பது பற்றிய தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும். சிறுவர்களை நேர்காணல் செய்வது பாதுகாப்பானதா மற்றும் உகந்ததா என்பது பற்றிய பூர்வாங்கத் தீர்மானமொன்று, அபாய மதிப்பீடு மற்றும் தொடர்பீட்டு வழிமுறைகளின் தடமிடல் ஆகியவற்றின் அடிப்படையில், திட்டமிடற் செயன்முறையின்போது மேற்கொள்ளப்பட வேண்டும். சிறுவர்களை நேர்காணல் செய்யக்கூடிய கொள்திறனைக் கொண்ட (தகவு, அனுபவம் மற்றும் வளங்கள்) நேர்காணல் மேற்கொள்ளக்கூடியோரின் கிடைப்பனவு பிரதான பரிசீலனையாக இருத்தல் வேண்டும். ஆவணப்படுத்தற் செயன்முறை முழுவதுமாக இந்தத் தீர்மானம் தொடர்ந்தும் பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

பூர்வாங்க ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக் கட்டத்தின்போது, செயற்பாட்டாளர்கள்:

- **சாத்தியமுள்ள அனைத்துப் பாதிக்கப்பட்டோரையும் பரிசீலித்தல் வேண்டும்:** பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படாத அல்லது பெரியோருடன் மாத்திரம் தொடர்புடைய குற்றச்சாட்டுகள் காணப்படும் சூழமைவுகளிலும் கூட, ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்னும் சாத்தியத்தை தெளிவாகக் கருத்தில் கொள்ளல். வயதுக்கு (மற்றும் பால்நிலைக்கு) பொருத்தமான சேவைகள் காணப்படாமை மற்றும் ஆணைகள் அல்லது பாரபட்சங்களை அடிப்படையாகக் கொண்ட யூகங்கள் ஆகியவற்றின் விளைவாக பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றிய மிகவும் பொதுவான குற்றச்சாட்டுக்கள் எழலாம்.
- **குறிகாட்டிகள்:** ஆயுதப்படைகள் மற்றும் குழுக்களினால் சிறுவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான சாட்சியம் (மேலுள்ள கூடு 2 ஐ பார்க்க) மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்தின் பொதுவான அறிகுறிகள் மற்றும் குறியீடுகளை வெளிப்படுத்தும் சிறுவர்கள் (மேலுள்ள கூடு 6 ஐ பார்க்க) உள்ளடங்கலாக சிறுவர்களுக்கெதிராக பாலியல் வன்முறை மேற்கொள்ளப்படுகின்றது என்பதைக் குறிப்பிடக்கூடிய சிவப்புக் குறியீடுகள் பற்றி விழிப்பாகவிருத்தல்.
- **அபாயங்கள்:** ஆராய்ச்சியின் சூழமைவு - சிறுவர்கள் மற்றும் பாலியல் வன்முறை பற்றியதான குறிப்பிட்ட மனநிலைகள் (உதாரணமாக, பல சந்தர்ப்பங்களில் கன்னியல்லாத வளரிளம் பருவத்திலுள்ள பெண் பிள்ளை 'ஒழுக்கமற்றவராகப்' பார்க்கப்படுவதுடன் பாலியல் பலாத்காரத்திற்குப் பழிசுமத்தப்படுவார்) மற்றும் பிள்ளையொருவர் அடையாளம் காணப்பட்டால் வீட்டிலோ அல்லது பாடசாலையிலோ அந்த ஆண்பிள்ளை அல்லது பெண் பிள்ளை எதிர்நோக்கக்கூடிய அவதூறுகள்.
- **தொடர்பீடுகள்:** மேலே குறிப்பிடப்பட்டவாறு, பாதுகாப்பிற்காக மற்றும்/அல்லது ஆதரவிற்காக பிள்ளைகளைப் தொடர்பீடு செய்யக்கூடிய சாத்தியமுள்ள பொருத்தமான முறைசார் அல்லது முறைசாரா சேவைகளைக் கண்டறிந்து கொள்ளல் பிரதானமாகும். பிள்ளைகளை மையப்படுத்திய தொடர்பீட்டு வழிமுறைகள் இல்லாத பட்சத்தில், கிடைக்கப்பெறுபவை அல்லது வெவ்வேறு வயதுகளைக் கொண்ட சிறுவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அமைக்கக்கூடியவை பற்றிப் பரிசீலித்தல்.

39 எதிக்கான உடனடிப் பதிலிறுப்பு, the Roméo Dallaire சிறுவர் போராளிகள் முன்னெடுப்பு, மற்றும் சர்வதேச குற்றவியல் விசாரணைகள் நிறுவனம் ஆகியவற்றால் கூட்டாக விருத்தி செய்யப்பட்டு அம்மான், ஜோர்டானில் 2016 ஆகஸ்ட் மாதம் முன்னோடியாகப் பரீட்சிக்கப்பட்ட 'சிறுவர்களைக் கொண்டுள்ள மோதல் தொடர்புடைய வன்முறைகளைக் கண்காணித்தலும் விசாரணை செய்தலும்' என்னும் முன்னோடிப் பயிற்சி நெறியிலிருந்து இப்பகுதியிலுள்ள தகவல்கள் கணிசமான அளவில் பெறப்பட்டுள்ளது.

பெட்டி 6

## வயதின் பிரகாரம் பாலியல் வன்முறையின் பொதுவான சமிக்ஞைகளும் அறிகுறிகளும[40]

பாலியல் வன்முறையை அனுபவித்துள்ள சிறுவர்களின் சில பொதுவான எதிர்வினைகள் கீழே தரப்பட்டுள்ளன. ஆவணப்படுத்தலுக்கான திட்டமிடலின்போது அல்லது தகவல் சேகரிப்பின் போதே சிறுவர்களுடன் தொடர்பாடல்களை மேற்கொள்ளும்போது, சாத்தியமான அறிகுறிகள் பற்றி செயற்பாட்டாளர்கள் விழிப்பாக இருப்பதுடன் கூருணர்வுடனும் உரிய கவனத்துடனும் பணியைத் தொடர வேண்டும். இந்த நிரல் விரிவானதல்ல என்பதுடன் விபரிக்கப்பட்டுள்ள சில அறிகுறிகள் பாலியல் வன்முறை தவிர்ந்த வேறு காரணங்கள் காரணமாக ஏற்பட்ட பேரதிர்ச்சி நிலையின் அறிகுறிகளாகவும் இருக்கலாம்.

| | |
|---|---|
| அனைத்து வயதினருக்கும் பொதுவானவை | » பயங்கரக் கனவுகள் அல்லது தூக்கப் பிரச்சினைகளைக் கொண்டிருத்தல், அல்லது எந்நேரமும் தூங்குவதற்கு விரும்புதல்<br>» எந்நேரமும் சாப்பிடுதல் அல்லது சாப்பிடுவதற்கு விருப்பமின்மை போன்ற உணவுப் பிரச்சினைகளை வெளிப்படுத்தல்<br>» தமது குடும்பம் மற்றும் நண்பர்களிடமிருந்து ஒதுங்கியிருத்தல் உள்ளடங்கலாக தவிர்க்கும் நடத்தையை வெளிப்படுத்தல்<br>» தமது வயதிற்குப் பொருத்தமற்ற பாலியல் செயற்பாடுகள் பற்றிய அறிவை அல்லது ஆர்வத்தை வெளிப்படுத்தல் |
| சிசுக்களும் சிறிய பிள்ளைகளும் (0-5) | » பராமரிப்பாளர்களுடன் வழமைக்கு மாறாக ஒட்டிக்கொள்ளுதல் அல்லது விட்டுப் பிரியாதிருத்தல்<br>» ‘பாதுகாப்பான’ இடங்களை விட்டு வெளியேறுவதற்கு மறுத்தல்<br>» அபிவிருத்திசார் பின்னடைவு (மொழி மறத்தல், ஆடையில் சிறுநீர் அல்லது மலம் கழித்தல் போன்றவை) |
| இளம் சிறுவர்கள் (6-9) | » 0-5 வயதான பிள்ளைகள் கொண்டிருப்பதற்கு ஒத்த எதிர்வினைகள்<br>» குறிப்பிட்ட நபர்கள், இடங்கள், அல்லது செயற்பாடுகள், அல்லது தாக்கப்படுவது பற்றிய அச்சத்தைக் கொண்டிருத்தல்<br>» திடீரெனப் பாடசாலைக்குச் செல்ல மறுத்தல்<br>» தமது அந்தரங்க உறுப்புகளை அடிக்கடி தொடுதல் |
| வளரிளம் பருவத்தினர் (10-19) | » மன அழுத்தத்திற்கான அறிகுறிகளை வெளிக்காட்டல் (நீடித்த கவலை), அழுகை அல்லது உணர்ச்சியற்ற நிலை<br>» தற்கொலை எண்ணங்கள் அல்லது போக்குகளைக் கொண்டிருத்தல்<br>» பாடசாலையில் பிரச்சினைகளைக் கொண்டிருததல், பாடசாலைச் செயலாற்றுகையில் மாற்றங்கள், அல்லது பாடசாலையைத் தவிர்த்தல<br>» சக வயதினருடனான உறவுமுறைகளில் பிரச்சினைகளை வெளிப்படுத்தல் அல்லது கோபத்தை வெளிக்காட்டுதல், ஆட்களுடன் சண்டையிடுதல், அதிகாரத்திற்குக் கட்டுப்படாதிருத்தல் அல்லது அவமரியாதை செய்தல்<br>» சுய அழிவை ஏற்படுத்தும் நடத்தை (போதைப்பொருள், மதுப்பாவனை, சுயமாக ஏற்படுத்தும் காயங்கள்)<br>» கர்ப்பம்<br>» பாலியல் ரீதியாகப் பரவுகின்ற தொற்றுக்கள் ஏற்பட்டிருத்தல், வாய் அழற்சி, மலவாசல் அல்லது பெண்ணுறுப்பில் இரத்தம் வெளியேறுதல் மற்றும் வலி |

40 சர்வதேச மீட்புக்குழு மற்றும் யுனிசெப் (2012) *பாலியல் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டுத் தப்பியுள்ள சிறுவர்களைப் பராமரித்தல்: மனிதாபிமான அமைப்பு முறையிலான சுகாதார மற்றும் உள-சமூக சேவை வழங்குநர்களுக்கான வழிகாட்டிகள்.* நியூயோர்க்: IRC, யுனிசெப், ப. 34.

ஆவணப்படுத்தலின் திட்டமிடற் கட்டத்தின்போது:

» **ஆவணப்படுத்தல் அணி:** ஆவணப்படுத்தல் அணியினரை (விசாரணையாளர்கள், உரைபெயர்ப்பாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், இடையீட்டாளர்கள், பகுப்பாய்வாளர்கள் மற்றும் ஏனைய உதவிப் பணியாட்டொகுதியினர்) கவனமாகத் தெரிவு செய்து பயிற்றுவிப்பதுடன் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தலும் வேண்டும்:

  » சிறுவர் பாலியல் வன்முறை குறித்துப் புரிந்து கொள்வதற்கும் கூருணர்வுடன் கையாளுவதற்கும் அவசியமான கொள்திறனை (அனுபவம், ஆற்றல்கள் மற்றும் மனநிலை) அவர்கள் கொண்டிருத்தல். (உதாரணமாக, பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றிய தகவல்களை அவர்களிடமிருந்து வரவழைப்பதற்கான பொருத்தமான சூழ்நிலையை உருவாக்குதல், இடர் ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் பற்றி அறிந்திருத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீளவும் பேரதிர்ச்சி நிலைக்கு உள்ளாக்காதிருப்பதை எவ்வாறு தவிர்ப்பது என அறிந்திருத்தல் (மேலுள்ள கூடு 6 ஐப் பார்க்க)

  » தாம் தொடர்பாடல் மேற்கொள்வோரைத் தாமே தெரிவு செய்வதற்கான வாய்ப்பொன்றை சிறுவர்களுக்கு வழங்குவதற்காக, பால்நிலை, வயது, தேசிய இனம், இனம், மதம், மொழி ஆற்றல்கள் போன்றவற்றில் அணியினர் போதியளவில் பல்வகைமையுடைவர்களாக இருத்தல். பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அதே பால்நிலை சார்ந்த நேர்காணல் செய்பவரையோ/ உரைபெயர்ப்பாளரையோ விரும்புவார்களெனக் கருதமுடியாதென்றபோதும், அவர்களுக்குத் தெரிவொன்றை முன்வைப்பதானது அவர்கள் தங்களை வெளிப்படுத்துவதற்குத் தேவையான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு உதவக்கூடும். வயது, இன அல்லது மதப் பின்னணி போன்ற ஏனைய காரணிகளுக்கும் இது பொருந்தும்.

» **ஆவணப்படுத்தற் திட்டம்:** பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை, மற்றும் தொடர்புடைய சட்டவாக்கம், நீதிமன்ற வழக்கங்கள் மற்றும் சொற்பதங்கள் ஆகியவற்றை ஆவணப்படுத்தற் திட்டத்தில் விரிவாக உள்ளடக்குதல் (பார்க்க: அத்தியாயம் 9: CARSV ஆவணப்படுத்தற் திட்டத்தின் திட்டமிடல் / ஆக்கக்கூறுகள்)

» **நேரம்:** பாதிக்கப்பட்ட பிள்ளைக்கும் நேர்காணல் செய்பவருக்குமிடையில் ஒத்திசைவைக் கட்டியெழுப்புவதற்கு கால அவகாசம் தேவைப்படக்கூடும் என்னும் அதேவேளை, பிள்ளையைத் தேவையற்ற வகையில் களைப்படையச் செய்வதை அல்லது அழுத்தத்திற்குள்ளாக்குவதைத் தவிர்க்குமுகமாக, பிள்ளையின் வயது, அபிவிருத்தி மற்றும் ஏனைய காரணிகளின் அடிப்படையில் நேர்காணல் ஒன்றின் நேரத்தை மட்டுப்படுத்தல் பிரதானமாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒரே நேர்காணல் செய்பவருடனேயே இரண்டாவது நேர்காணல் ஒன்றை மேற்கொள்ளுதல் அவசியமாகலாம் என்பதுடன், சில சந்தர்ப்பங்களில் பயனுள்ளதாகவும் அமையலாம். விசேடமாக, மேலும் ஆழமான நேர்காணலொன்றில் ஈடுபடுவதா இல்லையா எனப் பிள்ளை தீர்மானிப்பதற்கு அவசியமான நம்பிக்கையையும் தகவல் பகிர்வையும் கட்டியெழுப்புவதற்கு பூர்வாங்க நேர்காணல் உதவும் சந்தர்ப்பங்களிலும் பிள்ளையின் முதிர்ச்சி மட்டத்தை சரியாக மதிப்பீடு செய்வதற்கான வாய்ப்பொன்றை நேர்காணல் செய்பவருக்கு வழங்கும் சந்தர்ப்பத்திலும் இவ்விடயம் உண்மையாகின்றது.

» **ஆட்களின் எண்ணிக்கை:** பிள்ளையின் வயது, அபிவிருத்தி மற்றும் ஏனைய காரணிகளின் அடிப்படையில், பிள்ளையுடன் தொடர்பாடல் மேற்கொள்வோரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தலும் பிரதானமாகும். ஏனையோரால் பிள்ளை நேர்காணல் செய்யப்பட்டுள்ளாரா என்பதை நிர்ணயித்தல் திட்டமிடலின் பகுதியாக அமைதல் வேண்டும். (ஒரே கேள்வியைக் கேட்கும் வெவ்வேறு தனியாட்களின் நேர்காணல்களைக் குறைப்பதற்காக விசாரணையாளர்கள், ஆவணப்படுத்துவோர், பத்திரிகையாளர்கள் போன்றோர்)

» **வளங்களும் செலவுகளும்:** வளர்ந்தோருக்கெதிரான பாலியல் வன்முறையை ஆவணப்படுத்துவதற்குத் தேவையானவற்றுடன் ஒப்பிடும்போது, குறிப்பாக தகவல் மூலங்களை அடையாளம் காண்பதற்கும் அணுகுவதற்கும், வேறேதேனும் மற்றும்/அல்லது மேலதிக வளங்கள் தேவைப்படுத்தப்படுகின்றனவா (அதன் மூலம் ஒட்டுமொத்த செலவுகளும் அதிகரிக்கப்படும் சாத்தியமுள்ளதா) எனப் பரிசீலித்தல். உதாரணமாக, பிள்ளை நேய சுற்றாடலை உருவாக்குவதற்கு காலமும் முயற்சியும் தேவைப்படும் என்பதுடன் இவை காரணிகளாக உள்ளடக்கப்படவும் வேண்டும்).

» **அந்தரங்கத்தன்மை:** மேலே குறிப்பிடப்பட்டவாறு, பாதிக்கப்பட்டுத் தப்பியுள்ள அல்லது சாட்சிகளாகவுள்ள சிறுவர்கள் தொடர்பான அந்தரங்கத்தன்மையானது, பராமரிப்பாளர் ஒருவரிடமிருந்து தேவைப்படுத்தப்படும் விபரமறிந்து வழங்கப்படும் சம்மதம் மற்றும் பிள்ளையொருவருக்கெதிரான குற்றச் செயல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை அறிக்கையிட வேண்டுமென்னும் சாத்தியமான ஒரு கடப்பாடு ஆகிய இரு வகைகளிலும், சிக்கலானதாகும். இவையிரண்டும் பரிசீலிக்கப்பட வேண்டும், ஆனால் இயலுமான வகையில் அந்தரங்கத்தன்மையும் பேணப்பட வேண்டும்.

*விசேட பயிற்சி பெற்ற அல்லது சிறுவர்களுடன் பணியாற்றுவதில் முன் அனுபவம் கொண்ட உரைபெயர்ப்பாளர்களைப் பயன்படுத்தல்.*

**பெட்டி 7**

### தப்பியுள்ள சிறுவர்கள் மற்றும் சாட்சிகளை ஈடுபடுத்தல்[41]

பாதிக்கப்பட்டுத் தப்பியுள்ள மற்றும் சாட்சிகளாகவுள்ள சிறுவர்களுடன் ஈடுபடும்போது, செயற்பாட்டாளர்கள், குறிப்பாக:

» பிள்ளையின் குறித்த பாதிப்புறு நிலைகள் மற்றும் ஆற்றல்களுக்குப் பதிலளிக்கக்கூடிய வகையில் செயற்பாட்டாளர்களை இயலச் செய்வதற்காக சிறுவர்களை அணுகுதல், நேர்காணல் செய்தல், மற்றும் தொடர்பீடு செய்தல் போன்றவற்றிற்குரிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

» பாதிக்கப்பட்டுத் தப்பியுள்ளோர் மற்றும் ஏனைய சாட்சிகள் ஆகியோருடன் தொடர்பு கொள்ளும்போது வயதுக்குப் பொருத்தமான நுட்பங்களின் பாவனை உள்ளடங்கலாக தீங்கிழைக்காதிருத்தல், அந்தரங்கத்தன்மை மற்றும் விபரமறிந்து வழங்கப்படும் சம்மதம் /இசைவு ஆகிய கோட்பாடுகளை எவ்வாறு சிறுவர்களுக்குரித்தாகப் பிரயோகித்தல் வேண்டும் எனப் புரிந்து கொள்ள வேண்டும்.

» பிள்ளைகளை வயதுக்குப் பொருத்தமாக நேர்காணல் செய்வதற்கான ஆற்றல் பற்றிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் மிகவும் சிறிய பிள்ளைகளுடன் தொடர்பாடல் மேற்கொள்வதற்கு வளரிளம் பருவத்தினரை கையாளுவதை விட வேறுபட்டதான ஆற்றல்கள் தேவைப்படுத்தப்படுகின்றன என்பதைக் கருத்தில் கொள்ளுதலும் வேண்டும். .

» சிறுவர்கள் மீளவும் பேரதிர்ச்சி நிலைக்கு உள்ளாவதைத் தவிர்ப்பதற்காக, உடல்ரீதியான உணர்வுகளை உணர்ந்தறிவதற்கு (நடுக்கம், தள்ளாட்டம், மற்றும் அழுகை) அவர்களுக்கு இடமளித்தல் போன்ற நுட்பங்கள் பற்றிய பயிற்சியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

» உள்ளூர் கலாசாரம் மற்றும் சமூகத்திலுள்ள சிறுவர்கள் பற்றிய புலனுணர்வு ஆகியவை பற்றிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

» ஆயுதந்தாங்கிய குழுக்கள் மற்றும் படைகளுடன் தொடர்புடைய சிறு பெண்பிள்ளைகளும் ஆண்பிள்ளைகளும் அனுபவிக்கக்கூடியதான சமூகங்களால் நிராகரிக்கப்படுவதற்கான அபாயம் போன்ற வெவ்வேறு பாதிப்புறு நிலையிலுள்ள சிறுவர் குழுக்கள் சந்திக்கும் அவர்களுக்கேயுரித்தான சவால்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

» சிறுவர்களின் சுற்றாடலில் சிறுவர்களால் பயன்படுத்தப்படும் சொற்கள் மற்றும் சொற்றொடர்களைக் கொண்ட சொல்லகராதி ஒன்றை அமைத்தல்

### 2. நேர்காணல் மேற்கொள்ளல்

பிள்ளையொருவரை நேர்காணல் செய்வதற்கான நோக்கமானது வளர்ந்த ஆளொருவரை நேர்காணல் செய்வதற்கான நோக்கத்தை ஒத்ததாகும்: துல்லியமானதும் நம்பகரமானதுமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல். சிறுவர்களை நேர்காணல் செய்தலானது, வளர்ந்தோரிடமிருந்து அவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதவிடத்து மாத்திரம் மேற்கொள்ளப்படும் ஒரு கடைசிக்கட்ட முயற்சியாகப் பார்க்கப்படக்கூடாது தனது கதையைக் கூறுதல் பிள்ளையின் நலன்களுக்கமைவாகவே அமையக்கூடும். இங்கு வேறுபடுவது, தீங்கிழைக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவற்காக மேலதிக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் சிறுவர்களின் ஞாபகங்கள், எண்ணக்கருக்கள் பற்றிய புரிதல்கள் மற்றும் அறிவாற்றல்சார் நியாயப்படுத்தல்கள் போன்றவை எவ்வாறு விருத்தியடைகின்றன என்பதைக் கருத்தில் கொள்ளுதல் போன்றவற்றுடனான நேர்காணல் மேற்கொள்ளப்படும் விதம் மாத்திரமே.

பின்வருவனவற்றை நினைவில் வைத்திருத்தல் பிரதானமாகும்:

» பிள்ளையின் வயது, அபிவிருத்தி அத்துடன் பிள்ளையின் உரிமைகள் ஆகியவை அதியுச்ச முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன.

» பெரியவர்களைப் போன்று நேர்காணல் செய்யப்படுவதற்கான அபிவிருத்தி சார் முதிர்ச்சியை வளரிளம் பருவத்தினர் கொண்டிராதிருக்கலாம் என்பதுடன் நேர்காணல் செயன்முறையின்போது அவர்கள் இளம் சிறுவர்களை ஒத்த விதத்திலும் நடத்தப்படலாகாது.

» சிறுவர்களுடன் பணியாற்றும் தொழில்வாண்மையாளர்களும் கூட அழுத்தம் தரக்கூடிய நிகழ்வுகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான சிறுவர்களின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிடலாமென்பதுடன் அவர்களது அச்சங்களையும் மிகையாக வலியுறுத்தக்கூடும்.

» இளம் சிறுவர்கள் சில நடத்தைகளின் பாலியல் இயல்பினை முழுமையாகப் புரிந்து கொள்ளாதிருக்கலாம் என்பதுடன் இவர்களுடனான கலந்துரையாடல்களுக்கான அணுகுமுறைகள் தழுவியமைக்கப்பட வேண்டியிருக்கலாம்.

» பெற்றோர் அல்லது ஆதரவளிக்கும் நபரொருவரின் வருகையால் பிள்ளையொருவரின் பதில்கள் பாதிக்கப்படலாம், ஆகவே அந்நபர் அந்த அறையில் சமூகமளித்திராது அருகாமையில் இருத்தல் சிறந்தது.

சிறுவர்களை நேர்காணல் செய்யும்போது, செயற்பாட்டாளர்கள்:

» விசேட பயிற்சி பெற்ற அல்லது சிறுவர்களுடன் பணியாற்றுவதில் முன் அனுபவம் கொண்ட உரைபெயர்ப்பாளர்களைப் பயன்படுத்த வேண்டும். அனைத்து உரைபெயர்ப்பாளர்களும் சிறுவர் பாதுகாப்பு பற்றிய பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

» பிள்ளை புரிந்து கொள்ளக்கூடிய அவரின் வயது மற்றும் விருத்தி நிலைக்குப் பொருத்தமான மொழியைப் பயன்படுத்த வேண்டும். நேர்காணல் செய்யப்படுபவர் பயன்படுத்தும் சொற்களையே இயன்றளவில் பயன்படுத்த வேண்டும். இலகுவான, சிக்கலற்ற கேள்விகள் மூலம் பூரணமான பதில்களை வரவழைக்கலாம். இயன்றளவில் பிள்ளை பயன்படுத்தும் மொழியைப் பயன்படுத்த வேண்டும்.

41 சர்வதேச மீட்புக்குழு மற்றும் யுனிசெப் (2012) பாலியல் *துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டுத் தப்பியுள்ள சிறுவர்களைப் பராமரித்தல்: மனிதாபிமான அமைப்பு முறையிலான சுகாதார மற்றும் உள-சமூக சேவை வழங்குநர்களுக்கான வழிகாட்டிகள்.* நியூயோர்க்: IRC, யுனிசெப்.

# அவருக்கு என்ன நடந்துள்ளது என்பதை விளக்குவதற்குப் பிள்ளைக்கு உதவுவதற்காக வரைதல், வரைபடம் அல்லது பொம்மைகளைப் பயன்படுத்துவது குறித்துப் பரிசீலித்தல்

அவர்களின் சொற்றொகைக்குள் புதிய சொற்களைக் உட்கொண்டுவரக்கூடாது. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட செயலை வன்புணர்வு அல்லது தாக்குதல் என தரப்படுத்தாது இலகுவாகக் குறிப்பிடுதல். உடற் பகுதிகள் மற்றும் இடம்பெற்ற செயல்கள் (பிள்ளை கூறியதன் பின்னர்) ஆகியவற்றை விளக்குவதற்காக விளக்கச் சொற்களைப் பயன்படுத்தல்.

» திறந்த கேள்விகளைப் பயன்படுத்தி, என்ன இடம்பெற்றது என்பதை மிகவும் விளக்கமாகப் பகிருமாறு பிள்ளையைக் கேட்டல் - 'என்ன நடந்தது? எப்போது? எவ்வாறு?' – பதிலொன்றை உட்கருத்தாக வெளிப்படுத்தக்கூடிய, 'அவர் உங்களது அந்தரங்க உறுப்புகளில் வலி ஏற்படுத்தினாரா?' போன்ற, கேள்விகளைக் கேட்கக்கூடாது. குறிப்பிட்ட கேள்வி கேட்பதற்கு அல்லது பதிலளிப்பதற்கு பயத்தை ஏற்படுத்தக்கூடியது என்னும் உணர்வை உங்கள் உடல்மொழியின் மூலம் வெளிப்படுத்தக்கூடிய அபாயத்தை இது தவிர்க்கும்.

» பிள்ளை பேசுவதற்குப் பாதுகாப்பான இடமொன்றை வழங்கும் பிள்ளை நேய சூழ்நிலையொன்றை உருவாக்குதல். அவருக்கு என்ன நடந்துள்ளது என்பதை விளக்குவதில் அவருக்கு உதவுவதற்காக வரைதல், வரைபடங்கள் அல்லது பொம்மைகளைப் பயன்படுத்ததுதல் குறித்துப் பரிசீலித்தல்.[42] (இக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றனவாயின், விசேடமாக அந்நேர்காணல் பதிவு செய்யப்படவில்லையாயின், வரையப்பட்ட படங்களை அல்லது வரைபடங்களை சேகரிப்பதுடன் பிள்ளை பொம்மையுடன் மேற்கொண்ட செயல்களை கவனமாக ஆவணப்படுத்துவதையும் உறுதி செய்ய வேண்டும்.)

» இடர் குறித்த அறிகுறிகள் மற்றும் தடயங்களில் கவனம் செலுத்துவதுடன் உளரீதியான மேலதிக பாதிப்பிலிருந்து பிள்ளையைக் காப்பாற்றுவதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் (உளரீதியான முதலுதவிக் கோட்பாடுகளைப் பயன்படுத்தல்[43] மற்றும் இந்நிலைகள் எழுமாயின் நேர்காணலை நிறுத்தி வைத்தல்)

» உங்கள் உடல்மொழி திகிலுணர்வை வெளிப்படுத்தாதிருப்பதை அல்லது பிள்ளை கூறுவதைப் பற்றிய எவ்வித அதிர்ச்சியைக் காண்பிக்காதிருப்பதை உறுதிப்படுத்துங்கள்— ஆவணப்படுத்துவோருக்கு அதிர்ச்சியளிக்கக்கூடியவை பாதிக்கப்பட்ட/சாட்சியாகவுள்ள பிள்ளையின் உணர்வுரீதியான சிந்தனைகளுடன் தொடர்புபடாதிருக்கலாம்.

» பிள்ளையுடன் அதே உயரத்தில் அமர்தல் உங்கள் கண்களைப் பிள்ளையின் கண்களுடன் தொடர்புபடுத்தி வைத்திருப்பதுடன் மரியாதை உணர்வை ஊக்குவிப்பதற்காகவோ அல்லது பயமுறுத்தலைக் குறைப்பதற்காகவோ பிள்ளையை நோக்கிக் குனியவோ அல்லது குனிந்து பார்க்கவோ கூடாது. அதிகாரத்தை அல்லது மேலாதிக்கத்தை வெளிப்படுத்துகின்றதும் பயம் அல்லது பயமுறுத்தலை ஏற்படுத்துவதுமான எவற்றையும் (உதாரணம் தோற்ற அமைவு, பேசும் விதம்) தவிர்த்தல் வேண்டும்.

**பெட்டி 8**

**பிள்ளை நேய சூழ்நிலையொன்றை உருவாக்குதல்**

சிறுவர்களை நேர்காணல் செய்யும்போது, அவர்களை இயன்றளவில் ஆசுவாசமாகவும் வசதியாகவும் உணரச்செய்யும் சூழ்நிலையொன்றை உருவாக்குதல் பிரதானமாகும். இதற்கான குறிப்பிட்ட சில ஆலோசனைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

» பொருத்தமாக, ஆனால் அதிகளவில் முறைமை சாராது ஆடையணிதல் (நேர்காணல் மேற்கொள்ளும் பொலிசார் சாதாரண உடை அணிதல் வேண்டும்)

» பிள்ளையுடன் நேருக்கு நேராக கண் மட்டத்தில் உட்கார்தல் (மிகவும் சிறிய பிள்ளைகளாயின் தரையில் உட்கார வேண்டியிருக்கும்)

» பிள்ளையொருவர் உடல்ரீதியான, புலன்ரீதியான, கற்றல், சமூக அல்லது தொடர்பாடற் குறைபாடொன்றைக் கொண்டிருப்பாராயின், பிள்ளையின் குறிப்பிட்ட தேவைக்கமைய நேர்காணல் நடத்தப்படுவதற்கு உதவுவதற்காக விசேட நிபுணரொருவரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுதல்

» சிறுவர்கள் இச்செயன்முறையினால் அதிகம் பயமுறுத்தப்படாதிருப்பதற்கு உதவுவதற்காக வரைதல் (உடல் வரைபடத்தைப் பயன்படுத்தல், காட்சியை வரைதல் போன்றவை) மற்றும் ஏனைய நுட்பங்களைப் பயன்படுத்துதல் குறித்துப் பரிசீலித்தல்.

PEACE மாதிரியைப் பின்தொடர்ந்து, (இம்மாதிரிக்கான அறிமுகமொன்றிற்காக அத்தியாயம் 11 இனைப் பார்க்க)இ பாதிக்கப்பட்டுத் தப்பியுள்ள சாட்சியாகவுள்ள பிள்ளையொருவருடனான நேர்காணலொன்று, பின்வரும் வடிவமைப்பில் நடத்தப்படுதல் வேண்டும்:

» **அறிமுகம்:** உங்களையும், உரைபெயர்ப்பாளர் ஒருவர் இருப்பாராயின் அவரையும், அறிமுகம் செய்வதுடன் பிள்ளைக்குப் பொருத்தமான மொழியில் நேர்காணலின் நோக்கத்தையும் விளக்க வேண்டும். நேர்காணலுக்கான **'அறிவுறுத்தல்களும்'** அறிமுகத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். (பிள்ளை உண்மையைக் கூற வேண்டும், கேள்வியொன்றைப் புரிந்துகொள்ள முடியாவிடின் அல்லது பதில் தெரியாவிடின் அதனைக் கூற வேண்டும், நேர்காணல் செய்பவரின் தவறுகளை சுட்டிக்காட்ட வேண்டும் போன்றவற்றை விளக்குதல்). மிகவும் சிறிய பிள்ளைகள் அல்லது அபிவிருத்திசார் பின்னடைவுகளைக் கொண்டிருக்கக்கூடியவர்கள் தொடர்பில், உதாரணங்களைப் பயன்படுத்துதல் மற்றும் அறிவுறுத்தல்களைப் பிள்ளை புரிந்து கொண்டதைப் பற்றி உறுதியாகவிருத்தல் பிரதானமாகும்.

42 மக்டொனால்ட், பீ., ரோஜர்ஸ், பி. (2014) *முறைமையியல் சுருக்கங்களில் 'நேர்காணல் மேற்கொள்ளல்': தாக்க மதிப்பீடு 12*, ஆராய்ச்சிக்கான யுனிசெப் அலுவலகம், புளோரன்ஸ், ப4.

43 www.nctsn.org.content/psychological-first-aid

## பகுதி (ஆக) ...ஒத்திசைவைக் கட்டியெழுப்புதலின்– கடந்த காலத்தில் பிள்ளை எதிர்கொண்ட நேர்மறை நிகழ்வொன்றை இனங்கண்டு அந்நிகழ்வைப் பற்றிய கேள்விகளைக் கேட்டல்.

» **ஒத்திசைவைக் கட்டியெழுப்புதலும் நம்பிக்கையும்:** பிள்ளை வெளிப்படையாகப் பேசுவதற்கு அவசியமான நம்பிக்கையை உருவாக்குவதற்காக நேர்காணலின் பூர்வாங்க கட்டத்தின்போது ஒத்திசைவொன்றைக் கட்டியெழுப்புவதற்காக இயன்றளவிலான நேரத்தை செலவிடுவதுடன் விசேட கவனிப்பையும் வழங்குதல். பிள்ளையின் வாழ்வில் ஏற்பட்ட நேர்மறையான நிகழ்வு அல்லது அனுபவத்தைப் பயன்படுத்தலானது பிள்ளையைப் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கும் வெளிப்படையான விவரணக் கலந்துரையாடல் ஒன்றின் மூலம் நேர்காணலுக்கான தொடர்பாடல் மாதிரியையும் இசைவு நிலையையும் விருத்தி செய்வதற்கும் உதவும். இது அடியெடுத்துக் கூறல்களின் பயன்பாட்டைப் பயிற்சி செய்வதற்கு வாய்ப்பொன்றை வழங்குவதுடன் பிள்ளையின் மொழிப் பயன்பாடு மற்றும் தகவல்களை வழங்குவதற்கான ஆற்றல்கள் ஆகியவை பற்றிய முன்னோட்டமொன்றையும் நேர்காணல் செய்பவருக்கு வழங்கும்.

» **ஞாபகங்களை அடுக்கடுக்காக மீட்டுப் பெறுதல் பற்றிய பயிற்சி மேற்கொள்ளல்:** குறிப்பாக, மிகவும் சிறிய பிள்ளைகளுக்கு, கடந்த கால நிகழ்வொன்றின் விபரங்களை அவர்களின் நினைவிலிருந்து மீட்டுப்பெறுவதற்கு இது உதவும். கடந்த காலத்தில் பிள்ளை எதிர்கொண்ட நேர்மறை நிகழ்வொன்றை இனங்கண்டு அந்நிகழ்வு பற்றிக் கேள்விகள் கேட்டல்-இது ஒத்திசைவைக் கட்டியெழுப்புதலின் ஒரு பகுதியாக அல்லது மேலதிகமாக அமையும். இதன் விடயப்பொருள் பாலியல் வன்முறை அனுபவங்களுடன் தொடர்புடையதாக இருத்தல் கூடாது. இந்த மீட்டுப் பார்க்கும் பயிற்சியின் நோக்கம், பின்னர் கலந்துரையாடப்படவுள்ள அனுபவங்கள் பற்றி நேர்காணல் செய்பவர் தேவைப்படுத்தும் விபரங்களின் மட்டத்தைப் பிள்ளை அறிந்து கொள்வதற்கு உதவுவதாகும்.

» **மெய்யுறுதிப் பிரச்சினைகளுக்கான நிலைமாற்றம்:** குறித்த விடயத்தின் உள்ளடக்கத்தைக் குறிப்பிடாது எவ்விடயம் ஆவணப்படுத்தப்படவுள்ளது என பிள்ளையை புரிந்துகொள்ளச்செய்யும் வகையில், இந்நிகழ்விலிருந்து, ஆவணப்படுத்தப்படும் விடயத்தை நேர்காணல் செய்பவர் அறிமுகப்படுத்தலாம். எவ்வாறு அவ்விடயத்தை அறிமுகம் செய்வது என்பது பற்றிய சொற்றொடர் பற்றி ஏற்கனவே சிந்தித்திருக்க வேண்டும். தாம் எதற்காக நேர்காணல் செய்யப்படுகின்றோம் என்பது பற்றிய உளக்கருத்தைப் பிள்ளை கொண்டிருக்க வேண்டும், ஆனால் பாலியல் வன்முறை தொடர்பான குறிப்பிட்ட சில கரிசனைகளைக் குறிப்பீடு செய்யாது. - நேர்காணல் செய்பவர் எதனை ஆவணப்படுத்துகின்றார் (சமூகத்தில் இடம்பெறும் 'தீய' சம்பவங்கள்/வன்முறைகள் போன்றன) என்பது குறித்த பொதுவான சட்டகமொன்று நேர்காணலில் கவனக்குவிவு ஏற்படுவதற்கு உதவும்..

» **சுயாதீனமாக நினைவுகளை மீட்டல்:** வழிப்படுத்தல் அல்லது கருத்துத் தூண்டற் கேள்விகளின்றி நேர்காணல் செய்பவரின் பகிரங்க அடியெடுத்தற் குறிப்புகளைப் பயன்படுத்தி, பிள்ளை தனக்கு நினைவிலுள்ளவாறு இயன்றளவு விரிவான விவரணமொன்றை வழங்குதலாகும்.

» **தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விகளைக் கேட்டல் மற்றும் முடிவு:** வழிகாட்டல்களுக்கு நேர்காணல் மேற்கொள்ளல் /நேர்காணல் சட்டகம் என்னும் அத்தியாயம் 11 இனைப் பார்க்க.

**பெட்டி 9**

### நேர்காணலுக்கான அறிவுறுத்தல்கள் பற்றிய பிள்ளையொருவரின் புரிதலைத் தீர்மானித்தல்

உண்மை,பொய் ஆகியவற்றுக்கிடையேயான வித்தியாசத்தை உண்மையில் பிள்ளை புரிந்துகொள்கிறாரா, நேர்காணல் செய்பவருடன் உடன்படாமை பற்றி வசதியாக உணர்கிறாரா அல்லது கேள்வியொன்றைப் புரிந்துகொள்ளவில்லை அல்லது பதில் தெரியவில்லை எனக் கூறுவாரா என்பவற்றை நிருபணமாக்கிக் கொள்ளல் பிரதானமாகும். பிரயோக ரீதியான உதாரணங்களின் மூலம், உதாரணமாக: இப்போது மழை பெய்கின்றது என நான் உங்களுக்குக் கூறினால் அது உண்மையா அல்லது பொய்யா? எனக் கேட்பதன் மூலம், இதனை மேற்கொள்ளலாம்.

**பெட்டி 10**

### கலப்பு பற்றிய அபாயம்

வெளியாட்கள் பிள்ளையின் விவரணத்தில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய அபாயத்தைக் குறைத்தல் பிரதானமாகும். இது தொடர்பில் குறிப்பிடத்தக்க பாடங்கள் கற்றுக்கொள்ளப்பட்டுள்ளன, உதாரணமாக தோமஸ் லுபங்காவுக்கு எதிரான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கில், சாட்சிகளான சிறுவர்களை அடையாளம் காண்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட இடையீட்டாளர்களின் ஆதிக்கம் கலந்திருந்ததன் காரணமாக, முன்னாள் சிறுவர் போராளிகளென ஊகிக்கப்பட்டோரின் சாட்சியம் தீர்ப்பில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.44இந்தக் கரிசனைகளைத் தீர்ப்பதற்கு சிறுவர்கள் பற்றிய சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் கொள்கை மற்றும் நீதிமன்றத்திற்கும் இடையீட்டாளர்களுக்குமிடையேயான உறவுகள் பற்றிய ஆட்சி வழிகாட்டிகள் ஆகியவை உதவுகின்றன.

44 Buisman, C. (2013) 'விசாரணைகளைக் கையளித்தல்: லுபங்கா தீர்ப்பிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்', *Northwestern Journal of International Human Rights*, 11, 3: 3.

# அத்தியாயம் 17 உள்ளடக்கம்


**அத்தியாயம் 17: ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறை.......... 265**

**A.** அறிமுகம் .......... **265**

**B.** ஐதீகங்களும் மாறாவகைகளும் .......... **265**

*பெட்டி 1*
ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றிய பொதுவான ஐதீகங்களும் ஊகங்களும் .......... 266

**C.** அளவீடுகளும் வடிவங்களும் .......... **267**

*பெட்டி 2*
ஆண்கள் நோக்கியதான பாலியல் வன்முறையின் புள்ளிவிபரவியற் தரவுகள் .......... 267

*பெட்டி 3*
பாதிக்கப்பட்டவரின் அனுபவம் .......... 268

*பெட்டி 4*

*பெட்டி 5*
ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறையின் பொதுவான வடிவங்களுக்கான உதாரணங்கள் 270

**D.** அனுபவமும் தாக்கங்களும் .......... **271**

*பெட்டி 6*
பலவந்த விறைப்புத்தன்மை மற்றும் விந்து வெளியேற்றல்கள் .......... 272

*பெட்டி 7*
ஆண் பாலியல் வன்முறைக்குப் பதிலிறுத்தல் .......... 272

**E.** சட்டச் சட்டகங்கள் .......... **273**

*பெட்டி 8*
வன்புணர்வுச் சட்டங்களின் அளவைகள் .......... 273

*பெட்டி 9*
இது ஒரு பூரணமான நிரல் அல்ல .......... 274

*பெட்டி 10*
சட்ட வழக்கு உதாரணம் - டீநஅடிய தீர்ப்பு .......... 276

**F.** ஆவணப்படுத்தற் செயன்முறையின் போதான குறித்த சில பரிசீலனைகள் .......... **277**

*பெட்டி 11*
பாலியல் வன்முறையால் பாதிக்கப்படும் ஆண்களைக் கருத்தில் கொள்ளும் ஆவணப்படுத்தற் செயன்முறைகளின் பிரதான அம்சங்கள் .......... 277

1. பூர்வாங்க ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு .......... 278
2. திட்டமிடல் .......... 279

*பெட்டி 12*
ஆண்கள் நோக்கியதான பாலியல் வன்முறையை எதிர்கொள்வதற்காக தடைகளிலிருந்து மீண்டுவருதல் .......... 280

3. நேர்காணல் மேற்கொள்ளல் .......... 280

*பெட்டி 13*
ஆண்கள் நோக்கியதான பாலியல் வன்முறைக் குறிகாட்டிகள் .......... 281

# அத்தியாயம் 17: ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறை

## A. அறிமுகம்

உலகளாவிய ரீதியில் ஒரு சில மோதல் நிலைமைகளில் ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிராக பாலியல் மற்றும் பால்நிலைசார் வன்முறைகள் இழைக்கப்படுகின்றன.[1] இவ்வகையான வன்முறைகள் நிகழ்கின்றபோதும், CARSV இனால் பாதிக்கப்படுவோராக ஆண்களுக்கு மிகக்குறைந்த அங்கீகாரமே இன்னமும் கிடைக்கின்றது. பொதுவாக, பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிராக இழைக்கப்படும் பாலியல் மற்றும் பால்நிலைசார் வன்முறைகள் பற்றிய அறிக்கையிடல் மற்றும் ஆவணப்படுத்தலுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது. இது விலக்கொன்றாக இருப்பதுடன் பல சூழமைவுகளில் பெரும்பாலும் சர்ச்சைக்குரிய விடயமாகவும் காணப்படுகின்றது. இப்பிரச்சினை பொதுவாக குறைத்து மதிப்பிடப்படுவதுடன் ஓரங்கட்டப்பட்டும் வருகின்றது.

1997 ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலிருந்தே சர்வதேச நியாயசபைகளின் தீர்ப்புகள் ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகளுடன் தொடர்புபட்டதாக வழங்கப்பட்டிருந்த அதேவேளை[2], 2013 ஜூன் மாதத்தின் UNSCR 2106 இலேயே ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச்சபையானது மோதலின் போது பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டோராக ஆண்களையும் ஆண் பிள்ளைகளையும் வெளிப்படையாக அங்கீகரித்தது.[3] பாதிக்கப்பட்டோரைப் பொறுத்தவரையில், சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றச்செயல்களை ஆவணப்படுத்தலுக்குப் பொருத்தமான சட்ட, நிறுவன, கொள்கை, செயற்பாட்டு மற்றும் நிதிக் கட்டமைப்புகள் பொதுவாகப் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளில் கவனம் செலுத்துவதுடன், சாத்தியமுள்ள பாதிக்கப்பட்டவர்களாக ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளை சரியான விதத்தில் அங்கீகரிப்பதற்குத் தவறுகின்றன. சர்வதேச குற்றவியல் விசாரணைகள் நிறுவகத்தினால் 2016 இல் வெளியிடப்பட்டதான ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான மோதலுடன் தொடர்புடைய பாலியல் மற்றும் பால்நிலைசார் வன்முறைகளை விசாரிப்பதற்கான வழிகாட்டிகளைத் தவிர,[4] தற்போதுள்ள பெரும்பாலான கட்டமைப்புகள், வழிகாட்டிகள் மற்றும் வளங்கள் ஆகியவை ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகள் அத்துடன் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் ஆகியோர் இலக்காகக் கொள்ளப்படுவதை வெளிப்படுத்தும் பால்நிலைப் பகுப்பாய்வொன்றைப் பிரயோகிப்பதற்குத் தவறியுள்ளன.

இதன் விளைவாக, பாதிக்கப்படும் ஆண்களின் குறித்த சில உள, சமூக, மருத்துவ மற்றும் நீதித் தேவைகள் சரியாகப் புரிந்து கொள்ளப்படுவதில்லையென்பதுடன் பொதுவாக நிதிகளும் பெற்றுக்கொள்ளப்படுவதில்லை. இதனால் பாதிக்கப்படும் ஆண்கள் அரிதாகவே தமக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்வதுடன் பெரும்பாலும் நீதிக்கான அணுகலில் குறிப்பிட்ட சட்ட மற்றும் பிரயோக ரீதியிலான தடைகளையும் சந்திக்கின்றனர்.

## B. ஐதீகங்களும் மாறாவகைகளும்

பல சமூகங்களில் ஆண்மை பற்றிய கலாசார நியமங்களும் பால்நிலை பற்றிய ஆழமாக வேரூன்றிய ஊகங்களும் இன்னமும் நிலவுகின்றன. இதனால், ஆண்களாலேயோ அல்லது பெண்களாலேயோ இழைக்கப்பட்ட பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டோராக ஆண்களைக் கருதுவது பலருக்கு – பொது மக்கள் முதல் சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள், வழக்குத் தொடுநர்கள் மற்றும் நீதிபதிகள் வரை - கடினமாக அமைகின்றது. இவ்வகையான வன்முறையிலிருந்து ஆண்கள் விடுபட்டோராக அமைவர் என்னும் தவறான எண்ணக்கருவானது குறிப்பாகப் பின்வரும் பால்நிலை மாறாவகைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது:

1. *ஆண்கள் இயற்கையாகவே வன்போக்குடையவர்கள், பாலியல் ரீதியான வேண்டுகை உடையவர்கள் மற்றும் பாதிப்புறு தன்மையற்றவர்கள் என்னும் அதேவேளை பெண்கள் இயற்கையாகவே அமைதியானவர்கள், பாலியல் ரீதியாக மந்தமானவர்கள் மற்றும் பலவீமானவர்கள்.* இத்தகைய மனநிலையில், குற்றமிழைப்பவர்கள் அவசியம் ஆண்களாவர் அத்துடன் பாதிக்கப்படுபவர்கள் அவசியம் பெண்களாவர் எனக்கருதுவதும் பாதிக்கப்படுபவர்கள் ஆண்களாகவும் குற்றமிழைப்பவர்கள் பெண்களாகவும் இருப்பதற்கான சாத்தியத்தை புறக்கணிப்பதும் இலகுவாகும்.[5]
2. *ஆண்கள் பலமானவர்கள், கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பவர்கள் மற்றும் பாதிப்புக்குட்படும் தன்மையற்றவர்கள்.* ஆண்மை பற்றிய மனநிலைகள் மற்றும் சமூகத்தில் ஆண்களின் வகிபங்கு ஆகியவை பாலியல் வன்முறையால் ஆண்கள் பாதிக்கப்படுகின்றனர் என்னும் எண்ணக்கருவுடன் பெரும்பாலும் ஒத்திசைவதில்லையென்பதுடன் பாதிக்கப்பட்டோர் மீதான அவநம்பிக்கைக்கும் இது இட்டுச்செல்லக்கூடும்.

1 சிவகுமாரன், எஸ். (2007) 'ஆயுதந்தாங்கிய மோதலின்போது ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறை', *European Journal of International Law,* 18, 2: 253–276.

2 *வழக்குத்தொடுநர் எதிர் ரடிக்,* ICTY வழக்குத் தீர்ப்பு, வழக்கு இல IT-94-1-T, 7 மே 1997, பந்திகள் 726, 730 இல்.

3 *'... ஆயுதந்தாங்கிய மோதல் மற்றும் மோதலுக்குப் பின்னரான நிலைமைகளில் பாலியல் வன்முறையினால், பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள், அத்துடன் அவர்கள் குறிப்பாகப் பாதிப்புக்குட்படும் நிலையிலுள்ள அல்லது குறித்து இலக்கு வைக்கப்படக்கூடிய குழுக்களாக விகிதாசாரமின்றிப் பாதிக்கப்படும் அதேவேளை, ஆண்களும் ஆண்பிள்ளைகளும் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கெதிரான பாலியல் வன்முறையில் பலவந்த சாட்சியாக்கப்பட்ட இரண்டாந்தரப் பேரதிர்ச்சிக்குள்ளாக்கப்பட்டோரும் பாதிக்கப்படுகின்றனர்'* (வலியுறுத்தல் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது), UNSCR 2106, 24 ஜூன் 2013, http://womenpeacesecurity.org/media/pdf-scr2106.pdf.

4 சர்வதேச குற்றவியல் விசாரணைகள் நிறுவகம் (2016) *ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான மோதலுடன் தொடர்புடைய பாலியல் மற்றும் பால்நிலைசார் வன்முறைகளை விசாரிப்பதற்கான வழிகாட்டிகள்* § 1.4, https://www.gov.uk/government/uploads/system/uploads/attachment_data/file/546569/PSVI_training_-_violence_against_men_and_boys.pdf.

5 மோதல்களின் போதான பாலியல் வன்முறை பற்றிய ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியின் அலுவலகம் (2013) *மோதல் நிலைமைகளில் ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றிய பயிற்சிப் பட்டறையின் அறிக்கை* ப. 8.

*...பாலியல் வன்முறை ஓர் அதிகாரக் குற்றமாகும், பாலியல் குற்றம் அல்ல.*

3. *ஆண்கள் பாலியல் ரீதியாகப் பாதிப்புக்குள்ளாக்கப்படுதலுக்கும் ஓரினச்சேர்க்கைக்குமிடையிலான தொடர்பு.* இத்தகைய நோக்கொன்றின் விளைவானது ஓரினச்சேர்க்கை செயல்களில் பலவந்தமாக ஈடுபடுத்தப்பட்ட ஆணொருவர் ஓரினச்சேர்க்கையாளராவார் அத்துடன் பாதிக்கப்பட்டவரைக் குற்றம் சுமத்தும் விதமொன்றாக, 'அவர் அதனை விரும்பியிருக்க வேண்டும்'[6] போன்ற ஊகங்களுக்கு இட்டுச் செல்கின்றது.
4. *பாலியல் வன்முறைக்கு பாலியல் ஆர்வத்தைத் திருப்தி செய்தலே பிரதான ஊக்கியாக அமைகின்றது.* பாலியல் வன்முறை பொதுவாக ஈரினச்சேர்க்கையாகவே அமையும் என்னும் ஐதீகத்திற்கு இந்த ஊகம் இட்டுச் செல்வதுடன் பாலியல் வன்முறை என்பது ஓர் அதிகாரக் குற்றமே, பாலியல் குற்றம் அல்ல என்னும் விடயத்தைப் புறக்கணிக்கின்றது. இந்த நம்பிக்கையைக் கொண்டிருப்போருக்கு, ஈரினச்சேர்க்கையாளரான ஆணொருவர் இன்னொரு ஆணை பாலியல் துர்ப்பிரயோகம் செய்வதானது ஏற்றுக்கொள்ளவே முடியாததாக அமையும் என்பதுடன் அத்தாக்குதல் இடம்பெறவில்லை, பாதிக்கப்பட்டவர் பொய் கூறுகின்றார் என்னும் முடிவுக்கும் இட்டுச்செல்லும்.

இந்த முற்கூட்டியே கருதப்பட்டதான கருத்துகள் மற்றும் பாலியல் தன்மை அத்துடன் ஓரினச்சேர்க்கை நடத்தை பற்றிய விடயங்களுடனான சௌகரியமற்ற தன்மை போன்றன பொதுவாக பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றிய சாட்சியங்கள் கருத்தில் கொள்ளப்படாமை மற்றும் புறக்கணிக்கப்படுதல் போன்றவற்றிற்கு இட்டுச்செல்வதுடன் அந்நிகழ்வுகள் பெருமளவில் ஆவணப்படுத்தப்படுவதுமில்லை.

**பெட்டி 1**

**ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றிய பொதுவான ஐதீகங்களும் ஊகங்களும்[7]**

ஆண்களை வன்புணர்வுக்குட்படுத்த முடியாது

ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறையின் ஒரே வடிவம் மலவாசல் வழியான வன்புணர்வு மாத்திரமே

ஆணொருவர் வன்புணர்வுக்குட்படுத்தப்பட முடியாதவர் அல்லது பெண்ணொருவரால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்முறையால் ஆணொருவர் பாதிக்கப்பட முடியாது.

பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படும்போது விறைப்புத்தன்மை அல்லது ஏனைய உடல்ரீதியான எதிர்வினைகளைக் கொண்டிருப்பின் (உதாரணம்: விந்து வெளியேற்றம்) அதனை அவர் விரும்பி அனுபவிக்கின்றார்.

இயல்பான பாலுணர்வைக் கொண்டுள்ள ஆணொருவர் வேறொரு ஆணை வன்புணர்வுக்குட்படுத்த மாட்டார்.

ஒரு 'உண்மையான' ஆண் வன்புணர்வுக்குட்படுவதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்

ஆண் ஓரினச்சேர்க்கையாளர்கள் மாத்திரமே ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறையை இழைக்கப்பவர்களாக/ பாதிக்கப்பட்டவர்களாக இருக்க முடியும்

பெண்களைப் போன்றளவிற்கு ஆண்கள் பாலியல் வன்முறையால் பாதிக்கப்படுவதில்லை.

ஆண் ஓரினச்சேர்க்கையாளரை வேறொரு ஆண் வன்புணர்வுக்குட்படுத்த மாட்டார்.

ஆண் ஓரினச்சேர்க்கையாளர்கள் பாலியல்ரீதியாக துர்ப்பிரயோகம் செய்யப்படுவதற்கு அவர்களே காரணம், ஏனெனில் அவர்கள் வேறுபட்டவர்கள் மற்றும் /அல்லது அவ்வாறு ஏற்படுவதற்கு அவர்களே காரணம்

பெண்ணொருவருக்கெதிராக பாலியல் வன்முறை இழைத்த ஆணொருவர் தானும் பாதிக்கப்பட்டவராக இருக்க முடியாது.

தான் பாலியல் ரீதியாகத் துர்ப்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறும் ஆண் அகதியொருவர் மீள்குடியேற்றத்தையே நோக்காகக் கொண்டுள்ளார்.

ஆண் பாலியல் வன்முறையானது தடுத்து வைக்கப்பட்டுள்ளதான கட்டமைப்புகளில் மாத்திரமே இடம்பெறுகின்றது.

6 வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவகம் (2014) *பெருவோட்டத்தினுள்ளே: ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறைகளை எதிர்கொள்ளல்: சுருக்கப் பத்திரம்.* லண்டனில் இடம்பெற்ற பயிற்சிப்பட்டறைக்காகத் தயாரிக்கப்பட்டது, 14 மே 2014. லண்டன்: ODI. ப. 2.

7 வடேர்ச்சிக், ஜே. ஏ., எட்வேட்ஸ், கே. எம்.(2012) 'ஆண் வன்புணர்வு பற்றிய ஐதீகங்கள்: 'ஓர் இலக்கிய மீளாய்வு', *ஆண்கள் மற்றும் ஆண்மை பற்றிய உளவியல்*, 13, 2: 211–226

## C. அளவீடுகளும் வடிவங்களும்

ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறை சம்பவங்கள் உலகளாவிய ரீதியில் ஆகக்குறைந்தது 25 மோதல் நிலைமைகளில், இலத்தீன் மற்றும் மத்திய அமெரிக்கா முதல் ஆபிரிக்கா, மத்திய கிழக்கு, மற்றும் ஆசியா வரையாக, ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.[8] ஆயினும், மோதல் கட்டமைப்புகளில் வளர்ந்த ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றிய துல்லியமான புள்ளிவிபர சான்றுகள் மிகவும் குறைவாகும் என்பதுடன் ஆண்பிள்ளைகளுக்கெதிரானவை இல்லையென்றே கூறலாம்.[9] இந்தப் புள்ளிவிபரப் பற்றாக்குறையானது, பின்வருவன உள்ளடங்கலாக பல ஊடறுப்புக் காரணிகளின் விளைவாக ஏற்படுகின்றது:

- பின்வருவன குறித்து அச்சமடையும் பாதிக்கப்பட்ட ஆண்களால் பாலியல் வன்முறை பற்றிய மிகவும் குறைந்தளவான அறிக்கையிடல்
  - சேவை வழங்குநர்கள் மற்றும் அதிகாரிகளின் நம்பிக்கையின்மை அல்லது பரிகாசத்தின் விளைவாக மீளவும் பாதிக்கப்படல்
  - ஓரினச்சேர்க்கையாளர்களென முத்திரை குத்தப்படல் மற்றும் அதனால் ஏற்படும் இழுக்கு மற்றும் ஓரங்காட்டல்கள் அத்துடன் குற்றத்தன்மைக்குள்ளாக்கப்படும் அபாயம்
- சில நாடுகளில், குறிப்பிட்ட நடத்தை ஒப்புதலுடன் இடம்பெற்றுள்ளதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாது, ஒரே பாலினச்சேர்க்கைச் செயல்கள் குற்றத்தன்மைக்குள்ளாக்கப்படுதலானது பாதிக்கப்பட்ட ஆண்கள் வெளிவருவதைக் கடினமாக்குகின்றது அல்லது சாத்தியமற்றதாக்குகின்றது. (கீழுள்ள பிரிவு உ, சட்டச் சட்டகங்களைப் பார்க்க)
- பாதிக்கப்பட்ட ஆண்களுக்குரித்தான ஆதரவுச் சேவைகள் மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கான பற்றாக்குறையானது அறிக்கையிடலுக்கு மேலும் தடையாக அமைகின்றது
- இத்தகைய வழக்குகளை அடையாளம் கண்டு பொருத்தமாக கையாளுவதற்கான வைத்தியர்கள், சட்டத்தரணிகள், உளவள ஆலோசகர்கள் மற்றும் மனிதாபிமானப் பணியாளர்கள் ஆகியோருக்கான பயிற்சி மற்றும் நிதிப் பற்றாக்குறை காரணமாக அதிகாரிகள், சர்வதேச செயற்பாட்டாளர்கள், மற்றும் சிவில் சமூக நிறுவனங்கள் ஆகியவற்றால் அறிக்கையிடப்படும் இத்தகைய வழக்குகளை ஆவணப்படுத்துவதற்குத் தவறுதல்
- பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான வன்முறையின் பாலியல் இயல்பானது கவனிக்கப்படாது விடப்படுகின்றது என்பதுடன் 'சித்திரவதை' என்னும் சொற்பதத்திற்குள் மறைக்கப்படுகின்றது. இதனால், ஆவணப்படுத்துநர்கள், நேர்காணல் மேற்கொள்வோர், நியாயசபைகள் மற்றும் நீதிமன்றங்கள் (சர்வதேச மட்டத்திலும் உள்ளடங்கலாக) ஆகியவற்றினாலும் அத்துடன் பாதிக்கப்பட்டோர்களாலும் இது பாலியல் தன்மையற்றதாக சித்தரிக்கப்படுகின்றது.

ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கெதிரான தோற்றப்பாட்டின் உண்மையான நிகழ்தல் தொடர்பில் விரிவான புள்ளிவிபரத் தரவுகளின் பற்றாக்குறையைப் பரிசீலிக்கையில், பாலியல் வன்முறையால் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் 'விகிதாசாரமின்றிப் பாதிக்கப்படுகின்றனர்' என்னும் கோரிக்கையானது உறுதிப்படுத்தப்படாத யூகம் என்னும் வாதமொன்று உள்ளது.

**பெட்டி 2**

### ஆண்கள் நோக்கியதான பாலியல் வன்முறையின் புள்ளிவிபரவியற் தரவுகள்

- கம்பாலாவைத் தளமாகக் கொண்டு செயற்படும் அகதிச் சட்டக் கருத்திட்டமானது பொதுச் சுகாதாரம் பற்றிய ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பள்ளியுடன் இணைந்து மேற்கொண்ட கிழக்கு கொங்கோ சனநாயக குடியரசை (DRC) சேர்ந்த ஆண் அகதிகள் பற்றிய கற்கையானது சில அகதி சனத்தொகைகளில், ஆண்களில் மூன்றில் ஒருவருக்கும் மேலானோர் தமது வாழ்நாளில் பாலியல் வன்முறையை அனுபவிக்கின்றனர் எனக் கூறுகின்றது.[10]
- கிழக்கு DRC இல் 2010 மார்ச்சில் நடத்தப்பட்ட சனத்தொகை அடிப்படையிலான அளவையொன்று அறிக்கையிடப்படும் பாலியல் வன்முறை வீதமானது பெண்களிடையேயான 39.7 வீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்களிடையே 23.6 வீதமாகக் காணப்பட்டதென வெளிப்படுத்தியது.[11]
- லைபீரியாவில் 2008 இல் மேற்கொள்ளப்பட்ட இன்னுமோர் கற்கையானது 32.6 வீதமான ஆண் போராளிகள் மற்றும் 7.4 வீதமான சிவிலியன் ஆண்களுடன் ஒப்பிடுகையில் 42.3 வீதமான பெண் போராளிகள் மற்றும் 9.2 வீதமான சிவிலியன் பெண்கள் மோதலின்போது பாலியல் வன்முறையை அனுபவித்துள்ளனரெனக் கண்டறிந்தது.[12]

---

8 மோதல்களின் போதான பாலியல் வன்முறை பற்றிய ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியின் அலுவலகம் (2013) *மோதல் நிலைமைகளில் ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றிய பயிற்சிப் பட்டறையின் அறிக்கை.* ப. 5.

9 வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவகம் (2014) *பெருவோட்டத்தினுள்ளே: ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறைகளை எதிர்கொள்ளல்: சுருக்கப் பத்திரம்.* லண்டன்: ODI.

10 Wirtz A.L., Dolan C., Ongwech O.D., Pham A.V.K., Glass N., Rubinstein L. (2013) 'உகண்டாவின் குடியிருப்புகளில் ஆண் அகதிகளுக்கிடையில் பாலியல் வன்முறை, ரிஜஈ அபாயம் மற்றும் தடுப்பு' *பாலியல் வன்முறை ஆராய்ச்சி முன்னெடுப்பு.*

11 Kirsten Johnson, Asher, J., Rosborough, S., et al., *'கிழக்கு கொங்கோ சனநாயக குடியரசின் ஆள்புலங்களில் பாலியல் வன்முறை மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுடன் உடல் மற்றும் உள சுகாதாரத்தின் இயைபு'*, JAMA, 304/5 (2010) 553-562, http://jama.jamanetwork.com/article.aspx?articleid=186342.

12 Kirsten Johnson, Asher, J., Rosborough, S., et al., 'கிழக்கு கொங்கோ சனநாயக குடியரசின் ஆள்புலங்களில் பாலியல் வன்முறை மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுடன் உடல் மற்றும் உள சுகாதாரத்தின் இயைபு', JAMA, 300/6 (2008) 676-690, http://jama.jamanetwork.com/article.aspx?articleid=182379.

## *... பாதிக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையேயான ஏற்றத்தாழ்வு உண்மையில் முன்னர் புரிந்துகொள்ளப்பட்டதைப்போன்று பாரியதல்ல*

### பிரதானமாகக் குறிப்பிடத்தக்கவை

» **நிகழ்தல்:** ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறை எங்கும் பரவியுள்ளது என்பதுடன் பாலியல் வன்முறைகள் இடம்பெறும் பெரும்பாலான மோதல் நிலைமைகளில் இடம்பெறுவதற்கு அதிகளவில் சாத்தியமுள்ளது.

» **அளவீடு:** பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறையின் உண்மையான மட்டங்கள் தீவிரமாக விசாரணை செய்யப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்ட சில சந்தர்ப்பங்களிலிருந்து எழும் விடயமானது வழமையாக ஊகிக்கப்படும் அல்லது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் அளவீட்டை விட உண்மையான அளவீடு மிகவும் அதிகமானது என்பதுடன் பாதிக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையேயான ஏற்றத்தாழ்வானது உண்மையில் முன்னர் புரிந்து கொள்ளப்பட்டதைப் போன்றளவிற்கு இல்லை என்பதுமாகும்.

» **பாதிக்கப்படுவோர்:** பாதிக்கப்படுவோர் சிவிலியன்கள் மாத்திரமல்ல என்பதுடன் இராணுவ கட்டமைப்புக்களில் (உ-ம். ஆயுதக் குழுக்கள் மற்றும் ஆயுதப்படைகளின் உறுப்பினர்கள்) பாதிக்கப்பட்ட ஆண்களும் உயர்ந்த அளவுகளில் காணப்படுகின்றனர். பாதிக்கப்பட்ட ஆண்கள் பிரதானமாக தடுத்துவைக்கப்பட்டோர், போராளிகள் மற்றும் அகதிகளுக்கிடையேயே காணப்படுகின்றனர்.

» **குற்றமிழைப்போர்:** குற்றமிழைப்போர் பெரும்பாலும் சிறைத்துறைப் பணியாட்டொகுதி, பொலிஸ் மற்றும் சமாதானத்தை நிலைநாட்டுவோர் உள்ளடங்கலாக ஆயுதக் குழுக்கள் மற்றும் ஆயுதப்படைகளைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறையை இழைப்பவர்களில் பெரும்பான்மையானோர் ஆண்கள் என நம்பப்படும் அதேவேளை, பெண்களால் துர்ப்பிரயோகம் இழைக்கப்படும் சந்தர்ப்பங்களும், விசேடமாக குற்றமிழைப்போர் குழுக்களாகச் செயற்படும்போது (உ-ம். கலப்பு மற்றும் ஒரே பால்நிலைக் குழுக்கள் ஆகிய இரண்டும்), காணப்படுவதாக அறியப்படுகின்றது.

» **வடிவங்கள்:** ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறையானது பல வகையான வடிவங்களில் அமையலாம். மலவாசல் வழியான வன்புணர்வு பொது வடிவமாக அமையும் அதேவேளை, இவ்விடயம் மிகவும் விரிவான பரப்பைக் கொண்டுள்ளது (பார்க்க, கூடு 5: 'ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறையின் பொதுவான வடிவங்களுக்கான1உதாரணங்கள்'). பாதிக்கப்பட்ட ஆண்கள் பெரும்பாலும் ஏனையோருக்கெதிரான பாலியல் நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கு (உ-ம். தடுத்து வைக்கப்பட்டுள்ள சக நபர்கள், குடும்ப உறுப்பினர்கள்) அல்லது குடும்ப உறுப்பினர்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுவதைப் பார்ப்பதற்கு பலவந்தப்படுத்தப்படுத்தப்படுவர் என்பதுடன் இவ்வன்முறை பெரும்பாலும் வேண்டுமென்றே பகிரங்கமாக மேற்கொள்ளப்படும். பாதிக்கப்பட்டவரின் அவமதிப்பையும் பாதிப்புறுதன்மை பற்றிய கூருணர்வையும் அதிகரிப்பதற்காக பலவந்தமாக நிர்வாணமாக்கப்படுதலும் (உ-ம். விசாரணையின்போது) பயன்படுத்தப்படலாம்.

» **அமைப்புகள்:** இத்தகைய வகைகளிலான வன்முறைகள் பல்வேறுபட்ட அமைப்புகளில் இடம்பெறுகின்றன: தடுத்து வைக்கப்படுமிடங்கள் (உ-ம். பொலிஸ் கட்டுக்காவல், சிறைகள், விசாரணை/சித்திரவதைக் கூடங்கள் போன்றவற்றில் இருக்கும்போது) அகதி நிலையங்கள், தடுப்பு நிலையங்கள் மற்றும் முகாம்கள் படை முகாம்கள் மற்றும் பயிற்சி நிலையங்கள் மக்களின் சொந்த வீடுகள், சுற்றுப்புறங்கள் மற்றும் கிராமங்கள். தண்டனைப் பயமின்றி அதிகாரம் பிரயோகிக்கப்படக்கூடியதான தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களையும் மற்றும் ஏனைய நிலைமைகளையும் சிவப்புக் குறிகாட்டிகள் (சுநன-கடயப ைனெைஉயவழசள) உள்ளடக்குகின்றன.

**பெட்டி 3**

### பாதிக்கப்பட்டவரின் அனுபவம்

தமிழ் ஆண், இலங்கை:

*'எனது ஆடைகள் களையப்பட்டு உள்ளாடையுடன் கதிரையொன்றுடன் கட்டிவைக்கப்பட்டேன். எனது விசாரணையாளர்கள் என்னை அடிக்கவும் குத்தவும் ஆரம்பித்தனர். நான் எல்.ரீ.ரீ.ஈ உறுப்பினர் என்னும் அவர்களின் குற்றச்சாட்டுக்களை நான் தொடர்ந்தும் மறுத்தேன். அவர்கள் என்னை வாங்கொன்றில் படுக்கச் செய்துவிட்டு தடியொன்றினால் அடிக்கத் தொடங்கினர். சித்திரவதை மேலும் மோசமடையத் தொடங்கியது, எனக்கு சிகரட்டினால் தொடர்ச்சியாக சூடு வைக்கப்பட்டது.*

*தொடர்ந்து மூன்று நாட்களாக என்னை விசாரணை செய்தோரால் நான் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டேன். வன்புணர்வு இரவிலேயே இடம்பெற்றதுடன் அவர்கள் குடிபோதையிலே நான் தடுத்துவைக்கப்பட்ட சிறைக்கூண்டிற்கு வந்தனர். இறுதியில், அந்த சித்திரவதையை என்னால் பொறுக்க முடியவில்லை. நான்காம் நாளன்று ஒப்புதல் வாக்குமூலமொன்றில் நான் கையொப்பமிட்டேன். விசாரணை செய்தோர் விசாரணையின்போது எனது அந்தரங்க உறுப்புகளை பிடித்து இழுப்பர், ஆனால் வன்புணர்வுகள் இரவிலேயே இடம்பெற்றன'.*

*'நாம் உங்களுக்கு பாடம் புகட்டுவோம்' இலங்கைப் பாதுகாப்புப் படைகளால் தமிழருக்கெதிராக இழைக்கப்பட்ட பாலியல் வன்முறை*, Human Rights Watch, பெப்ருவரி 26, 2013.

## *தண்டனைப் பயமின்றி அதிகாரம் பிரயோகிக்கப்படக்கூடியதான தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களையும் மற்றும் ஏனைய நிலைமைகளையும் சிவப்புக் குறிகாட்டிகள் (Red-flag indicators) உள்ளடக்குகின்றன*

**பெட்டி 4**

**சட்ட வழக்கு உதாரணம்– மார்ட்டினா ஜோன்சன் வழக்கு**

சிவில் தரப்பினருக்கான சட்டத்தரணி, பெல்ஜியம், ஒக்டோபர் 2014:

*‘லைபீரிய கிளர்ச்சிக் குழுவின் சார்ள்ஸ் டெய்லரின்[13] தேசிய தேசப்பற்று முன்னணியின் முன்னாள் ஆட்டிலறி படைத்தளபதியும் லைபீரிய பிரசையொருவருமான மார்ட்டினா ஜோன்சனுக்கு எதிரான வழக்கில் பாதிக்கப்பட்டோரையும் அவர்களது குடும்பங்களையும் நான் பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன்’*

*மார்ட்டினா ஜோன்சன் 2014 செப்டெம்பர் 17 ஆம் திகதியன்று ஜென்ட் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டு, லைபீரியாவின் உள்நாட்டு யுத்தத்தின்போதான காலப்பகுதியில் (1989 – 1996), பாரிய கொலைகள், சிறுவர் போராளிகளைப் படையில் சேர்த்தல் மற்றும் பாலியல் வன்முறை உள்ளடங்கலான போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கெதிரான குற்றங்கள் எனக் கருதப்படும் குற்றங்களில் அவரது நேரடிப் பங்குபற்றலுக்காக பெல்ஜிய நீதிபதியொருவரால் குற்றம் சாட்டப்பட்டார். பல்வேறு ஆண்களின் ஆணுறுப்புகளை ஜோன்சன் சிதைத்தமை போன்ற குறிப்பிடத்தக்க கொடிய பாலியல் குற்றங்கள் பற்றிய சார்த்துதல்களையும் இவ்வழக்கு கொண்டுள்ளது.*

*லைபீரியாவின் உள்நாட்டு யுத்தத்தின்போது இழைக்கப்பட்ட சர்வதேச குற்றச்செயல்களுக்காக ஒருவருக்கெதிராக குற்றப்பகர்வு செய்யப்பட்டமை இதுவே முதற்றடவையென்பதால் இது ஒரு திருப்புமுனையான வழக்காக அமைகின்றது. போதிய சாட்சியங்கள் சேகரிக்கப்படுமாயின், மோதல் சூழ்நிலையொன்றில் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிராக இழைக்கப்பட்ட பாலியல் வன்முறைக்கு உயர் பதவியிலுள்ள பெண்ணொருவர் நேரடிப் பொறுப்புடையவராகக் கண்டறியப்பட்ட முதலாவது வழக்காகவும் இது அமையும்.’*

13 இறுதியில், கிளர்ச்சி இயக்கத்தின் தலைவரான சார்ள்ஸ் டெய்லர் 1997 இல் லைபீரியாவின் சனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். 1996 முதல் 2002 வரையான காலப்பகுதியில் சியாரா லியோனில் பல்வேறு நகரங்களின் மீது தாக்குதல்களைத் திட்டமிட்டமை மற்றும் யுத்தக் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கெதிராக குற்றங்கள், மற்றும் IHL இற்கெதிரான பாரிய மீறல்கள் ஆகியவற்றில் Revolutionary United Front (RUF) என்னும் கிளர்ச்சிக் குழுவிற்கு உதவியமையும் ஆதரவளித்தமையும் ஆகியவற்றிற்காக 2012 மே 30 ஆம் திகதியன்று SCSL இனால் இவருக்கு 50 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

பெட்டி 5

## ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறையின் பொதுவான வடிவங்களுக்கான[14] உதாரணங்கள்

பின்வருவன உள்ளடங்கலாக, தனியாள் மற்றும் கூட்டு **வன்புணர்வு** (ஆண்களாலும் மற்றும் பெண்களாலும்):

» ஆணுறுப்பால் மலவாசல் வழியாக வன்புணர்வு

» ஏனைய உடல் உறுப்புகளால் (உ-ம். விரல்) மலவாசல் வழியாக வன்புணர்வு

» பொருட்களைப் பயன்படுத்தி (உ-ம். துப்பாக்கிகள், தடிகள், போத்தல்கள்) மலவாசல் வழியாக வன்புணர்வு

» வாய் வழியாக வன்புணர்வு/ பலவந்தமாக ஆணுறுப்பை வாயினால் உறிஞ்சச் செய்தல்

» போன்றோருடன் பலவந்த உடலுறவு/வாய்மூல பாலியல் உறவு மூலமாக வன்புணர்வு

  » குடும்ப உறுப்பினர்கள் (உ-ம். தாய், தந்தை, சகோதரி, சகோதரன், ஒன்றுவிட்ட சகோதரி, பெற்றாரின் சகோதரி)

  » குடும்ப உறுப்பினர்கள அல்லாதோர் (உ-ம். நண்பர்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ள சக நபர்கள்)

  » விலங்குகள்

» மலவாசல் வழியான மற்றும்/அல்லது வாய்மூல வன்புணர்வுக்கு மேலதிகமாக, குற்றமிழைப்போர் காதுகள், கண்கள் போன்றவற்றில் விந்து வெளியேற்றல்.

பின்வருவன உள்ளடங்கலாக, பிறப்புறுப்பு மீதான **சித்திரவதை** மற்றும் **சிதைப்பு**:

» பிறப்புறுப்பை அடித்தல் (உ-ம். மின்சார வடங்களால்)

» பிறப்புறுப்பு எரிப்பு (உ-ம். சிகரட்கள், உருக்கிய பிளாஸ்ரிக், கொதிநீர் போன்றவற்றால்)

» பலவந்த விருத்தசேதனம்

» பிறப்புறுப்பில் பாரமான பொருட்களைக் கட்டுதல்

» பிறப்புறுப்புகளால் இரு நபர்களை ஒன்றாகக் கட்டுதல்

» மின்சார அதிர்ச்சி

**பாலியல் ரீதியாக அவமதித்தல்:** பின்வருவன உள்ளடங்கலாக,

» பலவந்த நிர்வாணம் (உ-ம். குடும்பத்தினர், நண்பர்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ளோர், குற்றமிழைப்போர், சமூகத்தினர் முன்னிலையில்)

» பாதிக்கப்பட்ட ஆணொருவரின் மேல் வேறொருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படும்போது (உ-ம். மனைவி) மெத்தையொன்றாகப் பயன்படுத்தப்படுதல்

» குடும்பத்தினர் முன்னிலையில் வன்புணர்வுக்குட்படுத்தப்படல்

» விந்து வெளியேற்றப்படுமளவிற்கு குழியொன்றினுள் ஆணுறுப்பைத் தேய்ப்பதற்குப் பலவந்தப்படுத்தப்படல் (உ-ம். தரையில், வாழைமரத்தில்)

» பொது இடத்தில் சுய இன்பம் அனுபவிக்குமாறு பலவந்தப்படுத்தப்படல்

**பலவந்தமாக** பின்வருவன மூலமாக மலடாக்கல்:

» ஆண்மை நீக்கம் (உ-ம். ஆணுறுப்பை வெட்டுதல், தடுத்து வைக்கப்பட்டுள்ள சக நபரின் பிறப்புறுப்பைக் கடிப்பதற்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர் பலவந்தப்படுத்தப்படுதல், பிறப்புறுப்பை வாகனத்தில் கட்டுதல்)

» ஆண் பிறப்புறுப்பை சினைப்பர்களால் குறிவைத்தல்

**பலவந்தப்படுத்தி** ஏனையோருக்கெதிரான, குறிப்பாக மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், பெற்றோர், நண்பர்கள், அயலவர்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ள சக நபர்கள் போன்றோருக்கெதிரான பாலியல் வன்முறையைப் பார்க்குமாறு சித்திரவதை செய்தல்

**பலவந்த திருமணங்கள்**

**பாலியல் அடிமைத்தனம்** (உ-ம். சிறுவர் போராளிகள்)

14 சிவகுமாரன், எஸ். (2007) ‘ஆயுதந்தாங்கிய மோதலின்போது ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறை’, *European Journal of International Law,* 18, 2: 253–276.

## D. அனுபவமும் தாக்கங்களும்

CARSV பற்றிய பாதிக்கப்பட்ட ஆண்களின் அனுபவங்களும் தாக்கங்களும் பாதிக்கப்பட்ட பெண்கள் எதிர்கொள்பவற்றிற்குப் பல்வேறு விதங்களில் ஒத்ததாகவே அமையும். பாதிக்கப்பட்டோர் மீது பாலியல் வன்முறை ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான உடல், உள, சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கங்கள் பற்றிய பட்டியல் ஒன்றிற்கு அத்தியாயம் 2: பாலியல் வன்முறையைப் புரிந்து கொள்ளல், கூடு 6: பாலியல் வன்முறையின் தாக்கங்களைப் பார்க்க. இது பாதிக்கப்பட்ட ஆண்கள் மீது குறிப்பிடத்தக்க தாக்கங்களைக் கொண்டுள்ள குறிப்பிட்ட நிரலொன்றை உள்ளடக்கியுள்ளது. பாதிக்கப்பட்ட ஆண்களுக்கு மாத்திரம் உரித்தான சில குறிப்பிட்ட சவால்கள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன:

» **பால்நிலை அடையாளம்:** பாதிக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறையானது ஒத்த பால்நிலை நியமங்கள் மற்றும் தர்க்கத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன, இரு தரப்பினரும் இதனால் ‘பெண்ணியல்பாக்கப்படுவதுடன்’ இதன் விளைவாக தரம் குறைந்தவர்களாகவும் கீழ் மட்டத்தினராகவும் கருதப்படுகின்றனர். ஆண் பெண் இருவரினதும் பால்நிலை அடையாளமானது இத்தகைய வன்முறையினால் சவாலுக்குட்படுத்தப்படுகின்றது என்பதுடன் மேலதிகமான விளைவொன்றாக, இத்தகைய தாக்குதலானது பாதிக்கப்பட்ட ஆண்களுக்கு பெண்ணியல்பாக்கப்படும் அனுபவத்தை மாத்திரமன்றி ஆண்மை நீக்கம் மற்றும் ஓரினச்சேர்க்கையாளராகப் பார்க்கப்படும் அனுபவத்தையும் வழங்குகின்றது. மேலதிகமாக, இந்த நிகழ்வின் விளைவாக பாதிக்கப்பட்ட ஆண்கள் பெரும்பாலும் எந்த வகையான உடலியல் ரீதியான வேலைகளிலும் ஈடுபட இயலாதுள்ளனர். அதன் காரணமாக வருமானம் ஈட்டுவதற்கும் தமது குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதற்குமான அவர்களது ஆற்றல் இடையூறுக்குள்ளாக்கப்படுவதுடன் இது அவர்களின் ஆண்மையை மேலும் சவாலுக்குட்படுத்தி, பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு வழங்குநராக செயற்படும் தமது பாரம்பரிய வகிபங்கை ஆற்றுவதிலிருந்து அவர்களைத் தடுக்கின்றது.

» **பாலியல் அடையாளம்:** (ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருவருக்குமெதிரான) பாலியல் வன்முறையை இழைப்போர் பெரும்பான்மையாக ஆண்களென்பதாலும் பல கலாசாரங்களில் ஓரினச்சேர்க்கைச் செயல்களில் ஈடுபடுதல் (குறிப்பாக ஆண் ஊடுருவப்படும்போது) ஆணின் ஓரினச்சேர்க்கைக்கு சான்றாக அமையும் எனக் கருதப்படுவதாலும் தாம் செய்வதற்குப் பலவந்தப்படுத்தப்பட்ட பாலியல் செயற்பாடுகளின் விளைவாக பாதிக்கப்பட்ட ஆண்கள் தமது பாலியல் அடையாளம் பற்றிய குழப்பத்தை வெளிப்படுத்தக்கூடும். இயல்பாக ஏற்படும் விறைப்புத்தன்மை மற்றும் விந்து வெளியேற்றங்கள் போன்ற சாதாரண உடலியல் துலங்கல்கள் (பார்க்க, பெட்டி 6: ‘பலவந்த விறைப்புத்தன்மை மற்றும் விந்து வெளியேற்றங்கள்’) பற்றிய புரிதலின்மையினாலும் பாதிக்கப்பட்டவர்களின் குழப்பம் மேலும் அதிகரிக்கப்படலாம். இக்குழப்பமானது நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள், சமூகம் மற்றும் சேவை வழங்குநர்கள் ஆகியோரின் எதிர்வினைகளால் மேலும் மோசமடையலாம்.

» **ஆதரவு சேவைகளின் பற்றாக்குறை:** பெரும்பாலான சூழமைவுகளில் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட ஆண்கள் மனிதாபிமான நிகழ்ச்சித்திட்டங்களால் புறக்கணிக்கப்படுவதுடன் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கு எவ்வாறு பதிலாற்றுவது என்பது குறித்த பயிற்சியற்ற, மற்றும் தமக்குள்ள மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டு பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறைகளைக் கையாள்வதற்கு ஏற்கனவே திணறிவரும் சேவை வழங்குநர்களால் போதியளவில் ஆதரவளிக்கப்படுவதில்லை. மேலும், உதவிப் பணியாளர்கள், வைத்தியர்கள் மற்றும் உளவள ஆலோசகர்கள் போன்றோர், பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட ஆண்கள் ஓரினச்சேர்க்கையாளர்களாவர் மற்றும் அதனுடனான சட்ட மற்றும் சமூக மீள் பாதிப்புகளுக்கான அபாயங்கள் போன்ற தன்பாலின அச்சம் சார்ந்த கருத்துக்களை ஆதரிப்பதும் பொதுவாக இடம்பெறுவதே. இப்பிரச்சினையானது, பல்வேறு சுற்றாடல்களில் சக ஆதரவுக் குழுக்கள் காணப்படாமையுடன் சேர்ந்து, பாதிக்கப்பட்ட ஆண்கள் மீதான நிராகரிப்பு மற்றும் தனிமைப்படுத்தல் பற்றிய கூருணர்வையும் மீள வலியுறுத்துகின்றது. பொருத்தமற்ற பதிலிறுப்புடன் தொடர்புடைய சட்ட, மருத்துவ, உள மற்றும் உள-சமூக சவால்கள் காரணமாக, பெரும்பாலான பாதிக்கப்பட்ட ஆண்கள் அமைதியாக இருப்பதுடன் பாதிப்பை அறிக்கையிடுவதுமில்லை. உதவியை நாடும்போதும், பாதிக்கப்பட்ட ஆண்கள் பாலியல் வன்முறை பற்றிக் குறிப்பிடாது, வேறு பிரச்சினைகளை (உ-ம்: முதுகு வலி, தூக்கம் தொடர்பான பிரச்சினைகள், பாலியல் உறவுமுறைகளில் பிரச்சினைகள்) குறிப்பிடுவதற்கான சாத்தியம் அதிகம்.

*...பாதிக்கப்பட்ட ஆண்கள், இத்தகைய தாக்குதலை, பெண் இயல்பாக்கப்படுவதாக மாத்திரமன்றி ஆண்மை நீக்கமாகவும் ஓரினச்சேர்க்கையாகவும் உணர்கின்றனர்.*

பெட்டி 6

## பலவந்த விறைப்புத்தன்மை மற்றும் விந்து வெளியேற்றல்கள்

பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட ஆண்கள் - பாலியல் நாட்டம் மற்றும் பாலியல் அடையாளம் பற்றிய பேதமின்றி - பல்வேறு உடலியல் மற்றும் ஏனைய துலங்கல்களை அனுபவிக்கக்கூடும் என்பதுடன் இவை பலவந்த மற்றும் இயல்பான விறைப்புத்தன்மை மற்றும் விந்து வெளியேற்றங்களையும் உள்ளடக்கக்கூடும். இத்தோற்றப்பாடு எப்போதும் சரியாக புரிந்துகொள்ளப்படுவதோ எடுத்துக்கொள்ளப்படுவதோ இல்லையென்பதால், இவ்வகையான எதிர்வினைகள் பாதிக்கப்பட்டோராலும் அதற்குப் பதிலளிப்போராலும் தவறாக, அதாவது பாதிக்கப்பட்டவர் அச்செயலுக்கு சம்மதம் தெரிவித்தார் அல்லது அதனை விரும்பி அனுபவித்தார் என - பொருள்கோடல் செய்யப்படலாம். இது பாதிக்கப்பட்டவர்களுக்கே குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்பதுடன் தமது பாலியல் நாட்டம் பற்றிய சந்தேகத்தை அவர்களுக்கு எழுப்புவதுடன் தமது பாலியல் அடையாளம் பற்றிய பயத்தையும் ஏற்படுத்துகின்றது. இதனைத் தவிர்ப்பதற்காக, பின்வருவனவற்றை மேற்கொள்ளல் பிரதானமாகும்:

» ஆவணப்படுத்தலின் பூர்வாங்க ஆராய்ச்சிக் கட்டத்தின்போது செயற்பாட்டாளர்களாலும் சம்பந்தப்பட்ட ஏனைய குழு உறுப்பினர்களாலும் அனைத்து உடலியல் மற்றும் ஏனைய துலங்கல்கள் பற்றிய போதிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு அவை சரியாகப் புரிந்து கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்

» உள்ளார்ந்த குற்றவுணர்ச்சி அல்லது உறவினர்களின் நிராகரிப்பு போன்றவற்றைத் தவிர்ப்பதற்காக ,இவ்வகையான எதிர்வினைகள் இயல்பானவை எனவும் மிகவும் சாதாரணமானவை எனவும் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கும், பொருத்தமானவிடத்து, அவர்களது குடும்பங்களுக்கும் தெரியப்படுத்தி அவர்களை மீள உறுதிப்படுத்தல். இந்த உடலியல் எதிர்வினைகளை பாலியல் தூண்டல்கள் பற்றிய எண்ணக்கருவிலிருந்து பிரித்துப் பார்ப்பதானது, குறிப்பாக, பாலியல் நாட்டம் / அடையாளம் தொடர்பான குழப்பங்களை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களில் பிரதானமாகும். இது தொடர்பில், வன்முறைசார்ந்த மற்றும் விருப்பத்திற்கெதிரான வன்புணர்வினால் பெண்களும் கர்ப்பமடையலாம் என்பதையும் ஆண் பெண் சம்பந்தப்பட்ட இவ்விரு சந்தர்ப்பங்களிலும் இத்தகைய துலங்கல்கள் விருப்பம் அல்லது சம்மதத்தின் குறிகாட்டிகளாக எடுத்துக்கொள்ளப்பட முடியாது என்பதையும் மக்களுக்கு நினைவூட்டுதல் பயனளிக்கக்கூடும்.

பெட்டி 7

## ஆண் பாலியல் வன்முறைக்குப் பதிலிறுத்தல்

பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறையானது தனிப்பட்ட நபர்களைப் பாதிப்பது மாத்திரமன்றி உள்ளக மற்றும் சமூக பிறழ்ச்சிகளையும் ஏற்படுத்துவதற்கான சாத்தியமுள்ளது. குறிப்பாக, பாதிக்கப்பட்டவர் தனது சமூகத்தினால் இகழ்ச்சிக்குள்ளாக்கப்படுவதானது பெரும்பாலும் அவரது குடுமபத்தினரையும் சென்றடைகின்றது.

பாதிக்கப்பட்ட ஆண்களுக்கான பாதிக்கப்பட்டவரை மையமாகக்கொண்ட பதில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட தனிநபருடன் மாத்திரமன்றி, பொருத்தமானவிடத்து, அவரது துணை, குடும்பத்தினர் மற்றும் சமூகங்களுடனும் பணியாற்றுதல் குறித்துப் பரிசீலித்தல் வேண்டும். மேலும், சகாக்களிடமிருந்து ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கும் தமது தனிமையிலிருந்து விடுபடுவதற்கும் சுய உதவிக் குழுக்களை அமைப்பதற்கு அல்லது அவற்றில் இணைவதற்கும் பாதிக்கப்பட்டவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.[15]

15 ஆதரவுக் குழுக்களுடனான பணி பற்றிய உதாரணங்களுக்காக, Edström, J., Dolan C., and Shakrokh T., with David, O., 'Therapeutic Activism', March 2016, and 'Five journeys to activism' at www.refugeelawproject.org இனைப் பார்க்க

## E. சட்டச் சட்டகங்கள்

பல நாடுகளில், உள்நாட்டு சட்ட சட்டகங்கள் - தண்டனைச் சட்டக்கோவைகள் மற்றும் அல்லது விசேட பாலியல் வன்முறைச் சட்டங்கள் - பாதிக்கப்பட்ட ஆண்களின் நீதிக்கான அணுகலைத் தடுக்கின்றன. இதனால் ஆண்கள் தாமாகவே முன்வருதல் சாத்தியமற்றதாகவோ அல்லது அபாயம் நிறைந்ததாகவோ காணப்படுகின்றது. பாதிக்கப்பட்ட ஆண்கள் பெரும்பாலும் இரு பிரதான சவால்களை எதிர்கொள்கின்றனர்:

1. ஒரு பால்நிலைக்கு மாத்திரமே பிரத்தியேகமாகக் காணப்படும் வன்புணர்வு அல்லது பாலியல் வன்முறை பற்றிய வரைவிலக்கணங்கள். இவை இக்குற்றங்களினால் பாதிக்கப்படுவதற்கு சாத்தியமானவர்களாக ஆண்களை (மற்றும்/அல்லது குற்றமிழைக்கக்கூடியவர்களாகப் பெண்களை) அங்கீகரிப்பதில்லை அதாவது பெண்களும் பெண் பிள்ளைகளும் மாத்திரமே பாதிக்கப்பட்டவர்களாகத் தகுதி பெறுகின்றனர், ஆண்களோ ஆண் பிள்ளைகளோ அல்ல. (மற்றும்/அல்லது குற்றமிழைப்பவர்கள் ஆண்களாக மாத்திரமே இருக்க முடியும். இதனால், பாதிக்கப்பட்ட ஆணொருவர் குற்றமிழைத்த பெண்ணொருவருக்கெதிராக குற்றச்சாட்டை முன்வைத்தல் சாத்தியமற்றதாகின்றது)
2. நடத்தையானது சம்மதத்துடன் இடம்பெற்றதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாது ஓரினச்சேர்க்கைச் செயற்பாடுகளை குற்றமாக்கும் கட்டமைப்புகள்[16]. இந்த வேறுபாடுகளை ஏற்பாடுகள் மேற்கொள்ளாதவிடத்து, இத்தகைய குற்றமொன்றை அறிக்கையிடும் பாதிக்கப்பட்ட ஆணொருவர் ஓரினச்சேர்க்கைச் செயற்பாடு ஒன்றிற்காக, அது அவரின் சம்மதமின்றி இடம்பெற்றிருப்பினும் கூட, தாமே குற்றவாளியாக்கப்படலாம்.

**பெட்டி 8**

### வன்புணர்வுச் சட்டங்களின் அளவைகள்

189 நாடுகளின் வன்புணர்வு ஏற்பாடுகள் மற்றும் தேசியச் சட்டங்கள் பற்றி அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அளவையொன்று[17] பின்வருமாறு கண்டறிந்துள்ளது:

» மோதலினால் பாதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள 90 வீதமான ஆண்கள் தாம் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்படின் சட்டத்தினால் பாதுகாப்பு எதனையும் பெற முடியாத சூழ்நிலைகளிலே காணப்படுகின்றனர்.

» ஏறத்தாழ உலக சனத்தொகையின் 2/3 வீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 62 நாடுகள் பெண்களை மாத்திரமே வன்புணர்வுக்குட்பட்டுப் பாதிக்கப்படக்கூடியவர்களாக அங்கீகரிக்கின்றன[18]

» 67 நாடுகள் ஓரினச்சேர்க்கைச் செயற்பாடுகளை குற்றச் செயல்களாக அங்கீகரிக்கின்றன என்பதுடன் இதன் காரணமாக ஆண் பாலியல் வன்முறையை அறிக்கையிடுவோர் மீதே வழக்குத் தொடுக்கப்படலாம்.

» 28 நாடுகள் பாலியல் வன்முறையை இழைக்கக்கூடியவர்களாக ஆண்களை மாத்திரமே அங்கீகரிக்கின்றன, பெண்களை அல்ல.

---

16 பல சூழமைவுகளில், விபச்சாரத்தைக் குற்றச் செயலாக்கும் தேசிய சட்டங்கள் அதைப்போலவே பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் நீதிக்கான அணுகலைத் தடுக்கின்றது.

17 வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவகம் (2014) *பெருவோட்டத்தினுள்ளே: ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறைகளை எதிர்கொள்ளல்: சுருக்கப் பத்திரம்.* லண்டன்: ODI. g. 6.

18 இந்நாடுகளில் சிலவற்றில், பாதிக்கப்பட்ட ஆண்கள் 'பாலியல் தாக்குதல்' அல்லது 'கண்ணியமற்ற தாக்குதல்' என்பவற்றிற்கான நிவர்த்தியை நாட முடியும், ஆனால் இந்த ஏற்பாடுகள் பொதுவாக பெண்களின் வன்புணர்விற்கு வழங்கப்படுவதை விடக் குறைந்தளவிலான தண்டனைகளையே குற்றமிழைப்போருக்கு வழங்குகின்றன.

*...ஆண்களை நோக்கியதான பாலியல் வன்முறையானது, தற்போதும், பெரும்பாலும் வன்புணர்வாக அன்றி சித்திரவதையாக அல்லது மனிதாபிமானமற்ற நடத்துகையாகவே குற்றஞ்சாட்டப்படுகின்றது ...*

**பிரதானமாகக் குறிப்பிடத்தக்கவை**

» ICC இன் ரோம நியதிச்சட்டமானது வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறையின் ஏனைய வடிவங்கள் பற்றிய பால்நிலை சமத்துவ வரைவிலக்கணங்களைக் கொண்டுள்ளது. ரோம நியதிச்சட்டமானது உள்நாட்டில் வகுத்தமைக்கப்பட்டதும் அல்லது அதனையொத்த ஏற்பாடுகள் வகுத்தமைக்கப்பட்டதுமான நாடுகளில், சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் ஆகக்குறைந்தது சர்வதேச குற்றச் செயல்களின் சூழமைவிலேனும் ஆண்களும் ஆண் பிள்ளைகளும் பாதிக்கப்படுவதற்கு சாத்தியமானவர்களாகவும் பெண்களும் பெண் பிள்ளைகளும் குற்றமிழைப்பதற்கு சாத்தியமானவர்களாகவும் அங்கீகரிக்கப்படுகின்றனர் என்பதே இதன் பொருளாகும். தேசிய சட்டத்தில் பொருத்தமான சர்வதேச சட்டங்கள் பற்றிய வரைவிலக்கணங்கள் வகுத்தமைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களிலும்கூட, ‘சாதாரண’ குற்றச்செயல்கள் பற்றிய வரைவிலக்கணங்கள் பிரச்சினைக்குரியதாகவும் சர்வதேச தராதரங்களுடன் இசைவற்றதாகவும் அமையலாம்.

» பால்நிலை பற்றிய ரோம நியதிச்சட்டத்தின் வரைவிலக்கணமானது சமூக சூழமைவினுள் புரிந்துகொள்ளப்படுகின்றவாறு, ஆண் பெண் ஆகிய இரு பால்நிலைகளையும் குறிப்பிடுகின்றது. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட குழுவினுள் ஆண்களும் ஆண் பிள்ளைகளும் முறையியல் ரீதியாக ஆண்மை நீக்கம் செய்யப்படுதலானது – ஏனைய குற்றச்செயல்களுக்கு மேலதிகமாக – பால்நிலையின் அடிப்படையில் மனிதாபிமானத்திற்கெதிரான அட்டூழியமான குற்றமாக விசாரிக்கப்படுதல் வேண்டும் என்பதே இதன் பொருளாகும் (ரோம நியதிச்சட்டத்தின் உறுப்புரை 7 (1) (ஏ))

» வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறையின் ஏனைய வடிவங்கள் பற்றிய வரைவிலக்கணங்கள் பாதிக்கப்படுவதற்கு சாத்தியமானவர்களாக ஆண்களை (மற்றும்/அல்லது குற்றமிழைக்கக்கூடியவர்களாகப் பெண்களை) உள்ளடக்கும் நாடுகளில், வன்முறையின் பாலியல் தன்மையைப் பிரதிபலிப்பதற்காக, அவ்வகையினுள் வரும் செயல்களை வன்புணர்வு அல்லது பாலியல் வன்முறையாக (சாத்தியப்படுமிடத்து ஏனைய தவறுகளுக்கு மேலதிகமாக) ஆவணப்படுத்துவதற்கு செயற்பாட்டாளர்கள் முயற்சித்தல் வேண்டும்.

» வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறையின் ஏனைய வடிவங்கள் பற்றிய வரைவிலக்கணங்கள் பாதிக்கப்படுவதற்கு சாத்தியமானவர்களாக ஆண்களை (மற்றும்/அல்லது குற்றமிழைக்கக்கூடியவர்களாகப் பெண்களை) உள்ளடக்காத நாடுகளில், செயற்பாட்டாளர்கள் அச்செயல்களை, ஆண்களும் ஆண் பிள்ளைகளும் உள்ளடக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றதான வரைவிலக்கணங்களைக் கொண்டுள்ள, சித்திரவதை போன்ற பாலியல் தன்மையற்ற பாரதூரமான தவறுகளாக ஆவணப்படுத்திக் கொள்ளலாம்.

» சர்வதேச மட்டத்திலும் கூட, பாதிக்கப்படும் ஆண்களுக்கெதிரான குற்றங்களின் பாலியல் பரிமாணமானது, அதற்கான சட்டச் சட்டகத்தின் அனுமதி காணப்படுகின்றபோதும், எப்போதும் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. சர்வதேச நீதிமன்றங்களிலும் நியாயசபைகளிலும், ஆண்களை நோக்கியதான பாலியல் வன்முறை தற்போதும் கூட வன்புணர்வாக அன்றி பெரும்பாலும் சித்திரவதையாக அல்லது ஏனைய மனிதாபிமானத்திற்கெதிரான நடத்தையாகக் கருதப்பட்டே வழக்குத் தொடுக்கப்படுகின்றது அல்லது இவற்றிற்கு வழக்குத் தொடுக்கப்படுவதில்லை. உண்மைகளுக்கமைய அத்தகைய சட்டத் தகுதிக்கு இட்டுச் செல்லும் சந்தர்ப்பங்களிலும் கூட இவ்வாறாக இடம்பெறுகின்றது. பாதிக்கப்பட்ட ஆண்கள் தொடர்பான சட்டத் தகுதி ஒரு சில தீர்மானங்களிலேயே காணப்படுகின்றது. (பார்க்க - கூடு 9: ‘ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றிய தீர்மானங்களுக்கான உதாரணங்கள்’).

**பெட்டி 9**

**ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய சர்வதேச தீர்மானங்களுக்கான உதாரணங்கள் 19 இது ஒரு பூரணமான நிரல் அல்ல**

| நீதிமன்றம்/ நியாயசபை | வழக்கு | உண்மைகள் | சட்டத் தகைமை |
|---|---|---|---|
| ICTY | வழக்குத் தொடுநர் எதிர் Tadic (1997) | A மற்றும் B ஆகிய இரு தடுத்து வைக்கப்பட்ட ஆண்கள் வேறொரு கைதியான C என்பவரை ஏனையோரின் முன்னிலையில் பாலியல் ரீதியில் தாக்குமாறு பலவந்தப்படுத்தபட்டனர் (C என்பவரின் நிர்வாணமான பின்புறத்தை நக்குமாறு A இற்குக் கட்டளையிடப்பட்டதுடன் C இன் ஆணுறுப்பை உறிஞ்சுமாறும் அவரின் ஆண் இனப்பெருக்க உறுப்பில் அடிக்குமாறும் விதைப்பையொன்றைக் கடிக்குமாறும் B இற்குக் கட்டளையிடப்பட்டது)[20] | மனிதாபிமானத்திற்கெதிரான குற்றச்செயல்களாக அட்டூழியம் மற்றும் மனிதாபிமானமற்ற செயல்கள். யுத்தக் குற்றங்களாக சித்திரவதை அல்லது கொடூரமான நடத்துகை. |
| ICTY | வழக்குத் தொடுநர் எதிர் Todorovic (2001) | பொலிஸ் நிலையமொன்றில் வைத்து, தொடர்ச்சியாகஅடிக்கப்பட்ட பின்னர், ஒருவரோடொருவர் வாய்மூலமான பாலியல் உறவில் ஈடுபடுமாறு ஆகக்குறைந்தது நான்கு பேருக்கேனும் Todorovic கட்டளையிட்டார்[21] | மனிதாபிமானத்திற்கெதிரான குற்றச்செயலாக அரசியல், இன மற்றும் மதக் காரணிகளின் அடிப்படையிலான அட்டூழியம். |
| ICTY | வழக்குத் தொடுநர் எதிர் Cesic (2004) | தடுத்து வைக்கப்பட்ட இரு சகோதரர்கள் ஏனையோரின் முன்னிலையில் ஒருவருக்கொருவர் ஆணுறுப்பை உறிஞ்சுமாறு துப்பாக்கிமுனையில் பலவந்தப்படுத்தப்பட்டனர்[22] | மனிதாபிமானத்திற்கெதிரான குற்றச்செயலாக வன்புணர்வு. யுத்தக் குற்றமாக அவமானப்படுத்தும் மற்றும் கீழ்த்தரமான நடத்துகை. |

பெட்டி 9

## ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய சர்வதேச தீர்மானங்களுக்கான உதாரணங்கள் 19 இது ஒரு பூரணமான நிரல் அல்ல

| நீதிமன்றம்/ நியாயசபை | வழக்கு | உண்மைகள் | சட்டத் தகைமை |
|---|---|---|---|
| SCSL | வழக்குத் தொடுநர் எதிர் Sesay, Kallon and Gbao (2009) | பிடித்து வைக்கப்பட்டுள்ள ஏனைய கைதிகளின் முன்னிலையில் உடலுறவில் ஈடுபடுமாறு கிளர்ச்சியாளர்கள் ஒரு தம்பதிக்குக் கட்டளையிட்டனர் பின்னர் தனது தந்தையின் ஆணுறுப்பைக் கழுவுமாறு ஆணின் மகள் பலவந்தப்படுத்தப்பட்டார்.[23] | யுத்தக் குற்றங்களாக தனி மனித மாண்பின் மீதான அவமதிப்பு |
| ICC | வழக்குத் தொடுநர் எதிர் Bemba (2016) | ஆகக்குறைந்தது 28 நபர்களின் (ஆண்கள் மற்றும் பெண்கள்) மீதான வன்புணர்வு மற்றும் கூட்டு வன்புணர்வு. அவை சில சமயங்களில் குடும்பத்தினர் மற்றும் சமூகத்தினர் முன்னிலையில் இடம்பெற்றது[24] | மனிதாபிமானத்திற்கெதிரான குற்றச்செயலாகவும் யுத்தக் குற்றமாகவும் வன்புணர்வு. |
| EAC | வழக்குத் தொடுநர் எதிர் Habré (2016) | ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாப்புப் பணியகத்திலுள்ள (இரகசிய பொலிஸ்) சிறைகளில் விசாரணையின்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறை இது ஆண் இனப்பெருக்க உறுப்பில் அடித்தல்/மின்சாரம் பாய்ச்சப்படல், இயற்கைக்கு முரணான பாலியல் புணர்ச்சி மற்றும் ஆணுறுப்பில் பொருட்களை உள்ளிடுதல் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது.[25] | மனிதாபிமானத்திற்கெதிரான குற்றச்செயலாக சித்திரவதை |

19 சிவகுமாரன், எஸ். (2010) 'Lost in Translation: ஆயுதந்தாங்கிய மோதலின்போதான நிலைமைகளில் ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறைக்கான ஐநாவின் பதிலிறுப்பு', *International Review of the Red Cross*, 92, 259: 272–275.

20 *வழக்குத் தொடுநர் எதிர். Dusko Tadic,* அபிப்பிராயம் மற்றும் தீர்ப்பு, ICTY Trial Chamber, IT-94-1-T, 7 மே 1997, § 206 at http://www.icty.org/x/cases/tadic/tjug/en/tad-tsj70507JT2-e.pdf; தண்டனைத் தீர்ப்பு, 11 நவம்பர் 1999 at http://www.icty.org/x/cases/tadic/tjug/en/tad-tsj991111e.pdf. ICTY இனால் ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறை கையாளப்பட்ட முதலாவது வழக்கு இதுவாகும். அதன் பின்னர், ஐஊவுலு இன் முன்பாக, Milosevic, Cesic, Mucic, Todorovic மற்றும் Simic உள்ளடங்கலான ஏனைய வழக்குகளிலும் ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறை சம்பவங்கள் விசாரிக்கப்பட்டன. Tadic வழக்கில், ஆண்களும் பெண்களும் முகாம்களில் வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டார்களென குற்றப்பகர்வு குறிப்பிடுகின்றபோதும், ஒருவருக்கொருவர் ஆணுறுப்பை உறிஞ்சுமாறு பலவந்தப்படுத்தப்பட்ட பாதிக்கப்பட்ட ஆண்கள் தொடர்பான உண்மைகள், வன்புணர்வு அல்லது பாலியல் வன்முறையின் ஏனைய வடிவங்கள் என்பதை விட சித்திரவதை, கொடூரமான மற்றும் மனிதாபிமானமற்ற செயல்களாகவே குற்றஞ்சாட்டப்பட்ட அதேவேளை பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பான பாலியல் வன்முறை சம்பவங்கள் வன்புணர்வாகக் குற்றஞ்சாட்டப்பட்டன.

21 வழக்குத் தொடுநர் எதிர் *Stevan Todorovic*, தண்டனைத் தீர்ப்பு, Trial Chamber, IT-95-9/1-S, 31 யூலை 2001 § 38-40. http://www.icty.org/x/cases/todorovic/tjug/en/tod-tj010731e.pdf.

22 *வழக்குத் தொடுநர் எதிர். Ranko Cesic,* தண்டனைத் தீர்ப்பு, ICTY Trial Chamber I, IT-95-10/1-S, 11 மார்ச் 2004, § 13-14. http://www. icty.org/x/cases/cesic/tjug/en/ces-tj040311e.pdf. இச்சந்தர்ப்பத்தில் மாத்திரமே பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறையானது ICTY இனால் வன்புணர்வு என குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தொடுக்கப்பட்டது

23 வழக்குத் தொடுநர் எதிர். *Issa Hassan Sesay, Morris Kallon, Augustine Gbao,* தீர்ப்பு, Trial Chamber I, SCSL-14-15-T, 2 மார்ச் 2009, § 1205. http://www.rscsl.org/Documents/Decisions/RUF/1234/SCSL-04-15-T-1234-searchable.pdf. வன்புணர்விற்காகப் பிரயோகிக்கப்படக்கூடிய வரைவிலக்கணமானது பால்நிலை தொடர்பில் நடுநிலையானதெனவும் ஆண் பெண் ஆகிய இருவரும் வன்புணர்வினால் பாதிக்கப்படலாமெனவும் நீதிமன்றம் அங்கீகரித்துள்ளபோதும் இவ்விடயங்கள் தனி மனித மாண்பின் மீதான அவமதிப்பு எனக்கருதி வழக்குத் தொடுக்கப்பட்டது (§146).

24 மத்திய ஆபிரிக்கக் குடியரசில் காணப்படும் நிலைமை, *வழக்குத் தொடுநர் எதிர். Jean-Pierre Bemba Gombo*, Judgement pursuant to Article 74 of the Statute, Trial Chamber III, ICC-01/05-01/08, 21 மார்ச் 2016 § 494, 498 மற்றும் 637. https://www.icc-cpi.int/CourtRecords/CR2016_02238.PDF.

25 *வழக்குத் தொடுநர் எதிர் Hissène Habré*, தீர்ப்பு, 30 மே 2016 §610-624, §1564-1570. http://www.chambresafricaines.org/pdf/Jugement_complet.pdf

பெட்டி 10

### சட்ட வழக்கு உதாரணம் - Bemba தீர்ப்பு

மத்திய ஆபிரிக்கக் குடியரசில் 2002 – 2003 காலப்பகுதியில் Jean-Pierre Bemba Gombo (Bemba) இன் வலுவுள்ள அதிகாரம் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் சிப்பாய்களால் இழைக்கப்பட்ட கொலை, சூறையாடுதல் மற்றும் வன்புணர்வு26 ஆகிய குற்றங்களுக்காக கட்டளைத் தளபதி என்ற வகையில் அவரின் பொறுப்பிற்காக வழங்கப்பட்ட குற்றத்தீர்ப்பானது பல்வேறு வகைகளில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. Bemba தனது கட்டளையின் கீழுள்ள படையினரால் இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக ICC இனால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்ட முதலாவது நபர் மாத்திரமன்றி பாலியல் வன்முறைக்காக ICC இனால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்ட முதலாவது நபருமாவார். மேலும், இவ்வழக்கின் வன்புணர்வுக் குற்றச்சாட்டுகள் வன்புணர்வினால் பாதிக்கப்பட்ட ஆண் பெண் இருபாலாரான ஆகக்குறைந்தது 28 பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பாதிக்கப்பட்ட ஆணொருவரின் அனுபவத்தின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது:

*அவரது மனைவி, மகள் மற்றும் பேர்த்தி ஆகியோர் தாக்கப்பட்ட அதே தினத்தில், அவரது வளவில் வைத்து குடும்ப உறுப்பினர்களும் அவரது அயலவரும் பார்த்துக்கொண்டிருந்தபோது, மூன்று ஆயுதந்தாங்கிய சிப்பாய்கள் P23 இன் மல வாசலில் தங்களது ஆணுறுப்பைப் புகுத்தினர். இதற்கமைய, 2002 நவம்பர் மாதத்தின் ஆரம்பப்பகுதியில், PK 12 இலுள்ள P23 இன் வளவினுள், குற்றமிழைத்தவர்களான மூவரும் பலவந்தமாக தமது ஆணுறுப்புகளை P23 இன் மலவாசலுக்குள் நுழைத்ததன் மூலம் அவரின் உடலை ஊடுருவியதாக சபை கண்டறிந்துள்ளது. அந்நிகழ்வுகளுக்குப் பின்னர், P23 இன் மலவாசல் வீக்கமடைந்ததால் அவரால் நடக்க முடியவில்லை என்பதுடன் அவருக்கு பாரம்பரிய இலைகளினால் மாத்திரமே சிகிச்சையளிக்கப்பட்டது. அவரது சமூகத்திலுள்ள மக்கள் அவரை அவமரியாதை செய்தனர். அவர் தம்மை 'இறந்த நபராகக்' கருதுகின்றார் (பந்தி 494).*

26 மனிதாபிமானத்திற்கெதிரான குற்றச்செயல்களாக கொலை மற்றும் வன்புணர்வு அத்துடன் யுத்தக் குற்றங்களாக கொலை, வன்புணர்வு மற்றும் சூறையாடுதல்

*பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறை... அனைத்து அம்சங்களிலும் மற்றும் பொறுப்புக்கூறலை மையப்படுத்திய செயன்முறையின் எந்தக் கட்டங்களிலும் முறையியல் ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்...*

## F. ஆவணப்படுத்தற் செயன்முறையின் போதான குறித்த சில பரிசீலனைகள்

பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறையின் நிகழ்வு, தன்மை மற்றும் அளவுகள் பற்றிய சாட்சியங்களை செயற்பாட்டாளர்கள் துடிப்பாக தேடியறிந்தாலேயன்றி அவர்களால் அதனைப் பெற்றுக்கொள்வது சாத்தியமற்றது. ஆகவே, பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறையானது, இனங்காணப்பட்டு, போதியளவில் ஆவணப்படுத்தப்பட்டு நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு, அனைத்து அம்சங்களிலும் மற்றும் பொறுப்புக்கூறலை மையப்படுத்திய எந்தக் கட்டங்களிலும் முறையியல் ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிசீலனைகள் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான மீறுதல்களை ஆவணப்படுத்துவதற்கு மாத்திரமே உரித்தானவை என்பதுடன் ஆவணப்படுத்தற் செயன்முறையின் பூர்வாங்க ஆராய்ச்சி மற்றும் திட்டமிடலிலிருந்து பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை நேர்காணல் செய்வது வரை, இந்த ஒழுங்குமரபில் தரப்பட்டுள்ள பொதுவான வழிகாட்டலின் பகுதியொன்றாகவும் கருதப்படுதல் வேண்டும். ஆண் பிள்ளைகளுக்கெதிரான குற்றங்களையும் மீறுதல்களையும் ஆவணப்படுத்தும்போது, சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறை என்னும் அத்தியாயம் 16 இல் தரப்பட்டுள்ள தகவல்கள் பொதுவான வழிகாட்டல்களை வழங்குவதுடன் கருத்தில் கொள்ளப்படுதலும் வேண்டும்.

**பெட்டி 11**

### பாலியல் வன்முறையால் பாதிக்கப்படும் ஆண்களைக் கருத்தில் கொள்ளும் ஆவணப்படுத்தற் செயன்முறைகளின் பிரதான அம்சங்கள்

பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறையை ஆவணப்படுத்தற் செயன்முறையினுள் ஒன்றிணைத்தலானது பின்வரும் விதத்தில் ஆவணப்படுத்தற் திட்டமிடலுக்குப் பொருத்தமாக அமைதல் வேண்டும்:

1. களத்தில் செலவிடப்படும் நேரம்: அத்தகைய பாதிக்கப்பட்டோருடன் அவசியமான நம்பிக்கை மற்றும் ஒத்திசைவைத் தாபிப்பதற்கு அதிக நேரமும் பல நேர்காணல்களும் தேவைப்படலாம்.
2. நேர்காணலை மேற்கொள்பவர் தொடர்பில் பாதிக்கப்பட்டவரின் விருப்பத் தெரிவினை சேர்த்துக்கொள்வதற்காக, ஆண் மற்றும் பெண் உரைபெயர்ப்பாளர்கள் மற்றும் நேர்காணல் மேற்கொள்வோர் ஆகியோருடன் போதியளவிலான பணியாட்டொகுதியினரை அணிகள் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆண் பாலியல் வன்முறையை ஆவணப்படுத்தலுடன் தொடர்புடைய ஏதேனும் குறித்த அபாயங்களை அந்தரங்கத்தன்மை மற்றும் பாதுகாப்பு பற்றிய பரிசீலனைகள் கூட்டிணைத்தல் வேண்டும். (உ-ம். தன்பாலின அச்சம் பற்றிய சட்டங்கள்)
4. பாதிக்கப்பட்ட ஆண்களுக்கான தொடர்பீட்டு வழிவகைகளை இனங்காணுவதற்குப் பொருத்தமான திட்டமிடல்.
5. ஆவணப்படுத்தற் திட்டத்தை திறமையாக நிறைவேற்றுவதற்காக, தேவைப்படுகின்றவாறு, ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். சில சமயங்களில்,விழிப்புணர்வு மற்றும் கொள்திறனைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித் திட்டங்களிலும் பங்குபற்றுவதற்கான தேவை ஏற்படலாம். நீதிமன்ற நடவடிக்கைமுறைகளுக்காக நிபுணத்துவ ஆலோசனை மற்றும் அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தேவை ஏற்படுவதற்கும் சாத்தியமுள்ளது.
6. போதிய தகவல்களின்மை அல்லது சாட்சிகள், சமூகங்கள் மற்றும் அதிகாரிகளிடமிருந்தான ஏனைய தடைகள் ஆகியவற்றுடன் போராடுவதற்கான பொறுமை மற்றும் மீட்டெழுச்சி

## 1. பூர்வாங்க ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு

பூர்வாங்க ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக் கட்டத்தின்போது, செயற்பாட்டாளர்கள்:

» **ஒப்புக்கோள் அடிப்படையை ஏற்றல் வேண்டும்:** ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகள் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டிருப்பதற்கான சாத்தியம், அத்தகைய சார்த்துதல்கள் காணப்படாத, பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பான சார்த்துதல்கள் மாத்திரமே காணப்படுகின்ற மற்றும் பாலியல் வன்முறை பற்றிய சார்த்துதல்களே இல்லாத சூழமைவுகளிலும் கூட, காணப்படலாம் என்பதைத் திட்டவட்டமாகக் கருத்தில் கொள்ள வேண்டும். இது அடுத்துவரும் அனைத்து ஆவணப்படுத்தற் செயற்பாடுகளிலும் தாக்கம் செலுத்தும். அறிக்கைகள், கலந்துரையாடல்கள் மற்றும் சேகரிக்கப்பட்ட ஏனைய தகவல்கள் ஆகியவற்றில் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றிய குறிப்பீடுகள் இல்லாதிருப்பதானது அத்தகைய வன்முறை இடம்பெறவில்லையெனப் பொருளாகாது என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். இத்தகைய மௌனம் ஆலோசனை பெறப்பட்டோரின் அல்லது ஆக்கியோரின் தனிப்பட்ட பாரபட்சங்களை பிரதிபலிக்கலாம். குறித்த நிறுவனங்களின் கொள்கை அல்லது ஆணையை அல்லது தவறாக வழிநடத்தும் வகையீடு ஒன்றையும் (உதாரணமாக, பாலியல் வன்முறைச் செயல்களை அவ்வன்முறையில் பாலியல் தன்மையைக் குறிப்பீடு செய்யாது சித்திரவதை செயல்களாக வகைப்படுத்தல்) கூடப் பிரதிபலிக்கலாம்.

» **குறிகாட்டிகள்:** தடுத்து வைக்கப்படும் நிலைமைகள், குறித்த பாதிப்புறுநிலை அல்லது அதிகார சமநிலையின்மை காணப்படும் ஏனைய நிலைமைகள் போன்ற அத்தகைய வன்முறையொன்று இடம்பெற்றிருக்கலாம் என்பதைக் குறிப்பிடக்கூடிய சிவப்புக் குறியீடுகள் மற்றும் ஆராய்ச்சிக் கட்டத்தின்போது தோன்றும் ஏனைய குறிகாட்டிகள் (உ-ம். முதுகு வலி அல்லது பாலியல் உறவுமுறைகளில் பிரச்சினைகள் பற்றி முறையிடும் ஆண்களின் சிகிச்சை அறிக்கைகளில சடுதியான அதிகரிப்பு) பற்றி விழிப்பாகவிருத்தல் வேண்டும். (பார்க்க- கூடு 13: 'ஆண்களை நோக்கியதான பாலியல் வன்முறைகளின் குறிகாட்டிகள்')

» **அபாயங்கள்:** ஆராய்ச்சியின் சூழமைவு - பாதிக்கப்பட்ட ஆண்கள் நோக்கியதான சமூக மனநிலைகள் உள்ளடங்கலான ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறையை ஆவணப்படுத்தல் மற்றும் வேறேதேனும் சட்டச் சட்டகத்தின் பிரகாரம் தகவல் சேகரிக்கப்பட்டிருப்பினும்கூட, பிரயோகிக்கப்படக்கூடிய உள்ளூர் சட்டச் சட்டகம் (மேலுள்ள உ, சட்டச் சட்டகங்களைப் பார்க்க) ஆகியவை தொடர்புடைய குறித்த அபாயங்கள்.தன்பாலின அச்சம் காணப்படும் ஒரு சில சூழமைவுகளில், ஓரினச்சேர்க்கை பற்றிய சந்தேகமானது மரணம், சிறையிலடைப்பு அல்லது ஏனைய பாரதூரமான விளைவுகளுக்கு இட்டுச்செல்லும் என்பதுடன் ஏனையவற்றுடன் சேர்த்து பாதிக்கப்பட்ட ஆண்கள் வெளிவந்து அது குறித்துப் பேசுவதிலும் அந்தரங்கத்தன்மை பற்றிய அக்கறைகளிலும் இது பாரியளவில் பாதிப்பை ஏற்படுத்தும். சட்டச் சட்டகத்தைப் பொறுத்து, பலவந்த வன்புணர்வு ஊடுருவலானது குற்றமாக்கப்படலாம் அத்துடன் நிர்ப்பந்தம்/அச்சுறுத்தல்கள் தற்காப்புகளாக எடுக்கப்பட முடியாதிருக்கலாம். பாதிக்கப்பட்ட ஆண்களுடன் பணிபுரியும் செயற்பாட்டாளர்கள் 'ஓரினச்சேர்க்கைளை ஊக்குவிப்பதாக' பொருள் கொள்ளப்படலாம் என்பதுடன் சமூகங்கள், அதிகாரிகள் மற்றும் ஏனையோரிடமிருந்து மேலதிக தடைகளையும் எதிர்கொள்ளக்கூடும். இதனைக் குறைப்பதற்கான மூலோபாயங்கள் இது தொடர்பில் விருத்தி செய்யப்படுதல் வேண்டும்.

» **தொடர்பீடுகள்:** பாதுகாப்பு, உள மற்றும் உளசமூக, மருத்துவ மற்றும் சட்ட ஆதரவிற்காக பாதிக்கப்பட்டுத் தப்பிய ஆண்களை தொடர்பீடு செய்வதற்காக, தகுந்த முறைசார் மற்றும் முறைசாரா சேவைகளை, குறிப்பாக அவர்களின் அந்தரங்கத்தைப் பேணும்வகையில் உதவுவதற்கான அவற்றின் விருப்பம் மற்றும் ஆற்றலை மதிப்பீடு செய்து, கண்டறிந்து கொள்ள வேண்டும். ஆண்களை மையப்படுத்திய தொடர்பீட்டு வழிமுறைகள் இல்லாத பட்சத்தில், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவு வழங்கும் மருத்துவப் பணியாட்டொகுதியினர் மற்றும் ஏனைய தொழில்வாண்மையாளர்கள் ஆகியோர் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கு பராமரிப்பு மற்றும் ஆதரவு வழங்குவதற்காகப் பயிற்றப்பட முடியுமா அல்லது பிரச்சினையின் கூருணர்வையும் பாதிக்கப்பட்டுத் தப்பிய ஆண்களின் அந்தரங்கத்தன்மைக்கான உலகளாவிய தேவையையும் கருத்திற் கொண்டு முறைசாரா பதிலீடுகள் (உ-ம். அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்குப் பாதுகாப்பான இடங்கள் அல்லது சுய உதவி ஆதரவு வலையமைப்புகள்) காணப்படுகின்றனவா அல்லது அமைக்கப்பட முடியுமா என்பவற்றைப் பரிசீலித்தல் வேண்டும (பார்க்க – அத்தியாயம் 7: தீங்கிழைக்காதிருத்தல், கூடு 10: 'ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கான ஆதரவு சேவைகளின் பரந்தளவிலான பற்றாக்குறை'). பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட ஆண்களுக்கான போதிய தொடர்பீட்டு வழிமுறைகள் இல்லாத பட்சத்தில், பொருத்தமான தொடர்பீட்டுக் குறிப்புகள் அமைக்கப்படும் வரையில், அத்தகைய பாதிக்கப்பட்டோரையும் சாட்சிகளையும் அணுகுவதை நீங்கள் தவிர்க்க வேண்டியிருக்கலாம்.

2002 இல், போர்க்கால வன்புணர்வு மற்றும் பாலியல் வன்முறையின் ஏனைய வடிவங்கள் பற்றிய பிரச்சினைகளில் பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் 3 வீதம் மாத்திரமே பாதிக்கபட்ட ஆண்களுடன் பணியாற்றுவதில் ஈடுபட்டன.[27] இன்றுவரை, இந்நிலைமை ஓரளவில் மாத்திரமே முன்னேற்றமடைந்துள்ளது.

---

27 மோதல்களின் போதான பாலியல் வன்முறை பற்றிய ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியின் அலுவலகம் (2013) *மோதல் நிலைமைகளில் ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகளுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றிய பயிற்சிப் பட்டறையின் அறிக்கை* ப. 15.

*பாதிக்கப்பட்ட ஆண்களுக்கான போதிய தொடர்பீட்டு வழிமுறைகள் இல்லாத பட்சத்தில் ... பொருத்தமான தொடர்பீட்டுக் குறிப்புகள் அமைக்கப்படும்வரை ... அத்தகைய பாதிக்கப்பட்டோரை அணுகுவதை நீங்கள் தவிர்க்க வேண்டியிருக்கலாம்.*

## 2. திட்டமிடல்

ஆவணப்படுத்தலின் திட்டமிடற் கட்டத்தின்போது, செயற்பாட்டாளர்கள் செய்ய வேண்டியவை:

- **ஆவணப்படுத்தற் திட்டமிடல்:** ஆவணப்படுத்தற் திட்டத்தில் ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறையை திட்டவட்டமாக உள்ளடக்குதல் (பார்க்க- அத்தியாயம் 9: CARSV ஆவணப்படுத்தற் திட்டத்தின் திட்டமிடல்/ஆக்கக்கூறுகள்)
- **ஆவணப்படுத்தல் அணி:** ஆவணப்படுத்தல் அணிக்கான உறுப்பினர்களைக் கவனமாகத் தெரிவு செய்து (விசாரணையாளர்கள், உரைபெயர்ப்பாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், இடையீட்டாளர்கள், பகுப்பாய்வாளர்கள் மற்றும் ஏனைய துணைப் பணியாட்டொகுதியினர்) பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்:
  - ஆண் பாலியல் வன்முறை பற்றிய பொருத்தமான பயிற்சியை அவர்கள் பெற்றுக்கொள்ளல்.
  - ஆண் பாலியல் வன்முறை பற்றிப் புரிந்து கொள்வதற்கும் அதனைக் கூருணர்வுடன் கையாள்வதற்கும் (உ-ம். பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றிய தகவல்களை வெளிக்கொணர்வதற்கான பொருத்தமான சூழ்நிலையை உருவாக்குதல், நேர்காணல் செயன்முறையின்போது சாத்தியமான குறிகாட்டிகளையும் சிவப்புக் குறியீடுகளையும் இனங்காணல்) ஆண்களை நோக்கியதான பாலியல் வன்முறையை ஆவணப்படுத்துவதற்கும் தீர்ப்பதற்குமெதிரான சமூகங்களையும் நிறுவனங்களையும் கையாள்தல் (பார்க்க. பெட்டி 13: ஆண்களை நோக்கியதான பாலியல் வன்முறையை எதிர்கொள்வதற்காக தடைகளிலிருந்து மீளல்) பற்றிய அவசியமான கொள்திறனை (அனுபவம், ஆற்றல்கள் மற்றும் மனப்பான்மை) அவர்கள் கொண்டிருத்தல். (பார்க்க. பெட்டி 12: ஆண்களை நோக்கியதான பாலியல் வன்முறைக் குறிகாட்டிகள்')
  - பால்நிலை, வயது, தேசிய இனம், இனம், மதம், மொழி ஆற்றல்கள் போன்றவற்றின் பிரகாரம் அணியில் பொருத்தமான பணியாட்டொகுதியினர் காணப்படுதல். பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட ஆண்கள் ஓர் ஆண் அல்லது பெண் உரைபெயர்ப்பாளரையோ/ நேர்காணல் மேற்கொள்ளுபவரையோ அவசியமாக விரும்புவர் எனக்கூற முடியாத அதேவேளை, இது தொடர்பில் அவர்களது கருத்துக்களைக் கேட்டறிதல் பிரதானமாகும். விருப்பத் தெரிவொன்றைக் கொண்டிருப்போர்[28] பொதுவாக அது பற்றி உறுதியாக இருப்பதுடன் இது பாதிக்கப்பட்டவர் தன்னை வெளிப்படுத்துவதற்கு அவசியமான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு உதவுமென்பதால் அணியினர் அத்தகைய விருப்பத்தெரிவை சேர்த்துக்கொள்ளல் பிரதானமாகும். வயது, இன அல்லது மதப் பின்னணி போன்ற ஏனைய காரணிகளுக்கும் இது பிரயோகிக்கப்படும்.
- **நேரம்:** ஆண்களை நோக்கியதான பாலியல் வன்முறையை ஆவணப்படுத்துவதற்கு சாத்தியமான மேலதிக ஒட்டுமொத்த நேரத்திற்கு அனுமதித்தல். குறிப்பாக, நேர்காணல் செய்யப்படுபவருடன் அதிகளவிலான நம்பிக்கை விருத்தி செய்யப்படுமாயின் மாத்திரமே பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான இத்தகைய மீறுதல்கள் பற்றிய சாட்சியங்களை நேர்காணல் மேற்கொள்வோர் பெற்றுக்கொள்ள முடியுமென்பதால் பொதுவாக எதிர்பார்க்கப்படுவதை விட நீண்டதான பல நேர்காணல்களுக்கு அனுமதித்தல். அதற்கு அதிக நேரம் தேவைப்படலாம்.
- **வளங்கள் மற்றும் செலவுகள்:** பாதிக்கப்பட்ட பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறையை ஆவணப்படுத்துவதற்கு தேவைப்படும் வளங்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பாக தகவல் மூலங்களை இனங்காண்பதற்கும் அணுகுவதற்கும், வித்தியாசமான மற்றும்/ அல்லது மேலதிக வளங்கள், தேவைப்படலாம் (அதன் காரணமாக ஒட்டுமொத்த செலவுகள் அதிகரிப்பதற்கு சாத்தியமா) என்பது பற்றிப் பரிசீலித்தல் வேண்டும்).
- **அந்தரங்கத்தன்மை:** சில சூழமைவுகளில் நிலவுகின்றதான ஓரினச்சேர்க்கையாளரென சந்தேகிக்கப்படுதலுடன் தொடர்புடைய குறிப்பிட்ட சில அபாயங்களின் (மேலே பார்க்க) காரணமாக, ஏறத்தாழ பாதிக்கப்படும் எல்லா ஆண்களும் பொதுவாக தனிப்பட்ட இரகசியத்தன்மை மற்றும் அந்தரங்கத்தன்மை பற்றிய கரிசனைகளைக் கொண்டுள்ளனர் என்பதை நினைவில் கொள்ளுதல். குறிப்பாக, பின்வருவனவற்றைத் தெரிவு செய்யும்போது/ திட்டமிடும்போது இதனை நினைவில் கொள்ளவேண்டும்:
  - நேர்காணல்களை எங்கு நடத்துவது
  - பாதிக்கப்பட்ட ஆண்களை எவ்வாறு அணுகுவது
  - பாதிக்கப்பட்டவரின் கூற்றுக்களை எவ்வாறு மற்றும் எந்த வடிவத்தில் பதிவு செய்வது
  - எவ்வாறு தகவல்களை இடமாற்றுவது/ சேமிப்பது
- **பாதிக்கப்பட்டவர் - குற்றமிழைத்தவர்:** பாதிக்கப்பட்ட ஆண் ஒருவரும் வேண்டுமென்றே, உதாரணமாக பழிவாங்குதலின் வடிவமொன்றாக அத்தகைய வன்முறையைத் தாமும் இழைப்பதற்காக ஆயுதந்தாங்கிய குழுவில் அல்லது இராணுவத்தில் வேண்டுமென்றே இணைவதனூடாக, பாலியல் வன்முறை இழைத்ததாக வெளிப்பட்டால் எவ்வாறு எதிர்வினையாற்றுவது என்பது பற்றிப் பரிசீலித்தல். செயற்பாட்டாளரின் ஆணை மற்றும் பயிற்சியைப் பொறுத்து, குற்றஞ்சாட்டும் வெளிப்படுத்துகைகள் பற்றிய அவதானங்கள் தேவைப்படலாம்.

  இக்காட்சியானது, மோசமான பலவந்தப்படுத்தலின் கீழ் வேறொரு நபர் மீது பாலியல் ரீதியான ஊடுருவல் சம்பந்தப்பட்ட பாலியல் செயலொன்றில் தனியாள் ஒருவர் ஈடுபட்ட சந்தர்ப்பத்திலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும் (உ-ம். தனது மகளை வன்புணர்வுக்குட்படுத்துமாறு கட்டளையிடப்பட்ட தந்தை அல்லது ஒருவருக்கொருவர் வாய்மூல பாலியல் உறவில் ஈடுபடுமாறு பலவந்தப்படுத்தப்பட்ட தடுத்து வைக்கப்பட்டோர்). இறுதியாகக் கூறப்பட்ட சந்தர்ப்பத்தில், சர்வதேச குற்றவியல் நடைமுறையின் கீழ் அத்தனியாள் 'குற்றமிழைத்தவர்' அல்ல, ஆனால் அதற்குப் பதிலாக பாதிக்கப்பட்டவர் ஒருவராகக் கருதப்படல் வேண்டும். பலவந்தப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளை முழுமையாக ஆவணப்படுத்துவதன் மூலம் இது வெளிப்படுத்தப்படலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில், தீவிரமான உணர்ச்சிகளை கையாளுவதற்கு செயற்பாட்டாளர்கள் தயாராக இருத்தல் வேண்டும்.

28 பாதிக்கப்பட்ட ஆண்கள் குற்றமிழைத்தவரின் பால்நிலையல்லாத வேறொரு பால்நிலையைச் சேர்ந்த நேர்காணல் செய்பவரை மற்றும்/அல்லது உரைபெயர்ப்பாளரைக் கொண்டிருக்க விரும்புவது வழக்கத்திற்கு மாறானது அல்ல, ஆயினும் இது எப்போதும் இடம்பெறும் நிகழ்வல்ல.

**பெட்டி 12**

## ஆண்கள் நோக்கியதான பாலியல் வன்முறையை எதிர்கொள்வதற்காக தடைகளிலிருந்து மீண்டுவருதல்

ஆண்கள் நோக்கியதான பாலியல் வன்முறையை ஆவணப்படுத்துவதற்கும் எதிர்கொள்வதற்கும், தனிப்பட்ட அல்லது சமுதாய மட்டங்களிலிருந்து நிறுவன மட்டங்கள் வரையிலும், தடைகளை எதிர்கொள்ள வேண்டியிருத்தல் வழமைக்கு மாறானதல்ல. இந்நிலைமைகளைக் கையாளும்போது சமர்ப்பிக்கப்படக்கூடிய நெறிசார் மற்றும் நடைமுறை வாதங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- » தீங்கிழைக்கப்பட்ட ஒவ்வொருவரும், அவர் ஆணாகவோ பெண்ணாகவோ அல்லது ஏனைய ஒருவராகவோ இருப்பினும், பாரபட்சமற்ற ஆதரவிற்கான உரிமை ஒன்றைக் கொண்டுள்ளனர்.
- » பாதிக்கப்பட்டவர் ஆணாகவோ பெண்ணாகவோ அல்லது ஏனைய ஒருவராகவோ இருப்பினும், பாலியல் வன்முறையானது மனித உரிமை மீறல்களைக் கொண்டிருக்கும்,
- » பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறை குறித்து மௌனம் சாதித்தலானது, ஆண்களின் இனப்பெருக்கத்திறனை அழித்தல், குடும்பங்களை அழித்தல் மற்றும் சமூகங்களைப் பிரித்தல் போன்ற தமது இலக்குகளை அடைவதற்கு குற்றமிழைப்போருக்கு உதவுகின்றது.
- » பாதிக்கப்பட்ட ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறை பெரும்பாலும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறையுடன் நெருக்கமாகத் தொடர்பு பட்டிருக்கும்.
- » தம்பதியினருள் ஒருவர் அல்லது இருவருமே பாதிக்கப்பட்டிருப்பதுடன் இவ்விடயம் வெளிப்படுத்தப்படாதிருக்கும் சந்தர்ப்பத்தில், நீண்டகால உடற் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு ( உ-ம். எச்.ஐ.வி, மலட்டுத்தன்மை) வழிவகுக்கும் சிகிச்சையளிக்கப்படாத காயங்கள் மற்றும்/அல்லது தொற்றுக்கள் காணப்படும் அபாயங்கள் குறிப்பிடத்தக்கவகையில் அதிகரிக்கும்.
- » பாதிக்கப்பட்ட ஆண்களுக்கு வழங்கப்படும் போதிய பதிலிறுப்பு தனிப்பட்டவருக்கு மாத்திரமன்றி அவரின் மனைவி/துணை, பிள்ளைகள், குடும்பம் மற்றும் சமூகத்திற்கும் பயனளிக்கும்.[29]

## 3. நேர்காணல் மேற்கொள்ளல்

நேர்காணல் கட்டத்தின்போது, செயற்பாட்டாளர்கள்:

- » **ஒத்திசைவும் நம்பிக்கையும்:** நேர்காணல் செய்யப்படுபவர் தம்மை வெளிப்படுத்துவதற்கு அவசியமான நம்பிக்கையை உருவாக்கும் பொருட்டு அவருடன் அவசியமான ஒத்திசைவைக் கட்டியெழுப்புவதற்காக நேர்காணலின் பூர்வாங்கக் கட்டத்தின்போது விசேட கவனம் செலுத்துவதுடன் இயன்றளவு நேரத்தையும் செலவிடல் வேண்டும். (பார்க்க - அத்தியாயம் 11: நேர்காணல் மேற்கொள்ளல்/ஈடுபடுதல் மற்றும் விளக்குதல்)
- » **குறிகாட்டிகள்: நேர்காணல்** செய்யப்படுபவர் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்பதற்கான சமிக்ஞைகள் மற்றும் தடயங்களில் (உடல்ரீதியான, வாய்மூல, வாய்மூலமல்லாத அல்லது வேறுவகையிலானவை) கவனம் செலுத்த வேண்டும். (பார்க்க - பெட்டி 13: 'ஆண்கள் நோக்கியதான பாலியல் வன்முறைக் குறிகாட்டிகள்')
- » **கேள்விகள்:** தடுப்பு நிலையங்கள் மற்றும் ஏனைய பாதிப்புறுநிலைகளைக் கொண்டுள்ள குறிப்பிட்ட சூழ்நிலைகளில் இருந்த ஆண்களிடமும் ஆண் பிள்ளைகளிடமும் அவர்கள் அனுபவித்திருக்கக்கூடியதான அல்லது பார்த்திருக்கக்கூடியதான பாலியல் வன்முறை பற்றிக் குறிப்பாகக் கேட்க வேண்டும். அதனைப் பற்றி நேர்காணல் மேற்கொள்பவருடன் பேசுவது பாதுகாப்பானது எனப் பாதிக்கப்பட்டவருக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.
- » **பால்நிலைக்குரித்தான கருத்துக்குறிப்புகள்:** கேட்கப்படும் கேள்விகள் மற்றும் முன்வைக்கப்படும் கூற்றுகள் ஆகியவை பாதிக்கப்படும் ஆண்களுக்கெதிரான பாலியல் வன்முறை பற்றியதாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- » **முன்னெண்ணச்சார்புகள்:** பாதிக்கப்பட்டவருக்கு என்ன நடந்திருக்கக்கூடும் என்பது பற்றிய முன்னெண்ணச் சார்புடைய கருத்துக்களை உருவாக்காதிருப்பதிலும் மற்றும்/அல்லது வெளிப்படுத்தாதிருப்பதிலும் மற்றும் இச்செயல்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் கவனமாக செயற்படல் வேண்டும். விசேடமாக, தீர்ப்பிடுதலாகக் கருதப்படக்கூடிய கூற்றுக்கள் அல்லது மனப்பான்மை பற்றியும் கவனத்துடன் இருத்தல் வேண்டும்.
- » **உடலியல் துலங்கல்கள்:** இயல்பான விறைப்புத்தன்மை மற்றும் விந்து வெளியேற்றங்கள் பற்றிய சான்றுகளுக்கு எவ்வாறு பதிலாற்றுகின்றார்கள் என்னும் விடயத்திற்கு குறிப்பிட்ட கவனம் செலுத்த வேண்டும். (பார்க்க - பெட்டி 6: 'பலவந்த விறைப்புத்தன்மை மற்றும் விந்து வெளியேற்றங்கள்'). இத்தகைய சாட்சியங்கள், பாதிக்கப்பட்டவர் அச்செயலை 'விரும்பி அனுபவித்தார்' மற்றும் வெளிப்படையாக அல்லது உட்கிடக்கையாக அதற்கு இணங்கினார் என எந்தவொரு வகையிலும் உணர்த்தாது. சட்ட விடயமொன்றாக, அத்தகைய சாட்சியம் பொருத்தமற்றது என்பதுடன், உதாரணமாக, குற்றமிழைத்தவரின் குற்றவியல் பொறுப்பை விலக்கிவிடுவதற்கான தற்காப்பொன்றாக, பயன்படுத்தப்படவும் கூடாது. அத்தகைய எதிர்வினையால் தமது அடையாளம் பற்றிய கூருணர்வு தடுமாற்றமடைந்திருக்கக்கூடியதான பாதிக்கப்பட்ட ஆண்களுக்கு, இத்தகைய உடலியல் துலங்கல்களின் இயல்புத்தன்மை பற்றியதான குறிப்பிடத்தக்க மீள்உத்தரவாதம் தேவைப்படலாம்.

29 Dolan, C. (2015) 'பால்நிலை சார் இரட்டை நிலையை விட்டுவிடுதல்: பால்நிலை அடிப்படையிலான வன்முறையில் மனிதாபிமான தலையீடுகளுக்கான புதிய வழிகளை அமைத்தல்', *International Review of the Red Cross*, 96, 894: 1–17.

*... நேர்காணல் செய்யப்படுபவருடன் ஒத்திசைவைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான இயன்றளவு நேரத்தை செலவிடுங்கள் ...*

» **மீள்உத்தரவாதங்கள்:** விசேடமாக, பாதிக்கப்பட்டவர் ஏனையோருடன் பாலியல் ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ளும்படி பலவந்தப்படுத்தப்பட்டிருந்ததுடன் குற்றமிழைத்தவராக தம்மைத்தாமே கருதினால் அல்லது பிறரால் கருதப்பட்டால் அல்லது ஏனையோராலும் சட்டத்தினாலும் அவ்வாறு கருதப்படுவோமென அச்சமடைந்திருந்தால், அவர் பழிசுமத்தப்பட வேண்டியவரல்ல எனப் பாதிக்கப்பட்டவருக்கு மீள்உத்தரவாதமளித்தல் வேண்டும். உதாரணமாக, A என்பவர் B என்பவனை அவரது மகளான C என்பவரை வன்புணர்வுக்குட்படுத்துமாறு பலவந்தப்படுத்தியிருப்பின், A குற்றமிழைத்தவர் அத்துடன் B, C ஆகிய இருவரும் பாதிக்கப்பட்டவர்கள்.

**பெட்டி 13**

**ஆண்கள் நோக்கியதான பாலியல் வன்முறைக் குறிகாட்டிகள்**[30]

30 சர்வதேச குற்றவியல் விசாரணைகள் நிறுவகம் (2016) *ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கெதிரான மோதலுடன் தொடர்புடைய பாலியல் மற்றும் பால்நிலைசார் வன்முறைகளை விசாரிப்பதற்கான வழிகாட்டிகள்* § 2.11.5 *மற்றும்* 2.11.6.

31 பாதிக்கப்பட்ட ஆண்களுடனான நேர்காணலின்போது மாத்திரமன்றி, குடும்ப உறுப்பினர்கள், ஆதரவுச் சேவையினர் போன்றோருடனான நேர்காணலின்போதும் அல்லது ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக் கட்டத்தின்போதும் இந்த சிவப்புக் குறிகாட்டிகள் இனங்கண்டு கொள்ளப்படலாம்.

# பகுதி VIII: முடிவு
## அத்தியாயம் 18: முடிவு

## அத்தியாயம் 18 பொருளடக்கம்

அத்தியாயம் 18: முடிவு ........ 282

**A.** தகவல்களைப் பயன்படுத்தல் ........ 282

**B.** சர்வதேச ஒழுங்கு மரபின் எதிர்காலப் பயன்பாடு ........ 283

### A. தகவல்களைப் பயன்படுத்தல்

CARSV குற்றச்செயல்கள் மற்றும் மீறுகைகள் பற்றிய தகவல்களை செயற்பாட்டாளர்கள் ஆவணப்படுத்தி பகுப்பாய்வு செய்தவுடன், தாம் எவ்வாறு அதனை வனைந்து சமர்ப்பிக்கவுள்ளனர், யாருக்கு மற்றும் எவற்றை அவர்கள் கையளிக்கவுள்ளனர், மற்றும் எவ்விடயங்கள் குறித்து அவர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் ஆகிய விடயங்கள் பெரும்பாலும் பின்வருவனவற்றில் தங்கியுள்ளன:

» ஆவணப்படுத்தலின் குறிக்கோள் மற்றும் தொடரப்படவுள்ள பொறுப்புக்கூறலின் வடிவம்
» தகவல்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளோர்
» செயற்பாட்டாளர்களின் ஆணை மற்றும் அவர்களின் நிறுவனத்தின் ஆணையும் வகிபங்கும்
» ஆவணப்படுத்தல் இடம்பெற்ற அரசியல், சட்ட மற்றும் பாதுகாப்புச் சூழமைவு, மற்றும் அச்சூழமைவு செயற்பாட்டாளர்களுக்கு ஏற்படுத்தும் மட்டுப்பாடுகள் மற்றும் அளவுருக்கள்

மேலுள்ள பரிசீலனைகளின் பிரகாரம் செயற்பாட்டாளர்கள் தமது கண்டுபிடிப்புகளைத் திரட்டி அவற்றை சமர்ப்பித்தல் வேண்டும். உதாரணமாக, பாலியல் வன்முறை மீறல்களை நீதித்துறையல்லாத அமைப்புக்களுக்கு சமர்ப்பிப்பதன் மூலம் ஆதரித்து வழக்காடும் நோக்கங்களுக்காகப் பெரும்பாலும் ஆவணப்படுத்தும் செயற்பாட்டாளர்கள், அவர்கள் குறித்த வழக்காடல் மூலோபாயங்களுக்கு ஆதரவாக பாலியல் வன்முறையை ஆவணப்படுத்தினால், அல்லது சேகரிக்கப்பட்ட தகவல்களை நடந்துகொண்டிருக்கும் வழக்கிற்கான உசாத்துணையாக ஒரு குறிப்பிட்ட நியாயசபைக்கு சமர்ப்பிப்பதற்குத் திட்டமிட்டிருப்பின் தமது கண்டுபிடிப்புக்களை அறிக்கையிடுவதை விடவும் வேறுவிதமாகஅறிக்கையிடுவர்.

செயற்பாட்டாளர்கள், உதாரணமாக, பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்:

*a. வழக்காடலுக்கு ஆதரவாக, மீறுகைகளின் பல்வேறு வகையான கோலங்கள் தொடர்பாக வாதாடுவதற்கும் அவற்றை விளக்குவதற்குமான வழிமுறையொன்றாக சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தல்;*

*b. தனிப்பட்ட வழக்(குகளை)கை வழக்காடுவதற்கும் நீதித்துறைசார் அல்லது பகுதியளவிலான நீதித்துறைசார் பொறிமுறைகளின் மூலம் தனிப்பட்ட ரீதியான நிவர்த்தியைப் பெற்றுக்கொள்வதற்காகவும் குறிப்பாக சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தல்;*

*c. சேகரிக்கப்பட்ட தகவல்களைக் குறிப்பிட்டதொரு நீதிமன்றம், விசாரணைக்குழு, அல்லது சட்ட அமுலாக்க அமைப்பிற்குக் கையளித்தல்;*

*d. எதிர்காலப் பொறுப்புக்கூறல் மற்றும் ஏனைய நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகள் போன்றவற்றின் பயன்பாட்டிற்காக தகவல்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்;*

*e. பாதிக்கப்பட்டவர் என்னும் அந்தஸ்திற்காக விண்ணப்பித்தல் போன்ற நீதித்துறை சார்பற்ற குறிப்பிடத்தக்க கோரல்களை மேற்கொள்வதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காகத் தகவல்களைப் பயன்படுத்தல்.*

கிடைக்கப்பெறும் பொறுப்புக்கூறலைத் தொடர்வதற்கான பல வகையான வடிவங்களைப் போலவே ஆவணப்படுத்தலைப் பயன்படுத்தும் மற்றும் சமர்ப்பிக்கும் பல வடிவங்களும் பல்வேறு வகையானவை. ஆயினும், ஆவணப்படுத்தலின் மூலம் பொறுப்புக்கூறலைத் தொடர்வதற்கான எந்தவொரு மூலோபாயத்தின் மையமாகவும் பின்வரும் விடயங்கள் காணப்பட வேண்டும்:

#### பாதிக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் வலுவூட்டல்

தனிப்பட்ட வழக்காடலின் மூலமோ அல்லது பாரிய குற்றச்செயல்களுக்கான குற்றச்சாட்டுகள் தொடர்பில் அநாமதேய தகவல்களை வழங்குவதன் மூலமாகவோ மேற்கொள்ளப்பட்டிருப்பினும், பாதிக்கப்பட்டவர்களினதும் ஏனைய சாட்சிகளினதும் சுய உரிமை, வலுவூட்டல் மற்றும் பாதுகாப்பு ஆகியவை பொறுப்புக்கூறல் மூலோபாயங்களுக்குப் பிரதானமாக அமைதல் வேண்டும். இதற்காக தமது விருப்பத் தெரிவை மேற்கொள்வதற்கும், பங்குபற்றல் குறித்த அபாயங்கள் மற்றும் பயன்கள் பற்றி முழுமையாகத் தெரியப்படுத்தப்படுவதற்கும், ஆவணப்படுத்தலின் ஒவ்வோர் அம்சத்திற்கும் இணக்கம் தெரிப்பதற்கான- அல்லது தெரிவிக்காதிருப்பதற்குமான பாதிக்கப்பட்டவர்களினதும் ஏனைய சாட்சிகளினதும் உரிமைக்குத் தவறாது மதிப்பளிப்பதற்கும் செயற்பாட்டாளர்கள் தேவைப்படுத்தப்படுகின்றனர். ஆவணப்படுத்தல் மற்றும் அதனைப் பின்தொடர்தல் ஆகிய இரு நிலைகளிலும், ஆவணப்படுத்தலில் தொடர்புபட்டுள்ளோரின் உதவி, சேவைகள் மற்றும் பாதுகாப்புத் தேவைகள் பற்றித் தொடர்ந்து விழிப்பாக இருப்பதையும் இது ஈடுபடுத்துகின்றது.

### மூலங்களின் அந்தரங்கத்தன்மையும் அநாமதேயத்தன்மையும்

அந்தரங்கத்தன்மை மற்றும் அநாமதேயத்தன்மை பற்றிய கரிசனைகள் ஆவணப்படுத்தல் செயன்முறையின்போதே காணப்படும் நெறிசார் கடப்பாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டவையல்ல. பாதிக்கப்பட்டவரின் அடையாளம் மற்றும் அவர்களின் பங்குபற்றலை அந்தரங்கமாகப் பேணுவதற்கான நடவடிக்கைகள் ஆவணப்படுத்தலுக்கும் அப்பால் செல்வதுடன் - ஆவணப்படுத்தலின் பெறுபேறுகள் ஏனைய தரப்பினருக்குக் கையளிக்கப்படும்போது அல்லது சமர்ப்பிக்கப்படும்போது எழும் அந்தரங்கத்தன்மை பற்றிய மட்டுப்பாடுகள் மற்றும் சாத்தியமான வெளிப்படுத்தற் கடப்பாடுகள் பற்றிப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் தெரியப்படுத்துதலையும் உள்ளடக்குகின்றது. இந்த மட்டுப்பாடுகளையும் அளவுருக்களையும் முழுமையாகப் புரிந்து கொள்வதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் தெரியப்படுத்துவதற்கும், அத்துடன் முறைப்பாடுகள் பற்றிய மூலோபாயங்களுக்கு சமர்ப்பித்தல்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களிலும், அல்லது குற்றவியல் நடைமுறைகளின்போது எதிர்த்தரப்பினருக்கு அவர்களின் தகவல்கள் வழங்கப்படும் சந்தர்ப்பங்களிலும் அவர்களின் அநாமதேயத்தன்மையைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் சம்மதமளிக்கப்பட்ட ஏதேனும் மாற்றங்கள் தொடர்பில் - அறிக்கைகள் அல்லது தொடர்பாடல்களில் அவர்களின் அடையாளம் வெளிப்படுத்தப்பட வேண்டி ஏற்படும் கட்டம் போன்றவை - அவர்களை இற்றைப்படுத்துவதற்கும் செயற்பாட்டாளர்கள் கடமைப்படுத்தப்படுகின்றார்கள்.

## B. சர்வதேச ஒழுங்கு மரபின் எதிர்காலப் பயன்பாடு

எதிர்காலத்தில், சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு குற்றச் செயலாக அல்லது மீறுதலாக பாலியல் வன்முறையை ஆவணப்படுத்துவோர் எதிர்கொள்ளும் சில சவால்களை முறியடிப்பதற்கானதோர் நடைமுறைசார் சாதனமாக ஒழுங்குமரபு செயற்படுமென நாம் நம்புகின்றோம். சிறந்த நடைமுறைகள் உருவாகும் போதெல்லாம் இற்றைப்படுத்தப்பட வேண்டிய அடிக்கடி திருத்தம் மற்றும் இற்றைப்படுத்தலுக்கு உள்ளாகும் ஓர் ஆவணமாக இது அமையும்.

குறிப்பாக: ஒழுங்குமரபில் தரப்பட்டுள்ள அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் முறைமைகளின் பிரகாரம் பாலியல் வன்முறைக் குற்றங்கள் ஆவணப்படுத்தப்படுவதற்கு நாடுகள் ஆதரவு வழங்கி, வசதி செய்து வலுவூட்டுமெனவும் சர்வதேச பாலியல் வன்முறைக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் தொடர்பான வெளிநாட்டு முன்னெடுப்புகளுக்கு நிதி வழங்கும்போது, கொடையளிக்கும் நாடுகள் தமது கருத்திட்டங்களினுள் இந்த ஒழுங்குமரபில் தரப்பட்டுள்ள அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் முறைமைகளை கூட்டிணைப்பதற்கு இம்முன்னெடுப்புக்களை ஊக்குவிக்குமெனவும் மோதலில் பாதிக்கப்பட்ட நாடுகள், அரசாங்கம், சிவில் சமூகம், மருத்துவ மற்றும் சட்டத் தொழில்வாண்மைகள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் ஆகியோரிடையே கொள்திறனைக் கட்டியெழுப்புவதற்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் ஒழுங்குமரபினைப் பயன்படுத்தி தேசிய செயற்றிட்டங்களை அபிவிருத்தி செய்யுமெனவும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் கொள்திறனைக் கட்டியெழுப்புவதற்கும் ஒழுங்குமரபைப் பயன்படுத்தும், மற்றும்/அல்லது பயிற்சிநெறிகளை விருத்தி செய்யும் அரசாங்கங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் (NGOs) கொடையாளர்கள் நிதியுதவி வழங்குவரெனவும் அத்துடன் இத்துறையில் பணியாற்றும் முன்னணி அரச சார்பற்ற நிறுவனங்கள், மோதல் வலயங்களில் சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு குற்றச் செயலாக அல்லது மீறுதலாக பாலியல் வன்முறையை ஆவணப்படுத்துவதற்குப் பணியாட்டொகுதியினரைப் பயிற்றுவிப்பதற்கான பிரதான மற்றும் அடிப்படை முறையியலாக ஒழுங்குமரபைப் பயன்படுத்துமெனவும் நாம் நம்புகின்றோம்.

# பின்னிணைப்பு 1: பாலியல் குற்றங்களின் ஆவணப்படுத்தலுக்கான சான்றுச் செயல்நூல் சான்று இடைவெளிகளை நிரப்புவதில் புலனாய்வாளர்களுக்கு உதவுவதற்கான ஒரு கருவி

## சான்றுச் செயல் நூலுக்கான அறிமுகம்

தகவல் திரட்டப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டதும் எந்த பாலியல் வன்முறைக் குற்றத்தை அல்லது மீறலை நிரூபிப்பதற்கு தங்களிடம் போதுமான சான்றுகள் உள்ளன என்பதை அல்லது வேறு என்ன மேலதிக சான்றுகள் தேவைப்படும் என்பதை மதிப்பிடக்கூடிய ஒரு நிலையில் செயற்பாட்டாளர்கள் இருக்கக்கூடும். இவ்வாறான அம்சங்களையும் தமது தேவைகளையும் கீழே காணப்படும் (பின்னிணைப்பு 1 ஆ) சான்றுப் புத்தகத்தில் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ள வடிவத்திற்கமைய திரட்டப்பட்ட தகவல்களையும் வரைபடத்தில் தயாரிப்பது சான்று சேகரிப்பு நடைமுறையின் வினைத்திறனை உச்சப்படுத்துவதற்கும் சாட்சிகளை மீண்டும் மீண்டும் நேர் காண்பதிலிருந்து பாதுகாப்பதற்கும் குறிப்புகளின் மதிப்பீட்டிற்கு வசதியேற்படுத்துவதற்கும் இடைவெளிகளை நிரப்புவதற்கு மேலதிக சான்றுகளைத் திரட்டுவதற்காக மீண்டும் களத்திற்கு செல்ல வேண்டிய தேவையைக் குறைப்பதற்கும் செயற்பாட்டாளர்களுக்கு உதவும்.

CARSV தொடர்பான தகவல்களைத் திரட்டும் செயற்பாட்டாளர்கள் தமது சான்றுகளை பின்வரும் கட்டமைப்பைப்பிற்கமைய ஒழுங்கமைப்பதற்கு முயலலாம்:

| | | | |
|---|---|---|---|
| I. குற்றங்களின் அம்சங்கள்: பின்னணியிலுள்ள குற்றங்களின் அம்சஙகள்<br>குற்ற வகைகளின் பொதுவான அம்சங்கள்<br>பொறுப்பு/தொடர்பு அம்சங்களின் தொடர்புகள்<br>*(குற்ற அம்சங்களின் முழுமையான நிரலை பின்னிணைப்பு 1 அ வில் காண்க)* | II. அம்சங்களின் உள்ளடக்கங்கள்:<br>ஒவ்வொரு அம்சமும் பல உள்ளடக்கங்களைக் கொண்டிருக்கிறது. | III. நிரூபிக்கும் வழிமுறைகள் பல்வேறு அம்சங்களையும் பிரிவுகளையும் நிறுவுவதற்குப் பயன்படுத்தக்கூடிய உறுதியான உண்மையைக் கண்டறிதல்கள். | IV. மூலங்கள் வழியாகக்கிடைக்ககூடிய சான்றுகளுக்கான உதாரணங்கள் |

இச் செயல் நூலில் கூறப்பட்டுள்ள உதாரணம் - கட்டளை மூலம் புரியப்பட்ட மனித குலத்திற்கெதிரான ஒரு குற்றமாக வன்புணர்வு/ உயர் பொறுப்பானது, ரோம் சட்டத்தில் விதித்துரைககப்பட்டவாறான குற்றம் மற்றும் குற்றங்களின் அம்சங்கள் பற்றிய விளக்கங்களின் அடிப்படையிலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) குற்றங்களின் அம்சங்கள் அடிப்படையிலும் அமைந்துள்ளன. அதாவது, இக் கட்டமைப்பு எல்லாவித சான்றுகளுக்கும் பொருத்தமாவதோடு, பொருத்தமான சூழ்நிலைகளுக்கு ஏற்ப பயன்படுத்தப்படவும் முடியும். அது கட்டமைக்கப்பட்டுள்ள முறையினால், சான்றுச் செயல்நூல் விளக்கங்கள் மற்றும் எந்த நியாயதிக்கங்களில் குற்றங்கள் விசாரிக்கப்படினும் ஏதேனும் மீறல்களின் அம்சங்கள் ஆகியவற்றைப் பிரதிபலிக்குமுகமாக சான்றுச் செயல் நூல் திருத்தப்படலாம். மனித உரிமை ஆவணப்படுத்துனர்கள் சான்றுச் செயல் நூலை தாம் திரட்டிய தகவல்களை ஒழுங்கமைப்பதற்குப் பயன்படுத்தலாம். தேசிய ரீதியிலானதாயினும், சர்வதேசரீதியிலான தாயினும், இறுதியில் நீதி அல்லது நிலைமாற்று நீதி தேவையேற்படும் வகையில் அதனை தனி நபர் பொறுப்பைப் பற்றிய தகவலை சேகரிப்பதை விட அரசின் பொறுப்பை பகிர்ந்து கொள்ள பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய பொறிமுறையொன்று இருக்குமாயின், செயல் நூலின் கட்டமைப்பிறகுள் செயற்பட்டு, முடிந்தளவு விரிவான சான்றுகளைக்கொண்டு அதை நிரப்புவதன்மூலம் மனித உரிமைகள் ஆவணப்படுத்துனர்களினால் திரட்டப்பட்ட சான்றுகள் மிகவும் பரந்தளவில் பயன்மிக்தாக அமையும்.

இம்மீள் கூறலில் உள்ளடக்கப்பட்டுள்ள நிரூபித்தல் வழிகளும் வழக்கு உதாரணங்களும் http://blog.casematrix- network.org/toolkits/databases/i-doc/ இல் கிடைக்கும் கேஸ் மெட்றிக்ஸ் நெட்வேக்ஸ் (CMN) தரவுத்தள பிரயோகத்தினால் விருத்தி செய்யப்பட்ட பிரதான செயல் நூலிலிருந்து பெறப்பட்டவையாகும்.

## பின்னிணைப்பு 1அ: குற்றங்களின் அம்சங்களின் நிரல்

### 1. அடிப்படையிலுள்ள குற்றங்களின் தனிவகைச் சுட்டிய அம்சங்ககள் (எந்த செயல் செய்யப்பட்டது)?

**சித்திரவதை[1] – அம்சங்கள்**

1. குற்றமிழைத்தவர் ஒரு நபருக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுக்கு கடும் உடல் அல்லது உள வேதனையை ஏற்படுத்தினார்[2].
2. அத்தகைய நபர் அல்லது நபர்கள் குபுற்றமிழைத்தவரின் பாதுகாப்பில் அல்லது அவரது கட்டுபாட்டின் கீழ் இருந்தனரு.
3. அத்தகைய வேதனை அல்லது துன்பம் சட்டபூர்வமான தடைகளிலிருந்த மாத்திரம் எழ விலைலை அல்லது அதன் உள்ளாருந்த அம்சமாக அல்லது அதற்கு இடைநேர் விளைவானதாக இருக்கவில்லை.
4. குற்றமிழைத்தவர் - தகவல்களை அல்லது ஒரு குற்ற ஒப்புதலைப் பெறுதல், தண்டணை, அச்சுறுத்தல் அல்லது பலவந்தப்படுத்துதல் அல்லது ஏதேனும் ஒரு வகையிலான பாரபட்சத்தின் அடிப்படையிலான ஏதேனும் காரணம் ஆகிய நோக்கத்திற்காக வேதனையை அல்லது துன்பத்தை ஏற்படுத்தினாரு (ஒரு யுத்தக் குற்றமாக சிதிதிரவதை செய்தலுக்கு மாத்திரம் பிரயோகிக்கப்படும்).

**வன்புணர்வு – அம்சங்கள்**

1. பாதிக்கப்பட்டவரின் அல்லது குற்றமிழைத்தவரின்[3] உடலின் ஏதேனும் பகுதியில் ஒரு பாலியல் உறுப்பு ஒன்றினால் குற்றமிழைத்தவர்[4] ஆக்கிரமிப்பு செய்தல் அல்லது ஏதேனும் பொருளை அல்லது உடலின் வேறு ஏதேனும் பகுதியைகொண்டு பாதிக்கப்பட்டவரின் மலவாசல் அல்லது பாலுறுப்பு வாசலில் உட்புகுத்துதல்.
2. ஆக்கிரமிப்பு பலவந்தமாக அல்லது வன்முறைப் பயம் அல்லது அச்சுறுத்தல், தடுத்து வைப்பு, உளவியல் - தர்க்கவியல் அடக்குமுறை அல்லது அதிகார துஷ்பிரயோகம் முதலிய பலவந்த அச்சுறுத்தல் அல்லது கட்டாப்பபுடத்தல் மூலம் அல்லது ஒரு பலவந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு அத்தகைய நபருக்ககெதிராக அல்லது வேறொரு நபருக்கெதிராக செய்யப்பட்டது அல்லது அந்த ஆக்கிரமிப்பு உண்மையான சம்மதம் வழங்கமுடியாத ஒரு நபருக்கு இழைக்கப்பட்டது[5].

---

1 சில உள்ளக நியாதிக்கங்களில் சித்திரவதையை தனித்து அக்குற்றத்திற்கு மாத்திரம் வழக்கு தொடரப்படலாம் (அதாவது: யுத்தக் குற்ற விதிகளின் கீழ் மாத்திரமின்றி மனித குலத்திற்கெதிரான குற்றமாகவும் இனப் படுகொலையாகவும்). அத்தகை நியாயாதிக்கங்களில் செயற்பாட்டாளர்கள் பொருத்தமான உள்நாட்டு ஏற்பாடுகளுக்கமைய தாம் திருப்திப்படுத்திய அம்சங்களை பயன்படுத்த வேண்டும்.

2 வேறு ஒருவர் வண்புணர்வு செய்யப்படுவதை அல்லது பாலியல் ரீதியாக தாக்கப்படுவதை பார்க்க நிர்ப்பந்திக்கப்படுவது ஒரு சித்திரவதைச் செயலாக அமையக்கூடிய பெரும் மன வேதனையை அல்லது துன்பத்தை ஏற்படுத்துமென்று கண்டறியப்பட்டுள்ளது. மேலும், பகிரங்கமாக ஒரு பாலியியல் செயலைச் செய்யுமாறு பலவந்தப்படுத்தப்படுதல் (இரண்டு கைதிகள் சிறைக் காவலர்கள் முன்னே ஒருவரு மற்றவரது ஆணுறுப்பை உறிஞ்சுமாறு பலவந்தப்படுத்தப்படுதல்) அல்லது பகிரங்கமாக அல்லது குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையில் வன்புணர்வு செய்யப்படுதல் அல்லது பாலியல் ரீதியாக தாக்கப்படுதல் ஆகியனவும் ஒரு.

3 சித்திரவதைச் செயலாக அமையலாம். ரோம் சட்டத்தின் குற்ற அம்சங்கள் "ஆக்கிரமிப்பு எண்ணக்கரு பால்நிலை நடுநிலையாக இருக்குமளவிற்கு விரிவானதாகும்" என்பதை எடுத்துக் காட்டுகிறது'.

4 ஆக்கிரமிப்பு என்ற அம்சம் குற்றமிழைத்தவரினால்/குற்றமிழைத்தவரினாலேயே செய்யப்படவேண்டுமென்பதில்லை என்பதை ICC தெளிவுபடுத்தியுள்ளது. குற்றமிழைப்பவர் ஊடறுக்கப்பட்டவராக அல்லது வேறொரு நபர் பரிக்கப்பட்டவரை ஊடறுக்க நிர்ப்பந்திக்கப்படும் சூழ்நிலைகளையும் அது உள்ளடக்குகிறது.

5 இந்த அம்சங்களில் ஏதேனுமொன்றை நிரூபிப்பது ஊடறுப்புச் செயலொன்று வன்புணர்வு குற்றமாக அமையும் என்பதை நிரூபிப்பதற்குப் போதுமானது என்று கட்டாங்கா வழக்கில் ICC தீர்ப்பளித்துள்ளது. வயது, முடியாமை, அல்லு வேறு சூழ்நிலைகளின் காரணமாக உண்மையான சம்மதம் வழங்க் முடியாது ஒருவர்மீது குற்றமிழைத்தவர் அச்செயலைப் புரிநதிருந்தாலேயே ஒழிய, பாதிக்கப்பட்டவரினால் சம்மதம் வழங்கப்படவில்லை என்று நிரூபிக்கத் தேவையில்லை.

**பாலியல் அடிமைத்தனம்[6] – அம்சங்கள்**

1. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களை கொள்வனவுசெய்தல், விற்பனை செய்தல், வாடகைக்கு விடுதல் அல்லது பண்டமாற்றில் ஈடுபடல் போன்றவற்றின் மூலம் உடைமை உரிமையுடன்[7] தொடர்புடைய ஏதாவது அல்லது சகலவிதமான அதிகாரங்களை குற்றமிழைத்தவர் பிரயோகித்தல் அல்லது இதற்கு நிகராக அவர்கள் சுதந்திரம் அனுபவிப்பதற்குத் தடை விதித்தல்.
2. அத்தகைய நபர் அல்லது நபர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் விடயங்களில் ஈடுபடுவதற்குக் குற்றமிழைத்தவர் காரணமாகவிருந்தார்.

**பலவந்தமாக இணைத்தல் அல்லது பலவந்தத் திருமணம் – அம்சங்கள்**

1. பாதிக்கப்பட்டவர் மீது குற்றமிழைத்தவர் பலவந்தமாக இணைப்பைத் திணித்தல்.
2. குற்றமிழைத்தவரின் வார்த்தைகள் அல்லது ஏனைய நடத்தைகள் ஆகியவற்றின் காரணமாக ஏற்படுகின்ற அச்சுறுத்தல்கள் அல்லது உடலியல் ரீதியான பலாத்காரம்[8].

---

6 பாலியல் அடிமைத்தனம் தொடர்பான குற்றங்கள் மனிதர்களை வஞ்சகமாக ஆட்கடத்தலுக்கு உட்படுத்துவதற்கும் ஏற்புடையதாகும்.

7 கடங்கா வழக்குத் தீர்ப்பின் பொழுது பாலியல் பாலியல் அடிமைத்தனத்துடன் தொடர்புடைய குற்றங்களின் அம்சங்கள் பற்றிய மிக விரிவான வரைவிலக்கணத்தை ஐ.சீ.சீ. வழங்குகின்றது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய செயல்கள் வகைகளை பகுப்பாய்வு செய்கின்ற சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு வழக்கு அல்லது விடயங்கள் தொடர்பிலும் தனித்தனியான அணுகுமுறைகளை மேற்கொள்வது அவசியமென நீதிமன்றம் குறிப்பிட்டது. சுதந்திர நடமாட்டத்தைத் தடைசெய்வது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் நீதிமன்றம் குறிப்பிட்டதாவது, தடுப்புக்காவல் அல்லது கைதுசெய்து வைத்திருத்தலுடன் தொடர்புடைய தகவல்களானது சம்பந்தப்பட்டவையாகக் காணப்படுகின்றன. ஏனெனில், ஒருவரது நடமாட்டத்தினை அல்லது தெரிவினை மட்டுப்படுத்துவதற்கான இத்தகைய முயற்சிகள் தகவல்களுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றன. மற்றும் ஒருவர் தப்பித்துச் செல்வதற்கான முயற்சிகளைத் தடுக்கின்ற அல்லது உட்சாகமிழக்கச் செய்கின்ற நடைமுறைகள் பற்றிய தகவல்களும் உள்ளடங்கும். அச்சுறுத்தல்களைப் பிரயோகித்தல், பலாத்காரம் அல்லது ஏனைய வடிவிலான பௌதீக அல்லது உளவியல் ரீதியிலான பலவந்தங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்கள் அல்லது சம்பவங்கள் போன்றன இந்த அம்சங்களை வழங்குவதுடன் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. அத்தோடு, உளவியல் அழுத்தங்களைப் பிரயோகித்தமை, பாதிக்கப்பட்டவர் பாதிப்புறு நிலையிலிருந்த தன்மைகள் அல்லது பலவந்தமாக தொழிலில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டமை ஆகியனவும் கருத்திற்கொள்ளப்படல் வேண்டும். வெறும் வர்த்தக ரீதியான கொடுக்கல் வாங்கல்கள்' மேற்கொள்ளப்பட்டமை என்பதற்க மற்றவர் மீதான உடைமை ரீதியான உரிமை இல்லையென்பதை நீதிமன்றம் வலியுறுத்தியது. இத்தகைய உடைமைகளை மற்றவர் மீது பிரயோகிக்கப்பட்ட சமூக, பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு ஆராய்வது முக்கியமெனக் குறிப்பிடப்பட்டது. தனது நிலைமையை மாற்றியமைப்பதற்கு அல்லது சீர்செய்வதற்கான ஆற்றல்கள் அற்ற பாதிக்கப்பட்டவரது நிலையிலிருந்து அடிமைத்தனத்தின் அடிப்படைப் பண்புகள் அல்லது தன்மைகள் ஆரம்பமாகின்றன.

8 கட்டாயத் திருமணக் குற்றங்கள் அல்லது கட்டாயமாக பலுணர்வு பந்தத்தில் இணைத்தல் தொடர்பான குற்றங்கள் ஆகியன பற்றி ரோம் சட்டத்தில் எதுவும் உள்ளடக்கப்படவில்லை. இருப்பினும் செரியோ லியோனி விசேட நீதிமன்ற பின்புலத்தில், கட்டாயத் திருமணமானது ஒரு மனிதாபிமானமற்ற செயல் எனவும் அத்தோடு, மானுடத்திற்கு எதிரான குற்றமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆயுதப்படைகள் புரட்சி சபையின் (AFRC) வழக்குத் தீர்ப்பின் பொழுது இந்தக் குற்றம் வரைவிலக்கணப்படுத்தப்பட்டது, இந்தத் தீர்ப்பின் பொழுது நீதியரசர் டொகதி அவர்கள் சற்று மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்தார், பந்தி 53. ஓரளவுக்கு மாற்றுக் கருத்தினைக் கொண்ட தனது அபிப்பிராயத்தின் பொழுது 36 ஆம் பந்தியில் நீதியரசர் டொகதி இவ்வாறு குறிப்பிட்டார்: *"வழக்குத் தொடுக்கும் நிபுணர் மற்றும் சாட்சிகள் ஆகியவற்றினால் விபரிக்கப்பட்டதன் பிரகாரம் பெண் பிள்ளைகளைக் கடத்திச் சென்று அவர்களை பலவந்தமாக திருமணம் செய்துகொள்வதை சமூகங்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணம் அல்லது மரபு ரீதியான திருமணம் ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. இவை இரண்டும் ஒன்றல்ல"* பந்தி 46 – 51 வரையில் இவ்வாறு குறிப்பிட்டார்: *"சான்றுகளை நாம் ஆராய்ந்து பார்க்கையில் செரியோ லியோனேவுடன் தொடர்புடைய ஆயுத மோதல் பின்புலங்களில் கட்டாயத் திருமணத்தை நோக்குகையில், பெண்களையும் பெண் பிள்ளைகளையும் பலவந்தமாக அவர்களது வீடுகளிலிருந்தும் ஏனைய இடங்களான அகதி முகாம்கள் ஆகியவற்றிலிருந்து கடத்திச்சென் AFRC படையினருடன் அவர்களை தடுத்துவைத்து படைகள் சென்ற பல்வேறு மாவட்டங்களுக்கு அவர்களையும் கொண்டுசென்ற செயல்கள் பற்றி கட்டாயத்திருமணம் தொடர்பான சான்றுகள் புலப்படுத்துகின்றன. தனிப்பட்ட ஆயுதப் போராளிகளினால் பெண்களும் பெண் பிள்ளைகளும் அவர்களது சம்மதமின்றி பலவந்தமாக மனைவியாக இருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவ்வாறு பலவந்தமாக மனைவியாக இருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதன் காரணமாக அவர்கள் பாலியல் வன்புணர்வு போன்ற விடயங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டனர். மற்றும் ஏனைய கிளர்ச்சியாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற துஷ்பிரயோகங்களிலிருந்தும் இவர்கள் பாதுகாக்கப்பட்டனர். இருப்பினும் பலவந்தம் பிரயோகிக்கப்பட்ட மேலோங்கிய சூழலைக் கருத்திற்கொண்டு நோக்குகையில், தமது வாழ்வைத் தொடர்வதற்கான அல்லது கொண்டுநடத்துவதற்கானதொரு முறையாக பிரயோகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு ஏற்பட்டது. இதனை இவர்கள் சம்மதம் தெரிவித்த காரணியாகவோ அல்லது பாதிக்கப்பட்டவருடன் தொடர்புமுறைகளை மேற்கொள்வதற்கான சுயாதீன அதிகாரங்களை வழங்கியதாகவோ நாம் கருத முடியாது. எந்தச் சந்தர்ப்பத்திலும் இத்தகைய நடத்தைகளின் தீவிரத்தன்மையை இவை குறைக்கவில்லை. கட்டாயத் திருமணத்திற்கு உள்ளாக்கப்பட்ட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் ஆகியோர் பெரும்பாலும் இளமையானவர்களாகவே இருந்தனர். அத்தோடு, பாதிப்புறுநிலையிலும் இருந்தனர். இவர்கள் தமது குடும்பங்களிலிருந்து அகற்றப்பட்டமை, உடலியல் மற்றும் பாலியல் ரீதியான வன்முறை சார்ந்த சூழமைவுகளில் தடுத்து வைக்கப்பட்டமை ஆகியவற்றை நோக்குகையில் இவர்கள் மிகவும் அதிகமான பாதிப்புறும் சூழ்நிலையில் வாழ்ந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கட்டாயத் திருமணத்தின் காரணமாக கடும் உளவியல் மற்றும் ஒழுக்கம் சார்ந்த காயங்கள் இவர்களுக்கு ஏற்பட்டன. இத்தகைய பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் பயப்படுகின்ற அல்லது அவர்கள் வெறுக்கின்ற நபர்களுடன் கட்டாயமாக தொடர்பு முறைகளை ஏற்படுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். "மனைவி" என வழங்கப்படுகின்ற அல்லது அடையாளப்படுத்துகின்ற முறையானது மேலும் இவர்களை இழிவுபடுத்துவதாகக் காணப்பட்டன. அத்தோடு, தாம் வாழுகின்ற சமூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். சமூகத்தில் தாம் மீண்டும் இணைந்து வாழ்வதற்கான இவர்களது ஆற்றல்களை இவை எதிர்மறையாக தாக்கியதுடன், இதன் காரணமாக இவர்களது உளவியல் சார்ந்த மனவடுக்கள் நீண்ட நாட்களாக நிலைத்திருந்தன. மற்றும் சான்றுகளை ஆராய்ந்து பார்க்கையில் கணவனது நோக்கம் பாதிக்கப்பட்டவரை கட்டாய வேலையில் ஈடுபடுத்துவதும், இவரது சொத்துக்களைப் பராமரிப்பதுமாகவே இருந்தது. அத்தோடு, கணவரது பாலியல் ரீதியான தேவைகளை நிறைவேற்றுகின்ற அதேவேளை, அவரது நம்பிக்கையாக இருந்து இவர் கர்ப்பவதியானாள், அவருக்காக பிள்ளைகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம். இதற்காக மற்றவர்களினால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுவதிலிருந்து இந்த "மனைவி" பாதுகாக்கப்பட்டாள். உணவு இருக்கின்ற பொழுது இவளுக்கு வழங்கப்பட்டது. கணவனது அந்தஸ்த்துக்கு ஏற்ப மனைவிக்கும் சில நேரங்களில் சில வகையான அந்தஸ்த்துகள் வழங்கப்பட்டன. இத்தகைய பெண்களுக்கு கிடைக்கின்ற உரிமைகளாக அல்லது கடப்பாடுகளாக எதிர்வாதியினால் குறிப்பிடப்பட்டது. இத்தகைய சலுகைகள் மரபு ரீதியான திருமணங்களில் கிடைப்பதாகவும் எதிர்வாதி நிபுணர் குறிப்பிட்டார். இருப்பினும் சம்பந்தப்பட்ட பெண்ணின் குடும்பத்திலிருந்தோ, அல்லது உறவினர்களிடமிருந்தோ, மனைவி என்பதற்கான இணக்கம் வழங்கப்படவில்லை. பலவந்தம் அல்லது வன்முறையின் காரணமாகவே இத்தகைய அந்தஸ்த்துகள் அவளுக்குக் கிடைத்தன. எனவே, பாலியல் அடிமைத்தனம் என்ற விடயத்தை தனியாக ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். சான்றுகளை ஆராய்ந்து பார்க்கையில், பாலியல் வன்புணர்விலிருந்து பாதிக்கப்பட்டவருக்கு எத்தகைய பாதுகாப்புக்களும் கிடைக்கவில்லை என்பதையும், அதேவேளை எந்தக் கிளர்ச்சியாளரினாலும் தனது விருப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்துவதற்குரிய சூழல் காணப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது. அதேவேளை, கிளர்ச்சியாளரது மனைவி அல்லது "புஸ் மனைவி" போன்றன இவர்களை இழிவுபடுத்துவதாகவே காணப்பட்டன. மற்றும் எதிர்வாதி நிபுணர் தெரிவித்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் மனைவி என்ற வார்த்தைப் பிரயோகமானது பலவந்தமான திருமண அந்தஸ்த்தையே எடுத்துக் காட்டியது. பாதிக்கப்பட்டவர் மீது நீண்டகால கடும் தாக்கங்களை ஏற்படுத்துவனவாக இவை காணப்பட்டது. மேலும் கிளர்ச்சியளரின் மனைவி எனும் அந்தஸ்த்தானது இவர்களுக்க கடும் மனவடுவை ஏற்படுத்தக் கூடியதாகவும் இவர்களை இழிவுபடுத்தக் கூடியதாகவும், தனது சமூகத்துடன் மீள இணைவதற்கான ஆற்றல்களை எதிர்மறையாகத் தாக்கக் கூடியதாகவும் காணப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட சான்றுகளைக் கருத்திற்கொண்டு நோக்குகையில், கட்டாயத் திருமணத்தின் பொழுது ஏனைய மனிதாபிமானமற்ற செயல்களுடன் குற்றச் செயல் மற்றும் குற்ற மனம் ஆகியன இருந்ததையும் என்னால் கண்டறிய முடிந்தது.'*

**பலவந்த விபச்சாரம் – அம்சங்கள்**

1. பலாத்காரம், அச்சுறுத்தல் அல்லது பலவந்தம் ஆகியவற்றைப் பிரயோகித்து வன்முறை தொடர்பான அச்சங்களை ஏற்படுத்தல், சிறைவாசம், தடுப்புக்காவலில் வைத்தல், உளவியல் சார்ந்த அழுத்தங்கள் அல்லது அதிகாரத் துஷ்பிரயோகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் மீது பாலியலில் ஈடுபடுவதற்கான நிர்ப்பந்தத்தை குற்றமிழைத்தவர் ஏற்படுத்துதல். மற்றும் பலவந்தமான சூழ்நிலைகளில் வாழ்கின்ற பொழுது அத்தகைய நபர்கள் தமது விருப்பத்தினைத் தெரிவிப்பதற்கோ மறுப்பதற்கோ ஆற்றலற்றவர்களாக இருப்பார்கள், இந்தச் சூழ்நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளல்.
2. பாலியல் தன்மை பொருந்திய செயல்களுக்குப் பிரதியீடாக அல்லது அவற்றுடன் தொடர்புடைய பணம் சார்ந்த நன்மைகளைக் குற்றமிழைத்தவர் அல்லது வேறொரு நபர் பெற்றுக்கொள்ளல் அல்லது பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்தல்.

**பலவந்தமாக கருத்தரிக்கச்செய்தல் – அம்சங்கள்**

1. ஏதாவது மக்கள் கூட்டமொன்றின் இன ரீதியான ஆக்கவமைவில் தாக்கத்தினை ஏற்படுத்தும் நோக்கில் அல்லது சர்வதேச சட்டங்களின் கீழ் பாரிய வன்முறைகளை அல்லது மீறல்களை இழைக்கும் நோக்கில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை பலவந்தமாக குற்றமிழைத்தவர் கருத்தரிக்கச் செய்தல்.

**கட்டாய கருத்தடை – அம்சங்கள்**

1. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களது இனப்பெருக்க ஆற்றல்களை உடலியல் ரீதியாக குற்றமிழைத்தவர் தடுத்தல்.
2. மருத்துவ ரீதியாகவோ அல்லது வைத்தியசாலைச் சிகிச்சை மூலமாகவே இந்த நபர்களது நடத்தைகளை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. மேலும் இவர்களது நேர்மையான சம்மதத்துடன் இவை மேற்கொள்ளப்படவில்லை.

**பாலியல் வன்முறை – அம்சங்கள்**

1. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் மீது பலாத்காரமாகவோ அல்லது அச்சுறுத்தல்களைப் பிரயோகித்தோ அல்லது பலவந்தப்படுத்தியோ குற்றமிழைத்தவர் பாலியல் ரீதியான நடத்தைகளில் ஈடுபடல். மேலும், வன்முறை பிரயோகிக்கப்படலாம் என்ற பயத்தின் காரணமாக அல்லது சிறையில் வைக்கப்படுவோம் அல்லது தடுத்து வைக்கப்படுவோம் அல்லது உளவியல் ரீதியான அழுத்தங்களைப் பிரயோகித்தல் அல்லது அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றை அத்தகைய நபர்கள் அல்லது நபருக்கு எதிராக குற்றமிழைத்தவர் பிரயோகித்து அந்த நபர்கள் வாழ்ந்த பலவந்தச் சூழ்நிலையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தனது சம்மதத்தைத் தெரிவிக்க ஆற்றல் இல்லாத சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி குற்றமிழைத்தவர் பாலியல் நடத்தைகளில் ஈடுபடுவதற்கு அவர்களை நிர்ப்பந்தித்தல்.
2. மானுடத்திற்கு எதிரான ஏனைய குற்றங்களுடன் ஒப்புநோக்குகையில் இத்தகைய குற்றங்களும் அதேயளவான தீவிரத்தன்மை கொண்டவையாகும்.
3. இத்தகைய சூழல்களின் தீவிரத்தன்மையை நன்கு அறிந்த நிலையிலேயே குற்றமிழைத்தவர் செயற்பட்டுள்ளார்.

**அடக்குமுறை[9] – அம்சங்கள்**

1. சர்வதேச சட்டங்களுக்கு முரணாக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் தமது அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதிலிருந்தும் குற்றமிழைத்தவர் அவர்களைத் தடுத்தல்.
2. குழு அடையாளத்தின் நிமித்தம் தனிப்பட்ட முறையிலோ அல்லது குழுவாகவோ குறிப்பிட்ட நபர் அல்லது நபர்களை இலக்காகக் கொண்டு குற்றமிழைத்தவர் செயற்படல்.
3. அரசியல், இனம், தேசியம், கலாசாரம், சமயம், பால்நிலை (7ஆம் உறுப்புரையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதன் பிரகாரம், பந்தி – சட்டத்தின் 3ஆம் பந்தி) அல்லது சர்வதேச சட்டங்களின் கீழ் அனுமதிக்க முடியாதவை எனக் குறிப்பிட்டதன் பிரகாரம் நபர்களை இலக்காகக் கொண்டு செயற்படல்.
4. 7 ஆம் உறுப்புரையின் 1ஆம் பந்தியின் பிரகாரம் அல்லது நீதிமன்ற நியாயாதிக்கத்தின் கீழ் குற்றமெனக் கருதுகின்ற விடயங்களை மையமாகக் கொண்டு குற்றமிழைத்தல் அல்லது அதனோடு தொடர்புடைய நடத்தைகளில் ஈடுபடல்.

9 குறிப்பு: மேற்குறிப்பிட்ட ஏதாவது குற்றங்கள் அரசியல், இனம், தேசியம், கலாசாரம், சமயம், பால்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் அடக்குமுறை ரீதியாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் பட்சத்தில் அதனை மானுடத்திற்கு எதிரான குற்றமாக, ஒரு அடக்குமறையாகக் கருத முடியும். இத்தகைய சந்தர்ப்பங்களில் ஏதாவது அடக்குமுறை சார்ந்த நோக்கம் உள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் முகமாக, அவர்கள் பிரயோகித்த வார்த்தைகள், கதைத்த முறை போன்றன பற்றிய கேள்விகள் கேட்கப்படுவது முக்கியமாகும். இத்தகைய அடக்கு முறைகள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாலியல் சார்ந்ததாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இருப்பினும் அரசியற் கருத்துக்கள், அல்லது இனம், தேசியம், கலாசாரம், சமய ரீதியான இணைப்புகள், பால்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் தனிநபர்கள் இலக்காகத் தாக்கப்படும் போது மற்றும் பாலியல் வன்முறை சார்ந்த குற்றச் செயல்களாக இவை இருக்கும் பட்சத்தில் அடக்குமுறை சார்ந்த குற்றங்களுடன் இவை தொடர்புடையதாக இருக்கும்.

## 2. குற்ற வகைகளின் பொதுவான அம்சங்கள்

கீழே குறிப்பிடப்பட்ட குற்றங்கள் எத்தகைய சூழமைவில் இழைக்கப்பட்டுள்ளன (உதாரணமாக, யுத்தக் குற்றங்கள், மானுடத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை அல்லது அதனை விட மோசமானவைகள் போன்ற குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளன)?

**மானுடத்திற்கு எதிரான குற்றங்கள் – அம்சங்கள்**

1. பரந்தளவிலான தாக்குதல்களின் ஓர் அங்கமாகவா இத்தகைய குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளன.
2. பொதுமக்களுக்கு எதிராகவா இத்தகைய தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன.
3. பொதுமக்களுக்கு எதிராகத்தான் தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன என்பதை நன்கு அறிந்த நிலையில் குற்ற மனப்பான்மையுடன் இத்தகைய குற்றங்களை இழைத்தல்.
4. அரசு அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட கொள்கை அல்லது திட்டத்தின் கீழ் இத்தகைய தாக்குதல்களையும் குற்றங்களையும் இழைத்தல் (நீங்கள் ஆவணப்படுத்துகின்ற நியாயாதிக்கத்திற்கு உட்பட்டவையாக அல்லது உட்படாத விடயங்களாக இருக்கலாம்.

**யுத்தக் குற்றங்கள் – அம்சங்கள்**

1. ஆயுத மோதல் காலப்பகுதியில் இக்குற்றங்கள் இழைக்கப்பட்டன (சர்வதேச அல்லது உள்நாடு).
2. இத்தகைய குற்றங்களுக்கும் ஆயுத மோதல்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன.
3. பாதிக்கப்பட்டவர் ஒரு பாதுகாக்கப்பட்ட நபராக இருத்தல் (பாலியல் குற்றங்கள் அல்லது பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (SGBV) ஆகியவற்றின் ஓர் அங்கமாக இல்லாதிருத்தல்)[10].
4. பாதிக்கப்பட்டவர் ஒரு பாதுகாக்கப்பட்ட நபர் என்பதை குற்றமிழைத்தவர் அறிந்திருத்தல்.
5. ஆயுத மோதலின் ஓர் அங்கமாகவே இத்தகைய செயல்கள் இடம்பெறுகின்றன என்பதைக் குற்றமிழைத்தவர் நன்கு அறிந்திருத்தல்.

**இனப்படுகொலை[11] – அம்சங்கள்[12]**

1. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏதாவது ஒன்றினை மேற்கொள்ளல்.
   - ஒரு இனக்குழுவைச் சேர்ந்த நபர்களைக் கொலைசெய்தல்.
   - அந்தக் குழுவைச் சேர்ந்த நபர்களுக்கு கடுமையான உடல் ரீதியான அல்லது உள ரீதியான காயங்களை ஏற்படுத்தல்.
   - அக்குழு மீது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பௌதீக ரீதியான அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் திட்டமிட்டு நடந்துகொள்ளல்.
   - அக்குழுவின் இனப்பெருக்கத்தை தடுக்கக் கூடிய விதத்தில் திட்டமிட்டு நடந்துகொள்ளல்.
   - அக்குழுவைச் சேர்ந்த பிள்ளைகளை வலுக்கட்டாயமாக வேறு இடங்களுக்கு மாற்றுதல்.
2. மேலுள்ள இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏதாவது ஒன்றை இழைத்தல். அக்குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்தில் இச்செயல்களை மேற்கொள்ளல்[13]
3. தேசிய, இன, மத ரீதியான இத்தகைய குழுக்கள் மீதான தாக்குதல்கள்.

---

10 மோதல்களில் நேரடியாக ஈடுபடாத நபர்கள் அல்லது பொதுமக்கள் ஆகியோர் பாதுகாக்கப்பட்ட நபர்களாகக் கருதப்படுகின்றனர்.

11 பாலியல் வன்முறையுடன் தொடர்புடைய குற்றங்கள் பற்றி இந்த சான்றுகள் பற்றிய செயல்நூல் அக்கறை செலுத்துகின்றது. அதாவது, சில செயல்கள் இங்கு உள்ளடக்கப்படவில்லை. அதாவது, கொலைசெய்தல், பலவந்தமாக மாற்றுதல் போன்றன.

12 இனப்படுகொலை எனும் பொழுது, இரண்டு படிமுறைகள் தொடர்புடையனவாகும். 1. இனப்படுகொலையுடன் தொடர்புடைய ஐந்து அம்சங்களில் ஏதாவது ஒன்றை உள்ளடக்கியதாக பாலியல் வன்முறை இடம்பெற்றதற்கான சான்றுகள் காட்டுகின்ற பொழுது. 2. தடைவிதிக்கப்பட்ட நடைமுறைகளின் கீழ் ஒரு இனத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்குடன் குற்றமிழைத்தவர் இத்தகைய செயல்களை மேற்கொண்டுள்ளார் என்பதற்கான சான்றுகள் உள்ள சந்தர்ப்பங்களில்.

13 இனப்படுகொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் இது காணப்படுகின்றது. கீழ்க் குறிப்பிடப்பட்ட இனப்படுகொலையுடன் தொடர்புடைய ஏதாவது செயல்களில் ஈடுபடல். குறிப்பிட்ட இனக்குழுவை அழிக்கும் நோக்குடன் செயற்பட்டுள்ளார் என்பதை சான்றுகள் மூலமாகக் காட்டுதல் வேண்டும். பொறுப்புக்கூறலுக்கு மேலதிகமாக இதனை உணர்த்துவது அவசியமாகும். இது தொடர்பான விடயங்கள் 3வது இணைப்பு அம்சங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் வகைகளில் காட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றத்திற்குப் பொறுப்பாகக் கருதப்படுகின்ற நபர் உயர் பதவி வகிக்கின்ற அல்லது உயர் மட்டத்தில் இருக்கின்ற நபராக மாத்திரம் தான் இருக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை.

## 3. தொடர்புடைய அம்சங்கள்/ பொறுப்புக் கூறல் வகை[14]

குற்றத்திற்கு யார் பொறுப்பு, எத்தகைய பொறுப்புக் கூறலுக்கு உட்பட்டவர், உதாரணமாக – நேரடியாக அல்லது கட்டளையிடல் அல்லது மேலதிகாரி போன்ற பொறுப்புகள்[15]?

**நேரடிப் பொறுப்புகள் – அம்சங்கள்**

குற்றமிழைத்தவர் நேரடியாக அல்லது மறைமுகமாக அல்லது கூட்டுக் குற்றமிழைத்தவராகக் காணப்படல், உத்தரவிடல், ஏற்றுக்கொள்ளல், தூண்டுதல், உதவிசெய்தல் அல்லது குற்றமிழைப்பதற்கு வேறுவிதமான பங்களிப்புக்களை நல்குதல் (ஏதாவது செயலைச் செய்தல் அல்லது செய்யாது விடல்) அல்லது குற்றமிழைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல் (ஏதாவது செயல்களைத் தவிர்த்தல்), பொது நோக்கத்தின் நிமித்தம் செயற்படுகின்ற குழுவொன்றின் மீது தாக்குதலை மேற்கொள்ளல்[16].

**கட்டளையிடுதல்/ மேலதிகாரி என்ற வகையில் பொறுப்புக்கூறல்**

*இராணுவக் கட்டளை அதிகாரிகள்*

1. சட்டப்படி அல்லது நடைமுறையில் இராணுவக் கட்டளையிடும் அதிகாரியாகப் பணியாற்றியதன் காரணமாக தனக்குக் கீழ் பணியாற்றுபவர்கள் மீது கட்டளையிடும் அதிகாரம் அல்லது கட்டுப்பாடுகள்.
2. தனக்குக் கீழ்ப் பணியாற்றுகின்றவர்கள் குற்றமிழைக்கின்றார்கள் என்பதை இவர் நன்கு அறிந்திருத்தல்.
3. குற்றங்களைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் விடுதல் அல்லது குற்றமிழைத்தவர்களைத் தண்டிக்காது விடுதல் அல்லது குற்றமிழைத்தவர்கள் மீது உரிய விசாரணைகளை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அவர்களை அனுப்பிவைக்கத் தவறுதல்.
4. இதன் காரணமாக மேற்படி குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளன.

*சிவில் கட்டளையிடும் அதிகாரிகள்*

1. தனக்குக் கீழ் பணியாற்றுபவர்கள் மீதான வினைத்திறன் மிக்க அதிகாரம் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின் காரணமாக மேலதிகாரிகளுக்கும் கீழ்ப் பணியாற்றுபவர்களுக்கும் இடையிலான தொடர்பு முறைகள் வலுப்பெறல்.
2. தனக்குக் கீழ் பணியாற்றுபவர்கள் குற்றமிழைக்கின்றார்கள் என்பதை நன்கு தெளிவாக அறிந்திருந்தும் அத்தகைய தகவல்களை வேண்டுமென்றே நிராகரித்தல்.
3. மேலதிகாரிகளின் கட்டுப்பாட்டிற்கும் பொறுப்பிற்கும் உட்பட்ட விடயங்களிலேயே குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன.
4. அத்தகைய குற்றங்களைத் தடுப்பதற்கோ அல்லது குற்றமிழைத்தவர்களை விசாரணை மேற்கொள்வதற்காகச் சமர்ப்பிப்பதற்கோ உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருத்தல்.
5. இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக தனக்குக் கீழ் பணியாற்றுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமையின் காரணமாக இத்தகைய குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளன.

---

14 பாலியல் வன்முறைகளுடன் தொடர்புடைய வழக்குத் தொடுத்தல்களைப் பொறுத்தவரையில் மரபு ரீதியாக சான்றளித்தல் என்ற வகை மிகவும் பலவீனமாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாகவோ பலர் விடுதலை செய்யப்படுகின்றனர் அல்லது அவர்கள் மீதான குற்றங்கள் தளர்த்தப்படுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் பொறுப்புக்கூறல் பற்றிய கேள்விகளை மிகவும் கவனமாகக் கேட்பது பொருத்தமாகும். ஏனெனில், இது அற்ற நிலையில் எஞ்சிய சான்றுகளை வினைத்திறன் மிக்க முறையில் மேற்கொள்ள முடியாது போகலாம். பல சந்தர்ப்பங்களில் நீதிபதிகள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்: *'பாலியல் வன்முறை இழைக்கப்பட்டுள்ளது என்பதனை எவ்வித சந்தேகத்திற்கு இடமின்றி அறிய முடிந்தாலும் கூட இத்தகைய குற்றங்களை எதிராளி இழைத்தார் என்பதனை நிரூபிப்பதற்குப் போதியளவு சான்றுகள் இல்லை'* இத்தகைய ஆவணப்படுத்தல்கள் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன.

15 சாரத்துரைக்கப்பட்ட குற்றவாளிகள் தொடர்பான தகவல்களை 'குறிப்பிட்ட வகையிலான' அல்லது 'அம்சங்களையுடைய சாட்சிகள்' மாத்திரமே (உயர் மட்டத்தில் உள்ளே பணியாற்றிய சாட்சிகள்) குறிப்பிட முடியுமென பெரும்பாலும் கருதப்பட்டது. குறிப்பாக குற்றம் இழைக்கப்பட்ட இடத்திலிருந்து வெகு தொலைவில் குற்றமிழைத்தவர் விசாரிக்கப்படுகின்ற பொழுதும் மற்றும் குற்றமிழைத்தவருக்கும் குற்றச் செயலுக்கும் இடையில் நேரடித் தொடர்புகள் இல்லாத சந்தர்ப்பங்களிலும் இவை காணப்பட்டன. ஏதாவது குறிப்பிட்ட சாட்சிகள் தொடர்பிலான ஊகங்களை மேற்கொள்வதை ஆவணப்படுத்துனர்களும் விசாரணையாளர்களும் தவிர்ப்பது சிறப்பானதாகும். உயர் மட்டத்தில் குற்றமிழைத்த சிரேஷ்ட நபர் தொலைவில் இருக்கின்ற பட்சத்தில் பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் குற்றமிழைத்த அத்தகைய அதிகாரி தொடர்பில் அத்தகைய சாட்சிகளை மிகவும் உறுதியுடன் தெரிவிப்பாளர்கள். இத்தகைய சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு சாட்சியும் விசாரிக்கப்படல் வேண்டுமென்பதோடு, கேள்விகளையும் கேட்க வேண்டும். மேலும் முக்கிய சான்றுகளை இழக்காமல் பாதுகாக்கவும் வேண்டும்.

16 ஆணைக்குழுவானது (ஐ.சீ.சீ. சட்டம், உறுப்புரை 25(3)(a)) தனிப்பட்டதாக அல்லது நேரடி பௌதீக ஆணைக்குழவாக அல்லது ஏனையவர்களுடன் கூட்டிணைந்து குற்றங்களை இழைத்தவர்களாக இருக்கலாம். இணைக் குற்றமிழைத்தல்களானது குற்றத்தின் மீது கூட்டுக் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய அல்லது இன்னொருவர் மூலமாக குற்றத்தினை இழைத்தல் அல்லது மற்றுமொரு நபருக்கு குற்றமிழைப்பதற்கு கட்டளையிடல் அல்லது மற்றவரை குற்றச்செயலில் ஈடுபடுவதற்குத் தூண்டுதல் அல்லது காரணியாக இருத்தல் அல்லது குற்றமிழைப்பதற்கு அவசியமான நடைமுறை சார்ந்த உதவிகளை வழங்குதல். உதாரணமாக, குற்றம் இழைப்பதற்குக் காரணியாக இருத்தல் அல்லது நேரடியாக குற்றவாளியை உட்சாகப்படுத்தல் அல்லது உளவியல் ரீதியான உதவிகளை குற்றவாளிக்கு வழங்குதல் போன்றன.

# பின்னிணைப்பு 1ஆ: மாதிரிச் சான்றுச் செயல்நூல்

<table>
<tr><th colspan="4">குற்றத்தின் வகை: வன்புணர்வு</th></tr>
<tr><td>குற்ற அம்சங்கள்:<br>குற்ற அம்சங்கள், பொதுவான குற்ற வகைகள் மற்றும் பொறுப்புக் கூறல் வகைகள், இணைப்பு அம்சங்கள்</td><td>ஆக்கவமைவுகள் தொடர்பான அம்சங்கள்:<br>ஒவ்வொரு அம்சமும் பல்வேறு விதமான ஆக்கவமைவுகளைக் கொண்டுள்ளன.</td><td colspan="2">சான்று வழிவகை:<br>மாறுபட்ட ஆக்கவமைவுகள் மற்றும் அம்சங்கள் ஆகியவற்றைத் தாபிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய திட்டவட்டமான உண்மை சார்ந்த கண்டறிதல்கள்</td></tr>
<tr><td rowspan="2">அம்சங்கள்</td><td rowspan="2">ஆக்கவமைவுகள்</td><td colspan="2">சான்று வகைகள்<br>(உதாரணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன)</td></tr>
<tr><td>சான்று வகைகள்</td><td>வழக்கு சட்டத்திலிருந்து உதாரணங்கள்</td></tr>
<tr><td colspan="4">திட்டவட்டமான அம்சங்கள்: அத்துமீறல் நடத்தைகள்</td></tr>
<tr><td rowspan="2">ஆண்குறியை உட்செலுத்துவதன் மூலம் குற்றமிழைத்தவர் மற்ற நபரது உடல் மீது அத்துமீறிப் பிரவேசித்தல். இத்தகைய உட்செலுத்தல் சிறிதாக இருந்த பொழுதிலும் கூட பாதிக்கப்பட்டவர் மீதான அத்துமீறல்களாகவே இவை இருக்கும். தனது ஆண்குறியை குதவாயில் அல்லது யோனியில் செலுத்துதல் அல்லது வேறு பொருட்களை உட்செலுத்திய அத்துமீறல்கள்.</td><td>உடலில் எந்தப் பகுதியிலாவது அத்துமீறிப் பிரவேசித்தல் அல்லது பாலியல் உறுப்புகள் மூலமான அத்துமீறல்கள் (அல்லது)</td><td>குற்றமிழைத்தவர் தனது பாலுறுப்பு மூலமாக பாதிக்கப்பட்டவரது உடலை அத்துமீறியமைக்கான சான்றுகள்:</td><td>ஆண்குறியை பெண் யோனியினுள் உட்செலுத்தியமைக்கான சான்றுகள் (பெம்பா ரீ.ஜே, கடங்க ரீ.ஜே)<br><br>பாதிக்கப்பட்டவரது குதவாயில் ஆண்குறியை உட்செலுத்தியமைக்கான சான்றுகள் (பெம்பா ரீ.ஜே.) ஆண்குறியை பாதிக்கப்பட்டவரது வாயில் உட்செலுத்தல் (பெம்பா ரீ.ஜே.),<br><br>பாதிக்கப்பட்டவரது யோனியில் அல்லது மலவாயில் இலிருந்து விந்துகள் வடிந்து வந்தமைக்கான சான்றுகள்.<br><br>பாதிக்கப்பட்டவரது யோனி அல்லது குதவாயில் காயம் ஏற்பட்டதற்கான சான்றுகள் (முஹிமானா ரீ.ஜே)</td></tr>
<tr><td>ஏதாவது பொருள்கள் அல்லது உடலிலன் ஏதாவது பாகத்தினால் பாதிக்கப்பட்டவரது குதவாய் அல்லது யோனியில் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்கள்</td><td>ஏதாவது பொருட்கள் அல்லது உடம்பின் ஏதாவது பாகத்தினால் பாதிக்கப்பட்டவரது குதவாய் அல்லது யோனியில் அத்துமீறியமைக்கான சான்றுகள்</td><td>பெண் உறுப்பினுள் ஈட்டியை உட்செலுத்தியமைக்கான சான்றுகள்<br><br>(முபாருஷினா டீ.சீ.சீ.)<br><br>பலகைத் துண்டொன்றை பெண் உறுப்பினுள் உட்செலுத்தி அத்துமீறல்களை மேற்கொண்டமைக்கான சான்றுகள் (அகயெசு ரீ.ஜே)</td></tr>
</table>

| வாய்ப்புள்ள சான்றுகளுக்கான உதாரணங்கள் | |
|---|---|
| சான்றுப்பத்திரம் | X இடமிருந்தான சான்றுப் பத்திரம்: (பெரிய நபர்கள்) எனது தலையைப் பணித்து கைகளைக் கட்டினர். அதன் பின்னர், சிறிய நபர்கள் (…) ஆண்குறியை உள்ளே திணித்தனர்… அதேவேளை, இவ்வாறு குறிப்பிட்டார் "இந்தப் பெட்டை நாய்க்கு பிள்ளைகள் இருக்கின்றன. இது பெரிதாக இருக்கின்றது, அதன் பின்னர் தனது ஆண்குறியை வெளியே எடுத்து குதவாயினுள் உட்செலுத்தினர். பார்க்க பகுதி அ: பகுப்பாய்வுகள் கருவிகள் தொடர்பானது.<br>*ANALYSIS TOOL விற்கான செயல்நூல் பகுதி ஆ வை பார்க்க* |
| ஆவணம் | சுயாதீன மருத்துவ அமைப்புகள் உருவாக்கப்பட்டு சாட்சி X இனால் வழங்கப்பட்ட மருத்துவச் சட்ட அறிக்கை மற்றும் பூரணப்படுத்தப்பட்ட மருத்துவ வரலாறுகள். |

| குறிப்பான அம்சங்கள்: ஆக்கிரமிப்பின் தன்மை | | | |
|---|---|---|---|
| வன்முறை, பலவந்தம், தடுப்புக் காவலில் வைத்தல் போன்ற அச்சங்கள் மற்றும் உளவியல் ரீதியான அழுத்தங்கள் அல்லது அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றவற்றைப் பிரயோகிப்பதன் மூலம் பலவந்தமாக அல்லது அச்சுறுத்தலை ஏற்படுத்துவதன் மூலமாக இத்தகைய அத்துமீறல்கள் இழைக்கப்படல் அல்லது அத்தகைய நபர்கள் வாழுகின்ற சூழல்களைத் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு அத்தகைய நபர்கள் தமது விருப்பத்தைத் தெரிவிக்க முடியாத சூழ்நிலைகளில் பலவந்தமாக அவர்களுக்கு எதிரான அத்துமீறல்களை மேற்கொள்ளல். | பலவந்தம் மூலமான அத்துமீறல்கள் (அல்லது) | குற்றமிழைத்தவர் தனது பாலியல் உறுப்பின் மூலமாக பாதிக்கப்பட்டவரின் உடலில் ஏதாவது பாகத்தினுள் அத்துமீறல்களை மேற்கொள்ளல். | அத்துமீறல்களை மேற்கொண்ட சந்தர்ப்பங்களில் வன்முறையைப் பிரயோகித்தமைக்கான சான்றுகள் (பீமா ரீ.ஜே). மிசுமியா ரீ.ஜே.<br>அத்துமீறல்களின் காரணமாக பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பான சான்றுகள்<br>அத்துமீறல்களின் காரணமாக உளவியல் ரீதியாக அல்லது மருத்துவ ரீதியான தாக்கங்கள், பின்விளைவுகள் ஏற்பட்டமைக்கான சான்றுகள். |
| | | உடலியல் ரீதியாக பலவந்தத்தைப் பிரயோகித்தமைக்கான சான்றுகள். | அத்துமீறிய சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர் உடல் ரீதியாக அவற்றை எதிர்த்தமைக்கான சான்றுகள்<br>பயத்தின் காரணமாக பாதிக்கப்பட்டவர் மற்றவர்களை அழைத்தமைக்கான சான்றுகள் (பீமா ரீ.ஜே, மிசுமா ரீ.ஜே) |
| | | தடுப்புக்காவலின் பொழுது/ சிறையில் வைத்திருத்தலின் போதான சான்றுகள் | |
| | அச்சுறுத்தல், பலவந்தம் அல்லது பலவந்தமான அத்துமீறல்கள் | வன்முறையினால் ஏற்பட்ட அச்சம் தொடர்பான சான்றுகள் | ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தியமைக்கான சான்றுகள் (பீமா ரீ.ஜே) |
| | | உளவியல் ரீதியான அழுத்தங்கள் பற்றிய சான்றுகள் | ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தியமைக்கான சான்றுகள் (பீமா ரீ.ஜே) |
| | | அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்பான சான்றுகள் | ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தியமைக்கான சான்றுகள் (பீமா ரீ.ஜே) |
| | | சம்மதம் தெரிவிக்கப்படாமை அல்லது தானாக முன்வந்து பங்குபற்றியமை இன்மைக்கான சான்றுகள் | |
| | | உண்மையான சம்மதத்தைத் தெரிவிப்பதற்கு ஆற்றலின்மை தொடர்பான சான்றுகள். | |
| | | தடுப்புக்காவலில் இருந்தமைக்கான சான்றுகள். | |

| வாய்ப்புள்ள சான்றுகள் தொடர்பாக மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உதாரணங்கள் | |
|---|---|
| டிஜிடல் | நீல நிற ஆடையணிந்திருந்த இரண்டு பெண்களை இராணுவத்தினர் பலவந்தமாக வீடொன்றினுள் இழுத்-துச் சென்றமை தொடர்பான ஸ்மாட் போன் ஆதாரங்கள், ஜியோ ரெக் கிராமம் லு |

## பொதுவான அம்சங்கள்: மானுடத்திற்கு எதிரான குற்றங்கள்

| **குற்ற அம்சங்கள்:**<br>கீழுள்ள குற்றங்கள் தொடர்பான அம்சங்கள், குற்ற அம்சங்கள் தொடர்பான பொதுவான வகைகள் மற்றும் பொறுப்புக் கூறல் வழிமுறைகள்/ தொடர்புடைய அம்சங்கள் | **அம்சங்கள் தொடர்பான ஆக்கவமைவுகள்:**<br>ஒவ்வொரு அம்சமும் பல்வேறு விதமான ஆக்கவமைவுகளை உள்ளடக்கியுள்ளது. | **நிரூபிப்பதற்கான வழிமுறைகள்:**<br>மாறுபட்ட ஆக்கவமைவுகள் மற்றும் அம்சங்கள் ஆகியவற்றைத் தாபிப்பதற்காக பயன்படுத்தக்கூடிய திட்டவட்டமான உண்மை சார்ந்த கண்டறிதல்கள். | |
|---|---|---|---|
| **குற்ற அம்சங்கள்** | **அம்சங்கள் தொடர்பான ஆக்கவமைவுகள்** | **நிரூபிப்பதற்கான வழிமுறைகள்** (உதாரணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன) | |
| | | சான்று வகைகள் | வழக்குச் சட்டத்திலிருந்து உதாரணங்கள் |
| **சூழமைவு** | | | |
| குற்றங்கள் பரந்தளவிலானதொரு அங்கமாக அல்லது முறையான தாக்குதலாக இழைக்கப்பட்டன | தாக்குதல் | குரோதங்கள் பிரயோகிக்கப்பட்டமைக்கான சான்றுகள் | *குரோதங்கள் பிரயோகிக்கப்பட்டமைக்கான சான்றுகள், இவை 7(1) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்ட பல்வேறு வகையான செயல்கள் (குர்னாக் எட் எல் ரீ.ஜே., ரெரிமிர் ரீ.ஜே. பீமா ரீ.ஜே.)* |
| | | பொதுமக்கள் தொடர்பில் தவறாக நடாத்தப்பட்டமைக்கான சான்றுகள் | *பொதுமக்களை மோசமாக நடத்தியமைக்கான சான்றுகள் இவற்றுள் 7(1) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்ட பல்வேறுவிதமான செயல்களும் உள்ளடங்குகின்றன. (லுகெ எட் எல் ரீ.ஜே. ஜிபெக்போ டீ.சீ.சீ.)* |
| | பரந்தளவிலான முறையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் | தாக்குதலின் அளவு தொடர்பான சான்றுகள் | *பல்வேறு விதமான செயல்கள் தொடர்பான சான்றுகள் (Brđanin TJ; Ntakirutimana TJ; Bemba TJ), பல்வேறு விதங்களில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான சான்றுகள் (Bisengimana TJ; Bemba TJ), புவியியல் நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பான சான்றுகள் (Bemba TJ), அதிகளவு நிதியைப் பயன்படுத்தியமைக்கான சான்றுகள், இராணுவம், தங்குமிட உணவு வசதிகள், ஏனைய வளங்கள் ஆகியவற்றைக் கணிசமானளவு பயன்படுத்தியமைக்கான சான்றுகள் (Akayesu TJ; Jelišić TJ), தாக்குதலின் காரணமாக ஏற்பட்ட பின்விளைவுகள் அல்லது கணிசமான விளைவுகள் தொடர்பான சான்றுதல்கள் (Kunarac et al. TJ)* |
| | | தாக்குதல் முறை தொடர்பான சான்றுகள் | *குற்றவியல் செயல்கள் தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் இடம்பெற்றமைக்கான சான்றுகள் (Jelišić TJ), தாக்குதல் வழிமுறைகள், முறைகள் தொடர்பான சான்றுகள் (Blaškić TJ; Ntaganda DCC), பாதிக்கப்பட்டவர்களது தேசிய இனம், வகுப்பு, சமயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கான சான்றுதல்கள், பாதிக்கப்பட்டவரது பிரஜை அந்தஸ்த்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் பற்றிய சான்றுகள் (Kayishema மற்றும் Ruzindana TJ)* |
| | | ஒழுங்கமைக்கப்பட்ட தன்மையுடைய தாக்குதலுக்கான சான்றுகள் | *முன்கூட்டிய திட்டம் அல்லது கொள்கையின் அடிப்படையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் (Kayishema and Ruzindana TJ), புவியியல் அடிப்படையில் அல்லது தற்காலிக நிகழ்வுகளின் அடிப்படையில் ஒருவர் மீது மற்றவர் தாக்குதலை மேற்கொண்டமைக்கான சான்றுகள் (Lukić et al. TJ; Katanga TJ), பல்வேறு மாறுபட்ட கட்டங்களில் தாக்குதல்களை மேற்கொண்டமைக்கான சான்றுகள் (Blaškić TJ), முறையாக வேலைவாய்ப்புக்களை வழங்கியதன் ஊடாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கான சான்றுகள் (Blaškić TJ), கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக சமாந்தரமாக தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் தொடர்பான சான்றுகள் (Jelišić TJ)* |
| | குற்றமிழைத்தவரது செயல்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பு முறைகள் (ஓர் ஆங்கமாக) | தாக்குதலின் தன்மை, அதன் நோக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் (மற்றும்) | *அவசியமில்லை: தாக்குதலின் மத்தியில் இத்தகைய செயல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் (Kunarac et al. TJ), தன்மை, பின்விளைவுகள், பண்புகள், இலக்குகள் ஆகிய புது அம்சங்களின் அடிப்படையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் (Kajelijeli TJ; Kunarac et al. TJ; Gbagbo DCC). பொதுவான உள்நோக்கம் மற்றும் செயன்முறை ஆகியவற்றின் அடிப்படையில் தொடர்ச்சியாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் (Bemba TJ)* |
| | | பொதுமக்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன அல்லது கொல்லப்படுகின்றனர் என்ற அறிவு குற்றமிழைத்தவருக்கு இருப்பதற்கான சான்றுகள். இதன் ஓர் அங்கமாகவே இத்தகைய தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. | *அதற்கான சான்றுகள்: குறிப்பிட்ட வார்த்தைகள், ஆவணங்கள் அல்லது நடத்தைகள் ஆகியவற்றின் காரணமாக பெறப்பட்ட சான்றுகள் (Popović et al. TJ), தாக்குதல் இடம்பெற்ற புவியியல் பிரதேசம் தொடர்பான சான்றுகள் (Nzabonimana TJ).* |

| | | | |
|---|---|---|---|
| **சூழமைவு, தொடர்ச்சி** | | | |
| பொதுமக்களுக்கு எதிராகவே இத்தகைய தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. | ஏதாவது மக்கள் கூட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் | இத்தாக்குதலின் மூல நோக்கமாக பொதுமக்கள் காணப்பட்டமைக்கான சான்றுகள் (எதிர்பாராத தாக்குதலின் காரணமாக பாதிக்கப்பட்டவர் அல்ல) | *தாக்குதலின் தன்மை, சூழல் தொடர்பான சான்றுகள் (Mrkšić et al. TJ; Muhimana TJ; Katanga TJ); தாக்குதலின் பொழுது மேற்கொள்ளப்பட்ட குற்றங்களின் அளவு தொடர்பான சான்றுகள் (Stakić TJ; Kunarac AJ); தாக்குதலின் பொழுது மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் மற்றும் முறைகள் தொடர்பான சான்றுகள் (Blaškić TJ; Kunarac et al. TJ); ஐ.நா. பாதுகாப்பு அமைப்பு முறைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கான சான்றுகள் (Perišić TJ); தாக்குதலின் பொழுது பொதுமக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதற்கான சான்றுகள் (Perišić TJ; Bemba TJ); எத்தனைபேர் பாதிக்கப்பட்டனர் என்பதற்கான சான்றுகள் (Mrkšić et al. TJ)* |
| | [அரசாங்கம் அல்லது ஒழுங்கமைப்புச் சார்ந்த கொள்கையின் காரணமாக அல்லது அதன் விளைவாக ஏற்பட்ட சூழ்நிலையின் காரணமாக இழைக்கப்பட்ட குற்றங்கள் அல்லது தாக்குதல்கள். உறுப்புரை 7, பந்தி 3] | அரசு அல்லது அமைப்பு ரீதியான கொள்கைகள் காணப்பட்டமைக்கான சான்றுகள். | *உறுப்புரை 7(2)(a) யின் பிரகாரம் அமைப்பு ஒன்று காணப்பட்டமைக்கான சான்றுகள் (Bemba TJ)*<br><br>*அதிகாரிகள் ஈடுபட்டனர் அல்லது அறிந்திருந்தனர் என்பதற்கான சான்றுகள் (Perišić TJ; Bemba TJ), சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தாக்குதல்களுக்காக முன் ஆயத்தங்களை மேற்கொண்டனர் என்பதற்கான சான்றுகள். சம்பந்தப்பட்ட குற்றச் செயல் தொடர்பில் சகிப்புத்தன்மையுடன் இருந்தனர் என்பதற்கான சான்றுகள் (Blaškić AJ; Bemba TJ), அதிகாரிகள் மேற்கொண்ட பேச்சுகள், எழுத்தாக்கங்கள் தொடர்பான சான்றுகள் (Ruto and Sang DCC; Katanga TJ), தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் தொடர்பான சான்றுகள் (Bemba TJ), தற்காலிகமாக அல்லது புவியியல் அடிப்படையில் மீண்டும் மீண்டும் வன்முறைகள் இடம்பெற்றதற்கான சான்றுகள் (Bemba TJ), அமைப்பின் அளவு, தன்மை தொடர்பான சான்றுகள் (Blaškić AJ; Bemba TJ).* |
| **மென்ஸ் றியா** | | | |
| நேரடியாக குற்றம் இழைத்தவர் தாக்குதல் பற்றி அறிந்திருந்தார். | இத்தகைய தாக்குதல்களானது, பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்களின் பரந்த அம்சங்களின் ஓர் அங்கம் என்பதைக் குற்றமிழைத்தவர் அறிந்திருந்தார். | தாக்குதல் பற்றி குற்றமிழைத்தவர் அறிந்திருந்தார் என்பதற்கான சான்றுகள் | *தாக்குதலின் அளவு, அதன் பாதிப்பு மற்றும் முறை ஆகியன தொடர்பான சான்றுகள் (Lukić et al. TJ; Bemba TJ), குற்றமிழைத்தவரின் வகிபாகம், பதவி, நிலை தொடர்பான சான்றுகள் (Krnojelac TJ; Nizeyimana TJ), தாக்குதலை மேற்கொண்ட படையில் குற்றமிழைத்தவர் உறுப்புரிமையைப் பெற்றிருந்தார் என்பதற்கான சான்றுகள் (Ruto and Sang DCC), தாக்குதல்களை மேற்கொண்ட படையுடன் தொடர்ச்சியாக குற்றமிழைத்தவர் தொடர்புகளை மேற்கொண்டிருந்தார் என்பதற்கான சான்றுகள் (Ble Goude DCC), குற்றமிழைத்தவர் தாக்குதலில் பங்கு பற்றினார் என்பதற்கான சான்றுகள் (Jelišić TJ), தாக்குதலைத் தயார்படுத்தும் பொழுது குற்றம் சுமத்தப்பட்டவர் அதில் பங்குபற்றினார் என்பதற்கான சான்றுகள் (Ble Goude DCC), தாக்குதல் நடைபெற்ற இடத்தில் குற்றம் சுமத்தப்பட்டவர் சமுகமளித்திருந்தார் என்பதற்கான சான்றுகள் (Krnojelac TJ; Musema TJ; Bemba TJ).*<br><br>*தாக்குதல் பற்றி குற்றம் சுமத்தப்பட்டவருக்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளது என்பதற்கான சான்றுகள் (Vasiljević TJ), குறிப்பிட்ட பிராந்தியத்தில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட தருணத்தில் பொதுவாக அறிந்திருந்தனர் என்பது தொடர்பான சான்றுகள் (Krnojelac TJ), இத்தகைய தாக்குதல்கள் தொடர்பில் ஊடகங்களில் பரவலாக செய்திகள் இடம்பெற்றமைக்கான சான்றுகள் (Bemba TJ)* |
| | | தாக்குதலின் ஓர் அங்கமாகவே தான் பங்கேற்பதைக் குற்றமிழைத்தவர் அறிந்திருந்தார் என்பதற்கான சான்றுகள் | *குற்றம் சுமத்தப்பட்டவர் கட்டளைகளை வழங்கினார் என்பதற்கான சான்றுகள் (Gatete TJ), தாக்குதலை மேற்கொள்ளும் முகமாக ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டங்களில் குற்றம் சுமத்தப்பட்டவரும் பங்குபற்றினார் என்பதற்கான சான்றுகள் (Niyitegeka TJ), தாக்குதல்களின் இலக்கினைப் பூரணப்படுத்தும் முகமாக தான் விரும்பியே குற்றமிழைத்தவர் பங்குபற்றினார் என்பதற்கான சான்றுகள் (Ble Goude DCC), குற்றம் சுமத்தப்பட்டவர் தாக்குதலுக்கு தனது ஆதரவினைத் தெரிவித்துள்ளார் என்பதற்கான சான்றுகள் (Niyitegeka TJ), பாதிக்கப்பட்டவர் குறிப்பிட்ட குழுவொன்றைச் சேர்ந்த உறுப்பினர் என்பதை குற்றம் சுமத்தப்பட்டவர் தரம் பிரித்து அறிந்தமைக்கான சான்றுகள் (Niyitegeka TJ), தாக்குதலின் தன்மை மற்றும் சூழல் தொடர்பான சான்றுகள் (Gotovina et al. TJ; Ndahimana TJ).* |
| | பொதுமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் ஓர் அங்கமே இத்தகைய நடத்தை என்பதை குற்றமிழைத்தவர் அறிந்திருந்தார். | ஏற்புடையதல்ல | *தாக்குதலில் குற்றமிழைத்தவர் சுறுசுறுப்பாகப் பங்குபற்றினார் என்பதற்கான சான்றுகள் (Jelišić TJ).* |

பின்ணைப்பு 1

பாலியல் வன்முறை குற்றங்களின் ஆவணப்படுத்தலுக்கான சான்றுச் செயல்நூல்

## தொடர்புபட்ட அம்சங்கள்: கட்டளை பற்றிய பொறுப்பு

| குற்ற அம்சங்கள்: | அம்சங்கள் தொடர்பான ஆக்கவமைவுகள்: | நிரூபிப்பதற்கான வழிமுறைகள்: | |
|---|---|---|---|
| கீழுள்ள குற்றங்கள் தொடர்பான அம்சங்கள், குற்ற அம்சங்கள் தொடர்பான பொதுவான வகைகள் மற்றும் பொறுப்புக் கூறல் வழிமுறைகள்/ தொடர்புடைய அம்சங்கள் | ஒவ்வொரு அம்சமும் பல்வேறு விதமான ஆக்கவமைவுகளை உள்ளடக்கியுள்ளது | மாறுபட்ட ஆக்கவமைவுகள் மற்றும் அம்சங்கள் ஆகியவற்றைத் தாபிப்பதற்காக பயன்படுத்தக்கூடிய திட்டவட்டமான உண்மை சார்ந்த கண்டறிதல்கள். | |
| **குற்ற அம்சங்கள்** | **அம்சங்கள் தொடர்பான ஆக்கவமைவுகள்** | **நிரூபிப்பதற்கான வழிமுறைகள்** (உதாரணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன) | |
| | | சான்றுகளின் வகைகள் | வழக்குச்சட்டங்களிலிருந்து உதாரணங்கள் |
| சட்டப்படியான அல்லது சட்டப்படியாக எவ்வாறிருந்த பொழுதிலும் நடப்பில் உண்மையான கட்டளைத் தளபதி தனக்கு கீழ் பணியாற்றுபவர்கள் மீது வினைத்திறன் மிக்க கட்டளைகளை மேற்கொண்டார் என்பதற்கான சான்றுகள். | குற்றமிழைத்தவர் வினைத்திறன் மிக்க கட்டளைகளையும் கட்டுப்பாடுகளையும் கொண்டிருந்தார் (இராணுவக் கட்டளைத் தளபதிகள்). | அதிகாரியின் சான்றுகள் | *முறைசார்ந்த முறையில் இராணுவப் பதவிகளை வகித்தமைக்கான சான்றுகள் (Đorđević TJ)*<br>*கட்டளைத் தொடர்களை மேற்கொண்டமைக்கான சான்றுகள் (Orić TJ)*<br>*கட்டளைகளை வழங்குவதற்கு சந்தேக நபருக்குள்ள ஆற்றல்கள் தொடர்பான சான்றுகள் மற்றும் அத்தகைய கட்டளைகள் நிறைவேற்றப்பட்டமைக்கான சான்றுகள் (Nyiramasuhuko et al. TJ; Hadžihasanović & Kubura TJ; Bemba TJ)*<br>*உயர் பொது விளக்கம் தொடர்பான சான்றுகள் (Ndindiliyimana et al. TJ)*<br>*சட்டப்படி எவ்வாறிருந்த பொழுதிலும் நடப்பில் இன்மையான கீழ் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களினால் அதிகாரம் பிரயோகிக்கப்பட்டமைக்கான சான்றுகள் (Ndindiliyimana et al. TJ)* |
| | | குற்றம் இழைப்பதை தடுப்பதற்காக பொருள் ரீதியான ஆற்றல்களைச் சந்தேக நபர் கொண்டிருந்தார் என்பதற்கான சான்றுகள் | *மோதலுக்காக நேரடிக் கட்டளைகளை வழங்குவது தொடர்பில் சந்தேக நபருக்கு இருந்த அதிகாரம் பற்றிய சான்றுகள் (Ndindiliyimana et al. TJ)*<br>*பேச்சுவார்த்தைகளின் பொழுது படையினரை பிரதிநிதித்துவம் செய்வதற்கு சந்தேக நபருக்கு இருந்த அதிகாரம் தொடர்பான சான்றுகள் (Bagosora TJ)*<br>*சந்தேக நபருக்க கட்டளைகளை விநியோகித்தல் தொடர்பில் காணப்பட்ட ஆற்றல்கள் அல்லது அதிகாரங்கள் மற்றும் அத்தகைய கட்டளைகள் நிறைவேற்றப்பட்டனவா என்பதற்கான சான்றுகள் (Strugar TJ)* |
| | | குற்றமிழைத்தவர்களை தண்டிப்பது தொடர்பில் சந்தேக நபருக்குக் காணப்படுகின்ற பொருள் ரீதியான ஆற்றல்கள் பற்றிய சான்றுகள் | *விசாரணைகளை அல்லது நிர்வாக ரீதியான மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் சந்தேக நபருக்குக் காணப்படும் அதிகாரம் தொடர்பான சான்றுகள்.*<br>*அதிகாரிகளுக்குப் பதவியுயர்வு வழங்குதல் அல்லது அவர்களை பதவியிலிருந்து அகற்றுதல் தொடர்பாக சந்தேக நபருக்குள்ள அதிகாரங்கள் பற்றிய சான்றுகள் (Strugar TJ)* |
| | குற்றமிழைதவருக்கு வினைத்திறன் மிக்க அதிகாரமும் கட்டுப்பாடுகளும் காணப்பட்டன (பொதுமக்கள் கட்டளைத் தளபதிகள்). | உயர் அதிகாரம் காணப்பட்டமைக்கான சான்றுகள் | *உள்நாட்டு சட்டதிட்டங்கள் மூலமாக தனக்குக் கீழ் பணியாற்றுபவர்கள் மீது அதிகாரம் செலுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டமைக்கான சான்றுகள் (Ndahimana TJ)*<br>*சந்தேக நபரிடம் உத்தரவுகளையும் கட்டளைகளையும் விடுப்பதற்கான அதிகாரம் காணப்பட்டதுடன் அதன் அடிப்படையில் அவை செயற்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் (Nizeyimana TJ; Ndahimana TJ)* |
| | | குற்றம் இழைப்பதை தடுப்பதற்காக பொருள் ரீதியான ஆற்றல்களைச் சந்தேக நபர் கொண்டிருந்தார் என்பதற்கான சான்றுகள் | *தனக்குக் கீழ் பணியாற்றும் அதிகாரிகளை சட்டபூர்வமாக அவர்களது பதவியிலிருந்து அகற்றுவதற்காக உள்நாட்டு சட்டங்கள் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டமைக்கான சான்றுகள் (Karemera & Ngirumpatse TJ)*<br>*தனக்கு கீழ் பணியாற்றுகின்ற ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதன் பொருட்டு உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் அதிகாரங்களை வழங்கியமைக்கான சான்றுகள் (Kayishema & Ruzin- dana)* |
| | | குற்றமிழைத்தவர்களை தண்டிப்பது தொடர்பில் சந்தேக நபருக்குக் காணப்படுகின்ற பொருள் ரீதியான ஆற்றல்கள் பற்றிய சான்றுகள் | *தனக்குக் கீழ் பணியாற்றும் அதிகாரிகளை சட்டபூர்வமாக அவர்களது பதவியிலிருந்து அகற்றுவதற்காக உள்நாட்டு சட்டங்கள் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டமைக்கான சான்றுகள் (Karemera & Ngirumpatse TJ)*<br>*தனக்கு கீழ் பணியாற்றுகின்ற ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதன் பொருட்டு உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் அதிகாரங்களை வழங்கியமைக்கான சான்றுகள் (Kayishema & Ruzin- dana)* |

| | | | |
|---|---|---|---|
| தனக்குக் கீழ் பணியாற்றுபவர்கள் குற்றமிழைத்ததை அவர் அறிந்திருக்க முடியும் அல்லது அறிந்திருக்கக் கூடும். | இராணுவத்தினர் குற்றமிழைக்கிறார்கள் அல்லது குற்றமிழைக்கப் போகிறார்கள் என்பதை குற்றமிழைத்தவர் அறிந்திருந்தார். | குற்றங்கள் பற்றி சம்பந்தப்பட்ட நபர் உண்மையில் அறிந்திருந்தார் என்பதற்கான சான்றுகள். | குற்றங்கள் பற்றி சம்பந்தப்பட்ட சந்தேக நபருக்கு அறிவிக்கப்பட்டமைக்கான சான்றுகள் (Nizey- imana TJ)<br>சந்தேக நபருக்கு குற்றவாளிகளைத் தெரியும் என்பதற்கான சான்றுகள் (Brđanin TJ)<br>பாதிக்கப்பட்டவர்களை சந்தேக நபர் அறிந்திருந்தார் என்பதற்கான சான்றுகள் (Aleksovski TJ) |
| | இராணுவத்தினர் குற்றங்களை இழைக்கன்றார்கள் அல்லது குற்றங்களை இழைக்கப் போகின்றார்கள் என்பதை சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு நோக்குகையில் குற்றமிழைத்தவர் அறிந்திருந்தார். | இராணுவத்தினர் குற்றங்களை இழைக்கின்றார்கள் அல்லது இழைக்கப் போகின்றார்கள் என்பதை சம்பந்தப்பட்ட நபர் அறிந்திருந்தமைக்கான சான்றுகள் | கடந்த கால குற்றங்கள் தொடர்பில் தண்டனைகளை வழங்குவதற்கு சந்தேக நபர் தவறியுள்ளமை தொடர்பான சான்றுகள் (Karadzic TJ)<br>தனக்குக் கீழ் பணியாற்றுகின்ற இராணுவ ஊழியர்கள் வன்முறையாக அல்லது உறுதியற்ற பண்புகளின் அடிப்படையில் செயற்பட்டார்கள் என்ற தகவல் சந்தேக நபருக்குக் கிடைத்தமைக்கான சான்றுகள் (Krnojelac AJ) |
| குற்றங்களைத் தடுப்பதற்கோ அல்லது உரிய தண்டனைகளைக் குற்றவாளிகளுக்கு வழங்குவதற்கோ அல்லது விசாரணைகளை உரிய அதிகாரிகளுக்கு சமர்ப்பிப்பதற்கோ உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | குற்றங்கள் இழைக்கப்படுவதைத் தடுப்பதற்கு அவசியமான நியாயபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தவறியமை (அல்லது) | | குற்றங்கள் இழைக்கப்படுவதைத் தடுப்பதற்கு நியாயபூர்வமான வகையில் உரிய உத்தரவுகளை வழங்குவதற்கு சந்தேக நபர் தவறியுள்ளார் என்ற சான்றுகள் (Bagosora et al. TJ)<br>குற்றங்கள் இழைப்பதிலிருந்து தவிர்ந்து நடக்கும் படி தனக்குக் கீழ் பணியாற்றுபவர்களுக்கு எடுத்துரைப்பதற்கு சந்தேக நபர் தவறியுள்ளார் என்பதற்கான சான்றுகள் (Strugar TJ)<br>குற்றம் இழைப்பதிலிருந்து தவிர்ந்து நடந்துகொள்ளும்படி தனக்குக் கீழ் பணியாற்றுபவர்களுக்கு எடுத்துக் கூறத் தவறியமைக்கான சான்றுகள் (Krnojelac TJ)<br>குற்றங்கள் இழைக்கப்படுவதைத் தடுப்பதற்கு சந்தேக நபர் தவறியுள்ளார் என்பதற்கான சான்றுகள் (Strugar TJ)<br>குற்றச் செயல்களில் சந்தேக நபரும் பங்குபற்றியுள்ளார் என்பதற்கான சான்றுகள் (Al- eksovski TJ) |
| | தனது அதிகார வரம்பினுள் குற்றங்கள் இழைக்கப் படுவதைத் தடுப்பதற்கு ஏற்ற வகையில் உரிய முறையில் தனது அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு குற்றம் இழைத்தவர் தவறியுள்ளார். | | குற்றங்கள் இழைக்கப்படுவதைத் தடுப்பதற்கான அவசியமான, சகலவிதமான, நியாயபூர்வமான உத்தரவுகளையும் சந்தேக நபர் வழங்குவதற்குத் தவறியுள்ளார் என்பதற்கான சான்றுகள் (Ntawukulilyayo TJ)<br>தனக்குக் கீழ் பணியாற்றுபவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக மாற்றுவதற்கு சந்தேக நபர் தவறியுள்ளார் என்பதற்கான சான்றுகள் (Delalić et al. TJ)<br>சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்குப் பதிலாக அவர்களுக்கும் (கீழ் பணியாளர்களுக்கு) பதவி உயர்வு வழங்கப்பட்டமைக்கான சான்றுகள் (Strugar TJ)<br>குற்றங்கள் பற்றி தனக்குக் கீழ் பணியாற்றுபவர்களுடன் கலந்துரையாடுவதற்கு சந்தேக நபர் தவறியுள்ளார் என்பதற்கான சான்றுகள் (Krnojelac TJ)<br>சட்டமற்ற சூழ்நிலை ஒன்றினை சம்பந்தப்பட்ட நபர் உருவாக்கியுள்ளார் என்பதற்கான சான்றுகள் (Blaškić TJ)<br>குற்றங்களில் சந்தேக நபர் பங்குபற்றியுள்ளார் என்பதற்கான சான்றுகள் (Bagosora et al. TJ)<br>விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சந்தேக நபர் தவறியுள்ளார் என்பதற்கான சான்றுகள் (Hadži- hasanović kw;Wk; Kubura TJ) |
| | குற்றம் இழைத்தவர் தனது அதிகார வரம்பிற்குள் குற்றங்கள் பற்றிய விடயங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் அவற்றை தகுதி வாய்ந்த அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கத் தவறியுள்ளார் என்பதற்கான சான்றுகள் | | சந்தேக நபர் குற்றங்கள் பற்றி அறிவிக்கத் தவறியுள்ளார் என்பதற்கான சான்றுகள் (Bagoso- ra et al. AJ) |
| இதன் விளைவாக குற்றங்கள் இழைக்கப்பட்டன. | சர்வதேச குற்றவியல் நியாயாதிக்கச் சபைகளினால் நிரூபிப்பது பற்றி எத்தகைய வழிமுறைகளும் தீர்மானிக்கப்படவில்லை. | | |

# பின்னிணைப்பு 2: அச்சுறுத்தல் மற்றும் இடர் மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | படிமுறை ஒன்று: **அச்சுறுத்தல்களை பட்டியலிடவும்** | 2 | படிமுறை இரண்டு: **இடர்களை மதிப்பிடவும்** | 3 | **இடர்களை தணித்தல் அல்லது முகாமைத்துவம் செய்தல்** |

## 1 படிமுறை ஒன்று: அச்சுறுத்தல்களை பட்டியலிடல்

அச்சுறுத்தல்கள் அல்லது பாதிப்புறுநிலைகள் தொடர்பான மூலங்களை இனங்காணவும். அத்தகைய அச்சுறுத்தல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்க மாத்திரமல்ல சாட்சிகள் மற்றும் பணியாளர்கள், தகவல்கள் ஆகியவற்றுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி சிந்தித்துப் பார்க்கவும். அச்சுறுத்தல்களை வகைப்படுத்தும் முகமாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பயன்படுத்தி அத்தகைய அச்சுறுத்தல் மூலம் மற்றும் இவற்றினால் மற்றும் இத்தகைய அச்சுறுத்தல்கள் யாரை இலக்காகக் கொண்டு எவ்வாறு செயற்படும் என்பதையும் சிந்திக்கவும்.

**அச்சுறுத்தல் மூலங்களுக்கான உதாரணங்கள்**

» பாலியல் வன்முறையிலிருந்து: பாலியல் வன்முறையின் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய தாமதிக்கப்பட்ட அல்லது தற்போதைய உடல், உளவியல், சமூ, பொருளாதார ரீதியான தாக்கங்கள்

» மோதலிலிருந்து: வன்முறைகள், நிலக்கண்ணி வெடிகள், உடைந்து விழுந்த உட்கட்டமைப்பு வசதிகள்

» சாட்சிகள் அல்லது உங்களுக்கு ஆயுதக்குழுக்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள்: பழிவாங்கல், தாக்குதல்கள்

» பௌதீக ரீதியான சூழலிலிருந்து : புவியியல் நிலைமை, காலநிலை, வெள்ளப்பெருக்கு, எதிர்கொள்ளவிருக்கின்ற வானிலை, ஒதுக்குப்புறமான பாதைகள், மோசமான வீடுகள், அகதி முகாம்கள் அல்லது உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்கள் ஆகியவற்றின் பாதுகாப்பு நிலைமைகள்.

» குடும்பம் அல்லது சமூகத்திலிருந்து: வன்முறை, நிராகரித்தல், அவதூறுகள்.

» நிறுவனங்களிலிருந்து: அரசியல் முறை, துஷ்பிரயோகம் மிக்க அதிகாரிகள், செயற்படாமல் இருக்கின்ற அரச சேவைகள்

படிவம் 1

## நிகழக்கூடிய அச்சுறுத்தல்கள், மூலங்களிலிருந்து மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படக்கூடிய இடர்கள்

| இடர்/ அச்சுறுத்தல் | மோதல் சூழலில் இருந்து | ஆயுதக் குழுக்களில் இருந்து | சமூகத்திலிருந்து | சுற்றாடலில் இருந்து | நிறுவனங்களில் இருந்து | விசாரணைகளில் இருந்து |
|---|---|---|---|---|---|---|
| பாதிக்கப்பட்டவர்களுக்கு | உதாரணம்: பாதுகாப்பற்ற இடங்கள் மூலமாக பேட்டியளிப்பதற்காக பயணிக்கின்ற பொழுது | உதாரணம்: பழிவாங்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள். இதன் காரணமாக உயிரிழப்பு, உடல் ரீதியான காயங்கள் மற்றும் மேலதிக பாலியல் வன்முறைகள். | உதாரணம்: பாதிக்கப்பட்டவர் மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்புணர்வு அம்பலமாகின்ற பொழுது அவருடன் வசிக்கின்ற அவளது கணவன் அல்லது குடும்பம் ஆகியன கைவிட்டுச் செல்லுதல். | | உதாரணம்: பிரதேச மருத்துவ அதிகாரி அறிந்திருக்கும் பட்சத்தில் மோசமான நோக்கங்களின் அடிப்படையில் அணுகுதல். | உதாரணம்: மீண்டும் அவதூக்கு உட்படுதல். |
| குடும்பம் மற்றும் பரந்த சமுதாயம் | | உதாரணம்: சமூகம் தொடர்பான பழிவாங்குதல் தாக்குதல்கள் | உதாரணம்: சமூகத்திற்கு பரந்த அளவில் தெரியும் பட்சத்தில் அவரை ஒதுக்கி வைத்தல். | | | |
| பணியாளர்கள் | உதாரணம்: முகாம்களுக்குச் செல்லுகின்ற வழியைசல் சூழ வெடிக்காத கண்ணி வெடிகள் காணப்படல். | | | உதாரணம்: மண் சரிவு அபாயங்கள் அதிகமாக காணப்படும் பிரதேசங்களுக்கு பாதிக்கப்பட்டவர் ஆற்றுப்படுத்தப்படுதல். | | உதாரணம்: பல்வேறு வகையான மனவடு |
| சான்றுகள் தொடர்பான தகவல்கள் | | உதாரணம்: சோதனைச் சாவடிகளில் இருக்கின்ற சில ஆயுதக் குழுக்கள் ஆவணங்களைக் கைப்பற்றும் நோக்குடன் நிலைநிறுத்தப்பட்டிருத்தல். அவர்கள் ஆவணங்களைக் கைப்பற்றும் பட்சத்தில் அதனை அழித்தல். அருகிலுள்ள அரசாங்கக் கட்டிடத்திற்குக் கொண்டுசெல்லல். | | | | |

## 2 படிமுறை இரண்டு: இடர்களை மதிப்பிடவும்

இனங்காணப்பட்ட அச்சுறுத்தல்களை இடர்களின் அடிப்படையில் வகைப்படுத்தவும் - உதாரணமாக, நிகழக்கூடியவைகள், அவ்வாறு நிகழுமாயின் அவற்றினால் ஏற்படக்கூடிய தாக்கம் போன்றன. இடர்கள் பற்றி சிந்திக்கும் தருவாயில், வரலாற்று ரீதியாக நடைபெற்ற முறைகளையும், தற்போதைய வன்முறைகளின் தன்மை, தனிப்பட்ட நபர் அல்லது இலக்கொன்றின் மீது அதிகமான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய நிலைமைகள் போன்றவற்றைக் கருத்திற்கொள்ளவும்.

உதாரணமாக – பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளுக்கு எதிராக பழிவாங்கும் நோக்கில் தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடிய இடர்கள் இருக்கலாமெனக் கருதும் பட்சத்தில் பின்வரும் செல்வாக்குச் செலுத்தக் கூடிய காரணிகளைக் கருத்திற்கொள்ளவும்:

» பாலியல் வன்முறை தொடர்பான விடயங்களை வெளிப்படுத்தியதன் பின்னர் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் தாக்கப்பட்டமை தொடர்பான அறிக்கைகள் ஏதாவது காணப்படுகின்றனவா?

» சந்தேகத்திற்கிடமான விதத்தில் குற்றமிழைத்தவர்கள் அல்லது ஆயுதக் குழுக்கள் அருகில் செயற்படுகின்றனவா? வெளிப்படுத்தியமை தொடர்பாக அவர்கள் அறிந்துகொள்ளும் பட்சத்தில் என்ன நிகழலாம்?

» பாதிக்கப்பட்டவர்கள்/ சாட்சிகள் தமது குடும்பங்கள் சமூகத்திலிருந்து ஒதுங்கிய நிலையில் வசிக்கின்றார்களா அல்லது நெருக்கமாக வசிக்கின்றார்களா? பாலியல் வன்முறையினால் அவர்கள் பாதிக்கப்பட்டமை சமூகத்திற்குப் பகிரங்கமாகத் தெரியுமா? அத்தகைய தனி நபர்களை சமூகம் அல்லது குடும்பம் பாதுகாக்குமா?

படிவம் 2

**இடர் மட்ட மதிப்பீடு**

| நிகழக் கூடியவை மற்றும் தாக்கம் | புறக்கணிக்கப்பட்டவை | சிறியமை | மிதமானவை | கடுமையானவை | மிக மோசமானவை |
|---|---|---|---|---|---|
| நிகழக் கூடியவை / உடனடியாக | ○ | ▲ | △ | ■ | ✖ |
| நிகழக் கூடியவை | ○ | ▲ | △ | △ | ■ |
| மிதமாக/ நிகழக் கூடியவை | ● | ○ | ▲ | △ | △ |
| நிகழக் கூடிய வாய்ப்பு இல்லை | ● | ○ | ○ | ▲ | ▲* |
| நிகழக் கூடிய வாய்ப்பு தொலைவில் | ● | ● | ● | ○ | ○ |

முக்கியமானவை

● மிகக் குறைவான இடர் ○ குறைவான இடர் ▲ மத்திய இடர்

△ உயர் இடர் ■ மிகவுயர் இடர் ✖ ஏற்றுக்கொள்ள முடியாதவை

## 3 இடர்களைத் தணித்தல் அல்லது முகாமைத்துவம் செய்தல்

கடுமையின் அடிப்படையில் உங்களால் இனங்காணப்பட்ட இடர்களைப் பட்டியலிடவும் - ஆகக்கூடியதில் இருந்து ஆரம்பிக்கவும். அத்தகைய இடர்களை குறைக்கும் முகமாக அல்லது தடுக்கும் முகமாக உங்களால் மேற்கொள்ளக் கூடிய விடயங்கள் அல்லது மாற்றங்கள் ஆகியன தொடர்பான நடைமுறைகளை இனங்காணவும்.

படிவம் 3

| மட்டம் | இனங்காணப்பட்ட இடர்கள் | திட்டவட்டமான பின்புலக் காரணிகள்/ பாதிப்புறும் தன்மைகள் தொடர்பான குறிப்புகள் | செயல் | |
|---|---|---|---|---|
| மிகவும் உயர்வானது | சாட்சிகள் தகவல்களை வெளிப்படுத்தியமையின் காரணமாக ஆயுதக் குழுக்களினால் அவர்கள் பழிவாங்கப்படலாம். | o பாதிக்கப்பட்டவர் தனியாக வாழுகிறார்.<br>o சோதனைச் சாவடிகளில் வெளிநாட்டவர்களினால் கொண்டுசெல்லப்படும் சகல ஆவணங்களையும் ஆயுதக் குழுக்கள் சோதனையிடுகின்றன.<br>o ஆயுதக் குழுக்களில் இருந்து தப்பிச் சென்றவர்கள் சந்தேகத்திற்கு இடமான குற்றம் இழைத்தவர்களுடன் கூட்டாக இணைந்து அப்பிரதேசத்தில் இயங்குவதாக தகவல்கள் வெளிப்படுத்துகின்றன. | a. பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்தாலோசனையை மேற்கொள்ளவும். அருகிலுள்ள முகாம்களில் நடைபெறுகின்ற சர்வதேச அமைப்புகளினால் நடத்தப்படுகின்ற பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கவும். மற்றும் பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட வன்முறை தொடர்பான உதவி நிகழ்ச்சித்திட்டம். | ☐ |
| | | | b. கிராமத்தைத் தவிர்த்து பாதுகாப்பான இரகசியமான இடங்களை பேட்டி காண்பதற்காக ஏற்பாடு செய்யவும். | ☐ |

# பின்னிணைப்பு 3: பௌதீக ரீதியான சான்றுகளை சேகரிக்கமைக்கான காரணங்கள்

1. பாலியல் வன்முறை தொடர்பான ஏனைய தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு தடயவியல் சார்ந்த அல்லது ஏனைய வகையான பௌதீக வகையான சான்றுகள் உள்ளூர்ச் சட்ட நெறிமுறைகளின் படியும் சான்றுகள் வகைகளின் தொடர்பிலும் அவசியப்படுகின்றனவா (உதாரணமாக, குற்றவியல், சிவில், அரசியலமைப்பு அல்லது ஏனையவை)? ☐

2. பாலியல் வன்முறை தொடர்பான ஏனைய தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு தடயவியல் அல்லது ஏனைய வகையான பௌதீக ரீதியான சான்றுகள் ஆவணப்படுத்தல் செயன்முறை நோக்கங்களுக்காக அவசியப்படுகின்றதா (உதாரணமாக, நீதித்துறை சார்ந்த, நீதித்துறை சாராத பரிந்துரை போன்றன)? ☐

3. சம்பந்தப்பட்ட பௌதீக ரீதியான சான்றுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து அவற்றைக் கொண்டுசென்று களஞ்சியப்படுத்துவதற்கான அதிகாரம், ஆற்றல், வளங்கள் உங்களிடம் உள்ளனவா? குறிப்பாக:
   - விசாரணையாளர் என்ற முறையில், சுகாதார தொழிற்துறையைச் சார்ந்தவர் என்ற முறையில் அல்லது வேறு விதத்தில் சம்பந்தப்பட்ட பௌதீக ரீதியான சான்றுகளைச் சேகரித்து அவற்றைப் போக்குவரத்துச் செய்து, களஞ்சியப்படுத்துவது தொடர்பிலான தொழில்வாண்மை மிக்க பயிற்சிகளை நீங்கள் பெற்றுள்ளீர்களா?
   - உங்களுக்கு அவசியமான சட்ட ரீதியான அதிகாரம் உள்ளதா?
   - சம்பந்தப்பட்ட பௌதீக ரீதியான சான்றுகளை முறையாகக் களஞ்சியப்படுத்தி அவற்றை உங்களால் பாதுகாக்க முடியுமா? ☐

4. மீறல்கள் இடம்பெற்ற இடத்தில் அல்லது களத்தில் பௌதீக ரீதியான சான்றுகளை நீங்கள் காணும் பட்சத்தில், அவற்றைச் சேகரிப்பதற்கு முன்னர் அத்தகைய சான்றுகளை ஏற்கனவே சேகரிப்பதற்கு அல்லது பதிவுசெய்வதற்கு அல்லது ஆவணப்படுத்துவதற்கு அல்லது வேறுவிதமாக நீங்கள் முயன்றுள்ளீர்களா:
   - நீண்கள் கண்டறிந்த விடயம் தொடர்பில் குறிப்பெடுத்தல்;
   - வன்முறை இடம்பெற்ற இடம் தொடர்பிலான வரைபினை மேற்கொள்ளல்
   - பொருட்கள் தொடர்பான புகைப்படங்களை எடுத்தல் மற்றும் மீறல் இடம்பெற்ற இடத்தினைப் புகைப்படமெடுத்தல்;
   - வாய்ப்புள்ள சந்தர்ப்பங்களில் வன்முறைகள் இடம்பெற்ற இடங்களை வீடியோ பதிவுசெய்தல்;
   - வாய்ப்புள்ள சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளுடன் மீறல்கள் இடம்பெற்ற இடத்திற்கு அருகில் பேட்டிகளை நடத்துதல், அதனைத் தொடர்ந்து குற்றம் தொடர்பான ஏனைய சாட்சிகளை அணுகுதல். ☐

**மேற்படி எந்தக் கேள்விக்கான விடை ‘இல்லை’ எனில்:**

**பௌதீக ரீதியான சான்றுகளை நீங்கள் சேகரிக்கக் கூடாது**

பௌதீக ரீதியான சான்றுகளை நீங்கள் மாற்றலாம். அவற்றை பயன்படுத்தக்கூடாது.

உங்களுடைய நீதித்துறை சார்ந்த நியாயாதிக்கத்தின் பிரகாரம் அவற்றைச் சேகரிப்பது சட்ட விரோதமானதாக இருக்கலாம். அதற்குப் பதிலாக உங்களால் இயலுமானவரை சிறப்பாக அத்தகைய ஆவணங்களை அல்லது சான்றுகள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளலாம் (மேற்படி குறிப்பு 4 ஐப் பார்க்கவும்). இதன் நிமித்தம் ஆணை அளிக்கப்பட்ட பொருத்தமான தகைமை பொருந்திய பௌதீக ரீதியான சான்றுகளைச் சேகரிக்கவும்.

# பின்னிணைப்பு 3

## பௌதீக ரீதியான சான்றுகளைச் சேகரிக்காமைக்கான காரணங்கள்

# பின்னிணைப்பு 4: மாதிரி பாலியல் தாக்குதல் மருத்துவச் சான்றிதழ்

## பாலியல் தாக்குதல் மருத்துவச் சான்றிதழ்

இரகசிய ஆவணம்

இன்றைய திகதி / / நேரம் : மருத்துவப் பரிசோதனை இடம்

### A. நோயாளர் பற்றிய தகவல்

**1.** இறுதிப் பெயர் | **2.** பெயர் | **3.** முதற் பெயர்

**4.** விலாசம் | **5.** பால் ☐ பெண் ☐ ஆண்

**6.** வயது ☐ தெரியாது | **7.** பிறந்த திகதி / / ☐ தெரியாது | **8.** பிறந்த இடம் ☐ தெரியாது

**9.** திருமண நிலை
☐ திருமணமாகவில்லை ☐ திருமணமானவர ☐ விதவை ☐ விவாகரத்தானவர் ☐ பிரிந்திருப்பவர் ☐ ஏற்புடையதல்ல

*நோயாளர் ஆண் எனின், 14 வது கேள்வி வரை தவிர்க்கவும்.*

**10.** இறுதியாக மாதவிடாய் இடம்பெற்ற திகதி
/ / ☐ பூப்படைவதற்கு முன்னர் ☐ மாதவிடாய் நின்ற பின் ☐ தெரியாது

**11.** எத்தனை கர்ப்பங்கள் | **12.** எத்தனை குழந்தைகள் உயிருடன் பிறந்தன | **13.** தற்போது கர்ப்பிணியா ☐ ஆம் ☐ இல்லை ☐ தெரியாது

**14.** பரிசோதனை மேற்கொள்வதற்கு 7 நாட்களுக்கு முன்னர் நோயாளி அவரின் விருப்பத்திற்கு இணங்க உடலுறவு ஏற்பட்டது.
☐ ஆம் ☐ இல்லை

**15.** தாக்குதல் இடம்பெறுவதற்கு 60 நாட்களுக்கு முன்னர் நோயாளிக்கு யோனியில் காயங்கள், ஏனைய காயங்கள், சிகிச்சை முறைகள் காணப்பட்டன. இவை தற்போதைய மருத்துவச் சோதனையின் பொருட்கோடல்களை பாதிக்கலாம்.
☐ ஆம் ☐ இல்லை *'ஆம்' எனில் விபரிக்கவும்* ____________

**16.** தாக்குதல் இடம்பெற்ற திகதி, நேரம்
/ / ______:______ ☐ தெரியாது

**17.** தாக்குதல் இடம்பெற்ற இடம் ☐ தெரியாது

**18.** அச்சுறுத்தல், ஆயுதங்கள் அல்லது பலவந்தம் பிரயோகிக்கப்பட்டதா *(ஏற்புடைய அனைத்தையும் சோதிக்கவும்)*
☐ பௌதீக பலவந்தம் ☐ ஆயுத உபயோகம் ☐ நோயாளிளை அச்சுறுத்தல் ☐ ஏனையோருக்கு அச்சுறுத்துதல் ☐ பலவந்தம் இல்லை ☐ தெரியாது

**19.** பலவந்தம்/ ஆயுதங்கள் வகை *(ஏற்புடைய அனைத்தையும் சோதிக்கவும்)*
☐ கம்புகள்/ தடிகள் ☐ கத்தி ☐ கண்கள் கட்டப்படல் ☐ கைகள் ☐ தெரியாது ☐ ஏனையவை *(பலவந்த நிர்வாணம், தொங்கவிடுதல், மின்சார சித்திரவதை, ஏனையவர்களினல் சித்திரவதையைப் பார்வையிடச் செய்தல் அல்லது பங்குபற்றச் செய்தல் போன்றன.):* ____________
☐ துப்பாக்கிகள் ☐ தவிர்த்தல் ☐ வாயடைத்தல் ☐ கால்

**20.** நோயாளர் மீது பலவந்தமாக இரசாயண போதைப் பொருட்களை ஏற்றுதல்
☐ இல்லை ☐ போதைப் பொருள் ☐ மதுபானம் ☐ தெரியாது ☐ ஏனையவை : ____________

### B. சந்தேக நபர்கள் தொடர்பான தகவல்கள்

**1.** சந்தேக நபர்களின் எண்ணிக்கை
☐ ஒன்று (1) ☐ இரண்டு (2) ☐ மூன்று (3) ☐ மூன்றுக்கு மேல் "3 இற்கு மேல்" எனில் இலக்கத்தைக் குறிப்பிடவும்: ______ ☐ தெரியாது

| *முதலாவது சந்தேக நபர்: 2 – 6 கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.* | *இரண்டாவது சந்தேக நபர்: 7 – 11 கேள்விகளுக்கு பதிலளிக்கவும்* |
|---|---|
| **2.** நோயாளருக்கும் சந்தேக நபருக்கம் இடையிலான உறவுமுறை *(ஏற்புடைய அனைத்தையும் சோதிக்கவும்)*<br>☐ அறிந்தவர் ☐ குடும்ப உறுப்பினர்<br>☐ அறியாதவர் ☐ நெருக்கமான பங்காளி/ முன்னாள் பங்காளி<br>☐ தெரியாது ☐ ஏனையோர் : ______ | **7.** நோயாளருக்கும் சந்தேக நபருக்கம் இடையிலான உறவுமுறை *(ஏற்புடைய அனைத்தையும் சோதிக்கவும்)*<br>☐ அறிந்தவர் ☐ குடும்ப உறுப்பினர்<br>☐ அறியாதவர் ☐ நெருக்கமான பங்காளி/ முன்னாள் பங்காளி<br>☐ தெரியாது ☐ ஏனையோர் : ______ |
| **3.** சந்தேக நபரின் பால்<br>☐ பெண் ☐ ஆண் ☐ தெரியாது | **8.** சந்தேக நபரின் பால்<br>☐ பெண் ☐ ஆண் ☐ தெரியாது |
| **4.** சந்தேக நபரின் சராசரி வயது<br>☐ தெரியாது | **9.** சந்தேக நபரின் சராசரி வயது<br>☐ தெரியாது |
| **5.** சந்தேக நபர்,<br>☐ சிவிலியன் ☐ பொலிஸ் ☐ இராணுவம் ☐ ஆயுதக்குழு ☐ தெரியாது | **10.** சந்தேக நபர்<br>☐ சிவிலியன் ☐ பொலிஸ் ☐ இராணுவம் ☐ ஆயுதக்குழு ☐ தெரியாது |
| **6.** சந்தேக நபர் கதைக்கின்ற மொழி<br>☐ தெரியாது | **11.** சந்தேக நபர் கதைக்கின்ற மொழி<br>☐ தெரியாது |

*மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட சந்தேக நபர்கள் இருக்கும் பட்சத்தில் 12 ஆம் கேள்விக்கு விடையளிக்கவும்.*

**12.** சந்தேக நபர்கள் தொடர்பான தகவல்களை விளக்கவும் *(நோயாளருக்கு இடையிலான உறவுகள், பால்நிலைகள், சராசரி வயது, சந்தேக நபர் பொலிஸ், இராணுவ, ஆயுதக்குழுவைச் சேர்ந்தவரா, அவர் கதைக்கின்ற மொழி போன்றன):* ____________

சிகிச்சையளித்தவரின் பெயர் ____________ NºC.N.O.M. ____________
சிகிச்சையளித்தவரின் கையொப்பம் ____________ page 1 of 4 திகதி / /

சாத்தியப்பாடுள்ள சந்தர்ப்பங்களில் சுகாதார சிகிச்சை நிலையங்களில் தடயவியல் சார் மருத்துவ மதிப்பீடுகளை மேற்கொண்டு உடலியல் மற்றும் நடத்தை சார்ந்த அவதானிப்புக்களை ஆவணப்படுத்துகின்ற பயிற்றப்பட்ட வைத்தியர்கள் மற்றும் தாதிகள் பயன்படுத்தக்கூடிய மாதிரி மருத்துவச் சான்றிதழ் தரப்பட்டுள்ளது.

## பாலியல் தாக்குதல் மருத்துவச் சான்றிதழ் *(தொடர்ச்சி)*

### C. நோயாளரினால் அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் தொடர்பான சுருக்கம்

| 1. பெண் பிறப்புறுப்பினுள் செலுத்தப்பட்டது: | ஆம் | இல்லை | முயற்சிக்கப்பட்டது | தெரியாது | கருத்துக்கள்: |
|---|---|---|---|---|---|
| a. ஆண்குறி | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| b. விரல்(கள்) | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| c. ஏனைய பொருட்கள் | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |

| 2. பின்வருவன குத வாயிலில் செலுத்தப்பட்டது: | ஆம | இல்லை | முயற்சிக்கப்பட்டது | தெரியாது | கருத்துக்கள்: |
|---|---|---|---|---|---|
| a. ஆண்குறி | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| b. விரல்(கள்) | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| c. ஏனைய பொருட்கள் | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |

| 3. பிறப்புறுப்பின் மீது வாய் மூலமான தொடர்பு: | ஆம | இல்லை | முயற்சிக்கப்பட்டது | தெரியாது | கருத்துக்கள்: |
|---|---|---|---|---|---|
| a. சந்தேக நபரிடமிருந்து நோயாளிக்கு | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| b. மூன்றாம் தரப்பிலிருந்து நோயாளிக்கு | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| c. நோயாளியிடமிருந்து சந்தேக நபருக்கு | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| d. நோயாளியிடமிருந்து மூன்றாம் தரப்பிற்கு | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |

| 4. குதத்துடன் வாய் மூலமான தொடர்பு: | ஆம | இல்லை | முயற்சிக்கப்பட்டது | தெரியாது | கருத்துக்கள்: |
|---|---|---|---|---|---|
| a. சந்தேக நபரிடமிருந்து நோயாளிக்கு | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| b. மூன்றாம் தரப்பிலிருந்து நோயாளிக்கு | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| c. நோயாளியிடமிருந்து சந்தேக நபருக்கு | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| d. நோயாளியிடமிருந்து மூன்றாம் தரப்பிற்கு | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |

| 5. பிறப்புறுப்புக்களைத் தொடுதல்/ தடவுதல்: | ஆம | இல்லை | முயற்சிக்கப்பட்டது | தெரியாது | கருத்துக்கள்: |
|---|---|---|---|---|---|
| a. சந்தேக நபரிடமிருந்து நோயாளிக்கு | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| b. மூன்றாம் தரப்பிலிருந்து நோயாளிக்கு | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| c. நோயாளியிடமிருந்து சந்தேக நபருக்கு | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| d. நோயாளியிடமிருந்து மூன்றாம் தரப்பிற்கு | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |
| e. நோயாளி சுயமாக மேற்கொள்ளல் | ☐ | ☐ | ☐ | ☐ | ______ |

| 6. விந்து வெளியேற்றம்: | ஆம | இல்லை | தெரியாது | கருத்துக்கள்: |
|---|---|---|---|---|
| a. நோயாளியின் உடம்பினுள் செலுத்தப்பட்டது | ☐ | ☐ | ☐ | ______ |
| b. நோயாளி உடம்பு புறப்பகுதியில் செலுத்தப்பட்டது | ☐ | ☐ | ☐ | ______ |

c. விந்து வெளியேற்றப்பட்ட இடத்தினைக் குறிப்பிடவும்: ______

### D. தாக்குதலுக்குப் பின்னரான நோயாளி தொடர்பான சுகாதாரம்

1. தாக்குதலின் பின்னர் நோயாளி, *(ஏற்புடைய சகலவற்றையும் சோதிக்கவும்)*

☐ சாப்பிட்டார் ☐ குடித்தார் ☐ பல் துலக்கினார் ☐ குளித்தார் ☐ குளித்தார் ☐ சிறுநீர் கழித்தார் ☐ தெரியாது

### E. நிகழ்வு பற்றிய நோயாளர் விளக்கம்

*நோயாளியினால் விளக்கப்பட்டதன் பிரகாரம் தாக்குதல் பற்றிய சுருக்கமான முக்கிய விடயங்களைக் குறிப்பிடவும்*
*(இந்தப் பகுதியில் குறிப்பிடப்படாத மேலதிக விடயங்கள் எதுவும் இருப்பின் அவற்றைத் தனியாக இணைக்கவும்)*

______

______

### F. நோயாளி பற்றிய பொதுவான மருத்துவச் சோதனை

| 1. இரத்த அழுத்தம் | 2. நாடித்துடிப்பு | 3. சுவாசம் | 4. வெப்பநிலை (செல்சியஸ்) | 5. நிறை | 6. உயரம் |
|---|---|---|---|---|---|
| / | | | | | |

5. நடத்தை மற்றும் உளவியல் ரீதியான நிலைமை *(ஏற்புடைய சகலவற்றையும் சோதிக்கவும்)*

☐ அச்சம் ☐ பின்வாங்கல் ☐ துன்பம் ☐ வெட்கம் ☐ உளவியல் ரீதியான தாக்கம்

☐ கோபம் ☐ அதிர்ச்சி ☐ அழுகை ☐ அமைதி ☐ கவலை

**நினைவில் வைத்திருக்கவும்:** **சான்றுகளைச் சேகரிக்கவும்** *(நோயாளியின் உடம்பிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஈரமான மற்றும் வரண்ட நிலையிலுள்ள பொருட்கள், தளும்புகள், உறைகள் மற்றும் ஏனைய பொருட்கள் போன்றன)*
**வன்புணர்வு தொடர்பான தகவல்களைப் பயன்படுத்தவும்** *(ஏற்புடையவிடத்து)* **காவல் தொடர் காப்புச் சங்கிலிப் படிவங்கள் மற்றும் புகைப்படங்களை எடுக்கவும்**

சிகிச்சையளித்தவரின் பெயர் ______ NºC.N.O.M. ______

சிகிச்சையளித்தவரின் கையொப்பம் ______ page 2 of 4 திகதி ____/____/____

பின்னிணைப்பு 4

மாதிரி பாலியல் தாக்குதல் மருத்துவச் சான்றிதழ்



## பாலியல் தாக்குதல் மருத்துவச் சான்றிதழ் *(தொடர்ச்சி)*

### F. நோயாளியை பொது மருத்துவர் சோதித்தல் *(தொடர்ச்சி)*

**புனைவு: கண்டறிகைகள்**

| A | BI | BU | DB | DF | DS | EC | ER | FB |
|---|---|---|---|---|---|---|---|---|
| சிராய்ப்பு | கடித்தல் | எரிகாயம் | சிதைவு | அங்கவீனம் | வரண்ட கசிவு | தோலுக்கடியில் இரத்தக் கோர்வை | தோல் சிவந்த நிலை (சிவப்பு) | வெளிப் பொருட்கள் (விலக்கவும்) |
| **FI** | **G** | **I** | **L** | **M** | **O** | **P** | **S** | **V** |
| இழைவு (மயிர் உள்ளடங்கலாக) | துப்பாக்கிச் சூட்டுக் காயம் | ஆழமான கீறல | குதறிய காயம் | வரண்ட கசிவு | ஏனைய காயம் (விபரிக்கவும்) | கூருணர்வு (வலியைக் குறிப்பிடவும்) | வீக்கம் | தாவரம் (மண், குப்பை போன்றன) |

*தெளிவாகத் தெரிகின்ற காயங்கள் மற்றும் கண்டறியப்பட்ட காயங்கள் ஆகியவற்றை கீழுள்ள வரைபடத்தில் குறிப்பிடவும்.*
*கீழுள்ள வரைபடத்தில் அவற்றுடன் தொடர்புடைய சுருக்கக் குறியீட்டினைப் பயன்படுத்தவும் (மேலுள்ள அட்டவணையைப் பார்க்கவும்)*





| உடற் பகுதி | கண்டறிதல்கள் | கருத்துக்கள்: |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

### G. (பெண்) உறுப்புச் சோதனை

*பெண் உறுப்புச் சோதனை பற்றி அறிந்துகொள்வதற்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையைப் படிக்கவும். தொடையின் உட்பகுதி, பெண் குறியின் வெளிப்பகுதி, எருவாய்க்கும் பெண் உறுப்பிற்கும் இடைப்பட்ட பகுதி மற்றும் குதப்பகுதி ஆகியவற்றைப் பரிசோதிக்கவும் (சம்பந்தப்பட்ட பாலியல் ரீதியான தாக்கங்கள் கண்டறியப்படும் பட்சத்தில் மேலுள்ள அட்டவணையைப் பார்க்கவும்)*


1. தொடை உட்பகுதிக் காயம் ☐ ஆம் ☐ இல்லை
2. சிறுநீரகப் புறம்.˙.சிறுநீர்க் குழாய்த் துவாரம் ☐ ஆம் ☐ இல்லை
3. எருவாய்க்கும் பெண் உறுப்பிற்குமான காயம் ☐ ஆம் ☐ இல்லை
4. உதடு ☐ ஆம் ☐ இல்லை
5. சிறிய உதடு ☐ ஆம் ☐ இல்லை
6. கண் இமைத் திரைச் சவ்வு ☐ ஆம் ☐ இல்லை
7. பெண் குறி மூலம்/சூழவுள்ள பகுதிகளில் காயம் ☐ ஆம் ☐ இல்லை
8. பிட்டம்/குதவிழிப்பு/மடிப்புகள், சுருக்கங்கள், கீறல் காயம் ☐ ஆம் ☐ இல்லை
9. பிறப்புறுப்பில் காயம்
   ☐ ஆம் ☐ இல்லை
10. கருப்பை வாயில் காயம்
    ☐ ஆம் ☐ இல்லை
11. பயன்படுத்திய உதாரண இடம்
    ☐ மல்லாந்து படுத்தல்
    ☐ முழங்கால்-மார்புநிலை
    ☐ ஏனையவை



### H. (ஆண்) உறுப்புச் சோதனை

*தொடையின் உட்பகுதி, ஆண் உறுப்பின் வெளிப்பகுதிகள், ஆண் குறி, குதப்பகுதிகள் போன்றவற்றைச் சோதிக்கவும். (சம்பந்தப்பட்ட பாலியல் ரீதியான தாக்கங்கள் கண்டறியப்படும் பட்சத்தில் அவசியமாயின் கீழுள்ள பெட்டிகளைப் பார்க்கவும்)*

1. உட்தொடைக் காயங்கள் ☐ ஆம் ☐ இல்லை
2. சுரப்பி ஆண்குறி அல்லது ஆண்குறித் தண்டில் காயம் ☐ ஆம் ☐ இல்லை
3. விதைப் பைக் காயம் ☐ ஆம் ☐ இல்லை
4. விதையில் காயம் ☐ ஆம் ☐ இல்லை
5. நோயாளிக்கு விருத்தசேதனம் செய்யட்டிருத்தல் ☐ ஆம் ☐ இல்லை
6. பிட்டம்/குதவிழிப்பு/மடிப்புகள், சுருக்கங்கள், ஏனைய காயம் ☐ ஆம் ☐ இல்லை
7. மலக்குடல் ☐ ஆம் ☐ இல்லை



சிகிச்சையளித்தவரின் பெயர் ______________________ NºC.N.O.M. ______________________

சிகிச்சையளித்தவரின் கையொப்பம் ______________________ திகதி _____/_____/_____

### பாலியல் தாக்குதல் மருத்துவச் சான்றிதழ் *(தொடர்ச்சி)*

## I. ஆய்வுகூட மற்றும் ஏனைய சோதனைகள்

| *செய்யப்படுகிறது:* | ஆம் | இல்லை | *பெறுபேறுகள்:* | *செய்யப்படுகிறது:* | ஆம் | இல்லை | *பெறுபேறுகள்:* |
|---|---|---|---|---|---|---|---|
| 1. HIV ஊனீர் | ☐ | ☐ | ________ | 6. சிறுநீர் சோதனை | ☐ | ☐ | ________ |
| 2. மேகப் புண் | ☐ | ☐ | ________ | 7. விந்துச்சோதனை/ தொற்றுநோய் | ☐ | ☐ | ________ |
| 3. ஈரல் அழற்சி B | ☐ | ☐ | ________ | 8. அல்ட்ரா சவுண்ட் | ☐ | ☐ | ________ |
| 4. PAP சோதனை | ☐ | ☐ | ________ | 9. ஏனைய சோதனைகள் | ☐ | ☐ | ________ |
| 5. கருத்தரித்தல் சோதனை | ☐ | ☐ | ________ | | | | |

## J. சிகிச்சை/ திட்டம்

| | ஆம் | இல்லை | கருத்துகள்: |
|---|---|---|---|
| **1. வெளிப்பாட்டிற்கு பின்னரான நோய்த்தடுப்பு பண்டுவம் (PEP)** | | | |
| a. PEP | ☐ | ☐ | ________ |
| **2. மருந்துகள்** | ஆம் | இல்லை | கருத்துகள்: |
| a. உயிர் எதிரி | ☐ | ☐ | ________ |
| b. வலி நிவாரண மருந்து | ☐ | ☐ | ________ |
| c. அவசர கருத்தடை | ☐ | ☐ | ________ |
| d. ஏனையவை | ☐ | ☐ | ________ |
| **3. ஆற்றுப்படுத்தல் சேவை** | ஆம் | இல்லை | கருத்துகள்: |
| a. விசேட நிபுணரிடம் நோயாளி அனுப்பவர் | ☐ | ☐ | ________ |
| **4. பொலிஸ் கோரிக்கைகள்** | ஆம் | இல்லை | கருத்துகள்: |
| a. பொலிஸ் கோரிக்கை பூரணப்படுத்தப்பட்டது | ☐ | ☐ | ________ |
| b. *4a விற்கான விடை 'இல்லை'* எனில்? | ☐ | ☐ | ________ |
| c. *4b விற்கான விடை 'இல்லை'* எனில்? | ☐ | ☐ | ________ |

## K. மதிப்பீட்டு கண்டறிதல்கள்

1. வரலாற்று நிகழ்வு: ________
2. நடத்தைசார் அவதானிப்புகள்: ________
3. உடல் சார் கண்டறிதல்கள்: ________
4. ஆய்வுகூட சோதனைகள்: ________
5. பூரணப்படுத்தப்பட்ட ஆவணங்கள் இச்சான்றிதழுடன் இணைக்கப்பட்டுள்ளதா:

☐ ஆய்வுகூட சோதனைப் பெறுகை ☐ எழுத்துமூல விளக்கம் (தட்டச்சு விரும்பத்தக்கது) ☐ புகைப்படங்கள் ☐ ஏற்புடையதல்ல

## L. மதிப்பீட்டு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மருத்துவ மதிப்பீட்டு கண்டறிதல்கள்: பாலியல் தாக்குதலுடன் *(ஒன்றினைத் தெரிவுசெய்யவும்)* | ☐ முரணற்றது<br>☐ அதி முரணற்றது<br>☐ கண்டறியக்கூடியதாக இருந்தது<br>☐ முரணாக இருந்தது | பாலியல் ரீதியான தாக்குதல் |
| 2. | மருத்துவ மதிப்பீட்டு கண்டறிதல்கள்: பாலியல் தாக்குதலுடன் *(ஒன்றினைத் தெரிவுசெய்யவும்)* | ☐ முரணற்றது<br>☐ அதி முரணற்றது<br>☐ கண்டறியக்கூடியதாக இருந்தது<br>☐ முரணாக இருந்தது | பௌதீக ரீதியான தாக்குதல் |

## M. சிகிச்சையளிப்பவரின் உறுதிப்பிரமாணம்

*மதிப்பீடு, புகைப்படங்கள் மற்றும் சத்தியக்கடதாசி ஆகியவற்றை சட்ட முறைக்கு அல்லது சட்டத்தை அமுல்படுத்துபவருக்கு வழங்குவதற்கான அறிவிக்கப்பட்ட சம்மதத்தை நோயாளிக்கு நான் வழங்குகிறேன்.*

☐ ஆம் ☐ இல்லை

*இப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் உட்பட்ட வகையில் சரியானவையென்றும் பூரணத்துவம் மிக்கவையென்றும் இத்தால் உறுதியுடன் தெரிவிக்கிறேன்.*

சிகிச்சையளித்தவரின் பெயர் ________

சிகிச்சையளித்தவரின் ஒப்பம் ________

திகதி ____/____/____

# பின்னிணைப்பு 5: நிறுவன ரீதியான பாதுகாப்புத் தொடர்பான நடைமுறைகள் சோததைனப் பட்டியல்

## பாதுகாப்பு மற்றும் பத்திரம் (கவனமாக இருத்தல்) முகாமைத்துவம்

- நிறுவனமானது பாதுகாப்பு மற்றும் கவனமாக இருத்தல் தொடர்பான கொள்கைகளை விருத்திசெய்து பாதுகாப்புத் தொடர்பான வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது.
- செயற்படுகின்ற சூழல், பாதுகாப்பு மற்றும் கவனமாக இருத்தல் தொடர்பான நடைமுறைகள் ஆகியவற்றை சகல பணியாளர்களுடனும் அவ்வப்போது சிரேஷ்ட முகாமைத்துவ கண்காணிப்பாளர்கள் கலந்துரையாடுகின்றனர்.
- குறிப்பிட்ட கால இடைவெளிக்கு ஒருமுறை பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை அமைப்பின் தலைமைத்துவம் இற்றைப்படுத்துகிறது.
- முக்கிய பாதுகாப்பு இடங்கள் மற்றும் வேலை தொடர்பான விளக்கம் ஆகியவற்றை ஒவ்வொரு அலுவலகம் குறித்தொதுக்குகின்றது, இவற்றுள் பாதுகாப்பு ரீதியான பொறுப்புகளும் உள்ளடங்குகின்றன.
- பிரதேசத்தில் சட்டத்தை அமுல்படுத்துபவர்கள், பங்கீடுபாட்டாளர்கள், தூதுவராலயங்கள் மற்றும் பங்காளர்கள் ஆகியோருடன் பாதுகாப்புத் தொடர்பாடல் வலையமைப்பு ஒன்றினை அமைப்பு ஏற்படுத்திக்கொள்கின்றது.

### பாதுகாப்புத் தராதரங்கள் தொடர்பான கூட்டங்கள்

நிறுவன ரீதியான பாதுகாப்புத் தொடர்பிலான வழிகாட்டல்களை பல்வேறுவிதமான பூரணத்துவம் மிக்க வளங்கள் வழங்குகின்றன (பின்னிணைப்புயைப் பார்க்கவும்). உறுதியான பாதுகாப்பு மற்றும் கவனமாக இருத்தல் தொடர்பான முகாமைத்துவத்துடன் சார்ந்த நடைமுறைகளை கீழே தரப்பட்டுள்ள பட்டியல் வழங்குகின்றது.

சகல விதமான பாதுகாப்பு ரீதியான அணுகுமுறைகள் மற்றும் பின்புலங்கள் ஆகியவற்றை முழுமையாக உள்ளடக்கியதாக இந்தத் தராதரங்கள் காணப்படவில்லை. சில சந்தர்ப்பங்களில் இத்தகைய தராதரங்களை நிறைவேற்ற முடியாத சாத்தியப்பாடுகள் இல்லாதிருக்கலாம்.

## தனிப்பட்ட பாதுகாப்பு

- தனிப்பட்ட மற்றும் தொழில்வாண்மை மிக்க நடத்தைகளுக்கு பணியாளர்கள் பொறுப்பாக இருப்பர். ஏனெனில், இவர்களது செயல்கள் தனிப்பட்ட பாதுகாப்பு, ஏனையவர்களுடைய பாதுகாப்பு மற்றும் நிறுவனத்தின் நற்பெயர் ஆகியவற்றைத் தாக்கக் கூடியதாகவுள்ளது.
- பணியாட்டொகுதியினர் தம்மை இடருக்குள் உள்ளாக்குகின்ற செயல்களையோ அல்லது தமது அமைப்பிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயல்களையோ அல்லது அதன் பாதிப்புறு தன்மையை அதிகரிக்கக் கூடிய நடவடிக்கைகளையோ தவிர்த்தல் வேண்டும்.
- ஏற்புடைய சகலவிதமான தேசிய சட்டங்களுக்கும் அடிபணிந்து பணியாளர்கள் நடந்துகொள்ளுதல் வேண்டும். தேசிய சட்டங்கள் அல்லது பிரதேச வளமைச் சட்டங்கள் ஆகியன சர்வதேச சட்டங்களுடன் முரண்படுகின்ற பொழுது பணியாளர்கள் முகாமைத்துவத்திடமிருந்து ஆலொசனைகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
- பிரதேச மக்கள் மற்றும் அதிகார அமைப்புகள் ஆகியவற்றின் சமய ரீதியான நம்பிக்கைகள், பழக்கவளக்கங்கள் மற்றும் மரபுகள் ஆகியவற்றை பணியாளர்கள் மதித்தல் வேண்டும்.
- அவசர நிலைமையொன்றின் பொழுது தொடர்புகொள்ள வேண்டிய தகவல்கள் மற்றும் சுகாதார ரீதியான தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய படிவமொன்றை பணியாளர்கள் பூரணப்படுத்தல் வேண்டும்.
- பணியாளர்கள் பாதுகாப்பு நிலைமைகள் பற்றிய கண்காணிப்புக்களை மேற்கொள்வதோடு, முறையாக அவற்றை இற்றைப்படுத்தி தமது முகாமையாளருக்கோ அல்லது அதற்கென ஒதுக்கப்பட்ட அதிகாரிக்கோ அவ்வப்பொழுது இற்றைப்படுத்தல் வேண்டும்.
- பாதுகாப்பு மற்றும் கவனமாக இருத்தல் தொடர்பான சந்தர்ப்பங்களை அதனோடு தொடர்புடைய விடயங்களை முகாமைத்துவத்திற்கோ அல்லது மனித வளங்கள் அதிகாரிக்கோ பணியாளர்கள் அறிக்கையிடல் வேண்டும்.

## மனித வளங்கள்

- மனித வளங்கள் தொடர்பான கொள்கையானது தெளிவாக பாதுகாப்பு தொடர்பான வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களைக் குறிப்பிடல் வேண்டும்.
- தொழில் தொடர்பான விளக்கங்களானது பாதுகாப்பு மற்றும் கவனமாக இருத்தல் தொடர்பான பொறுப்புக்களை தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.
- ஆட்சேர்ப்பு மற்றும் திசைமுகப்படுத்தல் ஆகியவற்றின் பொழுது அவர்கள் எதிர்கொள்ளக் கூடிய அச்சுறுத்தலின் தன்மைக்கு ஏற்ற விதத்தில் பாதுகாப்புத் தொடர்பான அறிவினைப் பெற்றுள்ளனர் என்பதை அவர்களுக்கான பயிற்சிகளை வழங்குகின்ற பொழுது அமைப்பு உறுதிசெய்துகொள்ளல் வேண்டும்.
- புதிய பணியாளர்களுக்கான திசைமுகப்படுத்தலானது பாதுகாப்புக் கொள்கை தொடர்பான தகவல்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.
- பணியாளர்களது செயலாற்றுகை மீளாய்வு மற்றும் மதிப்பீடு ஆகியன பாதுகாப்பு மற்றும் கவனமாக இருத்தல் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப இருத்தல் வேண்டும்.
- பாதுகாப்பு மற்றும் கவனமாகவிருத்தல் (பத்திரம்) கொள்கைகளை மீறுகின்ற பணியாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## வசதிகள் மற்றும் அலுவலக பாதுகாப்பு

- அலுவலக வசதிகள் சில தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் தேவையற்ற நபர்கள் உள்ளே வருவதற்கும் வாய்ப்புக்களை வழங்குகின்றது. எனவே, அலுவலக வளாகத்தைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டிருப்பதுடன் பொருத்தமான பாதுகாப்புக் கட்டுப்பாட்டு முறைகளும் இருத்தல் வேண்டும்.
- அவசரகால நிலைமைகளின் பொழுது யாரைத் தொடர்புகொள்ள வேண்டுமென்பதை சகல பணியாளர்களும் அறிந்திருத்தல் வேண்டும். இத்தகைய தகவல்கள் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- களவு மற்றும் இயற்கை அனர்த்தங்களில் இருந்து பாதுகாக்கும் முகமாக அலுவலகம் மற்றும் அங்குள்ள உபகரணங்கள் யாவும் முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- அலுவலக வசதிகள் முறையான பாதுகாப்பு உபகரணங்களைக் கொண்டிருப்பதுடன் அவசர வெளியேறுதல் இடங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- தீ அணைப்புத் தொடர்பான விடயங்களைக் கையாளுவதற்காக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

## நிகழ்ச்சித்திட்டமிடல்

- குறிப்பிட்ட காலப்பகுதிக்கொரு முறை மீளாய்வு செய்யப்படும் விதத்தில் அடிப்படை இடர் மதிப்பீடு ஒன்றை சகல கருத்திட்டங்களும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். அடிப்படை இடர் மதிப்பீடானது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:
  1. தற்போதைய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், நிகழக்கூடிய அச்சுறுத்தல்கள், திட்டவட்டமான பாதிப்புறு தன்மைகள் ஆகியன பட்டியலிடப்பட்டிருத்தல் வேண்டும்.
  2. நிகழக்கூடிய ஒவ்வொரு அச்சுறுத்தல் தொடர்பான மதிப்பீடுகள் பட்டியலிடப்பட்டிருப்பதுடன் அவற்றினால் அமைப்பிற்கு ஏற்படக்கூடிய பாதகமான நிலைமைகளும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
  3. நிகழக் கூடிய அச்சுறுத்தல்கள் மற்றும் பாதிப்புறும் தன்மை ஆகியவற்றை குறைக்கும் முகமாக அல்லது தணிக்கும் முகமாக உபாய முறைகள் விருத்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- இயங்காற்றல் மிக்க பாதுகாப்பு நிலைமைகளைக் கருத்திற்கொண்டு பணியாளர்கள் கருத்திட்டச் செயற்பாடுகளை உருவாக்குதல் வேண்டும்.
- பிரேரணைகள் மற்றும் வரவுசெலவுத் திட்டங்கள் ஆகியன பாதுகாப்பு மற்றும் கவனமாக இருத்தல் தொடர்பான அம்சங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அவையாவன:
  1. பணியாளர்களுக்கான பயிற்சிகள் (தனிப்பட்ட பாதுகாப்பு, முதலுதவி)
  2. வேலைத்தளத்தை சிறப்பாக அமைத்தல் (வேலிகள், பாதுகாப்பு, பூட்டுகள் போன்றன)
  3. பாதுகாப்பு மற்றும் கவனமாக இருத்தல் தொடர்பான பொருட்கள் (முதலுதவிப்பொருட்கள், தொலைபேசிகள்)
  4. மனித வளங்கள் (முக்கிய இடங்கள், பாதுகாப்புத் தளங்கள், காப்புறுதி)
  5. அவசியமானவிடத்து நம்பகத்தன்மை மிக்க தனியார் பாதுகாப்புக் கம்பனிகளுடன் ஒப்பந்த உடன்படிக்கைகளை மேற்கொள்ளலாம்.

பின்ணைப்பு 5

நிறுவன ரீதியான பாதுகாப்புத் தொடர்பான சிறந்த நடைமுறைகள் சோதனைப் பட்டியல்

## பயணம் மற்றும் போக்குவரத்து

- பயணத் திட்டங்கள் பற்றிய பணியாளர்களது பதிவு முக்கியமானதாகும்.
- பணியாளர்கள் பயணங்களை மேற்கொள்கின்ற பொழுது அவசர நிலைமைகளின் பொழுது தொடர்புகொள்ள வேண்டிய தகவல்களை தம்முடன் கொண்டுசெல்லல் வேண்டும் (நெருங்கிய உறவினர், பிரதான அலுவலக தொலைபேசி இலக்கம், அவசர மருத்துவ சேவைகள் மற்றும் சட்டத்தரணி போன்றன).
- குறிப்பிட்ட இடத்திற்கு பயணம் செய்கின்ற பொழுது அவ்விடத்தைப் பற்றிய சில விபரங்களை பணியாளர்கள் அறிந்திருத்தல் வேண்டும்.
- இயற்கை அனர்த்தங்கள் அல்லது பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகள் எழுகின்ற பொழுது பயணம் செய்கின்ற பணியாளர் முகாமையாளரை அல்லது அவ்விடயத்திற்குப் பொறுப்பான அதிகாரியைத் தொடர்புகொள்ளல் வேண்டும்.
- சர்வதேச பயணங்களை மேற்கொள்கின்ற பணியாளர்கள் சம்பந்தப்பட்ட தூதுவராலயங்களில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.
- பணியாளர்கள் வாகனச் சாரதிகளாக இருக்கின்ற சந்தர்ப்பங்களில் அவர்கள் இருக்கைப் பட்டிகளை அணிந்திருத்தல் வேண்டும். அத்தோடு, பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப வாகனம் இருப்பதை உறுதிசெய்துகொள்ளல் வேண்டும்.
- தீ அணைப்புக் கருவிகள், சுத்தமான நீர், பிளாஸ் லைட், தொடர்பாடல் விபரங்கள், முதலுதவிப்பொருட்கள், அவசியமான திருத்தல் கருவிகள் போன்ற அடிப்படை உபகரணங்களை வாகனம் கொண்டிருத்தல் வேண்டும்.
- சாரதிகள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிரதேச போக்குவரத்துச் சட்டங்களுக்கு ஏற்ப நடந்துகொள்ளல் வேண்டும்.

## தொடர்பாடல் மற்றும் தரவுகள்

- வேலைத்தளங்களுக்கு அல்லது ஏனைய இடங்களுக்கு விஜயம் செய்கின்ற பொழுது பணியாளர்களிடம் நம்பகத்தன்மை மிக்க தமது நண்பர்களுடன் தொடர்புகொள்ளக் கூடிய விதத்திலான தொலைத்தொடர்பாடல் கருவிகள் இருத்தல் வேண்டும். உதாரணமாக, தம்மிடம் பல்வேறு வகையான சிம் அட்டைகளைக் கொண்டுசெல்லுதல்.
- தொலைத்தொடர்பாடல் வசதிகளற்ற (mobile network coverage) தூர இடங்களுக்கு பணியாளர்கள் பயணிக்கும் பொழுது வாய்ப்புள்ள எல்லாச் சந்தர்ப்பங்களிலும் செய்மதித் தொலைபேசியை தம்முடன் கொண்டு செல்லுதல் வேண்டும். அத்தோடு, அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும்.
- அன்டிவைரஸ் (antivirus) மென்பொருள் தொடர்பான இற்றைப்படுத்தல்களை அமைப்பு கொண்டிருத்தல் வேண்டும்.
- தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு அம்சங்களுடன் தொடர்புடைய விடயங்களில் சிறப்பான பயிற்சிகள் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தோடு, பணியாளர்கள் கொள்கைகளுக்கு அமைவாக நடந்துகொள்கின்றனர் என்பதை உறுதிசெய்துகொள்ளலும் வேண்டும்.
- சகலவிதமான தொழில்நுட்ப உபகரணங்களும் உறுதியான கடவுச்சொல்லினால் பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவை குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை மாற்றப்படலும் வேண்டும்.
- மின்னியல் சார்ந்த சகலவிதமான கோவைகளும் பாதுகாக்கப்பட்ட பிளாஸ் ட்ரைவினுள் களஞ்சியப்படுத்தப்படல் வேண்டும். மிகவும் அவசியமான தேவையேற்பட்டாலன்றி, கூருணர்வுமிக்க தரவுகள் பௌதீக ரீதியாக போக்குவரத்துச் செய்யப்படக் கூடாது.
- கோவைகளின் வன் பிரதிகள் (Hard copies) பாதுகாப்பான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது அழிக்கப்படல் வேண்டும்.

## சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம்

- பணியாளர்களுக்கு முழுமையான சுகாதார ரீதியான காப்புறுதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். இவற்றுள் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்பவர்களாயின் சர்வதேச சுகாதாரக் காப்புறுதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு அலுவலகத்திலும் ஆகக் குறைந்தது ஒரு பணியாளருக்காவது முதலுதவி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மற்றும் சகல அலுவலகங்ளினது வாகனங்களிலும் ஆகக்குறைந்தது ஒரு முதலுதவிப் பெட்டி இருப்பதுடன் அது சகல பொருட்களையும் உள்ளடக்கியதாக முழுமையாகப் பேணப்படல் வேண்டும்.
- பொது இடங்களில் அவசரகால மருத்துவ பதிலளிப்புச் செயன்முறைகள் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- எதிர்பாராத காயங்கள் அல்லது திடீரென சுகவீனமுறல் போன்ற சந்தர்ப்பங்களின் பொழுது பணியாளர்கள் மருத்துவ வசதிகளை நாடக்கூடியவிதத்தில் அருகில் பொருத்தமான இடமொன்று இனங்காணப்பட்டிருத்தல் வேண்டும்.
- நெருக்கடிகள் அல்லது மனவடு தொடர்பான நிகழ்வுகளினால் தாக்கமுறும் பட்சத்தில் பணியாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உதவக்கூடிய விதத்தில் முன்கூட்டியே அப்பிரதேசத்தில் ஆலோசகர் ஒருவர் இனங்காணப்பட்டிருத்தல் வேண்டும்.
- பாலியல் ரீதியான தாக்குதல் ஏற்படும் பட்சத்தில் உளவியல், சட்டம், மருத்துவ ரீதியான உதவிகள் போன்றன பணியாளர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.
- இவற்றுள் பணியாளர்கள் நோய்த்தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொள்வது ஆகியனவும் உள்ளடங்கும்.

## பின்னிணைப்பு

மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பான வெளியீடுகள் மற்றும் இருவட்டுக்கள்

சர்வேத பாதுகாப்பு 2012

பாதுகாவலர் முன்னெடுப்பு பாதுகாப்பு முகாமைத்துவ செயல்நூல்

பாதுகாவலர் பாதுகாப்பு முன்னெடுப்பு, கம்பாலா, உகண்டா, 2013

மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பான முன்னணிக் கையேடு : எத்தகைய பாதுகாப்புக்களை ஐரோப்பிய ஒன்றியமும் நோர்வே இராஜதந்திர தூதுவராலயமும் வழங்க முடியும்?

புரண்ட்லைன், மனித உரிமைகள் பாதுகாலர்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச மன்றம், 2007, வற்புறுத்தல், எதிர்த்தல், விடாப்பிடி, இருத்தல். பெண்கள் தொடர்பான மனித உரிமைகள் பாதுகாவலர்களது பாதுகாப்பும் உபாயங்களும்.

வற்புறுத்தல், விடாப்பிடி, எதிர்த்தல், இருத்தல் - பெண்கள் உரிமைகள் தொடர்பான செயற்பாட்டாளர்களது அறிக்கை

ஜேன் பெர்ரி மற்றும் வகின்டா நெய்னா.

பெண்கள் தொடர்பான மனித உரிமைகளுக்கான அவசர செயல் நிதியம் - மனித உரிமைகள் பாதுகாவலர்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச மன்றம் மற்றும் கவினா மன்றம் 2008

மனித உரிமைகள் பாதுகாவலர்களை பாதுகாப்பது தொடர்பான புதிய பாதுகாப்புக் கையேடு, மூன்றாவது பதிப்பு

சர்வதேச பாதுகாப்பு 2009

மனித உரிமைகள் பாதுகாவலர்களை பாதுகாப்பது தொடர்பான கையேடு

புரண்ட்லைன், மனித உரிமைகள் பாதுகாவலர்களைப் பாதுகாப்பது தொடர்பான சர்வதேச மன்றம், 2005

அமெரிக்காவில் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் நிலைமைதொடர்பான இரண்டாவது அறிக்கை

மனித உரிமைகள் தொடர்பிலான அமெரிக்காவிற்கிடையிலான ஆணைக்குழு, 2011

பாதுகாப்புப் பெட்டி: உங்களது டிஜிடல் பாதுகாப்பு தொடர்பான கருவிகள் மற்றும் நுட்பங்கள்

மநுட்பம் மற்றும் தொழில்நுட்பக் கூற்று மற்றும் புரண்ட்லைன் கருத்திட்டம் - மனித உரிமைகள் பாதுகாவலர்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச மன்றம், 2013

பாதுகாப்பு தொடர்பான செயல்நூல்: இடர் நிலையை எதிர்கொள்கின்ற மனித உரிமைகள் பாதுகாவலர்களைப் பாதுகாப்பது தொடர்பான நடைமுறைசார் படிமுறைகள்

மனித உரிமைகள் பாதுகாவலர்களைப் பாதுகாப்பது தொடர்பான சர்வதேச மன்றம், 2011

# பின்னிணைப்பு 6: கைப்பை

கள விஜயத்தை மேற்கொள்கின்ற சகல சந்தர்ப்பங்களிலும் செயற்பாட்டாளர்கள் தம்முடன் ஒரு கைப்பையினைக் கொண்டு செல்வது சிறப்பானதாகும். கைப்பையொன்றை உங்களுடன் கொண்ட செல்வதன் மூலம் இருட்டான சந்தர்ப்பங்களிலும் அவசியமான பொருட்களை இலகுவாக எடுக்க முடியும் (இந்தப் பை நீர் உட்புகாததாக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை, இருப்பினும் தோளில் தொங்கவிடக் கூடிய பை பொருத்தமானது). இருளில் மின்னக்கூடியதாகவும் ஒளியைப் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருப்பது சிறப்பானதாகும். ஆலோசிக்கப்பட்ட விடயங்களுள் பின்வருவனவும் உள்ளடங்கும்:

| அவிசயமானவை | |
|---|---|
| *குறித்த பையினுள் நீர் உட்புகாத வேறு ஒரு ஆவணப் பையை வைத்திருக்கவும்* | |
| இனங்காணப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஏனைய முக்கிய ஆவணங்கள் அல்லது பிரதிகள். (உதாரணமாக, அமைப்பின் உத்தரவு, வாகன அனுமதிப்பத்திரம், மருத்துவப் பரிந்துரைப்புகள் போன்றன). இந்த சகல ஆவணங்களும் உங்களது மின்னஞ்சலுக்கும் உங்களது நம்பிக்கைக்குப் பாத்திரமான மற்றொருவரது மின்னஞ்சலுக்கும் அனுப்பிவைக்கப்படுவது சிறப்பானதாகும். அதேவேளை உங்களுடன் ஒரு டிஜிடல் எஸ்.டி. காட்டில் இதனைப் பதிந்து பாதுகாப்பா வைத்திருக்கலாம். | ☐ |
| அவசர தேவைகளுக்கான நிதியாக குறிப்பிட்ட நாட்டின் சிறிய நாணயத்தாள்கள் அல்லது ஐ.அ.டொலர்கள் | ☐ |
| அவசர நிலைமையின் பொழுது தொடர்புகொள்ளக்கூடியவர்களது பட்டியல் (உதாரணமாக, அலுவலகம், மருத்துவச் சேவைள், பொலிஸ், பாதுகாப்பு கம்பனி, சட்டத்தரணி போன்றன) | ☐ |
| *உங்களது பையினுள்* | |
| தொடர்பாடல்களுடன் தொடர்புடையவை (உதாரணமாக, வானொலி, கையடக்கத் தொலைபேசி, செய்மதித் தொலைபேசி பொருத்தமாயின், மின்னேற்றப்பட்ட பெட்டரிகள், மின்னேற்றக் கருவிகள், முற்கொடுப்பனவுத் தொலைபேசிகளுக்கான மேலதிக காட்கள்) | ☐ |
| முதலுதவிக் கருவிகள்/மனவடு தொடர்பான விடயங்கள் | ☐ |
| மருந்துகள் | ☐ |
| நீர்/உணவுகள் | ☐ |
| பல்வேறு வகையான கருவிகள் (விமான நிலையம் ஊடாக செல்கின்ற பொழுது சில வகையான பொருட்களைக் கொண்டுசெல்வதற்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம்) | ☐ |
| மின் விளக்குகள் (தலையில் பொருத்தும் எரிவிளக்கு) மற்றும் மேலதிக பெட்டரிகள் | ☐ |
| ஆடைகள்/கவர்கள் | ☐ |

| ஏனையவை | |
|---|---|
| அவசர பயண அனுமதிக்காக இரண்டு மேலதிக அடையாள அட்டைப் புகைப்படங்கள் | ☐ |
| வரைபடங்கள், திசையறி கருவிகள், ஜீ.பி.எஸ். (அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறிந்திருக்கவும். அதேவேளை சில நாடுகளில் ஜீ.பி.எஸ். ஐப் பயன்படுத்துவது சட்டவிரோதமாகும்) | ☐ |
| சூரிய ஒளியிலிருந்து பாதுகாக்கும் முகமாக பொருத்தமான கண்ணாடிகள் | ☐ |
| நுழம்பு வலை | ☐ |
| பொருத்தமான போர்வைகள் (உறுதியானவையாக சூழலுக்கு பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்) | ☐ |
| நீர் உட்புகா ஜாக்கெட்கள் மற்றும் நீளக் காற்சட்டைகள் | ☐ |
| நீரைத் துப்பரவுசெய்யும் மாத்திரை அல்லது நீர்த்துப்பரவாக்கி | ☐ |
| குறிப்புப் புத்தகம், பென்சில், புத்தகம் | ☐ |
| சவர்க்காரம், பற்தூரிகை, பற்பசை, துவாய் | ☐ |
| கழிப்பறைக் காகிதங்கள் | ☐ |
| தீப்பெட்டி, சிகரட்கள், ஆணுறைகள் | ☐ |
| நீர் உட்புகா ரேப் | ☐ |
| சத்தமான விசில் | ☐ |
| சுவாசிப்பதற்கு உகந்த முகமூடிகள் | ☐ |
| டக்ட் ரேப் | ☐ |

# பின்னிணைப்பு 7: பேட்டிகாணல் சோதனைப் பட்டியல்

பேட்டி காண்பதற்கென நீங்கள் திட்டமிட்டு அதற்குத் தயாராகியதன் பின்னர்[1], அப்பேட்டியின் விடயம் எத்தகையதாக இருந்த பொழுதிலும் பேட்டி காணுகின்ற சகலரும் ஆகக் குறைந்தது பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்:

### ஈடுபாடு மற்றும் விளக்கமளித்தல்

- பேட்டியளிப்பவர் நேரத்தை ஒதுக்கியமைக்காக அவருக்கு நன்றி தெரிவிக்கவும், அத்தோடு அவர் பாதுகாப்பாகவும் சௌகரியமாகவும் உள்ளார் என்பதை உறுதிப்படுத்தவும்.
- உங்களையும் உங்களது குழுவையும் அறிமுகம் செய்யவும். சமுகமளித்திருக்கும் ஒவ்வொரு நபரதும் வகிபாகம் பற்றி விளக்கமளிக்கவும்.
- உரைபெயர்ப்பாளர் அல்லது குறிப்பு எடுப்பவர் ஆகியோரைப் பயன்படுத்துவதாயின், அவர்களை அறிமுகம் செய்யவும். அவர்களது வகிபாகம் மற்றும் இரகசியத்தன்மை தொடர்பான கடப்பாடுகள் பற்றி விளக்கமளிக்கவும். பேட்டி காண்கின்ற குழுவுடன் கதைப்பதை பேட்டியளிப்பவர் சௌகரியமாக உள்ளாரா என்பதைக் கேட்கவும்.
- ஆவணப்படுத்தல் செயன்முறையின் நோக்கம் மற்றும் அதனது தன்மை பற்றி முழுமையாக விளக்கமளிக்கவும், அத்தோடு குழுவிற்கான ஆணை மற்றும் அதன் கூட்டணி என்பது தொடர்பில் எடுத்துரைக்கவும்.
- பேட்டியின் நோக்கம் மற்றும் அதன் வடிவம் பற்றி விளக்கமளிக்கவும். அத்தோடு, எத்தகைய கேள்விகள் கேட்கப்படும் என்பதையும் விளக்கவும்.
- பேட்டியின் கால அளவு பற்றி கலந்துரையாடவும். அத்தோடு, பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சி தனக்கு விருப்பமான எந்த நேரத்திலும் ஓய்வெடுக்கலாம் அல்லது எந்த நேரத்திலும் பேட்டியை முடித்துக்கொள்ளலாம் என்பதைக் குறிப்பிடவும்.
- எதிர்காலத்தில் இத்தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதைக் குறிப்பிடவும். இவற்றுள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் மூன்றாம் நபர்கள் பற்றியும் குறிப்பிடவும் (உதாரணமாக, பொலிஸ், விசாரணையாளர்கள், நீதிமன்றங்கள்). இதற்கு பாதிக்கப்பட்டவர், சாட்சிகள் சம்மதத்தினைத் தெரிவித்தல் வேண்டும்.
- இரகசியத்தன்மையைப் பேணுவதுடன் தொடர்புடைய மட்டுப்பாடுகளைப் பற்றி விளக்கமளிக்கவும். அத்தோடு, ஆவணப்படுத்தல் செயன்முறையில் பங்குபற்றுவதன் காரணமாக ஏற்படக்கூடிய இடர்கள் பற்றியும் பேட்டி அளிப்பவருக்குக் குறிப்பிடவும். பொருத்தமாயின் பெற்றுக்கொள்ளக் கூடிய சேவைகளின் மட்டுப்பாடு பற்றியும் விளக்கமளிக்கவும்.
- சிறுவர்கள் உள்ளடங்கலாக பேட்டி அளிப்பவருக்கு அவர் விரும்பினால் கதைக்க முடியும் அல்லது கதைக்காதிருக்க முடியும் என்பது போன்ற தெரிவுகள் உள்ளன என்பதையும் குறிப்பிடவும்.
- பேட்டி காணல் செயன்முறையில் பேட்டி அளிப்பவரது எதிர்பார்ப்புகளை மதிப்பீடு செய்து முகாமைத்துவம் செய்யவும். தகவல்கள் பயன்படுத்தும் முறை, அவசியமான காணப்படுகின்ற உதவிகள் போன்றவற்றைக் கருத்திற்கொள்ளவும்.
- பேட்டி அளிப்பவருக்குக் கிடைக்கக் கூடிய ஏனைய பாதுகாப்பு அல்லது ஏனைய அக்கறைகள் பற்றி எடுத்துரைக்கவும்.
- பேட்டி அளிப்பவர் இதற்கு முன்னர் பேட்டி காணப்பட்டாரா அல்லது வேறு விதமான கூற்றுக்களைத் தெரிவித்தாரா என பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளிடம் கேட்கவும். மற்றும்/ அல்லது எத்தகையோருடன் அவர்கள் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்கள் என்பதையும் கேட்கவும்.
- நீங்கள் குறிப்பிட்ட விடயங்களை பேட்டி அளிப்பவர் நன்கு புரிந்துகொண்டார் என்பதை உறுதிசெய்துகொள்ளவும். அவர்கள் செயன்முறையின் பொழுது எதனைப் புரிந்துகொண்டார்கள் என்ற கேள்வியை மீண்டும் அவர்களிடம் கேட்டு விளக்கத்தினைப் பெற்றுக்கொள்வது செயற்பாட்டாளர்கள் மேற்கொள்ளக் கூடியதொரு சிறந்த நடைமுறையாகும்.

### அறிவிக்கப்பட்ட சம்மதத்தினைப் பெற்றுக்கொள்ளல்

- ஆவணப்படுத்தல் செயன்முறையில் பங்குபற்றுவது தொடர்பில் அவர்களது தெளிவான சம்மதத்தினைப் பெற்றுக்கொள்ளவும். இவற்றுள் பின்வரும் ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் சம்மதத்தினைப் பெற்றுக்கொள்வதும் உள்ளடங்கும்:

  a. பேட்டியளிப்பதற்கான சம்மதம்

  b. குறிப்பெடுத்தல் மற்றும் பேட்டி காண்கின்ற பொழுது ரேப் றிகோடர் போன்ற பதிகருவிகள், வீடியோ கமராக்கள் போன்றவற்றைப் பயன்படுத்தல். ஒலி, ஒளிப் பதிவுக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதை பாதிக்கப்பட்டவர் அல்லது பேட்டி அளிப்பவர் அறிந்துள்ளார் என்பதை அவசியமாயின் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

  c. புகைப்படங்களை எடுத்தல், உடலியல் ரீதியான சோதனைகள் மற்றும் ஆவணப்படுத்தல் படங்கள் அல்லது பாதிக்கப்பட்டவர் வழங்கக்கூடிய ஏனைய வடிவிலான சான்றுகள்.

1 பேட்டியுடன் தொடர்புடைய சமாதான வரைவுச்சட்டகம் தொடர்பான மூன்று மத்திய கட்ட விடயங்களை உள்ளடக்கியதாக இந்தச் சோதனைப் பட்டியல் காணப்படுகிறது: 1 ஈடுபாடு மற்றும் விளக்கமளித்தல், 2 விபரம் மற்றும் தெளிவுபடுத்தல் 3 முடிவு. சமாதான வரைவுச்சட்டகத்தின் முக்கிய அல்லது அத்தியாவசிய அம்சங்களான திட்டமிடல் மற்றும் தயார்படுத்தல் மற்றும் மதிப்பீடுகள் ஆகியன விரிவாக அத்தியாயம் 11 இல் தரப்பட்டுள்ளது: பேட்டி காணல்.

d. விளக்கமளிக்கப்பட்டதன் பிரகாரமே சகலவிதமான தகவல்களும் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன (உதாரணமாக, தரவு சேகரிப்பு, தகவல் பரிமாற்றம் போன்றன).

e. அடையாளம், தொடர்புகொள்ளல், மேலதிக தகவல்கள் ஆகியவற்றை மூன்றாம் தரப்பிற்கு வழங்குவதற்கான நோக்கம், குறிப்பாக தேசிய மற்றும் சர்வதேச விசாரணையாளர்கள் அல்லது அமைப்புகள் அல்லது நீதிமன்றங்கள் அல்லது பொலிஸ் நிலையங்கள் ஆகியவற்றுக்கு இவற்றை வழங்குவதாயின் அது தொடர்பான சம்மதங்கள்.

**ஆவணம் தொடர்பான சம்மதம் பெறப்பட்டுள்ளது**

- சிறுவர்களைப் பேட்டி காண்கின்ற பொழுது அறிவுறுத்தல்களை தெளிவாக எடுத்துக் கூறவும் (உண்மைகளைக் கூறுதல், ஒரு கேள்விக்கு விடை தெரியாத பொழுது அல்லது அவர்கள் உண்மையில் புரிந்துகொள்ளாத சந்தர்ப்பங்களில் என்ன செய்யலாம் என்பது போன்றன). பார்க்க – அத்தியாயம் 16: சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை தொடர்பான வழிகாட்டல் மற்றும் ஈடுபடல் மற்றும் சிறுவர்களுக்கு விளக்கமளித்தல் தொடர்பான ஆவணம்.
- பேட்டியின் பொழுது சம்பந்தப்பட்ட சகலவிதமான தனிப்பட்ட தரவுகளையும் பதிவுசெய்யவும் (பெயர், பிறந்த திகதி, பால், இனம்/தேசியம் /சமயம், பொருத்தமாயின் இவற்றை மேற்கொள்ளவும், தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள் போன்றன பார்க்க - பின்னிணைப்பு 8: பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகளிடமிருந்து தனிப்பட்ட தகவல்களைச் சேகரிப்பது தொடர்பான படிவம்). தொலைத் தொடர்பாடல் வசதிகள் இல்லாத பிரதேசங்களில் அல்லது அவற்றில் நம்பியிருக்க முடியாதவிடத்து, மரபு சார்ந்த முறைகள் முறையாக செயற்படாத இடங்களில் மாறுபட்ட பெயர்களில் அழைக்கப்படுகின்ற பொழுது அல்லது அவ்வாறு இல்லாதவிடத்து பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி தொடர்பான தொடர்பு கொள்ளக் கூடிய தகவல்களை பதிவுசெய்வதற்கு மாற்றீட்டு வழிமுறைகளைப் பயன்படுத்தவும். இவற்றுள் அவர்களது இனம், சாதி, சமூகம், அமைப்பின் பெயர் அல்லது குழுவின் பெயர் அல்லது பாதிக்கப்பட்டவர் சாட்சியுடன் தொடர்பு கொள்ளக் கூடிய நெருக்கமான இடம் ஆகியவற்றைப் பதிவுசெய்யவும். இத்தகைய தகவல்கள் மிகவும் கூருணர்வுமிக்கவை என்பதைக் கருத்திற்கொள்ளவும். எனவே, அவற்றைக் கவனமாகப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம். எனவே அவற்றைப் பாதுகாப்பதற்கு உரிய காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். இவற்றைக் களஞ்சியப் படுத்துகின்ற சந்தர்ப்பங்களிலும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் இவை தொடர்பான இரகசியத்தன்மை பேணப்படுகின்றது என்பதை உறுதிசெய்துகொள்ளவும் (பார்க்க – அத்தியாயம் 8: பாதுகாப்பு மற்றும் கவனமாகக் கையாளுதல், அத்தியாயம் 13: தகவல்களை களஞ்சியப்படுத்தல்).

## விபரம் மற்றும் தெளிவுபடுத்தல் கட்டம்

**நீங்கள் என்ன செய்ய வேண்டும்**

- விளக்கமான கேள்விகளைக் கேட்பதன் மூலம் எவ்வித தங்குதடையும் இன்றி முழுமையான விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும் (இவை TED கேள்விகள் என அழைக்கப்படுகின்ற – என்னிடம் குறிப்பிடவும், எனக்கு விளக்கமளிக்கவும், விபரமாகத் தெரிவிக்கவும் போன்றன). இதன் மூலம் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி தன்னைப் பற்றிய விபரங்களைக் குறிப்பிடுவதற்கான வாய்ப்புகள் உண்டு. கூருணர்வு மிக்க விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு முன்னர் பரந்தளவிலான பொதுவான கூருணர்வற்ற விடயங்கள் பற்றிக் கலந்துரையாடவும்.
- காலவரன் முறைப்படி விபரங்களைத் தெளிவுபடுத்தவும். அவற்றை உரிய தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தவும். பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி குறிப்பிட்ட விடயங்களை மீண்டும் அவர்களிடமே உறுதிப்படுத்திக்கொள்ளவும். சார்த்துரைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பான சகலவிதமான மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ளவும். குற்றம் எவ்வாறு இடம்பெற்றது, எங்கே, யாரால், எப்பொழுது போன்ற விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும். உங்களுக்கு இது எப்படித் தெரியும், இதன் மூலம் எவ்விதமான முடிவுக்கு வருகின்றீர்கள் போன்ற கேள்விகளைக் கேட்கவும். சிறுவர்களைப் பேட்டி காணும் பொழுது பிரயோகிக்கும் மொழி தொடர்பில் கவனம் செலுத்தவும். கடுமையான எண்ணக்கருக்களைக் கொண்டுள்ள விடயங்களை அவர்களிடம் பிரயோகிக்க வேண்டாம். பார்க்க–அத்தியாயம் 16: சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை.
- உங்களுக்கு வழங்கப்பட்ட ஆணை, நியாயாதிக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் நீங்கள் கேட்கின்ற கேள்விகளை உருவாக்கிக் கொள்ளவும். சர்வதேச சட்டங்களின் கீழ் பாலியல் வன்முறை ஒரு குற்றமாகும். எனவே, பின்வருவனவற்றையும் உள்ளடக்கவும்:
  - திட்டவட்டமான அம்சங்கள்

    தாக்குதல்/குற்றம் தொடர்பான விபரங்கள்

    இடம்/திகதி/பலவந்த சூழல் தொடர்பான விளக்கம்

    சமுகமளித்திருந்த ஏனைய நபர்கள்
  - பொதுவான அம்சங்கள்

    பொதுமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அல்லது மோதல் தொடர்பான விபரங்கள்.

    அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமைகள், அவற்றின் அளவு, ஒத்த சம்பவங்கள் அல்லது தாக்குதல்கள்.

    குற்றமிழைத்தவர்கள் பிரயோகித்த வார்த்தைகள், அவர்களது செயல்கள், சாத்தியப்பாடுள்ளதெனில், வன்முறைக்கான காரணங்கள்.
  - தொடர்புள்ள அம்சங்கள்

    விருப்பம் அல்லது அறிந்திருத்தல் தொடர்பான விபரங்கள்.

    தொடர் கட்டளைகள்/ அதிகாரக் கட்டமைப்பு, தொடர்பாடல்கள், உபகரணங்கள்.

    குற்றமிழைத்தவர்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் அவர்களது வகிபாகங்கள்/ பொறுப்புகள்.

பின்இணைப்பு 7

பேட்டிகாணல் சோதனைப் பட்டியல்

- தாக்கம்
  - உடலியல் ரீதியான பாதிப்புகள் (உடனடியாக மற்றும் நீண்டகால அடிப்படையில்).
  - உள ரீதியான தாக்கம் (உடனடியாக மற்றும் நீண்டகால அடிப்படையில்).
  - சமூக மற்றும் பொருளாதார ரீதியான தாக்கங்கள்.

- ஏனையவர்களுக்கு இழைக்கப்பட்ட ஏதாவது குற்றங்களை பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் நேரில் கண்டுள்ளனரா என்ற கேள்வியையும் கேட்கவும்.
- பேட்டி காண்கின்ற பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிக்கு எதிராக குற்றமிழைக்கப்பட்ட பொழுது அவற்றை வேறு யாராவது நபர்கள் நேரில் கண்டனரா என்பன போன்ற கேள்விகளையும் கேட்கவும்.
- பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளிடம் வேறு ஏதாவது சான்றுகள் உள்ளனவா என்பதைக் கேட்கவும். குறிப்பாக அவர்கள் புகைப்படம் எடுத்தனரா, வீடியோ பிரதிகள் காணப்படுகின்றனவா, அல்லது சம்பவம் தொடர்பில் யாருக்காவது தகவல்களை அறிவித்தனரா போன்றன.
- பொருத்தமாயின், பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளுக்கு வரைபடங்கள், திட்டங்கள் போன்றவற்றை வரைவதற்கு அனுமதிக்கவும் (உதாரணமாக: சம்பவம் நடைபெற்ற இடம் தொடர்பானவை).
- பாதிக்கப்பட்டுள்ளவர் அல்லது சாட்சி வேறு ஏதாவது தகவல்களைத் தெரிவிக்க விரும்புகின்றனரா என்ற கேள்வியையும் கேட்கவும். அத்தோடு, பேட்டியை நிறைவுசெய்வதற்கு முன்னர் அவர்கள் வேறு ஏதாவது கேள்விகளைக் கேட்க விரும்புகின்றனரா என்பதையும் கேட்கவும்.

**நீங்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்**

- உங்களது நடத்தை அல்லது அணுகுமுறை பற்றி நன்கு அறிந்திருக்கவும் (பணிவாகவும் மரியாதையாகவும் பொறுமையாகவும் கவனமாகவும் இருத்தல்: நேராக பார்ப்பதுடன் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளை நேரடியாக பார்த்துக் கதைக்கவும். உங்களது மற்றும் உங்கள் உரைபெயர்ப்பாளர் ஆகியோரது தொனி மற்றும் கதைக்கும் விதம் ஆகியவற்றில் கவனத்தைச் செலுத்தவும்). சாட்சி அல்லது பாதிக்கப்பட்டவர் அமர்ந்திருக்கின்ற கண் மட்டத்திற்கு நேராக அமர்ந்திருக்கவும் (அல்லது கீழ்).
- ழு பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகள் உடன்படுவதற்கு அல்லது உடன்படாதிருப்பதற்கு அல்லது கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு அல்லது பதிலளிக்காது விடுவதற்கு அல்லது கேள்விகளை கேட்பதற்கான வாய்ப்புக்களை தொடர்ச்சியாக அவர்களுக்கு வழங்கவும். தகவல்களை மீண்டும் குறிப்பிடவும். பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி அறிவிக்கப்பட்ட தீர்மானத்தை மேற்கொள்ளும் முகமாக போதியளவு கால அவகாசத்தை வழங்கவும்.
- ழு அவர்கள் மீது மதிப்பு மற்றும் பச்சாதாபத்தைக் காட்டவும். பரிதாபம் அவசியமில்லை. ஏதாவது வாக்குறுதிகளை வழங்குவதைத் தவிர்த்துக்கொள்ளவும் (உதாரணமாக: இரகசியத்தன்மையைப் பேணுவது தொடர்பானவை). செயன்முறை முழுவதும் நெகிழ்ச்சித் தன்மையுடன் நடந்துகொள்ளவும்.
- பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகளின் உணர்வுகள், அவர்களின் சிந்தனைகள், விடயங்கள் மற்றும் அவர்களது தெரிவுகள் அல்லது மனவடுக்கள் அல்லது எவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கின்றனர் போன்ற விடயங்கள் தொடர்பில் எவ்விதமான ஊகங்களையும் மேற்கொள்ள வேண்டாம்.
- பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகள் தனக்கு ஏற்பட்ட சம்பவங்களை எடுத்துரைக்கின்ற பொழுது அவர்களது விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் தனித்துவமாக நடந்துகொள்ளக் கூடிய விதத்தில் நீங்கள் அமைதியாக இருக்கவும். அவர்கள் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தலாம்:
  - மனவழுத்தம்/உளைச்சல்/வாபஸ்பெறல்
  - கோபம் /தம்மைப் பாதுகாத்துக்கொள்ளல்/ நிராகரித்தல் உணர்வுகள்
  - அமைதியாக/சோகமாக/தெளிவாக இருத்தல் போன்றன.

  குறிப்பிட்ட விதத்தில் தான் "நடந்துகொள்ள வேண்டுமென்ற" திட்டவட்டமான அவசியம் இல்லை.
- பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி பின்வருவனவற்றை வெளிப்படுத்துவார் என்ற ஊகங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதைக் கருத்திற்கொள்ளவும்:
  - கதைப்பதற்கு வெட்கப்படுதல் அல்லது அச்சப்படுதல்.
  - மனம் உடையக்கூடியவர்களாக/ மனவடு மிக்கவர்களாக/அவமானப்பட்டவாகளாக/ மனிதர்கள் மீது அதிருப்தி உடையவர்களாக இருக்க வேண்டுமென்பதில்லை (அல்லது குற்றமிழைத்தவருடைய அதே பாலைச் சேர்ந்தவர்கள்).
  - பாலியல் வன்முறை தொடர்பில் மிகவும் கவலையுள்ளவர்களாக இருத்தல் (இங்கு குறிப்பிடப்பட்ட ஏனைய செயல்கள் அல்லது அனுபவங்களுக்கு முரணாகவும் இருக்கலாம்).
  - உடலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள்.

## முடிவுக்கட்டம்

- ஏதாவது கேள்விகள், அக்கறைகள் தொடர்பில் கலந்துரையாடிச் செயற்படவும் (உதாரணமாக: பாதுகாப்பு, நடைமுறை சார்ந்த பிரச்சினைகள்).
- ஆற்றுப்படுத்தல் சேவைகள் காணப்படுகின்றன என்பதை பேட்டி காண்பவரிடம் கலந்துரையாடுவது அவசியமாகும்.
- தற்போதைய மற்றும் நீண்டகால அடிப்படையில் தொடர்புகொள்ளக் கூடிய விபரங்களைப் பெற்றக் கொள்ளவும். மீண்டும் எவ்வாறு தொடர்புகொள்ள முடியும், எவ்வாறு தொடர்புகொள்வதற்கு அவர்கள் விரும்புகின்றனர் போன்ற விடயங்கள். தொடர்புகொள்வதற்கான மாற்றீட்டு முறைகள் இருப்பின் அதனையும் அறிந்துகொள்ளவும் (உதாரணமாக: குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், பிரதேச ஆலயம் மூலமாக அல்லது பாதிக்கப்பட்டவர்/ சாட்சிகளுக்கு உதவக்கூடிய நிலையிலுள்ள ஏனைய குழுக்கள்).
- அவசியம் ஏற்படின், பேட்டி காண்பவரை எதிர்காலத்தில் சந்திப்பதற்கான இணக்கம்.
- பேட்டி கூற்றுக்கள், பேட்டி தொடர்பான குறிப்புகள்

ஆகியவற்றை பேட்டி கண்டவருக்கு மீண்டும் வாசித்துக் காட்டவும். சாத்தியப்பாடுள்ள சந்தர்ப்பங்களில் உங்களுக்கு உத்தியோகபூர்வ ஆணை இருக்கும் பட்சத்தில் அவர்களது கையொப்பத்தினை அல்லது உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.

- பேட்டியை நிறைவுசெய்கின்ற பொழுது பொதுவான சாதகமான விடயங்களைக் கலந்துரையாடி நிறைவுசெய்யவும். பேட்டி அளித்தவருடைய உணர்வு நிலையை மதிப்பீடு செய்யவும். அவர்கள் எங்கே செல்கின்றார்கள், எத்தகைய உதவிகளை உங்களால் வழங்க முடியும் என்பதையும் கேட்டறியவும் (உதாரணமாக: நண்பர்களிடமா அல்லது குடும்ப உறுப்பினர்களிடமா என்பது). அதாவது பேட்டி நிறைவுபெற்றவுடன் எங்கு செல்கின்றார்கள் என்ற விபரங்கள்.
- அடுத்த படிமுறைகள் பற்றி விளக்கமளிக்கவும். பேட்டிக்குப் பின்னரான நடவடிக்கைகள், பின்னூட்டல்கள் பற்றி ஆலோசித்துக் கலந்துரையாடவும். பொதுவாக பேட்டி கண்டதன் பின்னர், சில நாட்களின் பின்னர் ஒழுங்கான இடைவெளிகளில் சந்திப்பது பொருத்தமாகும்.
- அவர்கள் வழங்கிய தகவல்களை பயன்படுத்துவதற்கு அறிவிக்கப்பட்ட சம்மதத்தினை பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி வழங்குகின்றார்களா என்பதை மீண்டும் கேட்கவும். அவர்கள் விருப்பமாயின், சிலவற்றை மாற்றிக் கொள்ளலாம் அல்லது வழங்கிய சம்மதத்தினை வாபஸ் பெற முடியும் என்பதையும் தெரிவிக்கவும்.
- உங்களிடம் கலந்துரையாடியமைக்காக பாதிக்கப்பட்டவர்/சாட்சிக்கு நன்றி தெரிவிப்பதுடன், கலாசார ரீதியாக பொருத்தமான விடைபெறல் முறைகளையும் பயன்படுத்தவும் (உதாரணமாக: கை குலுக்குதல் போன்றன).
- ஒவ்வொரு பேட்டி நிறைவுபெற்றதன் பின்னரும் பேட்டி தொடர்பான முழுமையான மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்ளவும். அதன் தாக்கம் மற்றும் ஆவணப்படுத்தலின் முக்கியத்துவம் ஆகியவற்றை மதிப்பீடு செய்யவும் (உதாரணமாக: நீங்கள் தற்சமயம் பெற்றுக்கொண்ட தகவல்களில் எத்தகைய அம்சங்கள் திருப்தி ஏற்படுத்துகின்றன, எத்தகைய குறைபாடுகள் காணப்படுகின்றன, அவை தொடர்பில் எவ்விதமான அவதானத்தைச் செலுத்த முடியும் போன்றன). மிகவும் கடுமையான சூழ்நிலைகளிலும் கூட மதிப்பீடுகளை மேற்கொள்கின்ற பணிகளை தாமதிக்க வேண்டாம். அல்லது உங்களுடைய சகல பணிகளும் முடியும் வரை அவற்றை அவ்வாறே விட்டுவைக்க வேண்டாம். இவை தகவல் சேகரித்தல் செயற்பாடுகளில் தேவையற்ற அனாவசியமான குறைபாடுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உண்டு (பார்க்க – அத்தியாயம் 11: பேட்டி காணல்/மதிப்பீடு).

# பின்னிணைப்பு 8: பாதிக்கப்பட்டவர்கள் /அல்லது சாட்சிகளிடமிருந்து சேகரிக்கப்படும் தனிப்பட்ட தரவுகள் தொடர்பான முன் வடிவமைப்புகள்

| பேட்டி காண்கின்ற பொழுது பாதிக்கப்பட்டவர்/ சாட்சிகளிடமிருந்து செயற்படுத்துனர்கள் சேகரிக்க வேண்டிய அடிப்படைத் தகவல்கள் தொடர்பான பட்டியல் இதுவாகும்: | |
|---|---|
| 1. | குறியீடு (பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகள் வழங்குகின்ற உண்மையான கூற்றுக்குப் பொருந்தக் கூடிய விதத்தில் அவர்களது தனிப்பட்ட தரவுகளுடன் ஒத்துப்போகும் விதத்தில் பாதுகாப்பு நோக்கங்களைக் கருத்திற்கொண்டு செயற்படுத்துனர்களினால் பயன்படுத்தப்படுகின்ற குறியீட்டு முறை இதுவாகும்). |
| 2. | பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியின் பெயர் (முதல் மற்றும் இறுதிப் பெயர்கள், பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சிகள் ஏற்கனவே வேறு பெயர்களினால் அழைக்கப்பட்டனரா) |
| 3. | பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் பால். |
| 4. | பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் பிறந்த திகதி |
| 5. | பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் பிறந்த இடம் |
| 6. | பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் தந்தையின் பெயர். |
| 7. | பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் தாயின் பெயர். |
| 8. | பாதிக்கப்பட்டவர்/சாட்சியினால் உரையாடக் கூடிய மொழிகள் (பாதிக்கப்பட்டவர்/சாட்சி விரும்புகின்ற மொழிகள் உள்ளடங்கலாக). |
| 9. | பேட்டிகாண்கின்ற மொழி |
| 10. | பாதிக்கப்பட்டவர்/சாட்சியினது தற்போதைய வதிவிட முகவரி. |
| 11. | பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் நிரந்தர வதிவிடம். |
| 12. | பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் தொலைபேசி இலக்கம்/ மின்னஞ்சல்(கள்) |
| 13. | பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் தொழில்/வேலை – தற்போதைய அல்லது முன்னரானது. |

| | |
|---|---|
| 14. | குடும்ப அந்தஸ்த்து (பெயர்கள், வயது, இடம், அறிந்திருப்பின் குடும்ப உறுப்பினர் யாரையாவது பற்றிக் குறிப்பிடவும்) |
| 15. | பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் தேசிய இனம். |
| 16. | பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் சமயம் (சூழமைவுக்குப் பொருத்தமாயின் மட்டும் பெற்றுக்கொள்ளவும்). |
| 17. | பாதிக்கப்பட்டவர்/சாட்சியின் இனம், சாதி போன்றன. (சூழமைவுக்குப் பொருத்தமாயின் மட்டும் பெற்றுக்கொள்ளவும்). |
| 18. | பேட்டி காணப்பட்ட திகதி, இடம், நேரம். |
| 19. | பேட்டியின் பொழுது சமுகமளித்திருந்த நபர்கள் மற்றும் நிலைகள், வகிபாகங்கள். |
| 20. | பேட்டியின் பொழுது பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியினால் வழங்கப்பட்ட மேலதிக சான்றுகள் (உதாரணமாக: புகைப்படங்கள், வரைபடங்கள், வீடியோக்கள், மருத்துவ அறிக்கைகள், ஏனைய ஆவணங்கள்) மற்றும் அவற்றுக்கு குறியீட்டு முறையைப் பயன்படுத்தவும். |
| 21. | மீண்டும் தம்மைச் சந்திப்பதற்கு பாதிக்கப்பட்டவர்/சாட்சிகள் இணங்கினார்களா என்ற தகவல்கள். |
| 22. | பாதிக்கப்பட்டவர்/சாட்சிக்கு உள, சமூகவியல் சார்ந்த உதவிகள் அவசியமா என்ற தகவல்கள். |
| 23. | பாதிக்கப்பட்டவர்/சாட்சிகள் தாம் வழங்குகின்றன சான்றுகளை தேசிய நீதித்துறை அதிகார அமைப்புகளுடன் பகிர்ந்துகொள்வது தொடர்பில் தெரிவித்த தகவல்கள் (எவையெனக் குறிப்பிடவும்). |
| 24. | பாதிக்கப்பட்டவர்/சாட்சிகள், தாம் வழங்கிய தகவல்களை சர்வதேச நீதித்துறை அதிகார அமைப்புகளுடன் பகிர்ந்துகொள்வதற்கு தமது விருப்பத்தைத் தெரிவித்தனரா போன்ற விபரங்கள் (எவையெனக் குறிப்பிடவும்). |
| 25. | வாசித்ததன் பின்னர் பாதிக்கப்பட்டவர்/சாட்சியிடமிருந்து பெறப்பட்ட கையொப்பம் (அவர்களது கையொப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கு செயற்படுத்துனர் தீர்மானிக்கும் பட்சத்தில் மாத்திரம்). |

# பின்னிணைப்பு 9: காவல் தொடர்பான காப்புச் சங்கிலி

PHR Physicians for Human Rights

**சான்று சேகரிப்பு காவல் தொடர் காப்புச் சங்கிலி**

வழக்கு இல.:________________

மேற்கோள் இல.:________________

சேகரிக்கப்பட்ட திகதி:________________

சேகரிக்கப்பட்ட நேரம்:________________

சார்த்துரைக்கப்பட்ட குற்றம்:________________

விளக்கம்:________________

________________

கண்டறியப்பட்ட/கைப்பற்றப்பட்ட/உற்பத்தி செய்யப்பட்ட இடம்:

________________

சேகரித்தவர்:

________________

(முழுப் பெயர் - தெளிவான எழுத்தில்)

________________

(பதவி, சேவை, அடையாள இலக்கம்)

________________

(கையொப்பம்)

இருந்து மாற்றப்பட்டது:

________________

(முழுப் பெயர் - தெளிவான எழுத்தில்)

________________

(பதவி, சேவை, அடையாள இலக்கம்)

________________

(கையொப்பம்)

மாற்றப்பட்ட இடம்:

________________

(முழுப் பெயர் - தெளிவான எழுத்தில்)

________________

(பதவி, சேவை, அடையாள இலக்கம்)

________________

(கையொப்பம்)

மாற்றப்பட்ட திகதி: நேரம்:

________________ ________________

மாற்றியமைக்கான நோக்கம் (உதாரணமாக: தடுப்புக்காவல், பகுப்பாய்வு, அல்லது நீதிமன்றம்).

________________

களஞ்சியப்படுத்திய முறை:

________________

**தொடர்ச்சி**

இருந்து மாற்றப்பட்டது:

________________

(முழுப் பெயர் - தெளிவான எழுத்தில்)

________________

(பதவி, சேவை, அடையாள இலக்கம்)

________________

(கையொப்பம்)

மாற்றப்பட்ட இடம்:

________________

(முழுப் பெயர் - தெளிவான எழுத்தில்)

________________

(பதவி, சேவை, அடையாள இலக்கம்)

________________

(கையொப்பம்)

மாற்றப்பட்ட திகதி: நேரம்:

________________ ________________

மாற்றியமைக்கான நோக்கம் (உதாரணமாக: தடுப்புக்காவல், பகுப்பாய்வு, அல்லது நீதிமன்றம்).

________________

களஞ்சியப்படுத்திய முறை:

________________

இருந்து மாற்றப்பட்டது:

________________

(முழுப் பெயர் - தெளிவான எழுத்தில்)

________________

(பதவி, சேவை, அடையாள இலக்கம்)

________________

(கையொப்பம்)

மாற்றப்பட்ட இடம்:

________________

(முழுப் பெயர் - தெளிவான எழுத்தில்)

________________

(பதவி, சேவை, அடையாள இலக்கம்)

________________

(கையொப்பம்)

மாற்றப்பட்ட திகதி: நேரம்:

________________ ________________

மாற்றியமைக்கான நோக்கம் (உதாரணமாக: தடுப்புக்காவல், பகுப்பாய்வு, அல்லது நீதிமன்றம்).

________________

களஞ்சியப்படுத்திய முறை:

________________

பின்ணைப்பு 9

காவல் தொடர்பான காப்புச் சங்கிலி

# புத்தகப்பட்டியல்

**தெரிவுசெய்யப்பட்ட புத்தகப்பட்டியல்**

அப்டல், சீ. (2010) *சர்வதேச குற்றங்களுக்கான சிறுவர்கள் மற்றும் பொறுப்புக் கூறல்கள்: சிறுவர்கள் மற்றும் நிலைமாற்றுக்கால நீதி தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்களின் பங்குபற்றுதல்கள்: உண்மையைக் கண்டறிதல், பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம்,* யுனிசெப், இன்னொசன்ட் ஆராய்ச்சி நிலையம்.

Aranburu, X.A. (2010) "சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் பாலியல் வன்முறைகள்: சர்வதேச வழக்குகளுக்காக சான்றின் தன்மை மற்றும் பகுப்பாய்வுகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல்" *சர்வதேச சட்டங்கள் தொடர்பான லெய்டன் ஜேர்னல்* 23, 4: 609–627.

பிரதான பொலிஸ் அதிகாரிகள் சங்கம் (2012) *டிஜிடல் சான்றுகள் தொடர்பான சிறப்பான நடைமுறை வழிகாட்டி,* லண்டன்: ACPO.

Bastick, M., Grimm, K., and Kunz, R. (2007) *ஆயுத மோதல்களில் பாலியல் வன்முறை: பாதுகாப்புத் துறை தொடர்பான பூகோள மேற்பார்வை மற்றும் தாக்கங்கள்.* ஜெனீவா, ஆயுதப் படைகளின் சனநாயக கட்டுப்பாடுகள் தொடர்பான நிலையம்.

Berthold, M., and Gray, G. (2011) 'மனவடு அழுத்தத்திற்குப் பின்னரான தாக்கங்கள் மற்றும் விசாரணை மன்றங்களில் இரண்டாம் நிலை மனவடுத்தாக்கங்கள்: ECCC உதாரணம்', B. Van Schaack, D. Reicherter and Y. Chhang (eds) *கம்போடியா ஒழிந்த தழும்புகள்: மனவடு உளவியல் Wake of the Khmer Rouge.* Phnom Penh: ஆவணப்படுத்தல் நிலையம், கம்போடியா

Brammertz, Baron Serge, Jarvis, M., eds. (2016) *மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறைகள் வழக்குத் தொடுத்தல் ICTY.* ஒக்ஸ்போட்: ஒக்ஸ்போட் பல்கலைக்கழக பிரஸ்.

De Brouwer, A. (2017) 'T. Gill, D. Fleck kw;Wk; B. Boothby (eds) இல் பாலியல் சுரண்டல்களுக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் சமாதான செயற்பாடுகளின் துஷ்பிரயோகம். சமாதானச் செயற்பாடுகளுக்கு ஏற்புடைய சர்வதேச சட்டம் தொடர்பான கையேடு. The Hague (வரவுள்ளது).

De Brouwer, A., and Ruiz L. (2017) 'ஆண் பாலியல் வன்முறை மற்றும் முரண்பாடுகளின் பொழுது பாலியல் வன்முறை குற்றமிழைத்த பெண்கள் - S. Mouthaan and O. Jurasz (eds) *நிலைமாற்றுக்கால நீதியில் பாலியல் வன்முறை* Antwerp: Intersentia (வரவுள்ளது).

De Brouwer, A., et al., eds. (2013) *பாலியல் வன்முறை ஒரு சர்வதேச குற்றம்: ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் அணுகுமுறைகள்.* Antwerp: Intersentia.

Buisman, C. (2013) 'விசாரணைகளை பரவலாக்குதல்: லுபானா தீர்ப்பிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்' *சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான நோர்த்வெஸ்டன் கையேடு,* 11, 3: 3.

Cohen, D.K., and Nordas, R. (2014) 'ஆயுத முரண்பாடுகளில் பாலியல் வன்முறை: SVAC தரவுமையத்தை அறிமுகம் செய்தல்இ 1989- 2009', *சமாதான ஆராய்ச்சிக்கான கையேடு,* 51, 3: 418–428.

பொதுநலவாயச் செயலகம் (2011) குற்றவியல் நீதி முறையில் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் பாதுகாப்பதற்கான சிறந்த நடைமுறை தொடர்பான வழிகாட்டி.

Dolan, C. (2015) 'பால்நிலைப் பிணைப்பினை முன்னெடுக்க அனுமதித்தல்: பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகளின் பொழுது மனிதாபிமான ரீதியான இடையீடுகளை மேற்கொள்வது தொடர்பான புதிய வழிமுறைகள்", *சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மீளாய்வு,* 96, 894: 1–17.

Du Mont, J., and White, D. (2007) 'பாலியல் தாக்குதல் வழக்குகளில் மெடிக்கோ சட்டச் சான்றுகளின் தாக்கமும் பயன்பாடும்: பூகோள மீளாய்வு', *பாலியல் வன்முறை ஆராய்ச்சி முன்னெடுப்பு* (ஜெனீவா)

Ellison, L. (2005) 'நம்பகத்தன்மை இடைவெளியை நிவர்த்திசெய்தல்: பாலியல் தாக்குதல் வழக்குகளில் நிபுணத்துவம் சார்ந்த சாட்சிகளை வழக்குத் தொடுத்தலுக்காகப் பயன்படுத்தல்', *சான்றுகள் மற்றும் நிரூபித்தல் தொடர்பான சர்வதேச கையேடு,* 9, 4: 239-268.

அவசரகால நிலைமைகளுக்காக டிஜிடல் சான்றுகளை உறுதிப்படுத்தும் முகமாக திட்டவட்டமான கையேடு மற்றும் விசாரணைகள் தொடர்பான உறுதிப்படுத்தல் கையேடு அறிக்கையிடல்: http://verificationhandbook.com இல் பெற்றுக்கொள்ள முடியும்

Gaggioli, G. (2014) 'ஆயுத முரண்பாடுகளில் பாலியல் வன்முறைகள்: சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறுதல் மற்றும் மனித உரிமைகள் சட்டம்: செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச மீளாய்வு, 96, 894: 511–313.

Gormley, L. (2016) பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் நீதியைப் பெற்றுக்கொள்ளல், செயற்படுத்துனர் வழிகாட்டி, ஜூடர்களது சர்வதேச ஆணைக்கு, செயற்படுத்துனர்களுக்கான வழிகாட்டி N°12.

Gupta, N. (2014) 'வழக்குத் தொடுத்தலில் மாயைத் தோற்றத்தை ஏற்படுத்தல்: சின்ட்ராம் சான்றுகள் தொடர்பில் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள், *சட்டம் மற்றும் சமகாலப் பிரச்சினைகள்,* 76, 3-4: 413-431.

Hagen, KT. (2010) 'யுத்தம் சார்ந்த பாலியல் வன்புணர்வின் காரணமாக தனிப்பட்ட நபர்களுக்கும் சமூகத்திற்கும் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் மற்றும் உளவியல் ரீதியான தாக்கத்தின் தன்மை, உளவியல் கற்கைகளுக்கான சர்வதேச சஞ்சிகைஇ 2, 2.

ஹாவாட் மனிதாபிமான முன்னெடுப்புகள் மற்றும் ஒக்ஸ்பாம் இன்டர்நெஷனல் (2010) 'இப்பொழுது உலகம் நான் இல்லாமல்': கொங்கோ கிழக்கு ஜனநாயகக் குடியரசில் பாலியல் வன்முறை தொடர்பான விசாரணைகள், MA: ஹாவாட் மனிதாபிமான முன்னெடுப்புகள் மற்றும் ஒக்ஸ்பாம் இன்டர்நெஷனல்.

சுகாதாரம் மற்றும் மனித உரிமைகள் தகவல்கள் (2014) *உள சுகாதாரம் மற்றும் பால்நிலை மைய வன்முறைகள்: முரண்பாடுகளின் பொழுது பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல் - பயிற்சிக் கையேடு.* ஒஸ்லோ: சுகாதாரம் மற்றும் மனித உரிமைகள் தகவல்கள்.

Herlihy, J., and Turner, S. (2013) 'உணர்வுகள் மற்றும் அகதிகள் சட்டம் தொடர்பில் இதுவரை எமக்கு என்ன தெரியும்?', *வட அயர்லாந்து சட்ட காலாண்டுச் சஞ்சிகை*, 64, 1: 47–62.

Hiatt, K. (2016) 'விசாரணைகளின் பொழுதான திறந்த மூலச் சான்றுகள்', *யால லோ சஞ்சிகை ஒன்றியம்* 125, 2015-2016: 323–330.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் (2010) *'நாம் மனிதர்கள் இல்லையா': வட உகண்டாவில் மாற்றுத்திறனாளி பெண்களுக்கெதிரான வன்முறைகளும் பாரபட்சங்களும், நியுயோக்,* லேு: மனித உரிமைகள் கண்காணிப்பகம்

சர்வதேச குற்ற விசாரணைகள் தொடர்பான நிறுவகம் (2015) *முரண்பாடுகளில் பாலியல் வன்முறைகள் தொடர்பான விசாரணைகள் மற்றும் ஆவணப்படுத்தல் தொடர்பான சர்வதேச ஒழுங்கு மரபு: பயிற்சி ஆவணங்கள்,* ஹேக்: சர்வதேச குற்றவியல் விசாரணைகளுக்கான நிறுவகம்.

சர்வதேச குற்றவியல் விசாரணைகளுக்கான நிறவகம் (2016) *ஆண்கள் மற்றும் சிறுவன்களுக்கு எதிரான பாலியல் மற்றும் பால்நிலை மைய வன்முறைகள் தொடர்பான முரண்பாட்டுச் சூழலில் விசாரணைகளை மேற்கொள்வது பற்றிய வழிகாட்டிகள்,* த ஹேக்: சர்வதேச குற்றவியல் விசாரணைகளுக்கான நிறுவகம்.

நிறுவனங்களுக்கு இடையிலான நிலையியற் FO (2015) *மனிதாபிமான சூழ்நிலைகளில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை இடையீடுகள் தொடர்பான வழிகாட்டிகள்: இடர்களைக் குறைத்தல், தாக்குப் பிடிக்கும் தன்மையை மேம்படுத்தல் மற்றும் உதவுதல், மீண்டெழல்.* Geneva: IASC.

செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச குழு (2013) *பாதுகாப்பான வேலைகள் தொடர்பான தொழில்வாண்மை தராதரங்கள்* Geneva: ICRC.

சர்வதேச மீட்புக் குழு மற்றும் யுனிசெப் (2012) *மனிதாபிமான சூழ்நிலைகளில் சுகாதாரம் மற்றும் உளவியல் சேவைகளை வழங்குவது தொடர்பான வழிகாட்டிகள்.* New York: IRC, UNICEF.

Johnson, K., Asher, J., Rosborough, S., et al. (2008) 'கொங்கோ கிழக்கு ஜனநாயகக் குடியரசுப் பிரதேசங்களில் பௌதீக மற்றும் உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு எதிரான அமைப்பு', *JAMA*, 300, 6: 676-690.

Maltby, J., Day L., Flowe H., et al. (2016) 'ரெயிட் தாக்குப் பிடிக்கும் தன்மை தொடர்பான சுற்றுச் சூழல் முறை மாதிரி: கலாசாரங்களுக்கு இடையிலான சிகிச்சை சார்ந்த பொருத்தப்பாடுகள், *ஆளுமை மற்றும் தனியாள் வேற்றுமைகள்*, 98, ஆகஸ்ட்: 96–101.

McDonald, B., Rogers, P. (2014) 'பேட்டிகாணல், முறைசார்ந்த நம்பிக்கைகள், தாக்கம் தொடர்பான மதிப்பீடு, யுனிசெப் அலுவலகம் ஆராய்ச்சிஇ Florence.

Medica Mondiale and Medica Zenica (2014) யுத்த பாலியல் வன்புணர்வின் காரணமாக ஏற்படக் கூடிய நீண்ட நாள் பின்விளைவுகள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் பொஸ்னியா மற்றும் எசேகோவினா ஆகியவற்றில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான உபாயங்கள். 'நாம் இன்றும் வாழ்கிறோம். எமக்கு தீங்கு இழைக்கப்பட்டது. இருப்பினும் நாம் வீரத்துடனும் உறுதியுடனும் இருக்கின்றோம்'. Cologne மற்றும் Zenica: Medica Mondiale மற்றும் Medica Zenica.

Memon, A. (2012) 'புகழிடக் கோரிக்கைகள் தொடர்பான நம்பகத்தன்மை: மனவடுவை தொடர்ந்து ஏற்படக்கூடிய பாதிப்புகளின் பொருத்தப்பாடு மற்றும் துல்லியத்தன்மை தொடர்பான சுய சரிதை, *அறிவியல் மைய உளவியலைப் பிரயோகிக்கவும்*, 26, 5: 677–679.

Mollica R.F., McInnes K., Tor S. (1998) 'கம்போடியாவில் பாரிய வன்முறைகளின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட மனவடு தொடர்பான நோய் அறிகுறிகள் மற்றும் மனவழுத்தம் தொடர்பானவைகள். *உளவியல் தொடர்பான பிரித்தானியச் சஞ்சிகை*, 173, 6: 482–489.

Nainar, V. (2012) ஆபிரிக்காவில் பாலியல் வன்முறைகள் தொடர்பான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் உபாயங்கள்: லண்டன்: பரிகாரம்

O'Brien, M. (2011) 'பாலியல் ரீதியான சுரண்டல்கள் மற்றும் அதற்கு அப்பால்: ஐ.நா. சமாதானப் படை மேற்கொண்ட பால்நிலை மையக் குற்றங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக ரோம் சட்டத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்களில் பிரயோகித்தல். *சர்வதேச குற்றவியல் சட்ட மீளாய்வு*, 11, 4: 803–827.

சட்ட நடவடிக்கை அலுவலகம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (2014) *பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படை குற்றங்கள் தொடர்பான கொள்கை ஆவணங்கள்.* ஹேக், ஐ.சீ.சீ.

சட்ட நடவடிக்கை அலுவலகம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (2016) *சிறுவர்கள் தொடர்பான கொள்கை,* த ஹேக், ஐ.சீ.சீ.

ருவண்டாவில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான சட்ட நடவடிக்கை அலுவலகம் (2014) *பாலியல் வன்முறைகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கை: யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் பாலியல் வன்முறைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு சட்ட நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பான சிறந்த நடைமுறைகளை உள்ளடக்கிய கையேடு: ருவண்டாவில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகளை மையமாகக் கொண்டு கற்றுக்கொண்ட பாடங்கள்.*

முரண்பாடுகள் சூழ்நிலையில் பாலியல் வன்முறை தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட பிரதிநிதியின் செயலாளர் நாயக அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை (2013) *மற்றும் முரண்பாட்டுச் சூழ்நிலையில் ஆண்களுக்கும் சிறுவன்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்முறைகள் தொடர்பான செயலமர்வு அறிக்கை.*

Oosterveld, V. (2012) 'சிர்ரா லோனா விசேட நீதிமன்றத்தில் நடைபெற்ற பால்நிலை மற்றும் சாள்ஸ் ரெயிலர் வழக்கு', *பெண்கள் மற்றும் சட்டம் தொடர்பான மேரி சஞ்சிகை* 19, 1: 6–33

வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவகத்தை பிரதானப்படுத்தல் (2014): முரண்பாட்டுச் சூழ்நிலையில் ஆண்கள் மற்றும் சிறுவன்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்முறைகள் தொடர்பான செயற்பாடுகள்: சிறு விளக்க ஆவணம். 2014 மே 14 இல் லண்டனில் நடைபெற்ற செயலமர்வுக்காக தயாரிக்கப்பட்டது. லண்டன்: ODI.

பரிகாரம் (2013) வன்புணர்விற்கான பரிகாரம்: பாலியல் வன்புணர்வினை ஒரு சித்திரவதையாகவோ அல்லது ஏனைய மோசமான நடவடிக்கையாகவோ சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் பிரயோகித்தல்.

Save the Children (2014) *சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட எடுத்துரைக்க முடியாத குற்றங்கள்: முரண்பாட்டுச் சூழ்நிலையில் பாலியல் வன்முறைகள்*, லண்டன்: Save the Children.

பாலியல் வன்முறை ஆராய்ச்சி முன்னெடுப்பு (2015) *பாலியல் மற்றும் நெருக்கமான நபரினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டவர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு விதமான மனவடுக்களைத் தடுக்கும் முகமாகவும் முகாமைத்துவம் செய்யும் முகமாகவும் உருவாக்கப்பட்ட வழிகாட்டிகள்*. ப்ரிடோரியா: பாலியல் வன்முறை ஆராய்ச்சி முன்னெடுப்பு.

சிவகுமாரன், எஸ். (2007) ஆயுத முரண்பாட்டின் பொழுது ஆண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், *சர்வதேச சட்டங்கள் தொடர்பான ஐரோப்பிய சஞ்சிகை*, 18, 2: 253–276.

சிவகுமாரன், எஸ். (2010) 'மொழி பெயர்ப்பில் இழக்கப்பட்டவைகள்: யுத்த முரண்பாட்டுச் சூழ்நிலையில் ஆண்கள் மற்றும் சிறுவன்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்முறைகள் தொடர்பான ஐ.நா. வின் பதிலளிப்புகள், *செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச மீளாய்வு*, 92, 259: 272–275.

Sparr, L.F., and Bremner, J.D. (2005) 'தாக்குதலுக்குப் பின்னரான மனவடு சார்ந்த அழுத்தங்கள், ஒழுங்கீனங்கள் மற்றும் ஞாபகம்: சர்வதேச யுத்தக் குற்ற நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட சான்றுகள். *உளவியல் மற்றும் சட்டம் சார்ந்த அமெரிக்க கல்வி நிலையத்தின் சஞ்சிகை*. 33, 1: 71-78.

மருத்துவதற்திகான ஸ்டான்போட் பல்கலைக்கழகப் பாடசாலை *'வன்புணர்வின் விளைவாக ஏற்படக்கூடிய உளத் தாக்க சுகாதாரம், பாரிய வன்புணர்வுகள்*, ஏனைய வடிவிலான பாலியல் வன்முறைகள், ஐ.சீ.சீ. வழக்குத் தொடுனர் v. Jean Pierre Bemba Gombo அவர்களினால் தண்டனை வழங்கும் கட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சுருக்க ஆவணம்இ "ICC-01/05-01/08-3417-Conf-AnxA".

TRIAL International (2016) *குற்றவியல் நடவடிக்கைகளின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்: ஒரு கள ரீதியான கண்ணோட்டம். பொஸ்னியா மற்றும் எசிகோவினா:* TRIAL.

முரண்பாட்டுச் சூழ்நிலையில் பாலியல் வன்முறைகளுக்கு எதிரான ஐ.நா.வின் செயற்பாடுகள் (2001) *மெட்ரிக்ஸ்: முரண்பாடுகளுடன் தொடர்புடைய பாலியல் வன்முறை தொடர்பான முன்னெச்சரிக்கைக் குறிகாட்டிகள்.* நியுயோக்: ஐ.நா. செயற்பாடுகள்.

மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர் அலுவலகம் (2004) *வினைத்திறன் மிக்க விசாரணைகள் மற்றும் சித்திரவதை, ஏனைய கொடுமையான நடவடிக்கைகள், மனிதாபிமானமற்ற செயல்கள், தரக்குறைவான நடத்தைகள் அல்லது தண்டனை தொடர்பான கையேடு:* இஸ்தான்புள் ஒழுங்குமரபு, ஜெனீவா: OHCHR.

மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர் அலுவலகம் (2015) *விசாரணை மற்றும் உண்மை கண்டறிதல் ஆணைக்குழுக்கள். சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டம் தொடர்பான விசாரணை மற்றும் உண்மை கண்டறிதல் ஆணைக்குழுக்கள். வழிகாட்டி மற்றும் நடைமுறை* Geneva: OHCHR.

UN Women (2015) *Preventing Conflict, Transforming Justice, Security the Peace : A Global Study on the Implementation of United Nations Security Council 1325.* New York: UN Women.

ஐ.நா. பெண்கள் (2016) *முரண்பாடுகள் பூக்களைக் கொண்டுவரவில்லை: முரண்பாடுகளைத் தடுத்தல், நீதி வழங்குதல், சமாதானத்தைப் பாதுகாத்தல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் கொசோவாவில் பாலியல் முரண்பாட்டின் பொழுது பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான இழப்பீடுகளை வழங்குவதன் அவசியம்.* நிவ்யொர்க்: ஐநா பெண்கள்.

UNHCR and Save the Children (2002) *பாலியல் வன்முறை மற்றும் சுரண்டல்கள் - குயினியா, லைபீரியா மற்றும் சிர்ரே லியோனே ஆகிய நாடுகளின் அகதிக் குழந்தைகளின் அனுபவங்கள்.* நியுயோக் மற்றும் லண்டன்: UNHCR and Save the Children.

UNICEF (2014) ஒழிந்திருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது: சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான புள்ளிவிபரம் சார்ந்த பகுப்பாய்வுகள். நியுயோக்: UNICEF.

UNICEF (2007) *பரிஸ் கொள்கைகள். ஆயுதப் படைகள் அல்லது ஆயுதக் குழுக்களுடன் தொடர்புடைய சிறுவர்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள்.* நியுயோக்: UNICEF.

UNICEF and UNODC (2005) *பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் குற்றங்களுக்கான சிறுவர் சாட்சிகள் தொடர்புடைய நீதி முறைகள் பற்றிய வழிகாட்டிகள்.* நியுயோக் மற்றும் வியன்னா: UNICEF மற்றும் UNODC.

உலக சுகாதார அமைப்பு (2004) *பாலியல் வன்புணர்வினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சை ரீதியான முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டிகள்: அகதிகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் போன்ற சூழ்நிலைகளில் பயன்படுத்தக் கூடிய ஒழுங்கு மரபுகள் விருத்தி தொடர்பான வழிகாட்டி.* ஜெனீவா: WHO.

உலக சுகாதார அமைப்பு (2014) *நெருங்கிய நபரினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறை மற்றும் பாலியல் வன்முறை ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பான சுகாதார பராமரிப்புச் சேவைகள், சிகிச்சை சார்ந்த கையேடு,* ஜெனீவா: WHO.

World Vision (2015) *நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு வெட்கப்பட வேண்டியதில்லை.* லண்டன்: வேல்ட் விஷன்

சர்வதேச சட்டம் தொடர்பிலானதொரு குற்றம் அல்லது மீறுகை என்ற வகையில் பாலியல் வன்முறை பற்றிய ஆவணப்படுத்தல் தொடர்பான சிறந்த நெறிமுறை

இரண்டாம் பதிப்பு: 2017 மார்ச்

Foreign & Commonwealth Office
King Charles Street, London
SW1A 2AH
United Kingdom